
தமிழக சிவத்தலங்கள்



ஜீ.ச.முரளி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தமிழக சிவத்தலங்கள்

ஆசிரியர்

ஜீ. சு. முரளி
சோமங்கலம்

சதுரா பதிப்பகம்
சோமங்கலம்-அஞ்சல்,
சென்னை-602 109.
தமிழ்நாடு மாநிலம்


முதற்பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2032
விக்கிரம வருஷம் ஆனி மாதம்
28ஆம் நாள் (12-7-2000).

விலை : 725-00


LASER TYPESET, ART, DESIGNED, CARTOGRAPHED & PRINTED BY:

Sadura J.C.Murali


Somangalam-602 109.




அருள்மிகு **ஸ்ரீகற்பக விநாயகர்** பிள்ளையார்பட்டி




அருள்மிகு ஸ்ரீ தியாகராஜர் திருவாரூர்



அருள்மிகு ஸ்ரீ கமலாம்பிகை திருவாரூர்



அருள்மிகு ஸ்ரீசங்கரநாராயணர் சங்கரன் கோவில்




அருள்மிகு ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஆலங்குடி




அருள்மிகு ஊர்த்துவதாண்டவப்பெருமான்


திருஆலங்காடு




அருள்மிகு ஸ்ரீ துர்க்காம்பிகை பட்டீஸ்வரம்




அருள்மிகு பிக்ஷாடனர் வழுவூர்




அருள்மிகு **அகோரமூர்த்தி** திருவெண்காடு




அருள்மிகு கஜசம்ஹாரமூர்த்தி வழுவூர்



அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருச்செங்கோடு



அருள்மிகு **ஸ்ரீ சரபேஸ்வரர்** திருபுவனம்



அருள்மிகு சுப்பிரமணியசுவாமி சோமங்கலம்


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரர்
மாணிக்கவாசகர்

பொருளடக்கம்

திருச்சிற்றம்பலம்

நூன்முகம்

''தமிழக சிவத்தலங்கள்'' என்னும் இந்நூல் தமிழகத்திலுள்ள 2661 சிவத்தலங்களின் தொகுப்பாகும். இந்நூலில் இயன்றவரைக்கும் அனைத்து விவரங்களை இரத்தின சுருக்கமாக குறிப்பிட்டு ஒவ்வொரு திருக்கோவிலின் எண்களைக் கொண்டு அந்தந்த தாலுக்கா நிலவரைபடத்தில் தெளிவாக புரியும் படியாக தமிழில் 143 நிலவரைபடமாக வரைந்து தலங்களின் இருப்பிடத்தை காட்டியுள்ளேன். மேலும், கோவிலின் பண்டையகால, தற்கால ஊர் பெயர், கோவிலின்பெயர், சுவாமி, அம்மன் மற்றும் உள்பிராகாரங்களில் உள்ள சன்னிதிகள், கோபுரம், மற்றும் கோவிலின் நீளம், அகலம், தீர்த்தங்கள், தலவிருட்சம், தலபுராண வரலாறு, பாடியவர்கள், கோவில் ஏற்படுத்தப்பட்ட ஆண்டுகள், திருப்பணிச் செய்த மன்னர்கள், கல்வெட்டுக்களில் கூறியுள்ளவைகள், தலபுராணம் பாடியவர்கள், திருவிழாக்காலம், பூஜை காலம், கோவிலின் நிழற்படங்கள் என ஒவ்வொரு கோவிலுக்கும் குறிப்பிட்டுள்ளேன்.

மேலும் எனக்கு இத்தகைய விவரங்கள் சேகரிக்கும் காலம், நேரம் அதிகமாகவே தேவைப்பட்டது. எனினும் இத்தகைய முயற்சிக்கு தூண்டியதும், மட்டும்மல்லாமல் விவரங்களைச் சேகரிக்க உதவிபுரிந்த திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளுக்கும், திருவாவடுதுறை திருக்கயிலாய பரம்பரைத் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருமகா சன்னிதானத்திற்கும், தமிழ்நாடு இந்து சமய ஆட்சித் துறைக்கும், இந்நூலில் அமைந்துள்ள நிலவரைபடத்தைச் சரிபார்த்து அணிந்துரை வழங்கிய சென்னைப் பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் டாக்டர் திரு.த. வசந்தகுமரன் அவர்களுக்கும் இந்நூல் வெளியிடுவதற்கு எல்லா உதவிகளையும் செய்த என் தாய், தந்தை அவர்களுக்கும் என் அன்பான வணக்கத்தை சமர்பிக்கின்றேன். இந்நூல் தமிழ் அறிந்த ஒவ்வொருவருக்கும் பயன்படுமாறு செய்த எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கி போற்றுகிறேன்.

ஜீ.ச. முரளி
சோமங்கலம்.

33-1

திருச்சிற்றம்பலம்

அணிந்துரை

இந்நூல் தமிழக சிவத்தலங்களின் இரண்டாம், திருத்தியமைக்கப்பெற்ற பதிப்பு. இந்நூல் ஆன்மீக நூல்களின் அணிகலனாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. இது நண்பர் ஜீ.ச. முரளி அவர்களின் மூன்றாம் படைப்பு. இப்படைப்பில் ஆசிரியரின் ஆன்மீக வளர்ச்சியும், சிவத்தலங்களைப் பற்றி ஆழமானச் செய்திகளும் புதுமையாக வடிக்கப்பெற்று தரப்பட்டுள்ளன.

அகரவரிசையில் வட்டங்களை அடுக்கி, ஒவ்வொரு வட்டத்திலும் காணப்படுகின்ற சிவத்தலங்களை வரிசைப்படுத்தி விவரங்களை எளிய தமிழில், இனிமையான நடையில் திரும்பவும் மெச்சத்தகுந்த வகையில் கொடுத்துள்ளார். மொத்தம் 143 வட்டங்களில் காணக்கிடைக்கும் 2661 சிவத்தலங்கள் பற்றிய இருப்பிடவிவரங்கள், தல வரலாறு, புகைப்படங்கள் என அழகான கோர்வையாக இச்சிவத்தலங்கள் பற்றிய விவரங்களை வகுத்தளித்துள்ளார். அத்துடன் கல்வெட்டுச் செய்திகள், பூஜை விவரங்கள், திருவிழா காலங்கள், தேவாரப்பதிகங்கள் பற்றியும் விவரங்கள் தாங்கி இந்நூல் வடிக்கப் பெற்றுள்ளது.

ஆசிரியரின் முயற்சியும் அவர்தம் ஆய்வின் தரமும் ஆன்மீக எழுச்சியும் இந்நூலின் முத்தாய்ப்புகளாக அமைகின்றன என்பதில் இருகருத்துகளுக்கு இடமில்லை. நிலவரைபடங்கள் யாவும் வட்டங்களில் காணப்பெறும் சிவத்தலங்களில் வரிசைப்படுத்தி காட்டுகின்றன. அவ்வாறே, விவரங்கள் யாவும் அவ்வரிசையினைப் பின்பற்றி தரப்பெற்றுள்ளன. திரும்பவும் முந்தைய நூலைவிட சிறப்பாக அமையும் வகையில் இதரவிவரங்களும் கொடுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் சிவனின் 64 வகைகள், கோள்கள் வழிபாடு, நட்சத்திரங்கள் வழிபாடு என்பவையும் சிறப்பாக எடுத்துச் சொல்லப் பெற்றுள்ளன. நண்பர் முரளி அவர்கள் இதற்காக எடுத்துக் கொண்ட சிரமங்கள் நல்ல பயன் அளிக்கும் என்பதில் எனக்கு ஒரு துளியும் ஐயமில்லை.

இன்னொரு சிறப்பாக இந்நூலில் சிவத்தலங்களைச் சுற்றியுள்ள ஊர்களில் காணப்பெறும் ஆயிரத்திற்கு மேற்பட்ட திருமால் தலங்கள், 550க்கு மேற்பட்ட முருகன் தலங்கள் மேலும் மற்ற கோவில்கள் பற்றிய செய்திகளும் ஏராளம். இச்செய்திகள் இந்நூலுக்கு அணிசெய்யும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளன.

இந்நூல் ஆன்மீகத்தவருக்கு மட்டுமின்றி ஆய்வாளர்களுக்கும் உகந்த படைப்பாயுள்ளது, பெருமை சேர்க்கின்றது. எல்லாரும் இதனைப் படித்துப் பயன் பெறுவதுடன் நடைமுறையில் நலவாழ்வு பேணுவதில் சிறக்கவும் என வாழ்த்தி அமைகின்றேன்.

அன்புடன்,


த. வசந்தகுமரன்
பேராசிரியர், புவியியல் துறை
சென்னை பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

அகர வரிசையில் தாலுக்கா விவரம்

33-1

திருத்தணி வட்டம்

(திருவள்ளூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திருவாலங்காடு

துஞ்ச வருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே.

-- திருஞானசம்பந்தர்



திருவள்ளூரிலிருந்து தென்மேற்காக 16 கி.மீ. வடாரண்யம், திருஆலங்காடு, பழையனூர் ஆலங்காடு. இக்கோவில் 6-22 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய சன்னிதி 5 நிலை இராஜகோபுரமும், 5 பிராகாரங்களுடன் இறைவன் சுயம்புலிங்க மூர்த்தியாகிய அருள்மிகு தேவர்சிங்கப் பெருமான் கிழக்கு நோக்கியும், அம்மன் வண்டார் குழலி தனிச்சன்னிதியில் தெற்கு நோக்கியும், சபாநாயகர் ஊர்த்துவ தாண்டவர் தெற்கு நோக்கியும் காட்சியளிக்கிறார். கோவிலுக்கு மேற்கே முத்தி தீர்த்தத் திருக்குளம். தலமரம் பலா. நடராசப்பெருமானுக்குரிய ஐந்து சபைகளில் இத்தலம் இரத்தின சபை.

முஞ்சிகேச, கார்க்கோட முனிவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கிப் பெருமான் ஸ்ரீ பத்ரகாளின் செருக்கடங்க எட்டுத் தோள்களுடன், இடது காலைத் தலையளவு உயர்த்தி ஊர்த்துவ தாண்டவம் புரிந்த தலம். தலையாலேயே நடந்து வந்த காரைக்காலம்மை யார்க்கு இறைவன் வரங்கள் பலவும் அருளி காட்சி தந்த தலம், காரைக்காலம்மையார் மூத்த திருப்பதிகம் அருளிச்செய்து என்றும் நடராசப் பெருமானின் திருவடிக்கீழ் இருக்கும் பேறு பெற்றதலம். காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்த இத்தலத்தை தம்காலால் மிதிக்க அஞ்சிய திருஞானசம்பந்தர் ஊருக்கு வெளியே ஓரிடத்தில் தங்கியபோது, அன்று இரவு துயிலும் போது கனவில் இறைவன் நம்மை மறந்தனையோ பாடுவதற்கு என்று நினைவூட்ட மறுநாள் இத்தலத்திற்கு சென்று இறைவனைப் போற்றி பதிகம் பாடிய தலம்.

நீலி என்ற பேய்யின் பொருட்டு ஓர் வணிகனுக்குத் தாங்கள் கூறிய உறுதி மொழியை நிறைவேற்றப் பழையனூர் வேளாளர் பெருமக்கள் எழுபதின்மர் தீப்பாய்ந்த சிறப்புடைய தலம்.

உள்பிராகாரங்களில் சித்தி விநாயகர், சுப்ரமண்யர், அகோரவீரபத்திரர், இலிங் கோத்பவர், துர்க்கை, பஞ்சலிங்கங்கள், காளி, விஜயராகவ பெருமாள், காரைக் காலம்மையார், மூஞ்சிகேசகர், நால்வர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் அமைந்து ள்ளன. தீர்த்தக்குளத்தின் கரையில் ஸ்ரீபத்ரகாளியம்மன் கோவில் வடக்கு நோக்கியுள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இத்தலம் 15வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரம் பெற்றது. பட்டினத்தார், அருணகிரிநாதர் முதலியோர்களும் இத் தலத்தைப் பாடியுள்ளனர். தலபுராணம் தியாகராஜ கவிராயரால் பாடப்பெற்றது.

கல்வெட்டுக்கள் 52 உள்ளன. இவ்வூரை வடகரை மணவிற்கோட்டத்து மேல் மாலை பழையனூர் நாட்டுத் திருவாலங்காடு என்றும், ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேல்மாலையாகிய பழையனூர் நாட்டுத் திருவாலங்காடென்றும் வ்ழங்கப்படுகின்றது. பெருமான் திருவாலங்காடு உடைய நாயனார் எனவும், அம்மன் வண்டார் குழலி நாச்சியார் எனவும், பிரமராம்பாள் என்றும் குறிப்பிடப்படு கின்றன. பராந்தக சோழன் காலம் முதல் விஜயநகர் அரசர் காலம் வரையுள்ள இக்கல்வெட்டுக்களால் இத்தலத்தின் தொன்மையை அறியலாம்.

மார்கழித் திருவாதிரையில் இறைவன் முஞ்சிகேசருக்கும், கார்க்கோடகனுக்கும் நடன தரிசனம் கொடுத்தருள்கிறார்.

2. பழையனூர்

திருவாலங்காட்டிலிருந்து தென்கிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 1-10 ஏக்கர் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கிய சன்னிதியில் இறைவன் அருள்மிகு தழுவக்குழைந்த ஈசர் சுயம்புலிங்கமாக காட்சியளிக்கிறார். அம்மன் ஆனந்தவல்லி.

காஞ்சிபுரத்தில் வாழ்ந்த அந்தணன் ஒருவன் தன் மனைவியைச் சந்தேகித்துப் பழையனூர் அருகில் அவளைக் கொலை செய்தான். அவள் பெயர் நீலி. கொலைசெய்யப்பட்ட நீலி அப்பகுதியில் பேய்வடிவில் திரிந்து வந்தாள். கொலை செய்த அந்தணன் மறுபிறவியில் வணிகனாகப் பிறந்து பழையனூருக்கு அருகிலுள்ளதொரு ஊரில் ஒரு பெண்ணை மணந்து அவளைத் தன் மாமனார் வீட்டிலிருந்து அழைத்து வர சென்றான். பெற்றோர்கள் அவளை அனுப்பாததால் பழையனூர் வழியாக ஊர் திரும்பினான். மாலை நேரம் இதையறிந்த நீலி, வணிகன் பழையனூர் வந்தவுடன் அவனது மனைவியைப் போல் வந்து பெற்றோர்கள் என்னை அனுப்பிவைத்து விட்டார்கள் நானும் தங்களோடு உடன் வருகிறேன் என்று உறவு வார்த்தைகள் பேசினாள் நீலி. வணிகன் நீலியின் சூழ்ச்சியைக் கண்டு ஐயுற்று, நீலியிடம் ஏதும் உரையாடாது பழையனூர் வேளாளர் வீதியை அடைந்தான். நீலி தன் கணவன் தன்னை வெறுத்து ஒதுக்கிறான் என வேளாளர்களிடம் கூறித் தனக்கு நீதி கூறுமாறு வேண்டினாள். வேளாளர் பெருமக்கள் எதைச் செய்வது என்று சிந்தனை செய்யும் போது நீலி அவர்களை நோக்கித் தன் கணவர் கையிலுள்ள மந்திரசக்தி வாய்ந்த கத்தியை வாங்கிக்-கொண்டு இன்று இரவு என்னுடன் இருக்கச் செய்தால் அவரை நான் வசப்படுத்தி விடுவேன் என்றாள். வணிகனை அதற்கு இசையுமாறு வேளாளர்கள் வற்புறுத்தினர் அவன் அதற்கு இசையாதது கண்டு உனக்கு ஏதேனும் இடையூறு வந்தால் நாங்கள் எழுபது பேரும் உயிர்விடுகிறோம் எனச் சூளுரைத்தனர். வணிகன் வேறு வழியின்றி இசைந்தான். வேளாளர்கள் வணிகனையும், நீலியையும் தனிவீட்டில் இருக்கச் செய்தனர். அன்றிரவு பேயாகிய நீலி வணிகனைக் கொலைச் செய்து வஞ்சம் தீர்த்துக் கொண்டு மாயமாய் மறைந்தாள். இதையறிந்த வேளாளர்கள் எழுபதின்மரும் தீ வளர்த்து அதில் மூழ்கித் தாங்கள் செய்த சத்திய வாக்கைக் காத்து இறைவனடி கூடினர். இந்நிகழ்ச்சியை தேவாரத்திலும், சேக்கிழார் புராணத்திலும், தொண்டைமண்டல சதகத்திலும் கூறப் பட்டுள்ளது. இதனாலேயே வஞ்சனையாகக் கண்ணீர் வடிப்போரை 'நீலி கண்ணீர் வடிப்பவர் ' எனக் கூறும் பழமொழி வழக்கு இவ்வூரான பழையனூர் நீலி வரலாற்றி லிருந்து வந்ததாகும். இன்றும் ஆலங் காட்டிற்கும் பழையனூருக்கும் இடையில் வேளாளர் தீக்குளித்த இடம் குளமாக உள்ளது. பாறைகளில் வேளாளர்களின் உருவச் சின்னங்கள் உள்ளன.

காரைக்கால் அம்மையார் திருவாலங் காட்டை தலையாலே நடந்து வந்து தரிசனம் செய்த தலமாதலால் திருஞானசம்பந்தர்,

திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர்களும் திருவாலங்காட்டிற்கு செல்லாமல் இத் தலமான பழையனூரிலிருந்தே ஆலங்காட்டு இறைவனைப் போற்றி தேவாரத் திருப்பதிகம் பாடியுள்ளனர். ஔவையாரும், அருணகிரிநாதர் தரிசனம் கண்ட தலம். சோழர் கால கட்டடப் பணி.

இக்கோவிலைப் பற்றிய கல்வெட்டுச் செய்திகள் யாவும் திருவாலங்காட்டுக் கல்வெட்டுகளில் அறியமுடிகிறது.

3. மணவூர்

திருவாலங்காட்டிற்கு தென்கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 3.00 ஏக்கர் நிலப்பரப்பளவில், மூலவர் நந்தீஸ்வரர், அம்மன் ஆனந்தவல்லி, ஆடினது ஆலங்காடு, அமர்ந்தது தக்கோலம், மணம் பூண்டது மணவூர்.

ஆயிரம் வருட முற்பட்ட சோழர் கால கோவில். இரண்டு கால பூஜை. வைகாசி மாதம் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும், இவ்வூரில் ஸ்ரீ விஜயராகவ பெருமாள் திருமகள், பூமாதேவியுடன் காட்சியளிக்கிறார்.

4. அருங்குளம்

திருத்தணியிலிருந்து வடகிழக்காக 10 கி.மீ. நகரியாற்றின் மேற்கு கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் 3 அடி உயரலிங்கமாக அகஸ்தீஸ்வரர் காட்சி யளிக்கிறார். இங்குள்ள உற்சவர் சந்திரசேகரர் மிகவும் அழகானவர்.

ஆயிரம் வருடத்திற்கு முற்பட்ட கோவில். இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் ஸ்ரீ கல்யாண வரதராஜப் பெருமாள் நின்ற திருக் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

5. நபலூர்

திருத்தணிக்கு கிழக்கே 8 கி.மீ. லஷ்மிபுரம். நகரியாற்றின் மேற்கு கரையில் இக்கோவில் 1-74 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரத்துடன் மூலவர் சுயம்பு லிங்கமாக அகத்தீஸ்வரர் காட்சியளிக்கிறார். இத்தலத்திற்கு மாணிக்கவாசகர் தரிசனம் செய்த தலம். இரண்டு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

6. நெமிலீ

திருத்தணிக்கு வடகிழக்கே 12கி.மீ. நகரியாற்றின் மேற்கு கரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் அம்பலீஸ்வரர். 700 வருட முற்பட்ட கோவில் சோழர் கால கட்டடப்பணி. ஒரு கால பூஜை. மேலும், இவ்வூரில் ஸ்ரீவைகுந்த பெருமாள் அமர்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.

7. ஆற்காட்குப்பம்


திருத்தணிக்கு கிழக்கே 10 கி.மீ. நகரியாற்றின் கிழக்கே இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்கமாக சோலீஸ்வரர் வட்டவடிவ மாக காட்சியளிக்கிறார். சோழர்கால கட்டடப்பணி. ஒரு கால பூஜை மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது. இவ்வூருக்கு கிழக்கேயுள்ள நெடும்பரத்தில் ஸ்ரீ கோதண்டராமசாமி திருக்கோவில் உள்ளது.

8. கலம்பாக்கம்

கடம்பத்தூரிலிருந்து தென் மேற்காக 6 கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருநாகேஸ்வரர் காட்சியளிக்கிறார். சோழர் கால கட்டடப்பணி சுமார் 400 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

திருவள்ளூர் வட்டம்

(திருவள்ளூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. கூவம்

முந்தினான் மூவருள் முதல்வன் ஆயினான்
கொந்துலா மலர்பொழிற் கூக மேவினான்
அந்திவான் பிறையினான் அடியார் மேல்வினை
சிந்துவான் உறைவிடம் திருவிற் கோலமே

-- திருஞானசம்பந்தர்



திருவள்ளூரிலிருந்து தென்மேற்காக 17கி.மீ. கூகம், கூவரம், திருவிற்கோலம். கூவம் ஆற்றின் தென் பகுதியில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய மொட்டைராஜ கோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு லிங்கமாக, தீண்டாத் திருமேனியாக அருள்மிகு திருபுராந்தகர் கிழக்கு நோக்கியும், திரிபுராந் தகியம்மன் தனிச் சன்னிதியில் கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கிறார்கள். ஸ்தல விருட்சம் வில்வம். தீர்த்தம் கூவாக்னி.

சிவபெருமான் தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி ஆகிய மூன்று அசுரர்களை அழிக்கத் தேரின் மீது ஏறிப் புறப்பட்டபோது தேரின் கூவரமாகிய ஏர்க்கால் முரிந்தமையால் இத்தலம் கூவரம் என வழங்கப்பட்டு பின் கூவம் எனப் பெயர் பெற்றது. சிவபெருமான் இத்தலத்தில் வில்லேந்திய வடிவத்துடன் காட்சியளித்த தால் இத்தலத்திற்கு திருவிற்கோலம் எனப் பெயர் பெற்றது. இத்தலத்திருப்பதிகத்தில் திருஞானசம்பந்தர் இறைவன் திரிபுரமெரித்த வரலாற்றைப் பல பாடல்களிலும் குறித்தருளுவதைக் காணலாம்.

திருவாலங்காட்டில் சிவபெருமானோடு தர்க்கம் செய்து நடனத்தில் தோற்ற காளி வெட்கம் அடைந்தாள். பெருமான் காளியைப் பார்த்து நாம் கூவம் என்ற தலத்தில் ரக்ஷா நடனம் (காத்தல் நடனம்) புரிகிறோம். அத்தலத்திற்குச் சென்று தரிசித்து அவ்வூருக்குப் பீடைவராமல் காப்பாயாக என்று அருள் புரிந்தார். மேலும் எம்மோடு தர்க்கம் செய்தமையால் அத்தலத்தில் தர்க்கமாதா என்ற பெயருடன் விளங்கி வருக என்றருள் புரிந்தார். அவ்வன்னை இத்தலத்தில் காவல் தெய்வமாகப் பீடைகள் அகற்றும் பிடாரியாக விளங்குகிறார்.

தொண்டைநாட்டுப் பஞ்சபூதத் தலங்களில் இத்தலம் அக்னித்தலம்.

உள்பிராகாரங்களில் அச்சிறுத்த விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத் பவர், பிரம்மா, துர்க்கை, வள்ளி, முருகன், தெய்வானை, பைரவர், நடராஜர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. கோவிலுக்கு கிழக்கே சதுரவடிவில் திருக்குளம் உள்ளது.

தேவாரப் பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் 14வது ஸ்தலம். திருஞானசம்பந்தர் தேவாரம் பெற்றது.

அதிக மழை பெய்வதாயிருந்தால் வெள்ளை நிறமும், போர் வருவதாயிருந்தால் சிவப்பு நிறமும் முன் அறிவிப்புப் போலச் சிவலிங்கத் திருமேனியில் படர்கிறது. திருஞானசம்பந்தர் இத்தலத் திருப்பதிகத்தில் இவ்வற்புத நிகழ்ச்சியை, ''ஐயன்ரல் அதிசயன் அயன் விண்ணோர் தொழும், மையணி கண்டனார் வண்ணம் வண்ணவான்'' எனக் குறித்துள்ளார்.

இத்தலத்திற்குரிய ஸ்தலபுராணம் சிவப்பிரகாச சுவாமிகளால் 350 வருடமுன்பு பாடப் பெற்று அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளது.

நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரை அன்று உற்சவம் நடைபெறுகிறது.

2. திருப்பாசூர்

முந்தி மூவெயில் எய்த முதல்வனார்
சிந்திப் பார்வினை தீர்த்திடும் செல்வனார்
அந்திக் கோன்தனக் கேஅருள் செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூ ரடிகளே.

-- திருநாவுக்கரசர்



திருவள்ளூரிலிருந்து மேறகாக 5 கி.மீ. திருப்பாச்சூர், தங்காதலிபுரம், மாயாபுரி. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் இறைவன் சுயம்புலிங்கமாக, தீண்டாத் திருமேனியாக அருள்மிகு பாசூர்நாதர் கிழக்கு நோக்கியும், அம்மன் பசுபதிநாயகி தனிச் சன்னிதியில் கிழக்கு நோக்கியும் உள்ளார். ஸ்தல விருஷம் மூங்கில் தீர்த்தம் - சோழ தீர்த்தம்.

இத்தலத்தில் பாசு (மூங்கில்) தலமரமாக விளங்குவதாலும், இறைவன் மூங்கில் அடியில் முளைத்தமையாலும் இத்தலம் பாசூர் எனப் பெயர் பெற்றது.

வியாசர், சந்திரன், அங்காரன், கரிகால் சோழன் முதலியோர் வழிபட்ட ஸ்தலம்.

கரிகால் சோழனிடம் பகைமை கொண்டு சமணர்கள் பெரும்பாம்பு ஒன்றைக் குடத்திலிட்டு அனுப்பியபோது சோழமன்னனுக்கு உதவ இறைவன் பாம்பாட்டியாக வந்து மன்னனை காப்பாற்றிய ஸ்தலம். திருமால் மதுகைடபரைக் கொன்ற பாவம் நீங்க இங்கு இறைவனை வழிபட்டு அருள்பெற்று திருவள்ளூரில் காட்சியளிக்கிறார்.

இக்கோவிலில் பரிவார மூர்த்திகள், உற்சவ மூர்த்திகள் அனைவரும் விளங்குகின்றனர். இக்கோவிலில் ஷோடச கணபதி எனப்பெறும் 16 வகையான விநாயக மூர்த்தங்களும் உள்ளன. மிகப்பெரிய கருங்கல் படிக்கட்டுடன் கூடிய தெப்பக்குளம் இங்குள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் 16வது ஸ்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரம் பெற்ற தலம்.

இத்தலத்தில் 16 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை தொண்டை மண்டலம், ஈக்காடு கோட்டம், காக்கலூர் நாட்டுத் திருப்பாசூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. மூன்று கால பூஜை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

பஞ்ச வில்வங்கள்

வில்வம், கிளுவை, மாவிலிங்கை, விளா, நொச்சி.

திருச்சிற்றம்பலம்

3. பூண்டி

மான்திகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோல்அருளி உளோம்போகீர் என்றானே

-- சுந்தரர்

திருவள்ளூரிலிருந்து வடமேற்காக 12கி.மீ. திருவெண்பாக்கம், திருவுளம்பூதூர், தலப்பெயர் வெண்பாக்கம் என்றும், கோவில் பெயர் வெண்கோவில் என்றும் வழங்கி வந்ததாகத் தேவாரத் திருப்பதிகத் தால் அறியப்படுகிறது. இப்பொழுது உள்ள கோவில் புதிய கோவிலாகும். இத்தலத்தின் பழைய திருக்கோவில் சென்னைக் குடிநீர் கொண்டுவர அமைக்கப்பட்ட பூண்டி நீர்த்தேக்கத்தில் உள்ளது. இவ்வேரி உருவான போது அங்கிருந்த மூர்த்திகளை வேறு கோவில்களுக்கு மாற்றியுள்ளனர். மூலமூர்த்தி புரசபாக்கம் அருள்மிகு கங்காதரேசுவரர் கோவிலில் பிரதிட்டை செய்யப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. நீர்த்தேக்கத்தில் பழமையான கோவில் உள்ளது. ஏரியின் கரையில் நின்று கொண்டு பழைய கோவில் இருந்த இடத்தை மட்டும் தற்போது காணலாம். தற்போது கட்டியிருக்கும் திருவெண்பாக்கம் கோவில் பூண்டி அணையின் தென்மேற்கில் உள்ளது.

இத்தல பெருமான் ஊன்றீசுவரர் சுயம்பு லிங்கமாக கிழக்கு நோக்கிய சன்னிதி, அம்மன் கனிவாய்மொழி தெற்கு நோக்கி விளங்குகிறார். தீர்த்தம் குசஸ்தலை நதி, கைலாய தீர்த்தம், தலமரம் - இலந்தை.

கண்ணொளியிழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவன் ஊன்று கோலருளிய சிறப்புடையது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கிருந்து காஞ்சிபுரம் செல்லும் வரையில் மின்னல் போலத் தோன்றித் தோன்றி அருள் செய்தமையால் அம்பிகைக்கு மின்னலொளியம்மை என வழங்கப்பெறுகிறார். தேவார பதிகம் பெற்ற தொண்டை நாட்டில் 17வது தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகம் பெற்றதலம்.

4. தோமூர்

திருவள்ளூர்க்கு வடமேற்கே 14 கி.மீ. இக்கோவில் மூன்று செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் லிங்க வடிவில் சோமேஸ்வரர் காட்சியளிக்கிறார். மேலும் இவ்வூரில் ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

5. செம்பேடு

திருவள்ளூர்க்கு வடகிழக்கே 15 கி.மீ. குசஸ்தலை ஆற்றின் வடகரையில் இக் கோவில் எட்டு செண்ட் நிலப்பரப்பளவில் சுயம்புலிங்கமாக அகஸ்தீஸ்வரர். இவ்வூரில் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி பெருமாள் கோவிலும் உள்ளது

6. வெங்கல்

திருவள்ளூர்க்கு வடகிழக்கே 18 கி.மீ. குசஸ்தலை ஆற்றின் வடகரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிட்சாண்டேஸ்வரர் அம்மன் காமாட்சியம்மன். 350 வருட முற்பட்ட கோவில் ஒரு கால பூஜை மேலும் இவ்வூரில் ஸ்ரீ சென்னகேசவ பெருமாள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

7. வெள்ளியூர்

திருவள்ளூர்க்கு வடகிழக்கே 14 கி.மீ. குசஸ்தலையாற்றின் தென்கரையில்

இரண்டு சிவன் கோவில்கள் 1. கைலாச நாதர் திருக்கோவில், 5 செண்ட் நிலப்பரப்பளவில் கொண்ட கோவிலாகும். 2. பாலீஸ்வரர் திருக்கோவில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பளவில் சுயம்பு லிங்கம் - இங்குள்ள கல்வெட்டு நாகர் மொழியில் உள்ளது.

8. ஊதிக்காடு

திருவள்ளூர்க்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் சுயம்புலிங்கமாக அகஸ்தீஸ்வரர் காட்சியளிக்கிறார். மேலும் இவ்வூரில் கரியமாணிக்க பெருமாள் கோவிலும் உள்ளது.

9. இராமன்சேரி

திருவள்ளூர்க்கு மேற்கே 12 கி.மீ. இக்கோவில் 1-10 ஏக்கர் நிலப்பரப்பளவில், 25அடி உயர கோபுரத்துடன் மூலவர் சோமேஸ்வரர். மேலும், இவ்வூரில் ஆதிகேசவ பெருமாள் கோவிலும் உள்ளது.

10. காரணைநிஜாம்பட்டு

திருவள்ளூர்க்கு மேற்கே 14 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில், 60 அடி உயர கோபுரமும், சுயம்புலிங்கமாக இராமலிங்கேஸ்வரர். இக்கோவில் 600 வருட முற்பட்டது. மேலும் இவ்வூரில் பிடாரி செல்லியம்மன் கோவிலும், பிடாரி காகாதம்மன் திருக்கோவிலும் உள்ளது.

11. பட்டரைபெரும்புதூர்

திருவள்ளூர்க்கு மேற்கே 10 கி.மீ. கும்பேஸ்வரர் திருகோவில். மேலும் இவ்வூரில் கந்தசுவாமி கோவிலும், ஸ்ரீ சௌந்தர்ய நாராயண பெருமாள் கோவிலும் உள்ளது.

12. திருவள்ளூர்

சென்னைக்கு மேற்கே 44 கி.மீ. கூவம் ஆற்றின் கரைப் பகுதியில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் தீர்த்தீஸ்வரர் 600 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் ஸ்ரீ வீரராகவபெருமாள், பாண்டுரங்கர், ஸ்ரீ பிரசன்னவெங்கடேச பெருமாள், செல்வ விநாயகர், காளிகாம்பாள், கன்னிகாபரமேஸ்வரி; வேம்புலியம்மன் என பல திருக்கோவில்கள் அமைந்துள்ளன.

13. ஈக்காடு

திருவள்ளூர்க்கு வடகிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்கமாக பஞ்சவாரணீஸ்வரர். 1000 வருட முற்பட்டது. மேலும் இவ்வூரில் 600 வருட முன்பு தொண்டை மண்டல வேளாளர்கள் கட்டிய கற்பக விநாயகர் திருக்கோவிலும் உள்ளது.

14. அயலூர்

திருவள்ளூர்க்கு கிழக்கே 8 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர், அம்மன் சொர்ணாம்பிகை. மேலும் இவ்வூரில் ஸ்ரீ சௌந்தரராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

15. பாக்கம்

திருவள்ளூர்க்கு கிழக்கே 14 கி.மீ. இவ்வூரில் தழுவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. மேலும் இவ்வூரில் ஸ்ரீ கரியமாணிக்க பெருமாள் கோவிலும் உள்ளது.

16. தொட்டிக்கலை

திருவள்ளூர்க்கு கிழக்கே 8 கி.மீ. சிதம்பரேஸ்வரர் திருக்கோவில் திருவாவடுதுறை ஆதின ஸ்ரீ சுப்ரமணிய முனிவர் இத்தல இறைவனைப் போற்றி பாடல்கள் அருளியுள்ளார். மேலும் இவ்வூரில் ஸ்ரீ கேசவ பெருமாள் மற்றும் திருமகள், பூமிதேவியுடன் காட்சியளிக்கிறார்.

17. செவ்வாப்பேட்டை

திருவள்ளூர்க்கு கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

18. தண்டலம்

திருவள்ளூர்க்கு கிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், மூலவர் தனமேஸ்வரர் 600 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை.

19. சேலை

திருவள்ளூர்க்கு தெற்கே ஒரு கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் முக்தீஸ்வரர் அம்மன் ஏகாத்தம்மன். 300 வருட முற்பட்ட கோவில்.

20. விடையூர்

திருவள்ளூர்க்கு மேற்கே 9 கி.மீ. அக்த்தீஸ்வரர் திருக்கோவில். மேலும் இவ்வூரில் கந்தசாமி திருக்கோவில் 1-20 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைந்துள்ளது.

21. கடம்பத்தூர்

திருவள்ளூர்க்கு தென்மேற்கே 7 கி.மீ. இக்கோவில் கூவம் ஆற்றின் வட்கரையில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக முக்தீஸ்வரர், அம்மன், திரிபுரசுந்தரி. இரண்டு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

22. ஈகாட்டூர்

கடம்பத்தூருக்கு வடகிழக்கே 2 கி.மீ. கூவம் ஆற்றின் வடகரையில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சைலாசநாதர். 600 வருட முற்பட்ட கோவில். இரண்டு கால பூஜை.

23. தொழூர்

திருவள்ளூர்க்கு தென்கிழக்கே 6 கி.மீ. கூவம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக திருக்கண்டீஸ்வரர். சோழர்கால திருப்பணி கட்டிடம்.

24. அரன்வாயல்

திருவள்ளூர்க்கு தென்கிழக்கே 10 கி.மீ. கூவம் ஆற்றின் தென்கரையில் உள்ளது. திருத்தளீஸ்வரர் திருக்கோவில். இக்கோவில் 1200 வருட முற்பட்டது. திருவாலங் காட்டில் சிவபெருமான் காளியுடன் நடனமாடியபோது அணிந்திருந்த நாகத்தின் வால் இப்பகுதியில் விழுந்ததால் இவ்வூருக்கு அரவால் என்று பெயர் தற்பொழுது அரன்வாயல் ஆகியது.

25. செஞ்சி

கடம்பத்தூருக்கு தென்மேற்கே 5 கி.மீ. ஜனமேஜெயாஈஸ்வரர் திருக்கோவில் கல்வெட்டுக்கள் உள்ளன. மேலும் இவ்வூரில் ஸ்ரீலஷ்மிநாராயண பெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

26. மப்பேடு

ஸ்ரீபெரும்பூதூரிலிருந்து 15 கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு செங்கீஸ்வரர். விஜயநகர மன்னர் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

27. பேரம்பாக்கம்


கடம்பத்தூருக்கு தென்மேற்கே 6 கி.மீ. கூவம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், சுயம்பு லிங்கமாக சோலீஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் ஸ்ரீ வைகுண்ட பெருமாள் கோவிலும் உள்ளது.

28. இருளாஞ்சேரி

கடம்பத்தூருக்கு தென்மேற்கே 8 கி.மீ. கூவம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 1-50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளிங்கேசநாதர். இராஜஇராஜ சோழர்காலத் தில் கட்டப்பெற்ற கோவில். இவ்வூரின் மேற்கேயுள்ள நரசிங்கபுரத்தில் லஷ்மி நரசிம்மஸ்வாமி உள்ளார்.

பள்ளிப்பட்டு வட்டம்

(திருவள்ளூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. வெள்ளிகரம்

பள்ளிப்பட்டிலிருந்து தென் மேற்கே 2 கி.மீ. நகரியாற்றின் கரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மலைமேல் சுயம்புலிங்க மூர்த்தியாக சோமநாத ஈஸ்வரர், அம்மன் மரகதவல்லி. மலையடி வாரத்தில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கொண்ட முகதீசுவரர் ஆலயத்தில் முருகப்பெருமான் தேவியருடன் காட்சி யளிக்கிறார். இத்தலத்தில் 16 பட்டை லிங்கமாக பிருதிவீசுவரர் அம்மன் புவனேஸ்வரி காட்சியளிக்கிறார். இத்தல இறைவனையும், முருகப் பெருமானையும் அருணகிரிநாதர் வழிபட்டு, திருப்புகழ் பாடியுள்ளார். முன்பு இக்கோவில் கார்வெட்டி ஜமீன்தார்களால் திருப்பணி செய்யப்பட்ட செய்தி கல்வெட்டுகளில் காணலாம். மேலும் இவ்வூரில் ஸ்ரீ விஜயராகவஸ்வாமி திருமகள், பூமிதேவியுடன் காட்சி யளிக்கிறார்.

2. கரிம்பேடு

பள்ளிப்பட்டிலிருந்து கிழக்கே 8 கி.மீ. நகரியாற்றின் வடகரையில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரம், நான்கு கோபுரங்கள், கொண்டு மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு நாதரீஸ்வரர் அம்மன் ஞான பிரசுணாம்பிகை. 500 வருட முன்பு கார்வெட்டி ஜமீன்தார்களால் திருப்பணி செய்யப்பட்டது. இவ்வூருக்கு மேற்கேயுள்ள நெடியம் என்னும் ஊரில் யானைமலை, நெடியமலை என்று அழைக்கப்படும் முருகன் தலமான செங்கல்வராய சுவாமி இருபுறமும், தேவியர் சூழ கடிகஸ்துடன் காட்சியளிக்கிறார். இந்திரன் ''செங்கல்வம்'' என்னும் நீலோற்பலமலரால் வழிபட்டதால் முருகப்பெருமானுக்கு செங்கல்வராய சுவாமி என்று போற்றப் பெறுகிறார். இம்மலை 600 படிகள் கொண்டது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடப்பெற்ற ஸ்தலம்.

3. அத்திமாஞ்சேரி

பள்ளிப்பட்டிற்கு தெற்கே 8 கி.மீ. 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் கொண்ட இக்கோவில் மூலவர் கல்யாண சுந்தரேஸ்வரர் அம்மன் மீனாட்சியம்மன்.

4. பெத்தநாகபுடி

சோளிங்கர்க்கு மேற்கே 12 கி.மீ. ஒரு ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக நாகநாதேஸ்வரர், அம்மன் நாகவல்லி. இக்கோவிலின் வெளிசுற்றில் உள்ள சுவரில் கிரந்தத்தில் கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

சிவலிங்கம்

சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐவகைப்படும்.

இவைகளுள்ளே சுயம்புலிங்கமானது தானே தோன்றியது.

காணலிங்கமானது விநாயகர், சுப்பிரமணியர் முதலிய கணங்களாலே தாபிக்கப்பட்டது.

தைவிகலிங்கமானது திருமால் முதலிய தேவர்களால் தாபிக்கப்பட்டது.


ஆரிடலிங்கமானது இருடிகளால் தாபிக்கப்பட்டது. அசுரர், இராக்கதர் முதலாயினரால் தாபிக்கப்பட்டது.

மானுடலிங்கமாவது மனிதரால் தாபிக்கப்பட்டது.

மானுடலிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம், அதனின் உயர்ந்தது தைவிகலிங்கம், அதனின் உயர்ந்தது காணலிங்கம், அதனின் உயர்ந்தது சுயம்புலிங்கம்.

ஊத்துக்கோட்டை வட்டம்

(திருவள்ளூர் மாவட்டம்)



1. திருக்கண்டலம்

வரியாய மலரானும் வையந் தன்னை
உரிதாய வளந்தானு முள்ளு தற்கங்
கரியானு மரிதாய கள்ளின் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே
-- திருஞானசம்பந்தர்

சென்னையிலிருந்து வடக்கே 36 கி.மீ. திருக்கள்ளில். வஜ்ரவனம். குசஸ்தலை யாற்றின் வடகரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவானந்தேசு வரர். அம்மன் ஆனந்தவல்லியம்மன் சுவாமிக்கு இடப்பாகத்தே உள்ளார். தீர்த்தம் சிவானந்த தீர்த்தம். கள்ளிமரத்தை தலமரமாகக் கொண்டதால் இத்தலம் கள்ளில் எனப் பெற்றது. கண்டலம் முள்ளிச்செடி. பிருகு முனிவர்க்கு காட்சி நல்கிய தக்ஷிணாமூர்த்தி சன்னிதி விசேடமுடையது. தொண்டை நாட்டில் விளங்கும் தேவாரத் திருத்தலங்கள் 32ல் இத்தலம் 18வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றைப் பெற்ற பெருமைக்குரியது. இத்திருக்கோவிலில் 8 கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர், பாண்டியர், விசயநகர மன்னர்களின் காலக் கல்வெட்டுக்கள் உள்ளன.

2. சூலமேனி

ஊத்துக்கோட்டையிலிருந்து கிழக்கே 9கி.மீ. இராமலிங்கேஸ்வரர்.

3. தண்டலம்

பெரியபாளையத்திலிருந்து மேற்கே 4கி.மீ. தடுத்தாளீஸ்வரர்.

4. மூங்கில்பட்டு

பெரியபாளையத்திலிருந்து தெற்கே ஒரு கி.மீ. ஆரணியாற்றின் தென்கரையில் 15 செண்ட் நிலப்பரப்பளவில், 30 அடி உயர கோபுரத்துடன் மேற்கு நோக்கிய மூலவர் ஐமூர்த்தீஸ்வரர் ஐந்து முகத்துடன் காட்சியளிக்கிறார். அம்மன் அன்னபூர்ணாம் பிகை. இங்கு நந்தி இல்லை. இரு கால பூஜை மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

5. அக்கரபாக்கம்

பெரியபாளையத்திலிருந்து கிழக்கே 6 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப் பரப்பளவில், சுயம்புலிங்கமாக அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் அம்மன் காமாட்சியம்மன். ஒரு கால பூஜை. மேலும் இவ்வூரில் ஸ்ரீ சீனிவாசப் பெருமாள் கோவில் உள்ளது.

6. வடமதுரை

பெரியபாளையத்திலிருந்து தெற்கே 2 கி.மீ. ஆரணியாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்கமாக அகத்தீஸ்வரர். அம்மன் ஆனந்தவல்லி. மேலும் இவ்வூரில் ஆதிகேசவபெருமாள், மாரிபடவேட்டம்மன், பிடாரி செல்லியம்மன், சுப்ரமணியஸ்வாமி போன்ற திருக்கோவிலும் உள்ளன.

7. கன்னிகைப்பேர்

பெரியபாளையத்திலிருந்து தென்கிழக்காக 7 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில், சுயம்பு லிங்கமாக திருமாகீஸ்வரர். மேலும் இவ்வூரில் சக்கர விநாயகர், ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் திருக்கோவிலும் உள்ளன.

8. நம்பாக்கம்


ஊத்துக்கோட்டைக்கு தெற்கே 15 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் சுயம்புலிங்கமாக மாண்தீஸ் வரர். இங்கு சுப்ரமண்யர் விசேடமாக உள்ளார். சோழர் கால திருக்கோவில்.

9. அரியாத்தூர்

ஊத்துக்கோட்டைக்கு தெற்கே 16கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர்.

கும்மிடிப்பூண்டி வட்டம்

(திருவள்ளூர் மாவட்டம்)



1. கும்மிடிப்பூண்டி

சென்னைக்கு வடக்கே 47 கி.மீ. இக்கோவில் 47 செண்ட் நிலப்பரப்பளவில், சுயம்புலிங்கமாக பாலீஸ்வரர். மற்றொரு சிவன் கோவிலாக சந்திரசேகராஈஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது. மேலும் இவ்வூரில் ஏகவல்லி அம்மன், சென்னகேச பெருமாள் திருக்கோவில்களும் உள்ளன.

2. பனப்பாக்கம்

கும்மிடிப்பூண்டிக்கு தெற்கே 3 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக பிட்சாலீஸ்வரர் அம்மன் சுந்தரவல்லி. இக்கோவில் 400 வருட முற்பட்டது. கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் பிடாரி செல்லியம்மன், கரியமாணிக்க பெருமாள் திருக்கோவில் களும் உள்ளன.

3. அரியத்துறை

கும்மிடிப்பூண்டிக்கு தெற்கே 8 கி.மீ. ஆரணியாற்றின் வடகரையில் 5-8 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் வரமூர்த்தீஸ்வரர், அம்மன் மரகதவல்லி. ரோமேச முனிவர், சுங்கை முதலியோர் வழிபட்ட தலம். சோழ மன்னர்களால் கட்டுவித்த கோவில் கல்வெட்டுக்கள் உள்ளன.

4. பெருவயல்

கும்மிடிப்பூண்டிக்கு தெற்கே 7 கி.மீ. ஆரணியாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலீஸ்வரர். ஒரு கால பூஜை.

அட்டாங்க யோகம்

இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தி யாகாராம், தாரணை, தியானம், சமாதி.

இயமம் : பொய், கொலை, திருடு, காமம், பொருளாசை - இவற்றினீங்கிப் புலனடக்கி இருத்தல்.

நியமம் : தவம், தூய்மை, தத்துவம் ஓர்தல், மனமுவந்திருத்தல், தெய்வ வழிபாடு என்ற விதி முறைகளில் வழுவா தொழுகல்.

ஆதனம் : யோக ஆசனங்கள் - பதுமாசனம், சுகாசனம் முதலியன.

பிராணாயாமம் : இரேசகம், பூரகம், கும்பகம் என்று மூவகையாயச் சுவாசத்தை அடக்கியாளும் யோக முறை.

பிரத்தியாகாரம் : இந்திரியங்களை விடயங்களிலிருந்து திருப்புகை. பிரபஞ்ச உபாதியைச் சிவச் சொரூபமாகப் பார்த்தல்.

தாரணை : மனத்தை ஒருவழி நிறுத்துகை முழங்கால், குதம், இதயம், கண்டம், கபாலமாகிய தானங்களில் பிரமன் முதலிய பஞ்ச மூர்த்திகளையும் பாவித்தல்.


தியானம் : ஐம்புலத்தையும் அந்தக்கரணத்தையும் அடக்கிச் சிவயோகஞ் சேர்தல்.

சமாதி : மனத்தைப் பரம்பொருளோடு ஐக்கியப்படுத்தி நிறுத்துகை.

திருச்சிற்றம்பலம்

பொன்னேரி வட்டம்

(திருவள்ளூர் மாவட்டம்)



1. திருப்பாலைவனம்

பொன்னேரிக்கு வடகிழக்கே 10 கி.மீ. அமிர்தபுரி, திருப்பாலை, திருப்பாற்றுத் துறை. இக்கோவில் 6-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 506 அடியும், வடக்கு தெற்காக 550 அடியும், 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக திருப்பாலீஸ்வரர் கிழக்கு நோக்கியுள்ளார். அம்மன் லோகாம்பிகை தனிச்சன்னிதியில் உள்ளார். விமானம் தூங்கானை மாட அமைப்புடையது. தலமரம் பாலை மரம், தீர்த்தம் அமிர்த புஷ்கரணி. பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமுதத்தினைத் தனித்து வந்து அசுரர்களை மறைந்து உண்ணக் கருதிய தேவர்கள் உண்ணுதற்கு முன் இறைவனை வழிபட்டு உண்ணுதல் தான் முறையெனக் கருதி அமுதத்தின் ஒரு பகுதியை லிங்க வடிவில் அமைத்து வழிபட்ட இடமே திருப்பாலைவனம். உள் பிராகாரத்தில் நர்த்தன கணபதி, தட்சிணா மூர்த்தி, சுப்ரமணியர், பிட்சாண்டவர், மார்க்கண்டேயர், வாசுகி, வீரபத்திரர், நால்வர், அனுமன், துர்க்கை, நடராஜர் உள்ளனர். இத்தல இறைவன் அமுதத்தினால் ஆனவர் என்பதால் வெப்பத்தன்மையுடைய பொருட்களால் அபிஷேகம் செய்வதில்லை. பால், தயிர், இளநீர், பன்னீர் தவிர வேறெதையும் பயன்படுத்துவதில்லை. இக்கோவில் இராஜேந்திர சோழ மன்னனால் கட்டப்பட்டது. கல்வெட்டுக்கள் 71 உள்ளன. மூன்று கால பூஜை. பங்குனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

2. இலுப்பாக்கம்

பொன்னேரிக்கு வடக்கே 8 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர் அம்மன் சிவகாமியம்மன். ஒரு கால பூஜை.

3. கோளூர்

பொன்னேரிக்கு வடக்கே 9 கி.மீ. இக்கோவில் 106x92 அடி நீள, அகலம் கொண்டு மூலவர் லாவணேஸ்வரர் அம்மன் அமிர்தவல்லி. இக்கோவில் 1000 வருட முற்பட்டது. சோழர், சேரர், பாண்டிய கல்வெட்டுக்கள் உள்ளன. மேலும் இவ்வூரில் அழகநாத பெருமாள் கோவிலும் உள்ளது.

4. புலிகட்

சென்னைக்கு வடக்கே 42 கி.மீ. பழவேற்காடு, பிரளயகாவேரி. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் 18 அடி உயர இராஜகோபுரம், இரண்டு பிராகாரங் களுடன் இறைவன் சுயம்புலிங்கமாக சாமாஈஸ்வரர். அம்மன் ஆனந்தவல்லி. 1100 வருட முற்பட்ட கோவில். உள்பிராகாரத்தில் பரிவார மூர்த்திகள் உள்ளன. இரண்டு கால பூஜை.

5. அரசூர்

பொன்னேரிக்கு வடக்கே 5 கி.மீ. இக்கோவில் 132 அடி நீளம், அகலம் கொண்டு மூலவர் திருவாலீஸ்வரர், அம்மன் சௌந்தரவல்லி மற்றும் சுயம்பு ஹேரம்ப விநாயகர். மேலும் இவ்வூரில் கரிய மாணிக்க பெருமாள் கோவிலும் உள்ளது .

6. கட்டாவூர்

பொன்னேரிக்கு வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு லிங்கமாக திருமாலீஸ்வரர் அம்மன் சுந்தரவல்லி. மேலும் இவ்வூரில் சித்தகன்னீஸ்வரர், காளியம்மன், எல்லை யம்மன், வெங்கடேசபெருமாள் திருக் கோவில்கள் உள்ளன.

7. வஞ்சிவாக்கம்

பொன்னேரிக்கு வடகிழக்கே 8 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

8. ஆசனபுதூர்

பொன்னேரிக்கு வடகிழக்கே 6 கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

9. பிரளயம்பாக்கம்

பொன்னேரிக்கு வடகிழக்கே 11 கி.மீ. ஆரணியாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய மூலவர் காளத்தீஸ்வரர்.

10. தட்டமாஞ்சி

பொன்னேரிக்கு வடகிழக்கே 12 கி.மீ. ஆரணியாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பரந்துறைஈஸ்வரர். மேலும் இவ்வூரில் கரியமாணிக்க பெருமாள் கோவிலும் உள்ளது.

11. எலையம்பேடு

பொன்னேரிக்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலீஸ்வரர் அம்மன் அபிராமவல்லி. 300 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் கோதண்ட இராமசாமி பெருமாள் கோவிலும் உள்ளது.

12. பொன்னேரி

சென்னைக்கு வடக்கே 33 கி.மீ. சின்னகாவனம். ஆரணியாற்றின்கரைப் பகுதியில் இக்கோவில் 8-42 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு சிவன் கோவிலாக நூற்றெட்டீஸ்வரர், சதுர்வேத புரீஸ்வரர். இக்கோவில் 500வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் மதக விநாயகர், கரிகிருஷ்ண பெருமாள் கோவிலும் உள்ளது. கும்மங்கலம் என்னுமிடத்தில் 2-21 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். அம்மன் ஆனந்தவல்லி இக்கோவில் இராஜ ராஜ சோழ மன்னனால் கட்டப் பெற்றதாக இங்குள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக் கின்றன. சித்திரை மாத பௌர்ணமி அன்று 5 கோவில்கள் ஒன்று கூடி சந்திப்பு உற்சவமாக கொண்டாடப்படுகிறது.

13. காட்டூர்

மீஞ்சூர்க்கு வடக்கே 8 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலீஸ்வரர். 300 வருடமுற் பட்டது. மேலும் இவ்வூரில் வீற்றிருந்த பெருமாள், மகாலஷ்மி திருக்கோவில்கள் உள்ளன.

14. திருவெள்ளவாயில்

மீஞ்சூர்க்கு வடக்கே 5 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு லிங்கமாக திருவெள்ளீஸ்வரர், அம்மன் சந்தான நாயகி. 300 வருட முற்பட்ட கோவில். தமிழ் கல்வெட்டுக்கள் உள்ளன.

15. கனியம்பாக்கம்

மீஞ்சூர்க்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக பிரசன்னாஈஸ்வரர்.

16. மீஞ்சூர்

பொன்னேரிக்கு தென்கிழக்கே 8 கி.மீ. வடகாஞ்சி. சுவாமி ஏகாம்பரநாதர், அம்மன் காமாட்சியம்மன். மேலும் இவ்வூரில் வரதராஜ பெருமாள், தாயார் பெருந்தேவி உள்ளனர். 500 வருட முற்பட்ட கோவில், இரண்டு கால பூஜை.

17. சின்னம்பேடு

பொன்னேரிக்கு மேற்கே 10 கி.மீ. சிறுவரம்பேடு, சிறுவாபுரி. இக்கோவில் 258×200 அடி நீளம் அகலம் கொண்டு ஒரு பிராகாரத்துடன், 5 நிலை இராஜகோபுரத்துடன் மூலவர் அகஸ்தீஸ்வரர் சுயம்புலிங்கமாக காட்சியளிக்கிறார். அம்மன் உண்ணாமுலையம்மன். இத்தலத்தில் உள்ள பாலசுப்ரமணியசுவாமியைப் போற்றி அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார். ஸ்ரீ வள்ளி கல்யாண சுந்தரர் உற்சவ சிலை மிகவும் அழகானது. மயில் மரகதகல்லில் உள்ளது.

ஸ்ரீராமபிரானின் புதல்வர்களான லவ-குசன் இருவரும் கோதண்டராமனோடு (தன் தந்தை என்று அறியாமல்) போர்செய்து வெற்றி கொண்ட ஊர். ஆதலால் சிறுவர்புரி சிறுவாபுரி ஆகியுள்ளது. ஸ்ரீ ராமபிரானின் புனிதத் திருப்பாதங்கள் பட்டஇடமென்பது

புராண வரலாற்றுச் செய்தியாகும். மேலும் இவ்வூரில் ஸ்ரீ வரதராஜபெருமாள், செல்லியம்மன் கோவில்களும் உள்ளன.

18. ஆண்டார் குப்பம்

பொன்னேரிக்கு தெற்கே 5 கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக விஸ்வநாதர், அம்மன் விசாலாட்சி இத்தலத்தில் உள்ள பாலசுப்ரமணிய ஸ்வாமியைப் போற்றி அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார்.

19. பஞ்சேஷ்டி

பொன்னேரிக்கு தெற்கே 8 கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் அகத்திய முனிவர் ஸ்தாபிக்கப்பட்ட லிங்க மூர்த்தியாக அகத்தீஸ்வரர், அம்மன் ஆனந்தவல்லியம்மன். பச்சைநிறம் கொண்டவள். பரிவார மூர்த்தங்கள் உள்ளன. கோவில் பிராகாரத்தில் பழமையான புற்று உள்ளது. கோவிலுக்கு கீழ்புறம் 3-00 ஏக்கர் பரப்பு கொண்ட அகத்திய தீர்த்தக்குளம் உள்ளது. 5 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரமும் கொண்டது. இக்கோவில் 1000 வருட முற்பட்ட கோவிலாகும். சந்திரகிரி அரச பரம்பரையில் இக்கோவில் கட்டுவித்ததாக கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன.

20. அத்திபட்டு

மீஞ்சூருக்கு தென்கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாத ஈஸ்வரர், அம்மன் சதயம்மன். 250 வருட முற்பட்ட கோவில். கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரு கால பூஜை.

21. மேலூர்

சென்னையிலிருந்து 35 கி.மீ. வள்ளூர் இக்கோவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக திருமணங்கீஸ்வரர், அம்மன் திரிபுரசுந்தரி தலவிருட்சம் சுரக்கொன்னை. கல்வெட்டுக்கள் பல உள்ளன.

22. ஞாயிறு

மீஞ்சூருக்கு தென்மேற்கே 5 கி.மீ. குசஸ்தலையாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் சுயம்புலிங்கமாக புஸ்பரத ஈஸ்வரர், அம்மன் சொர்ணாம்பிகை. தலவிருட்சம் நாகலிங்க மரம். இத்தலத்திற்கு திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், தரிசனம் செய்த தலம். சோழ மன்னன் ஒருவன் இத்தலத்திலுள்ள திருக்குளத்தில் தம் வாளால் தாமரை மலர் பறித்த போது, இரத்தம் வெளிவரக் கண்டு அஞ்சி, வேண்டியபோது லிங்கவடிவில் காட்சி யளித்த தலம். கண்வ முனிவர் வழிபட்டு முக்தி பெற்ற தலம். தனிச் சன்னிதியில் கண்வ முனிவர் காட்சியளிக்கிறார். 5 கால பூஜை நடை பெறுகிறது. சித்திரை மாதம் உற்சவம் நடைபெறுகிறது.

23. சோழவரம்

பொன்னேரிக்கு தெற்கே 14 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 30 அடி உயர கோபுரத்துடன், மூலவர் சுயம்புலிங்கமாக அகஸ்தீஸ்வரர், அம்மன் அகிலாண்டேஸ்வரி.

24. ஆங்காடு

பாடியநல்லூர்க்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இந்திரேஸ்வரர் கிழக்கு நோக்கியும் அம்மன் பார்வதியம்மனும் காட்சியளிக்கின்றனர். சோழர் கால கட்டிடம். தேவேந்திரன் வழிபட்டதால் இத்தல இறைவனுக்கு இந்திரேஸ்வரர் என்று பெயர்.


25. ஆரணி

பொன்னேரிக்கு மேற்கே 12 கி.மீ. ஆரணியாற்றின் கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சம்பங்கிபிட்சாண்டேஸ்வரர். 600 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் 6-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 30 அடி உயர கோபுரத்துடன் விளங்கும் சாமுண்டீஸ்வரி திருக்கோவில் மற்றும் ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் கோவிலும் உள்ளது.

திருச்சிற்றம்பலம்

சைதாப்பேட்டை வட்டம்

(காஞ்சிபுரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருவொற்றியூர்

ஒற்றி யூரும் ஒளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பும் அதனையே
ஒற்றி யூர வொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை ஓயுமே
-- திருநாவுக்கரசர்

சென்னைக்கு வடக்கே 8 கி.மீ. ஒற்றியூர். இக்கோவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன், இறைவர் புற்றையே இடமாகக் கொண்டு, தீண்டாத் திருமேனி, சுயம்புலிங்க வடிவில், கிழக்கு நோக்கிய சன்னிதியில் இறைவர் புற்றிடங் கொண்டார், வன்மீகநாதர், படம்பக்கநாதர், ஆதிபுரீசர், மாணிக்கத்தியாகேசர் என்பன பல பெயர்களால் போற்றப்படுகிறார்.அம்மன் வடிவுடைநாயகி தனிச்சன்னிதியில் தெற்கு நோக்கி காட்சியளிக்கிறார். ஸ்தல விருட்சம் அத்தி, மகிழமரம். கோவிலுக்கு வடக்குப் பக்கத்தில் தெப்பக் குளமாக விளங்கும் பிரம தீர்த்தம் என்றும், காசி தீர்த்தம் என்றும் கூறுவர். கஜப்பிருஷ்ட விமானம்.

கருப்பக்கிருக வடக்குப் பிராகாரத்தில் இருக்கும் துர்க்காதேவி வட்டப்பாறை யம்மன். இத்திருக்கோவிலில் குழந்தையீசர், தியாக ராஜர், ஜகநாதர், நால்வர், சுந்தரர், சங்கிலியார், சகஸ்ரலிங்கம், அமிர்தகண்டீசர், நக்ஷத்திர லிங்கங்கள், அண்ணாமலையார், ஜம்புகேசுவரர், நாகலிங்கர், மீனாட்சி சுந்தரேசுவரர், பைரவர் முதலிய சன்னிதிகள் சிறப்புடையவை. யோக நிலையில் நான்கு திருக்கரங்களுடன் கௌரீசுவரர் காட்சி தருகிறார். அருகில் ஆதிசங்கரர் உள்ளார்.

பிரளய வெள்ளத்தை ஒற்றச் செய்து உலகைப் படைக்க பிரமனுக்கு அருள் செய்ததால் அது முதல் இவ்வூர் ஒற்றியூர் என தல புராணம் கூறுகிறது.

ஒரு காலத்தில் சிவதலங்கள் உட்பட எல்லா ஊர்களுக்கும் வரிவிதித்து மாந்தாதா என்னும் சூரிய குல மன்னன் சுற்றோலை அனுப்பினான். அரசனுக்கும் ஓலை நாயகத்திற்கும் தெரியாதவாறு வரி பிளந்து 'இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாகக் கொள்க' என்று ஓலையில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு, வியந்து இவ்வூருக்கு விலக்களிக்கப்பட்ட ஊர் என்னும் பொருளில் ஒற்றியூர் என்றும், பெருமானுக்கு எழுத்தறியும்பெருமான் என்றும் பெயர் வழங்கியது.

ஏலேலசிங்கர் அரசனுக்கென்று வைத்திருந்த மாணிக்கங்களை ஆடகபுரி இறைவனுக்கு அளித்துவிட்டார். அரசன் கேட்டபொழுது இடர்ப்பட்டார். தம் அன்பராகிய அவரது இடர்ப்பாட்டை அறிந்த ஒற்றியூர் இறைவன் அரசனுக்கு கொடுக்கம் பொருட்டு ஏலேலசிங்கருக்கு மாணிக்கங்கள் அருளினார். அதனால் மாணிக்கத்தியாகர் என்னும் பெயர் பெற்றார். தொண்டை நாட்டுச் சப்தவிடங்கத் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும்.

உபமன்யு மகாமுனிவரிடத்துச் சிவ தீட்சை பெற்றுப் பூசித்த வாசுகி என்ற பாம்பினைச் சிவபெருமான் தம்முடைய திருவுருவில் சேர்த்துக் கொண்டதால் படம் பக்கநாதர் என வழங்கப்படுகிறார்.

சுந்தரர் சங்கிலி நாச்சியாரை இறைவன் ஆணைப்படி மகிழ மரத்தடியில் திருமணம் செய்துக் கொண்ட தலம்.

இவ்வூரில் எண்ணெய் ஆட்டும் செ -கார் குலத்தில் அவதரித்த கலிய நாயனார் தமது அளவற்ற செல்வத்தைக் கொண்டு இத்தல இறைவர் திருக்கோவிலின் உள்ளும் புறமும், இரவும் பகலும் திருவிளக்கு இடுகின்ற திருப்பணியை பல நாட்கள் தொடர்ந்து செய்து, செல்வ மழிந்த போது சிந்தையில் தளர்வின்றிப் தீபத் திருப்பணியைத் தொடர்ந்து செய்ததும், அதற்கும் முட்டுப்பாடு ஏற்பட்டபோது, வேறு வகையின்றித் தம் திருத்தொண்டை தடையின்றிச் செய்ய தம் மனைவியாரையே அடிமையாகவும் விற்கவும் முற்பட்டபோது, ஏற்பார் இல்லாத காரணத்தால் தன் பணி தடைப்பட வாழ்வதேவிட மாள்வதே எனக்

கருதி மனம் தளர்ந்து தம் கழுத்தை அரிந்தார். சிவபெருமான் வெளிபட்டுப் பெருங் கருணை யோடு அவர் கையைப் பிடித்து நிறுத்திக் காட்சி தந்து அவரைச் சிவலோகத் தில் சிறப்புற வீற்றிருக்கும்படி அருள் புரிந்த தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டில் இருபதாவது தலம். திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய தேவாரப் பெற்றது. பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், திருப் புகழ் பெற்ற தலம். தலபுராணம் உண்டு.

கார்த்திகை பௌர்ணமிக்கு அடுத்த இரண்டு நாட்கள் புற்றின் மீது உள்ள கவசம் எடுத்துவிடப்பட்டு, அன்றைய தினம் புற்றாகவே உள்ள மூர்த்தியை தரிசிக்கலாம்.

மாசி பௌர்ணமி தீர்த்தவிழாவை ஒட்டி 10 நாட்கள் திருவிழாவில் 9 ஆம் நாள் மகிழடி சேவை உற்சவம் நடைபெறுகிறது.

இக்கோவில் உள்ள கல்வெட்டுக்களில் திருவொற்றியூடைய நாயனார், படம்பக்க நாயகதேவர் என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன.

ஆ. பட்டினத்தார்திருக்கோவில்

இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக பட்டினத்தார்சுவாமி. இத்தல வரலாறு திருவெண்காடர் புராணத்தில் விரிவாக உள்ளது. தேசிகர் 2 கால பூஜை செய்கிறார்.

இ. நந்திகேஸ்வரர் திருக்கோவில்

இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய மூலவர் நந்திகேஸ்வரர் காட்சியளிக்கிறார். 600 வருட முற்பட்ட கோவில்.

ஈ. அகஸ்தீஸ்வரர் திருக்கோவில்

இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப் பளவில், 20 அடி உயர கோபுரத்துடன், மூலவர் அகஸ்தீஸ்வரர், அம்மன் இராஜ ராஜேஸ்வரி. அகத்திய முனிவர் தாபிக்கப் பட்ட லிங்கமாகும். 1100 வருட முற்பட்ட கோவில்.

மேலும், இவ்வூரைச் சுற்றியுள்ள விம்கோ நகரில் காசிவிஸ்வநாதர் திருக்கோவிலும், எரணாவூரில் ஹிரண் யேஸ்வர் திருக்கோவிலும், மகாகாளியம்மன் கோவில்களும், சாத்தங்காட்டில் எல்லையம்மன் மற்றும் கல்யாண வரதராஜ பெருமாள் கோவிலும் உள்ளன.

2. திருவலிதாயம்

பத்தரோடுபல ரும்பொலியம்மலர் ரங்கைப்புனல் தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு தேத்த உயர்சென்னி
மத்தம் வைத்தபெரு மான்பிரி யாதுறை கின்ற வலிதாயம்
சித்தம்வைத்தவடி யாரவர் மேலடை யாமாற் றிடர் நோயே

-- திருஞானசம்பந்தர்

சென்னைக்கு மேற்கே 15 கி.மீ. பாடி என்று தற்போது அழைக்கப்படும் இத்தலம் 1-30 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 35 அடி உயர மூன்று நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருவலிதாயநாதர், வல்லீசர் எனவும் வழங்குவர். அம்மன் தாயம்மை வடமொழியில் ஜகதாம்பாள். தலமரம் பாதிரி தீர்த்தம் பரத்துவாச தீர்த்தத் திருக்குளம். விமானம்-கஜப் பிரஷ்ட விமானம்.

பரத்துவாச முனிவர் வலியன் என்ற கருங்குருவி வடிவில் இத்தல இறைவனை வழிபட்டதால் தலம் வலிதாயம் எனப் பெயர் பெற்றது. பிரம்மாவின் மகளான கமலை, வல்லி என்ற இருவரையும் விநாயகர் இத்தலத்தில் திருமணம் புரிந்துக் கொண்டதாகத் தலபுராணம் கூறுகிறது.

வியாழ பகவான் இத்தலத்தில் தவமிருந்து காமத்தீயைக் கடந்தார். திருமால் கேசவப் பெருமாள் என்ற பெயரோடு இத்தலத்தை வழிபட்டுக் கொலைப் பாவம் நீங்கப்பெற்றார். அனுமன், சுக்ரீவன், இராமர், குசலவர் முதலியோர் வழிபட்டுப் பேறுகள் பலவும் பெற்றத் தலம்.

அகத்திய முனிவர் வாதாபி, வில்வலன் ஆகியோரைக் கொன்ற கொலைப்பாவம் நீங்க இத்தல இறைவனை வழிபட்டு பேறுபெற்ற தலம். பிரமன் வழிபட்டு முத்தி பெற்ற தலம். வாயு, இந்திரன், அக்கினி, சூரியன், மன்மதன், இராமர், ஆஞ்சனேயர், சூரியன், சந்திரன், ஆகியோரும் வழிபட்டு அருள் பெற்றத் தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் 21வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர், இராமலிங்க அடிகள் ஆகியோர் பாடிப்பரவிய தலம்.

அன்னிய மதத்தாரால் பல கொடுமைகளில் இத்தல தாயம்மையின் சிலை பின்னமடைந்தது. பிறகு ஒரு வள்ளல் தாயம்மைக்கு உருவமைத்துத் தனி விமானத்துடன் நிறுவியதாக தெரிகிறது. தாயம்மையின் அழகிய பழைய சிலை கோவிலில் தற்போது உள்ளது.

அட்டாவதானம் பூவை கல்யாண சுந்தர முதலியார் நந்திநாடியை ஆதாரமாகக் கொண்டு 21 சருக்கங்களாகப் பாடிய தலபுராணம் இத்தலத்திற்கு உண்டு.

இத்தலத்தில் 14 கல்வெட்டுகள் உள்ளன. இவ்வூரை தொண்டை மண்டலத்தின் 24 கோட்டங்களில் இத்தலம் புழல் கோட்டத்துக்கு உட்பட்ட அம்பத்தூர் நாட்டைச் சேர்ந்தது எனவும், ஜயங்கொண்ட சோழ மண்டலத்து விக்கரம சோழ வளநாட்டைச் சேர்ந்தது என்றும், சுவாமியை திருவலிதாயமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப்படுகிறது. நாள்தோறும் இரண்டு கால பூஜைகள். சித்திரை பௌர்ணமி, வைகாசி மூலம், திருஞானசம்பந்தர் திருநாள், தைத்திங்கள் பெருவிழா நிகழ்கிறது. பௌர்ணமிதோறும் இத்தலத்தை வழிபடுவோர் எல்லா நன்மைகளையும் எய்தி இன்புறுகின்றனர். மேலும் இவ்வூரில் எல்லையம்மனாக மாரியம்மனும், பொன்னியம்மனும் உள்ளனர். கொன்னூர் என்னுமிடத்தில் சௌமிய தாமோதர பெருமாள் கோவிலும் உள்ளன.

3. திருமுல்லைவாயில்

சந்தன வேருங் காரகிற் குறடுந்
தண்மயிற் பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக் குவைகளும் பவளக்
கொடிகளுஞ் சுமந்து கொண் டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர்
களையாய் பாசுப தாபரஞ் சுடரே

-- சுந்தரர்



திருச்சிற்றம்பலம்

சென்னைக்கு வடமேற்கே 20 கி.மீ. வடதிருமுல்லைவாயில், சண்பகவனம். இக்கோவில் 1-12 ஏக்கர் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய 7 நிலை இராஜ கோபுரமும், மூன்று பிராகாரங்களுடன், மூலவர் தீண்டாத்திருமேனியாக, சுயம்புலிங் கமாக அருள்மிகு திருமாசிலாமணிஈஸ்வரர் கிழக்கு நோக்கியும் அம்மன் கொடியிடை நாயகி தனிசன்னிதியில் கிழக்கு நோக்கியும் உள்ளனர். தலவிருட்சம் முல்லை தீர்த்தம் - பாலாறு, சுப்ரமணிய தீர்த்தம். விமானம் - கஜப்பிருஷ்டம்.

தொண்டை நாட்டு மன்னன் ஒருவன் வேட்டையாட வரும்போது அவனுடைய யானையின் காலில் முல்லைக்கொடி சிக்கிக் கொள்ளவே யானை நின்றுவிட்டது. மன்னன் தன் வாளால் முல்லைக் கொடியை வெட்டும்போது அங்கிருந்து இரத்தம் வெளிப்பட்டது. அகழ்ந்து பார்த்தபோது ஒரு சிவலிங்கம் காட்சியளித்து வெட்டுண்ட இடமும் தெரிந்தது. உடனே, மன்னன் காட்டை அழித்து கோவில் அமைத்தான். இப்பொழுதும் மூலஸ்தான மூர்த்தியின் சிரசில் வெட்டுக்குறி இன்றும் காணலாம். முல்லைக்கொடியை இடமாகக் கொண்டு அதன் வாயிலாக இறைவன் வெளிப் பட்டமையால் இத்தலம் முல்லைவாயில் எனப் பெயர் பெற்றது.

இத்தல இறைவன் தொண்டை மானுக்குப் படைத்துணையாக நந்தி தேவரை அனுப்பியருளினார் என்பது வரலாறு. நந்திதேவர் கிழக்கு நோக்கியுள்ளார்.

முருகப்பெருமான் பூசித்த திருவூர் அருணகிரிநாதர் பாடிய தலம், இத்தலத்தில் வடக்கு நோக்கியுள்ளார். கோவிலின் அர்த்த மண்டபத்தில் இருபெரிய வெள்ளெருக்கு தூண்கள் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டில் இத்தலம் 22வது தலம். சுந்தரர் தேவாரம் பெற்றது.

சுந்தரர் சங்கிலியாரை மணந்தபின்பு சத்தியத்தை தவறினமையால் கண்ணொளி இழந்து திருவாரூர் இறைவனை புறப்பட்டு வரும்போது இத்தலத்தையடைந்து தமது துயரத்தை போக்கியருளுமாறு திருப்பதிகம் பாடி வழிபட்ட சிறப்புடைய தலம்.

பாலாற்றின் கிளைநதியொன்று பழைய காலத்தில் இவ்வழியாக சென்று வறண்டது என்பதை தேவாரத் திருப்பதிகத்தில் அறியலாம்.

முருகப்பெருமான், திருமால், காமதேனு, வசிட்டர், தொண்டைமான் முதலியோர் பூசித்த தலம்.

இத்தலத்தில் நடராஜர், பிட்சாடனர், நர்த்தன கணபதி, தக்ஷணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்க்கை, சோழபுரீசர், குசலவபுரீசர் சன்னிதிகள் உள்ளன.

இத்தலபுராணத்தில் நைமிசாரண்ய முனிவர்கள், பிருகு, பிரம்மா, வசிட்டர், சந்திரன், சூரியன், இராம லட்சுமணர், லவன், குசன், துர்வாசர், ஐராவதம், இந்திராணி, கிருஷ்ணன், அர்ச்சுனன், தேவமித்ரன், சித்திரவர்மன், நட்சத்திரங்கள் முதலியோர் இத்தலத்தை வழிபட்டு அருள் பெற்றதாக புராணம் கூறுகிறது.

இக்கோவிலில் 23 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை வடதிருமுல்லைவாயில் ஜெயங் கொண்ட சோழ மண்டலத்துப் புழற்கோட்டத்துக் கானப்பேரூர் நாட்டுக்கு உட்பட்டிருந்தது என்பதை ஜடாவர்மன் சுந்தர பாண்டிய தேவனின் 10ஆம் ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.


தினமும் காலை சந்தி, உச்சிக்காலம், மாலை ஆகிய மூன்று கால பூஜை நடைபெறுகிறது. பிரம்மோற்சவம் வைகாசி மாதம் கடக ராசி, விசாக நன்னாளில் முடியும்படி ஆண்டுப் பெருவிழா நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

4. திருமயிலாப்பூர்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

-- திருஞானசம்பந்தர்



சென்னைக்கு தெற்கே 6கி.மீ. திருமயிலை இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங் களுடன் கிழக்கு நோக்கிய 9 நிலை இராஜகோபுரமும், கொண்டு மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு கபாலீசுவரர் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் கற்பகாம் பாள். சிங்காரவேலர், வாயிலார் நாயனார், பூம்பாவை, துர்க்கை சன்னிதிகள் சிறப்புடை யவை. தலமரம் புன்னை தீர்த்தம் - கபாலீ. கோவிலுக்கு மேற்கே பெரிய திருக்குளம் உள்ளது.

பிரமனது பாவத்தைப் போக்கிக் கபாலீசுவரர் என்ற பெயரோடு பிரமனால் பிரதிட்டை செய்து வழிபடப்பட்ட பெருமான் எழுந்தருளி விளங்கும் திருத்தலம். அம்பிகை மயிலுருவாய்ப் பூசித்த பெருமையுடையது. திருக்குறளை அருளிய தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவதரித்த தலம். வாயிலார் நாயனார் அவதரித்த சிறப்புக்குரிய தலம். திருமால், இராமர் முதலியோர் பூசித்த பெருமையுடைய தலம்.

சிவநேசச் செட்டியாருடைய மகள் மலர் பறிக்க சென்றபோது பாம்பு தீண்டி இறந்தார். திருஞானசம்பந்தருக்கு மணஞ்செய்து கொடுக்க உறுதி செய்திருந்த சிவநேசர் அப்பெண்ணின் எலும்பினை ஒரு புதிய மண் குடத்தில் அடக்கஞ் செய்து வைத் திருந்தார். பின்பு சம்பந்தர் இத்தலத்திற்கு வந்தபோது பதிகம் பாடி அந்த எலும்பைப் பூம்பாவையாக்கிய திருத்தலம். முருகப் பெருமான் பூசித்து வேலாயுதம் பெற்றருளிய புராண வரலாற்றை உடைய தலம். சுக்கிரன், சோமுகன் என்ற அசுரன் முதலியோர் வழிபட்ட தலம்.

தொண்டை நாட்டுத் தேவாரத் தலங் களில் 24வது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருப்பதிகம் பெற்ற தலம். இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் 10 திருப்புகழ் பாடியுள்ள தலம். சோழர்கால கல்வெட்டுக்கள் பல உள்ளன. தலத்தின் வரலாற்றை கூறும் புராணங்கள் வடமொழியிலும், தென் மொழியிலும் உள்ளன. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ அமிர்தலிங் கத்தம்பிரான் சுவாமிகள் இயற்றிய தலபுராணமும், திருமயிலை நாத முதலியார் இயற்றிய தலபுராணமும், இத்தலத்திற்குரி யவை. தாண்டவராய கவிராயர் இயற்றிய திருமயிலையகம அந்தாதி, திருமயிலையுலா, கலம்பகம், தொட்டிக்கலை நாராயணசாமி முதலியார் இயற்றிய திருமயிலைவெண்பா மாலை, கபாலீசர் பஞ்சரத்தினம். அம்பல வாண கவிராயர் இயற்றிய சிங்காரவேலர் கோவை. தாண்டவராயர் இயற்றிய சிங்கார வேலர் பிள்ளைத்தமிழ் என பல நூல்கள் இத்தலத்தைப் பற்றி கூறுகின்றது. 5 கால பூஜை. மாசி மாதத்தில் பிரமோற்சவமும், பங்குனி மாதத்தில் அறுபத்து மூவர் உற்சவமும் நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரில்

வாலீசர் திருக்கோவில் : இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வாலீசர். 500 வருட முற்பட்டது. வாலி வழிபட்ட தலம்.

வெள்ளீசர் திருக்கோவில் : இக்கோவில் 0.66 செண்ட் நிலப்பரப்பளவில் பிரதிஷ்டலிங்மாக வெள்ளீசர் அம்மன் காமாட்சியம்மன். 400 வருட முற்பட்டது.

தீர்த்தபாலீசர் திருக்கோவில் : இக்கோவில் சுமார் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தீர்த்தபாலீஸ்வரர் அம்மன் திரிபுரசுந்தரியம்மன். கல்வெட்டுக் களில் பல்லவர் காலம்.

மல்லீசர் திருக்கோவில் : இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லீசர். அம்மன் மரகதவல்லி.

காரணீஸ்வரர் திருக்கோவில் : இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காரணீஸ்வரர். அம்மன் பொற் கொடியம்மன்.

அப்பர்சுவாமி திருக்கோவில் : இக்கோவில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரதிஸ்டலிங்கமாக அப்பர்சுவாமி.

விருபாக்ஷீசர் திருக்கோவில் : இக்கோவில் 16.50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரதிஸ்டலிங்கமாக விருபாக்ஷீசர். அம்மன் விசாலாட்சியம்மை. சம்பந்த பெருமான் எலும்பை பூம்பாவை யாக்கிய தலம். மேலும் இவ்வூரில் மாதவ பெருமாள் கோவில், முண்டகக் கண்ணியம்மன் கோவில், திருவள்ளுவர் கோவில், வேதாந்த தேசிகர் கோவில், வெங்கடேச பெருமாள் கோவில் என பல கோவில்கள் இவ்வூரில் அமைந்துள்ளன.

சென்னை

புதிய்வண்ணாரப்பேட்டை: இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரதிஷ்டலிங்கமாக அருணாசலேஸ்வரர். 250 வருட முற்பட்டது.

முத்தியால்பேட்டை : இக்கோவில் 1-40 ஏக்கர் நிலப்பரப்பளவில், பிராகாரம் கோபுரங்களுடன் மூலவர் பிரதிஷ்ட லிங்கமாக கச்சபேஸ்வரர், அம்மன் சௌந்தராம்பிகை. 300 வருட முற்பட்டது.

லிங்கிசெட்டித் தெரு : இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லீகேசுவரர், அம்மன் மரகதாம்பிகை.

பவழக்காரத் தெரு: இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரதிஷ்டலிங்கமாக காளத்தீஸ்வரர், அம்மன் ஞானாம்பிகை. 400 வருட முற்பட்டது. கல்வெட்டுகள் உள்ளன.

லிங்கிச்செட்டித் தெரு: இக்கோவில் 16.50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரதிஷ்டலிங்கமாக கமடேஸ்வரர், அம்மன் காளிகாம்பாள். 400 வருட முற்பட்டது. ஸ்ரீ சக்கரம் உள்ளது. மகாராஷ்ர மாமன்னன் சத்ரபதி சிவாஜி வருகை தந்த தலம். 5 கால பூஜை. வைகாசி திங்கள் 10 நாட்கள் பிரமோற்சவம்.

மண்ணடி : மூலவர் அருணாசலேஸ்வரர் அம்மன் அபிதகுஜாம்பாள். நான்கு கால பூஜை. 300 வருட முற்பட்டது.

ஏழு கிணறு : இக்கோவில் 1600 ச.அடி நிலப்பரப்பளவில் மூலவர் வேதகிரீஸ்வரர் அம்மன் திரிபுரசுந்தரி.

சௌகார்பேட்டை : இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நிமிஷம்பாலீஸ்வரர்.

சைனா பஜார் : இக்கோவில் 1-50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர் அம்மன் அபிதகுஜாம்பாள்.

இடையர் பாளையம் : இக்கோவில் ஒரு பிராகாரத்துடன், 7நிலை இராஜகோபுரத்துடன் மூலவர் ஏகாம்பரேஸ்வரர் அம்மன் காமாட்சியம்மன், அரசமரம், 40 வருட முற்பட்ட கோவில்.

பெரம்பூர் : இக்கோவில் 2000 ச.அடி நிலப்பரப்பளவில் மூலவர் ஆனந்தீஸ்வரர் அம்மன் சேமாத்தம்மன்.

வியாசர்பாடி : இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக ரவீஸ்வரர். சூரியன் பூஜித்த லிங்கம்.

சூளை : 1. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் அங்காளப்பரமேஸ்வரி. 350 வருட முற்பட்டது. 2. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

அயனாவரம் : 1. இக்கோவில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக பரசுராமலிங் கேஸ்வரர். 350 வருட முற்பட்டது. இரு கால பூஜை. 2. இக்கோவில் 47 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி. சித்திரை பிரமோற்சவம்.

நுங்கம்பாக்கம் : இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

இராயப்பேட்டை : இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கங்காதர ஈஸ்வரர் அம்மன் பங்கஜம்பாள். சுந்தரர் தரிசித்த தலம்.

பார்க் டவுண் : இக்கோவில் 2.25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சென்னம லீஸ்வரர். அம்மன் பிரம்மீசுவரி மற்றும் சென்னகேசவ பெருமாள்.

சிந்தாதிரிப்பேட்டை : இக்கோவில் 350 வருட முற்பட்டது. மூலவர் ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவ பெருமாள்.

கோமளீஸ்வரன்பேட்டை: 1.இக்கோ வில் 2-00 ஏக்கர் நிலப்பர ப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக கோமளீஸ்வரர் அம்மன் கோமளாம்பிகை. 350 வருட முற்பட்டது. காமதேனு வழிபட்ட தலம். 2. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப் பளவில் மன்னாரீஸ் வரர் அம்மன் பச்சையம்மன்.

திருவேட்டீஸ்வரன் பேட்டை : திருவேட்டி இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜ கோபுரத்துடன், இரண்டு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக திருவேட்டீஸ்வரர் அம்மன் சண்பகவல்லி. திருக்குளம் வடக்கேயுள்ளது. தீர்த்தம் சண்பகம். திருமகள் திருமாலை திருமணம் புரிந்து கொள்ள விரும்பி இத்தல இறைவனை வேண்டியதால், திருவேட்டி எனப் பெயர். அர்ச்சுனன் வழிபட்ட தலம். திருநாவுக்கரசர் வைப்புத்தலமாக பாடியுள்ளார். தலபுராணம் வேங்கடாசலம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. 5 கால பூஜை. சித்திரையில் உற்சவம்.

திருவல்லிக்கேணி: இக்கோவில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காமேஸ்சுவரர் அம்மன் கமலாம்பிகை.

அமைந்தகரை : இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேசுவரர், அம்மன் காமாட்சியம்மன்.

வடபழனி: புலியூர், இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய 7 நிலை இராஜ கோபுரத்துடன் மூலவர் வியாக்ரபுலீஸ்வரர் என்னும் வேங்கீஸ்வரர் கிழக்கு நோக்கி யுள்ளார், அம்மன் சாந்த நாயகி. விமானம் கஜபிருஷ்டம். வியாக்ரபாத முனிவர் தரிசித்த தலம். சோழர்களின் ஆட்சிக்காலத்தில் புலியூர் என்று அழைக்கப் பெற்று, தலைநகராக விளங்கிய தலம்.

சைதாப்பேட்டை : இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், தெற்கு நோக்கிய இராஜகோபுரத்துடன் இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் காரணீஸ்வரர், அம்மன் சொர்ணாம்பிகை. மேற்கே திருக்குளம். 500 வருட முற்பட்ட கோவில். நான்கு கால பூஜை. சித்திரையில் பிரம்மோற்சவம்.

திருச்சிற்றம்பலம்

5. திருவான்மியூர்

ஒட்டை மாடத்தி லொன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயில்
வாட்டந் தீர்த்திடும் வான்மியூ ரீசனே
-- திருநாவுக்கரசர்

சென்னைக்கு தெற்கே 8 கி.மீ. கடற்கரை தலமான இக்கோவில் கிழக்கு, மேற்காக 5 நிலை இராஜகோபுரங்களுடன், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மருந்தீசுவரர், வான்மீகர், அமிர்தேசுவரர், வேதபுரீசுவரர், பால்வண்ணநாதர் என்பன சுவாமி பெயர்களாக வழங்கப்படுகிறது. அம்மன் திரிபுரசுந்தரி. சோமாஸ்கந்தர் தியாகராஜராக இத்தலத்தில் விளங்குகிறார். தலமரம் - வன்னி. தீர்த்தம் பாபநாசினி.

வான்மீகி முனிவருக்கு இறைவன் பங்குனிப் பௌர்ணமியில் நடனக்காட்டி காட்டியருளிய தலம்.

தேவர்கள் அமுதத்தால் இலிங்கம் செய்து பூசித்தமையால் இறைவன் இத்தலத்தில் பால்வண்ணநாதராய் விளங்கு கிறார். சுவாமி சிறிது வடபுறம் சாய்ந்த நிலையில் மேற்கு நோக்கி காட்சியளிக் கிறார்.

அனுமன் பூசித்த இலிங்கமும், இந்திரனது சாபம் நீக்கிய மீனாட்சி சுந்தரேசுவரும், பரத்துவாசர் பூசித்த லிங்கமும் இத்தலத்தில் உள்ளன.

முதலில் பிரம்மதேவன் இங்கு நகரம் அமைத்து மருந்தீசருக்கு விழாக் கொண்டாடியதால், பிரம்ம தேவரின் பெயரால் பிரம்மதீர்த்தம் மற்றும் உற்சவ மூர்த்தியும் இத்தலத்தில் உள்ளது.

சந்திரன் குருபத்தினியைச் சேர்ந்ததால் குருசாபம் பெற்று இத்தலத்தை அடைந்து, இறைவனை வழிபட்டு குருசாபம் நீங்கப் பெற்ற தலம்.

மார்க்கண்டேயர் இத்தலத்தில் தவமிருந்து, வன்னி மரத்தடியில் இறைவன் இடபாருடராகக் காட்சி தந்து வரம் அருளிய படி இத்தலத்தில் ஜென்மநாசினி, காமநாசினி, பாபநாசினி, ஞானதாயினி, மோக்ஷதாயினி என்னும் ஐந்து தீர்த்தங்கள் அமைந்த தலம்.

குரங்குருவம் பெற்ற இரக்ஷகன் என்பவன் பிரமலோகத்திலுள்ள கல்யாண தீர்த்தத்தில் மூழ்கியதால் பெண்ணுருவம் பெற்று, இத்தலத்தையடைந்து ஜென்ம நாசினியில் மூழ்கித் பழைய வடிவத்தை பெற்ற தலம்.

கிருஷ்ண பகவான் உபமன்யு முனிவரிடம் சிவதீக்ஷை பெற்று இங்குள்ள பாபநாசினி தீர்த்தத்தில் மூழ்கிப் பாவம் நீங்கப் பெற்ற தலம்.

இராமபிரான் சீதாபிராட்டியைக் தேடிவரும் வழியில் இத்தல இறைவனை வழிபட்டு நலம் பெற்றார்.

பிருங்கி மகரிஷி இப்பெருமானையும், உமையம்மையையும் வழிபட்டுச் சக்தியை நீக்கிச் சிவனை மட்டும் வழிபட்ட பாவம் நீங்கினார். பிருங்கி முனிவர் தங்கியிருந்த மலை பிருங்கிமலை எனப் பெயர்பெற்றது. இப்போது அம்மலை பரங்கிமலை என வழங்கப் பெறுகிறது.

தொண்டை நாட்டுத் தேவாரத் தலங்களில் இத்தலம் 25வது ஸ்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரம் பெற்றது. இத்தல முருகனைப் போற்றி அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார். சேக்கிழார், வண்ணச்சரபம் தண்டபாணி

சுவாமிகள், பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் முதலியோர்களும் பாடியுள்ளனர். ஸ்தலபுராணம் அஷ்டாவதானம் பூவை கல்யாண சுந்தர முதலியார் பாடியுள்ளார். பாம்பன் சுவாமிகள் எனப் போற்றப்பெறும் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் இத்தலத்தில் சமாதி அடைந்துள்ளார்.

கல்வெட்டுக்கள் 7 உள்ளன. இறைவனை திருவான்மியூருடைய மகாதேவன் என்றும், இவ்வூரை ஜெயங் கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர் கோட்டம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. நான்கு கால பூஜை, பங்குனி மாத பௌர்ணமியின்போது உற்சவம் நடைபெறு கிறது.

6. விலாங்காடுபாக்கம்

சென்னைக்கு வடக்கே 15 கி.மீ. இக்கோவில் 54 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக லவபுரீஸ்வரர். அம்மன் திரிபுரசுந்தரி. இராமனுடைய புதல்வர்களான லவ இத்தலத்தில் தங்கி வணங்கியதால் இத்தல இறைவனுக்கு லவபுரீஸ்வரர் என்று பெயர். ஒருகால பூஜை. மேலும் இவ்வூரில் ஸ்ரீ ஆதிமூல பெருமாள் கோவிலும் உள்ளது.

7. புழல்

சென்னைக்கு வடமேற்கே 10 கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக திருமூல நாதேஸ்வரர். அம்மன் ஏகவல்லியம்மன். இத்தலத்தை பல்லவ, சோழ மன்னர்கள் திருப்பணி செய்ததை குறிக்கும் கல்வெட்டுக்கள், தாமிர சாசனங்களும் உள்ளன. இவ்வூரில் கரிய மாணிக்க பெருமாள் கோவிலும் உள்ளன.

8. மாதவரம்

சென்னைக்கு வடக்கே 11 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர் திருக்கோவில். இக்கோவில் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் கட்டியதாக கூறப்படுகிறது. இரண்டு கால பூஜை. மேலும் இவ்வூரில் ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவிலும் உள்ளன.

9. குளத்தூர்

சென்னைக்கு வடக்கே 9 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சோமநாதசுவாமி மற்றும் அமிர்தராஜ பெருமாள். ஒரு கால பூஜை.

10. கொரட்டூர்

சென்னைக்கு மேற்கே 10 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஜம்புகேஸ்வரர். 500 வருட முற்பட்ட கோவில், மேலும் இவ்வூரில் ஆதிகேசவ பெருமாள் கோவிலும் உள்ளது.

11. வில்லிவாக்கம்

சென்னைக்கு மேற்கே 9 கி.மீ. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அகஸ்தீஸ்வரர். அம்மன் சொர்ணாம்பிகை. 500 வருட முற்பட்டது. இக்கோவிலின் காவல்தெய்வமாக தாந்தோணியம்மன் கோவிலும் உள்ளது.

12. அயனம்பாக்கம்

சென்னைக்கு மேற்கே 17 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் எட்டீஸ்வரர், அம்மன் கற்பகநாயகி. சோழர் கால திருப்பணி மேலும், இவ்வூரில் கரிவரதராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

13. கோயம்பேடு

சென்னைக்கு மேற்கே 8 கி.மீ. கோசை நகர். இக்கோவில் 50 செண்ட் நிலப்

பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு குறுங்காலீஸ் வரர். அம்மன் அறம்வளர்த்தநாயகி.

தி.மு.2000 வருட முற்பட்ட கோவில், கோவிலுக்கு எதிரில் உள்ள திருக்குளம் குசலவ புஷ்கரணி தலமரம்-பலா.

இராமபிரானுடைய மனைவி சீதைக்கு வனவாசத்திலிருக்கும்போது லவ, குசன் என்ற இரண்டு ஆண் குழந்தைகள் இத்தலத்தில் பிறந்தார்கள். ஆகவே இத்தலம் குசலவபுரம் என்றும், லவகுசர் இருவருக்கும் அருள்பாலிக்கச் சிவபெருமான் இங்கு சுயம்புவாக தோன்றினார்.

குழந்தைகள் மண்ணைப் பிடித்து வைத்து வழிபடுவதற்கு ஏற்பக் குறுங்கால்களைக் கொண்டு சிவபிரான் காட்சியளிக்கிறார். அகல் மடக்கைக் கவிழ்த்து வைத்தது போல லிங்கம், வடக்குப் பார்த்த சிவன் கோயிலாக அமைந்துள்ளது. இடப்பக்கத்தில் இருக்கும் அம்மன் சன்னிதி வலப்பக்கத்தில் இருக்கிறார்.

அஸ்வமேத யாகக் குதிரையை மீட்க இராமபிரானே இத்தலத்திற்கு வந்ததாகவும், இதனாலேயே இவ்வூர் இராகவபுரம் என்றும் ஆற்றின் கரையில் வந்தமர்ந்ததால் அமர்ந்தகரை என்றும் (தற்போது அமிஞ்சிக்கரை) இதன் மறுபகுதியாக அழைக்கப்படுகிறது.

உட்பிராகாரத்தில் அனேக பரிவார மூர்த்தி சன்னிதிகள் உள்ளன.

இத்தல முருகனைப் போற்றி அருணகிரிநாதர் ஒரு திருப்புகழ் பாடல் அருளியுள்ளார்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. இதில் பல்லவர், குலோத்துங்கர், விஜய நகர மன்னர்களின் கால கல்வெட்டுக்கள் இங்குள்ளன.

இத்தலத்தை பிரதோஷ காலத்தில் தரிசித்தால் 100 பிரதோஷ தரிசித்தால் பலனும், பித்ரு சாப நிவர்த்தியும், அஸ்வமேதயாக பலனும் கிடைக்கும். மேலும் இவ்வூரில் வைகுண்ட வாசப் பெருமாள் கோவிலும் உள்ளது.

14. மதுரவாயல்

சென்னைக்கு மேற்கே 12 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மார்க்கசகாய ஈஸ்வரர் கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரு கால பூஜை.

15. போரூர்

சென்னைக்கு மேற்கே 18 கி.மீ. இக்கோவிலின் மூலவர் ராமநாதஸ்வாமி. அம்மன் சிவகாமி சுந்தரி. சோழர் கால திருப்பணி கட்டிடம். ஒரு கால பூஜை.

16. நந்தம்பாக்கம்

சென்னைக்கு மேற்கே 12 கி.மீ. பிருந்தாரண்யம். இக்கோவில் 151×122 ச. அடி நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கேஸ்வரர். அம்மன் பர்வத வர்த்தினி. தீர்த்தம் - பிருங்கி தீர்த்தம்.

இத்தலத்தில் உள்ள லிங்கம் இராம பிரானாலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்ட லிங்கம் அதனால் இறைவனுக்கு இராமலிங்கேஸ்வரர் என்று பெயர். மேலும் இத்தலத்தில் கோதண்ட ராமசாமி திருக்கோவிலும் உள்ளது.

17. பரங்கிமலை

சென்னைக்கு தென்மேற்கே 12 கி.மீ. பிருங்கிமலை. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

பிருங்கிமுனிவர் இத்தலத்தில் தவமிருந்து தவத்திற்கு மகிழ்ந்த இறைவன் காட்சியளித்த தலம். அதனாலேயே இம்மலைக்கு பிருங்கிமலை என்று பெயர் தற்போது பரங்கிமலை.

கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

18. பொழிச்சலூர்

பல்லாவரத்திலிருந்து மேற்காக 3 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அகஸ்தீஸ்வரர். அம்மன் ஆனந்தவல்லி. தலமரம்-மாமரம். சோழ மன்னன் கட்டிய கோவில். இரு கால பூஜை.

19. அனகாப்புத்தூர்

பல்லாவரத்திலிருந்து மேற்காக 5கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் அகஸ்தீஸ்வரர். அம்மன் ஆனந்தவல்லி. எதிரில் திருக்குளம். ஒரு கால பூஜை. இவ்வூரில் சுப்ரமண்ய சுவாமி திருக்கோவிலும் உள்ளது.

20. திரிசூலம்

பல்லாவரத்திலிருந்து வடக்கே 2 கி.மீ. இக்கோவில் (நான்கு மலைகளுக்கு நடுவில்) 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக திரிசூலநாதர். அம்மன் திரிபுரசுந்தரி தீர்த்தம். பிரம்ம தீர்த்தம்.

பிரம்மதேவன் வணங்கி கட்டிய கோவில். வீராசன தஷிணா மூர்த்தி இங்கு பிரபலம்.

இக்கோவிலில் 14 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை ஜயங்கொண்ட. சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துக் குலோத்துங்க சோழவள நாட்டு சுரத்தூர் நாட்டு திருச்சுரம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

21. வேளச்சேரி

சைதாப்பேட்டைக்கு தெற்கே 4 கி.மீ. இக்கோவில் 3-67 ஏக்கர் நில்ப்பரப்பளவில், இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தண்டபாணீஸ்வரர், அம்மன் கருணாம்பிகை.

சோமுகன் என்ற அசுரன் இத்தல இறைவனை வணங்கி, வேதங்களைத் திருடிய குற்றத்தை போக்கிக் கொண்ட தலம்.

இயமன் மார்க்கண்டேயர் மீதும், சிவலிங்கத்தின் மீதும் பாசக்கயிற்றை வீசிய குற்றத்தை இத்தலத்திற்கு வந்து கோவில் அமைத்து வழிபட்டு போக்கிக் கொண்ட தலம். இயமன் வேதசிரேணியில் தங்கியதால் இத்தலம் வேதசிரேணி மறுவி தற்போது வேளச்சேரி ஆகியது.

திருஞானசம்பந்தர் இத்தல சுவாமியை வழிபட்ட தலம். கல்வெட்டுக்கள் உள்ளன. இரு கால பூஜை நடைபெறுகிறது.

22. மாடம்பாக்கம்

தாம்பரத்திலிருந்து கிழக்கே 8 கி.மீ. திருமாட நகர், மாடையம்பதி. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக தேனுபுரீஸ்வரர். அம்மன் தேனுகாம்பிகை.


சோழர் காலச் சிவாலய கட்டிடம். இத்தல முருகனைப் போற்றி அருணகிரிநாதர் இரண்டு திருப்புகழ் பாடல்கள் பாடியுள்ளார்.

கல்வெட்டுக்கள் உள்ளன. பங்குனி உத்திரம் சிறப்பு வழிபாடு. இரு கால பூஜை நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீபெரும்புதூர் வட்டம்

(காஞ்சிபுரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருவேற்காடு

ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே

-- திருஞானசம்பந்தர்

பூவிருந்தவல்லிக்கு வடகிழக்கே 7 கி.மீ. வேலவனம் வடவேதாரண்யம். இக்கோவில் பழைய பாலாற்றின் வடகரையில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக வேதபுரீசுவரர், வேற்காட்டீசுவரர். அம்மன் பாலாம்பிகை, வேற்கண்ணி. தலமரம் வெள்வேலமரம் தீர்த்தம் - வேத. விமானம் கஜபிருஷ்டம்.

இவ்வூரின் தலமரம் வெள்வேலமர மாகும். இதனால் இவ்வூர் திருவேற்காடு என அழைக்கப்படுகின்றது. இத்தலம் 63 நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனார் அவதரித்த பெருமை உடையது. இத்தலம் விஷம் தீண்டாத பெருமை உடையது.

சிவபெருமான் அகத்தியருக்கு வேதாரண்யத்தில் திருமணக்கோலம் காட்டியருளியது போல இத்தலத்திலும் காட்டியருளினார் ஆதலின் இத்தலம் வடவேதாரண்யம் எனப் பெயர் பெறுகிறது. இறைவனது திருமணக்கோலக் காட்சி மூலலிங்கத்திற்குப் பின்புறம் அமைந் துள்ளது.

விநாயகர், முருகன், திருமால், பிரமன் பூசித்துப் பேறுகள் பெற்ற தலம்.

இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எட்டுத்திசைப் பாலகர்களும் இத்தல வேதநாயகரை வழிபட்ட தலம்.

உள்பிராகாரங்களில் பராசரலிங்கம், சனீசுவரர், அகத்தியர், சூரியன், 63வர், காசிவிஸ்வநாதர், அனபாயன், சேக்கிழார், அருணகிரிநாதர், நால்வர், இலிங்கோத்பவர், மூர்க்க நாயனார் முதலிய திருவுருவங்கள் உள்ளன.

இத்தலத்தில் உள்ள வேததீர்த்தத்தில் ஞாயிறு தோறும் நீராடி வந்தால் அங்கம் குறைந்த பெரு நோயாளரும் நோய் நீங்கி நலமுறுவர் என தலபுராணம் கூறுகிறது.

திருவேற்காடு ஸ்ரீ பாலாம்பிகையையும், திருவலிதாயம் ஸ்ரீ ஜகதாம்பிகையையும், திருவொற்றியூர் ஸ்ரீ வடிவாம்பிகையையும் ஒரே நாளில் வழிபடுபவர் இம்மை மறுமை நலங்கள் எல்லாவற்றையும் பெறுவர் எனக் கூறப்படுகிறது.

இத்தலத்தைச் சார்ந்த நதித்துறையில் சூழ்ந்துள்ள 7 சிவத்தலங்களிலிருந்து சித்ரா பௌர்ணமியில் சுவாமிகள் எழுந்தருளுவது வழக்கம்.

தொண்டை நாட்டுத் தேவாரத் தலங்களில் இத்தலம் 23வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றுள்ளது. சுந்தரர் இத்தலத்துச் சூதரைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். நம்பியாண்டார் நம்பிகள் 11ஆம் திருமுறையில் திருவேற்காட்டைக் குறிப்பிட்டு, மூர்க்க நாயனாரைப் போற்றியுள்ளார். அருண கிரிநாதர் இத்தலத்து முருகப்பெருமான் மீது திருப்புகழ் அருளியுள்ளார். திருவேற்காட்டுப் புராணமும் உள்ளது.

இத்தலத்தில் இரண்டாம் இராஜேந் திரன் காலத்துக் கல்வெட்டுக்கள் பல உள்ளன. நான்கு கால பூஜை. சித்திரை மாதம் உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

2. இலம்பையங்கோட்டூர்

மலையினார் பருப்பதந் துருத்திமாற் பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினான் எனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயி லாலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.
-- திருஞானசம்பந்தர்

ஸ்ரீ பெருமந்தூருக்கு மேற்கே 25 கி.மீ. அரம்பையங்கோட்டூர். இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய ஒரு பிராகாரத்துடன் மூலவர் தீண்டாத் திருமேனியாக, சுயம்புலிங்கமாக அருள்மிகு தெய்வநாயகப் பெருமான் அம்மன் ஸ்ரீ கனககுசாம்பிகை. தலமரம் வில்வம். தீர்த்தம் சந்திர தீர்த்தம் கோவிலுக்கு தெற்கேயுள்ளது.

தேவமாதர்களாகிய அரம்பையர்கள் பூசித்துப் பேறு பெற்றமையால் அரம்பையங்கோட்டூர் எனப் பெயர். கூவம் ஏரியின் கரையில் அமைந்துள்ளதால் கோட்டூர் எனப் பெயர். இவ்வூர் ஏம்பாலம்பா என மருவித் தமிழில் இலம்பையங்கோட்டூர் என வழங்கப் படுகிறது.

பிராகாரத்தில் குருந்தவிநாயகர், யோகதட்சிணா மூர்த்தி, விஷ்ணு, பிரம்மன், துர்க்கை, சுப்ரமண்யர், பைரவர், சூரியன், ஸ்ரீ ரம்பாபுரிநாதர் முதலிய மூர்த்தங்கள் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இத்தலம் 13வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் உடையது. திருநாவுக்கரசர் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார்.

கல்வெட்டுக்களில் இத்தலம் பாண்டியன் கோநேரின்மை கொண்டான் திரிபுவனச் சக்ரவர்த்தி ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியில் மனவிற் கோட்டத்தின் பகுதியான கான்றூர் நாட்டிலுள்ள இத்தலம் பையங்கோட்டூர் என வழங்கப் பெறுகிறது. திரிபுவனச்சக்கரவர்த்தி திரிபுவன வீரதேவனது ஆட்சியில் கான்றூர் நாட்டிலுள்ள சதுர்தேவி மங்கலம் இலம்பை யங்கோட்டூர் என்றும், இறைவன் பெயர் இலம்பையங்கோட்டூர் உடைய நாயனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மாதம் உற்சவம் நடைபெறுகிறது.

3. ஸ்ரீபெரும்பூதூர்

சென்னையிலிருந்து தென்மேற்கே 39கி.மீ. பூதபுரி இக்கோவில் 30,000 ச. அடி நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய மூலவர் பூதபுரீசுவரர். அம்மன் மின்னம்மை. பூதக ணங்கள் வழிபட்ட லிங்கம் ஆதலால் பூதபு ரீஸ்வரர் என்றும், ஊர் பூதபுரியாயிற்று. 1000 வருட முற்பட்ட கோவில். கல்வெட் டுக்கள் உள்பிராகாரத்தில் உள்ளது. இவ்வூ ரில் ஆதிகேசவ பெருமாள் கோவிலும், இராம ானுஜர் பிறந்த தலம் உள்ளதுமாகும்.

4. திருநின்றவூர்

சென்னையிலிருந்து மேற்கே 29கி.மீ. இக்கோவில் 27,280 ச. அடி நிலப்பரப்பள வில், மூலவர் மணவாலீஸ்சுவரர். அம்மன் மரகதவல்லி. பல்லவர் காலம். வருணன்

பூஜித்த லிங்கம். மேலும் இவ்வூரில் பக்தவச்சல பெருமாள் கோவிலும் உள்ளது.

5. திருமணம்

திருநின்றவூருக்கு தென்கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 30.13 செண்ட் நிலப்பரப்பள வில், மூலவர் தாதீசுவரர். 600 வருட முற்பட்டது. இரண்டு கால பூஜை.

6. மேல்மணம்பேடு

திருநின்றவூருக்கு தெற்கே 6 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்கமாக சாந்தீஸ்வரர். ஒரு கால பூஜை. 500 வருட முற்பட்டது. மாசி உற்சவம்.

7. திருமழிசை

பூவிருந்தவல்லிக்கு மேற்கே 7 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், தெற்கு நோக்கிய இராஜகோபுரத்துடன், ஒரு பிராகாரத்துடன், மூலவர் சுயம்புலிங்கமாக ஒத்தாண்டேசுவரர் அம்மன் குளிர்ந்த நாயகி. தலமரம் - வில்வம்.

சோழ அரசன் கரிபெருவளவன் யானை மீது அமர்ந்து இத்தலத்தில் செல்கையில் ஊணாங் கொடி யானையின் கால்களை பற்றிக் கொள்ள அது கண்ட அரசன் தன் வாளால் வெட்டிய போது செடியின் அடியில் இருந்த இலிங்கத்தின் மீது பட்டு இரத்தம் கசிய கண்டு, தன் கையை வெட்டிக் கொண்டான் அரசன். இதைக் கண்ட இறைவன் அம்மன்னனுக்கு மீண்டும் கைகளை தந்து காட்சியளித்தார். இதனால் இத்தலத்து இறைவனுக்கு ஒத்தாண்டேசுவரர் என்று பெயர். கல்வெட்டுக்கள் உள்பிராகாரத்தில் உள்ளன. இரண்டு கால பூஜை. பங்குனி உத்திரப் பெருவிழா, ஐப்பசி அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் ஜகன்நாத பெருமாள் கோவிலும் உள்ளன. திருமழிசை ஆழ்வார் அவதார தலம்.

8. நசரத்பேட்டை

பூவிருந்தவல்லிக்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் காசிவிசுவநாதர். அம்மன் விசாலாட்சி. 1,000 வருட முற்பட்டது. ஒரு கால பூஜை.

9. பூவிருந்தவல்லி

சென்னைக்கு மேற்கே 23 கி.மீ. பூவை, பூவிருந்தமல்லி. இக்கோவில் 60 ஆயிரம் சதுரஅடி நிலப்பரப்பளவில், மூலவர் வைத்தியநாதர். அம்மன் அகிலாண்ட நாயகி, பால் தீர்த்தம். மேலும் இவ்வூரில் வரதராஜ பெருமாள் கோவிலும் உள்ளது. திருக்கச்சிநம்பிகள் அவதார தலம்.

10. நேமம்

திருநின்றவூருக்கு தெற்கே 5 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், மூலவர் அருணாசலேசுவரர். 400 வருட முற்பட்டது. ஒரு கால பூஜை.

11. பாரிவாக்கம்

திருவேற்காட்டிற்கு மேற்கே 2 கி.மீ. இத்தல மூலவர் பாலீஸ்வரர். ஒரு கால பூஜை. புரட்டாசி உற்சவம்.

12. மாங்காடு

பூவிருந்தவல்லிக்கு தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வெள்ளீஸ்வரர். இங்கு தனிக்கோவிலாக தபஸ்காமாட்சியம்மன். உற்சவர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி. இத்தலத்தில் ஆதிசங்கரர் ''அர்த்தமேரு'' ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்த தலம். மேலும் இவ்வூரில் சுயம்புலிங்கமான சாந்தீஸ்வரர் கோவிலும், வைகுந்த பெருமாள் கோவிலும், எல்லை யம்மனாக மாந்தியம்மன், வேம்புலியம்மன் கோவில்களும் உள்ளது.

13. மலையம்பாக்கம்

குன்றத்தூருக்கு வடக்கே 5 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 150 வருட முற்பட்டது.

14. சிறுகளத்தூர்

குன்றத்தூருக்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் சிறிய மலையின்மேல் கிழக்கு நோக்கிய மூலவர் அமரபதீஸ்வரர். 600 வருட முற்பட்டது.

15. கோவூர்

குன்றத்தூருக்கு வடகிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், தெற்கு நோக்கிய இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுந்தரேசுவரர் அம்மன் சௌந்தராம்பிகை. கோவிலுக்கு கிழக்கே திருக்குளம். விமானம் கஜப்பிருஷ்டம். சங்க காலத்தில் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இன்றி விளங்கிய வரும் எட்டுத்தொகையுள் ஒன்றான புறநானூற்றுள் பல பாடல்கள் பாடியவரான கோவூர் கிழார் என்னும் புலவர் பிறந்தவூர் இவ்வூரேயாகும். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் கோவூர்ப் பஞ்சரத்னம் என்னும் 5 கீர்த்தனங்களைப் பாடியருளிய தலம். இக்கோவில் 1200 ஆண்டுகளுக்கு முந்திய கோவிலாகும். மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. வைகாசி பிரமோற்சவம் நடைபெறுகிறது.

16. குன்றத்தூர்

பல்லாவரத்திலிருந்து மேற்கே 7 கி.மீ. இக்கோவில் கிழக்கு நோக்கிய இராஜகோபுரத்துடன், இரண்டு பிராகாரங்களுடன், மூலவர் நாகேசுவரர். கோவிலின் எதிரில் திருக்குளம். கல்வெட்டுக்கள் உள்ளன. பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் பெருமான் வழிபட்ட தலம். இவ்வூரில் சேக்கிழார் பெருமானுக்கு தனிகோவிலும் உள்ளது. மேலும் இக்கோவிலுக்கு சிறிது தொலைவில் தெற்கே சிறிய மலையின் மீது வடக்கு நோக்கிய இராஜகோபுரமும், கோவிலும் கொண்டு மூலவர் சுயம்புவாக கந்தசாமி என்னும் சுப்ரமணிய சுவாமி வள்ளி, தெய்வானையுடன் காட்சியளிக்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியருளிய தலம்.

17. பரணிபுத்தூர்

மாங்காட்டிற்கு கிழக்கே 5 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் தீர்த்தீஸ்வரர். 200 வருட முற்பட்ட கோவில்.

18. பெரியபணிச்சேரி

போரூர்க்கு தெற்கே 6 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் வெள்ளீஸ்சுவரர்.

19. மணப்பாக்கம்

கிண்டிக்கு மேற்கே 5 கி.மீ. இக்கோவிலின் மூலவர் வாலீஸ்வர சுவாமி.

20. கெருகம்பாக்கம்

போரூர்க்கு தெற்கே 5 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேசுவரர். 300 வருட முற்பட்டது. இவ்வூரில் வேணுகோபால பெருமாள் கோவிலும் உள்ளது.

21. தண்டலம்

குன்றத்தூருக்கு வடகிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 600 வருட முற்பட்ட கோவில்.

22. தரபாக்கம்

குன்றத்தூருக்கு வடகிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 200 வருட முற்பட்ட கோவில்.

23. சோமங்கலம்

ஸ்ரீபெரும்பூதூருக்கு கிழக்கே 15 கி.மீ. வேதீச்சுரம், சதுர்வேதிமங்கலம். இக்கோவில் 23,664 ச.அடி நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சோமநாதஈஸ்வரர். அம்மன் காமாட்சியம்மன். நந்தி கிழக்கு நோக்கியுள்ளது. திங்கள் வழிபட்டவூர். உள்பிராகாரத்தில் விநாயகர், பாலசுப்ர மணியர், சோமாஸ்கந்தர், சதுரதாண்டவ நடராஜர், திருமால், பிரமன், சூரியன், சந்திரன், நவகிரகம், துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

தொண்டைமான் வணங்கிய தலம். இத்தலம் திருநாவுக்கரசர் வைப்புத்தலமாக போற்றி பாடியருளிய தலம். இங்குள்ள நடராஜர் சதுர தாண்டவ நடராஜர். அதனால் இவ்வூருக்கு சதுர்வேதிமங்கலம் மற்றும் வேதீச்சுரம் என்று பெயர். கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர் கால கோவில். இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. ஆடி மாதம் உற்சவம், மேலும் இவ்வூரில் சுந்தரராஜ பெருமாள், சூராத்தம்மன் கோவில்களும் உள்ளன.

24. படப்பை

தாம்பரத்திலிருந்து மேற்காக 10 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் தழுவக்கொழுந்தீஸ்வரர். அம்மன் காமாட்சியம்மன். 300 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் கீழ்புரத்திலுள்ள 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வீரேட்டீஸ்வரர் அம்மன் சாந்த நாயகி. 900 வருட முற்பட்ட கோவில். கல்வெட்டுக்கள் உள்ளன.

25. பேரிஞ்சம்பாக்கம்

ஸ்ரீபெரும்பூதூருக்கு தெற்கே 10 கி.மீ. இக்கோவில் 1660 ச.அடி நிலப்பரப் பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக, அகத்தீஸ்வரர். அம்மன் அகிலாண்ட வல்லி. இக்கோவிலின் எல்லையம்மன் கொம் மாத்தம்மன் கோவிலும் உள்ளது.

26. எச்சூர்

ஸ்ரீபெரும்பூதூருக்கு தென்மேற்கே 15கி.மீ. இக்கோவில் 15,000 ச.அடி நிலப்பரப்பளவில் மூலவர் மார்க்கண் டேஸ்வரர். அம்மன் மரகதவல்லி சித்திரை பௌர்ணமி உற்சவம்.

27. குண்ணம்

ஸ்ரீபெரும்பூதூருக்கு தென்மேற்கே 17கி.மீ. இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காலகண்டேஸ் வரர், அம்மன் பூவாத்தம்மன். கரிமாணிக்க பெருமாள், எல்லையம்மன், மூங்கில் அம்மன் கோவில்களும் உள்ளன.

28. மாத்தூர்

ஸ்ரீபெரும்பூதூர்க்கு தெற்கே 10 கி.மீ. இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆபத்சகாயர் மற்றும் அமிர்தவல்லியம்மன். நந்தி கிழக்கு நோக்கியுள்ளது. திருஞானசம்பந்த பெருமான் இத்தலத்திற்கு வந்ததாக கூறப்படுகிறது. கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரின் வடக்கேயுள்ள வல்லக்கோட்டை என்னுமிடத்தில் ஸ்ரீசுப்ரமண்யர் திருக் கோவில் உள்ளது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியருளிய தலம். வல்லம் என்னும் கிராமத்தில் ஸ்ரீசைலாம்பிகை சமேத சடைஈஸ்வரர் திருக்கோலும் உள்ளது.

29. ஒரத்தூர்


ஸ்ரீபெரும்பூதூருக்கு தெற்கே 25 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசுவரர் அம்மன் காமாட்சியம்மன். கல்வெட்டுக்கள் உள்ளன. மேலும் இவ்வூரில் பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலும் உள்ளன.

30. நாவலூர்

ஸ்ரீபெரும்பூதூருக்கு தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரநாதர் அம்மன் காமாட்சி.

காஞ்சிபுரம் வட்டம்

(காஞ்சிபுரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. காஞ்சிபுரம்

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே

-- திருஞானசம்பந்தர்



சென்னையிலிருந்து தென்மேற்கே 75கி.மீ. காஞ்சி, பிரளயசித்து, சிவபுரம், விண்டுபுரம், மும்மூர்த்திவாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம், எனப் பன்னிரு பெயர்கள் கொண்ட இக்கோவில் 47 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 பிராகாரங்களும், தெற்கு நோக்கிய கிருஷ்ண தேவராயர் கட்டிய 172 அடி உயரம், 9 நிலைகளை உடைய இராஜகோபுரமும் கொண்டு மூலவர் சுயம்புலிங்கவடிவில் அருள்மிகு ஏகாம் பரேசுவரர் பிருதிவி வடிவில் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். அம்மன் காமாட்சியம்மன் தீர்த்தம் - புண்ணிய, இட்டசித்தி, மங்கல, காப்புடைத், சர்வ, உலகாணித் தீர்த்தங்கள். தலமரம் - மா. நான்கு வேதங்களையும் நாற்றிசைகளிலும் கிளைகளாகக் கொண்டுள்ளது. இம்மரம் 3500 வருடங்களுக்கு முற்பட்டது. உள்பிராகாரத்தில் ஏலவார் குழலியம்மை, விகடச் சக்கரவிநாயகர், ஆறுமுகர், 1008, 108 லிங்கங்கள், அகத்தியர், வெள்ளைக் கம்பர், 63 நாயன்மார்கள், பணாதரேசர், மார்க்கண்டேசர், கள்ளக்கம்பர், மத்தள மாதவேசர், பிக்ஷாடனர், நல்லகம்பர், நிலாத்துண்டப் பெருமாள், நடராஜர், நவக்கிரகம், பிரளயம் காத்த அம்மை முதலிய சன்னிதிகள் அமைந்துள்ளன. பஞ்ச பூதத் தலங்களில் பிருதிவித் தலம். முத்திதரும் தலம்.

திருக்கயிலையில் உமையம்மையார் விளையாட்டாகப் பெருமான் திருக்கண்களை பொத்தினார். உலகம் இருண்டது மக்களும், தேவர்களும், கடவுட் பூசை முதலிய அறங்களிலிருந்து வழுவினர். இப்பாவம் அம்பிகையைச் சாராது. ஆயினும் உலக மக்கட்கு நடந்து காட்டவேண்டிக் காஞ்சியில் 32 தர்மங்களையும் புரிந்து நம்மைப் பூசித்து பாவ விமோசனம் பெறுவாயாக என இறைவன் கட்டளையிட்டதும், அம்பிகை இத்தலத்தில் எழுந்தருளி 32 தர்மங்களாக தேவயாகம், பிதிர் யாகம், பூதயாகம், மானிடயாகம், பிரமயாகம், வறியார்க்கு ஈகை, துறவிகட்கு மடம், இல்வாழ்வார்க்கு வீடு, இல்வாழ்க்கைக்குரிய கருவிப் பொருள்கள், தண்ணீர்ப் பந்தல், பூஞ்சோலை, அங்கஹீனர்களை ஆதரித்தல், நோய்க்கு மருந்து கொடுத்தல், குழந்தை வளர்ப்பு, சுண்ணம் கொடுத்தல், தாம்பூலம் கொடுத்தல், தலைக்கு எண்ணெய் கொடுத்தல், அரைப்புப்பொடிகள் கொடுத்தல், படுக்கை அளித்தல்,பூதானம், கோதானம், கன்னிகாதானம், மணம் செய்வித்தல், விளக்கு கொடுத்தல், தீராக்கடன் தீர்த்தல், சிவனடியார்க்கு வேண்டுவன அளித்தல், திருவெண்ணீறு கொடுத்தல், பூசைப் பொருள்கள் தருதல், சமய நூல்கள் அளித்தல், சிவபக்தியை உண்டாக்குதல், அபயமளித்தல் என 32 தர்மங்களையும் வளர்த்து நாள்தோறும் கச்சி

ஏகம்பரை பூசித்து வந்தார். ஒரு நாள் அந்தர்வாகினியாக இத்தலத்தில் ஓடிக் கொண்டிருக்கும் கம்பா நதியை இறைவன் வெள்ளமாகப் பெருகி வரச் செய்தார். அதுகண்ட அம்மையார் பெருமான் திருமேனிக்கு இடையூறு வாக்கூடாதே என்று எண்ணித் தம் இருகரங்களாலும் பெருமான் திருமேனியைத் தழுவிப் பற்றிக் கொண்டார். அம்பிகையின் வளைத் தழும்பும், முலைத்தழும்பும் தன் திருமேனி மீது படியக் குழைந்து கொடுத்து அம்பிகைக்கு அருள்புரிந்தார் இறைவர். மாவடியின் கீழ் இறைவன் இருந்ததால் ஏகம்பன் என்றும் பெயர். இத்தலம் கம்ப மென்றும், பெரிய கம்பமென்றும் கூறப்படுகிறது. சிவலிங்கத்தின் பின்புற மாடத்தில் திருமணக் கோலத்தில் காட்சியளிக்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இழந்த கண்களில் இடக்கண்ணை இத்தலத்தில் பெற்றார். ஐயடிகள் காடவர்கோன் என்ற அரசர் ஆட்சிபுரிந்த தலம். திருக்குறிப்புத் தொண்டர், சாக்கியர் ஆகிய நாயன்மார்கள் திருவேகம்பப் பெருமானை வழிபட்டு திருவருள் பெற்ற தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் திருப்பதிகங்களில் முதன்மைத் தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், பாடியருளிய திருப்பதிகங்களும், சேக்கிழார், அருணகிரிநாதர், கச்சியப்பச் சிவாச்சாரியார், பட்டினத்தார் . முதலி யோர்களும் பாடியருளிய தலம்.

மேலும் இக்கோவிலின் மூன்று பிராகாரத்திலும் அமைந்துள்ள திருக் கோவில்கள் வருமாறு.

முதல் பிராகாரத்தில் ஏகாம்பரநாதருக்கு வலப்பக்கத்தில் பிரம்மனால் பூசிக்கப்பட்ட வெள்ளக்கம்பர், இடப்பக்கத்தில் திருமாலால் பூசிக்கப்பட்ட கள்ளக்கம்பர். ஈசானத்தில் ருத்திரரால் பூசிக்கப்பட்ட நல்லகம்பர் சன்னிதியும் அமைந்துள்ளன. சிவசக்தி லலிதாதேவி என்னும் திருப்பெயர் கொண்டு வெளிப்பட்டுயாவும் படைக்கத் தொடங்கிய போது அவரது முக்கண்ணிலும் தோன்றிய மும்மூர்த்திகளாவர்.

முதல் பிராகாரத்தில் தென்பாகத்தில் அகஸ்தீஸ்வரர் சன்னிதியும், ஆலயத்தினுள் மேற்கு பாகத்தில் அஷ்டோத்ர லிங்கமும், வடக்கு பக்கத்தில் மார்கண்டேஸ்வரர் சன்னிதியும், மத்தள மாதவேஸ்வரர் சன்னிதியும் அமைந்துள்ளன.

இரண்டாம் பிராகாரத்தில் வாயு மூலையில் ஸ்ரீராமன், இராவணனை கொன்ற தோஷம் நீங்க பூஜை செய்த ஸஹஸ்ரலிங்கமும், மூன்றாம் பிராகாரத்தில் கச்சிமயானத்திற்கு கீழ்பால் மேற்கு நோக்கிய சன்னிதியில் வாலீஸ்வரர், தெற்கு பக்கத்தில் விஷ்ணுவேஸ்வரர், ஆயிரம் கால் மண்டபத்தில் உள்ள கோபுர வாயிலுக்கு நேரே தென் பிராகாரத்தில் விண்டுவீசர் சன்னிதியும் உள்ளது.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. இத்தலத்தில் கரிகாற்சோழன் காஞ்சி நகரில் மக்களைக் குடியேற்றினான் எனப் பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடு கிறார். பெரும்பாணாற்றுப்படை இந்நகரின் வளமையை நன்கு கூறுகிறது.

திருநாவுக்கரசர் காலத்தில் வாழ்ந்த முதலாம் மகேந்திரவர்மனும், நரசிம்மவர்மன், பூசலார் காலத்தில் வாழ்ந்த இராஜசிம்மனும், பரமேசுவரவர்மனும், சுந்தரர் திருத் தொண்டத் தொகையில் போற்றிய கழற்சிங்கனும் காஞ்சியில் விற்றிருந்து அரசுபுரிந்த சிவபக்தி உடைய அரசர்களாவர்.

இத்தலத்தில் தொண்டைமண்டல ஆதீனமும், காஞ்சி காமகோடி பீடமும் அமைந்துள்ளன. தினமும் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. பங்குனி உத்திரப் பெருவிழா நடைபெறுகிறது.

காமக்கோட்டம்

காமாட்சியம்மன் எழுந்தருளியுள்ள திருக்கோவில் காமக்கோட்டம் எனப்படும். இக்கோவில் கச்சியேகம்பத்திலிருந்து தென் கிழக்கே சிறிது தூரத்தில் அமைந்துள்ள இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் நான்குபுறமும் கோபுரங்களும், உள்ளே திருக்குளமும் கொண்டு, இரண்டு பிராகாரங்களுடன், மூலத்தானத்தில் காமாட்சி அம்மன் பத்மாசனத்தில் அமர்ந்து தவக்கோலத்தில் காட்சி தருகிறார். நேர் கிழக்காகயில்லாமல் சிறிது தென்கிழக்காக அக்னி மூலைப்பார்வையில் எழுந்தருளி யுள்ளார். அம்மைக்கு முன்னால் பூப்பிரஸ் தாரமான நாற்பத்து முக்கோணமுள்ள ஸ்ரீ சக்கரம் ஆதிசங்கரால் அமைக்கப் பட்டுள்ளது. இதன் வலப்பக்கத்தில் தபஸ் காமாட்சி சன்னிதி உள்ளது. இக்கோவிலின் உற்சவமூர்த்தியாக விளங்கிய தங்கத்தாலான பங்காரு காமாட்சியே முஸ்லிம் கலகத்தின்போது தஞ்சைக்கு எடுத்துச் சொல்லப்பெற்று அங்கேயே இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. . திருக்கள்ளப் பெருமாள் 108 விஷ்ணு திவ்விய தேசத்து பெருமாள் இக்கோவிலின் பிராகாரத்தில் உள்ளார்.

பிரமனையும், அ- திருமாலையும், ம-உருத்திரனையும் தம் கண்களினின்று படைத்தமையால் காமாட்சி எனப் பெயர் பெற்றார்.தன்னிடத்துக் காமியத்துடன் செய்யும் தர்மம் ஒன்று கோடியாகப் பெருகிப் பலன் தருவதால் காமகோடி எனவும், காமக் கோட்டம் என்றும் இக்கோவில் வழங்கப்படுகிறது.

சக்திபீடங்கள் எல்லாவற்றினுக்கும் முதற்பீடம் ஆதலால் ஆதிபீடம் என அறம் புரப்பவள் யோக பீடம் எனச் சேக்கிழார் இதனைக் குறித்தருள்கிறார்.

சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையில் குறிக்கப்பெறும் ஐயனார் கையில் செண்டுடன் கோவிலின் காவல் தெய்வமாக விளங்குகிறார்.

திருஞானசம்பந்தர், கச்சிப் பொலி காமக் கொடியுடன் கூடி இச்சித்து விளங்கும் ஈசன் எனவும், திருநாவுக்கரசர் கொழும் பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி கொங்கையிணையவர் பொருது கோலம் கொண்ட தழும்புளவே எனவும், சுந்தரர் கச்சிமூதூர்க் காமக் கோட்டம் உண்டாக நீர்போய் ஊரிடும் பிச்சை கொள்வதென்னே எனவும் காமாட்சியம்மையைத் தேவாரத் திருப்பாடல்களில் குறிப்பிட்டு அருளி யுள்ளார்கள்.

கச்சி மயானம்

ஏகாம்பரநாதர் திருக்கோவிலில் சுவாமி சன்னிதியின் முன்பு உள்ள கொடிமர மண்டபத்தில் அக்கினி மூலையில் இக்கோவிலாக கச்சி மயானம் என்னும் மேற்கு நோக்கிய சுயம்புலிங்கமாக காட்சியளிக்கிறார்.

முன்னூழியில் பண்டாசுரனைக் சம்கரிக்க தேவர்களைச் சமிதைகளாகக் கொண்டு சிவபிரான் வேள்வி செய்த திருக்கச்சிமயானம் என்னும் இத்திருக்கோவிலாகும். யாககுண்டமான சிவகங்கைத் தீர்த்தம் உள்ளது.

இத்தலம் ''மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி மயானத்தான் வார்சடையான் என்னினல்லால்'' என திருநாவுக்கரசர் இவரைப் போற்றியுள்ளார். இத்தலம் தேவார வைப்புத் தலமாக போற்றப்படுகிறது.

அகத்தீஸ்வரர் திருக்கோவில்

இக்கோவில் கைலாசநாதர் கோவிலுக்கு போகும் சாலையில் வடக்கு பக்கமாக உள்ள உபநிஷத்பிரம்மேந்திர மடத்தின் உள்ளே லிங்கவடிவில் அகத்தீஸ்வரர் அகத்திய முனிவர் வழிபட்டதனால் இப்பெயர் பெற்ற தலம்.

மங்களேசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி மங்கள தீர்த்தத்தின் தென் கரையில் உள்ளது. உமாதேவியார் தோழி ஒருத்தியான மங்களை, ஒரு லிங்கம் தாபித்து வழிபட்டதலம். இதனால் இங்கு மங்கள தீர்த்தம் என்றும் பெயர்.

திருச்சிற்றம்பலம்

திருமேற்றளி

மறையது பாடிப்பிச்சைக் கென்றகந் திரிந்துவாழ்வார்
பிறையது சடைமுடிமேற் பெய்வளை யார்தனோடும்
கறையது கண்டங்கொண்டார் காஞ்சிமா நகர் தன்னுள்ளால்
இறையவர் பாடலாட விலங்குமேற் றளியனாரே

-- திருநாவுக்கரசர்

இக்கோவில் ஏகம்பத்திற்குத் தென் மேற்கில் 2 கி.மீ. தொலைவில் பிள்ளையார் பாளையம் சாலைத்தெருவில் உள்ளது. தளி என்பது கோவில் எனப்பொருள்படும்.கச்சி ஏகம்பத்திற்கும் மேற்றிசையில் உள்ளமை யால் இப்பெயர் பெற்றது. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமேற்றளி நாதர் அம்மன் காமாட்சியம்மை. தீர்த்தம் - விஷ்ணு தீர்த்தம்

இங்குத் திருமால் சிவசாரூபம் விரும்பித் தவம் புரிந்தார். பெருமான் திருஞானசம்பந்தர் இங்குவரும்போது நமது சாரூபம் பெறுவீர் என்றருளினார் திருஞானசம்பந்தர் இங்கு வந்து பாடிய போது திருமால் அதைக்கேட்டு உருகிச் சிவலிங்க உருவாயினார். சாரூபம் பெற்ற திருமால் கிழக்கு நோக்கியும், பூசிக்கப்பட்ட மேற்றளிநாதர் மேற்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளனர். இக்கோவிலின் கீழ்பால் உற்றுக்கேட்டநாதர் மூர்த்தி திருஞானசம்பந்தர் பாடலை உற்றுக் கேட்டவராகச் சொல்லப்படுகிறார். அதற்குக் கிழக்கில் திருஞானசம்பந்தர் சன்னிதி உள்ளது. திருஞானசம்பந்தப் பிள்ளையார் இங்குத் தங்கிய காரணத்தால் இவ்வூர் பிள்ளையார் பாளையம் என வழங்குகிறது என்று காஞ்சிபுராணம் கூறுகிறது. தொண்டை நாட்டுத் தேவாரப் பாடல்பெற்ற தலங்களில் இத்தலம் 2வதாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசர் ஒரு பதிகமும், சுந்தரர் ஒரு பதிகமும் அருளியுள்ளார்.

திருஓணகாந்தன்தளி

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காணமில்லை கழலடி தொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி ஆழ்கு ழிப்பட்டழுந்து வேனுக்
குய்யு மாறொன் றருளிச் செய்யீர் ஓண காந்தன் தளியுளீரே

-- சுந்தரர்

இக்கோவில் ஏகம்பத்திலிருந்து மேற்கே சர்வ தீர்த்தத்திற்குச் சிறிது வடமேற்கில், பஞ்சுப்பேட்டைக்கு மேற்கில் உள்ளது.

வாணாசுரனுடைய சேனைத் தலைவர் களாகிய ஓணன், காந்தன் என்ற இரு அசுரர்கள் பூசித்து மெய்யுணர்வு பெற்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது. ஓணன் பூசித்த மூர்த்தி ஓணேசுவரர் என்றும், கந்தன் பூசித்த மூர்த்தி காந்தேசுவரர் என்றும் வழங்கப்படுகிறது. இரண்டு சன்னிதிகளும் தனித்தனியே பிராகாரத்தோடு ஒரே ஆலயத்துள் கிழக்குநோக்கி அமைந்துள்ளது.

தொண்டைநாட்டுத் தேவாரப் பாடல்பெற்ற தலங்களில் இத்தலம் மூன்றாவதாகும். சுந்தரர் ஒரு பதிகம் பாடிப்பரவிப் பொன் பெற்ற தலம். காந்தேஸ்வரர் சன்னிதியில் ஓங்காரவிநாயகர் உள்ளார். முன்னர் வேறிடத்திலிருந்த சலந்தரேசுவரர் இப்போழுது இக்கோவிலைச் சார்ந்து தென்பக்கத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

கச்சிஅனேகதங்காவதம்

தேனெய் புரிந்துழல் செஞ்சடை எம்பெரு மானதி டந்திகழ் ஐங்கணையக்
கோனை எரித்தெரி யாடி இடம்குல வான திடங்குறை யாமறையா
மானை இடத்ததொர் கையன் இடம்மத மாறு படப்பொழி யும்மலைபோல்
ஆனையுரித்த பிரான திடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே

-- சுந்தரர்

இத்தலம் புத்தேரித் தெருவிற்கு மேற்கில், கைலாசநாதர் ஆலயத்திற்கு போகும் வழியில் அருகில் உள்ளது. இக்கோவில் பிராகாரத்துடன் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அநேகதங்காவதேசுவரர், அம்மன் காமாட்சியம்மன். அனேகபேசுரம் என்றும் அழைக்கப்படும் இத்தலம் விநாயகர் பூசித்துப் பேறு பெற்றமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. குபேரன் முதலியோரும் இத்தல இறைவனைப் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

தொண்டை நாட்டுத் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் இத்தலம் நான்காவதாகும். சுந்தரர் ஒரு பதிகம் பாடிப் பரவியுள்ளார். இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

கச்சிநெறிக்காரைக்காடு

வாரணவு முலைமங்கை பங்கினரா யங்கையினில்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே.

-- திருஞானசம்பந்தர்

திருக்காலிமேடு, இந்திராலயம், சத்தியவிரதம், திருநெறிக்காரைக்காடு என வழங்கப்பெறும் இத்தலம் ஏகம்பத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 22,500 ச.அடி நிலப்பரப்பளவில் 50 அடி உயர இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு காரைத்திருநாதர் என்றும் சத்தியவிரதேசுவரர் என்றும் வழங்குகிறார். மேற்கு நோக்கிய சன்னிதி அம்மன் காரார்குழலி தீர்த்தம் இந்திர தீர்த்தம்.

காரைச்செடி காடாக நிறைந்திருந்த காரணத்தால் காரைக்காடு எனப்பெயர் பெற்றது. சிவி என்னும் இந்திரனும், புதனும் வழிபட்டுப் பேறு பெற்றதலம்.

இந்திரன் வழிபட்டகாரணத்தால் தலம் இந்திரபுரி என்றும் தீர்த்தம் இந்திரதீர்த்தம் என்றும் வழங்கப்பெறுகிறது. தீர்த்தம் தற்போது வேப்பங்குளம் என வழங்கப்பெறுகிறது. புதன் வழிபட்டு இரகநிலை பெற்றமையால் புதன்கிழமை இந்திர தீர்த்தத்தில் மூழ்கிக் காரைக் காட்டீசரை வணங்குதல் சிறப்புடையது.

தொண்டைநாட்டுத் தேவாரப் பாடல் பெற்ற 32 தலங்களில் இத்தலம் 5வது ஆகும். திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடிய தலம். சன்னிதி சுவற்றில் கல்வெட்டுக்கள் காணப்படுகிறது. சோழ மன்னனால் கட்டப்பெற்ற திருக்கோவில் இங்கு நந்தி நேர் முகமாக இல்லாமல் சற்றுத் தெற்கு நோக்கியுள்ளது. இரண்டு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம்.

ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவில்

இக்கோவில் புத்தேரி தெருவிற்கு நேரே மேற்கு பக்கமாக 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் கைலாசநாதர். 16 பட்டை லிங்கவடிவில் காட்சியளிக்கிறார்.

திருமாலும் நாரதரும் திரிபுராதியரை மயக்கிய பாவத்தை நீக்கிக் கொள்வதற்குப் பூசித்த தலம்.

கற்றளியாக அமைக்கப்பட்டதில் இதுவே முதல் தளி எனக் கூறிகின்றனர். இராசசிம்ம பல்லவனால் இத்தலம் அமைக்கப்பட்டது எனக் கல்வெட்டுக் கூறுகிறது. இப்பல்லவனையே ஐயடிகள் காடவர் கோன் நாயனாராகப் புராணம் கூறுகிறது. இத்தலத்தைக் கட்டி முடித்த வுடன் குடமுழுக்குக்கு நாள் நியமித்தபோது, திருநின்றவூரில் பூசலார் நாயனார் கட்டிய கோவிலுக்குத் தாம் செல்ல இருப்பதாகவும், வேறொரு நாளை நியமித்துக் கொள்ளும் படியாகவும் இறைவன் கனவில் கூறியதாகக் கல்வெட்டு கூறுகிறது. இச்செய்தியை சேக்கிழாராலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தலத்தில் உள்ள முதல் பிராகாரம் மிகவும் விஷேசம்.

ஸ்ரீ கச்சபேஸ்வரர் திருக்கோவில்

இக்கோவில் ஏகாம்பரநாதர் திருக் கோவிலுக்கு தெற்கே ஒரு கி.மீ. தூரத்தில் ராஜ வீதியில் உள்ளது. இக்கோவில் 7-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் வடக்கு நோக்கிய இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களும் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு கச்சபேஸ்வரர் கிழக்கு நோக்கி காட்சி யளிக்கிறார். அம்மன் சுந்தராம்பிகையம்மன். பிராகாரத்தில் சதுர்முகேஸ்வரர் பஞ்ச சந்தி விநாயகர், சரஸ்வதி, சாஸ்தா, பைரவர், நடராஜர், சூரியன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

கூர்மவதாரமெடுத்த திருமால் வழிப்பட்டதால் கச்சபேசம் என்று இறைவனுக்கு பெயர். பிரம்மன் கலைமகளோடு வந்து சிருஷ்டித் தொழில் செய்யும் அனுக்கிரஹம் பெறப் பூசித்த தலம்.

இவ்வாலயத்தினுள் மேற்கு நோக்கிய சன்னிதியில் ஸ்ரீ இஷ்டசித்தீஸ்வரர். அசுர குருவாகிய சுக்ராச்சாரியார், வஜ்ஜிர யாக்கையும், மிருத சஞ்சீவினியும் பெற பூஜித்த தலம். தீர்த்தம் இஷ்டசித்தி தீர்த்தம். இத்தீர்த்தத்தின் வடக்கில் தருமசித்தீஸ்வரர், தெற்கில் காமசித்தீஸ்வரர். கிழக்கில் அர்த்தசித்தீஸ்வரர், மேற்கில் மோஷசித்தீஸ் வரர் சன்னிதிகளும் இக்கச்சபேசுவரர் திருக்கோவிலில் அமைந்துள்ளன. இக்கோவிலில் தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது.

அபிராமீசம் திருக்கோவில்

இக்கோவில் பேருந்து நிலையத்தி லிருந்து காமாட்சியம்மன் கோவிலுக்கு போகும் வழியில் உலகளந்த பெருமாள் கோவிலுக்கு தென் பக்கத்தில் உள்ளது. இக்கோவில் கிழக்கு நோக்கியதும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அபிராமீஸ்வரர். திருமால் வாமனராகி மாவலியை அழித்ததற்குப் பூசித்த தலம்.

அமரேசம் திருக்கோவில்

இக்கோவில் மேற்கு ராஜவீதியில் மேற்கு பக்கம் சிறிது உட்சென்று உள்ளே உள்ளது. கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அமரேஸ்வரர். முப்பத்து முக்கோடி தேவர்களும் வழிபட்ட தலம்.

ஒவ்வொரு தேவரும் தாம் தாம் முதலென்று அகங்கரித்த பொழுது சிவபெருமான் ஒரு துரும்பினால் அவர்கள் செருக்கினைப் போக்கிய பின்பு தேவர்கள் பூசித்த தலம். பல்லவர் காலத்து கோவில்.

அயிராபதேசுரம் திருக்கோவில்

கச்சபேஸ்வரர் கோவிலுக்கு வடகிழக்கில் 30 அடி தூரத்தில் இராஜவீதியில் தென்கோடியில் சாலைக்கு

கீழ்புறத்தில் இக்கோவில் உள்ளது. மேற்கு நோக்கிய மூலவர் ஐராவதேஸ்வரர். வெள்ளை யானையாகிய ஐராவதம் இந்திரனுக்கு வாகனமாவதற்கு வரம் பெற்ற தலம். இத்தலம் கயிலாயர் கோவில் போன்றே சிற்பம் நிறைந்தது. பல்லவர்கள் கட்டிய கோவிலாகும்.

அரிசாபந்தீர்த்தார் திருக்கோவில்

நெல்லுக்காரத் தெருவில் இரட்டை மண்டபத்திற்குத் தென் மேற்கில் இக்கோவில் உள்ளது. கிழக்கு நோக்கிய மூலவர் அரிசாபந்தீர்த்தார் சுயம்புலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். திருமால் பிருகு முனிவரால் ஏற்பட்ட சாபத்தை நீக்கிக் கொள்ளுதற்காகப் பூசித்த தலம்.

அனந்தீசரம் திருக்கோவில்

இலிங்கப்பையர் வீதியில் தெற்கு பக்கமாக மிகச் சிறிய கோவில். கிழக்கு நோக்கிய மூலவர் அனந்த பத்மநாபேஸ்வரர் காட்சியளிக்கிறார். உமாதேவியாருடைய சாபத்தால் பாம்புருவங் கொண்ட திருமால் பூசித்துப் பழைய உருவம் பெற்ற தலம்.

ஆதிபதேச்சுரம் திருக்கோவில்

தீபப்பிரகாசர் கோவிலுக்கு எதிரேயுள்ள இக்கோவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக ஆதிபதேச்சுரர் காட்சியளிக்கிறார். பிரமன் வேள்வியை அழிக்கச் சரசுவதி நதி உருவம் கொண்டு நடு இரவில் வர, பிரமன் கட்டளைப்படி திருமால் நடுராத்திரியில் வந்த வேகவதி நதியைக் காண்பதற்கு முடியாமல்போக. திருமால் ஒருலிங்கம் தாபித்துப் பூசித்து சிவபெருமானை அழைக்க, சிவபெருமானும் திருமால் கேட்டபடி தீபம்போல் பிரகாசித்து விளக்கொளிப் பெருமாளாக விளங்கி நதியைத் தடுத்து வேள்வியைக் காத்தார் என தலபுராணம் கூறுகிறது.

இரணியீசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி சர்வதீர்த்தக் கரையின் மேல்பாலுள்ளது. மூலவர் 16 பட்டை லிங்கமாக இரண்யேஸ்வரர். இரணியன் என்னும் அசுரன் தன் பெயரால் இலிங்கம் தாபித்துப் பூசித்து, மனிதராலும், மிருகங்களாலும் மற்றைய ஜீவராசிகளாலும், பூமியிலும், ஆகாயத்திலும், ஆயுதங்களாலும், காய்ந்த மற்றும் குளிர்ந்த இடத்திலும், வீட்டிற்கு வெளியிலும், உள்ளிலும், பகலிலும், இரவிலும் இறவாத வரத்தை இத்தல இறைவனிடம் பெற்ற தலம்.

இராமநாதீச்சுரம் திருக்கோவில்

இக்கோவில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் சன்னிதி தெருவில் 16 கால் மண்டபத்திற்கு அருகில் உள்ளது. கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் இராமநாதர் காட்சியளிக்கிறார். இராவணனைக் கொன்ற பாவத்தைப் போக்கிக்கொள்ள இராமபிரான் இங்கு லிங்கம் தாபித்துப் பூசித்துப் பாவம் நீங்கி அயோத்தியை அடைத்த தலம்.

இறவாத்தானம் திருக்கோவில்

பெரிய காஞ்சி கம்மாளத் தெருவில் இக்கோவில் உள்ளது. கிழக்கு நோக்கிய மூலவர் இறவாஸிதானேஸ்வரர் காட்சியளிக்கிறார். தீர்த்தம் ஞானதீர்த்தம் (வெள்ளை குளம்). சுவேதன், மார்க்கண்டேயர், சாலங்காயின் முனிவரின் பேரன் ஆகியோர் இத்தலத்தை வழிபட்டுச் சாகாவரம் பெற்ற தலம். பல்லவர் காலத்து கோவில். கல்வெட்டுக்கள் உள்ளன.

கங்காதரேசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி சர்வதீர்த்தக் கரையில் இக்கோவில் உள்ளது. மேற்கு நோக்கிய மூலவர் கங்காதரேஸ்வரர். வருணன், கங்காதேவியோடு சேர்ந்து இறைவனைப் பூசித்து நீருக்கும், நீர்வாழ் உயிர்களுக்கும் தலைவனாதலைப் பெற்ற தலம் இத்தலமாகும். வருணேசம் என்றும் தலத்திற்கு பெயர்.

காமீசுரம் திருக்கோவில்

மேற்சொன்ன சர்வதீர்த்தக்கரையில் மேற்குப் பகுதியில் இக்கோவில் அமைந்துள்ளது. மூலவர் மன்மதேஸ்சுவரர். மன்மதன் மூன்றுலகத்தும் தன் ஆணையைச் செலுத்

தும் வரத்தைக் கொடுத்தருள வேண்டும் என இறைவனைப் பூசித்து அருள் பெற்ற தலம்.

காயாரோகணம் திருக்கோவில்

பிள்ளையார்பாளையம் தாயார் குளத்திற்கு அருகில் வேகவதியாற்றின் வடகரையில் இக்கோவில் 100×100 சதுர அடி நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய மூலவர் காயாரோஹணேஸ்வரர். திருமால், பிரமன் ஆகிய இருவரும் ஆயுள் முடிந்து இறக்க வரும் அக்காலத்தில், காலத்தைக் கடந்தவனாகிய இறைவனே அவர்களை ஒடுக்கி, அவர்கள் சரீரத்தைத் தன் தோள்மேல் தாங்கி அங்கு நடனம் செய்து அருளியதால் இத்தலம் காயாரோகணம் எனப் பெயர் பெற்றது. மகாலஷ்மி பூசித்த தலம்.

குமரக்கோட்டம் திருக்கோவில் (சேனாபதீச்சுரம்)

இராஜவீதியில் இத்தலம் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம் மற்றும் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் தேவசேனாபதீச்சுரர் லிங்க வடிவில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். காஞ்சியில் முருகனுக்குரிய தனித்தலமாக்வும் விளங்கு கிறது.

பிரணவ மந்திரத்திற்குத் தவறாகப் பொருள் கூறிய பிரமனை முருகன் சிறையிலிட்டான். பிழைதீர முருகப் பெருமான் தம்பெயரால் தேவசேனாபதீஸ் வரர் என ஒரு இலிங்கம் தாபித்துப் பூசை செய்து குமரக்கோட்டம் என்னும் ஆசிரமத்தில் வீற்றிருந்தான். அருணகிரிநாதர் திருப்புகழ் இத்தலத்திற்குண்டு. இராமலிங்க சுவாமி களுக்கு இத்தலத்தில் தனி சன்னிதி உள்ளது. இத்தலத்தில் முன்னாளில் அர்ச்சகராக இருந்த கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் பாடியது குறிப்பிடத்தக்க தாகும். பாம்பன் சுவாமிகள் இத்தலத்து முருகனை வேண்டித் திருவருள் பெற்ற தலம். தினமும் 6 கால பூஜை.

சவுனகேசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி ஒக்கப்பிறந்தான் குளத்தின் தென் கரையில் புத்தேரித் தெருவிற்குத் தெற்கில் உள்ள ஒரு சிறு தெருவின் மேற்க்கோடியில் இக்கோவில் உள்ளது. கிழக்கு நோக்கிய மூலவர் திருக்காஞ்சீஸ்வரர். சவுனக முனிவர் தமது பெயரால் ஓர் இலிங்கம் தாபித்து முறைப்படி பூசித்து மலநோய் நீங்கி வீடுபேற்றை அடைந்த தலம். இத்தலம் தற்போது திருக்காஞ்சீஸ்வரர் தலம் என்றே வழங்குகின்றனர். இத்தலத்தின் தென்கிழக்கு மூலையில் 15 அடி தூரத்தில் அரம்பேசுரர் தலம் உள்ளது.

சாந்தாலீஸ்வரர் திருக்கோவில்

சின்ன காஞ்சிபுரம் திருக்கச்சிநம்பித் தெருவிற்கு வடக்காகவும், வேகவதி நதிக்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சாந்தாலீஸ்வரர். அம்மன் திரிபுரசுந்தரியம்மன் சாந்தாசயம் எனப் புராணம் கூறும். வியாச முனிவர் 'நாராயணனே பரப்பிரமம்' எனக் கூறிய சாபத்தைப் போக்குவதற்காக வேண்டி இத்தலத்தில் இலிங்கம் தாபித்து அருள் பெற்ற தலம்.

சிவாத்தானம் திருக்கோவில்

சின்ன காஞ்சிபுரம் தேனம்பாக்கம் போகும் வழியில் வேகவதி நதிக்கரையில் இக்கோவில் உள்ளது. கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக பிரம்மபுரீஸ்வரர். விமானம் - கஜபிருஷ்டம் தீர்த்தம் - பிரம தீர்த்தம். தலமரம்-முள் இல்லாத வில்வமரம்.

பிரமன் திருமாலோடு சேர்ந்து உலகத்தைப் படைக்கும் ஆற்றலைத் தனக்கு அருள வேண்டுமென இறைவனை வணங்கி அருள் பெற்ற தலம். மேலும் பிரமன் இறைவனிடம் எனது ஆத்தான மாகிய இதனை உமது ஆத்தனமாகக் கொண்டமையால் இத்தலம் சிவாத்தானம் என வழங்குதல் வேண்டுமென வரம் பெற்ற தலம்.

சுரஹரேஸ்வரர் திருக்கோவில்

பெரிய காஞ்சி ஏகாம்பரநாதர் சன்னிதித் தெருவில் தென் கோடியில் உள்ளது. இக்கோவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுரஹரேஸ்வரர். விமானம் பிரணவாகார விமானம், கருவறையில் நான்கு பக்கமும் கருங்கல்லினாலேயே ஜன்னல்கள் அமைத்துள்ளன. சுராக்கன் என்னும் அசுரனைச் சிவபெருமான் சங்காரம் செய்த தலம். தேவர்கள் பூசித்துத் தங்களுக்கிருந்த வெப்பு நோயைத் தீர்த்துக் கொண்ட தலமும் இதுவேயாகும். மாதவச்சிவஞான யோகிகள் பலவிதச் சித்திரக் கவிகள் அமைந்த படலத்தை இத்தலத்தில் பாடியுள்ளார்.

செவ்வந்தீசுரர் திருக்கோவில்

பெரிய காஞ்சி சூலதீர்த்தக் கரையில், விவசாயப் பண்ணையின் நடுவில் உள்ளது இக்கோவில். மேற்கு நோக்கிய மூலவர் செவ்வந்தீஸ்வரர். தீர்த்தம்-சூலதீர்த்தம். வாயுதேவன் சூலதீர்த்தக் கரையில் ஓர் இலிங்கம் அமைத்து செவ்வந்தி மலர்களால் வழிபட்டுக் கந்தவாகன் ஆகிய தலம் இதுவாகும்.

சோளீஸ்வரர் திருக்கோவில்

பிள்ளையார்பாளையத்தில் உள்ளது. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோளீஸ்வரர் என்னும் வைரவேஸ்வரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். தலமரம் முள் இல்லாத வில்வமரம். வயிரவர் ஐந்து முகமாக இருந்த பிரமனின் செருக்கை அடக்க ஒரு தலையைக் கிள்ளி எறிந்தார். அதனால் இறந்த பிரமன் இறைவன் அருளால் பிழைக்க இறைவனிடம் வாழ்நாள் தரும்படி துதித்து நான்முகனாய் இருந்து வாழவும் பிழையை மன்னிக்கும்படியும் வேண்டி வயிரவர் தம்பெயரால் ஓர் இலிங்கம் தாபித்துப் பூசித்துப் பல வரங்களைப் பெற்ற தலம். இத்தலத்தில் குருபைரவேஸ்வரர், விடுவச்சேனேஸ்வரர், அசிதாங்க பைரவேஸ்வரர், சம்மாரபைரவேஸ்வரர், குரோதன பைரவேஸ்வரர், உன்மத்தபைரவேஸ்வரர், கபாலபைரவேஸ்வரர், பீஷணபைரவேஸ்வரர் என எட்டுத் தலங்கள் அமைந்துள்ளன.

தக்கீசம் திருக்கோவில்

பிள்ளையார்பாளையம் கச்சியப்பன் தெருவில் உள்ளது. இக்கோவில் மேற்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் தக்ஷேஸ்வரர். தக்கன் சிவபெருமானை நீக்கிவிட்டு வேள்வி தொடங்கினான். சிவகணங்கள் அவ்வேள்வியை அழித்தனர். பின் தக்கன் தான் செய்த பிழையை எண்ணிவருந்தி, காஞ்சியில் இத்தலத்தில் இலிங்கம் தாபித்துப் பூசித்து இறைவனால் அருளப் பெற்றுச் சிவகண நாதனாயினன். தக்கேசம் எனப் புராணம் குறிப்பிடுகிறது. பதிற்றுப் பத்தந்தாதி பாடல் ஒன்று முகப்பில் எழுதப்பட்டுள்ளது.

தான்தோன்றீச்சுரம் திருக்கோவில்

உபமன்னியேசுரர் கோவில் என வழங்கும் இத்தலம் உப்பேரிக்குளத்தின் கீழ்கரையில் 20,000 ச. அடி நிலப்பரப் பளவில், மூலவர் சுயம்புலிங்க வடிவில் தான் தோன்றீச்சுரர் என வழங்கப்படுகிறது. இறைவன் உபமன்னிய முனிவரின் அன்பைக் கண்டு, திருப்பாற்கடலைத் தந்து, மேலும் ஞானமும் மூப்படையாத இளமையும் கொடுத்த தலம் இதுவாகும்.

திரிகாலஞானேசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி பேருந்து நிலையத்தில் உள்ளது. இக்கோவில் மேற்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் முக்கால ஞானேஸ்வரர். முனிவர்கள் சிலர் முக்கால உணர்ச்சியும் பெற வேண்டி ஓர் இலிங்கம் தாபித்து பூசிக்க அவர்களுக்கு அதனை அளித்த பெருமான் எழுந்தருளிய தலம் இதுவாகும்.

திரிபுரேசம் திருக்கோவில்

முட்புராரிக் கோட்டம், திரிபுராதிகள் தங்களுடைய முப்புரங்களைச்

சிவபெருமான் எறித்த பின்னர் சிவபெருமானிடம் எங்கள் மூவருள் இருவர் உமது வாயிற் காவலாளிகளாகவும், ஒருவன் மத்தள முழக்கவுமாக அருள் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கத், திரிபுராரி காஞ்சியில் எம்மை வழிப்பட்டபின் அப்பணி கிடைக்குமென, அவ்வண்ணமே பூசித்து அருள் பெற்றத் தலம்.

திருவீரட்டானம் திருக்கோவில்

பெரிய காஞ்சி கோனேரி குப்பத்தாமல்வார் தெருவைக் கடந்து வடகோடியில் இக்கோவில் மேற்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் வீரட்டானேஸ்வரர் காட்சியளிக்கிறார். வீராட்டகாசம் எனக் குறிப்பிடப் படுகிறது. கொங்கண முனிவர் தவம் புரிந்து பலவித சித்திகளைப் பெற்றதும் இத்தலத்திலேயே சாக்கிய நாயனார் இறைவன் மீது கல்லெறிந்து வழிபட்டு வீடடைந்ததும் இத்தலமே. சங்க காலத்தில், காலாக்கினி உருத்திரர் நெற்றிக்கண் தீயினால் எல்லாம் அழிக்கப்பட்டபோது இறைவன் ஆனந்த மிகுதியால் மேன் மேலும் வீர நகையைச் செய்தார். அதனால் அவ்விடம் வீரட்டகாசம் என்றாயிற்று. இத்தலத்தில் பரிவார தேவதைகள் சித்ரரூபமாகவும், பாதுகா ரூபமாகவும் உள்ளனர்.

தீர்த்தேசம் திருக்கோவில்

பெரிய காஞ்சி சர்வ தீர்த்தக்கரையில் மேல்பால் உள்ளதுமான இக்கோவில் கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் தீர்த்தேஸ்வரர் காட்சியளிக்கிறார். திருவேகம்பர் காமாட்சியம்மையாரைத் தம்மைத் தழுவுதற் பொருட்டு அழைத்தபோது, அண்டத்தின் அகத்தும் புறத்தும் உள்ள எல்லாத் தீர்த்தங்களும் நதியுருவங் கொண்டு காஞ்சிப்பதியின் மேற்குத் திசையில் வந்தது. அம்மையார் இறைவனைத் தழுவிக் கொண்ட பின்னர் வேகந் தணிந்து அங்கேயே தங்கி, இறைவனைத் தீர்த்தநாதன் என்னும் பெயரால் வழிபாடு செய்ததால் இத்தலத்திற்கு இப்பெயர் வரலாயிற்று.

பச்சிமாலையம் திருக்கோவில்

திருமால் காஞ்சி வீராட்டகாசத்திற்கு எதிரில் சக்கரதீர்த்தம் என்னும் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கித் தவம் செய்து கொண்டிருந்தார். அவ்விடம் பச்சை வண்ணர் ஆலயம் எனப்படுகிறது. திருமேற்றளியில் திருமால் சிவசாருபம் பெற்றதாகச் காஞ்சி மகிமை என்னும் நூல் கூறுகிறது. அதில் பச்சிமேச்சரர் என்றும் காணப்படுகிறது

பணாதரேசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி ஆலடிப் பிள்ளையார் கோவில் தெருவில், வேகவதி நதியின் வடகரையில் ஆதிபதேசம் என்னும் தலத்திற்குத் தெற்கேயுள்ளது. கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் பணாதரேஸ்வரர். கருடனால் தம் குலம் அழிதலைக் கண்ட பாம்புகள் காஞ்சியில் பணாதரேசப் பெருமனைத் தாபித்துப் பூசித்துத் தமது துன்பத்தைக் கூறி முறையிட்டன. பெருமான் மகிழ்ந்து அப்பாம்புகளை ஆபரணமாக அணிந்து கொண்டார் பின் அப்பாம்புகள் கருடனைக் கண்டு ஏன் கருடா சுகமோ ? என்று கேட்டன.

பராசரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி காந்திசாலை செட்டித் தெருக் கோடியில் உள்ள வழக்கறுத்தீசர் ஆலயத்தினுள் தென்பக்கத்தில் கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் பராசரேஸ்வரர் என்னும் பாதாளீஸ்வரர். பராசர முனிவர் பூசித்துத் தம் தந்தையாரைக் கொன்ற அரக்கர் கூட்டத்தை அழித்தற்கு வரம் பெற்ற தலம். இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் உள்ளது. காஞ்சி புராணத்தில் தலவரலாறு உள்ளது.

பிறவாத்தானம்

பெரிய காஞ்சியில் வெள்ளைக்குளம் தென்கரையில் இக்கோவில் மேற்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் பிறவாஸ் தானேஸ்வரர். வாமதேவர் என்னும் முனிவர்

தாயினது கருப்பத்தில் இருக்கும் போதே பிறவிக்கு அஞ்சி இறைவனை வழிபட, இறைவன் கட்டளைப்படி பிறந்தபின் காஞ்சியில் இலிங்கம் தாபித்துப் பூசித்துப் பிறவி நீங்கப் பெற்ற தலம். பல்லவர் காலத்து கோவிலாகும்.

புண்ணியகோடீச்சரம் கோவில்

சின்ன காஞ்சிபுரம் செட்டித் தெருவிற்கு தென் கிழக்கில் இக்கோவில் கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் புண்ணியகோடீஸ்வரர். அம்மன் புவனேஸ்வரி. திருமால் காஞ்சியில் ஒரு தடாகத்தை உண்டாக்கி இலிங்கம் தாபித்து பிரமனையும், பதினான்கு உலகங்களையும் படைக்க விரும்பித் சிவபிரானை அருச்சித்து "வரதா வரதா" என இறைவனைப் பல முறை அழைத்தமையால், இறைவனும் காட்சியளித்து அவர் கேட்ட வரங்களையும் தந்தார். வரதா என்று எம்மை அழைத்தமையால் வரதராசன் எனப் பெயர் பெற்று விளங்குக என்றும் வரம் அருளிய தலம். அதனால் இந்த சின்ன காஞ்சியில் வரதராஜன் என்ற பெயரில் பெரிய கோவிலாக விளங்குகிறது.

மஞ்சள் நீர்க்கூத்தர் கோவில்

சித்தீசம் என வழங்கப்படும் இத்தலம் மூங்கில் மண்டபத்தை அடுத்து மஞ்சள் நீர்க்கால்வாயில் வடகரையில் கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் சுயம்புலிங்கமாக சித்தீஸ்வரர் என்னும் மஞ்சள் நீர்கூத்தர். காமாட்சி தேவி மஞ்சள் காப்பணிந்து முழுகிய நீர், மஞ்சள் நீர்நதியாகப் பெருகிச் செல்லுங்கால், இறைவனார் மகிழ்ந்து அந்நதிக்கரையில் இலிங்கமாகத் தோன்றினார். அதனால் இறைவனுக்கு மஞ்சள்நீர்கூத்தர் என்னும் திருப்பெயர் உண்டாயிற்று.

மணிகண்டீசுரம் திருக்கோவில்

சின்ன காஞ்சியில் யதோத்காரிப் பெருமாள் கோவிலுக்குச் சிறிது கிழக்கே, சாலைக்குத் தென்புறம் உள்ளது. மேற்கு நோக்கிய சன்னிதியில் மணிகண்டீச்சுரர். நந்தி சற்றுப் பெரிது. திருமால், தேவர்கள் காஞ்சியில் மணிகண்டநாதன் என்னும் பெயரால் ஓர் இலிங்கம் தாபித்துப் பூசித்து இறைவனிடம் முன்புச் செய்த பாவம் நீங்கப் பெற்று, பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்துண்டு, இறவாப் பெருநலம் பெற்ற தலம்.

மதங்கீசம் திருக்கோவில்

பெரிய காஞ்சி மிஷன் மருத்துவ மனைக்கு வடகிழக்கில் சாலைக்கு வடவண் டையில் உள்ளது. மேற்கு நோக்கிய மூலவர் மதங்கீஸ்வரர். மதங்க முனிவர் ஐம்புலனை அடக்க வேண்டிப் பூசித்த தலம். பல்லவர்களால் இக்கோவில் அமைக்கப் பட்டது. சிங்கம் தாங்கிய தூண்கள் உள்ளன.

மாகாளேசம் திருக்கோவில்

பெரிய காஞ்சி காமாட்சியம்மை கோவிலின் வடக்கு வாயிலில் வடமேற்கே யுள்ளது. கிழக்கு நோக்கிய மூலவர் மகாகாளேஸ்வரர். மாகாளன் என்னும் ஓர் பாம்பானது காளத்தி நாதர் ஆணைப்படிக் காஞ்சியில் இலிங்கம் அமைத்துப் பூசித்து மீண்டும் காளத்தியை அடைந்து முக்தியடைந்த தலம்.

மாதலீசுரம் திருக்கோவில்

கங்கைகொண்டான்மண்டபம் அருகில் உள்ள தர்க்காத் தோட்டத்தில் இலிங்கம் மாத்திரம் உள்ளது. இந்திர னுடைய சாரதியாகிய மாதலி என்பவன் இராவண சம்காரத்தின்போது காஞ்சியில் இலிங்கம் தாபித்துப் பூசித்த தலம்.

மாண்டகன்றீசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி சகோதர தீர்த்தத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளது. கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் மாண்டுகன்னீஸ்வரர். இக்கோவிலில் நந்தி நேரே இறைவனை நோக்காமல் சற்று

வடக்கே திரும்பியுள்ளது. மாண்டகன்னீசம் எனப் புராணப் குறிப்பிடுகிறது.

மாண்டகன்னி முனிவர் தமது பெயரால் இலிங்கம் தாபித்துப் பூசித்து தேவமாதர் ஐந்து பேரை மணம்புரிந்து, ஐவர் இன்பத்தை நுகர்ந்து முடிவில் முக்தி அடைந்த தலம்.

முத்தீச்சுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி காந்திசாலையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் முக்தீஸ்வரர். பிராகாரத்தில் பரிவார மூர்த்தி சன்னிதிகள் உள்ளன.

கருடன் தன் மாற்றாந்தாயாகிய கத்துருவால், தன் தாய் சுபகருணை சிறையிடப்பட்டதை நீக்க வேண்டி, தேவ லோகம் சென்று அமிழ்தத்தைக் கொண்டு வந்து தாயிடம் கொடுத்தான். மேலும் கத்துருவின் புதல்வர்களாகிய பாம்புகளைக் கொல்ல முத்தீசரை வணங்கிவரம் பெற்ற தலம்.

ஏகாலியர் குலத்தில் பிறந்த திருக்குறிப்புத் தொண்ட நாயனார் இத்தலத்தில் வீடுபேறடைந்த தலம். முத்தீசம் என்னும் பெயரால் காஞ்சியில் பல தலங்கள் உள்ளன. எனினும் இதுவே யாவராலும் நன்கு அறியப்பட்டதலமாகும்.

வன்மீகேசுரம் திருக்கோவில்

பிள்ளையார் பாளையம் சாலைத் தெரு வடகோடியில் மேற்குப் பக்கம் வயல் வெளியில் இலிங்கம் மட்டுமே உள்ளது. வேள்வியில் தோன்றிய கீர்த்தியைத் திருமால் முழுவதும் கவர்ந்து செல்ல, அதை மீட்டும் பெற வேண்டி இந்திரன் காஞ்சியில் இலிங்கம் தாபித்துப் பூசித்து பல வரங்கள் பெற்ற தலம். இறைவன் ஆணைப்படி புற்றில் செல்லாகத் தோன்றி திருமாலின் வில்நாணை அரித்து அறுத்துக் கீர்த்தியைப் பெற்ற தலம். இப்போதும் இலிங்கத்தைச் சுற்றி புற்றுகள் காணப்படுகின்றன.

வன்னீசுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி சகோதர தீர்த்தத்தின் தென் கரையில்யுள்ளது. கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் வன்னீஸ்வரர். அக்கினி பூசித்துத் தேவர்களுக்குரிய அவிர்ப்பாகத் தைப் பெறும் வன்மை பெற்ற தலம்.

வாணேசுரம் திருக்கோவில்

ஓணகாந்தன் கோவிலுக்கு வடமேற்கில் சாலைக்குக் கிழக்கில் ஒரு சிறிய குளக்கரையில் இலிங்கம் மட்டுமே உள்ளது. வானாசூரன் தம் பெயரில் இலிங்கம் தாபித்து பூசித்து சிவபெருமானின் அருளாள் சிவகணத் தலைமை பெற்ற தலம். வாணீசம் என்றும் அழைக்கப்படும்.

வாலீச்சுரம் திருக்கோவில்

ஏகாம்பரர் ஆலயத்துள் கச்சிமயானத் திற்குப் பின்புறம் சிறு கோவிலாய் உள்ளது. மேற்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் வாலீச்சுவரர். வாலி வழிபட்டு தன்னைப் போரில் எதிர்த்தவர்கள் பலத்தில் பாதியைத் தான் அடையவும், வானர வீரர்களுக்கு அரசனாகவும் இருக்க வரங்களைப் பெற்ற தலம்.

விண்டீசுரம் திருக்கோவில்

ஏகாம்பரேசர் கோவில் ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள கோபுர வாயிலுக்கு நேரே தென் பிராகாரத்தில் உள்ளது. விண்டு வீச்சுரம் என அழைக்கப்படும் தலம். சிவபெருமானின் திருநடனத்தைக் காண ஆவலுற்றுத் திருமால் காஞ்சியில் இலிங்கம் அமைத்துப் பூசித்துத் திருவருள் பெற்று, தில்லையை அடைந்து இலக்கு மியுடன் இறைவனின் ஆனந்த நடனம் காணப்பெற்ற தலம்.

விசுவநாதேச்சுரம் திருக்கோவில்

பெரிய காஞ்சி சர்வதீர்த்தக் கரையின் மேல் திசையில் உள்ளது. காசி விசுவநாதர் தம்முராகிய காசியிலும் காஞ்சியே சிறந்த தென்று எண்ணி வந்து தங்கிய தலம்.

வீரராகவேச்சுரம் திருக்கோவில்

புத்தேரித் தெருவில் உள்ள முருகன் கோவில் பக்கம் உள்ள வயல் வெளியில் இலிங்கம் மட்டுமே உள்ள தலம். இராமபிரான் காஞ்சியில் வீரராகவேசன் என்னும் பெயரில் இலிங்கம் தாபித்து வழிபட்டு, வீரம், பாசுபதாத்திரம், பிரமாத்திரம், நாராயணாத்திரம் முதலியன பெற்று இராவணனை அழித்து அயோத்தியை அடைந்த தலம்.

2. மாகறல்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி நீடுபொழின் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே

-- திருஞானசம்பந்தர்



காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே 16 கி.மீ. செய்யாற்றின் வடகரையில் இக்கோவில் கிழக்குநோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு திருமாகறலீசர் கிழக்கு நோக்கியும், அம்மன் திருபுவனநாயகி. தீர்த்தம் அக்னி தீர்த்தம். தலமரம் எலுமிச்சை. வடக்குப் பிராகாரத்தில் உள்ளது. இத்தல இறைவனுக்கு அகத்தீசு வரர், உடும்பீசுவரர், புற்றிடங் கொண்ட நாதர், பாரத்தழும்பர், ஆபத்துகாத்தவர், பரிந்துகாத்தவர், மங்கலங்காத்தவர், மகம் வாழ்வித்த நாதர், தடுத்தாட்கொண்டவர், நிலையிட்ட நாதர் என வேறு பெயர்களும் உண்டு. பிராகாரத்தில் ஸ்ரீபொய்யாத விநாயகர், ஆறுமுகர், 63 நாயன்மார்கள், நால்வர், நவக்கிரகங்கள் முதலிய சன்னிதிகளும் உள்ளன.

பிரமன், இந்திரன், சந்திரன், தாரை, இரதி முதலிய தேவர்களும், மாக்கிரகன் என்ற அசுரனும், காசிபர், அகத்திய முனிவர்களும், இராசேந்திர சோழ மன்னனும், திருஞானசம்பந்தர் பெருமானும் வழிபாடாற்றி வரம் பெற்ற தலம்.

மாகறன், மலையன் என்னும் இரு அசுரர்கள் வழிபட்டு பேறுபெற்றதால் இத்தலம் மாகறல் என்று பெயர்.

இறைவன் திருவுருவம் எங்கும் காண இயலாத நிலையில் உடும்பின் வால் வடிவில் விளங்கக் காணலாம். இவ்வாறே இவர் எழுந்தருளியுள்ள கருவறை விமானமும் கஜப் பிருஷ்ட வடிவில் தனி அமைப்புடன் உள்ளது.

இராசேந்திர சோழ மன்னர்க்குக் காட்சி அளித்த பொன்னுடும்பின் வால வடிவில்

சிவலிங்கபாணம் அமைந்துள்ளது. ஆவுடையார் பெரிதாக உள்ளது. மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்ற பழமொழி இவ்விறைவரை வழிபடும்போது நம் நினைவிற்கு வரும்.

மும்மூர்த்திகளில் பிரமன் தானே முதன்மையானவர் எனத் தருக்குற்றபோது சிவபெருமான் பிரமனின் படைத்தொழில் ஆற்றலை மீளப் பெற்றுக்கொண்டு அவரை மண்ணுலகில் பிறக்குமாறு செய்தருளினார். பிரமன் இத்தலத்தை அடைந்து சிவலிங்கம் தாபித்துப் பூசித்துச் சிவ பெருமானிடம் எல்லா உலகங்களையும் படைக்கும் ஆற்றலை மீண்டும் பெற்றுக் கொண்டு சத்திய உலகம் செல்லும் போது இத்தலத்தின் எல்லையில் வேணுபுரத்தில் நாள்தோறும் பழம் தரும் அதிசயப் பலா மரம் ஒன்றை உருவாக்கிச் சென்றார். அப்பலா நாள் தோறும் கனிகொடுத்து வந்தது.

இராஜேந்திர சோழ மன்னன் அதைக்கண்டு வியந்து பலாவின் கனிகை நாள்தோறும் சிதம்பரேசுவரர் அபிஷேகத்திற்கு அனுப்பிவைத்து அப்பிரசாதத்தை அரண்மனைக்கு கொண்டு வருமாறு பணித்தான். ஒரு நாள் பிரசாதம் அரண்மனைக்கு வராததைக் கண்டு மன்னர் விசாரித்தபோது அப்பழத்தை நாள்தோறும் எடுத்து வருவதற்குச் சலிப்புற்ற அந்தணர் ஒருவர் அம்மரத்தை அழித்த செய்தி தெரிய வந்தது. மன்னன் அவ்வந்தணரை நாடு கடத்துமாறு கட்டளை இட்டான். இரவில் அவ்வந்தணரின் கண்களைக்கட்டி வழி நடத்திச் சென்று விடியும் பொழுது அவரைக் கட்ட விழ்த்து விட்டு வருமாறு பணித்தான். ஏவலர் அந்தணர் கண்களைக்கட்டி இரவோடு இரவாக நாடுகடத்தினர். மன்னனும் உடன்சென்று திரும்பும்போது இத்தல எல்லையில் புதர்மண்டிய ஓரிடத்தில் பொன்னிற உடும்பொன்று அரசனின் கண்களுக்குத் தென்பட்டது. அதனைப் பிடிக்க முயன்ற போது அவ்வுடும்பு ஓர் புற்றினுற் சென்று மறைந்தது. மன்னன் ஏவலர் சிலரை அழைத்துப் புற்றைச் சோதித்துப் பார்க்க உத்தரவிட்டான். ஆட்கள் ஆயுதங்களால் புற்றை அகழ்ந்தபோது ஊடும்பின் வாலில் ஆயுதம் பட்டு இரத்தம் பீறிட்டது. மன்னன் மயங்கிக் கீழே வீழ்ந்தான். மயக்கம் தெளிந்து எழுந்த மன்னனுக்கு இறைவன், தன்னை உணர்த்தி அவ்விடத்தில் சிவாலயம் எடுக்குமாறு அசரீரியாகக் கட்டளையிட்ட ருளினார். இராசேந்திர சோழன் இறைவன் பணித்த வாரே திருமாகறலில் பெரிய சிவாலயம் எழுப்பித்து நாள்தோறும் வழிபாடுகள் செய்வித்து இறையருள் பெற்றான். இம்மன்னனுக்குப் பின் இரண்டாம் குலோத்துங்க சோழனும் இத்திருக் கோவிலுக்கு திருப்பணிகள் செய்து வித்துள்ளான்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இத்தலம் 7வது தலம். சம்பந்தர் தேவாரத் திருப்பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்களில் இவ்வூரை சயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் என்றும் இறைவனை மாகறல் உடைய நாயனார், திருஅகச்சரமுடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் சார்பில் திருமுறை ஓதுவாமூர்த்திகள் ஒருவர் நயமிக்கப் பெற்று நாள்தோறும். திருமுறை ஓதல் நிகழ்ந்து வருகின்றது. தினமும் நான்கு கால பூஜை. மாசி மகத்தில் 10 நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது.

3. கருக்குப்பேட்டை

காஞ்சியிலிருந்து கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் தென்கிழக்காக நோக்கிய கோபுரமும், ஒரு பிராகாரம், மூன்று சன்னிதிகள் கொண்டுமூலவர் சுயம்புலிங்மாக காசிவிஸ்வநாத சுவாமி . அம்மன் விசாலாட்சி மற்றும் சுப்ரமண்யர். 550 வருட முற்பட்ட கோவில். இரண்டு கால பூஜை.

4. கோவிந்தவாடி

காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே 11 கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் கைலாசநாதர். இத்தலத்தில் தட்சிணாமூர்த்தி பிரபலம். உள்பிராகார சுவற்றில் கல்வெட்டுக்கள் உள்ளன. காஞ்சிப் புராணத்தில் இத்தலத்தைப்பற்றிய குறிப்புகள் உள்ளன.

5. சிறுவள்ளூர்

காஞ்சிக்கு வடக்கே 8 கி.மீ. இக்கோவில் 3-07 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன், மூலவர் சுயம்புலிங்கவடிவில் அகத்தீசுவரர். பரிவார மூர்த்திகள் உள்ளன. அகத்திய முனிவர் வழிபட்டு, காட்சி கண்ட தலம்.

6. புதுப்பாக்கம்

காஞ்சிக்கு வடக்கே 9 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காண்டீஸ்வரர்.

7. பெரிய கரும்பூர்

காஞ்சிக்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 225 ச. அடி நிலப்பரப்பளவில் மூலவர் கச்சாலீஸ்வரர்.

8. தாமல்

காஞ்சிக்கு வடமேற்க்கே 12 கி.மீ. இக்கோவில் குளத்தின் தென்கரையில் பெரிய கோவிலாக உள்ளது. மூலவர் வராகீசுரர் சுயம்புலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். இரணியாக்கன் என்னும் அசுரனைத் திருமால் வராக அவதாரம் எடுத்துக் கொன்று, பூமியை நிலைநிறுத்தினார். அவ்வெற்றிச் செருக்கால் உலகுக்குத் துன்பம் செய்தபோது இறைவன் வேடுவராகி அப்பன்றியைக் கொன்று அதன் ஒரு கொம்பை அணிந்து கொண்டார். பின் திருமால் இறைவனைப் பூசித்துத் திருவருள் பெற்ற தலம். மேலும் இவ்வூரில் தாமோதர பெருமாள் கோவிலும் உள்ளது.

9. சிங்கடிவாக்கம்

காஞ்சிக்கு கிழக்கே 12 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக திருமால் ஈஸ்வரர் அம்மன் திருபுரசுந்தரியம்மன் பிராகாரத்தில் பரிவார மூர்த்தங்களும் உள்ளன. இங்குள்ள மூலவருக்கு நாமம் அணிவிக்கப்படுவதால் இறைவனுக்கு திருமால் ஈஸ்வரர் என்று பெயர். 250 வருட முற்பட்ட கோவில்,

10. மருதம்

காஞ்சிக்கு கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் சுமாராக 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பெருமாள்ஈஸ்வரர். அம்மன் காளியம்மன்.

11. முசரவாக்கம்

காஞ்சிக்கு மேற்கே 8 கி.மீ. பாலாற்றின் வடகரைப் பகுதியில் கோவில் கொண்டுள்ள மூலவர் சக்தீஸ்வரர். இங்குள்ள பெருமாள் கோவில் ஆதிகேசவ பெருமாள்.

12. விஷார்

காஞ்சிக்கு மேற்க்கே 8 கி.மீ. இக்கோவில் பாலாற்றின் கரையில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பீமேஸ்வரர். கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

13. உள்ளாவூர்

வாலாஜாபாத்திலிருந்து கிழக்கே 11 கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். 350 வருட முற்பட்டது. இவ்வூரில் வெங்கடேச பெருமாள் கோவிலும் உள்ளது.

14. வெங்குடி

வாலாஜாபாத்திலிருந்து மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். அம்மன் செல்லியம்மன் கல்வெட்டுக்கள் உள்ளன.

15. திம்மராஜம்பேட்டை

காஞ்சியிலிருந்து கிழக்கே 10 கி.மீ. இக்கோவில் 7000 ச. அடி நிலப்பரப் பளவில், மூலவர் சுயம்புலிங்கவடிவில் ராமலிங்கசுவாமி. அம்மன் பர்வதவர்த்தினி.

16. தங்கை

காஞ்சியிலிருந்து கிழக்கே 9 கி.மீ. இக்கோவில் 500 ச. அடி நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக கைலாசநாதர். அம்மன் காமகோடி.

17. ஏகனாம்பேட்டை

காஞ்சியிலிருந்து கிழக்கே 8 கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில், ஒரு பிராகாரம், மூன்று சன்னிதிகள் கொண்டு, மூலவர் சுயம்புலிங்கமாக திருவாலீஸ்வரர். அம்மன் மாரியம்மன்.

18. நாய்க்கன்பேட்டை

காஞ்சியிலிருந்து கிழக்கே 9 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தகண்டீஸ்வரர்.

19. ஐயம்பேட்டை

காஞ்சியிலிருந்து கிழக்கே 6 கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரங்களுடன் மூலவர் கைலாசநாதர். அம்மன் சாந்தவள்ளியம்மன்.

20. ஐயங்கார்குளம்

காஞ்சிக்கு தெற்கே 5 கி.மீ. பாலாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

21. அசூர்

வாலாஜாபாத்திலிருந்து 9 கி.மீ. பாலாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர்.

22. அங்கம்பாக்கம்

வாலாஜாபாத்திலிருந்து தென் கிழக்கே 4 கி.மீ. கூடல் பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 15552 ச.அடி நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரத்துடன் மூலவர் அம்பலவாணேஸ்வரர் அம்மன் சக்திசிவகாமசுந்தரி. 1000 வருட முற்பட்ட கோவில்.

23. தாம்மனூர்

வாலாஜாபாத்திலிருந்து தெற்கே 4 கி.மீ. இக்கோவில் 21850 ச. அடி நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்க வடிவில் ஏகாம்பரநாதர். அம்மன் காமாட்சி மற்றும் கந்தப்பர்,

24. வேடல்

வாலாஜாபாத்திலிருந்து 7 கி.மீ. இக்கோவில் 240 ச. அடி நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் பெருமா ளீஸ்வரர்.

25. ஆர்பாக்கம்

காஞ்சிக்கு தெற்கே 10 கி.மீ. செய்யாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் திருவாலீஸ்வரர். கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்று கால பூஜை. இவ்வூரில் ஆதிகேசவ பெருமாள் கோவிலும் உள்ளது.

26. கவந்தண்டலம்


வாலாஜாபாத்திலிருந்து தெற்கே 8கி.மீ. செய்யாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

27. நெல்வேலி

வாலாஜாபாத்திலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி.

உத்திரமேரூர் வட்டம்

(காஞ்சிபுரம் மாவட்டம்)



1. உத்திரமேரூர்

காஞ்சியிலிருந்து தெற்கே 27கி.மீ. இவ்வூரில் கைலாசநாதர், இரட்டைத் தளீசர் என்ற சிவாலயம் உள்ளது. தனிக் கோவிலாக முருகப் பெருமானாகிய பாலசுப்பிரமணிய சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். கருவறையின் மூலையில் சிவபெருமான், உமையம்மை சன்னிதிகள் உள்ளன. முருகப் பெருமான் சிறிது சாய்வாக இருந்து சிவனைப் பூஜிப்பது போன்று காட்சியளிக்கிறார். இத்தல முருகப் பெருமானை அருணகிரிநாதர் நான்கு திருப்புகழ் பாடல்களை அருளியுள்ளார். இவ்வூரில் ஸ்ரீ சுந்தரவரதராஜப் பெருமாள் கோவிலும், மாரியம்மன் கோவில்களும் உள்ளன.

2. பெருநகர்

உத்திரமேரூர்க்கு மேற்கே 14கி.மீ. செய்யாற்றின் தென்கரையில் இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 2 கோபுரம், 2 பிராகாரம், விமானம், மகாமண்டபம் கூடிய இக்கோவிலின் கருவறையில் மூலவர் சுயம்புலிங்கமாக பிரம்மபுரீஸ்சுவரர் அம்மன் பட்டாம்பிகை. பிராகாரத்தில் விநாயகர், ஆறுமுகர், 63நாயன்மார்கள், ஜேஷ்டாதேவி முதலிய சன்னிதிகள் உள்ளன. சோழ மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோவில். கல்வெட்டுக்கள் உள்ளன. கச்சியப்ப சிவாச்சாரியார் வழிபட்ட தலம். இரண்டு கால பூஜை. தைப்பூசம் அன்று பிரமோற்சவம் 15 நாட்கள் நடைபெறுகிறது.

3. மேல்பாக்கம்

உத்திரமேரூர்க்கு வடமேற்கே 10கி.மீ. செய்யாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் , மூலவர் வருதீசுவரர். கல்வெட்டுக்கள் உள்ளன. 300 வருட முற்பட்ட கோவில்.

4. கடம்பர்கோவில்

உத்திரமேரூர்க்கு வடக்கே 10 கி.மீ. செய்யாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கடம்பநாதர்.

5. நெய்யடிவாக்கம்

உத்திரமேரூர்க்கு வடக்கே 16 கி.மீ. செய்யாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மருதகங்காஈஸ்வரர். கல்வெட்டுக்கள் உள்ளன. பட்டாபிராமர் திருக்கோவிலும் உள்ளது.

6. புள்ளம்பாக்கம்

உத்திரமேரூர்க்கு வடக்கே 21 கி.மீ. செய்யாற்றின் தென்கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ருத்ரவாலீஸ்வரர். அம்மன் பாலஞானாம்பிகை மற்றும் ஆதிகேசவ பெருமாள், திருமகள், பூமிதேவியுடன் உள்ளார்.

7. பலவேரி

சாலவாக்கத்திலிருந்து வடக்கே 10 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

8. சீதஞ்சேரி

சாலவாக்கத்திலிருந்து வடக்கே 11கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக திருக்காலீஸ்சுவரர். அம்மன் சிவகாமி. கிருஷ்ணன் வழிபட்ட தலம். பாண்டிய மன்னர்களால் இக்கோவில் திருப்பணி செய்யப்பட்டது. மூன்று கால பூஜை. சித்திரை 12 நாள் உற்சவம் நடைபெறுகிறது.

9. அரும்புலியூர்

சாலவாக்கத்திலிருந்து வடக்கே 8கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நஞ்சுண்டேஸ்வரர் மற்றும் வைகுந்த பெருமாள்.

10. மலையன்குளம்

உத்திரமேரூர்க்கு வடக்கிழக்கே 12கி.மீ. செய்யாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 375 ச. அடி நிலப்பரப்பளவில் மூலவர் குமரேஸ்சுவரர். மேலும் இவ்வூரில் விற்றிருந்த பெருமாள் கோவிலும் உள்ளது.

11. புலிவாய்

உத்திரமேரூர்க்கு வடக்கே 7கி.மீ. இவ்வூரில் மூன்று சிவத்தலங்கள் உள்ளன. 1. ஒரு ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக மகாமுனீசுவரர். 2. ஒரு ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக கன்னீஸ்சுவரர். 3. 1-5 ஏக்கர் நிலப்பரப் பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சத்திய நாதர். இம்மூன்று கோவில்களும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

12. திருப்புலிவனம்

உத்திரமேரூர்க்கு வடக்கே 5கி.மீ. தூங்கானை மாட அமைப்பிலான இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் , மூன்று நிலை இராஜகோபுரமும், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக வியாக்ரபுரீசுவரர், திருபுலிவனநாதர், அம்மன் அபிதகுசாம்பாள். வியாக்ர தீர்த்தம். ஒரு முனிவர் சாபத்தால் புலியாகப் பிறந்தும் இறைவனை வழிபடும் வழக்கம் விடாமல் தொடர்ந்து இத்தலத்தில் பூசித்து சாப விமோசனம் பெற்றதனால் இத்தல இறைவனுக்கு வியாரபுரீசுவரர் என்றும் ஊர் திருபுலிவனம் என்றும் வழங்கப்படுகிறது. இலிங்கத் திருமேனியில் புலியின் கால் சுவடுகள் மற்றும் தலை முடியின் உச்சியில் சிறு குடுமியும் விளங்குகின்றது.

இத்தலத்தைப் போற்றி திருநாவுக்கரசர், பட்டினத்தடிகள் மற்றும் சிவஞான வள்ளலார் என்பவர் அருளிய வள்ளலார் சாத்திரம் என்னும் நூலில் 64 பாடல்களும் இப்பெருமனைப் போற்றியுள்ளனர். கல்வெட்டுக்களில் இவ்வூரை புலிவலம் என்றும், இறைவனைப் திருப்புலிவல முடையார், ஆளுடையார் திருப்புலிவல முடையார், திருப்புலிவலமுடைய நாயனார் என்றே குறிக்கப்பட்டுள்ளன. இரண்டு கால பூஜை. கார்த்திகை இலட்சதீபத்திருவிழா நடைபெறுகிறது.

13. அழிசூர்

உத்திரமேரூர்க்கு வடகிழக்கே 9கி.மீ. செய்யாற்றின் தென்பகுதியில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் , மூலவர் ஆலலீஸ்வரர் 250 வருட முற்பட்ட கோவில்.

14. மானாம்பதி

உத்திரமேரூர்க்கு மேற்கே 10கி.மீ. வானாமதி. இக்கோவில் செய்யாற்றின் தென்பகுதியில் 3-00 ஏக்கர் நிலப்பர ப்பளவில், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் பாலசுந்தரேசுவரர் என்றழைக்கப் படும் வனசுந்தரேசுவரர். அம்மன் பெரியநாயகி. பிராகாரத்தில் பரிவார மூர்த்தங்கள் உள்ளன. வானமாதேவி என்றழைக்கப்படும் இந்திராணி இத்தலத்தில் இலிங்கம் தாபித்து பூசித்த தலம். அதனால் இறைவனுக்கு வான சுந்தரேசர் என்றும், இவ்வூர் வானமாதேவிபுரம் என்றும் பின்பு வானமதி. தற்போது மானாம்பதி என்றழைக்கப்படும் தலம். கல்வெட்டுக் களில் விஜயநகர மன்னர்களால் திருப்பணி செய்யப்பெற்றதாக குறிப்பிடப்படுகிறது. ஒரு கால பூஜை. தைப் பூசம் அன்று உற்சவம் நடைபெறுகிறது.

15. விசூர்

மானாம்பதிக்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் அகத்தீசுவரர். அம்மன் அகிலாண் டேஸ்வரி. ஒரு கால பூஜை. மாசி மகத்தன்று உற்சவம். மேலும் இவ்வூரில் புண்டரீகாட்ச பெருமாள் கோவிலும் உள்ளது.

16. தண்டரை

மானாம்பதிக்கு தெற்கே 3கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் குந்தேசுவரர். அம்மன் காமாட்சி

யம்மன் மற்றும் தாந்தோணி விநாயகர், பாலசுப்ரமண்யர், லஷ்மி நாராயண பெருமாள்.

17. மருதம்

உத்திரமேரூர்க்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர் அம்மன் கன்னியம்மன் மற்றும் வேணுகோபால ஸ்வாமி. 200 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை.

18. காட்டாங்குளம்

உத்திரமேரூர்க்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்சுவரர். அம்மன் அகிலாண் டநாயகி. 300 வருட முற்பட்ட கோவில்.

19. ஓரகாட்டுப்பேட்டை

சாலவாக்கத்திலிருந்து வடகிழக்கே 10கி.மீ. பாலாற்றின் மேற்குக் கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் குணம்தந்தநாதர். அம்மன் திரிபுரசுந்தரி. மூன்று கால பூஜை.

20. கவிதண்டலம்

சாலவாக்கத்திலிருந்து வடகிழக்கே 8கி.மீ. பாலாற்றின் மேற்குக் கரையில் இக் கோவில் 23செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் கற்பகாம்பாள்.

21. திருவானைக்கோவில்

சாலவாக்கத்திலிருந்து வடகிழக்கே 7கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலீசுவரர்.

22. பேரனக்காவூர்

சாலவாக்கத்திலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அலகேஸ்சுவரர். அம்மன் அன்னபூரணி மற்றும் பொய்யவிநாயகர், சென்னகேசவ பெருமாள், வேலியம்மன். ஒரு கால பூஜை.

23. எடமிச்சி

சாலவாக்கத்திலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் முத்தீஸ்வரர் மற்றும் சௌம்மிய நாராயண பெருமாள். 300 வருட முன்பு கட்டியதாக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கால பூஜை.

24. வடவூர்

உத்திரமேரூர்க்கு வடகிழக்கே 9கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் கமலாம்பிகை.

25. பெருங்குடி

உத்திரமேரூர்க்கு கிழக்கே 5கி.மீ. பெருங்கோழி. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குமரேஸ்சுவரர் அம்மன் காமாட்சியம்மன்.

26. கீழ்தண்டரை

சாலவாக்கத்திலிருந்து வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர் அம்மன் மாரிஎல்லையம்மன் மற்றும் செல்லியம்மன்.

27. ஆனந்தூர்

சாலவாக்கத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கொப்பீசுவரர் மற்றும் சுந்தரராஜ பெருமாள். 150 வருட முற்பட்டது.

28. சாலவாக்கம்

உத்திரமேரூர்க்கு வடகிழக்கே 20கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணபுரீசுவரர் மற்றும் வெங்கடேச பெருமாள்.


29. வயலக்காவூர்

உத்திரமேரூர்க்கு கிழக்கே 11 கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வாசீஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

செங்கல்பட்டு வட்டம்

(காஞ்சிபுரம் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திருக்கழுக்குன்றம்

தோடுடையானொரு காதிற்றூய குழைதாழ
ஏடுடையான் றலைகலனாக விரந்துண்ணும்
நாடுடையா னள்ளிருளேம நடமாடும்
காடுடையான் காதல்செய் கோவில் கழுக்குன்றே

-- திருஞானசம்பந்தர்



செங்கற்பட்டிலிருந்து தென்கிழக்கே 16 கி.மீ. கதலிவனம், வேதகிரி, கழுக்குன்றம், பட்சித்தீர்த்தம், திருமலை, சிவபுரநந்தவனம், இந்திரபுரி, சுருதிமலை மலைக்கோவில் 4 கி.மீ. சுற்றளவும், 230-00 ஏக்கர் நிலப்பரப்புகளைக் கொண்டு, 500 அடி உயரமும் கொண்டு, மலைமேல் இராஜகோபுரம், திருச்சுற்றுடன் மூலவர் வாழைப் பூக்குருத்துப்போல சுயம்புலிங்க மூர்த்தியாய் அருள்மிகு வேதகிரீசுவரர், கிழக்கு நோக்கியும், அம்மன் சொக்கம்மன் என்னும் பெண்ணினல்லாளம்மை வடக்கு நோக்கியும் காட்சியளிக்கிறார். தலமரம் - வாழை.

இத்தலம் கழுகுகள் வழிபட்டுப் பேறுபெற்ற காரணத்தால் கழுக்குன்றம் என்று பெயர். முதல் ஊழியில் சாபம் பெற்ற சண்டன், பிரசண்டன் என்ற கழுகுகளும், இரண்டாம் ஊழியில் சம்பாதி, சடாயு என்னும் கழுகுகளும், மூன்றாம் ஊழியில் சம்புகுத்தன், மாகுத்தன் என்னும் கழுகுகளும், நான்காம் ஊழியில் தும்பு, ஆதி என்னும் கழுகுகளும் முறையே வழிபட்டுப் பேறுகள் பெற்றன.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களே அந்நான்கு பிரிவுகளும் எனவும் அவற்றுள் அதர்வணவேத உச்சியில் சிவபெருமான் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார் எனவும் தலபுராணம் கூறுகிறது.


தீர்த்தம் சங்கு தீர்த்தம் மலையடிவாரத்தில் தென் கிழக்கே 12-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் திருக்குளமாக உள்ளது. இந்த தீர்த்தத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு பிறக்கிறது.

இந்நாளிலும் இம்மலைமேல் இரண்டு கழுகுகள் நண்பகலில் வந்து, திருக்கோவிலை வலம் வந்து தேசிகர் அளிக்கும் நெய்யும், சர்க்கரைப் பொங்கலும் உண்டு செல்கின்றன. மிகப் பழைய காலந்தொட்டு இந்நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றன.

வேதகிரீசுவரர் பெருமானை இந்திரன் 12 ஆண்டுகட்கு ஒரு முறை பூசனை புரிவதாகத் தலபுராணம் கூறுகிறது. இப்பூசையின் அங்கமாக இடி அபிஷேகம் நிகழ்கிறது. இந்த இடி கோவிலுக்கோ, சுவாமி திருவுருவிற்கோ ஊறுவிளைக்காது இந்திரன் உருவம் கோவிலின் கருப்பக் கிருகத்தில் உள்ளது.

தாழக்கோவில்

இக்கோவில் 12-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் நான்கு பக்கமும், 6,7,8,9 நிலைகளுடைய இராஜ கோபுரங்களுடன் மூன்று பிராகாரங்களும் கொண்டு, கருவறையில் மூலவர் சுயம்புஇலிங்க



மூர்த்தியாக அருள்மிகு பக்தவச்சலர். அம்மன் சுயம்பு அம்மனாக திரிபுரசுந்தரியம்மன் கிழக்கு நோக்கி தனிச் சன்னதி. அம்பிகைக்குத் தினமும் பாதத்தில்தான் அபிஷேகம் நடைபெறு கிறது. ஓராண்டில் ஆடிப்பூரம் 11ஆம் நாள், நவராத்திரி 9 ஆம் நாள், பங்குனி உத்திரம் இரவு இம்மூன்று நாட்களில்தான் திருவுருவம் முழுவதும் அபிஷேகம் செய்யப்படுகிறது. உள்பிராகாரத்தில் வண்டுவனப்பிள்ளையார், காளத்தீசுவரர், ஜம்புகேசுவரர், ஆத்மநாதர், ஏகாம்பரநாதர், பைரவர், நாயன்மார்கள், மாணிக்கவாசகர் முதலிய சன்னிதிகள் உள்ளன. தீர்த்தம் வடகிழக்கே நந்தி தீர்த்தம்.

தேவாரம் பெற்ற தொண்டை நாட்டில் 32 சிவத்தலங்களில் இத்தலம் 28வது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரம் பெற்றது. மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரிநாதர், சேக்கிழார், முதலியோர் இத்தல இறைவனைப் போற்றி பாடியுள்ளனர். தலபுராணம் அந்தகக்கவி வீரராகவ முதலியார் 23 சருக்கங்கள், 832 பாடல்கள் கொண்ட நூல் இயற்றியுள்ளார். வடமொழில் 32 அத்தியாயங்கள் அடங்கிய தலபுராணம் ஒன்றும், வேதகிரீசுவராஷ்டகம் முதலிய சில துதி நூல்களும் உண்டு.

அகத்தியர், அகலிகை, இந்திரன், உருத்திரர் கோடி, கங்கை, சத்தமாதர், சந்திரன், சனக முனிவர், சுரகுரு என்னும் சோழன், திருமால், திலோத்தமை, நந்திதேவர், பன்னிரண்டு சூரியர், பிரமதேவர், மார்க்கண்டேயர், முனிக்கணம், வசிட்டர், வசுக்கள் எண்மர், வருணன், விசுவாமித்திரர், வேதங்கள் என முதலியோர்கள் இத்தலத்தில் வழிபட்டுத் தாம் வேண்டிய வரங்களைப் பெற்ற தலம்.

வைணவர்கட்டு ஏற்பட்ட சாபநீக் கத்தின் பொருட்டு மலைக்கோவில் பெருமானுக்கு இன்றும் வைணவர்கள் திருமஞ்சனத் தொண்டு செய்து வருகின்றனர்.

இத்தலத்தில் 12 தீர்த்தங்களாக இந்திர, சம்பு, உருத்திரகோடி, வசிட்ட, மெய்ஞ் ஞான, அகத்திய, கோசிக, நந்தி, வருண, அகலிகை, மார்க்கன்டேய, சம்பாதி என பன்னிரு தீர்த்தங்கள் முக்கியமான வையாகும்.

இத்தலத்தில் 98 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை செயங்கொண்ட சோழமண்டத்தில் களத்தூர்க் கோட்டத்துத் திருக்கழுக்குன்றம் என்றும், இறைவனைப் திருக்கழுக்குன்றமுடைய நாயனார், திருமலை ஆளுடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வூரில் தீர்த்தக் குளக்கரையின் தென் மூலையில் அமைந்துள்ள ஸ்ரீஉருத்திரகோடீஸ்வரர் திருக் கோவில் உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு உத்திரகோடீஸ்வரர். அம்மன் பெண்ணின் நல்லாள். தீர்த்தம் உத்திரகோடி தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். கோடிஉருத்திரர் பூஜித்ததால் இத்தலம் உருதிரகோடி என வழங்கப்படுகிறது.

இத்தல இறைவனை ஓர் வில்வம் வைத்து பூஜித்தால் கோடி வில்வம் வைத்து பூஜித்த புண்ணியம் பெறலாம் எனத் தலபுராணம் கூறுகிறது. ஒரு கால பூஜை. மாதம் தோறும் பிரதோஷ வழிபாடு நிகழ்கிறது.

திருச்சிற்றம்பலம்

2. திருஇடைச்சுரம்

வரிவளரவிரொளி யரவரைதாழ வார்சடைமுடிமிசை வளர்மதிசூடிக்
கரிவளர் தருகழல் கால்வலனேந்திக் கனலெரியாடுவர் காடரங்காக
விரிவளர் தருபொழி லிளமயிலால வெண்ணிறத் தருவிக டிண்ணென வீழும்
எரிவளரினமணி புனமணிசாரல் இடைச்சுரமேவிய இவர்வணமென்னே

-- திருஞானசம்பந்தர்

செங்கற்பட்டிலிருந்து கிழக்காக 7 கி.மீ. திருவடிசூலம். இத்தலம் மலைகளின் இடையிலுள்ள கற்சுரத்தில் அமைந்திருப்ப தால் இப்பெயர் பெற்றது. இக்கோவில் 82 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 140 அடி நீளமும், வடக்கு தெற்காக 120 அடி அகலம் கொண்டு தெற்கு நோக்கிய மொட்டை கோபுர வாயிலும், இரண்டு பிராகாரங்களுடன் இறைவன் சுயம்பு இலிங்க மூர்த்தியாகவும், மிகப்பெரிய மரகதலிங்கமாக அருள்மிகு இடைச்சுரநாதர் என்னும் ஞானபுரீசுவரர் கிழக்கு நோக்கியும் அம்மன் இமயமடக்கொடி என்னும் கோவர்த்தனாம்பிகை தெற்கு நோக்கி காட்சியளிக்கின்றனர். தலமரம் பாதிரி. தீர்த்தம் மதுர தீர்த்தம் கோவிலுக்கு கிழக்கேயுள்ளது.

சனற்குமார முனிவர், கௌதம முனிவர் பூசித்த தலம். உள்பிராகாரத்தில் வரசித்தி விநாயகர், பிரம்மாண்டேசுவரர் உள்ளனர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் 27வது தலம். திருஞானசம்பந்தர் தேவாரம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்துத் தனிப்பாடல் ஒன்றில் பாடியுள்ளார்.

கல்வெட்டில் இறைவனை திருவிடைச்சுரமுடையார் நாயனார் என்னும், இவ்வூரை ஐயங்கொண்ட சோழ மண்டலத்திலுள்ள களத்தூர்க் கோட்டத்தின் பகுதியான வளநாட்டிலுள்ள திருவிடைச்சுரம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு கால பூஜை. பங்குனி உத்திரம் அன்று உற்சவம் நடைபெறுகிறது.

3. திருக்கச்சூர்

முதுவாய் ஓரிகதறமுதுகாட் டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீசூடும் மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் கவலாரே
அதுவே யாமாறிதுவோ கச்சூர் ஆலக்கோவில் அம்மானே

-- சுந்தரர்

செங்கற்பட்டிலிருந்து வடக்கே 12கி.மீ. திருக்கச்சூர் ஆலக்கோவில். திருக்கச்சூர் என்பது ஊர் பெயர். ஆலக்கோவில் என்பது கோயிற் பெயர். ஊர்ப்பெயரோடு கோயிற் பெயரை இணைத்து வழங்கிவரும் வைகல்மாடக்கோவில். கோவிலின் விளங்கும் தலமரம் ஆல் ஆதலால் கோவில் ஆலக்கோவில் எனப்பட்டது.

இக்கோவில் ஊர் நடுவே உள்ள கீழ்க்கோவில், கச்சபேசம் 1-00 ஏக்கர் மேற்கொண்டு மொட்டை கோபுரத்துடன் இரண்டு பிராகாரங்களுடன் இறைவன் சுயம்புலிங்கமாக அருள்மிகு கச்சபேசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் அஞ்சனாட்சி அம்மன் தனிச் சன்னிதியில் தெற்குநோக்கி யுள்ளார். தீர்த்தம் - கூர்மதீர்த்தம், தலமரம் - கல்லாலமரம். கச்சபேசம் தொண்டை நாட்டுத் தியாகேசர் தலங்களில் ஒன்றாகும். அமிர்தத் தியாகர் என அழைக்கப்பெறுகிறார்.

மந்தரமலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு தேவர்களும், அசுரர்களும் அமுத் பெறவேண்டித்

திருப்பாற்கடலைக் கடைய முற்பட்டனர். அப்போழுது மந்தரமலை கடலில் அழுந்தா வண்ணம் திருமால் ஆமை வடிவு கொண்டு அம்மலையைத் தாங்க எண்ணினார். அதற்குரிய ஆற்றல் பெற வேண்டி ஆதிகாஞ்சி எனப்படும் இத்தலத்தில் ஆமை உருக் கொண்டு சிவபெருமானைப் பூசித்து வலிமை பெற்றதால் இத்தலம் கச்சூர் எனப் பெயர் பெற்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்திற்கு எழுந்தருளிய போது நண்பகற் போதில் பசியோடிருப்பதை அறிந்து இறைவன் அந்தணர் கோலத்துடன், மனைகள் தோறும் சென்று இரந்து உணவு பெற்று வந்து அமுதூட்டிய திருத்தலம்.

இவ்வூரின் மற்றொரு கோவிலாக சிறிது தொலைவில் சிறிய மலையின் மீது 54 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மருந்தீசர். அம்மன் இருள் நீக்கித்தாயார். தீர்த்தம் ஔஷதி தீர்த்தம், தலமரம் வேர்ப்பலா.

இத்தல இறைவனைச் சுந்தரர் ''மாலை மதியே, மலைமேல் மருந்தே'' எனத் தேவாரத்தில் குறித்துள்ளார். மருந்து மூலிகைகளை அசுவினி தேவர்கட்டு அருளிய காரணத்தால் இம்மலை இறைவன் மருந்தீசர் எனப் பெயர் பெற்றார். மூலிகைகள் இருக்குமிடத்தை மறைத்து நின்ற அறியாமையாகிய இருளை அகற்றியருளிய காரணத்தால் அம்மைக்கு இருள்நீக்குந் தாயார் எனப் பெயர் பெற்றார்.

மலைக்கோவில் செல்லும் வழியில் தாலமூல விநாயகர் (கருக்கடி விநாயகர்) உள்ளார். மலைக்கோவிலில் உள்ள கொடிமரத்தின் கீழே திருநீறு போன்ற மண் கிடைக்கிறது. அருமருந்தாக மக்களால் உட்கொள்ளப்படுகிறது.

தொண்டை நாட்டில் தேவாரத் தலங்களில் இத்தலம் 26வது. சுந்தரர் அருளிய தேவாரத் திருப்பதிகம். சேக்கிழார் பெரிய புராணத்தில் இத்தலத்தில் சோறு இரந்தளித்த வரலாற்று நிகழ்ச்சியைக் குறித்து அருளியுள்ளார். அருணகிரிநாதர் திருக்குற்றாலக் திருப்புகழில் இத்தலத்து முருகனைப் பாடிப் போற்றியுள்ளார். தலபுராணம் மூன்று, ஆதி காஞ்சி மகாத்மியம், வெண்பாப்புலி வேலுசாமி பிள்ளை இயற்றியுள்ள 11 படலங்கள், 608 செய்யுட்கள் கொண்ட திருக்கச்சூர் ஆலக்கோவில் தலபுராணம். நாட்டுப் பாடல் வடிவில் கொண்ட திருக்கச்சூர் நொண்டி நாடகம்.

இங்குள்ள கல்வெட்டுக்களில் இறைவர் திருஆலக்கோவில் உடையார் என்றும், இவ்வூரை ஜெயங் கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துச் செங்குன்ற நாட்டுத் திருக்கச்சூர் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

4. செங்கற்பட்டு

சென்னையிலிருந்து தென்மேற்கே 56கி.மீ. இவ்வூரில் மூன்று சிவத்தலங்களும் ஒரு பெருமாள் கோவிலும் உள்ளது. 1.1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைந்த மூலவர் ஏகாம்பரேசுவரர், அம்மன் காமாட்சியம்மன். இக்கோவில் பல்லவ மன்னர்களால் கட்டப்பெற்றது. 2. 75 செண்ட் நிலப்பரப்பளவில் அமைந்த இக்கோவிலின் மூலவர் சுயம்புலிங்கமாக பதங்கீசுவரர். அம்மன் அங்காள பரமேஸ்வரி. 3. 34 செண்டில் அமைந்த இக்கோவில் மூலவர் கைலாசநாதர் மற்றும் கோதண்டராமசாமி திருக்கோவில் 300 வருட முற்பட்டது. மேலும் இவ்வூரில் வரதராஜ பெருமாள் கோவில், வீரபத்திர திருக்கோவில், திரௌபதியம்மன் கோவில் கள் உள்ளன.

5. மண்ணிவாக்கம்

வண்டலூரிலிருந்து மேற்காக 2 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மண்ணீஸ்சுவரர்.

6. நந்திவரம்

வண்டலூரிலிருந்து தெற்கே 7 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில்

மூலவர் சுயம்புலிங்கமாக நந்தீச்சுவரர், அம்மன் தாஷாயணி நந்தி தீர்த்தம். இக்கோவில் நந்திவர்ம பாண்டியனால் கட்டப்பெற்ற கோவில்.நந்தி பூசித்த லிங்கம். ஒரு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

7. கோவளம்

வண்டலூரிலிருந்து கிழக்கே 21 கி.மீ. இக்கோவில் 0.50 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் கைலாசநாதர்.

8. பாண்டூர்

கூடுவாஞ்சேரியிலிருந்து தென்கிழக் காக 6 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர், அம்மன் திரிபுரசுந்தரி மற்றும் ஆதிகேசவ பெருமாள்.

9. காட்டாங்குளத்தூர்

கூடுவாஞ்சேரியிலிருந்து தெற்கே 6கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர். மேலும் இவ்வூரில் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலும் தனியாக 70 செண்ட் நிலப்பரப்பளவில் உள்ளது.

10. தையூர்

திருப்போரூர்க்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் 1-72 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக முருகேசுவரர். அம்மன் மரகதாம்பாள். மேலும் இவ்வூரில் செங்கண்மடலேசுவரர் கோவிலும் உள்ளது. இரண்டு கால பூஜை. இவ்வூருக்கு கிழக்கே 4 கி.மீ. தொலைவில் திருவிடந்தை நித்திய கல்யாண பெருமாள் கோவில் உள்ளது. அழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற கோவில்.

11. வில்லியம்பாக்கம்

செங்கற்பட்டுக்கு வடமேற்கே 7 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் தோக்கீசுவரர். 300 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலும் உள்ளது.

12. திருப்போரூர்

செங்கற்பட்டிலிருந்து வடகிழக்கே 25 கி.மீ. சமரபுரி, யுத்தபுரி. இக்கோவில் கிழக்கு நோக்கிய இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வன்மீகநாதர். இத்தலத்தில் முருகப் பெருமானுக்கே முதல் வழிபாடு. இத்தலத்தில் வீற்றிருக்கும் முருகப் பெருமான் அருள்மிகு கந்தசுவாமி. வள்ளிதெய்வானையுடன் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். தீர்த்தம் சரவணப் பொய்கை. தலமரம்-வன்னி.

கண்ணுவமுனிவரால் சாபம்பெற்ற திருமால் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டு சாபவிமோசனம் பெற்ற தலம். இத்தலத்தில் அருகில் உள்ள சிறுமலைமேல் பாலாம்பிகை உடனுறை ஸ்ரீ கைலாசநாதர் காட்சியளிக்கிறார். முருகப்பெருமான் விண்ணிலே போர் புரிந்த தலம் இத்தலம். அசுரர்களது ஆவணத்தை அழித்து ஞானம் அளித்த தலம். பிரணவப் பொருளை உபதேசம் பெறும் செப்புத் திருமேனியும், வலது காலை மயில்மேல் ஊன்றி வில்லேந்திய கோலத்தில் காட்சியளிக்கும் செப்புத் திருமேனியும் இத்தலத்தில் காட்சியளிக்கின்றன.

ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் மதுரை மீனாட்சியம்மையின் அருள்பெற்று இத்தலத் திற்கு வந்தபோது முருகப்பெருமான் கந்தசாமிப் பெருமானாக காட்சிதந் தருளி னார். சுவாமிகள் அருளிய திருப்போரூர்ச் சந்நிதிமுறை பிரசித்திபெற்றது. அருண கிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ், புரசை சபாபதி முதலியார் இயற்றிய தலபுராணம் இத்தலத்திற்கு உள்ளது.

13. கொட்டமேடு

திருப்போரூர்க்கு மேற்கே 7 கி.மீ. இக்கோவில் 68 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜலகண்டேசுவரர்.

14. சிறுகுன்றம்

செங்கற்பட்டிலிருந்து கிழக்காக 13கி.மீ. இக்கோவில் மூலவர் புற்றீசங் கொண்டீஸ்சுவரர்.

15. புலிப்பாக்கம்

செங்கற்பட்டிற்கு வடக்கே 2 கி.மீ. இக்கோவில் 425 ச. அடி நிலப்பரப்பளவில் மூலவர் வியாக்ரபுரீசுவரர். மேலும் இவ்வூரில் புண்டரீகாக்ஷ வரதராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

16. பெருந்தண்டலம்

செங்கற்பட்டிலிருந்து கிழக்காக 11 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசுவரர்.

17. செம்பாக்கம்

திருப்போரூர்க்கு மேற்கே 7 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருள்மிகு ஜம்புகேஸ்வரர். அம்மன் அழகாம்பிகை. தலவிருட்சம் நாவல்மரம். இக்கோவிலை ஜம்பு என்னும் சிற்றரசன் கட்டியதாகும். முருகப் பெருமான் திருப்போரூரில் சூரனை சம்ஹாரம் செய்தபோது சூரனின் சிரம் விழுந்த இடம் சிரம்பாக்கம் என்பது மருவி செம்பாக்கம் என வழங்கும் தலமாகும்.

18. முள்ளிப்பாக்கம்

திருப்போரூர்க்கு மேற்கே 11 கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பரசுராமாஸ்வரர்.

19. மானாமதி

திருப்போரூர்க்கு தெற்கே 9 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்கரையீஸ்வரர்.

20. அகரம்

திருப்போரூர்க்கு தெற்கே 8 கி.மீ. இக்கோவில் 64 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்,

21. ஒழுகலூர்

செங்கற்பட்டுக்கு தெற்கே 5 கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசுவரர்.

22. பொன்விளைந்தகளத்தூர்

செங்கற்பட்டிலிருந்து தெற்கே 8 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக திருவாலீஸ்வரர், அம்மன் திரிபுரசுந்தரி. சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட தலம். மேலும் இவ்வூரில் 3-58 ஏக்கர் நிலப்பரப்பளவில் முன்குடுமீஸ்வரர். இக்கோவிலும் சோழர் கால மன்னர்களால் கட்டப்பெற்ற கோவிலாகும். மேலும் இவ்வூரில் ஸ்ரீலஷ்மி நரசிம்மசுவாமி பெருமாள் கோவிலும், கோதண்டராமசாமி திருக்கோவிலும், கல்வி விநாயகர் திருக்கோவிலும் உள்ளது.

23. ஆனூர்

செங்கற்பட்டுக்கு தெற்கே 14 கி.மீ. இக்கோவில் 970 ச. அடி நிலப்பரப்பளவில் மூலவர் அஷ்டபுரீசுவரர்.

24. மெய்யூர்

திருக்கழுக்குன்றத்திலிருந்து கிழக்கே 14கி.மீ. கடற்கரைத்தலம். இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்மாக வடிவில் வெள்ளீஸ்சுரர்.

25. வழுவாதூர்


திருக்கழுக்குன்றத்திலிருந்து தெற்கே 6 கி.மீ. இக்கோவிலில் மூலவர் அக்னிபுரீசுவரர் அம்மன் காந்திமதியம்மன்.

26. சதராஸ்

திருக்கழுக்குன்றத்திலிருந்து கிழக்கே 14 கி.மீ. கடற்கரைத் தலம். இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர், அம்மன் காமாட்சியம்மன் மற்றும் திருவராக சுவாமி.

மதுராந்தகம் வட்டம்

(காஞ்சிபுரம் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. அச்சரபாக்கம்

பொன்திரண்டன்ன புரிசடைபுரளப்
பொருகடல் பவளமொ டழல்நிறம்புரையக்
குன்றிரண் டன்ன தோளுடை யகலம்
குலாயவெண்ணூலொடு கொழும்பொடியணிவர்
மின்திரண்டன்ன நுண்ணிடையரிவை
மெல்லியலாளையோர் பாகமாப்பேணி
அன்றிரண்டுருவ மாயவெம்மடிகள்
அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே

-- திருஞானசம்பந்தர்



மதுராந்தகத்திற்கு தெற்கே 16கி.மீ. திருஅச்சிறுபாக்கம். இக்கோவில் 1-21 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய இராஜகோபுரத்துடன், இரண்டு பிராகாரங்களுடன் கொண்ட இக்கோவில் இரண்டு கருவரைகளும் அவற்றுள் இரண்டு சிவலிங்கங்களும், இரண்டு அம்பாள் திருவுருவங்களும் உள்ளன.

பிரதான மூர்த்தியாக அருள்மிகு எமையாட்சீசர். அம்மன் சுந்தரநாயகி, பாலசுகாம்பிகை என்னும் இளங்கிளியம்மை எனப் பெயர்கள் வழங்கப்படுகின்றன. பாண்டிய மன்னன் பிரதிஷ்டை செய்த மூர்த்தித் திருப்பெயர் அருள்மிகு உமையாட்சீசர். அம்மன் மெல்லியலாள் தலமரம் கொன்றை. தீர்த்தம் தேவ, பானு, சங்கு தீர்த்தங்கள். பானு தீர்த்தம் கோவிலுக்கு எதிரே உள்ளது. கொடிமரமும், நந்தியும் கோபுரவாயிலுக்கு நேரே இல்லாமல் சற்று வடக்கே தள்ளி எமையாட்சீசர், இளங்கிளியம்மை சன்னிதியில் உள்ளன. வடக்கு பிராகாரத்தில் கொன்றை மரமும், சிங்கக் கிணறு உள்ளன. வடக்கே சற்றுத் தொலைவில் சங்கு தீர்த்தம் உள்ளது.

இரண்டு மூலஸ்தானங்களில் அருள்மிகு எமையாட்சீசர் மூலஸ்தானம் பழமையானது. சுயம்பு மூர்த்தியாய் பெருமான் காட்சியளிக்கிறார். உமையாட்சீசர் மூலஸ்தானம் பின்னர்ப் பாண்டிய மன்னனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோவில்.

கண்ணுவமுனிவரும் கௌதம முனிவரும் பூசித்த தலம். சிவபெருமான் திரிபுரதகனத்தின்போது விநாயகரை நினையாது சென்றதால் அவர் ஏறிச் சென்ற தேரின் அச்சு இத்தலத்தில் முரிந்ததாகவும், பெருமான் விநாயகரை நினைத்தபின் தேரின் அச்சு முன்போல நன்னிலை அடைந்ததாகவும் கூறப்படுகிறது. சிவபிரான் ஏறிவந்த தேர் அச்சுமுரிந்த இடம் இத்தலம் ஆதலின் அச்சிறுபாக்கம் என வழங்கப்படுகிறது.

சிவபெருமான் திரிபுரதகனம் செய்யும் பொருட்டுத் தேரில் ஏறிச்சென்றபோது

தேர்வடிவாக இருந்த தேவர்கள் பெருமானுக்குத் தாங்கள் துணை செய்வதை எண்ணி அகந்தை உற்றனர். இதைக்கண்ட சிவபிரான் அத்தேரின் அச்சு ஒடியுமாறு செய்தருளினார். இந்நிகழ்ச்சி நடந்த இடமாதலின் இத்தலம் அச்சிறுபாக்கம் என வழங்குகிறது.

பாண்டிய மன்னன் ஒருவன் தனது நாட்டில் திருக்கோவில் பிரதிஷ்டையின் பொருட்டுக் கங்கை மணல் முதலிய பொருள்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு வரும்போது இத்தலத்தின் அருகில் அச்சுக்கள் முரிந்தன. மன்னன் இறைவனது அசரீரி வாக்கினைக் கேட்டு இத்தலத்தில் திருப்பணிகள் செய்வித்து வழிபட்டுத் தன்நாடு சென்றான் என்றும் வரலாறு ஒன்றும் வழங்கப்படுகிறது. மன்னனின் வண்டிகள் அச்சு முரிந்த இடம் இவ்வூருக்கு அருகில் உள்ள வண்டிக் குப்பம் என வழங்குகிறது.

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற தொண்டை நாட்டில் 32ல் இத்தலம் 29ஆவது தலமாக விளங்குகிறது. திருஞானசம்பந்தர் எழுந்தருளி வழிபட்டுத் திருப்பதிகம் பாடிப்பரவிய தலம். திருநாவுக்கரசர் அருளிய க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்களில் இத்தலம் இராஜேந்திர சோழ வளநாட்டைச் சேர்ந்ததாகக் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக் கூறுகிறது. இறைவன் பெயர் அக்ஷேஸ்வரர். அச்சுக்கொண்டருளிய தேவர் என பொறிக்கப்பட்டுள்ளது.

நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதம் 10நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

2. மாமண்டூர்

மதுராந்தகத்திலிருந்து வடக்கே 14கி.மீ. பாலாற்றின் மேற்குக் கரையில் இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பட்சீச்சுவரர். ஒரு கால பூஜை. தமிழ் வருடப்பிறப்பன்று உற்சவம். இவ்வூர்க்கு அருகில் உள்ள வடபாதி என்னுமிடத்தில் பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீசுவரர். இரண்டு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம்.

3. பாலையனூர்

மதுராந்தகத்திலிருந்து வடக்கே 12கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 300×200 அடிநீளம், அகலம் கொண்டு, மூலவர் சுயம்புலிங்கமாக மகாகாளீசுவரர். 800 வருட முற்பட்ட கோவில், கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரு கால பூஜை. மேலும் இக்கோவிலின் அருகில் ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

4. புலிப்பரக்கோவில்

மதுராந்தகத்திலிருந்து வடகிழக்கே 9கி.மீ. வடபொன்னம்பலம். பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கிழக்கு நோக்கிய சுயம்புலிங்கமாக வடிவில் வியாக்ரபுரீசுவரர். அம்மன் பாலகுசாம்பிகை மூலவர் இலிங்கம் வெண்மை நிறம் கொண்டது. வியாக்ரபாதர் பூஜித்த இலிங்கம். சோழ மன்னர்களால் கட்டப் பெற்ற கோவில்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. அதில் மாறவர்மசுந்தர பாண்டிய கல்வெட்டு மிகப் பழைமை யானது ஆகும். ஒரு கால பூஜை. தைப் பொங்கல் அன்று உற்சவம். மேலும் இவ்வூரின் தெற்கேயுள்ள லஷ்மி நாராயண புரத்தில் ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக் கோவில் உள்ளது. சிவன் கோவிலிருந்து சுமார் முக்கால் மைலிலுள்ள அரசர் கோவில் உள்ளது. இங்குள்ள சிற்பத்தூண் சிறப்புடையது. அதில் சிறு துவாரத்தில் நுழைத்த ஈர்க்கு நான்காகவும், எட்டாகவும் பிளந்து வரும் அதிசயம்.

5. கருங்குழி

மதுராந்தகத்திலிருந்து வடக்கே 2கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஞானகிரிசுவரர். 200 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை. மேலும் இவ்வூரில் ஸ்ரீரங்கநாதர் திருக்கோவில், ஞானவிநாயகர், விஜய விநாயகர், திரௌபதியம்மன் திருக்கோவில்களும் உள்ளன.

6. கிணார்

மதுராந்தகத்திலிருந்து வடகிழக்கே 4கி.மீ. கிணாரி. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வீரவனநாதசுவாமி. அம்மன் அம்பாநாயகி. கௌதம முனிவர், அகல்யா, பஞ்ச பாண்டவர்கள் முதலியோர் இத்தல இறைவனை வழிபட்டு பேறு பெற்ற தலம். திருஞானசம்பந்தர் இத்தல பெருமானை புகழ்ந்து பாடியுள்ள தலம்.

இவ்வாலயத்தில் மூலவர் வீரவன நாதருக்கும் நந்திக்கும் நடுவில் தேவேந்திரன் தன் ஐராவதத்தின் மேல் அமர்ந்து சாப விமோசனம் பெற்று தரிசிப்பதாயுள்ளது. மேலும் மூல இலிங்கத்திற்குபின் கருவறைச் சுவர் முழுவதும் சோமாஸ்கந்தர் சிற்பம் பெரிய அளவில் அமைந்துள்ளது. இவ்விரு அதிசயங்கள் இங்கு உள்ளன.

பல்லவர் கால தளி. பல்லவர், நாயக்கர் காலத்திய கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

7. மதுராந்தகம்

செங்கல்பட்டிலிருந்து தெற்கே கி.மீ. வகுளாரண்யம். இக்கோவில் கிழக்கு நோக்கியதும், 5 நிலை இராஜகோபுரம் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு திருவெண்காட்டீஸ் வரர். அம்மன் மீனாட்சியம்மை. தலமரம் வில்வம்.

பாண்டிய மன்னன் ஒரு வனுக்கிருந்த சரும நோய் இத்தலத்தில் உள்ள தீர்த்தில் மூழ்கி இறைவனை வழிபட்டு நீங்கப் பெற்றதனால் இறைவனுக்கு பாண்டீஸ்வரர் என்றும் வெண்காட்டீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். உள்பிராகாரத்தில் ஆறுமுகப்பெருமான் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிப் பரவியுள்ளார்.

இக்கோவிலில் 27 கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டு கால பூஜை. பிரதோஷ வழிபாடு விசேஷமாக நடைபெறுகிறது.

8. அணைக்கட்டு

மதுராந்தகத்திற்கு கிழக்கே 20கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அறம்வளர்த்தாஈஸ்வரர் மற்றும் செல்வ விநாயகர், பிடாரி காவாத்தம்மன். ஒரு கால பூஜை. பங்குனி உத்திரம் உற்சவம் நடைபெறுகிறது.

9. பரமேஸ்சுவரிமங்கலம்

மதுராந்தகத்திலிருந்து கிழக்கே 26கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சம்பகேசுவரர். 600 வருட முற்பட்ட கோவில், தாமிர சாசனம், கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டு கால பூஜை. சித்திரை பௌர்ணமி உற்சவம் நடைபெறுகிறது.

10. கூவத்தூர்

செய்யூருக்கு வடக்கே 14கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 25அடி உயர கோபுரத்துடன் மூலவர் சிதம்பரரேசுவரர் மற்றும் நடராஜர். 400 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறு கிறது.

11. உடல்கரகுப்பம்

செய்வூருக்கு வடக்கே 8 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சண்பகஈஸ்வரர். பல்லவ மன்னர்களால் கட்டப்பெற்ற கோவில். கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டு கால பூஜை. சித்திரை பௌர்ணமி அன்று உற்சவம்.

12. தர்மபுரம்

மதுராந்தகத்திலிருந்து கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 22,500 ச.அடி நிலப்பரப்பளவில் மூலவர் குந்தீசுவரர். 250 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை.

13. அகிலி

மதுராந்தகத்திலிருந்து தெற்கே 10கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். மேலும் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலும் இங்கு உள்ளது.

14. திருமுக்காடு

அச்சரபாக்கத்திலிருந்து மேற்கே 3கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் முக்தீஸ்வரர்.

15. சின்னவெண்மணி

மதுராந்தகத்திலிருந்து தென்கிழக்கே 16கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பீமேஸ்சுவரர். 150 வருட முற்பட்ட கோவில்.

16. மாடயம்பாக்கம்

செய்யூருக்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 90 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கவடிவில் அகத்தீஸ்சு வரர். தனிகோவிலாக கந்தசாமி கோவிலும் இங்கு உள்ளது.

17. மடவிளாகம்

செய்யூருக்கு வடக்கே 12 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் திருக்காமீஸ்வரர். அம்மன் கோகிலாம்பிகை வியாக்ர பாத முனிவர் வழிபட்ட தலம். இருகால பூஜை. பங்குனி உத்திரம் உற்சவம் நடைபெறுகிறது.

18. சீகினான்குப்பம்

செய்யூருக்கு வடகிழக்கே 6 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மன்னாதீஸ்வரர். அம்மன் பச்சையம்மன். ஒரு கால பூஜை. ஆடி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

19. தென்பாக்கம்

அச்சரபாக்கத்திலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக பசுபதிஈஸ்வரர்.

20. பெறும்பேர் கண்டிகை

அச்சரபாக்கத்திலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் சிறியகுன்றின் அடிவாரத்தில் 15 செண்ட் நிலப்பரப்பளவில், 60அடி உயர இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் தான்தோன்றீஸ்வரர்.

சோழ மன்னனால் 1000 வருட முன்பு கட்டப்பெற்ற கோவில். 225 படிகள் கொண்ட இம்மலையின் மீது உள்ள 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், பிராகாரங்களுடன் மூலவரான சுப்பிரமணிய சுவாமி தெற்கு நோக்கு காட்சியளிக்கிறார். மூலவர் ஆறு முகங்களுடன், வள்ளி, தெய்வானையுடன் காட்சியளிக்கிறார். இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார்.

இவ்வூரின் தனியாக 2-00 ஏக்கர்

நிலப்பரப்பளவில், 60 அடி உயர கோபுரம், பிராகாரத்துடன் மூலவர் மாரியம்மன் என்னும் எல்லையம்மன் என்னும் அம்மன் திருக்கோவிலும் உள்ளது.

இவ்வூரில் 2-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் கரிவரதராஜ பெருமாள். தாயார் அம்புஜவல்லித் தாயார், உற்சவர் ஆதிகேசவ பெருமாள் மற்றும் திருமகள், பூமிதேவியுடன் காட்சியளிக் கிறார்.

21. கடப்பேரி

அச்சரபாக்கத்திலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 6-38 ஏக்கர் நிலப்பரப்பளவில், 150அடி உயர இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் வெண்காட்டீஸ்வரர்.

பாண்டிய மன்னனுக்கு இருந்த குஷ்ட நோய் இத்தல இறைவன் அருளால் நீக்கப் பெற்றதனால் அம்மன்னன் காணிக்கையாக இக்கோயில் கட்டுவித்தான் என இங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இத்தல முருகன் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். இக்கோவிலுக்கு எதிரில் திருக்குளம் உள்ளது. நான்கு கால பூஜை. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

22. செய்யூர்

மதுராந்தகத்திலிருந்து தென்கிழக்கே 24கி.மீ. சேயூர், வளவாபுரி, வளவநகர், செய்கையம்பதி. இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்க வடிவில் வான்மீகநாதர். தேவேந்திரன் வழிபட்ட தலம். கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர் கால திருப்பணி. மூன்று கால பூஜை. தை மாதத்தில் பிரமோற்சவம்.

மேலும் இவ்வூரின் நடுவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் சோமநாதர். அம்மன் மீனாட்சியம்மன் உட்பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி சன்னிதி உள்ளது. இவர் சம்ஹார மூர்த்தி என்றும் பெயர். வடக்குப் பிராகாரத்தில் ஆறுமுகர் உள்ளார். கருவறையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் கந்தசுவாமி என்னும் செய்கைக் கந்தன் நான்கு திருக்கரங்களோடு நின்ற திருக்கோலத்தில் இருபுறமும் தேவியர் விளங்க வேலும், மயிலும் கொண்டு காட்சி தருகிறார். இத்தல முருகன் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். பங்குனி பிரமோற்சவம் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மேலும் இவ்வூரில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் சிறிய கோபுரத்துடன் கூடிய பெருமாள் கோவிலான ஸ்ரீ கரியமாணிக்க பெருமாள் கோவிலும் இங்கு உள்ளது.


23. புதிரன்கோட்டை

மதுராந்தகத்திலிருந்து தெற்கே 24கி.மீ. இக்கோவில் 96 செண்ட் நிலப்பரப் பளவில், 30அடி உயர இராஜகோபுரத்துடன் மூலவர் அகத்தீஸ்வரர். ஒரு கால பூஜை. இவ்வூரில் ஸ்ரீ கோவிந்தராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

24. சூணாம்பேடு

மதுராந்தகத்திலிருந்து தெற்கே 30கி.மீ. இக்கோவில் 53 செண்ட் நிலப்பரப் பளவில், மூலவர் சுயம்புலிங்கமாக அகத்தீஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில். நான்கு கால பூஜை. இவ்வூரில் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

வந்தவாசி வட்டம்
(திருவண்ணாமலை மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. வந்தவாசி

காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே 39 கி.மீ. இக்கோவில் 1-04 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு லிங்கமூர்த்தியாக அருள்மிகு ஜலகண் டேசுவரர். இக்கோவிலுக்கு வடக்கே ஸ்ரீரங்கநாதர் திருக்கோவில் உள்ளது.

2. காரம்

வந்தவாசியிலிருந்து வடக்கே 8 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காரீஸ்வரர்.

3. வழுவூர்

மருதாடுக்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு பிரம்மபுரீசுவரர். இங்குள்ள மண்டபத் தூண்களில் விநாயகரின் 16 வடிவங்கள், காமதகனர், அண்ணாமலையார், சலந்தரர், கிராதர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. இக்கோவிலில் 5 கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவர் பெயர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வேன்குறைக் கோட்டத்து வழுவூரு உடையார், அயனீச்சுரமுடைய நாயனார் என்று குறிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது. ஆடிக்கிருத்திகை, காணும் பொங்கள் அன்று சிறப்பாக உற்சவம் நடைபெறுகிறது.

4. வெண்குன்றம்

வந்தவாசிக்கு வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தேவலிங்கேஸ்வரர். அருகில் தென்னாங்கூரில் பாண்டுரங்கர் திருக் கோவில் உள்ளது.

5. வல்லம்

வந்தவாசியிலிருந்து மேற்கே 14 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் வளர்புரீஸ்வரர். இக்கோவிலில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. பாண்டிய மன்னன் சுந்தரபாண்டிய தேவர், விசயநகர நரசிங்காரதேவரின் காலத்திய கல்வெட்டுக் கள் உள்ளன. ஒரு கால பூஜை. மேலும் இவ்வூரில் கரிவரதராஜப் பெருமாள் திருக்கோவில், அம்மச்சார் கோவில் முதலியன உள்ளன.

6. கீழ்கொடுங்காலூர்

வந்தவாசியிலிருந்து கிழக்கே 12 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசுவரர். இக்கோவிலில் 12 கல்வெட்டுக்கள் உள்ளன. இராசராசன், இராஜேந்திரன், விக்கிரமசோழன், வீரகண்ட கோபாலன் முதலிய மன்னர் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

7. உளுந்தை

வந்தவாசியிலிருந்து கிழக்கே 18 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் காமாட்சியம்மன் தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர்.

8. மருதாடு

வந்தவாசியிலிருந்து கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் புரந்தபுரீசுவரர் சுயம்புலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். அம்மன் இந்திரப்பிரசாதவல்லி. தலவிருட்சம் வில்வம், இந்திரன் வழிபட்டதால் இங்குள்ள இறைவனுக்கு புரந்தரபுரீசுவரர் என்னும் பெயரும், இந்திரனுடைய பூசைப் பயனை (பிரசாதத்தை) அளித்ததால் இங்குள்ள அம்பிகைக்கு இந்திரப் பிரசாதவல்லி என்ற பெயரும் வழங்கலாயிற்று என்பர். இக்கோவிலில் 30க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை செயங்கொண்ட சோழமண்டலத்துள் மருதாடு என்றும், இறைவர் அவனி முழுதுடைய நாயனார் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. மேலும் இவ்வூரில் ஆதிகேசவப்

பெருமாள் கோவிலும் உள்ளது.

9. பொன்னூர்

வந்தவாசியிலிருந்து தென்மேற்கே 8 கி.மீ. இக்கோவில் கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு பராசரேசுவரர். அம்மன் சாந்தநாயகி. இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்றாகும். பொன்னூர் நாட்டுப் பொன்னூர் எனச் சுந்தரர் தேவாரத்தில் இத்தலம் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டுக்களில் பரமீசுவரம் உடையநாயனார், பராசலஈசுவரமுடைய நாயனார் என்றும் வழங்கப்படுகிறது. இக்கோவிலுக்கு அருகில் திருமால் கோவிலும், மாரியம்மன் கோவிலும் உள்ளன.

10. மடம்

வந்தவாசியிலிருந்து தென்மேற்கே 22 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தடாகபுரீசுவரர். அம்மன் பெரிய நாயகி. உள்பிராகாரத்தில் தனிச்சன்னிதியில் சகஸ்ரலிங்கம், நூற்றெட்டுச் சிவலிங்கங்கள், ஆறுமுகர், சப்தமாதர் சன்னிதி உள்ளது. இவ்வூர் மக்களுக்கும், கால்நடைகளுக்கும் பயன் அளிக்கக்கூடிய குளம் ஒன்றை வெட்ட ஏற்பாட செய்யுமாறு சிவபெருமான் மன்னனின் கனவில் தெரிவிக்க அம்மன்னனும் குளத்தை வெட்டியபோது குளத்தில் தோன்றிய சிவலிங்கம் தடாகபுரீசுவரர் என்ற பெயரில் காட்சியளிக்கிறார். ஒரு கால பூஜை. மாசி மகத்தில் 5 நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது.

11. சீயமங்கலம்

தெள்ளாற்றிலிருந்து வடமேற்கே 10 கி.மீ. இக்கோவில் 2-83 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் தம்பேசுவரர் அம்மன் மரகதவல்லியம்மன். இக்கோவிலில் ஒரு கல்வெட்டு உள்ளது. இதில் பரகேசரிவர்மன் 5 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இவ்வூரில் வாழ்ந்த ஒருவர் கோவிலுக்கு நிலம் வழங்கியதைக் குறிக்கிறது. ஒரு கால பூஜை நடைபெறுகிறது. கார்த்திகை தீபத்திருவிழா, அன்னாபிஷேகம் நடைபெறுகிறது.

12. தேசூர்

வந்தவாசியிலிருந்து தென்மேற்கே 17 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

13. தெள்ளாறு

வந்தவாசியிலிருந்து தென்மேற்கே 14 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமூலட்டானேசுரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் அகிலாண்டேசுவரி.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. அப்பரும், சுந்தரரும் இப்பெருமானை இரண்டு தேவாரப் பாடல்களால் போற்றியுள்ளனர்.


கல்வெட்டுக்களில் இவ்வூர் ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் கோட்டங்களில் ஒன்றாகிய வெண்குன்றக் கோட்டத்து விக்ரம பாண்டிய வளநாட்டுத் தெள்ளாற்று நாட்டுத் தெள்ளாறு எனவும், இவ்வூர்க் கோவில் திருமூலட்டானம் உடையார் கோவில் எனவும், இறைவர் மூலேஸ்வரர் தெள்ளாறுடையார் ஸ்ரீ மூலஸ்தானம் உடையார் எனக் குறிக்கப்பட்டுள்ளது. நந்திக்கலம்பகம் என்ற இலக்கிய நூல் நந்திவர்மன் தெள்ளாற்றுப் போரில் வெற்றி பெற்ற செய்திகளைக் கூறுகிறது.

14. வேடல்

தெள்ளாற்றிலிருந்து மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலை வட்டம்
(திருவண்ணாமலை மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திருவண்ணாமலை

உண்ணுமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவித்திரள் மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே.

-- திருஞானசம்பந்தர்



திண்டிவனத்திலிருந்து மேற்கே 64 கி.மீ. திருமால் மற்றும் நான்முகனுக்கு அடிமுடி எட்டாதநிலையில் இறைவன் மலை உருவில் தோன்றியது ஆதலின் அண்ணுமலை எனப்பெறுகிறது. அண்ணல் மலை அண்ணுமலை என்ருயிற்று. அழல் உருவாய் இறைவன் வெளிப்பட்ட மலை என்னும் பொருளில் அருணுசலம், சோணுசலம் என்ற பெயர்கள் வடமொழியில் வழங்குகின்றன. முத்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், சுத்த நகரம், கௌரிநகரம், சோணகிரி, சோணுத்திரி, அருணகிரி, அருணுத்திரி, அருணை முதலிய பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

கோவிலமைப்பு :

தமிழகத்தில் விளங்கும் பெரிய திருக்கோவில்களில் ஒன்று திருவண்ணு மலை, இக்கோவில் 24-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஆறு பிராகாரங்களுடனும் ஒன்பது இராஜகோபுரங் களுடனும் மலையடிவாரத்தில் கிழக்கு நோக்கி அழகுற அமைந்துள்ளது. சுவாமிக்கு இடது பாகத்தில் அம்பாள் கோவில் கிழக்கு நோக்கி விளங்குகிறது. ஐந்தாம் பிராகாரத்து வெளித்திருமதில் 1 அடியகலமும் உயரமும் உடையது. தெற்கு , வடக்கு, மேற்கு, வாயில்களில் இரண்டிரண்டு கோபுரங்களும், கீழ்புறம் சுவாமி சந்நிதியில் மூன்று கோபுரங்களுமாக ஒன்பது இராஜகோபுரங்கள் உள்ளன.

கீழைக் கோபுரம் பெரியது. 11 நிலைகளுடன் 217 அடி உயரமுடையதாய் விளங்குகிறது. இக்கோபுரம் தென்னிந்தியா விலேயே மிக உயரமான கிழக்கு இராஜகோபுரமாகும். தெற்குக்கோபுரத்தைத் திருமஞ்சனக்கோபுரம் என்றும், மேற்குக் கோபுரத்தைப் பேய்க்கோபுரம் என்றும், வடக்குக் கோபுரத்தை அம்மணி கோபுரம் என்றும் கூறுவர்.

கிழக்கு இராஜகோபுர வாயில் வழியாக உள்ளே சென்றவுடன் வலதுபக்கத்தில் ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. இங்குப் பாதாளலிங்கேசர்கோவில் உள்ளது. ரமணமுனிவர் பலகாலம் தங்கித் தவம் செய்த இடம். இடது பக்கம் கம்பத்து இளையனுர் திருக்கோவிலுள்ளது. இங்குள்ள முருகன் அருணகிரிநாதர் பிரார்த்தனைக் கிரங்கிப் பிரபுடதேவமகாராயருக்குக் காட்சி கொடுத்தவராவார். இச்சந்நிதியின் தென் புறமாக நான்கு புறங்களிலும் திருமாளப்பத்தி உடையதாய்ச் சிவகங்கைத் தீர்த்தம் விளங்குகிறது. சிவகங்கைத் திருக்குளத்தின் வடமேற்கில் சர்வசித்திவிநாயகர் கோவில் உள்ளது. வழிபட்டுப் பெரிய நந்திகே சுரரைத் தரிசித்து அடுத்து விளங்கும்.

இரண்டாம் கோபுரம் வல்லாள மகாராஜா கோபுரம் எனப்படும். அருணகிரிநாதர் இக்கோபுரத்தின் மீதேறித் தமது ஊனுடலை நீக்கிக் கொள்ளக் கீழே விழுந்தபோது அவரைக் காப்பாற்றி அருள் செய்த முருகப்பெருமான் கோபுர வாயிலில் விளங்குகிறார்.

முருகப்பெருமான் சந்நிதியில் அருணகிரிநாதர் திருவுருவம் உள்ளது. கோபுரத்தின் தென்பால் கல்யாணசுந்தரேசுரர் சந்நிதி உள்ளது.

கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் வலதுபுறம் சக்தி விலாச சபாமண்டபத்தைக் காணலாம். கோபுரத்தின் தென்பால் காலபைரவர் சந்நிதி உள்ளது. அருகில் பிரமதீர்த்தம் உள்ளது. அடுத்து விளங்கும் மூன்றாம் கோபுரம் கிளிக்கோபுரம் எனப்படும். அருணகிரிநாதர் கிளி வடிவத்தோடு பாரிசாதமலர் கொண்டுவந்த போது தமது உடலைக்காணாமல் கிளி உருவத்தோடு இருந்து கந்தரனுபூதி பாடிய கோபுரம் இது. கிளி உருவம் கோபுரத்தில் உள்ளது.

கிளிக்கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மூன்றாம் பிராகாரத்தில் பதினாறுகால் மண்டபம் உள்ளது. இங்குத் திருக்கார்த்திகை நாளில் பஞ்சமூர்த்திகள் மலையை நோக்கி நிற்க மலைமீது தீபமேற்றும் விழா நடைபெறும். பல்லாயிரக்கணக்கான மக்கள் சுவாமியையும் தீபத்தையும் ஒரே நேரத்தில் தரிசிக்கும் இடம் இது. அடுத்த வாயிலில் கொடிமரம் பரணிதீபம் வைக்கும் தீபஸ்தம்பம் ஆகியன இருக்கின்றன. பிராகாரத்தை வலம் வரும்போது முதலில் சம்பந்த விநாயகரைத் தரிசிக்கலாம். தெற்குப் பிராகாரத்தில் தலமரமாகிய மகிழமரம் உள்ளது. அடுத்து, திருக்கல்யாணமண்டபம் உள்ளது. மேற்கே அருணகிரியோகீஸ்வரர் சந்நிதியும் வடக்கே அம்பாள் சந்நிதிக்குச் செல்லும் வழியில் கிழக்கே காளத்திலிங்கேசுரர் சந்நிதியும் கோவில் நிர்வாக அலுவலகமும் கிழக்கே பழநியாண்டவர், ஏகாம்பரேசுரர் சந்நிதிகளும் உள்ளன. இப்பிராகாரத்தின் உள்மதில்களில் பல கல்வெட்டுக்களும் புடைப்புச் சிற்பங்களும் உள்ளன. குன்றக்குடி ஆதீன ஆதிகுருமுதல்வர் வரலாற்றுப் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

நான்காவது வாயிலைக் கடந்து அதிகாரநந்திகேசுவரரை வழிபட்டு உள்ளே சென்றால் இரண்டாம் பிராகாரத்தில் சிவாலயத்தில் அமைய வேண்டிய அனைத்துப் பரிவார தெய்வங்களின் சந்நிதிகளும் உள்ளன. தெற்கே அறுபத்து மூவர் திருவுருவங்கள் உள்ளன. மேற்கே சோமாஸ்கந்தர், வேணுகோபாலர், ஆறுமுகர், கஜலஷ்மி சந்நிதிகள் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் அறுபத்து மூவரின் உற்சவர்கள் உள்ளனர்.

வழிபட்டு அண்ணாமலையார் சந்நிதிக்கு வந்ததும் அர்த்த மண்டபம் அழகிய சலவைக்கல் திருப்பணியோடு தூய்மையாக உள்ளது. அருணாசலேசுரர் அருளே திருமேனியாகச் சுயம்பு சிவலிங்க வடிவில் காட்சி தருகிறார்.

அண்ணாமலையார் உடையார் எனவும் திருவண்ணாமலை ஆண்டார், மகாதேவர், ஆள்வார் அண்ணாநாட்டுடையார் எனவும் தலபுராணங்களிலும், கல்வெட்டுக்களிலும் கூறப்படுகின்றன.

வழிபட்டு வெளியே வந்து முதற் பிராகாரமாகிய மேடையை வலம்வரும்போது கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே பிரமன், துர்க்கை சண்டேசுவரரும், இரண்டாம் பிராகாரத்தின் வைகுந்த வாயிலின் வழியாக நவக்கிரகமூர்த்திகளை வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடையலாம்.

அம்மன் பெயர் ஸ்ரீ அபீதகுசாம்பாள், உண்ணாமுலையம்மை , உண்ணாமுலை நாச்சியார், திருக்காமக் கோட்டமுடைய நம்பிராட்டியார், உலகுடைய பெருமாள் நம்பிராட்டியார் என்பன தேவார இலக்கியங்கள் கல்வெட்டுக்களில் காணப்பெறும் பெயர்களாகும்.

இத்தலத்து முருகப்பெருமான் சிறப்புடைய மூர்த்தி ஆவார். தீர்த்தம் பிரம தீர்த்தம், சிவகங்கை தீர்த்தம், சோனை நதியாகியனவாகும். தலமரம் மகிழமரம் (வகுளம்). ஆலமரம் தலமரம் எனக் கூறுவதுண்டு.

தலப்பெருமை :

சமய உலகில் புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்று திருவண்ணமலை, மூர்த்தி,தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறந்த இத்தலம் விராட் புருடனுக்கு மணிபூரக மாகவும், பஞ்சபூதத் தலங்களில் தேயுத் தலமாகவும் விளங்குவது. முத்தித்தலங்கள் நான்கனுள் நினைக்க முத்திதருவது. ஞானத் தபோதனர்கள் வாழ்ந்துவரும் பெருமை உடையது. திருமால், நான்முகன், அடிமுடி அறியாவண்ணம் இறைவன் அனற்பிழம் பாய்த் தோன்றிய மலையை உடையது. இம்மலையையே எட்டாதமலை என்ற பொருளில் அண்ணமலை என வழங்குகிறது. திருமால், நான்முகன், தாமே பிரமம் என்ற எண்ணிய தருக்கொழிந்து தம்மை வழிபட விரும்பியபோது இறைவன் சிவலிங்கத் திருவுருவில் வெளிப் பட்டருளிய சிறப்புடையது. சிவபெருமான் உமையம்மையாருக்கு இடப்பாகம் அளித்த சிறப்பும் இத்தலத்திற்குண்டு.

சூரியன், சந்திரன், பிரதத்தராசன், அஷ்டவசுக்கள், பிரமதேவன், திருமால், புளகாதிபன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது.

முருகப்பெருமான் திருக்கயிலையங் கிரியிலிருந்து சூரனை அழித்தற்குத் தெற்கு நோக்கி வரும் காலத்தில் திருவண்ண மலையை வழிபட்ட வரலாற்றைக் கந்தபுராணத்தில் காணலாம்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளித் தங்கி இருந்து அண்ணமலை யாரை வழிபட்டு இரண்டு திருப்பதிகங்கள் அருளியுள்ளார்.

திருநாவுக்கரசரும் அவ்வாறே இத்தலத்தை வழிபட்டு அருளிய திருப் பதிகங்கள் மூன்றாகும்.

மணிவாசகர் இத்தலத்தில் பலகாலம் தங்கியிருந்து திரும்வெம்பாவை, திருவம் மானை ஆகிய திருப்பதிகங்களை அருளி யுள்ளார். திருவாசகத்துள் பல இடங்களிலும் அண்ணமலையைக் குறிப்பிட்டு அவர் அருளியுள்ள பகுதிகளைப் படிக்கும்போது இத்தலத்தில் மணிவாசகர்க்கு இருந்த ஈடுபாட்டை அறியலாம்.

சுந்தரர், நக்கீரர், கபிலர், பட்டினத்தார் முதலியோர் இத்தலத்தைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

வச்சிராங்கத பாண்டியன் குதிரைமீதேறி வேட்டையாடி வரும்போது புனுகுபூனையொன்றைத் துரத்திவர அப்பூனை அண்ணமலையை வலம் வந்து வீழ்ந்து இறந்தது. பாண்டயனின் குதிரையும் உடனிறந்தது. இறந்த குதிரையும், புனுகுபூனையும் வித்யாதரர்களாகமாறி துர்வாசமுனிவர் சாபத்தினால் தமக்கு அப்பிறவி ஏற்பட்டதையும் அண்ணமலையை வலம் வந்ததால் சாபநீக்கம் அடைந்ததையும் கூறக்கேட்ட பாண்டியன் தன்மகனிடம் அரசுரிமையைத் தந்துவிட்டு அண்ணமலையை அடைந்து வலம் வந்தும் திருப்பணிகள் செய்தும் தேவேந்திரன் ஆனான்.

வல்லாள மகாராசன் திருவண்ண மலையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன்; சிறந்த சிவபக்தனாக இம்மன்னன் விளங்கினான். இரப்போர்க்கு இல்லையென்னாத விரதத்துடனும் அறநெறிவழுவாமலும் ஆட்சி புரிந்த இம்மன்னனிடம் அண்ணமலையண்ணல் ஒரு நாள் அடியவர் வடிவுடன் அவனது அரண்மனைக்கு எழுந்தருளினார்.

அடியவராக வந்தபெருமான் தாம் மகிழ்வுடன் துயில ஒரு கன்னியைத் தமக்குத் தருமாறு கேட்டார். அரசன் பெண்களில் ஒருவரைத் தருவிக்குமாறு பணித்தனன். யாரும் கிடைக்காத நிலையில் அரசனது இளையராணி சல்லமாதேவி தம் கணவர் வாக்கைக் காக்கத் துணிந்து அடியவருடன் துயில் கொள்ள முற்பட்டார். அரசமாதேவி அடியவர் அருகில் சென்று அவரைத் தீண்டியவுடன் வந்த பெருமான் குழந்தையானார். அரசனும் அரசியும்

தமக்குப் பிள்ளையில்லாக் குறை நீக்கப் பெருமானே வந்துள்ளார் என மகிழ்ந்தபோது குழந்தை மறைந்தது. பெருமான் வல்லாள மகாராசரின் பக்திக்கும், கொண்ட விரதத்தைக் காப்பாற்றத் துணிந்த மனஉறுதிக்கும் மகிழ்ந்து அவர்கட்குச் சிவலோகம் வழங்கி அருள்புரிந்தார். மேலும் ஈமக்கடனுக்குப் பிள்ளையில்லையே என்ற மனக்குறைவேண்டாம் நாமே உங்கட்கு உத்தரகிரியை புரிவோம் என்றருளி மறைந்தார்.

மாசி மகத்தில் வல்லாளமகாராசர்க்குப் பெருமான் உத்தரகிரியை இயற்றும் ஐதிக விழா இத்தலத்தில் நிகழ்கிறது.

அருணகிரிநாதர் கந்தக்கடவுளருள் பெற்று திருப்புகழ் கந்தர் அனுபூதி, அலங்காரம், அந்தாதி திருவகுப்பு முதலியன அருளியவர். திருவண்ணுமலையில் அவதரித்தவர். வாழ்க்கையில் சலிப்பெய்தித் திருவண்ணுமலைக் கோவிலின் இரண்டாம் கோபுரத்தின் மீதேறிக் கீழே விழுந்தபோது முருகப் பெருமான் இவரைக்காப்பாற்றி ஆட்கொண்டருளித் தம்மைப் பாடும் பணியைச் செய்துவரக் கட்டளையிட்டருளினார்.

திருவண்ணுமலையில் அரசுபுரிந்த பிரபுட தேவ மகாராயர் காலத்தில் அரசவைக் கவிஞராக இருந்த சம்பந்தாண்டான் என்னும் தேவி உபாசகருடன் வாதிட்டு வென்றவர். முருகன் 'முத்தைத்தரு' என அடியெடுத்துக் கொடுத்து இவருக்கு தீட்சை செய்தருளினர் என்பது வரலாறு. சமய குரவரைப்பின் பற்றித் தலங்கள்தோறும் சென்று முருகப்பெருமான்மீது இவர் பாடியருளிய திருப்புகழ் சந்தக்கவி யமைப்புக்கும் முருகப் பெருமான்மீது அன்பர்கள் பக்திகொள்வதற்கும் உரிய சிறந்த நூலாகும்.

திருமுறை உலகில் பண்ணிசை வாணர்கள் திருமுறைகளை ஓதியபின் இவர் அருளிய திருப்புகழ் பாடி நிறைவுசெய்வதைக் காணலாம்.

குகைநமசிவாயர் சில நூற்றாண்டுகளுக்கு முன் திருவண்ணுமலைக் குகையில் வாழ்ந்தவர். சிறந்த சித்திகள் பெற்றவர். இவருடைய சீடர் குருநமசிவாயர். இருவரும் ஞானக்கண்ணால் பலகாட்சிகளைக் காணும் பேறுபெற்றவர்கள்.

ஈசானிய ஞானதேசிகர் இத்தலத்தில் திருமடம் நிறுவிய பெரியார். இவர் திருமடம் ஈசான்ய மடம் என வழங்குகிறது.

ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் திருவண்ணுமலை ஆதீனத்தின் முதற்குரவர். இவர் தம் வரலாற்றுச் சிற்பங்கள் ஆலயத்திலுள்ளன. திருவண்ணுமலை ஆதீனம் தற்போது குன்றக்குடியிலுள்ளது.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சேஷாத்திரி சுவாமிகள் முதலியோர் திருவண்ணுமலைத் தலத்தில் மிக்க ஈடுபாடுடைய ஞானிகளாவர்.

ரமண முனிவர் இத்தலத்தில் அண்மைக் காலத்தில் வாழ்ந்த அருளாளர். இவர் ஞானம்பெற்ற பாதாளலிங்கக்குகை ஆலயத்துள் இருக்கிறது.

புராணங்கள் :

திருவண்ணுமலைக்கு இரண்டு தலபுராணங்கள் உள்ளன. ஒன்று கண்கட்டி மறைஞானசம்பந்தர் அருளியது அருணகிரிப்புராணம் என வழங்குவது, பிறிதொன்று சைவ எல்லப்ப நாவலர் அருளியது. அருணுசலபுராணம் என வழங்குவது.

இலக்கியங்கள் : திருவண்ணுமலையின் பெருமைகளை அறிவிக்கும் இலக்கியங்கள் பலவாகும். அவற்றுள் அருணையந்தாதி, அருணைக் கலம்பகம், அண்ணுமலை வெண்பா, சோணசைவ மாலை, கார்த்திகைத் தீப வெண்பா, உண்ணுமுலையம்மை பிள்ளைத்தமிழ் முதலிய ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

திருவிழாக்கள் :

ஆறுகால நித்திய பூஜைகளோடு அமாவாசை, கார்த்திகை, பிரதோஷம் சுக்கிரவாரம், சோமவாரம் ஆகிய் பஞ்ச பருவ உற்சவங்கள் நிகழ்கின்றன.

திருவண்ணுமலையின் கார்த்திகை தீபவிழா உலகறிந்த பெருவிழாவாக நிகழ் கின்றது. இத்திருக்கோவிலின் பிரமோற்சவம் இவ்விழாவையொட்டியே கார்த்திகை தீபத்தைப் பத்து நாளாகக் கொண்டு நடை பெறுகிறது. தீபதரிசனத்தன்று உதய காலத்தில் பரணிதீபமும், மாலை பிரதோஷக் காலத்தில் அர்த்தநாரீசுவரர் எழுந்தருளிக் காட்சி கொடுத்தலும், அவ்வேளையில் மலையின் உச்சியில் பெருமான் ஜோதி ஸ்வரூபம் காட்டலும், அதேசமயத்தில் ஆலயத்தில் பஞ்சமூர்த்திகளுக்குத் தீபாரா தனை நிகழ்தலும், நடைபெறுகின்றன.

கார்த்திகை தீபம் உமையம்மை இத்தலத்தில் நடத்திய பெருவிழா எனவும், அம்பிகைக்கு இறைவன் தீபத்திருநாளன்று சோதி உருவாக மலைமீது காட்சித்தந்து அவருக்கு தம் இடபாகம் அளித்த திருநாள் எனவும் தலபுராணம் கூறுகிறது.

சித்திரைப்பருவவிழா, வைகாசி விசாகம், ஆனிதக்ஷிணாயன விழா, ஆனித் திருமஞ்சனம், ஆடிப்பூரம், அருணகிரிநாதர் விழா, ஆவணிமூலம், விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி கந்தசஷ்டி, கார்த்திகைச் சோமவார சங்காபிஷேகம், திருக்கார்த்திகைப் பெருவிழா, மார்கழி உத்தராயணம், தைத்திருவூடல், மாசிமகம் வல்லாளன் விழா, சிவராத்திரி, பங்குனி உத்திரம் திருக்கல்யாணம், போன்ற சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன.

கிரிப்பிரதக்ஷிணம் :

திருவண்ணுமலையில் சிவபெருமான் சோதிப்பிழம்பாய்த் தோன்றிய வடிவமே இங்கு மலையாக உள்ளது. மலையே சிவபிரானாக இத்தலத்தில் விளங்குவதால் இத்தலத்தில் மலைவலம் வருதல் மிக்க புண்ணியத்தைத் தருவதாகும். இம்மலையின் திருச்சுற்று 10 கி.மீ. தூரமுடையது.

இம்மலையை வலம் வருவோர் ஆதிவாரத்தில் சிவபதமும், சோமவாரத்தில் இந்திர வாழ்வும், மங்களவாரத்தில் பிறவிப் பிணிநீக்கமும், புதன்வாரத்தில் தேவராகும் தகுதியும், குருவாரத்தில் மேலான பதவியும், சுக்கிரவாரத்தில் விஷ்ணு பதவியும், சனிவாரத்தில் நவக்கிரகதோஷ நிவர்த்தியும் பெறுவர். சிவராத்திரி, தமிழ் வருடப்பிறப்பு, ஐப்பசி மாதங்கள் மிகவிசேடம்.

மலையைச் சுற்றி எண்திசைகளிலும் அஷ்டலிங்கங்கள், அஷ்ட நந்திகள், தீர்த்தங்கள் பலவும், பல மண்டபங்களும், ஆஸ்ரமங்களும் உள்ளன.

மலையின் அடிவாரத்தில் சேஷாத்திரி சுவாமிகள் சமாதி, ரமணாச்சிரமம், ஆதி அண்ணுமலையார் ஆலயம் முதலியனவும் தீர்த்தங்கள் பலவும் உள்ளன.

மலையின் இடைப்பகுதியில் கந்தாச்சிரமம், குகைகள், பாததீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன. கார்த்திகை தைமாதங்களில் பெருமான் கிரிவலம் வருவார்.

கல்வெட்டுக்கள் :

இக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்கள் 119. இவைகளில் பெரும்பாலான சோழர்காலத்தன. திருவிளக்கேற்றல், திருமஞ்சனம், திருநந்தவனம், திருவமுது, திருவெழுச்சி, அடியார்க்கு அமுதளித்தல் முதலிய பல அறங்களுக்காக நிலம், பொன், கால்நடை முதலியனவற்றை அளித்தமை யை அறிவிக்கின்றன. பாண்டியர், பல்லவர், ஹொய்சள மன்னரான விரவல்லாளதேவர், விஜயநகரத்துராயர், தஞ்சாவூர்நாயக்கர் மற்றும் வணிகர், வேளாளர் முதலியவர்கள் கல்வெட்டுக்களும், காணக்கிடைக்கின்றன.

முதல் இராசேந்திரனுடைய காலத்தில் (கி.பி.1070) திருவண்ணுமலை,

மதுராந்தகவள நாட்டுப் பெண்ணை வடகரைத் திருவண்ணுமலை என்றும், மூன்றாம் குலோத்துங்கன் (தி.பி. 1211) காலத்தில் இராஜராஜ வளநாட்டு வாணகோப்பாடி பெண்ணை வடகரை அண்ணுநாட்டுத் திருவண்ணுமலை என்றும், மேற்படி சோழனுடைய 27-ம் ஆட்சியாண்டில் (தி.பி.1236) வாணகேரப்பாடிப் பெண்ணை வடகரை அண்ணா நாட்டுத் திருவண்ணுமலை என்றும், வியஜநக்ர இராயர்கள் காலத்தில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்குன்றக் கோட்டத்துப் பெண்ணை வடகரை வாணகோப்பாடி அண்ணா நாட்டுத் தனியூர் திருவண்ணுமலை என்று குறிக்கப்பட்டுள்ளது.

2. நத்தம்பூண்டி

திருவண்ணாமலைக்கு வடக்கே 21 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

3. ஆர்பாக்கம்

திருவண்ணாமலைக்கு வடகிழக்கே 21 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

4. கீழ்களூர்

கீழ்பென்னாத்தூர்க்கு வடகிழக்கே 9 கி.மீ. இக்கோவில் 63 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் சோழசக்கராஈஸ்வரர்.

5. கீழ்பென்னாத்தூர்

திருவண்ணாமலைக்கு கிழக்கே 18 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

6. ஆவூர்

திருவண்ணாமலைக்கு தென்கிழக்கே 19 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

7. வேட்டவலம்

திருவண்ணாமலைக்கு தென்கிழக்கே 23 கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீசுவரர். இக்கோவிலில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. அதில் ஒன்று இராசராசசோழன் 5ஆம் ஆண்டுக் கல்வெட்டில் பெண்ணையாற்றின் வடக்குக் கரையிலுள்ள வகைப்பாடியிலுள்ள உத்தமசோழ வளநாட்டின் கிளியூர் என்கிற வேட்டவலத்திலுள்ள திருவகட்டீசுவர முடையாருக்கு கிளியூர் மலையமான் கொடையளித்ததைக் குறிக்கிறது.

இக்கோவிலில் 50 தூண்கள் கொண்ட சிற்பமண்டபம் அருமையான புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

நாள்தோறும் நான்கு கால காமிக ஆகம முறைப்படி பூஜை நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.


8. அரதப்பட்டு

திருவண்ணாமலைக்கு தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

9. பெருமணம்

திருவண்ணாமலைக்கு தெற்கே 21 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

செங்கம் வட்டம்
(திருவண்ணாமலை மாவட்டம்)



1. செங்கம்

திருவண்ணாமலைக்கு மேற்கே 31 கி.மீ. சேயாற்றின் கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு விருக்ஷபேசுரர். அம்மன் அனுபாம்பிகை கிழக்கு நோக்கிய சன்னிதி. அம்பிகை சுவாமிக்கு இடப்பாகத்தில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறாள். நடுவே முருகன் கோவில் உள்ளது. பிராகாரத்தில் விநாயகர், மகாலஷ்மி, நவக்கிரகம், வீரபத்திரர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்றாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகத்தில் இத்தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

சங்க காலந்தொட்டே வழங்கிவரும் பழமையான ஊர். நன்னன்சேய் நன்னன் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்பதைச் சங்க நூல்களால் அறியலாம்.

கல்வெட்டுக்களில் இவ்வூரை நவிரை என்றும், சங்கண்மா என்றும் குறிக்கின்றன. தொல்பொருள் அகழ்வாய்விலும் இப்பகுதியில் நடுகற்களும், பழமையான காசுகளும் கிடைத்துள்ளன. பல்லவ மன்னர்களால் மகேந்திரவர்மன், நரசிம்மவிஷ்ணு முதலியோர் ஆட்சி புரிந்துள்ளதை கல்வெட்டில் அறியலாம்.

நாள்தோறும் இரு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம், பங்குனி உத்திரம், திருக்கல்யாண உற்சவம் என சிறப்பாக நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் வேணுகோபாலப் பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலும் உள்ளது.

2. வீரானந்தல்

செங்கத்திலிருந்து வடகிழக்கே 12 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் கூத்தாண்டவர். மேலும் இவ்வூரில் இலட்சுமி நாராயண சுவாமி திருக்கோவிலும் உள்ளது.

3. புதுப்பாளையம்

செங்கத்திலிருந்து வடகிழக்கே 9 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேசுவரர்.

4. காஞ்சி

செங்கத்திலிருந்து வடகிழக்கே 20 கி.மீ. சேயாற்றின் கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கரைகண்டேசுவரர். அம்மன் பெரியநாயகி என்னும் பாலாம்பிகை. தீர்த்தம் சேயாறு. தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், நால்வர், ஏழுகரைகண்டலிங்கம், சப்தமாதர், விசுவநாதர், வயிரவர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சேயாற்றின் கரையில் வாழைப்பந்தல் என்னும் ஊரில் பார்வதிதேவி சிவலிங்கம் அமைத்துப் பூஜை செய்தார். அக்காலத்தில் கடும்வருட்சி ஏற்பட்டபோது நீருக்காக தேவி முருகனை நாடினார். அப்போது முருகப்பெருமான் நீருக்காக அருகிலிருந்த மலைகளை நோக்கி அம்பெய்து நீர் ஊற்றெடுத்து ஆறாகப் பெருகி, பார்வதி தேவியின் பூசைக்குப் பயன்பட்டது. சேய் ஆகிய முருகன் கொணர்ந்த ஆறு சேயாறு என்னும் பெயர் பெற்றது.

மலைகளிலிருந்து நீர் பெருகிவந்த போது அந்நீர் சிவந்திருந்தது. இதற்குக் காரணம் அம்மலைகளின் மீது அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்த ஏழு

முனிவர்களின் மீது முருகப்பெருமான் அம்பு தைத்ததேயாகும். முருகப்பெருமான் அறியாமல் இம்முனிவர்களைக் கொன்ற பாவம் நீங்குவதற்காக சேயாற்றின் கரையில் ஏழு இடங்களில் சிவலிங்கம் நிறுவி வழிபட்டு பாவத்தைப் போக்கிக் கொண்டார். இத்தல கோவில் கரைகண்ட தலங்களுள் முதலாவதாக உள்ளது. இன்றும் பலர் சேயாற்றில் உள்ள ஏழு தலங்களை தரிசித்து பாவங்களைப் போக்கி நன்மையடைகின்றனர்.

மேலும் இவ்வூரில் சிறிய குன்றின் மீது கிழக்கு நோக்கி சுப்பிரமணியர் காட்சியளிக்கிறார்.

5. தாமரைப்பாக்கம்

செங்கத்திலிருந்து வடகிழக்கே 26 கி.மீ. சேயாற்றின் தென்கரையில் இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருஅக்கினீசுவரர். அம்மன் திரிபுரசுந்தரியம்மன்.

6. வாசுதேவம்பட்டு


செங்கத்திலிருந்து கிழக்கே 21 கி.மீ. சேயாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஆட்கொண்டீசுவரர். அம்மன் சௌந்தர்ய நாயகி. இக்கோவிலுக்கு அருகில் வீரநாரா யணப் பெருமாள் கோவிலும் உள்ளது. இவ்வூர்க்கு வடக்கே சேயாற்றின் வடகரையில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மார்க்கசகாயர் திருக்கோவிலும் உள்ளது.

கும்பாபிஷேகம்

1. அனுக்ஞை : செயல்களைச் செய்யும் ஆற்றல்மிக்க ஓர் ஆசாரியனைத் தேர்ந் தெடுத்து இச்செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனஞ் செய்தல். 2. கணபதி பூஜை : செயல் இனிது நிறைவேறக் கணபதியை வழிபடுதல். 3. வாஸ்து சாஸ்தி : தேவர்களை வழிபட்டுக் கும்பாபிஷேகம் எவ்வித இடையூறுமின்றி இனிது நிறைவேற : செயலுக்கும் செய்பவர்க்கும் இடையூறு வராதபடி காக்கச் செய்யும் செயல். 4. மண் எடுத்தல் : அட்டதிக்குப் பாலகர்களிடம் அநுமதி பெற்றுச் சுத்தமான இடத்திலிருந்து மண்எடுத்து அப்பள்ளத்தில் அபிஷேகம் செய்தல். 5. முளையிடுதல் : மண் பாலிகைகளில் விதைகளையிட்டு முளை வளரச் செய்தல். 6. காப்புக் கட்டுதல் : கிரியைகளைச் செய்யும் ஆசாரியனுக்கு, இடையூறுகள் வாராதபடிக் காத்தற்பொருட்டு அவன்கையில் மந்திரபூர்வமாகக் காப்பு (கயிறு) கட்டுதல். 7. கும்ப ஸ்தாபனம் : கும்பங்களை - கலசங்களை ஸ்தாபனம் செய்தல். 8. கலாகர்ஷணம் : எந்த மூர்த்தியை எந்தக் குடத்தில் ஆவாஹனம் பண்ணுகிறோமோ அம்மூர்த்தி அக்குடத்தில் இருப்பதாகக்கருதி அதனைப் பூசித்து வழிபடுதல். 9. யாகசாலை : யாகசாலைகள் விதிப்படி அமைத்தல். 10. பிம்ப சுத்தி : விக்ரகத்தை அழுக்கு நீக்கிச் சுத்தம் செய்து அபிஷேகம் செய்தல். 11. ஸ்பர்ஸாஹுதி : யாகசாலை இடத்திற்கும் மூலத் திருமேனிக்கும் தர்ப்பைக் கயிறு தங்கக் கம்பி, வெள்ளிக்கம்பி இவற்றுல் இணைப்பு ஏற்படுத்துதல். 12. அஷ்டபந்தனம் : எட்டு பொருள்காளல் ஆன இம்மருந்தினுல் மூர்த்தியையும் பீடத்தையும் ஒன்று சேர்த்தல் - பந்தித்தல்,இதை மருந்து சார்த்துதல் எனபர். 13. குடமுழுக்கு : யாகசாலையில் மூர்த்திகளுக்குரியதாக வைத்துப் பூஜிக்கப்பட்ட குடத்து நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகித்தல். இதனுல் அந்த மூர்த்தி அந்த விக்ரகத்தில் எழுந்தருளுகிறார். 14. மஹாபிஷேகம் : கும்பாபிஷேகம் முடிந்த பிறகு, மூல விக்ரஹத்திற்கு முறைப்படி அபிஷேக அலங்காரங்கள் செய்தல். 15. மண்டலாபிஷேகம்.

போளூர் வட்டம்

(திருவண்ணாமலை மாவட்டம்)



1. போளூர்

திருவண்ணாமலையிலிருந்து வடக்கே 33 கி.மீ. சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருள்மிகு சோமநாத ஈசுவரர். இக்கோவிலுக்கு அருகில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். மேலும் இவ்வூரின் சவ்வாது மலைத் தொடரின் அடிவாரத்தில் சம்பத்கிரி என்னும் குன்றின்மீது 75 செண்ட் நிலப்பரப்பளவில் இலட்சுமிநரசிம்மசுவாமி கோவில் உள்ளது.

2. களம்பூர்

போளூர்க்கு வடக்கே 18 கி.மீ. இக்கோவில் 47 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிசுவநாதர். அம்மன் விசாலாட்சி. தலவிருட்சம் வில்வம். இக்கோவிலில் ஒரு கல்வெட்டுக்கள் உள்ளன. பரகேசரி இராசேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்தது. ஒரு கால பூஜை. மாசிப் பஞ்சமி திதியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இக்கோவிலுக்கு அருகில் வேணுகோபால சுவாமி திருக்கோவில் உள்ளது.

3. கஸ்தம்பாடி

போளூர்க்கு வடக்கே 14 கி.மீ. இக்கோவில் 91 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாண்டீஸ்வரர்.

4. வடமாதிமங்கலம்

போளூர்க்கு வடக்கே 12 கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மஹாதேவர்.

5. ஆத்துவாம்பாடி

போளூர்க்கு நேர் வடக்கே 10 கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு தருமலிங்கேசுவரர். பஞ்சபாண்டவர் வனவாசம் செய்த காலத்தில் தருமர் இத்தலத்தில் சிவலிங்கம் நிறுவி வழிபட்டுக் காட்சிக் கண்டதால் இறைவர்க்கு தருமலிங்கேசுரர் என்று பெயர் பெற்றதாக வரலாறு. இக்கோவிலில் 4 கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோவிலில் காமிக ஆகம விதிப்படி ஒரு கால் பூஜை நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

6. திண்டிவனம்

போளூர்க்கு வடமேற்கே 4 கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருபாட்க்ஷிஈஸ்வரர்.

7. குன்னத்தூர்

போளூர்க்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வீரஜம்புகேஸ்வரர்.

8. ஊதூர்

போளூர்க்கு கிழக்கே 14 கி.மீ. சேயாற்றின் தென்கரையில் உள்ள மூலவர் அருணாசலேசுவரர்.

9. மண்டகுளத்தூர்

போளூர்க்கு கிழக்கே 8 கி.மீ. சேயாற்றின் தென்கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தர்மேஸ்சுவரர்.

10. மாம்பட்டு

போளூர்க்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 2-82 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு சுயம்புநாதர்.

11. கண்டபாளையம்

சிறுவள்ளூர்க்கு மேற்கே 4 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேலம்தங்கீசுவரர்.

12. கேட்டவரம்பாளையம்

சிறுவள்ளூர்க்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில்

மூலவர் காசிவிஸ்வநாதர். அருகில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் சிம்மேசுவரர் திருக்கோவிலும் உள்ளது.

13. தச்சம்பாடி

போளூர்க்கு கிழக்கே 16 கி.மீ. இக்கோவில் 2-82 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

14. பெலாசூர்

போளூர்க்கு தென்கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கனகசபாதீசுவரர். அம்மன் சிவகாமசுந்தரி.

15. காப்பளூர்

போளூர்க்கு தெற்கே 7 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு திருக்காமீசுவரர். அம்மன் கனகுஜாம்பாள். இக்கோவிலில் 7 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை காமப்புத்தூர் எனக் குறிக்கப்படுகிறது. மேலும் இவ்வூரில் விசயராகவப் பெருமாள் கோவில் உள்ளது.

16. மேல்வில்வராயநல்லூர்

போளூர்க்கு தென்மேற்கே 12 கி.மீ. வில்வாரணி. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஆவுடையநாதீசு வரர். அம்மன் சுந்தரவல்லியம்மன். தீர்த்தம் மிருகண்டு தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். கல்வெட்டில் வில்வராயநல்லூர் என்றே குறிக்கப்படுகிறது. இரு கால பூஜை. பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூர்க்கு அருகில் உள்ள மோட்டூர் என்னுமிடத்தில் நட்சத்திரக் கோவில் என வழங்கும் பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் காசிவிசுவநாதர் காட்சியளிக்கிறார்.

17. சிறுவள்ளூர்

போளூர்க்கு தென்மேற்கே 13 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

18. கீழ்பள்ளூர்

கடலாடியிலிருந்து தென்மேற்கே 2 கி.மீ. சேயாற்றின் மேற்குக்கரையில் இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ராமநாதஈஸ்வரர்.

19. கடலாடி

போளூர்க்கு தென்மேற்கே 25 கி.மீ. சேயாற்றின் மேற்குக்கரையில் இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வன்னீசுவரர். அம்மன் காமாட்சியம்மன். தீர்த்தம் செய்யாறு. தலவிருட்சம் அரசமரம். இத்தலத்திற்கு அருகில் முருகப்பெருமான் வணங்கிய தலம். கரைகண்டீசுவரர் தலங்களுள் இஃது இரண்டாவது தலம். கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன.

20. தென்மகாதேவமங்கலம்

போளூர்க்கு தென்மேற்கே 16 கி.மீ. சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் சுயம்புலிங்கமாக அருள்மிகு கரைகண்டேசுவரர். அம்மன் பெரியநாயகி. தீர்த்தம் சேயாறு. சப்த கரைகண்டேசுவரர் தலங்களில் இத்தலம் நான்காவதாக உள்ள தலம். இக்கோவிலில் 9 கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக் களில் இறைவர் கரைகண்டீசுவரமுடைய நாயனார் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஒரு கால பூஜை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரையில் உற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரை ஒட்டியுள்ள மலை பர்வதமலை என்றும் சூலகிரி என்றும் குறிப்பிடுவர். இம்மலையின் மீது காட்சியளிக்கும் அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை மல்லிகார்ச்சுனர் காட்சியளிக் கிறார். சுயம்புலிங்க மூர்த்தியாவார். தீர்த்தம்

பாதாளச் சுனை எனப்படும் சிங்க தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். இம்மலையில் மூலிகைக்காற்று மிகுதியாக உள்ளது. பௌர்ணமி நாளில் இம்மலையில் தங்குதல் சிறப்புடையது எனக் கருதி ஆயிரக்கணக்கான மக்கள் இங்குத் தங்கிச் செல்கின்றனர்.

21. சோழவரம்

போளூர்க்கு தென்மேற்கே 12 கி.மீ. சோழபுரம். சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு சத்தியநாதேசுவரர். மேலும் இவ்வூரின் நடுவில் மாரியம்மன் கோவிலும் உள்ளது.

22. பழங்கோவில்

போளூர்க்கு தென்மேற்கே 12 கி.மீ. சேயாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பலக்கிருதீசு வரர். அம்மன் பாலாம்பிகை.

23. எலத்தூர்

போளூர்க்கு தென்மேற்கே 12 கி.மீ. சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கரைகண்டேசு வரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் பெரியநாயகி. முருகப்பெருமான் பூஜித்த கரைகண்டேசுவரர் தலங்களில் இஃது 5 வது தலமாகும்.

ஒரு கால பூஜை. பங்குனி உத்திரத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

24. பூண்டி

கலசபாக்கத்திலிருந்து மேற்கே ஒரு கி.மீ. சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கரைகண்டேசு வரர். முருகப்பெருமான் பூசை செய்த 7 கரைகண்டேசுவரர் தலங்களில் இத்தலம் 6 வது தலம். அருட்பிரகாச வள்ளலார் இக்கோவிலுக்கு பலமுறை வருகை தந்து வழிபட்டுள்ளார். பூண்டிமகான் சமாதி இவ்வூரில் உள்ளது. மேலும் கரைகண்டீசுவரர் கோவிலின் தென்கிழக்கு முனையில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசுவரர் திருக்கோவில் உள்ளது. மேலும் அருகில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் திருக்கோவிலும் அமைந்துள்ளது.

25. பில்லூர்

போளூர்க்கு தெற்கே 9 கி.மீ. சேயாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு அமிர்தேசுவரர். அம்மன் அபிராமியம்மை.

திருமால் தேவலோகத்திலிருந்து ஓர் அமுத குடத்தைக் கொண்டுவந்து இத்தலத்தில் சிவலிங்கமாகக் கருதி அதற்கு பூஜை செய்தார். அப்போது அதன்மீது கூர்ச்சம் எனப்படும் புல் தங்கின ஊர்பில்லூர் எனவும், கலசம் தங்கிய இடம் கலசப்பாக்கம் எனவும், அதற்கு அணிவித்த நூல் தங்கிய இடம் பூண்டி எனவும், மாவிலைகள் விழுந்த ஊர் மாம்பாக்கம் என்றும் பெயர் பெற்றதாக தலவரலாறு.

நாள்தோறும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.


26. கலசப்பாக்கம்

போளூர்க்கு தெற்கே 9 கி.மீ. சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு லிங்கவடிவில் அருள்மிகு திருமாமுடீசுவரர். அம்மன் திரிபுரசுந்தரி. இக்கோவிலில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன.

27. பாடகம்

போளூர்க்கு தென்கிழக்கே 13 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அபிராமேசுவரர்.

ஆரணி வட்டம்
(திருவண்ணாமலை மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. ஆரணி

ஆற்காட்டிலிருந்து தெற்கே 27 கி.மீ. கமண்டல ஆற்றின் கரையில் நான்கு கோவில்கள் உள்ளன. 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் திருக்கோவிலும், வெட்டுவாணம் என்னுமிடத்தில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் அருள்மிகு பிரமநாயகி உடனுறை புத்திரகாமேஸ்வரர் திருக்கோவிலும், 17 செண்ட் நிலப்பரப்பளவில் வேதபுரீஸ்வரர் திருக்கோவிலும், 4 செண்ட் நிலப்பரப்பளவில் அருணாசலேசுவரர் திருக்கோவிலும் உள்ளது. மேலும் இவ்வூரில் அரியாத்தம்மன் கோவிலும், கில்லாவரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது.

2. கண்ணமங்கலம்

ஆரணிக்கு வடமேற்கே 15 கி.மீ. கமண்டலநதி மேற்குக்கரையில் இக்கோவில் 54 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதர்.

3. ஆப்பநல்லூர்

கண்ணமங்கலத்திலிருந்து கிழக்கே 2 கி.மீ. கமண்டல ஆற்றின் கரையில் இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆப்பநாதீஸ்வரர்.

4. முள்ளண்டிரம்

ஆரணிக்கு வடக்கே 14 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கவடிவில் அருள்மிகு சுயம்புநாதர். அம்மன் சமசுகண்டேசுவரி. கல்வெட்டில் இவ்வூர் பிரபுடதேவராயபுரம் என்று குறிக்கிறது. இக்கோவில் அருணகிரிநாதரோடு தொடர்புடையது என்பதைக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. இக்கோவிலில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரு கால பூஜை. தைப்பூச விழா நடைபெறுகிறது. அருகில் திருமால் கோவிலான பாலவரதராசர் உள்ளார்.

5. வெள்ளியரை

ஆரணிக்கு வடக்கே 7 கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

6. அடையபுலம்

ஆரணிக்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காலகண்டேசுவரர்.

7. காமக்கூர்

ஆரணிக்கு மேற்கே 6 கி.மீ. இக்கோவில் 1-80 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர்.

8. ஆதனூர்

ஆரணிக்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புநாதர்.

9. சத்யவிஜயநகரம்

ஆரணிக்கு கிழக்கே 6 கி.மீ. கமண்டல ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருஅம்பிகேசுவரர்.


10. முள்ளிப்பட்டு

ஆரணிக்கு மேற்கே 2 கி.மீ. கமண்டல ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 93 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆபத்சகாயஈஸ்வரர்.

11. சம்புவராயநல்லூர்

ஆரணிக்கு மேற்கே 7 கி.மீ. கமண்டல ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு விருபாட்சீசுவரர். இக்கோவிலில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. ஆற்றங்கரையில் விநாயகர் கோவில் உள்ளது.

12. தேவிகாபுரம்



ஆரணிக்கு தெற்கே 18 கி.மீ. சேயாற்றின் தென்பகுதியில் 500 அடி உயரம் 320 படிகள் கொண்ட மலைமீது இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பொன்மலைநாதர். ஒரே கருவறையில் இங்கு பொன்மலைநாதரோடு, காசிவிசுவநாதரும் காட்சியளிக்கிறார். மலையடிவாரத்தில் 2-60 ஏக்கர் (475×250) நிலப்பரப்பளவில் 7 நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் தனிக்கோவிலாக அம்மன் பெரியநாயகி காட்சியளிக்கிறாள். தீர்த்தம் சிவகங்கை. தலவிருட்சம் ஆலமரம்.

இக்கோவிலில் 9 கல்லால் மட்டுமே கட்டப்பட்டிருக்கும் சன்னிதியில் கோகிலாம்பாள் உடனுறை காமேசுவரர் காட்சியளிக்கிறார்.

உக்கிரசேனன் என்னும் மன்னன் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து, ஈசன் அருளாள் அவனுக்கு தேவகி என்னும் புதல்வி தோன்றினாள். அவளது பெயரால் இத்தலம் தேவகிபுரி எனப்பட்டு பின்பு தேவிகாபுரம் என மருவியதாக வரலாறு.

முதற்காலத்தில் இருளர் வகுப்பைச் சார்ந்த .ஒருவன் காட்டிலுள்ள பல பகுதிகளில் கோடாரியால் தோண்டி கிழங்குகளைப் பெயர்த்தெடுப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தான். ஒரு மலை மீதுள்ள ஆலமரத்தினருகில் அவ்வாறு வெட்டும்போது அவனது கோடாரி அம்மரத்தின் வேரில்பட்டு உதிரப் பெருக்கு ஏற்பட்டது.

இதனைக் கண்டு அஞ்சிய வேடன் அங்கேயே உணர்விழந்து விழுந்தான். சிவபெருமான் அன்று அவனது கனவில் தோன்றி அச்சத்தை நீக்கியதுடன் அம்மரத்தடியில் தான் லிங்க வடிவில் உருக்கொண்டிருப்பதாகக் கூறினார். அவ்வாறே மரத்தடியில் இருந்த சுயம்புலிங்கத்தைக் கண்ட இருளன் அதனைத் தொடர்ந்து வழிபட்டான்.

அவ்வழியே போருக்குச் சென்ற பல்லவ மன்னன் இச்சம்பவத்தையறித்தான். போரில் வெற்றி எய்தினால் உடனே அங்கு ஆலயம் எழுப்புவதாகவும் அம்மன்னன் உறுதிபூண்டான். போரில் வெற்றியடைந் தான். நன்றிக் கடனாக அம்மன்னன் மலை மீது கோவிலொன்றை கட்டி மகிழ்ந்தான் என்பது வரலாறு.

இத்தலத்தை 64 சக்திபீடங்களுள் ஒன்றாக உடையது.

அம்மன் சன்னிதிக்கு எதிரே மேற்கு நோக்கியவாறு நந்தி காட்சியளிக்கிறது.

பொன்மலைநாதருக்கு அபிஷேகம் நடைபெறும்போது வெந்நீரை உபயோகிப்பது இத்தலத்தின் சிறப்பாகும்.

இ த் த ல மு ரு க ப் பெ ரு மா ன் ஆறுமுகங்களோடு காட்சியளிக்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ள தலம்.


இம்மலையின் சுற்றளவு சுமார் மூன்று மைல்களாகும். செவ்வாய்க் கிழமையன்று இம்மலைச் சுற்றி வலம்வந்து வழிபடுவது இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது.

அம்மன் திருக்கோவிலுள்ள பல சிற்பங்கள் முகமதியரின் தாக்குதலுக்குட் பட்டதால் ஓரளவு சிதைந்துள்ளன.

இக்கோவிலில் 56 கல்வெட்டுக்கள் உள்ளன. நாள்தோறும் 4 கால வழிபாடு நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது.

செய்யாறு வட்டம்

(திருவண்ணாமலை மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. செய்யாறு

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஒத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே

-- திருஞானசம்பந்தர்



காஞ்சிபுரத்திலிருந்து தென்மேற்கே 28 கி.மீ. திருஒத்தூர், திருவத்திபுரம். சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 7 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு வேதநாதர். அம்மன் இளமுலைநாயகி. தீர்த்தம் சேயாறு, கல்யாணகோடி தீர்த்தம். தலமரம் பனை வடக்குப் பிராகாரத் திலுள்ளது. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நாகநாதர், நடராஜர், பஞ்சலிங்கம், 63 நாயன்மார்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சிவபெருமான் இத்தலத்தில் தேவர் கட்கும், முனிவர்கட்கும் வேதப் பொருளை விளக்கி அருளிய காரணத்தால் இத்தலம் திருவோத்தூர் எனப் பெயர் பெற்றது.

விநாயகர், முருகன், வயிரவர், திருமால், பிரமன், சூரியன், தொண்டைமான் முதலியோர் பூசித்துள்ளனர். திருமால் இத்தல இறைவனை வணங்கிச் சக்கராயுதம் பெற்றார். இவர் ஆதிகேசவப் பெருமாள் எனக் இக்கோவிலில் காட்சியளிக்கிறார். சிவபெருமான் இத்தலத்தில் வீரநடனம் புரிந்ததாக வரலாறு. சேயாறு முருகப் பெருமானால் தோற்றுவிக்கப் பெற்று இத்தலத்தில் தீர்த்தமாகவுள்ளது. இக்கோவி லுக்கு தெற்கில் சேயாறு உள்ளது.

இத்தலத்தில் கொடிமரத்திற்கு முன்னால் உள்ள நந்தி சுவாமியை நோக்காது கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறது.

திருஞானசம்பந்தர் ஆண் பனைகளைப் பெண் பனைகளாகுமாறு திருப்பதிகம் பாடி அற்புதம் நிகழ்த்திய சிறப்புடைய தலமாகும். ஒருபாதி பெண்ணும், ஒரு பாதி ஆணுமாகக் கருங்கல்லால் அமைந்த பனைமரமும், அதன் அடியில் சிவலிங்கமும் அருகில் சம்பந்தர் ஆண்பனை, பெண் பனையாகுமாறு பாடிக் கொண்டு நிற்கும் காட்சியும் ஐதிகச் சிற்பமாக அமைந்து விளங்குவதைக் காணலாம்.

தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டில் இத்தலம் 8 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறுத்துப் பாடியுள்ளார். இத்தல முருகப் பெருமானை அருணகிரிநாதர் திருப்புகழ் பாடி வழிபட்டுள்ளார். தலபுராணம் கருணா கரக்கவிராயர் இயற்றியுள்ளார்.

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 29 உள்ளன. இறைவர் வேதபுரீஸ்வரர் எனவும், ஒத்தூர் உடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. தை மாதத்தில் இரத சப்தமியைத் திருநாளாகக் கொண்டு 10 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரைச் சுற்றி பட்சீஸ்வரர் திருக்கோவில், செல்வவிநாயகர், கங்கையம்மன், வேணுகோபால பெருமாள், பாவாடைமூர்த்தி விநாயகர் ஆகிய கோவில்கள் உள்ளன.

2. குரங்கணில்முட்டம்

விழுநீர் மழுவாட் படையண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன் பமிலரே

-- *திருஞானசம்பந்தர்*

காஞ்சிபுரத்திலிருந்து தென்கிழக்கில் 8 கி.மீ. பாலாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வாலீசுவரர் மேற்கு நோக்கி காட்சியளிக் கிறார். அம்மன் இறையார்வளையம்மை. தீர்த்தம் காக்கைமடு. தலவிருட்சம் இலந்தை மரம்.

உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிர மணியர், காசிவிஸ்வநாதர், பைரவர், சூரியன், நவக்கிரகம், துர்க்கை, சப்தமாதர்கள், திருஞானசம்பந்தர், நால்வர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

குரங்கு (வாலி), அணில், முட்டம் (காக்கை) பூசித்துப் பேறு பெற்றதால் இத்தலம் குரங்கணில்முட்டம் எனப் பெயர் பெற்றது. இதைக் குறிக்கும் சிற்பங்கள் கோவிலின் வாயிலில் உள்ளன. குரங்கு (வாலி) வழிபட்ட காரணத்தால் இறைவர்க்கு வாலீச்சுரர் எனப் பெயர் வழங்குகிறது. காக்கை வழிபட்டதைக் குறிக்கும் வகையில் கோவிலைச் சுற்றியுள்ள மடு காக்கைமடு என வழங்குகிறது.

தொண்டைநாட்டில் அமைந்து விளங்கும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் இத்தலம் 6 வது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்றது.

இக்கோவிலில் 6 கல்வெட்டுக்கள் உள்ளன. அவை கோனேரின்மை கொண்டான், மூன்றாம் குலோத்துங்கன், இராட்டிரகூடக் கன்னரதேவன், கிருஷ்ண தேவராயர், இவர்கள் காலத்தைச் சேர்ந்தது. கல்வெட்டில் இறைவர் திருக்குரங்கணில் முட்டமுடைய நாயனார், கொய்யா மலரீசுவரதேவர் என்றும், இவ்வூரை காலியூர்க் கோட்டத்து இருகழிநாட்டு மாவண்டூர்ப் பற்றத்துப் பல்லவபுரமான திருக்குரங்கணில் முட்டம் என்று குறிப்பிடப்படுகிறது.

நாள்தோறும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது. கார்த்திகை மாதத்தில் இலட்சதீபப் பெருவிழா நடைபெறுகிறது.

இக்கோவிலுக்கு வடகிழக்கே 1/2 கி.மீ. தூரத்தில் குடைகோவில் உள்ளது. குடைகோவிலில் உள்ள ஒரு தூணில் உள்ள கல்வெட்டில் இவ்வூர் இறைவர் பெயர் கல்லடைகாத்தாள்வார் எனக் குறிக்கப் பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

3. திருப்பனங்காடு

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில்அன் புடையானை யாவர்க்கும் அறிவொண்ணா
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே

-- சுந்தரர்.

காஞ்சிபுரத்திலிருந்து மேற்கே 10 கி.மீ. திருவன்பார்த்தான்பனங்காட்டூர். பாலாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூன்று நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பனங்காட்டீசர். அம்மன் அமிர்தவல்லி. தீர்த்தம் ஜடாகங்கை, சுந்தரர் தீர்த்தங்கள். தலவிருட்சம் பனைமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், லட்சுமி, நால்வர், பைரவர், நடராஜர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

பனைமரம் காடாக இருந்ததாலும், பனைமரம் தலமரமாக இத்தலத்தில் விளங்கு வதாலும் இவ்வூர் திருப்பனங்காட்டூர் என வழங்குகிறது.

அகத்தியர், புலத்தியர் ஆகிய இருபெரு முனிவர்கள் வழிபட்ட திருத்தலம். அதற்கேற்ப இங்குள்ள கோவில் இரண்டு சுவாமி சன்னிதிகள் உள்ளன. அகத்தியரால் பூசிக்கப்பெற்றவர் பனங்காட்டீசர் இவரே இத்தலத்தின் பிரதான மூர்த்தியாவார். தேவாரத்தில் குறிப்பிடப்படுவர் இவரே யாவர். புலத்தியரால் வழிபடப் பெற்றவர் கிருபாநாதேசுவரர். அம்பிகை திருப்பெயர் கிருபாநாயகி.

பக்தனது விருப்பத்திற்கு இணங்க இறைவன் தனது திருச்சடையிலுள்ள கங்கையைப் பெருகச் செய்தபோது அத்தீர்த்தம் தங்கிய இடம் கோவிலுக்கு எதிரே ஈசானத் திசையில் திருக்குளமாக விளங்குகிறது.

சுந்தரர்க்கு இறைவன் இத்தலத்தில் கட்டமுது கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

காஞ்சிபுரம் திருஏகாம்பரநாதர் மாசிமகத்தன்று இவ்வூருக்கு எழுந்தருளிப் பாலாற்றில் திருவூறல் உற்சவம் கொள்கிறார்.

தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டில் இத்தலம் 9 வது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார்.

கல்வெட்டுக்கள் 21 உள்ளன. இறைவர் திருப்பனங்காடு உடையார், ஆளுடையார், திருப்பனங்காடுடைய நாயனார் என்றும், இவ்வூரை சயங்கொண்ட சோழ மண்டலத்து, காலியூர்க் கோட்டத்து, கழுமல நாட்டுத் திருப்பனங்காடு என்று முதல் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. மேலும் இத்தலத்தில் உயிருள்ள பனைமரங்களை வெட்டுபவர்கள் தண்டனைக்கும், தோஷத்திற்கும் உள்ளாவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

நாள்தோறும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

4. பிரம்மதேசம்

செய்யாறுக்கு வடக்கே 27 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கன்னிகேசுவரர்.

5. வெங்களத்தூர்

திருப்பனங்காட்டிலிருந்து வடமேற்கே 5 கி.மீ. இக்கோவில் 44 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

6. வெம்பாக்கம்

திருப்பனங்காட்டிலிருந்து மேற்கே 2 கி.மீ. வன்பாக்கம். இக்கோவில் 1-18 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்மாக அருள்மிகு இராமநாதேசுவரர். அம்மன் பர்வதவர்த்தினி.

7. திருப்பணமூர்

செய்யாற்றிலிருந்து வடக்கே 15 கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு இராமநாதீசுவரர்.

8. குடியதண்டலம்

செய்யாறுக்கு வடகிழக்கே 28 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதஈஸ்வரர்.

9. மேநல்லூர்

மாமண்டூரிலிருந்து தென்கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

10. மாமண்டூர்

செய்யாற்றிலிருந்து வடகிழக்கே 22 கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமாந்தீஸ்வரர். அருகில் ஸ்ரீ லஷ்மி நாராயணப் பெருமாள் திருக்கோவில் உள்ளது.

11. சுமங்கலி

செய்யாற்றிலிருந்து வடக்கே 12 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சத்தியநாதர். அம்மன் சுமங்கலி யம்மன்.

12. பெருங்காட்டூர்

செய்யாற்றிலிருந்து வடக்கே 12 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சார்ந்தாரைக்காத்தஈஸ்வரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார்.

13. அசனமாப்பேட்டை

செய்யாற்றிலிருந்து வடக்கே 13 கி.மீ. இக்கோவில் 42 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதீசுவரர். அம்மன் பர்வதவர்த்தினி.

14. நரசமங்கலம்

மாமண்டூர்க்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 92 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர் சுயம்புலிங்க மூர்த்தியாக காட்சியளிக்கிறார்.

15. பெருங்களத்தூர்

செய்யாற்றிலிருந்து வடகிழக்கே 5 கி.மீ. இக்கோவிலின் மூலவர் வேதபுரீஸ்வரர்.

16. கூழமந்தல்

செய்யாறுக்கு கிழக்கே 16 கி.மீ. செய்யாற்றின் வடகரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோழீச்சுரர். இக்கோவிலில் மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. இராசாதிராஜ தேவர், இராசேந்திர சோழ தேவர், பரகேசரிவர்மன் ஆகியோர் காலத்தைச் சேர்ந்தது. இக்கோவிலுக்கு அருகில் திருமால் கோவில் உள்ளது.

17. உக்கல்

செய்யாற்றிலிருந்து கிழக்கே 18 கி.மீ. சிவசூளாமணிமங்கலம், பெருந்திருக் கோவில். செய்யாற்றின் வடகரையில் இக்கோவில் 71 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தியநாதர். கல்வெட்டுக்கள் 15 உள்ளன.

18. புதுப்பாளையம்

மாமண்டூரிலிருந்து தெற்கே 10 கி.மீ. சேயாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு அகத்தீசுவரர். அம்மன் அங்கயற்கண்ணி. இக்கோவிலுக்கு அருகில் ஆதிமூலப்பெருமாள் கோவிலும் உள்ளது.

19. வேலியநல்லூர்

செய்யாற்றிலிருந்து கிழக்கே 6 கி.மீ. இக்கோவில் செய்யாற்றின் வடகரையில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர்.

20. செய்யாத்துவனம்

செய்யாற்றிலிருந்து மேற்கே 3 கி.மீ. செய்யாத்துவென்றான். செய்யாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-60 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

21. அனக்காவூர்

செய்யாறுக்கு தெற்கே 2 கி.மீ. சேயாறு தென்கரையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அனுமீசுவரர். அருகில் வீரராகவப் பெருமாள் கோவில் உள்ளது.

22. நாவல்

செய்யாற்றிலிருந்து தென்மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜம்புகேசுவரர்.

23. புரிசை

செய்யாற்றிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீசுரர் மேற்கு நோக்கியும், அம்மன் அகிலாண்டேசுவரி கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர்.

அகத்தியர் வழிபட்டு அருள்பெற்ற தனால் இறைவர்க்கு அகத்தீசுரர் என்று பெயர். சுவாமி சன்னிதியில் அகத்தியர் வழிபாடு செய்யும் நிலையில் திருவுருவம் உள்ளது.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரர் தேவாரத்தில் பொன்னூர் நாட்டுப் பொன்னூர் இவ்வூருக்கு அருகே விளங்குவதாலும் புரிசை நாட்டுப் புரிசை எனப் பொன்னூரை அடுத்துப் புரிசையைச் சுந்தரர் குறிப்பிடுவதாலும் இவ்வூரே அப்பர், சுந்தரர் தேவாரங்களில் குறிக்கப்படும் புரிசையாகும். மேலும் இவ்வூரில் கரியமாணிக்க பெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

24. வாச்சனூர்

செய்யாற்றிலிருந்து தென்கிழக்கே 17 கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

25. கோவிலூர்


செய்யாறுக்கு தெற்கே 10 கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அருகில் ஆதிகேசவ பெருமாள் திருக்கோவில் உள்ளது.

26. மேல்சீஷமங்கலம்

செய்யாற்றிலிருந்து மேற்கே 25 கி.மீ. செய்யாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-33 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மணிகண்டேசு வரர். அருகில் வரதராஜப் பெருமாள் திருக்கோவில் உள்ளது.

அரக்கோணம் வட்டம்

(வேலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருமால்பூர்

சால மாமலர் கொண்டு சரணென்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னார்வழி பாடுசெய் மாற்பேற்று
நீல மார்கண்ட நின்னையே

-- திருஞானசம்பந்தர்

காஞ்சிபுரத்திலிருந்து வடமேற்கே 12 கி.மீ. திருமாற்பேறு, திருமால்புரம், ஹரிசக்கர புரம் என வழங்கப்பெறும். இக்கோவில் 1-20 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக, தீண்டாத்திருமேனி உடையவர் அருள்மிகு மணிகண்டேசுவரர். அம்மன் அஞ்சனாட்சி, கருணைநாயகி தனிச்சன்னிதியில் தெற்கு நோக்கியுள்ளார். தீர்த்தம் சக்கர தீர்த்தம். தலமரம் வில்வம்.

சுவாமி கோவில் உட்பிராகாரத்தில் நந்திகேசுவரர் நின்ற திருக்கோலத்திலும், செந்தாமரைக்கண்ணப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கூப்பிய கரத்துடன் காட்சி தருகிறார்.

இறைவனுக்கு குவளை சாத்தியே அபிஷேகம் நடைபெறுகிறது. விருத்தக்ஷீர நதி என்னும் பழைய பாலாறு இத்தலத்திற்கு அருகில் வடக்குத் திசையில் உள்ளது. உட்பிராகாரத்தில் விநாயகர், சிதம்பரேஸ் வரர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர், நடராஜர், கஜலஷ்மி முதலிய சன்னிதிகள் உள்ளன.

குபன் என்னும் அரசன் பொருட்டாகத் திருமால் துதீசி முனிவருடன் போரிட்ட போது திருமாலின் சக்கரம் அம்முனி வருடைய வைர உடம்பிற்பட்டு முனை மழுங்கிவிட்டது. வேறு சக்கரம் பெறும் பொருட்டுத் திருமால் இத்தலத்தை அடைந்து அம்பிகை பூசித்த இலிங்கத்தை நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்து வந்தார். சிவபெருமான் அவரது பக்தியைக் காணவேண்டி ஒரு நாள் அருச்சிக்கக் கொணர்ந்த ஆயிரம் தாமரை மலர்களில் ஒன்றை மறைத்தருளினார். திருமால் அருச்சிக்கையில் ஒரு திருப் பெயருக்கு ஒரு மலர் இல்லாமையால் தமது கண்ணைப் பறித்து இறைவன் திருவடியில் சார்த்தியருளினார். உடன் சிவபெருமான் மகிழ்ந்து திருமாலுக்கு காட்சிதந்து, கேட்டபடி சக்கரத்தை அருளினார்.

திருமால் வழிபட்டுச் சக்கராயுதம் பெற்றதனால் இத்தலம் அன்று முதல் திருமாற்பேறு என்றும், திருமாலுக்கு செந்தாமரைக் கண்ணப்பெருமாள் என்றும் பெயர்.

திருமால் கூறிவழிபட்ட ஆயிரம் பேர்களால் அருச்சிப்போர்க்கும் அவற்றுக் கொப்பான தீண்டச் சிவந்தார், சாதரூபர், மணிகண்டர், தயாநிதியார், பவளமலையார், வாட்டந்தவித்தார், சாகிசனர் என்னும் எட்டுத் திருநாமங்களால் அருச்சித்தோர்க்கும் நலங்கள் பல அருள் புரிவதாகவும் இறைவன் திருமாலுக்கு வரமருளியதாகக் காஞ்சிப்புராணம் கூறுகிறது.

திருமாலும், சந்திரனும் இத்தலத்தில் வழிபட்டதை திருஞானசம்பந்தர் தேவாரம் குறிப்பிடுகிறது.

இறைவனின் உற்சவத் திருமேனிநின்ற திருக்கோலத்தில் ஒரு கையில் தாமரை மலரும், மற்றொரு கையில் கண்ணும் உள்ளது. தேவாரப் பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இத்தலம் 11 வது தலம்.

திருஞானசம்பந்தர் அருளிய இரண்டு திருப்பதிகங்களும், திருநாவுக்கரசர் அருளிய

நான்கு திருப்பதிகங்களும் ஆக ஆறு தேவாரத் திருப்பதிகங்கள் உள்ளன. சுந்தரரும் இத்தலத்திற்கு எழுந்தருளி வழிபட்டதாகச் சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிடுகிறார். அவர் அருளிய திருப்பதிகம் கிடைக்கவில்லை. தலபுராணம் தருமையாதீனம் ஸ்ரீ கயிலை சுப்ரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் எழுதப்பெற்றது.


இக்கோவிலில் 80 கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்திலுள்ள காமக்கோட்டத்தின் பகுதியான வல்ல நாட்டிலுள்ள திருமாற்பேறு என்று ராஜகேசரிவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழன் காலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் பெயர் திருமாற்பேறுடையார், சோழீஸ்வரமுடையார், அவிமுக்தீஸ்வர முடையார் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. நம்மாழ்வார் திருவாய் மொழியின் வரிகள் கருப்பக்கிருகத்தின் மேற்குச் சுவரில் காணப்படுகின்றன.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மாதத்தில் 10 நாள் உற்சவம் நடைபெறுகிறது.

2. தக்கோலம்

மாறில் அவுணரரணம் மவைமாயவோர் வெங்கணையா லன்று
நீறெழ எய்த எங்கள் நிலமலன் இடம்வினவில்
தேறல் இரும்பொழிலுந் திகழ்செங்கயல் பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊறல் அமர்ந்தபிரான் ஒலியார் கழல் உள்குதுமே

-- திருஞானசம்பந்தர்



அரக்கோணத்திலிருந்து தென்கிழக்காக 13 கி.மீ. திருவூறல். குசத்தலை நதி என்னும் கல்லாற்றின் கரையில் இக்கோவில் 5-83 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன், மேற்கு நோக்கிய 3 நிலை இராஜகோபுரம் கொண்டு இத்தல மூலவர் சுயம்புலிங்கவடிவில் அருள்மிகு உமாபதீசுவரர், சலநாதேசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் கிரிராஜகன்னியம்மன் வடக்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளனர். தீர்த்தம்- பார்வதி, சத்யகங்கை. தலமரம்- தக்கோலம்.

ஒரு நந்தியின் வாயிலிருந்து எப்போதும் நீர்வழிந்து வந்ததாலும், இறைவனது திருவடியிலிருந்து நீர் சுரப்பதாலும் இவ்வூருக்குத் திருவூறல் என்று பெயர். வடக்கு மதிலோரத்தில் உள்ள கங்காதரர் சன்னிதியில் மேற்குப் பிராகாரத்தில் சத்யகங்கை தீர்த்தம் உள்ளது. இதன் கரையில் உள்ள நந்தியின் வாயிலிருந்துதான் கங்கைநீர் பெருகிவந்தது.

சம்வர்த்தமுனிவர் வழிபட்ட தலம். உததி முனிவர் வேண்டுகோள்படி நந்திதேவர் தன்வாய் வழியாகத் தெய்வ கங்கையை வருவித்த இத்தலம் புராண வரலாற்றுச் சிறப்புடையது. இங்குள்ள தென்முகக் கடவுள் சன்னிதி சிறப்புடையது. இத்தல இறைவனை உததி முனிவர், காமதேனு, சந்திரன், இயமன், சூரியன், திருமால், பாண்டவர்கள், சப்தகன்னியர்கள் முதலியோர் வழிபட்ட தலம். உள்பிராகாரத்தில் சக்தி விநாயகர், சுப்ரமண்யர், பஞ்சலிங்கம், மகாலஷ்மி, நடராஜர்,

சூரியன், சந்திரன், பைரவர், சப்தகன்னியர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டில் இத்தலம் 12 வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய திருப் பதிகம் ஒன்றைப் பெற்றது. திருநாவுக் கரசரும், சுந்தரரும், தனித் தேவாரப் பாடல்களில் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர். தலபுராணம் பூவை. கல்யாணசுந்தர முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றது. இத்தலத்தில் செய்யும் சிவபுண்ணியப் பணிகள் யாவும் ஒன்றுக்கு நூறு மடங்காகப் பலன்தரும் எனத் தலபுராணம் கூறுகிறது.

கல்வெட்டுக்கள் உள்ளன. அதில் இறைவன் ஜலநந்தீஸ்வரர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இராஜகேசரிவர்மன், கோபார்த்திவேந்திரவர்மன், திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கன் ஆகியோர் களின் ஆட்சியில் நிகழ்ந்தவை குறிக்கப் பட்டுள்ளது. தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. இக்கோவிலுக்கு வடக்கே அருள்மிகு மோகனவல்லியம்மன் உடனுறை கங்காதரேசுவரர் திருக்கோவிலும். மேலும் இவ்வூரில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமநாதீசுவரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். சந்திரனாகிய சோமனால் வழிபடப்பெற்றதால் சுவாமிக்கு சோமநாத ஈஸ்வரர் என்றும் பெயர் பெற்றதாக தலவரலாறு.

3. பரஞ்ஜி

அரக்கோணத்திலிருந்து மேற்கே 16 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

4. செம்பேடு

அரக்கோணத்திலிருந்து வடமேற்கே 17 கி.மீ. இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உமாமகேஸ்வரர்.

5. வளர்புரம்

அரக்கோணத்திலிருந்து வடக்கே 12 கி.மீ. வளைகுளம். நந்தியாற்றின் தென் கரையில் இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருநாகேஸ்வரர். அம்மன் சொர்ணவல்லி. தீர்த்தம் சங்கு தீர்த்தம் எனப்பெறும் புனிதமான வளைகுளமாகும். தலவிருட்சம் வில்வம்.

ஆதிசேடன் பூசித்து அருள்பெற்றதால் இறைவன் திருநாகேஸ்வரர் எனப் பெயர் பெறுகிறார்.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசர் வளை குளம், தளிக்குளம், இடைக்குளம் ஆகிய சிறந்த முக்குளத் தலங்களைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். பதினொராம் திருமுறையில் ஐயடிகள்காடவர்கோன்நாயனார் இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

பாண்டிய மன்னர்களில் சுந்தர பாண்டியன் இக்கோவிலுக்கு நிவந்தம் அளித்துள்ளதாகக் கல்வெட்டுக்கள் குறிப் பிடுகின்றன.

6. கீழ்பாக்கம்

அரக்கோணத்திலிருந்து வடக்கே 6 கி.மீ. இக்கோவில் சுமாராக ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருத்தீஸ்வரர்.

7. அணைக்காட்டுப்புத்தூர்

தக்கோலத்திலிருந்து வடகிழக்கே 10 கி.மீ. காவேரிபாக்கம் ஆற்றின் கரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர்.

8. நாகவேடு

அரக்கோணத்திலிருந்து தென்மேற்கே 10 கி.மீ. காவேரிபாக்கம் ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 29 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

9. நெமிலி

திருமால்பூர்லிருந்து வடக்கே 7 கி.மீ. காவேரிபாக்கம் ஆற்றின் கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு புன்னைவனநாதர்.

10. பள்ளூர்

திருமால்பூர்லிருந்து வடகிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குகேஸ்வரர்.

11. காவேரிப்பாக்கம்

காஞ்சிபுரத்திலிருந்து வடமேற்காக 30 கி.மீ. பாலாற்றின் வடபகுதியில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு முத்தீஸ்வரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். சோழ மன்னன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டும், பல்லவ மன்னன் நந்திவர்மன் கல்வெட்டும் உள்ளன. மேலும் இவ்வூரில் கோட்டை அபயவரதராசர் என்னும் திருமால் கோவிலும், சுந்தரவிநாயகர் திருக்கோவிலும், செல்லியம்மன் திருக்கோவிலும், கொங்கண முனிவர் வழிபட்ட கொங்கணீசுவரர் திருக்கோவிலும், காளிகாம்பாள் உடனுறை காசிவிஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளன.

12. கொண்டாபுரம்

காவேரிப்பாக்க உட்பகுதியில் இக் கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூன்று நிலை இராஜகோபுரம், பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பஞ்சலிங்கேசுவரர். இத்தலமான சைவபுரத்தில் 32 அறங்களை மேற்கொள்ள இறைவி காமாட்சியம்மை கம்பா நதிக்கரையில் தவம் இயற்றுவதற்கு முன்பு இத்தலத்தில் எழுந்தருளித் தம் திருக்கரங்களால் பஞ்சலிங்கேசுவரரை எழுந்தருளச் செய்வித்ததால் இறைவனுக்கு பஞ்சலிங்கேசுவரர் என்று பெயர். இக்கோவிலுக்கு அருகில் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.

13. பனப்பாக்கம்

காஞ்சிபுரத்திலிருந்து வடமேற்கே 14 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மயூரநாதர். அம்மன் சௌந்தர்ய நாயகி. தலமரம் பனைமரம், ஆதலால் இவ்வூருக்கு பனப்பாக்கம் என்றும் உமையம்மை மயில் வடிவில் வழிபாடு செய்ததால் இறைவனுக்கு மயூரநாதர் என்றும் பெயர்.

இத்தலத்திற்கு திருத்தாலபுரி, மயூரபுரி, புலியூர், இந்திரபுரி, பிரமபுரி, கலியாணமாவூர் முதலிய பெயர்கள் இத்தலப்புராணமாகிய பனசைப் புராணத்தில் குறிக்கப்படுகிறது.

நந்திதேவர், பிரமன், இந்திரன், அகத்தியர் முதலியோர் பூஜை செய்து பேறு பெற்றத் தலம்.

கல்வெட்டுக்கள் 2 உள்ளன. இறைவர் பெயர் புலியப்பர் என்றே குறிக்கிறது.

நாள்தோறும் மூன்று கால பூஜை. சித்திரை மாதத்தில் மகநட்சத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் காளத்திநாதர் திருக்கோவிலும், இலட்சுமி நாராயணப் பெருமாள் கோவிலும் உள்ளது.

14. சேரி

காவேரிப்பாக்கத்திலிருந்து வடக்கே 5 கி.மீ. சேரிஅய்யம்பேட்டை. இக்கோவில் 1-85 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் நரசிம்மஈஸ்வரர் கிழக்கு நோக்கி காட்சி யளிக்கிறார்.

திருமால் நரசிம்ம வடிவம் எடுத்து வழிபடப் பெற்றதால் இத்தல இறைவனுக்கு நரசிம்மாஸ்வரர் என்று பெயர். அருகில் சேரிகிராமத்தில் கோதண்டராமர் திருக்கோவில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது.

15. கரிவேடு

காவேரிப்பாக்கத்திலிருந்து கிழக்கே 7 கி.மீ. பாலாற்றின் வடபகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு அரிபிரசாதேசுவரர். அம்மன் தர்மவர்த்தினி.

திருமாலுக்கு அருள்புரிந்ததால் இறைவர் அரிபிரசாதேசுவரர் என்னும் பெயர் பெற்று விளங்குகிறார்.

கல்வெட்டுக்களில் திரிபுவன வீரகண்ட கோபாலன் 3 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒரு வேலி நிலம் அளித்ததைக் குறிக்கிறது. மேலும் இவ்வூரில் கஜேந்திர வரதராஜப் பெருமாள் கோவிலும், வீரமாகாளியம்மன் கோவிலும் உள்ளன.

16. ஒச்சேரி

காஞ்சிபுரத்திலிருந்து வடமேற்கே 22 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு சுயம்புநாதர். 2000 வருட முற்பட்ட கோவில்.

17. வேகாமங்கலம்

காவேரிப்பாக்கத்திலிருந்து தென் கிழக்கே 6 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பரசுராமேசுவரர்.

உலகம் முழுவதும் வெந்தழிய இவ்வூர் வேகாது நின்றதால் இவ்வூர்க்கு வேகாமங்கலம் என்று பெயர்.

பரசுராமர் பூஜித்ததால் இறைவனுக்கு பரசுராமேசுவரர் என்று பெயர். உள் பிராகாரத்தில் கைலாசநாதர் சன்னிதி உள்ளது. 2 கால பூஜை, காணும் பொங்கல் அன்று உற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் காசிவிசுவநாதர் திருக்கோவிலும், பச்சையம்மன் திருக்கோவிலும் உள்ளது.

18. மாமண்டூர்

காவேரிப்பாக்கத்திலிருந்து தென் கிழக்கே 7 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரமௌலீசுவரர்.

19. களத்தூர்

பனப்பாக்கத்திலிருந்து தெற்கே 10 கி.மீ. கரிவேடுகளத்தூர். பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தத்தேசுவரர். சுகமுனிவர் பூசித்த தலம். உள்பிராகாரத்தில் கயிலாசநாதர், ஆறுமுகர் சன்னிதி உள்ளது. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.

20. சிறுகரும்பூர்

இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திரிபுராந்தகர். அம்மன் சுந்தரகாமாட்சி, தலவிருட்சம் சரக்கொன்றை.

அகச்சமயம்

சைவசமயத்தின் உட்பிரிவுகள் ;


அவை : பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம்.

அகப்புறச்சமயம்

சைவசித்தாந்தத்திற்குப் புறம்பான மதங்கள்;

அவை: பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம்.

வாலாஜாப்பேட்டை வட்டம்
(வேலூர் மாவட்டம்)



1. வாலாஜாப்பேட்டை

காஞ்சிபுரத்திலிருந்து மேற்கே 40 கி.மீ. பாலாற்றின் வடபகுதியில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரத்துடன் மூலவர் ஏகாம்பரநாதர். அம்மன் காமாட்சியம்மன்.

இக்கோவிலுக்கு வடகிழக்கில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலும், பேருந்து நிலையத்திற்கு அருகில் சுந்தரவிநாயகர் கோவிலும் உள்ளன. மேலும் இவ்வூரில் வசவேசுவரர் திருக்கோவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளன. இவ்வூர்க்கு இறைவன் பெயரால் வசவராசப்பேட்டை என்பதே காலப்போக்கில் வாலாஜாப்பேட்டை என ஆகியது என்பர்.

மேலும் இவ்வூரில் வீரபத்திரர் திருக்கோவில், 80 செண்ட் நிலப்பரப்பள வில் கூடிய வேணுகோபாலசுவாமி திருக்கோவில், மற்றும் பூண்டி மகான் மடம் முதலியன இவ்வூரில் அமைந்துள்ளன.

2. ராணிப்பேட்டை

வாலாஜாப்பேட்டையிலிருந்து மேற்கே 4 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தேவநாதேசுவரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள காரை என்னுமிடத்தில் கௌதமர் பூசித்த கௌதமேசுவரர் பாலாற் றின் தென்கரையில் காட்சியளிக்கிறார்.

3. சோளிங்கர்

வாலாஜாப்பேட்டையிலிருந்து வடக்கே 18 கி.மீ. சோளிங்கபுரம், சோழசிம்மபுரம். இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோளபுரீஸ்வரர்.

சோழமன்னன் ஒருவர் இத்தலத்தில் சுயம்புமூர்த்தியைக் கண்டு அதற்கு ஒரு கோவில் அமைத்துச் சோளீசர் கோவில் எனப் பெயரிட்டதாகவும், சோழ-லிங்க-புரம் என்ற பெயர் சோளிங்கர் என பெயர் பெற்றதாகவும் கூறுவர். இக்கோவிலில் உள்ள 5 கல்வெட்டுக்களில் இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இக்கோவிலுக்கு அருகில் பக்தோசிதசுவாமி திருக்கோவில் உள்ளது. இவ்வூர்க்கு அருகில் 2 கி.மீ. தொலைவில் உள்ள கொண்டபாளையம் என்னுமிடத்தில் பெரியமலை மீது யோகநரசிங்கப் பெருமாள் திருக்கோவிலும், அருகில் சிறிய மலைமீது யோக ஆஞ்சநேய சுவாமி திருக்கோவிலும் உள்ளது.

4. பொன்னை

வாலாஜாப்பேட்டையிலிருந்து வடக்கே 24 கி.மீ. இக்கோவில் பொன்னையாற்றின் கரையில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

5. மேல்பாடி

வாலாஜாப்பேட்டையிலிருந்து வடக்கே 17 கி.மீ. மேற்பாடி. பொன்னையாற்றின் மேற்குக் கரையில் இக்கோவில் 1-18 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதீசுவரர் கிழக்கு நோக்கியும் அம்மன் தபசுகிருதாம் பாள் கிழக்கு நோக்கியும் காட்சியளிக் கின்றனர். கங்காளர், உமாமகேஸ்வரர், விநாயகர், ஐயனார், சப்தமாதர் முதலியோர் உள்ளனர்.

கல்வெட்டுக்களில் சோளேந்திர சிங்க ஈசுவரமுடைய மகாதேவர் கோவில் என குறிக்கப்பட்டுள்ளது. ஒரு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் மற்றொரு கோவிலாக 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோழீசுவரர் திருக்கோவில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது. இக்கோவிலில் மூன்று கல் வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்களில் இறைவன் ஸ்ரீ கோவிராசராசகேசரிவர்மரான ஸ்ரீ ராசராசதேவர்க்கு 29ஆம் ஆண்டு

ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் பெரும்பாணாடி நாட்டு மேற்பாடியான ராசஸ்ரீபுரத்து ஆற்றூர்த் துஞ்சிய தேவர்க்குப் பள்ளிப்படையான உடையார் ஸ்ரீ ராசராசதேவர் எடுப்பித்தருளிய திருஅரிஞ் சிகை ஈச்சுரத்து மகாதேவர்க்கு என்று குறிக்கப்பட்டுள்ளது.

6. வெண்ணம்பள்ளி

வாலாஜாப்பேட்டையிலிருந்து வடமேற்கே 18 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

7. பெருங்காஞ்சி

சோளிங்கரிலிருந்து தெற்கே 4 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீசுவரர். அம்மன் தேவநாயகி. தீர்த்தம் அகத்திய தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் வலம்புரிவிநாயகர், காசிவிஸ்வநாதர், ஆறுமுகர், தட்சிணா மூர்த்தி, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. இத்தல இறைவனை அகத்திய முனிவர் வழிபட்டு காட்சிக் கண்டதால் இறைவர்க்கு அகத்தீஸ்வரர் என்று பெயர். ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

8. புலிவலம்

சோளிங்கரிலிருந்து தெற்கே 5 கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்காமேசுவரர்.

9. சிக்கராயபுரம்

வாலாஜாப்பேட்டையிலிருந்து வடமேற்கே 10 கி.மீ. பொன்னையாற்றின் கிழக்கு கரையில் இக்கோவிலுள்ள மூலவர் பாலவிஸ்வநாதர்.

10. வன்னிவேடு

வாலாஜாப்பேட்டையிலிருந்து தெற்கே ஒரு கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 90 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அகத்தீஸ்வரர். அம்மன் புவனேஸ்வரி. தலவிருட்சம் வன்னி. உள்பிராகாரத்தில் அகத்தியர் உள்ளார். இத்தலத்தில் சனீஸ்வரர் ஒற்றைக்காலில் நின்று, வாகனம் காக்கை தெற்குநோக்கி உள்ளது.

11. தெங்கால்

வாலாஜாப்பேட்டையிலிருந்து மேற்கே 9 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்கண்டீஸ்வரர்.

12. வேப்பூர்

வாலாஜாப்பேட்டையிலிருந்து மேற்கே 7 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 90 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வசிட்டேசுவரர்.

13. குடிமல்லூர்

வாலாஜாப்பேட்டையிலிருந்து தெற்கே 3 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு பூமீசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் சௌந்தரவல்லி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் பாலாறு. தலவிருட்சம் வில்வம்.

பஞ்சபூதங்களில் ஒன்றான மண் வடிவாக இருப்பதால் இத்தல இறைவனுக்கு பூமீசுவரர் என்று பெயர். இக்கோவிலில் 10 கல்வெட்டுக்கள் உள்ளன.

திருச்சிற்றம்பலம்

14. கதியவாடை

மேல்விஷாரத்திலிருந்து தெற்கே 3 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரநாதர்.

15. அருங்குன்றம்

மேல்விஷாரத்திலிருந்து தென்மேற்கே 5 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தர்மேசுவரர்.

16. திருப்பாற்கடல்

வாலாஜாப்பேட்டையிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 68 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கரபுரீசுவரர். அம்மன் பாலகுஜாம்பாள். விநாயகர், முருகப் பெருமான், தட்சிணாமூர்த்தி முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலம் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகப் பதிகத்தில் குறிக்கப் பட்டுள்ளதால் இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. அருண கிரிநாதர் இத்தல முருகப்பெருமானைப் போற்றி திருப்புகழ் அருளியுள்ளார்.

கல்வெட்டில் இறைவர் திருக்கரபுரத்துப் பெருமான் அடிகள் என்றும், இவ்வூரை தொண்டை மண்டலத்துப் படுவூர்க் கோட்டத்துக் காவிரிப்பாக்கமாகிய அவநிநாராயணச் சதுர்வேதிமங்கலத்தைச் சார்ந்தது எனச் சோழ மன்னர்களில் இராண்டாம் பராந்தக சோழனின் படைத்தலைவனான பார்த்வேந்திவர்மன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு குறிப்பிடப்படுகிறது.

இக்கோவிலுக்கு மேற்கே பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோவில் உள்ளது. புண்டரீகமுனிவர்க்கு இறைவன் ஹரிஹரனாக காட்சியளித்த தலம். இன்றும் இக்கோவிலில் சிவலிங்க ஆவுடையார் மீது திருமால் காட்சியளிக்கிறார். இக்கோவிலுக்கு அருகில் அரங்கநாதர் திருக்கோவிலும் உள்ளது.

பஞ்சக்கிலேசம்

ஐவகைத் துன்பமான அவிச்சை, தன்முனைப்பு, அவா, ஆசை, வெகுளி.

பஞ்சகஞ்சுகம்

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து ஆன்மதத்துவச் சட்டைகள்.

பஞ்சகதி

குதிரையின் ஐவகை நடை :
மயில் நடை, மல்ல நடை, குரக்குநடை, ஏறு நடை, புலிநடை என்பன.

பஞ்சகவ்வியம்

பால், தயிர், நெய், மூத்திரம், சாணம்.

நவகண்டம்

கீழ்விதேகம், மேல்விதேகம், வட விதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்விரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திய கண்டம் என்னும் பூமியின் ஒன்பது கண்டங்கள்.

நவசக்தி


வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, பலவிகரணி, பலபிர மதனி, சர்வபூததமணி, சக்தி, மனோன்மணி ஆகிய ஒன்பது சிவசத்திகள்.

சதுர்யுகம்

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்கள்; நான்கு யுகங்கூடிய பெருங்காலம்.

திருச்சிற்றம்பலம்

ஆற்காடு வட்டம்
(வேலூர் மாவட்டம்)



1. ஆற்காடு

வேலூர்க்கு கிழக்கே 27 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசி விஸ்வநாதர். மேலும் இவ்வூரில் 97 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கங்காதரஈஸ்வரர் திருக்கோவிலும், வரதராஜப் பெருமாள் திருக்கோவிலும், சுந்தரவிநாயகர் திருக்கோவிலும் அருகருகே அமைந்துள்ளன.

2. விலாபாக்கம்

ஆற்காட்டிலிருந்து தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாகேஸ்வரர்.

3. முப்பதுவேட்டை

ஆற்காட்டிற்கு கிழக்கே 5 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம் பரேஸ்வரர். அம்மன் காளிகமண்டேஸ்வரி.

4. புதுப்பாடி

ஆற்காட்டிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பரத்வாசீசுவரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். கல்வெட்டுக்களில் பரகேசரிமன்னருடைய 3 ஆம் ஆண்டுக் கல்வெட்டு நிலத்தை விற்பனை செய்ததைக் குறிப்பிடுகிறது.

5. சக்கரமல்லூர்

ஆற்காட்டிலிருந்து தென்கிழக்கே 15 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு திருக்கண்டீசுவரர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார்.

வட்டமான வளமையால் சூழப்பெற்றதால் இவ்வூர்க்குச் சக்கரமநல்லூர் என்றும், பாற்கடலில் தோன்றிய நஞ்சைத் தமது கண்டத்தில் அடக்கி, அனைத்து உயிர்களையும் காப்பாற்றிய இறைவர் திருக்கண்டீசுவரர் என்றும் பெயர். கல்வெட்டுக்கள் 20 உள்ளன. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் இக்கோவிலுக்கு அருகில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வாலீசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் திரிபுரசுந்தரியும் காட்சியளிக்கின்றனர்.

வாலி வணங்கியதால் இறைவர்க்கு வாலீசுவரர் என்று பெயர். இவ்வூரில் நாகர் வழிபாடு முக்கியமானதாக நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் சுந்தரராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

6. திமிரி

ஆற்காட்டிலிருந்து தெற்கே 16 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதஈஸ்வரர். அருகில் சுப்பிரமணியர் திருக்கோவில் உள்ளது.

7. கலவை

திமிரியிலிருந்து தென்கிழக்கே 25 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்காளீஸ்வரர். அருகில் கரிவரதராஜப் பெருமாள் கோவில் உள்ளது.

8. வளையத்தூர்

திமிரியிலிருந்து தென்கிழக்கே 16 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வளையநாதர்.


9. தாமரப்பாக்கம்

திமிரியிலிருந்து தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திரிபுரசுந்தரேசுவரர்.

10. வாழைப்பந்தல்

கலவையிலிருந்து தெற்கே 25 கி.மீ. செய்யாற்றின் வடகரையில் இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரத்துடன் மூலவர் பக்தவச்சல ஈஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் தர்மசம்வர்த்தினி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். இரு கால பூஜை. பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. அருகில் கஜேந்திர வரதராஜப் பெருமாள் கோவில் உள்ளது.

வேலூர் வட்டம்
(வேலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. வேலூர்

ஆற்காட்டிலிருந்து மேற்கே 33 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் நான்கு கோயில்கள் உள்ளன. வேலூர் நகரிலுள்ள வேலூர்க் கோட்டையின் ஒரு பகுதியில் 7 நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங் களுடன் மூலவர் அருள்மிகு ஜலகண்டேசு வரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி. உள்பிராகாரத்தில் வலம்புரி விநாயகர், நடராஜர், சண்முகர், துர்க்கை முதலிய சன்னிதிகள் அமைந்துள்ளன. திருமண மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் நுண்ணிய வேலைப்பாடுகள் மிக்கவை. இக்கோவில் விஜயநகர் மன்னர் வேங்கடபதி ஆட்சிக் காலத்தில் கட்டப்பெற்றதாக கல்வெட்டில் கூறப்படுகிறது. நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரில் குயப்பேட்டை என்னுமிடத்தில் 5 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலும், சிவசுப்பிரமணியசுவாமி கோவிலும், சோலாபுரி அம்மன் கோவிலும், வேலூர் லாங்கு பஜாரில் வேம்புலியம்மன் கோவிலும் உள்ளன. மேலும் இவ்வூர்க்கு வடபுறத்திலுள்ள தோட்டப்பாளையம் என்னு மிடத்தில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் அருள்மிகு அபயாம்பிகை உடனுறை தாரகேசுவரர் திருகோவிலும் உள்ளது.

2. விரிஞ்சிபுரம்

வேலூர்க்கு மேற்கே 12 கி.மீ. திருவிரிஞ்சிபுரம், கரபுரம். பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 10-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 152 அடிஉயரம், 7 நிலை இராஜகோபுரம், 5 பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வழித்துணைநாதர். அம்மன் மரகதவல்லியம்மன். தலவிருட்சம் பனை மரம். தீர்த்தம் சிம்மதீர்த்தம். உள்பிராகாரத்தில் ஏரம்பகணபதி, சுப்பிரமணியர், சந்திர மௌலீஸ்வரர், சப்தமாதர்கள், லட்சுமி, சரஸ்வதி, துர்க்கை, பைரவர், நவக்கிரகம்



முதலிய சன்னிதிகள் உள்ளன.

விரிஞ்சன் வழிபட்டதால் இத்தலத் திற்கு விரிஞ்சிபுரம் என்று பெயர். தனபாலன் என்னும் மிளகு வணிகம் செய்யும் பக்தனுக்கு வழித்துணையாக சென்றதால் இறைவனுக்கு வழித்துணைநாதர் என்றும் பெயர். சிறுபாலகன் செய்த வழிபாட்டை ஏற்க இறைவன் முடிசாய்த்துக்காட்சிக் கொடுத்த தலம். இன்றும் இறைவன் சாய்ந்த நிலையில் காட்சியளிக்கிறார்.

பிரம்மன், பார்வதி, திருமால், கரன் முதலியோர் வழிபட்டுக் காட்சிக் கண்ட தலம். இக்கோவில் பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், தலபுராணம் பாடிய சைவஎல்லப்ப நாவலர், அப்பய்ய தீட்சிதர் ஆகியோர்களால் பாடப்பெற்றத் தலம்.

சிம்மக்குளத்தில் கார்த்திகை கடைஞாயிறு இரவு இக்குளத்தில் குளித்து ஈரத்துணியுடன் கோவிலில் படுத்துறங்கி இத்தல இறைவனை வணங்கினால் குழந்தைபேறு கிட்டும் என்று இவ்வூரைச் சுற்றியுள்ளவர்கள் அதன்படி செய்கிறார்கள்.

இத்தலத்தைப் பற்றிய 18 கல்வெட்டுக்கள் உள்ளன. ஒரு கல்வெட்டில் திருமணத்தில் வரதட்சனை வாங்கவோ, கொடுக்கவோ கூடாதென்பதையும், அவ்வாறு செய்பவர்கள் மன்னரால் தண்டிக்கப் படுவதோடு, சாதியிலிருந்து அவர்கள் விலக்கப்படுவார் எனக்

குறிக்கப்படுகிறது.

நாள்தோறும் 4 கால பூஜை நடைபெறுகிறது. திருக்கார்த்திகை கடைஞாயிறு அன்றும், பங்குனி மாதத்திலும் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் கீழ்கண்ட கோவில்கள் சுற்றி அமைந் துள்ளன.

கோவிலுக்கு வடகிழக்கில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். சாவித்திரன் என்ற ஆர்யாவர்த்தனவாசிக்கு பெருமான் கைலைக் காட்சியளித்த காரணமாய் அமைந்துள்ள தலம்.

பெற்பனேசுவரர் கோவில் :

பாலாற்றின் வடகரையில் உள்ளது. மூலவர் பொற்பனேசுவரர். பார்வதிதேவி தம் கருநிறம் நீங்க ஈஸ்வரனைத் தியானித்துப் பூஜை செய்த தலம்.

மேலும் அலையேற்றும் விநாயகர் கோவில், முத்துப்பிள்ளையார் கோவில், சாவடிப் பிள்ளையார் கோவில், மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில், அகோர வீரப்பத்திரர் கோவில், அங்காளம்மன் முத்தாலம்மன், பொன்னம்மன் ஆகிய எல்லைக் கோவில்களும் உள்ளன.

3. பள்ளிக்கொண்டா

வேலூர்க்கு மேற்கே 22 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர். அருகில் அரங்கநாதர் திருக்கோவில் உள்ளது.

4. சேண்பாக்கம்

வேலூர்க்கு வடக்கே 2 கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமசுந்தரேசுவரர் சுயம்புலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். இத்தலத்திலுள்ள செல்வவிநாயகர் மிகப் பிரசித்தி பெற்ற விநாயகராவார். இத்தலம் சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது.

5. அன்பூண்டி

வேலூர்க்கு மேற்கே 7 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருத்தலீஸ்வரர்.

6. மேல்மணவூர்

வேலூர்க்கு மேற்கே 3 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

7. மூஞ்சூர்பட்டு

வேலூர்க்கு தெற்கே 10 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

8. வேப்பம்பட்டு

வேலூர்க்கு தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருபாட்ஷிஈஸ்வரர்.

9. அகரம்

ஒடுகத்தூர்க்கு வடக்கே 7 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர் கிழக்கு நோக்கியும், அம்மன் அன்னபூரணி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர்.

10. ஒடுக்கத்தூர்


பள்ளிக்கொண்டாவிலிருந்து தெற்கே 21 கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சப்தரிஷீசுவரர். அம்மன் அபிதகுஜாம்பாள். தலவிருட்சம் வில்வம்.

11. கம்மசமுத்திரம்

வேலூர்க்கு தெற்கே 23 கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருப்பாட்க்ஷிஈஸ்வரர்.

குடியாத்தம் வட்டம்

(வேலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருவலம்

எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்ச டைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல் லமே.

-- திருஞானசம்பந்தர்

காட்பாடியிலிருந்து கிழக்கே 12 கி.மீ. திருவல்லம். பெண்ணையாற்றின் மேற்குக் கரையில் இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு வல்லநாதர். அம்மன் வல்லாம்பிகை. தீர்த்தம் கௌரி தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் வலம்புரி விநாயகர், சுப்பிரமணியர், சகஸ்ரலிங்கம், மீனாட்சிசுந்தரர், வயிரவர், சூரியன், பாதாளீசுவரர் முதலிய சன்னிதிகளும், கிழக்கு நோக்கிய மிகப்பெரிய நந்தியும் இத்தலத்தில் காட்சியளிக்கின்றனர்.

கோள்கள் ஒன்பதும், வல்லாளன் என்னும் மன்னனும் வழிபட்ட தலம். தீக்காலி என்னும் அவுணன் வழிபட்டதால் இத்தலத்திற்கு தீக்காலிவல்லம் என்னும் பெயர் பெற்று வழங்கிவருகிறது. பெரிய புராணத்திலும் தீக்காலி வல்லம் என்றே குறிக்கிறது. வில்வவனத்தில் தோன்றிய காரணத்தால் இத்தலப் பெருமானுக்கு வில்வநாதீசுவரர் என்றும் பெயர்.

கௌரி, திருமால், சனகமாமுனிவர், நவக்கிரகங்கள், விநாயகர், வல்லாளமா மன்னன் முதலியோர் வழிபட்ட தலம்.

தெய்வீகதன்மைவாய்ந்த நெல்லிக் கனியை ஔவையார் இத்தலத்தில் பெற்றார். அற்புத மாங்கனியை விநாயகப் பெருமான் சிவபெருமானைச் சுற்றி வந்து இத்தலத்தில் பெற்ற சிறப்புடைய தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இத்தலம் 10 வது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் இத்தல முருகப்பெருமானைப் போற்றி திருப்புகழ் அருளியுள்ள தலம்.

இக்கோவிலில் கல்வெட்டுக்கள் 16 உள்ளன. கல்வெட்டுக்களில் இறைவர் தீக்காலிப் பெருமானடிகள், திருவல்ல முடையார், திருவல்லமுடைய நாயனார், தீக்காலி வல்லமுடைய பரமேசுவரர் என்னும் பெயர்களில் குறிக்கின்றன.

நான்கு கால பூஜை நடைபெறுகின்றன மாசி மகத்தன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதாஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

2. குடியாத்தம்

காட்பாடியிலிருந்து 25 கி.மீ. குடியேற்றம். இவ்வூரின் நெல்லுப்பேட்டை யில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கருப்புலீசுவரர். அம்மன் சிவகாமசுந்தரி.

சிவநேசர் என்னும் வணிகனுக்கு இறைவர் மிளகுப் பொதிகளுக்குக் காவலாக வந்ததால் இறைவனுக்கு கரிப்பொதிக் காவலீசர் என்னும் பெயர் பெற்றார். காலப்போக்கில் கருப்புலீசுவரர் எனத் திரிபு எய்திற்று. வடமொழியில் பாலசார்த்துல்லீசர் என்பதாகும். மேலும் இவ்வூரில் கண்டலநதி வளைந்து ஓடுகிறது. வளைந்து ஓடும் ஆற்றூர் கோடியாத்தூர் என்பதை காலப் போக்கில் குடியாத்தூர் என்று பெயர் பெற்றதாக கூறுகின்றனர்.

நாள்தோறும் இராண்டு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் கங்கையம்மன் திருக்கோவிலும் உள்ளது.

3. பரதராமி

குடியாத்தத்திலிருந்து வடகிழக்கே 18 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

4. மலையப்பட்டு

பரதராமியிலிருந்து தென்கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் தருமலிங்கேஸ்வரர்.

5. சேர்காடு

திருவலத்திலிருந்து வடமேற்கே 4

கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப் பளவில் மூலவர் நாகேஸ்வரர்.

6. குகைநல்லூர்

திருவலத்திலிருந்து வடக்கே 2 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீசுவரர். காணும் பொங்கலன்று திருவல்லம் வில்வநாதர் இக்கோவிலுக்கு எழுந்தருளி காட்சியளிக்கிறார்.

7. காட்பாடி

வேலூர்க்கு வடக்கே 5 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் கைலாசநாதர்.

8. காங்குப்பம்

குடியாத்தத்திலிருந்து கிழக்கே 11 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

9. வேப்பூர்

பசுமாத்தூர்க்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் வாகீஸ்வரர்.

10. பசுமாத்தூர்

குடியாத்தத்திலிருந்து தென்கிழக்கே 7 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீசுவரர்.

11. காவனூர்

குடியாத்தத்திலிருந்து கிழக்கே 12 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

12. கவசம்பட்டு

விரிஞ்சிபுரத்திலிருந்து வடமேற்கில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டீசுவரர். அம்மன் அகிலாண்டேசுவரி.

13. சேனூர்

காட்பாடியிலிருந்து தென்மேற்கே 4 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசுவரர்.

14. தண்டலம்கிருஷ்ணாபுரம்

காட்பாடியிலிருந்து தென்மேற்கே 4 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

15. கழிஞ்சூர்

காட்பாடிக்கு வடக்கே 2 கி.மீ. இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணமுத்தீஸ்வரர்.

16. காங்கேயநல்லூர்

காட்பாடியிலிருந்து தென்கிழக்கில் 4 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காங்கேசுவரர். அம்மன் பாலகுஜாம்பாள். தீர்த்தம் பாலாறு. தலவிருட்சம் பலா.

முருகப்பெருமானுக்கு காங்கேயன் என்னும் பெயர். முருகப்பெருமானால் வழிபடப் பெற்றதால் இத்தல இறைவனுக்கு காங்கேசப் பெருமான் என்றும், ஊர் பெயர் காங்கேயநல்லூர் என்றும் பெயர் பெற்றது.

இக்கோவிலில் நான்கு கல்வெட்டுக் கள் உள்ளன. திரிபுவனச்சக்ரவர்த்தி இராசராசதேவர், இராசநாராயண சம்புவராயர் காலத்தைச் சேர்ந்தது. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. பங்குனி உத்திரம் அன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் சுந்தரவரதராசப் பெருமாள் கோவிலும், சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலும் உள்ளன.

17. பிரம்மபுரம்


காட்பாடிக்கு கிழக்கே 3 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 36 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

18. அம்முண்டி

திருவலத்திலிருந்து தென்மேற்கே 4 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அர்த்தநாரீசுவரர்.

வாணியம்பாடி வட்டம்

(வேலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. வாணியம்பாடி

வேலூர்க்கு தென்மேற்கே 67 கி.மீ. பாலாற்றங்கரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அதிதீசுவரர். அம்மன் பிரமநாயகி. தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், துர்க்கை, கருமாரியம்மன், சப்தமாதர், வயிரவர், நால்வர், நவக்கிரகங்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வாணி சிவபெருமானைப் பாடியதால் சிவபெருமான் விருந்தினராக (அதிதியாக) வந்து விருந்து கண்டதால் இத்தலத்திற்கு வாணியம்பாடி என்று பெயர் பெற்றதாக தலபுராணம் கூறுகிறது.

கல்வெட்டுக்களில் பெரும்பாணப்பாடி வணிகன்பாடி என்றும், நரசிம்ம சதுர்வேதி மங்கலம் என்றும், முதலாம் குலோத்துங்கனின் சாசனப்படி சம்புகளூர் நாட்டு மதுராந்தக சதுர்வேதிமங்கல பெரும்பாணப்பாடி என்றும் குறிப்பிடப்படுகிறது. பார்த்திபவேந்திர வர்மன் காலத்து கல்வெட்டும் ஒன்று உள்ளது. நிலதானம் வழங்கியதைக் குறிக்கிறது.

நாள்தோறும் இரு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் பெரியபேட்டை என்னுமிடத்தில் அழகுப் பெருமான் கோவிலும், நகரத்தின் நடுமையத்தில் பொன்னியம்ன் கோவிலும் உள்ளன.

2. ஆம்பூர்

வாணியம்பாடிக்கு வடக்கே 18 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகரத்தின சுவாமி. அம்மன் அபயவல்லி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் நாகதீர்த்தம் உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், மரகதவல்லி உடனுறை மார்க்கபந்தீசுவரர், ஞானாம்பிகை உடனுறை காளத்திநாதர், வயிரவர், நடராஜர், 63 நாயன்மார்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இக்கோவில் கிழக்கு நோக்கியவாறு சற்றுப் பள்ளமான இடத்தில் அமைந்துள்ளதால் 7 படிகள் இறங்கிக் கடந்தே உள்செல்லல் வேண்டும்.

ஒரு பசு, புற்று ஒன்றில் பால் சொரிவதைக் கண்டு அகழ்ந்து பார்த்தபோது சிவலிங்கம் காணப்பட்டது. பாம்புப்புற்றில் இப்பெருமான் இருந்ததால் இப்பெருமானுக்கு நாகரத்தின சுவாமி என்று பெயர் பெற்றார்.

இக்கோவிலில் 3 கல்வெட்டுக்கள் உள்ளன. விசயநகரமன்னர் சாளுவ நரசிங்க தேவர் காலத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டும், சோழர் திரிபுவனச் சந்கரவர்த்தி குலோத்துங்கச் சோழதேவர் இக்கோவிலுக்கு நன்கொடை அளித்ததைப் பற்றி ஒருகல்வெட்டும், ஒய்சாள வீரவல்லாள தேவர் நிலம் அளித்தது பற்றியும் குறிப்பிடுகின்றன.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. ஐப்பசி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் சாமுண்டீசுவரி கோவிலும், மேல்கிருஷ்ணாபுரத்தில் காமாட்சியம்மன் கோவிலும், சீனிவாசப் பெருமாள் கோவிலும் உள்ளன.

3. அகரம்சேரி

ஆம்பூர்க்கு வடகிழக்கே 24 கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பார்சீசுவரர்.

4. வளையம்பட்டு


வாணியம்பாடிக்கு வடகிழக்கே 3 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கூத்தாண்டேசுவரர்.

5. வடக்குப்பட்டு

வாணியம்பாடிக்கு மேற்கே 4 கி.மீ. பாலாற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சென்ராயசுவாமி.

திருப்பத்தூர் வட்டம்

(வேலூர் மாவட்டம்)



1. திருப்பத்தூர்

வேலூர்க்கு தென்மேற்கே 87 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு பரமேசுவரர் என்கிற பிரம்மேசுவரர் இக்கோவிலில் உள் சன்னிதியில் சோமநாதர், இராமநாதர், காசிவிசுவநாதர் முதலிய சன்னிதிகள் உள்ளன. இக்கோவிலில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. ஒன்றில் விசயநகர மன்னர் வீரதேவராயர் மகன் வீரவிசய பூபதிராயர் கல்வெட்டு நிகரிலிச் சோழ மண்டலத்தின் உயில்நாடுமாதவ சதுர்வேதிமங்கலம் என்கிற திருப்பத்தூர் பிரம்மேசுவரமுடைய நாயனார் கோவிலுக்கு நிலக்கொடை வழங்கியதைக் கூறுகிறது.

ஒரு கால பூஜை நடைபெறுகிறது. சிவராத்திரியன்று உற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் காமாட்சியம்மன் உடனுறை ஏகாம்பரேசுவரர் திருக்கோவிலும், சுந்தரவீர ஆஞ்சநேயர் திருக்கோவிலும், தருமராசர் கோவிலும், வரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளன.

2. வேலகால்நத்தம்

திருப்பத்தூர்க்கு வடமேற்கே 18 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நந்திராஜர்.

3. அம்மன்கோவில்

திருப்பத்தூர்க்கு வடமேற்கே 7 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுவன்னீசுவரர்.

4. சந்திராபுரம்

திருப்பத்தூர்க்கு மேற்கே 10 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீசுவரர். அருகில் சென்ராய சுவாமி திருக்கோவிலும் உள்ளது.

5. கொரட்டி

திருப்பத்தூர்க்கு தெற்கே 7 கி.மீ. பாம்பாற்றின் மேற்குக் கரைப்பகுதியில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கிய இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காளத்தீசுவரர். காளமாகிய பாம்பும், அத்தியாகிய யானையும் பூசித்த தலம். ஒரு கால பூஜை. பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

6. நத்தம்

திருப்பத்தூரிலிருந்து தென்மேற்கே 17 கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுரகரேசுவரர். அம்மன் கன்னிகாசௌந்தரி. இரண்டு கால பூஜை. பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

சத்தமேகம்

சம்வர்த்தம், ஆவர்த்தம், துரோணம், புட்கலாவருத்தம், காளமுகி, சங்காரித்தம், நீலவருணம் என்னும் ஏழு மேகங்கள்.

சத்தரிஷிகள்

இருடிகள் ஏழுவர்: அகத்தியர், புலத்தியன், அங்கிரசு, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன்.

சத்தவிடங்கத்தலம்

தியாகராசர் கோவில் கொண்டுள்ள ஆரூர், நாகை, நள்ளாறு, மறைக்காடு, காறாயில், வாய்மூர், கோளிலி என்னும் ஏழு தலங்கள்.


சத்தாவத்தை

சீவான்மாவுக்கு நிகழக்கூடிய அறியாமை, ஆவரணம், விட்சேபம், பரோட்சஞானம், அபரோட்ச ஞானம், சோகநிவர்த்தி, தடையற்ற ஆனந்தம் என்னும் ஏழுவகை நிலைகள்.

சதுர்வேதம்

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என்னும் நான்கு வேதங்கள்.

ஊத்தங்கரை வட்டம்
(தருமபுரி மாவட்டம்)



ஊத்தங்கரை வட்டம்

1. ஊத்தங்கரை

அரூர்க்கு வடக்கே 27கி.மீ. இக்கோவில் 83 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

2. குன்னத்தூர்

ஊத்தங்கரைக்கு வடக்கே 16கி.மீ. பாம்பாற்றின் தென்கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருபாட்சிநாதர்.

3. சூலக்கரை

ஊத்தங்கரைக்கு மேற்கே 21கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதேஸ்வரர்.

4. கலவை

ஊத்தங்கரைக்கு தென்மேற்கே 14கி.மீ. பெண்ணையாற்றின் வடபகுதியில் இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஐராவதேஸ்வரர். அருகில் சூலக்கரைசுவாமி.

5. காட்டேரி

ஊத்தங்கரைக்கு தெற்கே 12கி.மீ. பெண்ணையாற்றின் வடபகுதியில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அனுமந்தீஸ்வரர்.

சிவலிங்க பாக அமைப்பு

சிவலிங்கமானது, மூன்று கூறுகளை உடையது.

அடிப்பாகம்: நாற்கோண வடிவமாய் நிலத்திற்குத் தலைவனான படைப்புக் கடவுளாய் பிரமபாகத்தை உணர்த்துவ தாகும்.

மத்தியபாகம் : எட்டுபட்டைகளை யுடைய எண்கோண வடிவமாய் வாமை, சேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவீகரணி, பலப்பீரதமனி, சர்வபூதத மணி என்னும் திருமாலின் எட்டு சக்திகளும் அஃனோடு பொருந்த இருக்கும் ஆவுடை எனப்படும்.


ருத்ரபாகம் :(பானம்) மேலுள்ள பாகம் நெருப்பிற்குத் தலைவனும் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய முத்தொழிலுக்குத் தலைவனான சிவபாகம் ஆகும். இதனாலேயே இலிங்கோத்பவ மூர்த்தியின் திருமேனியினைக் காட்டும் போது பாணத்திலேயே காட்டப்படு கின்றது.

பூமிக்கு அதிபதியான பிரமபாகம், பூமிக்குள் மறைந்து ஒடுங்கி நிற்கும், நீருக்கு அதிபதியான திருமாலின் பாகம் அபிஷேக நீரைத் தாங்கி விரிந்து நிற்கும். நெருப்புக்கு அதிபதியான சிவபாகம் மேலோங்கி சோதிபோல் ஒளியுடனி ருக்கும்.

உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும், பிண்டங்களும், பூமி, ஆகாயம், நட்சத்திரம், மரங்களும் விதைகளும், கனிகலும் பலவும் சிவலிங்கத்தின் மேற்பாகம் போல அமைந்திருப்பதாகும்.

திருச்சிற்றம்பலம்

கிருஷ்ணகிரி வட்டம்
(தருமபுரி மாவட்டம்)



1. கிருஷ்ணகிரி

தருமபுரிக்கு வடக்கே 46கி.மீ. பெண்ணையாற்றின் வடபகுதியில் இக்கோவில் 92 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரமௌலீஸ்வரர். அம்மன் பார்வதியம்மை. அருகில் சோமேஸ்வரர், சந்திரசேகரர் திருக்கோவிலும் இவ்வூரில் உள்ளது.

2. காவேரிப்பட்டிணம்

கிருஷ்ணகிரிக்கு தெற்கே 12கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரர். அருகில் மார்க்கசகாயர் மற்றும் மத்ய பரமேஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

3. சிகரமகனபள்ளி

கிருஷ்ணகிரிக்கு வடக்கே 21கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரர்.

4. மணவாரணபள்ளி

கிருஷ்ணகிரிக்கு வடக்கே 28கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர். அருகில் மண்ணீஸ் வரர்.

5. நாரல்பள்ளி

கிருஷ்ணகிரிக்கு வடக்கே 14கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லேஸ்வரர். அருகில் 15செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சேஷாசலஸ்வரர்.

6. வலங்காமுடி

காவேரிப்பட்டிணத்திலிருந்து தென்கிழக்கே 11கி.மீ. பெண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பைரவேஸ்வரர்.

7. பெண்ணேசுவரமடம்

காவேரிப்பட்டிணத்திற்கு தென்கிழக்கே 4கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-33 ஏக்கர் நிலப்பரப்பளவில் 7 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பெண்ணேசுவரர். தலவிருட்சம் பனைமரம்.

சைவ சமயம் தழைக்க மூன்றாம் குலோத்துங்கசோழன் பலசைவ மடங்களை ஏற்படுத்தினான் அவற்றில் இத்தலம் பெண்ணெசுவரமடம் ஒன்றாகும். இம்மடத்தின் பெயரே இவ்வூருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

கல்வெட்டுக்கள் மூன்றாம் குலோத்து ங்கன், போசாள மன்னன் வீரராமநாதனின் கல்வெட்டுக்கள் உள்ளன.

8. பரூர்

காவேரிப்பட்டிணத்திலிருந்து தென்கிழக்கே 15கி.மீ. பெண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.


9. ஐங்கலகடைராம்பட்டி

காவேரிப்பட்டிணத்திலிருந்து தென்கிழக்கே 21கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசவேஸ்வரர்.

10. புளியம்பட்டி

காவேரிப்பட்டிணத்திலிருந்து தெற்கே 20கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர்.

ஓசூர் வட்டம்
(தருமபுரி மாவட்டம்)



1. ஓசூர்

தருமபுரியிலிருந்து வடமேற்கே 84கி.மீ. செண்பகவனம். நகரின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள மலையின் மீது தென்மேற்குப் புறமுள்ள 200 படிகளைக் கடந்து மலைமேல் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சந்திரசூடேசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் மரகதாம்பிகை தனி சன்னிதியிலும் காட்சியளிக்கின்றனர். தலவிருட்சம் செண்பகமாம். தீர்த்தம் பிரம்ம, பர்வத, மரகத, சாம்பவ, மச்ச, இராம, பாண்டவ, சிவகங்கை, அனும, ருத்ர, விஷ்ணு என பதினொரு தீர்த்தங்கள். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், கஜலஷ்மி, 63 நாயன்மார்கள், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

கோவில் அமைந்துள்ள மலைக்கு ஐந்து பெயர்கள் உள்ளன. சிவபெருமான் நந்தி வடிவாக அமைந்ததால் விருஷபாத்ரி என்றும், பரமசிவன் உடும்பு வடிவில் வந்து தங்கியதால் கௌதேயாத்ரி என்றும், பார்வதி மரகதவண்ணம் பெற்றதால் மரகதாத்ரி என்றும், இரு முனிவர்கள் சாபவிமோசனம் பெற்றதால் பத்ராத்ரி என்றும் பெயர். செண்பக மரங்கள் நிறைந்திருப்பதால் செம்பகாத்ரி என்றும் பெயர்.

பிரம்மாண்ட புராணத்தின் பதினான் காவது அத்தியாயத்தில் இத்தலத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களில் கங்கர், சோழர், போசளர், சாளுக்கியர், விசயநகர் ஆகிய வம்சங்களைச் சேர்ந்த மன்னர்கள் பலர் இக்கோவிலைப் பேணியுள்ளனர்.

தினமும் நான்கு கால பூஜை. பங்குனி மாதப் பௌர்ணமியின்போது உற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் கோட்டையில் மாரியம்மன் கோவிலும், காசிவிஸ்வநாதர், நாகேஸ்வரர், சங்கரநாராயணர், காமதேஸ்வரர், சோமேஸ்வரர், பஞ்சலிங்கேஸ்வரர் முதலிய திருக்கோவில் களும் இவ்வூரில் அமைந்துள்ளன.

2. பாகலூர்

ஓசூர்க்கு வடக்கே 11 கி.மீ. பொண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரசன்ன சூடநாதர்.

3. நரைகனபுரம்

பாகலூர்க்கு கிழக்கே 8 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லேஸ்வரர் அருகில் பேரிகையில் பசவேஸ்வரர்.

4. ஆதிமுகம்

ஓசூர்க்கு கிழக்கே 22 கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதேசுவரர்.

5. சுகுவாடி

ஓசூர்க்கு வடமேற்கே 6 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமாலீஸ்வரர்.

6. ஆவலபள்ளி

ஓசூர்க்கு வடக்கே 5 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

7. கொத்தகொண்டபள்ளி


ஓசூர்க்கு மேற்கே 5 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லேஸ்வரர்.

8. சூலகிரி

ஓசூர்க்கு தென்கிழக்கே 16 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

தென்கனிகோட்டை வட்டம்

(தருமபுரி மாவட்டம்)



1. கமுகொண்டபள்ளி

தென்கனிகோட்டைக்கு வடக்கே 17கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் காசிவிஸ்வநாதர்.

2. கீழமங்கலம்

தென்கனிகோட்டைக்கு வடகிழக்கே 12கி.மீ. சின்னாற்றின் வடபகுதியில் இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருப்பாட்சிநாதர். அருகில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

3. இராயகோட்டை

தென்கனிகோட்டைக்கு கிழக்கே 30கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

4. தேவகானபள்ளி

தளிக்கு வடகிழக்கே 6கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசவேஸ்வரர்.

5. கும்மனூர்

தென்கனிகோட்டைக்கு கிழக்கே 24கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசவேஸ்வரர்.

6. தளி

தென்கனிகோட்டைக்கு மேற்கே 18கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

7. குமுடுகொட்டா

தென்கனிகோட்டைக்கு தெற்கே 10கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் மல்லிகார்சுனேஸ்வரர்.

8. சாலைவரம்

தென்கனிகோட்டைக்கு தெற்கே 13கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.


9. அஞ்செட்டி

தென்கனிகோட்டைக்கு தெற்கே 23கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சர்வலிங்கேஸ்வரர்.

விபூதி தரிக்கும் இடங்கள்


1. சிரசு நடுவில்
2. நெற்றி
3. மார்பு
4. தொப்புளுக்கு சற்றுமேலே
5. இடது புஜம்
6. வலது புஜம்
7. இடது கை நடுவில்
8. வலது கை நடுவில்
9. இடது கை மணிக்கட்டு
10. வலது கை மணிக்கட்டு
11. இடது இடுப்பு
12. வலது இடுப்பு
13. இடது கால் நடுவில்
14. வலது கால் நடுவில்
15. முதுக்குக் கீழே
16. கண்டத்தைச் சுற்றி
17. வலது காதில் ஒரு பொட்டு
18. இடது காதில் ஒரு பொட்டு

பாலக்கோடு வட்டம்
(தருமபுரி மாவட்டம்)



பென்னகரம் வட்டம்

(தருமபுரி மாவட்டம்)



1. பாலக்கோடு

தருமபுரிக்கு வடமேற்கே 12 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில். பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பரமேஸ்வரர். அம்மன் பார்வதி. உள்பிராகாரத்தில் விநாயகர், தண்டாயுத பாணி, சோமேஸ்வரர், காலபைரவர், நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன. இரண்டு கால பூஜை. சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

2. காரிமங்கலம்

பாலக்கோடுக்கு கிழக்கே 15 கி.மீ. இக்கோவில் 92 செண்ட் நிலப்பரப்பளவில் 30அடி உயர 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் 6அடி உயரம் கொண்ட சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆரண்யாஸ்வரர். அம்மன் அபிதகுஜாம்பாள். உள்பிராகாரத்தில் ஆறுமுகர் சன்னிதி கடையெழுவள்ளல் ஒருவரான காரியின் பெயரால் இவ்வூர் வழங்குகிறது. இரண்டு கால பூஜை. பங்குனி உத்திரத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

3. ஆதிமுத்து

மாரண்டஹள்ளிக்கு வடமேற்கே 4கி.மீ. சின்னாற்றின் மேற்குகரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவாபுரீஸ்வரர்.

4. தண்டுகரமஹல்லி

பாலக்கோடுக்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

5. எலுமிச்சம்பட்டி

பாலக்கோடுக்கு வடகிழக்கே 9 கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் சோமேஸ்வரர்.

6. திருமழவாடி

பாலக்கோடுக்கு மேற்கே 12 கி.மீ. ஞானப்பட்டி. சின்னாற்றின் மேற்குப் பகுதியில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லேஸ்வரர்.

7. புலிக்கால்

பாலக்கோடுக்கு கிழக்கே 6. கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

8. பூமான்தஹல்லி


பாலக்கோடுக்கு தென்கிழக்கே 16கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பீமேஸ்வரர். அருகில் பைரவேஸ் வரர் திருக்கோவிலும் உள்ளது.

பென்னகரம் வட்டம்

1. கூத்தபாடி

பென்னகரத்திலிருந்து தென்மேற்கே 2கி.மீ. ஒக்கனேக்கல். இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில், ஒரு பிராகாரத்துடன் மூலவர் தேசனாதீஸ்வரர். அம்மன் திரிபுரசுந்தரி. இத்தல மூலவர் அகத்திய முனிவரால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற லிங்கம். இரண்டு கால பூஜை. ஆடி பதினெட்டாம் பெருக்கு உற்சவம் நடைபெறுகிறது. அருகில் உள்ள ஆலாபுரத்தில் சென்னகேஸ்வரர் திருக்கோவி லும் உள்ளது.

தருமபுரி வட்டம்
(தருமபுரி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. தருமபுரி

சேலத்திலிருந்து வடக்கே 66கி.மீ. தகடூர். இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரர். அம்மன் காமாட்சி யம்மன். இக்கோவில் கோட்டைக் கோவில் என்றும் கூறுவர். தலவிருட்சம் குடவேலமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், ராஜதுர்காம்பிகை, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. ராஜதுர்காம்பிகை நான்கு திருக்கரங்களுடன் மகிஷாசூரனைக் கொல்லும் தோற்றத்தில் காட்சியளிக்கிறாள். இங்குள்ள முருகன் ஆறுமுகங்களுடன், மயில் மீது அமர்ந்து கொண்டு வலப்பாதம் நாகத்தின் மீது வைத்துக்கொண்டு காட்சியளிக்கிறார்.

ஸ்ரீராமர், துர்வாசர், அர்ச்சுனன் முதலியோர் வழிபட்ட தலம்.

ஔவைக்கு நெல்லிக்கனி தந்த மன்னன் அதியமான் அரசாட்சிபுரிந்த தலம்.

இத்தலப் பெருமானை யோகநரசிம்மர், ஸ்ரீராமர், ஹயக்கிரீவர், கிருஷ்ணன் என திருமாலின் நான்கு அவதாரங்களாலும் வழிபடப் பெற்ற மூர்த்தியாவார்.

ஔவையார் போற்றிப் பாடப்பெற்ற இத்தலத்தை சுந்தரமூர்த்தி சுவாமிகளும், தனது தேவாரப் பதிகத்தில் திருநாட்டுத் தொகையில் வைப்புத்தலமாகப் போற்றிப் பாடியுள்ளார்.

தினமும் நான்கு கால பூஜை. ஐப்பசி மாதத்தில் அன்னாபிஷேகம் நடைபெறு கிறது. மேலும் இவ்வூரில் மாநகரத்தின் கடைவீதியில் திருக்கோவில் கொண்டி ருக்கும் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஹரிஹரநாதர். அம்மன் சௌந்தரநாயகி. சுவாமி, அம்மன் மூர்த்தங்கள்யாவும் பச்சைக்கல்லாலானது. உள்பிராகாரத்தில் விநாயகர், பாலதண்டாயுதபாணி, நவக் கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. இங்குள்ள கல்வெட்டுக்களில் இறைவர் இராஜராஜேஸ்வர முடையார் என்றே பெயர் குறிப்பிடப்படுகிறது.

2. கடகத்தூர்

தருமபுரிக்கு வடமேற்கே 5 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

3. ஆண்டிஹல்லி

தருமபுரிக்கு வடகிழக்கே 12 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதிமூலநாதர்.

4. கிருஷ்ணாபுரம்

தருமபுரிக்கு வடகிழக்கே 14 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். அருகில் ஆதிமூலநாதர்.

5. அதகபாடி

தருமபுரிக்கு மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தடுத்தாண்டேஸ்வரர்.

6. அக்கமரணஹல்லி

தருமபுரிக்கு கிழக்கே 9 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதிமூலநாதர்.


7. அதியமான்கோட்டை

தருமபுரிக்கு தெற்கே 9 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

8. சிவடி

தருமபுரிக்கு தெற்கே 14 கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

அரூர் வட்டம்
(தருமபுரி மாவட்டம்)



1. அரூர்

தருமபுரிக்கு கிழக்கே 40 கி.மீ. வன்னியாற்றின் கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வன்னீஸ்வரர். அருகில் வாலீஸ்வரர்.

2. கம்பைநல்லூர்

அரூர்க்கு வடமேற்கே 25 கி.மீ. பொண்ணையாற்றின் கரையில் இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தேசிகநாதர். இக்கோவில்களில் 9 கல்வெட்டுக்கள் விஜயநகர மன்னர்கள் காலத்தை சேர்ந்தது.

3. தீர்த்தமலை

அரூர்க்கு வடகிழக்கே 14 கி.மீ. தீர்த்தகிரி இக்கோவில் கடல் மட்டத்திலிருந்து 3220 அடி உயர மலையின் மீது 1-07 ஏக்கர் நிலப்பரப்பளவில் சுயம்புலிங்கமாக அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர். அம்மன் சௌந்தராம்பிகை.

தீர்த்தங்கள் இராம, அகத்திய, குமார, கௌரி மற்றும் அக்கினி என ஐந்து தீர்த்தங்கள் கொண்டதால் இத்தலத்திற்கு தீர்த்தமலை என்று பெயர்.

மலையடிவாரத்தில் சுமார் 6-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோவில் உள்ளது. உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், அனுமன், அஷ்டபுஜ துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

இராமர் பிரம்மஹத்தி தோஷம் நீங்க வழிபட்ட தலம். மலைமேல் உள்ள முருகப்பெருமான் வடக்கு நோக்கி தண்டாயுதபாணியாக எழுந்தருளியுள்ளார். மலையடிவாரத்தில் உள்ள திருக்கோவிலில் ஆறுமுகப் பெருமான் இரு தேவியருடன் எழுந்தருளியுள்ளார்.

இத்தலத்தை அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியருளியுள்ளார். தலபுராணம் சைவ எல்லப்பநாவலரால் இயற்றப் பட்டுள்ளது.

கல்வெட்டுக்கள் 19 உள்ளன. வட்டெடுத்து கல்வெட்டுக்களும், சோழர், கங்கர், சாணக்கியர், நாயக்கர் காலங்களில் செய்யப்பட்ட திருப்பணிகளைப்பற்றி குறிப் பிடுகின்றன.

ஒரு கால பூஜை. மாசி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

4. புட்டிரெட்டிப்பட்டி

அரூர்க்கு மேற்கே 18 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர். விசயநகர மன்னன் நரசிங்கதேவர் கல்வெட்டுக்கள் இக்கோவி லில் சுவாமி, அம்மன் கருவறையில் உள்ளன. நிலங்களைத் தானமாக விட்டதைக் குறிக்கின்றது.

5. கோபிசெட்டிபாளையம்

அரூர்க்கு மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமாலீஸ்வரர்.


6. தென்கரைக்கோட்டை

அரூர்க்கு தென்மேற்கே 12 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் நஞ்சுண்டேஸ்வரர்.

உம்பர்தரு-சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரி சாதம், கற்பகம் என்னும் ஐவகைத் தெய்வத விருட் சங்கள்.தேநு-காமதேனு என்னும் தெய்வப் பசு, மணி- சிந்தாமணியென்னும் தெய்வத ரத்நம். இம்மூன்றும் தம்மை யடைந்தோர்க்கு அவர்கள் விரும்பிய பொருள்களைத் தரவல்லன.

கள்ளக்குறிச்சி வட்டம்

(விழுப்புரம் மாவட்டம்)



1. கள்ளிப்பாடி

ரிஷிவந்தியத்திலிருந்து வடக்கே 21கி.மீ. இக்கோவில் பெண்ணையாற்றின் தென்கரையில் 24 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் மாத்ருபூதேஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

2. சீர்பனந்தாள்

ரிஷிவந்தியத்திலிருந்து வடக்கே 19கி.மீ. பெண்ணையாற்றின் தென்பகுதி யில் இக்கோவில் 7-01 ஏக்கர் நிலப்பரப் பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக பாலசுந்தரேசுவரர்.

3. ரெளத்தாநல்லூர்

பாக்கத்திலிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப் பளவில் விராகபுலீச்சுவரர்.

4. பாக்கம்

சீர்பனந்தாளுக்கு மேற்கே 11கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீசுவரர்.

5. கடுவனூர்

பாக்கத்திலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

6. பழைய சிறுவாங்கூர்

கள்ளக்குறிச்சிக்கு வடக்கே 12கி.மீ. மணிமுத்தா நதிக்கு வடகரையில் இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டர்.

7. மாத்தூர்

கள்ளக்குறிச்சிக்கு வடமேற்கே 14கி.மீ. கோமுகா ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதசுவாமி.

8. வடக்கனந்தள்

கள்ளக்குறிச்சிக்கு மேற்கே 12கி.மீ. கோமுகா ஆற்றின் வடகரையில் இக்கோவில் 2-75 ஏக்கர் நில்ப்பரப்பளவில் மூலவர் உமாமகேசுவரர் சுயம்புலிங்கமாக காட்சியளிக்கிறார்.

9. ரிஷிவந்தியம்

கள்ளக்குறிச்சியிலிருந்து வடகிழக்கே 17கி.மீ. இராஜநாராயண பட்டினம். இக்கோவில் 1-33 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 150 அடி உயர இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர், அம்மன் முத்தாம்பிகை தனிச் சன்னிதியில் கிழக்கு நோக்கியுள்ளார். இராமர் பசு பூஜித்த தலம். அகத்திய முனிவர், நமசிவாயமுனிவர், இந்திரன், தேவர்கள் முதலியோர் வழிபட்ட தலம். குகநமச்சிவாயர் திருவண்ணாமலை யிலிருந்து சிதம்பரம் போகும் போது இத்தலத்தில் வந்தபோது பசி எடுத்தபோது உணவு கிடைக்காமல் போக, இத்தல அம்மன் மீது பதிகம் பாட அம்மனே நேரில் வந்து பசிதீர்த்த தலம். நான்கு கால பூஜை. ஆனிமாதம் உற்சவம் நடைபெறுகிறது.

10. தண்டலை

கள்ளக்குறிச்சிக்கு வடகிழக்கே 5கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக்கோ வில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுயம்புநாதர்.

11. சிறுவாங்கூர்

கள்ளக்குறிச்சிக்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஆபத்சகாயஈஸ்வரர். 400 வருட முற்பட்ட கோவில்.

12. சோமந்தார்குடி

கள்ளக்குறிச்சிக்கு வடமேற்கே 2கி.மீ. கோமுகா ஆற்றின் கரையில் இக்கோவில்

1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதாஸ்வரர்.

13. கள்ளக்குறிச்சி

உளுந்தூர்பேட்டையிலிருந்து மேற்கே 34கி.மீ. கோமுகா ஆற்றின் கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சிதம்பரேசுவரர், அம்மன் சிவகாமி. தீர்த்தம் கோமுகை. தலமரம் வில்வம். இருகால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

14. வீரசோழபுரம்

கள்ளக்குறிச்சிக்கு கிழக்கே 7கி.மீ. மணிமுந்தா நதி தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அருள்மிகு நாரீஸ்வரர், அம்மன் அனுப்பாம்பிகை. சூரிய நாராயணமூர்த்தி தனிச் சன்னிதியில் உள்ளார். இரண்டு கால பூஜை. மாசி மகத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

15. முடியனூர்

கள்ளக்குறிச்சிக்கு தென்கிழக்கே 10கி.மீ. கோமுகா நதிக்கும், மணிமுத்தா நதிக்கரைக்கும் இடையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர். 500 வருட முற்பட்ட கோவில்.

16. தென்கீரனூர்

கள்ளக்குறிச்சிக்கு கிழக்கே 2கி.மீ. கோமுகா ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர்.

17. நமசிவாயபுரம்

கள்ளக்குறிச்சிக்கு தென்மேற்கே 10கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அர்த்தநாரீசுவரர்.

18. மலைகொத்தலம்

கள்ளக்குறிச்சிக்கு கிழக்கே 7கி.மீ. கோமுகா ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கோமளீசுவரர்.

19. கண்ணங்கூர்

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 28 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதர்.

20. பொரசாகுறிச்சி

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. கோமுகா ஆற்றின் தென்கரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

21. நாகலூர்

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்கிழக்கே 14கி.மீ. கோமுகா ஆற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அர்த்தநாரீசுவரர். 600 வருட முற்பட்டது.

22. குடியநல்லூர்

பெரியமாம்பட்டிலிருந்து தெற்கே 10கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

23. இறஞ்சி

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்கிழக்கே 28கி.மீ. மணிமுத்தாற்றின் வடகரையில் இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

24. கூத்தாகுடி

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்கிழக்கே 24கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர்.

25. வரஞ்சரம்

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்கிழக்கே 16கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரைக்கும் கோமுகா ஆற்றின் வடகரைக்கும் இடையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பசுபதீஸ்வரர், அம்மன் பாலாம்பிகை. காமதேனு வழிபட்ட தலம். இத்தலத்திலுள்ள திருக்குளத்தில் தொழுநோய் உள்ளவர்கள் நீராடி இறைவனை வழிபட்டால் நோய் நீங்கும். ஒரு சோழ அரசனுக்கு இருந்த தொழு நோய் இத்தலத்தில் நீங்கியதால் காணிக்கையாக சோழ மன்னன் இக்கோவிலை விரிவுபடுத்தி கட்டுவித்தான். இரண்டு கால பூஜை. பங்குனி பூரம் அன்று உற்சவம் நடைபெறுகிறது.

26. சாத்தனூர்

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வாலீசுவரர்.

27. கனியாமூர்

சின்னசேலத்திலிருந்து வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் கனகசோலீசுவரர். 350 வருட முற்பட்ட கோவில்.

28. சின்னசேலம்

கள்ளக்குறிச்சியிலிருந்து தென்மேற்கே 14கி.மீ. இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கங்காதராஈஸ்வரர் மற்றும் சுகவனேசர், அம்மன் சொர்ணாம்பிகை. தீர்த்தம் சுவர்ண புஷ்கரிணி. இங்கு பெருமாள் கோவிலும் உள்ளது.

29. தென் பொன்பரப்பி

சின்னசேலத்திலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 63 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் சொர்ணபுரீசுவரர். 700 வருட முற்பட்ட கோவில்.

30. பெத்தானூர்

சின்னசேலத்திலிருந்து கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர், அம்மன் சொக்கநாயகி.

31. ஆசகளத்தூர்

சின்னசேலத்திலிருந்து கிழக்கே 22கி.மீ. இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் லோகபாலீசுவரர். 250 வருட முற்பட்ட கோவில்.

32. மாகரூர்

சின்னசேலத்திலிருந்து கிழக்கே 20கி.மீ. இக்கோவில் 28 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் கைலாசநாதர்.

33. ஒலகியநல்லூர்


சின்னசேலத்திலிருந்து கிழக்கே 10கி.மீ. உலகியநல்லூர். இக்கோவில் 1-20ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அர்த்தநாரீசுவரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

34. குகையூர்

கள்ளக்குறிச்சிக்கு தென்மேற்கே 27கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுவர்ணபுரீசுவரர்.

வசிட்டர், வியாழன், வழிபட்ட தலம். திருநாவுக்கரசர் இத்தல இறைவனைப் போற்றி பாடியுள்ளார். தேவார வைப்புத்தலம். ஸ்தபதி மகனை பாம்பு கடித்து இறந்ததும் இத்தலஇறைவன் ஒரு சித்தர் வடிவில் வந்து இறந்த சிறுவனை மீண்டும் உயிர்ப்பித்த தலம். இரண்டு கால பூஜை. ஆடி மாதம் 18ந்தேதி உற்சவம் நடைபெறுகிறது.

திருக்கோவிலூர் வட்டம்
(விழுப்புரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருக்கோயிலூர்

படைகொள் கூற்றம் வந்துமெய்ப் பாசம் விட்டபோதின்கண்
இடைகொள்வா ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன் கோவ லூர்தனுள்
விடைய தேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே

-- திருஞானசம்பந்தர்

விழுப்புரத்திலிருந்து மேற்கே 34கி.மீ. மலையமான்நாடு. கீழையூர் திருக்கோவலூர், கோவலூர் வீரட்டம், பெண்ணையாற்றின் தென்கரையில் கீழையூரில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 70 அடி உயரம் கொண்ட இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்மாக அருள்மிகு வீரட்டேசுவரர் மேற்கு நோக்கியும், அம்மன் பெரியநாயகி தனிசன்னிதியில் மேற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலமரம் கொன்றை. தீர்த்தம் தென்பெண்ணைநதி, உருத்திர, கபில, கண்ணுவ, இராம, பரசுராம, யம, பிதிர், சப்த இருடியர், சூரிய, அக்னி ஆகிய தீர்த்தங்களும் உள்ளன. உள் பிராகாரத்தில் பெரியானைக் கணபதி, ஆறுமுகர், சண்டிகேசுவரர், நால்வர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், சந்திரசேகரர், அஷ்டபுஜ துர்க்கை, நவக்கிரகம், சிறப்பு மூர்த்தியாக விளங்கும் அந்தகாசுரவதமூர்த்தியின் உற்சவ விக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

ஊர்பெயர் கோவலூர் எனவும் வீரட்டம் கோவிலின் பெயராகவும் அழைக்கப்படும் தலம்.

விநாயகர், முருகன், இராமர், பரசுராமர், கிருஷ்ணன், இந்திரன், காளி, ஏகாதச உருத்திரர், இயமதருமன், காமதேனு, சூரியன், குரு, உரோமசமுனிவர், கண்ணுவர், கபிலர், மிருகண்டு, பதஞ்சலி, வியாக்ரபாதர், காமன், குபேரன், வாணாசூரன், சப்தரிஷிகள், ஆதிசேடன் முதலியோர் வழிபட்டு அருள் பெற்ற தலம்.

சிவபெருமான் சிறந்த வீரச்செயல்கள் நிகழ்ந்துள்ள தலங்கள் எட்டினை அட்ட வீரட்டம் எனக் கூறுவர். அட்டவீரட்டத் தலங்களில் இத்தலத்தில் அந்தகாசுரனை சிவப்பெருமான் கொன்றருளிய தலம் இறைவனது வீரச்செயல் நிகழ்ந்த இடமாக இவ்வூர் விளங்கியதால் இத்தலம் வீரட்டானம் எனப் பெற்றது. பெருமான் வீரட்டானேசுவரர் எனவும் அந்தகாந்தர் எனவும் வழங்கப்படுகிறார்.

மலாடர் மரபில் தோன்றிய மன்னனும், 63 நாயன்மார்களில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனார் இத்தலத்தில் வாழ்ந்து திருத்தொண்டு செய்து, மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள் எனக் கருதி அரசு புரிந்து இறைவன் திருவடிகூடிய மெய்ப்பொருள் நாயனார் வாழ்ந்த சிறப்புடையது இத்தலம்.

காரண்டன், வல்லூரன் என இரு அசுரர்கள் உலகிற்கு இன்னல்கள் பல விளைத்து வந்தனர். முருகப் பெருமானிடம் மக்கள் முறையிட முருகப்பெருமான் குக முனிவரை அழைத்து திருக்கோவலூரில் ஒரு வேள்வி செய்யுமாறு பணிந்திட, அவ்வேள்வியில் தெய்வீகன் என்ற அரசிளங்குமரன் பச்சைக் குதிரையோடு தோன்றி அவ்வசுரர்கள் இருவரையும் கொன்று மக்களுக்கு நல்வாழ்வளித்த தலம்.

பாரியின் இரு புதல்வியராகிய அங்கவை, சங்கவையை கபிலர் வளர்த்து, ஔவையாரின் முயற்சியால் தெய்வீகனுக்கு திருமணம் நடைபெற்ற தலம். தெய்வீ கனுக்குக் குலசேகரன், நரசிங்கமுனை யரையன், மெய்ப்பொருள் ஆகிய மூன்று புதல்வர்கள் என்றும், அவர்கள் அவனுக்குப்

பின் மலையமான் நாட்டிலிருந்து அரசு புரிந்தனர் என்றும் தலவரலாறு கூறுகிறது.

ஔவையார் விநாயகர் அகவல் பாடியது இத்தலத்தில்தான் எனக் கூறப்படுகிறது. திருக்கோவலூர் தலபுராணம் 26 சருக்கம் கொண்டது. தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 11ஆவது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் பெற்ற பெருமையுடையது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்குள்ளது. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் அருச்சனைப் படலத்தில் இத்தல பெருமையை குறிப்பிடுகிறார்.

இக்கோவிலில் சோழ, பாண்டிய, பல்லவ, விஜயநகர, ராஷ்டிரகூட காலத்தில் அரசாண்ட மன்னர்கள் இக்கோவிலைச் சார்ந்த கல்வெட்டுக்கள் பல பொறிக்கப் பெற்றுள்ளன. நான்கு கால பூஜை. மாசி மாதம் 13 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் மேலூர் என வழங்கப்பெறும் இடத்தில் திருவிக்ரமசுவாமி பெருமாள் கோவிலும் உள்ளது.

2. அறகண்ட நல்லூர்

பீடினாற்பெரி யோர்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார் மறை பாடினார் சுடலை நீறணிந் தாரழல்
அடினாரறை யணிநல்லூ ரங்கையாற்றெழு வார்களே

-- திருஞானசம்பந்தர்

திருக்கோவிலூரிலிருந்து வடகிழக்கே ஒரு கி.மீ. திருஅறையணிநல்லூர் பெண்ணையாற்றின் கரையில் 30 அடி உயர மலை மீது 65 செண்ட் நிலப்பரப்பளவில் 160 அடி உயர இராசகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக வடிவில் அருள்மிகு அறையணிநாதேசுவரர். ஒப்பிலாமணீசுவரர் எனவும் கூறுவர், அம்மன் சௌந்தரிய நாயகி. தீர்த்தம் பெண்ணை யாறு, பாண்டவ தீர்த்தம், ஆரணிய தீர்த்தம்.

கோவில் மேற்கு நோக்கி, அழகிய பல மண்டபங்களோடு காட்சியளிக்கிறது. அண்ணாமலையார் தனிக் கோவிலில் விளங்குகிறார். இத்தலத்தில் உள்ள வலம்புரி விநாயகரும், விஷ்ணு, துர்க்கையும், ஒரு முகமும் ஆறுகைகளும் உடைய முருகனும் தரிசிக்கத்தக்கவர்கள்.

பிரசண்ட முனிவர் பூசித்துப் பேறு பெற்றதலம். பாண்டவர்கள் வனவாச காலத்தில் தாங்கள் கண்ட ஐந்து அறைகள் அந்த நல்லூர்க்கு அழகு செய்வதால் இப்பெயர் எய்தியது எனவும் கூறுவர்.

இவ்வூரில் ஓரிடத்தில் வெட்டிய காலத்தில் சில உற்சவ விக்கிரங்கள் கிடைத்தனவாம். சுவாமி ஒப்பில்லாதாசுவரர். அம்மன் கனகாம்பிகை யாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாடுத் தலங்களில் இத்தலம் 12ஆவது தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவார திருப்பதிகம் ஒன்றைப் பெற்றது. இம்மலை மேல் இறைவனை வலம் வரும்போது திருஞானசம்பந்தர் அண்ணா மலையையும் கண்டு தொழுதார் என சேக்கிழார் பெரியபுராணத்தில் குறிப்பிடு கிறார்.

இக்கோவில் 96 கல்வெட்டுக்கள் உள்ளன. மலையமன்னர்களைப் பற்றி ஆராய்ச்சிக்கு இக்கோவில் கல்வெட்டுக்கள் பெரிதும் பயன்படும்.

திருச்சிற்றம்பலம்

3. இடையாறு

முந்தையூர் முதுகுன்றங் குரங்கணின் முட்டம்
சிந்தையூர் நன்று சென்றடை வான் திருவாரூர்
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூ ரெய்த மானிடை யாறிடைமருதே

-- சுந்தரர்



திருக்கோவிலூரிலிருந்து தென்கிழக்காக 16கி.மீ. திருஇடையாறு பெண்ணையாறு, மலட்டாறு என இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியாதலால் இடையாறு எனப்படுகிறது. இடையாறு ஊரின் பெயர் திருமருதந்துறை கோவிலின் பெயர். இங்குள்ள கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 179 அடி நீளமும், தெற்கு வடக்காக 99 அடி அகலம் கொண்டு மேற்கு நோக்கிய மூன்று நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மருந்தீசர், இடையாற்றுநாதர் மேற்கு நோக்கியும், அம்மன் ஞானாம்பிகை, சிற்றிடைநாயகி கிழக்கு நோக்கியும் காட்சி யளிக்கின்றனர். தலமரம்-மருதமரம், தீர்த்தம் சிற்றிடை தீர்த்தம், அம்மன் சன்னிதியில் கிணறாக உள்ளது. உள்பிராகாரங்களில் மருத கணபதி, முருகன், துர்க்கை, அகத்தியர், சுக முனிவர் ஆகியோர் சன்னிதிகள் உள்ளன.

சுகமுனிவர், பிரமன், அகத்தியர், சுந்தரர், மறைஞான சம்பந்தர் முதலியோர் வழிபட்ட தலம்.

பார்வதிதேவியால் சாபமடைந்த ஒரு முனிவர் கிளி உருவத்தோடு கிருதாசி என்னும் பெண் வயிற்றிலிருந்து பிறந்தார். பெண் போகத்தை அறவே வெறுத்த பரமஞானியாகத் திகழ்ந்து இத்தலத்தில் மருதமரத்தடியில் தவமிருந்து மருதீசரை வழிபட்டு அருள் பெற்று முத்தி பெற்ற தலம்.

அகத்திய முனிவர் இத்தலத்தில் ஒரு இலிங்கம் தாபித்து வழிபட்டு அருள் பெற்றார். வழிபட்ட சிவலிங்கம் அகத்தீசுரர் என்ற பெயருடன் இங்கு உள்ளது. அகத்தியருக்குத் தனி உருவச் சிலையும் இக்கோவிலில் உள்ளது.

சந்தானசாரியருள் மறைஞானசம்பந்தர் இத்தலத்தில் திருவவதாரம் செய்தவர். மறைஞான சம்பந்தருக்கு அருள் செய்த பிள்ளையார் வயல் வெளியில் கோவில் கொண்டுள்ளார்.

இக்கோவில் உள்ள சுப்பிரமணியக் கடவுளின் பெயர் கலியுகராமப் பிள்ளையார் என்பதாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாட்டில் இத்தலம் 13ஆவது தலம். சுந்தரர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றது.

இக்கோவிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருமருதந்துறை உடைய நாயனார் என்றும் இவ்வூரை இராஜஇராஜவள நாட்டு திருமுனைப்பாடி இடையாற்று நாட்டு இடையாறு என்று குறிக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

4. திருவெண்ணெய் நல்லூர்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே

-- சுந்தரர்

திருக்கோவிலூரிலிருந்து தென்கிழக்காக 20கி.மீ. ஆலயம் அருட்டுறை. பெண்ணையாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 10-00 ஏக்கர் நிலப்பரப் பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கிருபாபுரீசுவரர், அம்மன் மங்களாம்பிகை. இரு சன்னிதிகளும் கிழக்கு நோக்கியுள்ளவை. தலமரம் மூங்கில். தீர்த்தம் தண்டதீர்த்தம் இது கோவிலின் தென்பால் திருக்குளமாக உள்ளது. உள்பிராகாரங்களில் பொல்லாப் பிள்ளையார், முருகன், சுந்தரர் சன்னிதிகள் சிறப்புடையன.

இறைவன் நஞ்சுண்ட காலத்தில் அந்நஞ்சு அவரைத் துன்புறுத்தாதிருக்க உமையம்மையார் இத்தலத்தில் பசுவெண்ணெயால் கோட்டை கட்டி அதில் பஞ்சாக்கினி வளர்த்து அதன் நடுவில் இருந்து தவம் செய்த காரணத்தால் இத்தலம் வெண்ணெய்நல்லூர் எனப் பெயர் பெற்றதெனத் தலபுராணம் கூறுகிறது.

சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட் கொண்ட சிறப்புடையது. இறைவன் ஆட்கொண்ட போது அவர் அடியெடுத்துத்தர சுந்தரர் பாடியருளிய 'பித்தா பிறை சூடி' என்ற திருப்பதிகத்தை உடையது. இங்குள்ள ஆலயம் அருட்டுறை எனப்படும்.

சந்தானாசாரியருள் முதல்வராகிய மெய்கண்டார் சைவ சித்தாந்த சாத்திரங் களின் முடிமணியாகத் திகழும் சிவ ஞானபோதத்தை அருளிச்செய்த தலம். அவரது குருமூர்த்தம் இத்தலத்தின் வடமேற்குத் திசையில் கிழக்கு நோக்கிய ஆலயமாக உள்ளது.

சடையப்ப வள்ளல் கம்பரைக் கொண்டு இத்தலத்தில்தான் இராமாயணம் பாடுவித்தார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 14ஆவது தலம் சுந்தரர் அருளிய திருப்பதிகத்தை உடையது. சுந்தரர் காலத்திற்கு முன்னரே திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்துப் பாடியருளிய க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் "பெண்ணை அருட்டு றை தண் பெண்ணாகடம்" எனக் கூறியிருத் தலைக் காணலாம். அருணகிரிநாதர் இத்தலத்தில் முருகக் கடவுள் மயில்மீது நடனம் புரிதலைக் கண் குளிரக் கண்டு திருப்புகழ் ஒன்றும் அருளியுள்ளார். சிதம்பர முனிவர் அருளிய க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ் இத்தலத்திற்கு உள்ளது.

இராசப்ப நாவலர் தலபுராணம் இயற்றியதோடு இவ்வூருக்குக் கலம்பலம் ஒன்றும் பாடியுள்ளார். தருமையாதீன வெளியீடாக திருவருட்டுறைப் புராணம் வடிவேல் முதலியார் அவர்களால் இயற்றப்பட்டுள்ளது.

இத்தலத்தில் சோழ, பாண்டிய, விஜய, சம்புவராய கால மன்னர்களின் கல் வெட்டுக்கள் பல உள்ளன. இக்கல்வெட்டுக் களில் இறைவர் திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறை ஆள்வார் என்றும் திருவெண்ணெய்நல்லூர் உடையார் ஆட்க் கொண்டதேவர் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. இத்தலத்தில் ஸ்ரீ வைகுந்த வாசபெருமாள் கோவிலும் உள்ளது.

5. ஐம்பை

மணலூர்பேட்டையிலிருந்து மேற்கே 4கி.மீ. பெண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஜம்புநாதாஈஸ்வரர். 1500 வருட முற்பட்டகோவில்.

6.மணலூர்பேட்டை

திருக்கோவிலூருக்கு மேற்கே 16கி.மீ. பெண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 59 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கவடிவில் அகத்தீஸ்வரர். 1600 வருட முற்பட்டகோவில்.

7. வீரபாண்டி

திருக்கோவிலூர்க்கு வடக்கே 10கி.மீ. இக்கோவில் 1-32 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஆதிநாதர். 500 வருட முற்பட்டகோவில்.

8. மடவிளாகம்

திருக்கோவிலூர்க்கு வடகிழக்கே 12கி.மீ. இக்கோவில் 66 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாத ஈஸ்வரர்.

9. கூவனூர்

திருக்கோவிலூர்க்கு மேற்கே 16கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 47 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். 600 வருட முற்பட்டகோவில்.

10. கழுமாரம்

திருக்கோவிலூர்க்கு மேற்கே 10கி.மீ. பெண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் 20 அடி உயர இராஜகோபுரமும், பிராகாரங்கள் கொண்டு மூலவர் அருள்மிகு சிதம்பரேசுவரர், அம்மன் சிவகாமியம்மை. பாணாசூரன் இத்தலத்தில் ஒரு லிங்கம் தாபித்து வழிபட்ட தலமாதலால் இத்தல மூலவர் பாணலிங்கம் என்றும் அழைக்கப்படும். சுந்தரர் இத்தலத்தைப் போற்றி பாடியுள்ளதால் இத்தலம் தேவாரவைப்புத் தலமாக போற்றப்படுகிறது. இரண்டு கால பூஜை. பங்குனி உத்திரம் உற்சவம் நடைபெறுகிறது.

11. வளந்தை

திருக்கோவிலூர்க்கு மேற்கே 7கி.மீ.. பெண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர். 250 வருட முற்பட்டகோவில்.

12. குலதீபமங்கலம்

திருக்கோவிலூர்க்கு மேற்கே 5கி.மீ. பெண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 150 வருட முற்பட்டகோவில்.

13. முடியனூர்

திருக்கோவிலூர்க்கு மேற்கே 8கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர். 500 வருட முற்பட்டகோவில்.

14. தகடி

திருக்கோவிலூர்க்கு மேற்கே 9கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியநாதாஈஸ்வரர். 600 வருட முற்பட்டகோவில்.

15. திருப்பாலபந்தல்

திருக்கோவிலூர்க்கு தென்மேற்கே 9கி.மீ. இக்கோவில் 1-42 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக மாதீஸ்வரர். 2000 வருட முற்பட்டகோவில்.

16. சித்தலிங்கமடம்

திருக்கோவிலூர்க்கு தென்கிழக்கே 10கி.மீ. பெண்ணையாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 1-05 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வியாக்ரபாதர், அம்மன் நீலாவிசாலாட்சியம்மன். இத்தலத்தில் வியாக்ரபாத முனிவருக்கு காட்சிதந்தால் இறைவர்க்கு வியாக்ரபாதர் என்று பெயர். உள்பிராகாரத்தில் பரிவார உற்சவ மூர்த்தங்கள் உள்ளன. இத்தலத்தில் விநாயகர் சுந்தரமூர்த்தி நாயனாருடன் வாதாடி பாடல் பெற்றதால் இத்தலம் விநாயகருக்கு வாதாடும் விநாயகர் என்று பெயர். சித்தீஸ்வரம் என்று குறிப்பிடுவதால் இத்தலம் தேவார வைப்புத்தலமாக போற்றப்படுகிறது என்றும் கூறுவர். இரண்டு கால பூஜை. சித்திரை மாதத்தில் 10 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

17. சி. மெய்யூர்

சித்தலிங்கமடத்திலிருந்து கிழக்கே ஒரு கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-20 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அகத்தீஸ்வரர்.

18. பையூர்

சித்தலிங்கமடத்திலிருந்து கிழக்கே 9கி.மீ. பெண்ணையாற்றின் இடையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தேவகிரீசுவரர். 350 வருட முற்பட்ட கோவில்.

19. அரியூர்

சித்தலிங்கமடத்திலிருந்து தெற்கே 12கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராஜஇராஜே ஸ்வரர். 500 வருட முற்பட்ட கோவில்.

20. சோழவந்திபுரம்

திருக்கோவிலூர்க்கு தென்மேற்கே 17கி.மீ. இக்கோவில் 1-33 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக கைலாசநாதர்.

21. செங்கணாங்கொல்லை

திருக்கோவிலூர்க்கு தெற்கே 13கி.மீ. கெடிலம் ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 500 வருட முற்பட்ட கோவில்.

22. கடையூர்

திருக்கோவிலூர்க்கு தெற்கே 14கி.மீ. கெடிலம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரர். 300 வருட முற்பட்ட கோவில்.

23. பலங்கூர்

திருக்கோவிலூர்க்கு தெற்கே 10கி.மீ. கெடிலம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 48 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

24. சிறுமதுரை

திருவெண்ணெய்நல்லூருக்கு வடக்கே 5கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் சொக்கநாதர், அம்மன் மீனாட்சி யம்மன். 400 வருட முற்பட்ட கோவில்.


25. ஏமப்பூர்

திருவெண்ணெய்நல்லூரிலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீசுவரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

திருச்சிற்றம்பலம்

செஞ்சி வட்டம்

(விழுப்புரம் மாவட்டம்)



1. பெருவலூர்

செஞ்சியிலிருந்து வடக்கே 22.கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கோட்டீஸ்வரர். 350 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை.

2. நொச்சலூர்

அவலூர்பேட்டைக்கு கிழக்கே 5.கி.மீ. இக்கோவிலின் மூலவர் சந்திரமௌலி ஸ்வரர். 300 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் ஸ்ரீ லஷ்மி நாராயண பெருமாள், மற்றும் திரௌபதியம்மன் கோவிலும் உள்ளன.

3. அவலூர்பேட்டை

செஞ்சிக்கு வடமேற்கே 28.கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். 350 வருட முற்பட்ட கோவில். அம்மன் முத்தாலம்மன்.

4. வீராமூர்

செஞ்சியிலிருந்து வடகிழக்கே 20.கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். 250 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை. இவ்வூரில் கரிவரதராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

5. மேல்சேரி

செஞ்சிக்கு வடமேற்கே 6.கி.மீ. வராகநதி தென்கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாதலீஸ் வரர். ஒரு கால பூஜை.

6. சீவலபூரை

செஞ்சியிலிருந்து வடமேற்கே 9.கி.மீ. வராகநதி வடகரையில் இக்கோவில் 76 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீ ஸ்வரர். 800 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை. இவ்வூரில் வெங்கடேச பெருமாள் கோவிலும் உள்ளது.

7. வீரமாநல்லூர்

செஞ்சியிலிருந்து மேற்கே 16.கி.மீ. இக்கோவில் 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் சுந்தரேஸ்வரர், அம்மன் சௌந்தரவல்லி. 1000 வருட முற்பட்ட கோவில்.

8. சக்கராபுரம்

செஞ்சியிலிருந்து கிழக்கே ஒரு கி.மீ. வராகநதிக்கு மேற்கே இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரர், அம்மன் காமாட்சியம்மன். 350 வருட முற்பட்ட கோவில். ஒரு கால பூஜை.

9. அனங்கூர்


செஞ்சிக்கு கிழக்கே 14.கி.மீ. தொண்டியாற்றின் மேற்கு கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர், அம்மன் மீனாட்சி யம்மன். 250 வருட முற்பட்ட கோவில்.

10. மேல்சேவூர்

செஞ்சியிலிருந்து தென்கிழக்கே 10.கி.மீ. திருவிடையூர். வராகநதி (சங்கரா பரணி) தென்கரையில் இக்கோவில் 2-33 ஏக்கர் நிலப்பரப்பளவில், 50அடி உயரம், 27×21 அடித்தளம் கொண்ட இராஜ கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு ரிஷபாபுரீஸ்சுவரர். அம்மன் மங்களாம்பிகை தனிச் சன்னிதியில் உள்ளார். உள்பிராகாரத்தில் விநாயகர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், நடராஜர், சுப்ரமணியர், மாணிக்கவாசகர் முதலிய சன்னிதிகள் உள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தல இறைவனைப் போற்றி பதிகத்தில் குறிப்பிட்டுள்ளதால் இத்தலம் தேவார வைப்புத்தலமாக போற்றப்படுகிறது தல புராணம் உள்ளது. பாண்டிய மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட தலம். இரண்டு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

திண்டிவனம் வட்டம்

(விழுப்புரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருவக்கரை

கறையணி மாமிடற்றான் கரிகாடு அரங் காவுடையான்
பிறையணி கொன்றையினான் ஒருபாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவன் தன்தலையில் பலிகொள்பவன் வ்க்கரையில்
உறைபவன் எங்கள்பிரான் ஒலியார்கழ லுள்குதுமே

-- திருஞானசம்பந்தர்

திண்டிவனத்திலிருந்து தெற்கே 25கி.மீ. குண்டலிவனம். துக்ரபுரி, வக்ரபுரிப் பட்டிணம் என அழைக்கப்படும் இத்தலம் வராகநதிக்கரையில் இக்கோவில் ஒரு சிறிய மலையடிவாரத்தில் 3-00 ஏக்கர் நிலப்பரப் பளவில் கிழக்கு நோக்கிய 85 அடி உயர 7 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களும் கொண்டு மூலவர் லிங்க வடிவில் அருள்மிகு சந்திரசேகரர் மும்முகங்களோடு விளங்குகிறார். அம்மன் வடிவாம்பிகை. ஆறுமுகர், அஷ்டபுஜ துர்க்கை. தலமரம் - வில்வம். தீர்த்தம் சந்திர, பிரம, சூரியபுட்கரிணி, புண்ணியப்புனல். கோபுரவாயிலைக் கடந்தவுடன் வடக்கு நோக்கிப் பிரயோக சக்கரத்துடன் விளங்கும் அஷ்டபுஜகாளி கோவில் உள்ளது. கூத்தப்பிரான் இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கி ஆடுபவராய்க் காட்சி தருகிறார்.

இறைவன் மூன்று திருமுகங்களோடு விளங்குகிறார். சந்திரன், பிரமன், திருமால் ஆகிய மூவருக்காக பெருமான் மும்முகம் தாங்கியுள்ளார். இக்கோவிலுக்கு அருகில் உள்ள மலையடிவாரத்தில் மரங்கள் கல்லுருவாக உள்ளன.

வக்ராசுரனை இத்தலத்தில் திருமால் போரிட்டு அழித்தார் என்றும் அவ்வாறு அழித்தபோது வக்ரனின் உடலிருந்து வழிந்த குருதி நிலத்தில் படிந்தது. கீழே சிந்திய இரத்தத்திலிருந்து மீண்டும் அசுரர்கள் தோன்றாதபடி அக்குருதியைக் காளி தன் நாவினால் உறிஞ்சினாள் வக்ராசுரனின் தங்கை துன்முகியை அஷ்ட புஜகாளி அழித்தாள். துன்முகி அழிந்தபோது அவள் கருவுற்றிருந்ததால் அவள் வயிற்றி லிருந்த குழந்தையைக் காளி தன் காதில் குண்டலமாக அணிந்து கொண்டாள். வக்ராசுரன் அரசாண்ட பகுதியாதலால் இத்தலம் வக்கரை எனப் பெயர். வக்ரா சுரனை அழித்த திருமால் இக்கோவிலின் இரண்டாவது பிராகாரத்தில் மேற்கு நோக்கியவாறு வரதராஜப் பெருமாள் எனப்பெயருடன் பிரயோக சக்கரத்துடன் நின்ற நிலையில் தனித்து காட்சியளிக்கிறார். மூலவர் நந்தி கொடிமரம் நேர்கோட்டில் அமைந்தது அல்ல. சனீஸ்வர பகவான் காக வாகனஂ தெற்கு நோக்கியுள்ளது.

தொண்டை நாட்டுத் தேவாரத் தலமான இத்தலம் 30வது தலமாகும். திருஞான சம்பந்தர் அருளிய ஒரு பதிகமும், திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்து தனி தேவாரப் பதிகங்களும் அருளியுள்ளனர். அருணகிரிநாதர் இத்தலத்து முருகனைக் குறித்து மூன்று பாடல்கள் அருளியுள்ளார். இத்தல முருகன் பன்னிரு திருக்கைகளுடன் வள்ளி தேவசேனா தேவி சமேதரராக மயில் மீது அமர்ந்து கிழக்கு நோக்கியுள்ளார்.

இக்கோவில் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பு ஏற்பட்ட கோவிலாகும். கல்வெட்டுக் களில் இக்கோவில் இறைவன் பெயர் 'கற்றளிப் பெருமான் அடிகள்' என்று குறிக்கப்பட்டுள்ளது. முதலாம் ஆதித்த சோழன், உத்தமசோழனின் தாயுமான செம்பியன் மாதேவி ஆகியோர்களின் கல்வெட்டுக்கள் இக்குள்ளன.

பிரதிமாத பௌர்ணமி தோறும் இரவு 12-00 மணிக்கும், பிரதிமாத அமாவாசை தோறும் பகல் 12-00 மணிக்கும் ஜோதி தரிசனம் நடைபெறுகிறது.

151

திருச்சிற்றம்பலம்

2. ஒழுந்தியாப்பட்டு

பாடல் வண்டறை கொன்றை பான்மதி பாய்புனற் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியந் தோண்மேல்
ஆடன் மாசுண மசைத்த வடிகளுக் கிடமரசிலியே

-- திருஞானசம்பந்தர்



திண்டிவனத்திலிருந்து தென்கிழக்கே 25கி.மீ. திருஅரசிலி. இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு அரசிலிநாதர் கிழக்கு நோக்கியும், அம்மன் பெரியநாயகி தனிச் சன்னிதியில் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். பிராகாரத்தில் விநாயகர், ஆறுமுகர், சூரியன், பைரவர், சண்டேசுரர், நவக்கிரகம், நால்வர் சன்னிதிகள் அமைந்துள்ளன. கோவிலுக்கு எதிரே தலமரம் அரசமரமும், அரசடித் தீர்த்தத் திருக்குளமும் உள்ளது.

மரங்களில் சிறந்த அரசடியில் பெருமான் விளங்குவதால் இத்தலம் அரசிலி எனப் பெயர் பெற்றது. வாமதேவ முனிவர் வழிபட்ட தலம். சத்தியவிரதன் என்னும் சாளுக்கிய மன்னனின் பக்தியை அறிந்து இறைவன் அம்மன்னவனோடு மானுருவக் கொண்டு விளையாடிய தலம். அம்மன்னனின் மகன் இந்திரசேனனும் அரசிலி நாதரிடம் அளவற்ற பக்தி பூண்டு வழிபட்ட தலம். இந்திரசேனின் திருமகள் சுந்தரி. இவள் அரசிலிநாதரை வழிபட்டு இத்தலத்திலேயே வாழ்ந்து இறையடி கூடியதலம்.

தொண்டை நாட்டுத் தேவாரத் தலங்களில் இத்தலம் 31வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்றது. திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந் தருளிச் சில நாட்கள் இங்குத் தங்கி வழிபட்டார் என இத்தல புராணம் கூறுகிறது. அவர் தங்கியிருந்ததற்கு அடையாளமாகக் கோவிலின் தென் கிழக்காக திருஞான சம்பந்தர் திருமடம் அமைக்கப் பெற்றுள்ளது.

பத்மபுராணத்தில் அரசிலிக் காதை என்ற நூல் இத்தலத்தைப் பற்றிய புராணவரலாற்றுச் செய்திகளைக் கூறுகிறது. கௌமார மடம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் இத்தலத்து இறைவன் மீது இருபதிகங் களும், அம்பிகை மீது ஒரு பதிகமும், முருகன் மீது திருப்புகழ் பாடியுள்ளார். அரசிலி அந்தாதி என்னு‑ நூல் தருமையாதீனம் 23வது ' ‑ மகா சந்நிதானம் அவர்களால் வெளி ‑டப்பட் டுள்ளது.

இத்தலத்திலுள்ள குலோத்துங்க சோழ மன்னனின் கல்வெட்டில் இவ்வூர் இறைவர் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாட்டு ஒழுகறையான குலோத்துங்க சோழ நல்லூர் திரு அரசிலி உடையார் ஆலால சுந்தரனார் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின்படி ஒழுகறை என்ற பெயரே பிற்காலத்தில் மக்கள் வழக்கில் ஒழுந்தியாப்பட்டு என வழங்கலாயிற்று எனக் கருதலாம்.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் விசாகப் பெருவிழா இத்தலத்தின் சிறப்பு விழாவாகக் கொண்டாடப்படுகின்றன.

திருச்சிற்றம்பலம்

3. இரும்பை

மண்டுகங்கை சடையிற் கரந்தும் மதிசூடிமான்
கொண்டகையாற் புரம்மூன் றெரித்த குழகன்னிடம்
எண்டிசையும் புகழ்போய் விளங்கும் மிரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சுலாய்நின்ற மாகாளமே

-- திருஞானசம்பந்தர்

திண்டிவனத்திலிருந்து தென் கிழக்காக 30 கி.மீ. திருஇரும்பைமாகாளம். இருஞ்சேரி, இலுப்பைவனம், இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு திருமாகாளேசுவரர் கிழக்கு நோக்கியுள்ளார். அம்மன் குயில்மொழிநாயகி தெற்கு நோக்கிய சன்னிதி, சுவாமி சன்னிதிக்கு பின்புறம் ஆறுமுகப் பெருமான் சன்னிதி சிறப்புடையது. மூல இலிங்கம் எட்டாக வெடித்துள்ளது. செப்புத் தகட்டால் இணைக்கப்பட்டு காட்சியளிக்கிறது.

இலுப்பை மரங்கள் நிறைந்த பகுதியாதலின் இலுப்பை என்பது இரும் பை எனவும், மகாகாளர் பூசித்ததால் கோவில் மாகாளம் எனவும் வழங்கப்படுகிறது.

மகாகாளர் இத்தலத்துப் பெருமானை வழிபட்டு அருள் பெற்றார். அவர் தாபித்துப் பூசித்ததால் பெருமான் மகாகாளர் என்ற திருப்பெயரோடு விளங்குகிறார். கடுவெளிச் சித்தர் இத்தலத்தில் கடுந்தவம் புரிந்ததாகவும், மழையில்லாமல் பயிர்கள் வாடுவதைக் கண்ட இந்நாட்டுச் சிற்றரசன் இவரது கடுந்தவமே மழை யின்மைக்கு காரணம் என எண்ணி ஒரு தேவதாசியின் மூலம் சித்தரது தவத்தைக் கலைத்தான். சித்தர் தவம் கலைந்து அத்தலத்திலேயே வாழ்ந்து வந்தபோது ஒரு நாள் கோவில் பெரு விழா நாளில் நடைபெற்ற நாட்டிய நிகழ்ச்சியில் அந்நடன மாதின் காற்சிலம்பு கீழே கழன்று விழுந்தது. சித்தர் தெய்வீக நாட்டிய நிகழ்ச்சி தடைப்படக் கூடாதென்றெண்ணி அச்சிலம் பை எடுத்து நடனமாதின் காலில் பூட்டினார். அதைக்கண்ட மக்கள் சித்தரை ஏளனம் செய்து நகைத்தனர். சித்தர் சினந்து 'வெல்லும் பொழுது விடுவேன் வெகுளி யை... கல்லும் பிளந்து கடுவெளியமே' என்று பாடினார். அந்நிலையில் ஆலயத் திலுள்ள மூலஇலிங்கம் வெடித்து எட்டுப் பகுதியாகச் சிதறியது. இதையறிந்த மன்னன் சித்தரிடம் மன்னிப்பு அருளுமாறு வேண்டினான். சித்தர் மீண்டும் ஒரு பாடல் பாடியபோது சிதறிய சிவலிங்கம் ஒன்று கூடியது. அதனைச் செப்புத்தகடு வேய்ந்து ஒன்றாக்கி மன்னன் வழிபட்டான். அன்று முதல் அந்நிலையிலேயே சிவலிங்கம் இத்தலத்தில் விளங்கி வருகிறது.

தொண்டை நாட்டுத் தலங்களில் இத்தலம் 32ஆவது தலம். திருஞானசம்பந்தர் எழுந்தருளி வழிபட்டு திருப்பதிகம் ஒன்றையும், க்ஷேத்திரக் கோவையில் அருளிய ஒரு பாடலையும், சுந்தரர் இத்தலத்தைக் குறித்து ஊர்த் தொகையில் அருளிய ஒருப் பாடலையும் இத்தலம் பெற்றுள்ளது.

இக்கோவிலில் 4 கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்களில் குலோத்துங்க சோழன், விக்கிரம பாண்டியன், இராசரா சராயர் சம்புவராயர் காலத்தில் நிலதானம் அளிக்கப் பெற்ற செய்தியையும், இவ்வூரை ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாடு என்றும், ஊர் இரும்பை மகாகாளம் என்றும், இறைவன் பெயர் திருமாகாள முடையார் என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. பங்குனி உத்திரத்தில் காவடி எடுத்து வழிபடுகின்றனர். கார்த்திகை சோமவார நாளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

4. திண்டிவனம்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 37 கி.மீ. தண்டகவனம், திண்டீச்சுரம், திந்திரிணி வனம். இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப் பளவில் கிழக்கு நோக்கிய 7 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக திண்டீச்சுரம் உடையார், திந்திரிணீஸ்வரர். அம்மன் மரகதவல்லி கிழக்கு நோக்கி சுவாமியின் இடப்பாகத்தில் விளங்குகிறார். தலமரம் புளியமரம். இறைவன் புளிய மரத்தின் அடியில் விளங்குவதால் திந்திரிணீச்சுரர் என்றும், திண்டீச்சர முடையார் எனவும் வழங்கப் பெறுகிறார். ஆலய இராஜகோபுரத்தின் அடித்தளம் 50×30 அடி அளவில் உள்ளது. இத்தல கோவிலின் விமானம் வியாச முனிவரால் தாபித்துப் பெற்றது. டிண்டி, முண்டி, கில்லி, கில்லாலி ஆகிய முனிவர்களால் வழிபடப் பெற்ற தலம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், சண்டேசுரர், நவக்கிரகம், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன. இத்தல இறைவனைப் போற்றி திருநாவுக்கரசர் பாடியுள்ளார். இத்தலம் தேவார வைப்புத் தலமாக போற்றப்படுகிறது. கல்வெட்டில் இவ்வூரை 'திருத்திண்டீசுவரம்' என்று குறிக்கப்பெற்றுள்ளது.

5. தாடபுரம்

திண்டிவனத்திலிருந்து வடமேற்கே 14 கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங் வடிவில் அருள்மிகு மாணிக்காஸ்வரர்.

6. ஓலக்கூர்

திண்டிவனத்திலிருந்து வடக்கே 12கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங் வடிவில் அருள்மிகு அகஸ்தீஸ்வரர்.

7. தனியல்

திண்டிவனத்திலிருந்து வடமேற்கே 15 கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

8. மரக்காணம்

திண்டிவனத்திலிருந்து கிழக்காக 36 கி.மீ. மரக்கால்காணோம். கடற்கரைத் தலம். 1000 வருட முற்பட்ட கோவிலாகும். மொட்டை கோபுரத்துடன், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பூமீஸ்வரர். அம்மன் கிரிஜாம் பிகை. பிராகாரத்தில் விநாயகர், சண்முகர், பைரவர், சோமாஸ்கந்தர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. மன்மதன், கன்வர் முனிவர் வழிபட்ட தலம். சோழர்கால திருப்பணி.

9. மண்ணூர்

திண்டிவனத்திலிருந்து கிழக்கே 16கி.மீ. இக்கோவில் 2-73 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் புவனேஸ்வரர். அம்மன் புவனேஸ்வரி.

10. கீழ்சேவூர்

திண்டிவனத்திலிருந்து கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு ஜம்புநாதாசுவரர்.

11. பெருமுக்கல்

திண்டிவனத்திலிருந்து கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 1-19 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு முக்கிய சாளிஸ்சுவரர்.

12. ஓமந்தூர்

திண்டிவனத்திலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஆறு அடிஉயரத்தில் இலிங்கவடிவில் அருள்மிகு பீமேஸ்வரர். விமானம் 30 அடி உயரம் கொண்டது. இக்கோவில் இராஜராஜ சோழனால் கட்டப்பெற்றது. பின்பு வந்த ராஜ நாராயண சம்புவராயர் மேலும்

விரிவுபடுத்தி கட்டுவித்த தலம். திருமணம் ஆகாதவர்கள் இக்கோவில் சிறந்த பிரர்த்தனைத் தலமாக அமைந்துள்ளது.

13. பெரமணந்தூர்

திண்டிவனத்திலிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் புவனேஸ்வரர். அம்மன் புவனேஸ்வரி.

14. உப்புவேலூர்

கிளியனூர்லிருந்து வடக்கே 6கி.மீ. இக்கோவில் 1-26 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருமுக்கீஸ்சுவரர்.

15. ஆலகிராமம்

திண்டிவனத்திலிருந்து தென்மேற்கே 14கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் ஏமதண்டீஸ்வரர்.

16. நெடுமலையனூர்

திண்டிவனத்திலிருந்து தெற்கே 14.கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் இராமலிங்கேசுவரர்.

17. மயிலம்

திண்டிவனத்திலிருந்து தெற்கே 10.கி.மீ. 130அடி உயர சிறுமலையின் மீது 87 செண்ட் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரத்துடன், ஒரு பிராகாரத்துடன் மூலவர் விசுவநாதர். அம்மன் விசாலாட்சி, தீர்த்தம் வராக நதி, தலமரம் புன்னை. சூரசம்ஹாரம் முடிந்ததும் சூரபத்மன் தம்மையும் வாகனமாக ஏற்குமாறு முருகப் பெருமனை வேண்ட, முருகப்பெருமான் வராகநதியின் வடகரையில் உள்ள இத்தலத்தில் தவம் இருக்கக் கூறினார். சூரபத்மன் மயில் வடிவில் தவம் புரிந்தபோது முருகப்பெருமான் மயிலை வாகனமாக ஏற்றார். மயில் போன்ற தோற்றம் கொண்ட மலையாதலால் இத்தலம் மயிலம் எனப் பெயர் ஏற்பட்டது. குன்று தோறாடலில் இத்தலமும் ஒன்றாகும். இங்குள்ள முருகப் பெருமான் நான்கு திருக்கரங்களுடன், தேவியர் இருவருடனும் திருமணக் கோலத்தில் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் அருளியுள்ளார். ஸ்ரீலஸ்ரீ சிவ ஞான பாலைய சுவாமிகள் கள்ளிப்பாலை அருந்தி 100 ஆண்டுகள் யோக நிஷ்டை யில் இருந்து சிவபிரானிடம் ஐக்கியமானார். தினமும் நான்கு கால பூஜை நடை பெறுகிறது. மாத கிருத்திகையில் முகப் பெருமான் தேவியருடன் தங்கமயில் மீது வலம் வருகிறார். இத்தலம் சிறந்த பிரார்த்தனை தலமாகும்.

18. கிளியனூர்

திண்டிவனத்திலிருந்து தென்கிழக்காக 18.கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப் பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

19. கீழ்புதுப்பட்டு

ஒழுந்தியாபட்டிலிருந்து வடகிழக்கே 12.கி.மீ. கடற்கரைத் தலம். இக்கோவில் 77 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மஞ்ஜினீ ஸ்வரர். 550 வருட முற்பட்ட கோவில்.

20. பாதிரிபுலியூர்

திண்டிவனத்திலிருந்து தெற்கே 18.கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் கைலாசநாதர்.

21. புலிச்சப்பள்ளம்


ஒழுந்தியாபட்டிலிருந்து தெற்கே 2.கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப் பளவில் மூலவர் புலீச்சுவரர்.

22. வானூர்

ஒழுந்தியாபட்டிலிருந்து தெற்கே 5.கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் தழுவக்கொழுந்தீஸ்வரர்.

விழுப்புரம் வட்டம்

(விழுப்புரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பனையபுரம்

விண்ணமர்ந்தனமும் மதில்களை விழவெங்கணையாலெய் தாய்விரி
பண்ணமர்ந்தொலி சேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொருபாகமாகிய பிஞ்ஞகா பிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனே கலந் தார்க் கருளாயே

-- திருஞானசம்பந்தர்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 10 கி.மீ. பனங்காட்டூர், புறவார் பனங்காட்டூர் இக்கோவில் 73 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 60 அடி உயரம், 30×25 அடித்தளம் கொண்ட இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்கள் கொண்டு மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பனங்காட்டீஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் புறவம்மை கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கிறார். சிபிச் சக்கரவர்த்திக்குக் கண்கள் வழங்கிய காரணத்தால் நேத்ரோத்து தாகேசுவரர் என வழங்கப் பெறுகிறார். தலமரம் - பனை, தீர்த்தம் பதுமதீர்த்தம். உள்பிராகாரங்களில் விநாயகர், ஆறுமுகர், சனிபகவான், நவக்கிரகம், சூரியன், 63 நாயன்மார்கள், சப்தமாதர்கள், இடபாரூடர், திருமால், கஜலஷ்மி, நால்வர், பிக்ஷாடனர், தக்ஷிணாமூர்த்தி, பிரம்மா, இலிங்கோத்பவர், துர்க்கை, சண்டிகேசுவரர், நடராஜர், சோமாஸ்கந்தர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

முல்லை நிலக் காடுகளால் சூழப் பெற்று இத்தலம் விளங்கியதால் புறவார் பனங்காட்டூர் என வழங்கப்படுகிறது.

சூரியன் வழிபட்ட தலம். ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் ஏழு நாட்களில் ஒவ்வொரு நாள் காலையிலும் சூரிய கதிர்கள் முதலில் சுவாமி மீதும், பின்பு அம்பிகை மீதும் விழுகின்றன.

சிபிச்சக்ரவர்த்தி தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவைக் காத்தற்காகத் தன் கண்களைப் பறித்தளிக்க, இறைவன் அம்மன்னனின் கடமை உணர்வை அறிந்து காட்சிதந்து இழந்த கண்களை மீண்டும் அருளினார். அதனால் இத்தலத்து இறைவனுக்கு கண்பறித்து அருளிய கடவுள் என பெயர் ஏற்பட்டது.

சிவபெருமானை நிந்தித்துத் தக்கன் செய்த வேள்விக்குச் சென்று அவிர்ப்பாகம் உண்ட அனைத்துத் தேவர்களும் சிவபெருமான் கோபத்துக்கு ஆளாயினர். அகோர வீரபத்திரர் சிவபெருமான் கட்டளைப்படி தக்கனது வேள்விச் சாலைக்குச் சென்று தேவர்களுக்குத் தண்டனை தந்தார். தண்டனையால் சூரியன் ஒளியிழந்தான். தான் செய்த தவறுக்கு வருந்தி சிவபெருமானைப் பல தலங்களிலும் வழிபாடுகள் செய்து உலகனைத்திற்கும் ஒளியூட்டும் தனது பழைய உருவத்தை இறைவனிடம் வேண்டிப் பெற்றார். சூரியன் வழிபட்ட தலங்களில் புறவார்பனங்காட்டூரும் ஒன்றாகும்.

இத்தலம் தேவாரப் பாடல்பெற்ற நடுநாட்டுத் தலங்களில் 22இல் 20ஆவது தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுள்ள தலம்.

இத்தலத்தில் மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. முதலாம் குலோத்துங்க சோழன், கோனேரின்மை கொண்டான், பரகேசரி ஆதி ராஜேந்திர தேவன் முதலிய அரசர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்களில் இக்கோவில் திருப்புறவார்பனங்காடுடையார் கோவில் எனவும், இறைவன் பெயர் திருப்பனங்காடுடைய மகாதேவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

2. திருவாமாத்தூர்

மாமாத் தாகிய மாலயன் மால்கொடு
தாமாத் தேடியுங் காண்கிலர் தாள்முடி
ஆமாத் தூரர னேயரு ளாயென்றன்
றேமாப் பெய்திக்கண் டாரிறை யானையே
-- திருநாவுக்கரசர்

விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 6கி.மீ. தாயூர், ஆமாத்தூர், வன்னிவனம், கோமாதுபுரம் என பலவாறு அழைக்கப்படும் இத்தலம் பம்பையாற்றின் கரையில் இக்கோவில் 2-85 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அபிராமேசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் முத்தாம்பிகை சுவாமி சன்னிதியை நோக்கி மேற்கு நோக்கியும் காட்சியளிக்கிறார். தலமரம் - வன்னியும், கொன்றையும். தீர்த்தம் ஆம்பலம் பூம்பொய்கை (குளம்) தண்டதீர்த்தம் (கிணறு) பம்பை (ஆறு) ஆகும். உள்பிராகாரத்தில் மால்துயர் தீர்த்த விநாயகர், முருகன், நடராஜர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரமன், துர்க்கை, பிட்சாண்டனர், சகஸ்ரலிங்கம், சட்டநாதர், காசிவிசுவநாதர், அருணாசலேசுவரர், இராமர், சப்தமாதர், நால்வர், 63 நாயன்மார்கள், சண்டேசுரர், பைரவர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. வெளிப்பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் வட்டப்பலகை என்னும் சத்திய மண்டபம் உள்ளது. கோபுரவாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தவுடன் பெரிய சுதை நந்தியும், பாதாள நந்தியும், கொடிமரம், பலிபீடம் காட்சிதருகின்றன. பிருங்கி முனிவர் வன்னிமரமாக நிற்கும் மண்டபம் சுவாமி, அம்மன் கோவில்களுக்கிடையே உள்ளது. இங்குள்ள வன்னிமரம் மிகவும் பழமையானது.

ஆதியில் பசுக்கள் கொம்புகள் இல்லா திருந்தன அவை சாதுவான விலங்குகள் ஆனமையால் கொடிய விலங்குகளின் தாக்குதலுக்கு உட்பட்டன. தம்இனம் அழிந்து விடுமோ என்றஞ்சிய பசுக்கள் ஆமாத்தூர் இறைவனை நோக்கித் தவமிருந்தன. இறைவன் பசுக்களுக்கு காட்சி தந்து அவற்றின் துயர்போக்கிக் கொம்புகளை அளித்து உதவி செய்தமையால் இறைவன் எழுந்தருளிய இத்தலம் ஆமாத்தூர் என வழங்கப்படுகிறது.

சிவபெருமானை மட்டும் பிரித்து வழிபட்ட பிருங்கி முனிவர் இறைவியின் வசையால் வன்னிமரமாகிப் பின் இருவரையும் வழிபட்டு அருள் பெற்றச் சிறப்புடையது.

கோடி என்னும் பெயரிய முனிவரும், இராமபிரானும் வழிபட்டு அருள் பெற்ற தலம்.

தம்பியை வஞ்சித்துப் பொருள் சேர்த்த அண்ணன் பொய் கூறியது காரணமாக தனது ஊர் செல்லும் இடைவழியில் வட்டப்பாறையின் கடவுளாணையால் நாகமொன்று கடித்து உயிர்துறந்தனன் என்று இப்பலகையின் பெருமை பேசும் தலம்.

நடு நாட்டில் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற 22 திருத்தலங்களில் இத்தலம் 21ஆவது தலமாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடியருளிய 5 தேவாரத் திருப்பதிகங்களும் இத்தலத்து முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் பாடியருளிய நான்கு திருப்புகழ் பாக்களும், இரட்டைப் புலவர்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம், வடலூர் இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பா, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இத்தலத்தில் தங்கிப் பாடிய திருவாமாத்தூர் புராண நூல் இத்தல இறைவர் பெருமைகளைப் கூறும்.

புலவர் புராணம் பாடிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சமாதி கூடிய இடத்தில் ஆலயமும், கௌமார மடமும் அமைந்துள்ள தலம்.

இரட்டைப் புலவர் கலம்பகப் பாட்டால் பம்பையாறு இத்தலத்தில் திசை திரும்பியது எனக் கூறப்படுகிறது.

இக்கோவிலுள்ள கல்வெட்டுக்களில் கோப்பரகேசரிவர்மன், முதலாம் இராசராசன், முதலாம் இராஜேந்திர சோழன், வீரராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் முதலானோர் காலங்களைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக் களில் இறைவர் திருவாமாத்தூர் ஆள்வார், திருவாமாத்தூர் உடைய பரமசுவாமி என்னும் பெயர்களும், இவ்வூரை சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டுத் தேவ தானம் திருவாமாத்தும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. பங்குனி மாதம் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. பனமலை

விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 22.கி.மீ. இக்கோவில் 12-00 ஏக்கர் 64 செண்ட் நிலப்பரப்பு கொண்ட மலையின் மேல் 1-50 ஏக்கர் பரப்பளவில் மூலவர் தாளகிரீஸ்வரர், அம்மன் அஸ்ததாளாம்பிகை. விமானம் நவகோஷ்டவிமானம் தீர்த்தம் கங்கை மூன்று சுனைகள் உள்ளன. தலமரம் வில்வம். உள்பிராகாரத்தில் சோமாஸ்கந்தர் நடராஜர், துர்க்கை உள்ளனர். இக்கோவில் 1500 வருட முற்பட்ட கோவில்.

4. சங்கீதமங்கலம்

பனமலைக்கு வடகிழக்கே 3.கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மருதீஸ்வரர்.

5. செஞ்சிகுன்னத்தூர்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 23கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நடுக்கம் தீர்த்த ஈஸ்வரர்.

6. பிரம்மதேசம்

விழுப்புரத்திலிருந்து வடக்காக 20கி.மீ. இக்கோவில் 4-01 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர், அம்மன் பிரஹன்நாயகி தலமரம் வில்வம், தீர்த்தம் பிரம்மதீர்த்தம் பிரம்மன் மற்றும் தேவர்களுக்கு காட்சியளித்த தலம். தேவாருஷலிங்கம். உள்பிராகாரத்தில் பரிவார மூர்த்தங்கள் உள்ளன. பல்லவ மன்னர்களால் இக்கோவில் கட்டப் பெற்றகோவில். பின்பு வந்த ஹைதர் அலி இக்கோவிலை கொள்ளையடித்தது மட்டுமல்லாமல் வெளிமதில், அனேக மண்டபங்களை இடித்து தள்ளினான். சுவாமி, அம்மன் மூலவர் சிலை மட்டும் சேதமுறாமல் தப்பியது. இக்கோவில் அனேக கல்வெட்டுக்கள் உள்ளன.

7. அன்னியூர்

விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 18கி.மீ. இக்கோவில் 53 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு இராமநாத ஈஸ்வரர், அம்மன் திரிபுரசுந்தரியம்மன். தீர்த்தம் இராமர் தீர்த்தம். தலமரம் வில்வம். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்ரமண்யர், நவகிரகம், நால்வர், திருஞானசம்பந்தர், நடராஜர், ஆறுமுகர் முதலிய சன்னிதிகள் உள்ளன. இராமர் பூஜை செய்த தலம். சுந்தர மூர்த்திசுவாமிகள் வணங்கிய தலம். பல்லவ மன்னர்களால் கட்டப்பெற்ற கோவில். கல்வெட்டுக்கள் உள்ளன.

8. ஈசாலம்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 24கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதஈஸ்வரர்.

9. தென்பேர்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 16கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

10. போரூர்

அன்னியூருக்கு தெற்கே 2 கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில்

மூலவர் கைலாசநாதர்.

11. ஆசூர்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 15கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலந்துறைஈஸ்வரர்.

12. கஞ்சனூர்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 15கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

13. வீராமூர்

விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 12கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சித்தநாதசுவாமி.

14. சாத்தனூர்

விழுப்புரத்திலிருந்து வடக்கே 9 கி.மீ. இக்கோவில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலீஸ்வரர்.

15. விக்ரவாண்டி

விழுப்புரத்திலிருந்து வடக்கே 12கி.மீ. இக்கோவில் 84 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கவடிவில் புவனேஷ்வரர், அம்மன் புவனேஷ்வரி. 1000 வருட முற்பட்ட கோவில். மற்றோரு கோவில் 1-30 ஏக்கர் பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

16. கிடார்

விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 14கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியநாதர்.

17. மதுரைப்பாக்கம்

விழுப்புரத்திலிருந்து வடகிழக்கே 16கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

18. விழுப்புரம்

திண்டிவனத்திலிருந்து தெற்காக 37கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர், அம்மன் பிருகந்நாயகி. 350 வருட முற்பட்ட கோவில். இவ்வூரின் தென் கொடியில் ஏகாம்பரநாதர், அம்மன் காமாட்சி. அருகில் பெருமாள் கோவில் உள்ளது.

19. வக்கூர்

விழுப்புரத்திலிருந்து வடகிழக்கே 12கி.மீ. 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க வடிவில் திருமூலநாதஸ்வரர்.

20. வடனூர்

விழுப்புரத்திலிருந்து கிழக்கே 22 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரேசுவரர், அம்மன் மீனாட்சி.

21. சாலைஅகரம்

விழுப்புரத்திலிருந்து கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

22. கோலியனூர்

விழுப்புரத்திலிருந்து கிழக்கே 5 கி.மீ. கோலியபுரநல்லூர். இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் 40 அடிஉயர இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு வாலீஸ்வரர் மேற்கு நோக்கியுள்ளார், அம்மன் பெரிய நாயகி. விமானம் 30 அடி உயரம் கொண்டு முழுதும் கருங்கல்லால் கட்டப் பெற்றுள்ளது. கல்வெட்டில் இவ்வூரை கோலியபுரநல்லூர் என்றும் இறைவர் திருவாலீசுரமுடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் இத்தல முருகனைப் போற்றி பாடியுள்ளார்.

23. வி. புதூர்

விழுப்புரத்திலிருந்து கிழக்கே 12 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அபிராமீஸ்வரர்.

24. பெரும்பாக்கம்

விழுப்புரத்திலிருந்து மேற்கே 7 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

25. ஊர்கோடி

விழுப்புரத்திலிருந்து மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அபிராமேஸ்வரர்.

26. வளவனூர்

விழுப்புரத்திலிருந்து கிழக்கே 13 கி.மீ. புரௌடதேச மகாராஜபுரம். இக்கோவில் 1-33 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஜகன்னாதாசுவரர், அம்மன் அபிராமியம்மன். தலமரம் - வன்னி. பிராகாரத்தில் பரிவார ஆலயங்கள் உள்ளன. சித்திரை வருடப் பிறப்பு முதல் 7 நாட்களில் சுவாமி, அம்மன், விநாயகர், முருகன் ஆகிய இறை உருவங்கள் மீது சூரிய ஒளி விழுகிறது.

முதலாம் இராசேந்திரசோழன், முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. இவ்வூரின் தென்மேற்கே லட்சுமி நாராயணப் பெருமாள் கோவில் உள்ளது. மற்றொரு சிவன் கோவிலான பாடலீஸ்வரர் ஒரு ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைந்த கோவிலாகும்.

27. மரகதபுரம்

விழுப்புரத்திலிருந்து தென்மேற்கே 10கி.மீ. பொண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அகத்தீஸ்வரர்.

28. வேலியம்பாக்கம்

விழுப்புரத்திலிருந்து தெற்கே 10 கி.மீ. பொண்ணையாற்றின் வடகரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மன்னாதீஸ்வரர்.

29. பள்ளிப்புதுப்பட்டு

விழுப்புரத்திலிருந்து கிழக்கே 22 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதாஈஸ்வரர்.

30. மண்டகபட்டு

விழுப்புரத்திலிருந்து கிழக்காக 22கி.மீ. மலட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர் சுயம்புலிங்கவடிவில் காட்சியளிக்கிறார்.

31. பாக்கம்

மண்டகபட்டிலிருந்து தென்கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 36 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீசுவரர்.

32. வடவம்பலம்


விழுப்புரத்திலிருந்து தென்கிழக்கே 14கி.மீ. பொண்ணையாற்றின் வடகரைக்கும், மலட்டாற்றின் தென்கரைக்கும் இடையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

33. ராம்பாக்கம்

வளவனூரிலிருந்து தெற்கே 10 கி.மீ. தென்பெண்ணையாற்றின் வடகரைக்கும், மலட்டாற்றின் தென்கரைக்கும் இடையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திரிபுராந்தகர்.

உளுந்தூர்பேட்டை வட்டம்

(விழுப்புரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருநாவலூர்

கோவலன் நான்முகன் வானவர் கோனுங்குற் றேவல் செய்ய
மேவலர் முப்புரம் தீயெழு வித்தவர் ஓரம்பினால்
ஏவலனார் வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட
நாவல னார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே

-- சுந்தரர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடகிழக்கே 14 கி.மீ. திருத்தொண்டீச்சரம். திருநாமநல்லூர் என்று தற்போது அழைக்கப் படும் இத்தலம் கெடிலம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 7-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோ புரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பக்தஜனே சுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் சுந்தராம்பிகை கிழக்கு நோக்கி தனிச்சன்னிதியில் காட்சியளிக்கிறார். தலமரம் நாவல். தீர்த்தம் கோமுகி தீர்த்தம். இது கோவிலின் மேல்பால் ஓடையாக உள்ளது. மற்றும் சூல, கருட, சக்கிர, கெடிலநதி, பெண்ணையாறு தீர்த்தங்களும் உள்ளன.

நாவல் மரத்தை தலமரமாகக் கொண்டுள்ள தலமாதலின் நாவலூர் எனப்படுகிறது. பார்வதிதேவி இத்தலத்தில் எழுந்தருளி சிவபெருமானைப் பூசித்து அவர் மனம் மகிழ இறைவரை மணம்புரிந்த தலம்.

திருமால் வழிபட்டு இரணியனைக் கொன்று தேவர்களையும், மக்களையும் காத்ததற்கு நரசிங்க அவதாரம் எடுக்கும் ஆற்றலைப் பெற்ற தலம். சிவப்பிரியர் என்பார் சிவபெரு மானைப் பூசித்துச் சண்டீசபதம் பெற்ற தலம். ஆதிசேடன் உமிழ்ந்த நஞ்சினால் கருநிறமடைந்த கருடன் பூசித்து விடவாதை நீங்கிய தலம்.

இத்தலம் சடையனாரும், இசைஞானி யாரும் வாழ்ந்து முத்திபெற்ற சிறப்புடைய தலமாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம் செய்தருளிய பெருமை உடையது. நரசிங்க முனையரையர் இத்தலத்து இறைவனை மிக்க பக்தி கொண்டு வழிபட்ட தலம்.

முதல் பிராகாரத்தில் வலதுபக்கத்தில் பரவையார் சங்கிலியார் ஆகியோருடன் கூடிய நிலையில் சுந்தரமூர்த்தி சுவாமி களுக்குத் தனிக்கோவில் அமைதுள்ளது. நின்ற நிலையில் தக்ஷிணாமூர்த்தி காட்சியளிப்பதை இத்தலத்தில் காணலாம். சுவாமி அம்மன் கோவில்களுக்கு இடையே திருமால் வழிபாடு செய்ததற்கு ஏற்ப அவருக்கும் கோவில் அமைந்திருப்பது சிறப்புடையதாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் 8ஆவது தலமாகும். சுந்தரர் அருளிய திருப்பதிகம் கொண்டது. இத்தல முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். தலபுராணம் திருவெண்ணெய் நல்லூர் இராசப்ப கவிராயர் அவர்கள் பாடியது. 514 திருவிருத்தம் கொண்டதாகும்.

முதற்பராந்தக சோழனது 29வது ஆண்டு கல்வெட்டுக்களில் இவ்வூரைத் திருமுனைப்பாடித் திருநாவலூர்த் திருத் தொண்டீசுவரமான இராஜாதித்த ஈஸ்வரம் என்றும், இத்தலத்தை குறிக்கும் கல்வெட் டுக்கள் அனைத்தும் திருமுனைப்பாடி திருநாவலூர் என்றே குறிக்கின்றன. இராசாதித்தன் இக்கோவிலை கருங்கல்லால் கட்டி அதற்குத் திருநாவலூர்த் திருத்தொண் டீசுவரமான இராஜாதித்த ஈஸ்வரம் என்று பெயர் வைக்கப்பட்ட கல்வெட்டுக்களும் இங்குள்ளன.

திருச்சிற்றம்பலம்

2. நெய்வெணை

நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறும்
சொல்வண மிடுவது சொல்லே

-- திருஞானசம்பந்தர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடமேற்காக 15 கி.மீ. திருநெல் வெண்ணெய். இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரமும், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வெண்ணெயப்பர், அம்மன் நீலமலர்க் கண்ணி. தீர்த்தம் பெண்ணையாறு. சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகியோர் வழிபட்ட திருத்தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 10ஆவது தலமாகும். திருஞானசம்பந்தர் அருளிய தேவார திருப்பதிகம் கொண்ட தலம். இத்தலத்தை வழிபடுவோர் இடரிலர் என்றும், பழியிலர் என்றும் பாக்கியமுடையவராவர் என்றும் நெல்வெண்ணெய் இறைவரைக் காண்பவர் அச்சமும் அருவினையும் இலராவர் என்றும், அவரது புகழை விரித்துரைப்போர் உயர்ந்தோர் என்றும், கற்றறிந்தோர் நெல்வெண்ணெய்ப் பரமரைப் பரவுதலே கடன் என்றும் இத்திருப்பதிகத்தில் ஞானசம்பந்தர் தெரிவித்தருள்கிறார்.

இக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்களில் முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன்,பல்லவ மன்னரில் சகலபுவன சக்கரவர்த்தி கோப் பெருஞ்சிங்க தேவர், விசயநகர பரம்பரையில் வீரப்பிரதாப கிருஷ்ணகேது மகாராயர் இவர்கள் காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் இறைவர் ''பொற்குடங் கொடுத்தருளிய நாயனார்'' என்னும் பெயரில் குறிக்கப் பட்டுள்ளது. இவ்வூரை மிலாடு ஆகிய சனனாதவள நாட்டுக் குறுக்கைக் கூற்றத்திற்கு உட்பட்ட ஊராகக் குறிக்கப் பட்டுள்ளது. இரண்டு கால பூஜை. மாசி மகம் முக்கிய உற்சவமாகக் கொண்டாடப் படுகிறது.

3. கிராமம்

ஆர்த்தான்காண அழல்நாகம் அரைக்கு நாணா
அடியவர்கட் கன்பன்காண் ஆனைத்தோலைப்
போர்த்தான்காண் புரிசடைமேல் புனலேற்றான் காண்
புறங்காட்டி லாடல் புரிந்தான் தான்காண்
காத்தான்காண் உலகேழுங் கலங்கா வண்ணங்
கனைகடல்வாய் நஞ்சதனைக் கண்டத் துள்ளே
சேர்த்தான்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண் அவனென் சிந்தை யானே

-- திருநாவுக்கரசர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடகிழக்கே 23 கி.மீ. திருமுண்டீச்சரம், முடீச்சரம். மலட்டாற்றின் தென் கரையில் இக்கோவில் இராஜகோபுரம், ஒரு

பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவலோகநாதர், அம்மன் கானார்குழலி. தலமரம்-வன்னி தீர்த்தம் பிரமதீர்த்தம். பிராகாரத்தில் பரிவார மூர்த்தங்கள் அமைந்துள்ளன. தக்ஷிணா மூர்த்தி கல்லால மரம் இல்லாமல் மலைமீது நந்தி தேவரை வாகனமாகக் கொண்டு காட்சியளிக்கிறார்.

சிவபெருமான் திருக்கோவில்களில் வாயில் காவலர்களாக விளங்கிய திண்டி, முண்டி என்பாருள் திண்டி வழிபட்ட தலம். திண்டீச்சுரம் எனவும், முண்டிவழிபட்ட தலம் முண்டீச்சரம் எனவும் பெயர் பெற்றன எனத் தலபுராணம் கூறுகிறது. முடீச்சரம் என்பதே இத்தலத்தின் பழம்பெயராக இருந்தது என்றும் அப்பெயரே பின்னர் திருமுண்டீச்சரம் எனவழங்கப் பெற்றது எனவும் கல்வெட்டுக்களால் அறியலாம். கிராமம் என்னும் பெயரும் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ள பழமையான பெயராகும்.

இத்தல இறைவர் இங்குள்ள திருக்குளத்தில் அழகிய தாமரை மலர்மீது விளங்கியிருந்தது. சொக்கலிங்க மகாராஜா என்பவரால் பிரதிட்டை செய்யப்பெற்றவர் எனக் கூறப்படுகிறது.

வீரபாண்டியனுக்குப் பொக்கணம் (திருநீற்றுப்பை) அளித்த மூர்த்தியாவர்.

பிரமன், தேவேந்திரன் வழிபட்ட தலம். தேவாரப் பதிகம் பெற்ற நடு நாடுத் தலங்களில் இத்தலம் 19வது தலம். திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றத் தலம்.

கல்வெட்டுக்களில் இறைவர் ஆற்றுத்தளி மூலஸ்தாவம் உடையார், பொக்கணம் கொடுத்தருளிய நாயனார் என்றும் இவ்வூரை முடியூர் நாட்டுக் கிராமம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு கால பூஜை. சித்திரை மாதத்தில் அப்பர் திருவிழா நடைபெறுகிறது.

4. காட்டுசெல்லூர்

இறையூர்க்கு வடக்கே 8 கி.மீ. இக்கோவில் 44 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேசுவரர் 500 வருட முற்பட்ட கோவில்.

5. ஆமூர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடக்கே 18கி.மீ. கெடிலம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 72 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக மார்க்கசகாயர். 1000 வருட முற்பட்ட கோவில்.

6. ஆதனூர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடக்கே 15கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலே சுவரர். 600 வருட முற்பட்ட கோவில்.

7. ஈஸ்வரகண்டநல்லூர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடகிழக்கே 25கி.மீ. கெடிலம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாத சுவாமி. 400 வருட முற்பட்ட கோவில்.

8. ஒரத்தூர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடக்கே 10கி.மீ. கெடிலநதிக்கு தென்கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் அருள்மிகு மத்யஞானசிதம்பரேசுவரர். அகத்தியர், பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலியோர் வழிபட்ட தலம். திருநாவுக்கரசர், சுந்தரர், இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் இத்தல இறைவனை வழிபட்டுள்ளனர். இரண்டு நடராஜர் உள்பிராகாரத்தில் காலபைரவர், அக்னி, சரஸ்வதி, ஞானதண்டாயுதபாணி முதலிய சன்னிதிகள் உள்ளன.

தலபுராணம் காசிவாசி நடராஜ சுவாமிகள் இயற்றியுள்ளார். உக்ரபாண்டியன், பராந்தகன், மலையமான் மன்னர்களால் இக்கோவிலுக்கு நிலதானம் வழங்கியதை கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. கர்நாடகப் போரில் இத்தலம் சிதில மடைந்தது. ஒரு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

9. குஞ்சரம்

பிடாகத்திலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 2-33 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கவடிவில் சைலநாதஈஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

10. சேந்தமங்கலம்

உளுந்தூர்பேட்டையிலிருந்து வடகிழக்கே 15கி.மீ. கெடிலம் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஆபத்சகாயஈஸ்வரர். 2000 வருட முற்பட்ட கோவில்.

11. உளுந்தூர்பேட்டை

விருத்தாசலத்திலிருந்து வடக்கே 23கி.மீ. இக்கோவில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மேஷபுரீஸ்சுவரர். 400 வருட முற்பட்ட கோவில்.

12. பிடாகம்

உளுந்தூர்பேட்டையிலிருந்து மேற்கே 10கி.மீ. இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 150 அடி உயர இராஜகோபுரமும், 5 பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு அர்த்தநாதஈஸ்வரர், அம்மன் பெரியநாயகி யம்மன் தனிச் சன்னிதியில் உள்ளார். நந்தி மேற்கே பார்த்தபடி உள்ளது. தேவேந்திரன், மிருகண்டு முனிவர் வழிபட்ட தலம். இராஜராஜ சோழ மன்னன் வேட்டைக்கு வந்தபோது இத்தலத்தில் இவ்லிங்கத்தை கண்டு, காட்டை அழித்து பெரியதொரு கோவிலாக கட்டுவித்தான் எனக் கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. நான்கு கால பூஜை. ஐப்பசி, ஆனி மாதங்களில் உற்சவம் நடைபெறுகிறது.

13. பாலி

உளுந்தூர்பேட்டையிலிருந்து தென்மேற்கே 7கி.மீ. இக்கோவில் 50செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 300 வருட முற்பட்ட கோவில்.

14. குரும்பூர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து தெற்கே 5கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர், அம்மன் விசாலாட்சி. 350 வருட முற்பட்ட கோவில்.

நவத்துவாரம்

கண்கள், காதுகள், மூக்குத் துளைகள், வாய், மலத்துளை, நீர்த்துளை என்னும் ஒன்பது உடல் வாயில்கள்.

நவதாரனை


சதுரங்க தாரணை, சத்தாரணை, சித்திரதாரணை, நாமதாரணை, பேத தாரணை, மந்திரதாரணை, மாயாயதாரணை, வச்சிர தாரணை; வத்துத்தாரணை என்னும் ஒன்பது அவதான வகைகள்; யோகத்தில் ஒன்பது வகைப்பட்ட மனோதாரனை.

நவதானியம்

உளுந்து, நெல், எள்ளு, கடலை, கொள்ளு, கோதுமை, அவரை, பயிறு, துவரை.

பண்ருட்டி வட்டம்

(கடலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பண்ருட்டி

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

-- திருநாவுக்கரசர்

விழுப்புரத்திலிருந்து தென்கிழக்காக 23 கி.மீ. பண்ணுருட்டி, திருவதிகை, திருவதிகை வீரட்டானம். கெடில ஆற்றின் வடகரையில் இக்கோவில் 7-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரங் களுடன், 110 அடி உயர 7 நிலை இராஜகோபுரமும் கொண்டு இறைவன் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீரட்டேசுவரர். 16 கோணத்துடன் கிழக்குநோக்கியுள்ளார், அம்மன் திரிபுரசுந்தரியம்மன் தனிச்சன்னிதி யில் உள்ளார். தலமரம் கொன்றை சக்கர, சூல, கருட தீர்த்தங்கள். உள்பிராகாரத்தில் விநாயகர், திரிபுராந்தகர், தட்சிணாமூர்த்தி, நடராஜர், சண்டீசர், சூரியன், பைரவர், நால்வர், பஞ்சபூதலிங்கம், நான்முகலிங்கம், திருமால், 63 நாயன்மார்கள், ஆறுமுகர், நவக்கிரகம், சேக்கிழார், திலகவதி யம்மையார், திருநாவுக்கரசு சுவாமிகள் ஆகியோர் சன்னிதிகள் உள்ளன.

வீரட்டானம் இது ஆலயப் பெயர். இங்கு இறைவனது வீரச்செயல் திரிபுர சம்ஹாரம். திருமால்,பிரமன், திரிபுரஅசுரர் மூவர், கருடன், பாண்டவர், திருமூலர், திலகவதியார், மகேந்திர வர்மன் முதலியோர் வழிபட்ட பெருமையுடையது. இறைவனது எட்டுவீரட்டத் தலங்களில் இத்தலம் ஒன்றாகும். திரிபுரஅசுரர் மூவரான வித்துண்மாலி, தாருகாக்ஷன், கமலாக்ஷன் ஆகிய மூவரையும் சம்ஹாரம் செய்த தலம்.

திருநாவுக்கரசரது சூலை நோய் நீங்கப் பெற்ற தலம். இவர் தமக்கையார் திலகவதியார் திருத்தொண்டு செய்த தலம். இக்கோவிலின் கருவறை விமானம் பெரியது. நிழல் தரையிற் சாயாதபடியும் உள்ள தலம். சுந்தரமூர்த்தி நாயனார்க்கு இறைவன் திருவடி தீக்ஷைசூட்டிய தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 7ஆவது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய திருப்பதிகங்கள் கொண்டது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ள தலம். தலபுராணம் ஸ்ரீ அப்பாவையரால் இயற்றப்பட்டது.

கல்வெட்டுக்களில் இவ்வூரை அதியரையமங்கலம், அதிராஜமங்கலம், அதிராசமங்கலியபுரம், அதிகை என்றும், இறைவர் திருவீரட்டானமகாதேவர், திருவீரட்டானமுடையார், திருவீரட்டான முடைய நாயனார், அதிகைநாயகர் என்னும் திருப்பெயர்களால் வழங்கப்பெற்றுள்ளன.

நான்கு கால பூஜை. தை மாதத்திலும், வைகாசி மாதத்திலும் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

2. திருத்துறையூர்

மலையாரரு வித்திரள் மாமணி யுந்திக்
குலையாரக் கொணர்ந் தெற்றிவூர் பெண்ணை வடபால்
கலையார் அல்குற் கன்னியர் ஆடுந் துறையூர்த்
தலைவா உனை வேண்டிக்கொள் வேந்தவ நெறியே

-- சுந்தரமூர்த்தி

பண்ருட்டியிலிருந்து வடமேற்கே 8 கி.மீ. இக்கோவில் மேற்குநோக்கிய இறைவன் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிஷ்டகுருநாதேசுவரர், பசுபதீசுவரர் என்பன அம்மன் சிவலோகநாயகி என்றும் பூங்கோதை நாயகி தனிச்சன்னிதியில் வடக்கு நோக்கியுள்ளார். தலமரம் கொன்றை, தீர்த்தம் சூர்யபுஷ்கரிணி. உள்பிராகாரத்தில் நர்த்தன கணபதி, பாலசுப்ரமண்யர், நடராஜர், நால்வர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை, சண்டேசுவரர், வரதராஜப் பெருமாள், சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தல இறைவனை சூரியன், பிரமன், திருமால், இராமர், சீதா, பீமன், அகத்தியர், நாரதர் முதலியோர் வழிபட்ட தலம்.

தேவாரம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 15 வது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் கொண்டது. இறைவன் சுந்தரருக்கு திருவடி சூட்டிக் குருவடிவுடன் எழுந்தருளி அருமறைகளை உபதேசித்த தலம்.

சந்தானாசாரியருள் சிவஞான சித்தியார் என்னும் அருள்நூலை இயற்றிய சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயருடைய அருணந்தி சிவாசாரியார் அவதரித்து வாழ்ந்து வீடுபெற்ற தலம். இவருடைய குருமூர்த்தம் திருக்கோவிலுக்கு வெளியில் கிழக்கு நோக்கிச் சுவாமி சன்னிதியைப் பார்த்த நிலையில் உள்ளது. கோவிலுக்கு எதிரே தீர்த்தம் உள்ளது.

அருணகிரிநாதர் இத்தலத்து முருகப் பெருமான் மீது இரண்டு திருப்புகழ்ப் பாடல்கள் அருளியுள்ளார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இத்தலத்து இறைவர் மீதும், இறைவி மீதும் பாடிய இரண்டு பதிகங்கள் உள்ளன. சேக்கிழார் பெருமான், சுந்தரர் இத்தலத்திற்கு எழுந்தருளித் தவ நெறி வேண்டியதைப் பெரிய புராணத்தில் குறித்துள்ளார்.

இக்கோவில் கல்வெட்டுக்களில் இறைவர் தவநெறி ஆளுடையார் என்றும் இவ்வூரை ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடித் திருத்துறையூர் என்றும், ராஜராஜ வளநாட்டு திருமுனைப்பாடி கயப்பாக்கை நாட்டுத் திருத்துறையூர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி விசாகம் உற்சவம் நடைபெறுகிறது.

3. சித்தவடம்

பண்ருட்டிக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இறைவன் சுயம்புலிங்கமாக சிதம்பரேசுவரர் மேற்குநோக்கியுள்ளார், அம்மன் சிவகாமியம்மை. பிராகாரத்தில் விநாயகர், முருகன், அருணாசலேசுரர், நால்வர் முதலிய சன்னிதிகள் உள்ளன. சுந்தரர் வரலாற்றில் இறைவன் அவருக்குத் திருவடிதீட்சை செய்த சிறப்பும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் 'சித்தவடமும் அதிகைச் சேணுயர் வீரட்டமும்' எனக் குறிப்பிடுகிறார். தேவார வைப்புத்தலமாக போற்றப்படுகிறது. இரு கால பூஜை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

4. மேல்பட்டம்பாக்கம்

பண்ருட்டிக்கு கிழக்கே 10கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர்.

5. நெல்லிக்குப்பம்

பண்ருட்டிக்கு கிழக்கே 15கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ளது. இக்கோவிலின் மூலவர் பூலோகநாதர்.

6. திருக்கண்டீஸ்வரம்

நெல்லிக்குப்பத்திலிருந்து ஒரு கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக நடனபதீஸ்வரர். இக்கோவிலுக்கு தென்கிழக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சோழவல்லி

என்னுமிடத்தில் 22 செண்ட். நிலப்பரப் பளவில் மூலவர் கைலாசநாதர்.

7. கொங்கரயானூர்

பண்ருட்டியிலிருந்து கிழக்கே 8கி.மீ. பெண்ணையாற்றின் தென்கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சிங்காரநாத ஈஸ்வரர்.

8. அவையனூர்

பண்ருட்டியிலிருந்து வடமேற்கே 14கி.மீ. பெண்ணையாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அஷ்டமூர்த்தி ஈஸ்வரர்.

9. பனப்பாக்கம்

பண்ருட்டியிலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்காமீஸ்வரர்.

10. பூங்குணம்

பண்ருட்டியிலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தர்மேஸ்வரர்.

11. கொட்லம்பாக்கம்

பண்ருட்டிக்கு வடமேற்கே 2கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

12. ஐதனூர்

நெல்லிக்குப்பத்திலிருந்து தெற்கே ஒரு கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதிபுரீஸ்வரர்.

13. சிறுவாத்தூர்

பண்ருட்டிக்கு மேற்கே 4கி.மீ. கெடில ஆற்றின் வடகரையில் இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதசுவாமி.

14. சேமக்கோட்டை

பண்ருட்டிக்கு மேற்கே 7கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாதர்.

15. திருவாமூர்

பண்ருட்டியிலிருந்து மேற்கே 8கி.மீ. கெடில ஆற்றின் வடகரையில் இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பசுபதீசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் திரிபுரசுந்தரி யம்மன் தெற்கு நோக்கியும் உள்ளனர். பிராகாரத்தில் விநாயகர், முருகன், மகாலஷ்மி, லஷ்மிநாராயணர், சுவாமி சன்னிதிக்கு எதிரில் திருநாவுக்கரசு நாயனார் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். தீர்த்தம் கெடிலநதி. தலமரம் கொன்றை மரம். திருநாவுக்கரசர் பிறந்த தலம். இத்தலத்திற்கு தனித் தேவாரத் திருப்பதிகம் இல்லையாயினும் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய பசுபதி திருவிருத்தம் இத்தலத்து இறைவரைக் குறித்தே அருளிச் செய்யப்பெற்றது எனலாம். இத்தலத்தின் பெருமையைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் சிறப்பித்துக் கூறுகிறார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்குள்ளது. திருநாவுக்கரசு சுவாமிகள் திருவவதாரம் செய்தருளிய இடம் இக்கோவிலின் தென்மேற்கே உள்ளது. பங்குனி ரோகிணி, சித்திரைச் சதயத் திருநாளில் அப்பருக்கு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

16. செம்மேடு

திருவாமூர்க்கு தென்கிழக்கே 4கி.மீ. கெடில ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 1-01 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிசுவநாதர்.

17. வேககொல்லை


நெய்வேலியிலிருந்து வடகிழக்கே 13கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வீராதீஸ்வரர்.

18. பேர்பெரியான்குப்பம்

நெய்வேலிக்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 1-66 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அமிர்தஈஸ்வரர்.

கடலூர் வட்டம்

(கடலூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. கடலூர்

முன்னநின்ற முடக்கான் முயற்கருள் செய்துநீள்
புன்னை நின்று கமழ் பாதிரிப் புலியூருளான்
தன்னைநின்று வணங்குந் தனைத்தவ மில்லிகள்
பின்னைநின்ற பிணி யாக்கையைப் பெறுவார்களே

-- திருஞானசம்பந்தர்



பாண்டிச்சேரிக்கு தெற்கே 20கி.மீ. கூடலூர், திருப்பாதிரிப்புலியூர், பாடலிபுரம், வடபுலியூர், பாதிரிப்பதிபுரிசை, உத்தராபுரம், கெடில நதிக்கரையில் இக்கோவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரத்துடன், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பாடலேசுவரர், அம்மன் பெரிய நாயகி தனிச்சன்னிதியில் இரண்டு பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். தலமரம் பாதிரிமரம் தீர்த்தம்-பிரம்ம தீர்த்தம் (க்டல்), சிவகர தீர்த்தம் (குளம்), கெடிலநதி, தென் பெண்ணைநதி.

விநாயகர் சொன்னவாறறி விநாயகர் சுவாமி கோவிலில் பரிவார தெய்வங்கள் அனைவரும் உள்ளனர். பாதிரி த்லமர மானதாலும், புலிக்கால் முனிவராகிய வியாக்ரபாதர் வழிபட்ட சிறப்பாலும் இத்தலம் பாதிரிப்புலியூர் என வழங்குகிறது.

உமாதேவியார் சிவபெருமானின் கட்டளைப்படி இத்தலத்தையடைந்து பாதிரிமரத்தின் அடியில் தங்கித் தவம் புரிந்து இறைவனை மணம் புரிந்த தலம். மங்கண முனிவர் தூமயமுனிவர் சாபத்தால் முடங்கிய கால்களோடு முயலுருவம் எய்தி இத்தலத்து இறைவனை வழிபட்டுச் சாபநீக்கமும், முக்திப்பேறும் எய்தியதலம். திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மை அமணர்கள் கல்லோடு பிணைத்துக் கடலில் இட்டபோது அவர் 'சொற்றுணை வேதியன்' திருப்பதிகம் பாடிக் கல்லே தோணியாக மிதந்துவரக் கரையேறிய தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 18ஆவது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருப்பதிகம் கொண்டது. அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் அருளியுள்ளார். சிதம்பரநாத முனிவர் இவ்வூர்த் தல புராணமும், தொல்காப்பியத் தேவர் திருப்பாதிரிப் புலியூர் கலம்பகமும் இயற்றியுள்ளார். பட்டினத்தார் பாடல்களை யும் பெற்றுள்ள தலம்.

கல்வெட்டுக்களில் இவ்வூரை வடகரை இராஜேந்திர சோழ வளநாட்டு மேல்கால் நாட்டுப் பிர்மதேயம் திருப்பாதிரிப்புலியூர் எனவும், இறைவர் திருக்கடைஞாழல் பெருமான் அடிகள், திருக்கடைஞாழல் ஆழ்வார், தோன்றாத் துணை ஆளுடையார் என்றும் பெயர்களால் குறிக்கப்படுகின்றன. ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலயம் சன்னிதி வீதியில் அமைந்துள்ளது. நான்கு கால பூஜை. வைகாசிப் பெருவிழா, சித்திரைச் சதயப் பெருவிழாவில் மூன்றாம் நாளில் அப்பர் கடலில் கல்லையே தெப்பமாக கொண்டு கறைமேறிய ஐதீகவிழா நிகழ் கிறது. மேலும் இவ்வூரில் பர்வதவர்த்தினி சமேத இராமலிங்கர் திருக்கோவிலும், காசிவிஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளது.

திருச்சிற்றம்பலம்

2. திருமாணிகுழி

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு
பங்கர்புன றங்கு சடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர் மகிழ்ந்துறைவிடம்
கன்னியின வாளை குதி கொள்ளவிள
வள்ளைபட ரள்ளல் வயல்வாய்
மன்னியின மேதிகள் படிந்துமனை
சேருதவி மாணிகுழியே
-- திருஞானசம்பந்தர்

கடலூரிலிருந்து மேற்கே 10 கி.மீ. வாமனபுரி, உதவி திருமாணிகுழி. கெடில ஆற்றின் தென்கரையில் உள்ளது. திருமாணிகுழி என்பது கோவிற் பெயர். உதவி என்பது ஊர்பெயர். இக்கோவில் 1-27 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரங்களுடன் 5 நிலை இராஜகோபுரமும் கொண்டு மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வாமனபுரீசுவரர். அம்மன் அம்புஜாட்சி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியுள்ளார். தீர்த்தம் சுவேத, கெடிலநதி. தலமரம் கொன்றை.

உள்பிராகாரத்தில் செல்வ விநாயகர், உதவி விநாயகர், ஆறுமுகர், 63 நாயன்மார்கள், சப்தமாதர்கள், பஞ்ச மூர்த்திகள், யுகலிங்கங்கள், விஷ்ணுலிங்கம், நால்வர், கஜலட்சுமி, நவக்கிரகம், பைரவர், சூரிய, சந்திர முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருமால் வாமன பிரமசாரியாக அவதாரம் எடுத்து மாவலி மன்னன் பால் மூன்றடிமண் கேட்டுப்பின் அழித்த கொலைப்பழியைப் போக்கிக் கொள்ள வழிபட்ட தலம். ஆதலால் மாணிக்குழி எனப்பட்டது.

இறைவன் திருமுன் பீமருத்திரர் திரைச் சீலையில் எப்போதும் காவல் புரிவதால் முதலில் இவருக்கு அர்ச்சனை, பூஜை முதலியன நடைபெற்று, அதன்பின்பு திரைநீக்கி விட்டு இறைவனுக்கு வழிபாடு நடைபெறுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 17ஆவது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் உடையது. அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் அருளியுள்ளார்.

கல்வெட்டுக்களில் இறைவர் திருமாணிகுழி மகாதேவர், உதவித் திருமாணிகுழி ஆளுடையார் என்றும், இவ்வூரை இராசராஜ வளநாட்டு மேற்காநாட்டு உதவித் திருமாணிக்குழி என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

ஐங்கணைகள்

தாமரைப் பூ, மாம் பூ, அசோக பூ, முல்லைப் பூ, நீலோற்பலப் பூ.

செய்ல்கள் :

தாமரை - நினைப்பு ஊட்டும்; மாம் பூ - பசலை நிறம் தரும் ; அசோக பூ - உணர்வை நீக்கும் ; முல்லை - கிடை காட்டும் (படுக்கச் செய்யும்); நீலம் (நீலோற்பலம்) - கொல்லும்.

திருச்சிற்றம்பலம்

3. தீர்த்தனகிரி

நீறு தாங்கிய திருநுதலானை நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக் குற்றம் இல்லியைக் கற்றையஞ்சடைமேல்
ஆறுதாங்கிய அழகனை அமரர்க் கரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

-- சுந்தரர்

கடலூரிலிருந்து வடமேற்கே 18 கி.மீ. திருத்தினை நகர். பெண்ணையாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரமும், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர். அம்மன் ஒப்பிலா நாயகி. தலமரம் கொன்றை. தீர்த்தம் சாம்புவதாடகம் கோவிலுக்கு வடக்கே திருக்குளமாக விளங்குவது.

பெரியான் என்னும் பள்ளன் உழுது கொண்டிருக்கையில் இறைவர் அடியார் வேடத்தில் வந்து உணவு கேட்க, அவன் தன் ஊருக்குச் சென்று கொண்டு வருவதாகப் போனான். அவன் திரும்புவதற்குள் தினை விளைந்து பழுக்கும்படி இறைவன் அருளினார். அவனுக்கும் அவன் மனைவிக்கும் தரிசனம் அளித்தார். இதனால் இத்தலத்திற்கு திருத்தினை என்று பெயர். தினமும் இறைவனுக்கு தினையமுது உணவு படைக்கிறார்கள். சாம்புவார் பூசித்த இலிங்கம், அம்மன் கோவிலில் உள்ளது. இக்கோவிலுள்ள தாமரைக் குளத்தில் முழுகி, இத்தல இறைவனை வழிபட்டால் குட்ட நோய் நீங்கும் என்ற நம்பிகையுண்டு.

தேவாரப் பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 5ஆவது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் கொண்டது. இத்தலத்திற்கு தல புராணமும் உள்ளது.

நடராசப் பெருமானின் கீழ் திருமால் சங்கு ஊதுவது போலவும், பிரமன் வாத்தியம் வாசிப்பது போலவும் மூர்த்தங்கள் உள்ளது.

வீரசேன மன்னன் ஒருவன் இத்திருக்குளத்தில் மூழ்கித் தனக்கிருந்த தோல் வியாதியிலிருந்து நலம் பெற்றான் என்றும், அவனே இத்திருக்கோவிலைக் கட்டினான் என்றும் கூறுவர். வீரசேன மன்னனின் உருவம் இக்கோவிலில் உள்ளது.

4. திருச்சோபுரம்

வெங்கண் ஆனை யீருரிவை போர்த்துவிளங் குமொழி
மங்கைபாகம் வைத்துகந்த மாண்பதுவென் னைகொலாம்
கங்கையொடு திங்கள் சூடிக் கடிகமழுங் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் சோபுரமே யவனே

-- திருஞானசம்பந்தர்

கடலூரிலிருந்து தெற்கே 20 கி.மீ. இக்கோவில் 1-80 ஏக்கர் நிலப்பரப்பளவில் பிராகாரங்களுடன் மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருச்சோபுர நாதர். அம்மன் சோபுரநாயகி. தல மரம்-கொன்றை. தீர்த்தம் சோபுரதீர்த்தம். கோவிலுக்குப் பின்னால் வங்கக் கடல். உள் பிராகாரங்களில் விநாயகர், முருகன், லட்சுமி, வீரட்டேஸ்வரர், கண்ணப்பர், நவக்கிரகங்கள், நடராஜர், இலிங்கோற்பவர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

அகத்திய முனிவர், தியாகவல்லி என்னும் அரசகுமாரி பூசித்த தலம்.

இத்தலம் மணலால் மூடப்பட்டிருந்தது. 130 வருடங்களுக்கு முன் இரண்டு தம்பிரான் சுவாமிகளால் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களால் திருப்பணி செய்யப்பட்ட கோவிலாகும்.

தேவார திருப்பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 6ஆவது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் கொண்டது. இக்கோவிலில் 5 கல்வெட்டுக்கள் உள்ளன. பங்குனி உத்திரத்தில் பெருவிழா நடைபெறுகிறது.

5. நல்லாத்தூர்

தீர்த்தனகிரிக்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பொன்னம்பலநாதர், அம்மன் திரிபுரசுந்தரியம்மன். தலமரம் வன்னிமரம். திருநாவுக்கரசர் இத்தல இறைவனைப் போற்றியுள்ளதால் இத்தலம் தேவார வைப்புத் தலமாக போற்றப்படுகிறது. சிவப்பிரகாச சுவாமிகளும் இத்தல இறைவனை வணங்கி பாடல் அருளியுள்ளார். தைப்பூசம் அன்று உற்சவம் நடைபெறுகிறது.

6. தூக்கணாம்பாக்கம்

தீர்த்தனகிரிக்கு தென்மேற்கே 3 கி.மீ. இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமலைக்கொழுந்தீசுவரர். 500 வருட முற்பட்ட கோவில்.

7. நடுவீரப்பட்டு

கடலூர்க்கு மேற்கே 25 கி.மீ. கெடில ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 1-32ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

8. சென்னப்ப நாயக்கன்பாளையம்

கடலூர்க்கு மேற்கே 30 கி.மீ. கெடில ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 66செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

9. தியாகவல்லி

கடலூர்க்கு தெற்கே 18 கி.மீ. இக்கோவில் 2-66 ஏக்கர் நிலப்பரப்பளவில் பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக மங்களபுரீசுவரர்.

10. ஆலப்பாக்கம்

கடலூர்க்கு தெற்கே 22 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் புஜண்டேஸ்வரர்.

11. கருங்குழி

குறிஞ்சிப்பாடியிலிருந்து தென்மேற்கே 15 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

ஆறு சமயங்கள்

சைவம் - சிவனைப் பர தெய்வ மாகக் கொள்ளும்; வைணவம் - திருமாலைப் பரம்பொருளாகக் கொள்ளும் சாக்தம் சத்தியைப் பரதேவதையாகக் கொள்ளும் ; சௌரம் சூரியனை வழிபடும் சமயம்; காணா பத்தியம் - கணபதியை முதற் கடவுளாக வழிபடும் சமயம்; கௌமாரம் - முருகக்கடவுளைப் பரம்பொருள் என்று வழிபடும் சமயம்.


ஏழுமலை

கதிரவன் தோன்றும் மலை

கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி.


சிதம்பரம் வட்டம்

(கடலூர் மாவட்டம்)



1. சிதம்பரம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே
-- திருநாவுக்கரசர்



கடலூரிலிருந்து தெற்கே 44 கி.மீ. கோவில், திருச்சிற்றம்பலம், புலீச்சரம், பெரும்பற்றப் புலியூர், தில்லைவனம்.

இக்கோவில் 40-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் நான்கு புறங்களிலும் 135 அடி உயரம் 7 நிலை 13 கலசங்கள் கொண்ட இராஜகோபுரத்துடன் நான்கு பிராகாரங்களும், கோவிலுக்கு உள்ளே வடக்கே சிவகங்கை தீர்த்த திருக்குளத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமூலட்டானேசுவரர். அம்மன் சிவகாமி யம்மன் தனிச்சன்னிதியில் திருக்குளத்திற்கு மேற்கே 2 பிராகாரத்துடன் உள்ளார்.

தனிச்சன்னிதியில் பொன்னம்பலத்தில் சபாநாயகர் நடராஜர் உள்ளார். தீர்த்தங்கள் சிவகங்கை, குய்ய, புலிமடு, வியாக்ரபாதர், ஆனந்த, நாக, பிரம்ம, சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமானந்த கூபம் முதலியன. தலமரம் தில்லை மரம்.

உள்பிராகாரங்களில் பொல்லாப் பிள்ளையார், முருகன், காலபைரவர், ஸ்படிகலிங்கம், மரகதலிங்கம், சுந்தரேசர், துர்க்கை, கோவிந்தராசர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வியாக்ரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், உபமன்யு முனிவர், திருவுடையந்தணர்கள், வியாசர், சுக முனிவர், சௌனக முனிவர், சைமினி முனிவர், சூதமுனிவர் முதலானோர் இத்தல இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

இத்தலத்தில் ஐந்து சபைகள்: கனகசபை, சிற்சபை, நிருத்தசபை, இராசசபை, தேவசபை. ஐந்து பெருமன்றங்களுள் ஒன்றான கனகசபை மன்றம். ஐம்பெரும் பொருள்களுள் ஒன்றாகிய ‘வானலிங்கம்’ இருக்குமிடம்.

வியாக்ரபாத முனிவர் பெரும்பற்றினால் இத்தலத்தில் பூசித்ததால் பெரும்பற்றப் புலியூர் என பெயர்.

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாறும் மேன்மைபெற்று விளங்கும் தலம். தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பூசிக்கும் தலம்.

நடராஜப் பெருமானின் தாண்டவம் ஆனந்ததாண்டவம், நடராஜப் பெருமானின் திருக்கூத்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் களையும் நிகழ்த்தியருள்கின்றார்.

சித்சபையில் சபாநாயகரின் வலப் பக்கத்தில் உள்ளது ஒரு சிறு வாயில் இதில் உள்ள திரை அகற்றப் பெறும் ஆரத்தி காட்டப் பெறும். இதனுள்ளே திருவுருவம் ஏதும் தோன்றாது தங்கத்தால் ஆன வில்வ மலை திருவாசியுடன் ஒன்று தொங்கலிடப்பட்டுக் காட்சியளிக்கும். மூர்த்தி இல்லாமலேயே வில்வ மாலை தொங்கும். இதன் ரகசியம் இறைவன் இங்கு ஆகாய உருவில் இருக்கிறார் என்பதாகும். இதுவே இத்தல சிதம்பர ரகசியம் என்று கூறப்படுவது.

தேவார பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் முதன்மையானது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்

தேவாரப்பதிகங்கள் கொண்டது.

மாணிக்கவாசகர், திருநீலகண்ட நாயனார், திருநாளைப் போவார் நாயனார், உமாபதி சிவாச்சாரியார் முதலியோர் வீடுபேறுற்ற தலம்.

தேவாரத் திருப்பதிகங்கள் அனைத்து ஏடுகளை முன்னோர் இத்தலத்தில் சேமித்து வைத்திருந்தனர். சோழமன்னன் அவற்றை நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு வெளிப்படுத்திய தலம்.

சேக்கிழார் இத்தலத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் பெரிய புராணம் பாடி அரங்கேற்றிய தலம்.

வைணவர்கள் போற்றும் 108 திவ்விய தேசங்களில் இத்தல திருக்கோவிலுள்ள கோவிந்தராசர் சன்னிதியும் ஒன்றாகும்.

இத்தலத்திற்கு சிதம்பர புராணம், புலியூர்ப் புராணம் உள்ளது. மாணிக்க வாசகர், திருமாளிகைத் தேவர், சேந்தனார், பட்டினத்தார், சேரமான் பெருமாள் நாயனார், குமரகுருபரர், அருணகிரிநாதர், நம்பி யாண்டார் நம்பி முதலியோர் இத்தல இறைவனைப் போற்றி பாடல்கள் அருளியுள்ளனர். இத்தலத்தைச் சார்ந்த பல நூல்களும் உள்ளன. தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை திருவோணம், ஆணி உத்திரம், ஆவணி சதுர்த்தசி, புரட்டாசி சதுர்த்தசி, மார்கழி திருவாதிரை, மாசி சதுர்த்தசியில் என ஆறுமாதங்களில் நடராஜருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

மேலும் இத்தலத்தில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கொண்ட ஆனந்தீஸ்வரர், 5 செண்டில் உள்ள ஆரீஸ்வர முடையார், 32 செண்டில் அமைந்த கமலேஸ்வரர், 11 செண்டில் அமைந்த அழகேசுவரர், ஒரு ஏக்கர் பரப்பளவில் அமைந்த திருப் புலியீஸ்வரர் மற்றும் தில்லைக்காளியம்மன் திருக்கோவிலும் இவ்வூரில் அமைந்த வேறு சிவத்தலங்களாகும்.

2. திருவேட்களம்

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பந் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே

-- திருநாவுக்கரசர்

சிதம்பரத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. மூங்கில்வனம். அண்ணாமலைநகர் என்று தற்போது வழங்கப்பெறும். இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ பாசுபதேசுவரர். அம்மன் ஸ்ரீ நல்லநாயகி. கோவிலுக்கு எதிரே உள்ள திருக்குளம் கிருபாகடாக்ஷ தீர்த்தம். தலமரம்-மூங்கில்.

சிவபெருமான் வேடனாக எழுந்தருளி வந்து அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் அருளிய சிறப்புக்குரிய தலம். பெருமான் கிராதமூர்த்தியாகப் பார்வதிதேவியாருடன் பாசுபதாஸ்திரம் கையில் ஏந்தி எழுந்தருளிய உற்சவவிக்ரகமும், அர்சுனனுடைய உற்சவ விக்கரமும் இக்கோவில் உள்ளது.

உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், லட்சுமி, சொக்கநாதர்,மீனாட்சி, நால்வர், நவக்கிரகம், சந்திரன், சூரியன், நடராசப் பெருமான் முதலிய சன்னிதிகளும் உள்ளன. முன்மண்டபத்தில் உள்ள தூண்களில் இறைவனும், இறைவியும் வேடுவக் கோலத்தில் நாய்களுடன் செல்லும் சிற்பமும், அர்சுனனை போரிடும் சிற்பமும், தவம் செய்யும் சிற்பமும் உள்ளன.

தேவாரப் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 2 வது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம் கொண்டது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் கொண்ட தலம். திருஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்தில் தங்கி இருந்து தில்லைப் பெருமானை நாள்தோறும் சென்று தரிசித்து வந்தார் என பெரியபுராணம் கூறுகிறது.

கல்வெட்டில் திருவேட்களம் கிராமம் முழுவதும் சிதம்பரம் கோவிலுக்கு அச்சுதப்ப நாயக்கரால் தானமாகக் கொடுக்கப்பட்ட செய்தி குறிப்பிடுகிறது. வைகாசி விசாகத்தில் அர்ச்சுனனுக்குப் பாசுபதம் அருளிய திருவிழா நடைபெறுகிறது.

3. சிவபுரி

புடையினார்புள்ளி கால்பொருந்திய
மடையினார்மணி நீர்நெல்வாயிலார்
நடையினால்விரற் கோவணந்நயத்
துடையினாரெம துச்சியாரே

-- திருஞானசம்பந்தர்

சிதம்பரத்திலிருந்து தென்கிழக்கே 3கி.மீ. திருநெல்வாயில். கொள்ளிடம் ஆற்றின் வடகரைப்பகுதியில் இக்கோவில் 1-69 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய 5 நிலை இராசகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு உச்சிநாதேஸ்வரர். அம்மன் கனகாம்பிகை. தலமரம் நெல்லி தீர்த்தம் கிருபாசமுத்திரம் கோவிலுக்கு எதிரேயுள்ள திருக்குளம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், பஞ்சலிங்கங்கள், சனீஸ்வரன், நவக்கிரகம், நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன. சிவலிங்கமூர்த்தியின் பின்புறத்தில் பார்வதி பரமேசுவரர் திருவுருவங்கள் உள்ளன.

நெல்வயல்களை ஊரின்வாயிலில் கொண்டு விளங்கும் மாட்சியில் இவ்வூர் நெல்வாயில் எனப் பெற்றது. தற்போது சிவபுரி என வழங்கப்படுகிறது.

திருஞானசம்பந்தருக்கு உச்சிப் பொழுதில் அறுசுவை அமுது அளித்துப் பசி போக்கியதால் சுவாமிக்கு உச்சிநாதர் என்று பெயர்.

தேவார திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 3 வது. திருஞானசம்பந்தர் தேவாரம் கொண்டருளியது. திருஞானசம்பந்தர் திருவேட்களத்தில் தங்கிருந்த நாட்களில் இத்தலத்திற்கு வந்து வழிபட்ட தலம். அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் அருளியுள்ள தலம்.

கல்வெட்டுக்கள் மூன்று உள்ளன. தினந்தோறும் 5 கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி விசாகத்தன்று காலையில் கோவில் எதிரே உள்ள திருக்குளத்தில் தீர்த்தவாரி உற்சவமும் இரவில் பஞ்சமூர்த்திகளின் திருவீதிவுலா நடைபெறுகிறது.

4. திருக்கழிப்பாலை

புனலாடிய புன்சடை யாயரணம்
அனலாக விழித்தவ னேயழகார்
கனலாடலி னாய்கழிப் பாலையுளாய்
உனவார்கழல் கைதொழு துள்குதுமே

-- திருஞானசம்பந்தர்

சிதம்பரத்திலிருந்து தென்கிழக்கில் 5கி.மீ. சிவபுரிக்கு அருகில் சிறிது தூரத்தில் இத்தலம் உள்ளது. கொள்ளிட ஆற்றின் வடகரையில் பாலையப்பர் கோவில் என வழங்கப்பெறும் இக்கோவில் 3 நிலை இராஜகோபுரத்துடன் கூடிய சிறியகோவில். இக்கோவிலின் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ பால்வண்ணநாதர். அம்மன் ஸ்ரீ வேதநாயகி. தீர்த்தம் கொள்ளிடம் நதி. தலமரம்-வில்வம். உள்பிராகாரத்தில் வாயிலின் இருபுறங்களிலும் அதிகார நந்தியர் துணைவியருடன் உள்ளனர். பிராகாரத்தில் விநாயகர், கிராதமூர்த்தி, சூரியன், திருமால், முருகன், நவக்கிரகம், பைரவர் சன்னிதிகள் உள்ளன. நடராஜ சபை உள்ளது. சிவகாமியம்மை திருமேனி தோழியர் இருவர் சூழ ஒரே பீடத்தில் உள்ளது. மூலவர் வெண்ணிறமுடன் மிகச்சிறிய பாணத்துடன் காட்சியளிக்கிறார். மேற்புறம் சதுரமாக நடுவில் சிறிய பள்ளத்துடன் இலிங்கத்திருமேனி உள்ளது.

அபிஷேகத்தின்போது பால் மட்டுமே இப்பள்ளத்தில் தங்கும், மூலவருக்குப் பின் இறைவன் இறைவி வடிவங்கள் சுவரில் நின்ற நிலையில் காணப்படுகின்றன.

இத்தலம் முன்பு கொள்ளிட பேராற்றின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் அமைந்திருந்ததால் இத்தலம் கழிப்பாலை எனப்பெற்றது. கொள்ளிடத்தின் வெள்ளப் பெருக்கு திருக்கோவிலை முற்றிலும் பாழ்படுத்திய காரணத்தால் தற்போது சிவபுரிக்குத் தெற்கில் கோவில் கட்டி அதில் கழிப்பாலை இறைவரையும், இறைவி யையும், ஏனைய பரிவாரத் தெய்வங் களையும் எழுந்தருளு வித்துள்ளார்கள்.

வான்மீகி முனிவர் பூசித்துப் பேறு பெற்ற தலம். தேவார திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரையில் இத்தலம் 4 வது. திருஞானசம்பந்தர் இரண்டும், திரு நாவுக்கரசர் ஐந்தும், சுந்தரர் ஒரு பதிகம் ஆக எட்டுத் திருப்பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. சோழர்காலத்தியவை. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

5. பின்னலூர்

சேத்தியாதோப்புக்கு வடக்கே 5 கி.மீ. வெள்ளாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கேசுவரர். 200 வருட முற்பட்ட கோவில்.

6. அம்பாபுரம்

சேத்தியாதோப்புக்கு வடக்கே 7 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

7. எறும்பூர்

சேத்தியாதோப்புக்கு வடமேற்கே 5கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக கடம்பவனநாதர். 1000 வருட முற்பட்ட கோவில்.

8. வலையமாதேவி

சேத்தியாதோப்புக்கு வடமேற்கே 8கி.மீ. வெள்ளாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வனவக்கோட்டீஸ் வரர். 1100 வருட முற்பட்ட கோவில்.

9. அகரஆலம்பாடி

சேத்தியாதோப்புக்கு மேற்கே 8 கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர்.

10. புவனகிரி

சிதம்பரத்திலிருந்து வடமேற்கே 9கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 64 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர் மற்றும் 3 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர்.

11. சாத்தமங்கலம்

சேத்தியாதோப்புக்கு தெற்கே 2 கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

12. பின்னாத்தூர்

சிதம்பரத்திலிருந்து வடகிழக்கே 7கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதஈஸ் வரர்.

13. கீரபாளையம்

புவனகிரிக்கு தெற்கே ஒரு கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் 77 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

14. ஒரத்தூர்

புவனகிரிக்கு மேற்கே 8 கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 84 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மார்க்கசகாயர்.

15. பரதூர்

சேத்தியாதோப்புக்கு தென்கிழக்கே 6 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நில்ப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

16. வள்ளியகுடி

சேத்தியாதோப்புக்கு தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர்.

17. தில்லைநாயகபுரம்

சிதம்பரத்திலிருந்து வடக்கே 2 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாதீஸ்வரர்.

18. கீழ்நத்தம்

புவனகிரிக்கு தென்மேற்கே 5 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமசுந்தரேசுவரர்.

19. மதுராந்தகநல்லூர்

புவனகிரிக்கு தென்மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர்.

20. பூந்தோட்டம்

சேத்தியாதோப்பிற்கு தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 4-17 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கஞ்சமலை ஈஸ்வரர்.

21. அடூர்

சிதம்பரத்திற்கு மேற்கே 8 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நர்த்தனபுரீஸ்வரர்.

22. கவரப்பட்டு

சிதம்பரத்திலிருந்து தென்கிழக்கே 6கி.மீ. கொள்ளிட ஆற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர்.

23. உசுப்பர்

சிதம்பரத்திற்கு தெற்கே 2 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

24. துனிசிரமேடு

சிதம்பரத்திலிருந்து தென்மேற்காக 5கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேசுவரர்.

25. பன்னப்பட்டு

சிதம்பரத்திலிருந்து மேற்கே 10 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமசுந்தரேசுவரர்.

26. விளாகம்

சேத்தியாதோப்புக்கு தெற்கே 8 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமரபுரீஸ்வரர் மற்றும் 19 செண்டில் அமைந்த சோமசுந்தரரேஸ்வரர் என இரு கோவில்கள் உள்ளன.

27. தெற்குவிரிடங்கன்

சேத்தியாதோப்புக்கு தெற்கே 9 கி.மீ. இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணபுரீஸ்வரர்.

28. வாசபுத்தூர்

சிதம்பரத்திலிருந்து தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

29. பெருங்களூர்


சிதம்பரத்திலிருந்து தென்மேற்கே 15கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

30. வையூர்

சிதம்பரத்திற்கு தெற்கே 6கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் கைலாசநாதர்.

காட்டுமன்னார்கோவில் வட்டம்

(கடலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. கூடலையாற்றூர்

வடிவுடை மழுஏந்தி மதகரி உரிபோர்த்து
பொடிஅணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடிஅணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே

-- சுந்தரர்

ஸ்ரீ முஷ்ணத்திலிருந்து கிழக்கே 8கி.மீ. வெள்ளாறும், மணிமுத்தாறும் கூடும் இடத்தில் இத்தலம் உள்ளதால் கூடலையாற்றூர் என்று பெயர். இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூன்று நிலை இராஜ கோபுரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நெறிகாட்டுநாதர் என்னும் நர்த்தனவல்லபேசுரர், அம்மன் பராசக்தி, ஞானசக்தி, புரிகுழலாம்பிகை. தீர்த்தம் பிரம, அகத்திய, காத்தியாயன, வெள்ளாறு, மணிமுத்தாறு முதலிய தீர்த்தங்கள். பிராகாரத்தில் நந்தி மட்டும் உள்ளது. நடராச சபை உள்ளது. அமுதவிநாயகர், விசுவநாதர், ஆறுமுகர், ஞானசக்தி சன்னிதிகள். இருதள அமைப்பாக மூலவர் விமானம் அமைந்துள்ளது. படிகள் ஏறிமேல் சென்றதும் மண்டபம் அமைந்துள்ளது. இறைவனுக்கு வலப்பக்கத்தில் பராசக்தி. நவக்கிரகம் இங்கு இல்லை. சனீஸ்வரர் சன்னிதி மட்டும் உள்ளது. கோஷ்ட மூர்த்தங்களும் உள்ளன. இங்குள்ள சித்ரகுப்தர் உற்சவத் திருமேனி சிறப்பானது. எழுத்தாணியும், ஏடும் கொண்டு அவர் காட்சியளிக்கிறார்.

இங்குள்ள இரு அம்மன் சன்னிதியில் பராசக்தி சன்னிதியில் திருநீறும், ஞானசக்தி சன்னிதியில் குங்குமமும் தரப்படுகிறது. பிரமனுக்காக இறைவன் நர்த்தனம் புரிந்ததால் இத்தல இறைவனுக்கு நர்த்தனவல்லபேசுவரர் என்று பெயர்.

வெள்ளப் பெருக்கால் பழைய கோவில் அழிந்துவிடப் பின்பு இப்போது உள்ள வேறு கோவில் கட்டப்பட்டது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் யாத்திரையில் திருமுதுகுன்றம் செல்லும்போது இத் தலத்தை வணங்காமல் செல்லும்போது இறைவன் அந்தணராக வந்து கூடலை யாற்றூருக்கு வழிகாட்டி மறைந்தருளினார். அதன்பிறகு சுந்தரர் இத்தலத்தை அடைந்து வழிபட்டு பதிகம் பாடி சென்றார்.

தேவாரப் பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 3ஆவது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பெற்றது. அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் அருளிய தலம்.

2. ஓமாம்புலியூர்

பூங்கொடி மடவாள் உமையொரு பாகம் புரிதரு சடைமுடி யடிகள்
வீங்கிருள் நட்டம் ஆடுமெம் விகிதர் விருப்பொடும் உறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச் செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே

-- திருஞானசம்பந்தர்

காட்டுமன்னார்கோவிலுக்கு தெற்கே 6கி.மீ. கொள்ளிட ஆற்றின் வடகரையில் இக்கோவில் 52 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரத்துடன் கூடிய கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள் மிகு பிரணவபுரீஸ்வரர், துயர்தீர்த்த நாதர்.

அம்மன் பூங்கொடிநாயகி தலமரம்-இலந்தை. தீர்த்தம் கொள்ளிடம். உள்பிராகாரத்தில் தட்சிணாமூர்த்தி மிகவும் சிறப்பு வாய்ந்தது. அம்மைக்கு உபதேசித்த தட்சிணாமூர்த்தி கோவிலுக்குள் மூலமூர்த்தியாக உயர்ந்த பீடத்தில் எழுந்தருளியுள்ளார். ஆறுமுகர் சன்னிதி, நடராஜர் சன்னிதியும் உள்ளன.

வியாக்ரபாதர் வழிபட்ட சிறப்புடைய தலம். தட்சிணாமூர்த்தியிடம் அம்பிகை பிரணவ உபதேசம் பெற்ற தலம். இதனால் இத்தலத்திற்கு பிரணவ வியாக்கிரபுரம் என்றும் பெயர். புலியூர் எனப் பல ஊர்கள் இருப்பதால் வேறுபாடு அறியும் பொருட்டு இவ்வூர் ஓமாம்புலியூர் எனப்படுகிறது. நடராஜர் இருக்கும் இடத்தில் தட்சிணாமூர்த்தி இருக்கிறார். தட்சிணாமூர்த்தி இருக்குமிடத்தில் நடராசர் இருக்கிறார்.

புலியொன்றுக்கு அஞ்சிய வேடன் வில்வ இலையைப் பறித்துக் கீழேயுள்ள சிவலிங்கத்தின் மேல் இட்டான் மறுநாள் காலையில் சிவபெருமான் வெளிபட்டு மனம் விரும்பி அவனுக்கு அருள்புரிந்த தலம்.

கோவிலுக்குக் கிழக்குப் பக்கத்தில் வடதளி என்னும் கோவில் ஒன்று உள்ளது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 31ஆவது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் கொண்டது.

3. கானாட்டாம்புலியூர்

வள்வாய மதிமிளிரும் வளர்சடை யினானை
மறையவனை வாய்மொழியை வானவர் தங்கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கி உமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினானை
முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டலர்ந்து விரைநாறும் முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே

-- சுந்தரர்

காட்டுமன்னார்கோவிலுக்கு தெற்கே 5கி.மீ. திருக்கானாட்டுமுள்ளூர். கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் சிறிய கோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பதஞ்சலிநாதர், அம்மன் கானார்குழலி. தீர்த்தம் சூரிய, கொள்ளிடம் தலமரம் அத்திமரம், வெள்ளெருக்கு.

உள்பிராகாரத்தில் விநாயகர், விஸ்வநாதர், விசாலாட்சி, கஜலட்சுமி, முருகன், பிரமன், திருமால், சனீஸ்வரர், சூரியன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

பதஞ்சலி முனிவர்க்கு இத்தல இறைவன் அருள் செய்ததால் இறைவர்க்கு பதஞ்சலிஈஸ்வரர் என்று பெயர். பதஞ்சலிமுனிவர் சிலை வடிவில் உள்ளார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்ளில் இத்தலம் 32ஆவது சுந்தரர் அருளிய திருப்பதிகம் கொண்டதாகும்.

கல்வெட்டுக்களில் விக்ரம சோழமன்னனின் காலத்தைச் சேர்ந்தது. நான்கு கால பூஜை. வைகாசி விசாகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

4. திருநாரையூர்

வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழில் நாரையூர் நம்பனுக்கு
ஆறு சூடலும் அம்ம அழகிதே
-- திருநாவுக்கரசர்

காட்டுமன்னார்கோவிலுக்கு வடகிழக்கே 6கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 5-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் பிராகாரங்களுடன் 78 அடி உயர இராஜகோபுரமும் கொண்டு மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சௌந்தரேசர் கிழக்கு நோக்கியும், அம்மன் திரிபுரசுந்தரி. தலமரம் புன்னாகம். தீர்த்தம் காருண்ய தீர்த்தம். உள்பிராகாரத்தில் தென்பால் இத்தலச் சிறப்பு மூர்த்தியாக உள்ள சுயம்புவான பொல்லாப்பிள்ளையார் சன்னிதி உள்ளது. திருமுறை கண்ட வரலாறு வண்ணப் படங்களாக அமைந்துள்ளது. முருகன், திருமூலநாதர், நவக்கிரகங்கள், நடராஜர், பைரவர், சந்தனாசாரியார், நால்வர், சேக்கிழார் சன்னிதிகள் உள்ளன.

உற்சவத் திருமேனிகளும் நாரை, விநாயகர், சந்திரசேகரர், நால்வர், இராசராசன் திருமேனிகள் சிறப்பாக உள்ளன. கோவிலின் எதிரில் நம்பியாண்டார் நம்பி நினைவாலயம் அமைந்துள்ளது. நம்பியாண்டார் கையில் அபிஷேக கலத்துடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

துர்வாச முனிவருடைய தவத்திற்கு இடையூறு செய்த கந்தருவன் ஒருவன் அவர் சாபத்தால் நாரையாகி வழிபட்ட தலமாதலின் இத்தலம் நாரையூர் என வழங்கப்படுகிறது.

திருமுறைகளைக் கண்டு வகைப்படுத்திய நம்பியாண்டார் நம்பிகள் அவதரித்த தலம். இத்தல விநாயகராகிய பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்றுச் சிதம்பரத்தில் மறைந்திருந்த திருமுறைகளை வெளிப்படுத்தினார். நம்பிகள் திருமுறை களை வகுத்ததோடு தாமும் பல அரிய பாடல்களைப் பாடினார். இவையாவும் 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 33ஆவது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் கொண்ட தலம்.

நான்கு கால பூஜை. வைகாசி மாதத்தில் நம்பியாண்டார் நம்பிகள் உற்சவம் நடைபெறுகிறது.

அட்டதிக்குப்பாலர்

எட்டுத்திக்குக் காவலர் :

இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

அட்டபுஷ்பம்

எட்டுவகைப் பூ :

புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவட்டம், குவளை, பாதிரி, அலரி, செந்தாமரை.

இவர்தல்

உயர்தல், செல்லுதல், உலாவுதல், பார்த்தல், ஏறுதல், செறிதல், பாய்தல், பொருந்துதல், மேற்கொள்ளுதல், விரும்புதல், ஒத்தல், எழும்புதல், நடத்தல், கலத்தல்.

திருச்சிற்றம்பலம்

5. மேல்கடம்பூர்

தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறாக்
களருங் கார்க்கடம் பூர்க்கரக் கோவிலே

-- திருநாவுக்கரசர்

காட்டுமன்னார்கோவிலுக்கு தென் மேற்கே 5கி.மீ. திருக்கடம்பூர், கடம்பவனம், கரக்கோவில். கொள்ளிடம் ஆற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 3-42 ஏக்கர் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரமும் பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அமிர்தகடேசுவரர் கிழக்கு நோக்கியும் அம்மன் சோதிமின்னம்மை தனிச்சன்னிதியில் உள்ளார். தலமரம்-கடம்பு . தீர்த்தம்-. சக்திதீர்த்தம். உள்பிராகாரங்களில் கன்னி விநாயகர், முருகன், அர்த்தநாரீசுவரர், உமாமகேசுவரர், அகத்தியர், நால்வர், பாபகரேசுவரர், மீனாட்சி, மகாலட்சுமி, இலிங்கோத்பவர், பிரம்மன், சண்டிகேசுவரர், துர்க்கை, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் அமைந்துள்ளன. மிகப்பழமையான நடராசத் திருமேனி உள்ள நடராச சபை உள் மண்டபத்தில் அமைந்துள்ளது.

மூலஸ்தானச் சுவரின் வெளிப்புறத்தில் அம்மையைத் தன் தொடைமீது இருத்தி பெருமான் ஆலிங்கன மூர்த்தியாக விளங்கும் சிற்பம் மிக அழகியதாகும்.

இக்கோவிலுக்கு கரக்கோவில் என்றும், கடம்புமரங்கள் தலமரமாக இருப்பதால் இவ்வூருக்கு கடம்பூர் என்றும் பெயர்.

இந்திரன் வழிபாடு செய்து அமிர்தகலசம் பெற்றதனால் இறைவனுக்கு அமிர்தகடேசுவரர் என்று பெயர். முருகப் பெருமான் இறைவனைவழிபட்டு சூரனை அழித்தற்கு வில் பெற்ற தலம்.

இக்கோவில் நான்கு சக்கரங்களோடு குதிரைகள் பூட்டிக் கிழக்கு நோக்கி நிறுத்தப் பெற்ற தேர் வடிவில் விளங்குகிறது.

பாண்டிய மன்னன் ஒருவன் தன் தந்தையின் அஸ்தியைக் காசிக்கு எடுத்துச் செல்லும்போது வழியில் இத்தலத் தீர்த்தமாகிய சக்தி தீர்த்தத்தில் வைத்துப் பூஜை செய்தான். இத்தீர்த்தம்பட்டதால் அஸ்தி கரைந்துவிட்டது. அஸ்தியைக் காசிக்கு எடுத்துச் செல்லாமல் இத்தீர்த்தத்திலேயே வைத்து இறைவனை வழிபட்டு ஊர் திரும்பினான். இன்றும் சுற்றியுள்ள ஊரில் உள்ளவர்கள் இங்கு அஸ்தியை கரைத்து வருகின்றனர்.

அங்காரகன் வழிபட்டு அருள் பெற்ற தலமாதலால் இத்தலத்துப் பெருமானை வழிபாடு செய்வோர் அங்கார தோஷம் நீங்கி நலம் பெறுதல் கண்கூடு.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 34ஆவது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், பதிகங்களும். மாணிக்கவாசகர், சுந்தரரும், போற்றி பாடியுள்ளனர். இராமலிங்க சுவாமிகள், அருணகிரிநாதர் முதலியோர் வழிபட்டு பாடல்கள் அருளியுள்ளார்கள். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆகியோர் வாழ்ந்தும் வழிபட்டும் நலம் பெற்றுள்ளனர்.

நான்கு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

6. குணமங்கலம்

ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து வடமேற்கே 5கி.மீ. வெள்ளாற்றின் தென் கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில்

மூலவர் பிட்சாண்டேஸ்வரர். 250 வருட முற்பட்ட கோவில்.

7. ஸ்ரீமுஷ்ணம்

காட்டுமன்னார்கோவிலுக்கு வடமேற்கே 28கி.மீ. வெள்ளாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக நிதீஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

8. புடையூர்

ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வலர்புரீஸ்வரர். 1100 வருட முற்பட்ட கோவில்.

9. இராயநல்லூர்

லால்பேட்டைக்கு வடக்கே 5கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர்.

10. கலையமலை

லால்பேட்டையிலிருந்து வடக்கே 7கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணபுரீஸ்வரர்.

11. தெற்குநாடுபுதூர்

லால்பேட்டைக்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் 62 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வன்மீகநாதர்.

12. கோதங்குடி

லால்பேட்டைக்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தோணீஸ்வரர். 600 வருட முற்பட்ட கோவில்.

13. வடமூர்

லால்பேட்டைக்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 90 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

14. தெம்மூர்

லால்பேட்டைக்கு வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் இராஜகெம் பீசுவரர்.

15. மெய்யாத்தூர்

லால்பேட்டைக்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர். 300 வருட முற்பட்ட கோவில்.

16. கருப்பூர்

லால்பேட்டைக்கு கிழக்கே 15கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

17. மேல்நெடும்பூர்

லால்பேட்டைக்கு வடகிழக்கே 7கி.மீ. இக்கோவில் 1-20 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர். 400 வருட முற்பட்ட கோவில்.

18. நெய்வாசல்

லால்பேட்டைக்கு வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

19. நாட்ரமங்கலம்

காட்டுமன்னார்கோவிலுக்கு வடமேற்கே 3கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 150 வருட முற்பட்ட கோவில்.

20. திருச்சின்னபுரம்

லால்பேட்டைக்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 1-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

21. கொல்லிமலை

லால்பேட்டைக்கு வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் 66 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவ்லோகநாதர். 600 வருட முற்பட்ட கோவில்.

22. லால்பேட்டை

காட்டுமன்னார்க்கோவிலுக்கு வடக்கே 4கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். 6 செண்ட நிலப்பரப்பளவில் சந்திரசேகரர் என இரு கோவில்கள் இங்கு உள்ளன.

23. உடையார்குடி

காட்டுமன்னார்கோவிலுக்கு வடக்கே 2 கி.மீ. அனந்தீசுவரம். இக்கோவில் 7-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அனந்தீசுவரர். அம்மன் சௌந்தர்ய நாயகி தனிச்சன்னிதியில் உள்ளார். தீர்த்தம் நாகதீர்த்தம். அனந்தன் (பாம்பு) வணங்கியதால் இறைவர்க்கு அனந்தீசுவரர். உள்பிராகாரத்தில் அனந்தனின் உருவம் உள்ளது. இரண்டு கால பூஜை. வைகாசி மாதம் உற்சவம் நடைபெறுகிறது.

24. இளங்குமூர்

லால்பேட்டைக்கு தென்கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 250 வருட முற்பட்ட கோவில்.

25. திருமூலஸ்தானம்

காட்டுமன்னார்கோவிலுக்கு கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக கைலாசநாதர். அம்மன் காமாட்சி. மேலும் இவ்வூரில் மற்றொரு கோவிலான 67 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக திருமூலநாதர்.

26. கீழ்கடம்பூர்

காட்டுமன்னார்கோவிலுக்கு தென்மேற்கே 4கி.மீ. மூலவர் சுயம்புலிங்கமாக ஸ்ரீருத்ரகோடீஸ்வரர். இக்கோவிலை கடம்பூர் இளங்கோவில் என்று கூறப்படும். திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம் பெற்ற வைப்புத்தலமாக போற்றப்படுகிறது. இத்தலம் தற்போது முற்றிலும் இடிந்துபோயுள்ளது. முன்பு இக்கோவில் சிற்பச் சிறப்போடு மக்கள் மனதைக் கவர்ந்த திருக்கோவிலாக விளங்கியிருத்தல் வேண்டும்.

27. இராஜேந்திரசோழகன்

காட்டுமன்னார்கோவிலுக்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தோலீஸ்வரர்.

28. ரெட்டியூர்

காட்டுமன்னார்கோவிலுக்கு தென்மேற்கே 10கி.மீ. இக்கோவில் கொள்ளிடை ஆற்றின் வடபகுதியில் 2-00ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக விஸ்வநாதர்.


29. முட்டம்

காட்டுமன்னார்கோவிலுக்கு தெற்கே 8கி.மீ. கொள்ளிட ஆற்றின் வடகரையில் இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரணவபுரீஸ்வரர். 400 வருட முற்பட்ட கோவில்.

30. புளியங்குடி

காட்டுமன்னார்கோவிலுக்கு கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விசுவநாதர். கொள்ளிட ஆற்றின் வடகரையில் கோவில் உள்ளது.

விருத்தாசலம் வட்டம்
(கடலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. விருத்தாசலம்

தேவராயு மசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்
நாவரராயு நண்ணுபாரும் விண்ணெரிகா லீரும்
மேவராய விரைமலரோன் செங்கண் மாலீசனென்னும்
மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே
-- திருஞானசம்பந்தர்

உளுந்தூர்பேட்டையிலிருந்து தெற்கே 23 கி.மீ. பழமலை, விருத்தகாசி, திருமுதுகுன்றம். ஊரின் நடுவே மணிமுத்தாற்றின் கரையில் இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் நான்கு பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய இறைவன் சுயம்புலிங்கமாக அருள்மிகு விருத்தகிரீசுவரர், அம்மன் விருத்தாம்பிகை கிழக்கு நோக்கி தனிச் சன்னிதியில் உள்ளார். விநாயகர் ஆழத்துப் பிள்ளையார். நான்கு திசைகளிலும் உயர்ந்த இராஜகோபுரங்கள் உள்ளன. தலமரம்-வன்னி தீர்த்தம் மணிமுத்தாறு, நித்யானந்த கூபம், வருண, அக்னி, சக்கர தீர்த்தங்கள்.

சிவபெருமான் முதன் முதலில் படைத்த மலை விருத்தகாசி என்றும் இத்தலத்தில் உயிரினங்களும், மனிதர்களும் உயிர் விடும்போது இறைவி தம் ஆடையால் வீசிக் களைப் பாற்றுவார் என்றும், இறைவன் ஐந்தெழுத்தோதி அருள்பாலித்துத் தம் உருவமாக்குவார் என்றும் அதனால் இது காசியிலும் வீசம் பங்கு அதிகமானதென்றும் புராணம் கூறும். இறந்தவர்களுக்கு வீடுபேறு அளிக்கும் திருவூர். திருமால், பிரமன், தேவர்கள், அகத்தியர், விதர்க்கணன், விபசித்து, கலிங்கன், குமாரதேவர், சுவேதன், ஞானக்கூத்தர், கச்சிராயர், குருநமச்சிவாயர் முதலியோர் அருள்பெற்ற தலம்.

சுந்தரர் பரவையாருக்கு அளிக்க இத்தல இறைவனை நோக்கி வேண்டிப் பன்னீராயிரம் பைம்பொன்னை பெற்றார். அதனைத் இவ்வூர் ஆற்றில் இட்டுப் பின்பு திருவாரூர் அடைந்து கமலாலயத் துறையில் எடுத்தார்.

சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டில் தலைமையான நான்கினுள் இத்தலமும் ஒன்றாகும். தேவர்களின் பொருட்டு இறைவர் ஒருமுறை திருநடனம் செய்த தலம். சிதம்பரம் சிவபிரான் திருநடனத்துக் குரிய தலமென்றும், இத்தலம் இறைவன் குலாவி வீற்றிருந்ததற்குரிய தென்றும் கூறப்படுகிறது. இத்தலத்தில் காமிக இலிங்கம் முதலிய 28 ஆகம இலிங்கங்கள் உள்ளன.

தேவாரப்பாடல் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 9 வது. மூவர் பாடியருளிய திருப்பதிகங்கள் பதினொன் றைப் பெற்று விளங்கும் தலம். அருணகிரிநாதர் திருப்புகழ், ஞானக்கூத்தர், குமாரதேவர், குருநமச்சிவாயர், சிவப் பிரகாசர் முதலியோர் பாடிய தலபுராணம், பெரியநாயகியம்மை பதிகம், க்ஷேத்திரக் கோவை வெண்பா, பழமலைநாதர் அந்தாதி, பெரியநாயகி விருத்தம், கலித்தொகை, பிக்ஷாடன நவமணிமாலை, குருதரிசனப் பதிகம், பிள்ளைத்தமிழ், ஆகிய நூல்களும் இத்தலத்திற்குள்ளன.

கல்வெட்டுக்கள் 72 உள்ளன. தினமும் 6 கால பூஜை. மாதந்தோறும் பௌர்ணமி நாளில் பெரிய பழமலைநாதருக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இத்தலத்திற்கு அருகில் வேடப்பர் கோவில், ஊருக்கு மேற்கில் உள்ள குளஞ்சியப்பர் கோவில், வடபால் உள்ள வெண்மலையப்பர் கோவில், கீழ்பால் உள்ள கரும்பாயிரங் கொண்ட அப்பர் கோவில் என வேறு தலங்களும் உள்ளன.

திருச்சிற்றம்பலம்

2. இராசேந்திரபட்டணம்

படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனாயிடு கங்கைச்
சடையான் எருக்கத்தம் புலியூர்த்தகு கோவில்
விடையான் அடியேத்த மேவா வினைதானே

-- திருஞானசம்பந்தர்

விருத்தாசலத்திலிருந்து தெற்கே 12கி.மீ. திருஎருக்கத்தம்புலியூர், வெள்ளாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 500 அடியும், தெற்கு வடக்காக 300 அடி நீளம், அகலம் கொண்டு இராஜகோபுரம் 40 அடி உயரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருக்குமரேசர் கிழக்கு நோக்கியும், அம்மன் வீறாமுலையம்மன் தனிச் சன்னிதியில் உள்ளார். தலமரம் வெள்ளெருக்கு. தீர்த்தங்கள் கந்த, செங்கழுநீர், நீல தீர்த்தங்கள்

உள்பிராகாரத்தில் சித்திவிநாயகர், கூத்தாடும் பிள்ளையார், சுப்ரமண்யர், விசுவநாதர், விசாலாட்சி, நடராஜர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

தேவகணங்கள் பழமலைநாதரை வணங்கி அதிகமான வரங்களும், எளிதில் முத்தியும் அடையக் கூடிய சிவஸ் தலம் எது என்று கேட்க பழமலையார் உருக்கத்தம்புலியூர் என்று கொல்ல அத்தேவகணங்களெல்லாம் இத்தலத்திற்கு வந்தடைந்து சிவலிங்கத்தைப் பூசித்து வந்தபடியால் இத்தலத்திற்கு கணேசுரம் என்றும் பெயர்.

பரமசிவன் வேதப்பொருளைச் சொல்லும் போது பாராமுகமாகக் கேட்ட பார்வதியை வலைச்சியாகவென இட்ட சாபத்தைக் கேட்டு குமாரக்கடவுள் கோபித்து அங்கிருந்த அந்த ஏட்டை சமுத்திரத்தில் எறிய, பரமசிவன் இட்ட சாபத்தால் ஊமையான குமரேசுவரர் இங்கு வந்து பூசித்துத் தன் ஊமைத்தன்மை நீங்கியபடியால் இத்தலத்திற்க குமரேசுரம் என்றும் பெயர்.

ஒரு புத்திரைப் பெற விரும்பி இத்தலத்தில் தவஞ்செய்துக் கொண்டிருந்த பிராமணனைக் கொல்ல வந்த புலியைக் கொன்ற வேடன், அப்புண்ணியத்தால் புலிக்கால் முனிவராகப் பிறந்து இங்கு வந்து பூசித்தபடியால் இத்தலத்திற்குப் புலியூ ரென்றும் பெயர்.

மதுராபுரி அரசன் புத்திரப் பேற்றை விரும்பி இத்தலத்திற்கு வந்து வசித்து தரிசித்தபடியால் ஒரு புத்திரன் பிறக்க அவனுக்கு இராஜேந்திரன் என்று பெயரிட்டான் அதனால் இத்தலத்திற்கு இராஜேந்திரபுரம் என்று பெயர்.

நைமிசாரணிய முனிவர்கள் இத்தலத்தில் வெள்ளெருக்கு மரங்களாக உருக்கொண்டு வசித்ததால் இத்தலத்திற்கு எருக்கத்தம்புலியூர் என்று பெயர்.

உச்சினிவேந்தனின் குட்ட நோய் நீங்கிய தலம். 63 நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டயாழ்ப்பாணர் பிறந்து, வளர்ந்த தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் 4ஆவது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் கொண்டருளியது.

அருணகிரிநாதர் திருப்புகழ் இத்தலத் திற்குரியது. நம்பியாண் பார்நம்பியும் இத்தலத்தைப் பற்றி பாடியுள்ளார்.

இத்தலத்து தலபுராணம் சிவப்பிரசாகர் 12 சருக்கங்களும் 476 பாடல்கள் கொண்டதாகும். கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

3. வலசை

வேப்பூரிலிருந்து வடக்காக 15கி.மீ. மணிமுத்தாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விசுவநாதர். 250 வருட முற்பட்டது.

4. இடைச்சித்தூர்

விருத்தசலத்திற்கு வடமேற்கே 16கி.மீ. இக்கோவிலின் மூலவர் ஆனந்தீஸ்வரர். 150 வருட முற்பட்டது.

5. பிஞ்சனூர்

விருத்தாச்சலத்திலிருந்து வடமேற்கே 15கி.மீ. மணிமுத்தாற்றின் வடகரையில் இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விசுவநாதர். 250 வருட முற்பட்டது.

6. நல்லூர்

வேப்பூரிலிருந்து வடக்காக 8கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக் கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வில்வவனநாதர்.

7. சேப்பாக்கம்

வேப்பூருக்கு வடக்கே 3கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக் கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேசுவரர். 350 வருட முற்பட்டது.

8. காட்டுமையிலூர்

வேப்பூருக்கு வடக்கே 4கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக் கோவில் 1-16 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக திருக்கரந் தொண்டீசுவரர்.

9. வேப்பூர்

விருத்தாச்சலத்திலிருந்து மேற்கே 23கி.மீ. வேப்பஞ்சத்தி, நிம்பபுரம், மணிமுத்தாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வில்வவனநாதர். இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளி யுள்ள தலம்.

10. சத்தியம்

விருத்தாச்சலத்திலிருந்து மேற்கே 10கி.மீ. மணிமுத்தாற்றின் தென்பகுதியில் இக் கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வில்வருத்தீஸ்வரர். 250 வருட முற்பட்டது.

11. முதனை

விருத்தாச்சலத்திலிருந்து வடகிழக்கே 15கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் முதுகுன்றேசுவரர். 250 வருட முற்பட்டது.

12. கோபுராபுரம்

விருத்தாச்சலத்திலிருந்து வடக்கே 7கி.மீ. இக்கோவில் 8-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஆதிசக்திஈஸ்வரர்.

13. பரவலூர்

விருத்தாச்சலத்திலிருந்து மேற்கே 5கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக் கோவில் உள்ள மூலவர் சுந்தரேசுவரர்.

14. தொரவலூர்

விருத்தாச்சலத்திலிருந்து மேற்கே 5கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்திநாதர். 150 வருட முற்பட்ட கோவில். ०

15. தே. பொடையூர்

விருத்தாச்சலத்திலிருந்து மேற்கே 15கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதிஈஸ்வரர். 250 வருட முற்பட்ட கோவில்.

16. இடையூர்

விருத்தாச்சலத்திலிருந்து தென்மேற்கே 11கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

17. மேல் சாத்தக்குடல்

விருத்தாச்சலத்திலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

18. வடக்குவேலூர்

விருத்தாச்சலத்திலிருந்து கிழக்கே 16கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் காசிவிஸ்வ நாதர். 600வருட முற்பட்ட கோவில்.

19. கர்மங்குடி

விருத்தாச்சலத்திலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாதர்.

20. சத்தியவாதி

விருத்தாச்சலத்திலிருந்து தெற்கே 7கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆலந்துறைஈஸ்வரர்.

21. தெற்குவடக்குப்புத்தூர்

விருத்தாச்சலத்திலிருந்து தெற்கே 10கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜெயகைலாசநாதர்.

22. தர்மநல்லூர்

விருத்தாச்சலத்திலிருந்து தென்கிழக்கே 21கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தருமபுரீஸ்சுவரர்.

23. காவனூர்

விருத்தாச்சலத்திலிருந்து தென்கிழக்கே 15கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

பஞ்சமூர்த்தி

சிவபிரானுக்குரிய சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் ஐந்து மூர்த்தங்கள்; விநாயகன், முருகன், சிவன், உமை, சண்டேசுவரன் என்னும் ஐவகைக் கடவுளர்.

பஞ்சலிங்கம்

பிருதிவிலிங்கம் (காஞ்சி, ஆரூர்), அப்புலிங்கம் (திருவா னைக்கா), தேயுலிங்கம் (திரு வண்ணாமலை), வாயுலிங்கம் (சீகாளத்தி), ஆகாயலிங்கம் (சிதம்பரம்) என்னும் சிவனின் ஐவகை இலிங்கங்கள்.

பஞ்சவாதனம்

அனந்தாசனம், கூர்மாசனம், சிங்காசனம், பதுமாசனம், யோகாசனம்.

முந்நீர்


பூமியைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தன்மையையுடையதும் ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர், என்னும் மூன்று நீர்களை உடையதுமான கடல்.

முப்பகை

காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்கள்; பிசாசு, உலகு, உடல் ஆகிய மனிதனின் மூன்று எதிரிகள்.

திட்டக்குடி வட்டம்

(கடலூர் மாவட்டம்)



1. திருவரத்துறை

கடவு ளைக்கட லுள்ளெழு நஞ்சுண்ட
உடலு ளானையொப் பாரியி லாதவெம்
அடலு ளானை யரத் துறை மேவிய
சுடரு ளானைக்கண் டீர்நாந் தொழுவதே

-- திருநாவுக்கரசர்

திட்டக்குடியிலிருந்து கிழக்கே 10 கி.மீ. திருநெல்வாயில் அரத்துறை. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் அமைந்துள்ளது.

இக்கோவில் இறைவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தீர்த்தபுரீசுவரர், அரத்துறைநாதர் அம்மன் ஆனந்தநாயகி. தலமரம் ஆலமரம். தீர்த்தம் நீலமலர்ப்பொய்கை கோவிலுக்கு வடகிழக்கேயுள்ளது. வெள்ளாறுநதி.

அரத்துறை என்பது ஆலயத்தின் பெயர் ஆதித்துறை (காரியனூர்), திருவாலந்துறை, திருமாந்துறை, ஆடுதுறை, திருவதிட்டத் துறை (திட்டகுடி) திருக்கைத்துறை முதலிய துறைகள் ஏழையும் சப்தரிஷிகள் பூசை செய்ய வேண்டி "நீவா" (வெள்ளாறு) என்று அழைத்த தலம்.

திருஞானசம்பந்தர்க்கு முத்துச் சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் இவைகளை அருளிய தலம். கணபதிக்கு அருகில் உள்ள அஷ்டலக்ஷ்மிகளும், சுவரின் மாடங்களி லுள்ள சிற்ப வேலைகளும் அமைந்துள்ளன. கோவிலுக்கு முன்னால் மூன்று சிறு உருவங்கள் இருக்கின்றன.அவை சேர, சோழ, பாண்டிய லிங்கங்காளாகும்.

திருஞானசம்பந்தர் தங்கியிருந்த மாறன்பாடி இத்தலத்திற்கு அருகில் உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற நடுநாட்டுத் தலங்களில் இத்தலம் முதலாவ தாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பதிகங்களும் கொண்ட தலம். அருணகிரிநாதர் இத்தல முருகனை வழிபட்டு திருப்புகழ் அருளியுள்ளார்.

தினமும் இரு கால பூஜை நடைபெறுகிறது.

2. பெண்ணாகடம்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தே

-- திருநாவுக்கரசர்

திட்டக்குடியிலிருந்து கிழக்கே 15 கி.மீ. திருந்தூங்கானைமாடம், திருக்கடந்தை, முடிகொண்ட சதுர்வேதிமங்கலம். வெள்ளாற் றின் வடகரையில் இக்கோவில் 4-01 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜ கோபுரமும், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுடர்க் கொழுந்துநாதர், அம்மன் கடந்தைநாயகி. தலமரம் - சண்பகம். தீர்த்தம் வெள்ளாறு.

பெண் (தேவகன்னியர்) ஆ (காமதேனு). கடம்(வெள்ளையானை) ஆகிய இவர்கள் பூசித்த காரணத்தால் பெண்ணாகடம் என்று பெயர். கோவிலின் பெயர் தூங்கானை மாடம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெரு மானைத் தம் திருமேனியில் திரிசூல முத்திரையும், ரிஷப முத்திரையும் பொறித்தருளுமாறு வேண்டி அங்ஙனமே பொறித்தருளப் பெற்றத்தலம்.

இத்தலத்தில் அவதரித்த கலிக்கம்ப நாயனார் ஒரு நாள் தன் பணியாளனை

சிவனடியாராகவர தம்மனைவி அவருக்கு நீர்வார்க்கத் தாழ்ந்தமையறிந்து மனைவியின் கரத்தை வாள் கொண்டுவெட்டி வீடுபெற்ற தலம். மெய்கண்டதேவரின் தகப்பனார் அச்சுதகளப்பாளர் வாழ்ந்த தலம்.

கருவறை விமானம் கஜப்பிருஷ்ட விமானம். மூலவருக்கு வடபால் கட்டுமலை மேல் சௌந்தரேஸ்வரர் சன்னிதியுள்ளது. இதுவொரு தனிகோபுரம் கொண்ட வித்தியாசமான திருக்கோவில் இதனை அடைய படிகள் உள்ளன. கோவிலுக்கு மேல் மற்றொரு கோவில் அமைந்துள்ளது.

பிரளயம் காத்த அதிகார நந்தி கிழக்கு நோக்கியுள்ளது. தேவாரப் பதிகம் பெற்ற நடு நாட்டுத் தலங்களில் இத்தலம் 2வது ஆகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடியருளிய திருப்பதிகம் கொண்டது. திருக்கடந்தை தலபுராணம் உள்ளது.

இங்குள்ள கல்வெட்டுகள் யாவும் பல்லவ, சோழ, விசய நகர மன்னர்களின் காலத்தில் ஏற்பட்டவை. பரகேசரிவர்மனான இராஜேந்திரன் காலத்தில் இவ்வூரை வடகரை இராஜாதிராஜ வளநாட்டு மேற்கா நாட்டுப் பிரமதேயமான முடிகொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துத் திருத்தூங்கானை மாடம் என்றும், இறைவன் நாமம் திருத்தூங்கானை மாடமுடைய மகாதேவர் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை பௌர்ணமி உற்சவம் நடைபெறுகிறது.

3. நரையூர்

தொழுதூரிலிருந்து வடக்கே 20கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேசுவரர். 200 வருட முற்பட்ட கோவில்.

4. சிறுபாக்கம்

தொழுதூரிலிருந்து வடக்கே 18கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

5. லட்சுமணபுரம்

தொழுதூரிலிருந்து வடமேற்கே 16கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தோலீஸ்சுவரர். 500 வருட முற்பட்ட கோவில்.

6. தீவளூர்

பெண்ணாகடத்திலிருந்து வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 52 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

7. வெண்கரம்பூர்

பெண்ணாகடத்திலிருந்து வடகிழக்கே 8கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 200 வருட முற்பட்ட கோவில்.

8. நெடுங்குளம்

திட்டக்குடிக்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேசுவரர்.

9. செவ்வேரி

திட்டக்குடிக்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேசுவரர்.

10. கீலதானூர்

திட்டக்குடிக்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

11. தொழுதூர்

திட்டக்குடிக்கு மேற்கே 14கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 8செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மதுராந்தக தொழுதீஸ்வரர் சுயம்புலிங்கம். 1000 வருட முற்பட்ட கோவில்.

12. இராமநத்தம்

தொழுதூரிலிருந்து கிழக்கே ஒரு கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 6செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜோதீஸ்சுவரர்.

13. எலுத்தூர்

தொழுதூரிலிருந்து வடக்கே 4கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அண்ணாமலை ஈஸ்வரர். 300 வருட முற்பட்ட கோவில்.

14. அரங்கூர்

தொழுதூரிலிருந்து கிழக்கே 4கி.மீ. வெள்ளாற்றின் கரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர். 400 வருட முற்பட்ட கோவில்.

15. கீழ்செறுவை

திட்டக்குடிக்கு மேற்கே 2கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் உள்ள மூலவர் கைலாசநாதர்.

16. திட்டக்குடி

தொழுதூரிலிருந்து கிழக்கே 14கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக்கோவில் 3-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக வைத்திய நாதசுவாமி. இக்கோவிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் ரங்கநாதசுவாமி பெருமாள் கோவில் உள்ளது. வசிட்டர் பூசித்த தலம்.

17. புலிவலம்

திட்டக்குடிக்கு வடக்கே 4கி.மீ. மணிமுத்தாற்றின் வடகரையில் இக்கோவில் 2செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேசுவரர்.

18. பெருமுளை

திட்டக்குடிக்கு வடக்கே 2கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர். 300 வருட முற்பட்டது. முத்தையா சுவாமி கோவில் இங்கு பிரபலம்.

19. வையங்குடி

திட்டக்குடிக்கு வடகிழக்கு 6கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

20. அதமங்கலம்

திட்டக்குடிக்கு வடகிழக்கே 8கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக் கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தகடேஸ்வரர்.

21. தொளர்

பெண்ணாகடத்திலிருந்து வடமேற்கே 3கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தீர்த்தபுரீஸ்சுவரர்.

22. ஆவினங்குடிநெய்வாசல்

திட்டக்குடிக்கு கிழக்கே 5கி.மீ. இக் கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.


23. கூடலூர்

பெண்ணாகடத்திலிருந்து மேற்கே 4கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக் கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

24. இறையூர்

பெண்ணாகடத்திலிருந்து மேற்கே 3கி.மீ. வெள்ளாற்றின் வடகரையில் இக் கோவில் 1-56 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தாகம்தீர்த்தாஈஸ்வரர், அம்மன் அன்னபூரணி.

ஆத்தூர் வட்டம்
(சேலம் மாவட்டம்)



1. ஆத்தூர்

சேலத்திலிருந்து கிழக்கே 51 கி.மீ. அனந்தகிரி. வசிட்டநதிக்கரையில் இக் கோவில் 200×120 அடி நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கயநிர்மாலீஸ்வரர், வசிட்டேஸ்வரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி. தீர்த்தம் வசிட்டதீர்த்தம். தலவிருட்சம் வில்வம். வசிட்டர் முனிவர் கொங்கு நாட்டில் தாபித்த பஞ்ச பூதத்தலங்களில் இத்தலம் நெருப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. அனந்தன் வழிபட்ட தலம் இதனால் இறைவனுக்கு அனந்தேஸ்வரர் என்றும் பெயர்.

2. ஏத்தாப்பூர்

ஆத்தூர்க்கு வடமேற்கே 16 கி.மீ. வசிட்டநதிக்கு வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சாம்பமூர்த்தீஸ்வரர். அம்மன் மனோன்மணியம்மை. பஞ்சபூதத் தலங் களில் இத்தலம் அப்புத்தலமாகப் போற்றப் படுகிறது. ஐப்பசி மாதத்தில் 9-14 தேதி களிலும், மாசி மாதத்தில் 1-7 தேதிகளிலும் சூரியக் கதிர்கள் மூலவர் இலிங்கத்தின் மீது படுவதைக் காணலாம். தைமாதத்தில் பிர மோற்சவமும், ஐப்பசி மாதப் பௌர்ணமியின் போது அன்னாபிஷேகமும் நடைபெறுகிறது.

3. பெத்தநாயக்கன்பாளையம்

ஆத்தூர்க்கு வடமேற்கே 11 கி.மீ. வசிட்ட நதிக்கு தென்கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அதகொண்டீஸ்வரர்.

4. அரகலூர்

ஆத்தூர்க்கு கிழக்கே 21 கி.மீ. வசிட்டநதிக்கு தென்கரையில் இக்கோவில் 1-65 ஏக்கர் நிலப்பரப்பளவில், 5 பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு காமநாதீஸ்வரர். அம்மன் பெரிய நாயகி. பஞ்சபூதத் தலங்களில் இத்தலம் வாயுத் தலமாகப் போற்றப்படுகிறது. சேலம் மாவட் டத்தில் இத்தலமே பெரிய கோவிலாகும். இத்தலத்தில் உள்ள நடராஜர் மிக்கஅழகு டையவர், பெரிய உருவம். கல்வெட்டுக்கள் பல உள்ளன. பங்குனி மாதத்தில் தேரோட்டம் நடைபெறுகிறது.

5. பெரியயேரி

அரசலூர்க்கு வடகிழக்கே ஒரு கி.மீ. வசிட்ட நதிக்கு வடகரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தான்தோன்றீசுவரர்.

6. சாத்தப்பாடி

ஆத்தூர்க்கு தென்கிழக்கே 11 கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

7. நடுவளர்

ஆத்தூர்க்கு தென்கிழக்கே 10 கி.மீ. சுவேதா நதிக்கு வடபகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

8. கங்கவல்லி

ஆத்தூர்க்கு தெற்கே 14 கி.மீ. சுவேதா நதிக்கு வடகரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

9. ஆணையம்பட்டு

ஆத்தூர்க்கு தென்கிழக்கே 15 கி.மீ. சுவேதா நதிக்கு வடகரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர்.

10. தீடவூர்

ஆத்தூர்க்கு தென்கிழக்கே 16 கி.மீ. சுவேதா நதிக்கு தென்கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர்.

11. புனவாசல்


ஆத்தூர்க்கு தென்கிழக்கே 16 கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தான்தோன்றீசுவரர்.

12. விரகனூர்

ஆத்தூர்க்கு தென்கிழக்கே 22 கி.மீ. சுவேதா நதிக்கு வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கங்கா சுந்தரேஸ்வரர்.

சேலம் வட்டம்

(சேலம் மாவட்டம்)



1. சேலம்

நாமக்கல்லிருந்து வடக்கே 50கி.மீ. மும்முடித்தலைவாயில், பாபநாசம், கிள்ளை வனம், சுகவனம், பட்டீச்சரம், நாகீச்சுரம், சுகாரண்யம். இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 3 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு சுகவனேஸ்வரர். அம்மன் சொர்ணாம் பிகை. தீர்த்தம் திருமணிமுத்தாறு, பாபநாசம், தேனு, அமண்டுக, மனுசரண, மானத தீர்த்தங்கள். தலவிருட்சம் அரசமரம். உள்பிரா காரத்தில் வலம்புரி விநாயகர், முருகன், காசி விஸ்வநாதர், கங்காளமூர்த்தி, பஞ்ச பூதலிங்கம், சரஸ்வதி, சப்தகன்னியர்கள், கஜலஷ்மி, 63 நாயன்மார்கள், பைரவர், சூரியன், துர்க்கை, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சுகப்பிரம்மரிஷி வழிபட்டதால் இத் தலத்திற்கு சுகவனம் என்றும் பெயர். தேவர்களுடைய பாவத்தைப் போக்கியதால் பாபநாசம் என்றும், காமதேனு வழிபட்டதால் பட்டீச்சரம் என்றும், ஆதிசேடன் பூசித்ததால் நாகீச்சுரம் என்றும் பல பெயர் பெற்ற தலம். ஔவையார் மூவேந்தர்கள் வேண்டுதல் படி பனந்துண்டை பனைமரமாக்கி பணம் பழங்களை வழங்கிய தலம். இத்தலத் திலிருக்கும் வலம்புரி விநாயகரால் ஔவையார் திருக்கைலாயம் சென்றார் எனத் தலபுராணம் கூறுகிறது. அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் பாடப் பெற்ற தலம். இத்தலபுராணம் அட்டாவ தானம் சொக்கலிங்கப் புலவர் இயற்றிய பாவநாசத் தலபுராணம் இத்தலத்திற்குறியது. 12 சருக்கம், 672 பாடல்கள் கொண்ட தாகும்.இக்கோவிலில் 10 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை ராஜஸ்ரய சதுர்வேதி மங்கலம் என்றும் இறைவர் கிளிவண்ண முடையார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சுந்தர பாண்டியன் காலத்தில் இக்கோவில் விரிவுபடுத்தி கட்டப்பெற்ற கோவில்.

மேலும் இக்கோவிலின் எல்லை யைக் காக்கும் மாரியம்மன்களான கோட்டை மாரியம்மன், செவ்வாய்ப்பேட்டை மாரியம் மன், குகைமாரியம்மன், மேட்டுத்தெரு மாரியம்மன், குமாரசுவாமிபட்டி மாரியம்மன், கிச்சிப்பாளையம் மாரியம்மன், அம்மா பேட்டை மாரியம்மன், சின்னக்கடை மாரியம்மன், பாவாடித்தெரு மாரியம்மன், ஆற்றோரத்தெரு மாரியம்மன், புதுத்தெரு மாரியம்மன் என இத்தலத்தைக் எல்லையைக் காக்கும் சதுர்வேதி மங்கல மாரியம்மன் திருக்கோவிலாகும். மேலும் இந்நகரத்தினுள் இராஜ கணபதி, வினைதீர்த்த காசி விஸ்வநாதர், கோட்டை சௌந்தரராஜப் பெருமாள், காமாட்சியம்மன், செவ்வாய்ப்பேட்டை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில், கன்னிகாபரமேசுவரி, மதுரேஸ் வரர், அம்பலவாணர், ஏகாம்பரர், அழகிய நாதர் முதலிய திருக்கோவில்களும் சுற்றி அமைந்துள்ளன.

2. பேளூர்

சேலத்திலிருந்து கிழக்காக 32கி.மீ. திருவெள்ளூர், திருவேள்வியூர். இக்கோவில் வெள்ளாற்றின் கரையில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தாந்தோன்றிநாதர். அம்மன் அறம்வளர்த்த அம்மை. தலவிருட்சம் பலாமரம். தீர்த்தம் வசிட்ட தீர்த்தம். உள்பிராகாரங்களில் விநாயகர், முருகன், பஞ்சலிங்கம், 63 நாயன்மார்கள், கஜலஷ்மி, ஆறுமுகர், சந்திரன், சூரியன், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலத்தை நாரதர், வசிட்டர், துர்வாசர், இந்திரன், உரோமேசர், கபிலர், சம்புகன், சுனந்தன் முதலியோர் வழிபட்ட தலம்.

தலபுராணத்தில் இவ்வூர் வடவெள் ளாற்றின் தென்கரையில் இருப்பதால் வெள்ளூர் எனவும், வசிட்டர் வேள்வி செய்தமையால் வேள்வியூர் என்றும் வழங்கப்படுகிறது. 63 நாயன்மார்களில் ஒருவரான கணம்புல்லர் இத்தலத்தைச் சார்ந்தவர். தி.மு. 3000 வருட முற்பட்ட கோவில், திருவெள்ளூர் தலபுராணம் அட்டாவதானம் சொக்கலிங்க கவிராயர் 13 சருக்கங்கள் 653 செய்யுட்கள் கொண்டது.

3. உத்தமசோழபுரம்

சேலத்திலிருந்து தென்மேற்கே 5கி.மீ. பெரியூர். திருமணிமுத்தாறு கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரங்கள் கொண்டு மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கரபுரீஸ்வரர். திருமுடிவடக்கு நோக்கி சாய்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அம்மன் பெரியநாயகியம்மை. தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரங்களில் வினைதீர்த்த விநாயகர், நடராஜர், நால்வர், அமர்நீதி நாயனார், காரைக்கால் அம்மையார், வந்தியம்மை, பஞ்சலிங்கம், ஆறுமுகப் பெருமான், ஐயப்பன், கரடிசித்தர், ஞான பைரவர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. இராவணன் தம்பிகளில் ஒருவரான கரண் வழிபட்டுப் பேறு பெற்றதனால் இறைவனுக்கு கரபுரநாதர் என்று பெயர். மூவேந்தர்கள், ஔவையார், அருணகிரி நாதர், பட்டினத்தார், சேக்கிழார் முதலியோர் வழிபட்ட தலம். ஔவையார் இத்தலத்தில் ஒரு ஏழை பெண்களுக்கு திருமணம் செய்துவைத்த தலம். சிறுபாலகன் பூஜை செய்யும்போது இறைவன் பாலகனுக்கு முடிசாய்ந்து காட்சியளித்த தலம். கரடிசித்தர் வழிபட்ட தலம். திருநாவுக்கரசர் இத்தலத்தை தேவார வைப்புத் தலமாகப் பாடியுள்ளார்.

கல்வெட்டுக்களில் இறைவர் கரபுர முடைய நாயனார், கரபுரமுடைய தம்பிரான் என்று குறிக்கப்பட்டுள்ளது. சுமார் 1300 வருட முன்பு சோழமன்னன் இக்கோவிலை கட்டுவித்தான்

4. கஞ்சமலை

சேலத்திலிருந்து மேற்கே 14கி.மீ. சித்தர்கோவில், மலையடிவாரத்தில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய இறைவர் சித்தேஸ்வரர். சின்முத்திரையுடன் காட்சியளிக்கிறார். தீர்த்தம் காந்த தீர்த்தம். திருமூலர் பரம்பரை கஞ்சமலை சித்தர் வாழ்ந்த தலம். கஞ்சமலை சித்தரே பின்பு சித்தேசுவர சுவாமியாகி நித்தம் வரும் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார். காந்த தீர்த்தத்தில் உப்பு, மிளகு, வெல்லம் இட்டு பயபக்தியுடன் நீராட உடம்பிலுள்ள கட்டிகள், பருக்கல் குணமாகின்றன.

இத்தலத்தில் விநாயகர், உற்சவசித்தர், காளியம்மன், நாகர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. அருகில் 100 படிகொண்ட சிறு மலையின் மேல் முருகப் பெருமான் ஸ்ரீ ஞானசற்குரு பாலமுருகன் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். கொங்கு மண்டல சதகம், திருமந்திரம், புறநானூறு ஆகியவற்றில் இத்தலத்தைப் பற்றி கூறு கிறது. மூலிகைகள் இம்மலையில் அதிகம். மலைமேல் அமாவாசை, பௌர்ணமி தினத்தன்று பக்தர்கள் இரவில் தங்கி செல்கிறார்கள். நான்கு கால பூஜை. சித்திரை மாதம் 3வது செவ்வாய்கிழமை உற்சவம் நடைபெறுகிறது.

5. சந்தையூர்

சேலத்திற்கு தெற்கே 10 கி.மீ. நந்தமேடு. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

6. மல்லூர்

சேலத்திலிருந்து தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர்.

7. வாழப்பாடி

சேலத்திலிருந்து கிழக்கே 28 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.


8. சிங்கிபுரம்

வாழப்பாடிக்கு தெற்கே 3 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பட்டீஸ்வரர்.


9. வேப்பிலைப்பட்டி

வாழப்பாடியிலிருந்து தென்மேற்கே 10கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தலிங்கேஸ்வரர்.

ஓமலூர் வட்டம்
(சேலம் மாவட்டம்)



1. தாரமங்கலம்



ஓமலூர்க்கு தென்மேற்கே 10கி.மீ. இக்கோவில் 1-63 ஏக்கர் (300×160) நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர் மேற்கு நோக்கியுள்ளார். அம்மன் சிவகாமியம்மை. தீர்த்தம் சிவகங்கை, பிரம்மதீர்த்தம். தலவிருட்சம் வன்னிமரம், கடலாத்திமரம். உள்பிரா காரத்தில் விநாயகர், முருகர், ஸஹஸ்ரலிங்கம், பஞ்சலிங்கம், நடராஜர், அவினாசியப்பர் முதலிய சன்னிதிகள் உள்ளன. மாசி மாதங்களில் 9-13 தேதிகளில் சூரிய கதிர்கள் இறைவன் மீது விழுகின்றன. இக்கோவிலில் உள்ள ரிஷிபத்தினி, ஊர்த்துவதாண்டவர், மன்மதன், பிட்சாடனர், கொடுங்கை, யாளித்தூண்கள் போன்ற சிறப்பு மிக்க சிற்பச்சிலைகள் உள்ளன. உள்பிராகாரத்தில் ஏழுகல்விநாயகர் சன்னிதி பிரபலம். கட்டி முதலி இந்தக் கோவிலை விரிவுபடுத்திக் கட்டிய கோவிலாகும். கல்வெட்டுக்கள் உள்ளன. தினமும் நான்கு கால பூஜை. தைமாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும், இவ்வூர்க்கு மேற்கில் சிறிது தொலைவில் பெரிய நந்தியுடன் இளமேசுவரர் திருக்கோவிலும் உள்ளது மூலவர் இராமேஸ்வரர்.

2. ஓமலூர்

சேலத்திலிருந்து வடமேற்கே 17கி.மீ. சரபங்கா நதிக்கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வசந்தீஸ்வரர்.

3. தாராபுரம்

ஓமலூர்க்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 67 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

4. சேம்மந்தபட்டி

ஓமலூர்க்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர்.

5. அமரகுந்தி

தாரமங்கலத்திலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீரேஸ்வரர். அருகில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

6. திண்டமங்கலம்

ஓமலூர்க்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லிகார்சுனேஸ்வரர்.

7. கருப்பூர்

ஓமலூர்க்கு தென்கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.


8. ராமிரெட்டிபட்டி

தாரமங்கலத்திலிருந்து மேற்கே 3கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தியாகராஜர்.

9. தசவிலக்கு

தாரமங்கலத்திற்கு தெற்கே 3கி.மீ. இக்கோவில் சரபங்காநதிக்கு மேற்கு கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உலகேஸ்வரர்.

மேட்டூர் வட்டம்
(சேலம் மாவட்டம்)



மேட்டூர் வட்டம்

1. மேட்டூர்

சேலத்திலிருந்து வடமேற்கே 50கி.மீ. இக்கோவில் காவிரியாற்றின் கரையில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

2. காவேரிபுரம்

மேட்டூர்க்கு வடமேற்கே 16கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஜலகண்டேஸ்வரர்.

3. வெள்ளார்

மேச்சேரிக்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லிகார்சுனேஸ்வரர்.

4. அமரம்

மேச்சேரிக்கு வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிலிங்கேஸ்வரர்.

5. மேச்சேரி

மேட்டூர்க்கு வடகிழக்கே 18கி.மீ. மேய்ச்சல் ஏரி. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பசுபதீஸ்வரர். அம்மன் பத்ரகாளியம்மை.

6. பழமலை

மேட்டூர்க்கு தென்மேற்கே 12கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சித்தீஸ்வரர்.

7. வனவாசி

நாகவல்லிக்கு தென்மேற்கே 2கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

8. அவதாட்டூர்


ஜலகண்டபுரத்திற்கு மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 42 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

மகேஸ்வர வடிவங்கள்

(64 சிவ வடிவங்கள்)

இலிங்க மூர்த்தி, இலிங்கோத்பவ மூர்த்தி, முகலிங்க மூர்த்தி, சதாசிவ மூர்த்தி, மகாசதாசிவ மூர்த்தி, உமாமகேச மூர்த்தி, சுகாசன மூர்த்தி, உமேச மூர்த்தி, சோமாஸ்கந்த மூர்த்தி, சந்திரசேகர மூர்த்தி, விருஷபாருட மூர்த்தி, விருஷபாந்திக மூர்த்தி, புஜங்கலளித மூர்த்தி, புஜங்கத்ராஸ மூர்த்தி, சந்தியா நிருத்த மூர்த்தி, சதாநிருத்த மூர்த்தி, சண்டதாண்டவ மூர்த்தி, கங்காதர மூர்த்தி, கங்கா விசர்ஜன மூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, கல்யாண சுந்தர மூர்த்தி, அர்த்தநாரீஸ்வர மூர்த்தி, கஜாயுத்த மூர்த்தி, ஜ்வராபக்ன மூர்த்தி, ஸார்த்தூலஹர மூர்த்தி, பாசுபத மூர்த்தி, கங்காள மூர்த்தி, கேசவார்த்த மூர்த்தி, பிட்சாடன மூர்த்தி, சிம்ஹக்ன மூர்த்தி, சண்டேசானுக்ரஹ மூர்த்தி, தட்சிணா மூர்த்தி, யோகதட்சிணா மூர்த்தி, வீணாதர தட்சிணா மூர்த்தி, காலந்தக மூர்த்தி, காமதகன மூர்த்தி, லகுளேஸ்வர மூர்த்தி, பைரவ மூர்த்தி, ஆபதுத்தாரண மூர்த்தி, வடுக மூர்த்தி, க்ஷேத்திரபால மூர்த்தி, வீரபத்ர மூர்த்தி, அகோர மூர்த்தி, தக்ஷயக்ஞஹத மூர்த்தி, கிராத மூர்த்தி, குருமூர்த்தி மூர்த்தி, அச்வாரூட மூர்த்தி, கஜந்திக மூர்த்தி, ஜலந்தரவத மூர்த்தி, ஏகபாதத்ரி மூர்த்தி, ஏகபாத மூர்த்தி, கௌரிவரப்ரத மூர்த்தி, சக்ரதான மூர்த்தி, கௌரிலீலாசமன்வித மூர்த்தி, விஷா பஹரண மூர்த்தி, கருடாந்திக மூர்த்தி, பிரம்ம சிரஸ்சேத மூர்த்தி, கூர்மஸம்ஹார மூர்த்தி, மத்ஸ்ய ஸம்ஹார மூர்த்தி, வராஹ ஸம்ஹார மூர்த்தி, பிரார்த்தனு மூர்த்தி, ரக்தபிக்ஷப்ரதான மூர்த்தி, சிஷ்ய பாவமூர்த்தி மூர்த்தி.

சங்ககிரி வட்டம்
(சேலம் மாவட்டம்)



1. சங்ககிரி

சேலத்திலிருந்து தென்மேற்கே 37கி.மீ. சங்கரி, சங்கரிதுர்க்கம். கடல்மட்டத்தி லிருந்து இம்மலை 2345அடி உயரம், 1500 படிகள் கொண்டது. இக்கோவில் 230×150 அடி நீளம், அகலம் கொண்டு ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமேஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி. உள்பிராகாரத்தில் விநாய கர், ஆறுமுகர், நடராஜர், செல்லாண்டி அம்மன், காமாட்சியம்மன், சோமாஸ்கந்தர் முதலிய சன்னிதிகள் உள்ளன. கெட்டி முதலியார்கள் திருப்பணி செய்த தலம்.

2. இருபுலி

எடப்பாடிக்கு வடக்கே 8 கி.மீ. இக்கோவில் சிரபங்கா நதிக்கு வடபகுதியில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வியாக்ரபாதர். அருகில் சீர்காழிநாதர்.

3. வேலாலபுரம்

எடப்பாடிக்கு வடகிழக்கே 15 கி.மீ. சிரபங்கா நதிக்கு வடகரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேலாலதீஸ்வரர்.

4. கச்சிப்பள்ளி

எடப்பாடிக்கு கிழக்கே 10 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரர். அம்மன் காமாட்சியம்மன்.

5. ஆவணிபேரூர்

எடப்பாடிக்கு வடகிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

6. செட்டிமாங்குறிச்சி

எடப்பாடிக்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் உலகேஸ்வரர்.

7. பூலாம்பட்டி

எடப்பாடிக்கு வடமேற்கே 11 கி.மீ. காவிரியாற்றின் கிழக்குகரையில் இக் கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

8. எடப்பாடி

சங்ககிரிக்கு வடக்கே 14 கி.மீ. சிரபங்கா நதிகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நஞ்சுண்டேஸ்வரர்.

9. வெள்ளரைவல்லி

எடப்பாடிக்கு மேற்கே 4 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

10. கண்ணன்தேரி

எடப்பாடிக்கு தென்கிழக்கே 11 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

11. கூடலூர்

சங்ககிரிக்கு வடகிழக்கே 16 கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சீயாளநாதஸ்வாமி.

12. அரசிரமேனி

எடப்பாடிக்கு தென்மேற்கே 8 கி.மீ. சிரபங்கா நதிக்கு தென்கரையில் இக்கோ வில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

13. காவேரிபட்டி

எடப்பாடிக்கு தென்மேற்கே 9 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அனந்தீஸ்வரர்.

14. காவேரிப்பட்டி அக்ரஹாரம்

எடப்பாடிக்கு தென்மேற்கே 13 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காவிரிநாதஸ்வாமி.


15. காத்தேரி

சங்ககிரிக்கு மேற்கே 18 கி.மீ. காவிரியாற்றின் கிழக்குப் பகுதியில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

16. மோரூர்

சங்ககிரிக்கு தெற்கே 6 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு புஜனேஸ்வரர்.

திருச்செங்கோடு வட்டம்
(நாமக்கல் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருச்செங்கோடு

வெந்தவெண் நீறணிந்து விரிநூல் திகழ்மார்பின்நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவார் அவலம் அறுப்பாரே

-- திருஞானசம்பந்தர்.

நாமக்கல்லிருந்து வடமேற்கே 35 கி.மீ. திருக்கொடிமாடச்செங்குன்றூர், நாககிரி, நெடுவேள்குன்று. இக்கோவில் 1200 அடி உயரம் கொண்டு இரு மலைகளாக உள்ளது. மேலே செல்ல 1200 படிகள். மலைமேல் 250×200 அடி நீளம், அகலம் கொண்டு வடக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அர்த்தநாரீஸ்வரர் மேற்கு நோக்கியுள்ளார். நிழலடியில் பிருங்கி முனிவர் கோலூன்றி நின்றவடிவில் தொழுது நிற்கும் திருக்காட்சி. அம்மன் பாகம் பிரியாளம்மை. தீர்த்தம் தேவதீர்த்தம். தல விருட்சம் வன்னிமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், செங்கோட்டுவேலர், ஆதிகேசவ பெருமாள், நாகேசுவரர் முதலிய சன்னிதிகள். மலையேறும்போது 100 அடி நீளம் கொண்ட 5 தலைநாகம் உள்ளது. அறுபதாம் படியில் சத்யவாக்கியப் பெருமான்.

இளங்கோவடிகள் தமது நூலில் இம்மலையை ''சீர்கெழு செந்திலும் செங்கோடும்'' என்று சிறப்பித்துப் 2000 வருடமுன்பே பாடியுள்ளார். மற்றும் திருஞானசம்பந்தர் ஒரு பதிகமும், அருணகிரிநாதர் 27 திருப்புகழ் பாடல்களும், இத்தலத்திற்கு உண்டு.

அறுபத்துமூவரில் ஒருவரான விறன் மிண்டநாயனார் பிறந்து பேறுபெற்றத் தலம். தலபுராணம் தென்காசி கவிராஜ பண்டிதரால் இயற்றப்பட்டது. செங் கோட்டுக் குறவஞ்சி உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கொங்கு நாட்டுத் தலங்களில் இத்தலம் 4 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருஞானசம்பந்தர் முன்பனிக் காலத்தில் இங்கு எழுந்தருளியபோது உடன்வந்த தொண்டர்களுடன், குளிர்சுரத்தால் வருந்தின போது திருநீலகண்டப் பதிகம் பாடி அதைப் போக்குவித்தார்.

அம்பிகை தவஞ்செய்து சிவபெருமானின் திருமேனியில் பாதிபாகம் பெற்ற தலம். மலை சிவந்த நிலமாதலால் செங்கோடு என்று பெயர். சிலப்பதிகாரத்தில் 'நெடுவேள் குன்று' எனக் கூறப்பெற்றுள்ளது.

கல்வெட்டுக்கள் 30 உள்ளன. முதலாம் பராந்தகன், கங்கைகொண்ட இராஜேந்திர சோழன், கிருஷ்ணதேவராயர், நாயக்க மன்னர்கள், மைசூர் மன்னர்கள் காலத்தைச் சேர்ந்தது.

மலையடிவாரத்தில் கைலாசநாதர் திருக்கோவில் கிழக்கு நோக்கியதும், 5நிலை, 76அடி உயரம் கொண்ட இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் கைலாசநாதர். அம்மன் ஏலவார்குழலியம்மை. ஆறுமுகப் பெருமான் முதலிய சன்னிதிகள் உள்ளன. தினமும் நான்கு கால பூஜை. வைகாசி விசாகம் அன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது.

2. மல்லசமுத்திரம்

திருச்செங்கோட்டிலிருந்து வடகிழக்கே 21 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் கள்ளப்பட்டியில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் கந்தசுவாமி கோவிலும் உள்ளது.

3. செம்பகமாதேவி

மல்லசமுத்திரத்திலிருந்து மேற்கே 5கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சாமந்தீஸ்வரர்.

4. கொமாரபாளையம்

திருச்செங்கோட்டிலிருந்து வடமேற்கே 23 கி.மீ. காவிரியாற்றின் கிழக்குகரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

5. பாலாக்குழி அக்ரஹாரம்

மல்லசமுத்திரத்திலிருந்து வடமேற்கே 5 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

6. தேவனாங்குறிச்சி

திருச்செங்கோட்டிலிருந்து மேற்கே 5கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் செவ்வந்தீஸ்வரர்.

7. அனங்கூர்

திருச்செங்கோட்டிலிருந்து மேற்கே 8கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சக்தீஸ்வரர்.

8. பள்ளிப்பாளையம் அக்ரஹாரம்

கொமாரபாளையத்திலிருந்து தெற்கே 11 கி.மீ. காவிரியாற்றின் கிழக்கு கரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

9. தோக்காவடி

திருச்செங்கோட்டிலிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நல்லைராமசாமி.

10. கவுண்டம்பாளையம்

திருச்செங்கோட்டிலிருந்து கிழக்கே 9கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாண்டீஸ்வரர்.

11. அகரம்

திருச்செங்கோட்டிலிருந்து கிழக்கே 14கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர்..

12. பாலமேடு

மல்லசமுத்திரத்திலிருந்து தெற்கே 7கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வன்னீஸ்வரர்.

13. ஊஞ்சனை

திருச்செங்கோட்டிலிருந்து தென் கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சீர்காழிநாதர்.

14. கொக்கராயன்பேட்டை

திருச்செங்கோட்டிலிருந்து தென்மேற்கே 14கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரமலிங்கேஸ்வரர்.

15. பாட்லூர்

திருச்செங்கோட்டிலிருந்து தென்மேற்கே 15கி.மீ. இக்கோவில் காவிரியாற்றின் வடகரையில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

16. மொலசை

திருச்செங்கோட்டிலிருந்து தென்மேற்கே 15கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் முக்கண்ணீஸ்வரர்.


17. கூத்தம்பூண்டி

திருச்செங்கோட்டிலிருந்து தென்கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பூலோகநாதர்.

18. புதூர்

திருச்செங்கோட்டிலிருந்து தென்கிழக்கே 23கி.மீ. 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

ராசிபுரம் வட்டம்
(நாமக்கல் மாவட்டம்)



1. ராசிபுரம்

சேலத்திலிருந்து தெற்கே 24 கி.மீ. இராஜபுரம். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் 35அடிஉயர கோபுரம், பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர் மேற்கு நோக்கியும் அம்மன் தர்மசம்வர்த்தினி கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். உள்பிராகாரத்தில் தனிச்சன்னிதியில் தெற்கு நோக்கியவாறு ஆறுமுகப் பெருமான் மயில் மீது அமர்ந்து தேவியருடன் காட்சியளிக்கிறார். தலவிருட்சம் வில்வம். அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிச் செய்த தலம். இத்தலத்தை இராஜபுரம் என்றே அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். இக்கோவிலை வல்வில்ஓரியால் திருப்பணி செய்யப்பட்ட தலம்.

2. பைள்நாடு

இராசிபுரத்திலிருந்து தென்கிழக்கே 22கி.மீ. வேளுக்குறிச்சி. குன்றின் மேல் இக்கோவிலில் உள்ள மூலவர் மகாதேவர். தனிச்சன்னிதியில் முருகப்பெருமான் வேட்டுவக் கோலத்துடன் காட்சியளிக்கிறார். இத்தல முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். உள் பிராகாரத்தில் விநாயகர், அம்மன், திருமால், இடும்பன், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. வல்வில்ஓரி திருப்பணி செய்த தலம்.

3. ஆலைவாய்பட்டி

இராசிபுரத்திலிருந்து வடமேற்கே 12கி.மீ. உலைவாய்ப்பட்டி, உலைவாய் மலை. இக்கோவில் மலைமேல் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஏகாம்பரநாதர். அம்மன் காமாட்சி. தலவிருட்சம் இலந்தை மற்றும் வில்வம். 1500 படிகள் கொண்டதும் 2 கி.மீ. தூரம் கொண்ட இம்மலை மேல் இக்கோவில் உள்ளது. தனிச்சன்னிதியில் பாலசுப்ரமணியர் காட்சியளிக்கிறார். சித்தர்கள் வணங்கிய தலம். கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டு கால பூஜை. பங்குனி உத்திரத்தில் உற்சவம்.

4. நாமகிரிப்பேட்டை

ராசிபுரத்திலிருந்து கிழக்கே 10 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வீரபத்திரர். அருகில் விக்னேஸ்வரர் திருக்கோவில்.

5. வெண்ணாந்தூர்

ராசிபுரத்திலிருந்து வடமேற்கே 12கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தீர்த்தகிரீஸ்வரர்.

6. பட்டணம்

ராசிபுரத்திலிருந்து வடகிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வீரகேஸ்வரர்.

7. காக்கவேரி

ராசிபுரத்திலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் புராந்தீஸ்வரர்.

8. சீரபள்ளி

ராசிபுரத்திலிருந்து கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 91 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் செவ்வந்தீஸ்வரர்.

9. ஒடுவாங்குறிச்சி

ராசிபுரத்திலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.


10. பொன்குறிச்சி

ராசிபுரத்திலிருந்து தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராஜேஸ்வரர்.

11. சிங்களாந்தபுரம்

ராசிபுரத்திலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருநீஸ்வரர்.

நாமக்கல் வட்டம்
(நாமக்கல் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. கொல்லிமலை

நாமக்கல்லிருந்து வடகிழக்கே 40கி.மீ. வளப்பூர்நாடு, கொல்லிஅறைப்பள்ளி. இக்கோவில் 4663 அடி உயரமும், 28கி.மீ. நீளமும், 19கி.மீ. அகலமும் கொண்ட இம்மலை உச்சிக்கு செல்ல 70 கொண்டை யூசிவளைவுகள் கொண்டது. இக்கோவில் நான்கு மலைகளால் சூழப் பெற்ற மலைப் பரப்பில் 1-30 ஏக்கர் நிலப்பரப்பளவில், கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு அறப்பள்ளியீசுரர் கிழக்கு நோக்கியும், அம்மன் தாயம்மை தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். உள்பிராகாரத்தில் விநாயகர், ஆறுமுகர், நால்வர், விஸ்வநாதர், விசாலாட்சி, மகாலஷ்மி, சரஸ்வதி, துர்க்கை, பைரவர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

நான்கு மலைகளால் சூழப்பெற்ற மலைப்பரப்பில் ஆலயம் அமைந்துள்ளதால் இத்தலத்திற்கு சதுரகிரி என்றும், புறத்தே நான்கு குன்றுகள் சூழ்ந்துள்ளதால் அஷ்டகிரி என்ற பெயரும் இத்தலத்திற்கு உண்டு. இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. இத்தல இறைவனை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரும் தாம் அருளிய தேவாரங்களில் குறித்துப் போற்றியுள்ளனர். கொல்லி எனப்படும் வானலாவிய மரங்களை உடைமையாலும், மும்மலங்களையும் முனைப்பையும் கொல்வதாலும் இம்மலைக்கு கொல்லி எனப்பெயர் பெற்றது. கொல்லிப்பாவை எனக் கருதப்படும் எட்டுக்கை அம்மன் கோவிலும், கன்னிமார் கோவிலும் இங்குள்ளன.

காலாங்கி முனிவர் முதலிய பதினெண் சித்தர்கள் தங்கித் தவம் செய்த தலம். அறுநூறு அடி உயரத்திலிருந்து விழும் ஆகாய கங்கை எனப்படும் நீர்வீச்சி இங்குள்ளது. கோவிலுக்கு அருகில் உள்ள ஐயாறு எனப்படும் மீன்பள்ளியாற்றில் உள்ள மீன்களுக்கு சோறு, பழம், தேங்காய் படைத்த பின்னரே அறைப்பள்ளி நாத ருக்குப் பூசை நிகழும். இறைவர் மீன்வடி வில் ஐயாற்றில் விளங்குவதாக ஐதிகம்.

இத்தல ஆறுமுகக் கடவுளை அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாக்களால் போற்றியுள்ளார். அம்பலவாணக் கவிராயர் பாடிய அறைப்பளீசுரசதகம் இத்தலத்திற் குண்டு. க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ் சித்தர்கள் வாழும் சிறப்பைக் கூறுகிறது. சங்கநூல்களில் நற்றினை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து போன்ற நூல்களிலும் இத்தலத்தைப் பற்றிக் கூறுகிறது.

கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்று கால பூஜை. ஆடிப்பெருக்கன்று மலைவாழ் மக்கள் பலரும் கூடிச் சிறப்பு விழா நடத்துகின்றனர்.

2. ஏழூர்

நாமக்கல்லிருந்து வடமேற்கே 15கி.மீ. ஏளூர், பூந்துறைநாடு. இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். இத்தல பெருமானை திருநாவுக்கரசு சுவாமிகள் க்ஷேத்திரக் கோவை திருத்தாண்டகத்தில் போற்றி பாடியுள்ளார். இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. கொங்கு மண்டலத்தில் பெரும்பாளப்பட்டி, பெருமாக வுண்டன்பட்டி, கண்டிபாளையம், வேம்பம் பட்டி, புதுப்பட்டி, கண்ணன்பட்டி, ஏழூர் என ஏழுநாடுகளுக்கு இவ்வூர் தலைமையிட மாக இருந்தது.

3. தோழூர்

நாமக்கல்லிருந்து தெற்கே 9கி.மீ. தோளூர். இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோளீஸ்வரர். அம்மன் விசாலாக்ஷி. இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசர் அருளிய க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகத்தில் இத்தலத்தைப் பற்றி பாடியுள்ளார். அருகில் கருமியண்ண சுவாமி கோவில், பத்ரகாளியம்மன் கோவிலும் இங்கு உள்ளன.

4. மோகனூர்

நாமக்கல்லிற்கு தெற்கே 18கி.மீ. வாழவந்திநாடு, குமரிகொங்கு, வில்வ வனம், குமரித்துறை. காவிரியாற்றின்

வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அசலதீபேசுரர் மேற்கு நோக்கியும், அம்மன் மதுகரவேணி கிழக்கு . நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலதீர்த்தம் காவிரி. தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், காலபைரவர், துர்க்கை, நடராஜர், காளி, நாயன்மார்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசர், சுந்த ரரும் போற்றி பாடப்பட்டதலம். இவ்வூரே கொங்குதண்குமரியாகும் என்பதைக் கொங்குமண்டலசதகத்தாலும் அறிய முடிகிறது.

சுவாமி சன்னிதியில் ஏற்றப்படும் தீபம் எவ்வளவு காற்று அடித்தாலும் அணையாத தீபமாய்ச் சுடர் விடுவதால் சுவாமிக்கு அசலதீபேசுரர் என்று பெயர். மாங்கனியைத் தனக்குக் கொடுக்கவில்லையே எனத் தாய், தந்தையர் மீது சினந்து வந்த முருகனைத் தேடி சுவாமியும், அம்பாளும் கிழக்கிலும், மேற்கிலும் தேடி வந்தபோது இவ்வூரில் முருகனைக்கண்டு மகிழ்ந்தனர் எனவும் இதனடிப்படையில் எழுந்த மகனூர் என்ற பெயரே மோகனூர் என மருவி வழங்குகிறது எனவும் கூறுகின்றன.

முற்காலத்தில் குமரிபாளையத்தில் தயிர் விற்று வாழ்ந்த தேனாயி என்ற பெண்ணுக்கு மகப்பேறு அளித்ததால் சுவாமிக்கு குமரீசு வரர் எனவும், இவ்வூர்க்கு மகவனூர் எனவும் வழங்கப்பெற்றன எனக் கொங்குமண்டல சதகம் கூறுகிறது.

குமரித்துறை எனப்படும் அகண்ட காவிரித் தீர்த்தம் கங்கையிலும் புனிதமான தாகப் போற்றப் பெறுகிறது.

ஆடிப்பெருக்கு நாளன்று ஆடவரும், மகளிரும், முளைப் பாரியை, பச்சரிசி, தேங்காய், வெல்லம், பழம் ஆகிய பொருட்களுடன் ஆற்றின் நீராடி இத்தலத்து இறைவனை வழிபடும் பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

5. சர்க்கார் நத்தமங்கலம்

நாமக்கல்லிருந்து வடக்கே 24கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரர்.

6. கல்யாணி

நாமக்கல்லிருந்து வடக்கே 25கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர்.

7. பாச்சல்

நாமக்கல்லிருந்து வடக்கே 21கி.மீ. இக்கோவில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜெயம்கொண்ட நாதேஸ்வரர்.

8. கல்குறிச்சி

நாமக்கல்லிருந்து வடகிழக்கே 26கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கற்பூரநாதேஸ்வரர்.

9. அரியூர்நாடு

காளப்பநாயக்கன்பட்டிலிருந்து கிழக்கே 20கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

10. சேந்தமங்கலம்

நாமக்கல்லிருந்து வடகிழக்கே 12கி.மீ. இக்கோவிலின் மூலவர் சோமேஸ்வரர்.

11. கொடூர்

பரமத்திக்கு வடக்கே 12கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகஸ்தீஸ்வரர்.

12. பள்ளம்பாறை

சேந்தமங்கலத்திலிருந்து கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் அரங்கசிவனார்.

13. வள்ளிபுரம்

நாமக்கல்லிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தான்தோன்றீசுவரர். அம்மன் வள்ளியம்மை.

14. கூடச்சேரி

பரமத்திக்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

15. இளம்பிள்ளை

பரமத்திக்கு வடமேற்கே 23 கி.மீ. காவிரியாற்றின் கிழக்குக்கரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உமாமகேஸ்வரர்.

16. பிள்ளூர்

பரமத்திக்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வீரட்டேஸ்வரர்.

17. பரமத்தி

நாமக்கல்லிருந்து தென்மேற்கே. 17கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பரமேஸ்வரர்.

18. வடகரைஆத்தூர்

பரமத்திக்கு மேற்கே 15 கி.மீ. காவிரியாற்றின் கிழக்கு கரையில் இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

19. அகரபொம்மபாளையம்

பரமத்திக்கு தென்மேற்கே 16 கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாதேவர். அருகில் வைத்தீஸ்வரர்.

20. அகரகொண்டலம்

பரமத்திக்கு தென்மேற்கே 13 கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

21. சர்க்கார் வேங்கரை

பரமத்திக்கு தென்மேற்கே 8 கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர்.

22. போத்தனூர்

பரமத்திக்கு தென்மேற்கே 6 கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் போற்றீசுவரர்.

23. சர்க்கார்பாண்டமங்கலம்

பரமத்திக்கு தென்மேற்கே 7 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

24. வேலூர்

பரமத்திக்கு தெற்கே 6 கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 92 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

25. நஞ்சைஇடையாறு

பரமத்திக்கு தெற்கே 7 கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமாலீஸ்வரர்.

26. மணப்பள்ளி


நாமக்கல்லிருந்து தெற்கே 17 கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பீமனேஸ்வரர்.

27. ஓரவந்தூர்

மோகனூரிலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வஜ்ஜிரபுரீஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

துறையூர் வட்டம்
(பெரம்பலூர் மாவட்டம்)



1. துறையூர்

இக்கோவில் 81 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு நந்திகேசுவரர். அம்மன் மகாசம் பத்கௌரி. உள்பிராகாரத்தில் லிங்கோத்பவர், நாககன்னிகை, வேணுபுரீஸ்வரர், மகாலஷ்மி, அய்யனார், இராமநாதர் ஆகிய சன்னிதிகள் உள்ளன. அருகில் 1-38 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

2. திருத்தலையூர்

துறையூர்க்கு தென்மேற்கே 17கி.மீ. இக்கோவில் 1-15 ஏக்கர் நிலப்பரப்பளவில் 30அடி உயர இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சப்தரிஷிஈஸ்வரர். அம்மன் குங்குமவல்லி. இத்தலம் தேவார வைப்புத்தலமாக போற்றப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார். புருரூவ சக்கரவர்த்தி வணங்கிய தலம். சோழர்கால கல்வெட்டுக்கள் பல உள்ளன. தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது.

3. இனாம்கொப்பாமபுரி

உப்பிலியாபுரத்திலிருந்து வடக்கே 4கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சப்தரிஷிஈஸ்வரர். அம்மன் குங்குமவல்லியம்மன்.

4. சோபனபுரம்

உப்பிலியாபுரத்திலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 28 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

5. உப்பிலியாபுரம்

துறையூரிலிருந்து வடமேற்கே 16கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர். அம்மன் நித்திய கல்யாணி.

6. பாலகிருஷ்ணாம்பட்டி

உப்பிலியாபுரத்திற்கு தென்மேற்கே 4கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் தர்மேஸ்வரர். அருகில் உள்ள விஸ்வாம்பால் சமுத்திரத்தில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

7. பச்சைபெருமாள்பட்டி

உப்பிலியாபுரத்திற்கு தென்மேற்கே 9கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அறப்பலீஸ்வரர். அம்மன் தாயம்மாள்.

8. ஆலத்துடையாம்பட்டி

உப்பிலியாபுரத்திற்கு தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமநாதர் அம்மன் சுந்தரவல்லியம்மன்.

9. சிறுநாவலூர்

உப்பிலியாபுரத்திற்கு தெற்கே 7கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர். அம்மன் மரகதவல்லியம்மன்.

10. கீராம்பூர்

துறையூர்க்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் காசிவிசாலாட்சி.

11. முருகூர்

துறையூர்க்கு வடமேற்கே 4கி.மீ.

இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிற்றம்பலநாதர். அம்மன் சிவகாமியம்மன்.

12. ஏரக்குடி

துறையூர்க்கு மேற்கே 14கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர். அம்மன் சிவகாமசுந்தரி.

13. சேனாப்பநல்லூர்

துறையூர்க்கு மேற்கே 8கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தருமேஸ்வரர். அம்மன் சுமதாம்பிகை.

14. நாகலாபுரம்

துறையூர்க்கு கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர் மற்றும் தாண்டவராயர்.

15. சிங்கலாண்டபுரம்

துறையூர்க்கு தெற்கே 6கி.மீ. இக்கோவில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமரசுந்தரேசுவரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி.

16. விராச்சம்பட்டி

துறையூர்க்கு தென்மேற்கே 7கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர், விசாலட்சியம்மன்.

17. கண்ணனூர்

துறையூர்க்கு தென்மேற்கே 11கி.மீ. இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அருகில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரர். அம்மன் கருணாகரம்மன்.

18. ஆதனூர்

துறையூர்க்கு தெற்கே 11கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

19. கோட்டாதூர்

துறையூர்க்கு தென்கிழக்கே 11கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர். அம்மன் பார்வதியம்மன்.

20. திருத்தியமலை

துறையூர்க்கு தெற்கே 22கி.மீ. இக்கோவில் 84 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஏகபுஷ்பபிரியநாதர். அம்மன் தாயினும் நல்லவள். இக்கோவில் 5050 வருட முற்பட்ட பழைய கோவிலாகும்.

21. மூவனூர்

துறையூர்க்கு தெற்கே 20கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருக்கொன்றை நாதர்.


22. புலிவலம்

துறையூர்க்கு தெற்கே 18கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வியாகபுரீஸ்வரர்.

ஏழுவகை பெண்பருவம்

பெண்களின் வளர்ச்சியில் உள்ள ஏழு நிலைகள் : பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண். அகவை : 7, 11, 13, 19, 25, 31, 40.

பெரம்பலூர் வட்டம்
(பெரம்பலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பெரம்பலூர்

அரியலூர்க்கு வடமேற்கே 27கி.மீ. கோனேரியாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மதீஸ்வரர்.

2. கைகளத்தூர்

புள்ளம்பாடிக்கு வடகிழக்கே 17கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 48 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். மற்றொரு கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

3. பசும்பாலூர்

தீவையூர்க்கு வடக்கே 12கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வாலீஸ்வரர். அம்மன் உண்ணா மலையம்மன்.

4. பெரியவடகரை

வேப்பந்தட்டைக்கு வடக்கே 5கி.மீ. கல்லாற்றின் வடகரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தீஸ்வரர்.. அம்மன் தையல்நாயகி. 600 வருட முற்பட்ட கோவில்.

5. திருவாலந்துறை

தீவையூர்க்கு வடக்கே 10கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக தோலீஸ்வரர்.

6. பேறையூர்

தீவையூர்க்கு வடக்கே 9கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 49 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமக்காட்டீஸ்வரர். 2100 வருட முற்பட்ட கோவில்.

7. திருமாந்துறை

தீவையூர்க்கு வடகிழக்கே 11கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜோதீஸ்வரர்.

8. பென்னகோணம்

தீவையூர்க்கு வடகிழக்கே 13கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மருதாநந்தீஸ்வரர்.

9. ஓகையூர்

பென்னகோணத்திலிருந்து கிழக்கே 3கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தகடேஸ்வரர்.

10. ஆடுதுறை

பென்னகோணத்திலிருந்து கிழக்கே 3கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அபரதராக்சகர்.

11. அத்தியூர்

பென்னகோணத்திலிருந்து கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 85 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வடமாலீஸ்வரர்.

12. வயலூர்

பென்னகோணத்திலிருந்து கிழக்கே 8கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூல்வர் தோலீஸ்வரர்.

13. கீழ்பெரம்பலூர்

ஒலைப்பாடிக்கு வடக்கே 5கி.மீ. வாழ்விமங்கலம். சிற்றாற்றின் கரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

14. வயலப்பாடி

ஒலைப்பாடிக்கு வடகிழக்கே 3கி.மீ. சின்னாற்றின் தென்கரையில் இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

15. வடக்கலூர்

ஒலைப்பாடிக்கு வடமேற்கே 5கி.மீ. சின்னாற்றின் வடகரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர். இவ்வூருக்கு அருகில் உள்ள அக்ரஹாரத்தில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

16. பெருமாத்தூர்

ஒலைப்பாடிக்கு மேற்கே 7கி.மீ. ஏழுமூர் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருச்சங்குநாதர்.

17. நெய்குப்பை

வேப்பந்தட்டைக்கு வடகிழக்கே 6கி.மீ. சின்னாற்றின் வடகரையில் இக்கோவில் 39 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர். அம்மன் பெரியநாயகி.

18. வெம்பாவூர்

வேப்பந்தட்டைக்கு வடக்கே 5கி.மீ. வெண்பாவூர் கல்லாற்றின் தென்கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொர்ணபுரீஸ்வரர். அம்மன் சொர்ணாம்பிகை.

19. வெங்கலம்

வேப்பந்தட்டைக்கு வடமேற்கே 5கி.மீ . கல்லாற்றின் தென்கரையில். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தாரபுரீஸ்வரர்.

20. வேங்கனூர்

புள்ளம்பாடிக்கு கிழக்கே 7கி.மீ. திருவேங்கனூர்.கல்லாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் பழமலைநாதர். அம்மன் விருத்தாம்பாள். உள்பிராகாரத்தில் ஆழத்துபிள்ளையார். சுமார் 500வருட முன்பு ஒரு குறிப்பிட்ட சமூகத்தார்கள் ஒன்று சேர்ந்து விருத்தாசலத்திலுள்ள பழமலைநாதர் கோவிலைப்போலவே இவ்வூரில் கட்டப் பெற்ற கோவிலாகும். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் திருவேங்கைக் கலம்பகம், உலா, மகாத்மியம், கோவை மற்றும் அந்தாதி முதலியன பாடியுள்ளார். தினமும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

21. புள்ளம்பாடி

பெரம்பலூர்க்கு வடமேற்கே 27கி.மீ. இக்கோவில் 29 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சௌந்தரேஸ்வரர். அம்மன் சுந்தர நாயகி. உள்பிராகாரத்தில் கைலாசநாதர், சூரியர், அகத்தியர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

22. அரும்பாவூர்

புள்ளம்பாடிக்கு தென்கிழக்கே 4கி.மீ. கல்லாற்றின் வடகரையில் இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் கமலாட்க்ஷியம்மன். 2050 வருட முற்பட்ட கோவில்.

23. தொண்டமாந்துறை

வேப்பந்தட்டைக்கு வடமேற்கே 7கி.மீ. கல்லாற்றின் தென்கரையில் இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி யம்மன். 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோவில்.

24. வாலிகண்டபுரம்

பெரம்பலூர்க்கு வடகிழக்கே 12கி.மீ. வில்வாரண்யம். கோனேரியாற்றின் கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வாலிகண்டேசு வரர். அம்மன் வாலாம்பிகை. பிரம்மன் மற்றும் வாலி முதலியோர் வழிபட்ட தலம். வாலி பூசித்ததனால் இத்தலம் வாலிகண்டபுரம். இக்கோவிலில் உள்ள 255 தூண்கள் கொண்ட அழகிய மண்டபம் உள்ளது. இத்தலத்தில் தண்டாயுதபாணி சன்னிதியும், ஆறுமுகப் பெருமான் சன்னிதியும் உள்ளன. ஆறுமுகப் பெருமான் மயில் மீது அமர்ந்து காட்சியளிக்கிறார். இத்தல முருகப் பெருமானைப் போற்றி அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார். முதல் ஆதித்தன் காலத்ததாகக் கருதப்படும் இக்கோவில் பிற்காலச் சோழர் கல்வெட்டுகளும் பலவாக உள்ளன. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

25. பறவை

துங்கபுரத்திலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வன்னிபுரீஸ்வரர்.

26. குரும்பூர்

துங்கபுரத்திலிருந்து மேற்கே 8கி:மீ. இக்கோவில் 1-34 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வைத்தியநாதர்.

27. நன்னை

ஒலைப்பாடிக்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் சின்னாற்றின் தென்கரையில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனிநாதர் அருகில் மற்றொரு கோவிலான 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

28. ஒலைப்பாடி

துங்கபுரத்திலிருந்து வடக்கே 4கி.மீ. சின்னாற்றின்கரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அருகில் கிளாலியில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

29. துங்கபுரம்

பெரம்பலூரிலிருந்து வடகிழக்கே 27கி.மீ. சிறுமரதை. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம் புலிங்கமாக அருள்மிகு தோணீஸ்வரர். அம்மன் பெரிய நாயகியம்மன். 2000 வருட முற்பட்ட கோவில். அருகில் மற்றொரு கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். அம்மன் மீனாட்சி யம்மன்.

30. காடூர்

துங்கபுரத்திலிருந்து தெற்கே 3கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள நல்லரைகையில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் தோலீஸ்வரர்.

31. வரகூர்

பெரம்பலூர்க்கு கிழக்கே 16கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில்

மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவலோகநாதர். அம்மன் சிவகாமசுந்தரி.

32. ஆசூர்

பெரம்பலூர்க்கு கிழக்கே 14கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். 850 வருட முற்பட்டகோவில்.

33. சித்தலை

பெரம்பலூர்க்கு கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வீரப்பசுவாமி.

34. ஈசானை

வேப்பந்தட்டைக்கு தெற்கே 3கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர். அம்மன் ஞானாம்பிகை.

35. மேலபுலியூர்

பெரம்பலூர்க்கு மேற்கே 9கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர்.

36. லாடபுரம்

பெரம்பலூர்க்கு மேற்கே 11கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பஞ்சநாதஈஸ்வரர்.

37. குரும்பலூர்

பெரம்பலூர்க்கு மேற்கே 5கி.மீ. இக்கோவில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பஞ்சநாதஈஸ்வரர்.

38. அறநாரை

பெரம்பலூர்க்கு மேற்கே 2கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

39. தொரமங்கலம்

பெரம்பலூர்க்கு கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

40. பேரலை

பெரம்பலூர்க்கு கிழக்கே 8கி.மீ. மருவத்தூர். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகேஸ்வரர்.

41. குன்னம்

பெரம்பலூர்க்கு கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதிகும்பேஸ்வரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி.

42. கீழமாத்தூர்

பெரம்பலூர்க்கு கிழக்கே 19கி.மீ. இக்கோவில் 64 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐம்புலிங்கேஸ்வரர். அருகில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர்.

43. அயலூர்

சிறுவாச்சூர்க்கு கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர்.

44. நொச்சியம்

பெரம்பலூர்க்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர்.

45. சிறுவாச்சூர்

பெரம்பலூர்க்கு தெற்கே 7கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் தனிகோவிலாக மதுரகாளியம்மன். இக்கோவில் வாரத்தில் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை

ஆகிய இரண்டு நாட்கள் மட்டுமே வழிபாடு நடைபெறுகிறது. சித்திரையில் உற்சவம் நடைபெறுகிறது.

46. சத்தரமன்னை

குரும்பலூர்க்கு தெற்கே 7கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மார்க்கசகாயர். அம்மன் மரகதவல்லி. 550 வருட முற்பட்ட கோவில்.

47. அம்மாபாளையம்

பெரம்பலூர்க்கு மேற்கே 12கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணசலேஸ்வரர்.

48. களராம்பட்டி

பெரம்பலூர்க்கு மேற்கே 13கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர்.

49. சிறுவயலூர்

குரும்பலூர்க்கு தென்மேற்கே 13கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர். அம்மன் மீனாட்சியம்மன்.

50. நக்கசீலம்

குரும்பலூர்க்கு தென்மேற்கே 12கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் துவாரகாபுரீஸ்வரர்.

51. இலந்தலைப்பட்டி

நக்கசீலத்திற்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பஞ்சநாதஈஸ்வரர்.

52. களத்தூர்

நக்கசீலத்திலிருந்து தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

53. தென்னூர்

நக்கசீலத்திலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நந்திகேஸ்வரர். அம்மன் சம்பத் கௌரி.

54. கண்ணபாடி

நக்கசீலத்திலிருந்து தெற்கே 5கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

55. பொம்மனப்பாடி

நக்கசீலத்திலிருந்து கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

56. செட்டிக்குளம்

பெரம்பலூரிலிருந்து தென்மேற்கே 15கி.மீ. கடம்பவனம். இக்கோவில் 7-72 ஏக்கர் நிலப்பரப்பளவில் 7நிலை இராஜ கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஏகாம்பரேஸ் வரர் அம்மன் காமாட்சியம்மன். முருகப் பெருமான் வழிபட்டு பேறுபெற்ற தலம்.

கல்வெட்டில் இறைவர் பெயர் ஸ்ரீ அமரேந்திரஈஸ்வர மகாதேவர் என்று குறிக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர் காலத் திருப்பணியும், தொட்டியம் மற்றும் துறையூர் ஜமீன்தார்களால் விரிவுபடுத்தி கட்டுவித்த கோவில்.

இத்தலத்தில் உள்ள முருகப் பெருமான் 255 படிகள் கொண்ட சிறு மலையின் மீது

அமர்ந்து காட்சியளிக்கிறார். வடபழனி என்றும் அழைக்கப்படும் தலம். ஆண்டிக்கோலம் பூண்டு மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். திருப்புகழ் வைப்புத்தலமாகப் போற்றப்படும் தலம். நான்கு கால பூஜை நடைபெறுகிறது. பங்குனி உற்சவம் தைப்பூசம் அன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

57. நாரணமங்கலம்

பாடாலூர்க்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நந்திகேஸ்வரர்.

58. இரூர்

பாடாலூர்க்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

59. பாடாலூர்

சிறுவாச்சூர்க்கு தெற்கே 10கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். இவ்வூர்க்கு அருகில் உள்ள திருவாலக்குறிச்சியில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் சொக்கலிங்கேஸ்வரர்.

60. திரணி

பாடாலூர்க்கு கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர். அம்மன் மீனாட்சி.

61. கரை

சிறுவாச்சூர்க்கு தெற்கே 5கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். இவ்வூர்க்கு அருகில் உள்ள புதுக்குறிச்சியில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் சுவேதபுரீஸ்வரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி.

62. வரகுப்பாடி

சிறுவாச்சூர்க்கு தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் நித்யகல்யாணி.

63. சிறுகண்பூர்

சிறுவாச்சூர்க்கு கிழக்கே 9கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர்.

64. சாத்தனூர்

சிறுவாச்சூர்க்கு கிழக்கே 11கி.மீ. மருதயாற்றின்கரையில் இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

65. குலகால்நத்தம்

பாடாலூரிலிருந்து கிழக்கே 13கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆதீஸ்வரர்.

66. குளத்தூர்

பாடாலூர்க்கு கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேஸ்வரர்.


67. கூடலூர்

பாடாலூர்க்கு கிழக்கே 18கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருநாகேஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள இலுப்பைக்குடியில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

திருச்சிற்றம்பலம்

அரியலூர் வட்டம்

(பெரம்பலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருமழபாடி

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

-- சுந்தரமூர்த்தி.

அரியலூர்க்கு தெற்கே 28கி.மீ. மழபாடி, மழவர்பாடி, மழநாடு, வடகரை மழபாடிநாடு. கொள்ளிடம் ஆற்றின் கரையில் இக்கோவில் 7-00 ஏக்கர் நிலப்பரப் பளவில், கிழக்கு நோக்கியதும், 7நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீவைத்தியநாதர், ஸ்ரீவச்சிரத்தம் பேசுவரர். மழுவாடீசர். அம்மன் அழகம்மை, பாலாம் பிகை. தீர்த்தம் இலக்குமி தீர்த்தம், தலமரம்-பனை.

பனைமரங்களை மிகுதியாகக் கொண்டிருந்ததால் தாலவனம் எனவும், மார்க் கண்டேய முனிவர் பொருட்டு இறைவன் மழுவேந்தியாடி அருட்காட்சி வழங்கிய காரணத்தினால் மழுவாடி என்றும் பெயர் பெற்றதாக தலபுராணம் கூறுகிறது.

வெள்ளாற்றிற்கும் வடகாவிரிக்கும் இடையில் உள்ள பகுதி மழநாடு என்றும் வடகரை மழபாடிநாடு என்றும் அதை ஆண்டு வந்த மன்னர்கள் மழவராயர் என்றும் அந்நாட்டில் உள்ளவர்கள் மழநாட்டார் என்றும் வழங்கப்பட்டு வந்ததாக நூல்கள் தெரிவிக்கின்றன. அரியலூர் மன்னர்கள் மழவராயர் என அழைக்கப்படுகின்றனர். மழவர்களின் சேனைகள் தங்கிய இடமாதல் பற்றி இத்தலம் மழவர்பாடி என வழங்கப்பெற்றுப்பின் மழபாடி என மருவிய தாகலாம்.

உள்பிராகாரத்தில் சுந்தர விநாயகர், முருகன், அகோரவீரபத்திரர், சோமாஸ்கந்தர், திருமால், மகாலஷ்மி, சுந்தரர், சொக்கநாதர், மீனாட்சி, துர்க்கை, ஜுரகரேசுவரர், காலசம்காரமூர்த்தி, நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சந்திரனுக்குள்ள கயநோயைப் போக்கியதால் இறைவர் வைத்தியநாதர் எனப் பெறுகிறார். புருஷாமிருக முனிவரால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற சிவலிங்கத்தைப் பிரமன் பெயர்த்தெடுக்க முயன்றபோது வச்சிரத்தம்பமாக இறைவன் விளங்கிய காரணத்தால் வச்சிரத்தம்பேசுவரர் என வழங்கப்பெறுகின்றார்.

திருமகளுக்கு ஒரு முனிவர் சாபத்தினால் ஏற்பட்ட சருமநோயை நீக்கியதால் இத்தல தீர்த்தம் இலக்குமியின் பெயரால் விளங்குகிறது. கொள்ளிடம் இத்தலத்தில் உத்திரவாகினியாகச் செல்கிறது.

நந்திகேஸ்வரருக்கும் சுயசாம்பிகைக்கும் திருமணம் நிகழ்ந்த தலம். இத்திருமண ஐதிய நிகழ்ச்சி ஆண்டுதோறும் பங்குனி மாதம் புனர்பூச நாளில் பெருவிழாவாக நடைபெறுகிறது. விழாவின் 27ஆம் நாள் திருவையாற்றில் நிகழும் சப்தஸ்தான விழாவிற்கு நந்திகேசுவரும் எழுந்தருளிச் சென்று அருட்காட்சியளிக் கிறார்.

சோழவளநாட்டில் காவிரியின் வடகரையில் விளங்கும் பாடல் பெற்ற தலங்களில் 54 வது தலம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது. தலபுராணம் தருமையாதீன ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் ஞானாசாரியராகிய ஸ்ரீ கமலைஞானப்பிரகாசதேசிகர் அவர்களால் இயற்றப்பட்டது.

இக்கோவிலில் சோழர், பாண்டியர், ஹொய்சளர் ஆகியோரது 30 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன.

திருச்சிற்றம்பலம்

2. கீழைப்பழுவூர்

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தனெமை யாளுடைய அண்ணலிட மென்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே.

-- திருஞானசம்பந்தர்

அரியலூரிலிருந்து தெற்கே 10 கி.மீ. திருப்பழுவூர், பழுவூர், சிறுபழுவூர், யோக வனம். மருதுடையார் ஆற்றின் தென் பகுதியில் இக்கோவில் கிழக்கு நோக்கி யதும், 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வடமூலநாதர், ஆலந்துறையார் எனவும், அம்மன் அருந்தவநாயகி. தீர்த்தம் பிரம தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. தலமரம்-ஆல மரம். உள்பிராகாரத்தில் கமல கணபதி, முருகன், பஞ்சபூதலிங்கங்கள், மகாலக்ஷ்மி, அறுபத்துமூவர், இலிங்கோத்ப வர், துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

ஆலமரத்தைத் தலமரமாகக் கொண்டு விளங்குவதால் இத்தலம் பழுவூர் எனவும் பழுவை எனவும் வழங்கப்படுகிறது.

அம்பிகை தவமிருந்து யோகம் செய்த காரணத்தால் யோகவனம் எனவும் கூறப்படு கிறது. சுவாமி சன்னிதியில் வடபால் ஒரு காலில் நின்று தவம்செய்யும் கோலத்தில் அம்பிகையின் திருவுருவம் விளங்குகின்றது. மூலவர் பிருதிவி வடிவமாக விளங்குவதால் சாம்பிராணித் தைலம் மட்டுமே சாத்தப் பெறுகிறது. குவளை சாத்தி அபிஷேகம் செய்யப்படுகிறது.

சுவாமி சன்னிதியின் நிலைவாயிலில் பரசுராமரின் சயனத்திருக்கோலம் செதுக்கப் பெற்றுள்ளது. பரசுராமர் தாயைக் கொன்ற பழிநீங்கப் பூசித்த பெருமை உடையது.

கயமுகாசுரனை அழித்த மகிழ்ச்சியால் ஆடிய விநாயகர் நிருத்த விநாயகர் எனப்படுகிறார். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புப் பெற்றது.

பிரமன், திருமால், இந்திரன், பாண்டவர், அகத்தியர், விசுவானரன், தருமபாலன், சந்திரன், புரூரவன், வசிட்டர், காசிபர், கண்ணுவர், சதானந்தர், வியாசர் முதலியோர் வழிபட்ட சிறப்புடையது.

தேவாரப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இக்கோவில் 55 வது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்றது. இத்தலத்து முருகனை விகடசங் கட வார்த்தை என தொடங்கும் திருப்புகழால் அருணகிரிநாதர் போற்றியுள்ளார். வடலூர் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் விண்ணப்பக்கவி வெண்பாவில் ''நற்கருணை வாய்க்கும் பழுவூர் மரகதமே'' எனக் கூறுகிறார். இத்தலத்திற்கு வேலைய சுவாமிகள் இயற்றிய தலபுராணம் உள்ளது.

இக்கோவிலில் 23 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை சிறுபழுவூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கோவில் முதலாம் பராந்தகன் காலத்தில் கற்றளியாக அமைக் கப்பட்டது. இக்கோவிலுக்குத் தென்பால் விளங்கும் பசுபதீஸ்வரர் திருக்கோவில் சோழர் காலத்திருப்பணிகளை உடையது. மறவனீச்சரம் என பரகேசரிவர்மனுடைய கல்வெட்டுக் களில் குறிக்கப்பட்டுள்ளது. மூன்று கல்வெட்டுக்கள் இக்கோவிலில் உள்ளன.

3. அரியலூர்

திருச்சிராப்பள்ளிக்கு வடகிழக்கே 65கி.மீ. மருதயாற்றின் வடகரையில் இக் கோவில் 56 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆலந்துறையார். அம்மன் அருந்தவநாயகி.

தலமரம்-ஆலமரம். தீர்த்தம் பிரம்ம தீர்த்தம். இத்தலத்தில் இருந்த சிவபக்தர் ஒருவர் நாடோறும் கீழைப்பழுவூர் தலத்திற்கு வந்து தரிசனம் செய்வதை நியமமாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் மருதயாற்றின் வெள்ளத்தால் பழுவூர் இறைவனை வழிபட இயலாமல் வருந்தினார். இவ்வன்பருக்குப் பழுவூர் இறைவன் இத்தலத்திலேயே காட்சி கொடுத்தருளினார். இதற்கு அடையாளமாக இக்கோவிலில் உள்ள மூர்த்திகளின் பெயர்கள்யாவும் பழுவூர்க் கோவிலில் உள்ள மூர்த்திகளின் பெயர்களையே கொண்டு திகழ்கின்றன. மேலும் இவ்வூரில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் திருக்கோவிலும், 25 செண்ட் நிலப்பரப்பளவில் விஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளது.

4. மேலைப்பழுவூர்

கீழைப்பழுவூர்க்கு மேற்கே 2கி.மீ. பெரும்பழுவூர். இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிரகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேசுவரர். மேற்கு நோக்கியுள்ளார். இக்கோவிலினுள் தென்வாயில் ஸ்ரீகோவில், சோளீசுவரம் என வழங்கும் வடவாயில் ஸ்ரீகோவில் என இரண்டு கோவில்கள் உள்ளன. உள்பிராகாரத்தில் கணேசர், சுப்பிரமணியர், சண்டேசுவரர், சுப்தமாதர்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன. பரகேசரிவர்மனின் 5ஆம் ஆண்டுக் கல்வெட்டில் பகைவிடைஈசுவர கிருகத்து மகாதேவர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் முதல் குலோத்துங் கனுடைய கல்வெட்டுக்கள் 6 உள்ளன. தில்லைக்குடி என்ற பழைய பெயருடைய குலோத்துங்க சோழநல்லூர் என்ற கிராமத்தை மானியமாக விட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது.

5. சன்னாசிநல்லூர்

செந்துறைக்கு வடக்கே 16கி.மீ. அங்கனூர். வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகேஸ்வரர். அம்மன் அழகேஸ்வரி. தீர்த்தம் வெள்ளாறு.

6. குழுமூர்

செந்துறைக்கு வடக்கே 7கி.மீ. கட்டோடையாற்றின் தென்கரையில் மூலவர் சுயம்புலிங்கமாக ஜெயபுரீஸ்வரர்.

7. மணப்பத்தூர்

செந்துறைக்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் முப்புரீஸ்வரர். அம்மன் முத்தாலம்மன்.

8. சிறுகளத்தூர்

செந்துறைக்கு வடகிழக்கே 8கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கவடிவில் கோட்டீஸ்வரர். அம்மன் பிரஹன்நாயகி.

9. வஞ்சினபுரம்

செந்துறைக்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தோலீஸ்வரர்.

10. நமங்குணம்

செந்துறைக்கு வடமேற்கே 6கி.மீ. சொக்கநாதபுரம். இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். அம்மன் மீனாட்சி. பழமலைநாதபுரத்தில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பழமலைநாதர் அம்மன் பெரியநாயகி.

11. நக்கம்பாடி

செந்துறைக்கு வடமேற்கே 2கி.மீ. இக்கோவில் 61 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் குந்தலாம்பிகை.

12. பொன்பரப்பி

செந்துறைக்கு கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 13.5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொர்ணபுரீஸ்வரர். அம்மன் பிரஹன்நாயகி. இரண்டு கால பூஜை. வைகாசி விசாகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது.

13. செந்துறை

அரியலூர்க்கு வடகிழக்கே 20கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவதாண்டேஸ்வரர். அம்மன் பெரிய நாயகி. உள்பிராகாரத்தில் தட்சிணா மூர்த்தி, காளி, சிறைமீட்ட அய்யனார் முதலிய சன்னிதிகள் உள்ளன. திருப்புகழ் வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. மெய் வரத்தம்பிரான் என்னும் மகானின் சமாதி உள்ளது. பங்குனி உத்திரம், தைப்பூசவிழா முக்கிய உற்சவம் நடைபெறுகிறது.

14. வேலூர்

செந்துறைக்கு தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தியநாதர். அம்மன் தையல் நாயகி.

15. இலுப்பையூர்

செந்துறைக்கு மேற்கே 5கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் மார்க்கபுரீஸ்வரர். அம்மன் மரகத வல்லி. இவ்வூர்க்கு அருகில் உள்ள நல்லூரில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் காமாட்சி யம்மன்.

16. ராயம்புரம்

செந்துறைக்கு தெற்கே 3கி.மீ. இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராஜகம்பீஸ்வரர். அம்மன் பர்வதவர்த்தினி.

17. ஆனந்தவாடி

செந்துறைக்கு தெற்கே 8கி.மீ. இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தகடேஸ்வரர்.

18. சென்னிவனம்

செந்துறைக்கு தெற்கே 5கி.மீ. இக்கோவில் 1-32 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கவடிவில் அருள்மிகு தீர்த்தபுரீஸ்வரர். அம்மன் சொர்ணாம்பிகை.

19. ஓட்டகோவில்

செந்துறைக்கு தென்மேற்கே 11கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணபுரீஸ்வரர். அம்மன் பெரிய நாயகி. இவ்வூர்க்கு அருகில் உள்ள கள்ளமேட்டில் 20 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் குமரப்பசுவாமி கோவிலும் உள்ளது.

20. விளாங்குடி

அரியலூர்க்கு கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொர்ணபுரீஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி.

21. தெள்ளூர்

அரியலூர்க்கு கிழக்கே 14கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதஈஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி.

22. புதுப்பாளையம்

அரியலூர்க்கு தென்கிழக்கே 10கி.மீ. வேலிபிரிகம். இக்கோவில் 1 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். விசாலாட்சி.

23. ரெட்டிபாளையம்

அரியலூர்க்கு கிழக்கே 12கி.மீ. புத்தூர். இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜோதீஸ்வரர். அம்மன் சுந்தரநாயகி.

24. பெரிய திருக்கோணம்

அரியலூர்க்கு தென்கிழக்கே 17கி.மீ. மருதையாற்றின் வடகரையில் இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதிமத்தியார்ச்சுனர். அம்மன் பிரகதுஜாம் பாள். இவ்வூருக்கு அருகில் உள்ள செட்டிதிருக்கோணத்தில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அரனேஸ்வரர். அம்மன் தர்மசவர்த்தினி.

25. கீழையூர்

கீழைப்பழுவூர்க்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

26. சுதாமல்லி

கீழைப்பழுவூர்க்கு தென்மேற்கே 5கி.மீ. எறக்குடி. இக்கோவிலின் மூலவர் சுயம்பு லிங்கமாக ஆதிமத்திய அர்சுனேஸ்வரர். அம்மன் அகிலாண்டீஸ்வரி. உள்பி ராகாரத்தில் பிரமன், திருமால், விநாயகர், லக்ஷ்மி, பைரவர், மற்றும் ஐயனார் முதலிய சன்னிதிகள் உள்ளன.

27. தூதூர்

அரியலூர்க்கு தென்கிழக்கே 35கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வராகமூர்த்தீஸ்வரர்.

28. காமரசவல்லி

கீழைப்பழுவூர்க்கு தென்கிழக்கே 19கி.மீ. காமரதிவல்லி. கொள்ளிடம் ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 58,400 ச.அடி நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக கார்கோட்டீஸ்வரர், அம்மன் பாலாம்பிகை. கார்க்கோடகன் பூசித்து பேறு பெற்றதால் இறைவனுக்கு கார்கோடகேஸ்வரர் என்று பெயர். ரதி, மன்மதன் பூசித்த தலமாதலால் காமரதிவல்லி பின்பு காமரசவல்லி என்று பெயர்பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத் தைப் போற்றி பாடியுள்ளதால் இத்தலம் தேவார வைப்புத்தலமாகும்

29. கண்டராதித்தம்

திருமழபாடிக்கு மேற்கே 2கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சொக்கநாதர்.

30. திருமானூர்

அரியலூர்க்கு மேற்கே 24கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-93 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர்.

31. பெரியமறை

அரியலூர்க்கு தெற்கே 25கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுவேதபுரீஸ்வரர்.

32. எலகுறிச்சி

அரியலூர்க்கு தென்கிழக்கே 26கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

33. அழகியமணவாளன்


கீழைப்பழுவூர்க்கு தென்கிழக்கே 23கி.மீ. நறையனூர் நதியனூர் கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காசிவிஸ்வ நாதர். அம்மன் விசாலாட்சி. ரதி, மன்மதன், கார்கோடகன் முதலியோர் இத்தலத்தில் தவமிருந்து கங்கையை வரவைத்து மூழ்கி இறைவனை வழிபட்டு பேறு பெற்றதனால் இத்தல இறைவனுக்கு காசிவிஸ்வநாதர் என்று பெயர். ஒரு கால பூஜை. ஆடி 18ம் தேதி உற்சவம் நடைபெறுகிறது.

34. தாமரைப்பூண்டி

செந்துறையிலிருந்து வடகிழக்கே 12 கி.மீ. இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தர்மலிங்கேஸ்வரர். அம்மன் தர்மாம்பிகை.

உடையார்பாளையம் வட்டம்

(பெரம்பலூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. கங்கைகொண்டசோழபுரம்

அன்னமாய் விசும்பு பறந்தயன்தேட அங்ஙனே பெரியநீ சிறிய
என்னை ஆள் விரும்பி என்மனம் புகுந்த எளிமையை யென்றும் நான் மறக்கேன் !
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா முக்கணா ! நாற்பெருந் தடந்தோட்
கன்னலே ! தேனே! அமுதமே! கங்கை கொண்ட சோளேச்சரத் தானே.

-- திருவிசைப்பா கருவூர்த் தேவர்.

உடையார்பாளையத்திலிருந்து கிழக்கே 16கி.மீ. கங்கைகொண்ட சோளேச்சுரம், கொள்ளிடம் அற்றின் வடபகுதியில் இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், இரண்டு வாயில்கள் கொண்டு மூலவர் அருள்மிகு பெருவுடையார். அம்மன் பெரிய நாயகி. தலமரம்-வன்னி. தீர்த்தம் சிங்கமுகக் கிணறு.

கருவறையின் தெற்குச்சுவரில் நர்த்தன விநாயகர், அர்த்தநாரீசுரர், தட்சிணாமூர்த்தி , சங்கர நாராயணர், நடராசர் திருவுருவங் களும் மேற்குச்சுவரில் இலிங்கோத்பவர், திருமால், கார்த்திகேயர், உமாமகேசரும் வடக்குச் சுவரில் காலசம்காரமூர்த்தி, விஷ்ணு, துர்க்கை, பிரமன், காலபைரவர், காமதகனர் ஆகிய திருவுருவங்களும் கர்ணதுவாரப் படிக்கட்டுக்களில் தெற்கே பிக்ஷாடனரும், கஜலஷ்மியும், வடக்கே சண்டேசானுக்கிர மூர்த்தியும், ஞானசரஸ் வதியும் உள்ளனர். பிராகாரத்தில் சண்டேசுரர், மகிஷாசுரமர்த்தினி உள்ளனர்.

கிழக்குநோக்கிய இக்கோவில் முழுவதும் கற்றளியாக விளங்குகிறது. சுவாமி சன்னிதி 15அடி நீலம், 8 அடி அகலம் 11 அடி உயரம் கொண்டது. கருவறை தரை மட்டத்துக்குமேல் 20அடி உயரத்தில் அமைந்துள்ளது. அடித்தளம் 100×100 அடி சமசதுரத்துடன் விமானம் 8 அடுக்குகளுடன் 180 அடி உயரம் கொண் டது. விமான கலசம் 7 அடி உயரமுடையது. ஆவுடையார் பீடம் 40 முழம். பாணம் பெரியது. சந்நிதியின் வாயிலில் போக சக்தி அம்மன் எழுந்தருளியுள்ளார். மகாமண்ட பத்தில் ஆறுமுகப் பெருமான் உள்ளார். இங்கு விளங்கும் நவகிரக பீடம் சிற்பவரலாற்றுச் சிறப்புடையது.

இக்கோவிலைக் கட்டிய மன்னன் இராஜேந்திர சோழன். இத்தலப் பெருமான் மீது கருவூர்த்தேவர் ஒரு பதிகம் பாடியுள்ளார்.

சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், சேக்கிழார் முதலான புலவர்கள் வாழ்ந்த இடம். குலோத்துங்கன் சேக்கிழார் பெருமானைத் திருத்தொண்டர் புராணத்தைத் தில்லையில் பாடச்செய்து, நாள்தோறும் எவ்வளவு பாடல்கள் நிறைவேறின என ஆள் இட்டுக் கேட்டறிந்த இடம். கங்கை கொண்ட சோழன் முதல், மூன்றாம் இராசேந்திர சோழன் காலம் முடிய உள்ள சோழமன்னர்களுக்குத் தலைநகராய்த் திகழ்ந்திருந்த இடம்.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சிவராத்திரி, மார்கழி திருவாதிரையில் உற்சவம் நடைபெறுகிறது.

2. ஜெயம்கொண்டசோழபுரம்

உடையார்பாளையத்திலிருந்து வடகிழக்கே 8கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் 80அடி உயர கோபுரம், பிராகாரத்துடன் மூலவர் விருத்தகிரீஸ்வரர். அம்மன் பெரிய நாயகி. பிராகாரத்தில் நடராஜர், இரட்டைவிநாயகர், முருகன், பழமலைநாதர், விருத்தாம்பிகை உள்ளனர். இக்கோவில் ஜெயம்கொண்ட சோழனால் கட்டப்பெற்றது. இரண்டு கால பூஜை.

3. உடையார்பாளையம்

திருச்சிராபள்ளிக்கு வடகிழக்கே 94கி.மீ. இக்கோவில் 13-33 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் பயரணீஸ்வரர். அம்மன் குகமசுந்தரியம்மன். தீர்த்தம் காண்டீபதீர்த்தம். இக்கோவில் உடையார் பாளையம் ஜமீன்தார்களால் சுமார் 375 வருட முன்பு கட்டப்பெற்றது. முகமதியர் படையெடுப்பின்போது காஞ்சியில் உள்ள காமாட்சி அம்மன் சிலையை இத்தலத்தில் பாதுகாக்கப்பட்ட இடமாகும்.

4. ஓலையூர்

ஆண்டிமடத்திலிருந்து வடமேற்கே 9கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் சொக்கநாதர்.

5. விளந்தை

ஆண்டிமடத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

6. திருக்களப்பூர்

ஆண்டிமடத்திலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 62 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்கோட்டிவன தீஸ்வரர், அம்மன் காமாட்சியம்மன். பிராகாரத்தில் திருமால், ஆறுமுகர், சரஸ்வதி, சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

7. வாங்குடி

பாப்பாகுடிக்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தியநாதர்.

8. எரவங்குடி

பாப்பாகுடிக்கு மேற்கே 5கி.மீ. இக்கோவில் 88 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரஈஸ்வரர்.

9. கூவகம்

ஆண்டிமடத்திலிருந்து தென்மேற்கே 12கி.மீ. இக்கோவில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தோலீஸ்வரர்.

10. தண்டலை

ஜெயம்கொண்ட சோழபுரத்திலிருந்து வடக்கே 4கி.மீ. இக்கோவில் 28 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனியீஸ் வரர்.

11. இளையபெருமாள்நல்லூர்

கங்கைகொண்டசோழபுரத்திற்கு வடக்கே 2கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர், ஆனந்தவல்லி.

12. உள்கோட்டை

குருவலப்பர் கோவிலுக்கு தென் மேற்கே 3கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அபரதரட்சகரர். அம்மன் அபிராமியம்மன்.

13. தளுதலமேடு

உள்கோட்டைக்கு கிழக்கே 3கி.மீ. வனவநல்லூர். இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

14. கோடாலிகருப்பூர்

உள்கோட்டைக்கு தெற்கே 7கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.மற்றொரு கோவில் அயிபாளையத்தில் அருணாசலேசுவரர்.

15. சோழமாதேவி

உள்கோட்டைக்கு தென்மேற்கே 8கி.மீ. அம்பிகாபுரத்தில் உள்ள இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

16. வானதிராயன்பட்டினம்

உடையார்பாளையத்திலிருந்து கிழக்கே

8கி.மீ. இக்கோவில் 23செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சென்னீஸ்வரர், அம்மன் பெரியநாயகி.

17. தாதனூர்

உடையார்பாளையத்திலிருந்து தென் மேற்கே 5கி.மீ. ஜமீன்தாதனூர். இக்கோவில் 24செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

18. நாயகனைப்பிரியாள்

உடையார்பாளையத்திலிருந்து தென் கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 54செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மார்க்கசகாயாஸ் வரர். அம்மன் மரகதவல்லி.

19. பழுவூர்

ஜெயங்கொண்டசோழபுரத்திற்கு தெற்கே 13கி.மீ. இக்கோவில் 28செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

20. காரைக்குறிச்சி

ஜெயங்கொண்டசோழபுரத்திற்கு தெற்கே 15கி.மீ. இக்கோவில் 55செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அவதாரநாயகி.

21. ஜமீன்சுதாமல்லி

உடையார்பாளையத்திலிருந்து தெற்கே 11கி.மீ. இக்கோவில் 6-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேசுவரர். அம்மன் குந்தளாம் பிகை.

22. அம்பாபூர்

உடையார்பாளையத்திலிருந்து தென் மேற்கே 17கி.மீ. விக்ரமங்கலம். மருதுடையார் ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-08 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சோலீஸ்வரர்.

23. கீழநத்தம்

உடையார்பாளையத்திலிருந்து தென்மேற்கே 19கி.மீ. இக்கோவில் 11செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

24. கடம்பூர்

உடையார்பாளையத்திலிருந்து தென்மேற்கே 21கி.மீ. மருதுடையார் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 28செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். மேலும் இவ்வூருக்கு அருகில் உள்ள குணமங்கலத்தில் 17செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

25. சாத்தம்பாடி

உடையார்பாளையத்திலிருந்து தெற்கே 18கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

26. கோவிந்தபுத்தூர்

உடையார்பாளையத்திற்கு தெற்கே 18கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-02 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக கங்காலீஸ்வரர்.

27. ஸ்ரீபுரந்தன்

உடையார்பாளையத்திலிருந்து தெற்கே 15கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 86செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரதட்ஷனேஸ்வரர்.

28. மதநாத்தூர்

ஜெயங்கொண்டசோழபுரத்திற்கு தெற்கே 17கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கேசு வரர்.


29. புதுக்குடி

ஜெயங்கொண்டசோழபுரத்திற்கு வடமேற்கே 5கி.மீ. இக்கோவில் 1-68 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர். அம்மன் பரமேஸ்வரி.

திருச்சிற்றம்பலம்

சீர்காழி வட்டம்

(நாகப்பட்டிணம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. சீர்காழி

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரம் மேவிய பெம்மானிவனன்றே

-- திருஞானசம்பந்தர்

மயிலாடுதுறைக்கு வடகிழக்கே 21 கி.மீ. பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, காளிபுரம், கொச்சைவயம், கழுமலம், காழி என 12 திருப்பெயர்கள் கொண்டு, உப்பனாற்றின் வடகரையில் இக்கோவில் 17-35 ஏக்கர் நிலப்பரப் பளவில், நான்கு புறமும் கோபுரங்களும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பிரமபுரீஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் திருநிலைநாயகி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் பிரம்மதீர்த்தம். தலமரம் மூங்கில்.

இக்கோவில் மூன்று பகுதியாக உள்ளது. கட்டுமலை போன்ற உயரமான இடத்தில் தோணியப்பர், அதற்கு மேல் தளத்தில் சட்டைநாதர் உள்ளார். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், 63 நாயன்மார்கள், சப்தமாதாக்கள், கஜலட்சுமி, தேவேந்திரலிங்கம், பைரவர், சூரியன், காளீபுரீஸ்வரர், சோமாஸ்கந்தர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

முருகப்பெருமான், காளி, பிரமன் முதலியோர் வழிபட்டுப் பேறுகள் பெற்றதலம். 64 சக்திபீடங்களில் இத்தலம் ஒன்றாகும்.

திருஞானசம்பந்தர் பிறந்த தலம். அவர் அம்பிகையிடம் ஞானப்பால் உண்டு 'தோடுடைய செவியன்' என்னும் தேவார முதற்பதிகம் பாடிய தலம். தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிவடகரைத் தலங்களில் இத்தலம் 14 வது. திருஞானசம்பந்தர் 67 பதிகங்களும், திருநாவுக்கரசர் 3 பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகங்களும் ஆக 71 திருப்பதிகங்கள் கொண்டதலம்.

ஊழிக்காலத்தில் இறைவன் 64 கலைகளையும் ஆடையாக கொண்டு பிரணவத் தோணியில் தேவியுடன் வந்து ஊழியில் அழியாத இத்தலத்தில் தங்கினார்.

இத்தலத்து ஆஸ்தான மண்டபமும், வெளிப் பிராகார தெற்குக் கோபுரத்தை அடுத்து இருக்கும் வலம்புரி மண்டபமும் மிகச்சிறந்தன. வலம்புரி மண்டபத்தை அஷ்டபைரவர்களும், யோகஸ்தானமாய்க் கொண்டு விளங்குகின்றன. சட்டைநாதர் பள்ளியறைப் பூசை நடைபெறும் இடமும் இதுவேயாகும்.

மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், கணநாதர், நம்பியாண்டார்நம்பிகள், சேக்கிழார், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் தலபுராணம் பாடிய அருணாசல கவிராயர் முதலியோர் இத்தல இறைவனைப் போற்றிப் பாடியுள்ளனர்.

கல்வெட்டுக்கள் 42 உள்ளது. இவ்வூரை ராஜராஜ வளநாட்டு திருக்கழுமல நாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் என்றும் இறைவர் திருக்கழுமலமுடையார், திருத்தோணிபுரம் உடையார் என்னும் பெயர்களால் குறிக்கப்படுகிறது. சித்திரை பெருவிழா நடைபெறுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

2. திருக்கோலக்கா

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ

-- திருஞானசம்பந்தர்

சீர்காழி பிரமபுரீஸ்வரர் கோவிலுக்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் உப்பனாற்றின் வடகரையில் திருத்தாளம் உடையார் கோவில் என வழங்கும். இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீசப்தபுரீசுவரர், அம்மன் ஸ்ரீ ஓசை கொடுத்த நாயகி. தீர்த்தம் சூரியதீர்த்தம் கோவில் வாயிலில் உள்ளது.

திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு இறைவன் பொற்றாளம் வழங்கிய தலமாதலின் திருத்தாளம் உடையார் கோவில் எனவும் வழங்கப்படுகிறது. இறைவன் பொற்றாளம் கொடுத்தார், அம்மையார் தாளத்துக்கு ஓசை கொடுத்தார் இதனால் இறைவியார்க்கு ஓசைகொடுத்த நாயகி என்றும் பெயர்.

கோவில் கிழக்கு நோக்கியது. சப்தபுரியென்றும் பெயர். கன்வ முனிவர் வழிபட்ட தலம்.

சீர்காழி திருமுலைப்பால் திருவிழா நாளன்று மாலையில் திருஞானசம்பந்தர் இத்தலத் திற்கு எழுந்தருளுவார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 15 வது. திருஞானசம்பந்தர், சுந்தரர் பதிகங்கள் பெற்றது.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

3. வைத்தீஸ்வரன் கோவில்

வெள்ளெ ருக்கர வம்வி ரவுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன் பொற்கழல்
உள்ளி ருக்கும் உணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே.

-- திருநாவுக்கரசர்

சீர்காழிக்கு தென்மேற்கே 6 கி.மீ. திருப்புள்ளிருக்குவேளூர். புள் (ஜடாயு), இருக்கு (வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) பூஜித்தமையால் புள்ளிருக்கு வேளூர் என்று பெயர்.

இக்கோவில் 10-70 ஏக்கர் நிலப்பரப்பளவில், ஐந்து பிராகாரங்களும், 7 நிலை இராஜகோபுரமும் கொண்டு மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வைத்தியநாதர், அம்மன் தையல்நாயகி. தலமரம் வேம்பு. தீர்த்தம் சித்தாமிர்த தீர்த்தம். இத்தலத்தில் 18 தீர்த்தங்களும் உள்ளன.

வேம்படியில் ஆதிவைத்தியநாதர் உள்ளார். செல்வமுத்துக்குமாரசாமி சன்னிதி பிரபலமானது. ஆலயத்தின் கீழ்த்திசையில் வைரவர், மேல்திசையில் வீரபத்திரர், தென்திசையில் கற்பக விநாயகர், வடதிசையில் காளியும் காவல் புரிகின்றனர்.

சடாயு, வேதம், முருகன், சூரியன், அங்காரகன், பிரமன், இராமர், சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை, பராசரர், துர்வாசர், சிவசன்மன் முதலியோர் வழிபட்ட தலம்.

நேத்திரப்பிடிசந்தனம், திருச்சாந் துருண்டை பிரசாதம் தருகிறார்கள். இதனை உண்பதால் எல்லாவிதமான நோய்களும் நீங்கும்.

இத்தலம் அங்கார க்ஷேத்திரம், முருகன் வேல் வாங்கிய இடம், தன்னிடம் வசிப்பார்க்கு எமவாதனை நீங்கும் இடம்.

பேய், பிசாசு, பில்லி, சூனியம் பிடித்தவர்கள் இங்கு வந்தால் அவை அகலும். பிறவிப்பிணி மருத்துவராகிய வைத்திய நாதப் பெருமான், தையல் நாயகி திருக்கரத்தில் தைல பாத்திரமும், அமிர்த சஞ்சீவியும், வில்வத்தடிமண்ணும் எடுத்துக்கொண்டு உடன் வர 4448 வியாதிகளையும் தீர்க்கின்ற இடம் பிறக்கவும், இறக்கவும் முத்திதரும் தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 16 வது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகங்களும், அருணகிரிநாதர் அருளிய 14 திருப்புகழ் பாடல்களும், குமர குருபரர், படிக்காசுத்தம்பிரான், சிதம்பர முனிவர், காளமேகப் புலவர், இராமலிங்க சுவாமிகள், தலபுராணம் இயற்றிய வடுகநாத தேசிகர் மற்றும் தருமையாதீனம் 10 வது சந்நிதானம் இயற்றிய முத்துக்குமாரசாமி திருவருட்பா முதலியோர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர்.

தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது. ஒவ்வொரு செவ்வாய் கிழமை தோறும் ஆட்டுவாகனத்தில் அங்காரக மூர்த்தி எழுந்தருளுவார்.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

4. திருமுல்லைவாசல்

துளிமண்டியுண்டு நிறம்வந்தகண்டன் நடமன்னு துன்னுசுடரோன்
ஒளிமண்டியும்ப ருலகங் கடந்த உமைபங்கனெங் களரனூர்
களிமண்டு சோலை கழனிக்கலந்த கமலங்கள் தங்குமதுவில்
தெளிமண்டியுண்டு சிறைவண்டுபாடு திருமுல்லைவாயிலிதுவே.

-- திருஞானசம்பந்தர்

சீர்காழிக்கு கிழக்கே 12 கி.மீ. தென்திரு முல்லைவாயில், முல்லைவனம் கடற்கரைத் தலம். உப்பனாற்றின் வடகரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்க மாக அருள்மிகு முல்லைவனநாதர். ஸ்ரீ மாசிலாமணீசர் எனவும் வழங்கப்பெறுகிறார். அம்மன் ஸ்ரீ அணிகொண்ட கோதையம்மை. தீர்த்தம் பிரம்ம, சந்திர தீர்த்தங்கள். தலவிருஷம் முல்லை. உள்பிராகாரத்தில் வரசக்தி விநாயகர், முருகன், தட்சிணா மூர்த்தி, வயிரவர், திருஞானசம்பந்தர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சோழமன்னன் கிள்ளிவளவன் வேட்டையாடும் பொருட்டு முல்லை நிலமாக இருந்த இத்தலத்தை அடைந்தான். காற்றினும் கடுகிச் செல்லும் தன் குதிரையின் காலை முல்லைக்கொடி தடுத்து நிறுத்தியதை அறிந்து, கொடியை வெட்டினான். முல்லைப் புதரின் கீழ் இருந்த சிவலிங்கத்தில் உடைவாள் பட்டுக்குருதி பெருகிவரக்கண்ட மன்னன் மனம் பதைத்து தன்னையே வாளால் மாய்த்துக் கொள்ள முற்பட்டபோது இறைவன் அருட்காட்சி வழங்கி மன்னனின் மனத்துயரினை மாற்றினார். வளவன் அச்சிவலிங்கத்திற்குச் சிறந்த இத்திருக்கோவில் எடுப்பித்து விழாக் கொண்டாடினான்.

இறைவனிடம் அம்பிகை முறைப்படி வழிபட்டு திருவைந்தெழுத்தினை ஓதிச் சிவஞானம் கைவரப் பெற்றதலம்.

சுசாவி என்ற அந்தணரின் மூத்த பிள்ளை வாமதேவர் தந்தை இறந்ததும் அவருடைய ஆணைப்படி அவருடைய எலும்பை புண்ணிய தீர்த்தங்கள் பலவற்றிலும் போட்டார். இத்தலத்து விஷ்ணு தீர்த்தத்தில்தான் எலும்பு இரத்தின

மாக மாறிற்று. இத்தீர்த்தக்கரையில் தந்தைக்குப் பிதிர்க்கடானாற்றினார். தந்தைக்கு முத்தியளித்த தனயரானார்.

இத்தலத்தில் வாயு திசையில் உள்ள கிணற்றில் கங்கை நித்தியவாசம் செய்கி றாள். அக்னி திசையில் உள்ள பிரம்ம தீர்த்தத்தில் சந்திரன் மூழ்கி தனக்கிருந்த வியாதியைப் போக்கிக்கொண்ட தலம்.

இத்தலப் பெருமானின் திருவடி மறவாத சிந்தையையுடைய ஒரு பரத்தை ஒவ்வொரு நாளும் தன்னைத் தீண்டினாரைத் தன் கணவனாகவே கருதி ஒழுகியவள், சிவபக்தியுடையவளாய் ஒரு ஒழுங்கு நெறியை கடைப்பிடித்து வாழ்ந்த இவளுக்கு இத்தலப் பெருமான் சிவலோக மளித்த தலம்.

இத்தலத்தில் மகோதயம், சூரிய, சந்திர கிரஹணம், அமாவாசை, காலங்களில் திரு வைந்தெழுத்தை ஒதுவோர் நன்மைபெறும் தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 7 வது திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது. தலபுராணம் சீர்காழிவடுகநாததேசிகர் அவர்களால் இயற்றப்பெற்றுள்ளது.

இத்தலத்தைப் பற்றிய 5 செப்புப் பட்டயங்கள் உள்ளன. நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

5. மயேந்திரப்பள்ளி

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை யழகனை யடியிணை பணிமினே

-- திருஞானசம்பந்தர்

சீர்காழிக்கு வடகிழக்கே 19 கி.மீ. திருமயேந்திரப்பள்ளி. கோவிலடிப்பாளை யம் என தற்போது வழங்கப்பெறும் இத்தலம் கொள்ளிடம் ஆற்றின் தென் கரையில் இக்கோவில் 68 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்க மாக அருள்மிகு திருமேனி அழகர், அம்மன் வடிவாம்பிகை. தலமரம்-வில்வம். தீர்த்தம் இந்திர தீர்த்தம் கோவிலுக்குமுன் உள்ளது.

மயேந்திரன் வழிபட்டதால் இத்தலத் திற்கு மயேந்திரப்பள்ளி என்று பெயர். சூரியன், சந்திரன், பிரமன், இந்திரன் முதலியோர் வழிபட்டு அருள் பெற்ற தலம். விலங்குகள், நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன ஆகியனவும் இறைவனை வழி பட்டு முக்தி பெற்ற தலம் எனத் தலபுராணம் கூறப்படுகிறது.

கோவிலின் திருமுன் உள்ள இந்திரத் தீர்த்தத்தில் ஒரு மண்டலம் நீராடி வழிபட்டோர் நோய் நீங்கி இன்புறுவர்.

சுவாமி, அம்மன் திருவுருவங்கள் பெயருக்கு ஏற்றமுறையில் மிக்க அழகுடன் திகழ்கின்றன். திருஞானசம்பந்தர் உற்சவ விக்ரகம் நிறைந்த பேரழகுடன் திகழ்கிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 6 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் உடையது. இத்தல முருகப்பெருமான் மீது அருணகிரி நாதர் திருப்புகழ் அருளியுள்ளார். இக்கோவிலுக்கு தென்கிழக்கில் மாரியம்மன் கோவிலும் தென்மேற்கில் இராமர் மற்றும் திரௌபதி அம்மன் கோவிலும், வடபகுதியில் ஐயனார் கோவிலும் கிழக்கில் கடற்கரையும், வடக்கில் கொள்ளிட நதியும் சூழ அமைந்துள்ளது.

திருச்சிற்றம்பலம்

6. ஆச்சாள்புரம்

கல்லூரர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூரர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூரர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூரர்ப் பெருமணம் மேயநம் பானே.

-- திருஞானசம்பந்தர்

சீர்காழிக்கு வடக்கே 15 கி.மீ. திருநல்லூர்ப் பெருமணம். கொள்ளிடம் ஆற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 50 அடி உயர இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவலோகத்தியாகர் கிழக்கு நோக்கியும். அம்மன்திருவெண்ணீற்றுமை தெற்கு நோக்கியுள்ளனர். தலமரம் மாமரம். தீர்த்தம் பஞ்சாக்கர தீர்த்தம். இத்தலத்திற்கு சிவலோகபுரம், நல்லூர், திருமணவை, முத்திபுரம் என வேறு பெயர்களும், பிருகு, அசுவ, வசிஷ்ட, அத்திரி, சமதக்னி, வியாச, மிருகண்டு தீர்த்தங்களும் உள்ளன.

திருஞானசம்பந்தர் திருமணத்திற்கு வந்த அனைவருக்கும் வெண்ணீறளித்துச் சிவச்சோதியுள் கலக்கச் செய்ததால் ஆச்சாள்புரம் என வழங்கலாயிற்று.

வசிட்டர், பராசரர், பிருகு, ஜமதக்னி முதலிய முனிவர்கள் பதினாயிரம் ஆண்டு செய்த கடுந்தவத்திற்குக் கருணைகூர்ந்த இறைவன் சிவலோகங் காட்டி இளங்குமரனோடு அம்மையும் தானுமாக எழுநதருளியிருக்கும் காட்சியினைக் காட்டிய தலம்.

திருமால் இத்தலத்திற்கு வந்து வழிபட்டு அவுணர்களை வெல்லும் வரம் பெற்ற தலம். காகமுனிவர் இத்தலத்திற்கு வந்து தலத்தைக் காலாலேயும் மிதித்தற்கு அஞ்சித் தலையாலேயே நடந்து திருக்கோவில் அடைந்து வணங்கி பேறு பெற்ற தலம்.

திருஞானசம்பந்தப் பெருமானுக்குப் பெருமணம் நிகழ்ந்த இடம் பெருமணம் என்பது திருக்கோவிலின் பெயர். ஆன்மாக்களுக்கு முத்தி வழங்கும் திருக்கோவிலும் பெருமணம் என்று வழங்கலாயிற்று. மேலும் சம்பந்தப் பெருமானுக்குப் பெருமணம் நடந்த இடமாதலின் பெருமணநல்லூர் என்றும் வழங்கப்படுகிறது.

முருகப் பெருமானுக்கு சிவபெருமான் சிவலோகத்தை அளிப்ப தாகிய தலம் இதுவாகும்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வட கரைத் தலங்களில் இத்தலம் 5 வது. சம்பந்தர் திருப்பதிகம் கொண்டது.

வைகாசி மூலநாளில் திருஞானசம் பந்தப்பெருமானுக்கு திருமணமும், திருநீல கண்டயாழ்ப்பாணர், முருகநாயனார், திருநீலநக்க நாயனார் முதலியோருடன் திருஞான சம்பந்தர் முத்தியடைந்த தலம்.

தலபுராணம் கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகரும், பிள்ளைத்தமிழ் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களாலும் இயற்றப்பட்டது.

கல்வெட் டுக்கள் 19 உள்ளன. இவ்வூரை வடகரை இராசாதிராச வளநாட்டு வெண்ணியூர் நாட்டு பஞ்சவன் மாதேவியான குலோத் துங்க சோழ சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்தது என்றும். இறைவர் திருப்பெருமண முடைய மகாதேவராவர், ஆளுடைய பிள்ளையார்,

சொக்கியார், ஸ்ரீ கயிலாச முடையார், பண்படிக்க ஆடுவார் எனப் பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

ஆறுகால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மூல நாளில் திருஞானசம்பந்தப் பெருமான் திருமணமும் முத்தி எய்திய காட்சியும் உற்சவமாகக் கொண்டாடப்படு கிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

7. திருமயிலாடி

சீர்காழிக்கு வடக்கே 7 கி.மீ. வில்வாரண்யம். கொள்ளிடம் ஆற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 60 அடி உயர இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேஸ்வரர், அம்மன் தேவநாயகி. பாலசுப்ரமணியர் தனிச் சன்னிதியில் வடக்கு நோக்கியுள்ளார். தீர்த்தம் சிவகங்கை. தலமரம்-வில்வம்.

பார்வதிதேவி மயிலுருவம் கொண்டு பூசித்த தலம். கன்வ முனிவர் வழிபட்டு அருள்பெற்ற தலம். திருமகள் வழிபட்ட தலம்.

நான்கு கால பூஜை. ஐப்பசியில் உற்சவம் நடைபெறுகிறது.

8. ஆலாலசுந்தரம்

திருமயிலாடிக்கு வடகிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் யோகேஸ்வரர்.

9. ஓதவந்தாங்குடி

திருமயிலாடிக்கு தென்கிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர்.

10. சோதிகக்குடி

திருமயிலாடிக்கு மேற்கே 3 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

11. மாதிரிவேளூர்

திருமயிலாடிக்கு மேற்கே 6 கி.மீ. கொள்ளிட ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக மாதலீஸ்வரர்.

12. குன்னம்

திருமயிலாடிக்கு தென்மேற்கே 6 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் பூமீஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

13. பச்சைபெருமாநல்லூர்

சீர்காழிக்கு வடகிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமாலுடையார்.

14. கடவாசல்

சீர்காழிக்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரமூர்த்தி.

15. வள்ளுவக்குடி

சீர்காழிக்கு மேற்கே 5கி.மீ. இக்கோலின் மூலவர் வேதபுரீஸ்வரர்.

16. செம்மங்குடி

சீர்காழிக்கு கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதசுவாமி, அம்மன் கர்ப்பூரவல்லி.

திருச்சிற்றம்பலம்

17. திருக்குருகாவூர்

இத்தனை யாமாற்றை யறிந்திலேன் எம்பெருமான்
பித்தனே யென்றுன்னைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்தி
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

-- சுந்தரர்

சீர்காழிக்கு கிழக்கே 6 கி.மீ. திருக்குருகாவூர் வெள்ளடை. உப்பனார் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரம், கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வெள்ளடைநாதர், அம்மன் காவியங்கண்ணி.

ஊர்ப்பெயர் குருகாவூர். கோவிற்பெயர் வெள்ளடை. வெள்ளடை என்ற சொல் கோவிலுக்குப் பரமாகாயம் என்பது பொருள். இறைவன் பரமாகாய வடிவினனாக இங்கு விளங்குகிறார் எனப் பொருள்படும். தீர்த்தம் பால்கிணறு. இத்தீர்த்தம் கோவிலுக்கு வெளியே உள்ளது.

தை அமாவாசையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் இக்கிணற்றுநீர் பால் நிறமாக மாறும் அதிசயம் பொருந்தியது.

சீர்காழியிலிருந்து வந்த சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், உடன்வந்த அடியார் களுக்கும் சிவபெருமான் கட்டமுதுத் தண்ணீரும் கொடுத்தருளிய தலம். இறை வன் கட்டமுதளித்த இவ்விழா ஒவ்வொரு ஆண்டும் சித்திரைப் பௌர்ணமியில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 13 வது. சம்பந்தர், சுந்தரர் திருப்பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்களில் இறைவர் திருக்குருகாவூர் திருவெள்ளடை மகாதேவர், திருக்குருகாவூர் வெள்ளடை ஆண்டார், வெள்ளடையப்பர் என்றும், இவ்வூரை திருக்குருகாவூர் இராசாதிராச வளநாட்டுத் திருவாலி நாட்டுக் குருகாவூர் எனக் கூறப்படுகிறது.

18. மருதங்குடி

சீர்காழிக்கு மேற்கே 7கி.மீ. உப்பனாற்றின் வடகரையில் இக்கோவில் 26செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

19. பெருமங்கலம்

வைத்தீஸ்வரன் கோவிலுக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக வீரமுண்டீஸ்வரர். 2000 வருட முற்பட்ட கோவில்.

20. சட்டநாதபுரம்

சீர்காழிக்கு தெற்கே 2கி.மீ. உப்பனாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

21. புதுத்துறை

திருநகரிக்கு மேற்கே 2கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தனீஸ்வரர். 350 வருட முற்பட்ட கோவில்.

திருச்சிற்றம்பலம்

22. தென்னாம்பட்டினம்

மடல்வரை யின்மது விம்முசோலை
வயல் சூழ்ந் தழகாருங்
கடல்வரை யோதங் கலந்துமுத்
தஞ்சொரியுங் கலிக்காமூர்
உடல்வரை யின்னுயிர் வாழ்க்கை
யாய வொருவன் கழலேத்த
இடர்தொட ராவினை யான
சிந்தும் இறைவ னருளாமே

-- திருஞானசம்பந்தர்

திருமுல்லைவாயிலிருந்து தெற்கே 3கி.மீ. திருக்கலிக்காமூர், அன்னப்பன் பேட்டை. உப்பனாற்றின் தென் கரையில் இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கலிக்காமேசுவரர். ஸ்ரீ சுந்தரரேசுவரர் எனவும் வழங்குவர், அம்மன் ஸ்ரீ அழகம்மை. கிழக்கு நோக்கிய சன்னிதி. தீர்த்தம் அம்புவி.

பராசர முனிவர் வழிபட்டு அருள் நலங்கள் பெற்ற சிறப்புடைய தலம்.

திருஞானசம்பந்தர் இத்தலத் தேவாரத் திருப்பதிகத்துள் கலிக்காமூர் இறைவனை வழிபடுவோர் வினைகள் அகலும், நோய்கள் நீங்கும், செல்வம் பெருக்கம் உண்டாகும் என்று பாடல்கள் தோறும் பயன் அருளி செய்கின்றார்.

தோவரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 8 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது.

இக்கோவிலில் ஸ்ரீ வில்வவனேசுவரர், அம்மன் அகிலாண்டேஸ்வரியுடன் தனிக் கோவிலும் உள்ளது. கடலில் கண்டெடுத்த தாகக் கூறப்பெறும் நவராத்திரி அம்மன் விக்கிரகம் உள்ளது.

23. பெருந்தோட்டம்

திருவெண்காட்டிலிருந்து வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதேஸ்வரர்.

24. திருபுன்கூர்

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே.

-- திருஞானசம்பந்தர்

வைத்தீஸ்வரன் கோவிலுக்கு மேற்கே 3கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 2-94 ஏக்கர் நிலப்பரப்பளவில், இரண்டு பிராகாரங்களும், 66 அடி உயர 5 நிலை இராஜகோபுரம் கொண்டு மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவலோகநாதர் அம்மன் சொக்கநாயகி. தலமரம் புங்கமரம், தீர்த்தம் இடபதீர்த்தம்.

புங்கமரத்தினடியில் இறைவர் எழுந் தருளியுள்ளதால் திருப்புன்கூர் என்று பெயர்.

திருநாளைப்போவார் என்னும் நந்தனார் நேரே தம்மை வழிபடும் பொருட்டு இறைவன் இங்குள்ள நந்தியைச் சற்று விலகியிருக்கும்படி செய்ததலம். கஞ்சிக் கலயமும், மண்வெட்டியும் கொண்ட நந்தனார் உருவம் கோபுரத்துக்கு அருகில் உள்ளது. இங்குள்ள திருக்குளம் நந்தனாரால் வெட்டிச் சீர்செய்யப்பெற்றது.

சினம் நீங்கிய கலிக்காமருடன் சுந்தரர் இத்தலத்திற்கு வந்து வழிபட்ட திருவூர். கலிக்காமர் நாயனாரும் இத்தலத்தில் பல திருப்பணிகள் செய்த தலம். கலிக்காம நாயனாரின் பொருட்டு இறைவன் பன்னிருவேலியென்ற இத்தக் கிராமத்தைப் பெற்றுக் கொண்டு மழைபொழியச் செய்து பஞ்சம் நீங்குமாறு திருவருள் செய்த தலம்.

திரிபுரம் எரிபட்டபோது எஞ்சிய மூவரில் ஒருவன் இறைவன் நடமாடும் போது மணிமுழா முழக்குவன் எனச் சுந்தரர் இத்தலப் பதிகத்தில் கூறியபடி நடராசரின் தென்மேல் ஓர் உருவம் மணிமுழா முழக்குவதைக் காணலாம்.

இத்தல மூலவர் கவசம் சாத்தியே

காணப்படுகிறது. புனுகு சட்டம் சாத்தும் நாளில் கவசமின்றின் காணலாம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 20 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவார திருப்பதிகங்கள் பெற்றது.

தினமும் 5 கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

25. கதியானிருப்பு

சீர்காழிக்கு தெற்கே 7கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் சுவர்ணபுரீஸ்வரர்.

26. செம்பதனிருப்பு

சீர்காழிக்கு தெற்கே 10கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதஈஸ்வரர்.

27. நாங்கூர்


திருவெண்காட்டிற்கு மேற்கே 4கி.மீ. திருநாங்கூர். இக்கோவில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக மதங்கீஸ்வரர். மற்றொருகோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் நம்புவார்கம்பர்.

28. திருவெண்காடு

மந்திர மறையவை வான வரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய
அந்தமு முதலுடை அடிக ளல்லரே

-- திருஞானசம்பந்தர்

சீர்காழிக்கு தென்கிழக்கே 10கி.மீ. ஆதிசிதம்பரம். சுவேதாரண்யம், பேரரங்கம். இத்தலம் மணிகர்ணிகையாற்றின் தென் கரையில் இக்கோவில் 12-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், 792 அடி நீளம் கிழக்கு மேற்காவும், 310 அடி அகலம் வடக்கு



தெற்காகவும் கொண்டு 5 நிலை இராஜகோபுரம் கிழக்கு நோக்கியதும் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுவேதாரணியேசுவரர். அம்மன் பெரியநாயகி. தல விருட்சம். ஆல், கொன்றை, வில்வம் தீர்த்தங்கள் சோம, சூரிய, அக்னி தீர்த்தங்கள். இம்மூன்று தீர்த்தங்கள் கோவிலின் பிராகாரத்தில் திருக்குளமாக விளங்குவது.

இங்குள்ள சிவமூர்த்திகள் மூன்று சுவேதாரண்யேசுவரர், நடராசர், அகோர மூர்த்தி. காசிக்குச் சமமானதாகத் திகழும் ஆறு தலங்களுள் திருவெண்காடும் ஒன்று.

சுவேதாரண்ய க்ஷேத்திரத்தில் எமனை சுவேதாரண்யேசுவரர் எவ்வாறு சம்ஹாரம் செய்தாரோ அவ்வாறு கரதூஷனாதிகளை இராமன் சம்ஹாரம் செய்தான் என்று இராமாயணத்தில் குறிப்பிடுவதால் இத்தலம் மிகவும் தொன்மையான தலமாகக் கருதப்படுகிறது.

சிவபெருமானின் 64 மூர்த்திபேதங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ அகோர மூர்த்தியை இங்கு மட்டுமே காணலாம்.

ஆதி சிதம்பரம் இத்தலமாகும். சிவபெருமான் இத்தலத்தில் ஆனந்த தாண்டவம், காளி நிருத்தம், கௌரி தாண்டவம், முனி நிருத்தம், ஸந்தியா தாண்டவம், திரிபுரதாண்டவம், புஜங்க லலிதம், ஸம்ஹார தாண்டவம், பைஷாடனம் ஆகிய ஒன்பது தாண்டவங்களை ஆடியுள்ள தலம்.

இந்திரன், ஐராவதம், சிவப்பிரியர், வேதராசி, சுவேதகேது, சுவேதன், திருமால், சூரியன், சந்திரன், அக்னி முதலியவர்கள் இங்கு வழிபட்டுள்ள தலம்.

இத்தலம் புதன் தலம். இங்குப் புதனுக்குத் தனி சன்னிதியுள்ளது. சக்தி பீடங்களில் இத்தலமும் ஒன்றாகும். பிரம்மசமாதி இங்குள்ளது.


சமயக்குரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற தலம். சிறத் தொண்டர் இளமையில் வாழ்ந்ததும், அவர்தம் மனைவி திருவெண்காட்டு நங்கையும், சந்தனத் தாதியும், பிறந்ததுவும் இத்தலமேயாகும். திருவெண்காடராகிய பட்டினத்தடிகள் சிவதீட்சை பெற்ற தலம். சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்த முழுமுதல் நூலை அருளிச் செய்த மெய்கண்டார் அவதரித்த தலம். திருவாவடுதுறை ஆதீன 8 வது குருமகா சந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அவர்களின் சமாதி இவ்வூரின் மேலவீதியில் உள்ளது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 11 வது. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் திருப்பதிகம் பெற்றது. மாணிக்கவாசகர், பட்டினத்தார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், சேக்கிழார், சிதம்பர முனிவர், கச்சியப்ப சிவாசாரியார், பரஞ்சோதி முனிவர், தலபுராணம் பாடிய சைவ எல்லப்ப நாவலர் முதலியோர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர். இக்கோவிலில் 95 கல்வெட்டுக்கள் உள்ளன. 6 கால பூஜை நடைபெறுகிறது. மாசிமாதத்தில் இந்திரப்பெரு விழா, வளர்பிறை துவாதசி புனர்பூசத்தில் கொடியேற்றி 11 நாள் உற்சவம் நடைபெறுகிறது.

29. திருக்காட்டுப்பள்ளி

செய்யரு கேபுனல் பாயவோங்கிச் செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப் பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி வீண்டவ ரேறுவர் மேலுலகே.

-- திருஞானசம்பந்தர்



திருவெண்காட்டிற்கு மேற்கே ஒரு கி.மீ. கீழைத்திருக்காட்டுப்பள்ளி. ஆரணியேசுவரர் கோவில் என்றும் பெயர். இக்கோவில் ஒரு பிராகாரத்துடன் மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆரணியசுந்தரேசுரர், அம்மன் அகிலாண்டநாயகி. தீர்த்தம் அமிர்தப் பொய்கை.

விருத்திராசுரனைக் கொன்றதனால் நேர்ந்த பழி பற்றித் திரிந்த தேவேந்திரன் அப்பழி நீங்கித் தேவலோகத்தை ஆள வேண்டுமென்று தேவர்கள் பூசித்த தலம். தக்ஷிணாமூர்த்தி சன்னிதிக்கு மேற்கில் மதிற்சுவரிலிருந்து கடலொலி போன்ற ஒலி கேட்கப்படுகிறது. தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 12 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது.

திருச்சிற்றம்பலம்

30. கீழையூர்

திருவெண்காட்டிற்கு தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். 400 வருட முற்பட்ட கோவில்.

31. மணிக்கிராமம்

திருவெண்காட்டிற்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனிஅழகேஸ்வரர்.

32. மேலையூர்

நித்தலுந் நியமஞ் செய்து நீர் மலர்தூவிச்
சித்தமொன் றவல்லார்க் கருளுஞ் சிவன்கோவில்
மத்தயா னையின்கோ டும்வண்பீ லியும்வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரமேவு சாய்க்காடே

-- திருஞானசம்பந்தர்

திருவெண்காட்டிற்கு தெற்கே 3 கி.மீ. திருச்சாய்க்காடு, சாயாவனம். இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சாயாவனேசுவரர் கிழக்கு நோக்கியும் அம்மன் ஸ்ரீ குயிலினும் நன்மொழியம்மை தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர்.

தீர்த்தம் ஐராவத, காவிரி, சங்கமுக தீர்த்தங்கள். சாய் என்பதற்குத் தமிழில் கோரை என்பது பொருள் கோரைக்காடு செறிந்த இப்பகுதி சாய்க்காடு எனப் பெற்றது. ஆதிசேடனது நாகமணி ஒளிவீசியதால் இப்பெயர் பெற்றதெனத் தலபுராணம் கூறுகிறது. காசிக்குச் சமமாக ஆறு தலங்களில் இத்தலம் ஒன்றாகும்.

முற்காலத்தில் இந்திரனின் தாயார் இத்தலத்து இறைவனை நாடோறும் வழிபட்டு வந்தார். இந்திரன் தன் தாயார் விருப்பப்படிஅவரது கஷ்டத்தைப் போக்க இங்குள்ள சுயம்புமூர்த்தியை எடுக்க முயன்றபோது இறைவன் விருப்பப்படி ஆதிசேடனுடைய முடிஇரத்தினங்களால் இந்திரனுடைய கண்ணொளி மங்கச் செய்தார் என்பது தலவரலாறு.

இந்திரன், ஐராவதம், உபமன்யு முனிவர் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற தலம். இயற்பகை நாயனார் இத்தலத்தில் அவதரித்து சாயாவனேஸ்வரை வழிபட்டு வீடு பெற்ற தலம். சம்பந்தர், அப்பர், ஐயடிகள் காடவர்கோன் முதலியவர்களால் பாடப் பெற்ற சிறப்புடைய தலம்.

பூம்புகார் நகரத்துக்குக் காவல் தெய்வமாக விளங்கிய சம்பாபதி அம்மன் கோவில், சாய்க்காட்டுக் கோவிலுக்குத் தென்பால் விளங்குகிறது.

கோவிலின் தென்பால் திருக்குளம் உள்ளது. சூரியன், இந்திரன், இயற்பகை நாயனார், அவர் மனைவியார் திருவுருவங்கள் உள்ளன. கோவில் முன் மண்டபத்தில் தென்புறம் உள்ள இந்திரவிமானம், சக்கரம், குதிரைகளுடன் தேர்போன்று அமைந்துள்ளது. கோவிலின் முன்மண்டபத்தில் வில்லேந்திய வேல்முருகனின் உற்சவ விக்ரம் கடலிலிருந்து கிடைக்கப் பெற்றது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 9 வது. சம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 13 உள்ளன. இவ்வூரை ராஜாதிராஜ வளநாடு நாங்கூர்நாடு ஊர் காவிரிப்பூம்பட்டினத்துத் திருச்சாய்க்காடு என்று குறிக்கப்பட்டுள்ளது.

நான்கு கால பூஜை. இந்திரவிழா, ஐப்பசி நாயன்மார்கள் உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

33. பல்லவனீச்சரம்

பரசுபாணியர் பாடல் வீணையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசுபேணி நின்றார் இவர்தன்மை யறிவாரார்.
-- திருஞானசம்பந்தர்

திருவெண்காட்டிற்கு தெற்கே 4 கி.மீ. சம்பாபதி, திருப்பல்லவனீச்சரம், காவிரிப்பூம்பட்டினத்துத் திருப்பல்லவனீச்சரம். புகார், மேலையூர் என்று அழைக்கப்படும். இக்கோவில் 52 செண்ட் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ பல்லவனேசுவரர். அம்மன் ஸ்ரீ சௌந்தரநாயகி, தலவிருட்சம் முல்லை. தீர்த்தம் ஜானவி, சங்கம தீர்த்தங்கள்.

கோவில் கிழக்கு நோக்கியது. கோவிலுக்கு முன்னால் ஜானவி தீர்த்தக்குளம் உள்ளது. உள்பிராகாரத்தில் பட்டினத்தார், அவரது தாயார் ஞானகலாம்பிகை, மனைவி சிவகலை, பெருமானே பிள்ளையாக வந்த மருதவாணர், அவரது வளர்ப்புப் பெற்றோர் ஆகிய சிவசருமர், சுசீலை, சேந்தனூர் பத்தரகிரியார் உருவங்களும் மற்றும் உற்சவ விக்கரங்களும் உள்ளன.

கோவிலிருந்து கடற்கரை கிழக்கே 3 கி.மீ. பல்லவன் வழிபட்டு அருள்பெற்ற காரணத்தால் பல்லவன்ஈச்சரம் எனப் பெயர் பெற்றது.

காலவ முனிவர் பூசித்துப் பேறுபெற்ற தலம். இத்தலத்தில் சிவநேசச் செட்டியாருக்கும் ஞானகலாம்பிகை அம்மைக்கும் புதல்வராகப் பிறந்த திருவெண்காடர் திருவெண்காட்டில் சிவசாரியரிடம் சிவதீட்சை பெற்றுச் சிவபூசை செய்து வந்தார். 16வது வயதில் சிவகலை என்னும் மங்கையை மணந்தார். பிள்ளைப்பேறு கருதி திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானை வழிபட்டு பெருமானே மருதவாணர் என்ற பெயருடன் குழந்தையைப் பெற்று மகப்பேறில்லாக் குறைமாறி மகிழ்வுற்றார். மருதவாணர் கப்பலில் சென்று வாணிபம் செய்து பொருளீட்டிவந்தார்.


ஒருமுறை மருதவாணர் தவிடு விராட்டிகளை கப்பலில் கொண்டுவந்தார். அதைக்கண்டு மனம் வருந்தினார் திருவெண்காடர். மருதவாணர் ஒரு பெட்டியைத் தம்தாயாரிடம் கொடுத்து வெளியே சென்று மறைந்தார். திருவெண்காடர் மைந்தரைக் காணாது மனம் வருந்தி பெட்டியைத் திறந்து பார்க்கும்போது அதில் 'காதற்ற ஊசியும் வாராது காண் நும்கடைவழிக்கே' என்றெழுதிய ஓலையும், ஒடிந்த ஊசியும் இருக்கக்கண்டு துறவு மேற்கொண்டு பட்டினத்தார் என திருநாமம் கொண்டு பல தலங்கட்கும் சென்று செந்தமிழ்ப் பாடல்கள் பாடிப் பல அற்புதங்களை நிகழ்த்தி இறுதியில் திருவொற்றியூரில் சிவசமாதி கூடினார்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 10 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. ஒன்று கர்ப்பக்கிரகத்தின் மேற்குச் சுவரிலும், மற்றொன்று கோவில் முற்றத்திலும் காணப்பெறுகின்றன.

5 கால பூஜை. ஆடி மாதத்தில் பட்டினத்தார் திருவிழா நடைபெறுகிறது.

மயிலாடுதுறை வட்டம்
(நாகப்பட்டிணம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. மயிலாடுதுறை

கரவின் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே

-- திருஞானசம்பந்தர்

சீர்காழிக்கு தென்மேற்கே 21கி.மீ. மாயூரம், மாயவரம். காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 8-72 ஏக்கர் நிலப்பரப்பு கொண்டு கிழக்குமேற்காக 719 அடியும், வடக்கு தெற்காக 527 அடி கொண்டும், கிழக்கு நோக்கிய 164 அடி உயரம் 9 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மாயூரநாதர், அம்மன் அபயாம்பிகை. தீர்த்தம்-இடபதீர்த்தம் (காவிரித்துறை), பிரம்ம, அனவித்யாசரஸ் தீர்த்தங்கள். தலமரம்-மாமரம்.

இத்தலத்திற்கு சூதவனம், சிகண்டிபுரம், பிரமபுரம், தென் மயிலை என்னும் வேறு பெயர்களும் உள்ளன. மயில்கள் ஆடும் துறையாக விளங்கியதால் இத்தலம் மயிலாடுதுறை என்றும், அம்பிகை மயிலுருவம் கொண்டு பூசித்த காரணத்தால் இத்தலம் மயிலாடுதுறை என்னும் பெயர்.

இத்தலத்துப் பெருமானை கௌரி, இந்திரன், பிரமன், பிரகஸ்பதி, அகத்தியர், நாதசர்மா, அவர் மனைவி அனவித்தை, திலீபன், சப்தமாதர்கள் முதலியோர் வழிபட்ட தலம்.

கங்கை இத்தலத்திற்கு வந்து நீராடும் சிறப்பினால் இத்தலம் காசிக்குச் சமமாகும் தலம். காவிரித்துறையில் அருள்மிகு விசுவநாதரும், விசாலாக்ஷியும் கோவில் கொண்டுள்ளனர். ஐப்பசி மாதத்தில் இங்கு நீராடுவோர் புண்ணிய நதிகள் பலவற்றிலும் நீராடிய பயன்களைப் பெறுவர் எனத் தலபுராணம் கூறுகிறது.

இத்தலத்தில் 5 விசுவநாதர் கோவில்கள் உள்ளன. வள்ளலார் கோவிலில் காவிரியின் வடகரையில் மேதா தட்சிணாமூர்த்தி இடபதேவருக்கு உபதேசிக்கும் மூர்த்தியாக எழுந்தருளி விளங்குகின்றார்.

கடைமுகத் திருநாளன்று மாயூரத்தில் உள்ள எல்லாத் திருக்கோவில்களிலுமுள்ள மூர்த்திகள் திருவீதி உலாவாக இடபதீர்த்தக் கட்டமாகிய துலாக்கட்டத்தில் எழுந்தருளி வந்து அருள்மிகு மாயூரநாதரோடு தீர்த்தம் கொடுத்தருளும் கடைமுகத் திருவிழா பெருஞ் சிறப்போடு நடைபெறுகிறது.

அம்பிகை மயிலுருவம் கொண்ட மயிலம்மன் திருவுருவம் தரிசிக்கத்தக்கது. ஐப்பசிப் பெருவிழாவில் மயிலம்மன் பூஜை ஐதீக விழாவாக நடைபெறுகிறது.

மாயூரத்திற்குக் கிழக்கே விளநகரில் விளங்கும் இறைவன் துறைகாட்டும் வள்ளல் மேற்கே மூவலூரில் வழிகாட்டும் வள்ளல், தெற்கே பெருஞ்சேரியில் வாக்குக் காட்டும் வள்ளல், வடக்கே உத்திர மாயூரத்தில் கைகாட்டும் வள்ளல் என நாற்றிசைகளிலும் நான்கு வள்ளல்கள் விளங்கிட நடுநாயகமாக மாயூரநாதர் விளங்கிவருகிறார்.

சப்தமாதர்கள் இத்தலத்தைச் சூழவுள்ள தலங்களில் இறைவனை வழிபட்டு அருள் பெற்ற தலம். தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இக்கோவில் 39 வது தலமாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகம் பெற்றது. அருணகிரி நாதர் இத்தலத்து முருக பெருமான் மீது அருளிய திருப்புகழ்ப்பாடல்கள் மூன்று உள்ளன.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய தலபுராணம் மற்றும் மயிலைத் திரிபந்தாதி, அபயாம்பிகை மாலை, அபயாம்பிகை அந்தாதி

முதலியனவும். நல்லத்துக்குடி கிருஷ்ணய்யர் இயற்றிய அபயாம்பிகை சதகம் உள்ளது.

இத்தலத்தில் 16 கல்வெட்டுக்கள் உள்ளன. முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், சடையவர்மன் சுந்தரபாண்டியன் முதலிய அரசர்கள் கால கல்வெட்டுக்கள் உள்ளன.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற இரண்டு பெரிய சைவ ஆதீனங்களை இணைக்கும் திருக்கோவிலாக இத்தலம் உள்ளது. சுவாமி, அம்பாள் கோவில்கள் திருவாவடுதுறை ஆதீனத்துக்கும், முருகப்பெருமான் திருக்கோவில் தருமையாதீனத்துக்கும் சொந்தமானதாகவும் விளங்குகிறது.

2. திருச்சிற்றம்பலம்

மணல்மேடுவிலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக நடனபுரீசுவரர்.

3. கடலங்குடி

மணல்மேடுவிலிருந்து தென்மேற்கே 5கி.மீ. திருமேனியப்பர் கோவில். மூலவர் திருமூலநாதர்.

4. மணல்மேடு

முன்னவன் எங்கள் பிரான் முதல்காண்பரி தாயபிரான்
சென்னியின் எங்கள் பிரான் திருநீலமிடற் றெம்பிரான்
மன்னிய எங்கள் பிரான் மறைநான்குங்கல் லால்நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான் பழமண்ணிப் படிக்கரையே

-- சுந்தரர்

திருவாளப்புத்தூரிலிருந்து மேற்கே 3 கி.மீ. இலுப்பைப்பட்டு, திருப்பழமண்ணிப் படிக்கரை, மதூகவனம். கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் 7 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நீலகண்டேசுவரர், அம்மன் அமுதகரவல்லி. தலமரம்-இலுப்பை, தீர்த்தம் பிரம தீர்த்தம், மண்ணியாறு, கொள்ளிடம் கோவிலுக்கு எதிரே பிரமதீர்த்தம் அமைந்துள்ளது.

தலவிருட்சம் இலுப்பைமரம் ஆதலின் இலுப்பைப்பட்டு என இத்தலம் வழங்கப் படுகிறது.

பண்டைக் காலத்தில் மண்ணியாற்றின் படிக்கரையில் இருந்தமையால் இத்தலம் மண்ணிப்படிக்கரை என வழங்கப்படுகிறது.

இத்தலத்தில் பஞ்சபாண்டவர் வழிபட்டதால் இக்கோவில் ஐந்து சிவலிங்கத் திருவுருவங்கள் உள்ளன. தருமர் பூசித்த நீலகண்டேசர் - அமிர்தவல்லி, பீமன் பூசித்த மகதீசர், அர்சுனன் பூசித்த படிக்கரை நாதர், நகுலன் பூசித்த பரமேசர், சகாதேவன் பூசித்த முத்தீசர், திரௌபதி பூசித்த வலம்புரி விநாயகர்.

பிரமன், இந்திரன், பஞ்சபாண்டவர்கள், விபாண்டக முனிவர், துந்து, நளமகாராஜன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 30 வது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது. தலபுராணம் மகாவித்துவான் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் 21 படலம், 501 பாடல்கள் கொண்டு இயற்றியுள்ளார்.

கல்வெட்டுக்கள் 52 உள்ளன. நான்கு கால பூஜை. இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

5. தலைஞாயிறு

**சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே**
-- திருஞானசம்பந்தர்

மயிலாடுதுறைக்கு வடக்கே 14கி.மீ. திருக்கருப்பறியலூர், கொகுடி கோவில், மேலைக்காழி. பழவாற்றின் தென்கரையில் இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரர். கிழக்கு நோக்கியும், அம்மன் கோல்வளைநாயகி.

வானுற உயர்ந்து தோன்றும் மலைக்கோவிலில் உமாமகேஸ்வரும், சட்டைநாதரும் கோவில் கொண்டுள்ளனர். தலவிருட்சம் ஜாதி முல்லையும் அதனடியில் ஆதிலிங்கமும் விளங்குகிறது.

தீர்த்தம் விநாயக, சூரிய, வசிட்ட, அனுமன், நிட்ப, சங்க, பொற்றாமரை, செங்கழுநீர்த்தடாகம் என எட்டுத் தீர்த்தங்கள் உள்ளன.

பழவாறு என வழங்கப்பெறும் இந்நதியே விநாயக தீர்த்தமாகும். முல்லை தலவிருட்சமாதலின் யூதிகா வனம் என்றும் சூரியன் வழிபட்டதால் தலை ஞாயிறு என்றும் சீர்காழியைப் போன்று மேற்கில் இத்தலம் திகழ்வதால் மேலைக்காழி என்றும், தேவாரத் திருப்பதிகத்தில் கருப்பறியலூர் என்றும் குறிக்கப்படும் தலம்.

இத்தலத்தில் செய்யும் அறச்செயல்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகும் என இத்தல மகிமையை பிரமன் வசிட்டருக்குச் சொல்ல வசிட்டர் இத்தலத்தில் இலிங்கம் அமைத்து வழிபட்டு உணர்வரிய மெய்ஞ்ஞானம் பெற்றார் என்பது தலபுராணம்.

இந்திரனுடைய குற்றத்தை இறைவன் பொறுத்ததால் இத்தல இறைவருக்கு குற்றம் பொறுத்தநாதேசுரர் என்று பெயர்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 27 வது. திருஞானசம்பந்தர், சுந்தரர் பதிகம் பெற்றது. தலபுராணம் மருதூர் அம்பலவாணர் இயற்றிய 298 பாடல்கள் கொண்டது.

கல்வெட்டுக்கள் 19 உள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதினத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

6. திருக்குரக்காவல்

**மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே**
-- திருநாவுக்கரசர்

தலைஞாயிறுக்கு வடக்கே ஒரு கி.மீ. திருக்குரக்குக்கா. பழவாற்றின் வடகரையில் இக்கோவில் உள்ளது. வடவாஞ்சார் என இவ்வூர் வழங்கப்படுகிறது. சோலை வளத்தால் பெயர்பெற்ற இவ்வூர் இறைவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ குந்தள நாதேஸ்வரர், அம்மன் ஸ்ரீ குந்தளநாயகி.

இத்தலம் பஞ்ச காக்கள் எனப்படும். திருக்குரக்குக்கா - குரங்கு பூஜை செய்த தலமாகும். விநாயகர், அப்பர், அனுமார், பைரவர், சூரியன் திருவுருவங்கள் உள்ளன.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 28 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

7. திருவாளப்புத்தூர்

பொடியுடை மார்பினர் போர்விடை
யேறிப் பூதகணம் புடைசூழக்
கொடியுடையூர் திரிந்தையங்
கொண்டு பலபலகூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறை
மிடற்றானடி காண்போம்.

-- திருஞானசம்பந்தர்

மயிலாடுதுறைக்கு வடக்கே 10 கி.மீ. இரத்தினபுரம், திருவாழ்கொளிபுத்தூர். கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 1-27 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், மூன்று பிராகாரங்களுடன், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மாணிக்க வண்ணர்கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் ஸ்ரீவண்டமர்பூங்குழலி. தலமரம் வாகை. தீர்த்தம் - பிரம தீர்த்தம். கோவிலுக்கு முன்னால் விளங்குகின்றது.

அருச்சுனன் செய்த பூசைக்கு உகந்த பெருமான் அவன் வாளைப் புற்றில் ஒளித்துவைத்திருந்து மீண்டும் அவன் அஸ்தினாபுரிக்கு திரும்பும்போது அளித்தார். ஆதனால் இத்தலம் வாள்ஒளிபுற்றூர் ஆயிற்று என்பது தலவரலாறு.

இறைவர் வாசுகியைத் தன் புயத்தில் அணிந்து அருள்புரிந்த தலம். பாண்டவர்கள் பூசித்த இலிங்கங்களும், திரௌபதி பூசித்த வலம்புரி விநாயகரும் உள்ள தலம். திருமால் மாணிக்கத்தை வைத்து பூசித்த தலம். பிரமன், இந்திரன், துர்வாசர், அஞ்சகேது, விப்ரவணிகன் முதலியோர் இத்தல இறைவனை வழிப்பட்டு அருள் பெற்ற தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 29 வது திருஞானசம்பந்தர், சுந்தரர் பதிகம் பெற்றது. தலபுராணம் மகாவித்துவான் திரு.மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் பாடியது. நான்கு கால பூஜை. வைகாசி விசாகத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

8. கிழாய்

மணல்மேடுலிருந்து தென்கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 1-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேசுவரர். இவ்வூருக்கு மேற்கேயுள்ள புட்டமங் கலத்தில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் கிரிபாலநாதசுவாமி.

9. ஆற்றூர்

மணல்மேடுலிருந்து தென்மேற்கே 5கி.மீ. மந்தாரம், மந்தாரவனம். மண்ணி யாற்றின் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சொர்ணபுரீசுவரர், அம்மன் ஸ்ரீ அஞ்சனாட்சியம்மன். தலமரம்-மந்தாரை மரம். தீர்த்தம் மண்டூக தீர்த்தம் கோவிலின் எதிரே உள்ளது.

கிழக்குநோக்கியதும், இரண்டு பிரா காரங்கள் கொண்ட இக்கோவில் நந்தி பூசை செய்த தலம். தவளை முத்தி பெற்ற தலம்.

தேவார வைப்புத்தலமாகப் போற்றப் படும் இத்தலம் திருஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர் அருளிய பதிகங்களில் போற்றப் படுகிறது. தலபுராணம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாடியுள்ளார். சோழர்கால கல்வெட்டுக்கள் உள்ளன. மார்கழி திருவாதிரை உற்சவம் நடை பெறுகிறது.

10. கேசிங்கன்

மணல்மேடுலிருந்து தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். 300 வருட முற்பட்ட கோவில்.

11. வில்லியநல்லூர்

மணல்மேடுலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீசுவரர்.

12. மேல்நல்லூர்

திருப்புன்கூர்க்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

13. ஐவநல்லூர்

குறுக்கைக்கு மேற்கே ஒரு கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தியநாதசுவாமி. 500 வருட முற்பட்ட கோவில்.

14. காளி

குறுக்கைக்கு தென்மேற்கே 4கி.மீ. அபிராமிகோவில்பட்டு. இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பள்வில் திருக்காமேஸ் வரர். இவ்வூருக்கு வடக்கேயுள்ள கன்னிநத்தத்தில் கைலாச நாதர் கோவிலும், தென்மேற்கே ஒரு கி.மீ. தொலைவில் துர்காபுரீசுவரர் கோவிலும், இவ்வூருக்கு தெற்கே பொய்யக்குடியில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் நாகநாதர் சுவாமி கோவிலும் உள்ளன.

15. குறுக்கை

ஆதியிற் பிரம னார்தாம் அர்ச்சித்தார் அடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவர் உணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார் பல்பூக்
கோதிவண் டறையுஞ் சோலைக் குறுக்கைவீ ரட்டனாரே

-- திருநாவுக்கரசர்

மயிலாடுதுறைக்கு வடமேற்கே 8கி.மீ. திருக்குறுக்கை வீரட்டம். கடுவனம் கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீரட்டேசுவரர். மேற்குநோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் ஞானாம்பிகை தெற்குநோக்கி காட்சியளிக்கிறார். தலவிநாய கர் குறுக்கை விநாயகர் தலமரம் கடுக்காய் மரம். தீர்த்தம்-சூல தீர்த்தம் கோவிலக்கு எதிரில் உள்ளது.

தீர்க்கவாகு முனிவர் இத்தலத்திற்கு வந்து இறைவனை அபிஷேகத்திற்குக் கங்கா நீரினை விரும்பித் தனது கரங்களை நீட்டக் கரங்கள் நீளாது குறுகினமையால் குறுக்கை என வழங்கப்படுகிறது.

கடுக்காய்மரம் தலவிருட்சமாதலின் கடுவனம் எனவும், இறைவர் அம்மையாரைப் பிரிந்து யோகம் செய்த இடமாதலின் யோகீசபுரம் எனவும், காமனைத் தகித்த இடமாதலின் காமதகனபுரம் எனவும், இலக் குமியினது நடுக்கத்தைப் போக்கியதால் கம்பகரபுரம் எனவும் வழங்கப்படும் தலம்.

இறைவனது எட்டு வீரட்டத் தலங்களில் இத்தலம் காமனை எரித்த தலம். எழுந்தருளும் திருமேனியாகிய காமதகன மூர்த்தியின் பெயர் யோகீசுவரர், அம்மை பூரணி, மன்மதன், இரதி உருவங்கள் உள்ளன. இங்குள்ள சபை காமனங்கநாசனி சபை என வழங்கப்படுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் 26 வது தலம். திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. தலபுராணம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் 736 பாடல் கொண்ட தலபுராணத்தை இயற்றியுள்ளார்.கல்வெட்டுக்கள் 21 உள்ளன. இறைவர் திருக்குறுக்கையுடைய வீரட்டான முடையார் எனக் குறிப்பிடப்படுகிறது. நான்கு கால பூஜை. மாசி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

திருச்சிற்றம்பலம்

16. அறுவாப்பாடி

ஆனந்ததாண்டவபுரத்திலிருந்து வடமேற்கே 2 கி.மீ. இக்கோவில் 30செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 900 வருட முற்பட்ட கோவில்.

17. ஆனந்ததாண்டவபுரம்

மயிலாடுதுறையிலிருந்து வடக்கே 5கி.மீ. ஆனதாண்டவபுரம், ஆனைதாண்டவ புரம் என அழைக்கப்படும். இக்கோவில் 7-57 ஏக்கர் நிலப்பரப்பளவில் 100 அடி உயர கோபுரமும், நான்கு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பஞ்சவடீஸ்வரர். அம்மன் கல்யாணசுந்தரி.

பதஞ்சலி முனிவருக்காக இறைவன் இத்தலத்தில் ஆனந்ததாண்டவத்தை ஆடியதால் இவ்வூருக்கு ஆனந்ததாண்டவ புரம் என்று பெயர்.

63 நாயன்மார்களில் ஒருவரான திருமானக்கஞ்சர நாயனார் வாழ்ந்திருந்த தலம். நாயனாரின் ஒரே மகளின் திரு மணத்தின்போது இறைவன் ஆண்டியாக வந்து மகளின் ஜடைமுடியை வேண்டிக் கேட்டபோது நாயனார் தம்மகளின் திருமுடியை அறுத்துகொடுத்து, இறைவ னின் அருளுக்குப் பாத்திரமான தலம். சேக்கிழார் இவ்வடியார் திறத்தைச் சிறப்பித்து 37 பாடல்களில் விரித்து அருளிச் செய்துள் ளார். ஜடாநாதர் என்ற பெயருடன் கூடிய உற்சவர் இத்தலத்தில் இவ்வினிய வரலாற் றினை விளக்கி நிற்றலைக் காணலாம்.

இவ்வாலயத்திலுள்ள நடராஜர் புகழ் பெற்றது. இங்குள்ள துர்க்கையம்மன் பலருக்குக் குலதெய்வமாக உள்ளாள்.

நாள்தோறும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது. வரதராஜர் ரங்கநாயகி யம்மன் கோவிலும், சொக்காயி சமேத திருவரசமூர்த்தி ஐயனார் கோவிலும் பிரசித்தமானது. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

18. மொழையூர்

ஆனந்ததாண்டவபுரத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. சோழசக்கரநல்லூர். இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

19. நத்தம்

கொடுங்கண் வெண்டலை கொண்டு குறைவிலைப்
படுங்க ணொன்றில ராய்ப்பலி தேர்ந்துண்பர்
நெடுங்கண் மங்கைய ராட்டயர் நின்றியூர்க்
கடுங்கைக் கூற்றுதைத் திட்ட கருத்தரே

-- திருநாவுக்கரசர்

மயிலாடுதுறையிலிருந்து வடகிழக்கே 8கி.மீ. திருநின்றியூர். காவிரியாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரமும், பிராகாரங்களுடன், கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு லக்ஷ்மிபுரீசுவரர். அம்மன் உலகநாயகியம்மன் தெற்கு நோக்கியுள்ளார். தீர்த்தம் நீலப்பொய்கை

திருமகள் வழிபட்டு நிலைபேறெய்திய தலமாதலின் திருநின்றவூர் எனப் பெயர் பெற்றது.

சோழ மன்னன் ஒருவன் தினந்தோறும் வழிபட்டு வந்தான் என்றும், ஒருநாள் அவன் கொண்டு வந்த திரிநின்றுவிடவே, சிவ பூசைக்கும், வழிபாட்டிற்கும் இடையூறின்றிச் சிவலிங்கத்தினின்று சோதி தோன்றியது

கண்ட அரசன் மகிழ்ந்து, தான் சிவச் சோதியைக் காணுதற்கேற்ற வாய்ப்பினைத் தான் கொணர்ந்த திரியடைவித்ததால் திரிநின்றவூர் என வழங்கச் செய்தான் என்றும் அதுபின்னர் திருநின்றவூர் ஆயிற்று என்றும் செவிவழிச் செய்தியுண்டு.

அகத்தியர், பரசுராமர், தேவேந்திரன், ஐராவதம், காமதேனு முதலியோர் இத்தல இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 19 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் திருப்பதிகங்கள் பெற்றது.

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டு ஒன்றே உள்ளது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

20. சேமங்கலம்

திருநின்றியூரிலிருந்து வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

21. கொண்டாத்தூர்

தண்ணார் திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோவில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகுந் நல்வினையாய நணுகும்மே.

-- திருஞானசம்பந்தர்

கதிராமங்கலத்திலிருந்து கிழக்கே ஒருகி.மீ. திருக்கண்ணார்கோவில், குறுமாணக்குடி. காவிரி வடகரைப்பகுதியில் இக்கோவில் கிழக்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீகண்ணாயிரநாதர். அம்மன் ஸ்ரீமுருகுவளர்க்கோதை. தலமரம் கொன்றை, தீர்த்தம் இந்திர தீர்த்தம். சித்திவிநாயகர், சுப்ரமண்யர், பைரவர், நால்வர், துர்க்கை, பாலதண்டாயுதபாணி, தட்சிணாமூர்த்தி சண்டிகேஸ்வரர், சூரியன், சந்திரன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

மாவலிபாற் சென்று மூவடி மண்கேட்ட வாமனமூர்த்தியாகிய குறுமாணி வழிப் பட்டதால் குறுமாணக்குடி எனப்பட்டது.

கௌதமர் மனைவி அகலிகைமீது காதல் கொண்டு முனிவரை வெளியே போகச் சூழ்ச்சி செய்து அம் முனிவர் வேடத்தில் சென்று அகலியைக் கூடினான் இந்திரன். முனிவர் திரும்பிவந்துவிட்டார் இந்திரன், அகலிகை தவறுணர்ந்து அஞ்சி நின்றார்கள். முனிவர் அகலிகையைக் கல்லாகுமாறும், இந்திரன் உடல் முழுவதும் கண்ணாகுமாறும் சபித்தார். இத்தலம் இந்திரனுக்கு ஆயிரங் கண்ணருளிய வரலாற்றுச் சிறப்புடைமையால் கண்ணார் கோவில் எனப் பெயர் பெற்றது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 17 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் உள்ளன. இராஜ ராஜசோழன் கல்வெட்டில் இவ்வூரை குறுவாணியக்குடி எனக் குறிப்பிடப் படுகிறது.

தினமும் 5 கால பூஜை. கார்த்திகை அன்று உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

22. கீழையூர்

அருத்தனை யறவனை யமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே.

-- திருஞானசம்பந்தர்

செம்பொனார்கோவிலுக்கு வடகிழக்கே 2கி.மீ. திருக்கடைமுடி. காவிரியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இக்கோவில் மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கடைமுடிநாதர். அம்மன் அபிராமவல்லி. தீர்த்தம் கருணா தீர்த்தம். தலமரம் கிளுவை.

காவிரியின் கடைமுடியாதலின் இப்பெயர் பெற்றது. பிரமன் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 18 வது திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது.

23. புஞ்சை

முற்றுணை யாயினானை மூவர்க்கு முதல்வன் தன்னைச்
சொற்றுணை யாயினானைச் சோதியை ஆதரித்து
உற்றுணர்ந் துருகியூறி உள்கசிவுடைய வர்க்கு
நற்றுணை யாவர்போலும் நனிபள்ளி அடிகளாரே

-- திருநாவுக்கரசர்

செம்பொனார்கோவிலுக்கு வடகிழக்கே 6கி.மீ. திருநனிபள்ளி, கிடாரங்கொண்டான் ஊருக்கு தெற்கே சிறிது தொலைவில் உள்ளது புஞ்சை. காவிரியாற்றின் தென் கரையில் இக்கோவில் 72 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நற்றுணையப்பர். அம்மன் மலையான் மடந்தை. தீர்த்தம் சொர்ண தீர்த்தம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தாயார் பகவதியம்மையார் பிறந்த தலம். சம்பந்தர் தம் தந்தையார் தோள்மேலமர்ந்து இத்தலத் திருப்பதிகத்தை அருளிச் செய்துள்ளார். அடியார்களின் வேண்டுகோளுக் கிணங்கிப் பாலையாயிருந்த இவ்விடத்தை நெய்தலாகு மாறு பாடிய தலம்.

கோஷ்டங்களில் விளங்கும் அகத்தியர், விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, இலிங் கோத்பவர், பிரம்மா, துர்க்கை திருவுருவங்கள் பேரழகுடையனவாக உள்ளன. கோவிலின் கருப்பக்கிருகம் நல்ல வேலைப் பாடுடையதாக அமைந்துள்ளது. ஆவுடையார் கோவில் கொடுங்கையும், திருவீழிமிழலை வௌவால் நந்தி மண்டபமும் வேலைப்பாடுகள் நிறைந்தவை போல இத்தலத்தில் நனிபள்ளிக் கோடி வட்டமும் வேலைப்பாடுகள் நிறைந்தவை என்று கூறலாம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இக்கோவில் 43 வது தலம். திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது. இங்குள்ள கல்வெட்டுக்களில் பழமையானது பாண்டியன் முடித்தலை கொண்ட பரகேசரியான இரண்டாம் ஆதித்தனின் 4ஆம் ஆண்டைச் சார்ந்தது. கல்வெட்டுக்களில் திருநனிப்பள்ளி உடையார் கோவில் என்றே வழங்குகிறது.

24. கிடாரங்கொண்டான்

செம்பொனார் கோவிலிருந்து வடக்கே 6கி.மீ. இக்கோவில் 1-10 ஏக்கர் நிலப் பரப்பள்வில் மூலவர் கைலாசநாதர்.

திருச்சிற்றம்பலம்

25. தலைச்சங்காடு

நலச்சங்க வெண்குழையுந் தோடும் பெய்தோர் நால்வேதம்
சொலச் சங்கை யில்லாதீர் சுடுகாடல்லாற் கருதாதீர்
குலைச் செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள்சோலைக் குயிலாலும்
தலைச்சங்கைக் கோவிலே கோவிலாகத் தாழ்ந்தீரே

-- திருஞானசம்பந்தர்

ஆக்கூர்க்கு வடக்கே 4 கி.மீ. தலையுடையவர் கோயிற்பத்து. திருத்தலைச் சங்காடு, சங்காராண்யம், சங்குவனம், தலைச்சங்கை. காவிரியாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 1-86 ஏக்கர் நிலப்பரப்பளவில், இரண்டு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சங்கருணாதேசுவரர். அம்மன் சௌந்தர நாயகி. தலமரம்-புரசு வடக்குப் பிராகாரத்தில் உள்ளது. தீர்த்தம் சங்கு தீர்த்தம் கோவிலுக்கு முன்புறம் உள்ளது.

திருமால் இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்துப் பாஞ்சசன்யம் என்னும் சங்கினைப் பெற்ற தலம்.

சோச்செங்கட்சோழனால் கட்டப்பெற்ற மாடக் கோவில் உடையது இத்தலம். மலைமேலுள்ள வல்லப விநாயகர், காவேரியம்மன் திருவுருவங்கள் தரிசிக்கத்தக்கன.

பௌர்ணமி, அமாவாசை நாட்களில் நீராடி இத்தலத்து இறைவனையும், இறைவியையும் வழிபடுவோர் இஷ்ட சித்திகள் யாவும் பெறுவர் எனக் கூறப்படுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென் கரையில் இத்தலம் 45 வது தலம். திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 10 உள்ளன. சோழர் காலத்தைச் சேர்ந்தவையாகும். இத்தலத்தை இராஜராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டுத் தலைச் சங்காடு என்றும், தலையுடையவர் கோயிற்பத்து என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

26. மேலைப்பெரும்பள்ளம்

மண்ணளந்த மணிவண்ணர் தாமும் மற்றை
மறையவனும் வானவருஞ் சூழ நின்று
கண்மலிந்த திருநெற்றி யுடையா ரொற்றைக்
கதநாகங் கையுடையார் காணீரன்றே
பண்மலிந்த மொழியவரும் யானு மெல்லாம்
பணிந்திறைஞ்சித் தம்முடைய பின்பின்செல்ல
மண்மலிந்த வயல்புடைசூழ் மாடவீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே

-- திருநாவுக்கரசர்

செம்பொனார்கோவிலுக்கு வடகிழக்கே 8 கி.மீ. திருவலம்புரம். காவிரியாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வலம்புரநாதர். அம்மன் வடுவகிர்க் கண்ணியம்மை. தலமரம்-பனை. தீர்த்தம் பிரம தீர்த்தம், லக்ஷ்மி தீர்த்தம், சுவர்ணபங்கஜ தீர்த்தம்.

இறைவனின் திருமுடியில் பள்ளம் உள்ளது. சாம்பிராணித் தைலம் புனுகுசட்டம் சாத்தப்பெறுகிறது. குவளை சாத்தியே அபிஷேகம் செய்யப்படுகிறது.

புகார்நகரில் காவிரியின் வலப்பக்கமாக இருப்பதால் இவ்வூர் வலம்புரம் என வழங்கப்பெறுகிறது. பூம்புகாரைச் சூழ இருந்த அகழியாக இவ்வூர் அக்காலத்தில் விளங்கியதால் பெரும்பள்ளம் எனப் பெற்றது.

காவிரிப்பூம்பட்டினம் ஒரு ஆலயம். அதைச் சூழவுள்ள தலங்கள் ஏழும் ஏழு வனங்களாய், ஏழு கோவில்களாக விளங்குவன. அவ்வகையில் இத்தலம் தாலவனம் என்னும் கணபதித் தலம்.

திருமால் சிவனைக்குறித்து தவம் செய்யப் போனபோது திருமகளை இத்தலத்திலுள்ள அம்பிகையின் தோழியாக விட்டுச் சென்றார். தவம் செய்து சக்கராயுதமும், கதையும் பெற்று இத்தலத்திற்கு வந்து அம்மையை வணங்கிச் சங்கும், பத்மமும் அவற்றைத் தாங்கும் ஒரு கரங்களும் பெற்றார் என தலபுராணம் கூறுகிறது.

ஏரண்ட முனிவர் திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கி இவ்வூரில் கரையேறினார். ஏரண்ட முனிவர் கோவில் இத்தலத்தில் உள்ளது.

திருஞானசம்பந்தருடன் அப்பரடிகள் தலங்கள் தோறும் சென்று வழிபட்டபோது சிவபெருமான் இவ்வூருக்கு அப்பரடிகளை அழைத்து வந்து அருட்காட்சி கொடுத்த தலம்.

இத்தலத்திலுள்ள பிக்ஷாடன மூர்த்தி பேரழகோடு திகழ்பவர். திருக்குளத்தி லிருந்து கிடைக்கப் பெற்ற மூர்த்தி இவர். வட்டணை நாயகர் என்பது பெயர். மிக உயர்ந்த திருவுருவம். இராசாதிராசனின் 8ஆம் ஆட்சியாண்டில் இத்திருவுருவம் இத்தலத்தில் எழுந்தருளுவிக்கப் பெற்றது.

மகததேச மன்னன் தனஞ்சயன் என்பவன் தான் இறந்த பிறகு தன் எலும்பு எங்கு மலராக மாறுகிறதோ அத்தீர்த்தத்தில் தன் அஸ்தியை கரைக்குமாறு தன் மைந்தனிடம் கூறி மறைந்தான். மைந்தன் பல தலங்களுக்கு சென்று இறுதியில் இத்தலத்தில் மலரானதைக் கண்டு இங்குள்ள தீர்த்தத்தில் கரைத்தான். அம்மன்னனின் சிலைகள் இத்தலத்தில் உள்ளன.

வஞ்சிநாட்டு மன்னனின் பெரும் பழியை இத்தலத்தில் பட்டினத்தாரால் போக்கிய தலம். பட்டினத்தாரை மன்னன் சென்று வரவேற்கும் ஐதீக திருவிழா இத்தலத்தில் நடைபெறுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இக்கோவில் 44 வது தலம். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் திருப்பதிகங்கள் பெற்றது.

கல்வெட்டுக்களில் விக்கிரமசோழன், இரண்டாம் இராசாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் இவர்களின் காலங்களில் செதுக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவர் பெயர் திருவலம்புரி உடையார் என்றும், இறைவியாரின் பெயர் தடங்கண் நாச்சியார் என்றும், இவ்வூரை விக்கிரம சோழன் கல்வெட்டில் இராசராச வளநாட்டு ஆக்கூர் நாட்டுத் தலைச்சங்காட்டுத் திருவலம்புரம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

27. கீழ்பெரும்பள்ளம்

ஆக்கூர்க்கு வடகிழக்கே 5கி.மீ. இக்கோவிலிலுள்ள மூலவர் நாகநாதர்.

28. மாமாகுடி

ஆக்கூர்க்கு வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் 1-71 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர்.

திருச்சிற்றம்பலம்

29. ஆக்கூர்

முடித்தா மரையணிந்த மூர்த்தி போலும் மூவுலகுந் தாமாகி நின்றார் போலும்
கடித்தா மரையேய்ந்த கண்ணார் போலும் கல்லலகு பாணி பயின்றார் போலும்
கொடித்தா மரைக்காடே நாடுந் தொண்டர் குற்றேவல் தாம்மகிழ்ந்த குழவர் தொண்டர்
அடித்தா மரைமலர்மேல் வைத்தார் போலும் ஆக்கூரில் தான் றோன்றி யப்பனாரே
-- திருநாவுக்கரசர்

செம்பொனார்கோவிலுக்கு கிழக்கே 5கி.மீ. ஊரின்பெயர் திருஆக்கூர். கோவிலின் பெயர் தான்தோன்றிமாடம். காவிரித் தென்கரைப்பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில், மூன்று நிலை இராஜகோபுரம் இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தான்தோன்றியப்பர். அம்மன் வாள்நெடுங்கண்ணம்மை. தீர்த்தம் குமுத தீர்த்தம் கோவிலின் பின்புறம் உள்ளது. தலமரம்-சரக்கொன்றை.

சோழ மன்னன் இறைவன் அருளியபடி தினமும் ஆயிரம் அந்தணர்களுக்கு உணவளித்தபோது, இறைவனும் அந்தணர் களில் ஒருவராய் அமர்ந்து உண்டு, மன்ன ருக்கு காட்சியளித்த தலம். இத்தலத்தில் உள்ள ஆயிரத்தில் ஒருவர் என்னும் அழகிய மூர்த்தி மகாமண்டபத்தில் தெற்கு நோக்கிய சன்னிதியில் கையில் தண்டூன்றிய வடிவத்தோடு நின்ற கோலமாய் உள்ளார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் சிறப்புலி நாயனார் இத்தலத்தில் திருவவதாரம் செய்து, இல்லையென்னாது அடியவர் எல்லோருக்கும் திருவமுதளித்துத் தொண்டு செய்த பெருமைக்குரிய தலம்.

இத்தலம் கோச்செங்கட் சோழ நாயனார் கட்டிய மாடக் கோவில்களுள் ஒன்றாய்த் திகழும் சிறப்புத் தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிதென் கரைத் தலங்களில் இத்தலம் 46 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகம் பெற்றது. பதினொராம் திருமுறையில் கபில தேவநாயனார் இத்தலத்தைப் போற்றி பாடியுள்ளார்.

கல்வெட்டுக்கள் சோழ, பல்லவ, விசயநகர மன்னர்களின் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன. வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறுகிறது.

30. மடப்புரம்

ஆக்கூர்க்கு தென்மேற்கே 2கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதேசுவரர்.

31. காளஸ்தினாபுரம்

ஆக்கூர்க்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்திநாதர்.

32. முடிகொண்ட நல்லூர்

செம்பொனார்கோவிலுக்கு வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் 10செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் திருக்கோழம்பீசுவரர்.

33. செம்பொனார்கோவில்

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே
-- திருஞானசம்பந்தர்

மயிலாடுதுறையிலிருந்து கிழக்கே 10கி.மீ. திருச்செம்பொன்பள்ளி. காவிரி யாற்றின் தென் கரையில் இக்கோவில் 1-70 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக

அருள்மிகு சுவர்ணபுரீசுவரர். அம்மன் மருவார் குழலி. தீர்த்தம் சூரிய புஷ்கரிணி கோவிலுக்கு வெளியேயுள்ள திருக்குளம். தலமரம்-வன்னி.

செம்பொன்னால் வேயப்பட்டிருந்தமையால் செம்பொனார் கோவில் என்றும், சோழமன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டு சிறப்புற்று விளங்கியமையால் செம்பியன்பள்ளி என்று பெயர் மருவி செம்பொன்பள்ளி எனவும் வழங்கப்படுகிறது.

தேவேந்திரன் இத்தல இறைவனை வழிபட்டு விருத்திராசுரனை வென்றமையால் இந்திரபுரி. முருகன் தாரகாசுரனை வதைக்க பூஜித்து வழிப்பட்டமையால் ஸ்கந்தபுரி. அகத்தியர், பிரமன், இரதி, நாக கன்னிகள், வசிட்டர், அட்டதிக்குபாலர்கள், காவிரி முனிவர்கள் வழிபட்டு அருள் பெற்ற தலம்.

வீரபத்திரர் தக்கன் தலையை துண்டிக்க இத்தலத்தில் அவதாரம் செய்த தலம்.

இத்தலத்திலுள்ள காவிரித்துறையில் எலும்புகளைப் போட்டால் அவை பூமரங்களாகிப் பூக்கும். சாதுக்கள் அப்பூக்களைக்கொண்டு இறைவனை வழிபடுவர்.

சித்திரை மாதம் 7ஆம் நாள் முதல் 12 நாட்கள்வரை காலையில் சூரியக்கதிர்கள் இறைவனின் மேல்படுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இத்தலம் 42 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் பெற்றது. தலபுராணமும், மான்மியமும் உள்ளது. மாயூரப் புராணத்திலும், இத்தல மகிமை கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்கள் 6 உள்ளன. மூன்றாம் குலோத்துங்கன், இராஜகேசரி வர்மன், இராஜாதி ராஜன் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன. நிலதானம் வழங்கியதை குறிப்பிடப்படுகிறது.

நான்கு கால பூஜை. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

34. கருவாலக்கரை

செம்பொனார்கோவிலுக்கு மேற்கே 2கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் இராஜராஜேஸ்வரர். 300 வருட முற்பட்ட கோவில்.

35. கஞ்சனகரம்

மயிலாடுதுறையிலிருந்து கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கார்த்திகை சுந்தரேசுவரர்.

36. கருங்குயில் நாதன்பேட்டை

மயிலாடுதுறையிலிருந்து கிழக்கே 3கி.மீ. கருணாபுரம். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சத்திபுரீசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் ஆனந்தவல்லியம்மன் தனிச் சன்னிதியில் தெற்கு நோக்கியும் உள்ளனர். தீர்த்தம் கருணா தீர்த்தம். இந்திரன் குயில் வடிவில் இத்தல இறைவனை வழிபட்டதால் கருங்குயில்நாதன்பேட்டை எனப்பெயர். சப்தமாதர்களில் ஒருவரான வராகி பூசித்த தலம். மாயூரப்புராணத்தில் இரண்டு பாடல்களில் இத்தல இறைவனைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு கால பூஜை. இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதினத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

37. உளுத்தங்குப்பை

மயிலாடுதுறையிலிருந்து வடகிழக்கே 6கி.மீ. இக்கோவில் 1-30 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். மற்றொரு கோவிலான காளத்தீஸ்வரர் கோவிலும் உள்ளது.

திருச்சிற்றம்பலம்

38. வள்ளலார்கோவில்

மயிலாடுதுறையிலிருந்து வடகிழக்கே 4கி.மீ. காவிரிவடகரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜ கோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீவதான்யேசு வரர். வழிகாட்டும்வள்ளல் என அழைக்கப் படுவர். அம்மன் ஞானாம்பிகை. இத்தலத் தில் தக்ஷிணாமூர்த்தி யோகாசனதத்தில் ஞான முத்திரையுடன். நந்திபெருமான் மீது ஆரோகணித்து எழுந்தருளியிருப்பது சிறப் பானதொன்றாகும். தீர்த்தம்-ஞான மிர்தசரஸ். பிரம்மனால் உண்டாக்கப்பட்டது. கண்ணுவ மகரிஷி வழிபட்டு பேறுபெற்ற தலம். திருமால் இத்தலத்தை வழிபட்டுப் பிருகு முனிவர் பத்தினியைக் கொன்ற பாவத்தைப் போக்கிக்கொண்ட தலம். அகஸ்தியர் வழிபட்டுச் சிவஞானப்பேறு பெற்ற தலம். இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்துக்கு சொந்தமான கோவிலாகும்.

39. திருஇந்தளூர்

மயிலாடுதுறையிலிருந்து வடமேற்கே 1கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தான்தோன்றீசு வரர். 600 வருட முற்பட்ட கோவில்.

40. நீடூர்

ஊர்வதோர்விடை ஒன்றுடை யானை ஒண்ணு தல்தனிக் கண்ணுத லானைக்
கார தார்கறை மாமிடற் றானைக் கருத லார்புரம் மூன்றெரித் தானை
நீரில் வாளை வரால்குதி கொள்ளும் நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப்
பாரு ளார்பர வித்தொழ நின்ற பரம னைப்பணி யாவிட லாமே

-- சுந்தரர்

மயிலாடுதுறையிலிருந்து வடக்கே 5கி.மீ திருநீடூர், வகுளாரணியம், மகிழாரணியம். இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமநாதர். கானநிர்த்த சங்கரர், பாடியாடிய தேவர் எனவும் வழங்குவர். அம்மன் வேயுறுதோளியம்மை. வேதநாயகி, அதிகாந்தியம்மை எனவும் வழங்குவர். தலமரம் மகிழ மரம். தீர்த்தங்கள் ஒன்பது அவை ஆனந்த, செங்கழுநீரோடை, சூரிய, சந்திர, இந்திர, பத்திரகாளி, முனிவரர், பருதிகுண்டம், வருண தீர்த்தங்கள்.

ஊழிக்காலத்திலும் உலவாது நீடித்திருக்கும் தலமாதலின் இதற்கு நீடூர் என்னும் பெயர் பெற்றது. இந்திரன், சூரியன், சந்திரன், நண்டு, காளி முதலியோர் வழிப்பட்டுப் பேறு பெற்ற தலம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய முனையடுவார் நாயனார் இத்தலத்தில் அவதரித்தவர்.

ஆவணிமாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய பூஜை நடைபெறுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 21 வது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். தலபுராணம் இறையூர் வடமலைநாரணக்குடை மன்னர் 14 சருக்கம், 400 திருவிருத்தங்கள் கொண்ட திருநீடூர்த் தலபுராணம் இயற்றியுள்ளார்.

சோழமன்னர்கள் கால கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

41. ஆறுமொழித்தேவன்

மயிலாடுதுறையிலிருந்து வடமேற்கே 5கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். 600 வருட முற்பட்ட கோவில்.

திருச்சிற்றம்பலம்

42. பாண்டூர்

பொன்னூரிலிருந்து வடக்கே ஒரு கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தியநாதர். 700 வருட முற்பட்ட கோவில்.

43. திருமங்கலம்

திருமணஞ்சேரிக்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 56 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பூலோகநாதர். 600 வருட முற்பட்ட கோவில்.

44. முருகமங்கலம்

திருமணஞ்சேரிக்கு வடமேற்கே 2கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

45. மேலைத்திருமணஞ்சேரி

மத்தயானை ஏறிமன்னர் சூழ வருவீர்காள்
செந்தபோதில் ஆரும் இல்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்தஉள்ளம் மாற்றவேண்டா வம்மின் மனத்திரே
அத்தர்கோவில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே

-- சுந்தரர்

குத்தாலத்திலிருந்து வடக்கே 6கி.மீ திருஎதிர்கொள்பாடி. காவிரி வடகரைப் பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஐராவதேசுரர் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் மலர்க்குழல்மாதம்மை.

பரதமுனிவர் மகிழ்ச்சி பொங்க எதிர் கொண்டு அழைத்துத் திருமணம் செய்து கொடுத்தார். இவ்வாறு எதிர்க்கொண்டு அழைத்த இடமே எதிர்கொள்பாடி என்றும், வேள்விக்குடியில் திருமணம் செய்து கொண்ட மன்னன் ஒருவன் மனைவியுடன் தன் நகர் செல்லும்போது சிவபெருமான் அவனுடைய அம்மானைப்போல இத்தலத் தில் தங்கியிருந்து எதிர்கொண்டு அவனை அழைத்துப் போனதாலே எதிர்கொள்பாடி என்றும் வழங்கப்படுகிறது.

ஐராவதம் பூசித்துப்பேறு பெற்ற தலம். திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 24 வது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது.

46. கீழைத் திருமணஞ்சேரி

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார்வண்ணம் வாழ்த்துமே

-- திருநாவுக்கரசர்

குத்தாலத்திலிருந்து வடக்கே 7கி.மீ. காவிரி வடகரைப் பகுதியில் இக்கோவில் 3-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோ புரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு ஸ்ரீ உத்வாகநாதர். அம்மன் யாழின்மென்மொழியம்மை. தீர்த்தம் சமுத்திர தீர்த்தம்.

உள்பிராகாரங்களில் ஸ்ரீகல்யாணசுந்த ரர் திருமணக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.

வேள்விக் குண்டத்தில் மகவாகத் தோன்றிய உமாதேவியாரைத் திருமணம் செய்து கொண்ட தலமாதலின் இப்பெயர் வழங்குகின்றது. அம்பிகை இத்தலத்தில் மணக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.

மன்மதன் பூசித்து பேறு பெற்ற தலம். குலச்சிறை நாயனார் வழிபட்ட தலம்.

வணிகர் குல இருவர்கள் தமக்குப் பிறக்கும் குழந்தைகளை ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்தும் சம்பந்ஞ்செய்து கொள்வது என்று உறுதிமொழி கூறியிருந் தார்கள். பின்பு ஒருத்திக்கு ஆமையே குழந்தையாகப் பிறந்தது. மற்றவர் தன் பெண்ணைக் கொடுக்க விரும்பாது மறுத்தார். அந்த ஆமை இத்தல சிவபெருமனைப் பூசித்து முன்பு குறித்த பெண்ணை இத்தலத்தில் ஆமையுரு நீங்கி மனித உருவம் பெற்றுத் திருமணம் செய்து கொண்ட தலம்.


தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 25 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகம் பெற்றது.

இக்கோவில் 28 கல்வெட்டுக்கள் உள்ளன. செம்பியன் மாதேவியரால் இவ்வாலயம் திருப்பணி செய்யப்பட்டது குறித்து குறிப்பிடப்படுகிறது.

47. குத்தாலம்

பொருத்திய குரம்பைதன்னைப் பொருளெனக் கருதவேண்டா
இருத்தியெப் பொழுதும் நெஞ்சு ளிறைவனை யேத்துமின்கள்
ஒருத்தியைப் பாகம்வைத்தங் கொருத்தியைச் சடையுள்வைத்த
துருத்தியஞ் சுடரினானைத் தொண்டனேன் கண்டவாறே

-- திருநாவுக்கரசர்



மயிலாடுதுறையிலிருந்து தென்மேற்கே 10கி.மீ. திருத்துருத்தி. உத்தாலவனம். காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு உக்தவேதேசுவரர். அம்மன் அரும்பன்ன வனமுலையாள். தலவிநாயகர் துணைவந்த விநாயகர். தலமரம் உத்தாலமரம் தீர்த்தம் பதும, சுந்தர, காவிரி தீர்த்தங்கள். குத்தாலம் காவிரியாற்றிடைக் குறையில் அமைந்து விளங்கியதால் துருத்தி எனப்பெயர்.

உத்தால மரத்தைத் தலமாகக் கொண்டுள்ள காரணத்தால் உத்தாலவனம் எனப்பெற்று அப்பெயர் மருவி குத்தாலம் என வழங்கப்படுகிறது.

உமையம்மையார் சிவபெருமானை வழிபட்டுத் திருமணம் செய்து கொண்ட தலம். அக்கினி தன்பழி தீர வழிபட்ட தலம். விக்கிரமசோழன் மனைவி கோமளைக்கு குட்டநோய் தீர்த்த தலம். வருணனின் சலோதரம் நீங்கிய தலம். காளி, சூரியன், காமன், காசிபர் முதலிய ஏழு முனிவர்கள் வழிபட்ட தலம். சிவபக்தனின் காசநோயைப் போக்கியதுமாகிய பல பெருமைகளை உடையது இத்தலம்.

கதிரவன் வழிபட்டு அருள்பெற்ற கார்த்திகை ஞாயிறு அன்று வழிபடுவோர் இன்றும் பல்வகை நன்மைகளையும் பெற்று வருகின்ற தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இத்தலம் 37 வது. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம். மாணிக்கவாசகர், ஐயடிகள் காடவர்கோன், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் ஆகியோர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர்.

தலபுராணம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 40 படலம் 1627 திருவிருத்தம் கொண்ட திருத்துருத்தி புராணம் இயற்றியுள்ளார்.

சோழர் கால கல்வெட்டுக்கள் உள்ளன. தினமும் 5 கால பூஜை நடைபெறுகிறது. கார்த்திகை ஞாயிறு அன்று இறைவன் காவிரியில் தீர்த்தம் கொடுத் தருள்வார்.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதினத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

48. திருவேள்விக்குடி

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை
சேர்ப்பது காட்டகத் தூரினு மாகச்சிந் திக்கினல்லால்
காப்பது வேள்விக் குடிதண் துருத்திஎங் கோன் அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே.

-- சுந்தரர்.

குத்தாலத்திலிருந்து வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில், 3 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன், கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மணவாளேஸ்வரர். அம்மன் பரிமளசுகந்தநாயகி. தீர்த்தம் மங்கள தீர்த்தம்.

சிவபெருமானின் திருமண வேள்வி நடைபெற்ற தலமாதலின் வேள்விக்குடி எனப்படுகிறது.

ஓர் அரசகுமாரனுக்குத் திருமணம் புரிய ஒரு பெண்ணை நிச்சயம் செய்து இருந்தனராம். திருமணம் முடியும் முன்பு பெண்ணின் பெற்றோர் இறந்துவிட அவள் உறவினர் அரசனுக்குப் பெண்தர மறுத்து விட்டனர். மனம் வருந்திய அரசகுமாரன் சிவபெருமானை வேண்டத் தம் பூதங்கள் மூலம் அப்பெண்ணைக் கொணர்வித்து அவனுக்குத் திருமணம் செய்து வைத்ததாகத் தலபுராணம் கூறுகிறது.

நீண்ட நாள் திருமணம் ஆகாமல் தடை நேரிட்டவர்கள் இத்தலம் வந்து இப்பெருமானை வழிபட்டால் விரைவில் திருமணம் நடைபெறும்.

இத்தப் பெருமான் மணவாளேஸ்வராக திருமணக் கோலத் துடன் காட்சியளிக்கிறார்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 23 வது. திருஞானசம்பந்தர், சுந்தரர் பதிகம் பெற்றது.

திருத்துருத்தியாகிய குத்தாலத்தோடு சேர்த்துப் பாடப்பட்ட திருத்தலம்.

உருத்திரர் பதினொருவர்

அரன், மாதேவன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன் என்போர்.

49. பொன்னூர்

பாற லைத்த படுவெண் தலையினன்
நீற லைத்தசெம் மேனியன் நேரிழை
கூற லைத்தமெய் கோளர வாட்டிய
ஆற லைத்த சடைஅன்னி யூரரே

-- திருநாவுக்கரசர்

மயிலாடுதுறையிலிருந்து வடமேற்கே 7கி.மீ. திருஅன்னியூர், அன்னூர். இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில், பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆபத்சகாயேசுரர். அம்மன் பெரியநாயகி. தலவிருட்சம் எலுமிச்சை. தீர்த்தம் வருண, அக்கினி தீர்த்தங்கள்.

வருணன் பூசித்து பேறுபெற்ற தலம். பங்குனிமாதம் 24ம் தேதி முதல் 28ஆம் தேதிவரை சூரிய பூஜை நடைபெறுகிறது. தேவார பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்லம் 22ஆவது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

50. சோழம்பேட்டை

மயிலாடுதுறைக்கு மேற்கே 5கி.மீ. சோலன்பேட்டை. காவிரிவடகரையில் இக் கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக தான்தோன்றீசுவரர். இவ்வூருக்கு மேற்கே 1 கி.மீ. தொலைவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் சபாபதிஈஸ்வரர் கோவிலும் உள்ளது.

51. பண்டாரவாடை

மயிலாடுதுறைக்கு மேற்கே 3கி.மீ. காவிரிவடகரையில் இக்கோவில் 92செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியநாதர். 400 வருட முற்பட்ட கோவில்.

52. மன்னம்பந்தல்

மயிலாடுதுறையிலிருந்து மேற்கே 2கி.மீ. தருமபுரம். தருமபுரஆதீன மடாலயம் இங்கு உள்ளது. இத்தலத்தில் இரண்டு கோவில்களான ஸ்ரீதருமபுரீஸ்வரர் கோவில், ஸ்ரீஞானபுரீசுவரர் கோவில்.

கீழக்கோவில் எனப்படும் ஸ்ரீ தருமபுரீஸ்வரர் கிழக்கு நோக்கியதும். அம்மன் அபயாம்பாள் தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். இரு பிராகாரங் களுடையது.

சப்தமாதாக்களுள் இந்திராணி பூசித்த தலம். இயமன் திருக்கடவூரில் அமுதகடேசர் மீது அறியாமை மிகுதியால் பாசம் வீசியதால் விளைந்த பாவத்தை இத்தலத்தில் தரும புரீசரைத் தாபித்து வழிப்பட்டுப் போக்கிக் கொண்ட தலம்.

இத்தலம் அகத்தியாச்சிரமாக இருந்தது. தற்போது தருமபுர ஆதீனத்தின் மேற் பார்வையில் உள்ளது.

இயமராஜா என்ற பெயருடன் இயமன் இத்தலத்தில் உள்ளார். இயமராஜ வழிபாடு இங்கு மிகச் சிறந்தது.

இவ்வாலயத்தின் மேல்பால் உள்ள கோவில் இரண்டு பிராகாரங்களுடன், கிழக்கு நோக்கிய மூலவர் ஸ்ரீ ஞானபுரீசுவரர், அம்மன் ஞானாம்பிகை. இவ்வாலயம் ஆதீன ஆதிகுருமூர்த்திகள் சிவசமாதி எய்திய இடமாகும். இக்கோவில் நான்காவது குரு மூர்த்திகளாகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் திருக்கோவிலாகக் கட்டப்பெற்றது. அது முதல் சிவகாம விதிப்படி நித்ய நைமித்திக பூஜைகள் ஆதி சைவப் பெருமக்களைக் கொண்டு இயற்றுவிக்கப் பெற்று வருகின்றன.


ஆதீன ஸ்தாபகர் குரு பூஜை விழாவை ஒட்டி முன் பத்து நாட்களும் மகோற்சவம் நடைபெற்று வருகிறது.

திருச்சிற்றம்பலம்

53. ஆறுபாதி

ஒளிரிளம்பிறை சென்னிமேல் உடைர்கோவண ஆடையர்
குளிரிளம்மழை தவழ் பொழிற் கோல நீர்மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை நங்கைகங்கையை நண்ணினார்
மிளிரிளம்பொறி அரவினார் மேயதுவிள நகரதே

-- திருஞானசம்பந்தர்



மயிலாடுதுறையிலிருந்து கிழக்கே 7கி.மீ. திருவிளநகர், சுபிக்ஷபுரம். காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-30 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் இறைவன் சுயம்புலிங்கமாக அருள்மிகு துறைகாட்டும் வள்ளலார். அம்மன் வேயுறுதோளியம்மை. தீர்த்தம் காவிரி, மெய்ஞ்ஞான தீர்த்தம் கோவிலின் மேல்பால் உள்ளது. தலமரம் விளாமரம்.

விளா மரங்கள் அடர்ந்த இடமாக இருந்ததால் இத்தலம் விளநகராயிற்று. கபித்தன் என்னும் அசுரன் பிரமகத்திதோஷம் நீங்கி வழிபாடு செய்தான். ஆகையால் அவன் பெயரால் இத்தலம் விளாநகர் எனப்பெற்றதென்று தலமான்மியம் கூறுகிறது.

அருள்வித்தன் என்னும் அந்தணன் சுவாமிக்காகப் புஷ்பக் கூடையை நாள்தோறும் எடுத்துக் கொண்டு ஆற்றில் கடந்து வரும்போது ஒரு நாள் வெள்ளம் வந்து அடித்துச் செல்ல, அந்தணன் கூடைமைவிடாது சிவபிரானைப் பிரார்த்திக்க சிவபெருமான் அந்தணுக்கு துறை காட்டிக் கரையேறவிட்டார். அதனால் இறைவனுக்கு துறைகாட்டும் வள்ளல் என்ற பெயரைத் தாங்கினார்.

திருஞானசம்பந்தர் கடைமுடி முதலிய தலங்களுக்குச் சென்று மயிலாடுதுறை வரும்வழியில் காவிரியாறு நீர் கரைபுரண்டு செல்ல, வழிதெரியாமல் சம்பந்தர் இங்கு துறைகாட்டுவோர் யாரேனும் உளரோ என்று கேட்க இறைவன் வேடனாக தோன்றி துறைகாட்டி அக்கரை சேர்பித்து மறைந்தார்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிதென் கரைத் தலங்களில் இத்தலம் 40 வது திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது.

இத்தலத்தில் மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை திருவிளநகர் என்றும் இறைவன் துறைகாட்டுந் தம்பிரானார், துறைகாட்டுவான் என்று குறிக்கப் பட்டுள்ளது. உத்தமசோழன் காலத்தை சேர்ந்த பழமையான கல்வெட்டு உள்ளன.


இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

திருச்சிற்றம்பலம்

54. பரசலூர்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்தன் எனத்தகும் வீரட்டத் தானே.

-- திருஞானசம்பந்தர்



செம்பொன்னார்கோவிலுக்கு தென் மேற்கே 2கி.மீ. காவிரியாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில், ஒரு பிராகாரத்துடன் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீரட்டேசுரர். மேற்கு நோக்கியும், அம்மன் இளங்கொடி யம்மை தனிச்சன்னிதியில் தெற்கு நோக்கியும் உள்ளனர். தீர்த்தம் சந்திர புஷ்கரிணி. தலமரம் பலாமரம்.

பிரமன் புதல்வனான தக்கன் தேவர்கள் சூழ மண்ணுலகம் வந்து இத்தலமே சிறந்ததென்று கருதி யாகம் செய்த இடமாதலால் இத்தலம் தட்சபுரம் எனப் பெயர் பெற்றது.

தாரகன் என்னும் அசுரனால் தேவர்களுக்கு ஏற்பட்ட பயத்தை நீக்கிய தாலும், சவுனகர் சாபத்தால் வேடுவனாய்த் திரிந்த புற்கலன் இத்தலத்தின் பாங்கர் வந்த ஏழுமுனிவர்களது குடை, திருவடி முதலியவற்றைப் பறித்துக்கொண்டமை யாலும், இங்கு வந்து வழிபடுவோர்களது பாவங்களை இறைவன் பறித்தலாலும் பறியலூர் எனப் பெயர் பெற்றது.

இறைவனின் எட்டு வீரட்டானத் தலங்களுள் ஒன்றான தக்கன் வேள்வி தகர்த்ததும், தக்கனின் சிரஸ்சை பறித்த தலம்.

எட்டுகரம் கொண்ட வீரபத்திரர் தெற்கு நோக்கி தனிச்சன்னிதியில் காட்சியளிக் கிறார். காலடியில் தக்கன் காட்சி தருகிறார். யாகஸம்ஹார மூர்த்திக்கு வருடத்தில் தமிழ்வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, ஐப்பசிப் பிறப்பு, புரட்டாசி சதுர்த்தி, தைப்பிறப்பு, வைகாசித் திருவோணம் என ஆறுமுறை அபிஷேகம் நடைபெறுகிறது.

செங்கழுநீர்ப்பிள்ளையார் சன்னிதியில் எதிரே உள்ளார். சுப்பிரமணியர் திருவுருவம் மயிலின் மீது ஒரு காலை வைத்து நின்று செல்லும் கோலமாக உள்ளது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இக்கோவில் 41 வது தலமாகும். திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் இத்தலமுருகனை போற்றி பாடியுள்ளார். திருப்புகழ் வைப்புத் தலங்களுள் ஒன்று. தலபுராணம் திருவாவடுதுறை ஆதீன வேலப்பதேசிக சுவாமிகள் 11 சருக்கம் 655 திருவிருத்தங்கள் கொண்டது.

கல்வெட்டுக்கள் மூன்று உள்ளன. ஜடவர்மன் சுந்தரபாண்டியன், கோனே ரின்மைகொண்டான், விஜயநகர மன்னர் களின் கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை இராஜநாராயண சதுர்வேதி மங்கலமான பறியலூர் என்றும் இறைவர் வீரட்டானம் உடையார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

திருச்சிற்றம்பலம்

55. திருக்கடவூர்

மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே.

-- திருநாவுக்கரசர்



மயிலாடுதுறைக்கு கிழக்கே 22கி.மீ. திருக்கடையூர், திருக்கடவூர் வீரட்டம், பிஞ்சிலவனம், கடவூர், வில்வவனம்.

காவிரியாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 11-17 ஏக்கர் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கிய 7 நிலை இராஜகோபுரமும், கிழக்கு நோக்கிய 5 நிலை கோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அமிர்தகடேசுவரர் மேற்கு நோக்கியும். அம்மன் அபிராமியம்மன் தனிச் சன்னிதியில் கிழக்கு நோக்கியும் உள்ளனர். விநாயகர்-கள்ளக்கணபதி, தலமரம் வில்வம். தீர்த்தம் அமிர்த புஷ்கரிணி. மார்க்கண்டேய தீர்த்தம், கால தீர்த்தம்.

அமுதமே இலிங்கமாக ஆயினமையால் இறைவர்க்கு அமிர்தகடேசுவரர் என்றுபெயர். அமுதம் கடைந்த அசுரர்களும், தேவர்களும் அமுதத்தைக் குடத்தில் இட்டு இத்தலத்தில் வைத்து விட்டு நீராடச் சென்றனர். திரும்பி வந்து எடுக்க முயன்றபோது அக்குடம் பாதாளம் வரை ஊடுருவிய சிவலிங்கத் திருமேனியாக இருக்கக்கண்டார்கள். இதனால் இத்தலம் கடவூர் என வழங்கலாயிற்று.

பிரமன் ஞானோபதேசம் பெற விரும்பி இறைவனை வழிபட, இறைவன் வில்வத்தை ஒன்றினைக் கையிற் கொடுத்து, இட்ட ஒரு முகூர்த்தத்துக்குள் எந்த இடத்தில் முளைக்கிறதோ, அங்கு எம்மை வழிபடுவாயாக என்று ஆணையிட்டதும், பிரமன் பல இடங்களில் சென்று கடைசியில் இத்தலத்தலத்தில் அவ்வாறே நிகழ்ந்தது. ஞானோபதேசம் பெற்றார் அதனால் இத்தலம் வில்வவனமாயிற்று.

மார்க்கண்டேயர் கொண்டுவந்த திருமஞ்சனக் குடத்துக்குள் கங்கையோடு வந்த பிஞ்சிலம் (ஜாதி முல்லை) இத்தலத்திற்கு தலவிருட்சமாயிற்று ஆதலால் இத்தலம் பிஞ்சிலவனம் எனப்பெயர் பெற்றது.

எட்டு வீரட்டத்தலங்களில் இத் தலத்தில் இறைவன் மார்க்கண்டேயருக்காக இயமனை உதைத்த தலம். காலசங்கார மூர்த்தி தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். சங்காரமூர்த்திக்கு ஆண்டில் 11 முறை திருமஞ்சனம் நடைபெறுகிறது. ஆண்டில் ஒருமுறை திருவீதிவலம் வருவார்.

மார்க்கண்டேயர் அமுதகடேசுவரை வழிபட்டு என்றும் 16 ஆண்டாக இருக்கும் வரம் பெற்றார். குங்குலியக்கலையர் குங்கிலிய தூபமிட்டு இழந்தபொருளையும், முடிந்த பேரின்பத்தையும் பெற்ற தலம். அபிராமிபட்டர் அபிராமியின் அருளுக்கு இலக்காகி அமாவாசையிலும் சந்திரோதயங்

காட்டிய தலம். காரிநாயனார் இவ்வூரில் அவதரித்துச் செந்தமிழ்ச் செல்வராய்க் காரிக்கோவைபாடி மூவேந்தரிடமும் பொருள் பெற்றுச் சிவாலயங்கள் கட்டுவித்த 63 நாயன்மார்களில் ஒருவராவர்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரித் தென்கரைத் தலங்களில் இத்தலம் 47 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் , சுந்தரர் திருப்பதிகங்கள் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற தலம். அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி திருக்கடவூர் தலபுராணம் உள்ளது.

கல்வெட்டுக்கள் 51 உள்ளன. இவ்வூரை இராசநாராயண வளநாட்டு அம்பர் நாட்டுத் திருக்கடவூர் என்றும், இறைவர் திருவீரட்டமுடைய பரமசுவாமி, காலகாலதேவர், திருவீரட்ட நாட்டுப் படை மேவிய திருக்கடவூர் மகாதேவர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

சித்திரை மாதம் 18நாள் பிரமோற்சவமும், கார்த்திகை சோமவாரம் 1008 சங்காபிஷேகம் நடைபெறுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

56. பிள்ளைப்பெருமாள் நல்லூர்

குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாங்கட வூரின்மயான த்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமா னடிகளே

-- திருநாவுக்கரசர்

திருக்கடவூரிலிருந்து கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது. திருமெய்ஞ் ஞானம் என்று அழைக்கப்படுகிறது. திருக்கடவூரிலிருந்து பிள்ளைப்பெருமாள் நல்லூர்க்கு செல்லும் வழியில் இடையில் உள்ளது இத்தலம். காவிரித் தென்கரைப் பகுதியில் இக்கோவில் சுற்று பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பிரமபுரீசுவரர். அம்மன் நிமலகுசாம்பிகை. தீர்த்தம்-பிரம தீர்த்தம்.

சிவபெருமான் நான்முகனை நீறாக்கி மறுபடியும் அவரை உயிர்ப்பித்து அவருக்குப் படைப்புத் தொழிலைக் கொடுத் தருளிய தலம்.

இத்தலத்தில் உள்ள கிணற்றில் பங்குனித் திங்கள் அசுவினி நாளில் கங்கையாக மாறும் அந்நாளில் நீராடுவது சிறப்பாகும். மற்ற நாட்களில் இக்கிணற்று நீரை கடவூர் வீரட்டேசுவருக்கு அபிஷேக நீராட்டுவதற்கு மட்டும் பயன்படுத்து கின்றனர்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென் கரைப்பகுதியில் இக்கோவில் 48 வது தலம். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் திருப்பதிகங்கள் பெற்றது.

57. மாணிக்கபங்கு

தரங்கம்பாடிக்கு வடக்கே 4கி.மீ. ஆனைக்கோவில் இக்கோவில் 1-30 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தசுந்தரர்.

58. கீழ்மாத்தூர்

செம்பொனார்கோவிலுக்கு தெற்கே 5கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாத சுவாமி.

59. நரசிங்கநத்தம்

செம்பொனார்கோவிலுக்கு தெற்கே 7கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புநாதசுவாமி.

60. மூதூர்

செம்பொனார்கோவிலுக்கு தெற்கே 8கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்

பரப்பளவில் மூலவர் அமிர்தலிங்கேசுவரர்.

61. இளையாலூர்

செம்பொனார்கோவிலுக்கு தென் மேற்கே 3கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மதங்கீசுவரர்.

62. சேறுடையூர்

மயிலாடுதுறையிலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அக்னிபுரீசுவரர். 600 வருட முற்பட்ட கோவில். இவ்வூரின் வடக்கே ஒரு கி.மீ. தொலைவில் உள்ள முலப்பாக்கத்தில் 8 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் விஸ்வநாதர் கோவிலும் உள்ளது.

63. கோதங்குடி

மயிலாடுதுறையிலிருந்து தென்கிழக்கே 6கி.மீ. நீளவேலி இக்கோவிலின் மூலவர் சோமநாதர். 500 வருட முற்பட்ட கோவில்.

64. நல்லத்துக்குடி

மயிலாடுதுறைக்கு தென்கிழக்கே 2கி.மீ. நல்லக்குடி, குயிலாடுதுறை. இக்கோவிலின் மூலவர் ஆலந்துறையப்பர். அம்மன் குயிலாடு நாயகி. தலமரம்-வில்வம். தீர்த்தம்-சூரிய புஷ்கரிணி.

சூரியன் பூசித்த தலம். சூரிய புஷ்கரிணியில் நீராடுவோர் தொழுநோய் முதலிய கொடிய சரும நோய்கள் பலவும் நீங்கப் பெற்று வருகின்றனர்.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்றாகும். திருநாவுக்கரசர் அருளிய அடைவுத் திருத்தாண்டகத்தில் இடம் பெற்றுள்ள தலம்.

65. மறையூர்

மயிலாடுதுறையிலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

66. மூவலூர்

மயிலாடுதுறையிலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீமார்க்கசகாயர், அம்மன் சௌந்தர்யநாயகி. தலமரம் புன்னை. தீர்த்தங்கள் காவிரி, சந்திர புஷ்கரிணி, துர்க்கை புஷ்கரிணி, உபமன்யு கூபம் முதலியன.

புன்னைமரம் தலமரமாதனால் இத்தலம் புங்கவன க்ஷேத்திரம், சப்தமாதர்கள் வழிப்பட்டு பேறுபெற்ற தலம். பிரமன், திருமால், துர்க்கை வழிபட்ட தலம். பரமேஸ்வரன், திருமால், பிரமன் மூவரும் இத்தலத்தில் காட்சியளித்ததால் மூவலூர் என்று பெயர்.

திருநாவுக்கரசர், சுந்தரர், சேக்கிழார் முதலியோர் இத்தல இறைவனைப் போற்றி பாடியுள்ளனர். இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது.

சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்கள் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் 15 உள்ளன. கல்வெட்டுக்களில் இவ்வூரை ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு திருவழுந்தூர் நாட்டு திருமூவலூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. 5 கால பூஜை நடைபெறுகிறது.

67. மாதிரிமங்கலம்

குத்தாலத்திலிருந்து தென்மேற்கே 2கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

68. திருவாலங்காடு

குத்தாலத்திலிருந்து தென்மேற்கே 4கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ வடாரண்யேசுரர் அம்மன் வண்டார்குழலி. தலமரம்-ஆலமரம். தீர்த்தம் புத்திரகாமேசுவர தீர்த்தம்.

பரதன் என்னும் அந்தணன் தன் மனைவி சுபத்திரையோடும் மகப்பேறு வேண்டி திருத்துருத்திப் பெருமானை வழிபட்டபோது பெருமான் அசரீரியாக திருவாலங்காடு அடைந்து அங்குள்ள புத்திர காமேசுவர தீர்த்தத்தில் முழுகி நம்மை வழிபடுக என ஆணையிட்டபோது அந்தணன் அவ்வாறே செய்து மகப்பேறு பெற்ற தலம். இரண்டாம் பிராகாரத்தில் வடகீழ்த்திசையில் புத்திரகாமேசுவரரைத் தரிசிக்கலாம்.

திருத்துருத்திப் புராணத்தில் இத்தலப் பெருமை கூறப்பட்டுள்ளது.

இக்கோவில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் விளங்குகிறது.

69. தேரழுந்தூர்

தொழுமாறுவல் லார்துயர் தீரநினைந்
தொழுமாறுவல் லாரிசை பாடவிம்மி
அழுமாறுவல் லாரழுந் தைமறையோர்
வழிபாடுசெய் மாமட மன்னினையே
-- திருஞானசம்பந்தர்

குத்தாலத்திலிருந்து தெற்கே 4 கி.மீ. தேரழுந்தூர்க்கு கிழக்கேயுள்ள கீழையூர் என்னுமிடத்தில் இக்கோவில் 1-30 ஏக்கர் நிலப்பரப்பளவில், சுற்றுப்பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வேதபுரீசுவரர். அம்மன் சௌந்தராம்பிகை தலமரம்-வில்வம். தீர்த்தம்-வேத தீர்த்தம் இது சன்னிதிக்குத் தெற்கேயுள்ளது.

அகத்திய முனிவர் இறைவரைப் பூசித்திருந்ததை அறியாது ஊர்த்துவரதன் என்னும் அரசன் வானவெளியில் செலுத்திய தேர் செல்லாது அழுந்திய காரணத்தால் இத்தலம் தேர் அழுத்தூர் எனப்படுகிறது.

வேதங்கள், தேவர்கள், திக்குப் பாலகர்கள் முனிவர்கள் பூசித்துப் பேறுகள் பெற்ற தலம்.

கவிச்சக்ரவர்த்தி கம்பர் பிறந்த ஊர். அவர் வாழ்ந்த மாளிகை இருந்த இடம் கம்பர்மேடு என்று வழங்கப்படுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இத்தலம் 38 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது.

இக்கோவிலில் 6 கல்வெட்டுக்கள் உள்ளன. இவையனைத்தும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தை சேர்ந்தது. இவ்வூரை ஜெயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் திருவழுந்தூர் என்றும், இறைவர் திருப்பெயர் திருவழுந்தூர் உடையார், திருமடமுடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

70. அசிக்காடு

மயிலாடுதுறையிலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுவர்ணகிரீசுவரர்.

71. அரிவாளூர்

மயிலாடுதுறையிலிருந்து தெற்கே 6கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுயம்புநாதசுவாமி.

72. கிளியனூர்

திருச்செம்பள்ளியிலிருந்து வடகிழக்கே 3கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அக்னீசுவரர்.

73. கொடவிளாகம்

செம்பொனார்கோவிலிருந்து தெற்கே 9கி.மீ. வீரசோழனாற்றின் வடகரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

74. திருவிளையாட்டம்

செம்பொனார்கோவிலிருந்து தெற்கே 7கி.மீ. வீரசோழன்ாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுயம்புநாதசுவாமி.

75. நெடுவாசல்

திருவிளையாட்டத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. நெடுவாயில். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சௌந்தரேசுவரர், அம்மன் அகிலாண்டேஸ்வரி. இத்தலம் தேவார வைப்புத்தலம் திருஞானசம்பந்தர், அப்பர் தேவாரங்களில் இடம் பெற்றுள்ளது.

76. தில்லையாடி

திருக்கடையூரிலிருந்து தெற்கே 4கி.மீ. இக்கோவில் 1-95 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சத்தரையீஸ்வரர். மேலும் இவ்வூரில் விஸ்வநாதர் கோவிலும், ருத்திரபதீஸ்வரர் கோவிலும் உள்ளன.

77. உத்திரங்குடி

திருவிளையாட்டத்திலிருந்து தென்கிழக்கே 3கி.மீ. சங்கரன்பந்தல். இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சங்கரநாதர்.

78. எரவாஞ்சேரி

திருவிளையாட்டத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. வீரசோழனாற்றின் வடகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர்.

79. பெருஞ்சேரி

மயிலாடுதுறையிலிருந்து தெற்கே 9கி.மீ. வீரசோழனாற்றின் வடகரையில் இக்கோவில் 98 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வாகீஸ்வரர். 2100 வருட முற்பட்ட கோவில். மேலும் இவ்வூரில் கங்காதரர் கோவிலும் உள்ளது.

80. பண்டாரவாடை

வழுவூர்க்கு தெற்கே ஒரு கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 1100 வருட முற்பட்ட கோவில். இவ்வூருக்கு வடகிழக்கில் நெய்க்குப்பையில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோமசுந்த ரேஸ்வரர்.

81. வழுவூர்

மயிலாடுதுறையிலிருந்து தெற்கே 10கி.மீ. திருவழுவூர் வீரட்டானம். வீரசோழ னாற்றின் வடபகுதியில் இக்கோவில் 2-80 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 380 அடியும், வடதெற்காக 342 அடியும் கொண்டு கிழக்கு நோக்கிய 150 அடி உயரமும், 5 நிலை கொண்ட இராஜ கோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீரட்டேசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் இளங்கிளைநாயகி கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலமரம் தேவதாரு, வன்னிமரம். தீர்த்தம் பாதாளகங்கை சுவாமி சன்னிதிக்கு எதிரேயுள்ளது.

பிரளய காலத்தில் உலகமெல்லாம் அழிந்தும், இவ்வூர் அழியாமல் வழுவின காரணத்தால் வழுவூர் என்று பெயர்.

சிவபெருமானின் எட்டு வீரட்டத் தலங்களில் யானை வடிவுடைய கயாசுரன்

என்னும் அசுரனை அழித்த தலம். கஜசம்கார நடனம் நவதாண்டவத்தில் ஊர்த்துவ தாண்டவமாகப் போற்றப்படும் நடன சபைகளில் ஞானசபை எனக் கூறப்படும்.

கஜசம்காரமூர்த்திக்குப் பின்னால் யந்திரப் பிரதிஷ்டை உள்ளது.

இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய தனித் பாடல்கள் பெற்றுள்ள தலம். அருணகிரி நாதர் அருளிய திருப்புகழ் பெற்றுள்ள தலம்.

கல்வெட்டுக்கள் 15 உள்ளன. ஆறு கால பூஜை நடைபெறுகிறது. இரவில் யந்திரப்பிரதிஷ்டைக்குப் பூஜை நடை பெறுகிறது. அமாவாசை தோறும் சுவாமி தீர்த்தம் கொடுத்தருள்கிறார். மாசி மகத்தில் பெருவிழாவும் , கஜசம்கார ஐதீக நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

82. கப்பூர்

வழுவூருக்கு தெற்கே 2கி.மீ. வீரசோழனாற்றின் வடகரையில். இக்கோவில் 1-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அக்னீசுவரர்.

83. கூழையூர்

தேரழுந்தூரிலிருந்து தென்கிழக்கே 3கி.மீ. குழையூர். வீரசோழன் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீசுவரர். கூம்புவடிவத் திலுள்ளது. அம்மன் அபிராமியம்மை.

கூழையர்-அகத்தியர் அவர்பெயரால் கூழையூர் என வழங்கப்படுகிறது. அகத்தியர் வில்வலன் வாதாபியரின் சூழ்ச்சியால் புலால் உண்டபாவந்தீரத்தேரழுந்தூர் ஸ்ரீவேதபுரீசு வரை வழிபட வந்தபோது தங்கிப் பூசித்த தலம்.

இத்தலம் திருநாவுக்கரசர் சுவாமிகள் அருளிய திருத்தாண்டகப் பதிகத்தில் இடம் பெற்றுள்ளதால் இத்தலம் வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது.

இக்கோவிலின் அருகில் பெருமாள் கோவிலும் உள்ளது.

84. பாளையகூடலூர்


குத்தாலத்திலிருந்து தெற்கே 6கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேசுவரர்.

85. திருவாவடுதுறை

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழு வேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே

-- திருஞானசம்பந்தர்

மயிலாடுதுறையிலிருந்து தென்மேற்காக 16 கி.மீ. கோகழி, துறைசை, நந்திக்ஷேத்திரம், அரசவனம், மகாதாண்டவ புரம், கோமுக்தித்தலம், சித்தபுரம், நவகோடி சித்தபுரம் என பலவாறு அழைக்கப்படும் இத்தலம் காவிரியாற்றின் தென்பகுதியில்



இக்கோவில் 9-70 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கோமுக்தீஸ்வரர். அம்மன் ஒப்பிலாமுலையம்மை. தலமரம் அரசமரம். தீர்த்தம் கோமுக்தி தீர்த்தம் கோவிலுக்கு முன்பால் உள்ளது. சபை போதியம்பலம் என்னும் அரசம்பலம்.

பசுவடிவாக இருந்த உமாதேவியார் இத்தல இறைவனைப் வழிப்பட்டுப் பசுருபம் நீங்க, இறைவன் உமையை அணைத்தெழுந்து காட்சியளித்த தலம்.

தேவர்களும், முனிவர்களும் வேண்டியதற்கிணங்க இறைவன் இத்தல மரமான அரச மரத்தின் நிழலில் அமர்ந்து அம்பலத்தில் தாண்டவம் புரிந்த தலம்.

புத்திரபாக்கியமளித்து முசுகுந்த சக்கரவர்த்திக்குத் தியாகேசராகக் காட்சி கொடுத்தும், சுந்தர நடனம் நிகழ்த்தியும் அருள் செய்த தலம்.

முனிவர்களுக்கும், அந்தணர்களுக்கும் சிவஞான உபதேசம் செய்தருளியதும், போகர் முதலிய நவகோடி சித்தர்களுக்கு அட்டமா சித்திகளை அருளிய தலம்.

திருமாளிகைத் தேவருக்கு அம்பிகையின் வேண்டுகோளுக்கு இணங்கி இத்தலஇறைவன் அருள் புரிந்த தலம்.

மூலஇலிங்கத் தலமாகிய திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவாரக் கடவுளர் சிறப்புடைத் தலங்களில் இத்தலம் நந்திகேசுரர் தலமாகத் திகழ்வது.

திருமூலர் இத்தலத்தில் ஆண்டுக்கு ஒரு பாடலாக 3000 ஆண்டுகள் யோகம் இருந்து 3000 பாடல்களைக் கொண்ட திருமந்திர நூலை அருளிச் செய்த தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிதென் கரைத் தலங்களில் இத்தலம் 36 வது. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்றது. திருவிசைப்பா, திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம் முதலிய நூல்கள் இத்தலத்தைப் பற்றி சிறப்பிக்கின்றன. தலபுராணம் ஸ்ரீ சாஸ்திரம் சாமிநாத முனிவர் அருளிய துறைசைப் புராணம் உள்ளது.

சோழர், பாண்டியர் கால கல்வெட்டுக்கள் உள்ளன. 6 கால பூஜை நடைபெறுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கோவிலாகும். கோவிலுக்கு பக்கத்தில் இவ்வாதீனம் அமைந்துள்ளது.

86. கருப்பூர்

வேழம் பத்தைவர் வேண்டிற்று
வேண்டிப்போய்
ஆழம் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே.

-- திருநாவுக்கரசர்

திருவாவடுதுறையிலிருந்து தெற்கே 3கி.மீ. திருக்கோழம்பம். நந்தலாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் கிழக்கு

நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கோகிலேஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி. தீர்த்தம் மதுதீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது.

சந்தன் என்னும் வித்தியாதரன் தேவேந்திரனால் குயிலாகப் போகும்படி சாபம் பெற்று இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டுப் பழைய உருவம் பெற்றான் என்பது இத்தலத்தின் வரலாறு.

அம்பிகை பசுஉருக்கொண்டு சாபநீக்கம் கருதிப் பலதலங்களையும் வழிபட்டுக் கொண்டு ஆவடுதுறைக்கு வரும்போது இத்தலத்தை அடைந்து வழிபட்டு அருள் பெற்றார்.

பசுவின் காற்குளம்பு இடறியபோது வெளிப்பட்ட மூர்த்தி இங்குள்ள பெருமான் ஆதலின் கோகிலேசுரர் என வழங்கப் பெறுகிறார். பசுவின் குளம்பு சிவலிங்கத்தில் ஆவுடையாரில் காணப்படுகிறது. தலம் திருக்கொளம்பியம், திருக்கோழம்பம் என வழங்கப்படுகிறது.

திருமுறைவாணர்கள் திருமுறை ஓதுதற்கு முன்னால் விநாயக வணக்கம் கூறிய பின் முருக வணக்கமாக இத்தலத் திருப்பாடலாகிய 'சமர சூரபன் மாவைத் தடிந்த வேற்' என்ற பாடல் அப்பர் பாடியருளியதாகும்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரித் தென்கரைத் தலங்களில் இத்தலம் 35 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப் பதிகம் பெற்றது.

இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

87. பேராவூர்

திருவாவடுதுறையிலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. வீரசோழனாற்றின் தென்கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆதித்தேசுவரர். அம்மன் ஞானாம்பாள். சிவலிங்கத் திருமேனி பெரியது. சிவாலயம் ஆதிச்தேச்சுரம் எனப்படும்.

இத்தலம் தேவாரவைப்புத் தலங்களில் ஒன்றாகும். அப்பர் சுவாமிகள் இரண்டு திருத்தாண்டகங் களில் இவ்வூரைக் குறித்துள்ளார். இவ்வூரிலுள்ள மாரியம்மன் கோவில் புகழ்மிக்கது.

88. கோமல்

தேரெழுந்தூரிலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவிலின் மூலவர் கிருபாகூ பாரேஸ்வரர்.

89. கொத்தங்குடி

தேரழுந்தூருக்கு தெற்கே 5கி.மீ. குத்தங்குடி வீரசோழன் ஆற்றின் தென்பகுதியில்இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கோடீசுவர சுவாமி. அமமன்பிருகந்நாயகி. உள்பிரா காரங்களில் வரசித்தி விநாகயகர், பாலசுப்பிர மணியர், துர்க்கை, நவக்கிரகங்களும் உள்ளன.

குத்தன்-எருது வாகனன் (சிவன்) எனப்பொருள்படுவதால் இவ்வூர் குத்தன் குடி எனப்பட்டது.

இத்தலம் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகத்தில் இடம் பெற்றுள்ளது. இத்தலம் தேவாரவைப்புத் தலங்களில் ஒன்றாகும்.

மேலும் இவ்வூரில் காளியம்மன், ஐயனார், பிடாரி, மதுரைவீரன் முதலிய கிராம தேவதைக் கோவில்களும், பெருமாள் கோவிலும் உள்ளன.

90. பாலையூர்

கோனேரிராஜபுரத்திலிருந்து வடகிழக் காக 5கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் பால்வண்ணநாதர்.

திருச்சிற்றம்பலம்

91. கோனேரிராஜபுரம்

கல்லா விழன்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லா லரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வா னல்ல நகரானே
-- திருஞானசம்பந்தர்



திருவாவடுதுறையிலிருந்து தெற்கே 6கி.மீ. திருநல்லம். பூமீசுவரம். இக்கோவில் ஊரின் நடுவே மேற்கு நோக்கி மூன்று நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு உமாமகேசுவரர். அம்மன் மங்கள நாயகி. தீர்த்தம் சக்தி தீர்த்தம். தலமரம்-அரசு.

பூமிதேவி பூசித்ததால் இத்தல இறைவர் பூமிநாதர் என்றும் பூமிதேவியால் இக்கோவில் கட்டப்பட்டதால் பூமீசுவரம் என்றும் பெயர்.

புரூரவஸ் என்ற மன்னன் இங்குள்ள பெருமானை வழிபட்டுத் தனக்கு வந்த குட்டநோய் தீர்ந்து, தன் நன்றியறிதலுக்கு அறிகுறியாக இப்பெருமானுடைய விமானத்தைப் பொன் வேய்ந்ததோடு, வைகாசி விசாகத்தன்று உற்சவம் நடத்த ஏற்பாடு செய்தான் என்றும் வரலாறு.

நந்தி இல்லாத இவ்வாலயத்தில் ஜபம் செய்தால் ஒன்றுக்குப் பதின்மடங்கு ஜபபலன் பெறுவர் என்று கூறப்படுகிறது.

இவ்வாலயத்தில் புகழ் பெற்ற மூர்த்தியாகிய நடராஜர் விளங்குகிறார்.

இத்தலத்திலுள்ள திருக்குளத்தில் நீராடி இறைவனை வழிபட்டு அரசை வலம் வருவோர் மக்கட்பேறு முதலிய எல்லா நலங்களும் பெறுவர்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரித் தென்கரையில் இத்தலம் 34 வது. திருஞானசம்பந்தர், அப்பர் அருளிய திருப்பதிகங்கள் பெற்றது.

செம்பியன்மாதேவி, கண்டராதித்தர் சிவலிங்கத்தை வழிபடும் புடைப்புச் சிற்பங்கள் கோவிலில் உள்ளன.

இக்கோவில் மதுராந்தக தேவனான உத்தமசோழன் தாயும், கண்டராதித்த சோழன் மனைவியுமான செம்பியன்மாதேவி கருங்கல் திருப்பணியாகக் கட்டினார் என்பது இங்குள்ள தெற்குப் பிராகாரத்திலுள்ள கல்வெட்டுக்களில் அறியலாம்.

நான்கு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி விசாகத்தன்று திருவிழா நடை பெறுகிறது.

92. வைகல்

துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே
-- திருஞானசம்பந்தர்

கோனேரிராஜப்புரத்திலிருந்து வடமேற்காக 4 கி.மீ. திருவைகல்மாடக் கோவில். நட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் மாடக்கோவிலமைப்பில் உள்ளதால் இத்தலம் வைகல்மாடக் கோவில் என வழங்கப்படுகிறது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வைகல்நாதேசுவரர். அம்மன் கொம்பியல்கோதை கிழக்கு நோக்கிய சன்னிதி ஒரு பிராகாரம் கொண்டது. தலமரம் சண்பகம். தீர்த்தம் கோவிலின் வடபால் உள்ள திருக்குளமான சண்பக தீர்த்தம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், வரதராசப்பெருமாள், கஜலட்சுமி, பைரவர், சூரியன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருமால் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டு திருமகளையும், நிலமகளையும் தன் இரு மனைவியராகப் பெற்ற தலம்.

பிரமன், இந்திரன், அகத்தியர் ஆகியோர் இத்தலத்தை வழிபடப் பெற்ற பெருமைக்குரிய தலம். தன் பிடியைத் தேடிவருந்திய களிறு ஒன்று ஈசற்புற்றைத் சிதைக்க, ஈசல்கள் தம்புற்றினை அழித்த யானையின் உடலைக் கடித்துக் கொன்றன. தன் களிற்றை ஈசல் அழித்ததைக் கண்டு வருந்திய பிடியும், யானையைக் கொன்ற ஈசல்களும் இத்தல இறைவனை வழிப்பட்டு அருள் பெற்றன என தலபுராணம் கூறுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரித் தென்கரையில் இத்தலம் 33 வது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்றது. தலபுராணம் யாழ்பாணம் சி.நாகலிங்கம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது.

மேலும் இவ்வூரில் இரண்டு சிவன் கோவிலான அருள்மிகு விசாலாட்சியம்மன் உடனுறை விசுவநாதர் திருக்கோவிலும், பிரம தேவனால் பூஜிக்கப் பெற்ற பிரம்மபுரீஸ்வரர் கோவிலும் இங்கு உள்ளன.

93. மேலபருத்திகுடி

கோனேரி ராஜபுரத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

94. கெங்காதரபுரம்

கோமலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் நெம்மேலி என்ற இடத்தில் 90செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விசுவநாதர்.

95. பெரம்பூர்

மங்கநல்லூர்க்கு தெற்கே 3கி.மீ. வேலங்குடி, இக்கோவிலிலுள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுயம்புநாதர்.

96. மங்கநல்லூர்

வடுவூர்க்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மங்களீஸ்வரர்.

97. நல்லாடை

திருவிளையாட்டத்திலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அக்னீஸ்சுவரர்.

98. இலுப்பூர்

திருக்களாஞ்சேரிக்கு மேற்கே 5கி.மீ. இக்கோவில் 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மத்தியார்சுனேஸ்வரர். மேலும் இவ்வூரில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் பிமேஸ்வரர் கோவிலும் உள்ளது.

99. எடுத்துக்காட்டி

திருக்களாஞ்சேரிக்கு தென்மேற்கே 2கி.மீ. சாத்தனூர். இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக நித்யவினோதாஸ்வரர்.

100. திருக்களாஞ்சேரி

தரங்கம்பாடியிலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகநாதர்.

101. காட்டுசேரி

தரங்கம்பாடியிலிருந்து தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் ராஜசோழீஸ்வர முடையார். இதன் அருகில் உள்ள தீவனூரில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் விஸ்வநாதர்.

102. தரங்கம்பாடி

திருக்கடையூரிலிருந்து தென்கிழக்கே 8கி.மீ. அளப்பூர். இக்கோவில் 31செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீமாசிலாமணீசுவரர். உப்பு விளைக்கும் ஊர் என்ற பொருளை உடையது அளப்பூர் என்பதாகும். கல்வெட்டுக்களில் இவ்வூரை குலசேகரன் பட்டினம், சடகன்பாடி எனக் குறிப்பிடப்படுகிறது.

தேவார வைப்புத்தலமாக அளப்பூர் என்ற பெயருடன் தரங்கம்பாடி குறிக்கப்படுகிறது. அப்பர், சுந்தரர் அருளிய நான்கு தேவாரப் பாடல்கள் இத்தலத்திற்குரியது.

கந்தர்சஷ்டி நாளில் திருவிடைக்கழி கோவிலிலிருந்து இவ்வூருக்கு முருகன் எழுந்தருளி சம்ஹாரம் செய்வார். திருவிடைக்கழி கோவிலின் அம்மன் இக்கோவிலில் விளங்குகிறார்.


ஆதாரம்	ஆதாரத்தலம்	ஆதாரக்கடவுள்
மூலாதாரம்	திருவாரூர் (தியாகேசர் தலம்)	விநாயகர்
சுவாதிட்டானம்	திருவானைக்கா (ஜம்புநாதர் தலம்)	பிரமன்
மணிபூரகம்	அண்ணாமலை (அருணாசலேசர்தலம்)	திருமால்
அனாகதம்	சிதம்பரம் (சபாபதி தலம்)	ருத்திரன்
விசுத்தி	காளத்தி (காளத்தீசர் தலம்)	மகேசுரன்
ஆஞ்ஞை	காசி (விசுவேசர் தலம்)	சதாசிவன்

பிரமரந்திரம் - கைலை; துவாத சாந்தத் தலம் - மதுரை

திருச்சிற்றம்பலம்

நாகப்பட்டிணம் வட்டம்

(நாகப்பட்டிணம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. நாகப்பட்டினம்

வண்ட லம்பிய வார்சடை யீசனை
விண்ட லம்பணிந் தேத்தும் விகிர்தனைக்
கண்ட லங்கமழ் நாகைக்கா ரோணனைக்
கண்ட லும்வினை யான கழலுமே

-- திருநாவுக்கரசர்.

திருவாரூர்க்கு கிழக்கே 24கி.மீ. திருநாகைக் காரோணம், நாகை, ஆதிபுராணம், சிவராசதானி, பார்ப்பதீச்சரம், அரவநகரம். உப்பனாறு கரையில் இக்கோவில் 3-36 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காயாரோகணநாதர். அம்மன் நீலாயதாக்ஷி. தீர்த்தம் தேவ தீர்த்தம். தலமரம் மா. தலவிநாயகர் நாகாபரணவிநாயகர்.

நாகர்கள் என்ற வகுப்பினர் குடியேறி வாழ்ந்ததாலும் கடற்கரையை அடுத்துள்ள ஊர்கள் பட்டினம் என்ற பெயரால் வழங்கப் பெறுதலால் ஊர் நாகப்பட்டினம் என்ற பெயர் பெற்றது. அட்டநாகங்களில் ஆதிசேடன் பூசித்த தலம் ஆதலால் இப்பெயர் பெற்றது எனத் தலபுராணம் கூறுகிறது.

காரோணம் கோவிலின் பெயர். புண்டரீக முனிவரை இறைவர் தன் திருமேனியோடு ஆரோகணம் செய்த சிறப்புடையது.

சப்தலிங்கத் தலங்களில் ஒன்று. 64 சக்தி பீடங்களுள் ஒன்றாய்த் திகழ்வது. காஞ்சிகாமாட்சி, மதுரை மீனாட்சி,காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி என இத்தல அம்பிகை மக்கள் வழக்கில் இணைந்து வழங்கப் பெறுகிறாள், கயிலையும், காசியும் போல இத்தலமும் முத்தி மண்டபத்தைப் பெற்றுள்ளது.

அதிபத்த நாயனார் அவதரித்த பெருமை யுடையது. ஏழு முனிவர்கட்கும் இறைவன் மூலலிங்கத்திலிருந்து தோன்றி சோமாஸ் கந்தராய் காட்சி கொடுத்தது. சாலிசுக மன்னனுக்குத் திருமணக் கோலம் காட்டும் பஞ்சக்குரோச யாத்திரையாகிய சப்தஸ்தான விழா நடைபெறுகிறது. தசரதன் சனிப் பிரதிட்டை செய்து வழிபட்டது; மற்றும் அம்பிகை, முருகன், திருமால், அகத்தியர், வசிட்டர், முசுகுந்தன், அரசகேசரி, விசித்திர கவசன், விரூரகன், பத்திரசேனன், பாற்கரன், மித்திரன், காளகண்டன், சண்டதருமன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம் என தலவரலாறு கூறுகிறது.

நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்து வாரத்தான் நாகலோகம் சென்று நாக கன்னிகைப் கூடிப் பெற்ற புதல்வனே தொண்டை நாட்டை அரசாண்ட இளந்திரையன் எனப் பத்துப் பாட்டில் கூறுகிறது.

சோழநாட்டுக் காவிரிக்குத் தென் கரையில் இத்தலம் 82 வது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்றது. அருணகிரிநாதர் இத்தல முருகப் பெருமானைக் குறித்துப் பாடியுள்ள திருப்புகழ் இத்தலத்திற்குள்ளது. தலபுராணம் 61 படலங்கள், 2506 பாடல்கள் கொண்ட இந்நூலை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டுள்ளது.

இக்கோவிலில் 7 கல்வெட்டுக்கள் உள்ளன. முதல் இராசராசன், குலோத்துங்கன் முதலியோர் காலத்தைச் சேர்ந்தது. 6 கால பூஜை. வைகாசியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.


மேலும் இவ்வூரில் நாகநாதர் கோவில், அழகியநாதர் கோவில், அமரநந்தீசர் கோவில், கைலாசநாதர் கோவில், விசுவநாதர் கோவில், மேலைக்காயாரோகணர் கோவில் மற்றும் வைணவத் தலமான 108ல் சிறப்புபெற்ற ஸ்ரீசௌந்தரராசப் பெருமாள் கோவில் என இவ்வூரைச் சுற்றி அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

2. சிக்கல்

வானு லாவுமதி வந்துல வும்மதின் மாளிகை
தேனு லாவுமலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல் வேளை விழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞான மாகநினை வார்வினை யாயின நையுமே.

-- திருஞானசம்பந்தர்



நாகப்பட்டினத்திற்கு மேற்கே 5கி.மீ. திருச்சிக்கல், மல்லிகைவனம். இக்கோவில் 1-95 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 70 அடி உயர 7 நிலை இராஜகோபுரமும், இரு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வெண்ணெய்ப்பிரான், நவநீதேசுவரர். அம்மன் வேல்நெடுங்கன்னி. தலதீர்த்தம் பால்குளம், க்ஷீரபுஷ்கரிணி. தலமரம் குட மல்லிகை.

உள்பிராகாரத்தில் கார்த்திகை விநாயகர், முருகன் அருள்மிகு சிங்கார வேலர், மரகதலிங்கம், திருமால், தேவகோட்டம் எனப்படும் மேல் மண்டபத் தில் தனிக்கோவிலில் சோமாஸ்கந்தர், விசுவநாதர், ஆறுமுகக் கடவுள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வசிட்டர், காமதேனுவின் வெண்ணெ யினால் சிவலிங்கத்திருவுருவம் அமைத்துப் பூசித்தார். பூசைமுடிவில் அதை எடுக்க முயன்றபோது சிவலிங்கம் எடுக்க முடியாமல் சிக்கிய காரணத்தினால் சிக்கல் என்னும் பெயர் இத்தலத்திற்கு உண்டாயிற்று எனத் தலபுராணம் கூறுகிறது.

விசுவாமித்திரர், வசிட்டர், அகத்தியர், காத்தியாயனர், நாரதர் முதலிய முனிவர்கள் வழிபட்டுள்ளனர்.

கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக் கோவில்களில் இத்தலமும் ஒன்றாகும். 64 சக்திபீடங்களில் இத்தலமும் ஒன்று.

சிக்கலில் வேல்வாங்கிச் செந்தூரில் சம்காரம் செய்தார் என்பது பழமொழி.

சஷ்டித்திருநாளில் முதல்நாள் சிங்கார வேலர் அருள்மிகு வேல்நெடுங்கண்ணி அம்மையிடம் வேல்வாங்கி வீராவேசத்துடன் வரும் சமயத்தில் அவர் திருமேனியில் வியர்வைத் துளிகள் துளிர்க்கும் அற்புதம் இன்றும் நிகழ்ந்துவருகிறது.

எட்டுக்குடி, எண்கண், சிக்கல் ஆகிய மூன்று தலங்களில் விளங்கும் ஆறுமுகப் பெருமான் ஒரே அமைப்புடைய மூர்த்தி களாக இருந்ததால் இம்மும்மூர்த்திகளும் ஒரே ஸ்தபதி செய்தவை என்பர்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் இத்தலம் 83 வது தலம். திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் இத்தல முருகப்பெரு மானைக் குறித்து பாடிய திருப்புகழ் உள்ளது.

இக்கோவிலில் 7 கல்வெட்டுக்கள் உள்ளன. நாள்தோறும் 6 கால பூஜை. சித்திரை மாதத்தில் பிரமோற்சவமும், ஐப்பசி கந்தசஷ்டித் திருவிழாவும் நடைபெறுகிறது.

3. திருக்குவளை

முத்தி னைமுத லாகிய மூர்த்தியை
வித்தி னைவிளை வாய விகிர்தனைக்
கொத்த லர்பொழில் சூழ்தரு கோளிலி
அத்த னைத்தொழ நீங்கும்நம் அல்லலே.

-- திருநாவுக்கரசர்.

நாகப்பட்டினத்திலிருந்து தென்மேற்கே 25கி.மீ. திருக்கோளிலி, கதகாரண்யம், பிரமதபோவனம். இக்கோவில் 1-81 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பிரமபுரீசுவரர். அம்மன் வண்டமர்பூங் குழலாள். தீர்த்தம் ஆலயத்திற்கு எதிரே உள்ள பிரமதீர்த்தம், சந்திரநதி. தலமரம் தேற்றாமரம். தலவிநாயகர் தியாகவிநாயகர்.

நவக்கிரகங்கள் முதலியோர்க்கும் உளதாய குற்றத்தை நீக்கி அருள் புரிந்தமையால் கோளிலி என்னும் பெயர் பெற்றது. தற்போது திருக்குவளை என்று வழங்கப்படுகிறது.

ஆதியில் பிரமதேவன் சிருட்டித் தொழிலைப் பெற வேண்டிப் பூசித்தமை யால் பிரமதபோவனம் எனப்படுகிறது. இத்தலம் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று. இங்குள்ள தியாகர் அவனிவிடங்கத் தியாகர் எனப் பெறுவார், வண்டு நடனம்.

சுந்தரர் குண்டையூரில் பெற்ற நெல்மலையை திருவாரூர்ப் பரவையாளர் மாளிக்கு கொண்டு செல்லத் திருப்பதிகம் பாடி ஆள்வேண்டிப் பெற்ற சிறப்புடையது.

பிரமதேவன், தாமரைக்கண்ணன், வலாரி, அகத்தியன், முசுகுந்தன், பஞ்சபாண்டவர்கள், நவக்கிரகாதிகள், ஓமகாந்தன் மன்னர் முதலியோர் பூசை செய்து வழிபட்டும் எண்ணிறந்த வரம் பெற்ற தலம்.

இத்தலத்தில் அருகில் ஓடும் சந்திரநதி கங்கையைப் போலப் புனிதமானது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 123 வது. திருஞானம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிய . திருப்பதிகங்கள் பெற்றது, பதினொராம் திருமுறையில் பரணர் பாடிய திருவந்தாதியில் இத்தலத்தைக் குறித்த வெண்பா ஒன்றும், இத்தலத் தியாகராஜர் மீது பாடிய உலா பிரபந்தம் ஒன்றும் உள்ளன.

இக்கோவிலைப் பற்றிய கல்வெட்டுக் கள் 19 உள்ளன. சடாவர்மன் சுந்தர பாண்டியன், குலசேகரபாண்டியன், இராஜ ராஜன், இராஜாதிராஜன், இராஜேந்திரன் முதலியோர் காலத்தனவாகும். 6 கால பூஜை. மாசி மகநாளில் பிரமோற்சவம்.

இக்கோவில் தருமையாதீன அருளாட்சி க்கு உட்பட்ட 27 திருக் கோவில்களில் ஒன்றாக விளங்கி வருகிறது.

4. குண்டையூர்

திருக்குவளை தலத்திலிருந்து வடக்கே சிறிது தொலைவில் அமைந்துள்ள இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேசுவரர். அம்மன் மீனாட்சியம்மை.

சுந்தரர் திருமாளிகைக்கு செந்நெல், அரிசி, பருப்பு முதலியவற்றை அனுப்பும் திருத்தொண்டைச் செய்து வந்த குண்டையூர்க்கிழார் வாழ்ந்த திருத்தலம்.

ஒரு சமயம் சுந்தரர் திருக்கோளிலிக்கு வந்து பெருமானிடம் நெல்லைத் திருவாரு ருக்கு எடுத்துச் செல்ல ஆள்வேண்டப் சிவபெருமான் பூதகணங்களை அனுப்பி அந்நெல்லை திருவாரூரில் சேர்ப்பித் தருளினார். கோவிலுக்கு முன்னால் மாறிமாறிக் காய்க்கும் இரண்டு . ஆத்தி மரங்கள் உள்ளன. இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரர் அருளிய திருக்கோளிலித் திருப்பதிகத்தில் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

5. திருவாய்மூர்

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென் கொலோ.

-- திருநாவுக்கரசர்.

.திருக்குவளைக்கு தெற்கே 3கி.மீ. திருத்தென்திருவாய்மூர், லீலாஹாஸ்யபுரம். அரிச்சந்திர நதிக்கரையில் இக்கோவில் 2-00 (180×144) ஏக்கர் நிலப்பரப்பளவில், 3 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வாய்மூர்நாதர். அம்மன் பாலினும்நன்மொழியம்மை. தீர்த்தம் சூர்ய தீர்த்தம். தலமரம் பலா மரம். உட்பிராகாரத்தில் விநாயகர், முருகன், தியாகராஜர், திருமறைக்காடர், ஒரே வரிசையில் நவக்கிரகங்களின் சன்னிதி, நடராஜர், நால்வர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வாய்மூர் என்பது வாய்மையர் ஊர் என்பதன் மருஉ மொழியாகக் கொள்ளலாம்.

சப்தவிடங்கத் தலங்களில் ஏழு தியாகேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும். தியாகராசர்-நீலவிடங்கர், நடனம் கமல நடனம், சிம்மாசனம் ரத்தினசிம்மாசன மாகும்.

பிரமன் முதலிய தேவர்கள் தாரகாசு ரனுக்குப் பயந்து பறவை உருவ மெடுத்து சஞ்சரிக்கையில் இத்தலத்திற்கு வந்து பாபமேக பிரசண்டமாருத தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிப்பட்டுப் பாவம் நீங்கப்பெற்றனர்.

சூரியன் வழிபட்ட தலம். பங்குனி மாதத்தில் 12,13 அகிய இரு நாட்களில் சூரியக் கதிர்கள் சுவாமி, அம்மன் மேல் படுவதைக் காணலாம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 124 வது. திருஞானசம்பந்தர், அப்பர் திருப் பதிகம் பெற்றது. சுந்தரரும் இத்தலத்தைக் குறிப்பிட்டு ஒரு பாடல் அருளிச் செய்துள்ளார்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. ஆதியில் பல்லவ, சோழ மன்னர்களால் இக்கோவில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

நாள்தோறும் 6 கால பூஜை. வைகாசி மாதம் விசாகத்தன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது. இவ்வூருக்கு வடமேற்கே 2 கி.மீ. தொலைவில் எட்டிகுடியில் முருகன் ஆலயம் உள்ளது.

6. எட்டிகுடி

திருக்குவளையிலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் 1-15 ஏக்கர் நிலப்பரப்பளவில் 50 அடி உயர இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சௌந்தரேசுவரர். அம்மன் ஆனந்தவல்லி. தீர்த்தம் சரவணப் பொய்கை. தலமரம்-வன்னிமரம்.

உள்பிராகாரங்களில் சித்திவிநாயகர், வன்மீக முனிவர், சன்னிதிகள் உள்ளன. இத்தலத்தில் சுப்பிரமண்யர் சிறப்பாகப் போற்றப்படுபவர். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம்.

7. செம்பியன்மாதேவி

நாகப்பட்டினத்திலிருந்து தென்மேற்கே 16கி.மீ. இக்கோவில் 1-82 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும்,

இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் பெரிய நாயகி. சதுர்வேத தீர்த்தம் கோவிலின் எதிரில் திருக்குளமாக உள்ளது. தலமரம் ஆல்மரம்.

செம்பியன்மாதேவியரால் கட்டப் பெற்றது இக்கோவில். இவ்வூர் செம்பியன்மாதேவியின் பெருமைக்குரிய சின்னமாகும்.

8. வடக்குபொய்கைநல்லூர்

நாகப்பட்டினத்திலிருந்து தெற்கே 5கி.மீ. பொய்கைநல்லூர். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நந்தி நாதேசுவரர். அம்மன் ஸ்ரீ சௌந்தரநாயகி.

நாகைத்தலபுராணத்தில் இத்தலப் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. நந்தி மாகாளர் பூசித்த தலம். கோரக்கச்சித்தர் ஜீவசமாதி கூடிய சிறப்புடையது. சித்தர்கள் பலரும் வழிபட்டு முக்திபெற்றதால் சித்தாச்சிரம் எனப்போற்றப்படுகிறது.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்.

9. கீழையூர்

திருவாய்மூர்க்கு வடகிழக்கே 5கி.மீ. கீழையில். இக்கோவில் 67 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு செம்மலைநாதர். அம்மன் வண்டமரும்பூங்குழலாள்.

பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்த காலத்தில் இத்தலத்திற்கு வந்து ஐந்து சிவலிங்கங்கள் நிறுவி வழிபட்டனர் என்றும், மூலத்தானத்தில் விளங்கும் பெருமான் அருச்சுனனால் வழிபடப்பட்டவர் என்றும் தலபுராணம் கூறுகிறது.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரர் இத்திருத்த லத்தைக் குறித்துத் தேவாரப் பாடல் அருளிச் செய்துள்ளார்.

10. ஈசனூர்

திருவாய்மூர்க்கு வடகிழக்கே ஒரு கி.மீ. ஈச்சனூர், ஈசானூர் என வழங்கப்படும் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தருமபுரீசுவரர். அம்மன் சௌந்தரநாயகி.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரர் இடையாற்றுத் தொகையில் இத்திருத் தலத்தைக் குறிப்பிட்டுத் தேவாரப் பாடல் அருளிச் செய்துள்ளார்.

11. பெருங்கடம்பனூர்

நாகப்பட்டினத்திலிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சதுர்வேதபுரீஸ்வரர்.

12. வடகுடி

நாகைக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனியழகர்.

13. தெத்தி

நாகூர்க்கு கிழக்கே ஒரு கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அக்னீசுவரர்.

14. நாகூர்

நாகப்பட்டினத்திலிருந்து வடக்கே 4கி.மீ. திருநாகூர், புன்னாகவனம் வெட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் 5 நிலை இராஜகோபுரம், பிராகாரத்துடன்

மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகநாதர். அம்மன் நாகவல்லி.

சந்திரன், துருவாச முனிவர், சமுத்திரராஜன், இந்திரன், நாகராஜன் முதலியோர் பூஜித்து பேறு பெற்ற தலம். தி.மு. 100 வருட முற்பட்ட கோவிலாகும்.

15. பாலையூர்

நாகைக்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

16. இளங்கடம்பனூர்

நாகைக்கு மேற்கே 6கி.மீ. இக்கோவிலிலுள்ள மூலவர் சோலீஸ்வரர்.

17. சங்கமங்கலம்

நாகைக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சாந்தரைக்கநாதர்.

18. ஐவநல்லூர்

நாகைக்கு மேற்கே 2கி.மீ. இக்கோவில் 28 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

19. அந்தணப்பேட்டை

நாகைக்கு தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ருத்திரபதீஸ்வரர். மற்றொரு கோவில் 32 செண்டில் அண்ணாமலைநாதர்.

20. பொறவாச்சேரி

சிக்கல்லிருந்து கிழக்கே ஒரு கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணபுரீஸ்வரர். மற்றொரு கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் விஸ்வநாதர்.

21. பாப்பா கோவில்

நாகைக்கு தென்மேற்கே 5கி.மீ. இவ்வூரில் மூன்று கோவில்கள் உள்ளன. 1-34 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கடம்பவனநாதர் திருக்கோவிலும், 15 செண்டில் விஸ்வநாதர் கோவிலும், 4 செண்டில் கைலாசநாதர் கோவிலும் உள்ளன.

22. கருவேலங்கடை

நாகைக்கு தெற்கே 6கி.மீ. செட்டிச்சேரி இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

23. ஒரத்தூர்

சிக்கல் இருந்து தெற்கே 3கி.மீ. இக்கோவில் 29 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

24. ஆலங்குடி

சிக்கலிலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

25. வடுகச்சேரி

சிக்கலிலிருந்து தென்மேற்கே 7கி.மீ. இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

26. வடவூர்

நாகைக்கு தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

27. தெற்குபொய்கைநல்லூர்

வேளாங்கன்னிக்கு வடக்கே 2கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணபுரீஸ்வரர்.

28. வேளாங்கன்னி

நாகைக்கு தெற்கே 10கி.மீ. இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் , . இராஜகோபுரம், பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ரஜிதகிரீஸ்வரர். அம்மன் வேளாங்கன்னியம்மன்.

29. குறிச்சி

வேளாங்கன்னிக்கு வடமேற்கே 4கி.மீ. இக்கோவில் நரசிங்கமங்கலத்தில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வான்மிகநாதர்.

30. பாலக்குறிச்சி

வேளாங்கன்னியிலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பார்வதீஸ்வரர்.

31. சோழவித்தியாபுரம்

வேளாங்கன்னியிலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் தருமபுரீஸ்வரர்.

32. பிரதாபராமபுரம்

வேளாங்கன்னியிலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

33. திருப்பூண்டி

வேளாங்கன்னியிலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். மற்றொரு கோவில் 15 செண்டில் கல்யாணநாதர் கோவிலும் உள்ளது.

34. கருங்கண்ணி

வேளாங்கன்னியிலிருந்து தென்மேற்கே 8 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் ஏகாம்பரேசுவரர்.

35. வாழக்கரை

திருக்குவளைக்கு கிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

36. மீன்நல்லூர்

திருக்குவளைக்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் மேல்பிடாகையில் உள்ள கோவிலில் உள்ள மூலவர் இராமலிங்கர்.

37. வேட்டைக்காரனிருப்பு

வேளாங்கன்னியிலிருந்து தெற்கே 14கி.மீ. இக்கோவில் புதூரில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் சிவலோகநாதர் கோவிலும், புதுப்பட்டியில் உள்ள காளத்தீஸ்வரர் கோவிலும் உள்ளது.

ஓமாலிகை

நறும்புனலில் இடும் மணப்பொருள்கள்: இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கோட்டம், நாகம், மதாவரிசி, தக்கோலம், நன்னாரி, வெண்கோட்டம், கத்தூரி, வேரி, இலாமிச்சை, கண்டில், வெண்ணெய், கடு, நெல்லி, தான்றி, துத்தம், வண்ணக் கச்சோலம், அரேணுகம், மாஞ்சி, சயிலேகம், புழுகு, புன்னை, நறுந்தாது, புலியுகிர், சரளம், தமாலம், வகுளம், பதுமுகம், கொடிவேலி, நுண்ணேலம்.

திரிமஞ்சள்


மஞ்சள், கத்தூரிமஞ்சள், மரமஞ்சள் .

திரிமூலம்

கண்டுமூலம், சித்திரிமூலம், திப்பிலி மூலம்.

வேதாரண்ணியம் வட்டம்

(நாகப்பட்டிணம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. வேதாரணியம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே
-- திருநாவுக்கரசர்.

தஞ்சாவூரிலிருந்து தென்கிழக்கே 100 கி.மீ. திருமறைக்காடு, ஆதிசேது, தென்கயிலாயம், சத்தியகிரி, பரமயானம், ஞானபூமி. இக்கோவில் 6-39 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வேதாரணியேசுவரர், அம்மன் யாழைப்பழித்தமொழியாள். தீர்த்தங்கள் மணிகர்ணிகை, வேதாமிர்தம், வேதநதி. தலமரம்-வன்னி மற்றும் புன்னை.

வேதங்கள் பூசித்து வேண்டிய வண்ணம் வேதாரணியம் என்னும் பெயருடன் திகழ்கின்றது. தியாகராசத் தலங்கள் ஏழுனுள் இத்தலமும் ஒன்றாகும். இத்தல தியாகராசமூர்த்திக்குப் புவனி விடங்கர் என்று பெயர்.

இராமன் இத்தலத்தில் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்து தாம் இராவணா தியர்களைக் கொன்ற பாவம் நீங்கப் பெற்ற தலம். இதனால் ஆதிசேது என்று பெயர்.

வேதங்கள் வழிபட்டுத் திருக்காப் பிட்டுக் கொண்ட கோவில் கதவினைச் பதிகம் பாடி அப்பர் திறக்கவும், சம்பந்தர் மூடவும் செய்த அற்புதத் தலம். இத்தலத்திலிருந்து சம்பந்தர் பாண்டிய நாட்டிற்கு மங்கையர்க்கரசியார் அழைப்பின்படி எழுந்தருளினார்.

முருகன், பிரமன், அகத்தியர், முசுகுந்தர், தசரதர், சுவேத முனிவர், விசுவாமித்திரர், இராவணன், மேனகை, திலோத்தமை, மாங்கதன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம்.

திருக்கோவிலின் கருவறையில் உள்ள திருவிளக்கினை அறியாது தூண்டிய எலி அச்சிவ புண்ணியத்தால் மறுபிறப்பில் மாவலிவேந்தனாய்ப் பிறந்து இவ்வுலகை ஆண்டது.

இத்தலத்தில் சமுத்திரக் கட்டத்தில் தைப்பௌர்ணமி, ஆடி மாதத்தில் ஸ்நானம் செய்வது விசேடமானது.

இக்கோவிலுக்கு சொந்தமான 10880-35 ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலம் 33 கிராமங்களில் உள்ளது. பழமொழியில் வேதாரணியம் விளக்கழகு, மற்றும் உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 125 வது. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த பதிகங்கள் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம். தலபுராணம் அகோர முனிவர், மற்றும் பரஞ்சோதியாரும் பாடிய புராணங்கள் உள்ளன.

கல்வெட்டுக்கள் 89 மற்றும் ஒரு செப்புப்பட்டயம் உள்ளன. இத்தலம் உம்பள நாட்டுக் குன்னூர் நாட்டுத் திருமறைக்காடு எனக் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மாதத்தில் 19 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

2. அகத்தியான்பள்ளி

வாடிய வெண்டலை மாலைசூடி மயங்கிருள்
நிடுயர் கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
ஆடிய எம்பெருமான் அகத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையி னார்கட்கில்லையாம் பாவமே
-- திருஞானசம்பந்தர்.

வேதாரணியத்திலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் கிழக்கு நோக்கியதும், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீசுவரர். அம்மன் பாகம்பிரியாள். தீர்த்தம் அக்னி தீர்த்தம். தலவிருட்சம் அகத்தி.

சிவபெருமானுடைய திருமணக் கோலத்தை அகத்தியர் இத்தலத்திலிருந்து தரிசித்தார். அகத்தியர் திருவுருவம் கோவிலில் உள்ளது. குலசேகரப்பாண்டியனுக்கு இருந்த வியாதிபோக்க இத்தலத்தில் உற்சவம் நடத்தி நீங்கப் பெற்றதாக வரலாறு.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 126 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. இக்கோவிலில் சோழ, பாண்டிய மன்னர்கள் கால கல்வெட்டுக்கள் உள்ளன.

3. கோடியக்காடு

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள்கண் டனகோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே
-- சுந்தரர்.

வேதாரணியத்திலிருந்து தெற்கே 9கி.மீ. திருக்கோடிக்குழகர், கோடிக்கரை. இக்கோவிலிலுள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அமிர்தகடேசுவரர். அம்மன் மையார்தடங்கண்ணி. தீர்த்தம் அமிர்த தீர்த்தம்.

பாற்கடலிலிருந்து கிடைத்த அமிர்தத்தை தேவர்கள் பருகி மீதியை வாயுதேவனிடம் கொடுக்க அவர் எடுத்துக் கொண்டு ஆகாய வழியில் செல்கையில் அது பூமியில் விழுந்து லிங்கரூபமாய் தோன்றியதால் இறைவர்க்கு அமிர்தகடேசர் என்று பெயர். பிராகாரத்தில் அமிர்த தீர்த்தக் கிணறு உள்ளது. இத்தல முருகப்பெருமான் அமுதக் கலசத்தினைத் தம்கையில் ஏந்திக் காட்சியளிக்கிறார். இத்தலத்தில் உள்ள கோடி தீர்த்தத்தில் கடலில் ஆடி, தை, அமாவாசை, மாசிமகத்தில் நீராடுவது மிகச் சிறப்பு.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 127 வது. சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். அருணகிரிநாதர் முருகப்பெருமானைப் போற்றி திருப்புகழ் பாடியுள்ளார்.

4. மணக்குடி

தலைஞாயிறுக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக தான்தோன்றீசுவரர். 2100 வருட முற்பட்டது.

5. தலைஞாயிறு

கள்ளிமேடுக்கு வடமேற்கே 9கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்பலவாணேஸ்வரர்.

மேலும் இவ்வூரைச் சுற்றியுள்ள தலங்கள் 5 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் கோவிலும், 50 செண்ட் நிலப்பரப்பளவில் மகாகாளீஸ்வரர் கோவிலும், 24 செண்ட் நிலப்பரப்பளவில் சிவலோகநாதர் கோவிலும் உள்ளது. மகாகாளீஸ்வரர் கோவில் 2600 வருட முற்பட்டது.

6. வடுகூர்

தலைஞாயிறுக்கு மேற்கே 5கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக பவஔஷதீஸ்வரர். அம்மன் பெரியநாயகி. சோழர்கால திருப்பணி. நான்கு கால பூஜை.

7. ஆய்மூர்

தலைஞாயிறுக்கு தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர். இவ்வூருக்கு அருகில் உள்ள பெருமழையில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் அழகியநாதர்.

8. நாலுவேதபதி

கள்ளிமேடுக்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமரபதீஸ்வரர்.

9. கள்ளிமேடு

வேதாரணியத்திலிருந்து வடக்கே 15கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர் மற்றும் 5 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர்.

10. உம்பளச்சேரி

கள்ளிமேடுக்கு மேற்கே 8கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வாலீஸ்வரர்.

11. செட்டிப்புலம்

கள்ளிமேடுக்கு தென்மேற்கே 9கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் கைலாசநாதர்.

12. புஷ்பவனம்

கள்ளிமேடுக்கு தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுகந்தவனேசுவரர்.

13. கத்தரிபுலம்

கள்ளிமேடுக்கு தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

14. மருதூர்

வேதாரணியத்திலிருந்து மேற்கே 18கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் சோமநாதர். மேலும் இவ்வூரில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மதிவிளங்கநாதர்.

15. தகட்டூர்

வேதாரணியத்திலிருந்து மேற்கே 20கி.மீ. முள்ளியாற்றின் கரையில் இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில்

மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பைரவநாதர்.

இக்கோவில் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரர் பாடியது. 4 கால பூஜை. சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

16. தானியகோட்டகம்

வேதாரணியத்திலிருந்து மேற்கே 25கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

17. வண்டுவாஞ்சேரி

வேதாரணியத்திலிருந்து மேற்கே 27கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் விஸ்வநாதர்.

18. அண்ணாபேட்டை

வேதாரணியத்திலிருந்து மேற்கே 29கி.மீ. இக்கோவில் 39 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பேதவரணேஸ் வரர்.

19. வாய்மேடு

வேதாரணியத்திலிருந்து மேற்கே 25கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் அகத்தீஸ்வரர்.

20. தேத்தாக்குடி

வேதாரணியத்திலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியநாதர்.

21. பஞ்சநதிக்குளம்

வேதாரணியத்திலிருந்து மேற்கே 12கி.மீ. இக்கோவில் 56 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தென்கோடிநாதர் மற்றொரு கோவில் கைலாசநாதர்.

22. தென்னாடர்

வேதாரணியத்திலிருந்து மேற்கே 20கி.மீ. இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் முத்தீஸ்வரர்.

23. ஆயக்காரன்புலம்

வேதாரணியத்திலிருந்து மேற்கே 12கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஏழுமேஸ்வரர். 2100 வருட முற்பட்டது.

24. பன்னாள்

வேதாரணியத்திலிருந்து மேற்கே 11கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கபிலவனநாதர். 2050 வருட முற்பட்ட கோவில், மற்றும் இவ்வூரில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக புஷ்பவனநாதர் கோவிலும் உள்ளது.

எண்வகைப்பத்தி

சிவத்தொண்டருக்கு உரிய எட்டு பக்திச் செயல்கள் :

தொண்டரடி தொழுதல், சிவ பூசை மகிழ்ச்சி, சிவார்ச்சனை, சிவப்பணிவிடை, சிவசரிதம் கேட்டல், பத்தியால் புளகமுறல், சிவன்புகழ் சிந்திக்கை, திருப் பணிப் பொருளைக் கவர்ந்து கொள்ளாமை.


எண்மயம்

எண்வகைப் பெருமிதம் :

பிறப்பு, குலம், கல்வி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு.

நன்னிலம் வட்டம்

(திருவாரூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. நன்னிலம்

**தண்ணியல் வெம்மையினான் தலையிற்கடை தோறும் பலி
பண்ணியன் மென்மொழியாரிடங் கொண்டுழல் பண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர் முறையாலடி போற்றிசைப்ப
நண்ணிய நன்னிலத்துப் பெருங்கோவில் நயந்தவனே.**

-- சுந்தரர்.

மயிலாடுதுறையிலிருந்து 25 கி.மீ. திருநன்னிலத்துப்பெருங்கோவில், மதுவனம், தேவாரண்யம், சுந்தராவனி, பிருகத்புரம். முடிகொண்டான் ஆற்றுக்குக் தென்கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில், சிறிய இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மதுவனேசுவரர், பிரகாசநாதர். அம்மன் பெரியநாயகி, பிரகாசநாயகி. தீர்த்தம் பிரம தீர்த்தம். தலமரம்-வில்வம்.

வளமான நல்லநிலங்களை உடைய ஊராதலின் நன்னிலம் எனப் பெயர். நன்னிலம் ஊர்ப்பெயர். பெருங்கோவில் கோவில் பெயர். கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோவில்களில் ஒன்று.

அசுரர்களால் விளைந்த துன்பங்களைத் தாங்காமல் தேவர்கள் தேனீக்களாக மதுவனம் என்னும் இத்தலத்தில் தங்கி இறைவனை வழிபட்டனர் என்பது இத்தல புராண வரலாறு. தேவர்கள் அடைக்கலமாகத் தங்கி வாழ்ந்ததால் தேவாரண்யம் என்றும், தீர்த்தம் தேவாதீர்த்தம் என்றும் பெயர். இத்தீர்த்தத்தில் மாசிமாதம் நீராடி இறைவனை வழிபடுவோர் எல்லா இன்பங்களையும் அடைவர்.

இத்தலத்தல் கீழே ஒரு பிராகாரமும், மலைமேல் ஒரு பிராகாரமும் உள்ளன. அடிவாரத்தில் அகத்தீசர் உள்ளார்.

ஏகாதசியில் பிரதோஷ காலத்தில் வழிபடுவோர் எல்லாச் செல்வங்களையும் பெறுவர் எனத் தலபுராணம் கூறுகிறது.

தெற்கில் எமனும், மேற்கில் வருண னும், கிழக்கில் இந்திரனும், வடக்கில் குபேர னும் இலிங்கங்கள் அமைத்துப் பூசித்த தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 71 வது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

2. திருக்கொட்டாரம்

**வேதியன் விண்ணவ ரேத்தநின்றான் விளங்கும்மறை
ஓதிய வொண்பொரு ளாகிநின்றா னொளி யார்கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
ஆதியை யேநினைந் தேத்தவல் லார்க்கல்ல லில்லையே.**

-- திருஞானசம்பந்தர்.

பேரளத்திலிருந்து வடகிழக்கே 10கி.மீ. திருக்கோட்டாறு, கோட்டாறு, கோடுகரை. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 3 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஐராவதேசுவரர். அம்மன் வண்டமர்பூங்குழலி. தீர்த்தம்-சூரிய தீர்த்தம்.

வாஞ்சியாற்றின் கரையில் விளங்குவதால் இத்தலம் கோட்டாறு எனப்பட்டதாகலாம். வெள்ளையானை தன் கோட்டினால் மேகத்தை இடித்து மழையை ஆறுபோலச் சொரிவித்து வழிபட்டதால் கோட்டாறு என இத்தலப்பெயர். அகத்தியர், சுபகமுனிவர், குமாரபுவனதேவர், முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது இத்தலம்.

உள்பிராகாரத்தில் பாலவிநாயகர், கைலாசநாதர், சமயாசாரியர், சடைமுடியோடுகூடிய சுபக முனிவர், முருகன், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுரர், சண்டேசுரர், பைரவர், சூரிய சந்திரர், நடராசர் முதலிய சன்னிதிகள் உள்ளன. முன்மண்டபத்திற்கு அருகில் குமாரபுவனேசுவரர் கோவிலுள்ளது. மேற்கு நோக்கிய பெரிய சிவலிங்கம் இங்குள்ளது.

அர்த்தமண்டபத்தில் பல்லாண்டுகளாகத் தேனீக்கள் கட்டிய பழமையான பெரிய தேனடை உள்ளது. இறைவன் சன்னிதியில் தேனீக்கள் ரீங்கார ஓசை செய்வதைக் கேட்கலாம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 53 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

இக்கோவில் கல்வெட்டுக்களில் இவ்வூர் இராசராசப் பாண்டிய நாட்டு உத்தமசோழ வளநாட்டு நாஞ்சில் நாட்டுக் கோட்டாறான மும்முடிச் சோழநல்லூர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் பெயர் இராசேந்திர சோழீசுவரமுடைய மகாதேவர் என்பதாகும்.

3. அம்பல்

எரிதர அனல்கையில் ஏந்தி யெல்லியில்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோவில் சேர்வரே.

-- திருஞானசம்பந்தர்.

பேரளத்திலிருந்து தென்கிழக்காக 6கி.மீ. திருஅம்பர்பெருந்திருக்கோவில், பிரமபுரி, புன்னாகவனம், அம்பர். அரசலாற்றின் வடகரையில் இக்கோவில் 93 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 50 அடி உயர மூன்று நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களில் கீழே ஒரு பிராகாரமும், மலைமேல் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பிரமபுரீசுவரர். அம்மன் சுகந்த குந்தாளாம்பிகை. தீர்த்தம் இந்திர தீர்த்தம், அன்னமாம் பொய்கை, சூலதீர்த்தம் ஆகியன. கோவிலின் எதிரில் இந்திர தீத்தம் உள்ளது. தலமரம்-புன்னை.

பெருந்திருக்கோவில் என்பது யானை யேறாதவாறு படிக்கட்டுகள் அமைந்துக் குன்றுபோல் செய்யப்பட்ட மாடக்கோவில் என்பதாகும். கோச்செங்கட் சோழ மன்னரால் திருப்பணி செய்யப் பெற்ற மாடக்கோவில்களில் இதுவும் ஒன்றாகும்.

சோமாசிமாறநாயனார் அவதரித்த தலம். பிரமன், அம்பரசன், அம்பன், விமலன், மன்மதன், கோச்செங்கட்சோழர் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம்.

உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், மகாலட்சுமி, அகிலாண்டேசுவரர், பைரவர், சூரியர், நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன. மலைக்கோவில் அடுத்தடுத்து

இரண்டு பிரிவாக உள்ளது. முதல் விமானத்தில் சோமாஸ்கந்தரும், இரண்டாம் விமானத்தில் பிரமபுரீசுவரும் காட்சியளிக் கின்றனர். பிரமபுரீசுவருக்கு பின்னால் பார்வதி தேவியும், சிவபெருமானும் நடுவே முருகனும் எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர் காட்சியைக் காணலாம்.

இத்தலத்தில் பிரமன் வழிபட்டதும், அம்பராம்பர்களை அழித்ததும், சம்கார சீலனை அழித்ததும், விமலன் அருள் பெற்றதும், மன்மதனுக்கு சாபம் நீங்கியதும், நந்தராசனுக்கு பிரமகத்தி நிவர்த்தி யடைந்ததும் இத்தலமேயாகும்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 54 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசரும் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ள தலம். தலபுராணம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டுள்ளது.

இக்கோவிலில் 4 கல்வெட்டுக்கள் உள்ளன. இராசராசன், மூன்றாம் குலோத் துங்கன் காலத்தியவை. மாசிமகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது.

4. கோவில் திருமாகாளம்

அடையார் புரமூன்று மனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே.

-- திருஞானசம்பந்தர்.

பேரளத்திலிருந்து தெற்கே 4கி.மீ. திருஅம்பர்மாகாளம். அரசலாற்றின் வடகரையில் இக்கோவில் 6-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாகாளநாதர். அம்மன் அச்சந்தவிர்த்த நாயகி. தீர்த்தம் மாகாள தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. தலமரம்-மருதமரம்.

உள்பிராகாரத்தில் அச்சம் தவிர்த்த விநாயகர், முருகன், காட்சிகொடுத்தநாதர், காளி, நாக கன்னிகை, தியாகேசர், 63 நாயன்மார்கள், மதங்க முனிவர், தனுசுசுப்பிரமணியர், மகாலஷ்மி, துர்க்கை, சண்டேசர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

காளி வழிபட்டதால் மாகாளம் என்று பெயர். நாககன்னிகை வழிபட்டு அருள்பெற்ற தலம். மதங்க முனிவர் வழிபட்டு உமையம்மையைத் தன் மகளாகப் பெற்ற புராணச்சிறப்புடைய தலம். சோமாசி மாற நாயனார் செய்த யாகத்திற்கு இறைவன் எழுந்தருளிவந்து அருள் வழங்கிய பெருஞ் சிறப்புடைய தலம்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரையில் திருப்பதிகம் பெற்ற தலங்களில் 55 வது. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரத்தில் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.


கல்வெட்டுக்களில் முதற்குலோத்துங்க சோழ தேவரின் மூன்றாம் ஆண்டின் கல்வெட்டு, இவ்வூரை உய்யக்கொண்டார் வளநாட்டு, அம்பர்நாட்டுஅம்பர் என்றும், திருக்கோவிலை அம்பரில் உடையார் திருமாகாளம் உடையார் கோவில் என்றும் குறிப்பிடப்படுகின்றன. விக்கிரம சோழன் காலத்திய கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

திருச்சிற்றம்பலம்

5. திருமீயச்சூர்

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் றாதைதன்
மீயச் சூரைத் தொழுது வினையை வீட்டுமே.

-- திருஞானசம்பந்தர்.



பேரளத்திலிருந்து மேற்கே 2கி.மீ. காவிரித் தென்கரைத் தலங்களில் 56,57 வது தலங்களாக திருமீயச்சூர், திருமீயச்சூர் இளங்கோவிலும் ஒரே ஆலயத்துள் விளங்குகின்றன. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜ கோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மேகநாதர், அம்மன் சௌந்தரநாயகி, லலிதாம்பிகை. தீர்த்தம் சூரிய புஷ்கரணி, கங்காகூபம். தலமரம்-வில்வம். இக்கோவி லின் வடக்குப் பிராகாரத்திலுள்ள இளங்கோவிலில் இறைவர் திருப்பெயர் அருள்மிகு சகலபுவனேசுவரர். அம்மன் மேகலாம்பாள். உள்பிராகாரங்களில் விநாயகர், வில்லேந்திய முருகன், பஞ்சபூதலிங்கங்கள், அஷ்டதிக்பாலகர்கள், சப்தமாதர்கள் பூசித்த லிங்கங்கள், க்ஷேத்திர புராணேசுவரர், கல்யாணசுந்தரர், துர்க்கை, சூரியன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சூரியன் இத்தலத்திற்கு வந்து மேகநாதரை வழிபட்டு கருமைநீங்கிச் செவ்வொளிபெற்று இன்புற்றான் என்பது தலபுராண வரலாறு. சித்திரை 21முதல் 27 வரை உள்ள நாட்களில் காலையில் சூரிய பூசை நடைபெறுகிறது.

காளிதேவி பூசித்த சிறப்புடைய தலம். கோளபன் என்ற மன்னன் இத்தலத்து இறைவனை வழிபட்டு அருள் பெற்ற தலம். சந்திரன், அக்னி, எமன் பூசித்த லிங்கங்கள் மேற்குத் திருமாளிகைப்பத்தி மண்டபத்தில் உள்ளன.

ஸ்ரீமேகநாதர் கோவில் இராஜேந்திர சோழன் செம்பியன்மாதேவி முதலிய சோழர் காலத் திருப்பணியைப் பெற்ற பெருஞ் சிறப்புடையது. கஜப்பிருஷ்ட விமான அமைப்புடையது.

இத்தலத்திலுள்ள கோஷ்டத்திலுள்ள கல்யாணசுந்தரரை மணமாகாத பெண்கள் பிரார்த்தனை செய்து கொண்டு மாலை சார்த்தி அருச்சித்து வழிபட்டால் விரைவில் திருமணம் நிறைவேறப் பெறுகின்றனர்.

இத்தலத்தை திருஞானசம்பந்தரும், திருமீயச்சூர் இளங்கோவிலை திருநாவுக் கரசரும் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்று விளங்குகின்றன.

கல்வெட்டுக்கள் 7 உள்ளன. பரகேசரி, இராஜகேசரி சோழர்களில் நான்கும், பாண்டியர்களில் மூன்றும் உள்ளன.

இத்தலத் திருக்கோவில்கள் திருப் புகலூர் வேளாகுறிச்சி ஆதீனத்துக்குச் சொந்தமானவையாகும்.

திருச்சிற்றம்பலம்

6. கூத்தனூர்

பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்ற வழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடிகொள்சோலைம் மலர் மணங்கமழும் மதிமுத்தே.

-- திருஞானசம்பந்தர்.



பேரளத்திலிருந்து தென்மேற்கே 5கி.மீ. திருத்திலதைப்பதி, திலதைப்பதி, மதிமுத்தம், மந்தாரவனம் அரசலாற்றின் தென்கரையில் கோவில்பத்து என்னு மிடத்தில் இக்கோவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு முத்தீசுவரர் மந்தாரவனேசுவரர். அம்மன் பொற்கொடி நாயகி மற்றும் ஆதிவிநாயகர். தீர்த்தம் சந்திர தீர்த்தம். தலமரம்-மந்தாரை.

ஊர்ப்பெயர் திலதைப்பதி எனவும், கோவில் பெயர் மதிமுத்தம் எனவும் தேவாரத்தில் குறிக்கப்படுகிறது. திலதர்ப் பணபுரி என்னும் பெயர் மருவி திலதைப்பதி என வழங்கலாயிற்று.

இராம இலக்குமணர்கள் தசரத சக்கரவர்த்திக்கும், ஜடாயுவுக்கும் எள்ளும், தண்ணீரும் இறைத்த தலம் எனத் தலப்பெயர்க் காரணம் கூறப்படுகிறது. இதனைக் குறிக்கும் தல ஐதிகச் சிற்பம் கோவிலில் மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. தென்புலத்தார் எனப்படும் பிதிரர்களுக்குச் செய்ய வேண்டிய தர்ப்பணம், சிரார்த்தம் முதலிய கடமைகளைச் செய்தற்குரிய தலம் திலதைப்பதியாகும்.

ஞாயிறு, திங்கள், யானை, சிங்கம், இராமர், இலக்குமணர், காசிமன்னன் சித்தோஜி முதலியோர் வழிபட்ட தலம்.

கயிலைமால்வரையில் ஊர்வசியைக் காதலித்த குற்றம் தீரப் பிரமன் வழிபட்டது. சிவவழிபாட்டை மதியாத குற்றம் தீர இலக்குமி பூசித்தது. தம்மை மதியாத தக்கன் வேள்விக்குச் சென்ற குற்றம் தீர அம்பிகை வழிபட்டது. நற்சோதிகன் என்னும் மன்னன் பிதிரர்களுக்குத் திலதர்ப்பணம் செய்தது முதலிய வரலாறுகள் தலபுராணத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. இத்தலபுராணம் யாழ்ப்பாணம் வதிரிவித்துவான் திரு.சி.நாக லிங்கம் பிள்ளை அவர்களால் பாடியதாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 58 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம்.

இத்தலத்தில் உள்ள சந்திர தீர்த்தத்திலும், அரசலாற்றிலும் தர்ப்பணம், சிரார்த்தம் முதலியன செய்வது மிகச் சிறப்பு.

திருச்சிற்றம்பலம்

7. திருப்பாம்புரம்

சீரணிதிகழ்திரு மார்பில்வெண்ணூலர் திரிபுரமெரிசெய்த செல்வர்
வாரணிவனமுலை மங்கையோர் பங்கர் மான்மறியேந்திய மைந்தர்
காரணிமணி திகழ் மிடறுடையண்ணல் கண்ணுதல் விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தரு நான்மறையாளர் பாம்புர நன்னகராரே.

-- திருஞானசம்பந்தர்.

பேரளத்திலிருந்து மேற்கே 7கி.மீ. பாம்புரம், பாம்புபுரம், உரகபுரம், சேஷபுரி. அரசலாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பாம்புரேசுவரர், அம்மன் வண்டார்பூங்குழலி. தீர்த்தம் ஆதிசேஷ தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. தலமரம் வன்னிமரம். உள்பிராகாரத்தில் இராஜராஜப் பிள்ளையார், முருகன், சூரியன், திருமால், பஞ்சலிங்கங்கள், நால்வர், சனிபகவான், ஆதிசேடன், திருநாவுக்கரசர் முதலிய சன்னிதிகள் உள்ளன. பாம்பு பூசித்ததால் இத்தலம் பாம்புபுரம் என்றும், இறைவனுக்கு பாம்புரேசுவரர் என்றும் பெயர். நாகராஜனாகிய ஆதிசேடனால் வழிபடப் பெற்ற பெருமையுடையது. எட்டு மகா நாகங்களான அனந்தன், வாசுகி, தக்ஷகன், கார்க்கோடகன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகாபத்மன் ஆகியோர் இத்தல இறைவனை வழிபட்டுப் பன்னலமும் பெற்றன. இறைவனருளிய வாறு ஆதி சேடன் மகா சிவராத்தியன்று முதற்காலத்தில் கும்பகோணத்திலுள்ள நாகேசுவரரையும், இரண்டாங் காலத்தில் திருநாகேச்சுரத்திலுள்ள நாகநாத சுவாமியை யும், மூன்றாங்காலத்தில் இத்தலத்திலும், நான்காம் காலத்தில் திருநாகூர் நாகே சுரரையும் வழிபட்டு உடல் வளத்துடன் அருள்நலமும் பெற்று மகிழ்ந்த தலம்.

சர்ப்பதோஷங்கள் நீங்கவும், புத்திரப்பேறு எய்தவும் விரும்புவோர் இத்தலத்திலுள்ள ஆதிஷேச தீர்த்தத்தில் நீராடி இறைவனையும், இறைவியையும் வழிபட்டு நலம் பல பெறலாம்.

இக்கோவிலில் மலைக்கோவிலை வலம் வரும்போது சட்டைநாதரையும் வழிபட்டு வரும்போது திருவீழிமிழலைத் திருக்கோவில் கோபுரத்தைத் தரிசிக்கலாம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 59 வது. திருஞான சம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது.

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 15 உள்ளன. இராஜராஜன், இராஜேந்திரன், திரிபுவனவீரதேவன், குலோத்துங்கன், சுந்தர பாண்டியன், சரபோஜி முதலிய மன்னர்களின் காலத்தைச் சேர்ந்தது. இத்தலம் உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருப்பரம்புரம் எனவும், இறைவன் பாம்புரம் உடையார் எனவும், இறைவி மாமலையாட்டி என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் நான்குகால பூசைகள் காமிகாகம முறைப்படி நடைபெறுகின்றன. மாசிமகத்தன்று பெருவிழா நடைபெறுகிறது.

உபதாது

பொன் முதலிய உலோகங்களைப் போலத் தோற்றமளிக்கும் தாழ்ந்த ஏழு உலோகங்கள்: சுவர்ணமாட்சிகம், தாரமாட்சிகம், துத்தம், காஞ்சயம், ரீதி, சிந்தூரம், சிலாசத்து.

உபதாளம்

ஆதி தாளம், பார்வதி லோசனம், குடுக்கம், சிங்கநந்தம், திரிமாத்திரை.

8. சிறுகுடி

திடமலி மதிளணி சிறுகுடி மேவிய
படமலி யரவுடை யீரே
படமலி யரவுடை யீருமைப் பணிபவர்
அடைவது மமருல கதுவே.

-- திருஞானசம்பந்தர்.

திருப்பாம்புரத்திலிருந்து நேர் மேற்கே 2கி.மீ. திருச்சிறுகுடி, சூக்ஷ்மபுரி. தற்போது செருகுடி என்று அழைக்கப்படும் இத்தல கோவில் அரசலாற்றின் வடகரைப் பகுதியில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய சன்னிதி, மூன்று நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் அருள்மிகு மங்களநாதர் ஒரு பிடி அளவுள்ள பிருதிவிலிங்கம். அம்மன் மங்களநாயகி. தீர்த்தம் மங்களதீர்த்தம் கோவிலின் எதிரேயுள்ளது. தலமரம்-வில்வம்.

திருக்கயிலையில் அம்பிகை இறைவனோடு சொக்கட்டான் விளையாடிய போது இறைவன் சூக்கும வடிவாய்மறைய அம்பிகை இத்தலத்திற்கு வந்து மங்கள தீர்த்தத்தை உண்டாக்கி, சிறுபிடி மண்ணால் சிவலிங்கம் தாபித்து, இறைவனை வழிபட்டு அருள் பெற்றதால் பெருமான் சூக்கும புரீசுவரர் எனவும் தீர்த்தம் மங்கள தீர்த்தம் எனவும், அம்பிகை மங்களநாயகி என்றும் பெயர்.

இறைவனைத் தன் கைச் சிறுபிடி அளவினதாக மணலால் பிடித்துவைத்து அம்பிகை வ்ழிபட்டதால் சிறுபிடி சிறுகுடி என மருவிற்று எனவும் கூறுகின்றனர். இறைவனுக்கு சந்தனாதித் தைலம், புனுகுச் சட்டம் மட்டுமே சாத்தப் பெறுகிறது. குவளை சாத்திய நிலையிலேயே பெருமான் எப்பொழுதும் காட்சியளிக்கிறார்.

கருடனும், கந்தருவரும், செவ்வாயும் வழிபட்டு பேறுபெற்ற தலம்.

இங்குள்ள சந்திரசேகரர் திருவுருவம் தரிசிக்கத்தக்கது. அம்மையைத் தழுவிய நிலையில் அருட்காட்சிதரும் இவர் திருவுருவம் மிக்க அழகுடையது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 60 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

9. திருவீழிமிழலை



அரையார் விரிகோ வணவாடை
நரையார் விடையூர் திநயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உடையா லுணர்வா ருயர்வாரே.

-- திருஞானசம்பந்தர்.

நன்னிலத்திலிருந்து வடமேற்கே 10கி.மீ. வீழிமிழலை. அரசலாற்றின் வடகரையில் இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 7 நிலை இராஜ கோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீழிநாதேஸ்வரர். அம்மன் சுந்தரகுசாம்பிகை. விநாயகர்-படிக்காசு விநாயகர். தீர்த்தம் விஷ்ணு தீர்த்தம் கோவிலுக்கு எதிரே உள்ளது. தலமரம்-வீழி.

திருமால் தேவலோகத்தில் இருந்து விமானம் கொண்டு வந்து அதில் பெருமானை எழுந்தருளுவித்து வழிபட்டுச் சக்ராயுதம் பெற்ற பெருமையுடையது.

திருஞானசம்பந்தரும், திருநாவுக் கரசரும் அடியார்களுடன் தனித்தனியே இரு

பெருமடங்களில் தங்கி ஈசன் அளித்த பொற்காசுகளைக் கொண்டு அடியார் களுக்குத் திருவமுளித்த வரலாற்றுச் சிறப்புடையது.

இறைவன் காத்தியாயன முனிவரின் மகளாகத் தோன்றிய உமையம்மையை மணம்புரிந்து கொண்டு என்றும் மணக் கோலத்துடன் விளங்குவது.

சுவேதகேது என்ற மன்னன் இறைவனை வழிபட்டு எமபயம் நீங்கப் பெற்ற சிறப்புடையது இத்தலம்.

சுவாமிக்குப் பின்புறம் இறைவன் பார்வதியோடு எழுந்தருளியிருக்கும் திருவுரு வங்களைத் தரிசிக்கலாம். இத்தலத்தின் தனிச் சிறப்புக்குரிய கல்யாண சுந்தரர் உமையம்மையைத் தழுவிய நிலையில் மணவாள கோலத்தில் காணப்படுகிறார். பாதத்தில் திருமால் கண்ணைப்பறித்துச் சார்த்திய தாமரை மலர் விளங்குகிறது.

இத்தலத்தில் வேலைப்பாட்டில் மிகச் சிறந்த வௌவால் நந்தி மண்டபம் உள்ளது. இதைப்போன்ற மண்டபம் வேறு எங்கும் காண்பது அரிது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 61 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ள தலம். தலபுராணம் உள்ளது.

இத்தலத்திலுள்ள கல்யாண சுந்தரேசு வருக்கு மாலை அணிவித்து அருச்சனை செய்வித்து வழிபட்டால் திருமணமாகாத ஆண், பெண்களுக்குத் திருமணம் விரைவில் கைகூடும்.

கல்வெட்டுக்கள் 68 உள்ளன. வீழிமிழலை என்றே இத்தலம் குறிக்கப் பட்டுள்ளது. தினமும் 5 கால பூஜை நடைபெறுகிறது. சித்திரையில் பிரமோற் சவம். இக்கோவில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான கோவிலாகும்.

10. அன்னியூர்

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே.

-- திருநாவுக்கரசர்.

திருவீழிமிழலைக்கு வடக்கே 3கி.மீ. திருவன்னியூர் அரசலாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அக்கினிபுரீசுவரர். அம்மன் கௌரியம்மை. தீர்த்தம் அக்னி தீர்த்தம் 'கோவிலுக்கு எதிரேயுள்ளது. தலமரம்- வன்னி.

வன்னி-அனல், அக்கினிதேவன் வழிபட்டதால் இத்தலம் வன்னியூர் என்றும், இறைவனுக்கு அக்கினிபுரீசுவரர் என்றும் தீர்த்தம் அக்கினி தீர்த்தம் என்றும் பெயர் பெற்றது. காத்தியாயன முனிவரின் மகளாகத் தோன்றிய அம்பிகை இறைவனைத் திருமணம் புரிந்து கொள்ள வேண்டித் தவமிருந்து திருவீழிமிழலையில் தன் எண்ணம் ஈடேறப் பெற்றாள் ஏன்பது தலபுராண வரலாறு.

இத்தலத்திலுள்ள தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடுவோர் இரத்த கொதிப்பு, உஷ்ணரோகம் முதலிய நோய்கள் நீங்கி நலமுறுகின்றனர். இத்தலத்தில் உள்ள பஞ்சமூர்த்திகளில் சோமாஸ்கந்தர் திருவுரு வம் மிக்க அழகுடையது. தல ஐதிகவரலாற்றுச் சிற்பங்கள் தென்புறச் சுவரில் உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 62 வது. திருநாவுக்சரசர் பதிகம் பெற்றது. தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

11. சற்குணேஸ்வரபுரம்
(கருவேலி)

மட்டிட் டகுழ லார்சுழ லில்வலைப்
பட்டிட் டுமயங் கிப்பரி யாதுநீர்
கட்டிட் டவினை போகக் கருவிலிக்
கொட்டிட் டையுறை வான்கழல்கூடுமே.

-- திருநாவுக்கரசர்.

திருவீழிமிழலைக்கு மேற்கே 6கி.மீ. திருக்கருவிலிக்கொட்டிட்டை, திருக் கருவிலி. அரசலாற்றின் வடகரைப் பகுதி யில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப் பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு சற்குணநாதேசுவரர் பெரிய சிவலிங்கத் திருவுருவில் காட்சி தருகிறார். அம்மன் சர்வாங்க நாயகி. தீர்த்தம் எமதீர்த்தம். கோவிலுக்கு எதிரே உள்ளது. கருவிலி என்பது ஊர் பெயர் கொட்டிட்டை என்பது கோவில் பெயர்.

பிறவிப்பிணி தீரவேண்டிச் சற்குணன் என்ற மன்னன் வழிபட்டு அருள்பெற்ற தலம். கருவிலி என்பதற்குப் பிறவிப் பிணி தீர்க்கும் பெருமான் உறையும் தலம் என்பதாகும்.

இந்திரன் முதலான தேவர்களும் உருத்திரகணத்தவர்களும் வழிபட்டு அருள் பெற்ற சிறப்புடையது. உலக மக்களை விளித்து அப்பர் அருளும் அரிய அறிவுரைகளைக் கொண்டுள்ளது இத்தலத் திருப்பதிகம்.

தேவாரப்பாடல் பெற்ற காவிரித் தென் கரைத் தலங்களில் 63 வது தலம். திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந் தொகைப் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் உள்ளன. இதில் இரண்டாம் இராசாதிராசன் காலத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டில் இவ்வூரை உய்யக்கொண்டார் வளநாட்டு வெண் ணாட்டுக் குலோத்துங்க சோழ நல்லூராகிய கருவிலிக் கொட்டிட்டை என்று குறிக்கிறது.

12. திருவாஞ்சியம்

படையும் பூதமும் பாம்புமபுல் வாயதள்
உடையுந் தாங்கிய உத்தம னார்க்கிடம்
புடைநி லாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க் கல்லலொன் றில்லையே

-- திருநாவுக்கரசர்.

நன்னிலத்திலிருந்து தென்மேற்கே 7கி.மீ. ஸ்ரீவாஞ்சியம், வாஞ்சியபதி, சந்தனவனம், ஜாந்தாரண்யம், பூகைலாசம், திருவறையூர். புத்தாற்றின் வடகரையில் இக்கோவில் 3-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும் 5 நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வாஞ்சிநாதர். அம்மன் வாழவந்தநாயகி. தீர்த்தம் குப்தகங்கை, யம தீர்த்தம், ஆனந்த கூபம். தலமரம்-சந்தனம். உள்பிராகாரத்தில் எமதருமராஜா, யோகபைரவர், துர்க்கை, வெண்ணெய் பிள்ளையார், காசிவிஸ்வ நாதர், சுந்திரமௌலீசுவரர், பஞ்சபூதங்கள், கஜலஷ்மி, கைலாசநாதர், சனிபகவான், நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருவாஞ்சியம் காசிக்குச்சமமாகச் சொல்லப்படும் ஆறு தலங்களில் ஒன்றாகும்.

திருமால் சிவபெருமானைப் பூசித்துத் திருமகள் தம்மிடம் வாஞ்சையுடன் இருக்குமாறு வரம் பெற்ற திருத்தலம். திருமகளை வாஞ்சித்துப் பெற்றதால் திருவாஞ்சியம் என்று பெயர்.

பிரமதேவன், இந்திரன், பராசரர், அத்திரி, மகுடவர்த்தனன், மாதனுவு, சாருமதி ஆகியோர் வழிபட்ட பெருமைக் குரிய தலம்.

இத்தலத்திலுள்ள குப்தகங்கை கங்கையிற் புனித தீர்த்தமாகும் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் முழுகுவது சிறப்பு.

இயமன் வழிபட்ட தலம். இக்கோவிலில் இயமனுக்குத் தனிக் கோவில் உள்ளது. இவ்வூரில் இறப்பவர்களுக்கு இயமவாதனை இல்லை.

சுவாமியை இயமன் வாகனமாக தாங்கும் பெருமையைப் பெற்றுள்ள தலம்.

காசியில் கங்கை தன்னிடம் மக்கள் போக்கி கொள்ளும் பாவங்கள் தீர கங்கை இத்தல இறைவனை வழிபட்டு, தங்கி இறைவன் தீர்த்தம் கொடுக்கும் சிறப்பால் கங்கை புனிதமடைகிறாள்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 70 வது. மூவர்பாடிய தேவாரத் திருப்பதிகம் பெற்றது. மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், தலபுராணம் பாடிய களந்தைக் குமரன் முதலியோர் இத்தலத்திற்கு பாடல்கள் அருளியுள்ளனர்.

கல்வெட்டுக்கள் 27 உள்ளன. இவ்வூரை திருவாஞ்சியம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. ஆடிப்பூரம், கார்த்திகை ஞாயிறு, மாசிமகம் முதலிய நாட்களில் சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன.

13. திருக்கொண்டீச்சரம்

கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பால்
மண்டி யேச்சுணும் மாதரைச் சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள் செய்தவக்
கொண்டி யீச்சுர வன்கழல் கூறுமே.

-- திருநாவுக்கரசர்.

நன்னிலத்திலிருந்து கிழக்கே 3கி.மீ. வில்வாரண்யம். முடிகெண்டான் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் கோவிலைச் சுற்றி அகழியுடன் கிழக்கு நோக்கியதும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பசுபதிநாதர். அம்மன் சாந்தநாயகி. தீர்த்தம் க்ஷீரபுஷ்கரணி. தலமரம் வில்வம்.

காமதேனு வழிபட்ட தலம். உமையம்மை பசுவடிவாய் இறைவனைத் தேடிக் கொண்டு கொம்பினால் பூமியைக் கிளறிவரும்போது இத்தலத்தின் சிவலிங்கத்தின் தலையில் கொம்புபட்டு உதிரம் வருதலைக்கண்டு இறைவி அஞ்சி வருந்தித், சிவலிங்கத்தின் முடிமீது சொரிந்து காயத்தை ஆற்றி வழிபட்டதாக தலவரலாறு. இப்போதும் சிவலிங்கத்தின் பாணத்தில் பசுவின் கொம்பு பதிந்த வடு ஆழமாக உள்ளது.

அம்பிகை பசுஉருவாய்ப் பூசித்த ஐதீகச் சிற்பமும் இத்தலத்தில் உள்ளது.

உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், மகாலஷ்மி, சூரியன், சந்திரர், பைரவர், சுரஹரேசுவர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இக்கோவில் தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் 72 வது தலம். திருநாவுக்கரசர் அருளிய பதிகம் பெற்றது.

கல்வெட்டில் விசயநகர வேந்தராகிய வீரகிருஷ்ணதேவராயர் கல்வெட்டு ஒன்று உள்ளது. உதயகிரிகோட்டையை கைப்பற்றிய செய்தியை குறிக்கிறது.

தினமும் நான்கு கால பூஜை. கார்த் திகை வியாழன் அன்று உற்சவம் நடைபெறுகிறது.

14. வடகரை

அரவச் சடைமேன் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்களாளும்
பரவிப் பொலியும் பனையூரே.

-- திருஞானசம்பந்தர்.

நன்னிலத்திலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. திருப்பனையூர், தாலவனம். முடிகொண்டான் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் கிழக்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சௌந்தரேசுவரர். அம்மன் பெரிய நாயகி. தீர்த்தம் பராசர, அமிர்த புஷ்கரணி, மகாலஷ்மி முதலிய தீர்த்தங்கள். தலமரம்-பனைமரம்.

பனைமரத்தைக் தலமரமாகக் கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ளதால் பனையூர் என்று பெயர். இத்தலத்தில் ஆண் பனை, பெண் பனை ஆகிய இருமரங்கள் இணைந்து தாமே வளர்ந்து வரும் அற்புதத்தை இத்தலத்தில் காணலாம்.

பராசர முனிவர் வழிபட்ட தலம். க்ரிகாற்சோழன், முசுகுந்தன், மகாலஷ்மி முதலியோர் வழிபட்ட தலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புகலூர் இறைவனிடம் பொன் பெற்று வரும்போது இத்தலத்தின் புறத்தே இறைவர் திருக்காட்சி காட்டியருளினார் என்பது பெரிய புராண வரலாறு.

எட்டு வயது வரை இத்தலத்தில் வளர்ந்த கரிகாற்சோழ மன்னனுக்குத் துணையிருந்து காத்தருளிய இத்தல விநாயகர் துணையிருந்த விநாயகர் எனப் பெயர் பெற்றார்.

இத்தலத்தில் விளங்கும் சோமாஸ் கந்தரின் கையில் மாங்கனி உள்ளது. உள்பிராகாரத்தில் முருகன், இத்தலத்தைச் சுற்றியுள்ள ஏழு தல இலிங்கங்கள், கஜலஷ்மி, பராசரர் பூசித்த தாலவனேசுவரர், பைரவர், பராசரமுனிவர், துர்க்கை, நடராஜர் முதலிய சன்னிதிகள் அமைந்துள்ளன.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 73 வது. திருஞான சம்பந்தர், சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது.

சுந்தர பாண்டியன், பராக்ரம பாண்டியன், இராசாதிராச சோழன், குலோத்துங்கன் ஆகியோர் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இத்தலம் பனையூர் நாட்டின் தலையூராக விளங்கியது. என அறியப்படுகிறது.

தினமும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

15. விற்குடி

வடிகொண்மேனியர் வானமாமதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியின ருடைபுலிய தளார்ப்பர்
விடைதேறுமெம் மானமர்ந்தினி துறை விற்குடிவீரட்டம்
அடியராகி நின் றேத்தவல்லார்தமை யருவினையடையாவே.

-- திருஞானசம்பந்தர்.

நன்னிலத்திலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. திருவிற்குடி, திருவிற்குடிவீரட்டம், பிருந்தைமயானம். வெட்டாற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-04 ஏக்கர் நிலப்பரப்பளவில், மேற்கு நோக்கிய சன்னிதி, 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீரட்டானேசுவரர். அம்மன் ஏலவார்குழலி. தீர்த்தம் சக்கர தீர்த்தம் கோவிலுக்கு எதிரில் உள்ளது. பின்புறம் சங்கு தீர்த்தம். தலவிருட்சம்-துளசி.

இறைவனது வீரச் செயல்கள் வெளிப்பட்ட தலங்களுள் எட்டு. அவற்றில் இத்தலத்தில் இறைவன் சலந்தராசுரனைச் சம்ஹரித்த தலம். சலந்தரனைச் சம்கரித்த மூர்த்திகளில் கையில் சக்கர ஆயுதம் உள்ளது. மகாமண்டபத்தில் சம்கரித்த மூர்த்தி உள்ளார்.

திருமால் சலந்தராசுன் இறந்தபின் அவன் மனைவி பிருந்தையின் மேல் மையல் கொண்டு, அவ்வசுரன் வடிவோடு என்று அடைந்து இன்புற்றார். பிருந்தை திருமாலின் வஞ்செயலை அறிந்து சபித்து உயிர்துறந்தாள். இப்பாவத்தைப் போக்க திருமால் இத்தலத்தில் உள்ள இறைவனை வழிபட்டு சாபம் நீங்கப் பெற்றார். வெளிப்பிராகாரத்தில் கீழ் வாயிலில் திருமாலுக்காகப் பெருமான் பிருந்தையைத்

துளசியாக எழுப்பிய இடமும், திருமால் வழிபட்ட சிவாலயமும் உள்ளன.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 74 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பதிகம் பெற்றது. மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர், பட்டினத்தார் முதலியோர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளனர்.

16. திருப்புகலூர்

செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந்நின் றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே.

-- திருநாவுக்கரசர்.

நன்னிலத்திலிருந்து கிழக்கே 8கி.மீ. திருப்புகலூர், திருப்புகலூர்வர்த்தமானீச்ரம் என்னும் இரு தேவாரத் தலங்கள் ஒரே கோவிலில் அமைந்துள்ளன. முடிகொண்டான் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-67 ஏக்கர் நிலப்பரப்பளவில், நாற்புறமும் அழகிய அகழியால் சூழப்பெற்று கிழக்கு நோக்கிய சன்னிதியும், 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அக்னீசுவரர். அம்மன் மனோன்மணி. தீர்த்தம் அக்கினி தீர்த்தம் கோவிலைச் சுற்றியுள்ள அகழி. தலமரம்-புன்னைமரம்.

இறைவன் திருவடிகளைப் புகலாக அடைந்த ஊர் என்ற பொருளில் இவ்வூர்ப் பெயர் உள்ளது. அக்கினிதேவன் பூசித்த பெருமையும், பரத்துவாசர் முனிவர் வழிபட்ட தலம். திருநாவுக்கரசர் முத்திப்பேறு எய்திய தலம். 63 நாயன்மார்களுள் முருகநாயனார் அவதரித்து இறைவனுக்குப் பூத்தொண்டு புரிந்த சிறப்புடைய தலம். திருஞானசம்பந்தரும், அப்பரும், சிறுத்தொண்டர், நீல நக்கர் முதலானரோடு இத்தலத்தில் முருக நாயனார் திருமடத்தில் உடனுறைந்த மகிழ்ந்த செய்தியைப் பெரிய புராணத்தில் கூறப்படுகிறது. சுந்தரர்க்கு இறைவன் செங்கற்களைப் பொன்னாக்கி அளித்த அற்புத வரலாறு இத்தலத்தில் நிகழ்ந்ததேயாகும். வடமொழியில் இத்தலத்தை புன்னாகவனம், சரண்யபுரம், இரக்தாரண்யம் என குறிக்கப்படுகிறது.

திருநாவுக்கரசர் முத்திப்பேறெய்தியதற்கு முன்னமே புகலூர் என்னும் பெயர் வழங்குதலால் தேவர்களும், மற்றும் முனிவர்களும் புகலாக அடைந்த ஊர் திருப்புகலாக அடைந்துள்ள தலம் என்றும் கொள்ளலாம்.

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 75,76 வது தலங்களாக போற்றப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய திருப் பதிகங்கள் இத்தலத்திற்குள்ளன. பரண தேவர், பட்டினத்துப் பிள்ளையார், நம்பி யாண்டார் நம்பி, சேக்கிழார் முதலியோர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர்.

கல்வெட்டுக்கள் 67 உள்ளன. இராஜ ராஜசோழன், இராசேந்திர சோழன், முதற்குலோத்துங்கன், மூன்றாங்குலோத்துங்கன் காலத்தியவை.

நாள்தோறும் 6 கால பூஜை நடைபெறுகிறது. சித்திரைச் சதய விழா 10 நாட்களில் அப்பர் வரலாற்று நிகழ்ச்சிகள் ஐதிக விழாவாக கொண்டாடப்படுகிறது.

இவ்விரு தலங்களும் வேளாகுறிச்சி ஆதீனத்தின் பரிபாலனத்தில் விளங்குகின்றன.

17. திருக்கண்ணபுரம்

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளு மவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க
எங்கும விராமன தீச்சரமே.

-- திருஞானசம்பந்தர்.

நன்னிலத்திலிருந்து கிழக்கே 11கி.மீ. திருஇராமனதீச்சரம். முடிகொண்டான் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் கிழக்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு இராமநாதேசுவரர். அம்மன் சரிவார் குழலி. தீர்த்தம் இராம தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. தலமரம் சண்பகம்.

இராமனது ஈச்சரம் என்ற சொற்கள் கூடி இராமனதீச்சரம் ஆயிற்று. இத்தலத்தில் இராமர் வழிபட்டு அருள் பெற்ற சிறப்புடையது. இராமர் இத்தலத்தை வழிபடவந்தபோது நந்திதேவர் உள்ளே செல்லத் தடுத்ததாலும், அம்பிகை அவர்மீது கருணை கொண்டு அனுமதித்ததாகவும் அதனால் இராமநந்தீசுவரம் இராமனதீசர மாயிற்று என்றும் கூறப்படுகிறது.

சோமாஸ்கந்தர் திருவுருவச் சிலையில் நந்திதேவர் இடம் பெற்றுள்ளார். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், கஜலஷ்மி, காலபைரவர், நால்வர், சூரியன், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 77 வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. இத்தலத்தில் 5 கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவன் இராமனதீச்சரமுடையார் என்றே குறிக்கப்பட்டுள்ளது. குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூருக்கு மேற்கே புகழ்பெற்ற வைணவத் தலமான சௌரிராஜப் பெருமாள் திருக்கோவில் உள்ளது.

18. திருப்பயத்தங்குடி

ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகித்
தீயறா நிருதிவாயுத் திப்பிய சாந்தனாகிப்
பேயறாக் காட்டிலாடும் பிஞ்ஞக னெந்தைபெம்மான்
தீயறாக் கையர் போலும் திருப்பயற் றூரனாரே.

-- திருநாவுக்கரசர்.

திருவிற்குடிக்கு கிழக்கே 4கி.மீ. திருப்பயற்றூர், பயற்றூர், வெட்டாற்றின் வடபகுதியில் இக்கோவில் 42 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருப்பயற்று நாதர். அம்மன் காவியங் கண்ணி. தலதீர்த்தம் கருணா தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. தலமரம்- சிலந்தி.

புஞ்சைப் பயிர்களாகப் பயறுவகைகள் மிகுதியாக விளையும் காரணத்தினால் இவ்வூர் பயற்றூர் என்று பெயர். வரிவிலக் கின் பொருட்டு வணிகன் ஒருவனது வேண்டுகோளுக்கு இணங்க இத்தலத்து இறைவன் அவனது மிளகு மூட்டைகளைப் பயறு மூட்டைகளாக மாற்றித் தந்தமையால் இத்தலம் திருப்பயற்றூர் என வழங்கப் பெறலாயிற்று எனச் செவிவழிச் செய்தி கூறுகிறது. பஞ்சநதவாணன் என்பவன் தனக்கு உற்ற கண்ணோய் இத்தல தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டு கண்ணோய் நீங்கப் பெற்று நிலம் அளித்துள்ளதை இத்தலக் கல்வெட்டுக் களில் அறியலாம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 78 வது. திருநாவுக் கரசர் பதிகம் பெற்றது. நாள்தோறும்

திருச்சிற்றம்பலம்

19. திருச்செங்காட்டங்குடி

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.

-- திருஞானசம்பந்தர்.

திருக்கண்ணபுரத்திலிருந்து தென்கிழக்கே 2கி.மீ. கணபதீச்சுரம் முடிக்கொண்டான் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 1-91 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய சன்னிதி, 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கணபதீச்சுரர், உத்தராபதீஸ்வரர். அம்மன் வாய்த்த திருக்குழலம்மை. தீர்த்தம் சத்தியபுஷ்கரிணி கோவிலுக்கு முன் உள்ளது. தலமரம் ஆத்தி. உள்பிராகாரத்தில் வாதாபி விநாயகர், முருகன், சத்யாஷாடலிங்கம், நவதாண்டவ மூர்த்தி, நடராஜர், சிறுத்தொண்டர், திருவெண்காட்டுநங்கை, சீராளதேவர், சந்தன நங்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

விநாயகர் கயமுகாசுரனைக் கொன்ற கொலைப்பழி தீர வழிபட்ட தலம் ஆதலால் கோவில் கணபதீச்சரம் எனவும். அவ்வசுரனது குருதிபடிந்து செங்காடாயினமையால் ஊர் செங்காட்டங்குடி எனவும் வழங்கப் பெறுகின்றன.

இறைவன் பைரவ வேடங்கொண்டு சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக் கறியமுது கேட்டுவந்து. அமுதளித்த சிறுத்தொண்டர் அவருடைய மனைவியார் திருவெண்காட்டுநங்கை, மகனார் சீராளதேவர், பணிப்பெண் சந்தன நங்கை ஆகியோர்க்கு அருள்புரிந்த அற்புத வரலாறு நிகழ்ந்த தலம்.

தெய்விகக் கலைச் சிற்பங்களாகிய நவதாண்டவமூர்த்திகள், துவாரபாலகர்கள் ஆகிய திருவுருவங்கள் இத்திருக்கோவில் உள்ளன.

சிறுத்தொண்டர் பல்லவ மன்னனின் சேனாதிபதியாக வாதாபி சென்று சாளுக்யரோடு போர் செய்து வாகை சூடி வந்தபோது கொண்டுவந்த வாதாபி விநாயகர் இக்கோவிலில் விளங்குகிறார்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இக்கோவில் 79 வது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம். சுந்தரர், சேக்கிழார், பட்டினத்தார், பரணதேவர், காளமேகப்புலவர் முதலியோர் பாடிய பல பாடல்கள் உள்ளன.

முதலாம் இராஜராஜன் முதலாக ஏழு சோழ அரசன் காலத்தியதும், பராக்கிர பாண்டியன், வீரவிருப்பண்ண உடையார், விஜயநகர அரசர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் பல உள்ளன. இத்தலம் கயாமாணிக்க வளநாட்டு மருகல் நாட்டுத் திருச்செங்காட்டங்குடி எனவும், இறைவர் கணபதீச்சரமுடைய நாயனார் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது. ஆண்டுதோறும் சித்திரைப் பரணியில் சிறுத் தொண்டர் அளித்த பிள்ளைக் கறியமுதை உண்ணப் பெருமான் உத்தராபதீசுவராக எழுந்தருளிவந்த ஐதிகவிழா நிகழ்கிறது.

20. திருமருகல்

பெருக லாந்தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதொ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

-- திருநாவுக்கரசர்.

திட்டச்சேரிக்கு மேற்கே 5 கி.மீ. புத்தாற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-05 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய சன்னிதி, 68 அடி உயர இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மாணிக்கவண்ணர். அம்மன் வண்டுவார்குழலி. தலதீர்த்தம் மாணிக்க தீர்த்தம். தலமரம் வாழை. விநாயகர் விடந்தீர்த்த விநாயகர். தலவிருட்சமான மருகல் என்பது ஒருவகை வாழை யாதலால் இப்பெயர் பெற்றது.

பாண்டியநாட்டு வணிகனாகிய தாமன் என்பவன் தன் பெண் மக்கள் எழுவரில் ஒருத்தியைத் தன் மருமகனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாக வாக்களித்துவிட்டு அவர்களுக்குப் பருவம் வந்த காலத்து ஒவ்வொருத்தியாகப் பிறருக்கு மணம் செய்து கொடுத்து வந்தான். அதனை உணர்ந்த ஏழாமவள் தன்னையும் பிறருக்கு மணம் செய்வித்து தாய்மாமனை தந்தை வஞ்சிப்பார் என்றறிந்து தாய்தந்தையர் அறியாமல் தன் தாய் மாமனோடு உடன்போக்கு நிகழ்த்தினாள். இத்தலத்திற்கு வந்து ஒரு திருமடத்தில் இரவில் தங்கினாள். அன்றிரவு வினைவயத்தால் குமரனை பாம்பு தீண்டி இறந்தான். இதைக் கண்டு அவள் இறைவனை நோக்கி முறையிட்டு புலம்பினாள். சுவாமி தரிசனத்திற்காக வந்த திருஞானசம்பந்தர் இவள் அழுகை ஒலி அருள் சுரக்கச் செய்தது. சுவாமிகள் கருணை கொண்டு திருப்பதிகம் பாடி அவனை எழுப்பித்தந்து தன் திருமுன்பே அவர்களுக்குத் திருமணம் முடித்தார் என்பது இத்தலத்தைப் பற்றிய சிறந்த தல வரலாறு ஆகும்.

கோச்செங்கட்சோழ நாயனார் எழுப்பிய 70 மாடக் கோவில்களில் இத்தலமும் ஒன்றாகும்.

இத்திலத்தின் அருகில் சிறுத்தொண்ட நாயனாரின் திருமகனார் சீராளதேவர் கல்வி பயின்ற பள்ளியும், பின்புறம் அவர் பெயரால் சீராளன் குளமும் உள்ளன.

தோவரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 80 வது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழில் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

5 கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை பௌர்ணமியில் உற்சவம் நடைபெறுகிறது.

21. சீயாத்தமங்கை

திருமலர்க் கொன்றைமாலை
திளைக்கும்மதி சென்னிவைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோடுட
னாவது மேற்பதொன்றே
பெருமலர்ச் சோலைமேக முரிஞ்
சும்பெருஞ் சாத்தமங்கை
அருமல ராதிமூர்த்தீயய
வந்தி யமர்ந்தவனே.

-- திருஞானசம்பந்தர்.

திட்டச்சேரிக்கு மேற்கே 3 கி.மீ. திருச்சாத்தமங்கை அயவந்தி. முடிகொண் டான் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், 60அடி உயர இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அயவந்தீசுவரர் மேற்குநோக்கியும், அம்மன் இருமலர்க் கண்ணம்மை தனிச்சன்னிதியில் மேற்கு நோக்கியும் உள்ளனர். தலமரம்-கொன்றை.

கோவிலின் பெயர் அயவந்தி பிரமனால்

பூசிக்கப்பெற்ற காரணம் பற்றி அயவந்தி என்னும் பெயர் ஏற்பட்டது என்பர்.

திருநீலநக்க நாயனார் அவதரித்ததும், திருத்தொண்டு புரிந்ததும் இத்தலமேயாகும். ஒரு சமயம் நாயனார் தன் மனைவியாருடன் இத்தல இறைவனை வழிபடத் திருக்கோவிலுக்குச் சென்றார். அப்போது ஒரு சிலந்திப் பூச்சி இலிங்கத்தின் மீது விழுந்தது. மனைவியார் அன்பு மேலீட்டினால் அப்பூச்சியை வாயால் ஊதி அகற்றினார். இதைப் பார்த்த நாயனார் தமது மனைவியாரின் இச்செயல் தகாதது என்று எண்ணி அவரைத் துறந்தனர். மனைவியாரும் வீடு செல்லாது கோவிலில் கவலையுடன் இருந்தார். அன்று இரவு வீட்டில் நாயனார் தூங்குகையில் சிவபெருமான் அவருடைய கனவில் தோன்றி அவர் மனைவியார் ஊதின இடந்தவிர ஏனைய இடமெல்லாம் சிலந்தியின் கொப்புளம் இருப்பதைக் காட்டி அவ்வம்மையாருடைய அன்பின் பெருக்கை வெளிப்படுத்தி அவரை நாயனாரோடு கூட்டுவித்த பெருமை வாய்ந்த தலமாகும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளியபோது திருநீலநக்கர் வரவேற்று அவருடைய நட்பைப் பெற்றதும் இத்தலமேயாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 81 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 7 உள்ளன. திரிபுவனச்சக்கரவர்த்தி, குலோத்துங்க சோழர், இராசராசதேவர் காலத்தியவை. ஊரின் பெயர் சாத்தமங்கலம், சாத்தமங்கை எனவும், இறைவர் அயவந்தி உடையார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. 4 கால பூஜை. ஆவணி மூலத்தில் பஞ்சமூர்த்தி புறப்பாடு நடைபெறுகிறது.

22. திருப்பள்ளிமுக்கூடல்

ஆராத இன்னமுதை அம்மான் றன்னை ஆயனொடுமா லறியாத ஆதி யானைத்
தாரரும் மலர்க்கொன்றைச் சடையான் றன்னைச் சங்கரனைத் தன்னொப்பா
ரில்லா தானை
நீரானைக் காற்றானைத் தீயா னானை நீள்விசும்பாய் ஆழ்கடல்க ளேழுஞ் சூழ்ந்த
பாரானைப் பள்ளியின்முக் கூட லானைப் பயிலாதே பாழேநான் உழன்ற வாறே.

-- திருநாவுக்கரசர்.

நன்னிலத்திலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. திருப்பள்ளியின்முக்கூடல். வெட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் கிழக்கு நோக்கியதும், இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு முக்கோணநாதேசுரர். அம்மன் மைமேவுங்கண்ணி. தலமரம்-வில்வம். தீர்த்தம் முக்கூடல் தீர்த்தம் கோவிலுக்கு எதிரே உள்ளது. இத்தீர்த்தம் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய நதிகள் கூடும் திரிவேணிசங்கமத்துக்கு நிகரானதால் முக்கூடல் தீர்த்தம் என வழங்கப்படுகிறது.

இராமர் பூசித்த மூர்த்தியைக் கொண்டது. மூர்க்கரிஷி பூசித்த தலம்.

இத்தலத்து இறைவன் மிக்க பெருமையுடையவர் என்பதை அப்பர் பெருமான் அருளிய திருத்தாண்டகப் பாடலால் அறியலாம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 86 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

திருவாரூர்ப் புராணத்தில் இத்தலப் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. இதில் சோழ

மன்னன் ஒருவன் வேட்டையாடக் குதிரை மீது ஏறி இவ்வூரையடைந்தான் என்றும், பொழுது ஆனதால் இத்தலத்தில் தங்க நேர்ந்தது என்றும், சிவதரிசனம் செய்யாமல் உணவருந்தான் மன்னன் என்றறிந்த குதிரைக்காரன் கொள்ளுப் பையைச் சிவலிங்கமாக அலங்கரித்து வைத்து மன்னனுக்குக்காட்டி உண்ணச் செய்தான் என்றும், பின்னர் அப்பையை எடுக்க முயன்றபோது அதுவே சிவலிங்கமாக மாறியது என்றும் இத்தலப் பெருமைகளைக் கூறும் தலவரலாறு ஆகும்.

தபோவதனி என்னும் அரசிக்கு அம்பிகை இத்தலத்தில் தாமரைமலரில் அழகிய குழந்தையாய்த் தோன்றினாள் என்றும் அப்பெண் மணப் பருவம் உற்றபோது பெருமான் வேதியராக வந்து அவளை மணந்து அருள்புரிந்தனன் என்றும் அம்பிகையின் பெருமை சொல்லப்படுகிறது. கல்வெட்டுக்களில் மூன்றாம் இராஜராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இத்தலத்தில் உள்ளன.

இவ்வூர்க்கு நேர்மேற்கே இராமசாமி கோவிலும், கயாகரைத்தலமும் தரிசிக்கத் தக்கது.

23. வடகண்டம்

அரியு நம்வினை யுள்ளன வாசற
வரிகொள் மாமணி போற் கண்டம்
கரிய வன்றிக மூங்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே.

-- திருஞானசம்பந்தர்.

திருக்கண்ணமங்கைக்கு வடமேற்கே ஒரு கி.மீ. திருக்கரவீரம், கரையபுரம். ஓடம்போக்கியாற்றின் வடபகுதியில் இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோவில் பெரியது. விமானங்கள் உயரமானவை. கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக பெரிய திருவுருவத்தோடு அருள்மிகு கரவீரநாதர். அம்மன் பிரத்தியட்ச மின்னம்மை. தலதீர்த்தம்-அனவரத தீர்த்தம். தலமரம்-அலரி.

கரவீரம் என்பதற்குப் பொன்னலரி என்பது பொருள், அலரியைத் தலமரமாகக் கொண்ட இத்தலம் கரவீரம் எனப்படுகிறது. கௌதமர் பூசித்த தலம்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரையில் இத்தலம் 91 வது. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார்.

நான்கு கால பூஜை நடைபெறுகிறது. இவ்வூரின் தென்கிழக்கே திருக்கண்ண மங்கையில் ஸ்ரீ பக்தவச்சல பெருமாள் கோவில் உள்ளது.

24. மணக்கால்

மறையணி நாவினானை
மறப்பிலார் மனத்துளானைக்
கறையணி கண்டன்றன்னைக்
கனலெரி யாடினானைப்
பிறையணி சடையினானைப்
பெருவேளூர் பேணினானை
நறையணி மலர்கள்தூவி
நாடொறும் வணங்குவேனே.

-- திருநாவுக்கரசர்.

நன்னிலத்திலிருந்து தென்மேற்கே 10கி.மீ. திருப்பெருவேளூர், மணக்கால் ஐயன்பேட்டை. வெட்டாற்றின் வட கரையில் இக்கோவில் 69செண்ட் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், 5 நிலை இராஜகோபுரம், பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அபிமுகேசுரர், பிரியாஈசுரர். அம்மன் ஏலவார்குழலி. தீர்த்தம் சரவணப் பொய்கை கோவிலின் பின்புறம் உள்ளது. தலமரம்-வன்னி. இறைவன் சன்னிதியில் மலையின் அடிப்பகுதியில் விநாயகரும், அர்த்தநாரீசுரரும் விளங்குகின்றன. மலை சோமாஸ் கந்தர் சுவாமி விமானங்களுடன் வானளாவி விளங்குகிறது.

செவ்வேளாகிய முருகன் வழிபட்டதால் இத்தலம் பெருவேளூர் எனப்பெற்றது. கோச் செங்கட் சோழன் கட்டிய மாடக் கோவில்களில் ஒன்று. மோகினி வடிவமெடுத்த திருமால், அவதார நோக்கம் ஈடேறிய பிறகு தன்பழைய ஆணுருவத்தைப் பெறவேண்டி வழிபட்ட தலம். திருமால் இவ்வாலயத்தில் உள்ளார். பிருங்கி முனிவர் தவமிருந்து இறைவனது அருட்காட்சி கண்டருளிய சிறப்புடையது. அம்பிகை இராஜராஜேஸ்வரியாய் அமர்ந்த நிலையில் விளங்கும் பெருமை உடையது. கௌதமர் வழிபட்டது. முருகன் இத்தலத்தில் தங்கி தவம் செய்து தன்பெயரால் தீர்த்தம் உண்டாக்கி வழிபட்டு வேலாயுதமும், அருளாற்றலும் பெற்றதும், கங்கை தன்னிடம் வந்தடைந்த பாவங்கள் நீங்கச் சரவணப் பொய்கையில் நீராடி வழிபட்டு அருள்பெற்றதும் இத்தலமேயாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென் கரையில் இத்தலம் 92 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. சுந்தரர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

25. சிமிலி

தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைச் சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை
அண்டத்துக் கப்பாலைக் கப்பாலானை ஆதிரைநா ளாதரித்த அம்மான் தன்னை
முண்டத்தின் முளைத்தெழுந்த தீயானானை மூவுருவத் தோருருவாய் முதலாய் நின்ற
தண்டத்திற் றலையாலங் காடன் தன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே.

-- திருநாவுக்கரசர்.

எண்கண்ணிலிருந்து வடக்கே 4கி.மீ. திருத்தலையாலங்காடு, தலையாலங்காடு, தலையாலங்கானம். சோழசூதாமணியாற்றின் கரையில் இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நர்த்தனபுரீசுவரர். அம்மன் திருமடந்தையம்மை. தீர்த்தம் சங்கு தீர்த்தம், தலமரம்-ஆலமரம்.

ஆலங்காடு என்னும் பெயருடைய ஊர்களில் முதலில் உள்ளதால் தலையாலங்காடு என வழங்கப்படுகிறது. தாருகாவனத்து முனிவர்கள் இறைவனை அழித்தற் பொருட்டு ஏவிய முயலகனை அடக்கி அவன் முதுகின் மீது இறைவன் நடனம் புரிந்தருளிய தலம். கபில முனிவர் பூசித்த சிறப்புடையது. சங்க காலத்தில் இத்தலத்தில் பாண்டியன் நெடுஞ் செழியனுக்கும் ஏனைய தமிழ்வேந்தர் இருவர்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. பாண்டியன் வெற்றிபெற்றான். தலையானங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான் எனப் புறநானூற்றில் அறிகிறோம்.

தற்போது தெற்கு நோக்கிய இக்கோவிலில் சுவாமி, அம்மன் சன்னிதிகள் கொண்ட கோவில்கள் மட்டுமே உள்ளது.

வெள்ளைத் தழும்பு உள்ளோர் இக்கோவிலின் முன்உள்ள தீர்த்தத்தில் நீராடிச் சிவபிரானுக்கு விலக்கிட்டு வழிபட்டால் தோல் நோய் விரைவில் நீங்கிக் குணம் பெறுவர் என்பது இவ்வூரின் தனிச் சிறப்பாகும்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென் கரையில் இத்தலம் 93 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. சுந்தரர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

26. குடவாசல்

திகழுந்திரு மாலொடு நான்முகனும்
புகழும்பெரு மானடி யார்புகல
மகிழும்பெரு மான்குட வாயில்மன்னி
நிகழும்பெருங் கோவில் நிலாயவனே.

-- திருஞானசம்பந்தர்.

நன்னிலத்திலிருந்து மேற்கே 16கி.மீ திருக்குடவாயில், குடவாயில், குடவாயிற் கோட்டம். கதலிவனம், கோண்த்தானம், வன்மீகாசலம். புத்தாற்றின் தென்பகுதியில் இக்கோவில் உள்ளது. 80 அடி உயர இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கோணேசுரர். அம்மன் பெரிய நாயகி. தீர்த்தம் அமிர்த தீர்த்தம். தலமரம் வாழை.

கோச்செங்கட் சோழமன்னர் கட்டிய மாடக் கோவில்களில் குடதிசை மேற்கு நோக்கிய வாயில் உடைய கோவிலைப் பெற்றதால் இத்தலம் குடவாயில் எனவும், கோவில் குடவாயிற் கோட்டம் எனவும் வழங்கப்படுகிறது.

இறைவன் உலக அழிவின்போது உயிர்களனைத்தையும் அமிர்த குடத்திலிட்டு குடத்தின் வாயில் சிவலிங்கமாயிருந்து காத்தமையால் குடவாயில் கோணேச மூர்த்தியாகவும், மீண்டும் உலகப் படைப்பின்போது குடத்தை உடைக்க உடைந்த குடத்தின் வாய்பாகம் இத்தலத்தில் அமிர்தத்துடன் விழ குடவாயில் என்னும் தலமாகவும் அமிர்தம் வழிந்து தேங்கிய இடம் அமிர்ததீர்த்தத் திருக்குளமாகவும் விளங்குகிறது.

கருடன் தன் அலகால் தீண்டி வழிபட்ட சுவடுகளோடு பெருமான் காட்சியளிக்கிறார். அம்பிகையே துர்க்கையாக விளங்குவ தால் இக்கோவில் துர்க்கை இல்லை.

சங்க நூல்களில் இத்தலமும், கோவிலும் குறிக்கப்படுகிறது. சோழன் சோச்செங்கணான் சேரமான்கணைக் காலிரும் பொறையுடன் போர் புரிந்து வென்று அச்சேரனைக் குடவாயிற் கோட்டத்தே சிறைவைத்தான் என்ற செய்தி புறநானூற்றில் குறிக்கப்படுகிறது. குட வாயில் சோழர்களின் கருவூலநிலயம் இருந்த இடமாக விளங்கிய செய்தியைக் குடவாயில் கீரத்தனார் பாடிய அகநானூற்றுப் பாடலில் அறியலாம். தி.பி. 2000 ஆண்டுகளுக்கு முன்பே இத்தலம் சிறப்புற்று இருந்தது எனலாம்.

தேவாரத்திருப்பதிகங்கள் பெற்ற சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 94 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் போற்றிப் பரவிய தலம்.

தலபுராணம் வித்துவான் இரத்தின தேசிகர் இயற்றியுள்ளார். இப்புராணத்தில் திரணபிந்து எனும் முனிவர்க்கு குடத்தில் வாயிலில் சிவபெருமான் வெளிப்பட்டு அவரது குட்டரோகத்தைத் தீர்த்ததாகவும், ஜடாயு, அக்னி, சூதமகரிஷி, பிருகு முனிவர் பலரும் வழிபட்டு அருள் பெற்றதாகவும் தலபுராணம் கூறுகிறது.

தி.பி. 9-13ஆம் நூற்றாண்டுகளில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மூன்று இராஜகோபுரவாயிலும், இரண்டாம் கோபுர வாயிலும் காணப்படுகின்றன.

5 கால பூஜை. திருவாதிரை மற்றும் மாசி மகத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

27. திருக்களம்பூர்

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

-- திருஞானசம்பந்தர்.

குடவாசல் இருந்து தென்மேற்கே 6கி.மீ. திருக்கொள்ளம்பூதூர். கூவிளவனம், பிரமவனம், பஞ்சாக்கரபுரம், காண்டீபவனம். வெட்டாற்றின் கரையில் இக்கோவில் 2-71 ஏக்கர் நிலப்பரப்பளவில் (459×231), 75அடி உயர 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வில்வாரண் யேசுவரர். அம்மன் சௌந்தரநாயகி. தீர்த்தம் பிரமதீர்த்தம் கோவிலுக்கு முன்னால் உள்ளது. தலமரம்-வில்வம். கூவிளம் எனபதற்கு வில்வம் என்பது பெயர் கூவிளம்புதூர்-கொள்ளம்பூதூர் என மருவி வழங்குகிறது.

உள்பிராகாரங்களில் பொய்யாத விநாயகர், முருகன், ஆதிவில்வநாதர், கஜமுத்தீசுவரர், பஞ்சலிங்கம், கஜலஷ்மி, முதலிய சன்னிதிகள் உள்ளன. பிரமன், அகத்தியர், அர்சுனன் முதலியோர் வழிபட்ட தலம்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வரும் வழியில் வெட்டாறு வெள்ளப் பெருக்கின் காரணமாக ஒடக்காரர்கள் ஒடங்களைச் செலுத்த முடியாமல் ஆரையில் கட்டிவிட்டுச் சென்றுவிட்டனர் சம்பந்தர் கரையில் கட்டியிருந்த ஒடம் ஒன்றை அவிழ்க்கச் செய்து அடியவர்களோடு அதன்மீது ஏறிக் கொண்டு தமது நாவையே ஒடக்கோலாகக் கொண்டு "கொட்டமே கமழும்" என்னும் திருப்பதிகம் பாடினார். பெருமான் அருளால் ஒடம் மறுகரையை அடைந்தது. திருஞானசம்பந்தர் திரு கோவிலை அடைந்து திருப்பதிகத்தை நிறைவு செய்து வழிபட்டு இத்தலத்தில் தங்கியருளினார். ஒடத்திருவிழா ஆண்டு தோறும் ஐதிக விழாவாக ஐப்பசி அமாவாசைக்கு மறுநாள் நிகழ்கின்றது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 113 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

இக்கோவிலில் மூன்றாங் குலோத்துங்க சோழன், மூன்றாம் இராசராசசோழன் இவர்கள் காலங்களில் ஏற்பட்ட கல்வெட் டுக்கள் உள்ளன. இறைவர் திருக்கொள்ளம் பூதூருடையார் என்றும், அம்மன் அழகிய நாச்சியார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

28. திருவிடைவாய்

மறியார் கரத்தெந்தை யம்மாதுமையோடும்
பிரியா தபெம்மான் உறையும் இடமென்பர்
பொறிவாய் வரிவண்டுதன்பூம் பெடைபுல்கி
வெறியார் மலரில் துயிலும் விடைவாயே.

-- திருஞானசம்பந்தர்.

கொரடாச்சேரிக்கு தென்கிழக்கே 3கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக் கோவில் கிழக்கு நோக்கியதும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு புண்ணியகோடிநாதர், இடை வாய்நாதர். அம்மன் அபிராமியம்மன். தீர்த்தம் புண்ணிய கோடி தீர்த்தம் தலமரம் வில்வம்.

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற தலங்கள் 274 என இதுவரை கணக்கிடப் பெற்றிருந்தது. 82 ஆண்டுகளுக்கு முன்பு கல்வெட்டு ஆராய்ச்சியில் இத்தலத்தில் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்ற பிறிதொரு தலமாக இத்தலம் உள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டது. திருநாவுக்கரசர் தேவாரத்தில் வைப்புத்தலமாக கருதப் பெற்று வந்தது இத்தலம். தெற்குப் பிராகாரத்தில் மண்டபச்சுவரில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இத்தலத் திருப்பதிகக் கல்வெட்டை காணலாம். மகாமண்டபம் அம்மன் கோயிலை இனைந்துள்ளது.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய க்ஷேத்திரக் கோவை வெண்பா ஒன்றும் இத்தலத்திற்குள்ளது.

29. பேரளம்

கொல்லுமாங்குடிக்கு தெற்கே 3 கி.மீ. இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீசுயம்புநாத சுவாமி அம்மன் ஸ்ரீ பவானியம்மன். தீர்த்தம் அக்கினி தீர்த்தம் ஆலயத்திற்குக் கீழ்பால் உள்ளது.

தவத்தின் மிக்கவரான பேரள முனிவர் இத்தலத்தில் சுயம்புநாதரை நோக்கித் தவம்செய்து கலிதோஷத்தால் ஆன்மாக் களுக்கு ஏற்படும் துன்பங்களை இத்தல இறைவனை தரிசித்தவுடன் நீங்கவும், தன் பெயரால் இத்தலம் விளங்கவும் வரம் பெற்ற தலம்.

இத்தலப் பெருமானாகிய சுயம்புநாதர் தன்னைப் பூசித்த இந்திரனுக்குப் பெறுதற்கரிய பேற்றினைக் கொடுத்தார். சூரியனுக்கு மிகுந்த ஒளியினை அளித்தார். யாக்ஞவல்கியர் பூசித்துப் பிரமஞானத்தைப் பெற்றார், சுக்கிராசாரியர் வழிபட்டு இறந்தவரைப் பிழைப்பிக்கும் ஆற்றலைப் பெற்றார். மார்க்கண்டேயர் வழிபட்டு நித்தியத்துவத்தையடைந்தார். விசுவாமித் திரர் வழிபட்டு அதனால் க்ஷத்திரிய உடலைவிட்டு பிராமண்யத்தை அடைந்தார் என இத்தலபுராண வரலாறுகளாகும்.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான கோவிலாகும்.

30. கீரனூர்

கொல்லுமாங்குடிக்கு வடக்கே 2கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவலோகநாதர். அம்மன் கிரிஜராம்பிகை. அக்னி பூசித்த தலம். முதலாம் இராஜேந்திரன் என்னும் சோழ மன்னர்களால் கட்டப் பெற்றதாக இங்குள்ள கல்வெட்டுக்கள் குறிக்கப்படுகின்றன. 5 கால பூஜை. சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

31. பில்லூர்

பேரளத்திலிருந்து வடமேற்காக 5 கி.மீ. மாங்குடிகட்டளை. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மகாகாளநாதர்.

32. அன்னதானபுரம்

கொல்லுமாங்குடிக்கு வடகிழக்கே 8 கி.மீ. 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதிலிங்கேஸ்வரர்.

33. களியாக்குடி

கொல்லுமாங்குடிக்கு வடகிழக்கே 7 கி.மீ. நெடுங்குளம். இக்கோவில் 22செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நிதியமனவள நாதர்.

34. கடகம்

கொல்லுமாங்குடிக்கு கிழக்கே 6 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். 600 வருட முற்பட்ட கோவில்.

35. பாவட்டாகுடி

கொல்லுமாங்குடிக்கு கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர். மூன்றாம் இராஜராஜ சோழன் காலத்து கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

36. சிறுபுலியூர்

கொல்லுமாங்குடிக்கு வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் கங்காளநாதர். இவ் வூரில் புகழ் பெற்ற ஸ்ரீ அருமாகடலமுத பெருமாள் திருக்கோவில் உள்ளது.

37. கடுவங்குடி

பேரளத்திலிருந்து வடக்கே 4கி.மீ. கொல்லுமாங்குடிக்கு அருகில் உள்ளது. இக்கோவில் அகரகடுவங்குடியில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் விஸ்வநாதர் மற்றும் கைலாசநாதர்.

38. போழக்குடி

கொல்லுமாங்குடிக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர். இவ்வூருக்கு அருகில் உள்ள திருமெய்ஞானத்தில் 9செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஞானபுரீஸ்வரர்.

39. ஆலத்தூர்

பேரளத்திலிருந்து மேற்கே 4கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிப்பிலிகாதீஸ்வரர். கருவறை தென்புறம் சுவரில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் ஒன்று உள்ளது.

40. கிள்ளியனூர்

பேரளத்திலிருந்து மேற்கே 6கி.மீ. அல்லியூர். இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

41. சுரைக்காயூர்

பேரளத்திலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விக்ரமசோலீஸ்வரர்.

42. பரவாக்கரை

திருவீழிமிழலைக்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாணிக்கேசுவரர்.

43. பண்டாரவாடை

பேரளத்திற்கு அருகில் உள்ளது இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

44. அய்யம்பேட்டை

பேரளத்திலிருந்து தென்மேற்காக 7கி.மீ. மணத்தங்குடி. அரசலாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேசுவரர்.

45. சரபோஜிராஜபுரம்

பூந்தோட்டத்திலிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

46. கூந்தலூர்

திருவீழிமிழலைக்கு தென்மேற்கே 5கி.மீ. அரசலாற்றின் தென்கரையில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். இவ்வூருக்கு அருகில் உள்ள பண்டாரவாடையில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஜம்புகாருண்யர்.

47. மணவாளநல்லூர்

திருவீழிமிழலைக்கு தென்மேற்கே 4கி.மீ. அரசலாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-10 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சுந்தரேசுவரர் என்னும் மணவாளீஸ்வரர்.

48. கொத்தவாசல்

பூந்தோட்டத்திலிருந்து தெற்கே 3கி.மீ. அரசலாற்றின் தென்கரையில் ருத்திரகங்கையில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஆபத்சகாயர்.

49. கொங்கராயநல்லூர்

பூந்தோட்டத்திலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. அரசலாற்றின் வடகரையில் இக்கோவில் 38 செண்ட் நிலப்பராப்பளவில் மூலவர் ஆபத்சகாயர்.

50. ஏர்வாடி

பூந்தோட்டத்திலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. அரசலாற்றின் வடகரையில் பண்டாரவாடை என்னுமிடத்தில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர்.

51. இடையாத்தங்குடி

திட்டச்சேரிக்கு வடமேற்கே 7கி.மீ. அரசலாற்றின் தென்பகுதியில் இக்கோவில்

14 செண்ட் நிலப்பரப்பளவில் சுந்தரேசுவரர். கீடாமங்கலம் என்னுமிடத்தில் 62 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

52. ஆலத்தூர்

திட்டச்சேரிக்கு வடக்கே 4கி.மீ. திருமலைராயனாற்றின் வடபகுதியில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதேசுவரர்.

53. போலகம்

திருப்புகலூர்க்கு வடகிழக்கே 2கி.மீ. திருமலைராயனாற்றின் தென்கரையில் இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். இவ்வூரில் உள்ள கூத்தப்பட்டரை தோப்பு என்னுமிடத்தில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

54. புத்தகரம்

திருப்புகலூர்க்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

55. வடகுடி

நன்னிலத்திலிருந்து வடமேற்கே 3கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாலிங்கசுவாமி. இவ்வூருக்கு அருகில் உள்ள கம்மங்குடியில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

56. அச்சுதமங்கலம்

நன்னிலத்திலிருந்து மேற்கே 4கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சோமநாதர். மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், கோனேரின்மை கொண்டான், ஸ்ரீவீரபுக்கண்ண உடையார், வீரராஜேந்திரன், இரகுநாத நாயக்கன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன.

57. கண்டிரமாணிக்கம்

நன்னிலத்திலிருந்து மேற்கே 16கி.மீ. திருமலைராயனாற்றின் தென்கரையில் இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

58. சேங்கனூர்

நன்னிலத்திலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர். இவ்வூருக்கு அருகில் விசலூரில் ஜடாயுபுரீஸ்வரர்.

59. ஏனங்குடி

திருப்புகலூரிலிருந்து மேற்கே 2கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் திருவாலந்துறைநாதர்.

60. அகரக்கொந்துகை

திட்டச்சேரிக்கு வடகிழக்கே 3கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

61. கோட்டூர்

திருக்கண்ணபுரத்திலிருந்து மேற்கே 3கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குடுமிநாதர். இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன.

62. ஆனைக்குப்பம்

நன்னிலத்திலிருந்து தென்மேற்கே 4கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

63. சலிப்பேரி

நன்னிலத்திலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரமபுரீஸ்வரர்.

64. பூங்குலம்

நன்னிலத்திலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

65. நெடுஞ்சேரி

ஸ்ரீ வாஞ்சியத்திலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

66. நாரணமங்கலம்

ஸ்ரீவாஞ்சியத்திலிருந்து மேற்கே 5கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாராயணேஸ்வரர்.

67. கோவில்பத்து

ஸ்ரீவாஞ்சியத்திலிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

68. வடவார்

ஸ்ரீவாஞ்சியத்திலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஞானசுந்தரேசுரர்.

69. அன்னவாசல்

குடவாசலிருந்து தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் சுயம்புலிங்க மாக அருள்மிகு அன்னபுரீஸ்வரர்.

70. சேங்காளிபுரம்

குடவாசலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. சிவகாளிபுரம். இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக துந்துபேசுவரர். இவ்வூரில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் சோழீஸ்வரர் திருக் கோலும், 50 செண்ட் நிலப்பரப்பளவில் விஸ்வநாதர் திருக்கோ விலும் உள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

71. பெரும்பண்ணையூர்

ஸ்ரீவாஞ்சியத்திலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

72. மகிழஞ்சேரி

நன்னிலத்திலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

73. கழப்பூதனூர்

திருக்கண்ணபுரத்திலிருந்து தென் கிழக்கே 3கி.மீ. இக்கோவில் மேலபுதனூரில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அக்னீசு வரர். 3000 வருட முற்பட்ட கோவில்.

74. மருங்கூர்

திட்டச்சேரிக்கு தெற்கே 5கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

75. குத்தாலம்

திட்டச்சேரிக்கு தெற்கே 4கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆபத்சகாயர்.

76. கொட்டாரக்குடி

திருக்கண்ணபுரத்திலிருந்து தெற்கே 9கி.மீ. பெரிய கண்ணமங்கலத்தில் 4செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

77. நாகக்குடி

நன்னிலத்திலிருந்து தெற்கே 7கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அகத்தீஸ்வரர்.

78. கீரங்குடி

ஸ்ரீவாஞ்சியத்திலிருந்து தெற்கே 5கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

79. நெய்குப்பை

கொரடாச்சேரிக்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

80. செல்லூர்

குடவாசலிருந்து தெற்கே 6கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

81. கழுகக்குடி

குடவாசலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் வெட்டாற்றின் தென்கரையில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

82. அபிவிர்த்தீஸ்வரம்

குடவாசலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அபிவிர்த்தீஸ்வரர்.

83. பெரும்புகலூர்

நன்னிலத்திலிருந்து தெற்கே 9கி.மீ. வெட்டாற்றின் தென்பகுதியில் இக்கோவில் உள்ள மூலவர் விஸ்வநாதர்.

84. கோட்டூர்

நன்னிலத்திலிருந்து தெற்கே 10கி.மீ. இக்கோவில் 1-38 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சுந்தரேசுவரர். மற்றும் 20 செண்டில் விஸ்வநாதர் கோவிலும் உள்ளது.

85. ஆயகுடி

கொரடாச்சேரிக்கு வடகிழக்கே 6கி.மீ. வெட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

86. ஆதிசோழமங்கலம்

கொரடாச்சேரிக்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

87. ஊர்குடிமுகந்தனூர்

கொரடாச்சேரிக்கு வடகிழக்கே 3கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

88. கொரடாச்சேரி

கொரடாச்சேரிக்கு அருகில் உள்ள மாங்குடியில் இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பஞ்சநாதீஸ்வரர்.

89. விஸ்வநாதபுரம்

கொரடாச்சேரிக்கு தென்மேற்கே 4கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

90. களத்தூர்

கொரடாச்சேரிக்கு தென்மேற்கே 2கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக் கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

91. பெருமாளகரம்

கொரடாச்சேரிக்கு தென்கிழக்கே ஒரு கி.மீ. இக்கோவில் உள்ள மூலவர் ஜெயகோட்டீஸ்வரர்.

92. விடயபுரம்

கொரடாச்சேரிக்கு தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் வெண்ணாற்றின் வடகரையில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

93. மேல்திருமதிகுண்ணம்

கொரடாச்சேரிக்கு கிழக்கே 6கி.மீ. இக்கோவில் கொடைமங்கலத்தில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கோடீஸ்வரர்.

94. திருப்பணிபேட்டை


கொரடாச்சேரியிலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 28 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

95. பெருந்தவகுடி

கொரடாச்சேரியிலிருந்து கிழக்கே 11கி.மீ. குழிகரையில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் விஸ்வநாதர் கோவிலும், ஊத்துக்குடியில் காளத்தீஸ்வரர் கோவிலும் உள்ளது.

திருவாரூர் வட்டம்

(திருவாரூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருவாரூர்

அந்த மாயுல காதியு மாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்றிரு வாருரெம்
எந்தை தானெனை யேன்றுகொளுங்கொலோ

-- திருஞானசம்பந்தர்.

தஞ்சாவூர்க்கு கிழக்கே 40 கி.மீ. ஆரூர், கமலாலயபுரம், க்ஷேத்ரவரபுரம், ஆடகேசுர புரம், தேவயாகபுரம், கந்தபுரம், முசுகுந்தபுரம், கலிசெலாநகரம், அந்தரமகேசபுரம், வன்மீக புரம், தேவாசிரயபுரம், சமற்காரபுரம், மூலாதார புரம், சக்திபுரம் என 14 பெயர்கள் கொண்ட இத்தலம் வடக்கே சுக்கானாறும், தெற்கே ஓடம்போக்கியாற்றுக்கும் இடையில் இக்கோவில் 15-23 ஏக்கர் நிலப்பரப் பளவில், அகலம் 666 அடியும், நீளம் 846 அடியும், 30 அடி உயர மதில்சுவரும், திருக்குளம் 18-22 ஏக்கர் நிலப்பரப்பும், 5 பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய 118 அடி உயர இராஜகோபுரத்துடன் மூலவர் சுயம்புலிங்க மாக அருள்மிகு வன்மீகநாதர். அம்மன் அல்லியங்கோதையம்மை. தீர்த்தம் தேவ தீர்த்தம் (கமலாலயம்-64 கட்டங் களும், பதினாறு கோடிகளும்), சங்க, சரஸ்வதி, செங்கழுநீரோடை, ஞானப்பிர காசக்குளம், ஓடம்போக்கியாறு முதலியன தீர்த்தங்கள். தலமரம் பாதிரி.

உள்பிராகாரத்தில் ஐங்கலக்காசு விநாயகர், தியாகேசர், வாதாபி விநாயகர், விடங்கர், தருணேந்துசேகரர், கமலாம்பிகை, இரணவிமோசனேசர், சண்டீசர், நவக்கிர கங்கள் (ஒரே நேராக அமைந் தவை), துர்க்கை, முதலிய சன்னிதிகள் உள்ளன.

ஐம்பெரும் மூலப்பொருள் திருவூர் களில் இத்தலம் பிருதிவி. இக்கோவிலுக்குத் திருமூலட்டானம் என்றும், பூங்கோவில் என்றும் வழங்கும் சன்னிதிக்கு தெற்கேயுள்ள தியாகராஜ ஸ்வாமி சன்னிதி மிகப்பிரபலம்.

திருமால் இம்மூர்த்தியைத் தம் இதய ஸ்தானத்தில் வைத்துப் பூஜித்தார். மூச்சு இழுத்தல் விடுதல் காரணமாக ஏற்படும் அசைவே திருநடனம், ஏழுவிடங்கர்களுல் திருமால் பூசித்தது. இத்தல இறைவர் நடனம் அஜபா நடனம்.

திருமகள் பூசித்து மாங்கலியம் அருளப் பெற்ற தலம். பிறந்தார்க்கு வீடு அளிக்கும் திருவூர், முசுகுந்தன் என்னும் சோழ மன்னன் வானுலகத்திலிருந்து கொண்டு வந்த தியாகேசப் பெருமான். சுந்தரர் இரண்டாவது கண்ணைப் பெற்ற ஊர் திருத்தொண்டத் தொகை இயற்றியருளி யதும் இத்தலமே.

சுந்தரர் திருமுது குன்றத்தில் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைப் பரவையாருக்கு எடுத்து அளிக்க இடமாயிருந்த கமலாலயம் என்னும் திருக்குளத்தையும் உடையது. சுந்தரருக்காக இறைவன் நள்ளிருளில் தூது சென்ற ஊர். விறன்மிண்டநாயனார், நமிநந்தியடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள், கழற்சிங்க நாயனார் முதலிய அடியார்கள் வீடு பெற்ற திருவூர்.

சோழ மன்னர்களில் தலைசிறந்த தலைநகரங்களில் ஐந்தனுள் ஒன்று; மனுநீதி கண்ட சோழ் மன்னனின் தலைநகரம். மனுநீதிச்சோழன் நீதியைக்காக்க, பசுத் துயரம் தானடையத் தேர்காலில் மகன் வீதிவிடங்கனைக் கிடத்தித் தேர் ஓட்டியபோது தியாகேசப் பெருமானே விடைமீது தோன்றிக் காட்சி வழங்கி உயிர்ப்பித்தார் என்னும் வரலாறு பெரிய புராணத்தில் காணப்படுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 88 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது. மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர், கச்சியப்ப சிவாசாரியார், தலபுராணம் பாடிய சம்பந்த முனிவர், குமரகுருபரர், சிதம்பர முனிவர் முதலியோர் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

முதலாம் பராந்தகன், முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், முதலாம் ராஜாதிராஜன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் மற்றும் நாயக்க மன்னர்களும், பிற்காலத்திய மகாராஷ்டிர அரசர் கால கல்வெட்டுக்கள் 65க்கு மேல் உள்ளன. கல்வெட்டுக்களில் வன்மீக நாதரின் பெயர் புற்றிடங்கொண்டார் என்றும் தியாகேசர் பெயர் வீதிவிடங்கமுடையார் என்றும் கூறப்பட்டுள்ளது. தியாகராஜர் என்ற திருநாமம் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற வில்லை.

நித்திய பூஜை 6 கால பூஜைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாத பௌர்ணமியின் போதும், பங்குனி மாதத்தில் பிரமோற்சவமும் நடைபெறுகிறது. இவ்வூரில் உள்ள மற்ற திருக்கோவில்கள் வருமாறு.

அ. திருவாரூர் அரநெறி

பொருங்கைமத கரியுரிவைப் போர்வை யானைப்
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தி னானைக்
கரும்புதரு கட்டியைஇன் னமிர்தைத் தேனைக்
காண்பரிய செழுஞ் சுடரைக் கனகக் குன்றை
இருங்கனக மதிலாரூர் மூலட்டானத்
தெழுந்தருளி இருந்தானை இமையோர் ஏத்தும்
அருந்த வனை அரநெறியி லப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினை நோய் அறுத்தவாறே

-- திருநாவுக்கரசர்.

திருவாரூர் திருமூலட்டானம் என்னும் பெரிய திருக்கோவிலின் இரண்டாம் திருச்சுற்றில் உள்ளது. அசலேசம் என வழங்கும். மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அரநெறியப்பர். அம்மன் வண்டார்குழலி.

நமிநந்தியடிகள் நாயனார் இத்தலத்தில் தண்ணீரால் விளக்கேற்றிய சிறப்பு பெற்றது. திருநாவுக்கரசர் இச்செய்தியைத் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சமற்கார மன்னருடைய வேண்டுகோட்படி இறைவர் சலியாது எழுந்தருளியிருப்பதால் அசலேசர் எனப் பெயர் பெற்றார்.

கழற்சிங்கர் என்னும் பல்லவ அரசனுடைய மனைவியார் திருப்பள்ளித் தாமமண்டபத்தில் சிந்திக் கிடந்த மலரை எடுத்து மோந்ததற்காகச் செருத்துணையார் மூக்கரித்த தலம்.

அசலேசர் நிழல் கிழக்குத் திசையிலன்றி மற்றைய திசைகளில் விழாது. ஆறுமாதத்திற்குள் இறப்பவர் நோக்கினால் அந்த நிழலும் தெரியாது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலத்தை 87 வது தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்களில் இத்தலத்தை செம்பியன் மாதேவியாரால் அரநெறிக் கோவிலைக் கற்கோவிலாகக் கட்டுவித்தார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

ஆ. துலாநயினார் கோவில்

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயா கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்
காவாஎன் பரவையுண் மண்டளி அம்மானே

-- சுந்தரர்.

இக்கோவில் திருவாரூர்ப் பெரியகோவிலின் கீழவீதியில் தேர்நிலைக்கு எதிரில் உள்ளது. பரவையுண்மண்டளி என வழங்கும் இத்தல மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தூவாய்நாதர். அம்மன் பஞ்சின் மெல்லடியம்மை.

பெருக்கெடுத்துவந்த வருணனை அடக்கியாண்ட பெருமான் கருணை பாலிக்குமிடம். கடலுள் மண்கோவிலாக இருந்தமையால் இப்பெயர் வழங்கப்படுகிறது. துர்வாசர் வழிபட்ட தலம். இதனால் துர்வாசநயினார் என்றும் இறைவனுக்கு பெயர். இறைவன் உருவம் கண்ணாடிபோல பளபளப்பாக உள்ளது. இத்தலத்திலுள்ள சிறிய குளத்தில் மூழ்கிச் சுந்தரர் ஒருகண் பார்வை பெற்றார்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 89 வது. சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது.

இ. திருநீலகண்டர் கோவில்

கீழைச் சன்னிதியில் பரவையுண் மண்டளிக்குப் பின்புறம் உள்ள இக்கோவில் கொசவன் கோவில் என்று வழங்குகிறது. இத்தல மூலவர் திருநீலகண்டர்.

ஈ. நடுவணநாதர் கோவில்

கமலாலயத்தின் நடுவில் உள்ளது சிறிய கோவில். சிறய கோபுரம், மூலவர் நடுவணநாதர். ஓடத்திலேறிச் சென்று வழிபடுவது வழக்கம். பிரதோஷ வழிபாடு மிகச்சிறந்தது. இப்பெருமான் நாகேசர் எனவும் வழங்கப்பெறுவர்.

உ. சோமநாதர் கோவில்

ஓடம்போக்கியாற்றின் கரையில் தலத்தின் மேற்கே உள்ளது. மூலவர் சோமநாதீசர். இந்திரனுக்குள்ள கயரோகத்தைத் தீர்த்ததலம்.

மேலும் இவ்வூரில் ஐந்நூற்றுப் பிள்ளையார் கோவில், பிரமன் கோவில், தண்டபாணி கோவில், பரவையார் கோவில், ராஜதுர்க்கை கோவில், மாற்றுரைத்த விநாயகர் கோவில், குளுந்தாளம்மன் கோவில், ஐயனார் கோவில், உருத்திர கோடீசுரர் கோவில், குமரகோவில், எல்லையம்மன் கோவில், மாணிக்கநாச்சியார் கோவில் என மற்ற கோவில்களும் இவ்வூரில் அமைந்துள்ளன.

2. கீழ்வேளூர்

மின்னுலாவிய சடையினர் விடையினர் மிளிர்தரு மரவோடும்
பன்னுலாவிய மறையொலி நாவினர் கறையணி கண்டத்தர்
பொன்னுலாவிய கொன்றையந் தாரினர் புகழ்மிகு கீழ் வேளூர்
உன்னுலாவிய சிந்தையர் மேல்வினை யோடிட வீடாமே.

-- திருஞானசம்பந்தர்

திருவாரூர்க்கு கிழக்கே 12கி.மீ. திருக்கீழ்வேளூர். இலந்தைவனம். ஓடம்போக்கியாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 2-48 ஏக்கர் நிலப்பரப்பளவில்,

கிழக்கு நோக்கிய சன்னிதி, மாடக்கோவில், ஏழுநிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கேடிலியப்பர். அம்மன் வனமுலைநாயகி. விநாயகர் சுந்தரவிநாயகர், பதரி விநாயகர், தீர்த்தம் சரவண, இந்திர, அக்னி, சேஷ, பிரம, சூரிய, சந்திர முதலிய தீர்த்தங்கள். தலமரம்-இலந்தை.

உள்பிராகாரத்தில் முருகன், பத்திரகாளி, நடராசர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, அகத்தியர், விசுவநாதர், கைலாசநாதர், பிரக தீஸ்வரர், அண்ணா மலையார், ஜம்புகேசு வரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வேளூர் என்ற பெயருடைய தலங்கள் பல இருத்தலால் கிழக்கே உள்ள வேளூர் என்ற பெருளில் இவ்வூர் கீழ்வேளூர் என வழங்கப்படுகிறது. கோச்செங்கட் சோழ மன்னர் கட்டிய மாடக்கோவில்களில் இத்தலம் ஒன்றாக விளங்குவது.

முருகக் கடவுள் பூசித்த தலம். முருகப்பெருமானது பூசைக்கும், தவத்துக் கும் இடையூறு நேராதபடி ஐந்து திக்குகளிலும் காவல் புரிந்த அஞ்சுவட்டத் தம்மன் என்னும் காளிகோவில் இத்தலத்தில் சிறப்புடைய மூர்த்தியாவார். அகத்தியர் பூசித்த சிவலிங்கம் உள்ளது. இத்தலத்தி லுள்ள நடராசரின் தாண்டவபேதம் தனியழ குடையது. பத்துத் திருக்கரங்களோடு கூடிய ஏகபாத நடராசர்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 84வது தலம். சம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. தல புராணம் உள்ளது.

இக்கோவிலில் மூன்று கல்வெட்டுக் களில் இரண்டு சோழர்களதும், ஒன்று தஞ்சை மராட்டிய மன்னர்களதுமாகும். பூதானம், பிராகார மதிலைக்கட்டிய செய்தியைக் குறிக்கிறது.

நாள்தோறும் 6 கால நித்திய பூஜை. பங்குனி, சித்திரை பௌர்ணமியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. தேவூர்

காடுபயில் வீடுமுடை யோடுகலன் மூடுமுடை யாடை புலிதோல்
தேடுபலி யூணதுடை வேடமிகு வேதியர் திருந்து பதிதான்
நாடகம தாடமஞை பாடவரி கோடல்கை மறிப்ப நலமார்
சேடுமிகு பேடையன முடிமகிழ் மாடுமிடை தேவூரதுவே.

-- திருஞானசம்பந்தர்

கீழ்வேளூர்க்கு தெற்கே 5 கி.மீ. திருத்தேவூர், தேவனூர், விராடபுரம், அரசங் காடு, கதலிவனம். இக்கோவில் 1-24 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், மூன்று நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் கட்டு மலையில் எழுந்தருளியிருக்கும் மூலவர் சுயம்புலிங்க மாக அருள்மிகு தேவபுரீசுவரர். அம்மன் தேன்மொழியம்மை தீர்த்தம் தேவ தீர்த்தம் கோவிலின் வாயிலுள்ளது. மற்றும் வருண, கௌதம, மிருத, சஞ்சீவினி முதலிய தீர்த்தங்கள். தலமரம் வாழை.

உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், கௌதமலிங்கம், அகல்யாலிங்கம், இந்திர லிங்கம், அறுபத்து மூவர், மகாலஷ்மி, நவக்கிரகங்கள், பைரவர், சந்திரன், சூரியன் முதலிய சன்னிதிகள் உள்ளன. மலைமேல் சோமாஸ்கந்தர் அம்மையப்பராய்க் காட்சி யளிக்கிறார்.

தேவர்கள் வழிபட்டு மந்திர உபதேசம் பெற்றதால் தேவூர் எனப்பெற்றது. கோச்செங்கட் சோழமன்னன் கட்டிய மாடக்கோவிலுள் இத்தலமும் ஒன்றாகும். இந்திரன் இத்தல இறைவனை வழிபட்டு

விருத்திராசுரனைக் கொன்ற பழி நீங்கினான். குபேரன் சங்கநிதி, பதுமநிதி பெற்றதும், இத்தலம் பாண்டவர்களுக்கு துணைபுரிந்த விராடன் தன் மகன் உத்திரனோடு இத்தலத்தில் தங்கி இறைவனை வழிபட்டு நல்லருள் பெற்றான்.

உலகில் 12 ஆண்டுகள் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கௌதமர் இத்தலத்தில் தங்கி இலிங்கம் தாபித்து வழிபட்டுப் பொன்னும், பொருளும் பெற்று மக்களின் பசிப் பிணியை போக்கினார். மகத நாட்டு மன்னன் குலவர்த்தனன் பரிவேள்வியில் வெற்றிபெற, இங்குள்ள இறைவனை வழிபட்டு வேள்வியை நிறைவேற்றினான்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 85 வது. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. அப்பர், மாணிக்கவாசகர் முதலியோர் அருளிய பாடல்களும் உள்ளன. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்குள்ளது. இத்தலத்தில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை. வைகாசிப் பெருவிழா நடைபெறுகிறது.

4. விளமல்

மத்தக மணிபெற மலர்வதொர் மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதொ ரரவின ரொளிகிளர்
அத்தக வடிதொழ வருள்பெரு கண்ணொடு முமையவள்
வித்தக ருறைவது விரிபொழில் வளநகர் விளமரே.

-- திருஞானசம்பந்தர்

திருவாரூர்க்குத் தென்மேற்கில் 3கி.மீ. திருவிளமர். ஓடம்போக்கியாற்றின் தென்கரையில் சிறிய கோவிலாக கிழக்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பதஞ்சலிமனோகர். அம்மன் யாழினும் மென்மொழியம்மை. தீர்த்தம் அக்கினி தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. தலமரம்-வில்வம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், பைரவர், சந்திரன், சூரியன், பதஞ்சலி முனிவர், புலிக்கால் முனிவர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சோழநாட்டுக் காவிரித் தென்கரையில் இத்தலம் 90 வது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பாடல்களும் இத்தலப் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது.

5. .திருக்காரவாசல்

நீரானே நீள்சடை மேலொர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் றான்றெழும்
சீரானே சீர்திக ழுந்திருக் காறாயில்
ஊரானே யென்பவ ரூனமி லாதாரே.

-- திருஞானசம்பந்தர்

திருவாரூர்க்கு தெற்கே 14கி.மீ. திருக்காறாயில், பனசாரண்யம், காளாகருவனம், தேவதாருவனம், புத்திரப்பிரதம், கபித்தவனபுரம். இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், மூன்றுநிலை இராஜகோபுரமும், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கண்ணாயிரநாதர். அம்மன்

கைலாசநாயகி. தீர்த்தம் பிரமதீர்த்தம் கோவிலின் வடபாலுள்ளது. தலமரம்-பலா மற்றம் அகில். உள்பிராகாரத்தில் பிரமோத விநாயகர், முருகன், இந்திரபுரீஸ்வரர், ஸ்திர லிங்கம், கௌதம லிங்கம், காட்சிக்கொடுத்த நாயனார், தியாகேசர், நடராசர், கல்யாண சுந்தரர், சமயாசாரியர், விசுவநாதர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலம் காரகில் மரக்காடாக இருந்தமையால் காரகில்வனம் எனப் பெயர் பெற்றது. வழக்காற்றில் திருக்காரகில்வனம். திருக்காரகில் என்றாகிப் பின் திருக்கார வாசல் எனப்பெயர் பெற்றது.

தென்னாட்டில் ஸ்ரீ தியாகராஜப் பெருமான் திருக்கோவில் கொண்டுள்ள ஏழுதலங்களுள் இத்தலம் ஆதிவிடங்கர் தலம். குக்குட நடனம் அதாவது கோழியைப் போல் ஆடுதல். முசுகுந்த சோழமன்னர் இந்திரனிடம் பெற்றுவந்த ஏழு தியாகேசர் திருவுருவங்களில் ஒன்றை இத்திருத் தலத்தில் எழுந்தருளச் செய்து வழிபட்டார். பிராகாரத்தில் தியாகேசர் தனிச்சன்னிதியில் காட்சியளிக்கிறார்.

கபாலமுனிவர் செய்த தவத்துக்கு இரங்கி அம்பிகை அவருக்குக் காட்சிதந்து அருள் செய்தார். சிவசர்மா என்னும் அந்தணன் இக் கோவிலைப் புதுப்பிக்க எண்ணிய காலத்தில் இறைவன் நாள்தோறும் அவனுக்கு இரத்தினம் ஒன்றையளித்து உதவினார். அந்தணன் திருப்பணி, திருவிழா முதலியவற்றைச் செய்து மகிழ்ந்தான்.

திருவாரூர்க் கமலாலயத்தில் மூழ்கி யோர் இந்திரராகி வருதலை அறிந்து அதனைத்தூர்க்கக் கூறிய இந்திரன் தன் பழி நீங்க இத்தலத்து இறைவரைப் பூசித்து பாவம் நீங்கினான். இலக்குமி தானே அழகி எனவும் தன் கணவனே முழுமுதற்கடவுள் எனவும் தன் மகனே அழகன் எனப்பேசிய பழிதீர இத்தலத்திற்கு வந்து பழிநீங்கப் பெற்றாள். காஷ்மீரதேசத்து மன்னன் சந்திராங் கதன் இத்தல வழிபாட்டால் பிள்ளைப் பேறு எய்தினான்.

சோழநாட்டுக் காவிரித் தென் கரைத் தலங்களில் 119 வது தலம். திருஞான சம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் அருளிய இரண்டு திருத்தாண்டகப் பாடல்களும் உள்ளன. தலபுராணம் தேவ கோட்டை சிதம்பரம் செட்டியார் இயற்றி யுள்ளார்.

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 4 உள்ளன. முதல் இராசராச தேவன், இராசேந்திர சோழன் காலத்தியவை. இவ்வூர் அருண்மொழித் தேவவளநாட்டு புலியூர் நாட்டு வலிவலக் கூற்றத்து மாவூர் வட்டத்தைச் சார்ந்தது என்பதும், இறைவர் திருக்காறாயில் மாதேவர் என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

நாள்தோறும் ஆறுகால பூஜை நடைபெறுகின்றது. வைகாசி விசாகத்தை யொட்டி பிரமோற்சவம் நடைபெறுகிறது.

அட்டமூர்த்தம்

சிவனின் எட்டு வகை வடிவம் :
நிலம், நீர், தீ, காற்று, வான், சூரியன், சந்திரன், இயமானன்.

அட்டலஷ்மி

எட்டு லஷ்மிகள் :
தனலஷ்மி, தானியலஷ்மி, தைரியலஷ்மி, சௌரியலஷ்மி, வித்தியாலஷ்மி, கீர்த்தி லஷ்மி, விஜயலஷ்மி, இராச்சியலஷ்மி.

அட்டயோகம்

எட்டுவகை யோகநிலைகள் :
இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

இறைவனெண்குணம்

கடவுளுக்குரிய எட்டுத் தன்மைகள்: பிறப்பின்மை, இறப்பின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, வினையின்மை, குறைவில் அறிவுடைமை, குலமின்மை.

திருச்சிற்றம்பலம்

6. கோவில் கண்ணாப்பூர்

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
மதிசூடீ வானவர்கள் தங்கட்கெல்லாம்
நாதனே யென்றென்று பரவிநாளும்
நைஞ்சுருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தியேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே
-- திருநாவுக்கரசர்.

திருவாரூர்க்குத் தென்கிழக்கே 13 கி.மீ. திருக்கன்றாப்பூர். வெள்ளையாறு, பாண்டவ ஆறுகளின் கரையில் இக்கோவில் 1-49 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய சன்னிதி, இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நடுதறிநாதர். அம்மன் மாதுமைநாயகி. தீர்த்தம் சிவகங்கை, காணாமிர்த்தம், ஞானாமிர்த்தம், ஞானகூபம் முதலியன. தலமரம் கல்பனை. உள்பிராகாரத்தில் விநாயகர், சுந்தரேசுவரர், அறுவகை விநாயகர், முருகன், துர்க்கை, இலிங்கோத்பவர், கற்பகநாதர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலத்து இறைவர் கன்றுகட்டும் ஒருதறியிலிருந்து சுயம்புமூர்த்தியாகத் தோன்றியவராதலின் நடுத்தறிநாதர் எனப் பெறுகிறார். தலம் கன்றாப்பூர் எனப்படுகிறது.

சைவப் பெண்ணொருத்தி வைணவ அண்மகனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தும் தனது சிவபக்தியைக் கைவிடாது தன் கணவனும் அவனது வீட்டிலுள்ளோரும் அறியாதபடி மாட்டுத்தொழுவத்தில் மறைவாக கன்று கட்டும் தறியைச் சிவலிங்கமாகப் பாவித்து வழிபட்டு வந்தாள். இதனை உணர்ந்த கணவன் அந்நடுதறியைக் கோடரியால் வெட்டியபோது அந்நடுதறியிலிருந்து சிவபெருமான் இரத்தம் பீறிடச் சிவலிங்கமாக வெளிப்பட்டருளினார் என்பது இத்தலத்தின் சிறப்புவரலாறு. நடுதறிநாதர் திருமுடியில் கோடரியின் வெட்டுக்காயம் இன்றும் உள்ளதைக் காணலாம்.

இடும்பன் என்னும் அசுரன் இத்தலத்தில் நடுதறி நாதரை வழிபட்டு அருள் பெற்றான்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரித் தென்கரையில் இத்தலம் 120 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்குள்ளது. 5 கால பூஜை. வைகாசி விசாகத்தில் மூன்று நாட்கள் பெருவிழா நடைபெறுகிறது.

7. வலிவலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.
-- திருஞானசம்பந்தர்

திருவாரூர்க்குத் தென்கிழக்கே 16கி.மீ. திருவலிவலம். இக்கோவில் 1-80 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும் 85அடி உயர இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மனத்துணைநாதர். அம்மன் மாழையொண் கண்ணி. தீர்த்தம் காரணர் கங்கை, சக்கர தீர்த்தம். தலமரம்-புன்னை.

கோவிலின் முன்புறம் தவிர மூன்று பக்கங்களிலும் கோவிலை சூழ அகழி உள்ளது. கோச்செங்கட் சோழ மன்னர் கட்டிய மாடக் கோவிலின் ஒன்றாகும்.

இத்தலத்தில் கரிக்கருவி சிவபெரு மானைப் பூசித்து வலிமைபெற்றகாரணத் தால் இத்தலம் வலிவலம் எனப்பெற்றது. கொன்றைவனம், வில்வ வனம், ஏகசக்கிரபுரம், முந்நூற்றுமங்கலம் முதலிய வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உள்ளன.

சூரியனும், காரண முனிவரும் இத்தல இறைவனை வழிபட்டு அருள் பெற்றனர்.

சோழவளநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 121 வது தலம். திருஞானசம் பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பதிகங்கள் பெற்றது. அருணகிரிநாதர் இத்தல முருகப் பெருமானைக் குறித்துப் பாடிய திருப்புகழ் உள்ளது. வலிவலமும் மணிக்கோவை என்ற தமிழிலக்கியப் பிரபந்தம் ஒன்றும் இத்தலத்திற்குள்ளது.

இக்கோவில் உள்ள ஒன்பது கல்வெட்டுக்களில் மூன்று மூன்றாம் இராஜேந்திரன், இரண்டு குலோத்துங்கன், இரண்டு மூன்றாம் இராசராசன் மற்றவை இரண்டு சுந்தரபாண்டின் காலத்தியவை களாகும். இவ்வூரை அருண் மொழித் தேவ வளநாட்டு வலிவலக் கூற்றத்து உபய குலசதுர் வேதிமங்கலமான வலிவலம் எனவும், இறைவர் மனத்துள்தேவர், மனத் துள்ள நாயனார் என்று குறிக்கப் பட்டுள்ளது. 6 கால பூஜை. சித்திரையில் பிரமோற்சவம்.

8. இறையான்சேரி

கீழ்வேளூர்க்கு வடமேற்கே 4கி.மீ. இக்கோவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு விசுவநாதர். அம்மன் விசாலாட்சி. இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. அப்பர் சுவாமிகள் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

9. அணக்குடி

இத்தலம் வரிஞ்சையூர், இரிஞ்சூர் என வழங்கப்படுகிறது. இக்கோவில் 42 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வேதபுரீஸ்வரர். அம்மன் வேதநாயகி. சத்திநாயனார் அவதரித்த சிறப்புடையது. சத்திநாயனார் தனிமண்ட பத்தில் காட்சி தருகிறார். பிராகாரத்தில் விநாயகர், முருகன், பைரவர் உள்ளனர்.

சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் சத்தி நாயனாரைக் போற்றிக் குறிப்பிட்டுள்ளார். சத்திநாயனார் சோழவள நாட்டில் வளம் நிறைந்த வரிஞ்சையூரில் வேளாண்குலத்தில் தோன்றியவர் சிவபெரு மானிடம் மிக்க பத்திமைபூண்டவர் என இவரைச் சேக்கிழார் போற்றிக் கூறுவார்.

சிவனடியார்களை யாரேனும் இகழ் ந்துரைத்தால் அவர் நாவைச் சுரிகையால் துண்டிக்கும் வீரத் திருத்தொண்டை இவர் மேற்கொண்டு வாழ்ந்துவந்து சிவபதம் அடைந்தவர். இவரது திருநட்சத்திரம் ஐப்பசிப் பூசமாகும்.

10. திருநெய்ப்பேர்

திருவாரூர்க்கு தெற்கே 6 கி.மீ. ஏமப்பேறூர் இக்கோவில் 47 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வன்மீகநாதர். அம்மன் உமாபரமேசுவரி. நமிநந்தி அடிகள் அவதரித்த திருத்தலம். அப்பர் சுவாமிகள் க்ஷேத்திரக் கோவை திருத் தாண்டகத்தில் இத்தலத்தைக் குறிப்பிட்டுள்ளார். இத்தலம் தேவார வைப்புத்தலமாக போற்றப்படுகிறது. நமிநந்தி அடிகள் திருவாரூர் திருஅரனெறி ஆலயத்தில் உள்ள குளத்து நீரை ஊற்றி திரு விளக்கு ஏற்றும் தொண்டினைப் புரிந்தவர். இவரது குருபூசைநாள் வைகாசி-பூரம் ஆகும். இவ்வூர்க்கு அருகில் உள்ள அந்தியூரில் விஸ்வநாதர் கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் உள்ளது.

11. குன்னியூர்

திருவாரூர்க்கு தெற்கே 9.கி.மீ. குன்றியூர். இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு விசுவநாதர் அம்மன் விசாலாட்சி.

திருஞானசம்பந்தரும், அப்பரும் குன்றியூர்த் தலத்தைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளனர். இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டுக்களில் அருமொழித்தேவ வளநாட்டுக் குன்றியூர் எனக் குறிக்கப் பட்டுள்ளது.

12. அகரக்கடம்பனூர்

கீழ்வேளூர்க்கு வடகிழக்கே ஒரு.கி.மீ. கோவில் கடம்பனூர். வெட்டாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் சௌந்தரநாயகி. தீர்த்தம் சிவகங்கை.

13. வைப்பூர்

திருவாரூர்க்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 6செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜம்புநாதர்.

14. திருவாதிரைமங்கலம்

கீழ்வேளூர்க்கு வடமேற்கே 7கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். மேலும் இவ்வூரில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர் திருக்கோவிலும் உள்ளது.

15. வெங்கிடங்கால்

கீழ்வேளூர்க்கு வடக்கே 7கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

16. வடகரை

கீழ்வேளூர்க்கு வடகிழக்கே 6கி.மீ. இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

17. கோகூர்

கீழ்வேளூர்க்கு வடக்கே 5கி.மீ. வெட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் 30செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ருத்திரகோட்டீஸ்வரர். 600 வருட முற்பட்ட கோவில்.

18. பழயவல்லம்

திருவாரூர்க்கு வடகிழக்கே 6கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 2செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனியழகர். மற்றும் அகத்தீஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

19. நடப்பூர்

திருவாரூர்க்கு வடக்கே 6கி.மீ. வெட்டாற்றின் கரையில் இக்கோவில் 30செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நடனபுரீஸ்வரர்.

20. பள்ளிவாரமங்கலம்

திருவாரூர்க்கு வடகிழக்கே 4கி.மீ. வெட்டாற்றின் கரையில் இக்கோவில் 4செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

21. ராமகே

திருவாரூர்க்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 20செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

22. விஜயபுரம்

திருவாரூர்க்கு தென்மேற்கே ஒரு கி.மீ.

இக்கோவில் 17செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கபிலேஸ்வரர்.

23. பழவனக்குடி

திருவாரூர்க்கு கிழக்கே 3கி.மீ. மருதாம்பட்டிணம். இக்கோவில் 3செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அபிஷேகநாதர்.

24. கள்ளிக்குடி

திருவாரூர்க்கு கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசோழீஸ்வரர்.

25. அடிப்புதுச்சேரி

திருவாரூர்க்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 6செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாதநாகேஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள கானூரில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

26. திருக்கண்ணங்குடி

கீழ்வேளூர்க்கு தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காளத்தீஸ்வரர். இவ்வூரில் உள்ள புகழ்பெற்ற 108 வைணவத் தலமான ஸ்ரீசியாமளமேனிப் பெருமாள் கோவிலும் உள்ளது.

27. அத்திப்புலியூர்

கீழ்வேளூர்க்கு மேற்கே 5கி.மீ. இக்கோவில் 4-29 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிதம்பரேசுவரர். மேலும் இவ்வூரில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் அகத்தீஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள நல்லப்பாடியில் 52 செண்ட் நிலப்பரப்பளவில் நாகநாதர் கோவிலும், ராதாநல்லூரில் உள்ள 30 செண்ட் நிலப்பரப்பளவில் சுந்தரேசுவரர் கோவிலும் உள்ளது.

28. அடியக்கமங்கலம்

திருவாரூர்க்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் விஸ்வநாதர் கோவிலும், 2 செண்ட் நிலப்பரப்பளவில் பசுபதீஸ்வரர் கோவிலும் என இரு கோவில்கள் இவ்வூரில் உள்ளன.

29. சுகந்தவிளாகம்

திருவாரூர்க்கு கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 3செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

30. புலிவலம்

திருவாரூர்க்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 8செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தட்சிணகோகர்ணேஸ்வரர் மற்றும் 4 செண்ட் நிலப்பரப்பளவில் வடபுரீஸ்வரர் என இருகோவில்கள் இவ்வூரில் உள்ளன.

31. தப்பளாம்புலியூர்

திருவாரூர்க்கு தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வியாக்ரபுரீஸ்வரர்.

32. அலிவலம்

திருவாரூர்க்கு தென்கிழக்கே 3கி.மீ. இவ்வூரில் இரண்டு கோவில்கள் 24செண்ட் நிலப்பரப்பளவில் பூமிநாதசுவாமி கோவிலும், 3 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் கோவிலும் உள்ளது.

33. சேமங்கலம்

திருவாரூர்க்கு கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 6செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

34. கூத்தூர்

கீழ்வேளூர்க்கு தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் 25செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தர்மபுரீஸ்வரர்.

35. பட்டமங்கலம்

கீழ்வேளூர்க்கு தெற்கே 3கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அபிமுக்தீஸ்வரர்.

36. வடக்காலத்தூர்

கீழ்வேளூர்க்கு தெற்கே 4கி.மீ. இக்கோவில் 19செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

37. இலுப்பூர்

கீழ்வேளூர்க்கு தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 16செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

38. காக்கழனி

திருவாரூர்க்கு தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 60செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

39. மணலூர்

திருவாரூர்க்கு தென்கிழக்கே 9கி.மீ. இக்கோவில் 20செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பின்னவநாதர்.

40. புதுப்பத்தூர்

திருவாரூர்க்கு தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 23செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு புன்னைவனநாதர். மற்றும் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனியழகர் கோவிலும் உள்ளது.

41. வடகரை

திருவாரூர்க்கு தெற்கே 7கி.மீ. இக்கோவில் 50செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

42. ஆந்தகுடி

திருவாரூர்க்கு தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 14செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

43. இருக்கை

கீழ்வேளூர்க்கு தெற்கே 7கி.மீ. இவ்வூரில் இரண்டு கோவில்கள் தலா 5செண்ட் நிலப்பரப்பளவில் அக்கினீஸ்வரர் கோவில் மற்றும் பூமீஸ்வரர் கோவில் இரு கோவில்களும் 600 வருட முற்பட்டது.

44. வண்டலூர்

கீழ்வேளூர்க்கு தெற்கே 8கி.மீ. இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாதர்.

45. கிள்ளுகுடி

கீழ்வேளூர்க்கு தெற்கே 9கி.மீ. இக்கோவில் 14செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

46. பின்னவாசல்

திருவாரூர்க்கு தெற்கே 10கி.மீ. இக்கோவில் 2செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீசர்.


47. சாட்டியகுடி

கீழ்வேளூர்க்கு தெற்கே 11கி.மீ. இக்கோவில் 93செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

மன்னார்குடி வட்டம்

(திருவாரூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. கோவில்வெண்ணி

முத்தி னைப்பவ ளத்தை முளைத்தவெம்
கொத்தி னைச்சுட ரைச்சுடர் போலொளிப்
பித்த் னைக்கொலும் நஞ்சினை வானவர்
நித்த னைநெரு நற்கண்ட வெண்ணியே

-- திருநாவுக்கரசர்

நீடாமங்கலத்திலிருந்து வடமேற்கே 8கி.மீ திருவெண்ணி, திருவெண்ணியூர், பாம்பணியாற்றின் மேற்குகரைப்பகுதியில் இக்கோவில் கிழக்கு நோக்கியதும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வெண்ணிநாதர், வெண்ணிக் கரும்பீசுரர். அம்மன் அழகியநாயகி. தீர்த்தம்-சூரிய, சந்திர தீர்த்தங்கள். தலமரம்-நந்தியாவர்த்தம்.

கரும்பு நந்தியாவர்த்தக் காடுகளாக இருந்த இத்தலத்தில் இரு முனிவர்கள் தங்கட்குள் சண்டையிட்டுக் கூக்குரலிடு வதைக் கேட்ட முசுகுந்த சோழ மன்னன் இங்கு வந்து அவர்களைச் சமாதானப்படுத்தி, இத்தலப் பெருமான் இருப்பதைக் கண்டு கோவில் எடுத்து விழாக்கள் கொண்டாடினான் என்று தலபுராணம் கூறுகிறது. சங்க காலத்தில் இவ்வூரில் தோன்றிய பெரும்புலவர் வெண்ணிக் குயத்தியார் எனப்படுவார். இவர் பாடிய புறநானூற்றுப் பாடல் கரிகாற் சோழனின் வெண்ணிப்போரைக் கூறுகிறது. இவ்வூரில் கரிகாற்சோழன் பகைவரோடு போரிட்டு வென்ற வெற்றி, புகழ்பெற்ற வெற்றியாகக் கூறப்படுகிறது. அகநானூறும், பெரு நாராற்றுப்படையிலும் இத்தலத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

தேவாரப் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 102 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகங்கள் பெற்றது.

இத்தலத்தில் உள்ள கல்வெட்டுக்கள் இராசராசன் காலத்திய 6, குலோத்துங்கன் 9, தேதியில்லாத கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இதில் கோவிலுக்கு நிலங்கொடுக்கப்பட்ட விவரங்கள் கூறுகின்றன. பங்குனி உத்திரம் உற்சவம் நடைபெறுகிறது.

2. பூவனூர்

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவிலுனுஞ் செல்வர்க ளாவரே.

-- திருநாவுக்கரசர்

மன்னார்குடிக்கு வடக்கே 10கி.மீ. திருப்பூவனூர். பாம்பணி ஆற்றின் கரையில் இக்கோவில் 1-02 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சதுரங்க வல்லபேசுவரர், புஷ்பவனநாதர். அம்மன் கற்பகவல்லி, இராஜராஜேசுவரி என இரு அம்மன் சன்னிதிகள் உள்ளன. தீர்த்தம் ஷீர புஷ்கரிணி கோவிலுக்கு எதிரில் உள்ளது. தலமரம்-பலாமரம். உள்பிராகாரத்தில் சாமுண்டியம்மன், கணேசர், சுப்பிரமணியர், லட்சுமிநாராயணர், பசுபதீசர், சண்டேசர், சூரியன், பைரவர் சன்னிதிகள் உள்ளன.

மன்னன் வசுசேனன், காந்திமதியின் மகளான இராஜராஜேசுவரி எல்லாக்

கலைகளிலும் வல்லவளாய் பெண்களுக்குரிய சதுரங்க விளையாட்டில் தேர்ந்தவளாயிருந்தாள். மன்னன் சதுரங்கத்தில் வெல்வார்க்குத் தன்மகளை மணம்முடிப்பதாக பறையறைவித்தான். அவ்ளை வெல்ல யாரும் முன்வரவில்லை. முனிவர் அறிவுரைப்படி மகளுடன் மன்னன் தலயாத்திரை கொண்டு இத்தலத்தில் வந்தபோது இறைவன் சித்தவேடத்தில் மன்னன் மகளிடம் சதுரங்க விளையாட்டில் விளையாடி அவளை வென்று திருமணம் புரிந்து கொண்டார். இதனால் இத்தல இறைவனுக்கு சதுரங்கவல்லப நாதர் என்று பெயர்.

திருமால், பிரமன், இந்திரன், விநாயகர், முருகன் ஆகியோரால் வழிபடப் பெற்றவர்.

இங்குள்ள ஸ்ரீ சாமுண்டீசுவரி ஆலயம் புகழ்பெற்றது. விஷங்கள், தோஷங்கள் ஆகியவற்றால் துன்புறுவோர் இவ்வம்பிகை வணங்கி நலம் பெறுகின்றனர்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 103 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. கல்வெட்டுக்களில் அடிக்கடி சொல்லப்படும் வெண்ணிக் கூற்றத்தைச் சேர்ந்தது.

சித்திரையில் சாமுண்டீஸ்வரிக்கும், வைகாசியில் பிரமோற்சவமும் நடைபெறுகிறது. தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது.

3. பாமணி

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான் புனல்சூடிப் பொற்பமரும்
அன்ன மன நடையா ளொருபாகத் தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினா னுறை கோவில் பாதாளே

-- திருஞானசம்பந்தர்.

மன்னார்குடிக்கு நேர்வடக்கே 2கி.மீ. திருப்பாதாளீச்சரம், பாம்பணி, சர்ப்பபுரம். பாமணியாற்றின் கரையில் இக்கோவில் கிழக்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகநாதர். அம்மன் அமிர்த நாயகி. தீர்த்தம் நாக தீர்த்தம், தலமரம்-மாமரம். உள்பிராகாரத்தில் பத்திரகாளி, விநாயகர், முருகன், பஞ்சலிங்கங்கள், கஜலஷ்மி, துர்க்கை, சரஸ்வதி, சூரியன், பைரவர் சன்னிதிகள் அமைந்துள்ளன.

பாதாளத்திலிருந்து ஆதிசேடன் தோன்றி வழிபட்டதால் இத்தலத்திற்கு பாதாளீச்சரம் என்றும், இறைவர்க்கு நாகநாதர் என்றும் பெயர். பாம்பணி என்பதற்கேற்ப இறைவன் திருமேனியில் பாம்புருவங்கள் அமைந்துள்ளன.

ஆதிசேடன் தனஞ்செயமுனிவராய் அவதரித்ததும், புற்றிலிருந்து பெருமான் வெளிப்பட்டு பசுவுக்கு அருள் புரிந்ததும் இத்தலம் ஆகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 104வது தலம். திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், சுந்தரர் குறிப்பிட்டுப் பாடிய இரண்டு தேவாரப் பாடல்களும் உள்ளன.

இத்தலத்தைப்பற்றிய 6 கல்வெட்டுக்கள் உள்ளன. முதலாம் இராஜராஜன், மூன்றாம் இராஜராஜன், ஜடவர்மன் சுந்தர பாண்டியன் முதலிய மன்னர்கள் கால கல்வெட்டுக்கள் உள்ளன. இதில் இவ்வூரை திருப்பாம்பணி என்றும், இறைவன் திருப்பாதாளீச்சரம் உடையவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் நான்கு கால பூஜை. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

4. திருக்களர்

நீரு ளாக்கயல் வாவி சூழ்பொழில் நீண்ட மாவய லீண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊரு ளாரிடு பிச்சை பேணும் ஒருவ னேயொளிர் செஞ்ச டைம்மதி
ஆரநின்றவனே அடைந்தார்க் கருளாயே.

-- திருஞானசம்பந்தர்.

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 23கி.மீ. பாரிஜாதவனம். பொன்னுக்குண்டான் ஆற்றின் கரையில் இக்கோவில் 1-46 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 80 உயர 5 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு களர்முளைநாதேசுவரர், பாரிஜாத வன நாதர். அம்மன் அமிர்தவல்லி, இளங்கொம்பன்னாள். தீர்த்தம் துருவாச தீர்த்தம். தலவிருட்சம் பவளமல்லிகை.

துர்வாச முனிவர், பராசர முனிவர், காலவ முனிவர் முதலியோர் பூசித்த தலம். இங்கு நடராசர் துர்வாசருக்கு நடன தரிசனம் கொடுத்தார். நடராசருக்கு எதிரில் துர்வாசர் விளங்குகின்றார். உள்பிராகாரத்தில் வலம்புரி விநாயகர், தட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியர், துர்க்கை, லட்சுமி, சண்டிகேசுவரர் உள்ளனர்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 105 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. இங்குள்ள ஆறுமுகப் பெருமான் 12 திருக்கரங்களுடன் மயில் மீது அமர்ந்து காட்சி தருகிறார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம் திருப்புகழ் வைப்புத் தலங்களுள் ஒன்றாகும். தலபுராணம் ஆதியப்ப பாவலர் இயற்றியுள்ளார்.

கல்வெட்டுக்கள் 12 உள்ளன. இறைவர் அடைந்தார்க் கருள் செய்ய நின்ற நாயனார் என்னும் பெயர்களில் குறிக்கப் பட்டுள்ளது.

5. கோட்டூர்

நீலமார் தருகண்டனே நெற்றியோர் கண்ணனே யொற்றை விடைச்
சூலமார் தருகையனே துன்றுபைம் பொழில்கள் சூழ்ந்தழகாய
கோலமாமலர் மணங்கமழ் கோட்டூர் நற் கொழுந்தேயென் றெழுவார்கள்
சாலநீடல மதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காவே.

-- திருஞானசம்பந்தர்.

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 15கி.மீ. திருக்கோட்டூர். முள்ளியாற்றின் கரையில் இக்கோவில் 1-31 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கொழுந்தீசர் அம்மன் தேனார் மொழியம்மை. தீர்த்தம் முள்ளியாறு, சிவகங்கை, பிரம, சிவ, மண்டை, அமுத, இந்திர,விசுவகன்ம, அரம்பா என ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. தலமரம் வன்னி.

இத்தலத்தில் இரண்டு திருக்கோவில் கள் உள்ளன. மேற்கேயுள்ள திருக்கோவில் திருஞானசம்பந்தரின் திருப்பதிகத்தைப் பெற்றது. கிழக்கேயுள்ள திருக்கோவில் கீழ்க்கோட்டூர் மணி அம்பலம் என்ற பெயருடையது. இது கருவூர் தேவர் அருளிய திருவிசைப்பாப்பாடல் பெற்றது.

தேவர்களும் குச்சரமுனிகளும் பூசித்துப் பேறுபெற்ற தலம்.இத்தல வன்னிமரத் தடியில் சிவபெருமானை வழிபட்டுப்

பிரமதேவர் அருள்பெற்றார். ததீசி முனிவர் இறப்பிற்குக் காரணமான இந்திரன் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டுப் பிரமஹத்தி நீங்கப் பெற்றான். ஐராவதம் இறைவனைவழிபட்டு அரம்பையைக் கவர்ந்த குற்றத்திற்காக இறைவனால் சிதறுண்ணப்பட்டுப் பின் மணியம்பலத்தில் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு அருள்பெற்ற தலம். இந்திரசேனன் பிராமணர்களை நிந்தித்த பழிதீர வழிபட்ட தலம். இத்தலத்தில் பிதிர்க்கடன்கள் செய்வித்தற்குரிய தலம்.

தருமையாதீனம் 8வது மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம் பல தேசிக சுவாமிகள் பரிபூரணம் அடைந்த குருமூர்த்தம் இத்தலத்திருக் கோவிலின் தென்பால் உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 111 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அப்பர், சுந்தரர் அருளிய தனித் தேவாரப் பாடல்களும், சேக்கிழார் பெரிய புராணத்திலும் இத்தலத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோவிலில் 23 கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டில் இறைவர் பெயர் கொழுந்தாண்டார், கொழுந்தீசுவர சுவாமி என்றும், இவ்வூரை அருண்மொழித் தேவவளநாட்டு நென்மலி நாட்டிலுள்ள கோட்டூர் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் 6 கால பூஜை காமிகா ஆகம முறைப்படி பூஜை நடைபெறுகிறது. மாசிமகம், வைகாசி விசாகம் முதலிய நாட்களில் உற்சவம் நடைபெறுகிறது.

6. ஓகைப்பேரையூர்

மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்
கறைகொள் கண்டமு டையக பாலியார்
துறையும் போகுவர் தூயவெண் ணீற்றினர்
பிறையுஞ் சூடுவர் பேரெயி லாளரே.

-- திருநாவுக்கரசர்.

கூத்தாநல்லூருக்கு வடகிழக்கே 8கி.மீ. திருப்பேரெயில். வெண்ணாற்றின் வடபகுதியில் இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஜகதீசுவரர் கிழக்கு நோக்கியும். அம்மன் பெண்ணமிர்த நாயகி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் அக்னி, தலமரம்-நாரத்தை.

உள்பிராகாரத்தில் கற்பக விநாயகர், முருகன், மகாலஷ்மி, பைரவர், ஐயனார், சூரியர், சந்திரர், துர்க்கை, இலிங்கோத்பவர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இக்கோவில் 114 வது தலம்.

திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந் தொகைத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுள்ள தலம்.

இவ்வூரில் தோன்றிய முறுவலார் என்னும் பெண்மணி பாடிய பாடல்கள் குறுந்தொகையிலும், புறநானூற்றிலும் இடம் பெற்றுள்ளன.

இத்தல முருகப் பெருமானுக்குச் சித்திரையில் சஷ்டியில் விழா நடை பெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

7. செருவாமணி

அறத்தாலுயிர் காவ லமர்ந்தருளி
மறத்தான்மதின் மூன்றுடன் மாண்பழித்த
திறத்தாற்றெரி வெய்திய தீவெண்டிங்கள்
நிறத்தானெல்லிக் காவு ணிலாயவனே

-- திருஞானசம்பந்தர்

மன்னார்குடிக்கு கிழக்கே 23கி.மீ. திருநெல்லிக்கா, திருநெல்லிக்காவல். வெண்ணாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் 80 அடி உயர இராஜகோபுரமும், பிராகாரங் களுடன் மூலவர் மேற்கு நோக்கிய சுயம்புலிங்கமாக அருள்மிகு நெல்லிவன நாதர். அம்மன் மங்களநாயகி. தீர்த்தம் பிரம, சூரிய, சக்கர, ரோகநிவாரண, சந்திர என ஐந்து தீர்த்தங்கள். தலமரம் நெல்லிமரம்.

பிரமன், திருமால், சூரியன், சந்திரன், சனி, கந்தருவர் முதலியோர் வழிபட்டு நற்பேறுகள் பெற்ற தலம். துர்வாசர்க்கு இறைவன் கோபம் நீக்கி யருளிய தலம். ஆமலகேச சோழமன்னனின் திருப்பணி யைப் பெற்றது. அம்பிகை உத்தமசோழன் மகளாகத் தோன்றிப் பெருமானை மணம்புரிந்து கொண்ட சிறப்புடையது. பஞ்சாக்ஷரம் பூசித்த பெருமை உடையது.

தெய்வ உலகில் உள்ள கற்பகம் முதலிய பஞ்சதருக்கள் இத்தலத்தில் நெல்லிமரங்களாக விளங்குகின்றன எனத் தலபுராணம் கூறுகிறது. நெல்லிமரத்தைத் தலமரமாக உடையதலம் திருநெல்லிகா என்று பெயர். ஆண்டுதோறும் மாசி 18 முதல் ஒரு வாரம் சூரிய பூசை நிகழ்கிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 117 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அப்பர், சுந்தரர் அருளிய தேவாரப் பாடல்களும் இத்தலத்திற்குள்ளன.

இக்கோவிலில் 8 கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்களில் இறைவர் திருநெல்லிகா உடையார், ஆமலகேசுவரர் என்று குறிக்கப்பட்டுள்ளது. தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரையில் பெருவிழா நிகழ்கிறது.

8. பாலக்குறிச்சி

பூணாண் ஆவதோர் அரவங்கண் டஞ்சேன் புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணீராகிலும் பெருமையை உணர்வேன் பிறவே னாகிலும் மறவேன்
காணீ ராகிலுங் காண்பனென் மனத்தால் கருதீ ராகிலுங் கருதி
நானே லும்மடி பாடுதல் ஒழியேன் நாட்டியத் தான்குடி நம்பீ

-- சுந்தரர்.

கூத்தாநல்லூர்க்கு தென்கிழக்கே 12கி.மீ. திருநாட்டியத்தான்குடி. வெண் ணாற்றின் கரையில் இக்கோவில் 94 செண்ட் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய சன்னிதி, 5 நிலை இராஜ கோபுரமும், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு இரத்திரனபுரீசு வரர். அம்மன் மங்களாம்பிகை. தீர்த்தம் கோவிலின் முன்புறம் சூரிய தீர்த்தம். பின்புறம் கரி தீர்த்தமும் உள்ளது. தலமரம்-மாவிலங்கை. உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், விசுவநாதர், விசாலாக்ஷி, கஜலக்ஷ்மி, தட்சிணாமூர்த்தி, இலிங் கோற்பவர், கோட்புலிநாயனார் முதலிய

சன்னிதிகள் அமைந்துள்ளன.

இரத்தினேந்திர சோழனுக்கு இரத்தினங்களை பாகம் பிரித்து வைத்தமையால் இரத்தினபுரீசுவரர் என்று பெயர்.

யானை ஒன்று இத்தலத்தில் தீர்த்தமுண்டாக்கி நீராடி இறைவனை வழிபட்டு முத்திபெற்றது. யானை உண்டாக்கிய தீர்த்தம் கரிதீர்த்தம் என்றும். கரிக்கு அருள் செய்ததால் கரிநாலேசுரர் என இறைவனுக்கு பெயர்.

கோட்புலிநாயனார் திருவவதாரம் செய்த சிறப்புடைய தலம். ஒரு சமயம் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கோட்புலி நாயனார் வரவேற்றுத் தமது கண்ணனைய சிங்கடி, வனப்பகை என்னும் இரு புதல்வியரைச் சுந்தரருக்குப் பணிப்பெண் களாகத் தர, சுந்தரர் அவர்களைத் தமது புதல்வியராக ஏற்றருளிய தலம்.

சுந்தரர் திருக்கோவிலுக்கு வந்தபோது ஈசனையும், அம்மையையும் காணாது திகைத்து விநாயகரை வினவினார். விநாயகர் ஈசானத் திசையைக் கையால் காட்டி வாய்பேசாதிருந்தார். சுந்தரர் ஈசானத் திசைநோக்கி சென்று பார்த்தபோது பெருமானும், அம்மையும் உழவன் உழத்தியாக நடவு நட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு

நட்ட நடாக்குறை நாளை நடலாம்
நாளை நடாக்குறை சேறுதங் கிடவே
நட்டது போதும் கரையேறி வாரும்
நாட்டியத் தான்குடி நம்பி -

என பாட அம்மையப்பர் மறைந்து கோவிலுக்கு எழுந்தருளினார். சுந்தரர் கோவிலுக்கு மீள எழுந்தரும்போது வாயிலில் பாம்புதடுக்க 'பூணாணாவதோர் அரவங் கண்டஞ்சேன்' என்று பதிகம்பாடி இறைவனைத் தரிசித்து சென்றார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 118 வது. சுந்தரர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறிப்பிட்டுப் பாடிய இரண்டு பாடல்களும் உள்ளன.

தினமும் நான்கு கால பூஜையும், ஆடி மாதத்தில் நடவு உற்சவமும், கோட்புலி நாயனார் உற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

9. திருவெண்டுறை

ஆதிய னாதிரையன் னனலாடிய வாரழகன்
பாதியோர் மாதினொடும் பயிலும்பர மாபரன்
போதிய லும்முடிமேற் புனலோடர வம்புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்பும்மிடம் வெண்டுறையே

-- திருஞானசம்பந்தர்.

மன்னார்குடியிலிருந்து கிழக்கே 10கி.மீ. இக்கோவில் கிழக்கு நோக்கியதும், மூன்று நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருவெண்டுறைநாதர், பிரமரேசுவர். அம்மன் வேனெடுங்கண்ணி. விநாயகர் மதாமோத கணபதி. தீர்த்தம் பிரமபுரீச தீர்த்தம் கோவிலின் வடபால் உள்ளது. தலமரம்-வில்வம்.

பிருங்கி முனிவர் வண்டு உருவம் எடுத்து மாதொரு கூறராய் விளங்கிய இறைவனது திருமேனியின் இடையே துளைத்துச் சென்று வலம் வந்து இறைவனை மட்டும் வழிபட்டு அம்பிகையால் சாபம் எய்தி வண்டுருவாயிருந்து வழிபட்டு நற்கதியுற்ற பதியாகும். இப்பொழுதும் இறைவனுடைய சன்னிதியில் வண்டின் ஒலி கேட்கின்றது.

திருமால் இத்தலத்து இறைவரை

வழிபட்டு சிவபூசையின் சிறப்பை உலகுக்கு உணர்த்தினார் என்று தலபுராணம் கூறுகிறது.

பிரமன், துருவமன்னன், அங்கவன், அரிச்சந்திரன், தியாக சோழன் முதலியோர் இத்தலத்தை வழிபட்டு அருள்பெற்றனர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 112 வது. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது.

10. மன்னார்குடி

திருவாரூரிலிருந்து தென்மேற்கே 27கி.மீ. இராஜமன்னார்குடி, செண்ப காரண்யம். பாம்பணியாற்றின் கரையில் 7 கோவில்கள் அமைந்துள்ளன.

பாம்பணியாற்றின் மேற்குக்கரையில் இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய சன்னிதி மூலவர் சொக்கநாதர். அம்மன் மீனாட்சியம்மன்.

பாம்பணியாற்றின் வடக்குக்கரையில், இராமபுரத்தில் இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், பிராகாரத்துடன் மூலவர் ஜெயம்கொண்ட நாதர். வியாச முனிவர் தாபித்து வழிபட்ட இலிங்கம். ஜெயம்கொண்ட சோழன் கட்டுவித்த தலம். அம்மன் பெரியநாயகி. இராஜராஜேஸ்வரம், வியாசபுரம் என்றும் அழைக்கப்பெறும் இத்தலத்தில் 6 கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை. மேலும் இவ்வூரில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் அண்ணாமலை நாதர் திருக்கோவிலும், 2-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் ஏகாம்பரேசுவரர் திருக் கோவிலும், 25 செண்ட் நிலப்பரப் பளவில் கைலாசநாதர் திருக்கோவிலும், 11 செண்ட் நிலப்பரப்பளவில் காசிவிஸ்வநாதர் திருக் கோவிலும், 23 செண்ட் நிலப்பரப்பளவில் நீலகண்டேஸ்வரர் திருக்கோவிலும் அமைந் துள்ளன. மேலும் இவ்வூரில் உள்ள திருமால் கோவிலான இராஜகோபாலசுவாமி திருக் கோவில் மிக பிரசித்தி பெற்ற கோவிலாக விளங்குகிறது.

11. நீடாமங்கலம்

மன்னார்குடிக்கு வடக்கே 12கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக் கோவில் 86 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி. வைகாசி விசாகத்தன்று உற்சவம். மற்றொரு கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கோமுத்தீச்சுவரர்.

12. ஆதனூர்

நீடாமங்கலத்திலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ருத்திரபுரீஸ்வரர்.

13. ஒளிமதி

நீடாமங்கலத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் வையகளத் தூரில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

14. ரிஷியூர்

நீடாமங்கலத்திலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

15. பெரம்பூர்

நீடாமங்கலத்திலிருந்து தெற்கே 2கி.மீ. பாம்பணியாற்றின் கரையில் இக்கோவில் 28செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஜம்புநாதர். இவ்வூருக்கு அருகில் உள்ள முல்லைவாசலில் இக்கோவில் 3-46 ஏக்கர் நிலப்பரப்பளவில், கோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு முல்லைவன நாதர். அம்மன் கற்பகவல்லி. கார்த்திகை ஞாயிறு உற்சவம் நடைபெறுகிறது. இக்கோவிலில் சரபம் கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை நடை பெறுகிறது.

16. வடுவூர்

மன்னார்குடிக்கு வடமேற்கே 16கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். இவ்வூரில் கோதண்ட இராமசாமி கோவில் புகழ்பெற்ற இராமர் கோவிலாக விளங்குகிறது.

17. இடங்கன்கோட்டை

மன்னார்குடிக்கு வடமேற்கே 12கி.மீ. மேலையூர், அன்னவாசல். இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

18. ராயபுரம்

மன்னார்குடிக்கு வடக்கே 9கி.மீ. பாம்பணியாற்றின் கரையில் இக்கோவில் 3செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

19. வெள்ளக்குடி

கூத்தாநல்லூர்க்கு வடமேற்கே 6கி.மீ. இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ருத்திரகோட்டீசுவரர்.

20. ஆயிகுடி

கூத்தாநல்லூர்க்கு வடக்கே 4கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

21. புனவாசல்

கூத்தாநல்லூர்க்கு வடகிழக்கே 8கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாதவபுரீஸ்வரர். அம்மன் மங்களாம்பிகை.

22. கீழமணலி

கூத்தாநல்லூர்க்கு வடகிழக்கே 9கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கரநாதர்.

23. வடபாதிமங்கலம்

கூத்தாநல்லூர்க்கு கிழக்கே 6கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அருணாசலேசுவரர்.

24. பழையனூர்

கூத்தாநல்லூர்க்கு கிழக்கே 2கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர். மேலும் இவ்வூரில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் திருக்கோவிலும், 23 செண்ட் நிலப்பரப்பளவில் காளத்தீஸ்வரர் கோவிலும் அமைந்துள்ளது.

25. புதுத்தேவன்குடி

மன்னார்குடிக்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேசுவரர்.

26. கூத்தாநல்லூர்

மன்னார்குடிக்கு வடகிழக்கே 10கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் 89 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேசுவரர் மற்றும் 17 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் திருக்கோவிலும், பாண்டிதாங்குடியில் உள்ள 35 செண்ட் நிலப்பரப்பளவில் உமாபதிஈஸ்வரர் திருக்கோவிலும், இராமநத்தம் கோவில் வட்டத்தில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் கல்யாணசுந்தரேஸ்வரர் கோவிலும் உள்ளது.

27. புள்ளமங்கலம்

கூத்தாநல்லூர்க்கு கிழக்கே 9கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

28. மணக்கரை

கூத்தாநல்லூர்க்கு தென்கிழக்கே 10கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில்

இக்கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் கூத்தாண்டேஸ்வரர்.

29. திருராமேஸ்வரம்

மன்னார்குடிக்கு கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 1-04 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதர். அம்மன் மங்களாம்பிகை. தீர்த்தம் கோடி தீர்த்தம். இராமர் வழிபட்ட தலம். முதலாம் இராஜராஜன் மற்றும் இராஜேந்திர சோழ மன்னர்களின் கால கல்வெட்டுக்கள் உள்ளன.

30. சேந்தமங்கலம்

மன்னார்குடிக்கு கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

31. குன்னியூர்

மன்னார்குடிக்கு கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அனந்தீஸ்வரர்.

32. மாலவராயநல்லூர்

மன்னார்குடிக்கு கிழக்கே 8கி.மீ. இக்கோவில் திருவெந்துறையில் 63செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வந்துறைநாதர். இவ்வூர்க்கு அருகில் விக்ரபாண்டியத்தில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

33. சேரங்குளம்

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 2கி.மீ. பாம்பணியாற்றின் கிழக்கு கரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

34. நெம்மேலி

மன்னார்குடிக்கு தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

35. திருப்பாலக்குடி

மன்னார்குடிக்கு தெற்கே 5கி.மீ. இக்கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருப்பாலநாதர் மற்றும் பாலதண்டாயுதபாணி.

36. ஆதிச்சபுரம்

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 10கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரர்.

37. ஆலத்தூர்

மன்னார்குடிக்கு கிழக்கே 17கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

38. மகாதேவப்பட்டினம்

மன்னார்குடிக்கு தென்மேற்கே 10கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சம்போமகாதேவர். மேலும் இவ்வூரில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர் கோவிலும் உள்ளது.

39. தாளிக்கோட்டை

மன்னார்குடிக்கு தென்மேற்கே 12கி.மீ. நெல்லிக்கோட்டை. இக்கோவில் 20செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கரியழகர்.

40. பைங்காநாடு

மன்னார்குடிக்கு தெற்கே 6கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சபாபதீஸ்வரர்.

41. குறிச்சி

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 10கி.மீ. பாமணியாற்றின் கிழக்கு கரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவேதாரண்யேஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

42. பைங்காட்டூர்

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 12கி.மீ. இக்கோவில் கடைத்தெருவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். மேலபுத்தூரில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பைரவநாதர் கோவிலும் உள்ளது.

43. வட்டார்

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 14கி.மீ. இக்கோவில் தெற்குவட்டாரில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

44. நல்லூர்

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 16கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

45. மேலநத்தம்

மன்னார்குடிக்கு தெற்கே 15கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

46. திருமக்கோட்டை

மன்னார்குடிக்கு தெற்கே 16கி.மீ. ஞானபுரீஸ்வரம், பாரிஜாதவனம், திருமெய்ஞானபுரம் என அழைக்கப்படும் இக்கோவில் (283×211) 1-37 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஞானபுரீஸ்வரர். அம்மன் பெரியநாயகி. தீர்த்தம் ஞான தீர்த்தம். தலமரம்-பாரிஜாதம். வசிட்டர் பூஜித்த தலம். 16 வகையான கணபதி உள்ளார். 12 கல்வெட்டுக்களில் சோழ, பாண்டிய,விஜயநகர மன்னர்களின் காலத்தைச் சேர்ந்தது. கல்வெட்டுக்களில் இறைவர் திருமெய்ஞானமுடையார் என்றும் அம்மன் பெரியநாச்சியார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

47. கலுவத்தூர்

மன்னார்குடிக்கு தெற்கே 18கி.மீ. கூடல். பாமணியாற்றின் கிழக்குகரையில் இக்கோவில் 2-16 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஜடாயுபுரீஸ்வரர். அம்மன் சௌந்தர்யநாயகி. ஜடாயு பூசித்த தலம்.

48. குறிச்சிமூலை

மன்னார்குடிக்கு தென்கிழக்கே 20கி.மீ. இக்கோவில் நடுவகலப்பாலில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியநாதர்.

49. பாலையூர்

மன்னார்குடிக்கு தெற்கே 16கி.மீ. பாமணியாற்றின் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

50. எளவனூர்

மன்னார்குடிக்கு தெற்கே 17கி.மீ. பாமணியாற்றின் மேற்குகரையில் இக் கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வில்வவனநாதர்.

51. பெருவிடமருதூர்

மன்னார்குடிக்கு தெற்கே 20கி.மீ. கோரையாற்றின் கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

52. குலமாணிக்கம்

மன்னார்குடிக்கு தெற்கே 21கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

53. மண்ணுக்குமுண்டான்

மன்னார்குடிக்கு தெற்கே 21கி.மீ. கோரையாற்றின் மேற்குகரையில் இக் கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.


54. புத்தகரம்

மன்னார்குடிக்கு தெற்கே 24கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

திருச்சிற்றம்பலம்

திருத்துறைப்பூண்டி வட்டம்

(திருவாரூர் மாவட்டம்)



1. சிற்றாய்மூர்

நிறைவெண்டிங்கள் வாண்முகமாதர்பாட நீள்சடைக்
குறைவெண்டிங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
சிறைவண்டியாழ்செய் பைம்பொழிற் பழனஞ்சூழ்சிற் றேமத்தான்
இறைவனென்றே உலகெலாம் ஏத்தநின்ற பெருமானே

-- திருஞானசம்பந்தர்

திருத்துறைப்பூண்டிக்கு வடகிழக்கே 14கி.மீ. திருச்சிற்றேமம். இக்கோவில் அறுபது அடி உயர இராஜகோபுரம், நான்கு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பொன்வைத்தநாதேசுவரர். அம்மன் அகிலாண்டநாயகி. தீர்த்தம் சொர்ணதீர்த்தம். தலமரம்-ஆத்தி. இம்மரம் மிகவும் பழைமையானது. கோவிலுக்கு வடக்கில் சொர்ணபுஷ்கரிணி திருக்குளம் உள்ளது.

அகத்தியர், தேவேந்திரன், நாகராஜன், பிரமன் முதலியோர் பூசித்த தலம்.

சுவாமி சன்னிதியின் தென்பக்கத்தில் உள்ள தேன்கூடு சித்தர்கள் தேன் ஈக்களாக உருவெடுத்துப் பூசித்தமையால் இத்தேன் கூட்டுக்கு நாள்தோறும் பூஜை நடை பெறுகிறது.

தன்கணவனால் மறந்துவிடப்பட்ட அவன் மனைவிக்குத் தினம் ஒரு பொன் கோவிலில் சன்னிதியில் வைத்துக் காப் பாற்றியதால் இறைவனுக்கு பொன்வைத்த நாதர் என்று பெயர். கணவன் திரும்பி வந்து சந்தேகப்பட அப்பதிவிரதையின் பிரார்த் தனையின்படி சன்னிதிக்குப் பின்னிருந்த ஆத்திமரம் கோவிலுக்கு முன்னும், பலிபீடத்திற்கு முன்னிருந்த நந்தி அதற்குப் பின்னுமாய் இடம் மாறியிருக்கும்படி சிவபெருமான் அருளிச் செய்தருளினார்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 106 வது. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

2. வடகாடு

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.

-- திருஞானசம்பந்தர்

முத்துப்பேட்டையிலிருந்து வடக்கே 3கி.மீ. சூதவனம், திருஉசாத்தானம், கோவிலூர் என தற்போது வழங்கப்பெறும் கோறையாற்றின் வடகரையில் இக்கோவில் 2-17 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மந்திரபுரீசுவரர். வெண்மைநிறம் கொண்டவர். அம்மன் பெரியநாயகி. விநாயகர் சூதவனவிநாயகர், மற்றும் மூன்று திருமுருகங்களுடனும் முக்கால்களுடன் விளங்கும் சுரஹரேசுவரர். தீர்த்தங்கள் அனுமன், மார்க்கண்டேய, கௌதம தீர்த்தங்கள். தலமரம்-மா.

இராமர், இலக்குமணர், சாம்புவான், சுக்கிரீவன், அனுமன் முதலியோர் வழிபட்ட தலம். இராமர் சேதுபந்தனம் செய்தற்கு இத்தல இறைவனிடம் மந்திர உபதேசம் பெற்றுச் சென்றதனால் இறைவர்

மந்திரபுரீசுவரர் என வழங்கப் பெறுகின்றார். இராமர் இத்தலப்பெருமானிடம் கடலில் அணைகட்டுதற்குரிய வழி வகைகளை உசாவிய தலம் ஆதலின் இவ்வூர் உசாத்தானம் எனப்பெயர் பெற்றது.

இராமர் வேதாரண்யம், இராமேசுரம், கன்யாகுமரி ஆகிய மூன்று இடங்களில் அணைகள் கட்டினார் என்றும் இறைவனருளால் இராமேசுரத்தில் கட்டிய அணையே கை கூடிற்று என்றும் கூறுவர்.

விசுவாமித்திரருக்குப் பெருமான் திருநடனக் காட்சி காட்டிய தலம். குட்டநோயுற்று அறிவுதிரிந்தும் வருந்திய வருணன் இத்தலத்தையடைந்து வழிபட்டு நலமுற்றான்.

மார்க்கண்டேயர் இயமன் வீசிய பாசக்கயிற்றினால் ஏற்பட்ட வடுக்கள் நீங்க இத்லத்திற்கு வந்து தன்பெயரால் தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடி இறைவனை வழிபட்டு வடுநீங்கப் பெற்ற தலம்.

ஆதிசேடன் இத்திருக்கோவிலைத் திருப்பணி செய்து வழிபட்ட தலம். கருட பகவான் ஆகாயமார்க்கமாக அமுதகலசத்தை ஏந்திச் சென்றபோது சிந்திய அமுதம் இத்தலத்து இறைவன் முடிமீது பட்டதால் இத்தலப் பெருமான் வெண்மை நிறமுற்றார் என்றும் தலபுராணம் கூறுகிறது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இக்கோவில் 107 வது தலம். திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. சூதவனப் புராணம், பிரபந்தம் திருஉசாத்தான நான்மணிமாலை இத்தலத் திற்கு உள்ளது.

இக்கோவிலில் சோழ மன்னர்களில் விக்கிரம சோழ தேவர், மூன்றாம் குலோத் துங்கன், மூன்றாம் இராசேந்திர சோழன், பாண்டியரில் பெருமாள் சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவர் திருஉசாத்தானமுடைய நாயனார், திருவுசாத்தனமுடையார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் 6 கால பூஜை நடை பெறுகிறது. வைகாசி விசாகத்திற்கு முன் பத்து நாட்கள் பிரமோற்சவம் நடை பெறுகிறது.

3. இடும்பாவனம்

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே.

-- திருஞானசம்பந்தர்

திருத்துறைப்பூண்டிக்கு தெற்கே 12கி.மீ. திருஇடும்பாவனம். இக்கோவில் 67 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சற்குணநாதேசுரர். அம்மன் மங்களநாயகி. தீர்த்தம் சீதபுஷ்கரிணி, மோக்ஷபுஷ்கரிணி, பிரம, எம, அகத்திய தீர்த்தங்கள். தலமரம் வில்வம். உள்பிராகாரத்தில் வெள்ளை விநாயகர், முருகன், சூரியன், அகத்தியர், இடும்பை, சனிபகவான், கஜலஷ்மி, பைரவர், சந்திரர், லிங்கோத்பவர், துர்க்கை, நடராஜர் முதலிய சன்னிதிகளும், சுவாமிக்குப் பின்னால் உள்ள இறைவனது திருமணக் கோலக் காட்சி சிறப்புடையது.

இடும்பை வழிபட்டு நல்வாழ்வு பெற்றதால் இத்தலம் இடும்பாவனம் எனப்

பெயர் பெற்றது. பிரமன், இராமன், அகத்தியர், எமன் ஆகியோர் வழிபட்ட தலம். பிதிர்முத்தித் தலங்களில் ஒன்றாக விளங்குவது.

அகத்தியர் இத்தலத்தில் வாழ்ந்த காலத்தில் பாவங்களால் அரக்கர் வடிவம் பெற்ற தேவசருமன் என்ற அந்தணனுக்கும் அவன் மனைவிக்கும் தன் கமண்டல நீரைத் தெளித்து உபதேசமளித்து சற்குணநாதரை வழிபடச் செய்து மோக்ஷமளித்தார்.

குணபரன் என்பவன் தன்தந்தையின் அஸ்தியை இத்திலத்திற்கு வரும்போது அஸ்தியில் தன் தந்தையின் உருவம் தோன்றி மைந்தனை வாழ்த்தி வீடுபெற்றது. குணபரன் மகிழ்ந்து சீதபுஷ்கரிணியில் நீராடி இறைவனை வழிபட்டு மகிழ்ந்தான்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 108 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் அருளிய ஒரு திருத் தாண்டகப் பாடலும் இத்தலத்திற்குள்ளது.

நான்கு கால பூஜை. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

4. கற்பகநாதர்குளம்

பொடிகொள் மேனிவெண் ணூலினர் தோலினர் புலியுரி யதளாடை
கொடிகொ ளேற்றினர் மணிகிணி னெனவருகுரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரு மடியரை முன்வினை மூடாவே.

-- திருஞானசம்பந்தர்

இடும்பாவனத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. திருக்கடிக்குளம். இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கற்பகநாதர். எட்டுப்பட்டை களோடு கூடிய திருவுருவத்துடன் விளங்குகிறார். அம்மன் சவுந்தரநாயகி. விநாயகர் கற்பகவிநாயகர். தீர்த்தம்-விநாயக தீர்த்தம், தலமரம்-பலா.

கார்த்திகார்ச்சுனன் என்னும் அசுரன் ஒருவன் வழிபட்டு வரங்கள் பலவும் பெற்று தமக்குக் கற்பகமாக உதவியருளிய கற்பகநாதரைத் திருக்கோவில் எடுத்து வழிபட்ட தலம். கற்பகவிநாயகர் சிவபெருமானை வழிபட்டு மாங்கனி பெற்ற தலம்.

இராமர் திருஉசாத்தானத்தில் இறை வனிடம் மந்திர உபதேசம் பெற்றார். அவ்வாறு அணைகட்ட வேதாரண்யம் வந்தபோது இத்தலத்திற்கு வந்து கற்பகவிநாயகரின் அருளைப் பெற்றார். கோதண்டராமர் ஆலயம் இத்தலத்தில் கோவிலுக்கு அருகில் உள்ளது.

ஒரு அந்தணன் தன் தந்தைக்குப் பிதிர்க்கடன் செய்யக் கொண்டு வந்த அஸ்திகள் இங்குக் கொன்றை மலராக மாறியது என்று கூறுவர்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 109 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் உள்ளன. கரையங் காடு என்னும் ஊர் தஞ்சை மன்னரால் இத்திருக்கோவிலுக்குத் தரப் பெற்றுள்ளது.

நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

5. வேலூர்

விரும்புந் திங்களுங் கங்கையும் விம்மவே
சுரும்புந் தும்பியுஞ் சூழ்சடை யார்க்கிடம்
கரும்புஞ் செந்நெல்லுங் காய்கமழ கின்வளம்
நெருங்குந் தண்டலை நீனெறி காண்மினே
-- திருஞானசம்பந்தர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 3 கி.மீ. திருத்தண்டலைநீள்நெறி, தண்டலைச் சேரி, ஊரின்பெயர் தண்டலை, கோவிலின் பெயர் நீள்நெறி. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில், இராஜகோபுரம், பிரா காரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நீள்நெறி நாதர். அம்மன் ஞானாம்பிகை. தீர்த்தம் ஓமக தீர்த்தம். தலமரம் ஒரிலைக் குருந்தம். உள்பிரா காரத்தில் விநாயகர், ஆறுமுகர், வியாக்ர பாதர், பதஞ்சலி முனிவர்கள் பூசித்த இலிங் கங்கள், சூரியன், சந்திரன், கோச்செங்கட் சோழர், அரிவாட்டாய நாயனார், நடராசர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

கோச்செங்கட்சோழ மன்னர் கட்டிய மாடக் கோவிலை உடையது. ஆமை அவதாரம் கொண்ட திருமால் செருக்குற்றுக் கடலைக் கலக்கச் சிவபெருமான் ஆமையைக் கொன்று அதன் ஓட்டை அணிந்தருளிய பதி.

அரிவாட்டாய நாயனர் வறுமையுற்ற காலத்தும் இறைவனுக்குத் தான் செய்து வந்த நிவேதனப் பணியை விடாமல் செய்து பசிமயக்கத்தால் பெருமானுக்குக் கொண்டு சென்ற மாவடு, செங்கீரை ஆகியன கமரில்விழ, தான் செய்து வந்த தொண்டுக்கு இடையூறு நேர்ந்ததே என வருந்தி அரிவாளால் அறுத்துக்கொள்ள முற்பட்ட போது இறைவன் வெளிப்பட்டு அவர் குடும்பத்திற்கு வீடுபேறு அருளிய தலம். அரிவாட்டாயர் அவதரித்த கணமங்கலம். இவ்வூருக்குக் கிழக்கே ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது.

படிக்காசு முனிவர் இவ்வூர் இறைவன் மேல் உலகநீதிகள் பலவற்றையும் இணைத்துப் பாடியருளிய தண்டலையார் சதகம் தமிழுலகம் அறிந்த நூலாகும்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 110 வது. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் இத்தலத்தை வைப்புத்தலமாகப் போற்றி பாடியுள்ளார்.

ஆறுகால பூஜை நடைபெறுகிறது. மார்கழித் திருவாதிரை விழாவும், தைத் திருவதிரையில் அரிவாட்டாயர்க்கு அருள் புரிந்த ஐதிக விழாவும் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் சுவர்ணபுரீஸ்வரர் கோவிலும் உள்ளது.

6. கீராளத்தூர்

நிணம்படு சுடலையி னீறு பூசிநின்
றிணங்குவர் பேய்களோ டிடுவர் மாநடம்
உணங்கல்வெண் டலைதனில் உண்பராயினும்
குணம்பெரி துடையர்நங் கொள்ளிக் காடரே
-- திருஞானசம்பந்தர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 15கி.மீ. திருக்கொள்ளிக்காடு. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அக்னியீச்சுரர். அம்மன் பஞ்சின் மெல்லடியம்மை தீர்த்தம் அக்னி. தலமரம்-வில்வம்.

அக்னி தேவன் சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்ற தலமாதலால் இத்தலம் கொள்ளிக்காடு எனப்பெற்றது.

திருநள்ளாறுபோல சனிபகவான் சன்னிதி இத்தலத்தில் விசேடமுடையது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக் குத் தென்கரையில் இத்தலம் 115 வது. திரு ஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திரு நாவுக்கரசர் அடைவுத்திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

7. திருத்தேங்கூர்

புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கடல் நஞ்சை யுண்டவர் கருதலர் புரங்கள்
இரைசெய் தாரழ லூட்டி யுழல்பவ ரிடுபலிக் கெழில்சேர்
விரைசெய் பூம்பொழிற் றெங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே.

-- திருஞானசம்பந்தர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 16கி.மீ. திருத்தெங்கூர், தெங்கூர், தேங்கூர், வெள்ளிமலை. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு வெள்ளிமலை நாதர். அம்மன் பெரியநாயகி. தீர்த்தம் சிவகங்கை. தலமரம்-வில்வம்.

தென்னைவளம் சான்ற ஊராதலின் தெங்கூர் என்றும், ஊழிக்காலத்தில் உலகம் கடல் கோளால் அழியும்போது இத்தலம் மட்டும் அழியாமல் நிலைத்து நின்ற தெனவும், கடல் நீர் தேங்கி நின்றதால் தேங்கூர் எனப் பெற்றதென்று தலபுராணம் கூறுகிறது.

திருமகளும், நவகோள்களும் பூசித்துப் பேறு பெற்ற தலம். திருமகள் வழிபட்ட இலிங்கம் அத்திருமகள் சன்னிதிக்கு எதிரில் உள்ளது.

அரிந்தமன் என்ற மன்னன் இத்தல இறைவரை வழிபட்டுப் பேறுகள் பெற்றான். கங்கை வழிபட்டுத் தன்பாவம் போக்கிய தலம். பீஷ்மர், துரோணர், பாண்டவர் வழிபட்டு நற்பயன்கள் பெற்ற தலம்.

நவகிரகங்கள் வழிபட்ட ஒன்பது இலிங்கங்கள் பிராகாரத்தில் உள்ளன. சிவகங்கைத் தீர்த்தத்தில் அகலிகை நீராடி தன் பாவங்களைப் போக்கிச் சிவனருள் பெற்றாள். மாசிப் பௌர்ணமியோடு கூடிய திருவாதிரையில் தீர்த்தமாடி இறைவனை வழிபடுவோர் நன்மைகள் பலவும் எய்துவர்.

இத்தலம் சோழநாட்டுக் காவிரித் தென் கரைத் தலங்களில் 116 வது. திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்றது. அப்பர், சுந்தரர் அருளிய பாடல்களிலும் இத்தலத்தைக் குறிப்பிடு கின்றன.

கல்வெட்டுக்கள் 5 உள்ளன. சோழர் காலத்தியவை நான்கும், பாண்டியர் காலத்தியவை ஒன்றும் ஆகும். கல்வெட்டில் சுவாமியின் பெயர் திருவெள்ளியங் குன்ற முடையார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

இத்தலத்திற்கு தலபுராணம் உள்ளது.

8. கச்சனம்

தையலோர் கூறுடையான் றன்மதிசேர் செஞ்சடையான்
மையுலா மணிமிடற்றான் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவே லேந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை கோவில் கைச்சினமே.

-- திருஞானசம்பந்தர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 11கி.மீ. திருக்கைச்சினம். கோங்குவனம், கர்ணிகாரவனம். இக்கோவில் 48 செண்ட் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், மூன்று நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக

அருள்மிகு கைச்சின்னநாதர். அம்மன் வெள்வளைநாயகி. தீர்த்தம் வச்சிர, இந்திர தீர்த்தங்கள். தலமரம் கோங்கிலவு. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், விதூர்மலிங்கம், நடராஜர், அர்த்தநாரீசுரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இக்கோவில் கோச்செங்கட் சோழ மன்னர் கட்டிய மாடக் கோவில்களுள் ஒன்றாகும்.

இந்திரன், அகத்தியர், திருணபிந்து முனிவர், விதூமன், மித்ரசகன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற பெருமையுடைய தலம். கௌதம முனிவரால் இந்திரனுக்கு நேர்ந்த சாபம் விலகியது. அகத்தியருக்குப் பிரமகத்தி நீங்கிய தலம்.

இந்திரன் மணலினால் இலிங்கம் செய்து பூசித்தபின் அதனை எடுக்க முயன்றபோது இந்திரனுடைய கைச்சின்னம் அவ்விலிங்கத்தில் பதிந்த காரணத்தினால் இறைவர் கைச்சின்னநாதர் எனப்பெற்றார். தலமும் கைச்சின்னம்எனப்பெற்றது கச்சனம் என மருவி வழங்கப்படுகிறது. இந்திரன் ஐராவதத்தின் தந்தத்தால் செய்த வெள்வளையை அணிவித்து வழிபட்டதால் அம்பிகைக்கு இப்பெயர் பெற்றார். இந்திரனது வச்சிராயுதத்தால் வெட்டப்பட்ட தீர்த்தம் வச்சிர தீர்த்தமாயிற்று.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 122 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழில் வைப்புத்தல மாகப் பாடியுள்ளார். தலபுராணம் உள்ளது.

இக்கோவிலில் 11 கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர் காலத்தியவை எட்டும், பாண்டியரது ஒன்றும், விஜயநகரத்தரசனது இரண்டும் உள்ளன. இறைவர் கோங்குவனேசுவர சுவாமி, திருக்கைச்சினம் உடைய நாயனார், கரச்சின்னேசுவரர் என்ற பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது. தினமும் 5 கால பூஜை. வைகாசியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. இக்கோவில் மதுரை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது.

9. பன்னத்தெரு

திருத்துறைப்பூண்டிக்கு வடகிழக்கே 7கி.மீ. முகத்தலை. இக்கோவில் 1-06 ஏக்கர் நிலப்பரப்பளவில் 53அடி உயர இராஜ கோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பன்னகாபரமேஸ்வரர். அம்மன் சாந்த நாயகி. தலமரம்-புன்னை.

கருவூர்த்தேவர் அருளிய அழகிய திருவிசைப்பாப் பதிகம் இத்தலத்திற் குள்ளது. இறைவர் பெயர் திருவிசைப்பாப் பதிகத்தில் குறிப்பிடப்படுகிறது. இப் பெயரையொட்டியே இவ்வூர் பன்னாக பரணர் தெரு என வழங்கப்பட்டுப் பன்னத் தெரு என மாறியது.

ஆலயத்தில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டில் எழுந்த இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வாலயம் மதுரை ஆதீன அருளாட்சியில் உள்ளது.

10. திருத்துறைப்பூண்டி

திருவாரூர்க்கு தெற்கே 31கி.மீ. திருத்தருப்பூண்டி, வில்வவனம். இக் கோவில் 2-59 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பவ ஒஷதீஸ்வரர். அம்மன் பிருஹந்நாயகி. தீர்த்தம் மங்கள தீர்த்தம். தலமரம்-வில்வம். உள்பிராகாரத்தில் தீர்த்தவிடங்க தியாகராசர், சுப்பிரமணியர், கஜலஷ்மி, கஜசம்காரமூர்த்தி, பைரவர், நால்வர், தீர்த்தவிடங்க விநாயகர், நடராசர் முதலிய சன்னிதிகள் உள்ளன. 4 கால பூஜை. சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

11. அம்மனூர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 10கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரர்.

12. பாங்கல்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 12கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சௌந்தரேசுவரர்.

13. கொளப்பாடு

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 15கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

14. ஆலத்தம்பாடி

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

15. பூசலாங்குடி

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 10கி.மீ. திருவலம்சுழி. இக்கோவில் 49 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர்.

16. பழையங்குடி

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் 52 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். இவ்வூருக்கு அருகில் உள்ள கரும்பையூரில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

17. நீர்மூலை

திருத்துறைப்பூண்டிக்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

18. கீரக்களூர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 9கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர். இவ்வூருக்கு அருகில் உள்ள பழைய நத்தத்தில் உள்ள கோவிலுள்ள மூலவர் கைலாசநாதர்.

19. விளக்குடி

திருத்துறைப்பூண்டிக்கு வடமேற்கே 8கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் திருவலம்புரநாதர்.

20. பனையூர்

திருத்துறைப்பூண்டிக்கு வடமேற்கே 13கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கேஸ் வரர்.

21. கொத்தமங்கலம்

திருத்துறைப்பூண்டிக்கு வடமேற்கே 5கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

22. குன்னூர்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதசுவாமி.

23. திருவிடைமருதூர்

திருத்துறைப்பூண்டிக்கு வடகிழக்கே 9கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமெய்நாதர்.

24. கொருக்கை

திருத்துறைப்பூண்டிக்கு கிழக்கே 8கி.மீ. தலைக்காடு. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆத்மநாதர். 600 வருட முற்பட்டகோவில்.

25. தேவம்மாபூரம்

திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

26. எழிலூர்

திருத்துறைப்பூண்டிக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சப்தரிஷிஈஸ்வரர். இவ்வூருக்கு அருகில் உள்ள நேமத்தில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேதபுரீஸ்வரர்.

27. வங்கநகர்

திருத்துறைப்பூண்டிக்கு தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வால்மீகிநாதர். 650 வருட முற்பட்ட கோவில்.

28. கட்டிமேடு

திருத்துறைப்பூண்டிக்கு தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

29. சேகல்

திருத்துறைப்பூண்டிக்கு தென்கிழக்கே 6கி.மீ. இக்கோவில் வட்டகுடியில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வர்த்தமானேஸ் வரர்.

30. அரியலூர்

திருத்துறைப்பூண்டிக்கு தென்மேற்கே 10கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பரமநாதர்.

31. வடசங்கந்தி

திருத்துறைப்பூண்டிக்கு தென்மேற்கே 11கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சுந்தரேஸ்வரர். 2100 வருட முற்பட்ட கோவில்.

32. எடையூர்

திருத்துறைப்பூண்டிக்கு தென்மேற்கே 11கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர். 550 வருட முற்பட்ட கோவில்.

33. எக்கல்

திருத்துறைப்பூண்டிக்கு தெற்கே 8கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

34. கீழப்பெருமழை

திருத்துறைப்பூண்டிக்கு தெற்கே 10கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆத்மநாதர்.

35. சிங்காந்தி

திருத்துறைப்பூண்டிக்கு தென்மேற்கே 14கி.மீ. இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மணிகண்டேஸ் வரர். இவ்வூரில் மற்றொரு கோவிலான சிவலோகநாதர்.

36. பின்னத்தூர்

தில்லைவிளாகத்திலிருந்து வடக்கே 6கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

37. முத்துப்பேட்டை

தில்லைவிளாகத்திலிருந்து மேற்கே 8கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.


38. தில்லைவிளாகம்

திருத்துறைப்பூண்டிக்கு தென்மேற்கே 17கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சௌந்தரேஸ் வரர். இவ்வூருக்கு அருகில் உள்ள தோலியில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் இராமலிங்கர்.

திருச்சிற்றம்பலம்

திருவிடைமருதூர் வட்டம்

(தஞ்சாவூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருவிடைமருதூர்

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானு மகிழ்ந்து
ஈடாவுறை கின்ற இடைமரு தீதோ.

-- திருஞானசம்பந்தர்



கும்பகோணத்திலிருந்து வடகிழக்கே 9கி.மீ. இடைமருது, வில்வவனம், சண்பகாரண்யம், சத்திபுரம், தபோவனம், ஜோதிபுரம், சர்வதீர்த்தபுரம், செல்வ விருத்திபுரம், தருமவிருத்திபுரம், முத்திபுரம், வீரசோழபுரம், பூலோகம் என 12 பெயர்கள். காவிரியாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 20-00 ஏக்கர் நிலப்பரப் பளவில், 7 கோபுரங்களும் 7 பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாலிங்கப்பெருமான் கிழக்கு நோக்கியும். அம்மன் பெருநலமா முலையம்மன் தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றன. விநாயகர் ஆண்ட பிள்ளையார். தீர்த்தம்- காருண்யாதீர்த்தம் கோவிலுக்கு கிழக்கே திருக்குளமாக உள்ளது. தலமரம்- மருதமரம்.

வடக்கே ஸ்ரீசைலம், தெற்கே திருப்புடைமருதூர், இடையில் இத்தலம் இருப்பதால் திருவிடைமருதூர் என்று பெயர். மேற்கேயுள்ள இராஜகோபுரம் பெரியது. தனிச்சன்னிதியில் மூகாம்பிகையம்மன்.

பரிவாரக் கடவுளர் தலங்கள் திருவலஞ்சுழி விநாயகர், சுவாமிமலை- முருகன், திருவாப்பாடி- சண்டிகேஸ்வரர், சூரியனார் கோவில்-நவக்கிரகம், சிதம்பரம் -நடராஜர், சீர்காழி-பைரவர், திருவாவடு துறை-நந்தி, திருவாரூர்-சோமாஸ்கந்தர், ஆலங்குடி-தட்சிணாமூர்த்தி முதலிய தலங்கள் சூழ அமைந்து மூலஇலிங்கமாக நடுவில் இத்தலம் விளங்குகிறது.

அம்பிகை, அகத்தியர், உரோமச முனிவர், சுகீர்த்தி, காசிபர் முனிவர், வீரசேனன், சித்திரகீர்த்தி, வரகுணர், யுவனாசுவன், மாந்தாதா, வசுமன்னன், அஞ்சத்துவன், நந்தகன், பொன்னுருவச் சோழன் சுணங்கன், திரியம்பகன் முதலானோர் இத்தல இறைவனை வழிப்பட்டு பேறுப் பெற்ற தலம்.

வரகுணபாண்டியனுடைய பிரமகத்தி தோஷத்தை நீக்கிய இடம். அம்மன்னன் பலதொண்டுகள் புரிந்து வீடுபெற்ற தலம். பட்டினத்தடிகளும். பத்திரகிரியாரும் முறையே கிழக்கு வாயிலிலும், மேற்கு வாயிலிலும் இருந்தனர். அதற்கு அறிகுறியாக அவர்களின் உருவச் சிலைகள் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இத்தலம் 30 வது. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், சேந்தனார், கருவூர் தேவர், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், சேக்கிழார், பத்திரகிரியார் முதலானோர் இத்தல இறைவனைப் போற்றி பாடியுள்ளனர். தலபுராணம் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றியது.

பெரிய பிராகாரம் எனப்படும் அசுவமேதப் பிராகாரத்தை முறைப்படி நாள்தோறும் வலம்வந்து சித்த சுவாதீன மின்மை நீக்கம் பெற்று நலம் பெறுகின்றனர்.

கல்வெட்டுக்கள் 151 உள்ளன. நாடு, கோவில் பற்றிய பல வரலாற்றுண்மைகள் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. இத்தலத்தில் தைப்பூசத் தில் நீராடுதல் சிறந்தது. தைப்பூச உற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்த மான கோவிலாகும்.

2. ஆடுதுறை

இரங்கா வன்மனத் தார்கள் இயங்குமுப்
புரங்கா வல்அழி யப்பொடி யாக்கினான்
தரங்கா டுந்தட நீர்ப்பொன்னித் தென்கரைக்
குரங்கா டுதுறைக் கோலக் கபாலியே
-- திருநாவுக்கரசர்

திருவிடைமருதூர்க்கு கிழக்கே 3 கி.மீ. திருத்தென்குரங்காடுதுறை. இக்கோவில் காவிரியாற்றின் தென்கரையில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆபத்சகாயே சுரர், அம்மன் பவளக்கொடியம்மை. தீர்த்தம்-சகாயதீர்த்தம்.

இத்தலம் காவிரிதென்கரையில் இருப் பதாலும், சுக்கிரீவன் வழிபட்ட தலமாதலாலும் தென்குரங்காடுதுறை என்று வழங்கப்படுகிறது.

பிராகாரத்தில் விநாயகர், முருகன், விசுவநாதர், விசாலாட்சி, மகாலட்சுமி முதலிய சன்னிதிகள் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரித் தென்கரையில் இத்தலம் 31 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

இக்கோவில் உத்தமசோழதேவரது தாயராகிய செம்பியன் மாதேவியாரால் கட்டப்பெற்ற கற்றளியாகும். 15 கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை பூபாலகுலவல்லி வளநாடு, திரைமூர்நாடு, திருக்குரங்காடுதுறை என்று குறிக்கப் படுகின்றன.

3. மருத்துவக்குடி

ஆடுதுறைக்கு தெற்கே ஒரு கி.மீ. இடைக்குளம். இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், 5 நிலை இர்ராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஐராவ தேச்சுவரர். அம்மன் அபிராமி. தீர்த்தம் சந்திர புஷ்கரிணி.

ஐராவதம் இத்தல இறைவனை வணங்கி பேறு பெற்றதால் இறைவனுக்கு ஐராவதேசுவரர் என்று பெயர். சந்திரன் இத்தலத்திற்கு வந்து சாபவிமோசனம் பெற்றதால் இத்தல தீர்த்தம் சந்திர தீர்த்தம் என்று பெயர். ஸ்ரீ கிருஷ்ணர் வழிபட்டு ருக்மிணிதேவியை அடைந்ததும், ஸ்ரீஆதி சேஷன் வழிபட்டு பூமிதேவியைத் தாங்கும் வலிமையையும் பெற்ற தலம்.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்றாகும். திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத்தில் போற்றப்பட்டுள்ளது.

அகத்திய முனிவர் வழிபட்ட தலம். இத்தல முருகன் மீது அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்றது.

கல்வெட்டுக்களில் உய்யக்கொண்டார் வளநாட்டு திரைமூர் நாட்டு திருஇடைக்குள முடையார் எனக்குறிப்பிடப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

4. திருநீலக்குடி

வைத்த மாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்த போது செறியார் பிரிவதே
நித்த நீலக் குடியர னைந்நினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே.

-- திருநாவுக்கரசர்

ஆடுதுறைக்கு தெற்கே 3 கி.மீ. தென்னலக்குடி, பஞ்சவில்வாரண்ய க்ஷேத்திரம். இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய சன்னிதியும், இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ மனோக்யநாதர், நீலகண்டர். அம்மன் அநூபமஸ்தனி. தலமரம் பஞ்சவில்வமரம். தீர்த்தங்கள்-பிரமதீர்த்தம் என்கிற கிணறு, தேவி, பாரத்வாஜ, மார்க்கண்டேய, க்ஷீரகுண்டம் தீர்த்தங் களாகும்.

உள்பிராகாரத்தில் பிரமன் வழிபட்ட பிரமலிங்கம், வடக்குப் பிராகாரத்தில் உள்ள பலாமரம் உள்ளது. மூலவர் அபிஷேகத்தின் போது எண்ணெய் சுவறும் அதிசயம் இன்றும் காணலாம்.

தேவர்கள் திருப்பாற்கடலில் அமுதம் கடைந்த காலத்தில் தோன்றிய நஞ்சை உண்டு நீலகண்டனான இறைவன் எழுந்தருளி விளங்குவது ஆதலின் இத்தலம் திருநீலக்குடி எனப்பெயர்பெற்றது.

பிரமன், வருணன், ரோமச முனிவர், தேவகன்னிகைகள் பூசித்த தலம். இத்தலப் பெருமான் மார்க்கண்டேயருக்கு அருள் புரிந்தவர் ஆதலின் மார்க்கண்டேயர் லிங்கமும் உள்ளது.

இத்தலத்தில் மட்டுமே வில்வதளம் ஐந்தாக இருக்கும் மற்ற எல்லா ஊர்களிலும் மூன்று தளங்களே இருக்கும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிதென்கரையில் இத்தலம் 32 வது. திருநாவுக்கரசர் திருப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசு சுவாமிகளைச் சமணர்கள் கல்லோடு பிணைத்துக் கடலில் இட்டபோது அவர் இத்தல இறைவன் திருப்பெயரை ஓதிக் கரையேறினார் என அவர் அருளிய தேவாரம் குறிப்பிடுவதைக் காணலாம்.

கல்வெட்டுக்கள் அனேக உள்ளன. தினமும் 4 கால பூஜை. சித்திரை மாதம் உற்சவம் நடைபெறுகிறது. இக்கோவில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்த மானது.

5. பந்தநல்லூர்

இடறினார் கூற்றைப் பொடி செய்தார் மதிலை யிவை சொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர் காதலித் துறைதரு கோவில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க் கோவணங் கொண்டு கூத்தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர் நின்ற வெம் பசுபதியாரே

-- திருஞானசம்பந்தர்

திருப்பனந்தாள் வடகிழக்கே 10 கி.மீ. திருப்பந்தணைநல்லூர், கொன்றைவனம், கோவூர், கந்துகபுரி, அன்னமிடும் மெய்ப்பேரூர். கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 7 நிலை இராஜகோபுரம்,

இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பசுபதீஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் வேணு புஜாம்பிகை வடக்கு நோக்கியுள்ளனர். தலமரம்-சரக்கொன்றை. தீர்த்தம் சூரிய தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. இராஜகோபுரத்தின் நுழைவாயிலில் கோட்டை முனியாண்டவர் குடியிருக்கிறார்.

உள்பிராகாரத்தில் இறைவன் கல்யாணசுந்தரராக காட்சியளிக்கிறார். நவலிங்கங்கள், முருகன், கஜலஷ்மி, அன்னபூரணி, கலைமகள், சட்டைநாதர், தட்சிணாமூர்த்தியும், நவக்கிரகங்கள் வரிசையாகவும் உள்ள சன்னிதியும் அமைந்துள்ளது.

தேவகன்னியர்களும், காமதேனும் வழிபட்ட தலம். அம்பிகை ஆடிய பந்து வந்து அணைந்த காரணத்தால் பந்தணைநல்லூர் என்று பெயர். ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், கண்ணுவர், வாலி, இந்திரன், பிரமன், சூரியன் முதலியோர் இத்தல இறைவனை பூசித்து இஷ்டசித்தி பெற்ற தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 35 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. இத்தல முருகன் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. இறைவர் பசுபதி தேவர், பசுபதீஸ்வரர் என்றும், இவ்வூரை முதலாம் இராசராசன் கல்வெட்டில் பந்தணைநல்லூர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மாசிமகம், பங்குனி உத்திரம் உற்சவம் நடைபெறுகிறது.

6. கஞ்சனூர்

மூவிலைநற் சூலம்வலன் ஏந்தினானை
மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்திதன்னை
நாவலனை நரைவிடையொன் றேறுவானை
நால்வேதம் ஆறங்க மாயினானை
ஆலிலைந் துகந்தானை அமரர்கோவை
அயன்திருமா லானானை அனலோன் போற்றுங்
காவலனைக் கஞ்சனூராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே.

-- திருநாவுக்கரசர்

ஆடுதுறைக்கு வடகிழக்கே 4 கி.மீ. திருக்கஞ்சனூர் பராசரபுரம், பலாசவனம், அக்னித்தலம், கம்சபுரம், காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அக்னீஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் கற்பகாம்பிகை தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலமரம்-பலாசமரம். அக்னி, காவிரி பராசர, கம்ச, சந்திர, ஆஞ்சனேய, மணிகர்ணிகாகட்டம் எனப் பல தீர்த்தங்கள் உள்ளன.

உள்பிராகாரத்தில் நால்வர், நர்த்தன விநாயகர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, முருகன், துர்க்கை, சண்டேசர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

கஞ்சன் வழிபட்டதால் இவ்வூர் கஞ்சனூர் என்று பெயர்.

இத்தலத்தில் பராசரமுனிவர்க்கு சித்தப் பிரமை நீங்கியது, பிரமதேவருக்குத் திருமணக் கோலக்காட்சி கிடைத்தது, அக்னிக்குப் பாண்டு நோய் தவிர்த்தது, கம்சனுக்கு மூத்திரதிருச்சிர நோய் நீங்கியது, மாண்டவ்ய புத்திரர்களுக்கு மாத்ருகத்தி தோஷம் நீங்கியது, சந்திரன் சாபம் நீங்கியது, விருத்தகாளகண்டன், சித்திரசேனன், மார்க் கண்டேயர், சுரைக்காய் முனிவர் முதலியோர் அருள் பெற்றது போன்ற நிகழ்ச்சிகள் இத்தலப் பெருமைகளாகும்.

இவ்வூரில் ஹரதத்தர் என்னும் சிவாச்சாரியார் நெருப்பிற் பழுத்த இரும்பு முக்காலியிலமர்ந்து சிவனே பரம்பொருள் என்னும் உண்மையை எடுத்துக்கூறி உறுதிப்படுத்தினார். இவருக்குத் தனிக் கோவிலும், இவர் பூசித்த இலிங்கம் இங்கு உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 36 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்ற தலம். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம்.

கல்வெட்டுக்கள் உள்ளன. இதில் இறைவர் திருஅக்னீஸ்வர உடையார் என்றும், இவ்வூரை விருதராச பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாடு என்று குறிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் 6 கால பூஜை. தைமாதம் பஞ்சமி அன்று உற்சவம் நடைபெறுகிறது.

இக்கோவில் மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்துக்குச் சொந்தமானது.

மேலும் இவ்வூரில் மற்றொரு சிவன் கோவிலான ஸ்வயம்பிரகாசர் 33 செண்ட் நிலப்பரப்பளவில் கோவில் கொண்டுள்ளார். 1600 வருட முற்பட்ட கோவில்.

7. திருக்கோடிகாவல்

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே

-- திருஞானசம்பந்தர்

திருவிடைமருதூர்க்கு வடகிழக்கே 12கி.மீ. திருக்கோடிகா. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 3-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருக்கோட்டீஸ் வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் வடிவாம்பிகை தனிச்சன்னிதியில் உள்ளார். தலமரம்-பிரம்பு, தீர்த்தம்-சிருங்க, காவிரிநதி. உள்பிராகாரத்தில் கரையேற்று விநாயகர், கற்சிலை நடராஜர், சப்தரிஷிகள், அகத்தியர், சித்திரகுப்தர், யமன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலத்தில் மூன்று கோடி முனிவர்கள் இத்தல இறைவனை வழிபட்டதால் திருக்கோடீஸ்வரர் என்றும் ஊர் திருக் கோடிகா என்றும் பெயர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 37 வது. திருஞானசம்பந்தர், அப்பர் பதிகம் பெற்றது. கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை. சித்திரை பௌர்ணமியன்று உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

8. திருமங்கலக்குடி

தங்க லப்பிய தக்கன் பெருவேள்வி
அங்க லக்கழித் தாரருள் செய்தவன்
கொங்க லர்க்குழல் கொம்பனை யாளொடு
மங்க லக்குடி மேய மணாளனே

-- திருநாவுக்கரசர்

ஆடுதுறையிலிருந்து வடக்கே 2கி.மீ காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், 100 அடி உயர 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பிராணநாதேசுவரர் கிழக்கு நோக்கியும், அம்மன் மங்களாம்பிகை தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம்-மங்கல, காவிரி நதி. தலமரம்-கோங்கிலவம். மாகாளி, சூரியன், திருமால், பிரமன், அகத்திய முனிவர் முதலியோர் வழிபட்ட தலம்.

அரசனுடைய தண்டலாளர் ஒருவர் அவ்வரசனுடைய ஆணையின்றி பணத்தை கொண்டு கோவில் திருப்பணி செய்தார். கருவூலத்தில் பணம் இல்லாதது கண்டு. நடந்ததையறிந்த மன்னனும், அவரை அழைத்தபோது தண்டலாளர் அஞ்சித் தம் உயிர்நீத்தார். மன்னன் அவருடைய உடலைத் திருமங்கலக்குடிக்கு அப்பால் கொண்டு செல்லும்படி கட்டளையிட்டான். தண்டலாளருடைய மனைவியார் வேண்டுகோள்படி இவ்வூரில் உள்ள மங்கள நாயகியாரின் திருவருளால் தண்டலாளர் மீண்டும் உயிர்பெற்று எழுந்தார் என்பது வரலாறு.

நவக்கிரகங்கள் ஒன்பதும் இத்தல இறைவனை வழிபட்டு தங்களுக்கு இருந்த தோஷத்தைப் போக்கிக் கொண்ட தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 38 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 6 உள்ளன. நான்கு கால பூஜை நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் ருத்ரபாதம் தீர்த்தங் கொடுத்தல் நடைபெறுகிறது.


இத்தலம் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கோவிலாகும்.

9. திருப்பனந்தாள்

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண் மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே

-- திருஞானசம்பந்தர்

ஆடுதுறையிலிருந்து வடக்கே 10கி.மீ. தாலவனம், தாடகையீச்சரம், பனசை. கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 3-49 ஏக்கர் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கிய 7 நிலை இராஜகோபுரமும், கிழக்கில் 5 நிலை கோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அருணஜடேசுவரர் மேற்கு



நோக்கியும், அம்மன் பெரியநாயகி தனிச் சன்னிதியில் கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலமரம்-பனை. தீர்த்தம் நாககன்னிகை, பிரம்ம,ஐராவத, தாடகை, சூரிய, சந்திர, ஆதிசேட, அரித்துவச, தருமசேன, கூப, மண்ணியாறு முதலிய தீர்த்தங்கள்.

பனை மரம் இவ்வூர்த் தலமரம் ஆதலின் ஊர் திருப்பனந்தாள். தாடகை பூசித்து அருள்பெற்ற பெருமான் உறையும் கோவில் தாடகையீச்சரம். தாடகை என்பவள் மகப்பேறு வேண்டிப் இத்தலப் பெருமானை நாள்தோறும் பூசை செய்து வரும்போது ஒரு நாள் இறைவனுக்கு மாலை சாத்தும்போது மேலாடை நெகிழ்ந்தது. ஆடையைப் பற்றிக்கொண்டு மாலை சாத்த முடியாமல் தாடகை வருந்திய போது, பெருமான் தம் முடியைச் சாய்த்து மாலையை ஏற்றுக்கொண்டார். அன்று தொட்டு சிவலிங்கத் திருமேனி சாய்ந்தே இருந்தது. மன்னன் இச்செய்தி அறிந்து படைக் கொண்டு நிமிர்த்த முயன்றான் இயல வில்லை. தலயாத்திரையாகத் திருப்பனந் தாளுக்கு வந்தடைந்த 63 நாயன்மார்களில் ஒருவரான குங்குலியக்கலய நாயனார் தம் கழுத்தில் சுருக்கிட்டுத் சிவபக்தியால் பெருமளை முன்புபோல் நேரே நிமிர்த்தினார் என்பது வரலாறு.

அம்பிகை, ஐராவதம், சங்குகன்னன், நாகுகன்னன், நாககன்னியர், பிரமன், திருமால் முதலானோர் இத்தல இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.

ஆவணி அமாவாசையன்று பிரமன் பூசித்துப் பேறுப் பெற்ற ஐதீகத்தில் பெருமான் பிரம தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளுவார்.

சித்திரை மாதங்களில் சிலநாட்கள் சூரிய கதிர்கள் இறைவன் மீதுபடுகின்றன. உள்பிராகாரத்தில் அனேக பரிவார மூர்த்தங்கள் உள்ளன. ஆஸ்தான மண்டபத்தில் ஊர்த்துவதாண்டவர் உள்ளார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரையில் இத்தலம் 39 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், ஐயடிகள் காடவர்கோன், நம்பியாண்டார் நம்பி, திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர், சிதம்பர முனிவர், காளமேகப் புலவர், பனசைப்புராணம் பாடிய செஞ்சடை வேதிய தேசிகர், தருமை சண்முகத்தம்பிரான் முனிவர் முதலியோர் இத்தலத்தைப் போற்றி பாடியுள்ளனர்.

கல்வெட்டில் தலத்தின் பெயர் பனந்தாள் என்றும், கோவிலின் பெயர் தாடகையீச்சரம் என்றும், இறைவன் தாடகை யீச்சரமுடையார் என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

ஆறு கால பூஜை. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான கோவிலாகும்.

இவ்வூரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஏற்படுத்திய ஸ்ரீகாசிமடம் அமைந்துள்ளது.

திருச்சிற்றம்பலம்

10. வீராக்கண்

கடலகம் ஏழி னோடும் புவனமுங் கலந்த விண்ணும்
உடலகத் துயிரும் பாரும் ஒள்ளழ லாகி நின்று
தடமலர்க் கந்த மாலை தண்மதி பகலு மாகி
மடலவிழ் கொன்றை சூடி மன்னும்ஆப் பாடி யாரே

-- திருநாவுக்கரசர்

திருப்பனந்தாள்லிருந்து தென்மேற்கே 2 கி.மீ. திருஆப்பாடி கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், பிராகாரங்களுடன், மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பாலுகந்தீசுவரர். அம்மன் பெரிய நாயகி. தலமரம்-ஆத்தி, தீர்த்தம் க்ஷீரகுண்டம், மண்ணியாறு.

இடையன் ஒருவன் அளித்த பாலை விரும்பி ஏற்றவர் ஆதலின் இறைவனுக்குப் 'பாலுகந்தநாதர்' என்று பெயர்.

சண்டேசுர நாயனார் வழிபட்டு வீடுபெற்ற திருவூர் இலிங்கத்தின் பக்கத்தில் சண்டேசர் உள்ளார். சண்டிகேசுவரர் மணலில் லிங்கம் இமைத்துப் பூசித்த தலம். சிவராத்திரி அமாவாசையில் சண்டிகேசர் முக்தியடைந்த அன்று பிரமோற்சவ தீர்த்தம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 40 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. கல்வெட்டில் கோப்பெருஞ்சிங்கனுடைய சாசனம் உள்ளது.

11. சேங்கனூர்

நாலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நிழல்மேவி யருமறை சொன்னதென்ன
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே

-- திருஞானசம்பந்தர்

திருப்பனந்தாள்லிருந்து தென்மேற்கே 3கி.மீ. திருச்சேய்ஞலூர். கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சத்தியகிரீஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் சகிதேவியம்மை தனிச்சன்னிதியில் தெற்கு நோக்கியும் உள்ளனர். தீர்த்தம்-மண்ணியாறு. தலமரம்-ஆத்திமரம்.

முருகப் பெருமான் இத்தல இறைவனை வழிப்பட்டு உருத்திரபாசுபதப் படையைப் பெற்ற தலம். இதனால் இத்தலம் குமாரபுரி என்றும் வழங்கும்.

முருகப் பெருமான் வழிப்பட்டதால் இத்தலம் சேய்ஞலூர் என்றும் பெயர்.

சண்டேசுவர நாயனார் அவதரித்த தலம். வைணவச் சான்றோராகிய பெரியவாச்சான் பிள்ளையும் அவதரித்த தலம். கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்ற கோவில்.

சிபிச்சக்ரவர்த்தி, அரிச்சந்திரன் முதலானோர் வழிபட்ட தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரைத் தலங்களில் இத்தலம் 41 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம். சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர் முடி கவித்தற்குரிய ஐந்து நகரங்களுள் இத்தலமும் ஒன்றாக விளங்கியது.

இரண்டு கால பூஜை. மார்கழி திருவாதிரை உற்சவம் நடைபெறுகிறது.

இக்கோவிலின் எதிரில் திருமால் கோவில் உள்ளது. இவ்வூரில் மற்றொரு சிவன் கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் சிவலோகநாதர் கோவிலும் உள்ளது. 600 வருட முற்பட்ட கோவில்.

12. திருவிசலூர்

மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.

-- திருஞானசம்பந்தர்

திருபுவனத்திலிருந்து வடக்கே 2 கி.மீ. திருவியலூர், திருந்துதேவன்குடி காவிரி யாற்றின் வடகரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கர்க்கடகேசுவரர். அம்மன் அருமருந்து நாயகி மற்றும் அபூர்வநாயகி. தீர்த்தம் பங்கய தீர்த்தம்-காவிரிநதி.

இத்தலம் திருவிசலூர்க்கு வடக்கே சிறிது தூரம் சென்றால் வயல்களுக்கு இடையில் கோவில் மட்டுமே அமைந் திருக்கும். மிகப்பெரிய சிவன் கோவிலாக இருந்தது என்றும் தற்போது பாழ்பட்டு சுவாமி, அம்மன் கருவறைகள் மட்டுமே உள்ளன.

நண்டு பூசித்து அருள்பெற்ற தலம். எனவே இறைவன் கற்கடகேசுவரர் என்று பெயர். காறாம்பசுவின் பால் பதின்கலம் அபிஷேகம் செய்தால் இலிங்கத்தின் முடிமீது ஒரு பொன்னிற நண்டு ஊர்தல் போன்ற தரிசனம் இன்றும் காணலாம். சுவாமியின் உருவம் முன்பக்கத்தில் வெட்டுண்டு பாதியாயிருக்கிறது.

இத்தல இறைவன் ஓர் அரசனுக்கு இருந்த வியாதியை கிழவர்போல வந்து நோயைத் தீர்த்தருளிய தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரையில் இத்தலம் 42 வது. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் உள்ளது.

செம்பியன்மாதேவியார், இராசராஜன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன

13. திருவிசைநல்லூர் பண்டாரவாடை

குரவங்கமழ் நறுமென்குழல் அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல் அணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே

-- திருஞானசம்பந்தர்

திருபுவனத்திலிருந்து வடமேற்கே 4 கி.மீ. திருவியலூர். காவிரியாற்றின் வட கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக யோகாநந்தேசுவரர். அம்மன் சாந்தநாயகி. தலமரம்-வில்வம், அரசு. தீர்த்தம் சடாயு தீர்த்தம். கிழக்கு நோக்கிய சன்னிதி.

பிரமன் விஷ்ணுசர்மா என்பவருக்குப்

புத்திரனாகித் தவம் புரிந்து தம்முடன் பிறந்த எழுவருடன் சிவராத்திரியில் இலிங்க மூர்த்திக்குள் புகுந்தனர்.

அகத்திய முனிவர் சிவராத்திரிதோறும் பூஜிப்பதாக ஐதீகம்.

சடாயு வழிப்பட்டதாகக் கூறப்படும் இவ்வூர்த் திருக்கோவில் பெரியது. திருவுந்தியார் எனும் சித்தாந்த சாத்திர நூலைப்பாடிய உய்யவந்த தேவ நாயனார் இவ்வூரினர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி வடகரையில் இத்தலம் 43 வது. திருஞான சம்பந்தர் அருளிய பதிகம் பெற்றது. கல்வெட்டுக்கள் பல உள்ளன. தினமும் நான்கு கால பூஜை.

14. சூரியனார்கோவில்

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல வவைநல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே

-- திருஞானசம்பந்தர்

ஆடுதுறைக்கு வடக்கே 2 கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கிய 3 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் விசுவநாதர், அம்மன் விசாலாட்சி மற்றும் தனிச் சன்னிதியில் சூரியநாராயணசுவாமி மற்றும் உஷா, சாயா தேவிகளுடன் காட்சியளிக் கிறார். தீர்த்தம் சூரிய புஷ்கரிணி. தலவிநாய கர் கோள்தீர்த்த விநாயகர். பிராகாரத்தில் தென்வாயில் வழியாக குரு, சனி, புதன், அங்காரகன், சந்திரன், கேது, சுக்கிரன், இராகு, சண்டேசுரர் முதலிய சன்னிதிகள் அமைந்துள்ளன.

இவ்வாலயத்தில் நவக்கிரகங்கள், வாகனமும், ஆயுதங்களும் இன்றி இரண்டு கரங்களுடன் அமைதியான தோற்றத்துடன் அனுக்ரக மூர்த்திகளாக உள்ளனர்.


நவக்கிரகங்கள் ஒரு சமயம் காலவ முனிவர்க்கு தொழுநோய் பீடிக்கும் காலத்தை மாற்றியமைத்ததால் பிரமனால் சாபம் பெற்று இத்தலத்தையடைந்து சிவபெருமானை நோக்கி கடுந் தவமிருந்து தங்களுக்கு ஏற்பட்ட தொழுநோய் சாபத்திலிருந்து நீங்கி அருள் பெற்ற தலம். சாபத்தை நீக்கிய பெருமான் திருமங்கலக் குடி இறைவர் அருள்மிகு பிராணநாதர் அம்மன் மங்கல நாயகி. நவக்கிரக வழிப்பாட்டிற்காக இக்கோவி லுக்கு வருகின்றவர்கள் திருமங்கலக்குடி பெருமானையும் சென்று வழிபட்டால்தான் வழிபாடு பூர்த்தியானதாகும்.

இத்தலத்தில் சூரியனை பரீஷித்து மன்னனும், சோமனை சித்ராங்கத பாண்டி யனும், சனியை நளனும், அங்காரகனை புரூரவசுவும், புதனை சோமசன்மனும், பிரகஸ்பதியை இந்திரனும், சுக்கிரனை தூமகேதுவும் வழிபட்டு நலம் பெற்றுள்ளனர்.

இத்தலத்தையும், நவக்கிரகங்களையும் போற்றி திருஞானசம்பந்தர் பதிகம் அருளி யுள்ளார். கல்வெட்டுக்கள் உள்ளன. முதற்குலோத்துங்க சோழன் ஆட்சிக் கல்வெட்டுக்கள் உள்ளன.

இக்கோவில் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. ஆவணி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது. இக்கோவில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் மேற்பார்வையில் உள்ள தலம்.

15. திருபுவனம்



திருவிடைமருதூருக்கு மேற்கே 1 கி.மீ. திரிபுவனவீரபுரம், திரிபுரவனம். காவிரி யாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 5-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய 160 அடிஉயர 7 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீகம்பகரேஸ் வரர், அம்மன் அறம்வளர்த்தநாயகி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியுள்ளார். தலமரம்-வில்வம். தீர்த்தம் சரபதீர்த்தம், தேவ, ஞான, வியாச, பிருக, சித்த எனவேறு தீர்த்தங்களும் உள்ளன. விமானம் சச்சிதானந்த விமானம் அடி முதல் உச்சிவரை கருங்கல்லினால் கட்டப்பட்டது. தஞ்சை பிரகதீசுவரர் விமானம் போன்றே இத்தலவிமானம் அமைந்துள்ளது.

திருமால், பிரமன், பிரகலாதன், அசுவக் கிரீவன், வரகுணபாண்டியன் முதலானோர் களுக்கு இறைவன் நடுக்கத்தைப் போக்கியமையால் நடுக்கந்தீர்த்த தலமென வழங்கப்படுகிறது. இறைவனுக்கு நடுக்கந்தீர்த்தபெருமான் என்று பெயர்.

அசுவக்கிரீவன், விருஷபக்கிரீவன், வியாழக்கிரீவன் எனும் மூன்று அசுரரும் பொன், வெள்ளி, இரும்பாலான கோட்டைகளைப் பெற பூசை செய்த இடம் இத்தலமேயாகும்.

இத்தல சிவபெருமான் சரபப்பறவை யாக வடிவெடுத்து நரசிம்ம அவதாரத்தின் சினத்தை அடக்கினார் என்பது தலவரலாறு. அதன்படி ஸ்ரீசரபமூர்த்தி மூலவருக்கு வடகிழக்கில் கோவில் கொண்டு காட்சியளிக்கிறார்.

அசுரர் மூவர், பிரமாதிதேவர்கள், இலக்குமி, வருணன், திருமால், சித்ரரதன், சுகோஷன், மாந்தாதா, நாரதர்,வரகுணன், இராஜராஜன் முதலியோர் வழிப்பட்டுப் பற்பலப்பேறுகளைப் பெற்ற தலம்.

சோமாஸ்கந்தர் மண்டபத்தின் தென் பகுதியில் பரதநாட்டியத்தின் பல்வேறு வகைகள் செதுக்கப் பெற்றுள்ளன. திருமதில்க்களில் இராமாயணச் சித்திரங்கள் சிறப்பாக உள்ளன.

இக்கோவிலைப் பற்றிய தலபுராணம் வடமொழியில் உள்ளது. இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார்.

கல்வெட்டுக்கள் 7 உள்ளன. இதில் இறைவன் திரிபுவனமுடையார், திரிபுவன ஈசுரமுடைய மகாதேவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் 5 கால பூஜை நடைபெறு கிறது. பங்குனி உத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

இக்கோவில் திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோவிலாகும்.

16. விளத்தொட்டி

பந்தணைநல்லூர்க்கு வடக்கே 4 கி.மீ. சரபோஜிராஜபுரம். கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பிரம்மபுரீசுவரர். அம்மன் இக்ஷுரசநாயகி தனிச்சன்னிதியில் உள்ளார். விநாயகர் ஆபத்துக்காத்த விநாயகர்.

உள்பிராகாரத்தில் பாலசுப்ரமணியர்,

கஜலஷ்மி, மகாலஷ்மி, பைரவர், சூரியன், சனிபகவான் முதலிய சன்னிதிகள் உள்ளன.

பிரமன் படைப்புத் தொழில் வேண்டிப் பூசித்த தலம். பிரமன் பூசித்த ஐதிகச்சிற்பம் உள்ளது. முருகப்பெருமான் தொட்டிலின் கண் வளர்ந்த தலம். வளர்தொட்டில் என்ற சொற்களே இணைந்து விளத்தொட்டி என்று ஆயிற்று. இவ்வூரில் வாழ்வோர் இந்த புராணவரலாற்று நிகழ்ச்சியொட்டி குழந்தை பிறந்த 10 நாட்கள் வரை குழந்தையைத் தொட்டியில் போடாமல் தூளியில் கண்வளரச் செய்து வருகின்றனர்.

இத்தலம் தேவார வைப்புத்தலமாக போற்றப்படுகிறது. திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்ட கத்தில் இத்தலம் குறிப்பிடப் படுகிறது.

தலபுராணம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களால் விளத்தொட்டி புராணம் இயற்றப்பட்டது. வைகாசி விசாகத்தன்று பிரமோற்சவம் நடைபெறு கிறது.

17. திருலோகி

திருப்பனந்தாள்லிருந்து கிழக்கே 5கி.மீ. ஏமநல்லூர், திரைலோக்கி. இக்கோவில் 40 சென்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேசுவரர். அம்மன் அகிலாண்டேசுவரி.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்று. அப்பர் திருத்தாண்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பா பதிகமும் இவ்வாலயத்திற்குள்ளது.

முதல் இராசராச சோழமன்னனின் மனைவி திரைலோக்கிய மாதேவி அவர் பெயரால் இவ்வூர் 'மண்ணிநாட்டு ஏமநல்லூ ராகிய திரைலோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறது. மேலும் இவ்வூரில் கயிலாச நாதர் கோவிலும் உள்ளது.

18. திருமாந்துறை

திருமங்கலக்குடிக்கு வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீ அட்சநாதர் அம்மன் போகநாயகி. இத்தலம் காவிரித் தென்கரை மாந்துறை என்றும், லால்குடிக்கு அருகில் உள்ள திருமாந்துறை வடகரை மாந்துறை என்றும் கூறப்படும்.

இத்தலம் திருஞானசம்பந்தர் எழுந் தருளி வழிப்பட்டதாகப் பெரிய புராணத்தில் குறிக்கப்படுகிறது. தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. இக்கோவில் பழமையானதும், பெரியதும் ஆகும். இக்கோவில் திருவாவடுதுறை ஆதீனத் துக்குச் சொந்தமானது.

19. குலசேகரநல்லூர்

பந்தணைநல்லூர்க்கு வடக்கே 4 கி.மீ. காமாட்சிபுரம். இக்கோவில் 50 சென்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

20. மரத்துறை

பந்தணைநல்லூர்க்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 50 சென்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சர்வலோகநாதர்.

21. நெய்வாசல்

பந்தணைநல்லூர்க்கு வடகிழக்கே 5கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் தென் கரைப்பகுதியில். இக்கோவில் 40 சென்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தாடகபுரீசுவரர்.

22. திருமங்கைச்சேரி

பந்தணைநல்லூர்க்கு கிழக்கே 4 கி.மீ. சோழியவிளாகம். இக்கோவில் 50 சென்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சாமுண்டீஸ்வரர்.

23. நெய்குப்பை

பந்தணைநல்லூர்க்கு வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் . 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

24. சிதம்பரநாதபுரம்

திருப்பனந்தாளிருந்து வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

25. குறிச்சி

திருப்பனந்தாள்லிருந்து வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் அமிர்தகடேசுவரர்.

26. மேலக்காட்டூர்

திருப்பனந்தாளுக்கு வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

27. கோவில்ராமபுரம்

பந்தணைநல்லூர்க்கு வடமேற்கே 3கி.மீ. அபிராமபுரம். இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர்.

28. அத்திப்பாக்கம்

பந்தணைநல்லூர்க்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். இவ்வூருக்கு அருகில் உள்ள கீழக்காட்டூரில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வஜ்ரஸ்தம்பேசுவரர்.

29. கீழமாந்தூர்

பந்தணைநல்லூர்க்கு தெற்கே 2கி.மீ. தரணி. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பூதேஸ்வரர்.

30. கருப்பூர்

பந்தணைநல்லூர்க்கு தென்கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப் பரப்பளவில் மூல்வர் இடும்பேஸ்வரர்.

31. வேலூர்

பந்தணைநல்லூர்க்கு தெற்கே 4கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் மார்க்கசகாயர்.

32. சிறுகடம்பனூர்

பந்தணைநல்லூர்க்கு தெற்கே 4கி.மீ. அரசூர். இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

33. செருகுடி

பந்தணைநல்லூர்க்கு தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் விருப்பாட்சீஸ்வரர்.

34. கன்னாரக்குடி

திருப்பனந்தாளுக்கு கிழக்கே 4கி.மீ. சிக்கல் நாயக்கன்பேட்டை. இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

35. கூத்தானூர்

கதிராமங்கலத்திலிருந்து வடமேற்கே 3கி.மீ. அம்மாப்பேட்டை. இக்கோவில் 17செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். இவ்வூருக்கு அருகில் உள்ள பாஸ்கரராஜபுரத்தில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாஸ்கரேஸ்வரர்.

36. முள்ளங்குடி

பந்தணைநல்லூர்க்கு தெற்கே 6கி.மீ. இக்கோவில் 40செண்ட் நிலப்பரப்பளவில்

மூலவர் கைலாசநாதர்.

37. கதிராமங்கலம்

ஆடுதுறைக்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 1-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக காளஹஸ்த் தீஸ்வரர். அம்மன் ஞானாம்பிகை.

38. கீழச்சூரியமூலை

கதிராமங்கலத்திலிருந்து மேற்கே 5கி.மீ. இக்கோவில் 3செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சூரியகோட்டீஸ்வரர்.

39. கோட்டூர்

ஆடுதுறைக்கு வடகிழக்கே 5கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாத சுவாமி.

40. நரசிங்கன்பேட்டை

ஆடுதுறைக்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுயம்புநாதர்.

41. பருத்திக்குடி

திருவிடைமருதூருக்கு வடகிழக்கே 3கி.மீ. இடம்கொண்டீஸ்வரம். காவிரி யாற்றின் வடகரையில் 1-17 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக இடம்கொண்டீஸ்வரர்.

42. அனக்குடி

திருபுவனத்திலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

43. தேப்பெருமாள்நல்லூர்

திருபுவனத்திலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் 93 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

44. எஸ்புதூர்

ஆடுதுறைக்கு தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குமரேஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

45. விஸ்வநாதபுரம்

திருவிடைமருதூர்க்கு கிழக்கே 1 கி.மீ. பாணபுரம். இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாணபுரீசுவரர்.

நவபுண்ணியம்

எதிர்கொள்ளல், பணிதல், உட்காருவித்தல், கால்கழுவல், அருச்சித்தல், நறும்புகை காட்டல், விளக்குக் காட்டல், அறுசுவையுணவு படைத்தல், புகழ்தல் என ஒன்பது வகைப்பட்ட போற்றுகைகள்.

நவமணி

கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம் என்னும் ஒன்பது மணிவகைகள்.

நவரசம்


நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, அமைதி.

திரிலவங்கம்

சிறுநாகப்பூ, செண்பகப்பூ, கிராம்பு என்னும் மூவகை மணச்சரக்கு.

கும்பகோணம் வட்டம்

(தஞ்சாவூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. கும்பகோணம்

பூவ ணத்தவன் புண்ணியன் நண்ணிஅங்(கு)
ஆவ ணத்துடை யான்அடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே

-- திருநாவுக்கரசர்



மயிலாடுதுறையிலிருந்து தென்மேற்கே 37 கி.மீ. திருக்குடமூக்கு, குடந்தை. காவிரியாற்றின் தென்கரையில் ஊருக்கு மேற்கே இக்கோவில் 4-34 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய 9 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கும்பேசுவரர் பிருதுவி வடிவில் விளங்குகிறார். பாணத்தின் உச்சி குடமூக்குப் போல உள்ளது. அம்மன் மங்கள நாயகி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியுள்ளார். தீர்த்தம்-மகாமக தீர்த்தம்.

பிராகாரத்தில் சூரிய புஷ்கரிணி, மேற்புறமுள்ள மண்டபத்தில் சட்டைநாதர், அதையடுத்து முதற்பிராகாரத்தில் 63நாயன்மார்கள், ஆதி விநாயகர், முருகன், கஜலஷ்மி முதலிய சன்னிதிகளும், வடக்குப் பிராகாரத்தில் தெற்குநோக்கிய நிலையில் இறைவன் இத்தலத்திற்கு எழுந்தருளி வந்த கிராத வேடத்தில் வந்த பெருமான் விளங்குகிறார்.

ஒரு பிரளய காலத்தில் அமிர்தகும்பம் மிதந்து வந்தபோது இவ்விடத்தில் சிவபெருமான் கிராதவடிவங் கொண்டு அதனை விழச்செய்து திருக்கோவிலில் எழுந்தருளினாரென்று தலபுராணம் கூறுகிறது. இவ்வூரிலுள்ள சிவாலயங்களில் தலைமையான கோவிலாகும் இக்கும்பேசுரர் கோவில்.

அம்மனுக்கு மந்திரபீடேசுவரி என்ற பெயர். சக்திபீடங்களுள் ஒன்றாகும்.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகத்தில் கும்பேசுவரர் வெள்ளி இடப வாகனத்தில் பஞ்ச மூர்த்திகளோடு எழுந்தருளி மகாமகக் குலத்தில் தீர்த்தம் கொடுத்தருள்வார். இக்குளத்தில் மூழ்குவதால் கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணை, பொருநை, குமரி முதலிய எல்லாத் தீர்த்தங்களிலும் மூழ்கும் பயன் கிடைக்கும் என்பது புராண வரலாறு.

இத்தலத்தின் சப்தஸ்தானங்களான கும்பகோணம், கலயநல்லூர், வலஞ்சுழி, தாராசுரம், சுவாமிமலை, கொட்டையூர், மேலைக் காவிரி ஆகியன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இத்தலம் 26 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், அகோரமுனிவர், சொக்கப்ப நாவலர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்றோர்களால் தலபுராணமும்,

குடந்தைத் திரிபந்தாதி, மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ் முதலிய நூல்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களாலும், யாழ்ப் பாணம் முருகேசம் பிள்ளை அவர்களால் குடந்தைச் சிலேடைவெண்பா, கொட்டை யூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய கும்பேசர் குறவஞ்சி போன்ற நூல்கள் இத்தலத்திற்குரியன.

தினமும் ஆறு கால பூஜை. மாசிமகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் சிவன்கோவில்கள் கீழ்கண்டவாறு உள்ளன. அவையாவன.

அ. குடந்தைக் கீழ்க்கோட்டம்

சொன்மலிந்த மறைநான்கா றங்கமாகிச்
சொற்பொருளுங் சுடந்தசுடர்ச் சோதிபோலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலுங்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர்போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர்போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலுங்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர்போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே

-- **திருநாவுக்கரசர்**

நாகேஸ்வரசுவாமி கோவில் என்று வழங்கப்பெறும் இக்கோவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகேசுரர். அம்மன் பெரியநாயகி. தீர்த்தம் நாகதீர்த்தம் தலமரம் வில்வம்.

அமுதகும்பத்தின் வில்வம் சிவலிங்க மான தலம் இது. இத்தலம் குடந்தைக் கீழ்க்கோட்டம் என வழங்கப்பெறும்.

பேரம்பலம் எனப்படும் நடராஜ மண்டபம். தேர்வடிவில் சக்கரங்கள் பொருத்தப்பெற்று இரண்டு குதிரைகள், நான்கு யானைகள் பூட்டிய நிலையில் மிக்க அழகோடு திகழ்கிறது. ஆனந்தக் கூத்தரின் அழகிய பெரிய திருவுருவம். நடனத்துக்குத் திருமால் வேணுகானம் செய்கிறார். எதிர்புற மண்டபத்தில் ஊர்த்துவதாண்டவர், காளி யம்மன் எழுந்தருளியுள்ளனர். கங்கை விநாயகர் அழகானது.

பூமியைத் தாங்கமாட்டாது வருந்திய ஆதிசேடன், கயிலை சென்று தன்குறையைத் தெரிவித்து, இறைவன் ஆணைப்படியே இத்தலத்தில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, வழிப்பட்டு வரம்பெற்றதால் இத்தலம் நாகேசம் எனப்பெற்றது.

சூரியன் வழிபட்ட தலம். சித்திரை மாதம் 11ஆம் நாள் முதல் மூன்று நாட்கள் சூரியபூசை நடைபெறுகிறது.

பகவர் திருமறைக்காட்டிலிருந்து தன் தாயாரின் அஸ்தியை எடுத்துக்கொண்டு காசி செல்லும் வழியில் இத்தலத்தின் சிறப்பையறிந்து காவிரியில் அஸ்தியைக் கரைத்து தவம் செய்து வீடுபெற்றார். இவர் வேண்டுகோளின்படி இங்குள்ள காவிரித் துறை பகவத்படித்துறை என வழங்கப் படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இக்கோவில் 27 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

இத்தலத்தில் 42 கல்வெட்டுக்கள் உள்ளன. தினமும் 5 கால பூஜை. பங்குனியில் உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

ஆ. குடந்தைக் காரோணம்

வாரார் கொங்கை மாதோர் பாக மாக வார்சடை
நீரார் கங்கை திங்கள் சூடி நெற்றி யொற்றைக்கண்
கூரார் மழுவொன் றேந்தி யந்தண் குழகன் குடமூக்கில்
காரார் கண்டத் தெண்டோள் எந்தை காரோ ணத்தாரே

-- திருஞானசம்பந்தர்

சோமேசர் என வழங்கும் இத்தலம் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும் ஒரு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமேசுவரர். அம்மன் தேனார்மொழியாள். தீர்த்தம் மகாமக தீர்த்தம்.

மகாமகம் ஆடுதற்கு நவநதிக் கன்னியர்கள் ஆரவாரத்துடன் வரக்கண்ட அம்பிகை இறைவனை ஆரோகணம் செய்து கொண்டதால் இறைவன் காயாரோகணர் எனவும், சந்திரன் வழிபடப் பெற்றவராதலின் சோமேசர் எனவும் வழங்கப் பெறுகிறார்.

அமுதகலசத்தின் சிக்கம் (உறி) சிவலிங்கமாக மாறியதால் இம்மூர்த்தி சிக்கேசர் எனவும் வழங்குவர். மகா மண்டபத்தில் நடராஜர், சோமாஸ்கந்தர் எழுந்தருளியுள்ளார்.

முருகனுக்குப் பக்கத்தில் சோழீச்சரம் என்றொரு ஆலயம் உள்ளது.

காரோணம் என்று வழங்கும் தலங்கள் இங்கு சோமேசம் மற்றது மகாமகக்குளத்தின் வடகரையில் உள்ள காசிவிசுவேசம்.

தேவாரத்தில் திருஞானசம்பந்தர் அம்பிகையின் திருப்பெயரை வழங்கும் தலம் சோமேசமாதலின் இத்தலமே தேவாரப் பாடல்பெற்ற தலமென்பர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இத்தலம் 28 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்கு உள்ளது. தினமும் 5 கால பூஜை நடைபெறுகிறது.

இ. காசிவிசுவேசர் திருக்கோவில்

இக்கோவில் 1-26 ஏக்கர் நிலப்பரப்பளவில் மகாமகக் குளத்திற்கு வடகரையில் மேற்கு நோக்கியவாறு 72 அடி உயர இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காசிவிஸ்வநாதர் அம்மன் விசாலாட்சி.

இராமர் இத்தல இறைவனை வழிபட்டு தன் உடலில் உருத்திராம்சம் ஆரோகணிக்கச் செய்தார். அதனால் இத்தலம் காரோணம் எனப் பெயர் பெற்றது.

ஒன்பது நதிக்கன்னியர் நீராடி விசுவேசுவரை வழிபட்டுத் தூய்மையடைந்த தலம். நவநதிக் கன்னியர் தெற்கு நோக்கி வீற்றிருக்கின்றனர்.

ஈ. ஸ்ரீ அபிமுக்தீசுவரர் கோவில்

இக்கோவில் மகாமகக் குளத்தின் கீழ்கரையில் 35 செண்ட் நிலப்பரப்பளவில், மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அபிமுக்தீசுவரர். அம்மன் அமுதவல்லி. உள்பிராகாரத்தில் நடராஜர், சோமாஸ்கந்தர், ஆறுமுகப் பெருமான் சன்னிதிகளும் உள்ளன.

அமுதகுடத்தில் வைத்திருந்த தேங்காய் சிவலிங்கமான தலம் அபிமுகேசம் (நாளிகேரேசம்) என அழைக்கப்படும்.

சுமதிக்குக் குட்டநோயும், சுதன் மனுடைய மகனுக்கு ஊமைத் தன்மை நீங்கியதாகப் தல புராணம் கூறுகிறது.

உ. ஸ்ரீ கௌதமேசுவரர் கோவில்

மகாமகக் குளத்தருகே தென் மேற்கு மூலையில் கீழ்த்திசை நோக்கிய இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ஸ்ரீகௌதமேசுவரர். அம்மன் சௌந்தர நாயகி.

கும்பம் சிதறிய காலத்தில் அதன் மீதிருந்த பூணூல் சிதறிச் சிவலிங்கமான தலம் கௌதமீசம் என வழங்கப்படும் இத்தலம் கௌதம முனிவர் வழிபட்ட தலம். திருச்சுற்றில் கணபதி, சுப்பிரமணியர், மகாலட்சுமி, பைரவர், சூரியன் முதலிய பரிவார தெய்வங்களும் உள்ளன.

ஊ. ஸ்ரீபாணபுரீசுவரர் கோவில்

குடந்தையின் வடகிழக்குப் பகுதியில் இக்கோவில் அமைந்துள்ளது. மூலவர் பாணபுரீசுவரர்.

பிரளய காலத்தில் அமுதகுடத்தை உடைப்பதற்காகச் சிவபெருமான் கிராத மூர்த்தியாக வேடவடிவம் கொண்டு வில்லால் சிதைத்த இடம் பாணபுரேசம். இது பாணாதுறை என வழங்கப்படுகிறது. வியாச முனிவர், வங்கதேசத் அரசன் கரசேனனின் மனைவி காந்திமதி ஆகியோர் வழிப்பட்ட தலம்.

இறைவன் சன்னிதி கிழக்கு நோக்கியும், அம்மன் சன்னிதி தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்ட கோவில். கல்வெட்டில் சோமநாத மங்கலம் என்றும், சோமநாததேவர் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

எ. ஸ்ரீ ஆதிகம்பட்ட விசுவநாதர் கோவில்

இக்கோவில் கும்பேசுரர் கோவிலுக்கு மேற்கே உள்ள பேட்டைத் தெருவில் அமைந்துள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக விசுவநாதர். அம்மன் ஆனந்த நிதியம்பிகை. இறைவனுக்கு மாலதிவனேசுவரர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

தஞ்சை நாயக்கர் காலத்தில் நாணயம் செய்யும் தொழிற்சாலை அமைந்திருந் தமையால் இங்குள்ள கோவில் கொண்டுள்ள விசுவநாதப் பெருமானுக்கு கம்பட்ட விசுவநாதர் என்று அழைக்கப்பட்டார்.

ஏ. ஸ்ரீகாளத்தீசுவரர்கோவில்

காவிரி தென்கரையை ஒட்டி அமைந்துள்ள இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் லிங்கவடிவில் காளத்தீசுவரர். அம்மன் ஞானாம்பிகை. இத்தலச் சிவபெருமான் இரண்டு கைகளுடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

ஏழு லோகம் :

பூலோகம், புவலோகம், சுவர்க்கலோகம், மகலோகம், தவலோகம், சனலோகம், சத்தியலோகம்.

ஏழு மண்டலம் :

வாயு மண்டலம், வருண மண்டலம், சந்திர மண்டலம், சூரிய மண்டலம், நட்சத்திர மண்டலம், அக்கினி மண்டலம், திரிசங்கு மண்டலம்.

ஏழுவகை நதி

ஏழு புண்ணிய ஆறுகள் :

கங்கை, குமரி, யமுனை, நர்மதை, காவேரி, சரஸ்வதி, கோதாவரி.

திருச்சிற்றம்பலம்

2. பாபுராஜபுரம்

கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீ ழிருந்தான் கண்டாய்
பருமணி மாநாகம் பூண்டான் கண்டாய்
பவளக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணி நீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமருங் கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங் கோமான் தானே

-- திருநாவுக்கரசர்



கும்பகோணத்திலிருந்து வடமேற்கே 2கி.மீ திருக்கொட்டையூர், திருக்கொட்டையூர்க் கோடீச்சரம், ஏரண்டபுரம், வில்வாரண்யம்.

காவிரியாற்றின் வடகரையில் இத்தலம் ஊர்ப் பெயர் கொட்டையூர் எனவும் கோவிற் பெயர் கோடீச்சரம் என்றும் வழங்கப் படுகிறது. கிழக்கு நோக்கியதும், 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கோடீச்சுரர். அம்மன் பந்தாடும்நாயகி. தலமரம் கொட்டைச்செடி (ஆமணக்கு) தீர்த்தம் காவிரி, கோடி தீர்த்தம்.

பத்திரயோகி முனிவருக்கு இக் கொட்டையூர் இறைவன் கோடித் திருவுருக் கொண்டு காட்சிவழங்கியருளி னார். அதனால் இவ்வூர் கோடீச்சரம் எனப் பெயர் பெற்றது. இன்றும் இறைவன் திருவுருவம் பலாப்பழம் போல முள்முள்ளாகப் பல்வேறு இலிங்கத் திருவுருவங்களோடு விளங்குவதைக் காணலாம்.

ஏரண்டமுனிவர் வாழ்ந்து தவம் செய்த இத்தலம் ஏரண்டபுரம் எனப்பெற்றது. இம்முனிவர் திருவுருவம் உள்பிராகாரத்தில் அமைந்துள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 44 வது. திருநாவுக்கரசர் திருவலஞ்சுழி கொட்டையூர் என்ற இரண்டு தலங்களையும் இணைத்துத் திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்று அருளிச் செய்துள்ளார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம். சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய கோடீச்சுரக் கோவை இத்தலத்திற்குறியது.

இத்தலத்தில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டுக்கள் இவ்வூர்க்கு வடக்கேயுள்ள ஏர் என்னும் வைப்புத் தலத்தின் பெயர் இக்கல்வெட்டில் காணப்படுகிறது.

3. இன்னம்பூர்

எண்டி சைக் கும்புக மின்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே.

-- திருஞானசம்பந்தர்

கும்பகோணத்திலிருந்து வடமேற்கே 6கி.மீ திருஇன்னம்பர். காவிரியாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 1-82 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் மிகப்பெரிய சுயம்புலிங்கமாக அருள்மிகு எழுத்தறி நாதேசுவரர். அம்மன் சுகந்த குந்தளாம்பிகை. தலமரம்-சண்பகம். தீர்த்தம் ஐராவத தீர்த்தம் கோவிலுக்கு எதிரேயுள்ளது. அம்பர் என்பது ஊர்பெயரின் அடைமொழி.

அகத்தியருக்கு இறைவன் இலக்கணம் உபதேசித்த தலம்.

சிவபெருமான் கணக்கராய்த் தோன்றி கோவிற் கணக்கை அரசனிடம் ஒப்புவித்த தலம், ஐராவதம் பூசித்து அருள் பெற்ற தலம்.

இக்கோவிலில் இரண்டு அம்பிகை. சுவாமிக்கு வலப்பக்கத்தில் நித்தியகல்யாணி என்ற பெயரோடு ஒரு அம்பிகையும், வெளிப்பிராகாரத்தில் சுகந்தகுந்தளாம்பிகை என்ற பெயரில் ஒரு அம்பிகையும் உள்ளனர். வெளிப்பிராகாரத்தில் உள்ள அம்பிகையே பிரதான அம்பிகையாவார். இத்தல நடராஜர் திருவுருவம் மிக்க அழகுடையது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 45 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் பதிகம் பெற்றது.

கல்வெட்டில் இராசகேசரிவர்மரின் நான்காம் ஆண்டிலும், விசய நகர வேந்தரில் வீரகம்பண்ண உடையார் காலத்திலும் பொறிக்கப் பெற்ற இரண்டு கல்வெட்டுக் கள் உள்ளன. இவ்வூரை வடகரை இன்னம்பர் நாட்டு இன்னம்பர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

4. திருப்புறம்பயம்

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்

-- திருஞானசம்பந்தர்

கும்பகோணத்திலிருந்து வடமேற்கே 8 கி.மீ கொள்ளிடம் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 2-08 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சாட்சிநாதர். அம்மன் கரும்பன்னசொல்லம்மை. தலமரம்-வன்னி, புன்னை. தீர்த்தம் பிரம்மதீர்த்தம், மண்ணியாறு.

பிரளய வெள்ளம் வந்தபோது புறம்பாய் இருந்தமையால் புறம்பயம் என்று பெயர். இரத்தினவல்லி என்னும் ஒரு வணிக குலத்துக் கன்னிப் பெண் தனக்கென்று

உறுதிசெய்யப் பெற்றிருந்த கணவனுடன் திருமணமாகுமுன் இவ்வூருக்கு வந்தாள். அப்பொழுது கணவனை பாம்பு கடித்து இறந்தமையால் அவள் வருந்தியழுதாள். அவ்வூருக்கு வந்திருந்த திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடி அவனை எழுப்பியருளி இரத்தினவல்லிக்கு திருமணம் செய்து வித்தார். இறைவன் சான்றாக நின்றருளினார். இதனால் இறைவனுக்கு சாட்சிநாதர் என்று பெயர் பெற்றார்.

இத்தலத்திலுள்ள பிரளயங்காத்த விநாயகருக்கு விநாயகசதுர்த்தியன்று தேன் திருமுழுக்கு செய்யப்படுகிறது. மற்ற நாள்களில் திருமுழுக்கு இல்லை.

தக்ஷிணாமூர்த்திக்குரிய 24 முக்கியத் தலங்களுள் இத்தலமும் ஒன்றாகும். அகத்தியர், பிரமன், சனகாதி நால்வர், விசுவாமித்திரர் முதலியோர் வழிபட்ட தலம்.

அரித்துவசன் என்னும் அரசனுக்குத் துர்வாச முனிவர் சாபத்தால் ஏற்பட்ட முயலக நோய் நீங்கிய தலம்.

கோவிலுக்கு விறகு கொண்டுவந்த ஒரு ஏழைக்கு இறைவன் தட்சிணா மூர்த்தி ரூபமாகத் தரிசனம் கொடுத்தார். கோவிலின் கிழக்கேயுள்ள குளக்கரையில் இத்தட்சிணா மூர்த்தியுள்ளார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 46 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது. இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். இத்தலத்தில் 63 கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை. மாசிமகத்தில் 10 நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது. இக்கோவில் மதுரை திருஞானசம்பந்தர் சுவாமிகள் ஆதீனத்திற்கு சொந்தமானது.

5. பட்டீச்சுரம்

பாடன்மறை சூடன்மதி பல்வளையொர் பாகமதின் மூன்றெர் கணையால்
கூடவெரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்பழைசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே.

-- திருஞானசம்பந்தர்

கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 6கி.மீ திருமலைராயனாற்றின் வடகரையில் இக்கோவில் 4-40 ஏக்கர் நிலப்பரப்பளவில் நான்கு வாயில்களிலும் இராஜகோபுரத் துடன், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தேனுபுரீசுவரர். அம்மன் ஞானாம்பிகை. தீர்த்தம் ஞானவாவி. தலமரம்-வன்னி. உள்பிராகாரத்தில் விலகிய நந்தி, பலிபீடங்கள் உள்ளன. மதவாரணப் பிள்ளையார், முருகன், சப்தகன்னிகைகள், இராமலிங்கர், நடராஜர் சன்னிதிகளும், வெளிப்பிராகாரத்தில் வடக்குக் கோபுர வாயிலில் துர்க்கையம்மன் திருக்கோவிலும் அமைந்துள்ளது.

காமதேனுப் பசுவின் புதல்வியரில் பட்டி என்னும் பசு பூசித்ததால் இத்தலம் பட்டீச்சரம் என்று பெயர். அம்பிகை தவம் செய்த தலமாதலால் தேவிவனம், சக்திவனம் என்றும் இத்தலம் வழங்கப்பெறுகிறது. இத்தலம் பஞ்சநந்திக்ஷேத்திரம் நந்திகள் ஐந்தும் சன்னிதியிலிருந்து விலகியே உள்ளன.

இராமர் வாலியைக் கொன்றதால் ஏற்பட்ட பழிநீங்குதற் பொருட்டுச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டுப் பழிநீங்கிப் பெற்ற தலம்.

மார்க்கண்டேயர், மாளுவதேசத்து தர்மசர்மா என்கிற அந்தணன், காம்பீலி நகரத்தரசன் சித்திரசேனன், சக்தியும்னன்

என்னும் அரசன்,விசுவாமித்திர முனிவர் முதலியோர் இத்தல இறைவனை வழிப்பட்டு பேறு பெற்ற தலம்.

திருஞானசம்பந்தர் முத்துப்பந்தரின் நீழலில் இத்தலத்திற்கு எழுந்தருளி வரும் அழகிய காட்சியைக் காணுதற் பொருட்டு இறைவன் நந்திதேவரை விலகியிருக்குமாறு அருள்புரிந்த தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இத்தலம் 23 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 5 உள்ளன. தஞ்சை நாயக்கர் காலத்தியது. இக்கோவில் மண்டபத்தில் திருப்பணிகளைச் செய்த கோவிந்ததீக்ஷிதரும் அவர் மனைவியும் உள்ளனர். தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது.

அ. திருச்சத்திமுற்றம்

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன் முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே

-- திருநாவுக்கரசர்

கும்பகோணத்திலிருந்து தென்மேற்கில் 6கி.மீ திருச்சத்திமுற்றத்தின் தெற்குவீதி, திருப்பட்டீச்சுரத்தின் வடக்கு வீதியாக அமைந்த தலம். இக்கோவில் 2-87 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 5நிலை இராஜகோபுரத்துடன், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவக்கொழுந்தீசர். அம்மன் பெரிய நாயகி. தீர்த்தம் சூல தீர்த்தம் கோவிலுக்கு வெளியே உள்ளது. தலவிநாயகர் வல்லப விநாயகர்.

இவ்வாலயத்தில் உள்ள சிவபெருமானை உமாதேவியார் பூசித்துத் தழுவி முத்தமிட்டகாரணத்தால் 'திருச்சத்திமுத்தம்' எனப் பெயர் பெற்றது. மூலத்தானத்திற்குப் பக்கத்தில் இறைவி சிவலிங்கப் பெருமானைக் கட்டித்தழுவி முத்தமிட்ட திருக்கோலம் உள்ள திருவுருவத்தினையும் தரிசிக்கலாம். சுவாமி சன்னிதியின் வாயிலின் வடபுறத்தில் சக்தி முத்தமளிக்கும் தல ஐதிக மூர்த்தியும் உள்ளனர். இவ்வைதீகச் சிற்பத்தின் பின்புறம் அம்மன் ஒருகாலில் நின்று தவம் செய்யும் காட்சியைக் காணலாம்.

காஞ்சியில் அம்பிகை இறைவனைத் தழுவக்குழைந்தது போலவே இத்தலத்திலும் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

திருநாவுக்கரசர் சுவாமிகள் திருவடி தீட்சை புரிந்தருளமாறு வேண்டியபோது நல்லூருக்கு வருமாறு அருள்புரிந்த மூர்த்தி யாவார்.

நாரையை விளித்துப் பாடிய சத்திமுற்றப் புலவர் இத்தலத்தைச் சார்ந்தவர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரித் தென்கரைத் தலங்களில் இத்தலம் 22 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. சேக்கிழார் பெருமான் இத்தலத்தை பெரியபுராணத்தில் குறித்துள்ளார்.

கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை குலோத்துங்க சோழவளநாட்டுத் திருநறையூர் நாட்டுக்கு உட்பட்ட ஊர் என்பதையும், திருச்சக்திமுற்றத்துக்கு இராசராசபுரம் என்னும் வேறு பெயர்களாலும் வழங்கியிருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவமும், புரட்டாசியில் இரத உற்சவமும் தை மாதத்திலும் உற்சவம் நடைபெறுகிறது.

ஆ. ஆறைமேற்றளி

பட்டீச்சரத்துக்கு மேற்கே 2 கி.மீ. இத்தல மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் சபளநாயகி. காமதேனுவின் புதல்விகளுள் சபளி பூசித்தது.

திருஞானசம்பந்தர் முத்துப் பந்தர்விழா நாளன்று சுவாமி இத்தலத்தில் எழுந்தருளித் தங்கி வருகிறார். இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப் படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புறம்பயம் முதல் பதிகத்தில் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

இ. அரிச்சந்திரம்

பட்டீச்சரத்துக்கு வடக்கே திருச்சத்தி முற்றத்திலிருந்து ஒரு கி.மீ. இக்கோவிலின் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சந்திரமௌளீஸ்வரர். அம்மன் சௌந்தர வல்லி. இக்கோவிலுக்கு முன்பு கரிக்குளம், பாற்குளம் என இரு தீர்த்தங்கள் உள்ளன. பாற்குளத்தில் திருச்சத்திமுற்றத்து இறைவர் தீர்த்தம் கொடுக்கும் திருவிழா நிகழ்ந்து வருகிறது. இத்தலம் தேவார வைப்புத்தலம். அப்பர் தேவாரத்தில் 'பழையாறும் பாற்குளமும்' எனக்குறிக்கப்படுகிறது.

ஈ. முழையூர்

பட்டீச்சரத்திலிருந்து கிழக்கே உள்ளது. திருமலைராயன் ஆற்றின் வடகரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பரசுநாதர். எட்டுப் பட்டைகளுடன் காட்சியளிக்கிறார். அம்மன் ஞானாம்பிகை. காமதேனுவின் புதல்வி நந்தினி பூசித்தது. அக்ஷய திருதியைத் திருநாளில் திருமலைராயன் ஆற்றில் சுவாமி தீர்த்தம் கொடுத்தருளிப் பரசுராமர்க்குக் காட்சி வழங்குகின்றார். இத்தலம் தேவார வைப்புத்தலம். திருநாவுக்கரசர் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

6. கீழபழையாறை

வாயி ருந்தமி ழேபடித் தாளுறா
ஆயி ரஞ்சம ணும்ம்ழி வாக்கினான்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே.

-- திருநாவுக்கரசர்

பட்டீஸ்வரத்திலிருந்து தென்கிழக்கே 2கி.மீ. ஆறைவடதளி, சோழமாளிகை, நெல்லிவனம் முடிகொண்டான் ஆற்றின் வடக்கே இக்கோவில் 2-52 ஏக்கர் நிலப்பரப்பளவில் 440×250 அடி நீளம் அகலம் கொண்டதும், கிழக்கு நோக்கிய இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமநாதர். அம்மன் சோமகலாம்பிகை. தீர்த்தம் சோம தீர்த்தம் கோவிலுக்கு எதிரே உள்ளது. தலமரம்-நெல்லி.

முன்னொரு காலத்தில் கருடன் தன் தாயின் அடிமைத்தனம் நீங்கத் தேவேந்திரனிடம் அமிர்த கலசம் பெற்றுக் இத்தலத்தின் வழியே வரும்போது அசுரர்கள் இதைக்கண்டு கருடனுடன் சண்டை மூண்டது. கடத்திலிருந்த மூன்று துளிகள் நெல்லிவனமான இத்தலத்தில் சிந்தின. அத்துளிகள் சிவலிங்கம், அம்பிகை, தீர்த்தம் ஆகிய மூன்றாயின. கருடன் தீர்த்தத்தில் நீராடி இறைவனையும், அம்பிகையையும் வழிபட்டு உய்ந்தது. கருடன் தனியே தன்பெயரால் உண்டாக்கிய தீர்த்தம் சடாயு தீர்த்தம் என வழங்கப்படுகிறது.

சந்திரன் இத்தல இறைவனை வழிபட்டுக் கலைகள் வளரவும், கயரோகம் நீங்கவும் அருள்பெற்ற தலம்.

இத்தலத்தைச் சூழவுள்ள ஐந்து தலங்களான திருநல்லூர், திருவலஞ்சுழி, திருச்சத்திமுற்றம், பட்டீச்சரம், ஆவூர் முதலிய தலங்கள் பஞ்ச குரோசத் தலங்கள் எனப்படும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய அமர்நீதி நாயனார் இத்தலத்தில் திருவவதாரம் செய்தவர்.

பிற்காலச் சோழர் ஆட்சியில் இத்தலம் இரண்டாவது தலைநகராய் சிறந்து விளங்கியது. கோவில் இராசராசசோழனால் திருப்பணி செய்யப் பெற்று அவனது இயற்பெயரால் அருண்மொழி தேவேச்சரம் என வழங்கப்படுகிறது.

முழையூர்க் கோவிலை வடதளி என்றும், பழையாறையைத் தனித்தல மென்றும், இவ்விரு தலமும் பழையாறை வடதளி என இணைக்கப் பெற்றுத் திருப்பதிகம் அருளிச் செய்யப் பெற்றுள் ளது. முழையூரில் உள்ள மாடக்கோவிலின் இறைவர் பெயர் தருமபுரீசுவரர். அம்மன் விமலநாயகி. தேவார வைப்புத் தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இத்தலம் 24 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருண கிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்கு உள்ளது. தலபுராணம் 15 அத்தியாயங்கள் கொண்டது.

7. திருவலஞ்சுழி

ஓத மார்கட லின்விட முண்டவன்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே.
-- *திருநாவுக்கரசர்*

கும்பகோணத்திலிருந்து மேற்கே 4கி.மீ. சக்திவனம், தக்ஷிணாவர்த்தம், திகுணா வர்த்தம். அரசலாற்றின் தென்கரையில் இக்கோவில் 7-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு வலஞ்சுழிநாதர். அம்மன் பெரியநாயகி. தலவிநாயகர் சுவேத விநாயகர்.

காவிரியாறு வலமாக சுழித்துச் செல்லும் இடத்தில் அமைந்துள்ளதால் இத்தலம் வலஞ்சுழி எனப் பெயர் பெற்றது.

பராசக்தி ஒரு முனிவருக்குப் புதல்வியாகத் தோன்றி, பெருமானை வழிபட்டு அப்பெருமானையே திருமணம் செய்து கொண்டாள். அதனால் சக்திவனம் என பெயர் பெற்றது.

இந்திரன், திருமால், பிரமன் முதலிய தேவர்களும், ஏரண்ட முனிவர், ஆதிசேடன், அம்பிகை, சோழ மன்னர்கள் ஆகியோரும் வழிபட்டு அருள் பெற்ற தலம்.

திருவிடைமருதூர்த் திருக்கோவிலின் பரிவாரத் தலங்களில் விநாயகருக்கு உரிய தலமாகத் திகழ்வது.

ஒரு காலத்தில் காவிரியாறு இத் தலத்தை அடைந்தபோது, அதிசேடன் வெளிவந்த பாதாளம் அளவுள்ள பள்ளத்தில் இறங்கிவிட்டது. ஏரண்ட முனிவர் பிலத்துட்புகுந்து காவிரியை வெளிப் படுத்திய தலம். பிராகாரத்தில் ஏரண்ட முனிவர் திருவுருவம் உள்ளது. ஆதிசேடன் மகாசிவராத்திரி அன்று பாதாள உலகிலிருந்து வெளிவந்து வழிபட்ட தலம்.

இத்தல தீர்த்தங்கள் காவிரி, அரசலாறு, ஜடாதீர்த்தம் ஆகியன. தலமரம்-வில்வம்.

இத்தலத்தில் கொடிமர விநாயகரே மிக்க சிறப்போடு பிரதான விநாயகராகப் போற்றப்படுகிறார்.

வெள்ளை விநாயகர் எழுந்தருளியுள்ள மண்டபம் இந்திரனால் நிர்மாணிக்கப் பட்டது. சிற்பச் சித்திர வேலைப்பாடுகள் உடையது. இத்தல விநாயகர் கடல்நுரை மூர்த்தியானதால் பச்சைக் கற்பூரம் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இத்தலம் 25 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகங் கள் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. நான்கு கால பூஜை. ஆவணி சதுர்த்தியன்று உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

8. திருநாகேச்சுரம்

பொன்னேர்தரு மேனிய னேயரியும்
மின்னேர்சடை யாய்விரை காவிரியின்
நன்னீர்வய னாகேச் சுரநகரின்
மன்னேயென வல்வினை மாய்ந்தறுமே

-- திருஞானசம்பந்தர்



கும்பகோணத்திலிருந்து கிழக்கே 5கி.மீ. சண்பகவனம், கிரிகன்னிகைவனம். காவிரியாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 15-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், 5 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகேசுவரர். சுவாமிக்கு அருகில் உள்ள அம்மன் பிறையணி வாணுதலாள் என்பதாகும். தனிச் சன்னிதியில் உள்ள அம்மன் கிரிகுஜாம்பிகை வலதுபக்கத்திலும், இடதுபக்கத்திலும் கலைமகளும், திரு மகளும் வீற்றிருக்கின்றனர். தலவிநாயகர் சண்பக விநாயகர். தலதீர்த்தம் சூரிய புஷ்கரிணி முதலிய பன்னிரண்டு தீர்த்தங்களாகும். தலமரம்-சண்பகமரம்.

ஆதிசேடன், தக்ஷகன், கார்க் கோடகன் முதலிய நாகராஜாக்களால் பூசிக்கப் பெற்றதால் இத்தலம் திருநாகேச்சுரம் எனப் பெயர் பெற்றது.

சிவபெருமானை மட்டுமே வணங்கி வந்த பிருங்கி முனிவரைக் கண்டு வெகுண்ட பார்வதிதேவி இறைவனைக் குறித்து அர்த்தநாரீசுர வடிவம் வேண்டி இத்தலத்தில் கடுந்தவம் புரிந்தாள். தவம் புரிந்த மரம் சண்பகம். இறைவியின் தவத்திற்கிரங்கிய பெருமான் உமை யம்மைக்கு உடலில் பாதியை அளித்து உமையொருவரானார்.

நந்தி, விநாயகர், கௌதமர், நலன், பராசர முனிவர், பாண்டவர்கள், வசிட்டர், இந்திரன், பிரமன், பகீரதன், சித்திரசேனன் என்ற மன்னன் சௌனக முனிவர், நற்குண முனிவர் முதலியோர் வழிபட்டுப் பேறுகள் பெற்ற தலம்.

இரண்டாம் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் நாகராஜா திருவுருவம் அமைந்த கோவில் உள்ளது. சேக்கிழார் பெருமான் திருப்பணி செய்த மண்டபமும் உள்ளது. சேக்கிழார் இத்திருநாகேச்சரத்தில் எழுந் தருளி விளங்கும் இறைவர்பால் பேரன்பு செலுத்தி நாள்தோறும் போற்றி வழிபட்ட தலம். தம் ஊராகிய குன்றத்தூரிலும் திருநாகேச்சரம் என்ற பெயரால் ஒரு கோவிலையும் கட்டி மகிழ்ந்தார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இக்கோவில் 29 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலியோர் அருளிய திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம்.

கல்வெட்டுக்கள் 16 உள்ளன. இறைவர் பெயர் சண்பகாரணியேசுவரர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

5 கால பூஜை. கார்த்திகை மாதம் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

9. திருப்பந்துறை

பைம்மாநாகம் பன்மலர் கொன்றை பன்றிவெண்கொம் பொன்று பூண்டு
செம்மாந்தையம் பெய்கென்று சொல்லிச் செய்தொழில் பேணியோர் செல்வர்
அம்மானோக்கி யந்தளிர்மேனி யரிவையோர் பாக மமர்ந்த
பெம்மானல்கிய தொல்புகழாளர் பேணு பெருந்துறையாரே.

-- திருஞானசம்பந்தர்

நாச்சியார்கோவிலுக்கு வடகிழக்கே 3கி.மீ. திருப்பேணுபெருந்துறை. அரசலாற்றின் தென்கரையில் இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய சிறிய இராஜகோபுரமும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவானந்தேசுவரர். அம்மன் மங்களாம்பிகை. தலமரம் வன்னி. தீர்த்தம் மங்கள தீர்த்தம் கோவிலின் வாயிலில் உள்ளது. தீர்த்தக்கரையில் விளங்கும் இரட்டை விநாயகராகிய குகவிநாயகர், சாக்ஷி விநாயகர், உமையம்மை, முருகன், பிரமன் ஆகியோர் பூசித்த தலம்.

திருப்பெருந்துறை எனவழங்கும் தலத்திலிருந்து பிரித்தறிதற்கு அடைமொழி கூட்டிப் பேணு பெருந்துறை என வழங்கப்படுகிறது.

முருகப்பெருமான் மூகைத் தன்மை நீங்கிய தலம். இத்தல பிக்ஷாடனர் மிக்க பெருமை உடையவர். சித்திரைப்பரணியில் அமுது படையல் நடைபெறுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இக்கோவில் 64 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 5 உள்ளன. இவ்வூரை திருநறையூர் நாட்டுக் கிராமமான பேணு பெருந்துறை எனவும், இறைவன் பெயர் பேணுபெருந்துறை மகாதேவர் என்றும், அம்மை மலையரசியம்மை என குறிக்கப்பட்டுள்ளது. ஆதியில் செங்கற் கோவிலாக இருந்த இக்கோவில் கரிகாற்சோழன் காலத்தில் கற்கோவிலாயிற்று என்று கல்வெட்டு தெரிவிக்கிறது.

இராஜராஜசோழன், வீரபாண்டியன் காலத்து சாசனங்கள் இக்கோவிலில் உள்ளன.

10. திருநறையூர்

ஊரு லாவு பலிகொண் டுலகேத்த
நீரு லாவு நிமிர்புன் சடையண்ணல்
சீரு லாவு மறையோர் நறையூரில்
சேருஞ் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே.

-- திருஞானசம்பந்தர்

நாச்சியார்கோவிலுக்கு வடக்கே ஒரு கி.மீ. திருநறையூர்ச்சித்தீச்சரம், நறையூர், பிரமபுரம், நரபுரம், சுகந்தவனம். அரசலாற்றின் தென் கரையில் இக்கோவில் 1-17 ஏக்கர் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கியதும், 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சித்தநாதர். அம்மன் சௌந்தர நாயகி. தலமரம்-பவள மல்லிகை. தீர்த்தம் சூல தீர்த்தம் கோவிலின் வடபால் உள்ளது. உள்பிராகாரத்தில் ஆண்ட விநாயகர், நடராஜர், முருகன், காலபைரவர், வீரபைரவர், நால்வர், சப்தமாதர்கள், அர்த்தநாரீசுரர், பிக்ஷாடனர், இலிங்கோத்பவர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

ஊர்ப்பெயர் திருநறையூர், கோவிற் பெயர் சித்தீச்சரம். சித்தர்கள் பூசித்த காரணத்தால் சித்தீச்சரம் என்று பெயர்.

துர்வாச முனிவருடைய சாபம் பெற்றதனால் பறவை உருவம் பெற்ற நரனும், முருகப்பெருமானும், பிரமன்,

திருமால் முதலியோரும் வழிபட்ட சிறப்புடையது. அதிவீரன் மார்க்கண்டேயன், அருச்சுனன் ஆகியோர் பூசித்த பெருமையுடையது. மேதாவி முனிவர் இத்தலத்தில் இறைவனை வழிப்பட்டு இலக்குமியைப் புதல்வியாகப் பெற்றுத் திருமாலுக்கு மணம் முடித்த தலம்.

சந்திரகுப்தன் என்னும் வணிகன் இத்தல இறைவனை வழிபட்டுக் குட்டநோய் நீங்கப் பெற்றான். தர்மதாசன் என்னும் அமைச்சனும், சாரங்கதரரும் வழிபட்ட தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 65 வது. திருஞானசம்பந்தர், சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 24 உள்ளன. முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் இராஜாதிராஜன், முதலாம் வீர இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமன், இரண்டாம் இராஜராஜ முதலிய மன்னர்களின் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. இறைவன் பெயர் சித்தீச்சரம் உடையார், கங்காளதேவர் என்னும் பெயர்களால் குறிப்பிடுகின்றன.

தினமும் நான்கு கால பூஜை. மாசி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது. இத்தலத்திற்கு அருகில் நாச்சியார் கோவில் என்னும் வைணவத்தலம் உள்ளது.

11. அழகார்புத்தூர்

முத்த ரும்புனல் மொய்யரி சிற்கரைப்
புத்த ரன்வடி போற்றியென் பாரெலாம்
பொய்த்த ரும்புல னைந்தொடு புல்கிய
மைத்த ரும்வினை மாற்றவும் வல்லரே.

-- திருநாவுக்கரசர்

நாச்சியார்கோவிலுக்கு வடமேற்கே 3கி.மீ. திருஅரிசிற்கரைப்புத்தூர், செருவிலி புத்தூர். அரசலாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-15 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூன்று நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன், மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு படிக்காசளித்த பரமர். அம்மன் அழகம்மை. தலமரம் வில்வம். தீர்த்தம் கோவிலின் எதிரில் உள்ள அரசலாறு. உள்பிராகாரத்தில் முருகன், திருமகள், பைரவர், விநாயகர், சமயாசாரியார், புகழ்த்துணையார், உண்மையானந்த முனிவர், நவக்கிரகங்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

புகழ்த்துணை நாயனார் பூசித்து முத்திப் பேறெய்திய தலம். உண்மையானந்த முனிவர் வழிபட்ட பெருமை உடையது. கோச்செங்கட் சோழனின் திருப்பணியைப் பெற்றது. புகழ்த்துணை நாயனார் கைதவறி விழுந்த குடம்பட்ட தழும்பு பின்புறம் திருமுடியில் திகழ்கின்றது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 66 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர் பதிகங்கள் பெற்ற தலம்.


கல்வெட்டுக்கள் 7 உள்ளன. இவ்வூரை குலோத்துங்கச் சோழவளநாட்டு அழகார் திருப்புத்தூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. 7 கல்வெட்டுக்களும் சோழர்கள் காலத்தைச் சேர்ந்தது.

12. சிவபுரம்

இன்குர லிசைகெழும் யாழ்முரலத்
தன்கர மருவிய சதுரனகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே.

-- திருஞானசம்பந்தர்

சாக்கோட்டைக்கு வடகிழக்கே 2 கி.மீ. அரசலாற்றின் தென்கரையில் இக்கோவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவபுரநாதர். அம்மன் சிங்காரவல்லி. தலமரம் சண்பகம். தீர்த்தம்-சந்திர புஷ்கரிணி.



திருமால் சுவேதவராகம் வடிவெடுத்துப் பூசித்த தலம். இந்த நிகழ்ச்சி உருவம் கோவில் மதிற்சுவரில் காணப்படுகிறது.

குபேரன் தனபதி என்ற பெயருடைய மன்னனாகப் பிறந்து இத்தலத்து இறைவனை வழிபட்டு அருள் பெற்ற தலம்.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இக்கோவில் 67ஆவது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் பெற்றது.

இத்தல நடராஜர் மிக அழகிய திருவுருவம் கொண்டவர். இத்தல நாடராஜப் பெருமானை வெளிநாட்டிற்குக் கடத்தப் பட்டதும், பெரும் வழக்குகளுக்குப்பின் மீண்டும் கிடைத்ததும் உலகப் புகழ் பெற்ற நிகழ்ச்சியாகும்.

இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார்.

13. சாக்கோட்டை

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணதினைநன்கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவிய ஊர் வினவிக்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே

-- சுந்தரர்.

கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. திருக்கலயநல்லூர். இக்கோவிலைக் கோட்டைச் சிவன்கோவில் என்று வழங்கு கின்றனர். இக்கோவில் 300 சதுர அடி நிலப்பரப்பளவில் 3 நிலை கோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அமிர்தகலசநாதர். அம்மன் அமிர்தவல்லி. தலமரம்-வன்னிமரம்.

ஊழிக்காலத்தில் உயிர்கள் அடக்கிய கலசம் இங்குத் தங்கியது என்றும், அதனால் கலயநல்லூர் என்று வழங்கப்படுகிறது.

பிரமன் இத்தல இறைவணைப் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

இறைவன் உமையம்மையின் தவத் தினைக் கண்டு உவந்து அம்மைக்கு வரங்கொடுத்து திருமணம் புரிந்து கொண்ட தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் இத்தலம் 68 வது. சுந்தரர் பதிகம் பெற்றது.

திருச்சிற்றம்பலம்

14. மருதாந்தநல்லூர்

நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்து நின்மலன்
கனைகடல் வையகம் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் அடிகள் காண்மினே.

-- திருஞானசம்பந்தர்

கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கே 8கி.மீ. திருக்கருக்குடி. இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் சுயம்புலிங்க மாக அருள்மிகு கருக்குடிநாதர். அம்மன் சர்வாலங்கார அம்பிகை. தீர்த்தம் யமதீர்த்தம். தலவிநாயகர் வலம்புரிவிநாயகர்.

இத்தல இறைவனைப் பிரமன், இராமன், சற்குணன் என்னும் அரசன் முதலியோர் பூசித்த தலம்.

ஒரு வணிகன் தன் சிற்றன்னையை அறியாது புணர்ந்தமையால் உண்டான குற்றம் இத்தல இறைவனை வணங்கியமையால் நீங்கப் பெற்றது என வரலாறு.

கருவறையில் உள்ள இலிங்கத் திருமேனி மிகவும் சிறியது. மண்ணினால் செய்யப்பட்டது. மண்ணினைக் கையால் பிடித்துச் செய்த சுவடுகள் கூடத் தெரிகிறது. அரைஅடிஉயர ஆவுடையார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரித் தென்கரையில் இக்கோவில் 69 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

15. திருச்சேறை

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.

-- திருநாவுக்கரசர்

நாச்சியார்கோவிலுக்கு தெற்கே 5 கி.மீ. செந்நெறியப்பர் கோவில், உடையார் கோவில். முடிகொண்டனாற்றின் தென் கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சாரபரமேசுவரர். அம்மன் ஞானவல்லியம்மை. தலமரம் மாவிலங்கை. தீர்த்தம் மார்க்கண்டேய தீர்த்தம். உள்பிராகாரத்தில் விநாயகர், நடராஜர், இடபாரூடர், தட்சிணாமூர்த்தி, காலபைரவர், துர்க்கை, சூரியன், சனிபக வான் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இவ்வூர் ஆற்றூர் ஆறை என மருவி வழங்குதல் போலச் சேற்றூர் என்ற பெயர் சேறை என வழங்கியது எனலாம். தேவாரப் பாடல்களில் வயல்களால் சூழப் பெற்ற வளநகர் என இத்தலத்தை குறிக்கப்படு கிறது. மார்க்கண்டேயர், தௌமிய முனிவர் வழிபட்ட தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 95 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. இக்கோவிலுக்கு அருகில் புகழ்பெற்ற சாரநாதப் பெருமாள் என வழங்கும் திருமால் கோவில் உள்ளது.

கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. இதில் இறைவரின் பெயர் திருச்செந் நெறியுடையார் எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்

16. இஞ்சிக்கொல்லை

பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூருஞ் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினான்
நாலூர் மயானத்து நம்பான்ற னடிநினைந்து
மாலூருஞ் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே.

-- திருஞானசம்பந்தர்

திருச்சேறைக்கு தென்கிழக்கே 1 கி.மீ. குடமுருட்டியாற்றின் வடகரையில் நாலூர், நாலூர்மயானம் ஆகிய இரண்டு தலங்கள் உள்ளன. தேவாரத்தில் நாலூர் வைப்புத் தலமாகவும் நாலூர் மயானத்தைத் திருப்பதிகம் பெற்ற திருத்தலமாகவும் போற்றப்படுகிறது.

நாலூர்மயானம் :

நாலூருக்கு கிழக்கே யுள்ளது. திருமெய்ஞானம். இக்கோவில் 1-67 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஞானபுரீஸ்வரர். அம்மன் ஞானாம்பிகை. தீர்த்தம் ஞானதீர்த்தம்.

ஆபத்தம்ப முனிவர் பூசித்தது. நான்கு வேதங்களும் வழிபட்ட சிறப்பினது. இலிங்கத்தின் திருமுடியில் சில வேளை களில் பாம்பு ஊர்வதாகக் கூறுகின்றனர்.

சோழர்காலத்து ஏகதளக் கற்றளியாகிய இக்கோவில் மிக்க கலையழகுடையது. சோழர் காலக் கலைப்பணியைச் சேர்ந்தது. முதல் ஆதித்தன் காலத்துத் திருப்பணியைப் பெற்றது. கருவறை சதுரமானது. சிகரம் உருண்டைவடிவுடையது. தூண்களும் போதிகைகளும் சிற்ப அழகு உடையவை.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரி தென்கரையில் உள்ள தலங்களில் இத்தலம் 96 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

இக்கோவிலில் 23 கல்வெட்டுக்கள் உள்ளன. தினமும் 3 கால பூஜை நடைபெறுகிறது. புரட்டாசி, மாசி, மார்கழி மாதங்களில் உற்சவம் நடைபெறுகிறது.

நாலூர் :

இக்கோவில் 15 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக பலாசவனநாதர். அம்மன் பெரிய நாயகியம்மன். கிழக்கு நோக்கிய சன்னிதி எதிரே திருக்குளம் உள்ளது. தலமரம் பலாசமரம். மாடக்கோவிலாகவும், விமானம் கஜப்பிருஷ்ட விமானத்தையும் கொண்டது.

இத்தலத்தைப் போற்றி திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடல்கள் அருளி யுள்ளனர். இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது.

நாள்தோறும் இரண்டு கால பூஜை. மாசி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

17. தாராச்சுரம்

கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 2கி.மீ. இராஜராஜேசுவரம். மூலவர் ஐராவதீஸ்வரர், அம்மன் தெய்வநாயகி. சிற்பங்கள் நிறைந்த கோவில். தாரன் என்னும் அசுரன் தனது நூறு பத்தினிகளுடன் இறைவனைப் பூசித்து வீடுபேறு பெற்றதால் இத்தலம் தாராசுரம் எனப் பெயர் பெற்றது.

சிவனடியார்களின் திருவுருவங்கள் சிற்பவடிவில் வரிசையாக அமைக்கப் பட்டிருப்பது இத்தலத்தின் தனிச்சிறப்பு. கல்வெட்டுக்கள் 52 உள்ளன. இரண்டாம் இராஜராஜன் காலத்தில் கட்டப் பெற்ற கோவில்.

18. சோழபுரம்

கும்பகோணத்திலிருந்து வடக்கே 10கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் தென் கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

19. கோவிலாச்சேரி

கும்பகோணத்திலிருந்து வடக்கே 7கி.மீ. இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

20. திருநல்லூர்

கும்பகோணத்திலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கல்யாணசுந்தரேசுவரர். 600 வருட முற்பட்ட கோவில்.

21. கல்லூர்

கும்பகோணத்திலிருந்து வடக்கே 6கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர்.

22. கொரநாட்டுக்கருப்பூர்

கும்பகோணத்திலிருந்து வடகிழக்கே 3கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

23. வாளாபுரம்

கும்பகோணத்திலிருந்து வடக்கே 4கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

24. ஏரகரம்

கும்பகோணத்திலிருந்து வடக்கே 7கி.மீ. ஏர். இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சங்கரநாதர். அம்மன் சங்கரநாயகி.

சுவாமிமலை முருகனது ஆறுபடை வீடுகளில் ஏரகம் எனப்பெறும் இத்தலம் அப்பெயருடன் ஏர் என்று போற்றப் படுகிறது.

இத்தலம் தேவார வைப்புத்தலமாக போற்றப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

25. ஆரசூர்

கும்பகோணத்திலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தான்தோன்றீசுவரர்.

26. நாகக்குடி

சுவாமிமலைக்கு வடக்கே 2கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

27. இலந்துறை

திருநாகேசுரத்திலிருந்து கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

28. அம்மங்குடி

திருநாகேசுரத்திலிருந்து கிழக்கே 7கி.மீ. இக்கோவிலின் மூலவர் கைலாசநாதர்.

29. புத்தகரம்

திருநாகேசுரத்திலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதசுவாமி.

30. பவுண்டரிகபுரம்

திருநாகேசுரத்திலிருந்து கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

31. தண்டந்தோட்டம்

திருநாகேசுரத்திலிருந்து தென்கிழக்கே 4கி.மீ. அரசலாற்றின் வடகரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு நடனபுரீசுவரர், அம்மன் சிவகாமசுந்தரி.

நர்த்தனபுரம், தாண்டவபுரி என இத்தலம் வழங்கப் படுகிறது. அகத்தியருக்கு இறைவன் திருமணக் கோலத்தைக் காட்டி அருள்புரிந்த தலம்.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் திருநாட்டுத் தொகையில் இத்தலம் இடம் பெற்றுள்ளது. இத்தலத்திற்கு வந்து வழிபடுவோர்க்குத் தடைபட்ட திருமணங்கள் கை கூடிவருகின்றன.

32. குமாரமங்கலம்

நாச்சியார் கோவிலுக்கு வடகிழக்கே 4கி.மீ. அரசலாற்றின் வடகரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஆபத்சகாயர். 1100 வருட முற்பட்ட கோவில்.

33. ஏனநல்லூர்

நாச்சியார் கோவிலுக்கு மேற்கே 3கி.மீ. திருமலைராயனாற்றின் வடகரையில் இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்சுவரர்.

34. உடையாளூர்

பட்டீச்சரத்திலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 78 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

35. திப்பிராஜபுரம்

கும்பகோணத்திலிருந்து தெற்கே 9கி.மீ. திருமலைராயனாற்றின் தென் கரையில் இக்கோவில் 36 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விக்ரம சோலீஸ்வரர்.

36. செம்பங்குடி

நாச்சியார் கோவிலுக்கு தெற்கே 3கி.மீ .முடிகொண்டனாற்றின் வடகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

பஞ்சதாளம்

சிவபிரானது ஐந்து முகத்தினின்றும் உதித்ததாகச் சொல்லப்படும் சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதா புத்திரகம், சம்பத்து வேட்டம், உற்கடிதம் என்னும் ஐந்துவகைத் தாளங்கள்.

பஞ்சப்பிரமம்

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற சிவனின் ஐம்முகங்கள்; சிவபிரானின் ஐந்து திருமுகம் பற்றிய மந்திரங்கள்; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

பஞ்சபல்லவம்

பூசனைக்குரிய ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, வில்வம் என்னும் ஐந்தன் தளிர்கள்.

சதுரகராதி


பெயரகராதி, பொருளகராதி, தொகை யகராதி, தொடையகராதி,

சதுரங்கம்

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்னும் நால்வகை படைகள்.

பாபநாசம் வட்டம்

(தஞ்சாவூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பாபநாசம்

நீல மாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையுங் கூட்டினார்
சூல மான்மழு ஏந்திச் சுடர்முடிப்
பால்நெய் யாடுவர் பாலைத் துறையரே
-- திருநாவுக்கரசர்

பாபநாசம் நிலையத்திலிருந்து வடகிழக்கே ஒரு கி.மீ. திருப்பாலைத்துறை. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 5 நிலை இராஜ கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பாலைவனநாதர் கிழக்கு நோக்கியும். அம்மன் தவளவெண்ணகையாள் கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தல விருட்சம் பனைமரம் மற்றும் பாலை. தீர்த்தம் வசிட்ட, இந்திர, இயம, காவிரி தீர்த்தங்கள்.

குடமுருட்டியாற்றின் கரையில் பனைமரத்தைத் தலமரமாகக் கொண்டுள்ள தால் இத்தலம் பாலைத்துறை என வழங்குகிறது.

தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய புலியின் தோலைச் சிவபெருமான் உரித்து அதனை அணிந்துகொண்ட தலம்.

இராமர் சிவபிரானை வழிபட்டுத் தான் செய்த கொலைப் பாவத்தைப் போக்கிக் கொண்ட காரணத்தால் இத்தலம் பாவநாசம் எனப்பெற்றது.

திருமால், பிரமன், அஷ்டதிக்குப் பாலகர் முதலியோர் வழிபட்ட தலம்.

இத்தலத்திற்கு அருகில் பாவநாசத்தில் விளங்கும் 108 சிவலிங்கக் கோவில் கீழைராமேச்சுவரம் என வழங்கப்பெறுவது. இராமர் இத்தலத்தில் 108 சிவலிங்கங் களைப் பிரதிட்டை செய்து வழிபட்ட தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 19 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

இக்கோவிலில் பதினோரு கல் வெட்டுக்கள் உள்ளன. முதற் குலேத் துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் இராசராசன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் குலேத்துங்கன் இவர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவர் திருப்பாலைத்துறை மகாதேவர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

2. விசயமங்கை

ஆதி நாதன் அடல்விடை மேலமர்
பூத நாதன் புலியத ளாடையன்
வேத நாதன் விசயமங் கையுளான்
பாத மோதவல் லார்க்கில்லை பாவமே.
-- திருநாவுக்கரசர்

திருவைகாவூர்க்கு கிழக்கே ஒரு கி.மீ. திருவிசயமங்கை. மண்ணியாற்றின் வட கரையில் இக்கோவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு விசயநாதர். அம்மன் மங்களாம் பிகை. தீர்த்தம்-அருச்சுன, கொள்ளிடம், மண்ணியாறு தீர்த்தங்கள்.

அருச்சுனன் வழிபட்டு பாசுபதாஸ்திரம் பெற்றதனால் இத்தலத்திற்கு விசயமங்கை என வழங்கப்படுகிறது. இத்தல இறைவன் திருமேனியில் அம்புபட்ட தழும்பு உள்ளது.

தேவாரப் பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 47 வது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்களில் விசயமங்கை என்பது கோவந்த புத்தூரிலுள்ள சிவாலயமே என்பர்.

திருச்சிற்றம்பலம்

3. திருவைகாவூர்

கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடுவகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும் வைகாவிலே.

-- திருஞானசம்பந்தர்

பாபநாசத்திலிருந்து வடக்கே 12கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வில்வவனேஸ்வரர். அம்மன் வளைக்கைநாயகி. தலமரம்-வில்வம். தீர்த்தம் இயமதீர்த்தம். ஆலயத்தின் எதிரில் உள்ளது.

சிவராத்திரி அன்று வேடன் ஒருவன் புலிக்கு அஞ்சி வில்வமரத்தின் மேல் ஏறிப் பொழுது விடியும் வரை வில்வ இலையைப் பறித்து கீழே வீசிக் கொண்டிருந்தான். வில்வஇலை கீழேயிருந்த இலிங்கத் தின்மேல் விழுந்தது. மறுநாள் காலையில் சிவபெருமான் வெளிப்பட்டு அவ்வேட னுக்கு அருள் புரிந்தார்.

இத்தல நந்திகள் எல்லாம் இயமனை அச்சுருத்த எதிர்திசையில் திரும்பியுள்ளன. கோவிலில் துவாரபாலகர் இல்லை. அழகிய ஆறுமுகப் பெருமான் இத்தலத்தில் காட்சியளிக்கிறார்.

சப்தமாதர்கள் உந்தால முனிவரால் தமக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டு இத்தலத்தில் உள்ள இயம தீர்த்தத்தில் நீராடி இறைவனை வணங்கி வேண்டி அட்டமாசித்திகளையும் திரும்பப் பெற்ற தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 48 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், அருணகிரிநாதர், வடலூர் இராமலிங்க சுவாமிகள் முதலியோரும் பாடியுள்ள தலம்.

சிவராத்திரி அன்றும், மறுநாள் அமாவாசையன்று பிற்பகல் பஞ்சமுத்திகள் இயமதீர்த்தத்தில் தீர்த்தவாரி, வீதியுலா நடைபெறுகிறது.

4. கபிஸ்தலம்

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளா ரிடமென விரும்பினாரே

-- திருஞானசம்பந்தர்

பாபநாசத்திலிருந்து வடக்கே 4 கி.மீ. திருவடகுரங்காடுதுறை. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அழகுசடைமுடிநாதர். அம்மன் அழகுசடைமுடியம்மை. தீர்த்தம் காவிரி. தலமரம்-தென்னை.

பக்தியில் சிறந்து விளங்கிய ஒரு கர்பிணிப் பெண்ணின் தாகத்தைத் தீர்க்க இத்தல இறைவன் இங்குள்ள தென்னையில் நொடியில் இளநீர் குலைதள்ளச் செய்து இப்பெண்ணுக்கு இளநீர் கொடுத்து உதவியதால் இறைவனுக்கு குலை வணங்கீசர் எனப்பெயர். சிட்டுக்குருவி பூசித்துப் பேறு பெற்ற தலம். இதனால்

சுவாமிக்கு சிட்டுலிங்கம் என்பதும் பெயராயிற்று. வாலி பூசித்துப் பேறு பெற்ற தலம். இத்தலத்தில் நடராஜப் பெருமானுக்கு மூலஸ்தானம் சிறப்பாக அமைந்துள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 49 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

இத்தல முருகப் பெருமான் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். அருணகிரி நாதர் திருப்புகழ் பாடியுள்ளார்.

இக்கோவிலில் 15 கல்வெட்டுக்கள் உள்ளன. செம்பியன் மாதேவியார், உத்தமசோழன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

5. பசுபதி கோவில்

பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்தான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினை தானே

-- திருஞானசம்பந்தர்

ஐயம்பேட்டைக்கு மேற்கே 2 கி.மீ. திருவாலந்துறை, திருப்புள்ளமங்கை. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பசுபதிநாதர். அம்மன் அல்லியங்கோதை. தீர்த்தம் காவிரி, சிவதீர்த்தங்கள். அம்பிகை சக்கரவாகப் பறவையாக வந்து பூசித்த தலம்.

ஆலகால நஞ்சினை இறைவன் அமுதாகச் செய்த இடம் எனக் கூறப்படுகிறது. கர்ப்பக்கிரகம் அகழி அமைப்புடையது. வடசுற்றில் துர்க்கை சிறப்பாக அமைந்துள்ளது. இத்தலத்தில் நவக் கிரகங்களுக்கு நடுவே நந்தியெம்பெருமான் உள்ளார். கோபுரத்தின் மேல் எப்பொழுதும் கழுகுகள் உறைகின்றன. ஏழூர் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 16 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. மேலும் இவ்வூர்க்கு அருகில் உள்ள புள்ள மங்கையில் பிரம்மபுரீஸ்வரர் கோவிலும், தாழமங்கையில் சந்திரமௌலீஸ்வரர் கோவிலும் உள்ளது.

6. சக்கரப்பள்ளி

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே

-- திருஞானசம்பந்தர்

ஐயம்பேட்டைக்கு வடகிழக்கே ஒரு கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவிலில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக உயர்ந்த தோற்றத் துடன் அருள்மிகு சக்கரவாகேஸ்வரர். அம்மன் தேவநாயகி. தீர்த்தம் காவிரியாறு காக தீர்த்தம்.

இந்திரன் குமாரனான ஐயந்தனும், தேவர்களும் பூசித்த தலம். திருமால் இத்தல

இறைவனை வழிபட்டு சக்கராயுதம் பெற்றதனால் இத்தல இறைவனுக்கு சக்கரவாகேஸ்வரர் என்றும், ஊர் சக்கரப் பள்ளி என்றும் பெயர்.

சப்த தலங்களில் இத்தலமும் ஒன்றாகும். பிராமி, மகேஸ்சுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மாகேந்திரி, சாமுண்டி முதலிய சப்தமாதர்கள் வழிபட்ட தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென் கரையில் இத்தலம் 17 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம்.

7. திருக்கருகாவூர்

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே.

-- திருஞானசம்பந்தர்

பாபநாசத்திலிருந்து தெற்கே 6 கி.மீ. கருகாவூர், முல்லைவனம், மாதவிவனம், கருப்புபுரி. வெட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு முல்லைவன நாதர். அம்மன் கரும்பனையாளம்மை. தலவிநாயகர் சுயம்புமூர்த்தியாக கற்பக விநாயகர். தலவிருட்சம் முல்லை. தீர்த்தம் பிரம, க்ஷீரகுண்டம், சத்திய கூபம், விருத்த காவிரி முதலியன. கோவிலின் எதிரில் திருப்பாற்குளம் எனப்பெரிய திருக்குளம்.

ஆதரவற்ற ஒரு பெண்ணிற்காக இத்தலத்து இறைவி மருத்துவம் பார்த்து கருவைக் காத்தபடியால் தலம் கருகாவூர் எனப் பெயர்.

பிரமன், கார்க்கியர், கௌதமர், குஜத்துவசன், சங்குகர்ணன், நித்துருவர், பீமசேனன், புண்ணியத்துவசன், சந்திரன் முதலியோர் வழிபட்டு அருள் நலம் பெற்ற தலம்.

நித்துருவரின் பத்தினி வேதிகைக்கு ஊர்த்துவபாத மகரிஷியின் சாபத்தினால் ஏற்பட்ட கருச்சிதைவைக் காத்து கருவுக்கு உருக்கொடுத்த காரணத்தினால் ஸ்ரீ கர்ப்பரட்சகி என்ற பெயருடன் விளங்குகின்றாள்.

இத்தலத்தைச் சுற்றியுள்ள அவளிவ ணல்லூர், அரதைப்பெரும்பாழி, திருஇரும் பூளை, திருக்கொள்ளம்பூதூர் அகிய ஐந்து தலங்களையும் பஞ்ச ஆரண்யத்தலங்கள் என்று கூறுவர்.

இத்தலத்தின் சிறப்பு ஸ்கந்த புராணத்தில் க்ஷேத்திர வைபவ காண்டத்தில் சனற்குமார சங்கிதையில் நாரத முனிவருக்குச் சனற்குமாரர் கூறுவதாக விவரிக்கப்பெற்றுள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 18 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. சுந்தரர் அருளிய ஊர்த்தொகையில் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.


கல்வெட்டுக்கள் உள்ளன. இதில் அனைத்தும் இறைவர்க்குத் திருவமுதுக்கும், திருநுந்தா விளக்கினுக்கும் நிலம் விட்ட செய்திகளைக் குறிப்பிடுகின்றன.

திருச்சிற்றம்பலம்

8. நல்லூர்

கொட்டும் பறைசீராற் குழும வனலேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே

-- திருஞானசம்பந்தர்



பாபநாசத்திலிருந்து கிழக்கே 5 கி.மீ. திருநல்லூர். சுந்தரகிரி. குடமுருட்டியாற்றின் தென் பகுதியில் இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரமும், மூன்று பிரா காரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கல்யாணசுந்தரேசுவரர் கிழக்கு நோக்கியுள்ளார். அம்மன் கல்யாணசுந்தரி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் சப்தசாகரம் கோவிலுக்கு முன்னால் உள்ளது.

இத்தல இறைவன் ஆறுநாழிகைகட்கு ஒரு முறை மாறிமாறி ஐந்து வண்ணங்களில் காட்சிதரும் இம்மூலஇலிங்கம் வண்டு உருவமாய்ப் பிருங்கி முனிவர் வழிபட்ட தால் ஏற்பட்ட துளைகளோடும் பொன்மய மான ஒளியோடும் விளங்குகிறது. இலிங்கத்திற்குப் பின்னால் இறைவன் சுதையுருவில் மணவாள கோலத்தோடு காட்சியளிக்கிறார்.

இறைவன் அப்பரடிகளுக்குத் திருவடி சூட்டிய தலமாதலின் இங்கு வருவோர்க்கு இறைவன் திருவடிகளைத் தலையில் சூட்டித் திருநீற்றுப் பிரசாதம் வழங்கப் படுகிறது.

அமர்நீதி நாயனாரை ஆட்கொண்டு அவருக்கும் அவர் மனைவியாருக்கும், பிள்ளைக்கும் முக்தியளித்தருளிய தலம்.

கோச்செங்கட் சோழனால் கட்டப் பெற்ற மாடக் கோவில்களாக விளங்கும் தலம்.

தேவர்களும், முனிவர்களும், குந்தி தேவி, தருமசேனன் முதலானோர்கள் வழிபட்ட தலம்.

தெற்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கி விளங்கும், புகழ்பெற்ற அருள்மிகு காளியம்மை எட்டுத் திருக்கரங்களோடு இத்தலத்தின் காவல் தெய்வமாகப் பிரசித்தி பெற்று விளங்குகிறாள்.

இக்கோவிலின் எதிரில் உள்ள சப்தசா கரத்தில் உள்ள 12 படித்துறைகளிலும் நீராடி சுவாமியைப் 12 முறை வலம் வருவோர் உடற்பிணிகள் பலவும் நீங்கப் பெறுவதோடு உயிர்ப்பிணியும் அகலப் பெறுவர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 20 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம். தலபுராணம் கமலை வைத்தியநாத தேசிகரால் இறப்பட்டுள்ளது, கல்வெட்டுக் கள் 23 உள்ளன.

இக்கோவில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் விளங்கும் தலம்.

திருச்சிற்றம்பலம்

9. ஆவூர்

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடு வார்தம் மனத்தார் திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர் கைதொழு தேத்த விருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி விரைகமழ் சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல றாதவாவூர்ப் பசுபதி யீச்சரம் பாடுநாவே.

-- திருஞானசம்பந்தர்

பாபநாசத்திலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. திருஆவூர்ப்பசுபதீச்சரம், மணிகூட கிரி, அசுவத்தவனம். வெட்டாற்றின் வடபகுதியில் இக்கோவில் அமைந்துள்ளது. மூலவர் சுயம்புலிங்கவடிவில் அருள்மிகு பசுபதீசுவரர். அம்மன் பங்கஜவல்லி மற்றும் மங்களாம்பிகை என இரண்டு அம்பாள் சன்னிதிகள். தலவிருட்சம் அரசு. தீர்த்தம் பிரம, காமதேனு, சந்திர, அக்கினி, பொய்கையாறு முதலிய தீர்த்தங்கள் உள்ளன.

ஆவூர் ஊர்ப்பெயர், பசுபதீச்சரம் கோவிற்பெயர். இத்தலம் மாடக் கோவிலாக விளங்குவது. இவ்வூருக்கு அசுவத்தவனம் என்றும், இறைவன் விளங்கும் விமானம் அழகியமலை உச்சியைக் கொண்டுள்ளதால் மணிகூடம் என்றும் வழங்கப்படுகிறது. திருக்கயிலாய மலையிலிருந்து வாயுதேவனால் கொண்டுவரப்பட்ட இரண்டு மலைத்துண்டுகளில் ஒன்று நல்லூரிலும், ஒன்று இவ்வூரிலும் தங்கியதாகக் கூறப்படுகிறது.

காமதேனுவாகிய தெய்வப்பசு வழிபட்ட தலமாதலின் இப்பெயர் பெற்றது. பசுவுக்கும் உயிர்களாகிய பசுவுக்கும் தலைவர் ஆதலின் இறைவர் பசுபதீசுவரர் எனவழங்கப் பெறுகிறார்.

பிரமன், சப்தரிஷிகள், கணங்கள், தேவர், இயக்கர், கந்தருவர், இந்திரன், சூரியன், நவக்கிரகங்கள், திருமால், தசரதர் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம்.

தர்மத்துவஜன் என்னும் அரசன் பிரமதீர்த்தத்தில் மூழ்கிக் குட்டநோய் நீங்கப் பெற்ற தலம்.

இத்தல முருகன் வில்லேந்திய வேலனாகக் காட்சியளிக்கிறார்.

சங்க காலத்தில் இவ்வூர் மிக்க சிறப்புடையவூராக விளங்கியது. ஆவூர் கிழார், ஆவூர்மூலங்கிழார், பெருந்தலைச் சாத்தனார் முதலிய பெரும் புலவர்களைத் தந்த ஊர் இதுவாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 21 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்களில் மூன்றாம் இராஜேந்திரன் கால கல்வெட்டுக்கள் உள்ளன. இதில் இறைவர் பசுபதீச்சுவரமுடையார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

10. ஆண்டான்கோவில்

ஒருத்த னைமு வுலகொடு தேவர்க்கும்
அருத்த னையடி யேன்மனத் துள்ளமர்
கருத்த னைக்கடு வாய்ப்புன லாடிய
திருத்த னைப்புத்தூர்ச் சென்றுகண் டு
ய்ந்தெனே.

-- திருநாவுக்கரசர்

வலங்கைமானிலிருந்து தென்கிழக்கே 2 கி.மீ. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர், மேலவிடயல். குடமுருட்டி ஆற்றின் தென் கரையில் இக்கோவில் கிழக்கு நோக்கி, 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சொர்ணபுரீசுவரர். அம்மன் சொர்ணாம்பிகை. தீர்த்தம் திரிசூலகங்கை. கோவில் சன்னிதிக்கு வலது பக்கத்தில் உள்ளது. தலமரம்-வன்னி. தலவிநாயகர் - சித்திவிநாயகர்.

குடமுருட்டி ஆற்றின் பழம்பெயர் கடுவாய் என்பதாகும். புத்தூர் என வழங்கும் ஊர்கள் பல இருந்ததால் வேறுபாடு தெரியக் கடுவாய்க்கரைப் புத்தூர் என இவ்வூர் வழங்கப்படுகிறது.

காசிப முனிவர் வழிபட்ட தலம். முசுகுந்த மன்னன், சுண்டதேவர் இருவருக்கும் இறைவன் காட்சியளித்த தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 97 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

11. ஆலங்குடி

சீரார்கழ லேதொழு வீரிது செப்பீர்
வாரார்முலை மங்கையொ டும்முட னாகி
ஏராரிரும் பூளையிடங் கொண்ட வீசன்
காரார்கடல் நஞ்சமு துண்ட கருத்தே.
-- திருஞானசம்பந்தர்

வலங்கைமானிலிருந்து தெற்கே 6கி.மீ. திருவிரும்பூளை. காசிஆரண்யம். வெட்டாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 1-28 ஏக்கர் நிலப்பரப்பளவில் தெற்கு நோக்கிய, 5 நிலை கொண்ட 65அடி உயர இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆபத்சகாயர். அம்மன் ஏலவார்குழலி. தலமரம்-பூளைச்செடி, தீர்த்தம்-பிரமதீர்த்தம்.

விசேட மூர்த்தி அருள்மிகு குருதட்சிணாமூர்த்தி உள்பிராகாரங்களில் கலங்காமல் காத்த விநாயகர், முருகன், லக்ஷ்மி, நால்வர், சூரியேசர், சோமேசர், குருமோசேசுரர், சோமநாதர், சப்தரிக்ஷி நாதர், விஷ்ணு நாதர், பிர்மேசர் ஆகிய சப்தலிங்கங்களோடு காசிவிசுவநாதர், விசாலாட்சி, அகத்தியர் முதலியரும் உள்ளனர்.

கருநிறமுள்ள பூளைச் செடியைத் தலவிருட்சமாகக் கொண்டுள்ளதால் திருஇரும்பூளை என்றும், ஆலமரத்தின் கீழிருந்து அறமுரைத்த பெருமானுக்குரிய தலமாதலாலும் திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது தோன்றிய ஆலத்தை உண்டு அமரர்களைக் காத்தருளிய இறைவன் வீற்றிருப்பதாலும் ஆலங்குடி என்று பெயர்.

விசுவாமித்திரர், முசுகுந்தர், வீரபத்திரர் பூசித்த தலம்.

அம்பிகை இத்தலத்தில் தோன்றித் தவம் செய்து இறைவனைத் திருமணம் புரிந்து கொண்ட தலம்.

சுந்தரர் இத்தலத்திற்கு வரும்போது வெட்டாற்று வெள்ளப் பெருக்கில் ஆபத்சகாயரே ஓடக்காரராக வந்து கரையேற்றிக் காட்சிதந்தார் என்பது வரலாறு. ஓடம் நிலைதடுமாறிப் பாறையில் மோதியபோது காத்தவிநாயகர் கலங்காமல் காத்த பிள்ளையார் என வழங்கப்படுகிறார்.

திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானுக்குரிய பரிவாரத் தலங்களில் இத்தலம் தட்சிணாமூர்த்தித் தலம்.

பஞ்ச ஆரண்யத் தலங்களில் இத்தலம் ஒன்றாகும்.

தட்சிணாமூர்த்தி இத்தலத்தின் சிறப்புக் கடவுளாக விளங்குகிறார். வியாழக்கிழமையில் இம்மூர்த்தியை வழிபடுவோர் எல்லா நலங்களும் பெறுவர். நாகதோஷமுடையவர்கள் இத்தலத்தை வழிபட்டு தோஷம் நீங்கப் பெறுகின்றன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 98 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. காளமேகப்புலவர் அலங்குடியான் என்ற பெயரை வைத்து வெண்பா பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

12. அரித்துவார மங்கலம்

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கள்முழக் கம்முது காட்டிடை
நித்தாமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

-- திருஞானசம்பந்தர்



அம்மாபேட்டைக்கு வடகிழக்கே 8கி.மீ. திருஅரதைப்பெரும்பாழி. சமீவனம். வெண் ணாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 3 நிலை இராஜ கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பாதாளவரதர். அம்மன் அலங்கார அம்மை. தலமரம் வன்னி.

ஆலயத்தின் எதிரில் பிரம தீர்த்தம் உள்ளது. உள்பிராகாரத்தில் பிள்ளையார், காசிவிஸ்வ நாதர், சனீஸ்வரன், சூரியன், சந்திரன், பைரவர், சுந்தரர், சம்பந்தர், பஞ்ச மாதாக்கள், இலிங்கோத்பவர் உள்ளனர்.

இறைவன் திருமுன்பு திருமால் பன்றி வடிவம் கொண்டு பறித்த பள்ளம் இருக்கிறது. இக்காரணம் பற்றியே அரித்துவாரமங்கலம் என்ற பெயர் வழங்குகிறது. இறைவன் அப்பன்றியின் கொம்புகளுள் ஒன்றைமுறித்துத் தம்மார்பில் அணிந்து கொண்டார் என்பது வரலாறு.

இத்தலம் பஞ்சாரண்யத்தலத்தில் மூன்றாவது தலமாகும். தேவாரத் திருப் பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 99 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது.

கல்வெட்டில் மூன்றாம் குலோத்துங்க சோழன் கால கல்வெட்டு சிதைந்த நிலையில் உள்ளது.

13. அவளிவநல்லூர்

கொம்பிரிய வண்டுலவு கொன்றைபுரி நூலொடுகு லாவித்
தம்பரிசி னோடுசுடு நீறுதட வந்திடப மேறிக்
கம்பரிய செம்பொனெடு மாடமதில் கல்வரை விலாக
அம்பெரிய வெய்தபெரு மானுறைவ தவளிவண லூரே.

-- திருஞானசம்பந்தர்

அம்மாபேட்டைக்கு வடக்கே 6 கி.மீ. திருஅவளிவணல்லூர், சாட்சிநாதபுரம், புல்லாரண்யம், பாதிரிவனம். வெண்ணாற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் கிழக்கு நோக்கி இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சாட்சிநாதர். அம்மன் சௌந்தர நாயகி. தலமரம் பாதிரி. தீர்த்தம் சந்திர புஷ்கரிணி.

அரதைப் பெரும்பாழியில் செருக்குக் கொண்டு நிலத்தைக் கீண்டி கொம்பிழந்த வராகமூர்த்தி இத்தலத்தில் தம் பிழைதீர இறைவனை வழிபட்டார். காசிபமுனிவர் வழிபட்டதலம்.

இறைவன் இடபாரூடராய் உமையம் மையோடு சிவலிங்கத்தின் பின்புறம் காட்சிதரும் சிறப்புடையது.

முற்காலத்தில் இத்தலத்து இறை வனைப் பூசித்து வந்த ஆதிசைவ அந்தணர் ஒருவர்க்கு இரண்டு பெண்கள் இருந்தனர். மூத்தபெண்ணை மணந்தவர் காசியாத்திரை சென்றார். சென்றபின் அப்பெண்ணுக்கு அம்மைவார்க்கப் பெற்று உருமாறிக் கண்ணிழந்திருந்தார். சில ஆண்டுகள் கழித்துக் காசியாத்திரை சென்ற மூத்த மருமகன் வீட்டுக்கு வந்தார். மூத்தபெண்ணின் தோற்றவேறு பாட்டைக் கண்டு இவள் தன் மனைவியல்லள். இளையவளே என் மனைவி எனவாதிட்டார். இறைவன் இடபாரூடராய்த் தோன்றி மனம் தடுமாறிய அம்மருமகர்க்கு மூத்தமகளே அவர் மனைவி என்னும் பொருளில் 'அவள் இவள்' எனச்சுட்டிக்காட்டி மறைந்தார். இறைவனருளியவாறு அப்பெண் இத் தலத்தில் உள்ள தீர்த்தத்தில் மூழ்கி உடல்வனப்பும் கண்ணொளியும் பெற்றுத் தன் கணவனைக் கூடி இன்புற்றார் என்பது தலவரலாறு. இவ்வரலாரே அவளிவள் நல்லூர் என்ற இவ்வூர்க்குரிய பெயர்க் காரணமாகக் கூறப்படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இக்கோவில் 100 வது தலம். திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்களில் மூன்றாம் இராஜராஜ சோழன் மகன் மூன்றாம் இராசேந்திரன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

தை அமாவாசையில் சிறப்பு உற்சவம் நடைபெறுகிறது.

14. வீரமாங்குடி

ஐயம்பேட்டைக்கு வடமேற்கே 7கி.மீ இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் வஞ்ஜிரகண்டீஸ்வரர். கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் உள்ளது.

15. தியாகசமுத்திரம்

பாபநாசத்திலிருந்து வடகிழக்கே 7கி.மீ இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் லோகநாதசுவாமி, மற்றும் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மகாலிங்கசுவாமி.

16. உமையாள்புரம்

பாபநாசத்திலிருந்து வடகிழக்கே 5கி.மீ இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் காசிவிஸ்வநாதர்.

17. பண்டாரவாடை

பாபநாசத்திலிருந்து தென்மேற்காக 3கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மத்யபுரீஸ்வரர்.

18. வழுத்தூர்

ஐயம்பேட்டைக்கு கிழக்கே 3கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

19. உள்ளிக்கடை

பாபநாசத்திலிருந்து மேற்கே 7கி.மீ. பெருமாள்கோவில். இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் விசுவநாதர்.

20. சூலமங்கலம்

ஐயம்பேட்டைக்கு தெற்கே ஒரு கி.மீ. இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கீர்த்திவாகீஸ்வரர்.

21. வடக்கு மாங்குடி

ஐயம்பேட்டைக்கு கிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர்.

22. அகரமாங்குடி

ஐயம்பேட்டைக்கு தென்கிழக்கே 5கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

23. சுரைக்காயூர்

ஐயம்பேட்டைக்கு தென்கிழக்கே 7கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பூஜபதீஸ்வரர்.

24. உத்தமதானபுரம்

பாபநாசத்திலிருந்து கிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

25. கோவிந்தங்குடி

ஆவூர்க்கு வடகிழக்கே 2 கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கோமுக்தீஸ்வரர்.

26. சந்திரசேகரபுரம்

வலங்கைமானிலிருந்து மேற்கே 2 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர் மற்றும் சந்திரசேகரர்.

27. ஊத்துக்காடு

ஆவூர்க்கு தெற்கே 2 கி.மீ. இக் கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

28. மாளிகைத்திடல்

திருக்கருகாவூர்க்கு வடக்கே 2 கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.

29. மிலட்டூர்

திருக்கருகாவூர்க்கு மேற்கே 2 கி.மீ. வெட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உண்ணாதபுரீஸ்வரர். 2100 வருட முற்பட்ட கோவில்.

30. முனியூர்

அம்மாபேட்டைக்கு வடமேற்கே 7கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

31. களத்தூர்

ஆவூர்க்கு தெற்கே 5 கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

32. வடக்குப்பட்டம்

வலங்கைமானிலிருந்து தென்மேற்கே 3கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

33. தெற்குப்பட்டம்

வலங்கைமானிலிருந்து தென்மேற்கே 4கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் கோடிசூர்யப்பிரகாசர்.

34. மருவத்தூர்

வலங்கைமானிலிருந்து தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 55 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். 600 வருட முற்பட்ட கோவில்.

35. வலங்கைமான்

பாபநாசத்திலிருந்து தென்கிழக்கே 16கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசுவரர். மற்றொரு கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர்.

36. சித்தனலாமூர்

வலங்கைமானிலிருந்து தென்கிழக்கே 3கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் உள்ள மூலவர் விருபாட்சி ஈஸ்வரர்.

37. பாப்பாக்குடி

ஆலங்குடிக்கு தெற்கே 3 கி.மீ. வெண்ணாற்றின் வடபகுதியில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீர்திபுரீஸ்வரர்.

38. அம்மாபேட்டை

பாபநாசத்திலிருந்து தென்கிழக்கே 25கி.மீ. வெண்ணாற்றின் தென்பகுதியில் உள்ளது. இவ்வூர்க்கு வடகிழக்கில் புத்தூரில் உள்ள கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக புற்றிடம்கொண்டீஸ்வரர். அம்மன் சௌந் தர்யநாயகி மற்றும் பாலமுருகன். இத்தலம் தேவார வைப்புத்தலம். திருநாவுக்கரசர் பாடியுள்ளார். நான்கு கால பூஜை. கார்த்திகை தீபத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

39. மகிமாலை

அம்மாபேட்டைக்கு வடமேற்கே 3கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரமௌலீஸ்வரர்.

40. தீபாம்பாள்புரம்

அம்மாபேட்டைக்கு வடமேற்கே 4கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக்கோ வில் 1-78 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வான்மீகநாதர்.

41. கீழக்கோவில்பத்து

அம்மாபேட்டைக்கு மேற்கே 3கி.மீ. உடையார்கோவில். இக்கோவில் 93 செண்ட் நிலப்பரப்பளவில் 51அடி உயர 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக கரவனாதீஸ்வரர். அம்மன் தர்மவல்லி. இராஜராஜசோழன் திருப்பணி செய்யப்பெற்ற கோவில். வைகாசி விசாகம் உற்சவம் நடைபெறுகிறது.

42. சாலியமங்கலம்

அம்மாபேட்டைக்கு மேற்கே 7கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

43. பூண்டி

அம்மாபேட்டைக்கு மேற்கே 10கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக புஸ்பவனநாதர்.

44. நெல்லித்தோப்பு

அம்மாபேட்டைக்கு மேற்கே 15கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மஞானபுரீசுவரர்.

45. புலவன்நத்தம்

பாபநாசத்திலிருந்து தென்மேற்கே 16கி.மீ. வெண்ணாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மஞானஈஸ்வரர். 1000 வருட முற்பட்ட கோவில்.

46. கத்திரிநத்தம்

அம்மாபேட்டைக்கு மேற்கே 16கி.மீ. இக்கோவில் 1-38 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

47. கம்பையநத்தம்

அம்மாபேட்டைக்கு தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.


48. அருந்தவபுரம்

அம்மாபேட்டைக்கு தென்மேற்கே 3கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வஜ்ரபுரீஸ்வரர்.

49. புளியக்குடி

அம்மாபேட்டைக்கு தெற்கே 2 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

திருவையாறு வட்டம்
(தஞ்சாவூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திருவையாறு

நீரானே தீயானே நெதியானே கதியானே
ஊரானே உலகானே உடலானே உயிரானே
பேரானே பிறைசூடி பிணிதீர்க்கும் பெருமானென்
ஆராத ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே.

-- திருநாவுக்கரசர்



தஞ்சாவூர்க்கு வடக்கே 10 கி.மீ. பஞ்சவன் மாதேவீச்சரம். காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 14-71 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய 7 நிலை இராஜகோபுரமும், 5 பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஐயாறப்பர். அம்மன் அறம் வளர்த்த நாயகி. தீர்த்தம் சூரிய தீர்த்தம், பஞ்சநதி தீர்த்தங்கள். தலமரம் வில்வமரம்.

வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என ஐந்து ஆறுகளை உடைய ஊர் திருவையாறு எனப் பொருள்படும்.

இத்திருக்கோவிலினுள் ஐயாறப்பன் ஆலயம், வடகயிலாயம், தென்கயிலாயம் என மூன்று கோவில்களாக அமைந்துள்ளது.

இத்திருத்தலத்தை காசியுடன் ஒப்பிடப்படுகிறது. சிவபெருமான் தன்னைத் தானே பூஜித்ததலம்.

சிலாத முனிவர் திருவையாற்றில் மகப்பேறு வேண்டி தவம் மேற்கொண்டார். சிவபெருமான் அருளிய வண்ணம் யாகசாலை நிலத்தை உழுதபோது ஒரு பெட்டகத்தில் குழந்தையாக நந்திதேவர் கிடைக்கப் பெற்றார். நந்திதேவரை வளர்த்த முனிவர் வியாஹபாத முனிவரின் புதல்வியான ஸ்வயம் பிரகாசைதிருமணம் செய்து கொடுத்து அருள் பெற்ற தலம்.

இறைவன் ஆடி அமாவாசை நாளில் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு திருக்கைலாய காட்சி அளித்த தலம். சுந்தரமுர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் இத்தலத்திற்கு வந்தபோது இறைவர் காவிரியின் வெள்ளத்தை ஒதுக்கி வழிவிடச் செய்து அடியார் திருக்கூட்டத்துடன் அழைத்துக் காட்சி கொடுத்தலம்.

இத்தலச் சிறப்பே சப்தஸ்தானம் என்னும் ஏழூர் திருவிழா ஆகும். ஐயாறப்பர், அறம்வளர்த்த நாயகியுடன் எழுந்தருளி திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத் துறை, திருவேதிக்குடி, திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருநெய்த்தானம் ஆகிய ஏழுகளுக்கு எழுந்தருள்வது இவ்விழாவின் சிறப்பம்சாமாகும்.

இறைவர் முன்னிலையில் அடியவர் குங்கிலியம் இட்டுப் புகைக்கிறார்கள். தேவர்கள், சூரியன், இந்திரன், வாலி முதலியவர்கள் பூசித்த தலம். கோஷ்ட பிராகாரத்தில் ஸ்ரீஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தியும், பிராகாரத்தில் தனிச் சன்னிதியில் உள்ள சுப்பிரமணியர் வில்லேந்திய வேலவராக முருகன் காட்சியளிக்கிறார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 51 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம். தியாகராஜ சுவாமிகள் வாழ்ந்து முக்தி பெற்ற தலம். தலபுராணம் ஸ்ரீ ஞானக் கூத்தரால் 12 சருக்கம் கொண்டு இறப்பட்டுள்ள பஞ்சநதிப்புராணம் இத்தலத் திற்கு உள்ளது.

70 மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. தினமும் 6 காலை பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் ஏழூர் விழாவும், பங்குனி மாதத்தில் நந்தி தேவர் திருமண விழா, ஆடிமாதத்தில் அம்பிகைக்கு திருவிழா முதலியன உற்சவங்கள் நடைபெறுகின்றன.

2. திருப்பழனம்

வையம் வந்து வணங்கி வலங்கொளும்
ஐய வைஅறி யார்சிலர் ஆதர்கள்
பைகொ ளரடர வார்த்த பழனன்பால்
பொய்யர் காலங்கள் போக்கிடு வார்களே.
-- திருநாவுக்கரசர்

திருவையாற்றுக்கு கிழக்கே 4 கி.மீ. காவிரி ஆற்றின் வடகரையில் இக்கோவில் ஏறத்தாழ 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆபத்சகாயர் கிழக்கு நோக்கியும் அம்மன் பெரிய நாயகி கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலதீர்த்தம் காவிரி. தலமரம்-வில்வம் மற்றும் கதலி.

அழகிய வயலும் வயல்சார்ந்த இடமும் சூழ்ந்த இடமாதலால் திருப்பழனம் என்று பெயர்.

ஒரு சமயம் அந்தணச் சிறுவன் ஒருவனை எமதருமன் துரத்திக் கொண்டு வரும்போது அச்சிறுவன் இத்தலத்து இறைவனைச் சரணடைந்தபோது இறைவன் அச்சிறுவனுக்கு காட்சியளித்து ஆபத்தில் உதவி செய்ததால் இறைவனுக்கு ஆபத்சகாயேசுரர் என்று பெயர்.

குபேரன், திருமால், திருமகள், தர்மசர்மா என்னும் அந்தணன் முதலியோர் பூசித்து பேறுபெற்ற தலம்.

இத்தலம் சப்தஸ்தான தலங்களில் இரண்டாவதாகும்.

பங்குனி, புரட்டாசி பௌர்ணமி களிலும் அதற்குமுன்பின் இரண்டு நாட்களி லும் நிலா சுவாமியின் மேல்படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 50 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

3. தில்லைஸ்தானம்

கொல்லி யான்குளிர் தூங்குகுற் றாலத்தான்
புல்லி யார்புரம் மூன்றெரி செய்தவன்
நெல்லி யானிலை யானநெய்த் தானனைச்
சொல்லி மெய்தொழு வார்சுடர் வானரே.
-- திருநாவுக்கரசர்

திருவையாற்றுக்கு மேற்கே 2 கி.மீ. திருநெய்த்தானம். இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 75 அடி உயர இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீகிருதபுரீஸ்வரர். அம்மன் பாலாம்பிகை. தீர்த்தம் காவிரி. தலமரம்-வில்வம்.

இத்தல இறைவனுக்கு நெய்யாடிப்பர் என்று பெயர். தினமும் நெய்யாலேலே அபிஷேகம் நடைபெறுகிறது.

இத்தலத்தை சரஸ்வதி பூஜித்த தலமாகும். தட்சிணாமூர்த்தி இத்தலத்தில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

சப்தஸ்தானத்தில் இத்தலம் ஏழாவது தலம். ஏழூர் பல்லக்குகளையும் ஒரே இடத்தில் கண்டுகளிக்கும் சிறப்புடைய தலம்.

ஒரு சிவனடியார் நாள்தோறும் இத்தல இறைவனுக்கு நெய்விளக்கிட்டுத் திரும்பும்போது பிராகாரத்தில் உள்ள கீரைகளைப் பறித்துக் கொண்டு போவது வழக்கம். காலம் செல்லச் செல்ல அச்சிவனடியாருக்கு வயது ஏறிக்கொண்டே சென்றது. இந்நிலையில் ஒருநாள் வழக்கம்போல் சுவாமிக்கு விளக்கிட்டு இறைவனை நோக்கி 'அப்பனே நான் வயதாகி மூப்படைந்துவிட்டேன்' பலகாலம் உனக்கு நெய்விளக்கேற்றி வந்தேன். எனவே எனக்கு நீ அருள் புரிய வேண்டும் என்று கேட்க. இறைவன் அசரீரியாக அன்பனே நீ எனக்கு நெய்யிட்டு விளக்கெரித்தன கைம்மாறாக. நீ நம்பிராகாரத்தில்லுள்ள கீரையை தினமும் பறித்துச் சென்றாய் ஆகவே உனக்கு வேறு அருள் புரிவது எப்படி என்று இறைவன் கேட்டதாக தலபுராணம் கூறுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 52 வது. திருஞானசம்பந்தர், அப்பர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் பெற்ற தலம். ஒட்டக்கூத்தர், புகழேந்தியும் பாடிய தலம்.

4. பெரும்புலியூர்

மண்ணுமோர் பாகம் உடையார் மாலுமோர் பாகம் உடையார்
விண்ணுமோர் பாகம் உடையார் வேதம் உடைய விமலர்
கண்ணுமோர் பாகம் உடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாகம் உடையார் பெரும்புலி யூர்பிரி யாரே

-- திருஞானசம்பந்தர்

திருவையாற்றுக்கு மேற்கில் 2 கி.மீ. திருப்பெரும்புலியூர். காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 1-51 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வியாக்ரபுரீசுவரர். அம்மன் சௌந்தரநாயகி. தீர்த்தம் காவிரி, கொள்ளிடம். தலமரம்-வில்வம்.

வியாக்ரபாதர் பூஜித்த காரணத்தால் இத்தலத்திற்கு பெரும்புலியூர் என்றும், இறைவனுக்கு வியாக்ரபுரீசுவரர் என்று பெயர். சுவாமி இருக்கும் இடத்திலுள்ள கற்கள் தாமரைபோல் வட்டமாய் அமைந்துள்ளன.

இத்தல முருகப்பெருமான் வள்ளி தெய்வயானையுடன் காட்சி தருகின்றார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 53 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

அனேக கல்வெட்டுக்கள் உள்ளன. இராஜராஜசோழன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன.

இக்கோவிலுக்கு மேற்கில் உள்ள ஸ்ரீ சுந்தரராஜபெருமாள் திருக்கோவில் உள்ளது. திருமழிசையாழ்வாரின் பெருமையை உலகினருக்கு அறிவித்த தலம்.

திருச்சிற்றம்பலம்

5. திருக்காட்டுப்பள்ளி

வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி யுண்பதும் வெண்டலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே

-- திருஞானசம்பந்தர்

திருவையாற்றுக்கு மேற்கே 15 கி.மீ. மேலைத்திருக்காட்டுப்பள்ளி. குடமுருட்டி யாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-06 ஏக்கர் நிலப்பரப்பளவில், 7 நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அக்கினீசுவரர். அம்மன் சௌந்தரநாயகி. தீர்த்தம் சூரிய தீர்த்தம், காவிரி, குடமுருட்டி நதி. தலமரம்-வன்னி.

அக்னிக்கு அருள் புரிந்த காரணத்தால் இறைவன் அக்னீச்சுவரன் எனப் பெயர் பெற்றார். அக்னி தீர்த்தம் இன்று கிணறு வடிவில் உள்ளது.

திருமால், பிரமன், சூரியன், அக்கினி, பகீரதன், உறையூர்ச் சோழனின் மூத்த மனைவி ஆகியோர் வழிபட்டு அருள் பெற்ற தலம்.

சிவபெருமானுக்குச் சொந்தமான உறையூர் நந்தவனத்தில் பணியாளன் கொய்துவந்த செவ்வந்தி மலர்களை மன்னன் தன் மனைவியர்க்கு அளித்தான்.

மூத்தமனைவி அம்மலரைச் சிவபெரு மானுக்கு அணிவித்து வந்தாள். இளையவள் தான் சூடி மகிழ்ந்தாள். உறையூர் மண்மாரியால் அழிந்தது. மூத்தவள் இருந்த திருக்காட்டுப்பள்ளி மட்டும் அழியாமல் பிழைத்தது எனக் கூறுவர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 9 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

இக்கோவில் முதலாம் ஆதித்த சோழன் காலத்துத் திருப்பணியைப் பெற்றது. சுந்தர பாண்டியன், கோனேரின்மை கொண்டான் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்விரு கல்வெட்டுக்களில் அம்மன் பெயர் அழகமர்மங்கை எனக் குறிக்கப்படுகிறது.

நான்கு கால நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தில் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளுவார். அக்கினி தீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிறு, மாசிமகம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் ஆகியநாட்களில் நீராடி வழிபடுவோர் எல்லா நலன்களும் எய்துவர்.

எண்வகைமணம்

எட்டுவகையான திருமண நிகழ்ச்சிகள் :

பிரம மணம், பிரசாபத்திய மணம், ஆரிட மணம், தெய்வ மணம், காந்தருவ மணம், ஆசுர மணம், இராக்கத மணம், பைசாச மணம்.

எண்வகை மாலை

போர்க்காலத்து அணியும் எட்டுவகை மலர்மாலை :

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.

சத்தவருக்கம்

நெல்லி, வெட்டிவேர், இலாமிச்சை வேர், சடாமாஞ்சில், இலவங்கம், ஏலம், திராட்சை என்னும் ஏழுவகை மருந்துப் பொருள்கள்.

சத்தகன்னிகை

அபிராமி, இந்திராணி, கௌமாரி, காளி, நாராயணி, மயேசுவரி, வராகி என்னும் ஏழு மாதர்கள்.

திருச்சிற்றம்பலம்

6. திருவாலம்பொழில்

உருமூன்றாய் உணர்வின்கண் ஒன்றானானை
ஓங்கார மெய்ப் பொருளை உடம்பினுள்ளால்
கருவீன்ற வெங்களவை யறிவான் தன்னைக்
காலனைத்தன் கழலடியால் காய்ந்துமாணிக்
கருளீன்ற ஆரமுதை அமரர் கோனை
யள்ளூறி யெம்பெருமான் என்பார்க் கென்றுந்
திருவீன்ற தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே.

-- திருநாவுக்கரசர்

திருவையாற்றுக்கு தென்மேற்கே 5கி.மீ. குடமுருட்டியாற்றின் கரையில் இக்கோவில் மேற்கு நோக்கிய சன்னிதியில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிக ஆத்மநாதேசுவரர். அம்மன் ஞானாம்பிகை தீர்த்தம் குடமுருட்டி. தலமரம்-ஆலமரம். அஷ்டவசுக்கள் பூசித்த தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 10 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. கல்வெட்டுக்கள் உள்ளன. இதில் இறைவர் பரம்பைக்குடி திருவாலம்பொழில் உடைய மகாதேவர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

7. மேலைத்திருப்பூந்துருத்தி

கொடிகொள் செல்வ விழாக்குண லைஅறாக்
கடிகொள் பூம்பொழிற் கச்சிஏ கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

-- திருநாவுக்கரசர்

திருக்கண்டியூர்க்கு மேற்கே 3கி.மீ. திருப்பூந்துருத்தி. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-19 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கியதும், 100 அடி உயர 7 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிக புஷ்பவனநாதர். அம்மன் அழகாலமர்ந்த நாயகி. தீர்த்தம் காசிபதீர்த்தம்.

சோழமன்னன் துருத்தியை வைத்துப் பூசிக்கச் செய்ததனால் திருப்பூந்துருத்தி என்று பெயர் வந்தது என்று கூறுவர். ஆற்றிடைக் குறையில் உள்ள ஊர்கள் துருத்தி என்று வழங்கப்பெறும். இத்தலம் காவிரி, குடமுருட்டி ஆறுகளுக்கு கிடையில் அன்று விளங்கியதால் துருத்தி எனப்பெற்றது என்றும் கூறலாம்.

காசிபமுனிவர் கங்கையை இத்தலத்தில் உள்ள கிணற்றில் வரவைத்து அந்நீரால் இறைவனுக்கு அபிஷேகம் செய்து அருள் பெற்றார் எனத் தல வரலாறு கூறுகிறது.

பிராகாரத்தில் திருஞானசம்பந்தருக்காக நந்தி விலகியுள்ளது. கோஷ்டப் பிராகாரத்தில் வீணாதட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், பிஷாடனரும் காட்சியளிக்கின்றார்.

திருஞானசம்பந்தர் அப்பரைக் காண இத்தலத்திற்கு வந்தபோது அப்பர் ஒருவரும் காணாதபடி அவருடைய சிவிகையைத் தாங்கிவந்தது இத்தலத்தில் நிகழ்ந்ததாகும். மேலும் அப்பர் அடிகளார் திருமடம் அமைத்து திருப்பணி செய்து வந்ததும் இத்தலமேயாகும்.

திருவையாற்றைத் தலமாகக் கொண்டு விளங்கும் சப்தஸ்தானத் தலங்களில் இத்தலம் ஆறாவது தலமாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 11 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், இராமலிங்க அடிகள் அருளிய பாடல்களும் இத்தலத்திற்கு உள்ளன.

சோழ அரசர் கால கல்வெட்டுக்கள் உள்ளன. சித்திரை மாதத்தில் ஏழூர் திருவிழா நடைபெறுகிறது.

8. திருக்கண்டியூர்

வானவர் தானவர் வைகல் மலர்கொணர்ந் திட்டிறைஞ்சித்
தானவர் மால்பிர மன்னறி யாத தகைமையினான்
ஆனவ னாதி புராணனன் றோடிய பன்றியெய்த
கானவ னைக்கண்டி யூரண்ட வாணர் தொழுகின்றதே.

-- திருநாவுக்கரசர்

திருவையாற்றுக்கு தெற்கே 2கி.மீ. திருக்கண்டியூர் வீரட்டம். குடமுருட்டி யாற்றின் தென்கரையில் இக்கோவில் மேற்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வீரட்டானேஸ்வரர். அம்மன் மங்கள நாயகி. தீர்த்தம் கபால, தக்ஷ, பிரம, பாதாளகங்கை முதலிய தீர்த்தங்கள். தலமரம் வில்வம்.

பார்வதிதேவியின் வேண்டுகோளுக்கு இணங்க சிவபெருமான் பிரமனின் ஐந்தாவது தலையைத் துண்டித்து எறிந்தமையால் இத்தலம் கண்டியூர் வீரட்டம் என ஆயிற்று. அட்ட வீரட்டத் தலங்களில் இத்தலம் ஒன்றாகும்.

திருவையாற்றைச் சூழ்ந்துள்ள ஏழூர் களில் சப்தஸ்தான தலங்களுள் இத்தலம் 5ஆவது தலம்.

மாசிமாதம் 13,14,15 தேதிகளில் சூரியக்கதிர்கள் இத்தல இறைவன்மேல் மாலை 5-45 முதல் 6-15 மணிவரை கதிர்கள் விழுவதைக் காணலாம்.

சாதாதபர் பூசித்த தலம். பிரம்மா, சரஸ்வதி திருவுருவங்கள் பிராகாரத்தில் உள்ளன.

அர்த்தமண்டபத்தில் வாயிலுக்கு வடபுறத்தில் சப்தஸ்தான தலங்களை குறிக்கும் ஏழு லிங்களும், பஞ்சபூதத் தலங்களைக் குறிக்கும் 5 லிங்கங்களும் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 12 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்ற தலம்.

இத்தல முருகப் பெருமான் வலக்கையில் ஜபமாலையும், இடக்கரத்தில் வஜ்ரசக்தியும் கொண்டு காட்சியளிக்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம்.

இத்தலத்தில் அருகில் ஸ்ரீஹரசாப விமோசனப் பெருமாள் கோவிலும், பிரமன் கோவிலும் தனித்தனியாக அமைந்துள்ளது.

வைகாசி விசாகத்தில் 10 நாட்கள் பிரமோற்சவமும், சித்திரையில் சப்தஸ்தான ஏழூர்விழாவும் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

9. திருச்சோற்றுத்துறை

அழல்நீர் ஒழுகி அனைய சடையும்
உழையீர் உரியும் உடையான் இடமாம்
கழைநீர் முத்துங் கனகக் குவையும்
கழல்நீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே.

-- சுந்தரர்.

திருக்கண்டியூர்க்கு கிழக்கே 4கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஓதனவனேசுவரர். அம்மன் அன்னபூரணி. தீர்த்தம்-காவிரி, சூரிய தீர்த்தம்.

இத்தல இறைவனை வழிபடும் அடியார்களின் பசிப்பிணி தீர இறைவன் சோறு வழங்குபவன் என்னும் பொருளைத் தருவதோடு, உயிரைப் பற்றிய பிறவிப் பிணி தீர வீடுபேறு வழங்கியருள்பவன் என்னும் பொருளைத் தருவதாகவும் உள்ளது. திருவையாற்றைத் தலைமைத் தலமாகக் கொண்டு நிகழும் சப்தஸ்தானத் தலங்களில் மூன்றாவது தலம். இந்திரன், சூரியன், கௌதமர் முதலியோர் வழிபட்ட தலம். சிவபக்தனான அருளாளன் என்னும் மறையவன் பசியால் வருந்துகின்றபோது பெருமான் அம்மறையவனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத அட்சய பாத்திரம் வழங்கி அவனது பசிப்பிணியை நீக்கியருளினார் எனத் தலபுராணம் கூறுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 13 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பதிகங்கள் பெற்றது.

சோழர்காலக் கல்வெட்டுக்கள் இத்தலத்தில் பல உள்ளன. முதல் ஆதித்தன் காலத்தில் திருப்பணிகளைப் பெற்றது. பராந்தகன், இராஜராஜன், இராஜகேசரி வர்மன், கோனேரின்மை கொண்டான், குலோத்துங்கன் முதலியோர் காலக் கல்வெட்டுக்கள் இங்குள்ளன.

நான்கு கால பூஜை. சித்திரையில் சப்தஸ்தானவிழா நடைபெறுகிறது.

10. திங்களூர்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே.

-- திருநாவுக்கரசர்.

திருவையாற்றுக்கு கிழக்கே 2 கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் பெரிய நாயகி. கோவிலுக்கு எதிரில் சந்திரபுஷ்கரணி.

நவக்கிரகங்களில் திங்கள் வழிபட்ட தலமாதலின் திங்களூர் எனப்பெயர் பெற்றது.

திருநாவுக்கரசரைத் தன்தெய்வமாக மதித்துப் போற்றிய அப்பூதி அடிகளார் அவதரித்த தலம். அப்பூதி அடிகளாரின் மூத்தமகன் அரவு தீண்டி இறந்தபோது, திருநாவுக்கரசர் இத்தலத்தில் உள்ள இறைவனிடம் 'ஒன்று கொலாம்' என்னும் பதிகம் பாடி உயிர்ப்பித்தருளிய தலம். திருநாவுக்கரசர் பெயரில் அப்பூதி அடிகளார் அமைத்த தண்ணீர் பந்தல் இன்றும் நடைமுறையில் உள்ளது.

இத்தலத்தில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று காலை உதயாதி 6-00 மணிக்கு சூரிய ஒளி இறைவன் மீது படுகிறது. மறுதினம் பௌர்ணமியில் மாலை 6-30 மணிக்கு சந்திரன் ஒளி சிவலிங்கத்தில் மேல் படுவதால் சந்திரபூஜையும் நடை பெறுகிறது.

11. கடுவேலி

திருவையாற்றுக்கு வடக்கே 3 கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் இக் கோவிலில் உள்ள மூலவர் ஆகாசபுரீஸ் வரர்.

12. பெரமூர்

திருவையாற்றுக்கு வடகிழக்கே 4 கி.மீ. காவிரியாற்றின் வடபகுதியில் இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர்.

13. கார்க்குடி

திருவையாற்றுக்கு கிழக்கே 1 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

14. மரூர்

திருவையாற்றுக்கு மேற்கே 7 கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

15. சாத்தனூர்

திருவையாற்றுக்கு மேற்கே 8 கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் விஸ்வநாதர்..

16. மகாராஜபுரம்

திருவையாற்றுக்கு கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 59 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீலநாதர்.

17. வானராங்குடி

திருக்காட்டுப்பள்ளிக்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

18. அலமேலுபுரம்

திருக்காட்டுப்பள்ளிக்கு வடமேற்கே 2கி.மீ. இக்கோவில் புதுச்சத்திரத்தில் 52 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

19. விஷ்ணாம்பேட்டை

திருக்காட்டுப்பள்ளிக்கு வடக்கே 1கி.மீ. இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

20. கோவிலடி

திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 7கி.மீ. திருப்பேர்நகர். காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் .35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திவ்யஞானேஸ் வரர். அருகில் அப்பக்குடத்தான் பெருமாள் கோவில் உள்ளது.

21. தோகூர்

கோவிலடிக்கு மேற்கே 7 கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாவிளங்கேஸ்வரர்.

22. அகரப்பேட்டை

திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேசுவரர்.

23. ராஜகிரி

திருக்காட்டுப்பள்ளிக்கு தென்மேற்கே 3கி.மீ. அடயார் என்னுமிடத்தில் விஜய விடங்கேஸ்வரர் திருக்கோவிலும், உஜ்ஜீ னியில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உய்யக்கொண்டீஸ்வரர் திருக் கோவிலும் உள்ளது.

24. ரெங்கநாதபுரம்

திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 2கி.மீ. இக்கோவில் 2-06 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருக்காணீஸ்வரர்.

25. நேமம்

திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 2கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஐராவதேசுவரர்.

26. பழமானேரி

திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 1கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சுந்தரேசுவரர்.

27. ஓம்பத்துவேலி

திருக்காட்டுப்பள்ளிக்கு கிழக்கே 1கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வான்மீகிநாதர்.

28. மன்னார்சமுத்திரம்

திருக்காட்டுப்பள்ளிக்கு கிழக்கே 3கி.மீ. இக்கோவில் செந்தலையில் 1-55 ஏக்கர் நிலப்பரப்பளவில் 7 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக மீனாட்சிசுந்தரரேஸ்வரர். 40 கல்வெட்டுக் கள் உள்ளன. வைகாசி பிரமோற்சவம்.

29. கோனேரிராஜபுரம்

திருக்கண்டியூர்க்கு மேற்கே 9கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரரேஸ்வரர்.

30. கருப்பூர்

திருக்கண்டியூர்க்கு மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஜயவிடங்கேஸ்வரர்.

31. நடுக்காவேரி

திருக்கண்டியூர்க்கு மேற்கே 6கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அரிபிரம்மேஸ்வரர்.

32. கல்யாணபுரம்

திருவையாற்றுக்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். வீரசிங்கம் பேட்டையில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தியநாதர்.

33. வெள்ளாம்பெரம்பூர்

திருக்கண்டியூர்க்கு மேற்கே 6கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பராஸ்வரர்.

34. வரகூர்

திருக்காட்டுப்பள்ளிக்கு கிழக்கே 4கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் கைலாசநாதர்.

35. வெங்கிடசமுத்திரம்

திருக்காட்டுப்பள்ளிக்கு தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

36. தீட்சசமுத்திரம்

திருக்காட்டுப்பள்ளிக்கு தெற்கே 1கி.மீ. இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

37. மேகளத்தூர்

திருக்காட்டுப்பள்ளிக்கு தென்மேற்கே 5கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நேத்திரபதீஸ்வரர்.

38. அடஞ்சியூர்

திருக்காட்டுப்பள்ளிக்கு தென்கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 43 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் திருவன்னாதீஸ்வரர்.

39. கலுமங்கலம்


திருக்காட்டுப்பள்ளிக்கு தென்கிழக்கே 6கி.மீ. வெண்ணாற்றின் வடகரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அக்னீஸ்வரர்.

40. நாகத்தி

திருக்கண்டியூர்க்கு தென்மேற்கே 4கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பக்தீஸ்வரர்.

தஞ்சாவூர் வட்டம்

(தஞ்சாவூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. தஞ்சாவூர்

உல்கெலாந் தொழுவந் தெழுகதிர்ப் பரிதி ஒன்றுநூ றாயிக்ர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்பச்சோ அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம் பருவரை ஞாங்கரவெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே

-- திருவிசைப்பா -கருவூர்த்தேவர்



திருச்சிராப்பள்ளிக்கு கிழக்கே 55 கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக்கோவில் 7.34 ஏக்கர் நிலப்பரப்பளவில், 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரத்துடன் மூலவர் அருள்மிகு பிரகதீச்வரர், பெருவுடையார் கிழக்கு நோக்கியுள்ளார். அம்மன் பெரியநாயகி.

முன்பு இத்தலத்தில் தஞ்சாசுரன் என்னும் அசுரன் வாழ்ந்ததாகவும், அவனை தேவி வதைத்த பிறகு அவ்வசுரனின் வேண்டுகோள்படியே அவன் பெயராலேயே தஞ்சாவூர் என அழைக்கப்படும் தலம்.

இக்கோவில் நான்கு பக்கமும் அகழி சூழ்ந்த கோட்டைச் சுவர்களுக்கு உள்ளே இரண்டு அடுக்கு திருச்சுற்றுடன், கல்காரமாக எழுப்பியுள்ள வான்முட்டும் வனப்புடைய மூலவர் விமானம் 216 அடி உயரம், உச்சியில் சதுரமான கல் 80 டன் எடையுள்ளது. கலசம் 12 அடி உயரம் கொண்டது. இவ்விமானக் கோபுரத்தின் நிழல் தரையில் விழுவதில்லை. சன்னிதிக்கு எதிரேயுள்ள நந்தி 12 அடி உயரம் 16 அடி நீளம், 40 டன் எடை கொண்ட ஒரே கல்லினால் ஆனது.

இத்தல மூலவர் 23 அடி உயரம் கொண்ட மாபெரும் லிங்கம். 54அடி சுற்றளவுள்ள ஆவுடையாரின் மேல் 13அடி உயரமுள்ள லிங்கப் பெருந்திருவுரு நிலைநாட்டப் பெற்றுள்ளது. இப்பெருந் திருவுரு ஒரே கல்லால் ஆனதென்றும், நர்மதை நதிதீர்த்தத்திலிருந்து இராஜ ராஜனால் கொண்டுவரப்பட்டு கட்டப் பெற்றது.

உள்பிராகாரத்தில் இரட்டை விநாயகர், துர்க்கை, சனீஸ்வரர், கருவூர் தேவர், சண்முகர், சண்டிகேசுவரர், நடராஜர், 1008 சிவலிங்கம், நந்தி முதலிய சன்னிதிகள் அமைந்துள்ளன.

இக்கோவில் தி.பி.1033ல் மாமன்னன் இராஜராஜன் மாபெரும் திருப்பணியை தொடங்கி பல்லாயிரக்கணக்கான மனித ஆற்றலைப் பயன்படுத்தி ஆறு ஆண்டு களில் இக்கோவில் நிறைவு செய்துள்ளதாக வரலாறு.

விமானத்தின் மேலறைத் தளத்தில் சிவபெருமானின் 108 நாட்டிய கரணச் சிற்பங்கள் நான்கு புறமும் அமைக்கத் திட்டமிட்டு 81 மட்டுமே பூர்த்தியாகியுள்ளன.

கருவறைச் சுற்றியுள்ள முதல்தள அறையில் சோழர் கால ஓவியங்களும், நாயக்கர் கால ஓவியங்களும் வரையப் பட்டுள்ளன.

ஞானச்செல்வர் கருவூர்த் தேவர் இராஜராஜனின் குருதேவராக இருந்து

திருக்கோவில் திருப்பணிக்கு வழிகாட்டியவர்.

இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் உள்ளது.

இவ்வூரின் மேலராஜ வீதியில் தஞ்சை பங்காரு காமாக்ஷியம்மன் கோவிலும், வெண்ணாற்றின் கரையில் தஞ்சையாளிநகர் என்றும் மங்களாசாசனம் பெற்ற பெருமாள் கோவிலும் உள்ளது.

அ. அளகை

தஞ்சாவூரிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் 3 கி.மீ. தஞ்சை, அளகை, அளகாபுரி. வெண்ணாற்றின் கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தஞ்சபுரீஸ்வரர் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் ஆனந்தவல்லி. தீர்த்தம் வெண்ணாறு சிவகங்கை தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரங்களில் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், குபேரன், திருநாவுக்கரசர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

குபேரன் இவ்வூரில் ஒரு வைசியனாக அவதரித்து இங்குள்ள சிவாலயங்களைப் பரிபாலித்து வந்தான் என்றும் அதனால் இத்தலத்திற்கு அளகை என்றும் பெயர் பெற்றதென்றும் தலபுராணம் கூறுகிறது. அளகை என்பது குலோத்துங்கன் கோவையிலும், சோழ மண்டல சதகத்திலும், பொய்யாமொழியார் பாடலிலும் வந்துள்ளது.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. மராட்டிய அரசின் கட்டளையின் பேரில் நாகராஜ ராமராஜி என்பவரால் திருப்பணி செய்யப் பெற்றதாக குறிக்கிறது.

ஆ. கருந்திட்டைக்குடி

தஞ்சைநகரின் வடஎல்லையில் இத்தலம் உள்ளது. கருந்திட்டாங்குடி, கரந்தை என வழங்கும் இவ்வூரில் உள்ள அருள்மிகு வசிட்டேசுவரர் ஆலயமே திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தில் இடம் பெறுவது. சோழர் காலத்திருப்பணியுடன் சிற்பச்செறிவுடன் விளங்குகிறது. வசிட்டர் பூசித்த தலம். இத்தல அம்மன் பெரியநாயகி. தலமரம்-வன்னி. கல்வெட்டுக்களில் கருவிட்டக்குடி மகாதேவர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

2. திருவேதிகுடி

கையது காலெரி நாகங் கனல்விடு சூலமது
வெய்யது வேலைநஞ் சுண்டவிரிசடை விண்ணவர்கோன்
செய்யினில் நீல மணங்கம ழுந்திரு வேதிகுடி
ஐயனை ஆரா அமுதினை நாமடைந் தாடுதுமே

-- திருநாவுக்கரசர்

தஞ்சாவூருக்கு வடக்கே 7 கி.மீ. வெட்டாற்றின் வடகரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வேதபுரீஸ்வரர். அம்மன் மங்கையர்கரசி. தீர்த்தம் வைத தீர்த்தம் கோவிலுக்கு எதிரில் உள்ளது. தலமரம்-வில்வம்.

பிரமன் பூசித்த காரணத்தால் வேதிகுடி எனப்பெயர் பெற்றது.

உள்பிராகாரத்தில் செவிசாய்ந்த விநாயகர், 108 சிவலிங்கங்கள், தட்சிணா

மூர்த்தி, அர்த்தநாரீசுவரர், துர்க்கை, முருகன், மகாலஷ்மி, நடராஜர், சப்தஸ்தான லிங்கங்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

ஐயாறப்பர் சித்திரை மாதத்தில் எழுந்தருளும் ஏழூர்ப்பதிகளுள் இத்தலம் நான்காவதாகும்.

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற காவிரிக்கு தென்கரையில் இத்தலம் 14 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

திருஞானசம்பந்தர் பாடியருளிய திருப்பதிகத்துள் கன்னிப்பெண்கள் திருமணம் கொள்வதை இத்தலப் பெருமைகள் ஒன்றாக ஓதியிருத்தலின் இத்தல இறைவனை வழிபடும் கன்னிப் பெண்கள் விரைவில் திருமணம் பெறுவர் என்பதை அறியலாம்.

இராஜகேசரிவர்மன், கோப்பரகேசரி வர்மன் இவர்கள் காலங்களில் பொறிக்கப் பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவன் பெயர் திருவேதிகுடி மகாதேவர் என்றும், பரகேசரி சதுர்வேதிமங்கலத்து மகாதேவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

அண்டுதோறும் பங்குனி மாதத்தில் 13,14,15 தேதிகளில் இங்கு சூரிய பூசை நிகழ்கிறது.

3. திட்டை

முன்னைநான் மறையவை முறை
முறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ நின்றவன்
தன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல் தென்குடித்
திட்டையே

-- திருஞானசம்பந்தர்

தஞ்சாவூருக்கு வடக்கே 10கி.மீ. தென்குடித்திட்டை. வெட்டாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 73 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வசிட்டேசுவரர், பசுபதீசுவரர். அம்மன் உலகநாயகி. தீர்த்தம்-சக்கர, பசு, காவிரி. வெட்டாறு, வெண்ணாறுகளுக்கு நடுவில் இத்தலம் திட்டாக இருப்பதால் திட்டை என்று பெயர்.

காமதேனு, திருமால், வசிட்டர், கௌதமர், ஆதிசேடன் முதலியோர் பூசித்த தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 15 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

4. திருக்கானூர்பட்டி

திருவின் நாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னாயுல கத்தி னுயிர்க்கெலாம்
கருவ னாகி முளைத்தவன் கானூரில்
பரம னாய பரஞ்சுடர் காண்மினே.

-- திருநாவுக்கரசர்

தஞ்சாவூருக்கு தென்மேற்கே 12கி.மீ. திருக்கானூர். இக்கோவில் 55 செண்ட் நிலப்பரப்பளவில் 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் சுயம்புலிங்கமாக அருள்மிகு செம்மேனிநாதர், கரும்பேசுவரர். அம்மன் சிவயோகநாயகி. தீர்த்தம் வேததீர்த்தம். தலமரம்-பனை.

அம்பிகை இத்தலத்தில் சிவயோகத்தில் அமர்ந்திருந்தபோது இறைவன் அனற்பிழம் பாகத் தோன்றிக் காட்சி தந்தருளினார். அதனால் சுவாமிக்கு செம்மேனிநாதர் என்றும், அம்பிகை சிவயோக நாயகி என்றும் பெயர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 56 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

இத்தலம் வடகரை ராஜராஜ வளநாட்டுப் பொய்கையூர் நாட்டு பணி

பதிமங்கலமாகிய கரிகால சோழ சதுர்வேதி மங்கலத்துத் திருக்கானூர் என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

5. பூதலூர்

தஞ்சாவூர்க்கு மேற்கே 19 கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

6. கோவில்பத்து

தஞ்சாவூர்க்கு மேற்கே 18 கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-09 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆபத்சகாயர்.

7. சித்திரக்குடி

பூதலூர்க்கு கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவானாதீஸ்வரர்.

8. பெரம்பூர்

தஞ்சாவூர்க்கு மேற்கே 10 கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

9. தண்டங்கோரை

தஞ்சாவூர்க்கு வடக்கே 10 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

10. மாத்தூர்

தஞ்சாவூர்க்கு வடக்கே 12 கி.மீ. குடமுருட்டியாற்றின் தென்கரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஒதபுரீஸ்வரர்.

11. நல்லிச்சேரி

தஞ்சாவூர்க்கு வடக்கே 11 கி.மீ. இக்கோவில் 76 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜம்புநாதர்.

12. தோட்டக்காடு

தஞ்சாவூர்க்கு வடக்கே 9கி.மீ. வெட்டாற்றின் தென்கரையில் இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர்.

13. கடகடப்பை

தஞ்சாவூர்க்கு வடகிழக்கே 4 கி.மீ. வெண்ணாற்றின் தென்கரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராஜேஸ்வரர்.

14. சொரக்குடிபட்டி

பூதலூர்க்கு மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தான்தோன்றீசுவரர்.

15. புதுக்குடிவடபாதி

பூதலூர்க்கு தென்மேற்கே 16 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருச்சாதீஸ்வரர்.

16. சூரக்கோட்டை

தஞ்சாவூர்க்கு தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ரத்தினேஸ்வரர்.

17. வாழமிரான்கோட்டை

தஞ்சாவூர்க்கு தென்கிழக்கே 9 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரேசுவரர்.


18. குருங்குளம் கீழ்பாதி

தஞ்சாவூர்க்கு தெற்கே 17 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் செஞ்சடையப்பர்.

திருச்சிற்றம்பலம்

ஒரத்தநாடு வட்டம்

(தஞ்சாவூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பருத்தியப்பர் கோவில்

விண்கொண்ட தூமதி சூடிநீடு விரிபுன் சடை தாழப்
பெண்கொண்ட மார்பில்வெண் ணீறுபூசிப் பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலொ டேர் கவர்ந்த கள்வர்க் கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும் பரிதிந் நியமமே

-- திருஞானசம்பந்தர்

ஒரத்தநாடுக்கு நேர் வடக்கே 4 கி.மீ. திருப்பரிதிநியமம், பரிதியப்பர் கோவில், கீழ்வேங்கி நாடு. இக்கோவில் 93 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பாஸ்கரேசுவரர், பரிதியப்பர். அம்மன் மங்களநாயகி. தீர்த்தம் சூரிய தீர்த்தம் கோவிலுக்கு முன்னால் உள்ளது. தலமரம் அரசு. கோவிலின் பின்னே சந்திர,வேத தீர்த்தங்கள் உள்ளன.

உள்பிராகாரத்தில் சூரியன், கஜசம்கார மூர்த்தி, முருகன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சூரியன் தனக்கு இருந்த குன்மநோய் தீர இத்தலத்திற்கு வந்து தீர்த்தம் உருவாக்கி அதில் நீராடி பெருமானை வழிபட்டு நோய் நீங்கப் பெற்றான் எனத் தலபுராணம் கூறுகிறது. இதனால் இங்குள்ள மூர்த்திக்குப் பரிதீசர், பரிதியப்பர், பாஸ்கரேசுவரர் என்ற பெயர்களால் வழங்கப்படுகிறார். சிவமூர்த்தியின் திருமுன் சூரியன் வழிபடும் நிலையில் திருவுருவம் உள்ளது. பங்குனி மாதத்தில் 17,18,19ஆம் தேதிகளில் ஆண்டுதோறும் சூரியபூசை நிகழ்கிறது.

பிரமசர்மா, அவர் மவைி சுசீலை ஆகியோர் தாங்கள் செய்த பாவத்தால் பருந்தும் கிளியுமாகச் சபிக்கப்பெற்று இத்தலத்திற்கு வந்து பழைய வடிவம் பெற்று முத்தியடைந்த தலம்.

சிபிசக்கரவர்த்தியின் குதிரைப் பாகன் புல் செதுக்கியபோது இரும்புக்களைக் கொட்டுபட்டு இரத்தம் பெருகிய நிலையில் சிவலிங்கம் வெளிப்பட்டதை அறிந்த மன்னன் ஆலயம் எடுத்து இலிங்கத்தை ஆராதித்தான் எனக் கூறப்படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இக்கோவில் 101 வது தலம். திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய தேவாரப் பாடல்களும் உள்ளன.

பங்குனி உத்திரத்தில் இத்தலத்தில் சிறப்பு உற்சவம் நடைபெறுகிறது.

2. ஒரத்தநாடு

தஞ்சாவூர்க்கு தென்கிழக்கே 22கி.மீ. முக்தாம்பாள்புரம். இக்கோவில் 1-82 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 35அடி உயர இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி. நான்கு கால பூஜை. வைகாசி விசாகத்தன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது. தஞ்சை சரபோஜி மன்னர்களால் இக்கோவில் கட்டப்பெற்றது.

3. இராகவாம்பாள்புரம்

ஒரத்தநாடுக்கு வடக்கே 12கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வெண்ணிரசுவாமி திருக்கோவில். 1100 வருட முற்பட்ட கோவில்.

4. கண்ணுந்தங்குடி

ஒரத்தநாடுக்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேசுவரர். மேலையூரில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் காசிவிஸ்வநாதர்.

5. தென்மைநாடு

ஒரத்தநாடுக்கு வடமேற்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

6. ஈச்சங்கோட்டை

ஒரத்தநாடுக்கு வடகிழக்கே 12கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஜம்புகேசுவரர்.

7. வன்னிப்பட்டு

ஒரத்தநாடுக்கு கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்பலவாணர்.

8. தெக்கூர்

ஒரத்தநாடுக்கு தென்மேற்கே 9கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

9. கண்ணுகுடி

ஒரத்தநாடுக்கு தென்கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாதர்.

10. வடசேரி

ஒரத்தநாடுக்கு தென்கிழக்கே 22கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு புண்யகோட்டீஸ்வரர்.

11. தளிகைவிடுதி


ஒரத்தநாடுக்கு தெற்கே 16கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக திருப்பனங்காடுடையார். அம்மன் ஆனந்தவல்லி. வைகாசி விசாகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது.

12. காவாலிப்பட்டி

ஒரத்தநாடுக்கு தென்மேற்கே 18கி.மீ. திருவோணம். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாத சுவாமி. இராஜேந்திர சோழமன்னனால் இக்கோவில் கட்டப் பெற்றதாக இங்குள்ள கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.



பட்டுக்கோட்டை வட்டம்
(தஞ்சாவூர் மாவட்டம்)



1. பட்டுக்கோட்டை

தஞ்சாவூருக்கு தென்கிழக்கே 47கி.மீ. இவ்வூரில் மூன்று கோவில்கள் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர் கோவிலும், 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர் கோவிலும், 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர் கோவிலும் உள்ளன.

2. கீழக்குறிச்சி

மதுக்கூர்க்கு வடக்கே 6கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

3. அண்டமி

மதுக்கூர்க்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேசர்.

4. முசிறி

பட்டுக்கோட்டைக்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். முசுகுந்த சக்ரவர்த்தி வழிபட்ட தலம்.

5. கரம்பயம்

பட்டுக்கோட்டைக்கு வடக்கே 9கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

6. செண்டங்காடு

பட்டுக்கோட்டைக்கு வடக்கே 7கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

7. மதுக்கூர்

பட்டுக்கோட்டைக்கு வடகிழக்கே 11கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தகடேஸ்வரர்.

8. காடந்தங்குடி

பட்டுக்கோட்டைக்கு வடகிழக்கே 16கி.மீ. இக்கோவில் 4-02 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக பிரகதீஸ்வரர்.

9. குறிச்சி

பட்டுக்கோட்டைக்கு தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

10. அத்திவெட்டி

தாமரங்கோட்டைக்கு வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சௌந்தரேஸ்வரர். மற்றொரு கோவில் வைர்வஸ்வாமி.

11. துவரங்குறிச்சி

பட்டுக்கோட்டைக்கு கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 39 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

12. திருச்சிற்றம்பலம்

பட்டுக்கோட்டைக்கு தென்மேற்கே 15கி.மீ. திருச்சிற்றேமம். இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு புராதனவனேஸ்வரர். அம்மன் பெரியநாயகி. விநாயகர் பூவிழுங்கி விநாயகர்.

இத்தல விநாயகரைப் பிரார்த்தனை செய்வோர் அவரது இரு காதுகளிலும் பூக்களைச் செருகிவேண்டு கின்றனர். பிரார்த்தனை நிறைவேறுமாயின் அவரது செவித் துளைகளில் செருகப் பெற்ற பூக்கள் உள்ளே இழுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

இங்குள்ள நடராஜர் அம்பலத்தாடுவார்.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்று திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளனர்.

கல்வெட்டுக்களில் சோழர், பாண்டியர், விஜயநகர் காலத்தைச் சேர்ந்தது. நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

13. சின்ன ஆவுடையார் கோவில்

அதிராம்பட்டிணத்திலிருந்து மேற்கே 5கி.மீ. அக்னியாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆத்மநாதர்.

14. மகிழங்கோட்டை

அதிராம்பட்டிணத்திற்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகிழவனநாதர்.

15. அதிராம்பட்டிணம்

பட்டுக்கோட்டைக்கு தென்கிழக்கே 13கி.மீ. அதிவீரஇராமபட்டினம், திருஆதிரையான்பட்டிணம். இக்கோவில் 36 செண்ட் நிலப்பரப்பளவில் 25அடி உயர இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் அபயவரதீஸ்வரர். அம்மன் சுந்தரநாயகி.

பாண்டிய மன்னன் அதிவீரராம பாண்டியன் பெயரால் இவ்வூர் தோன்றியது. கல்வெட்டுக்களில் வீரசோழபட்டினம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்று. சுந்தரர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார். நான்கு கால பூஜை. ஆடி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

16. தாமரங்கோட்டை

பட்டுக்கோட்டைக்கு கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் 42அடி உயர 3 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கண்டீஸ்வரர். அம்மன் தர்மசவர்த்தினி.

இராமர் வணங்கிய தலம். 5 கால பூஜை. வைகாசி விசாகத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

17. பரக்கலக்கோட்டை

தாமரங்கோட்டைக்கு கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மத்யபுரீஸ்வரர்.

18. தம்பிக்கோட்டை வடகாடு

தாமரங்கோட்டைக்கு கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர்.


19. ராஜாமடம்

அதிராம்பட்டிணத்திற்கு தென்மேற்கே 4கி.மீ. அக்னியாற்றின் கரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

திருச்சிற்றம்பலம்

பேராவூரணி வட்டம்

(தஞ்சாவூர் மாவட்டம்)



1. மருங்கப்பள்ளம்

பேராவூரணியிலிருந்து கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஒஷதீஸ்வரர்.

2. பின்னவாசல்

பேராவூரணியிலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவிலிலுள்ள மூலவர் அகத்தீஸ்வரர்.

3. ஊமத்தநாடு

பேராவூரணியிலிருந்து தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாடலீஸ்வரர்.

4. மணக்காடு

பேராவூரணியிலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

5. பெருமகவூர்

பேராவூரணியிலிருந்து தெற்கே 11கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

6. விளங்குளம்

பேராவூரணியிலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அட்சயபுரீஸ்வரர்.

ஆயுதங்கள் - முத்திரைகள் - ஆசனங்கள்

1. மான் 2. மழு 3. பரசு 4.சூலம் 5. வஜ்ரம் 6. கேடயம் 7. சர்ப்பம் 8. பாசம் 9. தநுசு 10.அம்பு 11. அங்குசம் 12. கமண்டலம் 13. அட்சமாலை 14. கமலம் 15. சூரிகை 16. மணி 17. நீலோற்பலம் 18. தண்டம் 19. சத்தி 20. பாலம் 21. பிண்டிபாலம் 22.கட்கம் 23. அஞ்சலி 24. அபயம் 25.விரதம் 26. சூசி 27. விஸ்மயம் 28.கடகம் 29. கடி 30 கோசம் 31.உத்குடிகாசனம் 32. சுகாசனம் 33.சம்மீலினி 34. குண்டம் 35. சக்கரம் 36.சிம்மமுகி 37. கோமுகம் 38. ப்ராந்நாம 39. உன்னமரும் 40. பிம்பம் 41. பாசுபதம் 42. சுத்தம் 43. த்யாகம் 44. சாதனி 45.ப்ரசாதனீ 46. உக்ர முத்திரை 47.குண்டலி 48. வ்யூகம் 49. த்ரிமுகம் 50.அஸிவல்லி 51. யோகம் 52. ப்ரான்ஜலி 53. பேதம் 54. சம்மோகனம் 55. பாணம் 56.தனுஸ் 57. தூணிரம்.


சிவனுடைய முத்திரைகள் : லிங்கம், யோனி, திரிசூலம், அட்சமாலா, அபயம், மிருகம், கட்வாங்கம், கபாலம், டமருகம்.

சக்தி முத்திரைகள் : பாசம், அங்குசம், வரா, அபீதி, தனுஸ், பாணம், கட்கம், கர்மமுத்திரை, முசலம், துர்க்கை, சக்கரம், லக்ஷ்மி, வீணா, புஸ்தகமுத்ரா, வியாக்யானா, காலினி, கும்பமுத்ரா, தந்தம், பிரார்த்தனா, அன்ஜலி, காலகர்கணிகா, விஸ்மயம், நாதமுத்ரா, பிந்து, சம்ஹாரம், மத்ஸ்யம், கூர்மம், முண்டம், லேலிஹான, மகாயோநி, தூமகேது, திரிகண்டா, சம்ரோக்ஷபகாரணி, வித்ராவினி, ஆகர்ஷணி, வஸ்யகரி, உன்மாதினி, மகாங்குசா, கேசரி, பீஜம், யோனிமுத்ரா, ஸௌபாக்யதாயினி, பூதனி.

கணேச முத்திரைகள் : சப்தமுத்திரை, தந்தம், பாசம், அங்குசம், விக்ன முத்திரை, பரசு, வட்டு; பூஜபூர முத்திரை.

திருச்சிற்றம்பலம்

ஆவுடையார்கோவில் வட்டம்
(புதுக்கோட்டை மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திருப்புனவாயில்

சித்தம் நீதினை என்னொடு சூளறும் வைகலும்
மத்த யானையின் ஈருரி போர்த்த மணாளனூர்
பத்தர் தாம்பலர் பாடிநின் றாடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்ட றாப்புன வாயிலே

-- சுந்தரர்.



உமையவள் காளி உருவம் கொண்டு குடவரையில் எழுந்தருளி நாடுவோர்க்கு நல்வரமளிக்கும் சிறப்பு இத்தலத்திற்குண்டு. மூன்றுமுழம் ஒரு சுற்று, முப்பது முழம் ஒரு சுற்று என்னும் பெருமைக்குரிய பெரிய லிங்க உருவமும், இராஜகோபுரத்தைவிட பெரிய அழகுமிக்க விமானமும் இத்தலத்திற்கு உண்டு.

பாண்டிய நாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களில் இத்தலம் 7 வது. திருஞானசபம்பந்தர், சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது. இத்தல முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். திருவாரூர் தியாகராஜ கவிராஜ தேசிகர் 22 சருக்கமும், திருவிருத்தம் 928 கொண்ட தலபுராணம் இயற்றியுள்ளார்.

பாண்டிய நாட்டில் உள்ள பதிநான்கு தலங்களின் மூர்த்திகளும் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்றனர்.

இக்கோவிலில் பாண்டியர்களின் கோனேரின்மை கொண்டான் திரிபுவனச் சக்கரவர்த்தி, விக்கிரபாண்டிய தேவன், கோச்சடையபன்மரான வீரபாண்டிய தேவன் மற்றும் சுந்தரபாண்டிய தேவன், இவர்களின் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக் கள் உள்ளன. இறைவர் பெயர் திருப் புனவாசலுடைய நாயனார் என்றும், இவ்வூரின் பெயர் முத்தூர்க் கூற்றத்துக்கு உட்பட்டிருந்தது எனக் குறிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் 6 கால பூஜை நடைபெறுகிறது. கார்த்திகை சோமவாரத்தில் 1008 சங்காபிஷேகமும், வைகாசி மாதத்தில் 10 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

ஆவுடையார்கோவிலிருந்து தெற்கே 25கி.மீ. திருப்புனவாசல், பழம்பதி, விருத்தபதி, புன்னைவனம். பாம்பாற்றின் வடகரையில் இக்கோவில் 2-83 ஏக்கர் நிலப்பரப்பளவில், இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பழம்பதிநாதர். அம்மன் கச்சணிமுலையம்மை. தீர்த்தம் லக்ஷ்மி, பிரம தீர்த்தங்கள். தலமரம் புன்னை. உள்பிராகாரத்தில் ஆகண்டல விநாயகர், ஆண்டபிள்ளையார், முருகப்பெருமான், குடவறை காளியம்மன், நவக்கிரகம், சதுர்முகலிங்கம், பைரவர், சூரியன், சந்திரன், முதலிய சன்னிதிகள் உள்ளன.


திருமால், பிரமன், பார்வதி, இந்திரன், சூரியன், சந்திரன், யமன், வாயு, ஐராவதம், அகத்தியர் முதலியோர் வழிபட்ட தலம். கௌதமரிடம் சாபம் பெற்ற இந்திரன், படைப்புத் தொழிலை மறந்த நான்முகனும், தக்கனிடம் சாபம் பெற்ற சந்திரன், சிவத்துரோகம் செய்த வாயும் இத்தல இறைவனை வழிபட்டு பேறு பெற்ற தலம்.

திருச்சிற்றம்பலம்

2. ஆவுடையார்கோவில்

பொய்யனேனகநெகப் புகுந்தமுதூறும் புதுமலர்க்கழ லிணையடிபிரிந்துங்
கையனேனின்னுஞ் செத்திலேனந்தோ விழித்திருந்துள்ளக் கருத்தினையிழந்தே
னையனேயரசே யருட்பெருங்கடலே யத்தனேயயன் மாற்கறியொண்ணாச்
செய்யமேனியனே செய்வகையறியேன் றிருப்பெருந்துறை மேவியசிவனே.

-- மாணிக்கவாசகர்.



அறந்தாங்கியிலிருந்து தென்கிழக்கே 14கி.மீ. வெள்ளாற்றின் தென்கரையில் இக்கோவில் 10-00 ஏக்கர் நிலப்பரப் பளவில் தெற்கு நோக்கிய ஏழு நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் அருள்மிகு ஆத்மநாதர். அம்மன் சிவயோகநாயகி. உள்பிராகாரத்தில் விநாயகர், வீரபத்திரர், நடராஜர், சுப்ரமணியர், மாணிக்கவாசகர் முதலிய சன்னிதிகள் உள்ளன. தீர்த்தம் பிரம, நராயண, உருத்திர, வாயு, அசுர, தேவ, முனிவர், அக்கினி, ஆத்மகூபம் முதலான தீர்த்தங்கள். தலமரம் குருந்தமரம். பீடங்கள் பிரணவ பீடம், யோகபீடம், சபைகள் ஆனந்த, சித், சத், தேவ, நிருத்த, கனக என ஆறு சபைகள்.

இக்கோவிலுக்கு குருந்தவனம், சதுர் வேதபுரம், சிவபுரம், ஞானபுரம், திரிமூர்த்திபுரம், தென்கயிலை, தேசுவனம், பராசத்திபுரம், பவித்திரமாணிக்கம், யோக பீடம், ஆளுடையார் கோவில், உபதேசத்தலம் என வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளுள்ளே சிவபெருமான், அம்பிகையும் தாமும் அருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்குவது இத்தலத்தில் மட்டுமேயாகும். லிங்க வடிவில் வழிப்பட்டாலும், ஆவுடையார் மீது குவளைசாத்தி அலங்காரம் செய்து வழிப்படப்படுகிறது. இங்கு நந்தி, கொடிமரம் இல்லை. சமைத்த பாத்திரங் களுடன் கொணர்ந்து ஸத்சபையிலுள்ள படைகல்லிற்கொட்டி மிகுதியாகப் புகையை எழுப்பும் அன்னத்தைச் சுவாமிக்கு நிவேதனம் செய்வது இத்தல வழக்கம்.

இத்தலத்தில் நந்தி, சண்டேசரும் இல்லையாதலால் சுவாமி தரிசனம் செய்ய உள்ளே செல்லும்போது ஸ்ரீமாணிக்க வாசகரைத் தரிசித்துச் சுவாமி தரிசனம் செய்த பின்பு மீண்டும் மாணிக்கவாசகரைத் தரிசிப்பது மரபாக உள்ளது.

குருந்த மரத்தின் அடிமண் கடுங்குட்ட நோயுள்ளவர்கள் இம்மண்ணைப் பூசிகொண்டால் நோய் தீரும்.

பிரமன் முதலியவர்களுக்கும், திருவாத வூரடிகளுக்கும் இறைவன் குருமூர்த்தியாய்க் காட்சி கொடுத்து உபதேசித்த தலம். திருவாதவூரடிகளைப் பாதுகாத்தற் பொருட்டுப் பாண்டியன் முன்னிலையில் இறைவன் நரிகளைப் பரிகளாக்கிய தலம்.

இவ்வூரில்தான் சைவத்தின் எட்டாம் திருமுறையான திருவாசகம் பிறந்தது.

சிற்பக்கலைகளுக்கு இக்கோவிலில் உள்ள கொடுங்கையும், அகோரவீரபத்திரர், வில்லேந்தும் வேலவன், காளி, ஊர்த்துவ

தாண்டவர், பிட்சாடனர், இடபாருடர், சங்கரநாராயணர், அனுமன், அர்ச்சுனனுக்குப் பாசுபதம் கொடுக்கும் காட்சியெல்லாம் சிறந்து விளங்குகிறது.

இக்கோவிலில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உட்பட்டது. திருப்பெருந்துறைப்புரா்ணம் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் பாடபெற்றது. இத்தல் முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். திருநாவுக்கரசர் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்திலும், அடைவுத் திருத்தாண்டகத்திலும் திருப்பெருந் துறையைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது. இங்கு நடைபெறும் திருவிழாவில் மணிவாசகப் பெருமானுக்கே அனைத்துச் சிறப்புகளையும் தந்து இறைவன் ஆனந்திக்கும் சிறப்பைக் காணலாம். மேலும் இவ்வூர்க்கு வடக்கில் உள்ள கோவில் ஆதி கைலாசநாதர். அம்மன் சிவகாமியம்மை.

மாணிக்கவாசகர் காலத்திற்கு முன்னரே அமைந்த கோவில். இக்கோவில் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. மாணிக்கவாசகருக்கு இறைவன் செந்தழல் புரை தன் திருமேனிகாட்டி ஆட்கொண்டருளியபின் திருப்பெருந்துறைக் கோவிலைக் கட்டினார் எனக் கூறப்படுவது ஆதிகைலாசநாதர் கோவிலையே ஆகும்.

3. வெள்ளூர்

மணல்மேல்குடிக்கு மேற்கே 5 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சித்தேஸ்வரர்.

4. எம்பல்

ஆவுடையார்கோவிலுக்கு தென்மேற்கே 12கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகஸ்தீஸ்வரர்.

5. வேலியத்தூர்

ஆவுடையார்கோவிலுக்கு தெற்கே 9கி.மீ. இக்கோவில் 92 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

6. மணல்மேல்குடி

மிமிசல்லிருந்து வடகிழக்கே 11கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர். அருகில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜகதீஸ்வரர்.

7. மஞ்சக்குடி

மிமிசல்லிருந்து வடக்கே 7கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வில்வவனேஸ்வரர்.

8. பொன்பேத்தி

திருபுனவாசலிருந்து வடக்கே 11கி.மீ. பொன்பதி. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பவனேஸ்வரர்.

9. தாலனூர்

திருப்புனவாசலிருந்து வடக்கே 13கி.மீ. இக்கோவிலின் மூலவர் சிதம்பரேஸ்வரர்.


10. தீயத்தூர்

திருப்புனவாசலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 42 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சகஸ்கரலஷ்மீஸ்வரர்.

11. மிமிசல்

திருப்புனவாசலிருந்து வடகிழக்கே 12கி.மீ. மிமிசல்சத்திரம்பட்டிணம். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அர்சுனேஸ்வரர்.

அறந்தாங்கி வட்டம்
(புதுக்கோட்டை மாவட்டம்)



1. அறந்தாங்கி

புதுக்கோட்டையிலிருந்து தென் கிழக்கே 33கி.மீ. வெள்ளாற்றின் கரைப் பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ராஜேந்திர சோழீஸ்வரர். அருகில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர் திருக்கோவிலும் அரசர்குளம் என்னு மிடத்தில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுவர்ணகிரீஸ்வரர் திருக்கோவிலும் உள்ளன.

2. குரும்பூர்

அறந்தாங்கியிலிருந்து வடக்கே 9 கி.மீ. கோவில்பட்டு இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சித்தநாதேஸ்வரர்.

3. சிதம்பரவிடுதி

அறந்தாங்கியிலிருந்து வடக்கே 7 கி.மீ. இக்கோவில் 56 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

4. நெய்வட்டலி

அறந்தாங்கியிலிருந்து வடகிழக்கே 15கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நெய்வேலிநாதர்.

5. சிலாத்தூர்

அறந்தாங்கியிலிருந்து வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 63 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பொண்ணம்பலநாதர். அம்மன் சிவகாமியம்மை.

6. ஆலப்பிறந்தான்

அறந்தாங்கியிலிருந்து மேற்கே 3 கி.மீ. வெள்ளாற்றின் கரையில் இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பூமேஸ்வரர்.

7. எட்டியதளி

அறந்தாங்கியிலிருந்து கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 93 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகஸ்தீஸ்வரர்.

8. கம்மங்காடு

அறந்தாங்கியிலிருந்து தென்மேற்கே 7கி.மீ. இக்கோவில் 54 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் வாலீஸ்வரமுடையார்.

தசதானம்

விழாக்காலங்களில் பார்ப்பனர்க்கு உப்பு, எள், நெய், நெல், பசு, பூமி, பொன், ஆடை, வெல்லம், வெள்ளி ஆகிய வற்றைக் கொடுக்கும் பத்து வகைக் கொடைப் பொருள்கள்.

தசப்பொருத்தம்

பத்துவகையான கலியாணப் பொருத் தங்கள்: அவை: தினம், கணம், மாகேந்திரம், ஸ்திரிதீர்க்கம், யோனி, ராசி, ராசியதிபதி, வசியம், ரச்சு, வேதை என்பனவாம். செய்யுட்பொருத்தம் பத்து; அவை: மங்கலம், சொல், பால், வருணம், உண்டி, தானம், எழுத்து, நாள், கதி, கணம் என்பனவாம்.


சதேந்திரர்

42 பவணந்திரரும், 32 வியந்தரேந்திரரும், 22 கற்பேந்திரரும், சந்திரன், சூரியன், நரேந்திரன், மிருகேந்திரன் என்னும் நால்வரும் ஆகிய இந்திரர் நூற்றுவர்.


சந்திரமண்டலம்

சந்திரனது வட்டம்; சூரிய மண்டலத்திற்கு மேலுள்ளதும் புவர் உலகத்தைச் சார்ந்ததுமாகிய உலகம்.

ஆலங்குடி வட்டம்
(புதுக்கோட்டை மாவட்டம்)



திருவரங்குளம்



ஆலங்குடிக்கு மேற்கே 9 கி.மீ. நிம்பாரண்யம். வெள்ளாற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில், பிராகாரம், இராஜகோபுரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஹரிதீர்த்தேசு வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் பெரியநாயகி தெற்கு நோக்கி தனிச் சன்னிதியில் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் ஹர, பிரம, சர்ப்ப, லஷ்மி, இந்திர, சுப்பிரமணிய, தக்ஷிணாமூர்த்தி முதலிய ஏழு தீர்த்தங்கள் உள்ளன. தலவிருட்சம் பனைமரம்.

சேரர், சோழர், பாண்டிய அரசர்கள் இத்தல இறைவனை வழிபட்டுள்ளனர். அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சேர, சோழ, பாண்டிய லிங்கங்கள் உள்ளன. இத்தலத்தின் புராண வரலாறு சிவபெருமானுக்குக் குடைபிடிக்கும் கணநாதனான புஷ்பதந்தன் ஒரு முறை சிவபெருமானோடு வருகையில் கந்தர்வப் பெண்களைக் கண்டு மோகித்தான். அதனால் புஷ்பதந்தன் சிவபெருமானின் கோபத்தால் நான்கு யுகங்களிலும் நான்கு பொருளாகுக நிம்பம், ஆத்தி, பனை, மண்டபம் என்று சாபம் பெற்றான்.

முதலில் நிம்பமாகத் தீர்த்தத்தின் மேல் கரையில் தோன்றினான். அத்தீர்த்தமே ஹர தீர்த்தமாகும். மூன்றாவது யுகமுடிவில் பொற்பனையாக இருந்த போது இடையன் ஒருவனால் அரசனுக்கு தெரிந்து அவ்வரசன் பொற்பனை இருந்த இடத்தில் சிவலிங்கம் கண்டு கோவிலைக் கட்டினான். அதன் பிறகு அரசன் பொற்பனைக் கோட்டை ஒன்றைக் கட்டினான். புஷ்பதந்தன் பிறகு மண்டபரூபத்தில் விளங்கிவரலானான் அதன் பின்பு பொற்பனம் பழம் ஒரு செட்டிப் பெண் விரும்பி சாப்பிட அவளுக்கு ஒரு பெண் பிறந்தாள். பெண் வளர்ந்து மணப்பருவம் வந்தபோது இத்தலத் தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபட்ட போது இறைவன் அப்பெண்ணை தன்னுடன் ஏற்றுக் கொண்டதாக தலவரலாறு. ஆடிப்பூரத்தில் 9ஆம் நாள் திருவிழாவில் இவ்வைபவம் நிகழ்கிறது.

இத்தலத்தில் உள்ள முன்மண்டபத்தில் மேல் உள்ள 27 நட்சத்திரங்கள் 12 இராசிகள் அப்பிரதக்ஷிணமாக வரையப் பட்டிருக்கின்றன.


துர்வாசமுனிவரை அவமதித்த குற்றம் நீங்கப் பிரமன் இத்தலத்தில் வழிபட்ட தலம். இத்தலத்தில் உள்ள தக்ஷிணாமூர்த்தி நின்ற திருக்கோலமாக விளங்குகிறார்.

தாழ்த்தப்பட்ட சாதியினரில் ஒருவன் முதல் தேங்காய் உடைத்து முதலில் தேர் வடம் பிடிக்கும் வழக்கம் இன்றுவரை இக்கோவிலில் பின்பற்றப்பட்டு வருகிறது.


குலோத்துங்க அரசன் ஒரு அந்தணனிடம் சாபம் பெற்ற பின்பு சாபம் நீங்க இத்தலத்தில் திருப்பணி செய்து வழிபட்ட தலம். இக்கோவிலில் சோழ, பாண்டிய, நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலங்களுக்குரிய 65 கல்வெட்டுக்கள் உள்ளன. சேதுபதிகள் இங்குள்ள கட்டைக் கோபுரத்தின் கிழக்குப் பகுதியைக் கட்டியுள்ளனர்.

தினமும் 6 கால பூஜை நடைபெறு கிறது. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

திருமெய்யம் வட்டம்
(புதுக்கோட்டை மாவட்டம்)



1. திருமயம்



புதுக்கோட்டையிலிருந்து தெற்கே 21கி.மீ. திருமெய்யம். வேணுவனம். குடவரைக் கோவிலான இங்கு இறைவர் அருள்மிகு சத்தியகிரீஸ்வரர். அம்மன் வேணுவனேஸ்வரி. உள்பிராகாரத்தில் வலம்புரிவிநாயகர், நடராஜர், நவக்கிரகம், ராஜராஜேஸ்வரி, உமா மகேஸ்வரி முதலிய சன்னிதிகள் உள்ளன.

ஒரே சுற்றுச் சுவருக்குள் சிவனும், திருமாலும் குடைவரைக் கோவிலாக அமைந்துள்ள தலம். மிகப் பெரிய பள்ளிகொண்ட பெருமாள் நின்ற திருக்கோலத்தில் உள்ள சத்தியமூர்த்தி பெருமாள் தாயார் செண்பவல்லி, ஆண்டாளுடன் காட்சியளிக்கும் இப்பெருமாள் 108 திவ்விய தேசங்களில் ஒன்றாகும். திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்ற தலம்.

இக்கோவிலை மகேந்திரவர்மப் பல்லவன் கட்டுவித்ததாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தினமும் நான்கு கால பூஜை. பங்குனி மாத உத்திர விழா சிறப்பாக நடைபெறுகிறது.

2. பேரையூர்

திருமயத்திலிருந்து வடக்கே 15 கி.மீ. பேரேஸ்வரம், செண்பகவனம். இக்கோவிலின் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகநாதர். அம்மன் பிரஹதாம்பாள். தீர்த்தம் நாகதீர்த்தம், புண்ணிய புஷ்கரிணி. தலமரம்-பனை. உள்பிராகாரங்களில் பொய்யாத விநாயகர், சுப்பிரமணியர், காசிவிஸ்வநாதர், ஸ்ரீநாகர், நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

பங்குனி மாதம் மீனலக்னத்தில் இங்கு அமைந்துள்ள சுனையிலிருந்து பேரநாதம் எழுவதால் பேரேஸ்வரம் என்று வழங்கப்படுகிறது. இதுவே பேரையூர் என்று மருவியுள்ளது.

- சண்டேஸ்வர நாயனார் தன்னுடைய தந்தையான எச்சதத்தனைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டு வழிபட்ட திருத்தலம். பிரம்மன் புண்ணிய நதிகளை சிவகங்கையில் சேர்ந்து நீராடி, இத்தல இறைவனைத் துதித்த தலம். சாபத்தினால் தான் இழந்த ஒளியை மீண்டும் பெறுவதற்காக சூரியன் வழிபட்ட தலம். இந்திரன் சாபவிமோசனம் பெற்ற தலம். வருணனின் மகன் தவமியற்றி கலி நீங்கிய தலம். திருநிலத்தைத் தாங்கும் நாகராஜன் பணிந்தேத்தும் திருத்தலம். விலக்கப் பட்டுள்ள பஞ்சமா பாதங்களையே செய்த கிராதகன் ஒரு முறை வேதியருக்கு பூசைக்கு வேண்டிய சாம்பிராணி தந்தமையால் அவனுடைய எமவாதையைக் கூட மாற்றியமைத்த திருத்தலம். நாகராஜன் வணங்கிப் பூசித்த திருத்தலம். இதனால் இறைவனுக்கு நாகநாதர் என்று பெயர்.

இத்தலத்தில் ஸ்ரீநாகருக்கு அபிஷேகமாகும் பால் உடலில் நீலநிறம் காட்டும் அதிசயம். சுவாமிக்கும், அம்மனுக்கும் தனித்தனி கொடிமரம் இங்கு உள்ளது. நவக்கிரகர்கள் எல்லாம் சூரியனை நோக்கிய வடிவில் அமைந்துள்ள வித்தியாசமான தலம்.

மணப்பேறு கிடைக்க, நாகதோஷம், ராகு, கேது தோஷம் அழிய, பிள்ளைவரம் கிடைக்க, மாங்கல்ய தோஷம் அகல இக்கோவில் பிரார்த்தனைத் தலமாக உள்ளது.

இக்கோவிலில் கல்வெட்டுக்கள் ராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தது சோழ, பாண்டியர்களின் பிற கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. மேலும் திருமலைநாயக்கர் காலத்திலும், புதுக்கோட்டை சமஸ்தான மன்னர்களாலும் பெரிதும் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதைக் குறிக்கிறது.

நாள்தோறும் ஆறுகால பூஜை. பங்குனி, சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. குலமங்கலம்

பேரையூர்க்கு தென்மேற்கே 8 கி.மீ. மலையகோவில், இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருவருட்காளீஸ்வரர். அம்மன் தர்மசம்வர்த்தினி. உள்பிராகாரத்தில் விநாயகர், சனீஸ்வரர், ஜடாமுனி, நவக்கிரகங்களும், அருகில் 100 அடி உயரம் கொண்ட மலை உச்சியில் சுப்ரமணியர் காட்சியளிக்கிறார். குடவரைக்கோவில் இக்கோவில் உள்ள கல்வெட்டுக்களின்படி இக்கோவிலை சடவர்ம குலசேகர தேவ பாண்டியன் கட்டுவித்ததாக குறிக்கிறத். தைப்பூசத்தில் 10 நாட்கள் சுப்ரமணியர்க்கு உற்சவம் நடைபெறுகிறது.

4. நச்சாந்துபட்டி

பேரையூர்க்கு தென்மேற்கே 4 கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

5. பனையபட்டி

பேரையூர்க்கு தென்மேற்கே 6 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கமீனாட்சிசுந்தரேஸ்வரர்.

6. குளிபிறை

பொன்னமராவதிக்கு வடகிழக்கே 14கி.மீ. குழிபிறை. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர்.

7. வாளகுறிச்சி

திருமயத்திலிருந்து வடமேற்கே 18கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரர்.

8. சுந்தரம்

பொன்னமராவதிக்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தான்தோன்றீசுவரர்.

9. வெண்டாம்பட்டி

பொன்னமராவதிக்கு தெற்கே 3கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள மேலசிவபுரியில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

10. வலையப்பட்டி

பொன்னமராவதிக்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வலம்புரிநாதர். அம்மன் பார்வதிதேவி.

11. வார்பட்டு

பொன்னமராவதிக்கு தென்மேற்கே 8கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

12. திருக்களம்பூர்

பொன்னமராவதிக்கு தெற்கே 10கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வேலையப்பர்.

13. குருவிக்கொண்டான்பட்டி

திருமயத்திலிருந்து மேற்கே 11கி.மீ. ராங்கியம். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

14. செங்கிரை

திருமயத்திலிருந்து கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மலைகொழுந்தீசர். மேலும் இவ்வூர்க்கு அருகில் உள்ள ஆலங்குடியில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தான்தோன்றீசுவரர்.

15. அரிமழம்

திருமயத்திலிருந்து கிழக்கே 18கி.மீ. இக்கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் 15அடி உயர கோபுரத்துடன் மூலவர் சேலய்யனார் உட்கார்ந்த நிலையில் ஐயனாராக காட்சியளிக்கிறார். அம்மன் பொற்கொடியாள் மற்றும் பூர்ணாதேவி. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்ரமணியர், சின்ன கருப்பர், காளி, முனீஸ்வரர், பைரவர் முதலிய சன்னிதிகள் உள்ளன. இரண்டு கால பூஜை. வைகாசி விசாகம், நவராத்திரி அன்று உற்சவம் நடைபெறுகிறது. இவ்வூர்க்கு அருகில் மற்றொரு கோவிலான 61 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

16. அகவயல்

அரிமழத்திலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 28 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

17. ஆதனூர்

திருமயத்திலிருந்து தெற்கே 9 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

தசநாடி

பத்து நாடிகள்: அவை:

அத்தி, அலம்புடை, இடை, காந்தாரி, குகு, சங்கினி, சிங்குவை, சுழுமுனை, பிங் கலை, புருடன், என்னும் பத்துவகைப்பட்டு உயிர்வளி இயங்குதற்குரிய வழியாகிய நாடிகள்.

தசமூலம்

கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெருஞ்சி, பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம், என்னும் பத்து மருந்துவேர்கள்.

தசவாயு

உடலில் நிற்கும் பத்து வாயு : அவை:

அபானன், உதானன், கிருகரன், கூர்மன், சமானன், தனஞ்சயன், தேவதத்தன், நாகன், பிராணன், வியாழன் என்பன.

ஏழ்நரம்பு

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு நரம்புகள்.

ஏழ்பரி


சூரியன் தேரில் பூட்டப்படும் ஏழு குதிரைகள்: காயத்திரி, திருட்டுபு, செகதி, அனுட்டுபு, பந்தி, பிரகதி, முட்டிணுகு.

ஏழ்சுரம்

சட்ஜம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம்.

திருச்சிற்றம்பலம்

புதுக்கோட்டை வட்டம்
(புதுக்கோட்டை மாவட்டம்)



1. புதுக்கோட்டை

திருச்சிராப்பள்ளியிலிருந்து தெற்கே 57கி.மீ. திருக்கோகர்ணம். இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 30 அடி உயரமுடைய 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் கோகர்ணேசுவரர் அம்மன் பிருகதாம்பாள். இங்குள்ள மற்றொரு மூலவர் மகிழவனேசர். அம்மன் மங்களாம்பிகை. தலமரம் - வில்வம், தீர்த்தம் கபில, லட்சுமி, மங்கள, பிரம்ம, இந்திர தீர்த்தங்கள்.

பிரமன் ஒருமுறை தன்னைத் தானே வியந்து தன்னைவிட உயர்ந்த கடவுள் யாருமில்லையென்றும் தானில்லாவிட்டால் உலகங்கள் எவையும் நடைபெறா என்றும் கருதினார். அண்ட கோடிகளுக்கெல்லாம் ஒரே முழுமுதற்கடவுளான சிவபெருமானுக்குப் பிரமனின் போக்கு பிடிக்கவில்லை. சிவபெருமான் பிரமனின் படைப்புச் சக்தியை நீக்கிவிட்டார். படைப்பு ஆற்றலை இழந்த பிரமனால் படைப்புத் தொழிலைச் செய்யமுடியவில்லை. உலகங்களிலெல்லாம் பெருங்குழப்பம் நிலவியது. அமைதியான நடைமுறைகள் நிலைகுலைந்ததால் கட்டுப் பாடற்ற ஒழுங்கீனங்கள் தலைவிரித்தாடின. பிரமன் தன் தவற்றையுணர்ந்து சிவபெருமானிடம் வேண்டி பழைய நிலைமையை மீட்டுத்தர மன்றாடினார். கோகர்ணத்துக்குச் சென்று பல்லாண்டுகள் தவம்செய்து இழந்த படைப்பாற்றலை மீண்டும் பெறுமாறு சிவபெருமான் பிரமனுக்குக் கட்டளையிட்டார். பிரமன் இத்தலத்தை யடைந்து வழிபட்டு மீண்டும் படைப்புத் தொழிலைப் பெற்றத் தலம்.

திருமாலின் இருமனைவியரான பூதேவிக்கும், சீதேவிக்கும் ஒருமுறை பூசல் ஏற்பட்டது. அதனைக் கண்டு திருமாலுக்குச் சினம் தோன்றியதால் அவர்கள் இருவரையும் மண்ணுலகில் பிறக்குமாறு சபித்துவிட்டார். சாபத்திற்காளான பூமிதேவியும், சீதேவியும் முழுமுதற்கடவுளான சிவபெருமானை அணுகித் தமக்கு நேர்ந்த சாபமிட்டார் எடுத்துக் கூறிக்காத்தருளவேண்டினர். மண்ணுலகில் மனிதராய்ப் பிறந்த கோகர்ணத்திற்குச் சென்று தன்னை வழிபட்டு சாபம் நீங்கி பழைய தெய்வத்தன்மையைப் பெறுமாறு சிவபெருமான் அவர்களுக்கு அறிவுரை ஊறியருளினார். அதன்படி சீதேவியும் பூதேவியும் திருக்கோகர்ணத்துக்கு வந்து கபிலமுனியாலும் சந்திரனாலும் அமைக்கப்பட்ட இரண்டு சிவலிங்களையும் முறையாக வணங்கி வழிபட்டனர். சிவ பெருமான் அவர்களுடைய பக்திப் பெருக்கைக் கண்டு உவந்து பழைய தெய்வத்தன்மையை அடைய அருள் புரிந்தார். அது மட்டுமின்றி தெய்வத்தன்மையெய்திய திருமகளுக்கும் திருமாலுக்கும் கல்யாணபுரத்தில் மீண்டும் திருமணம் செய்து வைத்தார். இன்றும் கல்யாணபுரத்துக் கடவுளைப் பூமீஸ்வரன் என்னும் பெயரில் வழிபடுகின்றனர்.

நிலவுலகின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றித் திரிந்து கடைசியில் கோகர்ணத்திலுள்ள ஸ்ரீவர்தன ஈஸ்வரனை வழிபடுவதற்காகக் கபிலையென்னும் பசு நிலையாக இங்கேயே தங்கிவிட்டது. இறைவனுக்கு நாள்தோறும் திருமஞ்சன நீராட்டுவதற்குக் கங்கையிலிருந்து நீர் கொண்டுவருமாறு கபிலையிடம் கபில முனி கூறினார். கபிலையும் அதற்கு ஒப்புக் கொண்டது. கங்கை நீர் ஏந்தி காசியிலிருந்து கோகர்ணத்துக்கு வரும் வழியில் கபிலைப் பசுவின் பக்தித் திறத்தைச் சோதிப்பதற்காகச் சிவபெருமான் ஒரு புலியின் வடிவம் கொண்டு தாக்கினார். அப்பொழுது அந்தத் தெய்வீகப் பசு புலியை நோக்கி, கபில முனிவர் யாகசாலையில் தன் கன்றைத் தனித்து விட்டு வந்திருப்பதாகவும் தன்னை அனுப்பி வைத்தால், சிவபூசையைச் செப்பமாக முடித்தல், கன்றுக்குட்டியைச் சிவபெரு மானின் காவலில் கோவிலில் விட்டு வருதல் ஆகிய இரு கடமைகளையும் செவ்வனே செய்து முடித்துவிட்டுத் தப்பாமல் திரும்பிவந்து இரையாவதாகவும்

உறுதிகூறி வேண்டுகோள் விடுத்தது. புலியும் அதற்கு உடன் பட்டது. கபிலை கோகர்ணத்துக்கு வந்து தன் கன்றைக் கோவிலில் கொண்டுபோய் விட்டு, தன் கன்றைக் காத்தருளுமாறு சிவபெருமானை வேண்டு வழிபட்டது. பிறகு இறைவனுக்குத் திருமஞ்சன நீராட்டுவதற்காகத் தன் காதுகளில் நிரப்பிக் கொண்டு வந்திருந்த கங்கை நீரின் ஒருபகுதியை, கோவிலின் வடபுறத்தில் மண்ணைக் கொம்பால் தோண்டிச் செய்த பள்ளத்தில் நிரப்பி, என்றென்றும் இறைவனுக்கு கங்கை நீரால் அபிஷேகம் நடைபெற வழிவகை செய்தபின் எஞ்சிய நீரால் இறைவனுக்குத் அபிஷேகம் செய்து வழிபட்டது. புலியிடம் வாக்களித்தபடி திரும்பிச் செல்வதற்காக ஸ்ரீவர்தன ஈஸ்வரரிடம் விடைபெற்றுக்கொண்டது. சொன்ன சொல்லைக் காப்பதில் கபிலை மிகவும் உறுதியுடையதாயிருந்தது. கபிலை புலியைக் காணச் சென்றபோது அக்காட்டிலிருந்த புலி மறைந்து அவ்விடத்தில் சர்வமங்கலத்தோடும் கைலையில் வீற்றிருக்கும் திருக்கோலக் காட்சியை கபிலையின்முன் சிவபெருமான் காட்டியருளினார். இந்த இடத்தில் சிவபெருமான் வியாகரேஸ்வரராக வணங்கப்படுகிறார்.

உள்பிராகாரத்தில் விநாயகர், காசிலிங்கம், வீரபத்திரர், சப்தமாதர்கள், சப்தலிங்கம், பிரமன், பைரவர், காட்சி கொடுத்த நாயகர் முதலிய சன்னிதிகள் உள்ளன. குடவரைக் கோவிலுக்கு மேற்புறத்தில் சுப்பிரமணியர் கோவில் உள்ளது. இக்கோவிலில் லட்சுமி, சரஸ்வதி, துர்க்கை, பழனியாண்டவர் முதலியோர் காட்சியளிக்கின்றனர்.

கங்காதரர், மன்மதன், ரதி, கைகேயி, தசரதன், இராவணன் போன்ற சிற்பங்கள் உள்ளன. மங்கள முனிவர் உண்டாக்கிய மங்கள தீர்த்தம் அம்மன் சன்னிதிக்கு கிழக்கில் அமைந்துள்ளது. காமதேனுவின் கொம்புகளால் உண்டாக்கப்பட்ட கபில தீர்த்தம் மலைமீது சுனைவடிவில் உள்ளது.

ஆதியில் மகேந்திரவர்ம பல்லவன் தோற்றுவித்த குகைக் கோவில் நாளடைவில் விரிவாக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர், பாண்டியர், போசள அரசர்களும் இக்கோவிலைத் திருப்பணி செய்துள்ளனர். இக்கோவிலில் 11 கல்வெட்டுக்கள் உள்ளன.

தலபுராணம் வடமொழியில் கோகர்ண மகாத்மியம் 16 சருக்கங்களும், 1650 பாடல்களும் கொண்டது.

தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது. தைப்பூசம், சித்திரைப் பெருவிழா நடைபெறுகிறது.

கோகர்ணத்திற்கு மேற்கில் இரண்டு மைல் தூரத்தில் திருவேங்கைவாசல் என்னும் கிராமம் உள்ளது.

நவதாளம்

அரிதாளம், அருமதாளம், சம தாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்த்ததாளம், படிமதாளம், விடதாளம் என்னும் ஒன்பது தாளவகை.

நவதீர்த்தம்

கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, துங்கபத்திரை, சோணையாறு என்னும் ஒன்பது புண்ணிய தீர்த்தங்கள்.


நவநாதசித்தர்

ஒன்பது சித்தராகிய அனாதி நாதர், ஆதிநாதர், கடேந்திர நாதர், கோரக்க நாதர், சதோகநாதர், சத்தியநாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர், வகுளிநாதர்.

நவநிதி

கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதுமநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி ஆகிய ஒன்பது வகைப்பட்ட குபேரநிதி.

குளத்தூர் வட்டம்
(புதுக்கோட்டை மாவட்டம்)



1. விராலிமலை

புதுக்கோட்டையிலிருந்து வடமேற்கே 42கி.மீ. இக்கோவில் 177 படிகள் கொண்ட சிறிய மலைமீது 52 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், ஒரு பிராகாரங்களுடன் மூலவர் விஸ்வநாதர். அம்மன் விசாலாக்ஷி, மற்றும் ஆறுமுகப் பெருமான் பன்னிரு திருக்கரங்களுடன் இருபுறமும் தேவியர் விளங்க மயில் மீது அமர்ந்து கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். உற்சவரும் மூலவர் போன்றே காட்சி தருகின்றார். அடிவாரத்தில் சரவணப் பொய்கையும், மலைமேல் செல்லும் வழியில் இடும்பன் சன்னிதியும், குடவரைக் கோவிலாக மீனாட்சி சுந்தரேசுவரரும் காட்சியளிக்கின்றனர்.

குராமரங்கள் வடிவில் முனிவர்கள் முருகப் பெருமானை வழிபடுவதனால் விராலிமலை எனப் பெயர் பெற்றது. மயில்கள் இங்கு அதிகம் உள்ளன.

வசிஷ்டர், காசிபமுனிவர், நாரதர் முதலியோர் வழிபட்டுப் பாபவிமோசனம் பெற்ற தலம்.

நாரதர் உற்சவ விக்கரம் உள்ளது. விழாக்காலங்களில் வீதியுலா வருவதும் வேறு எங்கும் காண முடியாத காட்சியாகும்.

உள்பிராகாரத்தில் அருணகிரிநாதர், சண்டிகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, நடராஜர், நவக்கிரகம், மற்றும் தண்டாயுதபாணி, விநர்யகர், முதலிய சன்னிதிகள் உள்ளன.

அருணகிரிநாதர் இத்தலமுருகப் பெருமான் மீது திருப்புகழ் அருளியுள்ளார். அருணகிரிநாதர் இளைஞராக இருந்தபோது முருகப்பெருமானே ஞானோபதேசம் செய்து வயலூர்க்கு வரப்பணித்ததாக வரலாறு. இதைக்காட்டும் சிற்பங்கள் சந்தனக் கோட்ட மண்டபத்தில் உள்ளது.

கல்வெட்டுக்கள் உள்ளன. பொய்யப் பட்டி ஜமீன்தார்களால் இக்கோவில் முழுவதுமாக திருப்பணி செய்யப்பட்டதைக் குறிக்கிறது. 251 கல்தூண்கள் உள்ளன.

இக்கோவிலில் வைகாசி விசாகம், தைப்பூசம், சஷ்டி விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. சித்திரை மாதப் பிறப்பு முதல் 11 நாட்கள் நடக்கும் பூச்சொறிதல் விழா சிறப்பானதாகும்.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

2. நீர்ப்பழனி

கீரனூரிலிருந்து மேற்கே 10 கி.மீ. இக்கோவிலின் மூலவர் வளர்மதீசுவரர். பிராகாரத்தில் விநாயகர், சுப்ரமணியர், சந்திரன், சண்டேசுவரர், சூரியன், பைரவர் முதலிய சன்னிதிகள் உள்ளன. கல்வெட்டுக்களில் சடையவர்மன் பராந்தக நெடுஞ்செழியன், இராசகேசரிவர்மனுடைய கல்வெட்டுக்கள் உள்ளன.

3. குன்னத்தூர்

விராலிமலையிலிருந்து வடகிழக்கே 14கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

4. விசலூர்

கீரனூரிலிருந்து வடகிழக்கே 12 கி.மீ. இக்கோவிலின் மூலவர் மார்க்கசகாயேசுவரர்.

5. வேலூர்

விராலிமலைக்கு கிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கதலைவனேசுவரர். அம்மன் கற்பூரவல்லியம்மன்.

6. விரலூர்

விராலிமலைக்கு தெற்கே 3 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பூமீசுவரர். கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். இக்கோவில் விசயாலயன்

சோழர் காலத்தில் திருப்பணி செய்யப் பெற்றதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கல்வெட்டுக்கள் தனியே சிதைந்துள்ளது.

7. கொடும்பாளூர்

விராலிமலைக்கு தெற்கே 8 கி.மீ. கொடும்பை, இருக்குவேளூர். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் முசுகுந்தேசுவரர். சேக்கிழாருடைய பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள 63 நாயன்மார்களில் இடங்கழிநாயனார் என்பவர் இத்தலத்தைச் சார்ந்தவர். இவ்வூரில் ஆதியில் 108 சிவன் கோவில்கள் இருந்தன என்று இவ்வூர்த் தலபுராணம் கூறுகிறது. புகழ்பெற்ற மூவர்கோவில்களில் ஒன்று அழிந்து போனாலும் எஞ்சிய இரண்டும் நம் கண்களுக்குக் காட்சியளிக்கின்றன. கல் வெட்டுக்களில் இக்கோவில் திருமுது குன்றம் உடையார் கோவில் என வழங்கப்படுகிறது. மூவர் கோவில் சுந்தரசோழன் காலத்தது.

8. இலுப்பூர்

அன்னவாசலிருந்து வடமேற்கே 9 கி.மீ. இக்கோவில் 1-62 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பொன்வாசிநாதர். அம்மன் சொர்ணாம்பிகை.

9. வேலஞ்சார்

அன்னவாசலிருந்து வடமேற்கே 5 கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தானமதீஸ்வரர். அம்மன் ஞானாம்பிகை.

10. ராப்பூசல்

அன்னவாசலிருந்து வடக்கே 8 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தாயுமானவர். அம்மன் சகுந்தலாம் பிகை.

11. நார்த்தாமலை

குளத்தூர்க்கு தெற்கே 6 கி.மீ. நகரத்தார்மலை. விஜயாலயசோழீச்சுரம். இவ்வூரைச் சுற்றி மேலமலை, கோட்டை மலை, கடம்பர்மலை, பாறையன் மலை, உவச்சன் மலை, ஆளுருட்டி மலை, பொம்மன் மலை, மண்மலை, பொன் மலை என ஒன்பது குன்றுகள் உள்ளன. தெற்கிலுள்ள குடபோகக் கோவில் பழியிலிஈசுவரம் என்னும் சிவன் கோவிலாகும். இவ்வூரில் உள்ள ஜம்புகேஸ்வரின் திருக்கோவிலும், முத்து மாரியம்மன் கோவிலும் உள்ளன.

12. சித்தன்னவாசல்

குளத்தூரிலிருந்து தென்மேற்கே 15கி.மீ. சிற்றண்ணல்வாயில். இக்கோவில் மலையடிவாரத்தில் உள்ளது. மூலவர் லிங்கமாக அருள்மிகு மாத்ருபூதேசுரர், அம்மன் சுகந்தகுந்தளாம்பிகை. இவ்வூர் அண்ணல்வாயிலை அடுத்துள்ளதால் சிற்றண்ணல்வாயில் என வழங்கப் பெறுகிறது. அருகில் உள்ள அறிவர் கோவில் எனப்படும் ஒரு சிறிய குகையும், அதனுள் மன்னர்களின் உருவங்கள் எமுதிய பழங்கால ஓவியங்களும், சமணமுனிவர் களின் உருவங்களும் உள்ளன. அவனியசேகரன் ஸ்ரீவல்லவன் காலத்தில் அமைக்கப் பெற்ற கோவிலாகும். மலைமேல் உள்ள ஏழடிப்பட்டம் என்னும் மலை உச்சிப்பகுதியில் சமணர் குகைகளும், கற்படுக்கைகளும் உள்ளன. தி.பி. 2000 வருட முற்பட்ட காலத்தில் புதைக்கப்பட்ட தாழிகள் இங்குக் கிடைக்கின்றன. இம்மலை உச்சியிலுள்ள சுனையில் சிவலிங்கம் ஒன்று நீரில் அமிழ்ந்துள்ளது. வளம் குன்றிய காலங்களில் சுனையில் உள்ள நீரை இறைத்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனை கள் செய்வித்தால் மழை பெய்து வருகிறது.

13. அன்னவாசல்

குளத்தூரிலிருந்து தென்மேற்கே 14கி.மீ. அண்ணல்வாயில். இக்கோவில் கிழக்கு நோக்கி உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு விருத்திபுரீசுரர். அம்மன் தர்மசம்வர்த்தினி. விநாயகர், முருகன் முதலிய பரிவார தெய்வங்களுடன் சிறிய ஆலயமாக உள்ளது. மகமதியர்கள் படையெடுப்பின்போது இவ்வாலயம் இடம் பெயர்த்துச் சிறிய ஆலயமாகக் கட்டப் பட்டது. இத்தலம் தேவார வைப்புத் தலமாகக் கருதப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய அடைவுத்திருத் தாண்டகத்தில் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். மேலும் இவ்வூரில் கிராம தேவதைகளாகிய பிடாரி, ஐயனார் ஆலயங்களும், பெருமாள் கோவிலும் உள்ளன. தினமும் இரண்டு கால பூஜை. மாசிமகப் பெருவிழா நடைபெறுகிறது.

14. பனங்குடி

அன்னவாசலிருந்து தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவிலின் மூலவர் அகத்தீசுவரர். இக்கோவிலை பரமேசுவரர் கோவில் என்றே அழைக்கின்றனர். கருவறை சதுர வடிவமானது. கருவறையில் வடசுவரில் காணப்படும் பரகேசரிவர்மனின் 14ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு உள்ளன. கல்வெட்டுக்களில் இறைவர் பனங்குடி பரமேசுவரர் என்று குறிக்கப்பட்டுள்ளது. விசயாலயன் காலச் சிறு கற்றளிகளில் இக்கோவிலும் ஒன்றாகும்.

15. புல்வயல்

குடுமியான்மலைக்கு தென்கிழக்கே 6கி.மீ. திருப்புல்வயல், குமரன்மலை. இக்கோவில் கட்டுமலைமேல் அமைந்த கோவில். இத்தல மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கேடில்யப்பர். அம்மன் வளமுலைநாயகி. தீர்த்தம் சரவணப் பொய்கை.

அகத்தியர்க்கு காட்சிதந்த தலம். நடராசப்பெருமான் அகத்தியருக்கு இத்தலத்தில் வலது பாத தரிசனம் கொடுத்த தலம்.

இத்தலப் குமரப் பெருமான் தண்டாயுதபாணியாய் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம்.

குருபாததாசர் இயற்றிய குமரேச சதகம், அந்தகக் கவி வீரராகவ முதலியார் இயற்றிய பிள்ளைத்தமிழ் முதலியன இத்தல முருகப் பெருமான் மீது பாடப்பட்டுள்ளன.


தினமும் இரண்டு கால பூஜை. கார்த்திகை சோமவாரத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

16. பெருமானாடு

அன்னவாசலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. பெருமிழலை, மிழலை, பெருமிழலைநாடு. இத்தலம் பேரையூருக்கு மேல்பால் இரண்டு கி.மீ. தூரத்தில் காட்டுப்பகுதியில் உள்ளது. இங்குள்ள மலை தேவமலை எனப்பெறும். தேவமலையின் அடிவாரத்தில் ஒரு குகைக் கோவில் உள்ளது. இங்கு குறும்பநாயனார் திருவுருவம் உள்ளது. இக்குகைக் கோவிலில் ஒரு சமாதி காணப்படுகிறது. அது குறும்ப நாயனார் சமாதி எனக் கூறப்படுகிறது. முனீசுரர், விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. இத்தல மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தேவநாதர். அம்மன் தேவநாயகி. இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரர் இத்தலத்தை மிழலை நாட்டு மிழலை எனவும், பெருமிழலை எனவும் திருநாட்டுத் தொகை, திருத்தொண்டத் தொகையில் பாடியுள்ளார். 63 நாயன்மார்களில் பெருமிழலைக் குறும்பர் சிறந்த சிவயோகியாக விளங்கிச் சுந்தரரையே நினைத்து வழிபட்டும் அவர் கயிலை சென்றதை அறிந்து உடன் அவரோடு கயிலாயநாதன் திருவடி சேர்ந்தவர். அந்நாயனர் பிறந்தருளிய தலம் இப்பெருமிழலையாகும்.

மணப்பாறை வட்டம்

(திருச்சிராப்பள்ளி மாவட்டம்)



1. அணியாப்பூர்

மணப்பாறைக்கு வடமேற்கே 10கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் செட்டீஸ்வரர்.

2. குமாரவாடி

வையம்பட்டிக்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரேஸ்வரர்.

3. வெம்பானூர்

மணப்பாறைக்கு தென்கிழக்கே 20கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமாலீஸ்வரர்.

4. பொறுவை

மணப்பாறைக்கு தெற்கே 22கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

5. பலுவாஞ்சி

மணப்பாறைக்கு தெற்கே 17கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

6. மருங்காபுரி

மணப்பாறைக்கு தெற்கே 18கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர்.

சிவதாண்டவம்

1. பாண்டரங்க நடனம் : முப்புரம் எரிக்க எழுந்தருளியபோது பிரமன் தேர்ச் சாரதியாக இரக்க, அதைக் கண்டு கலைமகள் கலங்க, அவளைத் தேற்றுவதற் பொருட்டுச் செய்தருளியது.

2. கொடு கொட்டி நடனம் ; திரிபுரத்தை எரித்தபின்பு, தேவி தாளமிடபரசிவனுர் தம் கரங்களைக் கொட்டி ஆடியருளியது.

3. சந்தியா நிருத்தம் : ஆலகால விஷத்தையுண்டு, தேவர்களைக் காத்து, அறி துயில் கொள்ள, தேவர்கள் பூசித்த பின்னர், மறுநாள் திரயோதசியில் (பிரதோஷத்தில்) 'டமகரும்' ஏந்தி, சூலத்தைச் சுழற்றி, ஒரு ஜாமதேரம் ஆடியருளியது.

4. சண்டதாண்டவம் : திரு ஆலங்காட்டில் காளியின் செருக்கை அடக்க, பைரவ மூர்த்தங்கொண்டு ஆடியருளியது.

5. கௌரி தாண்டவம் : தாருகாவனத்தில் மோகினிவடிவெடுத்த திருமாலுடன் ஆடியது போன்று கௌரிக்குக் கயிலையில் ஆடிக்காட்டி அருளியது.


6. வீரட்டகாச நடனம் : குமரக்கடவுள் பிரணவப் பொருளை யுணர்த்திய போது 'யானும் குமரனும் ஒன்றே' என்று வீரங் கொண்டு ஆடியருளியது.

7. ஆனந்தத் தாண்டவம் : பதஞ்சலி, வியாக்ரபாதர்களை, சிவகாமியம்மை உளம் மகிழ, முயலகன் முதுகு மிதித்துச் சிதம்பரத்தில் ஆடியருளியது.

8. அனவரத நடனம் : ஆன்மாக்களுக்குப் போக முத்திகளை யளிக்கும் பொருட்டு படைப்பு முதலான செயல்களைச் செய்து அனவரதமும்-அதாவது எப்போதும் ஆடுகின்ற நடனம்.

9. மஹாசங்கரா நடனம் : மஹாபிரளய காலத்தில் உலகளைத்தும் பராசக்தியில் ஒடுங்க பராசக்தியும் பரசிவத்தில் ஒடுங்க, பரசிவன் ஒருவனே தாஞக இருந்து ஆடிய நடனம்.

திருச்சிராப்பள்ளி வட்டம்
(திருச்சிராப்பள்ளி மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திரிசிராமலை

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே

-- திருநாவுக்கரசர்.



இந்நகரின் மையப்பகுதியில் கம்பீரமாக மலைக் கோட்டையாக 273 அடிஉயரமும், 417 படிகள் கொண்டு, அடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சன்னிதியும், நடுவில் தாயுமானவர் சன்னிதியும், உச்சியில் உச்சிப் பிள்ளையார் சன்னிதியும் கொண்ட இம்மலைக்கு திரிசிரகிரி, திரிசிரபுரம், தட்சிண கைலாயம், செவ்வந்திமாநகர், தற்போது திருச்சிராப்பள்ளி. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தாயுமானவர், மாத்ருபூதேசுவரர் மேற்கு நோக்கியுள்ளார் அம்மன் மட்டுவார்குழலி தனிச்சன்னிதியில் உள்ளார். தீர்த்தம் காவிரி, சிவகங்கை, உள்பிராகாரத்தில் செவ்வந்தி விநாயகர், முருகப்பெருமான் 63 நாயன்மார்கள், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திரிசிரன் என்னும் அரக்கன் இருந்து அரசாண்டு இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றதால் தலத்திற்கு திரிசிரபுரம் என்று பெயர்.

கைலையங்கிரியின் கொடுமுடிகள் மூன்று வாயுவினால் பெயர்த்து வீசப்பட்டன என்பதும் அம்மூன்றனுள் ஒன்று இம்மலை என்பதும், அதனால் இத்தலத்திற்கு தட்சிண கைலாசம் என்றும் பெயர். ஏனைய இரண்டு கோவில்களாவன திருக்காளத்தி, திரிகோண மலையாகும்.

சாரமாமுனிவர் நாகலோகத்திலிருந்து கொண்டு வந்த செவ்வந்தி மலர்களால் இத்தல சிவபிரான் பூசிக்கப் பெற்றமையால் இறைவனுக்கு செவ்வந்திநாதரெனவும், இத்தலத்திற்கு செவ்வந்திநகர் என்று பெயர்.

இம்மலைமேல் எழுந்தருளியுள்ள திருமலைக் கொழுந்தீசர், கருவுற்றிருந்த இரத்தினாவதி என்னும் வணிகப் பெண்ணிற்குத் தாயாகி வந்து மருத்துவம் புரிந்தமையால் இறைவனுக்கு தாயுமானவர் என்றும் பெயர்.

விபீஷணனிடமிருந்து திருவரங்க நாதனை வாங்கி காவிரி, கொள்ளிட இரு நதிகளுக்கு இடையில் வைத்துவிட்டு இம்மலையில் ஏறி உச்சியில் அமர்ந்து உச்சிப்பிள்ளையார் என்ற பெயரோடு விளங்குகிறார் இத்தல விநாயகர்.

அகத்தியர், அனுமன், இந்திரன், அருச்சுனன், இரத்தினாவதி, இராமர், உமாதேவி, சப்தகன்னியர், சப்தரிஷிகள், சாரமாமுனிவர், சூரவாதித்த சோழன், திரிசிரன், பிரம்மன், ஜடாயு முதலியோர் இத்தலத்துள்ள சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்றனர்.

பங்குனி மாதத்தில் 23, 24, 25 தேதிகளில் இறைவன் மீது மாலை சூரியனின் ஒளிக்கதிர்கள் படும் அற்புதக் காட்சியைக் காணலாம். சிவபெருமானின் 64 மூர்த்தங்களுள் ஒன்றான கங்காளமூர்த்தம் இத்தலத்தில் உள்ளது.

பல்லவர்களால் அமைக்கப்பட்ட இரண்டு குகைகள் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 6 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகங்கள் பெற்றது. ஐயடிகள் காடவர்கோன், அருணகிரிநாதர், தாயுமான சுவாமிகள் பாடிய பாடல்களும், தலபுராணம் சைவ எல்லப்பநாவலர் இயற்றிய செவ்வந்திப் புராணமும் இத்தலத்திற்கு உள்ளது.

கல்வெட்டுக்கள் உள்ளன. முதல் மகேந்திரவர்மன், முதலாம் இராஜராஜன் காலதியவை. இவ்வூரை உறையூர்க் கூற்றத்துக் சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளி என்றும், இறைவர் திருமலைப் பெருமானடிகள் என்றும் இம்மலைக்குத் திருமலை என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

இந்நகரத்தில் பல இடங்களில் சிவன் கோவில்கள் அமைத்துள்ளன. அவையாவன 1) 59 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர், அம்மன் ஆனந்தவல்லி. 2) 6 செண்ட் நிலப்பரப்பள்வில் பைரவநாதர் திருக்கோவிலும். 3) 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பூலோகநாதர் அம்மன் ஜகதாம்பிகை. 4) 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர் அம்மன் கமலாம்பிகை. 5) ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர் திருக்கோவிலும். 6) கருமண்டபத்தில் உள்ள ஸ்ரீ காலகண்டேஸ்வரர் திருக்கோவிலும். 7) 15 செண்ட் நிலப்பரப்பளவில் உள்ள மூலவர் காசிவிஸ்வநாதர் கோவிலும். 8) தென்னூரில் 89 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர் கோவிலும். 9) வராகனேரில் உள்ள கைலாசநாதர், கமலாம்பிகை திருக்கோவிலும், தான்தோன்றீசுவரர், அம்மன் குங்குமவல்லி திருக்கோவிலும் என திருச்சி நகரத்தினுள் ஆங்காங்கே அமைந்துள்ளன.

2. உறையூர்

சாந்தம்வெண்ணீ றெனப்பூசி வெள்ளஞ்சடை வைத்தவர்
காந்தளாரும் விரலேழை யோடாடிய காரணம்
ஆய்ந்துகொண்டாங் கறியந் நிறைந்தாரவ ரார்கொலோ
வேந்தன் முக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே

-- திருஞானசம்பந்தர்.

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஒரு கி.மீ. திருமுக்கீச்சரம், கோழியூர். இக்கோவில் 73 செண்ட் நிலப்பரப்பளவில் பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பஞ்சவர்ணேசுவரர். அம்மன் காந்திமதியம்மை. தீர்த்தம் பஞ்சவர்ணதீர்த்தம். தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், மகாலஷ்மி, நடராஜர், புகழ்ச்சோழர், தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சிவபெருமான் உதங்கமுனிவருக்கு ஐந்து வர்ணமுடைய திருக்கோலத்தை ஐந்து சாமங்களிற் காட்டியருளியதால் இறைவன் பஞ்சவர்ணேசுவரர் என்று பெயர். உள் மண்டபத்தில் உதங்க முனிவர் இறைவனை வழிபடும் சிற்பம் உள்ளது.

கரிகால்பெருவளத்தான் ஒரு சமயம் சதுரங்க சேனையுடன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டுத் இத்தலத்தில் கடந்து போகையில் ஒரு கோழி வந்து அவன் ஏறியிருந்த யானையின் தலைநெற்றியில் கொத்த யானை பின்வாங்கியது. யானையோ மிகப்பெரிய

உருவம், கோழியோ சிறியது. ஆயினும் கோழீ யானையை எதிர்த்ததையும், யானை பின்வாங்கியதையும் கண்ட அரசன் இத்தலத்தின் சிறப்பை அறிந்து இத்தலத்திலேயே நகரத்தை ஏற்படுத்தி தங்கியதால் உறையூர் கோழியென்றும், கோழியின் மூக்கால் யானை கொத்தப் பெற்ற விடத்திலிருப்பது பற்றி இத்தலம் முக்கீச்சரமென்றும் வழங்கலாயின. சிலப்பதி காரத்திலும் இச்செய்தி காணப்படுகிறது. இவ்வரலாற்று உண்மையை இக்கோவிலில் சிற்பமாகவும் உள்ளது.

கருடன், காசிபர் மனைவி கத்துரு, அவர்கள் மகன் கார்க்கோடகன் பூசித்த தலம்.

புகழ்ச்சோழ நாயனாருடைய தலம். கோச்செங்கட் சோழ நாயனாரும், புகழ்ச்சோழ நாயனாரும் வீடுபேறு அடைந்த ஊர். மூவேந்தரும் சேர்ந்து வந்து வணங்கிய சிறப்புடைய தலம். சூரவாதித்தன் என்னும் சோழ மன்னனால் இக்கோவில் திருப்பணி செய்யப்பட்ட தலம்.

கருவறையின் வெளிப்புறச்சுவரில் மிகுந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. இறைவனின் பல்வகை நடனச் சிற்பங்கள் கலையழகுடன் விளங்குகின்றன. ஐந்து பெண்கள் உருவங்களைக் கொண்டு அமைந்த குதிரைச் சிற்பம் காணத்தக்கது. அம்பாள் கருவறை வெளிப்புறத்தில் யானைமுகம், மனித உடல், பறவை கால் கொண்ட விசித்திரமான சிற்பம் ஒன்றும் உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 5 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்தும் பாடியுள்ளார். அருணகிரிநாதர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார். திருப்புகழ் வைப்புத் தலமாகப் போற்றப்படு கிறது. இத்தல புராணம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடியுள்ளார்.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. பிரமோற்சவம் வைகாசி மாதத்தில் நடைபெறுகிறது.

3. திருவானைக்கா

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார் ஏதுமேத மில்லையே

-- திருஞானசம்பந்தர்.

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 3கி.மீ. ஆனைக்கா, திருவானைக்காவல், ஜம்புகேசு வரம், கஜாரண்யம், ஞானக்ஷேத்திரம், தந்திபுகாவாயில், அப்புத்தலம். காவிரி கொள்ளிடம் என்னும் ஒரு நதிகளுக்கு இடையில் இக்கோவில் 18-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 பிராகாரங்களில் நான்காவது பிராகார மதில் திருநீற்று மதில் இம்மதில் 35அடி உயரமும் 6 அடி கனமும் கொண்டு கிழக்குமேற்காக 2436 அடியும் தென்வடக்காக 1493 அடியும் கொண்டு, கிழக்கு நோக்கிய 13 நிலை இராஜ கோபுரமும் மேற்கு நோக்கிய 7 நிலை கோபுரங்களும் கொண்டு மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு ஜம்புகேசுவரர். மேற்கு நோக்கியும், அம்மன் தனிச்சன்னிதியில் இரண்டு பிராகாரங்களுடன் கிழக்கு நோக்கியவாறு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி காட்சியளிக்கிறார். தலவிருட்சம் வெண் ணாவல் மரம். கருப்பக் கிருகத்திற்கு அருகில் விளங்குவது. தீர்த்தங்கள் காவிரி, பிரம, இந்திர, சம்பு, இராம, அக்கினி,



அகத்திய, சூரிய, சந்திர முதலிய ஒன்பது தீர்த்தங்கள்.

பிரமன், திருமால், திக்குப்பாலகர், அஷ்டவசுக்கள், சம்புமுனி, அம்பிகை, சிலந்தி, யானை, இராமர், பராசரன், கோச்செங்கணான், உறையூர்ச் சோழன் முதலியோர் வழிபட்ட தலம்.

பஞ்சபூதத்தலங்களில் அப்புத் தலமாக விளங்குவது. ஆறு ஆதாரத் தலங்களுள் இத்தலம் சுவாதிஷ்டானத்தலம். யானை மற்றும் சிலந்தி பூசித்துப் பேறு எய்தியதால் ஆணைக்கா எனவும், வெண்ணாவல் மரத்தின் கீழ் இறைவன் வீற்றிருந்ததால் ஜம்புகேசுவரம் என்றும், அம்பிகை நீரால் அமைத்து வழிபட்ட சிவலிங்க மூர்த்தியாகக் கொண்ட தலம்.

இத்தலத்துப் பெருமானைத் தரிசிப்பதற்காகவே ரங்கநாதர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருப்பதாக கஜாரண்ய க்ஷேத்திர மகாத்மியத்தில் கூறுகிறது. அதற்கேற்ப வருடத்தில் ஒருநாளில் பெருமாள் புறப்பட்டு வந்து தங்கி இருந்து அன்றிரவு விசேஷ அலங்காரத்துடன் திரும்புவது வழக்கம்.

சுவாமி சன்னிதியில் ஒன்பது வாயில் சாளரம் உள்ளது. அதன் வழியே சுவாமியைத் தரிசித்தால் ஒன்பது தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கும்.

மூலஇலிங்கத்தில் இன்றும் நீர் ஊறுவதைக் காணலாம். சக்திக்குரிய தலங்களுள் ஒன்று. கோக்செங்கட்சோழன் கட்டிய 70 மாடக் கோவில்களில் இத்தலம் முதன்மையானது.

இறைவனே சித்தராக எழுந்தருளி வந்து திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக் கட்டப்பெற்ற திருநீற்றுமதில் என்னும் சிறந்த மதிலைக் கொண்டது.

சோழன் ஒருவன் காவிரிநதியில் நீராடும்போது அவன் கழுத்தில் அணிந்த முத்துமாலை காவிரியில் தவறிவிழ, அம்மாலை திருமஞ்சனக் குடத்தின் மூலமாக இறைவன் கழுத்தில் வரப்பெற்றது.

தினமும் கோபூஜை நடைபெறுகிறது. சுவாமிக்கு தினமும் அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. உச்சிக்காலப் பூஜையின்போது அம்மன் கோவில் அர்ச்சகர் பெண் வேடந்தரித்து இறைவனைப் பூஜிப்பார்.

ஆதிசங்கரர் இத்தல அம்பிகைக்குத் தாடங்கப் பிரதிட்டை செய்துள்ளார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 60 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய திருப்பதிகங்களும், ஐயடிகள் காடவர்கோன் இயற்றிய க்ஷேத்திரத் திருவெண்பா, அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ், தாயுமானசுவாமிகள், காளமேகப் புலவர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தலபுராணம் பாடிய ஸ்ரீ கச்சியப்ப முனிவர், தந்திவனப்புராணம் இயற்றிய கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் முதலியோர் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளனர்.

கல்வெட்டுக்கள் 154 உள்ளன. சோழ, பாண்டிய, ஹொய்சவர், விஜயநகர், மதுரை நாயக்கர் இவர்கள் காலங்களில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் உள்ளன.

பிரமோற்சவம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் தொடங்கிப் பங்குனியோடு 40 நாள் வரை நடைபெறுகிறது.

மேலும் இக்கோவிலைச் சேர்ந்த சுற்றுக்கோவில்களாக 4ஆம் பிராகாரத்தில் வடக்குத் தெருவில் உள்ள இராஜராஜேசுவர் கோவிலில் உள்ள மூலலிங்கம் 5 முகங்களுடன் கூடிய்து. கோவிலுக்கு மேற்கே உள்ள இராமதீர்த்தத்திற்கு மேற்கில் இராமரால் பிரதிட்டை செய்யப்பட்ட நீலவிண்டீசுவரர் கோவிலும், மூன்றாம் பிராகாரத்தில் சம்புதீர்த்தத்துக்குப் பக்கத்தில் பழைய ஜம்புகேசுரர் என்று அழைக்கப்படும் சங்கரேசுவரர் கோவிலும், 5ஆம் பிராகாரத்தில் தென் கிழக்கு முலையில் பிடாரி கோவிலும், தென்மேற்கில் வீரபத்திரசாமி கோவிலும் உள்ளது. கோவிலுக்கு உட்கோவில்களில் மும்மூர்த்தி கோவில், காசிவிஸ்வநாதர், மீனாட்சி சுந்தரேசுவரர், பாலதண்டாயுதபாணி, சனீஸ்வரர் முதலிய உட்கோவில்களும் உள்ளன.

4. பனையபுரம்

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
யாரா ராதி முதல்வரே

-- திருஞானசம்பந்தர்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வடகிழக்கே 12கி.மீ. திருப்பாற்றுறை, திருப்பாலத்துறை. காவிரி , கொள்ளிட நதிகளுக்கு இடையே இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் 20 அடி உயர 3 நிலை இராஜகோபுரமும், ஒரு பிராகாரத் துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமூலநாதர் கிழக்கு நோக்கியும், அம்மன் நித்தியகல்யாணி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் கொள்ளிடம் உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், மகாலஷ்மி, பைரவர், வீணாதட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர், துர்க்கை, நால்வர், கைலாசநாதர், வேணுகோபாலர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

மார்கண்டேயர் பூசைக்குப் பால் இல்லாமையால் வருந்தியபோது சிவபெருமான் அருளால் பால் பெருகிய தலம் ஆதலால் பாற்றுறை எனப் பெயர் பெற்றது.

முன்பு இவ்வூரில் பெரிய எறும்புப் புற்றுக்கு அடியில் மார்க்கண்டேயருக்கு அருளிய இலிங்கம் புதைந்திருந்தது. இவ்விடத்தில் பொன் மயமான பறவையொன்று அடிக்கடி வந்து வட்டமிடுவ்தைச் சோழமன்னன் ஒருவன் கண்டான். உடனே இவ்விடத்தினடியில் ஏதோ சிறப்பான பொருளொன்று இருக்கக்கூடும் என்று அவ்வெறும்புப் புற்றையகற்றி மண்ணைப் பறிக்குமாறு மன்னன் ஆணையிட்டான். மண்ணைப் பறிக்கையில், மண்வெட்டி அடியில் புதைந்திருந்த இலிங்கத்தின் மீது பட்டு அதனைச் சிறிது சிதைக்கவே, காயம்பட்ட இடத்திலிருந்து பால் பெருகி வரத்தொடங்கியது. பால் பொழியுமாறு வெளிபட்ட இலிங்கத்தைப் பிரதிட்டை செய்து இவ்விடத்திற்கு திருப்பாற்றுறை என்று பெயர் வழங்கப்பட்தாக இவ்வூர்த் தலபுராணம் கூறுகிறது.

தோவரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரைத் தலங்களில் இத்தலம் 59 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

கல்வெட்டுக்கள் 37 உள்ளன. நந்திவர்மன் காலத்துக்கு முற்பட்ட இக்கோவில் முதற்பராந்தகன் காலத்தை யொட்டிப் புதுப்பிக்கப்பட்ட நிலை குலையாமலேயே இன்றுவரை உள்ளது. கல்வெட்டில் இவ்வூரை கொள்ளிடத்துத் தென்கரைநாட்டுப் பிரமதேயமான உத்தம சீலி சதுர்வேதி மங்கலத்துத் திருப்பால்துறை என விக்கிரமசோழன் காலத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரை அன்று உற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

5. திருப்பராய்த்துறை

நிறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே

-- திருஞானசம்பந்தர்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வடமேற்கே 15கி.மீ. பராய்த்துறை, தாருகாவிருக்ஷம், தாருகாவனம். அகண்டகாவிரித் தென் கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் 100 அடி உயர 7 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பராய்த்துறைநாதர், தாருகாவ னேஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் பசும்பொன் மயிலம்மை தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலவிருட்சம் பராய் மரம். தீர்த்தம் காவிரி.

காவிரிக்கரையில் பராய்மரக் காடுகளில் இறைவன் எழுந்தருளி விளங்கும் காரணம் பற்றி இத்தலம் பராய்த்துறை எனப்பெற்றது.

இத்தலத்தில் இறைவன் பிக்ஷாடன ராய்ச் சென்று முனிவர்களின் தன் முனைப்பை அகற்றி அவர்கட்குக் காட்சி கொடுத்தருளியது. தவம் செய்வதற்கு இம்மரநிழல் சிறந்தது எனக் கூறுவர். பண்டைக் காலத்தில் தாருகாவனம் என்ற பெயருடையதாய் இத்தலம் விளங்கியது.

இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் முதலியோர் பூசித்து வரங்கள் பலவும் பெற்றுள்ள தலம்.

ஐப்பசி மாதம் முதல் தேதியன்று இறைவன் இடபவாகனத்தில் அம்பிகை யோடு எழுந்தருளிக் காவிரிக் கரையில் தீர்த்தம் கொடுத்தருளுவார்.

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 3 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகம் பெற்றது. மணிவாசகரும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார் அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ் பெற்ற தலம்.

கல்வெட்டுக்கள் 83 உள்ளன. முதற்பராந்தகன், இராஜகேசரிவர்மன், சுந்தர பாண்டியன், கோநேரின்மைகொண்டான், கிருஷ்ணதேவ மகாராயர் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை உத்தம சீலிச் சதுர்வேதி மங்கலத்துக் திருப்ப ராய்த்துறை என்றும், இறைவர் திருப்பராய்த்துறை மகாதேவர், பராய்த்துறை பரமேசுவரன் என்று குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் நான்கு கால பூஜை. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூர்க்கு அருகில் உள்ள அனலையில் 55 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர் திருக்கோவில் உள்ளது.

6. உய்யக்கொண்டான் திருமலை

விடையா ருங்கொடியாய் வெறியார்மலர்க் கொன்றையினாய்
படையார் வெண்மழுவா பரமாய பரம்பரனே
கடியார் பூம்பொழில்சூழ் திருக் கற்குடி மன்னிநின்ற
அடிகே ளெம்பெருமான் அடி யேனையும் அஞ்சலென்னே

-- சுந்தரமூர்த்தி.

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 3கி.மீ. திருக்கற்குடி, கற்குடி. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவு கொண்ட 50 அடி உயரமுள்ள சிறிய மலையின் மீது கிழக்கு மேற்காக 300 அடியும், தென்வடக்கே 600 அடியும் அமைந்து மேற்கு நோக்கியதும், 20×16 அடித்தளம் 25 அடிஉயரம் கொண்ட 3 நிலை இராஜகோபுரம், 5 பிராகாரங்

களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு உஜ்ஜீவனநாதர். அம்மன் அஞ்சனாட்சி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் பொன்னொளிர் ஒடை, குடமுருட்டி, ஞானவாவி, எண்கோணக்கிணறு, நாற்கோணக்கிணறு என ஐந்து தீர்த்தங்கள் உள்ளன.

கற்குடி என்பதற்கு இறைவன் கல்லைக் குடியாகக் கொண்ட இடம் என்பது பொருள். ஆன்மாக்களை உய்யக் கொள்வதற்கு எழுந்தருளிய பெருமானின் இருப்பிட மாதலின் உய்யக்கொண்டான் திருமலை எனப் பெயர் பெறும்.

உபமன்யு முனிவர், மார்க்கண்டேயர், கரன், சுந்தரர், அருணகிரிநாதர் முதலியோர் வழிபட்ட தலம்.

மார்க்கண்டேயர்க்கு இறைவனளித்த வயது பதினாறு இதனைத் தந்தையார் கூற அறிந்த மார்க்கண்டேயர் பல தலங்களுக்கும் சென்று சிவபெருமானை வழிபட்டார். இத்தலத்தையடைந்து வழிபடும்போது வயது பதினாறு நிறைவுற்று. மார்க்கண்டேயர்க்குச் சிரஞ்சீவித் தன்மை வழங்கியருளுமாறு அம்பிகை இறைவனிடம் பிரார்த்தித்தாள் இறைவனும் அவ்வாறே அருளினார்.

இராவணனுடைய சகோதரர்களின் ஒருவன் கரன். கரன் இத்தல இறைவனை வழிபட்டு அருள்பெற்றான்.

இக்கோவிலுக்கு மூன்று வாயில்கள் உள்ளன. இரண்டு தெற்குநோக்கியும், ஒன்று கிழக்கு நோக்கியும் உள்ளன. சுவாமி, அம்மன் சன்னதிகள் மேற்கு நோக்கியவை. திருக்கோவில்களின் கொடுங்கைகள் மிக்க அழகுடையன. இத்தலத்தில் வசிப்போர் நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வங் களையும் பெறுவர், வழிபடுவோர்க்கு எமபயமில்லை எனத் தலபுராணம் கூறுகிறது. தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் 4 வது தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலியோர் திருப்பதிகங்கள் பெற்றது. அருணகிரிநாதரின் திருப்புகழும், மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய கற்குடிமாமலைமாலையும் இத்தலத்திற்கு உரியது.

கல்வெட்டுக்களில் முதல் பராந்தகன், உத்தமசோழன், முதல் இராஜராஜன், முதல் பரகேசரி இராஜேந்திரன், இராஜகேசரி வீரராஜேந்திரன்,முதல் இராஜகேசரி குலோத்துங்கன்,மல்லிகார்ச்சுன மகாராயன், மயிலைத்திண்ணன் முதலிய மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை பாண்டிய குலாசனி வளநாட்டு ராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலத்துக் கற்குடி எனவும், இறைவர் திருக்கற்குடி பரமேஸ்வரர், உய்யக் கொண்ட நாயனார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தின் சுற்றுக்கோவில் களாவன ஆளுடையார் கோவில், இடர்தீர்த்தவர் கோவில் எனவாகும்.

தினமும் மூன்றுகால பூஜை. பங்குனி மாதத்தில் பிரமோற்சவம். இக்கோவில் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்கு சொந்தமானதாகும்.

7. திருவெறும்பூர்

விரும்பி யூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பி னூறல்கண் டாய்கலந் தார்க்கவன்
இரும்பி னூறல றாததோர் வெண்தலை
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே

-- திருநாவுக்கரசர்.

திருச்சிராப்பள்ளிக்கு கிழக்கே 11கி.மீ. திருஎறும்பியூர், பிரமபுரம், லக்ஷ்மிபுரம், மதுவனபுரம், இரத்தினகூடம், மணிகூடம், குமரபுரம், தென்கயிலாயம், பிப்பிலீசுவரம் என அழைக்கப்பெறும் இத்திருக்கோவில் கிழக்கு நோக்கியவாறு 120 அடிஉயரம், 115 படிகள் கொண்டு மலைமேல் 80 செண்ட நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 243 அடியும், தென்வடக்காக 144 அடி

அகலம் கொண்டு இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு எறும்பீசுவரர். சற்று வடபுறம் சாய்ந்து கிழக்கு நோக்கியுள்ளார். அம்மன் கோவில் தெற்கு வடக்காக 48 அடி நீளமும், 36 அடி அகலமும் கொண்டு இரண்டாம் பிராகாரத்தில் தனிசன்னிதியில் தெற்கு நோக்கி அருள்மிகு நறுங்குழல் நாயகி காட்சியளிக்கிறாள். தலவிருட்சம் வில்வம், தீர்த்தம் பிரம, பதும, மது, குமார என நான்கு தீர்த்தங்கள் உள்பிராகாரத்தில பாலசந்திர விநயாகர், சோமாஸ்கந்தர், முருகர், நால்வர், இலக்குமி, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

தேவர்கள் எறும்பு உருவம் எடுத்துப் பூசித்த காரணத்தால் எறும்பியூர் என இத்தலம் வழங்கப்பெறுகிறது.

ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் ஏற்பட்ட வலிமைப் போட்டியில் வாயுதேவன் மேருவின் முக்கிய சிகரங்களில் ஒன்றைத் திருவெறும்பியூரில் இட்டதனால் இம்மலையே திருவெறும்பியூர் மலை எனத் தலபுராணம் கூறுகிறது.

பிரமன், திருமால், திருமகள், இரதி, இந்திரன், அக்கினி, முருகன், அகத்தியர், நைமிச முனிவர்கள் முதலியோர் வழிபட்டு அருள் பெற்ற தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 7 வது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. திருவெறும்பியூர்ப் புராணம் உள்ளது.

கல்வெட்டுக்கள் 49 உள்ளன. முதலாம் ஆதித்த சோழன் கண்டராதித்தன், சுந்தரசோழன், முதலாம் இராசராசன் முதலானோர் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவர் திருமலை ஆழ்வார், திருவெறும்பியூர் ஆழ்வார் நாயனார் ஸ்ரீ கண்ட சதுர்வேதி மங்கலத்துத் தென்கயிலாயத்து மகாதேவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

தினந்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மூல லிங்கத்துக்கு மட்டும் தண்ணீர்ப் படாமல் அபிஷேகம் நடைபெறுகிறது. ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் வளர்பிறையில் புனர்பூசநாளில் திருவிழா தொடங்கி, விசாக நாளில் தீர்த்தவாரியும், அடுத்த நாட்களில் பல்லக்கு, தெப்பவிழாவும் நடைபெறுகிறது.

இத்தலத்தைச் சுற்றியுள்ள கோவில்கள் கைலாசநாதர் கோவில், அடிவாரத்தில் விநாயகர் கோவிலும், அனுமார் கோவிலும், அரசுகாத்தம்மன் கோவிலும் உள்ளது.

8. திருநெடுங்களம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே

-- திருஞானசம்பந்தர்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து கிழக்கே 21கி.மீ. திருநாட்டான்குளம், ஒளிமதிச் சோலை. காட்டாற்றின் தென் கரையில் இக்கோவில் 2-45 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கியதும், 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நெடுங்களநாதர் எனவும் நித்திய சுந்தரேசுவரர் எனவும் வழங்கப் பெறுகிறார். அம்மன் ஒப்பிலாநாயகி. தலமரம்-வில்வம். தீர்த்தம்-சுந்தர தீர்த்தம் கோவிலுக்கு முன்உள்ள திருக்குளம் உள்பிராகாரத்தில் வலம்புரி விநாயகர், முருகன், சோமாஸ்கந்தர், சப்தகன்னியர், ஐயனார்,

அகத்தீசுவரர், நடராஜர், துர்க்கை, நால்வர், சூரியன், பைரவர், வரதராசப்பெருமாள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

அன்னை பராசக்தி சிவபரம் பொருளை நோக்கி இத்தலத்தில் தவம் செய்தாள். பெருமான் கள்ள உருவத்தில் தோன்றித் தேவியின் கைத்தலம் பற்றினார். அன்னை அச்சமுற்று, தாழைகள் நிறைந்த சோலையில் புகுந்து ஒளிந்தாள். இறைவனும் பின் தொடர்ந்து அம்பிகையை ஆட்கொண்டு அவளையும் உடன் அழைத்துக்கொண்டு திருக்கயிலை சென்றார் என்பது இத்தலத்தின் சிறப்பு வரலாறு. அன்னை ஒளிந்த இடம் ஒளிமதிச்சோலை என்ற பெயரோடு திகழ்கிறது. அகத்தியர் வழிபட்டு அருள் பெற்ற தலம், வங்கிய சோழ மன்னனுக்கு இத்தல இறைவன் தன் பேரழகைக் காட்டி அருள்புரிந்த தலம்.

இத்தலத்தில் அற்புத யோகதட்சிணா மூர்த்தி இடதுகாலை மடக்கிய நிலையிலும் அதன்மேல் வலக்காலை மடக்கி அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார்.

ஆடிமாதத்தில் நாள்தோறும் காலை சூரியன் இறைவன் மீதுபடும் அற்புதக் காட்சியைக் காணலாம். மூலவரின் விமானங்கள் இரண்டாக அமைந்துள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 8 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர். ஐயடிகள் காடவர்கோன் நாயனார் க்ஷேத்திரத் திருவெண்பாவிலும், அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடலும் இத்தலத்திற்கு உண்டு.

இத்தலத்தில் 30க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. பரகேசரிவர்மன் முதல் இராஜராஜன், மூன்றாம் குலோத் துங்கன், ஜடாவர்மன், சுந்தர பாண்டியன், ஹொய்சாள மன்னர்கள், விஜயநகர மன்னர்கள், உடையார் மற்றும் நாயக்கர் கால கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை மாண்டிகுலாசனிவளநாட்டு வடவீரநாட்டுத் திருநெடுங்குளம் என்றும், தியாகவல்லி சதுர்வேதிமங்கலம் என்றும் இறைவர் நெடுங்களநாதர், சோலைவனமுடை நாயனார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

9. பேட்டைவாய்தலை

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே 23கி.மீ. வேட்டுவாய்தலை. காவிரி ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மார்த்தாண்டீஸ் வரர், அம்மன் பாலாம்பிகை. இக்கோவில் மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் கட்டப்பெற்றதாக கல்வெட்டில் குறிப்பிடப் படுகிறது. நான்கு கால பூஜை. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

10. அந்தநல்லூர்

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே 13கி.மீ. ஆலந்துறை. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வடதீர்த்தநாதர். அம்மன் பாலசுந்தரி. தீர்த்தம் காவிரி.

காவிரி ஆலமரத்துறையில் இத்தலம் விளங்கியதால் ஆலந்துறை என வழங்கப் பெற்றாதல் வேண்டும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்தை வழிபட்டார் என பெரியபுராணம் கூறுகிறது. தேவார வைப்புத் தலங்களில் இத்தலமும் ஒன்று.

11. கொடியாளம்

திருச்சிராப்பள்ளிக்கு தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் ருத்திரகோட்டீஸ்வரர். அம்மன் பகவதியம்மன்.

12. திருசெந்துறை

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே 12கி.மீ. செந்துறை. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 57 செண்ட்

நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சந்திரசேகரர். அம்மன் மான்ஏந்தியவல்லி. தலவிருட்சம் பலா. தீர்த்தம் காவிரி.

திருஞானசம்பந்தர் இத்தலத்தை வழிபட்டு திருக்கற்குடிக்கு சென்றார் என பெரியபுராணம் கூறுகிறது. இத்தலங்கள் புராணத் தலங்களாகக் கொள்ள வேண்டும்.

இத்தலமூலலிங்கம் பலாப்பழம் போல் பாணம் காணப்படுகிறது. அம்மன் பெய ருக்குகேற்ப நாற்கரங்களில் இருகரங்களில் மான், மழு ஏந்திக் காட்சிதருகிறார். தலவிருட்சத்தில் கிடைக்கும் பலா பழத்தை மக்கள் உண்பதில்லை. குரங்கு களுக்கு உணவாக விட்டுவிடுகின்றனர். தக்ஷிணா மூர்த்திக்குப்பின் இடபாருடர் காட்சியளிக் கிறார். முதற்பராந்தகன் காலத்தில் பொறிக்கப் பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன.

13. அல்லூர்

திருப்பராய்த்துறைக்கு கிழக்கே 7கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 52 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பஞ்சவரனேஸ்வரர். அம்மன் தர்மசம் வர்த்தினி. அருகில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் பசுபதீஸ்வரர் அம்மன் பார்வதி.

14. பாலூர்

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே 11கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

15. கம்பரசம்பேட்டை

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 5கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 55 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் தர்மாம்பாள்.

16. உத்தமசேரி

திருப்பாலத்துறைக்கு கிழக்கே 2கி.மீ. காவிரி, கொள்ளிடம் இரு நதிகளுக்கு இடையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

17. அரசங்குடி

திருப்பாலத்துறைக்கு தெள்கிழக்கே 8கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மருதபுரீஸ்வரர். அம்மன் கருணாம் பிகை.

18. பனையகுறிச்சி

திருச்சிராப்பள்ளிக்கு வடகிழக்கே 5கி.மீ. காவிரி ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி.

19. தேவதானம்

திருச்சிராப்பள்ளிக்கு வடகிழக்கே 4கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தியநாதர். அம்மன் பாலாம்பிகை.

20. பாண்டமங்கலம்

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே 4கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர் திருக்கோவிலும், அருகில் 28செண்ட் நிலப்பரப்பளவில் ஏகாம்பரர், அம்மன் காமாட்சியம்மன்.

21. சோமரசம்பேட்டை

உய்யக்கொண்டான்திருமலைக்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

22. குமாரவயலூர்

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 9கி.மீ. அக்னீசுவரர் கோவில், ஆதிவயலூர், வயலூர். காவிரி ஆற்றின் தென்பகுதியில்

இக்கோவில் 64 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆதிநாதர். அம்மன் ஆதிநாயகி. தீர்த்தம் சக்தி தீர்த்தம். தலவிருட்சம் வன்னிமரம். உள்பிராகாரத்தில் நடராஜர், அருணகிரிநாதர் முதலிய சன்னிதிகள். அருணகிரிநாதர் இத்தல முருகப் பெருமான் மீது 18 திருப்புகழ் பாடல்கள் அருளியுள்ள தலம். அருணகிரிநாதரை திருவண்ணாமலையில் தடுத்தாட் கொண்ட முருகப்பெருமான் வயலூருக்கு வா என அருள்வாக்கு அளித்தபடி முதன்முதலில் அருணகிரிநாதர் வந்த தலம்.

கல்வெட்டுக்களில் ஆதித்தசோழன், பராந்தகச் சோழன், உத்தமசோழன், இராஜராஜ சோழன் முதலிய மன்னர்கள் கால கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோவிலை திருக்கற்றளிப் பரமேசுரர் கோவில் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

தினமும் நான்கு கால பூஜை. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

23. மருதாண்டகுறிச்சி

உய்யக்கொண்டான் திருமலைக்கு வடக்கே 3கி.மீ. இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர். அருகில் உள்ள எகிரி மங்கலத்தில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் திருமாங்குலநாதர் அம்மன் சிவகாமியம்மை.

24. எட்டரை

திருப்பராய்த்துறைக்கு தென்கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் அக்னீஸ்வரர்.

25. சோழங்கநல்லூர்

உய்யக்கொண்டான்திருமலைக்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

26. கூத்தாப்பர்

திருவெறும்பூர்க்கு வடகிழக்கே 3கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மத்தியார்சுனேஸ்வரர். அம்மன் ஆனந்தவல்லி.

27. கீழ்கல்கண்டார்கோட்டை

ஆலத்தூர்க்கு தெற்கே 2கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரேஸ்வரர்.

28. துவாகுடி

திருவெறும்பூர்க்கு தென்கிழக்கே 5கி.மீ. காட்டாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர். அம்மன் கோமளவல்லி.

29. ஆலத்தூர்

திருவெறும்பூர்க்கு மேற்கே 3கி.மீ. காட்டாற்றின் கரையில் இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அமிர்தகடேசுவரர். அம்மன் ஆனந்தவல்லி.

30. அழுந்தூர்


திருச்சிராப்பள்ளிக்கு தென்மேற்கே 17கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

31. சூரியூர்

திருவெறும்பூர்க்கு தெற்கே 14கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதிமூர்த்தீஸ்வரர். அம்மன் பாலசுந்தரியம்மன்.

8கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமநாதர் அம்மன் சுந்தரவல்லியம்மன்.

லால்குடி வட்டம்
(திருச்சிராப்பள்ளி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. அன்பில்

வானஞ் சேர்மதி சூடிய மைந்தனை
நீநெஞ் சேகெடு வாய்நினை கிற்கிலை
ஆனஞ் சாடியை அன்பிலா லந்துறைக்
கோன்எஞ் செல்வனைக் கூறிட கிற்றியே

-- திருநாவுக்கரசர்.

லால்குடியிலிருந்து கிழக்கே 8 கி.மீ. அன்பிலாந்துறை, கீழன்பில். கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் கிழக்கு நோக்கிய இராஜகோபுரத்துடன், பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சத்தியவாகீஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி. தலமரம்-ஆலமரம். தீர்த்தம் காயத்திரி தீர்த்தம்.

ஊர்ப்பெயர் அன்பில், கோவிலின் பெயர் ஆலந்துறை. பிரமன், வாகீச முனிவர் பூசித்த தலம். இக்கோவிலில் உள்ள விநாயகர் செவிசாய்த்த விநாயகர். கொள்ளிடத்தின் தென்கரையிலிருந்து திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களைச் செவிசாய்த்துக் கேட்டதால் இப்பெயர் பெற்றார். செவிசாய்த்த விநாயகரை அடுத்து சப்தமாதர், பிட்சாடனர், விசுவநாதர், விசாலாட்சி, பைரவர், முருகன் சன்னிதிகள் உள்ளன. துவாரபாலகர் அருகில் பிரமன் வழிபடும் சிற்பம் காணப்படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 57 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது.

இவ்வூர்க்கு அருகில் மேல் அன்பில் உள்ள 108 திவ்விய தேசத்தில் ஒன்றான வைணவ கோவிலாக அழகிய நம்பி சுந்தரராஜப் பெருமாள் கோவில் உள்ளது.

2. திருமாந்துறை

செம்பொ னார்தருவேங்கையும் ஞாழலுஞ் செருந்திசெண் பகம் ஆனைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை குருந்தலர் பரந்துந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகின்ற
எம்பி ரானிமை யோர்தொழு பைங்கழல் ஏத்துதல் செய்வோமே.

-- திருஞானசம்பந்தர்.

லால்குடியிலிருந்து மேற்கே 5 கி.மீ. மாந்துறை, வடகரைமாந்துறை, ஆம்பிர வனம். இக்கோவில் கிழக்கு நோக்கிய மூன்று நிலை இராஜகோபுரமும், பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆம்பிரவனேசுவரர். அம்மன் அழகம்மை தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலமரம்-மாமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், நவகோள்கள் சன்னிதியும், கோஷ்ட மூர்த்தங்களும் உள்ளன.

சூரியன், சந்திரன், கண்ணுவர், மிருகண்டு முனிவர் பூசித்த தலம். மிருகண்டு முனிவர் இறைவனை வழிபடும் ஓவியங்கள் இக்கோவிலில் உள்ளன. கோவிலுக்கு முன்பக்கம் காவல் தெய்வம் உள்ளது. கோபுரத்தில் மகாவிஷ்ணுவின் அம்சமாகிய ஒரு பேயின் பிம்பம் உள்ளது.

மேற்குப் பிராகாரத்தில் முருகப் பெருமான் ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு தேவியர் உடன்

விளங்க கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் 5 அடி உயர கம்பீரமாக காட்சியளிக்கிறார். தனிச்சன்னிதியில் தண்டாயுதபாணி உள்ளார். இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழில் ஒரு பாடல் அருளியுள்ளார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 58 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

3. திருப்பைஞ்ஞீலி

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்தும்பைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே.

-- திருநாவுக்கரசர்.

மண்ணச்சநல்லூர்க்கு வடமேற்கே 8கி.மீ. பைஞ்ஞீலி, கதலிவனம், நீலிவனம், விமலாரண்யம். கொள்ளிடம் ஆற்றின் வடகரைப் பகுதியில் இக்கோவில் 12-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஐந்து பிராகாரங் களுடன் மொட்டை கோபுரம் மற்றும் இராவணன் திருவாயில் கோபுரம் 37அடி உயரம் கொண்ட 3 நிலை கொண்டு, மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நீலகண்டேச்சுரர். அம்மன் விசாலாக்ஷி யம்மை. தலவிருட்சம் கல்வாழை.

இத்தலத்தில் இரு அம்மன் சன்னிதிகள் உள்ளன. சுவாமிக்கு இடப்புறம் கிழக்கு நோக்கியுள்ள சன்னிதி பிரதான அம்மன் சன்னிதி. இக்கோவிலின் மதிலின் மேல்தளம் புலிவரிக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இப்புலிவரிக் கற்கள் இப்பகுதியில் மட்டுமே கிடைக்கிறது.

வாழை இத்தலத்திற்குரிய விருட்ச மாதலின் இத்தலம் கதலிவனம் என்றும் பெயர். நீலிச்செடியும் இத்தலத்திற்குரியது.

வசிட்டர் முனிவருக்கு இறைவன் நடனக்காட்சியருளிய இடம். எனவே இத்தலம் மேலைச் சிதம்பரம் எனவும் வழங்கப்படுகிறது.

அப்பர் பெருமானுக்கு இறைவன் அந்தணர் வடிவில் வந்து பொதிசோறு அளித்துப் பசியைப் போக்கிய தலம்.

திருவானைக்காவிற்குரிய சப்தஸ்தானங் களில் இத்தலமும் ஒன்றாகும். ஆரணியவிடங்கர், விடங்கவேடம்.

இத்தலத்திற்குரிய தலமரமான நீலி என்னும் ஒருவகை வாழை இப்பகுதியைத் தவிர வேறெங்கும் பயிராவது இல்லை. இம்மரத்தின் இலை, காய், கனியாவும் இறைவனுக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. மக்கள் பயன்படுத்தினால் பயன்படுத்தியோர் நோய்க்கு உள்ளாவர் எனக் கூறுகின்றனர்.

இத்தலத்தில் நவகிரகங்கள் விக்கிரகங்களுக்குப் பதிலாக ஒன்பது அகல்விளக்கு தீபங்களாக வழிப்படப்படுகின்றன.

இத்தலத்தில் எமதர்மன் தனிச் சன்னிதியில் காட்சியளிக்கிறார்.

வசிஷ்ட முனிவர் ஆணைப்படி இராமபிரான் இத்தல இறைவனை வணங்கி இலங்கைக்கு சென்றார்.

பூதங்கள் பூசித்த தலம். இத்தலத்தில் உள்ளவர்களுக்கு இமன் பயம் இல்லை.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 61 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்

முதலியோர் பதிகம் பெற்றது. தலபுராணம் மதுரை மெய்ப்பாதபுராணிகரால் 25 அத்தியாயம் கொண்ட திருப்பைஞ்ஞீலி தலபுராணம் இயற்றியுள்ளார்.

புரட்டாசி 6,7,8 மற்றும் பங்குனி 6,7,8 தேதிகளில் சூரிய பூஜை நடைபெறுகிறது.

கல்வெட்டுக்கள் உள்ளன. முசுகுந்த சக்ரவர்த்தியால் கட்டப்பெற்ற கோவில். பாண்டிய மன்னர்கள் திருப்பணி செய்த தலம். தினமும் நான்கு கால பூஜை.

சித்திரை மாதத்தில் அப்பர் திருவிழா மிகப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது.

4. திருவாசி

**வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும் நெஞ்சமும் வஞ்சம்ஒன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே ஒத்தோர் நச்சில ராகில் இவரலா தில்லையோ பிரானார்**

-- சுந்தரர்.

பிட்சாண்டார் கோவிலிருந்து மேற்கே 4கி.மீ. திருப்பாச்சிலாச்சிராமம். இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் (300×168), கிழக்கு நோக்கிய 60 அடி உயர 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு மாற்றறிவரதீஸ்வரர். அம்மன் பாலாம்பிகை. தலவிருட்சம் வன்னிமரம், தீர்த்தம் அன்னமாம் பொய்கை.

பாச்சில் கூற்றத்தில் உள்ள ஊர் ஆச்சிராமம் ஆதலின் பாச்சிலாச்சிராமம் எனப்படுகிறது. தற்போது மக்கள் வழக்கில் திருவாசி என வழங்கப்படுகிறது.

கொல்லிமழவன் என்னும் குறுநில மன்னன் மகளுக்குத் தீராமல் இருந்த முயலகன் எனும் வலிப்பு நோயைச் சம்பந்தர் குணப்படுத்திய தலம். ஆவுடையாப்பிள்ளை மண்டபத்தில் சம்பந்தர், கொல்லி மழவன் மகளுக்கு நோய் தீர்த்த வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் உள்ளன.

இத்தலத்தில் நடராசர் ஊன்றிய திருவடியின் கீழ் முயலகனில்லை. சர்ப்பம் மட்டுமே உள்ளது.

உமாதேவியார், பிரமன், லக்ஷ்மி, அகத்திய முனிவர், கமலன் என்னும் வைசியன், கொல்லிமழவன் முதலியோர் இத்தலத்துப் பெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

கமலன் என்னும் வணிகன் மகளான அமலையை இறைவன் மணந்து கொண்ட தலம். சுந்தரர் பொன் பெற்ற தலம். சுவாமி சன்னிதியில் உள்ள மண்டபத்தில் இறைவன் சுந்தரர்க்குப் பொற்கிழி அளித்தார். இவ்விடம் கிழிகொடுத்தருளிய திருவாசல் எனக் குறிக்கப்படுகிறது. இங்குள்ள சுந்தரர் கையில் தாளத்துடன் உள்ளார்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரைத் தலங்களில் இத்தலம் 62 வது. திருஞானசம்பந்தர், சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய க்ஷேத்திர திருவெண்பாவில் ஒரு பாடல் உள்ளது.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. ஹொய்சால, சோழ, பாண்டிய, நாயக்கர் போன்ற மன்னர்களால் திருப்பணிகள் செய்யப் பெற்ற தலம்.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதம் பௌர்ணமி தொடங்கி 11 நாட்கள் பெருவிழா நடைபெறுகிறது.

5. துடையூர்

திருவாசிக்கு அருகில் அய்யனாற்றின் தென்கரையில் இக்கோவில் 90 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு கடம்பவனேசுவரர். அம்மன் வீரமங்களேசுவரி. உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், சரசுவதி, வீணாதர தட்சிணாமூர்த்தி, கல்யாணசுந்தரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகப் பாடல்களில் இத்தலத்தை போற்றியுள்ளார்.

இவ்வூரில் யாரையும் விஷஜந்துக்கள் தீண்டுவதில்லை. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

6. லால்குடி

திருச்சிராப்பள்ளிக்குக் கிழக்கே 20கி.மீ. திருத்தவத்துறை. கொள்ளிடம் ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜ கோபுரத்துடன் மேற்கு நோக்கியதும் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு சப்தரிஷீசுரர். அம்மன் பெருந்திருப்பிராட்டியார். தீர்த்தம் சிவகங்கை, சக்கர தீர்த்தம். தலமரம்-அரசமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், பிட்சாடனர், அர்த்தநாரீஸ்வரர், வீணாதட்சிணாமூர்த்தி, ஏழு முனிவர்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

முருகபெருமானால் சாபம் பெற்ற அத்திரி, பிருகு, புலத்தியர், வசிட்டர், கௌதமர், ஆங்கீரசு, மரீசி ஆகிய ஏழு முனிவர்கள் இத்தல இறைவனை வழிபட்டதால் இத்தல இறைவனுக்கு சப்தரிஷீசுவரர் என்றும் தலத்திற்கு திருத்தவத்துறை என்றும் பெயர்.

முகம்மதியர்கள் படையெடுப்பின் போது இத்தலக்கோபுரம் சிவப்புநிறத்தில் இருப்பதனால் இதை லால்குடி என்று தற்போது வழங்கபட்டு வருகிறது.

திருமால், இலக்குமி, முருகன், பைரவி, பராசரர் ஆகியோர் வழிபட்ட தலம். லக்ஷ்மி இத்தல இறைவனை வழிபட்டு திருமாலை மணந்தாள், காளி பைரவி என்ற பெயருடன் இத்தல சிவபெருமானுடன் நாட்டியத்தில் போட்டியிட்டுத் தோற்றாள்.

திருமால் சிவபெருமானைக் குறித்து தவமியற்றிப் பூசனை செய்து சக்ராயுதம் பெற்றார்.

மாளவ நாட்டு மன்னன் தனக்கு ஏற்பட்ட குட்டநோயை இத்தல இறைவன் அருளால் நீங்கப்பெற்றான் என தல வரலாறு கூறுகின்றன.

கருவறையில் நான்கு தூண்கள் காணப்படுகின்றன. அவை அறம், பொருள், இன்பம், வீடு என நான்கைக் குறிப்பதாகும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளித் திருப்பதிகம் பாடிப் போற்றினார் எனச் சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். பதிகம் கிடைக்கவில்லை. அருணகிரிநாதர் இத்தல முருகனைத் திருப்புகழால் போற்றியுள்ளார். பழுவூர் குமாரசாமி முதலியார் இயற்றிய பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழும் இத்தலத்திற்குரியன.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. மூன்றாம் நந்திவர்மன், வரகுணன், பராந்தக சோழன் முதலிய மன்னர்கள் திருப்பணிகள் செய்ததாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தினமும் 6 கால பூஜை. வைகாசியில் பிரம்மோற்சவமும் நடைபெறுகின்றன.

7. பெரம்பை

சிறுகனூருக்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சர்வலோகநாதர்.

8. நெய்குளம்

சிறுகனூருக்கு வடகிழக்கே 7கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாலவிநாதசுவாமி. அம்மன் பாலாம்பிகை.

9. ஊற்றத்தூர்

சிறுகனூருக்கு வடகிழக்கே 8கி.மீ. ஊட்டத்தூர். இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய 7 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுந்தரவனேசுவரர். அம்மன் அகிலாண்டே சுவரி. தீர்த்தம் பிரம்மதீர்த்தம் எனப் பெறும் பெரிய கிணறு. இத்தலத்தில் மிகப்பெரிய நடராஜர் சிவகாமி அம்மன் கற்சிலைகள் வடிவில் காட்சி தருகின்றனர். தனிநந்தி கிழக்கு நோக்கியுள்ளது. நந்திவாயிலிருந்து நந்தியாறு உற்பத்தியாகிறது. 63 நாயன்மார்களின் திருவுருவங்கள் உள்ளன.

திருநாவுக்கரசர் அருளிய இரண்டு திருத்தாண்டங்களில் இத்தலம் குறிக்கப்படு கிறது. தேவார வைப்புத் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஊற்றைப் பதிற்றுப் பத்தந்தாதி பாடியுள்ளார்

இவ்வூர்ப் பகுதி வேளாளர்கள் ஊற்றுநாட்டு வேளாளர்கள் எனப்படு கின்றனர். கல்வெட்டுக்களில் இவ்வூரை ராஜவளநாட்டு ஊற்றத்தூர் எனக் குறிப்பிடுகின்றன.

மாசித்திங்கள் 12,13 தேதிகளில் சூரிய பூஜை நிகழ்கிறது. வைகாசி மாதம் விசாகம் அன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது.

10. கருடமங்கலம்

புள்ளம்பாடிக்கு வடகிழக்கே 16கி.மீ. நந்தியாற்றின் கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் காளத்தீஸ்வரர். அருகில் உள்ள அழுந்தலைப்பூரில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ் வரர்.

11- M.கண்ணனூர்

கல்லக்குடிக்கு வடக்கே 12கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

12. சிறுகளப்பூர்

புள்ளம்பாடிக்கு வடக்கே 12கி.மீ. நந்தியாற்றின் கரையில் இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர். இரண்டாம் குலோத்துங் கனின் 13 வது ஆண்டுக் கல்வெட்டு இவ்வூரைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

13. நம்பக்குறிச்சி

புள்ளம்பாடிக்கு வடக்கே 15கி.மீ. இக்கோவில் நந்தியாற்றின் கரையில் உள்ள மூலவர் சொக்கநாதர். அம்மன் மாரியம்மன்.

14. பெரியகொருக்கை

சிறுகனூருக்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

15. ஓமந்தூர்

மணச்சநல்லூர்க்கு வடக்கே 16கி.மீ. உப்பாற்றின்கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புவாக பெரியசாமி. அம்மன் காமாட்சியம்மன்.

16. வலையூர்

மணச்சநல்லூர்க்கு வடக்கே 14கி.மீ. கூழையாற்றின் கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உடையவர்.

17. பாளையூர்

சிறுகனூருக்கு மேற்கே 8கி.மீ. கூழையாற்றின் கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

18. திருப்பட்டூர்

சிறுகனூருக்கு மேற்கே 3கி.மீ. திருப்பிடவூர். இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர். அம்மன் பிரம்மநாயகி.

பிரமன் பூசித்த சிறப்புடையது. பிரம்மன் தனிச்சன்னிதியில் காட்சியளிக்கிறார். இவ்வாலயத்தில் தனியாக 14 இலிங்கங்கள் உள்ளன. பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலியோர் வழிபட்ட தலம். பதஞ்சலி, வியாக்ரபாதர் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. அம்மன் கோவிலை அடுத்துள்ள வடக்குப் பிராகாரத்தில ஸ்ரீ கைலாசநாதர் கோவில் கல்தேர்வடிவில் அமைந்துள்ளது. இதனைச் சூழ பல சிவலிங்க ஆலயங்கள் உள்ளன.

திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய தேவாரப் பாடல்களில் இத்தலம் போற்றப்படுகிறது. சுந்தரருடன் திருக்கயிலை சென்ற சேமான் பெருமாள் நாயனார் கயிலையில் சிவபெருமான் திருமுன்னர் பாடிய ஆதி உலாவைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்த ஐயனார் இத்தலத்தில் தனிச்சன்னிதியில் காட்சியளிக்கிறார்.

பங்குனி மாத்தில் 14, 15, 16 தேதிகளில் சூரியபூசை நிகழ்கிறது.

இக்கோவிலில் சோழர் காலக் கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

19. சிறுகனூர்

லால்குடிக்கு வடக்கே 18கி.மீ. கூழையாற்றின் கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பள்வில் மூலவர் சிவலோகநாதர்.

20. பெருவளைப்பூர்

கானக்கிளியநல்லூர்க்கு வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். கல்வெட்டில் முதலாம் இராசேந்திரன் காலத்தை சேர்ந்தது. இவ்வூரை கானக்களூர் நாட்டு பெருவளைப்பூர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

21. கானக்கிளியநல்லூர்

புள்ளம்பாடிக்கு வடக்கே 6கி.மீ. கானக்கிளியூர் நந்தியாற்றின் கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சர்வலோகநாதர் சுயம்பு மூர்த்தியாக மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் ஆனந்தவல்லி. தலமரம்-வில்வம்.

மார்க்கண்டேய முனிவரின் சாபத்தால் இந்திரன் கிளி வடிவம் பெற்றுப் பிறகு இத்தலத்தில் உள்ள இறைவனை தானியமணிகளால் அர்ச்சித்து வழிபட்டு சாபம் நீங்கி சுய வடிவம் பெற்ற தலம். இவ்வாறு இந்திரன் கிளி வடிவில் வாழ்ந்து வழிபட்ட ஊராதலால் கானக்கிளியநல்லூர் என்று பெயர்.

மாசிமாதம் 13,14,15 தேதிகளில் மாலையில் சிவலிங்கத்தின் மேல் சூரியக் கதிர்கள் படுவதைக் காணலாம்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. காலத்தால் தொன்மையானது முதலாம் இராசேந்திரசோழருடையது. இறைவர் கானக்களூர் மகாதேவர் என்று குறிக்கப் பட்டுள்ளது.

22. கள்ளகம்

புள்ளம்பாடிக்கு வடகிழக்கே 12கி.மீ. ஆண்டிஓடைக்கரையில் இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் கமலாம்பிகை.

23. தாப்பாய்

புள்ளம்பாடிக்கு வடக்கே 5கி.மீ. நந்தியாற்றின் கரையில் இக்கோவில் 3செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர். அம்மன் சிவகாமியம்மன். மூன்றாம் குலோத்துங்க சோழரின் 3வது ஆண்டுக் கல்வெட்டுக்கள் இவ்வூரைக் காப்புவாய் என்றே குறிக்கப்பட்டுள்ளது.

24. கல்லக்குடி

புள்ளம்பாடிக்கு வடகிழக்கே 7கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர். அம்மன் நித்திய கல்யாணி.

25. பு. சங்கந்தை

புள்ளம்பாடிக்கு மேற்கே 3கி.மீ. நந்தி யாற்றின் தென்கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

26. புள்ளம்பாடி

லால்குடிக்கு வடகிழக்கே 14கி.மீ. நந்தியாற்றின் கரைப்பகுதியில் இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர். கல்வெட்டுக்களில் சோழர்கள் காலத்தியவை. புள்ளம்பாடி என்றே குறிக்கப்படுகின்றன.

27. வெங்கடாசலபுரம்

புள்ளம்பாடிக்கு தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரேஸ்வரர். அம்மன் காமாட்சியம்மன்.

28. கோவந்தகுறிச்சி

புள்ளம்பாடிக்கு கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மருதாண்டேஸ்வரர்.

29. ஆலம்பாக்கம்

புள்ளம்பாடிக்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் அருந்ததியம்மன். 1600 வருட முற்பட்ட கோவில்.

30- T. கல்லிகுடி

புள்ளம்பாடிக்கு தெற்கே 7கி.மீ. கூழையாற்றின் வடகரையில் இக்கோவில் 3-51 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். இவ்வூர்க்கு அருகில் உள்ள முல்லல் என்னுமிடத்தில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர், அம்மன் சிவகாமிசுந்தரி.

31. வேலனூர்

பூவாளூர்க்கு வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

32. எடாங்கிமங்கலம்

பூவாளூர்க்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 1-44 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

33. பெருவலநல்லூர்

பூவாளூர்க்கு வடக்கே 2கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரகதீஸ்வரர்.

34. பூவாளூர்

லால்குடிக்கு வடக்கே 3கி.மீ.

பூவாளியூர், மரதாளம், கல்யாணபுரம், ஞானக்ஷேத்திரம். இக்கோவில் கூழை யாற்றின் கரையில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமூலநாதர். அம்மன் குங்குமாம்பிகை. தலவிருட்சம்-வில்வம். தீர்த்தம் கயபங்குனி. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், துர்க்கை, தட்சிணாமூர்த்தி முதலிய சன்னிதிகள் உள்ளன.

ரதிதேவி இத்தலச் சிவபெருமானை வழிபட்டு மன்மதனை மீண்டும் பெற்ற தலம். சப்தரிஷிகள் இத்தல இறைவனை வழிப்பட்டு ஞானத்தைப் பெற்றதனால் இறைவனுக்கு ஞானபுரீஸ்வரர் என்று பெயர்.

இத்தல ஆறுமுகப்பெருமான் பன்னிரு திருக்கரங்களுடன், மயில் மீது அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார்.

கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு கால பூஜை. வைகாசி மாதத்திலும், ஆடிப் பூரத்திலும் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

இவ்வூர்க்கு அரகில் உள்ள பின்னவாசல் என்னும் ஊரில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் திருக் கோவில் உள்ளது.

35. திருமங்கலம்

லால்குடிக்கு வடக்கே 4கி.மீ. மேன்மழநாடு, திருவிருந்தமங்கலம், பரசுரா மேஸ்வரம், கொன்றைவனம், கூழையாற்றின் தென்கரையில் இக்கோவில் சுமார் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சாமவேதீஸ்வரர், அம்மன் லோகநாயகி. தலவிருட்சம் கொன்றை. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்ரமணியர், மகாலஷ்மி, சோமாஸ்கந்தர், அப்பர், சம்பந்தர், சனீஸ்வரர், பரசுராமர், சூரியன், சந்திரன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருமகள் இத்தல இறைவனை வழிபட்டதனால் திருமங்கலம் என்றும் பெயர்.

63 நாயன்மார்களில் ஒருவரான ஆனாய நாயனார் இத்தலத்தில் ஆயர் குலத்தில் அவதரித்து, மாடுகளையெல்லாம் மேய்ப்ப தோடு, சிவபெருமானிடம் அன்பைப் பெருகும்படி புல்லாங்குழலில் வாசித்து இறைவனின் அருளைப் பெற்ற தலம். நாயனாரின் திருவுருவம் இக்கோவிலின் வடமேற்கில் தனிச்சன்னிதியில் காட்சியளிக் கிறார். பரசுராமர் இத்தலத்தில் தாயைக் கொன்ற பழிநீங்க இத்தல இறைவனை வழிபட்டு கொலைப் பாவம் நீங்கப்பெற்ற தலம்.

இக்கோவிலில் 13 கல்வெட்டுக்கள் உள்ளன. சோழ, நாயக்கர் கலத்தியவை.

நான்கு கால பூஜை. பிரமோற்சவம் சித்திரையிலும், கார்த்திகை மாதத்தில் அஸ்தத்தில் ஆனாய நாயனாரின் உற்சவமும் நடைபெறுகிறது.

36- S. கண்ணனூர்

மணச்சநல்லூர்க்கு வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு பூஜேஸ்வரர். அம்மன் உஜ்ஜயினி ஓம் காளியம்மன். அருகில் 29 செண்ட் நிலப்பரப்பளவில் முக்தீஸ்வரர். பட்டி வழிபட்ட தலம். விக்ரமாதித்தன் வழிபட்ட தலம். பிற்கால சோழமன்னர்கள் திருப்பணி செய்த தலம். அம்மன் கோவிலில் தினமும் எட்டு கால பூஜை நடைபெறுகிறது.

37. சோழங்கநல்லூர்

திருப்பைஞ்ஞிலிக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாதளீஸ்வரர்.

38. கிள்ளியநல்லூர்

திருவாசிக்கு மேற்கே 5கி.மீ. கொள்ளிட ஆற்றின் வடகரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் திருபுவனேஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள திருப்பஞ்சேரியில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசி விஸ்வநாதர்.

39. வேங்கன்குடி

மணச்சநல்லூர்க்கு வடகிழக்கே 2கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அக்னீஸ்வரர்.

40. மண்ணச்சநல்லூர்

பிட்சாண்டார் கோவிலிருந்து வடக்கே 2கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பூமிநாதர். இவ்வூரில் மற்றொரு கோவிலான 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மநாதர்.

41. மருதூர்

பூவாளூர்க்கு மேற்கே 7கி.மீ. கூழையாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-29 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் கனகாம்பிகை.

42. நகர்

பூவாளூர்க்கு மேற்கே 5கி.மீ. கூழையாற்றின் தென்கரையில் இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அபராதீஸ்வரர். அம்மன் அதுலசுந்தரியம்மன்.

43. சிறுமயங்குடி

பூவாளூர்க்கு கிழக்கே 4கி.மீ. கூழையாற்றின் வடகரையில் இக்கோவில் 42 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் காசிவிசாலாட்சி

இவ்வூர்க்கு அருகில் உள்ள காட்டூரில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் பர்வதவர்த்தினி.

44. காளஸ்தினாம்பட்டி

புள்ளம்பாடிக்கு தெற்கே 6கி.மீ. நந்தியாற்றின் கரையில் இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம் பிராகாசநாதர். அம்மன் விசாலாட்சியம்மன்.

45. திருநெற்குன்றம்

புள்ளம்பாடிக்கு கிழக்கே 9கி.மீ. திண்ணகுளம். கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு நெற்குன்றநாதீஸ்வரர். அம்மன் ஸ்ரீ குந்தளாம்பிகை. தீர்த்தம் இந்திர தீர்த்தம். திருச்சுற்றின் வடகீழ் மூலையில் நடராசர் சன்னிதியும், வடபுறம் கிழக்குநோக்கியபடி விஸ்வநாதர் சன்னிதியும் உள்ளது.

இத்தலம் தேவாரவைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருஞானசம்பந்தா தனது திருச்சேத்திரக் கோவையில் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார்.

கல்வெட்டுக்கள் 20க்கும் மேற் பட்டவை உள்ளன. முதலாம் இராசேந்திரன், முதலாம் இராஜாதிராஜன் முதலாம் குலோத் துங்கன் ஆகிய மன்னர்கள் காலதியவை. இவ்வூரையும், கோவிலையும் '' திருநெற் குன்றத்து திருநெற்குன்ற முடையார் '' என்று குறிக்கப்பட்டுள்ளது. திருநெற்குன்றத் திலன் கீழ்பகுதியான விரகாலூரில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் திருவான்மீகநாதர் திருக்கோவிலும் உள்ளது.

46. தின்னியம்

புள்ளம்பாடிக்கு தெற்கே 7கி.மீ. கூழையாற்றின் வடகரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரரேஸ்வரர்.

47. ஆதிகுடி

லால்குடிக்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 55 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அங்குனீஸ்வரர். அம்மன் பிரியாம்பிகை.

48. மணக்கால்

லால்குடிக்கு வடகிழக்கே 2கி.மீ. கூழையாற்றின் தென்கரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் சிவகாமசுந்தரி.

49. அங்கரை

லால்குடிக்கு வடமேற்கே 2கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மருதநாதீஸ்வரர். அம்மன் சுந்தர காஞ்சினியம்மன்.

50. பம்பரம்சுத்தி

லால்குடிக்கு மேற்கே 3கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

51. நெருஞ்சாலக்குடி

லால்குடிக்கு மேற்கே 4கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்பலவாணேஸ்வரர். அம்மன் வாலாம்பிகை.

52. வாலடி

லால்குடிக்கு மேற்கே 7கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

53. புதுக்குடி

பிட்சாண்டார்கோவிலுக்கு கிழக்கே 5கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

54. பனமங்கலம்

பிட்சாண்டார்கோவிலுக்கு கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வரணபுரீஸ்வரர். அம்மன் வடிவுடையம்மன். அருகில் உள்ள பாலூரில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் எரியீஸ்வரர்.

55. பிட்சாண்டார் கோவில்

திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே 6கி.மீ. திருக்கரம்பனூர், நீபஷேத்திரம், ஆதிமாபுரம், கதம்பவனம். கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 75செண்ட் நிலப்பரப்பளவில் இராஜ கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு பிட்சாண்டார் மேற்கு நோக்கிய காட்சியளிக்கிறார். அம்மன் வடிவுடைநாயகி. தெற்கு நோக்கி காட்சியளிக்கிறார். தலவிருட்சம்-வாழை, தீர்த்தம் கதம்பதீர்த்தம்.

இத்தலம் சிவபெருமான், திருமால், பிரம்மன் மூவரும் இத்தலத்தில் காட்சியளிப்பதால் மும்மூர்த்தி தலம் என்றும் அழைக்கப்படுகிறது.

திருமால் இத்தலத்தில் ஸ்ரீபுருஷோத்தம பெருமாள் என்ற பெயரில் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கி காட்சியளிக் கிறார். தாயார் பூர்வாதேவி. திருமங்கை யாழ்வார் இத்தல பெருமானை மங்களா சாசனம் அருளியுள்ளார்.

பிரம்மா மற்றும் சரசுவதி தேவிக்கும் தனித்தனி சன்னிதிகள் உள்ளன.

இத்தல சிவபெருமானை கதம்ப மகரிஷி, உபரிசரவசு, சனக, சனந்தன, சனக்குமாரர்களும், திருமங்கையாழ்வாரும் காட்சிகண்டவர்கள்.

சிவபெருமான் திருக்கண்டியூரில் பிரம்மனுடைய ஒரு தலையைக் கிள்ளியெறிந்த காரணமாக பிரம்மகத்தி

தோஷத்தால், சிவபெருமானின் கையில் கபாலம் ஒட்டிக் கொண்டது. இத்தோஷத்தைப் போக்க சிவபெருமான் இத்தலத்திற்கு வந்தடைந்து திருமால் திருமகளைக் கொண்டு பிச்சையிடச் செய்து கபாலம் நிறைந்து, சாபந் தீர்த்துக் கொண்டதாக தலவரலாறு. பிட்சாடன மூர்த்தியாக சிவபெருமான் எழுந்தருளியுள்ள தால் இத்தலத்திற்கு பிட்சாண்டார் கோவில் என்று வழங்கப்பெறுகிறது.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசியில் பிர மோற்சவம் நடைபெறுகிறது.

56. மாதவபெருமாள் கோவில்

பிட்சாண்டார்கோவிலுக்கு மேற்கே 2கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். இவ்வூர்க்கு அருகில் உள்ள நொச்சியம் என்னும் மிடத்தில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமசுந்தரேஸ்வரர். அம்மன் பாலாம்பிகை.

57. திருமணமேடு

லால்குடிக்கு மேற்கே 6கி.மீ. கொள்ளிட ஆற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பஞ்சநாதீஸ்வரர். அம்மன் தர்மசம்வர்த்தினி. இவ்வூர்க்கு அருகில் உள்ள பஞ்சம்பேட்டையில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

58. ஐவ்வந்திநாதபுரம்

லால்குடிக்கு மேற்கே 4கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மயூரநாதர். அம்மன் மங்களாம்பிகை.

59. இடையாத்துமங்கலம்

லால்குடிக்கு தெற்கே 2கி.மீ. கொள்ளிட ஆற்றின் வடகரையில் இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு மங்களேஸ்வரர். அம்மன் மங்களாம்பிகை.

60. கூகூர்

லால்குடிக்கு தெற்கே 4கி.மீ. கொள்ளிட ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் குகனேஸ்வரர். அம்மன் கல்யாண சுந்தரி.

61. அரியூர்

புள்ளம்பாடிக்கு தெற்கே 9கி.மீ. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 48 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருவேஸ்வரமுடையார்.

சத்தகுலாசலம்

பூமியைத் தாங்குவனவாகக் கூறப்படும் கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்னும் ஏழு மலைகள்.

சத்தசமுத்திரம்

உப்பு, நீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் இவற்றையுடைய ஏழு கடல்கள்.

சத்ததாது


உடம்பின் அமைப்பிலுள்ள இரதம், குருதி, எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் என்னும் ஏழுவகைப் பொருள்கள்.

சத்தநதி

கங்கை, யமுனைஅ சரசுவதி, நருமதை, காவிரி, குமரி, கோதாவரி.

முசிறி வட்டம்

(கரூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. அளகரை

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்த மலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவி பாகமாக்
கானத்திரவில் எரிகொண்டாடுங் கடவுள் உலகேத்த
ஏனத்தி ரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய் மலையாரே

-- திருஞானசம்பந்தர்.

முசிறிக்கு வடமேற்கே 7கி.மீ. திருஈங்கோய்மலை, மரகதாசலர் கோவில், திருவிங்கநாதமலை. காவிரி வடகரையில் 25-00 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட மலைமீது இக்கோவில் உள்ளது. 500 படிகள் கொண்டது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மரகதாசலேசுரர். அம்மன் மரகதவல்லியம்மை. தீர்த்தம் அமிர்த தீர்த்தம் உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், நவக்கிரகம், நால்வர், பாலமுருகன், முதலிய சன்னிதிகள் உள்ளன. அடிவாரத்தில் போக முனிவர் கோவில் உள்ளது.

மூலவர் மரகதம்போலப் பச்சை வண்ணத்தில் அமைந்துள்ளார். அம்பாள் வழிபட்ட இடமாதலின் இத்தலத்திற்கு சிவசக்திமலை என்றும் பெயர்.

அகத்தியர் ஈ உருக்கொண்டு இறைவனை இத்தலத்தில் வணங்கினார். இதனால் ஈங்கோய்மலை என்று பெயர்.

சுந்தரர் இத்தல இறைவனைக் காணச்சென்றபோது இறைவன் புளியில் ஒளிந்திருந்தார். அவர் பொன் கேட்டதும் சுவாமி புளியங்காயைப் பறித்து வீழ்த்தினார் அது பொன்னாயிற்று என்பர்.

நக்கீரர் இத்தலப் பெருமான் மீது ஈங்கோய் எழுபது எனும் பாமாலை பாடியுள்ளார். தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்கு வடகரையில் இத்தலம் 63வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசரும் இத்தலத்தைக் குறித்து பாடியுள்ளார்.

சிவராத்திரி அன்று முன்பின் நாட்களில் சூரிய ஒளி மூலவர் இலிங்கத்தின் மீது படுவதைக் காணலாம். பல வண்ணமாக காட்சியளிப்பதைக் காணலாம்.

ஒரே நாளில் காலையில் கடம் பந்துறையும், உச்சிப்பொழுதில் திரு வாட்போக்கியையும், மாலையில் இத் தலத்தையும் வணங்குவது சிறப்புடையது. கார்த்திகைச் சோமவாரத்தில் இவ்வாறு வழிபடுவது பெருஞ்சிறப்புடையதாகும். மேலும் இவ்வூர்க்கு அருகில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோமசுந்தரேஸ் வரர் திருக்கோவிலும் உள்ளது.

2. முசிறி

காவிரிவடகரையில் இக்கோவில் 92செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சந்திரமௌலீஸ் வரர், அம்மன் கற்பூரவல்லி. 860 வருட முற்பட்ட கோவில் அருகில் விஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளது.

3. காருகுடி

தாத்தையங்கார்பேட்டைக்கு வடக்கே 3கி.மீ. காரிக்குடி. இக்கோவில் 60செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் கருணாகரவல்லி. இவ்வூருக்குப் பிறந்த நட்சத்திரம் (ரேவதி) இருப்பதைக் கூறும் அரிய செய்திதாங்கிய கல்வெட்டு உள்ளது. உள்பிராகாரத்தில் பைரவர். அகோரவீரபத்திரர் சிற்பங்கள் சிறப்பானவை யாகும்.

4. பேரூர்

முசிறிக்கு வடகிழக்கே 12கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இடங்கண்டீசுவரர்.

5. சுக்காம்பட்டி

முசிறிக்கு வடகிழக்கே 18கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர், காசிவிசாலாட்சி.

6. து. புத்தூர்

முசிறிக்கு வடகிழக்கே 11கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

7. குலக்கொடி

தொட்டியத்திலிருந்து வடகிழக்கே 8கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர், விசாலாட்சி.

8. முருங்கைகளத்தூர்

காட்டுப்புத்தூர்க்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஈசநாதர்.

9. ஸ்ரீராமசமுத்திரம்

காட்டுப்புத்தூர்க்கு மேற்கே 2கி.மீ. இக்கோவில் 1-53 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வாலீஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி. உள்பிராகாரத்தில் காசிலிங்கம், விஸ்வநாதர், நடராசர், தட்சிணாமூர்த்தி முதலிய சன்னிதிகள் உள்ளன. 1050 வருட முற்பட்ட கோவில் கல்வெட்டுக்கள் உள்ளன.

10. காட்டுப்புத்தூர்

தொட்டியத்திலிருந்து மேற்கே 14கி.மீ. இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரேஸ்வரர்.

11. சிலைபிள்ளையார்புத்தூர்

காட்டுப்புத்தூர்க்கு தெற்கே 2கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 19 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரர்.

12. நாகையநல்லூர்

காட்டுப்புத்தூர்க்கு வடக்கே 4கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லிகார்சுனர், அம்மன் பிரதாம்பிகை.

13. நத்தம்

காட்டுப்புத்தூர்க்கு கிழக்கே 6கி.மீ. காவிரியாற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கேசுரர், அம்மன் சொக்கநாயகி.

14. அரசலூர்

தொட்டியத்திலிருந்து மேற்கே 2கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தாயுமானவசுவாமி, அம்மன் சுகுந்தகுந்தலாம்பிகை.இவ்வூர்க்கு அருகில் உள்ள வரதராஜபுரத்தில் பர்வதவர்த்தினி உடனுறை அனலேசுவரர் திருக்கோவிலும் உள்ளது.

15. தொட்டியம்

முசிறிக்கு வடமேற்கே 13கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அனலாந்தீசுரர், அம்மன் திரிபுரசுந்தரி.

16. சீனிவாசநல்லூர்

தொட்டியத்திலிருந்து கிழக்கே 3கி.மீ. காவிரி ஆற்றின் வடகரையில் இக்கோவில் 3செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர், விசாலாட்சி. 650 வருட முற்பட்ட கோவில்.

17. வெள்ளூர்

முசிறிக்கு கிழக்கே 4கி.மீ. காவிரி யாற்றின் வடகரையில் இக்கோவில் 35செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்காமீஸ்வரர், அம்மன் சிவகாமசுந்தரி.

18. திண்ணக்கோணம்

முசிறிக்கு வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 6செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பசுபதீஸ்வரர். அம்மன் கோவிந்தவல்லி யம்மை.

19. சேந்தமாங்குடி

முசிறிக்கு கிழக்கே 7கி.மீ. காவிரி யாற்றின் வடகரையில் இக்கோவில் 5செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அக்கினீஸ்வரர்.

20. ஏவூர்

முசிறிக்கு கிழக்கே 10கி.மீ. காவிரி வடகரையில் இக்கோவில் 2செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பன்னகநாதர். அம்மன் பரிமளசுந்தரியம்மை.

21. ஆமூர்

குணசீலத்திற்கு வடமேற்கே 3 கி.மீ. காவிரி ஆற்றின் வடகரையில் இக்கோவில் 1-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக ரவிஈஸ்வரர். அம்மன் ஆனந்தவல்லி.

22. குணசீலம்

முசிறிக்கு கிழக்கே 16கி.மீ. காவிரி ஆற்றின் வடகரையில் இக்கோவில் 24செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தாருகாநாதர். அம்மன் சோமாசியம்மை. அருகில் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசபெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

முப்பத்திரண்டறம்

ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறுசமயத்தார்க்கு உண்டி, பசுவுக்குத் தீனி, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் ஈதல், அறவைச்சோறு, பிள்ளை பெறுவித்தல், பிள்ளை வளர்த்தல், பிள்ளைக்குப் பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடல், அழிந்தோரை நிறுத்துதல், சுண்ணம், நோய்க்கு மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கு எண்ணெய், பெண்போகம், பிறர் துயர் காத்தல், தண்ணீர்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்து உயிர்காத்தல், கன்னிகாதானம் என்னும் முப்பத்திரண்டு வகையான அறம்.

ஆறு சமயங்கள்

சைவம் : சிவனைப் பர தெய்வமாகக் கொள்ளும்.

வைணவம் : திருமாலைப் பரம்பொருளாகக் கொள்ளும்.


சாக்தம் : சத்தியைப் பரதேவதையாகக் கொள்ளும்.

சௌரம் : சூரியனை வழிபடும் சமயம்.

காணாபத்தியம் : கணபதியை முதற் கடவுளாக வழிபடும் சமயம்.

கௌமாரம் : முருகக்கடவுளைப் பரம்பொருள் என்று வழிபடும் சமயம்.

குளித்தலை வட்டம்
(கரூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. குளித்தலை

முற்றி லாமுலை யாளிவ ளாகிலும்
அற்றந் தீர்க்கும் அறிவில ளாகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்தியென் றாள்எங்கள்
பேதையே
-- திருநாவுக்கரசர்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வடமேற்கே 33கி.மீ. திருக்கடம்பர்கோவில், கடம்பந் துறை, கடம்பை. கடம்பவனம், தட்சிணகாசி, குழித்தண்டலை என வழங்கும் இக்கோவில் காவிரி ஆற்றின் தென் கரையில் 1-38 ஏக்கர் நிலப்பரப்பளவில் வடக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கடம்பவனநாதர். வடக்கு நோக்கி யவாறு காட்சியளிக்கிறார். அம்மன் முற்றிலாமுலையம்மை. தீர்த்தம் பிரம்ம தீர்த்தம். தலவிருட்சம் கடம்பமரம்.

உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிர மணியர், நடராஜர், நவக்கிரகங்கள், ஜேஷ்டாதேவி, நால்வர், அறுபத்து மூவர், விஸ்வநாதர், கஜலஷ்மி, சப்தகன்னியர்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

தேவர்களுக்கும், கண்ணுவமுனி வருக்கும் சிவபெருமான் கடம்பவிருட் சத்தில் தோன்றிக் காட்சி கொடுத்த தலம். பிரமன், திருமால், முருகப்பெருமான், சப்தகன்னியர் கள், அகத்தியர், தேவசன்மா முதலியோர் இத்தலத்து பெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

முருகனுக்குச் சூரஹத்தி விமோசனம் பெற வேண்டி கோவிற்கடம்பனூர், ஆதிக்கடம்பர், வாழிக்கடம்பர், இளங்கடம் பனூர், பெருங்கடம்பனூர் என ஐந்து தலங்களிலும் சிவபிரதிஷ்டை செய்து பூஜித்து சூரஹத்தி விமோசனம் பெற்றார். முருகப் பெருமான் பாலசுப்பிரமணியராக வடக்கு நோக்கி ஐந்து கடம்பனிலும் எழுந்தருளியிருக்கின்றார்.

இத்தலத்தில் உள்ள நடராஜமூர்த்தி முயலகனில்லாமல் காட்சியளிக்கின்றார்.

காலைக்கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தி திருவேங்கிநாதர் என்னும் பழமொழிக் கூற்றுப்படி காலையில் தரிசிக்க வேண்டிய பெருமையினை உடையவர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரிக்குத் தென்கரையில் இத்தலம் 2 வது. திருநாவுக்கரசர் திருப்பதிகம் பெற்றது. ஐயடிகள் காடவர்கோன் இத்தலத்தைக் குறித்து திருவெண்பா ஒன்றும், அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழும் உண்டு.

தினமும் ஐந்து கால பூஜை நடைபெறுகிறது. மாசி மாதத்தில் 10 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

2. இரத்தினகிரி

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆலநிழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே
-- திருநாவுக்கரசர்.

குளித்தலையிலிருந்து தெற்கே 10கி.மீ. திருவாட்போக்கி, சிவாயமலை, இரத்தினா சலம், மணிகிரி, ஐயர்மலை, மாணிக்கமலை என வழங்கும் இக்கோவில் காவிரி தென் பகுதியில் 223-98 ஏக்கர் நிலப்பரப்பளவில் கொண்ட மலையின் மீது 1000 படிகள் கொண்டு, கோபுரம், இரண்டு பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு இரத்தினகிரிநாதர் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். வாட்போக்கி நாதர், இராசலிங்கம், முடித்தழும்பர், மலைக் கொழுந்தர், சொக்கர் என வேறு பெயர்கள். அம்மன் சுரும்பார்குழலி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியுள்ளார். தீர்த்தம் கௌரி தீர்த்தம்.

ஆதிசேடனுக்கும், வாயுதேவனுக்கும் நேர்ந்த போரில் வாயுதேவன் மேருமலை யினின்று பெயர்த்தெடுத்த ஒரு முடியே இத்தலம்.

இந்திரன், சூரியன், உரோமேசர், வீரசேனன், ஆதிசேடன், துர்க்கை, அகத்தியர், சப்தகன்னியர் முதலியோர் பூசித்த தலம்.

மங்கலமாநகரைச் சேர்ந்த ஆரிய ராஜன் தன் முடியை இழந்து இறைவன் கட்டளைப்படி இத்தலத்திற்கு வந்தபோது இறைவன் ஒரு வேதிய வடிவில் எழுந்தருளி அரசனுக்கு ஒரு கொப்பரையைக் காட்டி இதில் நிறைய நீர் நிரப்பும்படி கேட்க, அரசன் அவ்வாறு நிரப்ப, நிரப்ப அது நிறையவில்லை. இதனால் கோபம் கொண்ட அரசன் தன் வாளால் வேதியரை வெட்ட இறைவன் ஆரிய அரசனுக்கு காட்சியளித்து மாணிக்கத்தை அளித்தார். இதனால் இறைவருக்கு முடித்தழும்பர் என்று பெயர் ஏற்பட்டது.

ஒவ்வொரு நாளும் காவிரியாற்றி லிருந்து நீர் கொணர்ந்து இங்கே இறைவனுக்கு அபிஷேகம் செய்கிறார்கள்.

இறைவனுக்கு கொண்டு வந்த அபிஷேக பாற்குடத்தை ஒரு காகம் கவிழ்த்துவிட்டது. அக்காகம் இறைவன் ஆணையில் எரிந்தது. அது முதல் இந்த மலையின் உச்சியில் காகம் பறப்பதில்லை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கே இடி பூஜை நடைபெறுகிறது.

காஞ்சி மாநகரில் ஆயர்குலத்தில் பிறந்த வயிரப்பெருமாள் என்னும் பக்தர் தம்பிரார்த்தனை நிறைவேறியதற்காக இத்தலத்தில் தம்தலையை அரித்து பலிகொடுத்தார். அவரை இங்கே காவல் தெய்வமாக வைத்துப் போற்றுகிறார்கள். அவருடைய உருச்சிலை சுவாமி சன்னிதியில் உள்ளது.

காலைக்கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தி திருவீங்கோய் நாதர் என்று வழங்கும் பழமொழியில் இத்தலம் நண்பகலில் தரிசனம் செய்வது மரபு.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற காவிரித் தென்கரையில் இத்தலம் முதலாவது. திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. திருஞானசம்பந்தரும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் பெற்ற தலம். கமலைமாநகர் வைத்தினாத தேசிகராலி யற்றப்பட்ட திருவாட்போக்கி புராணமும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய கலம்பகமும் இத்தலத்திற்கு உண்டு.

இத்தலத்திற்கு அருகில் உள்ள சிவாயம் என்னும் தலத்தில் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிவாபுரீஸ்வரர். இத்தலம் அருணகிரிநாதரின் திருப்புகழ் வைப்புத் தலமாக பாடியுள்ளார்.

3. ரங்கநாதபுரம்

குளித்தலைக்கு மேற்கே 22கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 2செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். விசாலாட்சி அருகில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர் திருக்கோவிலும் உள்ளது.

4. மணவாசி

குளித்தலைக்கு மேற்கே 20கி.மீ. இக்கோவில் 50செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மத்தியபுரீஸ்வரர். அம்மன் கோமலாம்பிகை.

5. கிருஷ்ணராயபுரம்

குளித்தலைக்கு மேற்கே 14கி.மீ. காவிரி ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்கண்மாலீஸ்வரர். அம்மன் மதுக்கரவேணியம்மை. சோழர் கால கோவில், கல்வெட்டுக்கள் உள்ளன. நான்கு

கால பூஜை. நவராத்திரி அன்று உற்சவம் நடைபெறுகிறது.

6. மகாதானபுரம்

குளித்தலைக்கு மேற்கே 11கி.மீ. இக்கோவில் காவிரியாற்றின் தென்கரையில் 42செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

7. வடியம்

குளித்தலைக்கு மேற்கே 2கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 6செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லிகார்சுனேஸ்வரர். அம்மன் மல்லிகாம் பிகை.

8. மணத்தட்டை

குளித்தலைக்கு தெற்கே ஒரு கி.மீ. இக்கோவில் 17செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர், அம்மன் விசாலாட்சி.

9. இராஜேந்திரம்

குளித்தலைக்கு தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 42செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மத்யார்சுனேஸ்வரர், அம்மன் தேவநாயகி.

10. மருதூர்

குளித்தலைக்கு தென்கிழக்கே 4கி.மீ. காவிரி ஆற்றின் தென்கரையில் இக் கோவில் சுந்தரேசுவரர், அம்மன் மீனாட்சி.

11. பொய்யமணி

குளித்தலைக்கு தென்கிழக்கே 10கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 11செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர், அம்மன் சிவகாமியம்மை.

12. நங்கவரம்

குளித்தலைக்கு தென்கிழக்கே 14கி.மீ. இக்கோவில் 60செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர், அம்மன் கோமளாம்பிகை.

13. கருப்பத்தூர்

குளித்தலைக்கு தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 10செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிம்மபுரீஸ்வரர், அம்மன் சுகந்தகுந்தளாம்பிகை.

14. சேங்கல்

குளித்தலைக்கு மேற்கே 13கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரேசுவரர்.


15. தோகைமலை

குளித்தலைக்கு தெற்கே 22கி.மீ. இக்கோவில் 100 அடிய உயர குன்றின் மேல் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரரேசுவரர். அருகில் சுப்ரமணியர் திருக்கோவில் அமைந்துள்ளது. பாண்டிய மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டது. நவராத்திரி, கந்தசஷ்டி அன்று உற்சவம் நடைபெறுகிறது.

16. கலுகூர்

தோகைமலைக்கு வடக்கே 4கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரேஸ்சுவரர்.

கரூர் வட்டம்
(கரூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. கரூர்

தொண்டெ லாமலர் தூவி ஏத்தநஞ்
கண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னார்கரு வூரு ளானிலை
அண்ட னாரரு ளீயும் அன்பரே

-- திருஞானசம்பந்தர்.



திருச்சிராப்பள்ளியிலிருந்து மேற்கே 74கி.மீ. திருக்கருவூர் ஆனிலை, கருவூர், ஆம்பிராவதி நதி வடகரையில் இக்கோவில் 2-65 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 120அடி உயர 7நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கல்யாணபசுபதீசுவரர். அம்மன் ஸ்ரீ சௌந்தரநாயகி மற்றும் ஸ்ரீ அலங்காரவல்லி என இரண்டு அம்பிகை சன்னிதிகள் உள்ளன. தீர்த்தம் பிரம தீர்த்தம், ஆம்பிராவதி நதி. தலவிருட்சம்-வில்வம். உள்பிராகாரங் களில் கன்னிகணபதி, முருகன், அறுபத்துமூன்று நாயன்மார்கள், நடராஜர், செங்கோட்டுவேலர், மகாலஷ்மி, கரியமால் வரதர், பஞ்சலிங்கம், பைரவர், அருணகிரிநாதர், தண்டாயுதபாணி, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

காமதேனு பூசித்ததால் கோவில் ஆனிலை ஆயிற்று. காமதேனு பூசை செய்து சிருஷ்டித்தொழில் செய்ய வரம் பெற்று அகிலமும் அளித்த காரணத்தால் ஊருக்குக் கருவூர் என்றும், சுவாமிக்குப் பசுபதிநாதர் என்றும், கோவிலுக்கு ஆனிலை என்றும் பெயர்.

எறிபத்த நாயனார் பேறுப் பெற்ற தலம். புகழ்ச் சோழ நாயனார் வேந்தராய் உலகாண்டு திருவடிப்பேறெய்திய திருவூர், இத்தல சிவபெருமானுக்குப் பூமாலை தொடுத்து அளிக்கும் திருத்தொண்டு செய்து வந்த சிவகாமியாண்டார் என்னும் பெரியவர் வாழ்ந்த திருவூர். திருவிசைப்பாப் பாடிய கருவூர்த் தேவர்பிறந்து வீடுபெற்ற திருவூர். அவருடைய சன்னிதி தெற்குப் பிரகாரத்தில் உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கொங்கு நாட்டுத் திருப்பதிகளுள் இத்தலம் 7ஆவது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் இத்தலத்திற்கு உண்டு. தலபுராணம் 21 சருக்கங்கள் 1129 பாடல்கள் கொண்டது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

கல்வெட்டுக்கள் உள்ளன. பாண்டிய, சோழ மன்னர்களுடையவை. பங்குனி மாதத்தில் சூரியகதிர்கள் இலிங்கத்தின் மீது படுகிறது. 5 கால பூஜை, பங்குனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

2. வெஞ்சமாக்கூடலூர்

எறிக்குங் கதிர்வேய் உதிர்முத் தமொடே
லம்இல வங்கந் தக்கோலம் இஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திளைத்தெற்று சிற்றா றதன்கீழ்க் கரைமேல்
முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல்
குருக்கத்திகள் மேற் குயில்கூ வலறா
வெறிக்குங் கலைமா வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியே னையும்வேண் டுதியே

-- சுந்தரமூர்த்தி.

கருவூரிலிருந்து தென்மேற்கே 16கி.மீ. திருவெஞ்சமாக்கூடல். குடவனாற்றின் கிழக்கு கரையில் இக்கோவில் 92செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய ஐந்து நிலை இராஜகோபுரம் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கல்யாண விகிர்தீஸ்வரர். அம்மன் பண்ணேர் மொழியம்மை. தீர்த்தம் விகிர்த தீர்த்தம், குடவனாறு. தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் இலிங்கோத்பவர், நால்வர், 63 நாயன்மார்கள், விநாயகர், முருகப்பெருமான், பஞ்சலிங்கம், நடராஜர், பைரவர், அருணகிரிநாதர், வெஞ்சமன், சுந்தரர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வெஞ்சன்என்ற அசுரன் பூசித்த தலம். வேடஅரசன் என்றும் கூறுவர். இவ்வரசன் தலை நகரமாக விளங்கியதாலும், கோவிலுக்கு மேற்புறம் குடகனாறுடன் சிற்றாறு கலப்பதாலும் இரண்டு ஆறும் கூடுமிடத்திலிருப்பதாலும் வெஞ்சன் என்ற அரசன் பெயருடன் சேர்ந்து வெஞ்சமாக் கூடல் என்று பெயர் பெற்ற தலம்.

தேவேந்திரன் அகல்யா சாபத்தின் நிவர்த்திக்காகப் பூஜை செய்து நிவர்த்தி கண்ட தலம்.

சிவபெருமான் முதிர்ந்த ஒரு கிழவியிடம் தம் இரு பிள்ளைகளை ஈடுகாட்டிப் பொன்வாங்கிச் சுந்தரருக்கு அளித்த இடம். இதனைத் தலபுராணத்திலும், கொங்கு மண்டல சதகத்திலும் அறியலாம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கொங்கு மண்டலத் தலங்களுள் இத்தலம் 5 வது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பெற்ற தலம். தலபுராணம் முத்துச்சாமி கோனார் அவர்களால் பாடப்பெற்றது.

கல்வெட்டுக்கள் 7 உள்ளன. சுமார் 1200 வருடமுற்பட்ட இராசகேசரி மன்னன் கட்டுவித்ததாக கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மகத்தில் 10 நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. புஞ்சைப்புகழூர்

கரூர்க்கு வடக்கே 14கி.மீ. புகழிமலை, புகழூர், குழுந்தமலை, ஆறுநாட்டவர் மலை, வேலாயுதம்பாளையம் என பலவாறு அழைக்கப்படும் இக்கோவில் 280 படிகள் கொண்டு மலைமேல் மூலவர் சுந்தரேசுவரர். அம்மன் மீனாட்சி மேற்கு நோக்கியுள்ளனர். இத்தலத்தில் முருகப் பெருமான் தனித்து பாலசுப்பிரமணியர் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அருணகிரிநாதர்

திருப்புகழ் அருளிய தலம்.

கல்வெட்டில் இவ்வூரை புகழியூர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் இன்று ஆறுநாட்டார் மலை என்றே இம்மலையைக் குறிப்பிடுகின்றனர். சுற்று வட்டாரப் 18 பட்டிகளுக்கும் பொதுவான கோவில். பூஜை உச்சி காலம், சாயரட்சை என இரு கால பூஜை. தை மாத கிருத்திகை அன்று உற்சவம் நடைபெறுகிறது.

4. நஞ்சைபுகழூர்

கரூர்க்கு வடக்கே 15கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மேகவாலீஸ்வரர்.

5. நன்னியூர்

கரூர்க்கு வடக்கே 12கி.மீ. காவிரி யாற்றின் தென்கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிந்தா மணியீஸ்வரர், அம்மன் சிவகாமியம்மை.

6. வாங்கல்

கரூர்க்கு வடக்கே 9கி.மீ. காவிரியாற்றின் தென்கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ரவீஸ்வரர், அம்மன் இமயவல்லியம்மை.

7. நெரூர்-வடக்கு

கரூர்க்கு வடகிழக்கே 10கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவில் 20செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அக்னீஸ்வரர். இக்கோவிலில் இடப்பக்கம் அம்பிகையும், நடுவில் முருகப்பெருமான் சன்னிதியும் அமைந்து சோமாஸ்கந்தராக காட்சியளிக் கிறார். இத்தல முருகப் பெருமான் பன்னிரு திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியருளிய தலம்.

8. நெரூர்-தெற்கு

கரூர்க்கு வடகிழக்கே 9கி.மீ. காவிரியாற்றின் மேற்குகரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி. இத்தலத்தில் சதாசிவப்பிரம்மேந்திரர் ஜீவசமாதி அடைந்த தலம். புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமை உற்சவம் நடைபெறுகிறது.

9. திருமுக்கூடலூர்

கரூர்க்கு கிழக்கே 9கி.மீ. காவிரி, ஆம்பிராவதி கூடும் இடத்தில் இக்கோவில் 2-75 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீஸ்வரர்.

10. பஞ்சமாதேவி

கரூர்க்கு வடகிழக்கே 3 கி.மீ. ஆம்பிராவதி ஆற்றின் வடகரையில் இக்கோவில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பரமேஸ்வரர், அம்மன் பார்வதியம்மை.

11. மண்மங்கலம்

கரூர்க்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மணிகண்டேஸ்வரர், அம்மன் மரகதவல்லி.

12. புன்னம்

கரூர்க்கு வடமேற்கே 8கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் புஸ்பவனநாதர், அம்மன் புங்கவல்லி.

13. முன்னூர்

கரூர்க்கு மேற்கே 18 கி.மீ. நொய்யல் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர்

சுயம்புலிங்கமாக அருள்மிகு மரகதலீஸ்வரர். அம்மன் மரகதாம்பிகை. தனிச்சன்னிதியில் வேலாயுதப்பெருமான் காட்சியளிக்கிறார். தலவிருட்சம் மாமரம். சேர மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட கோவிலாகும். இரண்டு கால பூஜை. தைப்பூசம் மற்றும் மாசி மகத்தில் பிரமோற்சவம் நடைபெறு கிறது.

14. பரமத்தி

கரூர்க்கு மேற்கே 16 கி.மீ. இக்கோவில் 1-64 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சாடீஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி.

15. வெண்ணெய்மலை

கரூர்க்கு வடக்கே 3 கி.மீ. ஆம்பிராவதியாற்றின் வடக்குப் பகுதியில் இக்கோவில் வெண்மையான நிறமுடைய பாறைகளை உடைய சிறிய குன்றின் மேல் பகுதியில் 3 செண்ட் நிலப்பரப்பளவில், 10 அடி உயர கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலட்சி. இத்தலத்தில் முருகப்பெருமான் மிக விஷேசமாக கொண்டாடப்படுவர். மூலவர் பாலசுப்ரமணியர். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியருளிய தலம். பிரமன், தேவர்கள் வழிபட்ட தலம்.

காமதேனுவால் உருவாக்கப்பட்ட தேனு தீர்த்தத்தில் தீர்த்தமாடி முருகப் பெருமானை வழிபட்டால் குழந்தைப் பேறுகிட்டும். இம்மலையை வலம் வந்தால் கயிலை மலையை வலம்வந்த பலன் கிட்டும் எனத் தலபுராணம் கூறுகிறது. நான்கு கால பூஜை. தை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

16. சேனப்பிரட்டை

கரூர்க்கு கிழக்கே 2 கி.மீ. ஆம்பிராவதி ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 3செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருத்தாசலேஸ்வரர். அம்மன் விருத்தாம் பிகை.

17. புலியூர்

கரூர்க்கு கிழக்கே 6 கி.மீ. ஆம்பிராவதியாற்றின் தென்கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் வியாக்ரபுரீஸ் வரர். அம்மன் கருணாகரவல்லி.

18. திருமாநிலையூர்

கரூர்க்கு தென்மேற்கே 3 கி.மீ. ஆம்பிராவதி ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலீஸ்வரர், அம்மன் சௌந்தரநாயகி.

19. ஆண்டான்கோவில்

கரூர்க்கு மேற்கே 3 கி.மீ. ஆண்டான் கோவில் கிழக்கு ஆம்பிராவதி ஆற்றின் வடகரையில் இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர், விசாலாட்சி.

20. சின்னதாராபுரம்

கரூர்க்கு தென்மேற்கே 25 கி.மீ. ஆம்பிராவதியாற்றின் வடக்கு கரையில் இக்கோவில் மேற்கு நோக்கியதும் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், 50அடி உயர இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் மணிமுக்தீஸ்வரர். அம்மன் அகிலாண்டேஸ் வரி. உள்பிராகாரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன், பைரவர், விநாயகர், சுப்ரமணியர், காசிவிஸ்வநாதர், கைலாசநாதர், தட்சிணாமூர்த்தி, மகாலஷ்மி, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன. இரண்டு கால பூஜை. மார்கழி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

21. இராஜபுரம்

அரவக்குறிச்சியிலிருந்து வடமேற்கே 3 3கி.மீ. ஆம்பிராவதி ஆற்றின் வடகரையில் இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர், அம்மன் விசாலாட்சி.

22. நாகம்பள்ளி

அரவக்குறிச்சிக்கு வடக்கே 6 கி.மீ. ஆம்பிராவதி ஆற்றின் கிழக்கு கரையில் இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாபலேஸ்வரர். அம்மன் மரகதவல்லி.

23. மூக்கணாங்குறிச்சி

கரூர்க்கு தெற்கே 10 கி.மீ. இக்கோவில் 63 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வீரபாண்டீஸ்வரர்.

24. அரவக்குறிச்சி

கரூர்க்கு தென்மேற்கே 24 கி.மீ. நங்கங்கையாற்றின் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர், விசாலாட்சி.

25. மொடக்கூர்-மேற்கு

பள்ளப்பட்டிக்கு மேற்கே 7 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மெய்ப்பொருள்நாதர். அம்மன் நல்லமங்கை யம்மை.

இறைவனின் மூவகை நிலை

1. உருவம் - (விக்கிரகத் திருமேனி)

2. அருவுருவம் - உருவமும் உருவமற்ற நிலையும் (சிவலிங்கத் திருமேனி)

3. அருவம் - உருவமற்ற நிலை.

பஞ்சகிருத்திய நடனம்

பஞ்சம் - ஐந்து, கிருத்தியம் - தொழில்கள். நடராசப்பெருமானின் நடனமே ஐந்தொழில் நடனமாகும். இந்நடனத்தில்,

1. உடுக்கை ஒலி - படைத்தல்

2. வலக்கை (அபயம்) - காத்தல்

3. இடக்கை (தீ) - ஒடுக்குதல்

4. வலக்கால் (முயலகனை மிதித்தல்) - மறைத்தல்.

5. இடக்கால் (தூக்கிய திருவடி) - அருளுதல் ஆகும்.

இறைவனின் ஐந்து முகங்களும், பெயர்களும், நிறங்களும்

1. ஈசானம் - நடுவில் இருக்கும் முகம் - பளிங்கு நிறம்.

2. தத்புருஷம் - கிழக்கில் இருக்கும் முகம் - பொன்.

3. அகோரம் - தெற்கில் இருக்கும் முகம் கருமை நிறம்.


4. வாமதேவம் - வடக்கில் இருக்கும் முகம் - சிவப்பு நிறம்.

5. சத்யோஜாதம் - மேற்கில் இருக்கும் முகம் - வெண்மை நிறம்.

இந்த ஐந்து முகங்களாலும் இறைவன் 28 ஆகமங்களையும் அருளிச் செய்தார்.

தாராபுரம் வட்டம்

(ஈரோடு மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. சிவன்மலை

காங்கேயத்திலிருந்து வடமேற்கே 4கி.மீ. சிவமலை, சேய்மலை, சேமலை, பட்டாலியூர். இக்கோவில் 200 படிகள் கொண்டது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பட்டாலிபால் வெண்ணீஸ்வரர், நஞ்சுண்டேஸ்வரர். அம்மன் பர்வதவர்த்தினி. அருகில் முருகப்பெருமான் காட்சியளிக்கிறார். தலமரம் கொட்டி மரம்.

வள்ளியைக் கவர்ந்து வந்த முருகப்பெருமானைப் பின் தொடர்ந்த வேடர்களை முருகன் போரில் மாய்த்தார். பின்பு வள்ளியின் வேண்டுகோளின் பேரில் மீண்டும் உயிர்ப்பித்தார். எனவே இக்கருத்தைத் தரும் பட்டாலியூர் என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது என்றும் கூறுவர்.

சிவவாக்கியர் இக்கோவிலை எழுப்பியதாகவும், தவம் புரிந்ததாகவும் தலவரலாறு கூறுகிறது.

அனுமன் சிவபெருமானை வழிபட்டதனால் அனுமனுக்கு, தனிச்சன்னிதி இங்கு உள்ளது. இங்குள்ள பழைய தாயில் இருக்கும் பழைய நெய் தீராத நோய்களைத் தீர்க்கும் சக்திவாய்ந்தது.

பட்டாலி ஆறுமுகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். இத்தலம் பழனியைப் போன்றே உள்ளது.

தலபுராணம் அம்பலவாண கவிராயர் இயற்றியுள்ளார்.

நான்கு கால பூஜை. கந்த சஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்திரத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

2. பரஞ்சேர்வழி

காங்கேயத்திலிருந்து வடக்கே 9 கி.மீ. பரன்பள்ளி, நொய்யல் ஆற்றின் தென்பகுதியில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூல்வர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நட்டூர்நாதர், மத்யபுரீசுவரர் என வழங்கப்படுகிறார். ஆலயம் கிழக்கு நோக்கியது. சுவாமி கோவிலின் இடப்பாகத்தே அம்மன் கோவில் உள்ளது.

ஊர் நட்டூர் எனவும், ஆலயம் பரன்பள்ளி என வழங்கப்படுகிறது.

திருநாவுக்கரசு சுவாமிகள் அடைவுத் திருத்தாண்டகத்தில் பள்ளி என வழங்கும் ஊர்களைக் குறித்து அருளிய பாடலில் பரன்பள்ளி என இவ்வூர் குறிக்கப்படுவதால் இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது.

இவ்வூரில் பல குடும்பத்தினருக்கும் குலதெய்வமாக விளங்கும் கரிய காளியம்மன் கோவிலும், அருகில் பெருமாள் கோவிலும் உள்ளது.

இக்கோவிலில் கொங்கு வேளாளர்களின் ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு விநாயகராக ஆறுகாணியாளர்கட்குரிய விநாயகர் ஆலயங்கள் உள்ளன.

3. தாராபுரம்

கரூர்க்கு தென்மேற்கே 61 கி.மீ. தாரை. அமராவதியாற்றின் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீஸ்வரர். அகத்திய முனிவர் வழிபட்டு காட்சி கண்ட தலம். தலபுராணம் வேலாயுதப்பண்டிதர் 243 பாடல்கள் கொண்டது. அருகில் அனுமன் கோவிலும், வீரேஸ்வரர் திருக்கோவிலும், அருகில் உள்ள கொழுஞ்சிவாடியில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர் திருக்கோவிலும் உள்ளது.

4. மறுதுறை

காங்கேயத்திலிருந்து வடக்கே 14 கி.மீ. நொய்யல் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பட்டீஸ்வரர். அருகில் காசிவிஸ்வநாதர்.

5. நாதகடையனூர்

காங்கேயத்திலிருந்து வடக்கே 14 கி.மீ. நொய்யல் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஜெயம் கொண்டீஸ்வரர்.

6. மூதூர்

காங்கேயத்திலிருந்து வடகிழக்கே 14கி.மீ. நொய்யல் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 3-30 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோலீஸ்வரர்.

7. வெள்ளிஇறைச்சல்

காங்கேயத்திலிருந்து கிழக்கே 12 கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாந்தீஸ்வரர்.

8. பாப்பிணி

காங்கேயத்திலிருந்து கிழக்கே 8 கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆர்த்தகபாலீஸ்வரர்.

9. கீரனூர்

காங்கேயத்திலிருந்து வடக்கே 8 கி.மீ. நொய்யல் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதீஸ்வரர்.

10. கடையூர்

காங்கேயத்திலிருந்து தென்மேற்கே 7கி.மீ. பொதியபாளையம். இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கடேஸ்வரர்.

11. காங்கேயம்

தாராபுரத்திலிருந்து வடக்கே 30 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காசிவிஸ்வநாதர்.

12. பச்சபாளையம்

காங்கேயத்திலிருந்து தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விக்ரமசோழீஸ்வரர்.

13. உத்தமபாளையம்

காங்கேயத்திலிருந்து தென்கிழக்கே 16கி.மீ. நாகமநாயக்கன்பட்டி. வட்டமலை ஆற்றின் கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

14. வெள்ளைகோவில்

காங்கேயத்திலிருந்து கிழக்கே 16 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோலீஸ்வரர்.

15. இலக்கமணநாயக்கன்பட்டி

மூலனூர்க்கு வடமேற்கே 10 கி.மீ. அமராவதியாற்றின் வடகரையில் இக்கோவில் 51 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகேஸ்வரர்.

16. ஆரத்தொழுவு

காங்கேயத்திலிருந்து தெற்கே 9 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

17. குறுக்கபாளையம்

காங்கேயத்திலிருந்து தென்மேற்கே 10கி.மீ. வட்டமலையாற்றின் வடகரையில் இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

18. குண்டம்

தாராபுரத்திலிருந்து வடமேற்கே 15கி.மீ. ருத்ராவதி. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கொங்குவடக்கு நாதர்.

19. சங்கரண்டம்பாளையம்

தாராபுரத்திலிருந்து வடகிழக்கே 14கி.மீ. அமராவதி ஆற்றின் கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பரமேஸ்வரர். அருகில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு தேனீஸ்வரர்.

20. மாம்பாடி

மூலனூர்க்கு வடமேற்கே 11 கி.மீ. அமராவதியாற்றின் தென்கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மாந்தீஸ்வரர்.

21. மூலனூர்

தாராபுரத்திலிருந்து வடகிழக்கே 20கி.மீ. இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோலீஸ்வரர்.

22. கொமாரபாளையம்

தாராபுரத்திலிருந்து கிழக்கே 24 கி.மீ. குமாரபாளையம். இக்கோவில் 153×105 அடி நீளம், அகலம் கொண்டு கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நட்டாத்தீஸ்வரர். கல்வெட்டுக் கள் உள்ளன. ராஜேந்திர சோழன் கட்டுவித்ததாக குறிப்பிடப்படுகிறது. புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் சூரியக் கதிர்கள் சுவாமியின் மேல் படுகிறது. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

23. வீராஞ்சிமங்கலம்

தாராபுரத்திலிருந்து வடக்கே 4 கி.மீ. அமராவதியாற்றின் கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர்.

24. சடையம்பாளையம்

தாராபுரத்திலிருந்து வடமேற்கே 18கி.மீ. உப்பார்ஓடைக்கு வடக்கே இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகேஸ்வரர்.

25. பொன்னபுரம்

தாராபுரத்திலிருந்து தென்மேற்கே 14கி.மீ. இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

26. தளவாய்ப்பட்டினம்

தாராபுரத்திலிருந்து தென்மேற்கே 8 கி.மீ. ஆம்பிராவதியாற்றின் வடகரையில் இக் கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர்.

27. கொங்கூர்

ஆலங்கியத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. சண்முகநதிக்கு தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர்.

28. ஆலங்கியம்


தாராபுரத்திலிருந்து தெற்கே 10 கி.மீ. அமராவதியாற்றின் தென்கரையில் இக் கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கலியுகநாதேஸ்வரர். அருகில் கற்பூரநாதர், திண்டீஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

29. வேலப்பநாயக்கன்வலசு

வெள்ளைகோவிலிருந்து தென்கிழக்கே 6 கி.மீ. மயிலரங்கம். அமராவதியாற்றின் வடகரைப்பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வைத்தியநாதர்.

ஈரோடு வட்டம்

(ஈரோடு மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. கொடுமுடி

சிட்ட னைச்சிவ னைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்.
பட்ட னைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை நாசமே
-- திருநாவுக்கரசர்.



ஈரோட்டிலிருந்து தென்கிழக்கே 39கி.மீ. மேல்கரையநாடு, திருப்பாண்டிக் கொடுமுடி, கறைசை. காவிரி நதிக்கு மேற்கரையில் இக்கோவில் கிழக்கு மேற்காக 640 அடியும், தெற்கு வடக்காக 484அடி கொண்டு கிழக்கு நோக்கிய 4 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகுடேசுவரர் கிழக்கு நோக்கியும் அம்மன் சௌந்தர நாயகி தனிச் சன்னிதியில் கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். அம்மன், சுவாமி சன்னிதிகளுக்கு நடுவில் பின்புறமாக வீரநாராயணப் பெருமாள், திருமங்கை நாச்சியார் உள்ளனர். தீர்த்தம் காவிரி, தேவ, பரத்துவாச, பிரம்ம தீர்த்தம். தலவிருட்சம் வன்னிமரம். உள்பிராகாரத்தில் காவிரிகண்ட விநாயகர், சுப்ரமணியர், நடராஜர், 63 நாயன்மார்கள், அகத்தீஸ்வரர், கஜலஷ்மி, பைரவர், சனீஸ்வரர், காசிவிஸ்வநாதர், சரஸ்வதி, பிரம்மன், சப்தமாதர்கள், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலத்தில் பிரம்மன் வழிப்பட்டதால் பிரமபுரி, திருமால் பூசித்ததால் அரிகரபுரம், கருடன் பூசித்துத் தேவலோகம் சென்று அமுதம் கொண்டு வந்ததால் அமுதபுரி, கன்மாடன் என்னும் வேதியன் வழிபட்டு வயிற்றிலுள்ள களங்கம் நீங்கப் பெற்றதால் கன்மாடபுரம், மலையத்துவச பாண்டியன் திருப்பணி செய்ததால் திருப்பாண்டிக் கொடுமுடி, பரத்துவாசருக்கு நடனகாட்சி அளித்ததால் பரத்துவாஜக்ஷேத்திரம், மேருமலையின் ஒரு துண்டு வைரமணியாக இவ்விடத்தில் விழுந்து பெருஞ்சிகரமாவும், அதுவே மூலலிங்கமாகவும் அமைந்ததால் கொடுமுடி என்றும் பெயர் பெற்றது.

இத்தலம் மும்மூர்த்திதலம். வன்னிமரத் தடியில் பிரமன் காட்சியளிக்கிறார். இங்குள்ள நடராசருக்கு முயலகன் இல்லை. சதுரதாண்டவர், இதனால் இவ்வூர் சதுர்வேதி மங்கலமாகப் போற்றப்படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கொங்கு நாட்டுத் திருப்பதிகளில் இத்தலம் 6 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் திருப்பதிகங்கள் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கபிலதேவ நாயனார் அருளிய திருவிரட்டைமணிமாலை, சேக்கிழார் அருளிய பெரியபுராணம் மற்றும் திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம் முதலியவை இத்தலத்திற்குள்ளன.

கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை அதிராஜராஜமண்டலத்துக் காவிரி நாட்டுக் கறையூர்த் திருப்பாண்டிக் கொடுமுடி என்று குறிக்கப்பெற்றுள்ளது. சுந்தரபாண்டிய கேசரிவர்மன், கோமாறவர்மன், தேர்மாறன், தண்டிகைக் காளியண்ணன், நரசிம்ம பல்லவன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவமும், ஆடி பதினெட்டிலும், பங்குனி மாதத்தில் காவடியும் நடைபெறுகிறது.

2. ஈரோடு

சேலத்திலிருந்து தென்மேற்கே 62 கி.மீ. கபாலபுரி, திருத்தொண்டீச்சரம். இக்கோவில் இந்நகரின் மையப் பகுதியில் 88 செண்ட் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தொண்டீஸ் வரர். ஆர்த்தர கபாலீஸ்வரர். அம்மன் வாரணியம்மை தனிச்சன்னிதியில் காட்சிய ளிக்கின்றாள். தலதீர்த்தம் கபாலதீர்த்தம். தல விருட்சம் வன்னிமரம். உட்பிராகாரத்தில் பரிவார மூர்த்தங்கள் இடம் பெற்றுள்ளன. பிரம்மன், பொல்லாப்பிள்ளையார், அறுபத்து மூவர், சுரஹேஸ்வரர், நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

தட்சன் செய்த யாகத்தில் நான்முகன் பங்கு கொண்டமைக்காக, சாபத்தில் அவருடைய தலை உடைந்து நான்கு பாகங்களாக விழுந்ததாகவும், மண்டை ஓட்டில் ஈரமுள்ள பகுதி - ஈரஓடு விழுந்த பகுதியே இந்த தலம். அதனாலேயே இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிக்கு நான்முகனுக்கு அருளி உயிர்ப்பித்த காரணத்தால் ஈரோடையப்பர் என்ற பெயரும், தலத்திற்கு ஈரோடு என்றும் பெயர்.

இத்தலத்தில் இருந்த சிவபக்தரான தாண்டவன் முதலியார் தன்னை நாடிவந்த சிவத்தாண்டருக்கு தறியில் நெய்த துண்டை தானமாக அளித்தாராம். மறுநாள் அது ஆலயத்தில் சிவலிங்கத்தின் மீது இருந்ததாம். மூலவிக்ரத்தின் மீது அதை இரகசியமாக அணிவித்ததாகப் பூசாரியின் மீது பஞ்சாயத்து குற்றம் சாட்டப்பட்டது. அப்போது இறைவன் அசரிரியாக தானே தாண்டவராயரின் பக்தியை உணர்த்தி அவ்வாறு லீலை செய்ததாகக் கூறியதாம் என இத்தலப்பாடல் தெரிவிக்கிறது.

மாசி மாதத்தில் கடைசி மூன்று நாட்கள் சூரியன் கதிர்கள் இலிங்கத்தின் மீது படுகிறது. கல்வெட்டுக்களில் கொங்கு சோழர்கள், ஹொய்சாளர், விஜயநகர வேந்தர்கள் ஆகியோர் காலத்தைச் சேர்ந்தது. இவ்வூரை திருக்தொண்டீச்சரம் என்றும், இறைவர் தொண்டீஸ்வர நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

நான்கு கால பூஜை. சித்திரை மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

3. நசையனூர்

ஈரோட்டிலிருந்து மேற்கே 11 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மூவேந்தரர்.

4. அவல்பூந்துறை

ஈரோட்டிலிருந்து தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு புஷ்பவனநாதர்.

5. காங்கேயம்பாளையம்

ஈரோட்டிலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. காவிரியாற்றின் மேற்குக்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நட்டாத்தீஸ்வரர்.

6. நன்னைகலமங்கலம்

மொடக்குறிச்சிக்கு கிழக்கே 10 கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாதீஸ்வரர்.

7. பாகூர்

மொடக்குறிச்சிக்கு கிழக்கே 9 கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவில் 39

செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

8. ஈச்சம்பள்ளி

ஈரோட்டிலிருந்து தென்கிழக்கே 19கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

9. ஏழுமாத்தூர்

ஈரோட்டிலிருந்து தெற்கே 18 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சக்தீஸ்வரர். இங்குள்ள மலை கடல் மட்டத்திலிருந்து 1342 அடி உயரம் கொண்டது.

10. மொடக்குறிச்சி

ஈரோட்டிலிருந்து தெற்கே 13 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வரகிரீஸ்வரர்.

11. முகாசிஅனுமான்பள்ளி

அறச்சலூர்க்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 37 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அனுமீஸ்வரர்.

12. அட்டவணை அனுமான்பள்ளி

அறச்சலூர்க்கு வடமேற்கே 5 கி.மீ. இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமுகன்மகாருத்ரநாதர்.

13. அறச்சலூர்

ஈரோட்டிலிருந்து தெற்கே 20 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இலங்கைநாதர்.

14. பாலமங்கலம்

ஏழுமாத்தூரிலிருந்து தென்கிழக்கே 6கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் அண்ணாமலையார்.

15. நஞ்சைகீழம்பாடி

மொடக்குறிச்சிக்கு தென்கிழக்கே 10கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகேஸ்வரர். அருகில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசநாதர்.

16. விளக்கேத்தி

சிவகிரிக்கு மேற்கே 3 கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வித்தகவாதீஸ்வரர்.


17. ஊஞ்சலூர்

கொடுமுடியிலிருந்து வடக்கே 6 கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரர்.

18. வேங்கம்பூர்

கொடுமுடியிலிருந்து வடக்கே 3 கி.மீ. காவிரியாற்றின் கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் சோலீஸ்வரர்.

பெருந்துறை வட்டம்
(ஈரோடு மாவட்டம்)



1. சென்னிமலை

பெருந்துறையிலிருந்து தெற்கே 15கி.மீ. சிரகிரி, சிகரகிரி, சென்னியங்கிரி, புஷ்பகிரி. இக்கோவில் கடல் மட்டத்தி லிருந்து 1750 அடி உயரத்தில் மலைமேல் 165×110 அடி நீளம், அகலம் கொண்டும், 1300 படிகள் அமைந்து கிழக்கு நோக்கியதும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் கைலாசநாதர். அம்மன் பெரியநாயகி. தீர்த்தம் குமார, மார்க்கண்டேய தீர்த்தம் தலவிருட்சம் புளியமரம். இத்தலத்தில் முருகப்பெருமான் விசேஷ அம்சத்துடன் காட்சியளிக்கிறார்.

காங்கேயத்தை மையமாகக் கொண்டு சென்னிமலை, ஊதிமலை, வட்டமலை, சிவன்மலை, திருமுருகன்பூண்டி உள்ளன. இவை எல்லாவற்றிக்கும் முதன்மையாக கருதப் படுவதால் இது சென்னிமலை.

திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக் கரசருக்கும் சிவபெருமான் படிக்காசு வைத்ததுபோல் இத்தலத்தில் முருகப் பெருமான் அருணகிரிநாதருக்குப் படிக்காசு வைத்த பெருமையுடைய தலம். அருண கிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம். புண்நாக்கு சித்தர் சமாதியை இத்தலத்தில் காணலாம். தேவராயரின் கந்தர் சஷ்டி கவசம் அரங்கேற்றப்பட்ட தலம். கவிகாளமேகப் புலவர் இத்தலத்தைப் பற்றிச் சிலேடை யாகப் பாடிய பாடல்கள் இத்தலத்திற் குண்டு.

இத்தலத்தில் கோஷ்டங்களில் காணப் படும் அக்னிஜாத சுப்பிரமணியர், சௌர பேயசுப்பிரமணியர், சரவணபவன், தேவசே னாதிபதி முதலிய சிற்பங்களும் அமைந் துள்ளன.

கல்வெட்டுக்கள் உள்ளன. விசயலாய சோழன், கொங்கு சோழர்கள், எலம்பள்ளி ஜமீன்தார்கள் முதலியோர் திருப்பணி செய்ததை கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தினமும் நான்கு கால பூஜை. சஷ்டி, தைப்பூசம் சிறப்பாகக் கொண்டாடப்படு கிறது.

2. திங்களூர்

பெருந்துறைக்கு வடமேற்கே 10 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரமௌலீஸ்வரர்.

3. காஞ்சிக்கோவில்

பெருந்துறைக்கு வடக்கே 14 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர்.

4. கருமாந்தசெல்லி பாளையம்

பெருந்துறைக்கு வடக்கே 2 கி.மீ. கருமாந்தசெட்டிபாளையம். இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் முக்தீஸ்வரர்.

5. வெள்ளியம்பதி

குன்னத்தூர்க்கு தெற்கே 5 கி.மீ. ஆண்டியூர். இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆதீஸ்வரர்.

6. விஜயபுரி

பெருந்துறைக்கு மேற்கே 10 கி.மீ. விஜயமங்கலம். இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நாகேசப்பெருமான். அம்மன் கோவர்த்தனாம்பிகை. உள்பிராகாரத்தில் ஆறுமுகப்பெருமான் மயில் மீது அமர்ந்து கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். அருண கிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம். இக்கோவிலுக்கு அருகில் 15 செண்ட்

நிலப்பரப்பளவில் சோமேஸ்வரர் திருக்கோவிலும், 50 செண்ட் நிலப்பரப்பளவில் ஸ்ரீ கரிவரதராஜபெருமாள் கோவிலும் உள்ளன. கல்வெட்டுக்கள் உள்ளன. கொங்கு மண்டல சதகத்திலும் இத்தலத்தைப் பற்றி கூறியுள்ளன.

7. துடுப்பதி

பெருந்துறைக்கு வடமேற்கே 6 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அருகில் சித்தீஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

8. வடமுகம்வெள்ளோடு

பெருந்துறைக்கு தென்கிழக்கே 8 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர். அருகில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சர்வலிங்கமூர்த்தி.

9. இங்கூர்

பெருந்துறைக்கு தெற்கே 6 கி.மீ. இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆலலேஸ்வரர்.

10. புஞ்சைதளவாய் பாளையம்

சென்னிமலைக்கு மேற்கே 16 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நஞ்சுண்டேஸ்வரர்.

11. சர்க்கார்பெரிய பாளையம்

பெருந்துறைக்கு தென்மேற்கே 28கி.மீ. குரக்குத்தளி, குறும்பர்நாடு. நொய்யல் ஆற்றின் வடகரையில் இக்கோவில் 3-67 ஏக்கர் (400×400 அடி அகலம், நீளம்) நிலப்பரப்பளவில் கிழக்குநோக்கியதும், கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுக்கிரீசுவரர். அம்மன் ஆவுடைநாயகி.

இராமாயணத்தில்வரும் சுக்கிரீவன் வழிபட்ட தலம். ஆதலால் குரக்குத்தளி எனப்பெயர் பெற்றது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் இத்தலத்தைக் குறும்பர் நாட்டைச் சேர்ந்தது என்ற விவரத்தோடு "கொங்கிற் குறும்பில் குரக்குத் தளியாய்" என ஊர்த் தொகையில் பாடியுள்ளதால் இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது.

கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர், பாண்டியர், உடையார் காலத்தைச் சேர்ந்தது. தொல்பொருள் ஆய்வுத் துறையிலுள்ள அழகிய கற்றளி இக்கோவில்.

சத்ததாளம்

துருவதாளம், அடதாளம், ஏகதாளம், திரிபுடைதாளம், ரூபகதாளம், சம்பை தாளம், மட்டியதாளம் என்னும் ஏழுவகைத் தாளங்கள்.

சத்ததீவு

நாவல், இரவி, குசை, கிரவுஞ்சம், இலவம், தெங்கு, புட்கரம் என்னும் ஏழு தீவுகள்.

சத்தபுரி

மதுரை, அயோத்தி, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் ஏழு புண்ணிய நகரங்கள்.

சத்தமண்டலம்


வாயு, வருணன், சந்திரன், சூரியன், நட்சத்திரம், அக்கினி, மேகம் என்னும் ஏழு உலகங்கள்.

சத்தலோகம்

பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், தரா, கஞ்சம்.

திருச்சிறறமபலம

பவானி வட்டம்
(ஈரோடு மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. பவானி

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
அந்தார் அரவணிந்த அம்மானிடம் போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக்கனி யுதிர்க்குந் திருநணாவே

-- திருஞானசம்பந்தர்.



ஈரோட்டிலிருந்து வடக்கே 14 கி.மீ. பூவானிநாடு, திருநணா, பவானிகூடல், முக்கூடல், பதரிவனம், தக்ஷிண பிரயாகை, இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் வடக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், கிழக்கே காவிரியாறும், மேற்கே பவானியாறும், தெற்கே இரண்டு ஆறும் ஒன்று சேரும் கூடுதுறையில் பெரிய மதில்கொண்டு இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சங்கமுகநாதேசுரர் கிழக்கு நோக்கியும், அம்மன் வேதநாயகி கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் காயத்திரி, சாவித்திரி, சரசுவதி, தேவ, பவானி தீர்த்தங்கள். தலவிருட்சம் இலந்தைமரம். உள்பிராகாரங்களில் இராஜகணபதி, சுப்பிரமணியர், காசிவிஸ்வநாதர், அமிர்த லிங்கம், ஜோதிலிங்கம், சுரஹரேசுவரர், ஆதிகேசவ பெருமாள், சுந்தரவல்லித் தாயார், அனுமன், சூரியன், 63 நாயன்மார்கள், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

காவிரி, பவானி, அமுதநதி கூடுவதால் பவானி முக்கூடல் என்று பெயர். பத்மகிரி, நாககிரி, சங்ககிரி, மங்கலகிரி, வேதகிரி என்னும் ஐந்து மலைகளுக்கு நடுவில் விளங்கும் தலம்.

குபேரன், விசுவாமித்திரன், பராசரர் பூசித்த தலம். தரிசித்தோருக்குத் தீங்கு நணுகாது. தீமை நண்ணா ஊர் ஆதலால் திருநணா என்றாகியது.

இத்தலத்தில் அமைந்துள்ள சுரஹரே சுவர் மூர்த்திக்குச் சந்தனக்காப்பிட்டு வணங்கினால் காய்ச்சல் தணிவதாக நம்பப்படுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கொங்கு நாட்டில் இத்தலம் 3 வது. திருஞான சம்பந்தர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம். தலபுராணம் பவானிகூடற்புராணம். 18 சருக்கங்களை யும், 901 பாடல்களையும் கொண்ட இப்புராணத்தை வடமொழியிலிருந்து தமிழில் செய்யுட்களாக ஓராட்டுக் குப்பைச் செட்டிபாளையம் வாசுதேவ முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது. மேலும் கொங்குமண்டல சதகம், வேதநாயகி பிள்ளைத் தமிழ், சதகம், அம்மன் பேரில் விறலிவிடுதூது, திருநாணாச்சிலேடை வெண்பா போன்ற நூல்களும் இத்தலத்திற் குண்டு.

கல்வெட்டுக்களில் வடகொங்குநாட்டு வடகரைநாடு என்று இவ்வூரைக் குறிப்பிடப்படுகிறது. சோழர், பாண்டியர், கெட்டி முதலியார்கள் பல நிலைகளில் திருப்பணி செய்துள்ளதை கல்வெட்டுக் களில் குறிப்பிடப்படுகிறது.

தினந்தோறும் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் 13 நாட்கள் பிரமோற்சவமும், ஆடி பதினெட் டாம் பெருக்கு அன்றும் உற்சவம் நடைபெறுகிறது.

2. பர்கூர்

அந்தியூரிலிருந்து வடக்கே 25கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாண்டீஸ்வரர். அருகில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜெகதீஸ்வரர்.

3. அந்தியூர்

பவானியிலிருந்து வடமேற்கே 16 கி.மீ. இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு செல்லீஸ்வரர்.

4. பிரம்மதேசம்

பவானியிலிருந்து வடமேற்கே 15 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பேத்ராயசுவாமி.

5. பசபாளையம்

பவானியிலிருந்து வடமேற்கே 15 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

6. வெள்ளிதிருப்பூர்

பவானியிலிருந்து வடக்கே 20 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பால்லிங்கேஸ்வரர்.

7. இளைபிள்ளை

அந்தியூர்க்கு வடகிழக்கே 15 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். அம்மன் சொக்கநாச்சி யம்மன்.

8. நெருஞ்சிப்பேட்டை

பவானியிலிருந்து வடக்கே 24 கி.மீ. காவிரியாற்றின் மேற்குக்கரையில் இக் கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகா தேவர். பழைய காவிரி அணை இங்குள்ளது.

9. அம்மாபேட்

பவானியிலிருந்து வடக்கே 19 கி.மீ. காவிரியாற்றின் மேற்குகரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

10. பாட்லூர்

பவானியிலிருந்து வடக்கே 16 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வாகீஸ்வரர்.

11. உலகடம்

பவானியிலிருந்து வடக்கே 16 கி.மீ. இக்கோவில் 79 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உலகேஸ்வரர். அம்மன் உலகநாயகி.

12. வேம்பதி

பவானியிலிருந்து வடமேற்கே 15 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தீஸ்வரர்.

13. ஆப்பக்கூடல்

பவானியிலிருந்து மேற்கே 12 கி.மீ. பவானியாற்றின் வடகரையில் இக்கோவில் 2-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக காசிவிஸ்வநாதர்.


14. குறிச்சி

பவானியிலிருந்து வடக்கே 15 கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மாதேஸ்வரர்.

15. ஓடதுறை

பவானியிலிருந்து மேற்கே 21 கி.மீ. இக்கோவில் 2-48 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாதேவர்.

கோபிசெட்டிபாளையம் வட்டம்
(ஈரோடு மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பெருந்தலையூர்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து கிழக்கே 23 கி.மீ. இக்கோவில் 98 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகிழேஸ்வரர்.

2. மேட்டுபாளையம்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து கிழக்கே 22 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஊஞ்சலடி பட்டடப்பசுவாமி.

3. குகளூர்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து வடகிழக்கே 11 கி.மீ. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மத்திய புரீஸ்வரர்.

4. ஆலுகுழி

கோபிசெட்டிபாளையத்திலிருந்து மேற்கே 11 கி.மீ. இக்கோவில் தடமலை யாற்றின் தென்கரையில் 1-37 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

5. பேரையூர்கிராமம்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து வடக்கே 2 கி.மீ. பேரையூர், பராபுரி. பவானியாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அமரபுரீஸ்வரர். அம்மன் அக்கினிகுண்டகாளியம்மன். கொண்டாத்து காளியம்மன் என்றும் வழங்குவர். கடையெழுவள்ளல்களில் பாரி வணங்கிய தலம். கல்வெட்டுக்களில் வீரபாண்டிய தேவன், சோழ அரசன் கோனேரின்மைகொண்ட திரிபுவன வீரதேவன் காலத்தைச் சேர்ந்தது. மார்கழி மாதத்தில் அக்கினி குண்டம் தீ மிதித்தல் திருவிழா நடைபெறுகிறது.

6. நதிபாளையம்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து தென்கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திம்மராயஸ்வாமி.

7. மொடசூர்

கோபிசெட்டிபாளையத்திற்கு தெற்கே 2 கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமேஸ்வரர்.

8. கடத்தூர்

எலத்தூர்க்கு வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுவேஸ்வரர்.

9. சுண்டக்கம்பாளையம்

நம்பையூர்க்கு வடமேற்கே 15 கி.மீ. இக்கோவிலின் மூலவர் மகாதேவர்.

10. அங்கிபாளையம்

எலத்தூர்க்கு வடமேற்கே 4 கி.மீ. பவானியாற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் நடராஜர். அம்மன் சிவகாமியம்மை.

11. எலத்தூர்

நம்பையூர்க்கு வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 39 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

12. குருமாந்தூர்

நம்பையூர்க்கு வடகிழக்கே 10 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

13. கோபிசெட்டிபாளையம்

ஈரோட்டிலிருந்து வடமேற்கே 43 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

14. வேலன்கோவில்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து தென்கிழக்கே 15 கி.மீ. பவானியாற்றின் கரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் நஞ்சுண்டேஸ்வரர்.


15. சிறுவலூர்

வேலன்கோவிலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

16. கொசனம்

நம்பையூர்க்கு கிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நடராஜர்.

சத்தியமங்கலம் வட்டம்
(ஈரோடு மாவட்டம்)



1. பவானிசாகர்

சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே 14கி.மீ. டணாயகன்கோட்டை. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூல்வர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமேஸ்வரர். அம்மன் மங்களாம்பிகை. உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், மாதவப் பெருமாள், நவநீதகிருஷ்ணன், ஆஞ்சநேயர், நீலகண்ட நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், காலபைரவர், துர்க்கை, நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தல இறைவனை துர்வாச முனிவர், ஜனமேஜய அரசன் வணங்கிய தலம்.

டணாயகன்கோட்டைக்குக் கீழ்பாகத்தில் சுமார் நான்காவது கல் தொலைவில் பவானி ஆறும் மோயாறும் கூடும் இடத்தில் கூடுவாய் என்னும் ரெவின்யூ கிராமம் இருந்திருக்கிறது. அந்தக் கிராமத்தில் இயற்கைக் சீற்றத்தால் அடிக்கடி அழிவுற்ற அணைக்குப் பதிலாக நாடு போற்றும் பவானி சாகர் அணை கட்டும் திட்டம் தீட்டப்பட்டது. அந்தப் புதிய அணையின் நீர்த்தேக்கத்தால் டணாயக்கன் கோட்டைக் கோவில்கள் மூழ்கிவிடும் என்று அறிந்த அரசு, கோவிலில் உள்ள சுவாமி சிலைகளை அப்புறப்படுத்தி நூதன கோவில் ஒன்றுகட்டி அதற்குள் பலநூறு ஆண்டுகளாகப் போற்றி பூஜிக்கப்பட்ட விக்கிரகங்களைக் கொண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதற்கான கல்வெட்டு இங்கே பொறிக்கப்பட்டுள்ளது.

கொங்கு நாட்டை ஆண்ட மூன்றாம் நரசிம்மன் என்பவன் தனது தந்தையின் நினைவாக நிர்மாணித்த சோமேஸ்வரமங்களாம்பிகை கோவிலின் கருவறையின் மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டில், இக்கோவிலின் முற்காலப் பெயர் தோன்றீஸ்வரமுடையார் கோவில் என்றும், இவ்வூர் துரவலூர் என்றும், இங்குள்ள முற்காலக் கோட்டை நீலகிரி சாதாரணன் கோட்டை என்று அழைக்கப்பட்டது போன்ற விவரங்கள் கிடைத்துள்ளன.

உள்பிராகாரத்தில் உள்ள அகோரவீர பத்திரர் பல சமூகங்களுக்கான குல தெய்வம், ஒக்கலிகர், படுகால் இருளர், லிங்காயத், தெலுங்கு செட்டியார், வீர ஜங்கமர்கள், நாயக்கர் ஆகிய சகலருக்கு மானவர் வீரபத்ரர். அதனால் மக்கள் அவருக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கோபுரம் எழுப்பியுள்ளனர்.

நாள்தோறும் இரு கால பூஜை நடைபெறுகிறது. சிவராத்திரி, பிரதோஷ காலங்களில் அனைத்து சிறப்பு பூஜைகளும் நடக்கின்றன. தவிர அனைத்து சைவ, வைஷ்ணவ கடவுள்களும் இருக்கிறபடியால் அமாவாசை, கிருத்திகை, வைகுண்ட ஏகாதசி, தைப்பூசம், சதுர்த்தி, பங்குனி உத்திரம் என எல்லா காலங்களிலும் அந்தந்தக் கோவில்களில் சிறப்பாக உற்சவம் நடைபெறுகிறது.

2. பன்னாரி

சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே 14கி.மீ. வேங்கைவனம். இக்கோவிலின் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பன்னாரிஈஸ்வரர். அம்மன் மாரியம்மன். தலவிருட்சம் வேங்கைமரம். தீர்த்தம் சக்திதீர்த்தம். ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் சோமவாரத்தில் குண்டம் திருவிழா நடைபெறுகிறது.

3. சத்தியமங்கலம்


பவானியிலிருந்து மேற்கே 54 கி.மீ. சக்திமங்கை. பவானியாற்றின் வடகரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரரேஸ்வரர்.

4. ஆசனூர்

சத்தியமங்கலத்திலிருந்து வடக்கே 24கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கும்பேஸ்வரர்.

மேட்டுப்பாளையம் வட்டம்

(கோயம்புத்தூர் மாவட்டம்)



1. இரும்பொறை

மேட்டுப்பாளையத்திலிருந்து கிழக்கே 23 கி.மீ. ஓதிமலை, ஞானமலை. கிராமத்திலிருந்து வடக்கேயுள்ள இம்மலை யடிவாரத்தில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கயிலாயநாதர். இம்மலையின் உச்சியில் செல்ல 180 படிகள் கொண்டு மலைமேல் முருகப்பெருமான் ''குமார சுப்பிரமணியன்'' என்றபெயரில் ஐந்து திருமுகங்களும், எட்டு திருக்கரங்களும் கொண்டு தனிமுருகனாக எழுந்தருளி யுள்ளார்.

இரும்பொறை என்பது பிரமனை அடைத்த இரும்பு அறை என்று கூறுகின்றனர். மலையடிவாரத்தில் போகர் யாககுண்டம் உள்ளது. போகருக்கு வழியனுப்ப ஒரு முகமும், நான்கு கரங்களும் கொண்டு ஆறுமுகன் மலையிலிருந்து இரங்கி வந்ததாகவும், எஞ்சிய ஐந்து முகங்களும், எட்டுக்கரங்களும் கொண்டு மலையில் விளங்குகின்றார்

முருகப்பெருமானின் தலைகளின் பின்னே ஒளிவட்டமும், பீடத்தில் மயிலும் உள்ளது. அருணகிரிநாதர் இத்தலபெருமானு க்கு திருப்புகழ் அருளியுள்ளார்.

நான்கு கால பூஜை. தைப்பூசம் உற்சவம் நடைபெறுகிறது.

2. கல்லம்பாளையம்

மேட்டுப்பாளையத்திலிருந்து தென் மேற்கே 18 கி.மீ. பெரியபள்ளம் ஆற்றின் கரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர்.

இவ்வூருக்கு வடகிழக்கேயுள்ள குருந்த மலையில் குழந்தை வேலாயுதப்பெருமான் என்னும் பெயரில் முருகப் பெருமான் காட்சியளிக்கின்றார். இயற்கை எழிலில் அமைந்துள்ள ஆலயம்.

மேலும் இவ்வூருக்கு அருகில் உள்ள தேக்கம்பட்டியில் பவானியாற்றின் கரையில் அருள்மிகு வனபத்திரகாளியம்மன் கோவில் உள்ளது. அமாவாசை தோறும் ஆயிரக்கணக் கான மக்கள் வந்து வழிபடுகின்றனர். காளிசக்கரம் பதித்த தாயத்தை அம்மன் பாதத்தில் வைத்து வழிபட்டு பின் நாம் அணிந்தால் எண்ணியதெல்லாம் எளிதில் கை கூடுகிறது. ஆடி அமாவாசை உற்சவம் நடைபெறுகிறது.

3. காரமடை

மேட்டுப்பாளையத்திலிருந்து தெற்கே 5கி.மீ. காரைவனம். காரைச் செடிகளுக்கு இடையே அரங்கர் வெளிப்பட்டு பின் கோவிலில் எழுந்ததால் காரமடை ஆயிற்று. இக்கோவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் நஞ்சுண்டேஸ்வரர் கிழக்கு நோக்கியும். அம்மன் உலகாம்பிகை.

உள்பிராகாரத்தில் நர்த்தன கணபதி, பாலசுப்பிரமணியர், இடபாரூடர், காளி, பிரம்மன், திருமால், திருமகள், அகோரவீரபத்திரர், மகிஷாசுர மர்த்தினி முதலிய சன்னிதிகள் உள்ளன. விமானம் அஷ்டகஜம்.


இக்கோவிலுக்கு அருகில் உள்ள ஸ்ரீஅரங்கநாதர் திருக்கோவில் அமைந் துள்ளது.

அட்டமாசித்தி

எட்டுவகைச் சித்திகள் :

அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.

அவிநாசி வட்டம்
(கோயம்புத்தூர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. அவிநாசி

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாய் என்றுன்னையே உள்குகின் றேன்உணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே

-- சுந்தரர்.



கோயம்புத்தூரிலிருந்து வடகிழக்கே 41கி.மீ. திருப்புக்கொளியூர்அவிநாசி தட்சணவாரணாசி. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 100அடி உயர 7நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அவிநாசியப்பர். அம்மன் பெருங்கருணைநாயகி. தீர்த்தம் நாகக்கன்னி தீர்த்தம். தலவிருட்சம் பாதிரிமரம். உள்பிராகாரத்தில் செல்வ விநாயகர், முருகன், பஞ்சலிங்கம், கஜலஷ்மி, காலபைரவர், 63 நாயன்மார்கள், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சிறுவன் முதலைவாயினுள் புகுந்த ஊர் புக்கொளியூர். அவிநாசி - அழிவு இல்லாதது. அந்தணச் சிறுவர் இருவர் நீர் நிலையாகிய ஏரியில் நீராடச் சென்றனர். ஒருவனை முதலை விழுங்கியது. மற்றவன் வீடு வந்து சேர்ந்தான். ஆண்டுகள் மூன்று கழிந்தன. பிழைத்த சிறுவனுக்குப் பூணூல் அணியும் விழா நடைபெற்றது. அங்கு மங்கள ஒலி எழுந்தது. எதிர் வீட்டில் சிறுவனை இழந்த பெற்றோர் வருந்தியழுதனர். இருவகை ஒலியும் கேட்ட சுந்தரர் முதலைவாயில் அகப்பட்ட பிள்ளையை எழுப்பியபின் அன்றி இறைவனைக் காணச்செல்லேன் எனக்கூறி அந்த ஏரியின் கரையை அடைந்தார். நீரற்றிருந்த அவ்வேளையில் நீரை வரச்செய்தார். முதலையும் வரச் செய்தார். முதலை வாயினின்றும் அப் பிள்ளையையும் வரச்செய்தார். இத்துணை அரிய செயல்களுக்கு அவர் இறைவன் மீது பாடிய தேவாரமே காரணமாயிற்று. தற்போது ஏரிக்கரையில் சுந்தரமூர்த்தி நாயனார் கோவில் உள்ளது. முதலை வாயினின்று பிள்ளையை வரவைத்த வரலாறு சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் வரலாறு ஹரதத்தாரால் புகழ்ப்பட்டது.

காசியில் வாசி அவிநாசி. காசியை வணங்கும் பலன் தரவல்லது.

கொங்கு நாட்டிலேயே மிகப்பெரிய தேர் இத்தலத்தில் உள்ளது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கொங்கு நாட்டுத் தலங்களில் இத்தலம் முதன்மை யானது. சுந்தரர் அருளிய திருப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசரும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம். இத்தலத்து தலபுராணம் 1021 பாடல்கள், 13 சருக்கங்கள் கொண்டது இயற்றியவர் இளையான் கவிராயர்.

கல்வெட்டுக்கள் 32 உள்ளன. வீரராஜேந்திரசோழன், குலோத்துங்க சோழன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், கோனேரின்மை கொண்டான் போன்ற

அரசர்களும், சிற்றரசர்களும் இக்கோவிலுக்கு பல நிலைகளில் திருப்பணி செய்ததைக் குறிக்கிறது.


பங்குனி மாதத்தில் முதலைவாய் பிள்ளை உற்சவம் நடைபெறுகிறது.

தினமும் 5 கால பூஜை நடைபெறுகிறது.

2. திருமுருகன்பூண்டி

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமைசொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடைமங்கை தன்னொடும் எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானிரே

-- சுந்தரர்.



அவிநாசியிலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. மாதவிவனம், முல்லைவனம், கந்தமாபுரி. நொய்யல் ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமுருகநாதர் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் முயங்குபூண்முலையம்மை. தீர்த்தம் சண்முக, பிரம்ம, ஞான தீர்த்தங்கள். தலவிருட்சம் குருக்கத்தி. உள்பிராகாரத்தில் நிருதிவிநாயகர், சண்முகர், துர்க்கை, இலிங்கோத்பவர், நடராஜர், சனீஸ்வரர், பைரவர், 63 நாயன்மார்கள், பவானீஸ்வரர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

முருகப்பெருமான் சூரசம்ஹாரத்தால் ஏற்பட்ட பாவங்கள் நீங்க இங்கு வழிபட்ட தலம். அதனால் திருமுருகன்பூண்டியாயிற்று.

சேரமான்பெருமான்நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கொடுத்த பெரும் பொருளைச் சிவபெருமான் வடுகவேடுவர் உருவில் பூதகணங்களை விட்டுக் கொள்ளையடிக்கச் செய்து, பிறகு சுந்தரர் பதிகம் பெற்று அப்பொருட்களைத் திரும்பக் கொடுத்த அற்புதம் நிகழ்ந்த தலம். துருவாசர் கற்பகலோகத்திலிருந்து மாதவிமரம் கொண்டு வந்த தலம். இத்தல நடராச தாண்டவம் பிரமதாண்டவம்.

கோவிலின் வாயிலில் பறிகொடுத்து முகம்வாடிய சுந்தரரும், மீட்டும் பெற்ற அவரும் இரு உருவங்களாக உள்ளது.

கோவிலுக்கு வெளியே உள்ள பிள்ளையார் கோவிலின் எதிரில் உள்ள ஒரு பாறையில் ஒரு சிறுகுழி உள்ளது. அக்குழியிலிருந்து 12 வருஷங்களுக்கு ஒரு முறை நீர் பொங்குகின்றது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற கொங்கு நாட்டுத் தலங்களில் இத்தலம் இரண்டாவது. சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது. திருநாவுக்கரசரும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். அருணகிரிநாதரும் இத்தல முருகப்பெருமான் மீது திருப்புகழ் அருளியுள்ளார்.

இங்குள்ள பிரம்மதீர்த்தில் நீராடி இத்தல பெருமானை வழிபட்டால் பிரம்மஹத்தி, சித்தப்பிரமை, பில்லி, சூன்யம் அனைத்தும் விலகும். முக்கியமாக சித்தப்பிரமை பீடித்தவர்கள் 12, 24, 36, 48 நாட்கள் தங்கி

வழிபட்டு நலம் அடைகின்றார்கள்.

தலபுராணம் ஒராட்டுக் குப்பை செட்டிபாளையம் வாசுதேவ முதலியார் 618 செய்யுட்களாக இய்றியுள்ளார்.

இத்தலத்தில் 9 கல்வெட்டுக்கள் உள்ளன. கோனேரின்மை கொண்டான், வீரராஜேந்திர தேவன், குலோத்துங்கன், விக்ரமசோழன், வீரநஞ்சராய உடையார் ஆகியோரின் கல்வெட்டுக்கள் உள்ளன.

தினமும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. தை மாதத்தில் வேடுபரி உற்சவம் நடைபெறுகிறது.

3. அன்னூர்

அவிநாசியிலிருந்து மேற்கே 19 கி.மீ. அன்னியூர், மன்னிலிங்கம். இக்கோவில் 1-11 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மன்னீசுவரர். அம்மன் அருந்தவச்செல்வி.

உள்பிராகாரத்தில் செல்வவிநாயகர், சுப்ரமணியர், தட்சிணாமூர்த்தி, சூரியன், நவக்கிரகம், ஆஞ்சனேயர் முதலிய சன்னிதிகள் உள்ளன. மூலவர் மிகப் பெரிய லிங்கம்.

அன்னி என்ற வேடன் வள்ளிக் கிழங்கை வெட்டும்போது சுவாமியையும் வெட்டிவிட்டான். அவனது செயலை மன்னித்ததாலும், 'மன்' நிலை பெறுதல் என்ற பொருளில் என்று முள பெருமானாகவும் இருப்பதால், மன்னீசுவர சுவாமி ஆனார். கொங்குச் சோழ மன்னர்களால் கட்டப்பெற்றது.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களில் ஒன்றாகும். திருஞானசம்பந்தர் இக்கோ விலைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். தலபுராணம் சிரவணபுரம் தவத்திரு கந்தசாமி சுவாமிகளால் அன்னியூர்த் தலபுராணம் 10 படலம் 339 செய்யுட்களாக இயற்றியுள்ளார்.

கல்வெட்டுக்கள் 56 உள்ளன. திருமுருகன் பூண்டிக் கல்வெட்டில் இவ்வூரை மேற்றலைத் தஞ்சாவூரான மன்னியூர் என்று குறிப்பிடப்படுகிறது. இக்கோவில் தி.மு.2000 வருடத்திற்கு முற்பட்ட கோவில்.

இக்கோவிலுக்கு எல்லைக்கோவிலாக பெரிய மாரியம்மன், சின்னமாரியம்மன் மற்றும் செல்வவிநாயகர் திருக்கோவிலும் உள்ளது.

4. சேவூர்

அவிநாசியிலிருந்து வடக்கே 8 கி.மீ. மாட்டூர், கபாலீச்சுரம். இக்கோவில் 1-42 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருவாலீஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் அறம் வளர்த்தநாயகி தனிச் சன்னிதியிலும் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் பாதாள கங்கை, கருட, அமிர்த, வாலி தீர்த்தங்கள். இக்கோவில் முழுவதும் கற்றளியால் ஆனது. இராமாயணத்தில் வரும் வாலி வழிபட்ட கோவிலாகும். வாலி வழிபட்டதை உணர்த்தும் சிற்பம் கருங்கற் கொடிமரத்தில் செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள நடராஜர் திருவுருவம் தொன்மையும், அழகும் வாய்ந்தது.

இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமி களால் 'மாட்டூர் அறவா மறவாது உன்னைப் பாடப்பணியாயே' எனப் போற்றப்படும் இத்தலம் சேவூர் என வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் இக்கோவிலை கபாலீச் சுரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வூரில் 2-07 ஏக்கர் நிலப்பரப்பளவில் உள்ள கல்யாணவெங்கடேசர் கோவிலும், மாரியம்மன், அளங்கநாச்சியம்மன், கோட்டை அனுமந்தராய கோவிலும் இங்கு உள்ளன.

5. மொக்கணீச்சரம்

அவிநாசியிலிருந்து வடக்கே 8 கி.மீ. சேவூருக்கு அருகில் உள்ள தலம். கோவில் சிறியது, கிழக்கு நோக்கிய மூலவர்

சுயம்புலிங்கமாக அருள்மிகு மொக்கணீச்சுரர். அம்மன் மீனாட்சியம்மை. சிவ பெருமான் கொங்குநாட்டுச் சிற்றரசர் ஒருவருக்குக் கொள்ளுப்பை வடிவிலேயே சிவலிங்கக் காட்சிக் கொடுத்த தலம். இதனால் இத்தலத்திற்கு மொக்கணீச்சுவரம் என்று பெயர்.

கொங்குநாட்டுச் சிற்றரசர் ஒருவர் சிறந்த சிவபக்தராய் விளங்கிய இவர் சிவதரிசனம் செய்யாமல் உண்ணாத இயல்பினராய் இருந்தார். ஒருசமயம் வேட்டைக்குச் சென்றபோது காட்டில் தங்க நேரிட்டது. குதிரைச் சேவகனை அனுப்பிச் சிவலிங்கம் எங்கேனும் உள்ளதா எனப் பார்த்து வரச்சொன்னார். அவன் எங்கும் தேடியும் காணாத நிலையில் தன்எஜமானர் உண்ண வேண்டும் என்பதற்காகக் குதிரைக்கு கொள்ளருந்தும் பையில் மண்ணை நிரப்பி அதனைச் சிவலிங்கமாக அலங்கரித்து மன்னனிடம் அறிவித்தான். அரசரும் அதனைச் சிவலிங்கமாகக் கருதி வணங்கி உணவு உட்கொண்டார். சேவகன் தான் வைத்த கொள்ளுப் பையை எடுக்கச் சென்றபோது அது சிவலிங்கமாக மாறியிருப்பதைக் கண்டு வியந்து தன் அரசனிடம் நடந்ததைச் சொல்லி மன்னிக்க வேண்டினான். அரசர் அச்சிவலிங்கம் இருந்த இடத்தில் ஆலயம் அமைத்து மொக்கணீச்சுரர் எனப் பெயரிட்டு வழிபட்டார் என்பது தலவரலாறு.

இத்தலம் திருவாசகத்தலம். மணிவாசகர் கீர்த்தித் திருஅகவலில் 'மொக்கணீ அருளிய முழுத்தழல்மேனி சொக்கதாகக் காட்டிய தொன்மையும்' எனக் குறிப்பிடும் இத்தலமாகும்.

இத்தலத்தில் முருகப் பெருமான் தண்டாயுதபாணியாய் எழுந்தருளியுள்ளார். அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம்.

6. கருவலூர்

அவிநாசிக்கு மேற்கே 10 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கங்காதராசுவரர். அம்மன் தனிக்கோவிலாக 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் நிற்கின்ற கோலத்தில் அருள்மிகு மாரியம்மன் காட்சியளிக்கிறாள். தி.மு. 3000 வருட முற்பட்ட கோவில். கொங்கு நாட்டில் பண்ணாரிக்கு அடுத்தபடியாக புகழ்பெற்ற திருக்கோவில். இக்கோவில் தீர்த்தத்தை கண்களில் விட்டு வந்தால் தீராத கண்நோய் தீர்கிறது. கண்நோய் கொண்டவர்கள் இங்கு தங்கி நலம் பெறுகின்றனர். கொங்குச் சோழர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. பண்ணாரிக் குண்டம் முடிந்த மூன்றாம் நாள் இக்கோவில் திருத்தேர். மேலும் இவ்வூரில் கருணாகரவெங்கட்ரமணசுவாமி கோவிலும், வேணுகோபால பெருமாள் கோவிலும், அனுமந்தராயர் கோவில்களும் இங்கு உள்ளன.

7. குத்தகம்

சேவூர்க்கு வடக்கே 10 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மாதீஸ்வரர்.

8. கஞ்சபள்ளி

அன்னூர்க்கு கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தேனீஸ்வரர்.

9. நடுவாச்சேரி

அவிநாசிக்கு வடக்கே 5 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கோடீஸ்வரர். அருகில் கோவிந்தராஜ பெருமாள் திருக்கோவில் உள்ளது.


10. பாலங்கரை

அவிநாசிக்கு கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

பல்லடம் வட்டம்

(கோயம்புத்தூர் மாவட்டம்)



1. செஞ்சேரிமலை

பல்லடத்திலிருந்து தென்மேற்கே 20கி.மீ. தென்சேரிகிரி, மந்திரகிரி. கடல்மட்டத்திலிருந்து 1356 அடி. மலை 150 அடி உயரம், 250 படிகள் கடந்த பின்பு கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் பெரியநாயகியம்மன். தலமரம் கருநொச்சி. தீர்த்தம் ஞானதீர்த்தம் ஆலயத்திற்கு வடக்கேயுள்ளது.

உள்பிராகாரத்தில் சந்தன விநாயகர், ஆறுமுகர், திருமால், நடராஜர், துர்க்கை, இடும்பன் முதலிய சன்னிதிகள் உள்ளன. அகத்தியர் வழிபட்ட தலம். இத்தலத்திலுள்ள முருகப் பெருமான் மந்திராசல வேலாயுத மூர்த்தி.

திருப்பரங்குன்றத்தில் மணம் முடித்து திரும்பும் வழியில் முருகப்பெருமான் இம்மலையில் தங்கியதாக ஐதீகம்.

சூரபத்மனது மாயங்களை அழிக்கும் மந்திரங்களை முருகப்பெருமான் தன் தந்தையிடம் இத்தலத்தில் பெற்றதனால் 'மந்திரகிரி' என அழைக்கப்படும் தலம்.

அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ள தலம். செஞ்சேரிகிரி தலபுராணம் அம்மையப்பர் என்பவரால் 255 செய்யுட்களாக இயற்றியுள்ளார்.

பேய், பிசாசு, சூனியம், பித்தம், மனநோய், உடற்பிணி ஆகியவற்றால் பாதிக்கப் பட்டவர்கள் இத்தலத்திலுள்ள தீர்த்தத்தில் நீராடி ஈசனை வழிபட்டு நிவாரணம் அடைகிறார்கள்.

நான்கு கால பூஜை நடைபெறுகிறது. தைமாதத்தில் பிரமோற்சவம் நடைபெறு கிறது.

2. சாமளாபுரம்

பல்லடத்திலிருந்து வடமேற்கே 16கி.மீ. அய்யம்பாளையம். நொய்யல் ஆற்றின் கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன். கிளுவமரத்தினடியில் விளங்கும் இலிங்கத்தின் அருகில் உள்ள புற்றிடத்து விளைந்த மண் மருந்தால் தீராத நோய்களையும், ஆராத புண்களையும், பலவகைப் பாம்பு, தேள் விஷங்களையும் குணமாக்கிக் கொள்கிறார்கள்.

பக்தர்கள் (பெண்கள் தவிர) அனைவரும் மூலஸ்தானத்தினுள் நுழைந்து தாங்களே பூசை செய்வதும், இக்கோவில் காலை முதல் இரவு வரை கோவில் நடை சாத்தப்படாமல் பக்தர்கள் தொடர்ந்து வழிபடலாம் என்பதும் ஆலயத்தின் சிறப்பாகும்.

மார்கழி மாதம் திருவாதிரை திருநாளன்று அய்யன் குருபூஜை விழா நடைபெறுகிறது.

இவ்வாலயத்தின் சார்பில் மேல்நிலைப் பள்ளி, அன்பு இல்லம், திருமண மண்டபம், ஓய்வுவிடுதிகள், வாடகை அறைகள், சத்திரங்கள் உள்ளன.

3. சூளூர்

பல்லடத்திலிருந்து மேற்கே 18 கி.மீ. நொய்யல் ஆற்றின் கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வைத்தீஸ்வரர். அம்மன் மாரியம்மன். மேலும் இவ்வூரில் திருவேங்கடநாத பெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

4. மேற்குபட்டு

திருப்பூர்க்கு வடக்கே 18 கி.மீ. மேற்குப்பதி. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதேஸ்வரர்.

5. நல்லூர்

திருப்பூர்க்கு கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் நொய்யல் ஆற்றின் தென் கரையில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வேஸ்வரர் சுவாமி. மேலும் இவ்வூரில் வீரராகவப் பெருமாள் செல்லாண்டியம்மன், மகாளியம்மன் முதலிய திருக்கோவில்களும் உள்ளன.

6. கண்டியம்கோவில்

பல்லடத்திலிருந்து கிழக்கே 24 கி.மீ. கண்டியங்கோவில். இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கண்டீஸ்வரர். அம்மன் கண்டியம்மன். மேலும் இவ்வூரில் கனககிரி வேலாயுத சுவாமி கோவிலும், மாரியம்மன், முனியம்மன் கோவிலும் உள்ளன.

7. அழகுமலை

பல்லடத்திலிருந்து கிழக்கே 21 கி.மீ. அலகுமலை. கடல்மட்டத்திற்கு மேல் 1359 அடி. 300 படிகள் கொண்ட இம்மலையில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் வலுப்பூரம்மன்.

மலையில் உள்ள சுப்ரமணியசுவாமி கிழக்கு நோக்கி தேவியார் இருவருடன் காட்சி யளிக்கிறார். திருப்புகழ் வைப்புத்தலங்களில் ஒன்றாகும்.

இங்கேயுள்ள வலுப்பூரம்மன் கோவில் வலிப்பு நோய் தீர்க்கும் பிரார்த்தனை தலம். சேவார்த்திகள் இங்கு தங்கி தரிசித்துச் செல்கின்றனர்.

மேலும் இவ்வூரில் மாரியம்மன், அலகாபுரியம்மன், தியாகராஜர் திருக்கோவிலும் உள்ளன.

8. தெற்கு அவிநாசி பாளையம்

பல்லடத்திலிருந்து கிழக்கே 16 கி.மீ. கொடுவாய். இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரர். அருகில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் விண்ணலந்தபெரியபெருமாள் திருக் கோவிலும் உள்ளது.

9. வடமலைபாளையம்

பல்லடத்திலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோலீஸ்வரர்.

10. வடவாம்பட்டி

செஞ்சேரிமலைக்கு வடகிழக்கே 5கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரசன்ன ஈஸ்வரசுவாமி. அம்மன் பெரியநாயகியம்மன் மற்றும் கரிவரதராஜ பெருமாள்.

கீழ்லோகம்

அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம்.

மேல்லோகம்


பூலோகம், புவலோகம், சுவ லோகம், சன லோகம், தபோ லோகம், மகா லோகம், சத்திய லோகம்.

ஏழுந்தேற்றம்

இறுமாப்பு, துணிவு, எழுந்த மானம், கவனிப்பின்மை, பெருமை, விழாவில் சாமி புறப்பாடு.

கோயம்புத்தூர் வட்டம்

(கோயம்புத்தூர் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பேரூர்

கோயம்புத்தூரிலிருந்து தென்மேற்கே 5கி.மீ. காஞ்சிவாய்ப் பேரூர், மேலச்சிதம் பரம், இனாம்பேரூர், அரசம்பலம். நொய்யல் ஆற்றின் தென்கரையில் இக்கோவில் 2-07 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கே இராஜ கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பட்டீசு ரர். அம்மன் மரகதவல்லி. தீர்த்தம் பிரம்ம, காஞ்சிமாநதி. தலமரம் பன்னீர்மரம். கோவி லுக்கு எதிரே 16 வளைவுகளைக் கொண்ட திருக்குளம் மற்றும் இறவாப்பனையும், பிறவாப்புளியும் உள்ளது. இத்தலபெரு மானை காமதேனுவாலும் அதன் புதல்வி பட்டியாலும் வழிபடப்பட்ட மூர்த்தியாவார். கோமுனி, பட்டிமுனி ஆகிய இருவர்க்காக ஆனந்ததாண்டவம் ஆடிய நடராசப் பெரு மான் கனகசபையில் இங்கு விளங்குகின்றார். கனகசபை சிற்பச் சிறப்பு வாய்ந்தது.

திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங் களிலும், மணிவாசகரின் திருக்கோவை யாரிலும் இத்தலம் போற்றப்படுகிறது. தேவார வைப்புத்தலம். அருணகிரிநாதர் இங்குள்ள முருகனைப் போற்றித் திருப்புகழ் அருளியுள்ளார். சிதம்பரநாத முனிவர் க்ஷேத் திரக்கோவை பிள்ளைத்தமிழில் இத்தல முருகனைப் போற்றியுள்ளார்.. திருவாவடு துறை ஆதீனம் கவிராக்ஷ கச்சியப்பமுனிவர் பேரூர்ப் புராணம் இயற்றியுள்ளார். பேரூர்த் தலத்திற்குரிய தனிச் சிறப்புக்களாக எலும்பு கல்லாதல், இறவாப்பனை, பிறவாப்புளி, திருநீற்றுமேடு, செம்பு பொன்னாதல், இறக்கும் உயிர்கள் வலச் செவியை மேல் வைத்து இறத்தல் போன்றச் சிறப்புச் செய்தி கள் தலபுராணத்தில் கூறப்பட் டுள்ளது.

கரிகாற்சோழன் இத்தலத் திருக்கோவி லைக் கட்டினான் எனச் சோழர்களின் பூர்வபட்டயம் கூறுகிறது. கல்வெட்டுக் களில் 'பேரூர் நாட்டுக் கோவன்புத்தூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

2. பூண்டி

கோயம்புத்தூருக்கு மேற்கே 40 கி.மீ. வெள்ளியங்கிரி, தட்சிண கைலாயம். இக்கோவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீலகிரிக்குத் தெற்கே சுமார் 6000 அடி உயரத்தில் தென்கயிலை என்னும் வெள்ளியங்கிரி ஏழு மலைகளுக்கு நடுவில் சுயம்பு மூர்த்தியாக இறைவனைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற இத்தலத்தில் தவமிருந்து பெற்ற தலம். தேவர்கள், அகத்தியர், திருமால், நாரதர், முருகப் பெருமான் ஆகியோர் வழிபட்ட தலம். ஆண்டு முழுவதும் அன்பர்கள் வழி படுவதற்காக அடிவாரத்தில் அருள்மிகு வெள்ளியங்கிரிநாதர். அம்மன் சௌந்தர நாயகியுடன் திருக்கோவில் கொண்டுள்ளார். சுமார் மூவாயிரம் ஆண்டுகளாக மலைவாழ் மக்களால் வழிபடப்பட்டு வரும் இயற்கைக் கோவில். மாசி மாதம் முதல் வைகாசி மாதம் வரை பக்தர்கள் இத்தலத்திற்கு வலது கையில் மூங்கில் கழி ஊன்றி இரவு பகலாக மலை மீதேறி வழிபடுதல் மெய்சிலிர்க்கும் காட்சி.

பேரூர்ப் புராணத்தில் வரலாற்றுப் படலத்தில் 41-45 பாடல்களில் இத்தலத்தைக் குறித்து பாடப்பட்டுள்ளது.

3. கோயம்புத்தூர்

ஈரோட்டிலிருந்து தென்மேற்கே 89கி.மீ. கோயம்புத்தூர். பண்டையநாளில் கோவன்புத்தூரான வீரகேரளநல்லூர் என்று பெயர் பெற்றிருந்தது. இவ்வூரில் அமைந் திருந்த கோட்டைக்குள் 50 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக சங்க மேஸ்வரர். அருகில் அம்மன் கோனியம்மன். சங்கீஸ்வரர் கோவில் இப்போது சங்கமேஸ் வரர் கோவில் என அழைக்கப்படுகிறது.

கரிகாலன் முதலாயினார் கோவன் புத்தூருக்கு வந்து அங்குள்ள கோவன் என்ற இருளன் துணைக் கொண்டு காடுகளை அழிக்கவும், கோனமாகாளி என்னும் துர்க்கை பலி கேட்டனள். இங்கு சங்கீசுரமுடை யாருக்குக் கோவில் கட்டி முடித்தபின்பு விரும்பியவாறு பலிதருவ தாகக் கூறி,

வேடர் கம்பலித்து மரபினரை விட்டு அங்குள்ள காடுகளை அழித்தார்கள் சங்கீசுவரலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்து இறைவனுக்கு ஒரு பெரிய கோவிலைக் கட்டிமுடித்தனர், கோட்டையும், பேட்டையும், குளம் முதலானவைகளும் உண்டாக்கிய பின்பு கோவன்பெயரால் கோவன் புத்தூர் என்ற ஊரைக் கட்டிமுடித்தனர். விரும்பி கேட்டபடி துர்க்கைக்கு பலிகொடுத்து, துர்க்கையே கோவன்புத்தூருக்கு காவல் தெய்வமாக அமர்ந்து தற்போது கோனியம்மன் என்ற பெயரில் காட்சியளிக்கிறாள்.

மேலும் 'இவ்வூரில் எல்லையம்மன்களாக அங்காளம்மன், பத்ரகாளியம்மன், சாமுண்டீஸ்வரி, மகாகாளி, இராமலிங்க சௌடேஸ்வரி, தண்டுமாரியம்மன், உச்சி காளியம்மன்,மாரியம்மன் கோவில்களும், லஷ்மிநாராயணப்பெருமாள், வேணுகோபால ஸ்வாமி, கோதண்டராமர், வரதராஜப் பெருமாள் கோவிலும், சுக்ரவாரப் பேட்டையில் பாலதண்டாயுதபாணி திருக் கோவிலும் இவ்வூரில் அமைந்துள்ளன.

4. நரசிம்மநாயக்கன் பாளையம்

கோயம்புத்தூரிலிருந்து வடக்கே 23கி.மீ. குருடாம்பாளையம். இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விருத்தீஸ்வரர்.

5. இடிகரை

கோயம்புத்தூரிலிருந்து வடக்கே 24கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் வாலீஸ்வரர். அருகில் பள்ளிக்கொண்ட ரங்கநாதர் கோவிலும், மாரியம்மன் கோவிலும் உள்ளன.

6. அக்ரஹாரசாமகுளம்

இக்கோவில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அருகில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் லஷ்மிநாராயணப்பெருமாள்.

7. சர்க்கார்சாமகுளம்

இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காளத்தீஸ்வரர்.

8. உடையான்பாளையம்

கோயம்புத்தூர்க்கு வடகிழக்கே 9கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

9. சிங்கநல்லூர்

கோயம்புத்தூர்க்கு கிழக்கே 12 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமலையப்பர். அருகில் 38 செண்டில் உலகளந்த பெருமாள் கோவிலும், மாரியம்மன் கோவிலும் உள்ளன.

10. வெள்ளலூர்

கோயம்புத்தூரிலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தீனேஸ்வரர். அம்மன் அலங்கநாச்சியம்மன் அருகில் வரதராஜபெருமாள் கோவிலும் உள்ளது.

11. குனியமுத்தூர்

கோயம்புத்தூரிலிருந்து தென்மேற்கே 8கி.மீ. இராமசெட்டிபாளையம். இக்கோவில் 66 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பரமேஸ்வரர். அம்மன் அறம்வார்த்த நாயகி.

12. செட்டிபாளையம்

கோயம்புத்தூரிலிருந்து தென்கிழக்கே 22கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி, நல்ல விநாயகர்.


13. ஒத்தகால் மண்டபம்

கோயம்புத்தூரிலிருந்து தெற்கே 23கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் புத்திர கொண்டீஸ்வரர். அருகில் நவகோடி நாராயணப் பெருமாள், கொண்டாத்துக்காளி, அங்காளம்மன் முதலிய கோவில்களும் உள்ளன.


திருச்சிற்றம்பலம்

பொள்ளாச்சி வட்டம்

(கோயம்புத்தூர் மாவட்டம்)



1. பொள்ளாச்சி



கோயம்புத்தூரிலிருந்து தெற்கே 40கி.மீ. இறைச்சில் பொழில் வாய்ச்சி, முடிகொண்ட சோழநல்லூர், திருவகத்தீசுவர முடையார் கோவில் என வழங்கப்படும் இக்கோவிலின் மூலவர் அருள்மிகு சுந்தரேசுவரர், அம்மன் மீனாட்சி. பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் விநாயகப் பெருமான் காட்சியளிக்கிறார். இக்கோவில் தற்போது சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் என்றே அழைக்கப்படு கின்றனர்.

சிவபிரான் சன்னிதிக்கு நேர் எதிரில் மேல் விதானத்தில் 12 இராசிகள் கொண்ட சதுர அமைப்பு உள்ளது. ஒரே கல்லில் யாளியும் அதன் வாயினின்று 3 வளையங்கள் ஒன்றில் ஒன்றாகப் இணைத்துத் தொங்குவதும் கலைச்சிறப்பு கொண்டதாகும். நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இக்கோவிலில் மிகப் பழமையானதாகும். கல்வெட்டுக்கள் உள்ளன.

மேலும் இவ்வூரில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவில் பொள்ளாச்சி மக்களின் பிரார்த்தனைத் தெய்வம். வெள்ளிக்கிழமைகளில் மக்கள் ஆயிரக்கணக்கில் வழிபடுகின்றனர். வெள்ளித்தேர் பவனி இத்திருக்கோவிலின் தனிச்சிறப்பு. மாசி மாதத்திருவிழாவின்போது பக்தர்கள் பூவோடு ஆயிரக்கணக்கில் எடுத்து வழிபாடு செய்கின்றனர். மேலும் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கன்னிகாபரமேஸ்வரி திருக்கோவில், 25 செண்ட் நிலப்பரப்பளவில் மகாகாளியம்மன் திருக்கோவில், 5 செண்ட் நிலப்பரப்பளவில் வரதராஜ பெருமாள் திருக்கோவில், 10 செண்ட் நிலப்பரப்பளவில் இராமலிங்க சௌடேஸ்வரியம்மன் கோவிலும், ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் அங்காளம்மன் திருக்கோவில், 10 செண்ட் நிலப்பரப்பளவில் சீதாராம ஆஞ்சனேயர் திருக்கோவில் என இவ்வூரில் ஆங்காங்கே அமைந்துள்ள திருக்கோவில்களாகும்.

2. ஆனைமலை



பொள்ளாச்சியிலிருந்து தென்மேற்கே 15கி.மீ. நன்னனூர், உம்பற்காடு. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு விஸ்வேஸ்வரர், அவணீசுவரர். அம்மன் கன்னிகாபரமேஸ்வரி, மாசானியம்மன்.

சங்ககால நன்னன் வாழ்ந்த பகுதி, கல்வெட்டுக்கள் இவ்வூரை 'நன்னனூர்' என்றே குறிப்பிடப்படுகின்றன. பதிற்றுப்பத்துக் குறிப்பிடும் 'உம்பற்காடு' இப்பகுதியேயாகும். இங்கேயுள்ள மாசானி அம்மன் 30 அடி நீளத்தில் படுத்த

கோலத்தில் உள்ளது. மணிமேகலை கூறும் சக்கரவாளக் கோட்டத்தில் உறையும் தேவதையாகக் கூறப்படுவதும் இம்மாசானி அம்மனேயாகும்.

இவ்வூரில் இழந்த பொருளைத் திருப்பப் பெறுவதற்கு மிளகாய் அறைத்துத் தடவி வழிபடுதல் தனிச்சிறப்பாகும்.

மேலும் இவ்வூரில் அரங்கநாதர் திருக்கோவிலும், பெரிய நாச்சியம்மன், அனுமந்தராயஸ்வாமி, திரௌபதியம்மன் கோவிலும் உள்ளன.

3. பெரியகளந்தை

பொள்ளாச்சியிலிருந்து வடகிழக்கே 24கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆதீஸ்வரர். அம்மன் வஞ்சி யம்மன். அருகில் வரதராஜப்பெருமாள்.

4. நல்லாத்திபாளையம்

பொள்ளாச்சியிலிருந்து வடக்கே 15கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நஞ்சுண்டேஸ் வரர். அம்மன் மாரியம்மன், மருதகாளி யம்மன்.

5. வடக்கைபாளையம்

பொள்ளாச்சியிலிருந்து வடக்கே 9கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் வடக்கலூர் அம்மன். இவ்வூர்க்கு கிழக்கே யுள்ள சூலக்கல் மாரியம்மன் சுயம்புவாக எழுந்தருளி காட்சியளிக்கிறார். அடர்ந்த வனத்தின் நடுவே, சூலமும், சுயம்புக் கல்லாகவும், மகமாயி எழுந்தருளியுள்ளார். காலப்போக்கில் ஊரின் பெயர் சூலக்கல் ஆயிற்று. சிறந்த பிரார்த்தனை தலம். எல்லா நோய்களும், ஏவல், சூன்யம் போன்ற வினைகளை எல்லாம் நீங்கச் செய்யும் அம்பிகையாக விளங்குகிறாள். வைகாசி மாதத்தில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

6. தேவனாம்பாளையம்

பொள்ளாச்சியிலிருந்து வடகிழக்கே 18கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர். அம்மன் மாரியம்மன்.

7. கப்பலாங்கரை

பொள்ளாச்சியிலிருந்து வடகிழக்கே 19கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர். அம்மன் மடலைநாச்சியம்மன் அருகில் மாரியம்மன், வஞ்சியம்மன் கோவிலும் உள்ளது.

8. பெரியநெகமம்

பொள்ளாச்சியிலிருந்து வடகிழக்கே 15கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீதீஸ்வரர். அம்மன் காமாட்சியம்மன். அருகில் இராம லிங்க சௌடேஸ்வரி, கன்னிகாபரமேஸ்வரி, பத்ரகாளியம்மன் மற்றும் காத்தவராய பெருமாள் கோவிலும் உள்ளன.

9. தேவாம்பதி

பொள்ளாச்சியிலிருந்து வடமேற்கே 10கி.மீ. இக்கோவில் 96 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர். அம்மன் மாரியம்மன். அருகில் பகவதி யம்மன் மற்றும் வெங்கடரமணஸ்வாமி கோவிலும் உள்ளது.

10. குறும்பபாளையம்

பொள்ளாச்சியிலிருந்து வடக்கே 5கி.மீ.

இக்கோவிலின் மூலவர் அம்மணீஸ்வரர். அருகில் வரதராஜபெருமாள் கோவிலும் உள்ளது.

11. ஆவலப்பம்பட்டி

பொள்ளாச்சியிலிருந்து வடகிழக்கே 11கி.மீ. இக்கோவில் 2-10 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர். மற்றும் வேலாயுதஸ்வாமி. அருகில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அவிநாசிலிங்கேஸ்வரர், அம்மன் சுந்தரம்மன்.

12. சங்கம்பாளையம்

பொள்ளாச்சியிலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர்.

13. திப்பாம்பட்டி

பொள்ளாச்சியிலிருந்து கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர். அம்மன் மாரியம்மன்.

14. சீலக்கம்பட்டி

பொள்ளாச்சியிலிருந்து கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காண்டீஸ்வரர்.

15. கோலார்பட்டி

பொள்ளாச்சியிலிருந்து கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் ஜெகதீஸ்வரர். அம்மன் மாரியம்மன். அருகில் சிறுதண்டியம்மன், மோகாம்புரியம்மன், செட்டிபாளையம் மாரியம்மன் முதலிய கோவில்கள் உள்ளன.

16. கஞ்சம்பட்டி

பொள்ளாச்சியிலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர்.

17. நாயக்கன்பாளையம்

பொள்ளாச்சியிலிருந்து தென்மேற்கே 5கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர். அம்மன் மாரியம்மன்.

18. சிங்காநல்லூர்

பொள்ளாச்சியிலிருந்து தென்மேற்கே 7கி.மீ. பாலாற்றின் கரையில் இக்கோவில் 3செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சித்தாண்டேஸ்வரர். அம்மன் அங்காள அம்மன்.

19. ஜல்லிபட்டி

பொள்ளாச்சியிலிருந்து தெற்கே 15கி.மீ. பாலாற்றின் தென்கரையில் இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்மணீஸ்வரர். அம்மன் மாரியம்மன்.


பஞ்சகிருத்தியம்

படைத்தல், நிலைபெறுத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் கடவுளின் ஐந்தொழில்கள்; கடைக்கலத்தால் பொரும் பொழுது வீரன் செய்தற்குரிய தொடை, விலக்கு, செலவு, மேமம், தவிர்த்து வினை செயல் என்னும் ஐந்தொழில்கள்; உழுது பயிர்செய்தல், பண்டங்களை நிறுத்துவிற்றல், நூல் நூற்றல், எழுதுதல், படைகொண்டு தொழில் பயிலுதல் ஆகிய ஐந்தொழில்கள்.


திருச்சிற்றம்பலம்

உடுமலைப்பேட்டை வட்டம்

(கோயம்புத்தூர் மாவட்டம்)



1. திருமூர்த்திமலை



உடுமலைப்பேட்டையிலிருந்து தென்மேற்கே 20 கி.மீ. தளி. மலையடி வாரத்தில் ஆலயம் அமைந்துள்ளது. அருகில் மலையிலிருந்து வரும் ஆறு ஓடுகிறது. இம்மலை மீது 900 மீட்டர் தூரத்தில் பஞ்சலிங்கம் அமைந்துள்ளது. அருகே நீர்வீழ்ச்சி அழகாக ஓடுகிறது.

இத்தல மூலவர் அருள்மிகு அமணலிங்கேஸ்வரர். அம்மன் பார்வதியம்மன். அத்திரி முனிவரின் அனுசுயாவை மகேசுவரன், பிரம்மா, திருமால் மூவரும் சோதிக்க முற்படுகையில் அனுசுயா இம்மும்மூர்த்திகளையும் குழந்தையாக மாற்றி குழந்தையில்லாத குறையை போக்கி கொண்டாள். இம்மும்மூர்த்திகளையும் காணாது தேடி இவ்விடத்தில் வந்த பார்வதி, லஷ்மி, சரஸ்வதி அனுசுயாவின் பெருமைகளைப் போற்றி, தன் கணவர்களைப் திரும்பப்பெற்ற தலம். இதனால் இத்தலத்திற்கு திருமூர்த்திமலை என்றும் பெயர்.

தலபுராணம் வேலாயுதப் பண்டிதர் 963 பாடல்கள் கொண்டு இயற்றியுள்ளார்.

இத்தலத்தில் உள்ள பஞ்சலிங்கமும், நீர்வீச்சியும், மலையும் ஒருங்கே காணும்போது இயற்கையின் எழிலார்ந்த அழகினைக் கண்டு களிக்கலாம்.

குழந்தைப்பேறு இல்லாதவர்கள் இங்கே நீராடி, இறைவனை வழிபட்டால் வேண்டும் வரம் பெறலாம். இறைவன் அமர்ந்திருக்கும் குன்றின் மீது மிளகும், உப்பும் வைத்து வழிபட்டால் உடலில் தோன்றும் மரு, கட்டி மறையும். இங்குள்ள சப்தகன்னியரை வழிபடும் மணமாகாத கன்னியருக்குத் திருமணம் நடைபெறுகின்றது. இத்தலம் வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல, மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

2. உடுமலைப்பேட்டை

பொள்ளாச்சியிலிருந்து கிழக்கே 28கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கன்னிகாபரமேஸ் வரர். அம்மன் கன்னிகாபரமேஸ்வரி. அருகில் வரதராஜப்பெருமாள், மாரியம்மன், நவநீதகிருஷ்ணன் முதலிய திருக்கோவில் கள் உள்ளன.

3. குடிமங்கலம்

உடுமலைப்பேட்டையிலிருந்து வடக்கே 12 கி.மீ. இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சூலேஸ்வரர். அம்மன் தாயநல்லியம்மன்.

4. அணைக்கடவு

உடுமலைப்பேட்டையிலிருந்து வடக்கே 18 கி.மீ. இக்கோவில் சிந்து லப்பையில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரர். அம்மன் கரியகாளி யம்மன். மற்றும் வெங்கடேச பெருமாள்.

5. காரத்தொழுவு

உடுமலைப்பேட்டைக்கு வடகிழக்கே 16 கி.மீ. அமராவதி ஆற்றின் கரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீஸ்வரர். அம்மன் அங்காளம்மன் மற்றும் பச்சையம்மன். அருகில் கல்யாண வரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது.

6. சின்னவீரம்பட்டி

உடுமலைப்பேட்டைக்கு வடக்கே 3கி.மீ. ஏரிப்பாளையம். இக்கோவில் 5 செண்ட நிலப்பரப்பளவில் மூலவர் சித்தாண்டேஸ்வரர். அருகில் வரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது.

7. காணியூர்

உடுமலைப்பேட்டையிலிருந்து வடகிழக்கே 16 கி.மீ. அமராவதியாற்றின் கரையில் இக்கோவிலின் மூலவர் சொக்கநாதர். அம்மன் மீனாட்சியம்மன். அருகில் சந்தானகோபாலகிருஷ்ணன் கோவிலும் உள்ளது.

8. கடத்தூர்

உடுமலைப்பேட்டையிலிருந்து வடகிழக்கே 18 கி.மீ. அமராவதி ஆற்றின் கரையில் இக்கோவில் 1-07 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அர்ச்சுனேஸ்வரர். அம்மன் மதுராகாளியம்மன். அருகில் நடராஜர் அங்காளம்மன், கொங்குனேஸ்வரர் முதலிய திருக்கோவில்கள் உள்ளன.

9. சோழமாதேவி

உடுமலைப்பேட்டையிலிருந்து கிழக்கே 14 கி.மீ. அமராவதி ஆற்றின் கரையில் இக்கோவிலின் மூலவர் குலசேகரர். அம்மன் கொங்குமார்வல்லியம்மன். அருகில் லஷ்மி நாராயணப் பெருமாள் கோவில் உள்ளது.

10. சர்க்கார்கண்ணாடிபுத்தூர்

உடுமலைப்பேட்டையிலிருந்து கிழக்கே 16 கி.மீ. அமராவதி ஆற்றின் கரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர், அருகில் திருமாந்தீஸ்வரர், செல்வ விநாயகர், கல்யாண வரதராஜப் பெருமாள், கலியுக வரதராஜப் பெருமாள், அலங்க நாச்சியம்மன் முதலிய திருக்கோவில்கள் உள்ளன.

11. சங்கராமநல்லூர்

உடுமலைப்பேட்டையிலிருந்து தென்கிழக்காக 18 கி.மீ. கொழுமம், குழுமம், குழுமூர். அமராவதி ஆற்றின் கரையில் இக்கோவில் 76 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தாண்டவேஸ்வரர், சோழீஸ்வரர் என்றும் பெயர்.

கொங்கு மண்டலத்தின் பழம்பெரும் கோவில்களுள் ஒன்று. சேர நாட்டு வணிகர்களும், இதரநாட்டு வணிகர்களும் ஒன்று சேர்ந்து குழுமியதால், குழுமூர்-கொழுமம் என்றும் தற்போது சங்கராமநல்லூர் என்றும் பெயர்.


இக்கோவிலில் உள்ள நடராஜர் சிறப்புமிக்கது. மிகப்பெரிய திருமேனி ''நித்தம் நின்று ஆடுவார்'' என இக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றன.

இவ்வூரில் உள்ள 30 செண்ட் நிலப்பரப்பளவில் கல்யாண வரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது. சங்ககால குமணவள்ளல் வாழ்ந்த பகுதி இதுவே. அவன் வாழ்ந்த முதிரமலை தற்போது குதிரைமலை என வழங்கப் பெறுகின்றன.

12. குமரலிங்கம்

உடுமலைப்பேட்டையிலிருந்து தென்கிழக்கே 16 கி.மீ. அமராவதி ஆற்றின் கரையில் இக்கோவில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அருகில் தத்தாத்ரேயர், ஆத்தோரம் வெங்கட்ரமண ஸ்வாமி, கிருஷ்ணர் கோவிலும், வேணு கோபாலஸ்வாமி கோவிலும் உள்ளன.

பழனி வட்டம்
(திண்டுக்கல் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பழநி



திண்டுக்கல்லிருந்து மேற்கே 57கி.மீ. பொதினி. சண்முக நதிக்கரையில் இக்கோவில் 450 அடி உயரமும், 697 படிகள் கொண்ட மலை மீது இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மலைக்கொழுந்தீசர். அம்மன் மலைநாச்சியம்மை. இத்தலத்தில் முருகப்பெருமான் தண்டாயுத பாணிக்கே சிறப்பிடம். தீர்த்தம் வையாபுரி தீர்த்தம். தலவிருட்சம் நெல்லிமரம். உள்பிராகாரத்தில் கணேசர், நடராஜர், மாணிக்கவாசகர், ஆறுமுகர், சின்ன குமாரர், ஈஸ்வரர், தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர், நவக்கிரகம், அருணகிரிநாதர், நக்கீரர், கைலாசநாதர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலம் ஆறுபடை வீடுகளில் மூன்றாவது. கயிலையில் சிவபெருமானிடம் நாரதர் மாங்கனி ஒன்றைக் கொடுத்தார். அதை முருகனும், விநாயகரும் தமக்கே வேண்டும் என கேட்டபோது இறைவன் உலகை முதலில் சுற்றி வருபவருக்கே கனி என்றார். முருகப்பெருமான் மயில் மீது அமர்ந்து உலகை வலம் வரப் புறப்பட்டார். விநாயகர் தாய், தந்தையரை வலம் வந்து உலகை வலம் வந்ததாகப் பொருள் எனக்கூறி பழத்தினைப் பெற்றுக் கொண்டார். திருப்பிய முருகன் கோபம் கொண்டு ஆண்டிக் கோலத்துடன் இத்தலத்தின் மலைமீது எழுந்தருளியபோது ஒளவையார் முருகனைக் கண்டு ''முருகனே நீயே பழம், பழமே நீ உனக்கு வேறு பழம் வேண்டுமோ'' எனக் கூறி இத்தலத்திற்குப் பழநி எனப் பெயர் பெற்றதாக தலவரலாறு.

மலை மீதுள்ள முருகப் பெருமான் போகர் என்னும் சித்தரால் என்றும் அழியாத ஒன்பது பாஷாணங்களை உருக்கி ஒன்று சேர்த்து அமைக்கப் பெற்றவர்.

இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார்.

தினமும் 7 கால பூஜை நடை பெறுகிறது. தைப்பூசம் உற்சவம் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அலகு குத்திவருதல், காவடி, முடிப் பிரார்த்தனை, பால் குடம் எடுத்தல் போன்றவை இத்தலத்தின் சிறப்பாகும்.

இம்மலையின் அடிவாரமான திருவாவினன்குடியில் உள்ள திருக்கோவிலின் மூலவர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர். இத்தலத்தில் குழந்தை வேலாயுதசாமி பிரதான மூர்த்தியாக விளங்குகிறார். உள்பிராகாரத்தில் பாதவிநாயகர், வேலீஸ்வரர், பரமேஸ்வரர், அருணகிரிநாதர், சனீஸ்வரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருமகள், காமதேனு, சூரியன், பூமி, அக்கினி முதலியோர் வழிபட்ட தலமாதலால் இத்தலத்திற்கு திருஆவினன்குடி என்று பெயர்.

இத்தல முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார்.

தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரின் நகரத்தில் உள்ள அருள்மிகு பெரியநாயகி உடனுறை அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலும், லஷ்மிநாராயணப் பெருமாள், வேணு கோபால பெருமாள் கோவிலும் உள்ளன.

2. கோரைக்கடவு

பழனியிலிருந்து வடக்கே 12 கி.மீ. சண்முகநதிக்கரையில் இக்கோவில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

3. பெரியகோட்டை

பழனியிலிருந்து வடகிழக்கே 20 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

4. மண்ணூர்

பழனியிலிருந்து வடமேற்கே 7 கி.மீ. சண்முகநதிக்கரையில் இக்கோவில் 24 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர்.

5. ஆயக்குடி

பழனியிலிருந்து கிழக்கே 6 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோலீஸ்வரர். ஆயக்குடி ஜமீந்தார்கள் பழனிக்கோவிலில் பலதிருப் பணி செய்துள்ளனர். இவ்வூரில் அமைந் துள்ள ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் உள்ளது. அகோபில மடத்துக்கு இங்குள்ள வர்கள் கட்டுப் பட்டவர்களாதலால் தங்கள் பெயர்களுடன் 'ஒபில' என்று சேர்த்துக் கொள்வார்கள்.

6. கோதைமங்கலம்

பழனியிலிருந்து வடக்கே 5 கி.மீ. சண்முகநதிக்கரையில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கோதாஈஸ்வரர். பழனியைச் சுற்றியுள்ள எட்டு மங்கலங்களுள் இத்தலம் முதலாவது. பழனி தண்டாயுதபாணியின் உற்சவ மூர்த்தி இவ்வூருக்கு எழுந்தருளி சூரசம்ஹாரம் நடைபெறுகிறது.

7. சின்னக்கலயம்புத்தூர்


பழனியிலிருந்து வடமேற்கே 6 கி.மீ. இக்கோவில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

8. பாலசமுத்திரம்

பழனியிலிருந்து தெற்கே 5 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். இவ்வூரை வாலசமுத்திரம் என்றும் குறிப்பிடுவர். இவ்வூரில் உள்ள அகோபில வரதராஜப் பெருமாள் 48 செண்ட் நிலப்பரப்பளவில் உள்ளது. இவ்வூர் துப்பட்டி நெசவுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது.

திண்டுக்கல் வட்டம்

(திண்டுக்கல் மாவட்டம்)



1. திண்டுக்கல்

மதுரையிலிருந்து வடக்காக 65 கி.மீ. திண்டீச்சரம். பத்மகிரி, நெல்லிவனம், தாத்திரிவனம். இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஸ்ரீபத்மகிரிநாதர். அம்மன் அபிராமியம்மன். தலவிருட்சம் நெல்லி. தீர்த்தம் பத்ம, வருண தீர்த்தத்துடன் ஐந்து புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

படைப்பின் தொடக்கத்தில் இத் தலத்தில் பத்மதீர்த்தம் என ஒன்றுண்டாக, அதன் நடுவில் ஒரு தாமரையரும்பு தோன்றிற்று. அவ்வரும்பே பின்பு மலையாயிற்று. தாமரையரும்பின் வடிவாக இருத்தலின் இம்மலை பத்மகிரி என்னும் பெயர் பெற்றதாக இத்தல மகாத்மியம் கூறுகிறது. இத்தலத்தில் சிவபெருமான் ஆயிரம் தளங்களுடைய தாமரை மலரில் சிவரூபமாக இருந்து அகத்திய முனிவருக்குக் காட்சி கொடுத்த தலம்.. மலை சிவலிங்கவடிவமாக அமைந்துள்ள தாகக் கூறப்படுகின்றது.

இத்தலத்திற்கு திண்டீச்சுரம் என்னும் பெயர் உண்டு. திண்டியென்னும் ஓர் அசுரன் அம்பிகையால் சங்காரம் செய்யப் பெற்றபோது தன்பெயரால் இந்நகரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபடி அமைந்தது இந்நகரம்.

பஞ்சபாண்டவர்களும், வருணனும், அகத்தியர், பாகு, சுபாகு என்பவர்களும் இத்தல இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றனர். பஞ்சபாண்டவர்கள் பூசித்த தலமாதலால் மலைமேல் உள்ள தீர்த்தம் திரௌபதி தீர்த்தம் என்று ஒரு சுனையும் உள்ளது. மலைக்குக் கீழேயுள்ள காளத்தீசுவரர் கோவிலில் சுவாமி, அம்மன் எழுந்தருளியுள் ளனர்.

இத்தலத்திற்கு வடமொழியில் 24 அத்தியாயம் கொண்ட தலபுராணமும், பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை இயற்றிய ஸ்ரீ பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது என்னும் பிரபந்தமும் உள்ளது.

கல்வெட்டுக்கள் உள்ளன. விஜயநகர மன்னர்கள், அச்சுததேவராயர், முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் காலங்களில், திருப்பணி, மானியம் விட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது.

தினமும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. எட்டாம் திருநாளில் திருத்தேர் உலா நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் ஸ்ரீனிவாசபெருமாள் கோவிலும், வரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது.

2. முல்லைப்பாடி

திண்டுக்கல்லிருந்து வடகிழக்கே 6கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருகாமேஸ்வரர்.

3. ஆணைப்பட்டி

திண்டுக்கல்லிருந்து வடமேற்கே 6கி.மீ. குடகனாற்றின் கரையில் இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர்.

4. ஆத்தூர்


திண்டுக்கல்லிருந்து தென்மேற்கே 16கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். முத்தாளம்மன் கோவில் பெருவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

5. தவசிமடை

திண்டுக்கல்லிருந்து தென்கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாலிங்கேஸ்வரர். அம்மன் மரகதவல்லியம்மை, காமாட்சியம்மன்.

திருச்சிற்றம்பலம்

வேடசந்தூர் வட்டம்
(திண்டுக்கல் மாவட்டம்)



1. வேடசந்தூர்

திண்டுக்கல்லிருந்து வடக்கே 19கி.மீ. குடகனாற்றின் கரையில் இக்கோவில் 21செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி யம்மை. அருகில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் ஸ்ரீநரசிங்கப் பெருமாள் கோவிலும் உள்ளது. இவ்வூர் வேடர்களின் சந்தை இவ்விடத்தில் கூடிய காரணத்தால் வேடசந்தையூர், வேடசந்தூர் எனத்திரிந்து வழங்குகிறது.


2. கூடலூர்

பாளையத்திலிருந்து வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 1-15 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசுந்தரேஸ்வரர்.

3. திண்டக்கல்

பாளையத்திலிருந்து வடக்கே 4 கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வீரபாண்டீஸ்வரர்.

நத்தம் வட்டம்
(திண்டுக்கல் மாவட்டம்)



நத்தம் வட்டம்

1. நத்தம்


திண்டுக்கல்லிருந்து தென்கிழக்கே 26கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அருகில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லாண்டேஸ்வரர்.

2. உரலிபட்டி

நத்தத்திலிருந்து தென்கிழக்கே 5கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனிநாதர் சுயம்புலிங்கமாக காட்சியளிக்கிறார்.

திருச்சிற்றம்பலம்

நிலக்கோட்டை வட்டம்
(திண்டுக்கல் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருஏடகம்

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே

-- திருஞானசம்பந்தர்.

மதுரையிலிருந்து வடமேற்கே 17 கி.மீ. திருவேடகம். வைகையாற்றின் வடகரையில் இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஏடகநாதர். அம்மன் ஏலவார்குழலி. தீர்த்தம் வைகை, பிரம்ம தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் பாலவிநாயகர், சுப்பிர மணியர், 63 நாயன்மார்கள், சப்தமாதர்கள், ஆறுமுகர், நடராசர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருஞானசம்பந்தர் மதுரையில் சமணர்களோடு செய்த புனல்வாதத்தில் 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும் திருப்பாடலை எழுதி வைகையாற்றின் இட, அவ்வேடு ஆற்றின் எதிர் ஏறிச் சென்று தங்கிய தலமாதலின் இப்பெயர் பெற்றது. ஏடு தங்கிய செய்தியை ''ஏடு சென்று அணைதரும் ஏடகத்து ஒருவனை'' என்னும் திருஞானசம்பந்தர் வாக்கே இதனை வலியுறுத்தும்.

திருமால், கருடன், சேடன், சாத்தனார் இவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். இச்செய்தியை

''உன்னிமாலும் உவணனுஞ் சேடனும்
மன்னி சாத்தனும் நான்குகம் வாழ்ந்தகம்''

என திருவாலவாயுடையார் திருவிளை யாடற்புராணம் கழுவேற்றின திருவிளை யாடல் அறுபத்தாறாம் பாடலின் அடிகளால் அறியக்கிடக்கின்றது.

ஏடகப் பெருமானை அன்போடு மனதில் தியானித்து ஒருநாள் தங்கி பூஜை முதலிய வழிபாடுகள் செய்பவர்கள் தங்களது ஆயுள் முழுவதும் காசியில் வாழ்ந்த புண்ணியத்தை அடைவார்கள் என்றும் தலபுராணம் கூறுகிறது.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டிய நாட்டுத் தலங்களுள் இத்தலம் நான்காவது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசரும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். அருணகிரிநாதர் இத்தல முருகப்பெருமானைக் குறித்துப் திருப்புகழ் பாடியுள்ளார். திருப்புகழ் வைப்புத் தலங்களுள் இத்தலம் ஒன்றாகும். தலபுராணம் தஞ்சை சுப்பிரமணிஐயர் 13 படலம், 649 பாடல்கள் கொண்ட திருவேடகத் தலபுராணம் இயற்றியுள்ளார்.

இக்கோவிலில் பாண்டியர்களால் மாறவர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன், சடாவர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன், விக்கிரமபாண்டியன், ஸ்ரீ வல்லப தேவன் இவர்கள் காலங்களிலும் கிருஷ்ணதேவமகாராயர் காலத்திலும் பொறிக்கப்பட்ட 14 கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்களில் இறைவர் திருப்பெயர் திருவேடகம் உடைய நாயனார் என்றே குறிக்கப்பெற்றுள்ளது.

தினமும் 6 கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் ஏடு எதிர்ஏறிய உற்சவம் நடைபெறுகிறது.

2. நிலக்கோட்டை

மதுரையிலிருந்து வடமேற்கே 44 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நடராஜர். அம்மன் சிவகாமியம்மை.

3. ஊருதட்டு

நிலக்கோட்டையிலிருந்து வடகிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கதலீஸ்வரர். அருகில் கதலிநரசிங்க பெருமாள். சோழர் காலத்தில் கட்டப்பெற்ற கோவில். அர்ச்சுனன் வணங்கி அருள்பெற்ற தலம். கல்வெட்டுக்கள் உள்ளன. தினமும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

4. வத்தலகுண்டு

நிலக்கோட்டைக்கு மேற்கே 10 கி.மீ. மஞ்சளாற்றின் கரையில் இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். தரமான அரிசிக்கு வத்தல குண்டு பெயர் பெற்றது. வெற்றிலை பெரிய அளவில் ஏற்றுமதியாவதால் வெற்றிலைக் குண்டு, வத்தலகுண்டு என்று பெயர். மேலும் இவ்வூரில் 12 செண்ட் நிலப் பரப்பளவில் லஷ்மி நாராயணப்பெருமாள் கோவிலும் உள்ளது.

5. மல்லனம்பட்டி

நிலக்கோட்டைக்கு மேற்கே 6 கி.மீ. இக்கோவில் 90 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கலியுகசிதம்பரேஸ்வரர்.

6. குன்னுவரங்கோட்டை

வத்தலகுண்டுலிருந்து தெற்கே 8 கி.மீ. வைகையாற்றின் கரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வ நாதர்.

7. இராமராஜபுரம்

நிலக்கோட்டையிலிருந்து தென் கிழக்கே 12 கி.மீ. வைகையாற்றின் வடபகுதியில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமநாதர். அருகில் வெங்கடாசலபதி.

8. மண்ணாடிமங்கலம்

சோழவந்தானிலிருந்து வடமேற்கே 5கி.மீ. இக்கோவில் 52 செண்ட் நிலப்பரப்பள்வில் மூலவர் சுந்தரேஸ்வரர். அருகில் நரசிங்கப் பெருமாள் கோவிலும் உள்ளது.

9. இரும்பாடி

சோழவந்தானிலிருந்து வடமேற்கே 5கி.மீ. வைகையாற்றின் வடகரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

10. சோழவந்தான்


மதுரையிலிருந்து வடமேற்கே 26கி.மீ. வைகையாற்றின் கரையில் இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரளயநாதர். அம்மன் சௌந்தரநாயகி. தீர்த்தம் வைகை. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, நாகர், நால்வர், நவக்கிரகம், மாணிக்கவாசகர் முதலிய சன்னிதிகள் உள்ளன. இவ்வூரில் உள்ள அருள்மிகு ஜெனகை மாரியம்மன் கோவிலும், சந்தானகோபால கிருஷ்ணர் கோவிலும் உள்ளன.

11. தென்கரை

சோழவந்தானிலிருந்து மேற்கே 2கி.மீ. கோவில்தென்கரை. வைகையாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் அருள்மிகு மூலநாதர். அம்மன் அகிலாண்டேஸ்வரி. தீர்த்தம் சுவர்ணபுஷ்கரிணி. வீரபாண்டிய மன்னனுக்கு இருந்த தொழுநோயைக் இத்தலத்தில் போக்கியருளியதால் இம்மன்னன் கோவிலை விரிவு படுத்தி கட்டுவித்ததாக தல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இரண்டு கால பூஜை. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

கொடைக்கானல் வட்டம்
(திண்டுக்கல் மாவட்டம்)



1. பூம்பாறை


கொடைக்கானல்லிருந்து 21 கி.மீ. பூம்பறை, பூம்புறை என்றழைக்கப்படும் இத்தலம் 1-06 ஏக்கர் நிலப்பரப்பளவில் 35 அடி உயர கோபுரம், ஒரு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாதேவர். இத்தலத்தில் முருகப்பெருமான் ஸ்ரீகுழந்தைவேலப்பர் தண்டாயுதபாணியாக மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். நவபாஷாணத்தால் உருவானவர். தலவிருட்சம் மகிழமரம். தீர்த்தம் வித்தனூத்து என்னும் தீர்த்தச்சுனை உள்பிராகாரத்தில் விநாயகர், அருணகிரிநாதர் சன்னிதிகள் உள்ளன. இத்தல முருகப் பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். மூன்று கால பூஜை. தமிழ் புத்தாண்டு தைப்பூசம் அன்று உற்சவம் நடைபெறுகிறது.

2. பண்ணைக்காடு

கொடைக்கானல்லிருந்து கிழக்கே 20கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் கன்னிமலைநாதர்.

திருச்சிற்றம்பலம்

உத்தமபாளையம் வட்டம்
(தேனி மாவட்டம்)



1. சின்னமனூர்

உத்தமபாளையத்திலிருந்து வடகிழக்கே 7 கி.மீ. சுருளியாற்றின் கரைப் பகுதியில் இக்கோவில் கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நந்தீஸ்வரர், தழுவக்கொழுந்தீசர், அம்மன் சிவகாமியம்மை. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, பைரவர், லிங்கோத்பவர், காளீஸ்வரி, நவக் கிரகம், 63 நாயன்மார்கள் முதலிய சன்னிதி கள் உள்ளன. திருமால், பிரம்மன், ருத்திரன் மற்றும் இந்திரன் வழிபட்டமையால் இத்தலத்திற்கு ஹரிகேசவநல்லூர் என்று பெயர். மாணிக்கவாசகர் இத்தல இறை வனை வழிபட்டு அருள்பெற்ற தலம். கல்வெட்டுக்களும் செப்பு பட்டையங்களும் உள்ளன. மூன்றாம் இராஜசிம்மவர்மன், இராஜேந்திரசோழ தேவர், இரண்டாம் இராஜ சிம்மன் கால குறிப்புகள் உள்ளன.

2. உத்தமபாளையம்

தேனியிலிருந்து தென்மேற்கே 31 கி.மீ. சுருளியாற்றின் கரையில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காளத்தீஸ்வரர்.

3. கம்பம்

உத்தமபாளையத்திலிருந்து தென் மேற்கே 10 கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி அருகில் கம்பராய பெருமாள், சாரங்கநாதர் பெருமாள் கோவிலும் உள்ளன. சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் உள்ள கல்வெட்டு பாண்டிய மன்னன் ஜடவர்மன் காலத்தியது. ஆணியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

4. தேவாரம்

உத்தமபாளையத்திலிருந்து வடமேற்கே 14 கி.மீ. இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கேஸ்வரர். அம்மன் இராமலிங்க சௌடேஸ்வரியம்மன். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர், பைரவர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

5. சுருளிமலை

கம்பத்திலிருந்து தென்கிழக்கே 12கி.மீ. சுருளி நதியின் மேற்குக் கரையில் கோவில் அமைந்த பகுதி கைலாசப் படவு. இத்தல சிவபெருமான் மகாதேவர், அம்மன் கன்னிகாபரமேஸ்வரி. இக்கோவில் இயற்கையான குகையில் அமைந்துள்ளது. முருகப்பெருமான் ஆண்டிக்கோலத்தில் சுருளியாண்டி, சுருளிவேல் என்னும் பெயர்களில் அழைக்கப்படுகிறார். உள் சன்னிதியில் சிவலிங்கம், சந்தான கிருஷ்ணன், வீரபாகுத் தேவர் முதலியோர் உள்ளனர். தேவர்கள் சனிபகவானின் கொடுமை யிலிருந்து விடுபட இத்தல முருகப் பெருமானை வணங்கிய தலம். வள்ளி திருமணத்திற்காக நம்பிராஜன் முருகப் பெருமானுக்குச் சீதனமாகக் கொடுத்த தலங்களில் இத்தலமும் ஒன்றாகும். இங்கு ஒரு ஆள் மட்டுமே தவழ்ந்து செல்லும் வகையில் குகை ஒன்று உள்ளது. அதில் பிருங்கி முனிவர் பூசித்த சிவலிங்கம் உள்ளது. ஆலயத்தின் கிழக்கே சப்தகன்னியர் சுனை உள்ளது. சுருளி தீர்த்தத்தில் நீராடினால் தீராத நோய்களும் தீரும். ஆடி அமாவாசை சிறப்பானதாகும். இம்மலையின் அடி வாரத்தில் சிவபெரு மானும், வீரநாராயணப் பெருமாளும் காட்சியளிக்கின்றனர்.

6. போடிநாயக்கனூர்

தேனியிலிருந்து மேற்கே 14 கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

7. நரசிங்கபுரம்

போடிநாயக்கனூருக்கு தெற்கே 8 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் மல்லிகேஸ்வரர்.


8. புதுப்பட்டி

உத்தமபாளையத்திலிருந்து தெற்கே 8கி.மீ. சுருளியாற்றின் மேற்குக் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு நீலகண்டேஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

பெரியகுளம் வட்டம்

(தேனி மாவட்டம்)



1. பெரியகுளம்

தேனியிலிருந்து வடகிழக்கே 15 கி.மீ. குளந்தை. இத்தலச் சிவபெருமான் ஸ்ரீராஜேந்திரசோழீஸ்வரர். அம்மன் அறம் வளர்த்தநாயகி. தீர்த்தம் வராகநதி, தல விருட்சம் நெய்க்கொட்டாமரம். உள்பிரா காரத்தில் விநாயகர், ஸ்ரீ பாலசுப்பிரமணியர், காளி, வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், ரதி, மன்மதன் முதலியோர் உள்ளனர். தாய்ப் பன்றி இறக்கவே அதன் குட்டிகள் வருந்து வதைக் கண்ட முருகப்பெருமான் பன்றி உருவம் எடுத்து பால் கொடுத்துக் குட்டி களைக் காத்ததாகத் தலபுராணம் கூறுகிறது. இத்தலத்தில் உள்ள பாலசுப்பிரமணியர் ஆறுமுகங்களுடன் மயில் மீது அமர்ந்து காட்சியளிக்கிறார். இப்பெருமானை அருண கிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். மேலும் இவ்வூரில் காளத்தீசர் திருக்கோவில் ஸ்ரீ வரத ராஜப்பெருமான் கோவில்களும் உள்ளன.

2. கங்குவார்பட்டி

பெரியகுளத்திலிருந்து வடகிழக்கே 17கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர். அருகில் லஷ்மிநாராயணப் பெருமாள் கோவிலும் உள்ளது.

3. தாமரைக்குளம்

பெரியகுளத்திலிருந்து தெற்கே 2 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர். அருகில் லஷ்மிநாராயணர் திருக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் அமைந்துள்ளது.

4. மேல்மங்கலம்

பெரியகுளத்திலிருந்து கிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மாயபாண்டீஸ்வரர். அருகில் 90 செண்ட் நிலப் பரப்பளவில் பள்ளிக்கொண்ட ரங்கநாதர் கோவிலும் உள்ளது.

5. ஜெயமங்கலம்

பெரியகுளத்திலிருந்து கிழக்கே 8 கி.மீ. இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். அம்மன் மீனாட்சி யம்மை.

6. குல்லாபுரம்

பெரியகுளத்திலிருந்து தென்கிழக்கே 14கி.மீ. வைகையாற்றின் வடகரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருநீலகண்டேஸ்வரர்.

7. வீரபாண்டி

தேனியிலிருந்து தென்மேற்கே 8 கி.மீ. சுருளியாற்றின் கரையில் இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கண்ணேஸ்வர முடையார். அம்மன் கௌமாரியம்மன்.

8. ஆண்டிபட்டி

தேனியிலிருந்து கிழக்கே 20 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சி சுந்தரேஸ்வரர்.

9. உப்பார்பட்டி

தேனியிலிருந்து தென்மேற்கே 11 கி.மீ. சுருளியாற்றின் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர். அருகில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது.


10. கோட்டூர்

வீரபாண்டியிலிருந்து தென்மேற்கே 8கி.மீ. கோட்டையூர். சுருளியாற்றின் கரையில் இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லிகார் சுனேஸ்வரர். அருகில் ஸ்ரீ கோபால கிருஷ்ணப்பெருமாள் கோவிலும் உள்ளது.

11. சீலயான்பட்டி

வீரபாண்டியிலிருந்து தென்மேற்கே 11 கி.மீ. சுருளியாற்றின் கரையில் இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மல்லிகார்சுனேஸ்வரர். அருகில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் வேணுகோபால சுவாமி கோவிலும் உள்ளது.

உசிலம்பட்டி வட்டம்
(மதுரை மாவட்டம்)



1. சாப்டூர்

உசிலம்பட்டியிலிருந்து தென்மேற்காக 36 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சதுரகிரி சுந்தரமகாலிங்க சுவாமி. இம்மலை மேரு முதலிய எட்டு மலைகளுக்குத் தலைமை மலையாகும்.

சிவகிரி, பிரமகிரி, விஷ்ணுகிரி, சித்தகிரி ஆகிய நான்கு கிரிகளும் அமையப் பெற்றிருப்பதால் இம்மலைக்கு சதுரகிரி எனப் பெயர். இந்தச் சதுரகிரிக்கு மேருகிரி, கைலாசகிரி, இந்திரகிரி, சந்திரகிரி, சூரியகிரி, பிரமகிரி, குபேரகிரி, சித்தகிரி, ஏமகிரி, சிவகிரி, சக்திகிரி, உதயகரி என்ற பதினாறு திருநாமங்கள் உண்டு.

இத்தலத்தில் சந்திர, கௌண்டின்னிய, ஆகாய கங்கை, மஞ்சளூற்று, பிரம, பொய்கை, நாகசுனை, குளிராட்டி முதலிய புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

எம்பெருமான் சுந்தரலிங்கர், மகாலிங்கர், இரட்டை லிங்கர் என்ற நான்கு திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளி யிருக்கின்றார். அம்மன் ஆனந்தவல்லி. அருகில் விநாயகர், முருகன், பதினெண் சித்தர்கள் கோவில்கள் உள்ளன.

பொதிகை மலையிலிருந்து மூலிகை வளங்காண வந்த அகத்தியரால் பிரதிஷ்டை செய்து பூசிக்கப் பெற்றவரும், திருமணக் காட்சியைத் தந்து அருளியவரும் சுந்தர மகாலிங்கராவர். ஆயர்குல முதல்வனுக்காக காட்சி கொடுத்தவர் மகாலிங்கராவர். உமையம்மை தவ வேடங் கொண்டு சந்தனமரத்தடியில் பிரதிஷ்டை செய்து பூசித்த மூர்த்தியே சந்தன லிங்கராவர்.

ஆதிசங்கரர் தனது ஸ்தலப் பிரயாணத்தில் இந்த சதுரகிரி மலையானது அவருக்கு சிவலிங்கமாக காட்சியளித்தது. அதனால் தான் இம்மலையில் எனது காலடி படக்கூடாது எனக்கூறி கீழே இருந்தே தரிசித்து சென்றார்.

தாணிப்பாறையிலிருந்து சுமார் 7 கி.மீ. மலை ஏற வேண்டும். கோரக்கர் குகை, சின்ன பசுக்கிடை, பெரிய பசுக்கிடை ஆகிய இடங்களில் இளைப்பாறிச் செல்லலாம். வழி நெடுக சுனை நீர் அருவியாக வழிந்து ஓடுகிறது. வனப்பேச்சி; பிலாவடி கருப்பசாமி ஆகிய கோவில்களைக் கடந்து சுந்தர மகாலிங்க சுவாமி திருக்கோவிலுக்கு செல்லலாம்.

ஸ்ரீசுந்தரமகாலிங்க கோவிலுக்கு மேலே மேலும். 3 கி.மீ. மலை ஏறினால் ஆதிமகாலிங்கர் கோவில். வழியில் மஞ்சள்ஊற்று, வெள்ளை விநாயகர், 18 சித்தர்கள் குகை உள்ளது. ஆடி, தை, அமாவாசை, நவராத்திரி போன்ற நாட்கள் மிகவும் விசேஷமாக கொண்டாடப்படுகிறது.

2. காட்டுகருப்பன்பட்டி

உசிலம்பட்டியிலிருந்து கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதீஸ்வரர்.

3. திடியம்

உசிலம்பட்டியிலிருந்து தென்கிழக்கே 11கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

4. மேலதிருமாணிக்கம்


உசிலம்பட்டியிலிருந்து தென்மேற்கே 17கி.மீ. இக்கோவில் 1-11 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், பிராகாரங் களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மாணிக்க சொக்கநாதர். அம்மன் மீனாட்சியம்மை. தீர்த்தம் காசி தீர்த்தம். தலவிருட்சம் வில்வம். இக்கோவிலை திருமலைநாயக்கர் மன்னரால் விரிவுபடுத்தி கட்டப்பெற்ற கோவிலாகும். நான்கு கால பூஜை. திருவாதிரை அன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது.

5. குடிப்பட்டி

சாப்டூர்க்கு வடக்கே 4கி.மீ. இக்கோவில் 8 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

திருச்சிற்றம்பலம்

திருமங்கலம் வட்டம்
(மதுரை மாவட்டம்)



1. திருமங்கலம்

மதுரையிலிருந்து தென்மேற்கே கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மீனாட்சிசொக்கநாதர்.

2. சௌதார்பட்டி

திருமங்கலத்திலிருந்து மேற்கே 18கி.மீ. கௌண்டன் நதிக்கரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர் அருகில் லஷ்மிநாராயணப் பெருமாள் கோவிலும் உள்ளது.

3. வன்னிவேலம்பட்டி

தி. கல்லுபட்டியிலிருந்து வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அக்னீஸ்வரர்.


4. கல்லிக்குடி

திருமங்கலத்திலிருந்து தெற்கே 18கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாதேவர். அருகில் லாலாபுரத் தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் உள்ளது.

5. கரைக்கண்ணி

தி.கல்லுபட்டிலிருந்து தென்கிழக்கே 2 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். மேலும் இவ்வூரில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் ஸ்ரீ லஷ்மி நாராயணப் பெருமாள் கோவிலும் உள்ளது.

மதுரை வட்டம்
(மதுரை மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. மதுரை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே

-- திருஞானசம்பந்தர்.



சென்னையிலிருந்து தென்மேற்காக 452 கி.மீ. பாண்டியநாடு, கடம்பவனம், திருஆலவாய், நான்மாடக்கூடல். இக்கோவில் 15-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 920 அடியும், வடக்கு தெற்காக 740 அடி கொண்டு நான்கு பிராகாரங்களுடன், கிழக்கு நோக்கிய இராயகோபுரம் என்னும் மொட்டை கோபுரம் மற்றும் நான்கு திசைகளிலும் உயர்ந்த இராஜகோபுரங்களுடன் மூலவர் கிழக்கு நோக்கி சுயம்புலிங்கமாக அருள்மிகு சொக்கநாதர். அம்மன் மீனாட்சியம்மை தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறாள். தீர்த்தம் பொற்றாமரைக் குளம், ஏழுகடல், வைகை. தலவிருட்சம் கடம்பு. உள்பிராகாரத்தில் அனைத்து பரிவார மூர்த்திகள் அமைந்துள்ளன.

இந்திரன், பார்வதி, பிரம்மா, திருமால், கணபதி, வருணன், வானவர்கோன், துன்மதவேடன் முதலியோர் வழிபட்ட திருவூர். சிவபெருமான் 64 திருவிளையாடல்கள் புரிந்த தலம்.

பார்வதிதேவி அங்கயற்கண்ணியம்மையாராக அவதாரம் செய்து, பாண்டியன் திருமகளாக வளர்க்கப் பெற்று, சோமசுந்தரராக வந்த சிவபெருமானைத் திருமணம் செய்து கொண்டு அரசுபுரிந்த தலம்.

ஐம்பெரும்மன்றங்களுள் ஒன்றான வெள்ளிமன்றம். எல்லாம் வல்ல சித்தருடைய உருவம் இக்கோவிலில் வடமேற்குப் பிராகாரத்தில் உள்ளது.

பகைவர் வேள்வியில் எழுப்பிய நாகம் நஞ்சினை உமிழ்ந்து இந்நகரத்தைத் துன்புறுத்தியபோது இறைவன் அந்நஞ்சினை நீக்கி அமிழ்தத்தைக் கொண்டு இந்நகரத்தை மதுரமாக்கியதால் இத்தலம் மதுரை எனப் பெயர். கன்னி கரியமால், காளி, ஆலவாய் என்னும் நான்கு மாடங்கள் கூடிய இடம் ஆதலால் இந்நகர் நான்மாடக்கூடல் என்றும் பெயர்.

கபிலர், பரணர், நக்கீரர் முதலிய புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்த சங்கம் இருந்த ஊர். தமிழ்ச் சங்கங்கள் திகழ்ந்த தலம்.

திருநீறு, அக்கமணி, சடைமுடி இவற்றை அணிந்து கொண்டு மூர்த்தி நாயனார் அரசாட்சி செய்ததிருவூர். மாணிக்கவாசகர் பாண்டியனிடம் அமைச்சராய் இருந்த தலம். திருஞானசம்பந்தர் கூன் பாண்டியனுடைய சுரநோயையும், கூனையும் நீக்கி நின்ற சீர் நெடுமாறனாக விளங்கும்படி செய்த தலம். அப்பாண்டியனுடைய மனைவியார் மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறை நாயனாரும் வேண்டியதற்கிணங்கி சம்பந்தர் இங்கு

வந்து சமணரோடு வாதிட்டார். தேவாரப் பதிகங்களைக் கொண்டு அனல் வாதத்திலும், புனல்வாத்ததிலும் வென்றார். தோல்வியுற்ற எண்ணாயிரம் சமணர்களிற் பலர் கழுமரத்தில் ஏறி உயிர்நீத்தனர். சிலர் சைவ சமயத்திற்கு சேர்ந்தனர்.

ஒரு பாண்டியனுக்காகக் காலை மாற்றி ஆடிய கூத்தப்பிரான் கற்சிலையுருவில் வெள்ளியம்பலத்தில் காட்சியளிக்கிறார். புலவர்கள் ''பொன்னுக்கு வெள்ளி கால்மாற்று அதிகம்'' என்று சிதம்பரத்தோடு ஒப்பிட்டு இக்கால் மாறிய திருவிளை யாடலை நயம்பெறக் கூறுவர்.

பொற்றாமரைத் தீர்த்தத்தின் பெருமை சங்ககாலத்தில் சங்கப் பலகை மிதந்து தக்க புலவர்களையும் அவர்கள் நூல்களையும் தாங்கி, ஏனையோரையும் அவர் நூல்களையும் கவிழ்த்துவிடும் அற்புதம் சங்க காலத்தில் இக்குளத்தில் நிகழ்ந்தது. நக்கீரர் ''நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'' எனத் தமது பிழையை உணர்ந்து இக்குளத்தில் மூழ்கிச் சிறப்பு பெற்றதும் இத்திருக்குளமாகும். இப்பொற்றாமரைத் தீர்த்தத்திலேதான் தருமபுரத் தாபனர் கையில் அவ்வாதீன வழிபடும் மூர்த்தியாகிய சொக்கலிங்கக் கடவுள் திருவுருவம் கிடைத்தது.

குமரகுருபரசுவாமிகள் ''மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்'' பாடி அரங்கேற்றியபோது அம்பிகை ஓர்இளம் பெண்ணாக வந்து தமது கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றைக் கழற்றி பரிசாக அளித்ததும் இத்தலத்தில்தான்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகம் பெற்ற தலங்களில் இத்தலம் முதலாவதாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. இத்தல முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம், வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவனபுராணம், பெரும் பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம். குமரகுருபரர் இயற்றிய மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலிய நூல்கள் இத்தலத்தைக் குறித்து எழுந்த நூல்களாகும்.

தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரைத் திருவிழா, ஆவணி மூலப்பெருவிழா, தைப்பூசத்தில் நடக்கும் மாரியம்மன் தெப்பத் திருவிழா என ஒவ்வொரு மாதத்தில் வரும் அனைத்து விழாக்களும் இத்தலத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரில் உள்ள மற்ற திருக்கோவில்கள் வருமாறு :

ஆதிசொக்கநாதர் திருக்கோவில் :

இக்கோவில் மீனாட்சியம்மன் கோவிலுக்கு வடக்கே சிறிதுதொலைவில் உள்ளது. வடதிருவாலவாய்க் கோவில் என்றும் பெயர். மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சொக்கநாதர். அம்மன் மீனாட்சியம்மை. இடைக்காடரின் பிணக்கைத் தீர்ப்பதற்காகச் சொக்கநாதர் இங்கே எழுந்தருளியதாக ஐதீகம்.

இம்மையில்நன்மைதருவார் கோவில் :

இக்கோவில் மேலமாசி வீதியின் தென்கோடியில் 1-04 ஏக்கர் நிலப்பரப் பளவில், கோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு இம்மையில்நன்மைதருவார். அம்மன் நடுவூர்நாயகி. உள்பிராகாரத்தில் சித்தி விநாயகர், சுப்பிரமணியர், காசிவிஸ்வநாதர், கோதண்டராமர், நடராஜர், காலபைரவர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சிவபெருமான் சுந்தரபாண்டியனாக வந்து தடாதகையை மணந்து மதுரையை ஆண்டபொழுது இக்கோவிலில் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்ததாகப் புராணவரலாறு. இக்கோவில் சிவகங்கை சமஸ்தான ஆளுகைக்குட்பட்டது.

தென்திருவாலவாய்க்கோவில் :

இக்கோவில் தெற்குமாசி வீதியில் கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இக்கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தென்திருவாலவாய்சுவாமி.

மேலும் இவ்வூரில் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவில், கூடலழகர் பெருமாள் கோவில், காஞ்சனமாலை கோவில், செல்லத்தம்மன் கோவில், மாரியம்மன் கோவில், முத்தீசுவரர் கோவில், மதனகோபாலசுவாமி கோவில், தெற்குக் கிருஷ்ணன் கோவில், வடக்குக் கிருஷ்ணன் கோவில், நக்கீரர் கோவில், முனீசுவரன் கோவில் மற்றும் மீனாட்சியின் கோவிலுக்கருகில் தெற்கு ஆவணி மூலவீதியில் உள்ள திருஞானசம்பந்தர் மடம் (மதுரை ஆதீனம்) ஆகியன உள்ளன.

2. திருஆப்பனூர்

முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படஅரவம் அதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருஆப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைபற் றறுப்பாரே

-- திருஞானசம்பந்தர்.



மதுரையிலிருந்து வடக்கே 2 கி.மீ. திருஆப்புடையார்கோவில், இடபபுரம், வைகையாற்றின் வடகரையில் இக்கோவில் 2-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருஆப்பனூரீசுரர் அம்மன் குரவங்கமழ்குழலம்மை தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். தீர்த்தம் இடபதீர்த்தம். உள்பிராகாரங்களில் அனுக்ஞை விநாயகர், நால்வர், பிட்சாடனர், நடராஜர், சுந்தர விநாயகர், காசிவிஸ்வநாதர் பஞ்சலிங்கம், சண்முகர், பழனியாண்டவர், பைரவர், நவக்கிரகம் முதலிய சன்னதிகள் உள்ளன.

சோழாந்தகன் என்னும் பாண்டிய மன்னன் பொருட்டு சிவபெருமான் ஆப்பினிடத்துத் தோன்றினமையால் இவ்விறைவன் திருஆப்புடையார் என வழங்கப்பெறுகிறார்.

அருச்சகராகிய சிவமறையவர் பொருட்டு உலையில் இட்ட வையை ஆற்று மணலைச் சிவபெருமான் அன்ன மாக்கி அளித்தருளிய சிறப்பால் இறை வனுக்கு அன்னவிநோதன் எனவும் பெயர்.

இத்தலத்தில் நடராஜர், சிவகாமியம்மை இருவர்களின் உருவம் கல்லிலும், செம்பிலும் வனப்புற அமைந்துள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டிய நாட்டுத் திருப்பதிகங்களில் இத்தலம் 2 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. தலபுராணம் திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றியுள்ளார். நான்கு கால பூஜை நடைபெறுகிறது. மாசி மகத்தன்று பிரமோற்சவம் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

3. திருப்பரங்குன்றம்

நீடலர்சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலனந்திச் சுடரெரியேந்திச் சுடுகானில்
ஆடலனஞ்சொ லணியிழையாளை யொருபாகம்
பாடலன்மேய நன்னகர் போலும் பரங்குன்றே
-- திருஞானசம்பந்தர்.



மதுரையிலிருந்து தென்மேற்கே 9கி.மீ. திருப்பரங்கிரி, சுமந்தவனம், கந்தமாதனம், தென்பரங்குன்றம். 1050 அடி உயரம் கொண்ட இம்மலையின் அடிவாரத்தில் இக்கோவில் வடக்குத்திசை நோக்கி அமைந்திருக்கும் அழகுமிக்க குடவரைக் கோவில் சிவபெருமானுக்காகவே தோற்றுவிக்கப்பட்ட தெனினும் பிற்காலத்தில் முருகப் பெருமானின் சிறப்புத்தலமாக விளங்கி வருவதாகிறது. இக்கோவில் 6-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 150 அடி உயர ஏழு நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பரங்குன்றீசுரர் கிழக்கு நோக்கியும், கற்பக விநாயகர், துர்க்கை மற்றும் முருகப்பெருமான் வடக்கு நோக்கியும், பவளக்கனிவாய் பெருமாள் மேற்குநோக்கியும் எழுந்தருளியுள்ளனர். தீர்த்தம் சரவணப்பொய்கை, சத்தியதீர்த்தம், பாதாளகங்கை, பிரம்ம, இலக்குமி என ஐந்து தீர்த்தங்கள்.

இத்தலம் முருகப்பெருமானது ஆறு படைவீடுகளில் ஒன்று. முருகப்பெருமான் தெய்வயானையைத் திருமணம் செய்து கொண்ட தலம். முருகன் இத்தல சிவபெருமானை வழிபட்ட தலம்.

தடாகத்தில் உள்ள மீன்களுக்குத் துன்பம் இழைத்தமையால் சினம் கொண்ட பராசுரமுனிவர் தம் புதல்வர்கள் என்றும் பாராமல் புதல்வர்கள் ஆறு பேர்களையும் மீன்களாகுமாறு சாபம் இட்டார். இதனால் ஆறு பேர்களும் இத்தலத்தில் தவம் புரிந்து முருகப்பெருமான் உபதேசம் செய்து சிவபெருமானின் அருளால் சாபம் நீங்கப் பெற்ற தலம்.

18 சித்தர்களில் ஒருவரான போகர் பெண்ணாசையினால் சாபம் பெற்றார். இத்தலத்தின் மலைமேல் உள்ள சுனையில் நீராடிவிட்டு சிவவழிபாடு செய்து இத்தலத்தில் உள்ள மச்சமுனீஸ்வரர் என்ற சித்தரால் சாபவிமோசனம் பெற்றார்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையை இயற்றித் தம்மோடு 999 பேர்களைக் காப்பாற்றிய அற்புதத் தலம். நக்கீரர் சிவபூசை செய்த சரவணப் பொய்கை என்னும் தீர்த்தம் கோவிலுக்கு அருகில் உள்ளது.

இத்தலம் இமயமலைக்கு நிகரானது. சிவபெருமானும், பிரமதேவரும், திருமாலும், துவாதசாதித்தியரும் மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், ஏகாதசருத்திரர்களும், எட்டுத்திக்குப் பாலகர்களும் மற்றத் தேவர்களும், அசுரர்களும், தெய்வ முனிவர்களும் முருகப் பெருமானைத் தரிசிக்கும் பொருட்டு இம்மண்ணுலகில் வந்து உறைவதற்குரிய இடமாயிற்று இத்தலம்.

திருச்சிற்றம்பலம்

தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டிய நாட்டுத் திருப்பதிகங்களில் இத்தலம் மூன்றாவதாகும். திருஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர், சுந்தரர் அருளிய திருப்பதி கங்கள் பெற்றது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், நக்கீரர் அருளிய திருமுரு காற்றுப்படை, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல், மதுரைக்காஞ்சி, கல்லாடம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் மற்றும் நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய திருப்பரங்கிரிபுராணம், அருணா சலக் கவிராயர் இயற்றிய பரங்கிரிப் பிள்ளைத்தமிழ், வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, அலங்காரம், அநுபூதி, மும்மணிக்கோவை என இத்தலத்தைப் பற்றிய நூல்களாகும்.

இக்கோவிலில் பாண்டியர், விசயநகர், நாயக்கர் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக் கள் உள்ளன. இத்திருக்கோவிலில் எட்டுக்கால பூஜை நடைபெறுகிறது.

சித்திரைத்திருவிழா, வைகாசி விசாகம், கந்த சஷ்டித் திருவிழா, திருக்கார்த்திகைத் திருவிழா முதலிய உற்சவங்கள் நடைபெறுகின்றது.

4. கீழ்மாத்தூர்

மதுரையிலிருந்து வடமேற்கே 12 கி.மீ. வைகையாற்றின் தென்கரையில் இக் கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மணிகண்டேஸ்வரர். மேலும் இவ்வூரில் சுந்தரமாணிக்க பெருமாள் கோவிலும் உள்ளது.

5. அவனியாபுரம்

மதுரையிலிருந்து தெற்கே 7 கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்க மாக அருள்மிகு கல்யாணசுந்தரேஸ்வரர். அம்மன் பாலமீனாம்பிகையம்மை. உள்பிரா காரத்தில் சந்தான விநாயகர், சுப்பிரமணியர், தண்டாயுதபாணி, பைரவர், நால்வர், பாலசுப்பிரமணியர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இலிங்க பேதங்களும், பலன்களும்

ஸைகதலிங்கம் (மணல்களினால் செய்யப்பட்ட இலிங்கம்), தண்டுலம், தாமிரலிங்கம், நதியின் மண்ணாலேயே செய்யப்பட்ட இலிங்கம், கோமய (சாணம்)த்தினாலே செய்யப்பட்ட இலிங்கம், வெண்ணெய்யினாலே செய்யப்பட்ட இலிங்கம், ருத்திராக்ஷத்தினாலே செய்யப்பட்ட இலிங்கம், பஸ்மாவினாலே (விபூதி) செய்யப்பட்ட இலிங்கம், சந்தனத்தினாலே செய்யப்பட்ட இலிங்கம், கூர்ச்சத்தினாலே (தர்ப்பை முடிச்சு) செய்யப்பட்ட இலிங்கம், புஷ்பமாலா இலிங்கம், வெல்லத்தினாலே செய்யப்பட்ட இலிங்கம், மாவினாலே செய்யப்பட்ட இலிங்கம், க்ஷணிக இலிங்கம் முதலியனவாகும்.

தண்டுல இலிங்கத்தை பூசிப்பவன் அதிகமாகப் புத்திரர்களை அடைவான்.


அரிசிமாவினால் செய்யப்பட்ட் இலிங்கமானது வித்தியாப்ரதமாகும்.

தயிர், பால் இவைகளினால் கல்பிக்கப்பட்ட இலிங்கமானது முறையே புகழ், சாம்ராஜ்யம் இவைகளை விருத்தி செய்யும்.

சர்க்கரை அல்லது கருப்பஞ்சாற்றினாலே கல்பிக்கப்பட்ட இலிங்கமானது அதிகமான செல்வத்தையும், காமத்தையும் அளிப்பதாகும்.

திருச்சிறறமபலம

மேலூர் வட்டம்
(மதுரை மாவட்டம்)



1. திருவாதவூர்

மேலூர்க்கு தெற்கே 9 கி.மீ. இக்கோவில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமறைநாதர் கிழக்கு நோக்கியும், அம்மன் ஆரணவல்லியம்மை தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். தீர்த்தம் கபில, பிரம்ம, புருஷாமிருகம், பைரவ தீர்த்தங்கள். தலவிருட்சம் மகிழமரம். உள்பிராகாரத்தில் சிந்தாமணி கணபதி, முருகன், காளீசுவரர், விஸ்வநாதர், நடராஜர், வியாக்ரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், பைரவர், மாணிக்கவாசகர், சுந்தரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருமால் இத்தல இறைவனை பூசித்தபோது வேதாஹம் என்ற சுருதி இறைவனிடமிருந்து தோன்றியதால் இறைவனுக்கு வேதநாதர் என்றும் பெயர்.

மாணிக்கவாசகர் அவதாரத் தலம். மாணிக்கவாசகர்க்குச் சிவபெருமான் திருச்சிலம்பொலியைக் காட்டியருளிய தலம். இக்கோவிலுக்கு சற்று தொலைவில் மாணிக்கவாசகர் பிறந்து வளர்ந்த இல்லம் ஒரு கோவிலாக விளங்குகிறது. இது அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் கட்டப்பட்டது. ஆனிமாதம் மகம் நட்சத்திரத்தில் மாணிக்கவாசகர் குருபூஜையின் போது இத்தல இறைவன் வீதி உலாவாகப் புறப்பட்டு இங்கே வந்து செல்வார்.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது.

தினமும் 5 கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

2. மேலூர்

மதுரைக்கு வடகிழக்கே 26 கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கல்யாணசுந்தரேஸ்வரர்.


3. சொக்கலிங்கபுரம்

மேலூர்க்கு வடக்கே 23 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அழகிய சோலீஸ்வரர்.

4. ஐயப்பட்டி

மேலூர்க்கு வடக்கே 20 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகஸ்தீஸ்வரர்.

5. திருச்சுனை




மேலூர்க்கு வடக்கே 16 கி.மீ. இக்கோவில் சிறிய மலைமீது ஒரு பிராகாரத்துடன் மூலவர் அகத்தீஸ்வரர். உள்பிராகாரத்தில் அம்மன், முருகப்பெருமான், சித்தி விநாயகர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திருச்சிற்றம்பலம்

திருப்புத்தூர் வட்டம்

(சிவகங்கை மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருப்புத்தூர்

வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத் தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே

-- திருஞானசம்பந்தர்.

காரைக்குடியிலிருந்து மேற்கே 20 கி.மீ. இக்கோவில் 15-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், நான்கு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருத்தளிநாதர். அம்மன் சிவகாமியம்மை தனிச்சன்னிதியில் காட்சியளிக்கிறார். தல விருட்சம் கொன்றை. தீர்த்தம் - கருட, திருத்தளி தீர்த்தங்கள். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகப்பெருமான், நடராஜர், பைரவர், சப்தமாதர், திருமால், நாகேஸ்வரர், அகத்தியலிங்கம், நவக்கிரகம் முதலிய சன்னதிகள் உள்ளன.

திருமகள் வழிபட்ட தலம். அம்பலவாணர் தம் தாண்டவம் ஏழனுள் கௌரி தாண்டவத்தை இத்தலத்தில் சிற்சபையில் அம்மைக்கு ஆடி காட்சி தந்த தலம். அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் கொன்றை மரத்தின்கீழ் உள்ளது. ஓங்காரம் கொன்றை மரமாக நின்று வழிபட்ட திருவூர்.

வைரவர் சிறப்புடன் விளங்குகிறார். மேற்கு நோக்கிய வைரவர் யோகவடிவில் தனிச் சன்னிதியில் காட்சியளிக்கிறார். கல்வெட்டுக்களில் பைரவர் 'ஆண்ட பிள்ளையார்' எனக் குறிப்பிடப் பெறுகிறார்.

திருமால் பிருகு முனிவரின் மனைவியைக் கொன்ற பாவத்தால், சாபம் பெற்று அச்சாபம் நீங்க திருமால் இத்தல இறைவனை வழிபட்டு சாபம் நீங்கப் பெற்ற தலம்.

திருமால், பிரம்மா, கௌரி, இலக்குமி, வால்மீகி, பிருகுமுனிவர், திக்பாலர், சயந்தன், குஜகேசன், பூமிதேவி, பைரவர், குலமறையோர் குழு, பருந்தாக இருந்த மணிப் பிரகாசன் முதலியோர் இத்தல இறைவனைப் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்றப் பாண்டிய நாட்டுத் திருப்பதிகங்களில் இத்தலம் 6 வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம். தலப்புராணம் திருப்புத்தூர் மெய்கண்ட சந்தான அருளாளர் மறைஞான சம்பந்தர் இயற்றியது.

கல்வெட்டுக்கள் அறுபதுக்கும் மேற்பட்டவை உள்ளன. முதலாம் வரகுணபாண்டியன், இரண்டாம் வரகுணன், திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ வல்லபதேவர், மாறவர்மன் பராக்கிரமபாண்டியன், சடையவர்மன் குலசேகரபாண்டியன், சுந்தர பாண்டியத்தேவர், விஜயநகர மன்னர்கள், நாயக்கர் மன்னர்கள் ஆகியோர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இக்கோவில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்கு உட்பட்ட ஐந்து கோவில்களில் இக்கோவிலும் ஒன்றாகும்.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் ''விசாகப்பெருந் திருவிழா'' பிரமோற்சவமாக 10 நாட்களுக்கு நடைபெறுகிறது.


இவ்வூரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலும் உள்ளது.

திருச்சிற்றம்பலம்

2. பிரான்மலை

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி யைந்தும்மமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

-- திருஞானசம்பந்தர்.



திருப்புத்தூரிலிருந்து வடமேற்கே 24கி.மீ. திருக்கொடுங்குன்றம், பறம்புமலை, உக்கிரகிரி, கடோரகிரி, தென்கயிலாயம். 2450 உடி உயரம் கொண்டது. ஊரையொட்டி மலையின் அடிவாரச் சரிவில் 30-00 ஏக்கர் பரப்பளவில் கோவில் பாதாளம், பூமி, கயிலாயம் என மூன்று பகுதிகளாக கொண்டு மிகப் பெரிய சுற்றுமதில் உள்ளது. கீழ்க்கோவில் (பாதாளம்) : இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருக்கொடுங் குன்றநாதர். அம்மன் குயிலமுதநாயகி. பிராகாரத்தில் சுப்பிரமணியர். அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ் அருளியுள்ளார். நடுப்பகுதிக் கோவில் : (பூமி) மூலவர் அருள்மிகு விசுவநாதர். அம்மன் விசாலாட்சி மற்றும் பைரவ சன்னிதி சிறப்புடன் அமைந்துள்ளது. இவர் மிகச் சிறந்த அருளாற்றல் உடையவர். மேற்கோவில் (கயிலாயம்) : மூலவர் அருள்மிகு மங்கை பாகர், அம்மன் தேனம்மை. இக்கோவில் குடைவரைக் கோவிலாகும். மங்கைபாகர் திருவுருவம் மிக அழகியது. உயிரோவிய மாய்த் திகழ்கிறது. தலவிருட்சம் பலா, மற்றும் உறங்காப்புளி. தீர்த்தங்கள் தேனாடி, குஷ்ட நிவாரண, குமர, பைரவ, சித்த, குரு, சோம முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன. தலபுராணத்தில் 108 தீர்த்தங்கள் சொல்லப்படுகின்றன.

இத்தலத்தை வழிபட்டுப் பயன் அடைந்தோர் உமாதேவி, நந்தி, உபமன்யு, சப்தமாதர், வியாக்ரபாதர், புண்டரீசர், லஷ்மி, சந்திரன், சரசுவதி, பிரமன், திருமால், நரசிம்மமன்னன், நாகராஜன், மகோதர முனிவர், உக்கிரபாண்டியன் ஆகியோர்கள்.

ஆதிசேடனுக்கும், வாயுவுக்குமிடையே யார் பெரியவர் என்று சண்டை மூண்டபோது, மேருமலையை ஆதிசேடன் சுருட்டிக் கொண்டபோது, வாயு தனது பலங்கொண்டு மேருமலையை மோத, அம்மலை சிதறிய இடங்களுள் இம்மலையும் ஒன்றாகும். வாயுவினால் உருவானதால் இத்தலம் பிரசண்டகிரி, கடோரகிரி எனப் பெயர் பெற்றது.

கடையெழு வள்ளல்களுள் ஒருவரான பாரி ஆண்ட பகுதியாகும் இத்தலம்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டியநாட்டுத் திருத்தலங்களில் இத்தலம் 5 வது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர் தாம் அருளிய பதிகத்தில் இத்தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

கல்வெட்டுக்கள் 30க்கும் மேற்பட்ட வை உள்ளன. பிற்காலப் பாண்டியர், சோழர்களும், விசயநகர அரசர்கள், நாயக்கர் காலக் கல்வெட்டுக்கள் உள்ளன. திருமலை நாட்டு திருக்கொடுங்குன்றத்து உடையார்,

திருக்கொடுங்குன்ற நாயனார் என்று பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் குறிப்பிடப்படுகின்றன.

நாள்தோறும் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. இக் கோவில் குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீனத்திற்கு உட்பட்டகோவிலாகும்.

3. பிள்ளையார்பட்டி

திருப்புத்தூரிலிருந்து கிழக்கே 8 கி.மீ. எருக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, திருவீங்கைச்சரம், கணேசபுரி என வேறு பெயர்கள். இக்கோவில் கிழக்கு நோக்கிய 7 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் அருள்மிகு மருதீசர் கிழக்கு நோக்கியும், அம்மன் வாடாமலர்மங்கை தனிச் சன்னிதியில் தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். குடைவரையுள் வடக்கு நோக்கிய தேசிவிநாயகப் பிள்ளையார் இருகைகள் கொண்டு இதன் வலக்கை சிறிய இலிங்கத்தையும், இடக்கை இளம்தொந்தியைச் சுற்றியுள்ள வயிற்றுக் கச்சைமீதும், தும்பிக்கை வலம்புரியாகவும் கொண்டு சுமார் 6 அடி உயரத்துடன் கற்பகவிநாயகர் என்ற பெயருடன் காட்சியளிக்கிறார். கிழக்கு நோக்கிய திருவீங்கைக்குடி மகாதேவர். பிராகாரத்தில் சுப்பிரமணியர், மகாலஷ்மி, சண்டிகேசுவரர், பைரவர், சூரியன், சந்திரன், நால்வர் முதலிய சன்னிதிகள் உள்ளன. வெளிப்பிராகாரத்தில் வடதிசையில் திருக்குளம் அமைந்துள்ளது.

குடைவரைக்கோவிலில் உள்ள புகழ்வாய்ந்த கல்வெட்டு தி.பி.5ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். 10 கல்வெட்டுக்கள் உள்ளன. அனைத்தும் பிற்காலப் பாண்டியர் காலத்தியவை. மாறவர்ம சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன், குலசேகர பாண்டியன், ஸ்ரீ வல்லப பாண்டியன் ஆகிய மன்னர்களின் காலத்தவையாகும். கல்வெட்டுக்களில் இவ்வூரைக் கேரளசிங்க வளநாட்டுக் கீழ்குண்டாற்றுத் திருவீங்கைக்குடி என்றும், கேரளசிங்க வள்நாட்டுக் கீழ்குண்டாற்று மருதங்குடி என்றும், மருதங்குடியான இராசநாராயணபுரம் என்றும் குறிக்கின்றன. பல்லவ மன்னன் நரசிம்ம்வர்மன் இக்குடை வரைக் கோவிலைக் கட்டுவித்ததாகவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தினமும் 5 கால பூஜை நடைபெறுகின்றன. மாதச்சதுர்த்திகளிலும், ஆவணியின் வளர்பிறைச் சதுர்த்தியுடன் முடியும் 10 நாட்களில் உற்சவம் நடைபெறுகிறது.

4. குன்றக்குடி



திருப்புத்தூரிலிருந்து கிழக்கே 9 கி.மீ. குன்னக்குடி, மயூரநகரம், அரசவனம், மயில்மலை. இக்கோவில் ஊரின் நடுவே உயர்ந்து நிற்கும் மலையின் மேல் தெற்குநோக்கிய 5 நிலை இராஜகோபுரத்துடன் திருக்கோவில் இரண்டு பகுதிகளாக அமைந்து கீழ்கோவிலில் உள்ள மூலவர் அருள்மிகு தேனாற்றுநாதர், அம்மன் அழகம்மை. தீர்த்தம் - சரவணப்பொய்கை, தலவிருட்சம் - அரசமரம். மலைக்கோவில் 149 படிகள் கடந்து மலையின்மேல் ஒரு பிராகாரத்துடன் மூலவர் அருள்மிகு சண்முகநாதப் பெருமான் ஆறுமுகங்களுடன் பன்னிரு கரங்களுடன் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். உள்பிராகாரத்தில் சொர்ணகணபதி, நடராஜர், பைரவர், நவக்கிரகம், நால்வர், வீரபாகு, சோமாஸ்கந்தர், விசுவநாதர், விசாலாட்சி,

தெய்வயானை, வள்ளியம்மை முதலிய சன்னிதிகள் உள்ளன. அடிவாரத்தில் மூன்று குடவரைக்கோவில்களும், மலையிலேயே அமைக்கப்பட்ட ஐந்து சிவலிங்கங்களும், குடவ்ரைச் சுவர்களில் செதுக்கப்பட்ட இறையுறுவங்களும் உள்ளன.

இத்தல முருகப் பெருமானைத் திருமால், பிரமன், இந்திரன், சூரியன், நாரதர், வசிட்டர், பாண்டவர் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம்.

முருகப்பெருமானிடம் சாபம் பெற்ற மயில் இத்தலத்தில் தவமிருந்து முருகப் பெருமானின் அருள் பெற்ற தலம். அருணகிரிநாதர் இத்தல முருகப் பெருமான் மீது திருப்புகழ் அருளியுள்ளார். மருதுபாண்டிய மன்னர் தம் வயிற்றுவலியை போக்க இத்தலத்தில் வழிபட்டுப் போக்கிக் கொண்ட தலம்.

காரியம் கைகூட வேண்டுமானால் குன்றக்குடிக்குத்தான் காவடி எடுக்க வேண்டும் என்பது இங்குள்ளவர்களின் முதுமொழியாகும். இக்கோவில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் நிர்வாகத் தில் உள்ளது. வைகாசி விசாகம், பங்குனி உத்திரம், கார்த்திகை தோறும் உற்சவமும் நடைபெறுகிறது.

5. கரிசல்பட்டி

பிரான்மலையிலிருந்து வடக்கே 15கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

6. கீழச்சிவல்பட்டி

திருப்புத்தூரிலிருந்து வடகிழக்கே 13கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுந்தரேஸ்வரர். அம்மன் மீனாட்சியம்மை.

7. நெற்குப்பை

திருப்புத்தூரிலிருந்து வடமேற்கே 15கி.மீ. இக்கோவில் 51 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மணமோத கண்டீஸ்வரர். பெரியமருந்துபட்டியில் 53 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மருந்தீசர். சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்தது. ஆனி மாதத்தில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

8. செவ்வூர்

திருப்புத்தூரிலிருந்து வடக்கே 17 கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர், அம்மன் மீனாட்சியம்மை.

9. திருக்கோளக்குடி

திருப்புத்தூரிலிருந்து வடக்கே 20 கி.மீ. திருக்காளக்குடி. இக்கோவில் மலைக்கோ வில் மீது குடவரைக் கோவிலாக காட்சி யளிக்கிறது. மூலவர் தான்தோன்றிஈஸ்வரர். அருகில் விநாயகரும், பின்புற மலைச் சரிவில் குகை போன்ற அறையில் விநாயகர் உருவமும் உள்ளன. படிகளேறி மேலே சென்றால் கோளஈஸ்வரர் திருவுருவம், மகாமண்டபம் முதலியவற்றைக் காணலாம். மலையின் உச்சியில் அமைந்துள்ள சுப்பிரமணியர் கோவில் உள்ளது. இதற்கு அடைகோள ஈசுவரர் கோவிலிலிருந்து இறங்கி கோவிலை வலம் வந்து பாறை மீதேறிச் சென்றால் ஆறுமுகப் பெருமாள் காட்சியளிக்கிறார். தினமும் இரண்டு கால பூஜை. ஆனி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

10. இளையாத்தங்குடி

திருப்புத்தூரிலிருந்து வடகிழக்கே 12கி.மீ. இளைசை, சிவபுரம், சித்தபுரம், புராதனவனம், நித்யகல்யாணிபுரம். இக் கோவில் 62 செண்ட் நிலப்பரப்பளவில் மூன்று நிலை இராஜகோபுரம், பிராகாரங் களுடன் மூலவர் கைலாசநாதர் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் நித்யகல்யாணி. தீர்த்தம் சிவ, சித்த என இரு

தீர்த்தங்கள். உள்பிராகாரத்தில் விநாயகர், நடராஜர், முருகப்பெருமான், பைரவர், காரைக்கால் அம்மையார், மாணிக்கவாசகர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

அசுரர்களின் கொடுமை தாங்காமல் தேவர்கள் இத்தல இறைவனிடம் வந்து இன்னல் களைந்திட இறைஞ்சனராம் இன்னலுற்று வந்தவர்களின் இளைப்பும், களைப்பும் போக்கி அசுரர்களை அழிக்க வைரவரையும், முருகனையும் அனுப்புவதாக ஆறுதல் கூறினாராம் கைலாசநாதர். எனவே இளைப்பாற இடம் தரும் இவ்வூர் இளையாத்தங்குடி எனப் பெயர் பெற்றது.

இவ்வூர் வடக்கு இளையாத்தங்குடி, தெற்கு இளையாத்தங்குடி என்னும் இரு பிரிவாக உள்ளது. இவ்வூரில் காஞ்சி காமகோடி மடத்தைச் சேர்ந்த அதிஷ்டானம் ஒன்றும் உள்ளது. நகரத்தார்குரிய ஒன்பது பிரிவுகளில் முதன்மையானது இக்கோவில்.

11. வேலங்குடி

திருப்புத்தூரிலிருந்து வடக்கே 15கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் திருகண்டீஸ்வரர். அம்மன் காமாட்சியம்மை. இக்கோவிலில் உள்ள ஞானமுனி என்னும் சொல்கேட்ட விநாயகர் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு மிகஉகந்த தெய்வமாக விளங்கு கிறார். நகரத்தார் வரலாறு பற்றிய பழமை யான கல்வெட்டு இவ்வூரில் உள்ளது. அருகில் 49 செண்ட் நிலப்பரப்பளவில் ருத்திரபதீஸ்வரர் கோவிலும் உள்ளது. ஊரணியின் வடமேற்கே ஸ்ரீ தேசிகநாராயண பெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

12. சிங்கம்புணரி

திருப்புத்தூரிலிருந்து வடமேற்கே 20கி.மீ. இக்கோவில் சிவபுரிப்பட்டியில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தான்தோன்றீசுவரர். அம்மன் அறம்வளர்த்த நாயகி. உள்பிராகாரத்தில் சித்திவிநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளது. நந்தி ஓர் ஆள் உயரம் கொண்டதாகும். இக்கோவில் சோழர்களால் கட்டப்பெற்று, அரிவியூர் நகரத்தாரால் விரிவாக்கப்பட்டு திருப்பணி செய்யப் பெற்றக் கோவிலாகும். தினமும் நான்கு காலப் பூஜை நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் உள்ள ஐயனார்கோவில் புகழ் பெற்ற கோவில். வைகாசியில் 10 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது.

13. ஒழுகுமங்கலம்

திருப்புத்தூரிலிருந்து வடமேற்கே 13கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனிநாதர்.

14. செண்பகம்பட்டி

திருப்புத்தூரிலிருந்து வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆட்கொண்டநாதர்.

15. சுண்டக்காடு

திருப்புத்தூருக்கு வடக்கே 12 கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆத்மநாதர்.

16. தெற்கூர்

திருப்புத்தூரிலிருந்து வடமேற்கே 11கி.மீ. ஆத்திக்காடுதெற்கூர். இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சர்வலோகநாதர்.

17. சதுர்வேதமங்கலம்

சிங்கம்புணரிலிருந்து கிழக்கே 5 கி.மீ. மட்டியூர். இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ருத்ரகோடீஸ் வரர். அம்மன் ஆத்மநாயகி. சாம்பிராணி எடுக்க உதவும் மட்டிப்பால் தரும் மரங்கள் நிறைந்திருப்பதால் மட்டியூர் எனப்பெயர் பெற்ற தலம். நான்கு கால பூஜை. மாசிமகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது.

18. ஆத்தங்குடி

குன்றக்குடிக்கு வடமேற்கே 4 கி.மீ. கோவினிலையாத்தங்குடி. இக்கோவில் 1-17 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அம்மன் மீனாட்சியம்மை.

19. நெடுமரம்

திருப்புத்தூரிலிருந்து வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

20. முறையூர்

திருப்புத்தூர்க்கு மேற்கே 12 கி.மீ. இக்கோவில் 36 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். அம்மன் மீனாட்சியம்மை. நியாயம் தவறாது முறையாக இவ்வூரினர் தீர்ப்பு வழங்கியமையால் இவ்வூர் முறையூர் என வழங்கலாயிற்று.

21. மாடவராயன்பட்டி

திருப்புத்தூர்க்கு மேற்கே 8 கி.மீ. மாதவராயன்பட்டி. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டேஸ்வரர். நீலமேஸ்வரமுடையார் என்றும் பெயர்.

22. வைரவன்பட்டி


திருப்புத்தூரில் இருந்து வடகிழக்கே 7கி.மீ. வயிரவபுரம், வருகநாதபுரம், வடுகநாதபுரி, வடுகன்மூதூர், வயிரவநகர். இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வளரொளிநாதர். அம்மன் வடிவுடையம்மை. தீர்த்தம் வைரவ தீர்த்தம். இத்தலத்தில் பரிவார தெய்வமான வைரவரே முதன்மை பெருகிறார். மார்த்தாண்ட வைரவரர் என்று பெயர்.

வைரவர் திருப்புத்தூரில் கிரகஸ்தானம் பெற்று, இத்தலத்தில் இதயஸ்தானம் பெற்று, இலுப்பைக்குடியில் பாதஸ்தானம் பெற்றுத் திகழ்கிறார். இங்கு ஒவ்வொரு மாதமும் தேய்பிறை அஷ்டமியில் வைரவர் ஹோமம் சிறப்பாக நடைபெறுகிறது. கார்த்திகை மாதத்தில் அஷ்டமி திதியில் வைரவர் அசுரரை அழித்த சம்ஹார தினமாய்க் கொண்டாடப்படுகிறது. வைரவ தீர்த்தத்தில் தைப்பூசநாளில் நீராடினால் குறைவிலா நிறை செல்வம் சேரும் என்றும் தலபுராணம் கூறுகிறது.

இத்தலத்தில் உள்ள சண்டிகேசுவரர் சன்னிதி மிக நுட்பமான வேலைப்பாடுகளுடன் கூடிய தனி மண்டபமாகவும், மணி மண்டபமாகவும் திகழ்கிறது. ஒரே கல்லாக வெட்டி எடுத்துவந்து குடைந்து அதில் சண்டேசுரரை வீற்றிருக்கச் செய்துள்ளார்கள்.

இத்தலத்திற்கு அருகில் உள்ள சிறுகூடற்பட்டியில் 30 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அம்மன் மீனாட்சியம்மை.

23. நேமம்



குன்றக்குடிக்கு வடக்கே 2 கி.மீ. நியமம். ஜெயங்கொண்டசோழபுரம், ஜெயங்கொண்டபுரம், குலசேகரபுரம், மதுநதிபுரம். இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 66 அடி உயரம் கொண்ட 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஜெயம்கொண்ட சோளீஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி, உள்பிராகாரத்தில்

ஜெயங்கொண்ட விநாயகர், வில்லேந்திய முருகப்பெருமான், மேற்கு நோக்கிய வைரவர், விஸ்வநாதர், விசாலாட்சி, கஜலஷ்மி, துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலப்பெருமானை அகத்தியர் வழிபட்டு அருள் பெற்ற தலம். சோழ மன்னருக்குப் பின்னர் பாண்டிய மன்னர் ஆட்சியில் காருண்யபாண்டிய மன்னன் இக்கோவிலை நகரத்தாருக்கு அளிக்கப் பட்டது என்பதை கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நகரத்தாரின் ஒன்பது கோவில்களில் இக்கோவிலும் ஒன்றாகும்.

நாள்தோறும் 7 கால பூஜை. ஆடித்திங்கள் பதினெட்டாம் நாளில் உற்சவம் நடைபெறுகிறது. அருகில் 86 செண்ட் நிலப்பரப்பளவில் வான்மீகநாதர் காட்சியளிக்கிறார்.

24. சிறாவயல்

குன்றக்குடிக்கு மேற்கே 5 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் விஸ்வநாதர் தியாகராஜர். அம்மன் திரிலோகநாயகி. இக்கோவில் 2000 வருட முற்பட்ட கோவில்.

25. கம்பனூர்

திருப்புத்தூரிலிருந்து தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உமாமகேஸ்வரர்.

26. வேளியத்தூர்

திருப்புத்தூரிலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

27. பட்டமங்கலம் மேற்கு

திருப்புத்தூரிலிருந்து தெற்கே 4கி.மீ. இக்கோவில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அம்மன் மீனாட்சியம்மை. திருவாசகம் போற்றும் தலம்.

28. வடவான்பட்டி

திருப்புத்தூரிலிருந்து தென்மேற்கே 21கி.மீ. இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வனமகாதேவர்.

29. ஏரியூர்

திருப்புத்தூரிலிருந்து தென்மேற்கே 12கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் மருந்தீஸ்வரர். உப்பாற் றங்கரையில் இக்கோவில் அமைந்துள்ளது. குன்றின் மீது கோவில் உள்ளது.

30. பட்டமங்கலம் கிழக்கு

திருப்புத்தூரிலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கரும்பேஸ்வரர். இப்பகுதி அடைக்கலம் காத்தநாடு எனப்படும்.

31. அரளிக்கோட்டை

திருப்புத்தூரிலிருந்து தெற்கே 14கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோளீஸ்வரர்.

32. கல்லுபத்தூர்


திருப்புத்தூரிலிருந்து தெற்கே 10கி.மீ. இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஆண்டபிள்ளைநாயனார்.

33. கண்டரமாணிக்கம்

திருப்புத்தூரிலிருந்து தென்கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் பெரியநாயகி.


காரைக்குடி வட்டம்

(சிவகங்கை மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. கோவிலூர்



காஉரக்குடிக்கு மேற்கே 5 கி.மீ. ஸ்ரீ வல்லவபுரம். இக்கோவில் 1-53 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய மூன்று இராஜகோபுரங்களும், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கொற்றவாளீசர். அம்மன் நெல்லைநாயகி. தீர்த்தம் மதுபுஷ்கர்ணி ஆலயத்திற்கு எதிரில் உள்ள வற்றாத திருக்குளம். தலவிருட்சம் வன்னிமரம். வீரபாண்டிய மன்னன் இத்தல பெருமான் அருளால் கொற்றவாள் என்னும் அதிசய வாளைப் பெற்றதனால் இறைவர்க்கு கொற்றவாளீசர் என்று பெயர்.

மதுப்பிரியர், சுவேத மன்னன், வீரபாண்டியன், சாகலபுரத்து இளவரசன், வீரசேனன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்றத் தலம்.

கல்வெட்டுக்களில் இவ்வூரை கழனி வாசல் என்றும், ஸ்ரீவல்லவபுரம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதியில் இக் கோவிலை வீரபாண்டியன் நிர்மாணித்தான்.

கோவிலூர்த்தலபுராணம் மகாவித்து வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் 12 படலங்கள், 894 பாடல்கள் கொண்டு இயற்றப்பட்டது. இவ்வூரில் உள்ள கோவிலூர் மடம் சிறப்புவாய்ந்தது. நாட்டுக் கோட்டைச் செட்டியார் குலத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகரால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

இக்கோவில சிவகங்கை தேவஸ்தானத் தினரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

2. காரைக்குடி

திருப்புத்தூரிலிருந்து கிழக்கே 20 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அம்மன் மீனாட்சி யம்மை. மேலும் இவ்வூரில் கொப்புடை யம்மன் கோவிலும், காட்டம்மன் கோவிலும் உள்ளன.

3. கானாடுகாத்தான்

காரைக்குடிக்கு வடக்கே 12 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவலோகநாதர். அம்மன் ஒப்பிலாம் பாள்.

4. கொத்தமங்கலம்

கானாடுகாத்தானிலிருந்து வடகிழக்கே 3கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர், 72 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமேனிநாதர். அம்மன் சௌந்தரநாயகி யம்மன் என இருகோவில்கள் உள்ளன.

5. பள்ளத்தூர்

காரைக்குடிக்கு வடக்கே 7 கி.மீ. இக் கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர் அம்மன் மீனாட்சி யம்மை.

6. நெற்புகபட்டி

காரைக்குடிக்கு வடக்கே 10 கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். இவ்வூர்க்கு அருகில் உள்ள பூவானிப்பட்டியில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தேசிகநாதர்.

7. சூரக்குடி

காரைக்குடிக்கு வடமேற்கே 9 கி.மீ. இக்கோவில் 1-05 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

8. கோட்டையூர்

காரைக்குடிக்கு வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அம்மன் மீனாட்சியம்மை.

9. கல்லாங்குடி

கோட்டையூர்க்கு வடகிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருப் பாத்தீஸ்வரர், அம்மன் யோகாம்பாள், பாலாம் பாள். இக்கோவிலில் மூன்றாம் குலோத் துங்கன் காலத்து கல்வெட்டுக்கள் முதல் மதுரை நாயக்கர், முத்திரையர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

10. சாக்கோட்டை

கண்டனூரிலிருந்து வடகிழக்கே 3கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வீரசேகரர். அம்மன் உமையாம்பிகை.


11. கண்டனூர்

கோட்டையூர்க்கு கிழக்கே 3 கி.மீ. இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அம்மன் மீனாட்சியம்மை. அருகில் 12 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

12. உய்யக்கொண்டான் சிறுவயல்

காரைக்குடிக்கு வடமேற்கே 7 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஐராவதீஸ்வரர். அம்மன் சௌந்தர நாயகி.

13. இலுப்பைக்குடி



காரைக்குடியிலிருந்து கிழக்கே 5 கி.மீ. அதிவீரபாண்டியபுரம், இருப்பையூர், இலுப்பைநகர், சூடாமணிபுரம். இக்கோவில் 69 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், ஒரு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தான்தோன்றீசுவரர். அம்மன் வடிவுடையம்மன். தீர்த்தங்கள் பிரம்ம, சிவகங்கை, கௌரி என மூன்று தீர்த்தங்கள். தலவிருட்சம் வில்வம். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வடுக பைரவர், விசுவநாதர், விசாலாட்சி, சனீஸ்வரர், நாகர், நவக்கிரகங்கள் முதலிய சன்னிதிகள் யாவும் உள்ளன.

பிரம்மதேவர், கிருஷ்ணன், கொங் கணச்சித்தர், திரிபுவன சக்கரவர்த்தி, அதிவீரபாண்டியர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றதாகப் புராண வரலாறு கூறுகிறது. நகரத்தார்களின் குலமரபுக் கோவில்கள் ஒன்பதில் இக்கோவிலும் ஒன்றாகும். நகரத்தார் திருமணங்கள்யாவும் கோவிலுக்குப் பாக்கு வைத்தல் என்னும் திருமணப் பதிவு முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். இக்கோவில் பண்டைய நாளில் கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் அமைந்திருந்தது என கூறப்படு கிறது. நாள்தோறும் 5 கால பூஜை நடை பெறுகிறது. மார்கழி மாதம் ஆருத்திரா தரிசனம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

14. மாத்தூர்

கண்டனூருக்கு தெற்கே 2 கி.மீ. மாற்றூர், வீரபாண்டியபுரம், இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஐந்நூற்றீசுவரர். அம்மன் பெரிய நாயகி. தலமரம் மகிழமரம்.

கொங்கணச்சித்தரின் இரசவாதசித்தால் ஐநூறு மாற்றுவரை பொன் கிடைத்ததால் இவ்வூர் மாற்றூர் என வழங்கப்பட்டு மாத்தூர் என மருவி வந்ததாகச் சொல்வர். கோவிலின் அபூர்வமான சிற்பக்கலையோடு அமைந்த திருவுருவங்களும், நான்கு சிம்மங்கள் தாங்கும் நந்திகேசுவரரையும் காணக் கண்கோடி வேண்டும்.

திரிபுவனசக்ரவர்த்தி இக்கோவிலை கட்டுவித்ததாக கல்வெட்டில் காணப்படு கிறது. மேலும் கேரள சிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டிய புரம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

15. மித்திராவயல்

கண்டனூரிலிருந்து தென்கிழக்கே 12கீ.மீ. இக்கோவில் 1-69 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

16. அமராவதிபுதூர்

காரைக்குடிக்கு தெற்கே 7 கி.மீ. இக்கோவில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வந்தருளீஸ்வரர். அம்மன் வாழவந்த நாயகி. அருகில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் சுந்தரேஸ்வரர் கோவிலும் உள்ளது.

17. செம்பனூர்

காரைக்குடியிலிருந்து தென்மேற்கே 24கி.மீ. இக்கோவில் மணிமுத்தாற்றின் கரையில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கண்டீஸ்வரர். அம்மன் நித்யகல்யாணி.

18. அரண்மனைசிறுவயல்

கல்லல்லிருந்து தெற்கே 6 கி.மீ. சுரங்கபாணியாற்றின் கரையில் இக்கோவில் 44 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மும்முடிநாதர். அம்மன் கருணாகடாச்சி யம்மன். சேரர், சோழர், பாண்டியர் மூவரும் வழிபட்டதால் மூலவர்க்கு மும்முடியீசர் என்று பெயர். சின்ன மருதுவின் தலைநகராய் விளங்கிய பெருமைபெற்ற ஊர்.

19. விசயாலயன்கோட்டை

காரைக்குடிக்கு தெற்கே 12 கி.மீ. மணிமுத்தாற்றின் வடகரையில் இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சன்னவனநாதர்.

20. கீழ்ப்பூங்குடி

கல்லல்லிருந்து தென்கிழக்கே 6 கி.மீ. மணிமுத்தாற்றின் தென்பகுதியில் இக் கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மார்க்கண்டேஸ்வரர். சண்டாசுர னோடு போரிட்டு வெற்றிபெற்ற தேவியைப் பூமாரிப் பெய்து தேவர்கள் வாழ்த்திய இடம் இத்தலமாகும்.

21. மும்முடிசன்பட்டி


கல்லல்லிருந்து தென்மேற்கே 15 கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ராமநாதஸ்வாமி.

22. வெற்றியூர்

கல்லல்லிருந்து தெற்கே 12 கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருந்துதீஸ்வரர். அம்மன் சௌந்தரநாயகி. சண்டாசுரனை அம்மை வெற்றிக் கொண்ட ஊர் இத்தலமாகும்.

தேவகோட்டை வட்டம்

(சிவகங்கை மாவட்டம்)



1. தேவகோட்டை

காரைக்குடியிலிருந்து தென்கிழக்கே 13கி.மீ. தேவிகோட்டை. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூல்வர் சுந்தரேசுவரர். அம்மன் மீனாட்சி. உள்பிராகாரத்தில் பாலதண்டாயுதபாணிக்கு தனிச் சன்னிதியுள்ளது. சண்டாசுரனை வென்றிட தேவியை தங்கியிருக்க தேவர்கள் நியமித்த இடம் தேவிகோட்டை என்று பெயர். அருகில் 2-15 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலும், 11 செண்ட் நிலப்பரப்பளவில் ரங்கநாத பெருமாள் கோவிலும், 9 செண்ட் நிலப்பரப்பளவில் கோதண்டராமசாமி கோவிலும் இவ்வூரில் அமைந்துள்ளது.

2. ஊஞ்சனை

தேவகோட்டைக்கு வடக்கே 8கி.மீ. தேனாற்றின் வடபகுதியில் இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருபுவனசக்ரவர்த்தீஸ்வரர்.

3. கண்டதேவி

தேவகோட்டையிலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 1-09 ஏக்கர் நிலப்பரப்பளவில், 85 அடிஉயர இராஜ கோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சொர்ணமூர்த்தீஸ்வரர். அம்மன் பெரியநாயகி. உள்பிராகாரத்தில் விநாயகர், முருகப்பெருமான், நடராஜர், குங்கும காளியம்மன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

சண்டாசுரனை வென்றிட தேவியை தேவர்கள் கண்ட இடம் கண்டதேவி என்று பெயர் பெற்ற தலம். ஆனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. நான்கு கால பூஜை நடைபெறுகிறது.

4. மேலசெம்பொன்மாரி

தேவகோட்டையிலிருந்து வடக்கே 2கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

5. கண்டியூர்

கண்ணங்குடிக்கு கிழக்கே 3கி.மீ. தேனாற்றின் வடகரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் கைலாசநாதர்.

6. எழுவன்கோட்டை

தேவகோட்டையிலிருந்து மேற்கே 7கி.மீ. மணிமுத்தாற்றின் கரையில் இக்கோவில் 33 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர். அருகில் 62 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு விஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளது.

7. கண்ணங்குடி

தேவகோட்டையிலிருந்து கிழக்கே 15கி.மீ. தேனாற்றின் கரையில் இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பசுபதீஸ்வரர். அருகில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்பலவாணர்.

8. வேதியன்குளம்

தேவகோட்டையிலிருந்து மேற்கே 13கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.

9. திருமணவயல்

தேவகோட்டையிலிருந்து தெற்கே 5கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகஸ்தீஸ்வரர்.

10. தாளக்காவயல்


தேவகோட்டைக்கு தெற்கே 3கி.மீ. மணிமுத்தாற்றின் தென்கரையில் இக் கோவில் 43 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பழம்பதிநாதர்.

11. கார்களத்தூர்

தேவகோட்டையிலிருந்து தெற்கே 17கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் முடீஸ்வரர்.

சிவகங்கை வட்டம்

(சிவகங்கை மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. காளையார்கோவில்

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையரோ வடியரே

-- திருஞானசம்பந்தர்.

சிவகங்கையிலிருந்து கிழக்கே 18கி.மீ. திருக்கானப்பேர், தக்ஷிணகாளிபுரம், சோதிவனம், மந்தாரவனம், மகாகாளபுரம், தேவதாருவனம், சோமநாதமங்கலம். இக்கோவில் 4-32 ஏக்கர் நிலப்பரப்பளவில் 157அடி உயரம் 9 நிலை கொண்ட இராஜகோபுரம், அருகில் 5 நிலை கொண்ட மற்றொரு கோபுரம் ஆக கிழக்கு நோக்கிய இரண்டு கோபுரங்களும், இரண்டு பிராகாரங்களுடன் இத்திருக்கோவிலில் மூன்று இறைவர் சன்னிதிகளைத் தனித்தனியே கொண்டு விளங்குகிறது. சோமேசர் - சௌந்தரநாயகி, காளியீசர் - சொர்ணவல்லி, சுந்தரேசுவரர் - மீனாட்சி யம்மை ஆகியன. நடுவே விளங்குபவர் காளியீசர். இவரே இத்தலத்தின் தேவாரத்தைப் பெற்ற மூர்த்தியாவார். வலது பக்கத்தில் விளங்குபவர் சோமேசர், இடதுபுறம் விளங்குபவர் சுந்தரேசுவரர். தீர்த்தம் சிவகங்கை, யானைமடுவு.

காடுகாளாக இப்பகுதி விளங்கிப் பாண்டியநாட்டுக்கு அரண் செய்த காரணத்தால் கானப்பேரெயில் என்று வழங்கிய ஊர்ப்பெயரே கானப்பேர் என மருவி வழங்கித் தேவாரத்தில் இடம் பெற்றது. சுந்தரர் தேவாரத்தில் கானப்பேர் உறைகாளை என்ற திருவாக்கின் சீர்மையால் காளையார் அமர்ந்தருளும் கோவில் எனக் கோவில் பெயர் கூறப்பெற்று அப்பெயரே ஊர்ப்பெயராகவும் வழங்கத் தொடங்கிற்று. வசைமொழியினால் காட்டானையாக மாறிய ஐராவதம் என்னும் யானை வழிபட்ட ஊர். காளி சண்டாசுரனைக் கொன்ற பாவம் நீங்க இத்தலத்தை அடைந்து சிவகங்கை தீர்த்தத்தில் மூழ்கி சிவபெருமானை வழிபட்டுக் கரிய உருவமும், கொலைப் பாவமும் தீரப்பெற்று சுவர்ணவல்லியாகிக் காளீசரை மணந்து மகிழ்ந்த தலம்.

அகத்தியர், திருமகள், எட்டுத்திக்குப் பாலகர்கள், வீரசேன பாண்டியன், வரகுண பாண்டியன், விக்கிரசோழன், புட்கரன் என்னும் அந்தணன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். திருவிழாக் காலங்களில் சோமேசர் கோவில் மூர்த்திகளே திருவுலா வருவர். நிலபுலன்கள் யாவும் காளையீசர் திருப்பெயராலேயே உள்ளன. இதுபற்றி இத்தலத்தில் ''காளைதேட, சோமர் அழிக்க, சொக்கர் சுகிக்க'' என்னும் பழமொழி மக்களால் வழங்கப் பெறுகிறது. சிறிய இராஜகோபுரம் முதலாம் சுந்தரபாண்டி யனாலும், பெரிய இராஜகோபுரம் பெரிய மருதுவாலும் கட்டப்பட்டவையாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டிய நாட்டு தலங்களுள் இத்தலம் 10 வது. திருஞானசம்பந்தர், சுந்தரர் அருளிய திருப்பதிகமும். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், திருநாவுக்கரசர் இத்தலத்தைக் குறித்தும்பாடியுள்ள பதிகமும் இத்தலத்திற்கு உரியவை.

கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூரை திருக்கானப்பேர் கூற்றத்துத் திருக்கானப்பேர் என்றும், இறைவர் திருக்கானப்பேருடைய நாயனார் எனவும், அம்மன் திருக்காமக் கோட்டத்து ஆளுடையநாச்சியார் என்றும், பாண்டிய மன்னர்களில் ஜடாவர்மனாகிய திரிபுவனசக்ரவர்த்தி சுந்தரபாண்டிய தேவர், வீரபாண்டியதேவர், குலசேகரதேவர் இவர்கள் காலங்களிலும், வாண அரசர்களில் மாவலி வாணராயர் காலங்களிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.

2. சிவகங்கை

திருபுத்தூரிலிருந்து தெற்கே 34 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி. சிவகங்கை அரசர்களின் பாசறையாக விளங்கியதால் செவ்வேங்கை என்பதே சிவகங்கை என பெயர் பெற்றது என்று கூறுவர். மேலும் இவ்வூரில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் சசிவர்ணேஸ்வரர் திருக்கோவிலும், 13 செண்ட் நிலப்பரப் பளவில் சுந்தரராஜ பெருமாள் கோவிலும் உள்ளது.

3. நாட்டரசன்கோட்டை

சிவகங்கையிலிருந்து கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் கரிகாலச்சோழீஸ்வரர். அம்மன் கண்ணு டைய நாயகி. இவ்வூரில் கண்ணகி கோவிலாலும் சிறப்புறுகிறது. திருவிழாக் காலங்களில் கள்ளர் வகுப்பினர்க்கு 'நாட்டரசன்' என்ற பட்டம் கூறித் திருநீறு வழங்கப்படுகிறது. மேலும் இவ்வூரில் கண்ணுடைநாயகியம்மன், வெங்கடாசலபதி பெருமாள் கோவில் 86 செண்ட் நிலப்பரப்பளவில் உள்ளது.

4. கடியாபட்டி

சிவகங்கையிலிருந்து வடக்கே 21கி.மீ. இக்கோவில் 72 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருக்கண்ணங்குடி நாயனார், பூமீஸ்வரர் - பிரம்மவித்யாம்பிகை.

5. மதகுப்பட்டி

சிவகங்கையிலிருந்து வடக்கே 17கி.மீ. இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

6. திருமலை

சிவகங்கையிலிருந்து வடக்கே 18கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மலைக்கொழுந்தீஸ்வரர்.

7. கீழ்ப்பூங்குடி

சிவகங்கையிலிருந்து வடக்கே 12கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

8. பாகனேரி

காளையார்கோவிலுக்கு வடக்கே 16கி.மீ. இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நீலகண்டீஸ்வரர். அம்மன் கருணாகடாக்ஷியம்மன். மேலும் இவ்வூரில் பெருமாள்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் உள்ளது.

9. சோழபுரம்

சிவகங்கையிலிருந்து வடக்கே 6 கி.மீ. இக்கோவில் 62 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அருள்மொழிநாதர். அம்மன் அறம்வளர்த்தாஸ்வரியம்மை.

10. மாரத்தூர்

காளையார்கோவிலிருந்து தென் கிழக்கே 10 கி.மீ. இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மூர்த்திநாயனார்.

11. இடைக்காட்டூர்

காளையார்கோவிலிருந்து தென் மேற்கே 16 கி.மீ. அழகியபாண்டியநல்லூர். வைகையாற்றின் வடகரையில் இக்கோவில் 68 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மணிகண்டீஸ்வரர், அம்மன் வடிவாம்பாள். மேலும் இவ்வூரில் 28 செண்ட் நிலப்பரப்பளவில் கரியமாணிக்க பெருமாள் திருக்கோவில் உள்ளது.

12. பெரியகண்ணனூர்

காளையார்கோவிலிருந்து தெற்கே 15கி.மீ. நாச்சியார் கண்ணனூர். இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

13. மாறந்தை


காளையார்கோவிலிருந்து தெற்கே 22கி.மீ. இக்கோவில் 48 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர்.

14. காளையார்மங்கலம்

நாட்டரசன்கோட்டைக்கு வடக்கே 8கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர், அம்மன் மீனாட்சியம்மை.

மானாமதுரை வட்டம்

(சிவகங்கை மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருப்பூவணம்

திருவுடை யார்திரு மால்அய னாலும்
உருவுடை யார்உமை யாளையொர் பாகம்
பரிவுடை யார்அடை வார்வினை தீர்க்கும்
புரிவுடை யார்உறை பூவணம் ஈதோ

-- சுந்தரர்



மதுரையிலிருந்து கிழக்கே 19 கி.மீ. புஷ்பவனம், திருப்பூவணகாசி. வைகை யாற்றின் தென்கரையில் இக்கோவில் 3-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் 403×327 அடி நீளம், அகலம் கொண்டு, கிழக்கு நோக்கிய 75 அடி உயர 5 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பூவணநாதர். அம்மன் சௌந்தரநாயகி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கி காட்சியய. தலவிருட்சம் பலா. தீர்த்தம் மணிகர்ணிகை, வைகைநதி, வசிட்ட, இந்திர தீர்த்தங்கள்.

உள்பிராகாரத்தில் பாஸ்கரவிநாயகர், சுப்பிரமணியர், சூரியன், சயனபெருமாள், நால்வர், 63 நாயன்மார்கள், சப்தமாதர்கள், மகாலஷ்மி, தட்சிணாமூர்த்தி, பதஞ்சலி முனிவர், நடராஜர், வியாக்ரபாத முனிவர், சந்திரன், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

பொன்னனையாள் என்னும் நாட்டிய நங்கை பொன்னால் இறைவர் உருவம் செய்ய விரும்பி, தன்னிடமிருந்த பொன் அணிகலன் முதலியவற்றை உருக்கி உருவம் செய்விக்கத் தொடங்கினாள். பொன் போதிய அளவு இல்லாததால் உருவம் பாதியளவே ஆயிற்று. இன்னும் பாதியளவு பொன் வேண்டுமே என வருந்தி இறைவனை வழிபட்டுவந்தாள். சிவபெருமான் சித்தர் உருவம் கொண்டு அவள் வீட்டையடைந்து வீட்டிலிருந்த ஈயம், செம்பு, இரும்பு முதலியவற்றைக் கொண்டு வரச் செய்து இரசவாத முறையில் பொன்னாக மாற்றி கொடுத்து உருவம் சமைக்கச் செய்தார். உருவம் மிக்க அழகிய முறையில் அமைந்தது. அவள் அப்படிமத்தின் கன்னத்தை அள்ளி முத்தமிட்டாள். முத்தநகக்குறி அடையாளம் இன்றும் இறைவர் திருமேனியில் காணலாம்.

சூரியன், நான்முகன், நாரதர், திருமால், திருமகள், நளமகாராஜன், முடியுடைய மூவேந்தர்களும் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

இத்தலத்தில் எலும்பானது மலர் அல்லது சிலையாகும் என்பது ஐதீகம். வைகை நதியிலுள்ள மணல்கள் சிவலிங் கங்களாகத் தமக்குத் தோன்றினமையால் அவற்றை மிதித்தற்கஞ்சித் தரிசித்தற்கு அக்கரையிலேயே நின்ற சம்பந்தர் முதலியோர் பொருட்டுச் சிவபெருமான் திருநந்திதேவரைச் சிறிது சாய்த்திருக்கும்படி கட்டளையிட, நந்தி அப்படியே சாய்ந்திருந்தனரென்று பெரியோர் சொல்லுகின்றனர். தற்போதும் நந்தி சாய்ந்தவாரே உள்ளது.


தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற பாண்டிய நாட்டுத்தலங்களில் இத்தலம்

11வது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பதிகங்கள் பெற்றது. கருவூர்த் தேவர் திருவிசைப்பா ஒன்றும், வடமொழி, தென்மொழி இரண்டிலும் தலபுராணங்களும், கந்தசாமிப் புலவர் இயற்றிய திருப்பூவணநாதர் உலா முதலியவைகள் இத்தலத்திற்குரியன.

கல்வெட்டுக்கள் 2 உள்ளன. பாண்டிய மன்னர்கள் காலத்தியவையாகும்.

நாள்தோறும் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. ஐப்பசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. இக்கோவில் சிவகங்கை தேவஸ்தானத்தின் மேற்பார்வையில் உள்ளது. மேலும் இவ்வூருக்கு அருகில் உள்ள கோட்டை நீலமுடிக்கரையில் அரங்கநாதபெருமாள் 36 செண்ட் நிலப்பரப்பளவில் உள்ளார்.

2. மானாமதுரை



சிவகங்கையிலிருந்து தெற்கே 18 கி.மீ. வானரமதுரை, சந்திரபட்டிணம், ஈசானய மதுரை, ஸ்தூலகர்ணாபுரி, வானவீரன்மதுரை, சிறுமதுரை. வைகையாற்றின் கரையில் இக்கோவில் 72 செண்ட் நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு சோமநாதர். அம்மன் ஆனந்தவல்லி தனிச் சன்னிதியில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் வைகை நதி.

வானரங்கள் பசியால் வாடியபோது தன்னையறியாமல் வில்வ இலையால் கீழே உள்ள இலிங்கத்தின் மீது போட்டது இதைக் கண்ட இறைவன் வானரங்களுக்கு காட்சியளித்து பசியைப் போக்கியருளினார். இதனால் இத்தலத்திற்கு வானர மதுரை எனப் பெயர் பெற்றது. தற்போது மானாமதுரை என மருவி வழங்குகிறது.

சந்திரன் தனக்கு இருந்த சாபம் நீங்க இத்தலத்திற்கு வந்து பூசித்து பேறுப் பெற்றதனால் தலத்திற்கு சந்திரபட்டணம் என்றும், ஆனந்தம் அடைந்தமையால் இங்குள்ள தேவிக்கு ஆனந்தவல்லி என்றும் பெயர் பெற்றதாக தல வரலாறு.

மாணிக்கவாசகருடன் திருவிளையாடல் நடத்திய சிவபெருமான் நரியைப் பரியாக்கிய கதைச் சம்பவத்தின் பங்கு இத்தலத்திற்கு உண்டு. மாணிக்கவாசகர் இத்தலத்தை வழிபட்டுப் பாடல்கள் இயற்றியுள்ளார். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமண்யர், நடராஜர், மகாலஷ்மி, நவக்கிரகம், பைரவர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

நாள்தோறும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. மேலும் இவ்வூர்க்கு அருகில் உள்ள நெட்டூரில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் சொர்ணவரீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. மேலும் இவ்வூரில் தியாகவிநோத பொருமாள் கோவிலும், வீரழகர் பெருமாள் கோவிலும், சுந்தரராஜ பெருமாள் கோவிலும் உள்ளன.

3. திருப்பாச்சேத்தி

திருப்பூவணத்திலிருந்து கிழக்கே 10கி.மீ. இலக்குமிபுரம், சேறை, திருப்பாச்சேற்றி. வைகையாற்றின் தென்கரையில் இக்கோவில் 51 செண்ட் நிலப்பரப்பளவில் ஒரு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு திருநோக்கும்அழகியநாதர் கிழக்கு



நோக்கியும், அம்மன் மருநோக்கும் பூங்குழலி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் லட்சுமி தீர்த்தம்.

உள்பிராகாரத்தில் வலம்புரி விநாயகர், சுப்பிரமணியர், நால்வர், நடராஜர், பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர், திருமால், லட்சுமி, நவக்கிரகம், இரண்டு வாகனங்களுடன் கூடிய பைரவர் முதலியன சன்னிதிகள் உள்ளன.

திருமகள் இத்தல இறைவனை வழிபட்டு இத்தலத்தில் பிருந்தையின் நினைவாகவே சாம்பலில் புரண்டு கிடந்த திருமாலைத் மீண்டும் சுயஉருவம் அடையச்செய்து மீண்டும் கிடைக்கப் பெற்றத் தலம். திருமால் பிருந்தையின் நினைவாகவேதான் புரண்ட சாம்பல் அனைத்தையும் துளசிச் செடியாக உற்பத்தி செய்து, அதனைத் தம்கழுத்தில் அணிந்து, ஜலந்தராசுரன் மனைவியான பிருந்தைக்கு விமோசனம் அளித்து, துளசிமாலையாக அணிந்து கொண்ட தலம்.

இக்கோவில் நளச்சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதால் மிகமிக விசேடமான தலம். மரகதலிங்கம் பூஜிக்கப்படும் மிகச் சில கோவில்களுள் இத்தலமும் ஒன்றாகும். சிறியதும், பெரியதுமான இரண்டு மரகதலிங்கங்கள் உள்ளன.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. சுவாமி சன்னிதிக்கு முன்னுள்ள அர்த்த மண்டபம் பாண்டிய நாட்டை ஆண்ட கூன்பாண்டி யனால் கட்டப்பட்டது.

சேறையென்னும் திருப்பாச்சேற்றி இலக்குமிபுர தலபுராணம் மழவாபுரி சுப்பிரமண்ய ஐயரால் 14 படலம் 380 பாடல்கள் கொண்டதாகும்.

மேலும் சைன முனிவர்கள் இயற்றிய நாலடியார் கிடைத்ததும் இத்தலத்தில்தான்.

நாள்தோறும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. நவராத்திரியில் 10 நாட்கள் உற்சவமும், தை அமாவாசை நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

பிரிந்தவரைக் கூட்டுவிக்கவும், குழந்தைப்பேறு, நீண்டகாலமாக மணமா காமல் இருப்பவர்களுக்கும், தீராத நோய் நிவர்த்திக்காவும் இத்தல இறைவனை வழிபட்டால் நிவர்த்தி கிடைக்கும்.

இக்கோவில் சிவகங்கை தேவஸ் தானத்தின் கீழ் உள்ளது.

மேலும் இவ்வூரில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மலைமண்டலபெருமாள் திருக்கோவில் உள்ளது.

4. பிரமனூர்


திருப்பூவணத்திலிருந்து தென்கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 78 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

5. மேலராங்கியம்

திருப்பூவணத்திலிருந்து தெற்கே 6கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

இளையான்குடி வட்டம்

(சிவகங்கை மாவட்டம்)



1. இளையான்குடி

பரமக்குடியிலிருந்து வடக்கே 11 கி.மீ. இவ்வூரில் இரண்டு சிவத்தலங்கள் உள்ளன. இளையான்குடியீசர் மற்றும் இராசேந்திர சோலீஸ்வரர். இவ்வூரில் 63 நாயன் மார்களில் ஒருவராக விளங்கிய இளையான்குடி மாற நாயனார் இத்தலத்தில் உழவுத் தொழில்புரியும் வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். மாற நாயனார் சிவனடியார்களுக்குத் தொண்டு புரிதலையுமே உண்மையான செல்வமெனக் கருதி அடியார்களுக்குச் சோறிடும் தொண்டில் அவர் சிறிதும் சலிப்பும், தளர்ச்சியும் கொள்ளாமல் குறைவறச் செய்துவந்தார். நாளுக்கு நாள் வறுமை வளர வளர அவர் தம் வீட்டுப் பொருள்களை விற்றும், கடன் வாங்கியும் சிவனடியார் களுக்குச் சோறிடும் திருத்தொண்டைச் செய்து வந்தார். மாறனார் திருத்தொண்டின் பெருமை இவ்வுலகத்திற்கு எடுத்துக்காட்டு வதற்காக சிவபெருமான் ஒரு சிவயோகியரைப் போலத் திருவேடம் தாங்கி மாறனாரின் இல்லத்திற்கு வந்தார். அப்போது நல்ல மழைக்காலம், நள்ளிரவுநேரம், மாறனாரின் வீட்டுக் கதவைத்தட்டினார். நாயனார் அன்போடு உள்ளே அழைத்து, மழையால் நனைந்திருக்கும் சிவயோகி யாரின் உடம்பிலுள்ள ஈரத்தை மாறனார் துடைத்து, அடியாரை அமரச் செய்தார். பிறகு அடியார் பசியார அவருக்கு இன்னமுது ஊட்ட வேண்டுமென்று ஆசை கொண்டு மாறனார் தம் மனைவியாரிடம் கேட்டபோது மனைவியார் துயரத்தோடு சாப்பிடுவதற்காக எதுவுமே இல்லை என்று வருத்தத்தோடு கூறிய அம்மையார் தம் கணவரை நோக்கி தம் வறுமை நீங்குவதற்காக இன்று பகற் பொழுதெல்லாம் வயலில் செந்நெல் விதைத்தோமே அவ்விதைகள் இப்போது சேற்றில் ஊறி முளைவிட்டிருக்கும் அவற்றை ஒரு கூடையால் வாரிக் கொண்டு வந்தால் அவற்றைக் கொண்டு கூடிய வரை சோறு சமைக்கலாம் என்று தம் மனைவி கூறியதைக் கேட்டதும் நாயனார் அவ்வாறே வயலில் விதைத்த நெல்லைக் தம் கைகளினால் ஒன்று சேர்த்து அள்ளித் கூடைகளில் நிறைய நிரப்பி, வீடு நோக்கி வேகமாக திரும்பி, அந்நெல்லை சுத்தபடுத்தி அடியாருக்கு அன்புடன் சோறு படைத்தார். சிவபெருமான் மனம் மகிழ்ந்து இடப வாகனத்தில் உமாதேவியரோடு இருவருக்கும் காட்சிதந்தருளினார். இன்றும் இவ்வூரில் மாறநாயனாரின் திருக்குடிசை, அடியார் வீட்டுத் தோப்பு, கீரைபறித்த கொல்லை, அடியார்க்கு அமுதளித்த நிலம் ஆகியனவும் உள்ளன. நாயனாரின் திருநட்சத்திரமான ஆவணி மாதத்தில் முளைவாரி அமுதளித்த விழா இத்தலத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் இவ்வூரில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மதனவேணுகோபால சுவாமி திருக்கோவில் உள்ளது.

2. விஜயன்குடி

இளையான்குடியிலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் திருக்கண்ணேஸ்வர முடையார்.

3. நாகமுகுந்தன்குடி

இளையான்குடியிலிருந்து வடமேற்கே 5 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

4. சாலைக்கிராமம்


இளையான்குடியிலிருந்து கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 29 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வரகுணேஸ்வரர், அம்மன் காமக்கோட்டீஸ்வரி.

5. எமனேஸ்வரம்

இளையான்குடியிலிருந்து தென் மேற்கே 9 கி.மீ. வைகையாற்றின் வடகரை யில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப் பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு எமனேஸ்வரர். அருகில் வரதராஜப் பெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

திருவாடானை வட்டம்

(இராமநாதபுரம் மாவட்டம்)



1. திருவாடானை

மாதோர் கூறுகந் தேறதேறிய
ஆதியானுறை யாடானை
போதினாற்புனைந் தேத்துவார்தமை
வாதியாவினை மாயுமே.

-- திருஞானசம்பந்தர்.

தேவகோட்டையிலிருந்து தென் கிழக்கே 24 கி.மீ. திருஆடானை, பாரிஜாதவனம், வன்னிவனம், குருக்கத்தி வனம், வில்வவனம், முத்திபுரம், ஆதிரத்தினேசபுரம், பதுமபுரம், அஜகஜபுரம். இக்கோவில் 10-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் கிழக்கு நோக்கிய 130 அடி உயர 9 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஆதிரத்தினேசுவரர். அம்மன் சினேகவல்லி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் சூர்ய புஷ்கரிணி மற்றும் மணிமுத்தா நதி, வருண, மார்க்கண்டேய, அகத்திய, க்ஷீரகுண்டம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன.

உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிர மணியர், சூரியன், 63 நாயன்மார்கள், தட்சிணாமூர்த்தி, வருணலிங்கம், விஸ்வ நாதர், மகாலஷ்மி, சண்டிகேசுவரர், நடராஜர், மாணிக்கவாசகர், வைரவர், சந்திரன், தண்டாயுதபாணி முதலிய சன்னிதிகள் உள்ளன.

நீலமணியால் சிவலிங்கம் தாபித்துச் சூரியன் வழிபாடாற்றிப் பேறுகள் பலவும் பெற்ற தலம். இதனால் இறைவருக்கு ஆதிரத்தினேசுவரர் என்று பெயர்.

வருணனின் மகன் வாருணி என்பவன் ஒருமுறை துர்வாச முனிவரை வணங்கா திருந்ததனால் அவனுக்கு அவரது சாபத்தினால் ஆட்டுத் தலையும், ஆனை உடலும் ஏற்பட்டது. வாருணி இத்தலத்திற்கு வந்து வழபாடு செய்து சாபம் நீங்கிப் பழமையான தன் உருவத்தை மீண்டும் அடைந்தான். வாருணி நலமுற்ற சிறப்பால் இத்தலம் ஆடானை எனப் பெயர் பெற்றது. வடமொழியில் இத்தலம் அஜகஜபுரம் என்று பெயர். சுக்கிர தோக்ஷ நிவர்த்தித் தலமாக விளங்குவது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டி நாட்டுத் தலங்களில் இத்தலம் 9 வது ஆகும். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ள தலம். தலபுராணம் திருவாரூர் சிதம்பரதேசிகர் குமாரர் சாமிநாத தேசிகர் அவர்களால் இயற்றப் பெற்றுள்ளது.

இக்கோவிலுள்ள கல்வெட்டுக்களில் திரிபுவன சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் பதினேழாம் ஆட்சி யாண்டிலும், மாறவர்மன் சுந்தரபாண்டி யனின் பதினாறாம் ஆட்சியாண்டிலும், பொறிக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுக் களும், சகம் 1557 இல் பொறிக்கப் பெற்ற ஒரு கல்வெட்டும், ஆண்டு குறிக்காத மற்றொரு கல்வெட்டுக்களுமாக மொத்தம் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகளுள் இறைவர் பெயர் ஆடானை நாயனார் என்று குறிக்கப்பெற்றுள்ளது. இறைவனுக்கு நிலம் அளித்துள்ள செய்திகளைக் குறிப்பிடுகின்றன.

நாள்தோறும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பிரமோற்சவமும், ஆடிமாதத்தில் திருக் கல்யாணி உற்சவமும் நடைபெறுகிறது. இக்கோவில் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் கீழ் உள்ளது.

2. சிறுகம்பையூர்

திருவாடானையிலிருந்து வடகிழக்கே 16கி.மீ. பாம்பாற்றின் தென்கரையில் இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரநாதர்.

3. காளிகடம்பனூர்

தொண்டியிலிருந்து வடக்கே 12கி.மீ. இக்கோவில் 63 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சர்வதீர்த்தீஸ்வரர்.

4. பள்ளூர்

திருவாடானையிலிருந்து கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜோதீஸ்வரர்.

5. கட்டிவயல்

திருவாடானையிலிருந்து கிழக்கே 14கி.மீ. அக்கலூர். இக்கோவில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

6. திருவேகம்பத்தூர்

திருவாடானையிலிருந்து மேற்கே 14கி.மீ. சருகாணியாற்றின் கரையில் இக்கோவில் 83 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஏகாம்பரநாதர்.

7. வட்டாணம்

பள்ளூர்க்கு கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

8. தளிர்மருங்கூர்

தொண்டியிலிருந்து மேற்கே 3கி.மீ. இக்கோவில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர். அருகில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உலகேஸ்வரர்.

9. தொண்டி

திருவாடானையிலிருந்து கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 49 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர். அருகில் பூதபெருமாள் கோவில் உள்ளது.

10. திருத்தேர்வாலி

திருவாடானையிலிருந்து தென்மேற்கே 15கி.மீ. சமுகாணியாற்றின் கரையில் இக்கோவிலின் மூலவர் அந்துகொண்டேசுவரர்.

11. அனந்தூர்

ராதனூரிலிருந்து தென்கிழக்கே 2கி.மீ. சருகாணியாற்றின் கரைப்பகுதியில் இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருமெய்ஞானஈஸ்வரர்.

12. ராதனூர்

திருவாடானையிலிருந்து மேற்கே 17கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தில்லைநாயகசுவாமி.

13. சாத்தனூர்

ராதனூரிலிருந்து தெற்கே 2கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலீஸ்வரர்.

14. மேலபனையூர்

திருவாடானையிலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவிலின் மூலவர் சுந்தரேசுவரர்.

15. திருவெற்றியூர்

தொண்டியிலிருந்து தென்மேற்கே 7கி.மீ. ஜெயபுரம். இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வன்மீகநாதர், பழம்புற்றுநாதர். அம்மன் பாகம்பிரியாள் தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் வாசுகி தீர்த்தம். மகாவிஷ்ணு தனக்கேற்பட்ட புற்று நோயைத் இத்தல இறைவனை வழிபட்டு, சிவபுஷ்கரிணியான வாசுகி தீர்த்தத்தில் நீராடி நீங்கப் பெற்ற தலம். இக்கோவில் சிவகங்கை சமஸ்தானத்திற்கு உட்பட்ட கோவிலாகும். இங்குள்ளவர்கள் கோவிலுக்கு ஆடு, மாடு, கோழி போன்றவற்றைக் காணிக்கையாக செலுத்துகின்றனர்.

16. இராஜசிங்கமங்கலம்


திருவாடானையிலிருந்து தெற்கே 21கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அருகில் கரிய மாணிக்கப் பெருமாள் கோவிலும் உள்ளது.

17. திருப்பாலக்குடி

இராஜசிங்கமங்கலத்திலிருந்து தென்கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு மந்திரநாதர்.

இராமநாதபுரம் வட்டம்

(இராமநாதபுரம் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திருஉத்தரகோசமங்கை

கடையவ னேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்டாய் விறல் வேங்கையின்றோ
லுடையவ னேமன்னு முத்தரகோச மங்கைக் கரசே
சடையவனே தளர்ந் தேனெம் பிரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

-- மாணிக்கவாசகர்.



இராமநாதபுரத்திலிருந்து தென்மேற்கே 15கி.மீ. மங்களபுரி, சாத்துவீகத்தானம், ஆதிசிதம்பரம், வைதிரிகாரணியம், பார்ப்பதி புரம், சித்தகேந்திரம், பிரதிகோசபுரம், சதுர்வேதபுரி, கல்யாணபுரம், பிரமபுரம், வியாக்கிரபுரம், தெக்கணகாசி என 12 பெயர்கள் கொண்ட இக்கோவில் 7-19 ஏக்கர் நிலப்பரப்பளவில் (518×592 அடி) கிழக்கு நோக்கிய 120அடி உயர 7 நிலை இராஜகோபுரமும், அம்மன் சன்னிதிக்கு நேராக 64 அடி உயர 5 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு மங்களநாதர். அம்மன் மங்களேசுவரியம்மை. தலவிருட்சம் இலந்தை. தீர்த்தம் அக்கினி, பிரம, இந்திர, சார்வதி, கௌமார, பதும, சீதள, தேவி, அரித்துவச கூபம் என ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன.

சிவபெருமான் பார்வதிதேவிக்கு வேதாகமங்களின் ரகசியங்களை உபதேசம் செய்ததால் இத்திருத்தலத்திற்கு உத்தரகோச மங்கை எனப்பெயர் பெற்றது. பல்லாயிரம் முனிவர்கள் தவம்புரிந்த இடம். ஜோதியாக வழிபட்ட தலம். இம்முனிவருள் ஒருவரே மாணிக்கவாசகராக அவதரித்த தலம். ஆலயத்தின் வடகிழக்கில் உள்ள அக்னி தீர்த்தக் கரையில் மாணிக்கவாசகருக்கு தனியாக ஒரு சிறு கோவில் உள்ளது.

மாணிக்கவாசகரின் பாடல் பெற்ற இத்திருத்தலம் திருவாசகத்தில் 38 இடங்களில் புகழப்பெற்றுள்ளது.

இத்திருத்தலத்தின் சிறப்பு வேறெங் குமே காண முடியாத 6 அடி உயரத்தில் மரகத நடராஜர் உள்ளார். ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பு அலங்காரத்தில் காட்சியளிப்பார். மார்கழி திருவாதிரை அன்று ஒரு நாள் மட்டும் அபிஷேகம் நடைபெறுகிறது.

இத்தலத்தில் சனீஸ்வரர் மட்டுமே காட்சியளிக்கிறார். பிறகிரகங்கள் இக்கோவி லில் இடம் பெறவில்லை.

மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், பரஞ்சோதி முனிவர், தலபுராணம் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ மாசிலாமணி ஞானசங்கர பரமாச்சாரிய தேசிகரின் காலத்துத் தம்பிரான் ஒருவர் புராணத்தை இயற்றியுள்ளார்.

இக்கோவிலைப் பிற்காலப் பாண்டிய மன்னர்களும், சேதுபதி மன்னர்களும் பேணியுள்ளார்கள் தற்போது இராமநாதபுரம் சமஸ்தானத்தின் மேற்பார்வையில் உள்ளது.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரையில் பிரமோற்சவ மும், வைகாசி மாதத்தில் திருக்கல்யாணம் உற்சவமும் நடைபெறுகிறது.

2. இராமநாதபுரம்

பரமக்குடியிலிருந்து தென்கிழக்கே 44கி.மீ. லஷ்மிபுரம். வைகையாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். அருகில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோவிலும், 52 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் முத்துராமலிங்கசுவாமி திருக்கோவிலும் உள்ளன. மேலும் இவ்வூரில் 71 செண்ட் நிலப்பரப்பளவில் கோதண்ட ராமசுவாமி திருக்கோவில் உள்ளது.

3. தேவிபட்டிணம்

இராமநாதபுரத்திலிருந்து வடக்கே 16கி.மீ. நவபாஷாணம். இக்கோவில் 85×136 அடி நீளம், அகலம் கொண்டு மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு திலகேசர். அம்மன் சௌந்தரநாயகி. தீர்த்தம் சக்கர தீர்த்தம், நவபாஷாண தீர்த்தம்.

சக்கர தீர்த்தத்தில் மகிடாசூரன் ஒளிந்திருந்தபோது அசரீவாக்கால் தேவி தெரிந்து கொண்டு மகிடாசூரனைச் சங்கரித்ததினால் இத்தலத்திற்கு தேவிப் பட்டணம் என்று பெயர்.

இத்தலத்தில் இராமர் நவக்கிரகப் பிரதிட்டை செய்து திலகேசுவரரையும் பூஜீத்தார். இராமர் நிறுவிய ஒன்பது நவக்கிரகங்கள் கடலில் இருக்கின்றன. காலை 12 மணிவரையில் நவக்கிரக கற்கல் கடலில் தெரியும். நவக்கிரக பூஜை செய்வது இங்கு விசேஷம்.

வருணன் இத்தல இறைவனை வணங்கி பேறு பெற்ற தலம். இக்கோவிலில் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு உட்பட்ட கோவிலாகும். அருகில் பெருமாள் கோவில் உலகநாயகி கோவில்கள் உள்ளன.

4. பெருவயல்

தேவிபட்டிணத்திலிருந்து தென்மேற்கே 6 கி.மீ. இக்கோவில் இராஜகோபுரம், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு பெருவயல்நாதர் அம்மன் பார்வதிதேவி.

5. கீழக்கரை

இராமநாதபுரத்திலிருந்து தெற்கே 15கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு நாகநாதர். அருகில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர் திருக்கோவிலும் உள்ளது.

வரகுண பாண்டியன் கட்டுவித்த கோவில். மேலும் இவ்வூரில் காளியம்மன், முருகன், மாரியம்மன் கோவில்களும் உள்ளன.

அபிஷேகப் பொருள்களும் அவற்றின் பயனும்

எண்ணெய் - சுகம், மாப்பொடி - கடன்தீரல், நெல்லி முள்ளி - நோய்நீக்கம், மஞ்சட்பொடி - வசீகரம், பஞ்சகவ்வியம் - தூய்மை, பஞ்சாமிர்தம் - ஜயம், தேன் - சுகம், கரும்பின்சாறு - பிணிநீக்கம், வாழைப்பழம் - பயிர் விளைவு, எலுமிச்சை முதலியன - எமபயம் போக்கல், இளநீர் - போகம், சந்தனம், பன்னீர் - லட்சுமிகரம், கும்பம் - குற்றங்கள் தீரல்.


அட்டமங்கலம்

எட்டுவகை மங்கல பொருள்கள்:

கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல்.

இராமேஸ்வரம் வட்டம்

(இராமநாதபுரம் மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

இராமேச்சுரம்

அலைவளர் தண்மதி யோடய லேஅடக் கியுமை
முலைவளர் பாகமு யங்கவல் லமுதல் வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகா னல்இரா மேச்சுரம்
தலைவளர் கோலநன் மாலையன் தானிருந் தாட்சியே

-- திருஞானசம்பந்தர்.

இராமநாதபுரத்திலிருந்து கிழக்கே 52கி.மீ. தொலைவில் தனித்தீவில் இக்கோவில் 15-50 ஏக்கர் நிலப்பரப் பளவில் கிழக்கு நோக்கிய 9 நிலை 126அடிஉயரம் கொண்ட இராஜகோபுரமும், மேற்கு நோக்கிய 5 நிலை 78 அடி உயர கோபுரமும், 117×172, 244×352, 400×640, 657×865 என முதல், இரண்டு, மூன்று, நான்கு பிராகாரங்களுடன் மூலவர் அருள்மிகு இராமநாதசுவாமி. அம்மன் பர்வதவர்த்தினியம்மை. சுவாமி, அம்மன் கிழக்கு நோக்கியே காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் அக்கினி தீர்த்தமும், கோடி தீர்த்தமும், தனுஷ் கோடியும் மிக்க சிறப்புடையவையாகும். மூர்த்தி,தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புடைய தலம்.

இராவணனைக் கொன்ற கொலைப்பழி தீர இராமர் சிவபெருமானை எழுந் தருளிவித்து வழிபட்ட கோவில் ஆதலால் இராமேச்சுரம் எனப்பெற்றது. ஊர்ப் பெயர் சேது எனவும், கோவிற்பெயர் இராமேச்சுரம் எனவும் வழங்கப் பெற்றுப் பிற்காலத்தில் கோவில் பெயரே ஊர்ப்பெயராக மக்கள் வழக்கில் இடம் பெற்றுள்ளது.

இத்தலம் பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களில் ஒன்றாகும்.

கோவிலுக்கு எதிரே அக்னி தீர்த்தம் (கடல்) உள்ளது. கோவிலுக்குள்ளும், வெளி யிலேயும் என 64 தீர்த்தங்கள் உள்ளன.

சீதாதேவியாரால் தம் கணவர் பொருட்டு மணலால் செய்விக்கப்பெற்றவர். இராமநாதர் பக்கத்தில் அனுமனால் கொண்டு வரப்பெற்று தாபிக்கப்பட்ட விசுவநாதர் உள்ளார்.

காசிக்கு செல்வோர் இங்கு வந்து நீராடி கோடி தீர்த்தத்தைக் கொண்டு சென்று காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் புரிவர். அதேபோல் இராமேச்சுரம் வருவோர் கங்கை நீரைக் கொண்டு வந்து இராமநாதருக்கு அபிஷேகம் செய்விப்பர்.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டிவள நாட்டுத் தலங்களில் இத்தலம் எட்டாவதாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகங்கள் பெற்றது. சுந்தரரும் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ள தலம். தாயுமானசுவாமிகள் அம்மன் பேரில் பதிகம் பாடியுள்ளார். நிரம்ப அழகிய தேசிகர் சேது தலபுராணம் பாடியுள்ளார்.


கந்தமாதனம் என்னும் இடம் வடக்கே 5 கி.மீ. தூரத்திலுள்ளது. தெற்கே 18 கி.மீ. தூரத்தில் தனுஷ்கோடி தீர்த்தகட்டம் உள்ளது. இங்குதான் சேது தீர்த்தமாடுதல் வேண்டும்.

இக்கோவிலில் பாண்டிய மன்னர்களில் வீரபாண்டிய தேவன், திரிபுவனச் சக்ரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன் இவர்கள் காலங்களிலும், விசயநகர மன்னர்களில் விசுவநாத நாயக்கர், வீரப்ப நாயக்கர் காலங்களிலும், வீரபூபதி காலத்தில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் பல உள்ளன.

நாள்தோறும் ஆறு கால பூஜை நடத்தப்படுகிறது. ஆனி, ஆடி, மாசி மாதங்களில் முக்கியமான உற்சவங்கள் நடைபெறுகின்றன.

பரமக்குடி வட்டம்

(இராமநாதபுரம் மாவட்டம்)



1. நயினார்கோவில்

பரமக்குடியிலிருந்து கிழக்கே 12 கி.மீ. திருமருதூர். வைகையாற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-64 ஏக்கர் நிலப்பரப்பளவில் 45 அடி உயர இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு நாகநாதர் மேற்கு நோக்கியும், அம்மன் சௌந்தரநாயகி தெற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தல விருட்சம் மருதமரம். தீர்த்தம் வாசுகி தீர்த்தம் கோவிலுக்கு எதிரில் அமைந்துள்ளது. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்ரமணி யர், நடராஜர், சனீஸ்வரர், பைரவர், சந்திரன், சூரியன், 63 நாயன்மார்கள், சோமாஸ்கந்தர், சௌந்தரராஜ பெருமாள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

திரிசங்குவிற்கு உதவ மறுத்த ஆயிரம் முனிவர்கள் விசுவாமித்திரரால் சாபம் பெற்றனர். இத்தலத்தில் வழிபட்ட முனிவர்கள் சாபவிமோசனமும், ஞானோப தேசமும் பெற்றனர். மாணிபத்திரன் என்னும் கந்தர்வன் இத்தல இறைவன் அருளால் மனக்குழப்பம் நீங்கி அமைதி பெற்றான். புலிக்கு அஞ்சிட வேடனொருவன் வில்வ மரத்தின் மேலேறிப் பிழைத்தான் என்றும் புலி விருஷபமானதாகவும் ஐதிஹ்யம்.

மங்கள தீர்த்தம் கோவிலில் உள்ளே அமைந்துள்ளது. கோவிலுக்கு வெளியே நாகர் கோவில் உள்ளது. இத்தலத்திற்கு தலபுராணம் சிற்றம்பல கவிராயர் மருதவனப் புராணம் இயற்றியுள்ளார்.

நாள்தோறும் ஆறு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசியில் பிரமோற்ச வமும், தைப்பூசத்தில் வைகையாற்றில் தீர்த்தவாரியும் நடைபெறுகிறது. இவ்வா லயம் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் மேற்பார்வையில் உள்ளது.

2. பரமக்குடி

மானாமதுரையிலிருந்து தென்கிழக்கே 27கி.மீ. வைகையாற்றின் தென்கரையில் இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு சந்திரசேகரசுவாமி. அம்மன் விசாலாட்சியம்மை. இரண்டு கால பூஜை. சித்திரைமாதத்தில் பிரமோற்சவம். அருகில் 91 செண்ட் நிலப்பரப்பளவில் சுந்தரேஸ்வரர் திருக்கோவிலும், 37 செண்ட் நிலப்பரப்பளவில் சுந்தரராஜ பெருமாள் கோவிலும், 19 செண்ட் நிலப்பரப்பளவில் கோதண்டராமசுவாமி கோவிலும் இவ்வூரில் உள்ளது.

3. மேலபார்த்திபனூர்

பரமக்குடியிலிருந்து மேற்கே 17கி.மீ. பொறையாற்றின் கரையில் இக்கோவில் 21 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அம்மன் விசாலாட்சி. அருகில் 73 செண்ட் நிலப்பரப்பளவில் சொக்கநாதர் திருக்கோவில் உள்ளது. மேலும் இவ்வூரில் 31 செண்ட் நிலப்பரப்பளவில் வேணு கோபாலசுவாமி திருக்கோவிலும், அழகிய மணவாளப் பெருமாள் கோவிலும் அமைந்துள்ளது.

4. கொழுவூர்

நயினார்கோவிலிருந்து கிழக்கே 8கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகநாதர்.

5. உரபுளி

பரமக்குடியிலிருந்து கிழக்கே 5கி.மீ. வைகையாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

6. போகளூர்


பரமக்குடியிலிருந்து தென்கிழக்கே 20கி.மீ. இக்கோவில் 29 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

7. அரியகுடிபுத்தூர்

பரமக்குடியிலிருந்து தென்கிழக்கே 17கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுந்தரபாண்டீஸ்வரர்.

முதுகுளத்தூர் வட்டம்

(இராமநாதபுரம் மாவட்டம்)



1. திருமாலுகந்தன்கோட்டை

சாயல்குடியிலிருந்து வடமேற்கே 14கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு செஞ்சடைநாதர். அம்மன் கருணாகடாச்சியம்மை. திருமால் வழிபட்டு பேறு பெற்ற தலம். இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி விசாகம், பங்குனி உத்திரத்தன்று உற்சவம் நடைபெறுகிறது. இராமநாதபுரம் சமஸ்தானத்தின் மேற்பார்வையில் உள்ளது.

2. சாயல்குடி

முதுகுளத்தூரிலிருந்து தெற்கே 25கி.மீ. குண்டாற்றின் கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

3. மாரியூர்

சாயல்குடியிலிருந்து கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பூவேந்திரநாதர், அம்மன் பவளநிறவள்ளி யம்மன். துர்மகேந்த முனிவர், வருண பகவான் வழிபட்ட தலம்.

ஒரு கன்னிப்பெண்ணின் சாபத்தால் இவ்வூரை மணற்புயல் தாக்கி இவ்வூரை மணலாக மூடப்பட்டதால் இவ்வூர் மாரியூர் என்று பெயர் பெற்றதாக கூறுவர்.


4. மணலூர்

முதுகுளத்தூரிலிருந்து வடமேற்கே 10கி.மீ. குண்டாற்றின் கரையில் இக்கோவில் 2-12 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகத்தீஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

கமுதி வட்டம்

(இராமநாதபுரம் மாவட்டம்)



1. கமுதி

முதுகுளத்தூரிலிருந்து மேற்கே 18கி.மீ. குண்டாற்றின் கரையில் இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு சுந்தரேஸ்வரர்.

2. தாரைக்குடி

கமுதியிலிருந்து வடகிழக்கே 11கி.மீ. இக்கோவில் 34 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு தாரணேஸ்வரர்.


3. மண்டலமாணிக்கம்

கமுதியிலிருந்து வடக்கே 4 கி.மீ. குண்டாற்றின் கரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

திருச்சிற்றம்பலம்

திருச்சுழி வட்டம்

(விருதுநகர் மாவட்டம்)




திருச்சிற்றம்பலம்

1. திருச்சுழி

ஊனாய் உயிர்புகலாய் அகல்இடமாய் முகில்பொழியும்
வானாய் வருவம்மதியாய் விதிவருவான் இடம்பொழிலின்
தேனா தரித்திசைவண் டினம்மிழற்றும் திருச்சுழியல்
நானா விதம்நினைவார் தமைநலியார் நமன்தமரே

-- சுந்தரர்.



மதுரையிலிருந்து தெற்கே 48 கி.மீ. திருச்சுழியல், பரிதிகுடிநாடு, சுழிகை, சுழிகாபுரி, முத்திபுரம், சூலபுரம், வயலூர், அரசவனம். கௌண்டிண்ய நதிக்கரையில் இக்கோவில் 43,500 ச.அடி நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 40 அடி உயர இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருமேனிநாதர். அம்மன் துணைமாலைநாயகி. தலவிருட்சம் புன்னை மரம். தீர்த்தம் கௌவைக்கடல் (ஒலிப்புணரி) கோவிலில் சுவாமி சன்னிதிக்குக் கிழக்கே எதிரில் உள்ளது. தலவிநாயக மூர்த்திகள் வேலடி விநாயகர், தருமதாவரப் பிள்ளையார், போதி விநாயகர், உள்பிராகாரத்தில் சுப்பிரமணியர், பிரளய விடங்கர், பழனியாண்டவர், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றோர் பராக்கிரமவழுதி, இந்திரத்யும்ன பாண்டியன், சுந்தரசேன பாண்டியன், கௌதம முனிவர், கண்ணுவர், காலவர், சதாநந்தர், பூமிதேவி, பரிதி, மன்மதன், சித்ரத்வசன், சித்ரரூபன் என்னும் இரு கந்தர்வர்கள், கிருதாந்தகன் என்னும் அசுரன், மலைநாட்டு அரசன் ஏமரதன் மகள் மாலினி என்பாள் வேதாள சங்கை நீங்கப் பெற்றாள், சோம சீதளன் என்னும் மாளவ தேசத்து அரசன் வெண்குட்டரோகம் நீங்கப் பெற்றான் எனத் இத்தலப் புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பூமிதேவி பூசித்ததால் இத்தல சுவாமி பூமிநாதர் எனப்படுகிறார்.

இத்தலத்தில் கிழக்கே கண்ணுவ தீர்த்தமும், மேற்கே பன்னக சயிலம், வடக்கே காலவ தீர்த்தமும், தெற்கே கோபிதார்வன தீர்த்தமும் இத்திருச்சுழியில் எல்லைகளாக அமைந்துள்ளதலம்.

இத்தலத்தில் உள்ள அஷ்டலிங்கங்களாவன வெள்ளியம்பலநாதர், சோமசேகரர், கௌண்டிண்யலிங்கம், காலவலிங்கம், கண்ணுவலிங்கம், காமீச்சுரலிங்கம், கிருதாந்தகேச்சுரலிங்கம், தினகரேச்சுரலிங்கம் என எட்டுலிங்கங்கள் சுற்றி அமைந்துள்ளன.

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற பாண்டிய நாட்டுத் தலங்களில் இத்தலம் 12 வது. சுந்தரர் அருளிய பதிகம் பெற்றது. சேரமான் பெருமாளுடன் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தரிசித்து, சுவாமிகளது "ஊனாயுயிர்" என்னும் தேவாரத்திருப்பதிகம் பெற்ற தலம். திருச்சுழியில் புராணம் திருச்சுழி ஸ்ரீ ஆராவமுதாச்சாரியார் இயற்றியதாகும். திருச்சுழியில் வெண்பா, கொம்பிலா வெண்பா அந்தாதி, குரவைப்பாட்டு, பள்ளு, துணைமாலை

அம்மைப் பிள்ளைத்தமிழ் என மற்ற நூல்களும் இத்தலத்திற்குள்ளன.

ஸ்ரீ ரமணாஸ்ரமத்தை ஸ்தாபித்த ஸ்ரீ ரமணமகரிஷி பிறந்து வளர்ந்து, படித்தது இத்திருச்சுழியல் ஆகும். அவர் பிறந்த வீடு ஒரு புனித யாத்திரைத் தலமாக உள்ளது.

கல்வெட்டுக்களில் இராஜகேசரி வர்மன், விஜயமுத்து சொக்கநாத நாயக்கர், காலங்களில் நிலம் இனாமாகக் கொடுத்திருப்பதைக் குறிக்கின்றன.

இக்கோவிலில் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. ஆடியில் அம்மன் தபஸ், தைப்பூசம், பங்குனியில் பிரமோற்சவமும், திருக்கல்யாணமும் நடைபெறுகிறது.

2. கல்லுமடை

வாகைகுளத்திலிருந்து மேற்கே 10கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருநாகேஸ்வரமுடையார்.

3. வாகைகுளம்

நரிகுடியிலிருந்து வடக்கே 12 கி.மீ. கிரிதமால்நதிக்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் பாதாளீஸ்வரர்.

4. நரிகுடி

திருச்சுழியிலிருந்து வடகிழக்கே 15கி.மீ. கிரிதமால் நதிக்கரையில் இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு விருப்பாட்சிநாதர்.

5. விடதகுளம்

திருச்சுழியிலிருந்து வடகிழக்கே 11கி.மீ. இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

6. வீரசோழம்

நரிகுடியிலிருந்து தென்கிழக்கே 6கி.மீ. கிரிதமால்நதிக்கரையில் இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அருகில் ஹரிசக்கரப் பெருமாள் கோவில் உள்ளது.

7. பள்ளிமடம்


திருச்சுழிக்கு கிழக்கே ஒரு கி.மீ. குண்டாற்றின் கரையில் இக்கோவில் 28 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

இலிங்க பேதங்களும், பலன்களும்

ஸ்படிக மயமான இலிங்கமானது, சௌமிய பாவத்தை (மனச் சாந்தியை) அளிப்பதாகும். பிதிருக்களின் முக்தியை உத்தேசித்து ரஜத (வெள்ளி) இலிங்கத்தைப் பூசிக்கவேண்டும். சுவர்க்கலோகத்தையடைய விரும்புகிறவன் சுவர்ண இலிங்கத்தைப் (தங்க இலிங்கம்) பூசிக்க வேண்டும். புஷ்டியை விரும்புகிறவன் பித்தளை, தாமிர இலிங்கத்தைப் பூசிக்க வேண்டும். கீர்த்தியை விரும்புகிறவன் எப்பொழுதும் காம்ஸ்ய (வெண்கலம்) இலிங்கத்தைப் பூசிக்க வேண்டும். ஆயுளை விரும்புகின்றவர் செஞ்சந்தனத்தினாலே செய்யப்பட்ட இலிங்கத்தைப் பூசிக்க வேண்டும். கஸ்தூரியிலே கல்பிக்கப்பட்ட இலிங்கத்தைப் பூசிப்பவன் கிரந்தத்தைச் செய்வான். குங்குமப் பூவினாலே இலிங்கத்தை அமைத்து வழிபட்டால் சரீர காந்தி கிடைக்கும். கருங்காலியினாலே செய்யப்பட்ட இலிங்கமானது சர்வாபீஷ்டங்களையும் அளிக்கும். கோதுமை மாவினால் செய்யப்பட்ட இலிங்கத்தை பூசிப்பவன் பசுச்செல்வத்தை அடைவான். எந்த விதத்தினாலேயாவது ஏதாவது ஒரு பொருளினாலே செய்யப்பட்ட இலிங்கத்தைப் பூசிப்பவர் பரமேசுவர பரிவார கணங்களில் ஒருவனெனும் தன்மையை அடைவர்.

அருப்புக்கோட்டை வட்டம்

(விருதுநகர் மாவட்டம்)



1. அருப்புக்கோட்டை

விருதுநகரிலிருந்து தென்கிழக்கே 19கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு அமிர்தலிங்கேஸ்வரர். அருகில் 39 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர். மேலும் இவ்வூரில் நவநீத கிருஷ்ணன் கோவிலும், சொக்கலிங்க புரத்தில் பட்டாபிராமர், பாண்டுரங்கர் கோவிலும் உள்ளன. இவ்வூருக்கு வடக்கே சிறிது தொலைவில் உள்ள பாளையம் பட்டியில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர் கோவிலும், 1-54 ஏக்கர் நிலப்பரப்பளவில் வேணுகோபால சுவாமி பெருமாள் கோவிலும் உள்ளன.

2. கம்பைக்குடி

அருப்புக்கோட்டையிலிருந்து வடக்கே 25 கி.மீ. இக்கோவில் 7 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு சுந்தரேஸ்வரர். மேலும் இவ்வூரில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் வேணுகோபாலசுவாமி திருக்கோவிலும் உள்ளது.

3. முடுக்கன்குளம்

கம்பைக்குடியிலிருந்து கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அம்பலவாணர்.

4. சூரனூர்


கம்பைக்குடியிலிருந்து தென்கிழக்கே 12 கி.மீ. இக்கோவில் 96 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

5. பலவநத்தம்

அருப்புக்கோட்டையிலிருந்து வடமேற்கே 9 கி.மீ. இக்கோவில் 53 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

சாத்தூர் வட்டம்

(விருதுநகர் மாவட்டம்)



1. சாத்தூர்

விருதுநகரிலிருந்து தெற்கே 26 கி.மீ. வைப்பாற்றின் கரையில் இக்கோவில் 26 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர். அருகில் வெங்கடாசலபதி கோவில் உள்ளது.

2. திருத்தங்கல்

சிவகாசியிலிருந்து வடக்கே 3 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கருநெல்லிநாதர். இக்கோவில் தி.மு.5000 வருட முற்பட்ட கோவிலாகும். அருகில் சிறிய குன்றின் மீது அமைந்த தண்டாயுதபாணிக் கோலத்தில் முருகப் பெருமான் காட்சியளிக்கிறார். அருகில் 5-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் உள்ள நின்ற நாராயணப்பெருமாள் காட்சியளிக்கிறார்.

3. சிவகாசி

சாத்தூரிலிருந்து வடமேற்கே 19 கி.மீ. இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். அருகில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் வெங்கடாசலபதி திருக்கோவிலும் உள்ளது.

4. குல்லாபட்டி

சாத்தூரிலிருந்து கிழக்கே 3 கி.மீ. வைப்பாற்றின் கரையில் இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கநாதர்.

5. வெம்பக்கோட்டை


சிவகாசியிலிருந்து தெற்கே 15 கி.மீ. வைப்பாற்றின் கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

6. செவ்வல்பட்டி

வெம்பக்கோட்டையிலிருந்து தென்மேற்கே 6 கி.மீ. வைப்பாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்

(விருதுநகர் மாவட்டம்)



1. ஸ்ரீவில்லிபுத்தூர்

மதுரையிலிருந்து தென்மேற்கே 75கி.மீ. மடவார்வளாகம், புதுவை. இக்கோவில் 12-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 134 அடி உயர 9 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வைத்தியநாதர். அம்மன் மனோன்மணியம்மை. தலமரம் வன்னிமரம். தீர்த்தம் சிவகங்கை, ஏமதீர்த்தம் உள்பிராகாரத்தில் கன்னிவிநாயகர், ஆறுமுகர், 63 நாயன்மார்கள், இராமநாதர், வயிரவர், துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

நாட்டிய மங்கையர் இருவர், புதுவை நாயகனை ஆடிப்பாடி மகிழ்வித்தனர். அது சமயம் இறைவன் அர்ச்சகர் போல் வந்து, அவர்களை அர்ச்சகர் வீட்டில் சேர்த்து, உணவிற்கு ஏற்பாடு செய்தார். அர்ச்சகர் இதனை அறிந்து இறைவனை வாழ்த்தினார். இறைவன் அரசனின் கனவில் தோன்றி, அப்பெண்களுக்கு ஆடையணிகள், பொன்தந்து, வீடு கட்டித்தர ஆணையிட்டார். அரசனும் அவ்வாறே செய்து முடித்ததால் அன்று முதல் மடவார்கள் (பெண்கள்) வாழும் வளாகம் (இடம்) ஆதலால் அன்று முதல் இறைவனின் கட்டளைப்படி மடவார் வளாகம் என்று பெயர் பெற்றது.

இறைவனின் திருவிளையாடல்களில் 24 திருவிளையாடல்கள் இத்தலத்திலேயே நடைப்பெற்றதாகக் கூறப்படுகிறது.

சூரியன் இத்தலத்திற்கு வந்து தனது அமுதவிந்துவினாலேயே முழுக்காட்டிப் பூசித்தான். அமுதவிந்து வன்னிமரங்களாகி, அதன் கீழே பெருமான் எழுந்தருளி சூரியனுக்கு காட்சியளித்த தலம்.

மலையடியிலிருந்த வலையர் தலைவன் தெக்கன் கண்ணிழந்து, சிவகங்கை தீர்த்தத்தில் முழுகி ஒரு கண்பெற்றான். சிவராத்திரியன்று இறைவன் நந்தியைக் கொண்டு அவனைப் பிரம்பாலடித்து, மற்றொரு கண்ணையும் அருளியதாக வரலாறு கூறுகிறது.

அம்மன் சன்னிதி முன்பு அமைந்துள்ள நாடகசாலை என்ற பெரிய மண்டபம், திருமலை நாயக்கர் வயிற்று நோயினால் துன்புற்று இத்தலத்திற்கு வந்து இறைவன் அருளால் குணமானவுடன், மதுரை மண்டபம் போல் கட்டியமைத்ததாகக் கூறப்படுகிறது.

தக்கன் சாபத்தால் சயநோய் பெற்ற சந்திரன் இத்தலத்தில் தவம் இருந்து இறைவன் அருள்பெற்று வளரவும், தேயவும் ஆனான். இறைவன் சந்திரனைப் பாதுகாத்து தன் முடியில் அணிந்தார்.

தினமும் ஆறுகால பூஜையும், வருடத்தில் வைகாசி பிரமோற்சவம் நடைபெறுகிறது. இவ்வூருக்கு அருகில் ஸ்ரீ ஆண்டாள் வடபத்ரசாயி திருக்கோவில்களும், 24 செண்ட் நிலப்பரப்பளவில் கைலாசசுந்தரேஸ்வரர் திருக்கோவிலும் அருகருகே அமைந்துள்ளன.

2. வாட்ரப்

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வடக்கே 16கி.மீ. இக்கோவில் 45 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். இவ்வூரில் 9 செண்ட் நிலப்பரப்பளவில் சேதுநாராயணப் பெருமாள் கோவிலும், அழகிய மணவாளப் பெருமாள் கோவிலும் அமைந்துள்ளது.

3. கோட்டையூர்


வாட்ரப்பிலிருந்து கிழக்கே 7 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு உதயகிரிநாதர்.

4. மூவரைவென்றான்

குன்னூருக்கு வடக்கே 3 கி.மீ. அர்சுனாநதிக்கு தென்பகுதியில் இக்கோவில் 22 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மலைக்கொழுந்தீசர். அருகில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேசர்.

இராஜபாளையம் வட்டம்

(விருதுநகர் மாவட்டம்)



1. இராஜபாளையம்

ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து தென் மேற்கே 11 கி.மீ. காயாகுடியாற்றின் கரையில் இக்கோவில் 46 செண்ட் நிலப்பரப்பளவில் கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் மயூரநாதர் கிழக்கு நோக்கியும், அம்மன் அஞ்சல்நாயகி கிழக்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். தீர்த்தம் அழகுதேவன் தலவிருட்சம் வில்வம்.

இக்கோவிலை விஜயரங்கசொக்கநாதர் காலத்தில் கட்டப் பெற்ற கோவிலாகும். நாள்தோறும் 5 கால பூஜை. ஆனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரில் 41 செண்ட் நிலப்பரப்பளவில் கோதண்டராமசாமி திருக்கோவிலும், அருகில் உள்ள புதுப் பாளையத்தில் 10 செண்ட் நிலப்பரப் பளவில் வேட்டைவெங்கடேச பெருமாள் என்னும் குலபெருமாள் கோவிலும் உள்ளது.

2. சோழபுரம்

இராஜபாளையத்திலிருந்து தெற்கே 10கி.மீ. சீவலப்பேரியாற்றின் வடகரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு விக்கிரமபாண்டீஸ்வரர், அம்மன் குழல்வாய் மொழியம்மன்.

3. இலந்திரைக்கொண்டான்

சோழபுரத்திலிருந்து மேற்கே 4 கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காளத்தீஸ்வரர். அருகில் லஷ்மி நாராயணப் பெருமாள் திருக்கோவிலும் உள்ளது.

4. சைத்தூர்

இராஜபாளையத்திலிருந்து தென் மேற்கே 10 கி.மீ. இக்கோவில் 47 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு திருக்கண்ணேஸ்வரர்.

5. தெற்கு தேவதானம்

சைத்தூரிலிருந்து தெற்கே 3 கி.மீ. இக்கோவில் 1-54 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு நாசடைத்த விருத்தலிங்கேஸ்வரர்.

6. நத்தம்பட்டி

இராஜபாளையத்திலிருந்து தெற்கே 13கி.மீ. சீவலப்பேரியாற்றின் கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அருகில் வரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது.

ஐந்தெழுத்து

பஞ்சாக்கர மந்திரம், 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரம் :

தமிழின் சிறப்பெழுத்துகளான எ, ஒ, ழ, ற, ன என்னும் ஐந்தெழுத்துகள்.

ஐந்தொழில்


இறைவனின் ஐந்து தொழில்கள் :

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

திருவிளக்கு

'கோவில் விளங்கக் குடிவிளங்கும்' என்பது பழமொழி. திருக் கோவிலுக்குச் செல்வோர் தம்மால் இயன்ற பூஜைப் பொருள்களை உதவுதல் சிறந்த சிவபுண்ணி யத்தைத்தரும். அவற்றுள் திருவிளக்கு இடுதல் மேலான ஞானத்தை அளிக்கும். ''விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினுல் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டிபோல்வார்'' இறைவர் எனவும், ''விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்'' எனவும் தேவாரத் திருமுறை கூறுகிறது.

சிவகிரி வட்டம்
(திருநெல்வேலி மாவட்டம்)



1. சிவகிரி

புளியங்குடியிலிருந்து வடக்கே 19 கி.மீ. வைப்பாற்றின் தென்கரைப் பகுதியில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு திருபுராந்தகர் அருகில் திருநீலகண்டர் திருக்கோவிலும் உள்ளது.

2. வாசுதேவநல்லூர்

சிவகிரியிலிருந்து தெற்கே 12 கி.மீ. கருப்பையாற்றின் கரையில் இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சிந்தாமணிநாதர். இக்கோவிலை குலசேகர பாண்டியனால் திருப்பணி செய்யப் பெற்றதாக கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. நாள்தோறும் ஆறு கால பூஜை. ஆனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. தாருகாபுரம்

வாசுதேவநல்லூரிலிருந்து தென்கிழக்கே 4 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு மத்தியஸ்தநாதர். இக்கோவில் தி.மு. 100 வருட முற்பட்ட கோவிலாகும்.

4. புளியங்குடி


வாசுதேவநல்லூரிலிருந்து தெற்கே 6கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர். அருகில் மற்றொரு கோவிலான 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அகஸ்தீஸ்வரர்.

5. மலையடிகுறிச்சி

புளியங்குடியிலிருந்து கிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

சங்கரன்கோவில் வட்டம்

(திருநெல்வேலி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. சங்கரன்கோவில்

திருநெல்வேலியிலிருந்து வடமேற்கே 51 கி.மீ. சங்கரநாராயணர் கோவில், ஸ்ரீராஜபுரம், இராசை, சீராசை, வரராசை, கூழை நகர், புன்னைவனம், நாகவனம். இக்கோவில் 4-16 ஏக்கர் நிலப்பரப்பளவில் கிழக்கு மேற்காக 592 அடி நீளமும், வடக்கு தெற்காக 306 அடி அகலமும், கிழக்கு நோக்கிய 125 அடி உயர 9 நிலை இராஜகோபுரமும், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு சங்கரலிங்கர். அம்மன் கோமதியம்மை தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கியும், சுவாமி அம்மன் சன்னிதிகளுக்கு இடையில் சங்கர நாராயணர் கோவிலும் என மூன்று பெரும் பகுதிகளாக அமைந்துள்ளன. தலவிருட்சம் புன்னைமரம். தீர்த்தம் அக்கினி, அகத்திய, சூரிய, வைரவ, கௌரி என ஐந்து தீர்த்தங்கள் உள்ளன.

உள்பிராகாரத்தில் வடக்குப்பிராகாரம் தென்பக்கத்தில் ஓர் புற்றில் வன்மீகநாதர் காட்சியளிக்கிறார். விநாயகர், சுப்பிரமணியர், 63 நாயன்மார்கள், பராசக்தி, ஆறுமுகர், நவக்கிரகம், காசிவிஸ்வநாதர், பைரவர், துர்க்கை முதலிய சன்னிதிகள் உள்ளன.

சங்கன், பதுமன் என்னும் நாகர் இருவர் இருந்தனர். அவர்களில் சங்கன் சிவபெருமானிடத்தும், பதுமன் திருமாலிடத்தும் அன்பு பூண்டு அரன் பெரியவன், அரி பெரியவன் என வாதிட்டு யிருப்பதைக் கண்டு வியாழபகவானது ஏவலால் வந்து இத்தலத்தில் தவஞ் செய்ய, இருவரும் ஒருவர் என்பது அவர்களுக்குப் புலப்படச் செய்தற்கு சிவபெருமான் சங்கர நாராயணத் திருவுருவத்தைக் காட்சி யருளினார். இதனாலேயே இத்தலத்திற்கு சங்கர நாராயணர் கோவில் என பெயர் பெற்றது.

சிராத்தத்திற்காக அந்தணன் ஒருவன் வைத்திருந்த பழத்தை உண்டதனால் சோழன் ஒருவன் உற்றநோயை இறைவர் புற்று மண்ணாகிய மருந்தை அளித்து நீக்கினார். இப்போழுது இத்தலத்தில் புற்று மண்ணையே பிரசாதமாக அளிக்கிறார்கள். புற்று மண்ணை மருந்தாக உண்டு பிணிதீர்ந்து பயன் பெருவோர் பலர்.

ஆதியில் உக்கிரபாண்டிய அரசர் கோவிலை கட்டியதும், தக்கன் தவம் புரிந்ததும், உறையூர் சோழன் வீரசேனன் பிணி தீர்ந்ததும், தேவேந்திரன் மகனாகிய சயந்தன் வினை தீர்த்ததும், சிவராதமுனிவர் மகனான கன்மாடன் பசுக்கொலை செய்து பாவத்தை இத்தலத்தில் நாகசுனையில் மூழ்கி திருவருளைப் பெற்றதும், மற்றும் பத்திசாரமுனிவன், இந்திரன், அகத்தியர், வைரவர், சூரியன், அக்கினி ஆகியவர்களும் வழிபட்டுத் திருவருள் பெற்றதாக தலபுராணம் கூறுகின்றது. தலபுராணம் சீவலமாற பாண்டியர் இயற்றியதாகும். சங்கரலிங்கர் உலா, அந்தாதி, சதகம், பிள்ளைத்தமிழ் மற்றும் கோமதியம்மை பிள்ளைத்தமிழ், அம்மானை முதலியன இத்தலத்திற்கு உரியன. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம்.

கல்வெட்டுக்கள் 15க்கும் மேற்பட்டவை உள்ளன. நிலக்கொடை அளித்ததைக் குறிக்கின்றன. கோமதியம்மை திருமுன்பு உள்ள ஸ்ரீசக்கரம் திருவாவடுதுறை ஆதீனம் வேலப்ப தேசிக மூர்த்திகளால் அமையப் பெற்றது. பீடத்தில் 40 நாட்கள் உட்கார்ந்தால் மனநோய் நீங்கும்.

தினமும் காமிகாமப்படி ஆறு கால பூஜை நடைபெறுகிறத. சித்திரையில் பிரமோற்சவமும், ஆடித்தபசுவிழா என முக்கிய விழாக்கள் நடைபெறுகின்றன. ஆடித்தபசு விழா இம்மாவட்டத்தில் நிகழும் பெருந் திருவிழாக்களில் ஒன்றாகும். ஆடித்தபசன்று மாலை இறைவன் வீதியில் எழுந்தருளிக் காட்சிகொடுப்பதும், தேவியார் விரும்பிய சங்கரநாராயனர் கோலம் காட்சிகண்டபின்பு தாம் வேண்டிய சிவபெருமானின் திருவுருவம் இதுவே ஆடித்தபசு விழாவின் முக்கிய கருத்தும், சிறப்பும் ஆகும்.

2. கரிவலம்வந்தநல்லூர்

சங்கரன்கோவிலிருந்து வடக்கே 11கி.மீ. கருவை. நிட்சேப நதிக்கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு பால்வண்ண நாதர். அம்மன் ஒப்பனையம்மை. தலவிருட்சம் களாமரம். தீர்த்தம் சுக்கிர தீர்த்தம். யானை வலம் வந்து, இறைவனை வழிபட்டதனால் இத்தலத்திற்கு கரிவலம் வந்த நல்லூர் எனப் பெயர். இந்திரன் தக்கன் சாபத்தால் காரிமன்னனாக பிறந்தான். ஒரு சமயம் வேட்டையாடப் போன காரி களாமரத் தடியில் சிவலிங்கம் கண்டு காவல் நின்றான்காரி. வேட்டுவர்களை அழைத்து சிவலிங்கத்துக்கு வேலி அமைத்தான். மறுநாள் சென்று பார்க்கும் போது வேலி பிரிந்து சிதைந்து கிடந்தது. ஏதோ ஒரு விலங்கு சிதைத்திருக்க வேண்டும் என எண்ணி இரவு காவலிருந்தான். நள்ளிரவில் ஓர் யானை தனது நீண்ட தந்தங்களால் வேலியைப் பறித்து எறிந்தது. யானையை கொல்ல நினைத்த காரி, வேலியைச் சிதைத்த யானை மேலும் என்ன செய்யப் போகிறதெனக் காண விருப்பம் கொண் டான். யானை நேராகச் சிவலிங்கத்தை அடைந்து சற்றே பிளிறியது. பின்னர் லிங்கத்தை வலமாகச் சுற்றி வந்து மீண்டும் பிளிறியது. யானையின் செயல் காரியை வியக்க வைப்பினும், ஒவ்வொரு நாளும் இரவில் வேலியைச் சிதைக்கும் இந்த யானையைக் கொன்றேயாக வேண்டும் என நினைத்து யானையின் மத்தகத்திற்கு குறிவைத்து வேலை உயர்த்தி எறிய முயற்சி செய்தான் அவ்வேளையில் சிவபெருமான் இடபவாகனத்தில் உமையம்மையுடன் எழுந் தருளி காரிக்கும், யானைக்கும் காட்சிதந்து சாபவிமோசனம் அருளினார். இத்தல இறைவன் சுக்கிரனுக்கு பால்வண்ண ரூபமாக காட்சியளித்ததால் இறைவனுக்கு பால்வண்ணநாதர் என்றும், தீர்த்தம் சுக்கிர தீர்த்தம் என்றும் பெயர் பெற்றன.

இத்தலத்திற்குத் தலபுராணம் 40 சருக்கங்களில் 1345 பாடல்களில் சிவகிரி சமஸ்தான வித்துவான் எட்டிசேரி ச. திரு மலைவேற் கவிராயர் இயற்றியதாகும். கருவையைப் பற்றிய கலித்துறை அந்தாதி, வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி என மூன்றும் வரதுங்க ராமபாண்டியரால் இயற்றியதாகும். இத்தலத்தில் உள்ள வில்வமரங்களில் ஐந்து இதழ்களை உடைய வில்வ இலை கொண்டதாகும். இது மிகவும் உயர்ந்ததாகும்.

3. கலிங்கபட்டி

கரிவலம்வந்த நல்லூரிலிருந்து கிழக்கே 9 கி.மீ. நிட்சேப நதிக்கரையில் இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு தோணீஸ்வரர்.

4. திருவேங்கடம்

கலிங்கபட்டியிலிருந்து கிழக்கே 4கி.மீ. நிட்சேப நதிக்கரையில் இக்கோவில் 16 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கேஸ்வரர்.

5. குருவிக்குளம்

சங்கரன்கோவிலிருந்து கிழக்கே 16கி.மீ. இக்கோவில் 46 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

6. மடத்துப்பட்டி

சங்கரன்கோவிலிருந்து தென்மேற்கே 12கி.மீ. இக்கோவில் 17 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

7. வீரசிகாமணி

சங்கரன்கோவிலிருந்து தென்மேற்கே 16கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் அகத்தீஸ்வரர்.


8. சாயமலை

சங்கரன்கோவிலிருந்து தென்கிழக்கே 19கி.மீ. இக்கோவில் 1-07ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் பாகேஸ்வரர்.

9. சேந்தமங்கலம்

சங்கரன்கோவிலிருந்து தென்கிழக்கே 17கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் பிரகலாதீஸ்வரர்.

தென்காசி வட்டம்
(திருநெல்வேலி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருக்குற்றாலம்

வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால் நெய்யோ டாடலமர்ந்தா னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்

-- திருஞானசம்பந்தர்.

தென்காசியிலிருந்து தென்மேற்கில் 6 கி.மீ திரிகூடாசலம், குறும்பலா, உத்தாலக வனம், குற்றாலம். இக்கோவில் கடல் மட்டத்திலிருந்து 550 அடி உயரத்திலும், 5000 அடி உயரம் கொண்ட மலையடிவாரத்தில் 3-52 ஏக்கர் (407×376) நிலப்பரப்பளவில் நான்கு வாயில்களோடு சங்குவடிவமாக கொண்ட திருக்கோவிலில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு திரிகூடநாதர் எனக் கூறப்படும் குற்றால நாதர். அம்மன் அருள்மிகு குழல்வாய் மொழியம்மை. தலமரம் குறும்பலா, குத்தாலம். தீர்த்தம் சிவமது கங்கை, வடஅருவி, சித்ராநதி. ஆகமம் மகுடாகமம், சபை-சித்திரசபை, சக்தி பீடம் பராசக்திபீடம்.

உள்பிராகாரத்தில் வல்லபகணபதி, முருகப்பெருமான், தட்சிணாமூர்த்தி, சப்த கன்னியர், பஞ்சபூதலிங்கம், அகத்தியர், ஆனந்தக்கூத்தர், 63 நாயன்மார்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

கந்தபுராணம் திருக்குற்றாலப் படலத்தில் அகத்தியர் இத்தலத்தில் திருமாலைச் சிவனாக்கி வழிபட்ட வரலாறு கூறப்பட்டுள்ளது. இத்தல்த்தில் சிவ பெருமான் அயன், அரி, உருத்திரன், என்னும் மும்மூர்த்திகளாக எழுந்தருளினார் என்பது புராணவரலாறு. முதல்நாள் பிரமதேவ ராகவும், இரண்டாம் நாள் திருமாலாகவும், மூன்றாம் நாள் உருத்திரமூர்த்தியாகவும், நான்காம் நாள் ஈசுவரனாகவும், ஐந்தாம்நாள் சதாசிவ மூர்த்தியாகவும், ஆறாம் நாள் வெள்ளிமயில் வாகனாரூடராகவும் திருக்கோலம் கொண்டு பவனி வருவார்.

நடராசருக்குரிய ஐந்து சபைகளுள் இத்தலம் சித்திரசபை. இங்கு நடராஜர் சுவரில் சித்திரரூபமாக இருக்கிறார். அருகில் கூத்தர்சபை உள்ளது.

கோவிலின் ஓரிடத்தில் விநாயகர், இலிங்கம், கோபுரம், மலை, மலைவீழருவி ஆகிய பஞ்சதரிசனம் கிடைக்கும்.

இங்குள்ள மலை மூன்று சிகரங்களை யுடையது அதனால் திரிகூடாசலம் என்று பெயர் பெற்றது. இத்தலத்தைச் சார்ந்த பூஞ்சோலைக்குச் சம்பகாரணியம் என்று பெயர். இங்குள்ள வடவருவியும், தேனருவி என்னும் சிவமதுகங்கையும் சிறப்புடையவை யாகும். வடவருவியில் மூழ்கினாரது பாவம் கழுநீராகப் பிரிந்து ஒடுமென்பது இத்தல ஐதீகம்.


தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டிய நாட்டுத் தலங்களில் 13 வது. திருஞான சம்பந்தர் அருளிய இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளனர். கபிலர், பட்டினத் தார், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இத்தலத்திற்குள்ளன. திருக்குற்றாலத் தல புராணம் 2072 செய்யுட் களால் மகாகவி மேலகரம் திரிகூடராசப்ப கவிராயர் அவர்கள் இயற்றியது. திருக்குற்றாலக் குறவஞ்சி, யமகவந்தாதி, உலா, சிலேடை வெண்பா, மாலை, ஊடல், கோவை முதலிய இலக்கியங்கள் இத்தலத்திற்குள்ளன.

இக்கோவிலில் 86 கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவர் திருக்குற்றாலமுடை தம்பிரானார், நாயனார், குற்றாலநாதர்

என்னும் பெயர்களாலும், அம்மையார் குழல்வாய் மொழியம்மை என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் ஆறு கால பூஜைகள். சித்திரை விசுவிழா, திருவாதிரை, தைமாதம் முதலிய நாட்களில் சிறப்புவிழாக்கள் நடைபெறுகின்றன.

2. தென்காசி



திருநெல்வேலியிலிருந்து வடமேற்காக 55கி.மீ. செண்பகவனம், கோசிகை, தட்சிணகாசி, விந்தை. இக்கோவில் சிற்றாற்றின் கரையில் 4-00 ஏக்கர் (318×554) நிலப்பரப்பளவில் கிழக்கு நோக்கிய 178 அடி உயரம் 9 நிலை இராஜகோபுரமும், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காசிவிசுவநாதர். அம்மன் உலகம்மன். தீர்த்தம் ஆனந்த, காசி தீர்த்தங்கள். தலவிருட்சம் செண்பகம். உள்பிராகாரங்களில் மீனாட்சி சொக்கநாதர், சகஸ்கரலிங்கம், பைரவர், சூரியன், நால்வர், 63 நாயன்மார்கள், சுரதேவர், விநாயகர், ஆறுமுகர், நடராஜர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

நாரதமுனிவர், இந்திரன், அகத்தியர், மிருகண்டு முனிவர், வாலி, நந்தியெம் பெருமான் முதலியோர் இத்தல இறைவனை வணங்கி அருள் பெற்றத் தலம்.

இவ்வூர்க்கு கிழக்கே விந்தன்கோட்டை என்று இப்போது வழங்கும் ஊரில் பெருங்கோட்டை கட்டி அரசாண்டான் பராக்கிரம பாண்டியன். ஒரு சமயம் காசிக்குச் சென்று காசிவிஸ்வநாதரை வழிபட்டு வந்தான். காசியிலிருப்பதைப் போன்று இங்கும் ஆலயம் அமைக்க எண்ணினான். இறைவன் கனவில் தோன்றி, எறும்பு ஊர்ந்து செல்லும் வழியாகச் சென்று, அது எங்கு முடிகிறதோ அங்கு கோவில் எடுபிக்கக் கூறினார். மன்னனும் எறும்பு சென்ற வழியினைப் பின் தொடர, அது சிற்றாற்றங்கரையில் செண்பகவனத்திற்கு வந்து சேர, அவ்விடத்தில் புற்றில் சுயம்புலிங்கம் கண்டு கோவில் கட்டினான் என்பது புராணவரலாறு.

இக்கோவிலில் உள்ள சிற்பங்கள் உலகப் புகழ்பெற்றவை. அகோரவீரபத்திரர், அக்கினி வீரபத்திரர், மன்மதன், காளிதேவி, சகாதேவன், துவார பாலகர், கர்ணன், மகாதாண்டவர், நகுலன், ஊர்த்துவ தாண்டவர், ரதிதேவி, மதனகோபாலன், தமிழணங்கு முதலிய சிற்பங்கள் உள்ளன. மரத்தில் கூட செதுக்கமுடியாத அவ்வளவு கலை நுட்ப உணர்வோடு நுட்பமான வேலைப் பாடுகள் கொண்டயாளியும், பஞ்ச பாண்டவர்கள் சிலையும் விலைமதிப்பற்ற சிற்பக்கலை பெட்டகங்களாகும். காசி விஸ்வநாதர் வீற்றிருக்கும் திருக்கோலத்தை ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தொலைவிலிருந்தே நேராகவே காணமுடியும். ஒரு கிலோ மீட்டர் தொலைவும் சாமி சன்னிதி என்றே இன்றும் சொல்லப்படுகிறது.

கல்வெட்டுக்களில் விந்தை என்றும், விந்தனூர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் ஆறுகால பூஜை, ஆனி மாதத்தில் அனுச நட்சத்திரத்தில் பிரமோற்சவமும், ஐப்பசி உத்திரநாளில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரில் சங்கரநாராயணர் திருக்கோவிலும், சங்கரலிங்கேஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

3. இலஞ்சி

தென்காசியிலிருந்து மேற்கே 3 கி.மீ. திருவிலஞ்சி. சிற்றாற்றின் கரையில் இக்கோவில் கிழக்கு மேற்காக நீளம் 285

அடியும், வடக்கு தெற்காக அகலம் 176 அடி கொண்டு இராஜகோபுரம், சுற்றுபிராகாரங் களுடன் மூலவர் அருள்மிகு இருவாலுக நாயகர். அம்மன் இருவாலுக ஈசர்க்கினியாள். தீர்த்தம் சித்திரா நதி, தலவிருட்சம் மகிழமரம். பிரதான மூர்த்தி திருஇலஞ்சிக்குமாரர்.

அகத்திய முனிவரால் பிரதிட்டை செய்யப்பட்ட இருவாலுக நாயகரென்னுஞ் சிவலிங்கப் பெருமான் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்றார். இக்கோவில் வரலாற்றைப் பற்றி சரித்திரக் குறிப்புகள் விசேடமாகக் கிடைக்கவில்லை. திருக் குற்றாலத் தலபுராணம், திருச்செந்தூர் புராணம், சுப்பிரமணிய பராக்கிரமம், இலஞ்சி முருகன் உலா முதலிய நூல்கள் இத்தலத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. அருணகிரிநாதர் இத்தல முருகப் பெருமான் பேரில் திருப்புகழ் அருளியுள்ளார்.

நாள்தோறும் ஆறுகால பூஜைகள். சித்திரையில் பிரமோற்சவம் நடைபெறு கிறது. மேலும் இவ்வூரில் மத்தியில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேகரநாதர். அம்மன் சிற்றாற்று வீரியம்மன் திருக்கோவிலும் உள்ளது. இக்கோவிலை சடையவர்மன் அதிவீரராம பாண்டியன் தன் தந்தையின் பெயரால் கட்டப்பட்டதாகும். மேலும் இக்கோவிலு க்குப் பின்புறம் மேற்குப் பகுதியில் தம்பெயரால் அதிவீரராம விண்ணகரம் என்னும் திருமால் கோவிலையும், இலஞ்சிக் குமாரர் கோவிலையும் எடுப்பித்தான். அதிவீரராம விண்ணகரம் தற்போது விண்ணகரப் பெருமாள் கோவில் என்று தற்போது உள்ளது.

4. பண்பொழி

தென்காசியிலிருந்து வடமேற்கே 9கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாகேஸ்வரமுடையார்.

5. கடையநல்லூர்

தென்காசியிலிருந்து வடக்கே 15 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கடையலீஸ்வரர். அருகில் அண்ணாமலைநாதர் திருக்கோவிலும், விஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளன.

6. சொக்கம்பட்டி

கடையநல்லூரிலிருந்து வடக்கே 2கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

7. சுரண்டை

தென்காசியிலிருந்து கிழக்கே 14 கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வீரபாண்டீஸ்வரர்.

8. திருச்சிற்றம்பலம்

தென்காசியிலிருந்து கிழக்கே 7 கி.மீ. சிற்றாற்றின் கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் திருச்சிற்றம்பலநாதர்.

9. மேலபாவூர்

தென்காசியிலிருந்து கிழக்கே 5 கி.மீ. சிற்றாற்றின் கரையில் இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்க லிங்கர்.

10. கீழபாவூர்

தென்காசியிலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருவாலீஸ்வரர்.


11. சீவலர்குளம்

ஆலங்குளத்திலிருந்து கிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 2-13 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வைத்தியலிங்கர்.

12. மரண்டை

ஆலங்குளத்திலிருந்து தென்கிழக்கே 7கி.மீ. இக்கோவில் சுமார் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

செங்கோட்டை வட்டம்
(திருநெல்வேலி மாவட்டம்)



1. ஆய்க்குடி

செங்கோட்டையிலிருந்து வடகிழக்கே 12 கி.மீ. சிற்றாற்றின் தென்பகுதியில் இக்கோவில் 2-31 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காள கண்டேஸ்வரர். அம்மன் சௌந்தர நாயகி. தலமரம் அரசமரம். அருகில் ஸ்ரீ பால சுப்ரமணியர் திருக்கோவில் உள்ளது. அருண கிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம். அருகில் உள்ள களங்காடு என்னுமிடத்தில் 76 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜமதக் னீஸ்வரர் கோவிலும், 18 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கேஸ்வரர் திருக்கோவிலும் உள்ளன. கடையெழு வள்ளல்கள் ஒருவரான ஆய்மன்னன் ஆண்ட ஊர்.

2. சம்பவார்வடகரை

செங்கோட்டையிலிருந்து வடகிழக்கே 18 கி.மீ. சிற்றாற்றின் கரையில் இக்கோவில் 2-09 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு மூலநாதர்.

3. செங்கோட்டை

தென்காசியிலிருந்து மேற்கே 8 கி.மீ. இக்கோவில் 4-45 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் பந்தநாதேஸ்வரர். அருகில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேகரநாதர்.

4. எலத்தூர்


செங்கோட்டையிலிருந்து வடகிழக்கே 6கி.மீ. இக்கோவில் 90 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் மத்தியநாதேஸ்வரர். 4000 வருட முற்பட்ட கோவில். அருகில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவராக நடராஜர் திருக்கோவில் உள்ளது.

5. புலியறை

செங்கோட்டையிலிருந்து வடமேற்கே 7கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் சதாசிவமூர்த்தீஸ்வரர்.

அம்பாசமுத்திரம் வட்டம்

(திருநெல்வேலி மாவட்டம்)



1. அம்பாசமுத்திரம்

திருநெல்வேலியிலிருந்து மேற்காக 31கி.மீ. அம்பை. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 440×260 அடி நீளம், அகலம் கொண்டு இரண்டு பிரா காரங்களுடன் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு திருகாசிபேசுவரர் மற்றும் எரித்தாட்கொண்டார். அம்மன் மரகதவல்லி யம்மை. தீர்த்தங்கள் தேவி, சாலா, தீப, காசிப, கிருமிகர, கோகில, புருடோத்தம என்னும் ஏழு தீர்த்தங்கள் உள்ளன. தலவிருட்சம் நெல்லிமரம். உள்பிரா காரங்களில் கோகில விநாயகர், முருகப் பெருமான், விசுவநாதர், விசாலாட்சி முதலிய சன்னிதிகள் உள்ளன.

காசிப முனிவர்க்கு இத்தல இறைவன் காட்சியளித்ததால் இறைவனுக்கு காசிபேசு வரர் என்று பெயர் அகத்தியர் வணங்கிய தலம். பதினெண்புராணத்திலொன்றாகிய சைவபுராணத்தில் தாம்பிரவருணி மாகாத் மியத்தில் அத்தியாயம் 23 முதல் 31 வரையுள்ள ஒன்பது அத்தியாயங்களும் அம்பாசமுத்திரம் தலம் பற்றி விரிவாக கூறுகின்றன.

இத்தலத்தில் ஓர் கழுகுக்கும், பிரமசாரிக்கும், நான்கு புறாக்களுக்குமுள்ள சாபவினை நீக்கி நற்கதி பெற்றதும், வசுமனனென்ற மன்னவனுக்குச் சிவகதி பெற்றதும், பிரமோதனென்ற வேதியன் நரை, திரை, மூப்போடு இருவினைகளையும் நீக்கியதும், அதிதி, காசிப இருவர்கள் மனோ பிஷ்டமெல்லா நிறைவேற்றியதும், பிறப் பிலே உடலமெல்லாம் கிருமிசொரியப் பெற்ற பரன் என்ற அரசன் அக்கொடுந்நோய் தீர்ந்தது நற்கதியடைந்ததும், ஓர் கந்தருவன் சாபத்தாலடைந்த குயிற் பிறப்பொழித்ததும் இத்தலமாகும் எனத் தலபுராணம் கூறுகின்றன.

இத்தலபுராணம் அரிகேச நல்லூர் இராமய்யவர்கள் குமாரர் அரிகரமையரவர் களால் 20 சருக்கம் 1221 திருவிருத்தம் கொண்டு இயற்றியதாகும்.

ஆயிரம் வருட முற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. நாள்தோறும் 7 கால பூஜை நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரில் கீழ்கண்ட கோவில்கள் அருகருகே அமைந்துள்ளன.

திருமூலநாதர் திருக்கோவில் : இக்கோவில் 195×234 அடி அகலம், நீளம் கொண்டு, ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு திருமூலநாதர். அம்மன் உலகம்மை. அகத்திய முனிவர் வழிபட்ட தலம்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. இக்கோவிலை திருச்சாலைத்துறை என்று குறிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் 7 கால பூஜை. ஆனி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

வீரமார்த்தாண்டேசுரர் திருக்கோவில்: இக்கோவிலில் உள்ள மூலவர் வீரமார்த் தாண்டேசுரர். அம்மன் நித்தியகல்யாணி. தீர்த்தம் அரிகரதீர்த்தம். தி.பி.1200 வருடம் பிற்பட்டது. இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

அம்மையப்பர் திருக்கோவில் : இக்கோவில் 199×206 அடி அகலம், நீளம் கொண்டு ஒரு பிராகாரத்துடன் மூலவர் அம்மையப்பர். அம்மன் சுகுந்தகுந்தலாம்பாள் மற்றும் அரசடி விநாயகர், கன்னி விநாயகர், சுந்தர விநாயகர். இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

மேலும் இவ்வூரில் 1-88 ஏக்கர் நிலப்பரப்பளவில் திருக்கோஷ்டியப்பர் திருக்கோவிலும், 50 செண்ட் நிலப்பரப் பளவில் மூலவர் அகத்தீஸ்வரர் திருக் கோவிலும், 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சங்கரலிங்கேசுவரர் திருக்கோவில் களும், திருமால் கோவில்களாக கிருஷ்ண சாமி திருக்கோவிலும், புருஷோத்தம பெருமாள் திருக்கோவிலும், தென்னழகர் திருக்கோவிலும், லஷ்மிநாராயணப்

பெருமாள் கோவிலும், தாமிரபரணியாற்றின் கரையில் அனுமன் கோவில்களும் இவ்வூரில் ஆங்காங்கே அமைந்துள்ளன.

2. கடையம்

அம்பாசமுத்திரத்திலிருந்து வடக்கே 22கி.மீ. ஸ்ரீ கைலாசம், விக்ரமபாண்டிய நல்லூர். இக்கோவில் 81 செண்ட் நிலப்பரப் பளவில் ஏழு நிலை இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு வில்வாரணியேசுவரர். அம்மன் நித்தியகல்யாணி. தலமரம் வில்வம். தீர்த்தம் சக்கரதீர்த்தம். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், கங்காளர், துர்க்கை, சரஸ்வதி, பைரவர், நடராஜர், காசிவிஸ்வ நாதர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

கல்வெட்டுக்களில் இக்கோவில் விக்ரம பாண்டியன், மதுரை நாயக்கர் காலங்களில் திருப்பணி செய்ததைக் குறிக்கின்றன. இவ்வூரை பாண்டிய குலாசினி வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக் கடையக்குடி என்று குறிக்கப்பட்டுள்ளது.

இத்தலம் தேவாரவைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. கடையக்குடி என்பதை தற்போது கடையம் என்று வழங்குகிறது. விக்ரமபாண்டியநல்லூர் என்று மற்றொரு கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

நாள்தோறும் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. சித்திரையில் பிரமோற்ச வமும், ஐப்பசியில் திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

3. பாப்பாகுடி

அம்பாசமுத்திரத்திலிருந்து வடக்கே 10கி.மீ. திருக்கடுகை. தாமிரபரணியாற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மூன்றீஸ்வரர்.

4. ஆழ்வார்குறிச்சி

அம்பாசமுத்திரத்திலிருந்து வடக்கே 14கி.மீ. சிவசைலம், அத்திகிரீச்சுரம். கருணையாற்றின் கரையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரத்துடன் மேற்கு நோக்கிய மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு சிவசைலநாதர். அம்மன் பரமகல்யாணி. தீர்த்தம் அத்திரி தீர்த்தம். உள்பிராகாரத்தில் விநாயகர், முருகன், 63 நாயன்மார்கள், தட்சிணாமூர்த்தி, நடராஜப்பெருமான் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வெள்ளிமலை, மேற்குத் தொடர்ச்சி மலை, முள்ளிமலை ஆகிய மூன்று மலைகளால் சூழப்பெற்றது இத்தலம்.

பிருகு, அத்திரி முனிவர்கள் வழிபட்டு இறைவனை காட்சிகண்ட தலம். அத்திரி முனிவரால் உண்டாக்கப்பட்ட கங்கை இன்றும் சிவசைலமலையில் 1500 அடி உயரத்தில் அத்திரி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. தீர்த்தத்தின் அருகில் முருகனுக்கு ஒரு கோவில் உள்ளது. அத்திரி முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட கங்கை கருணையாற்றுடன் கலந்து சிவசைலம் கோவிலுக்கு வடபுறத்தில் ஓடி, திருப்புடை மருதூரில் தாமிரபரணி நதியுடன் கலக்கிறது.

இக்கோவிலுள்ள நந்தியம்பெரு மானின் திருவுருவம் மிகுந்த சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஆடித் திங்களில் கடைசி வெள்ளிக்கிழமையன்று இப்பெரியநந்திக்கு முழுக்காப்புத் திருவிழா நடைபெறுகிறது.

சிவசைலநாதர் தலைமுடியுடன் கூடிய சடையப்பர். சிவலிங்கத்தின் பின்பகுதியில் தலைமுடி இருப்பதைப்போன்ற தோற்றம் உள்ளது.

சிவசைலத் தலபுராணம் நெற்குன்றை மாநகர் வீரப்ப முதலியாரால் பாடப்பெற்ற தாகும்.

நாள்தோறும் நான்கு கால பூஜை. பங்குனி மாதத்தில் பிரமோற்சவமும், ஐப்பசியில் திருக்கல்யாண உற்சவமும், சித் திரையில் தீர்த்தவாரியும் நடைபெறுகிறது.

பரமகல்யாணியைத் தங்கள் மகளாகவே பாவித்துச் சித்திரை அல்லது வைகாசித்

திங்களில் தங்கள் ஊருக்கு அழைத்து மூன்று நாள் திருவிழா எடுக்கின்றனர் கீழாம்பூர் மக்கள்.

இக்கோவிலுக்கு அருகில் செவ்வந்தி யப்பர் திருக்கோவில் உள்ளது.

5. ராவணசமுத்திரம்

ஆழ்வார்குறிச்சியிலிருந்து வடமேற்கே 4 கி.மீ. இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

6. பாப்பான்குளம்

ஆழ்வார்குறிச்சியிலிருந்து கிழக்கே 2 கி.மீ. கருணையாற்றின் கரையில் இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரத்துடன் மூலவர் சுயம்பு லிங்க மூர்த்தியாக அருள்மிகு திருக் கருத்தீசுவரர். ஸ்ரீ ராமர் வ்ணங்கிய தலம். கல்வெட்டுக்களில் சேரனை வென்ற திருமடைவிளாகம் என்றும், பகவதி விண்ணகர் ஆழ்வார் என்றும், கருத்தை முடித்த பாண்டீஸ்வர நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கோவிலை பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் திருப்பணி செய்ததை கல்வெட்டுக்களில் குறிப்பிடுகின்றன. நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. அருகில் இராமசாமி திருக்கோவில் உள்ளன.

7. துப்பகுடி

ஆழ்வார்குறிச்சியிலிருந்து கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு ஆதிவனேஸ்வரர்.

8. தெற்குஅரியணயாசி

வீரவநல்லூர்க்கு கிழக்கே 3 கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-74 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

9. அரிகேசவநல்லூர்

வீரவநல்லூர்க்கு வடக்கே 2 கி.மீ. இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு புஸ்பவனேசுவரர். அருகில் அரியநாதசுவாமி திருக்கோவிலும் உள்ளது.

10. திருப்புடைமருதூர்

அம்பாசமுத்திரத்திலிருந்து வடகிழக்கே 7 கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 9-34 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், ஐந்து பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு நாரும்புநாதர். அம்மன் கோமதியம்மை. தலவிருட்சம் மருதமரம். தீர்த்தம் தாமிரபரணியாறு. உள்பிராகாரங்களில் கன்னிவிநாயகர், சுப்பிரமணியர், சூரியன், 63 நாயன்மார்கள், அகத்தியர், சனீஸ்வரர், சரஸ்வதி, சகஸ்ரலிங்கம் மற்றும் நடராஜர் சன்னிதிகள் உள்ளன.

பிரம்மகத்தி தோஷம் நீங்க இந்திரன் இத்தலத்திற்கு வந்து மருத மரத்தின் கீழ் அமர்ந்து சிவபெருமானை நோக்கி தவமிருந்து தவத்திற்கு மகிழ்ந்த பெருமான் மருதமரத்தின் கீழ்காட்சி தந்து இந்திரனுக்கு ஏற்பட்ட தோஷத்தை நீக்கியருளியதால் இத்தலத்திற்கு மருதூர் என்று பெயர்.

பிரம்ம தேவனின் புதல்வனான சுயம்புமானு, அகத்தியர், பார்வதி, திருமகள், சரஸ்வதி, பூமிதேவி முதலியோர் வழிபட்ட தலம். இத்தலத்தில் தைமாதத்தில் வரும் புஷ்ய நட்சத்திரத்தில் இறைவனை வழிபட விசேடமான நாளாகும் எனத் தலப்புராணம் கூறுகிறது. நாள்தோறும் 6 கால பூஜை நடைபெறுகிறது. தைப்பூசத்தில் பிரமோற் சவம் நடைபெறுகிறது.

11. ரங்கசமுத்திரம்

அம்பாசமுத்திரத்திலிருந்து வடகிழக்கே 7கி.மீ. கருணையாற்றின் வடகரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில்

மூலவர் திருநாகேசுவரர். அருகில் இடைக்கல் என்னுமிடத்தில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் தியாகராஜர் திருக்கோவில் அமைந்துள்ளது.

12. அடசேனை

பிரமதேசத்திலிருந்து வடக்கே 3 கி.மீ. கருணையாற்றின் கரையில் இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

13. திருவாலீஸ்புரம்

பிரமதேசத்திலிருந்து வடக்கே 3 கி.மீ. கருணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு திருவாலிநாதர்.

14. கீழாம்பூர்

ஆழ்வார்குறிச்சியிலிருந்து தெற்கே 3கி.மீ. கருணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

15. மேலாம்பூர்

ஆழ்வார்குறிச்சியிலிருந்து தென்மேற்காக 5கி.மீ. கருணையாற்றின் தென்கரையில் இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கல்யாண சுந்தரேஸ்வரர்.

16. பாபநாசம்

அம்பாசமுத்திரத்திலிருந்து மேற்கே 10கி.மீ. பாவநாசம், விக்ரமசிங்கபுரம், பொதியமலை. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 80 அடி உயரம் 7 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு பாபவிநாசர் கிழக்கு நோக்கியும், அம்மன் லோகநாயகி கிழக்கு நோக்கியும் காட்சி யளிக்கின்றனர். தலவிருட்சம் களாச்செடி. முதற்பிராகாரத்தில் சுவாமி சன்னிதிக்குப்பின் ஒரு கொடிவீடு போற்பரந்து வளர்ந்திருக்கிறது. தீர்த்தம் கல்யாண தீர்த்தம். தாமிரபரணிநதி.

உள்பிராகாரத்தில் நடராஜர், அகத்திய முனிவர், சுரதேவர், 63 நாயன்மார்கள், கல்யாணசுந்தரர், உலகம்மை, முக்களா லிங்கர், ஆறுமுகர், சனீஸ்வரன், நவக்கிரகம், புனுகுசபாபதி மற்றும் வெளிப்பிராகாரத்தில் விநாயகர், அய்யனார் சன்னிதிகள் உள்ளன.

பாண்டியமன்னன் விக்ரமசிங்கர் இக்கோவில் திருப்பணி செய்ததால் விக்ரமசிங்கபுரம் என்று பெயர் பெற்றதாக கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறது.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளிய தலம்.

சுவாமியின் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிலும் அருமையான வேலைப்பாட மைந்த ரிஷிகள், காளி, ஊர்த்துவ தாண்டவம், பிக்ஷாடனர், நிர்த்தகணபதி, திரிபுரஸம்ஹாரம், திருமால், ஏகபாதமூர்த்தி, பிரமன், சுப்பிரமணியர், சங்கமாலைக் கிடையில் தேவி என மிக நுண்மையான சிற்பங்கள் காணப்படுகின்றன.

இக்கோவிலில் எண்ணெய்ச் சாதம் என்ற ஒருவகைப் பிரசாதமும் அதற்கேற்ற துவையலும் நிவேதனம் செய்யப்படுகிறது.

நாள்தோறும் 6 கால பூஜை நடைபெறுகிறது. இவ்வூர்க்கு அருகில் பழையபாபநாசம் என்னுமிடத்தில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு அகத்தீஸ்வரர். அகத்தியருக்கு இறைவன் திருமண காட்சி அளித்த தலமாகும். அருகில் அகத்தியர் அருவி உள்ளது. பௌர்ணமி, அமாவாசை தினங்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

17. பிரமதேசம்

அம்பாசமுத்திரத்திலிருந்து வடக்கே 4கி.மீ. அயனீச்சுரம். கருணையாற்றின் தென்கரையில் இக்கோவிலில் உள்ள

மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். இத்தலம் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசர் அடைவு திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். மேலும் இவ்வூர்க்கு அருகில் வேதநாராயணபுரம் என்னும் மன்னார் கோவிலில் ஸ்ரீ இராஜகோபால சுவாமி காட்சியளிக்கிறார்.

18. வாகைக்குளம்

அம்பாசமுத்திரத்திலிருந்து வடமேற்கே 2கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

19. கல்லிடைகுறிச்சி

அம்பாசமுத்திரத்திலிருந்து தெற்கே 2கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மான்னேந்தியப்பர். அம்மன் வடிவாம்பிகை. தீர்த்தம் கன்வதீர்த்தம் மற்றும் தாமிரபரணிநதி. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, சனீஸ்வரர் மற்றும் நவக்கிரகங்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

கன்வமுனிவர்க்கு இறைவன் காட்சி தந்த தலம்.

இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. பாண்டிய மன்னன் மதுரை வீரப்பநாயக்கர் திருப்பணி செய்ததைக் குறிப்பிடுகின்றன.

நாள்தோறும் 6 கால பூஜை நடைபெறுகிறது. தை மாதத்தில் இரத உற்சவமும், ஐப்பசி மாதத்தில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகின்றன. மேலும் இவ்வூரில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேகரமுடையார் திருக்கோவிலும், 25 செண்ட் நிலப்பரப்பளவில் அகத்தீஸ்வரர் திருக்கோவிலும், 9 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர் திருக்கோவிலும், 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர் திருக்கோவிலும் உள்ளன.

20. வீரவநல்லூர்

கல்லிடைக்குறிச்சியிலிருந்து கிழக்கே 7கி.மீ. முடிவழங்குபாண்டியசதுர்வேதி மங்கலம், புன்னைவனம். இக்கோவில் 1-56 ஏக்கர் (339×199) நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு லிங்க மூர்த்தியாக அருள்மிகு பூமிநாதர். அம்மன் மரகதவல்லி. தலவிருட்சம் புன்னைமரம். தீர்த்தம் ஞானதீர்த்தம். உள்பிராகாரத்தில் கன்னி விநாயகர், முருகன், 63 நாயன்மார்கள், சப்தகன்னியர், சூரியன், வயிரவர், கலைமகள், காசிவிஸ்வநாதர் மற்றும் நவக்கிரகங்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத்தபோது எமன் ஒரு கொடியாக மாறி இத்தலம் வந்து கிடந்தான். எமனின் தொழில் தடைபட்ட காரணத்தால் பூமியில் உயிர்களின் தொகை அதிகரித்துப் பாரம் மிகுவதாயிற்று. பாரம் தாங்கமாட்டாத பூமிதேவி பரமனிடம் சென்று முறை யிட்டாள். இறைவனும் இத்தலத்திற்கு சென்று தன்னைப் பூசிக்குமாறு ஆணை யிட்டார். பூமிதேவியும் இத்தலத்தை யடைந்து இறைவனை நீராட்டிப் பல மலர் தூவி, அமுதும் படைத்துப் பூசித்து வந்தாள். சிவபெருமான் மனம் மகிழ்ந்து பூமிதேவிக்கு காட்சி தந்து எமனை உயிர்ப்பித்துப் பூமியின் பாரம் குறைய வழி செய்தார். பூமிதேவி வணங்கியதால் இறைவனுக்குப் பூமிநாதர் எனும் பெயர் ஏற்பட்டது.

அகத்தியமுனிவர், தருமன், நகுஷன், திருமால், பிரமன், விருகமுனிவர், விசுமுகன், கனகமுனி, பார்க்கவ முனிவர், கங்கை, மற்றும் பாண்டிய மன்னன் அதிவீரவழுதி மாறன் முதலியோர் இத்தல இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

சித்திரசேனன் மகனான வீரகண்டனுக்கு இத்தல் இறைவன் காட்சிதந்து இறைவன் ஆணைப்படி இக்கோவிலை ஆதியில் வீரகண்டன் எழுப்பினான். அதிவீரபாண்டிய மன்னன் இக்கோவிலை

திருப்பணி செய்து கட்டியதால் இவ்வூருக்கு அம்மன்னன் பெயரால் வீரவநல்லூர் ஆயிற்று.

இத்தலத்திற்கு தலபுராணம் 18 சருக்கம் கொண்டதாகும். நாள்தோறும் 7 கால பூஜை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரையில் பிரமோற்சவமும், ஐப்பசியில் திருக் கல்யாணம் முதலிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

21. வெல்லங்குளி

வீரவநல்லூர்க்கு மேற்கே 2கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் வீரவிநோதீசுவரர்.

22. வடக்குகரைக்குறிச்சி

வீரவநல்லூர்க்கு கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேகரநாதர்.

23. சேரன்மாதேவி

வீரவநல்லூர்க்கு கிழக்கே 5 கி.மீ. சேர்மாதேவி, சேரன்மகாதேவி. தாமிரபரணி யாற்றின் தென்கரையில் இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் 5 நிலை, 63 அடி உயர இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு அம்மைநாதர். அம்மன் ஆவுடைநாயகி. தீர்த்தம்-தாமிரபரணிநதி. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், விசுவநாதர், நடராஜர், காரைக்கால் அம்மையார், நால்வர், நவகன்னியர்கள் முதலிய சன்னிதிகள் உள்ளன.

ரோமேச முனிவர்க்கு இத்தல இறைவன் காட்சி தந்து அருளினார். திருநெல்வேலி தலபுராணத்தில் இத்தலத் தைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. நாள்தோறும் 5 கால பூஜை. சித்திரையில் பிரமோற்சவமும், பங்குனி உத்திரத்திலும் உற்சவம் நடைபெறுகிறது. இவ்வூரில் வைத்தியநாதர் திருக்கோவிலும், சுந்தரேசர், தெய்வீஸ்வர முடையார், விஸ்வநாதர் திருக்கோவில்களும், திருமால் கோவிலான ஆதிநாராயணப் பெருமாள் திருக்கோவிலும் உள்ளன.

24. கரிசூலுடமங்கலம்

சேரன்மாதேவியிலிருந்து கிழக்கே 4கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கனகசபாபதி.

25. ஓமநல்லூர்

சேரன்மாதேவியிலிருந்து தென்கிழக்கே 15கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் பரமேஸ்வரர்.

26. மேலசேவல்

சேரன்மாதேவியிலிருந்து கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் ஆதித்தவன்னீசுவரர். அருகில் விஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளது.

27. பத்தமடை

சேரன்மாதேவியிலிருந்து தென்கிழக்கே 3கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுந்தரேசுவரர். அருகில் விஸ்வநாதர் திருக்கோவிலும் உள்ளது.

28. அலடியூர்

செவ்வந்திபுரத்திலிருந்து தெற்கே 2கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.


29. சிங்கம்பட்டி

அம்பாசமுத்திரத்திலிருந்து தெற்கே 7கி.மீ. மணிமுத்தாற்றின் கரையில் இக்கோவில் 3 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

திருச்சிற்றம்பலம்

திருநெல்வேலி வட்டம்

(திருநெல்வேலி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருநெல்வேலி

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி யுறை செல்வர்தாமே.

-- திருஞானசம்பந்தர்.

மதுரையிலிருந்து தெற்கே 147 கி.மீ. வேணுவனம், நெல்வேலி, சாலிவேலி, தாருகாவனம், தென்காஞ்சி. தாமிரபரணி ஆற்றின் வடகரையில் இக்கோவில் 14-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் 850 அடி நீளம், 756 அடி அகலம் கொண்டு இராஜகோபுரம், பிராகாரங்களுடன், மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு நெல்லையப்பர், வேணுவனேசுரர். அம்மன் காந்திமதியம்மை. தலவிருட்சம் மூங்கில். தீர்த்தம் 32 உள்ளன. முக்கியமானவை பொற்றாமரை, கருமாரி, வயிரவ, சர்வ என நான்கும் கோவிலுக்கு உள்ளேயும், கம்பை, தெப்பக்குளம், சிந்துபூந்துறை, துர்க்கை, குறுக்குத்துறை ஆகிய ஐந்தும் கோவிலுக்கு வெளியிலும் உள்ளன.

நான்கு வேதங்களும் தருவாய் நின்று நிழலைச் செய்து நித்தியமாய் இருக்க வேண்டும் என்று சிவபெருமானிடம் வரம் கேட்க, அவர்தாம் நடனம் புரியும் இருபத்தொரு தலங்களில் மிகச் சிறந்த தென்காஞ்சி எனப்படும் நெல்லையில் வேணுவாய் அமருங்கள். அங்கு லிங்கமாய் அமர்ந்தருளுவோம் என்றபடி வேதங்கள் மூங்கில் மரங்களாகவும், இறைவனும் லிங்கமாகி அருள் புரியும் தலம்.

சிவபெருமான் நிவேதனத்துக்குச் சேமிக்கப்பட்ட நெற்களஞ்சியத்தை வெள்ளம் அடித்துப் போகாமல் வேலி கட்டிக் காத்தமையால் நெல்வேலியாயிற்று.

திருமால், பிரமன், அகத்தியர் பூசித்த தலம். அகத்தியருக்கு திருமணக் கோலத்தைக் காட்டியருளிய தலம். தசரத இராமன் பேறு பெற்றதும், சுவேதகேதுவுக்கு எமபயம ஒழித்த இடம். ஆயர் குலத்தவர் ராமகோனாருக்கும், முழுதும் கண்ட ராமபாண்டியனுக்கும் காட்சியளித்ததலம்.

உலகமாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளான 32 அறங்களை உலகுக்கு உணர்த்திய இடம்.

கருவூர்ச் சித்தர், நின்றசீர் நெடுமாறன் முதலியோர்க்கு இறைவன் அருள்புரிந்த தலம்.

ஐவகை மன்றங்களுள் ஒன்றாகிய தாமிரசபை. தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டிய நாட்டுத்தலங்களில் இத்தலம் 14 வது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ள தலம். தலபுராணம் நெல்லையப்பபிள்ளை அவர்கள் பாடிய திருநெல்வேலித் தலபுராணமும், தி.பி. 1944ல் அருணாசலக் கவிராயரால் பதிப்பிக்கப்பட்ட வேணுவனப் புராணமும், வித்துவான் சொக்கநாதபிள்ளை அவர்கள் பாடிய காந்திமதியம்மை பிள்ளைத் தமிழும் இத்தலத்திற்கு உள்ளவையாகும்.

அம்மன் கோவிலும், சுவாமி கோவிலும் தலபுராணப்படி முதலில் முழுதும் கண்ட இராமபாண்டியனாலும், பின்பு நின்ற சீர் நெடுமாறனாலும் கட்டப்பட்டவையாகும். ஆலயங்கள் இரண்டும் சமமான பிரிவைக்கொண்டு சங்கிலி மண்டபம் ஒன்று சேர்க்கிறது.

கோவிலில் உள்ள கல்வெட்டுக்களில் மிகப் பழமையானவை சுமார் தி.பி. 980 இருந்த வீரபாண்டியன் சாசனங்கள் ஐந்தாகும். இவை வட்ட எழுத்தில்

எழுதப்பட்டவை. கல்வெட்டுக்களில் சோழர், பாண்டியர், நாயக்கர் மன்னர்களின் காலத்தைச் சேர்ந்ததாகும். இவ்வூரை கீழ்வேம்பு நாட்டுக் குலசேகரச் சதுர்வேதிமங்கலம் என்றும், இறைவி திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

நாள்தோறும் 6 கால பூஜை. ஆண்டுதோறும் ஆனிப் பெருந்திருவிழா ஐப்பசித்திங்களில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகின்றன. இக்கோவிலுக்கு அருகில் உள்ள மற்ற தலங்கள்

22 செண்ட் நிலப்பரப்பளவில் சொக்கநாதர் திருக்கோவிலும், 62 செண்ட் நிலப்பரப்பளவில் தொண்டர்கள் நாயனார் திருக்கோவிலும் உள்ளது.

சிந்துபூந்துறை : இக்கோவில் 38 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாச நாதர். அம்மன் சௌந்தரவல்லி. அருகில் சாலைக் குமாரசாமி திருக்கோவிலில் முருகப்பெருமான் ஆறுமுகப் பெருமானாக காட்சியளிக்கிறார்.

2. உக்கிரன்கோட்டை

திருநெல்வேலியிலிருந்து வடக்கே 28கி.மீ. இக்கோவில் சுமார் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

3. பைராஞ்சேரி

கங்கைகொண்டானிலிருந்து மேற்கே 5கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

4. பிள்ளையார்குளம்

திருநெல்வேலியிலிருந்து வடக்கே 20கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

5. மானூர்

திருநெல்வேலியிலிருந்து வடக்கே 16கி.மீ. இக்கோவில் 1-15 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அம்பலவாணர்.

6. கங்கைகொண்டான்

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 19கி.மீ. இக்கோவில் 1-11 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். அம்மன் ஆனந்தவல்லி. தலவிருட்சம் புளியமரம்.

7. மாதவக்குறிச்சி

திருநெல்வேலியிலிருந்து வடக்கே 12கி.மீ. இக்கோவில் 70 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நெல்லையப்பர்.

8. பாலமடை

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 14கி.மீ. இக்கோவில் 4 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிவக்கொழுந்தீசர்.

9. சீவலப்பேரி

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 18கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 32 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

10. இராஜவல்லிபுரம்

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 10கி.மீ. தாமிரபரணியாற்றின் வடகரையில் இக்கோவில் 2-07 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியகூத்தர் அருகில் திருஅக்னீஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

11. நாரணமால்புரம்

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 8கி.மீ. இக்கோவில் 36 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

12. தட்சநல்லூர்

திருநெல்வேலியிலிருந்து வடக்கே 5கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப் பரப்பள்வில் மூலவர் நெல்லையப்பர்.

13. மணப்பாடைவீடு

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 12கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மந்திரேஸ்வரர்.

14. கீழ்பட்டணம்

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 14கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் பாண்டீஸ்வரர்.

15. மருதூர்

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 16கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 74 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு ஆதிமருதீஸ்வரர்.

16. மேலபட்டணம்

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 12கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நில பரப்பளவில் மூலவர் திருபுராந்தீஸ்வரர்.

17. திருவேங்கடநாதபுரம்

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 8கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் கதபரமேஸ்வரர்.

18. கோடகநல்லூர்

திருநெல்வேலியிலிருந்து மேற்கே 13கி.மீ. இக்கோவில் 20 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர். மேலும் இவ்வூரில் அபிமுக்தீஸ்வரர், காளத்தீஸ்வரர், புறவேலிநாதர் திருக்கோவில் களும் உள்ளன.

19. கீழ்நத்தம்

திருநெல்வேலியிலிருந்து வடகிழக்கே 10கி.மீ. இக்கோவில் 13 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

20. மேலபுத்தனேரி

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 17கி.மீ. இக்கோவில் 12 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

21. கொண்டநகரம்

திருநெல்வேலியிலிருந்து மேற்கே 9கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் குலசேகரமுடையார்.

22. பலவூர்

திருநெல்வேலியிலிருந்து மேற்கே 10கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் தழுவக் கொழுந்தீஸ்வரர்.

23. சுதமல்லி

திருநெல்வேலியிலிருந்து தென் மேற்கே 7கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அங்குண்டேஸ் வரர். அருகில் பகவதீஸ்வரர்.

24. நரசிங்கநல்லூர்

திருநெல்வேலியிலிருந்து தென் மேற்கே 5கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேகர முடையார்.

25. பேட்டை

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 3கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப் ப்ரப்பளவில் மூலவர் பால்வண்ணநாதர்.

26. கருப்பன்துறை

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 2கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியபதீஸ்வரர்.

27. விஜயராகவமுதலியார் சத்திரம்

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 91 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

28. கருங்காடு

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

29. முன்னீர்பள்ளம்

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 6கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு பரி பூர்ணகருப்பேஸ்வரர். அருகில் திருநாகேஸ் வரர் திருக்கோவிலும் உள்ளது.

30. பாளையாங்கோட்டை

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 4கி.மீ. இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப் பரப்பளவில் மூலவர் திருபுராந்தகர். அருகில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் காசிவிஸ்வ நாதர் கோவிலும், குறிச்சியில் சொக்கநாதர் திருக்கோவிலும், வண்ணார்பேட்டையில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் அருணா சலேஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

31. மேலபாளையம்

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 3கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 15 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் குலசேகரமுடையார்.

32. மேலநத்தம்

திருநெல்வேலியிலிருந்து ஒரு கி.மீ. தாமிரபரணியாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருநாகேஸ்வரர்.

33. கிருஷ்ணாபுரம்

திருநெல்வேலியிலிருந்து தென் கிழக்கே 17 கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் கிருஷ்ணேஸ்வரர்.


34. தருவை

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 7கி.மீ. கூபகராயநல்லூர். தாமிரபரணி யாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு வாழவல்லவ பாண்டீஸ்வரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி மேலும் இவ்வூரில் அக்னீஸ்வரர். ஆவுடையம்மன், உய்யக்கொண்டாள் அம்மன் மற்றும் ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலும் உள்ளது.

35. பொன்னகுடி

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 18கி.மீ. இக்கோவில் 48 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் அருணாசலேஸ்வரர்.

நாங்குனேரி வட்டம்
(திருநெல்வேலி மாவட்டம்)



1. நாங்குனேரி

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 32கி.மீ. ஸ்ரீபுருஷமங்கை. வானமாமலை, தோதாத்திரி. இக்கோவிலுள்ள மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு திருநாகேசுவரர். அம்மன் சிவகாமியம்மை. உள்பிராகாரங்களில் தனிச்சன்னிதியில் முருகப்பெருமான் ஒரு முகமும் நான்கு கரங்களுடன், மயிலுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அருணகிரிநாதர் இத்தல முருகப் பெருமானின் பேரில் மூன்று திருப்புகழ்ப் பாக்கள் பாடியுள்ளார்.

நாள்தோறும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி விசாகத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. அருகில் வானமாமலைப் பெருமாள் வீற்றிருந்த கோலத்தில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கும் திருக்கோவில் உள்ளது.

2. களக்காடு

நாங்குனேரியிலிருந்து மேற்கே 12கி.மீ. களந்தை. இக்கோவில் 3-03 ஏக்கர் நிலப்பரப்பளவில் 135 அடி உயர 9 நிலை இராஜகோபுரம் மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சத்தியவாகீசர். அம்மன் ஆவுடைநாயகி. சுவாமிக்கு சத்தியவாகீசர், பொய்யா மொழியார் என்றும், அம்மனுக்கு கோமதி யம்மை என்றும் வேறு பெயர்களும் உள்ளன. தலவிருட்சம் புன்னைமரம்.

இத்தலம் சோராரணியமென்றும், புன்னைவனமென்றும் வழங்கும். இராமாயண காப்பியத்தில் இடம் பெறும் இராவணன் சீதையைக் களவாடிச் சென்ற இடமாகிய இத்தலம் ''சோரகாடவி'' என அழைக்கப்படுகிறது. சீதையின் பிரிவால் வருந்திய இராமனும், இலக்குவனும் புன்னை மர நிழலில் தங்கியிருந்த சிவபெருமானை வழிபட்டனர். இறைவன் அவர்களுக்குச் சத்திய வாக்கினை ஈந்தார். பின்னர் இராமன், இலக்குவன், சீதை மூவரும் இத்தலத்திற்கு மீண்டும் வந்து இறைவனுக்கு சத்தியவாகீசப்பெருமான் எனப் பெயரிட்டு வணங்கிச் சென்றனர்.

ஒரு முறை காசிப முனிவர்க்கு பிள்ளை களாகப் பிறந்த தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் சண்டை ஏற்பட, தேவர்கள் தங்களைக் காக்குமாறு சிவபெருமானை வேண்டினர். சிவபெருமான் தேவர்களிடம் பொதிகை மலையின் தென்புறத்தில் தாம் எழுந்தருளியிருக்கும் களந்தையில் சென்று தவஞ் செய்யுமாறு கூறினார். பின் தேவர்கள் அசுரர்களுடன் போர் புரிய புன்னைவன நாதர் தமது கணங்களுடன் தோன்றி அசுரர்களை வென்று தேவர்களுக்கு வெற்றியை நல்கினார்.

தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமானுக்கு ''சத்திய வாகீசர்'' என்ற பெயரும், இத்தலத்திற்கும், தீர்த்தத்திற்கும் சத்திய நகரம், சத்தியதீர்த்தம் எனும் பெயரும் வழங்கலாயிற்று.

சத்தியவாகீசர் எழுந்தருளியருக்கும் திருக்கோவில் மண்டபத்தில் 21 கதிர்கள் உள்ள தூண்களில் தட்டினால் மூன்று ஸ்தாயியிலும் உள்ள 21ஸ்வரங்கள் முறையே உண்டாகும். இங்கே கல்லை மென்னரம்பாக்கும் விச்சைத்திறத்தைக் கண்டு மாணிக்கவாசகர் 'கல்லை மென்கனியாக்கும் விச்சை' என்று பாடியிருக்கிறார்.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகையில் ''ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோன் அடியேன்'' என்று பாடியுள்ளார்.

கல்வெட்டுக்கள் பல உள்ளன. வீரமார்த்தாண்ட பாண்டியர் என்பவர் திருப் பணிகள் செய்த தலம். கல்வெட்டுக்களில் இறைவர் புறமேரிச்சுவரமுடைவிய்ய நாயனார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் நான்குகால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. மேலக்கருவேலங்குளம்

களக்காடுவிலிருந்து ஒரு கி.மீ. கரிவலங்குளம். பொதிகை மலைத் தொடரின் அடிவாரத்தில், ஆற்றிற்கு மேற்கே இக்கோவில் 58 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சௌந்திரபாண்டீஸ்வரர். தல விருட்சம் நெல்லிமரம்.

இத்தலம் காடுகள் நிறைந்த பொதிகைமலை அடிவாரத்தில் உள்ளதால், இக்காட்டிலுள்ள யானைகள் இவ்வூருக்கு வந்து, கோவிலுக்கு முன்னுள்ள திருக் குளத்தில் சுற்றிவலம் வந்து விளையாடு வதைக் கண்டு களித்த சௌந்தரபாண்டியன் என்னும் மன்னர் இங்கு ஒரு நகரத்தை ஏற்படுத்தி, ஒரு சிவாலயமும் கட்டுவித்து, இறைவனுக்கு தமது பெயரில் சௌந்தரபாண்டீஸ்வரர் என்ற பெயரும், இவ்வூருக்கு கரிவலங்குளம் என்றும் பெயரிட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

தென்னாட்டில் புகழ்பெற்ற நடராஜ க்ஷேத்திரங்களில் இத்தலமும் ஒன்றாகும். சிதம்பரம், கட்டாரிமங்கலம், செப்பரை, கரி சூழ்ந்தமங்கலம், கருவேலங்குளம் என இவ்வைந்து ஊர்களிலும் உள்ள நடராஜ மூர்த்தியின் திருவுருவங்கள் ஒரே ஸ்தப தியால் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. திருவாதிரைத் திருநாளில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

மேலும் இவ்வூர்க்கு அருகில் உள்ள கீழகருவேலங்குளத்தில் இளையநாயனார் என்னும் முருகப்பெருமான் திருக்கோவில் உள்ளது.

4. சிங்கிகுளம்

நாங்குனேரியிலிருந்து வடக்கே 10கி.மீ. பச்சலாற்றின் கரையில் இக்கோவில் 62 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

5. தேவநல்லூர்

நாங்குனேரியிலிருந்து வடமேற்கே 9கி.மீ. இக்கோவில் 1-01 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

6. பத்மனேரி

களக்காட்டிலிருந்து வடக்கே 5கி.மீ. பச்சலாற்றின் கரையில் இக்கோவிலின் மூலவர் நெல்லையப்பர்.

7. பதை

களக்காட்டிலிருந்து வடக்கே 3கி.மீ. பச்சலாற்றின் கரையில் இக்கோவில் 65 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேகரநாதர்.

8. கடம்பொடுவழுவு

நாங்குனேரியிலிருந்து மேற்கே 7கி.மீ. இக்கோவில் 60 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

9. செண்பகராமநல்லூர்

நாங்குனேரியிலிருந்து கிழக்கே 7கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

10. ஏர்வாடி

நாங்குனேரியிலிருந்து தென்மேற்கே 8கி.மீ. நம்பியாற்றின் கரையில் இக்கோவில் 6-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்மிகு திருவழுத் தீஸ்வரர்.

11. தளபதிசமுத்திரம்

ஏர்வாடிக்கு கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 83 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் திருநாகேசுவரர்.

12. விஜயநாராயணம்

நாங்குனேரியிலிருந்து தென்கிழக்கே 16கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் மனோன்மணீஸ்வரர்.

13. வடக்குவள்ளியூர்

நாங்குனேரியிலிருந்து தெற்கே 12கி.மீ. வள்ளியூர். இக்கோவில் குடைவரைக் கோவிலாகும். 10-00 ஏக்கர் நிலப்பரப்பளவு கொண்டதாகும். இக்கோவில் மலையடி வாரத்தில் மலைக்குகையில் பிராதான மூர்த்தியாக முருகப்பெருமான் காட்சியளிக்கிறார். அர்த்தமண்டபத்தின் வடக்கே தனிக்கோவிலில் சிவபெருமான் அருள்மிகு ஸ்ரீ ஜெயந்தீஸ்வரர் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் சௌந்தரநாயகி. தலவிருட்சம் வில்வம். தீர்த்தம் சரவணப் பொய்கை. உள்பிராகாரத்தில் ஸ்ரீ ஆச்சார்ய விநாயகர், நடராஜர், பைரவர், சனீஸ்வரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

அகத்தியமுனிவர், இந்திரன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம். அருணகிரிநாதர் முருகப்பெருமானின் பேரில் திருப்புகழ்ப் பாடிப் பரவியுள்ள தலமாகும்.

குலசேகர பாண்டிய மன்னன் திருப்பணிகள் செய்த தலமாகும்.

நாள்தோறும் 7 கால பூஜை நடைபெறுகிறது.

14. உருமங்குளம்

திசையன்விளையிலிருந்து தென்மேற்கே 6கி.மீ. இக்கோவில் 18 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சீதளசிவலிங்கேசுவரர்.

15. பனகுடி

ஏர்வாடியிலிருந்து தெற்கே 11கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமலிங்கர்.

16. காவல்கிணார்

ராதாபுரத்திலிருந்து மேற்கே 8கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் காளத்தீஸ்வரர்.

17. ராதாபுரம்

நாங்குனேரியிலிருந்து தெற்கே 32கி.மீ. இராஜராஜபுரம். இக்கோவில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் அருள்மிகு வரகுண பாண்டீஸ்வரர். அம்மன் நித்ய கல்யாணியம்மை. தீர்த்தம் சிவகங்கை. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், கங்காளநாதர், பைரவர், நடராஜர், சுந்தரேஸ்வரர், அகத்தியர், 63 நாயன்மார்கள், நவக்கிரகம் முதலிய சன்னிதிகள் உள்ளன.

வரகுணபாண்டிய மன்னன் இக்கோவிலை கட்டுவித்து தம்பெயரில் இறைவனுக்கு பெயர் சூட்டியதால் இத்தல இறைவர் வரகுண பாண்டீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார்.

நாள்தோறும் நான்கு கால பூஜை, சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.


18. உவரி

திசையன்விளையிலிருந்து தெற்கே 6கி.மீ. கடற்கரைத்தலம். இக்கோவில் 20 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சுயம்புலிங்க சுவாமி. ஆலயத்திற்கருகேயுள்ள கடல் சிவதீர்த்தம். நான்கு கால பூஜை நடைபெறுகிறது. வைகாசியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது.

19. கருங்குளம்

ஏர்வாடியிலிருந்து தெற்கே 27கி.மீ. இக்கோவில் 30 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நாரம்புநாதர்.

விளாத்திக்குளம் வட்டம்
(தூத்துக்குடி மாவட்டம்)



விளாத்திகுளம் வட்டம்

1. விளாத்திகுளம்

கோவில்பட்டியிலிருந்து கிழக்கே 32கி.மீ. இக்கோவில் வைப்பாற்றின் கரையில் இக்கோவில் உள்ளது மூலவர் சுந்தரேஸ்வரர்.

2. முத்தலாபுரம்

விளாத்திகுளத்திலிருந்து வடமேற்கே 22 கி.மீ. வைப்பாற்றின் தென்கரையில் இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு பவனேஸ்வரர். ஆனிமாத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. நம்பிபுரம்


விளாத்திகுளத்திலிருந்து வடமேற்கே 16 கி.மீ. வைப்பாற்றின் கரையில் இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர்.

4. வைப்பார்

விளாத்திகுளத்திலிருந்து தென்கிழக்கே 18 கி.மீ. வைப்பாற்றின் கரையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். வைப்பாறு கடலுடன் கலக்கும் இடத்தில் அமைந்த காரணத்தால் ஆற்றின் பெயரால் இவ்வூர் பெயர் பெற்றது.

கோவில்பட்டி வட்டம்

(தூத்துக்குடி மாவட்டம்)



1. கோவில்பட்டி

சாத்தூரிலிருந்து தெற்கே 23 கி.மீ. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் இராஜகோபுரம், ஒரு பிராகாரத்துடன் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு பூவனநாதர் அம்மன் செண்பகவல்லி. தீர்த்தம் அகத்தியர் தீர்த்தம். தலமரம் களாமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், அகத்தியர், தட்சிணாமூர்த்தி, நடராஜர், பைரவர், 63 நாயன்மார்கள், சனீஸ்வரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

அகத்தியர்க்கு காட்சி தந்த தலம். செண்பகபாண்டிய மன்னர் இக்கோவிலை விரிவுபடுத்தி கட்டுவித்ததாக இங்குள்ள கல்வெட்டுக்கள் குறிப்பிடப்படுகின்றன.

நாள்தோறும் 5 கால பூஜை. ஐப்பசியில் திருக்கல்யாணம், பங்குனியில் உத்திரம், சித்திரைமுதல் நாள் தீர்த்தவிழா முதலிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

2. கழுகுமலை

கோவில்பட்டியிலிருந்து மேற்கே 19கி.மீ. இக்கோவில் 9-00 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட சிறிய மலை,300 அடி உயரம் கொண்டது. இத்தல மூலவர் ஜம்பு நாதீஸ்வரர். அம்மன் அகிலாண்டேஸ்வரி. மற்றும் முருகப் பெருமான் ஸ்ரீகழுகாசலபதி. அருணகிரிநாதர் திருப்புகழ் அருளியுள்ளார். உச்சியில் பிள்ளையார் கோவில் உள்ளது.

இம்மலையின் மற்றொரு பகுதியில் சற்றுத்தாழ்ந்த உயரத்தில் சிவன் கோவில் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு வெட்டுவான்கோவில் என்று பெயர். 30 அடி ஆழத்தில் சதுரமாகப் பாறைக்குள் குடைந்து அதன் நடுப்பகுதியில் கோவில் கட்டப்பட்டிருக்கின்றது. நீளம் 47 அடி, அகலம் 24 அடி, உயரம் 30 அடி ஆகும். கோபுரத்தின் உச்சியில் தாமரை இதழ் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது பாண்டியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பெற்றதாகும்.

மலையடிவாரத்தில் மேற்கே ஆம்பல் ஊருணி உள்ளது. முற்காலத்தில் ஜடாயுவின் தம்பியான சம்பாதி ஜடாயுவிற்கு ஈமக்கிரியை செய்ய இயலாமல் போனதால் பாவம் தீர `இத்தலத்திற்கு வந்த சம்பாதி ஆம்பல் மலர்களைக் கொண்டு இத்தல முருகப் பெருமானை வழிபட்டு பாவத்தைப் போக்கிக் கொண்ட தலம். இதனால் இத்தலத்திற்கு கழுகாசலம் என்றும் தற்போது கழுகுமலை என்றும் பெயர் பெற்றது.

நாள்தோறும் ஆறு கால பூஜை. ஐப்பசி கந்தசஷ்டி, தைப்பூசம், வைகாசி விசாகத்தன்று உற்சவம் நடைபெறுகிறது.

3. லிங்கம்பட்டி

கோவில்பட்டியிலிருந்து கிழக்கே 6கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சங்கரநாராயணர்.

4. திருமங்கலகுறிச்சி

கயத்தாறுக்கு வடக்கே 10 கி.மீ. இக்கோவில் 56 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் காசிவிஸ்வநாதர்.

5. கயத்தார்


கோவில்பட்டியிலிருந்து தெற்கே 30கி.மீ. உப்போடைநதிக்கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கோதண்டராமேஸ்வரர்.

6. கடம்பூர்

கயத்தாறுக்கு வடகிழக்கே 12கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் உடையநம்பேஸ்வரர்.

திருச்சிற்றம்பலம்

ஒட்டப்பிடாரம் வட்டம்
(தூத்துக்குடி மாவட்டம்)



1. ஒட்டப்பிடாரம்

தூத்துக்குடியிலிருந்து வடமேற்கே 16கி.மீ. இக்கோவில் 29 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர். பேயை ஒட்டி அடிக்கும் பிடாரிக்கோவில் இவ்வூரில் உள்ளதால் ஊர்பெயர் ஒட்டப்பிடாரியாகி, ஒட்டப்பிடாரமாக பெயர் பெற்றது.

2. பசுவந்தனை

ஒட்டப்பிடாரத்திலிருந்து வடக்கே 12கி.மீ. இக்கோவில் 49 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு கைலாசநாதர். அம்மன் ஆனந்தவல்லி. தலவிருட்சம் புல். இத்தல லிங்கத்தின் மீது பசு ஒன்று தன் மடியில் இருந்த பாலைச் சொரிந்த காரணத்தால் பசுவந்தனை எனப் பெயர் பெற்றது. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

3. குலசேகரநல்லூர்


ஒட்டப்பிடாரத்திலிருந்து மேற்கே 6கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

4. புதியம்புத்தூர்

ஒட்டப்பிடாரத்திலிருந்து தெற்கே 5கி.மீ. இக்கோவில் 23 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேரநாதர்.

திருச்சிற்றம்பலம்

தூத்துக்குடி வட்டம்
(தூத்துக்குடி மாவட்டம்)




தூத்துக்குடி வட்டம்

1. தூத்துக்குடி

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே 52கி.மீ. இக்கோவில் 4-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு சங்கரராமேஸ்வரர். இவ்வூர் ''தூற்றிக்குடி'' என்று வாகைக்குளம், கங்கைகொண்டான் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது. நீர்நிறைந்த நிலத்தையும், தூர்த்துத் துறைமுகமும், குடியிருப்பும் தோன்றி ஊர் என்பதால் தூத்துக்குடி என்றாயிற்று. இவ்வூரில் மற்றொரு கோவிலாக 10 செண்ட் நிலப்பரப்பளவில். ஏகாம்பரநாதர். அம்மன் காமாட்சியம்மன்.

ஸ்ரீவைகுண்டம் வட்டம்
(தூத்துக்குடி மாவட்டம்)



1. ஸ்ரீவைகுண்டம்

திருநெல்வேலியிலிருந்து தென்கிழக்கே 26கி.மீ. தாமிரபரணி ஆற்றின் கரையில் இக்கோவில் ஸ்ரீகைலாசபுரத்தில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு கைலாயநாதர். அம்மன் சிவகாமியம்மை.

உரோமச முனிவர் ஒன்பது இடங்களில் சிவலிங்கங்களை வைத்து பூஜை செய்தார். அவை நவகைலாசம் என்று பெயர் பெற்றது. இத்தலமும் ஒன்றாகும். இத்தலம் சனித்தலமாகும்.

கயிலைக்கலம்பகம் இக்கோவில் இறைவன் மீது குமரகுருபர சுவாமிகள் இயற்றிய இலக்கியமாகும். மேலும் இவ்வூரில் 5.25 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஸ்ரீ வைகுந்தநாத பெருமாள் கோவிலும் உள்ளது.

2. பெருங்குளம்

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து கிழக்கே 10கி.மீ. தாமிரபரணி ஆற்றின் வடபகுதியில் இக்கோவில் 1-82 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு உக்கிரவழுதீசுவரர்.

உக்கிரபாண்டிய மன்னர் அரசாட்சி செய்தார். மன்னர் பூசிக்கப் பெற்றமையில் இத்தல சிவபெருமானுக்கு உக்கிரவழுதீசுவரர் என்று பெயர் பெற்றது.

உக்கிரபாண்டியர் முன்னிலையில் நக்கீரனார் முதலிய சங்கப் புலவர்கள் கூடிய இடத்தில் திருக்குறள் அரங்கேற்றம் நடைபெற்றது. அங்ஙனம் நடந்த இடம் இத்தலமே என்பதற்கு அடையாளமாக இத்தலத்தில் 49 புலவர்களின் வடிவமும், உக்கிர பாண்டியர் வடிவமும் அமைந்துள்ளது. இவ்வூர் வைணவக் கோவில் 108 திவ்வியதேசத்தில் ஒன்றாகும்.

3. வடக்குகரைசேரி

வல்லநாட்டிலிருந்து வடகிழக்கே 7கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

4. முறப்பநாடு

வல்லநாட்டிலிருந்து வடக்கே 4கி.மீ. தாமிரபரணி ஆற்றின் கரையில் 3-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர். நவகைலாசத் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும். வியாழன் தலமாகும்.

மேலும் கோவில்பட்டி என்னுமிடத்தில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கேஸ்வரர்.

5. வல்லநாடுகஸ்பா

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வடமேற்கே 16கி.மீ. இக்கோவில் 1-01 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் திருமூலநாதர்.

6. மணக்கரை

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வடமேற்கே 8கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

7. விட்டலாபுரம்

செய்துங்கநல்லூரிலிருந்து வடக்கே 2கி.மீ. இக்கோவில் 56 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் விருப்பாட்சிநாதர்.

8. அரம்பணை

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மேற்கே 6கி.மீ. தாமிரபரணி ஆற்றின் கரையில் இக்கோவில் 13 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சொக்கலிங்கர்.

9. கொங்கராயகுறிச்சி

கருங்குளத்திலிருந்து கிழக்கே ஒரு கி.மீ. தாமிரபரணி ஆற்றின் கரையில் இக்கோவில் 2-07 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் வீரபாண்டீஸ்வரர். அருகில்

சட்டநாதர் திருக்கோவிலும் உள்ளது.

10. பழையகாயல்

ஏரல்லிருந்து வடகிழக்கே 10கி.மீ. கொற்கை. இக்கோவில் உள்ள மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு சங்குமுகஈஸ்வர்ர். ஆயிரக்கணக்கான சங்குகளின் ஒலி கடலிலிருந்து காற்றில் மிதந்து வருவதால் இத்தல இறைவனுக்கு இப்பெயர் பெற்றதாக செவிவழிசெய்தியாகும்.

11. அகரம்

முக்காணியிலிருந்து வடக்கே 3கி.மீ. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

12. மாரமங்கலம்

ஏரல்லிருந்து வடகிழக்கே 4கி.மீ. இக்கோவில் ஒரு செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சந்திரசேகரர்.

13. சிறுதொண்டநல்லூர்

ஏரல்லிருந்து வடமேற்கே ஒரு கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 40 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுந்தரேஸ்வரர். அருகில் 17 செண்ட் நிலப்பரப்பளவில் சொக்கலிங்கர் திருக்கோவிலும் உள்ளது.

14. கருங்குளம்

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மேற்கே 8கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவிலில் உள்ள மூலவர் மாதவமார்த்தாண்டேஸ்வரர்.

15. செய்துங்கநல்லூர்

கருங்குளத்திலிருந்து மேற்கே 3கி.மீ. இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் வியாக்ரபாதீஸ்வரர்.

16. தெற்குகரைச்சேரி

பெருங்குளத்திலிருந்து தெற்கே 5கி.மீ. இக்கோவில் 64 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குலசேகரநாதர்.

17. வேலூர்கஸ்பா

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து தெற்கே 3கி.மீ. தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 42 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு மத்தியபதீஸ்வரர்.

18. ஸ்ரீபரங்குசநல்லூர்

ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து தென்கிழக்கே 2கி.மீ. திருகாந்தீசுவரம். தாமிரபரணியாற்றின் கரையில் இக்கோவில் 76 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு ஏகாந்தலிங்கேசுவரர். அம்மன் தருமசம்வர்த்தினி.

19. கீழ்பிடகை

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து கிழக்கே 5கி.மீ. இக்கோவில் வரதராஜபுரம் என்னுமிடத்தில் 1-65 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு திருக்கண்டீஸ்வரர்.


20. மங்களகுறிச்சி

பெருங்குளத்திலிருந்து தெற்கே ஒரு கி.மீ. தாமிரபரணியாற்றின் வடகரையில் இக்கோவில் 2 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவகைலாசபதி.

21. முக்காணி

ஏரல்லிருந்து கிழக்கே 6 கி.மீ. தாமிரபரணியாற்றின் வடகரையில் இக்கோவில் 6 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் இராமபரமேஸ்வரர்.

திருச்செந்தூர் வட்டம்
(தூத்துக்குடி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. திருச்செந்தூர்

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து தென் கிழக்கே 38கி.மீ. மேலக்கோவில் என்றழைக் கப்படும் இக்கோவிலில் உள்ள மூலவர் சிவக்கொழுந்தீச்சுரர். அம்மன் ஆனந்தவல்லி யம்மை. இவ்வூரின் சிறப்புக்குக் காரணமே இங்கு அமைந்துள்ள செந்தில்லாண்டவன் திருக்கோவிலாகும். இரண்டாவது படை வீடாகும். அருணகிரிநாதர் 84 திருப்புகழ்ப் பாடல்கள் அருளியுள்ள தலம்.

2. திருக்கல்லூர்

ஆழ்வார்திருநகரிலிருந்து கிழக்கே 2கி.மீ. இக்கோவில் 11 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சேரசோழபாண்டி யஈஸ்வரர்.

3. தென்திருப்பேரை

ஆழ்வார்திருநகரிலிருந்து கிழக்கே 10கி.மீ. மூலவர் சுயம்புலிங்கமாக அருள் மிகு கைலாசநாதர். ஒன்பது கைலாசத் தலங்களில் இத்தலம் புதன் தலமாகும்.

4. ஆத்தூர்

காயல்பட்டிணத்திலிருந்து வடக்கே 8கி.மீ. ஆற்றூர். தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் இக்கோவில் உள்ளது. மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு சோமநாதர். அம்மன் சோமசுந்தரி. தீர்த்தம் சந்திரபுஷ்கரணி. தலவிருட்சம் ஆலமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், 63 நாயன்மார்கள், சப்தமாதர்கள், ஜுரதேவர், காசிவிஸ்வநாதர், சொக்கர் முதலிய சன்னிதிகள் உள்ளன. தாமிரபரணியின் கரையில் அமைந்துள்ளதால் இத்தலம் ஆற்றூர் என்று அழைக்கப்படுகிறது. சோமன் என்றால் சந்திரன். சந்திரனுக்கு அருள்பாலித்ததால் சோமநாதர் என்று பெயர் பெற்று விளங்குகிறார். இத்தலத்தில் திருமால் சயனக்கோலத்தில் எழுந்தருளி யுள்ளார்.

5. சேறுடமங்கலம்

ஆத்தூரிலிருந்து வடகிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 1-25 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர்.

6. நல்லூர்

நசரத்திலிருந்து கிழக்கே 8கி.மீ. இக்கோவிலில் உள்ள மூலவர் திருநாகேசுவரர்.

7. காயல்பட்டிணம்

திருச்செந்தூரிலிருந்து வடக்கே 8கி.மீ. இக்கோவில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கணபதீஸ்வரர். அருகில் 15 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சோம நாதர் திருக்கோவிலும், 8 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சங்கரலிங்கேசுவரர் திருக்கோவிலும் உள்ளது.

8. ஆறுமுகனேரி

திருச்செந்தூரிலிருந்து வடமேற்கே 7கி.மீ. இக்கோவில் 1-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சோமநாதர்.

9. செட்டியபத்து

உடன்குடியிலிருந்து மேற்கே 3 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சிதம்பரேஸ்வரர்.

10. குலசேகரப்பட்டினம்

திருச்செந்தூரிலிருந்து தென்மேற்கே 14கி.மீ. குலசை. இக்கோவில் 75 செண்ட் நிலப்பரப்பளவில் 150 அடி உயர கோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு காஞ்சி விஜயகாசி கொண்டபாண்டீசர். அம்மன் அறம்வளர்த்தநாயகி. தலவிருட்சம் மாமரம்.


பாண்டியமன்னன் குலசேகரபாண்டி யன் இக்கோவிலை விரிவுபடுத்தி கட்டு வித்த தலம். நாள்தோறும் நான்கு கால பூஜை. சித்திரையில் பிரமோற்சவம் நடை பெறுகிறது.

மேலும் இவ்வூரில் சிதம் பரேஸ்வரர் திருக்கோவிலும், அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோவிலும் உள்ளன.

திருச்சிற்றம்பலம்

சாத்தான்குளம் வட்டம்

(தூத்துக்குடி மாவட்டம்)



சாத்தான்குளம் வட்டம்

1. சாத்தான்குளம்

திருநெல்வேலியிலிருந்து தென் கிழக்கே 50கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் விஸ்வநாதர்.

2. கட்டாரிமங்கலம்

சாத்தான்குளத்திலிருந்து வடக்கே 8கி.மீ. இக்கோவில் 1-27 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அழகியகூத்தர். நடராஜர் கோவில் கொண்டுள்ள தலம். மார்கழி திருவாதிரையில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

3. கருங்கடல்

சாத்தான்குளத்திலிருந்து வடமேற்கே 6கி.மீ. இக்கோவில் 5 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் சங்கரலிங்கேசுவரர்.


4. சாஸ்தாவிநல்லூர்

சாத்தான்குளத்திலிருந்து தெற்கே 8கி.மீ. இக்கோவில் 14 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நந்தீஸ்வரர்.

5. பலாகுறிச்சி

சாத்தான்குளத்திலிருந்து தென்கிழக்கே 10கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப் பரப்பளவில் மூலவர் வரகுணபாண்டீஸ்வரர்.

கல்குளம் வட்டம்
(கன்யாகுமரி மாவட்டம்)



1. பத்மனாபபுரம்

நாகர்கோவிலிருந்து வடமேற்கே 12 கி.மீ. கல்குளம். இக்கோவில் 2-59 ஏக்கர் நிலப்பரப்பளவில் 5 நிலை இராஜகோபுரம், இரண்டு பிராகாரங்களுடன் மூலவர் சுயம்பு லிங்கமாக அருள்மிகு நீலகண்டேஸ்வரர் கிழக்கு நோக்கியும், அம்மன் ஆனந்தவல்லி தனிச்சன்னிதியில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கின்றனர்.

திருக்கோவிலுக்கு முன்பு திருக்குளம் உள்ளது. மூலவரைக் கல்குளம் மகாதேவர் என்றும் அழைப்பர். வெளிப்பிராகாரத்தில் ஆதிமூல சுவாமி சன்னிதி உள்ளது.

முற்காலத்தில் கல்குளம் என்ற பெயருடன் வேணாட்டு மன்னர்களின் தலைநகராக இவ்வூர் திகழ்ந்தது.

பரசுராமர் ஸ்ரீவர்த்தமானபுரத்தில் ஒரு ஆலயத்தைக் கட்டினார். பின்னர் க்ஷத்திரிய குலத்தில் சோமவம்சத்தில் தோன்றிய பானுவிக்கிரமன் என்ற இளவரசனிடம் தனது வாளைக் கொடுத்துவிட்டு ஸ்ரீவர்த்தமானபுரத்தைத் தலைநகராக அமைத்து அரசாளுமாறு கட்டளையிட்டார். ஸ்ரீவர்த்தமானபுரமே தற்போது பத்மநாபபுரம் என்று தலவரலாறு கூறுகிறது.

மண்டபத் தூண்களில் கர்ணன், அர்ச்சுனன், கங்காளநாதர், வேணுகோபலன் முதலிய அற்புதத் திருவுருவங்கள் காட்சியளிக்கின்றன.

குமரி மாவட்டத்தில் சிவராத்திரி விழாவுடன் தொடர்புடைய பண்ணிரண்டு சிவாலயங்களுள் இத்தலமும் ஒன்றாகும். இவ்வூரைச் சுற்றியமைந்துள்ள 12 சிவாலயங்களுக்கும் சென்று வழிபடுவர்.

கல்வெட்டுக்களில் இவ்வூரைக் கல்குளம் என்றும், இறைவர் கல்குளத்து மகாதேவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. மார்த்தாண்டவர்மா் தனது நாட்டிற்கு வேணாடு என்ற பெயரை மாற்றித் திருவிதாங்கூர் என்று பெயரிட்டார்.

நாள்தோறும் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. புரட்டாசி நவராத்திரியும், பங்குனியில் பிரமோற்சவம் நடைபெறு கின்றன.

இத்தலத்தில் வேணாட்டு மன்னர்கள் பயன்படுத்திய அரண்மனை சிறந்த சுற்றுலா மையமாகவும், அருகில் உள்ள இராமசாமி திருக்கோவிலும் அமைந்துள்ளன.

2. திற்பரப்பு

திருவட்டார்க்கு வடக்கே 11 கி.மீ. கோதையாற்றின் கிழக்குக் கரையில் இக்கோவில் 2-35 ஏக்கர் நிலப்பரப்பளவில், பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாதேவர் மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் உமாதேவி, உள்பிராகாரத்தில் விநாயகர், முருகப் பெருமான், பாலகிருஷ்ணன், சாஸ்தா, பகவதியம்மன், அனுமன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

தக்கனை வதம் செய்து அக்கோபம் தனிய இத்தலத்திற்கு வந்து அமர்ந்தார் என்றும், கோபத்தின் உச்சநிலையை காணப்பயந்து நந்தி அவர் முன்னால் நிற்க முடியாமல் வடக்கு ஒரமாக ஒதுங்கியிருப்பதாகவும், இதனால்தான் இறைவர் மேற்கு நோக்கியிருக்கிறார் என்றும் கூறுகின்றனர்.

பத்மநாபபுரத்தைச் சுற்றி அமைந்துள்ள புகழ் பெற்ற 12 சிவாலயங்களில் இத்தலம் மூன்றாவதாகும்.

இக்கோவிலின் அருகில் அருவி உள்ளது. நாள்தோறும் 5 கால பூஜை. பங்குனி மாதத்தில் பிரமோற்சவமும், மார்கழி திருவாதிரையிலும், சிவராத்திரிலும் உற்சவம் நடைபெறுகிறது.

3. திருநந்திக்கரை

திற்பரப்புக்கு கிழக்கே 2 கி.மீ. இக்கோவில் 90 செண்ட் நிலப்பரப்பளவில் இரண்டு பிராகாரங்களுடன் மலையடி வாரத்தில் இக்கோவிலின் மூலவர் அருள்மிகு நந்தீஸ்வரர். உள்பிராகாரத்தில் விநாயகர், தாணுமாலயப்பன், சாஸ்தா, கிருஷ்ணன், நாகர் முதலிய சன்னிதிகள் உள்ளன. இக்கோவில் குகைக்கோவிலாகும். பாறை யின் அடிவாரத்தில் கூம்பிய விமானத்துடன் கூடிய இக்கோவில் உள்ளது. இத்தலம் 12

சிவாலயங்களில் ஒன்றாகும். வீரநந்தி அடிகளின் மேற்பார்வையில் இக்குகைக் கோவில் தோன்றியிருக்கிறது எனக் கூறப்படுகிறது. இக்கோவிலில் 11 கல்வெட்டுக்கள் உள்ளன. முதல் ராஜராஜசோழன் காலத்தியவையாகும்.

4. பொன்மனை

திருவட்டாரிலிருந்து வடகிழக்கே 10 கி.மீ. இக்கோவில் 2-00 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு தீம்பாலநாதர். பத்மநாபபுரத்தைச் சுற்றி அமைந்துள்ள 12 சிவாலயங்களில் இத்தலமும் ஒன்றாகும். நாள்தோறும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது. மார்கழி திருவாதிரையிலும், மகாசிவராத்திரிலும் உற்சவம் நடைபெறுகிறது. மேலும் இக்கோவிலுக்கு அருகில் மகாதேவர் திருக்கோவிலும் உள்ளது.

5. வாழ்வச்சகோஷ்டம்

தக்கலையிலிருந்து வடமேற்கே 6 கி.மீ. திருப்பன்றிக்கோடு மகாதேவர் திருக்கோவில் என்று வழங்கப்படுகிறது. இக்கோவில் 80 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாதேவர்.

இரணியாக்ஷன் கொடுமைகளிலிருந்து தேவர்களைக் காப்பாற்ற திருமால் ஒற்றைக் கொம்போடு கூடிய பன்றியின் உருவெடுத்து அசுரனைக் கொன்று பூமியைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தார். வெற்றி மமதையால் அரக்க குணம் பெற்ற அப்பன்றி, உலகத்தாரைத் துன்புறுத்தி, கடலுக்குள் குதித்து அட்டூழியம் செய்யவே, சிவபெருமான் தோன்றி அதன் கொம்பை முறித்து ஆதரித்தருளினார். இக்காரணத் தாலே மூலவர் திருப்பன்றிக்கோடு மகாதேவர் என்றழைக்கப்படுகிறார். புகழ்பெற்ற 12 சிவாலயங்களில் இத்தலமும் ஒன்றாகும். கேரளக் கட்டடக் கலைக்கும், அமைப்பிற்கும், சிறப்புக்கும் எடுத்துக் காட்டாக இக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு அருகில் பகவதியம்மன் திருக்கோவில் உள்ளது. இங்கு அம்மன் பராசக்தியாகக் காட்சியளிக்கிறார். வலதுபக்கம் திருமால் சன்னிதியும், இடப்பக்கம் சிவபெருமான் தேவியாரோடும் காட்சியளிக்கின்றனர். இத்தலத்தில் உள்ள துர்க்கை மகிஷாசுரமர்த்தினி சிறப்பாகப் போற்றப்படுகிறார். ஆடிச் செவ்வாய், அனைத்துப் பௌர்ணமி நாட்களிலும் உற்சவம் நடைபெறுகிறது.

6. கூத்தநல்லூர்

தக்கலையிலிருந்து வடக்கே 5 கி.மீ. இக்கோவில் பன்னிப்பாக்கம் மகாதேவர் கோவில் என்று கூறுவர். இக்கோவில் 64 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு மகாதேவர். அர்ச்சுனன் வணங்கிய தலம். பத்மநாபபுரத்தைச் சுற்றி அமைந்துள்ள 12 சிவாலயங்களில் இத்தலமும் ஒன்றாகும். இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. மகாசிவராத்திரியில் உற்சவம் நடைபெறுகிறது.

7. கப்பியரை

தக்கலைக்கு மேற்கே 5 கி.மீ. இக்கோவில் 25 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர்.

8. திருவிதாங்கோடு

தக்கலைக்கு தென்மேற்கே 2 கி.மீ. கேரளபுரம். இக்கோவில் 2-40 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர். 1200 வருட முற்பட்ட கோவில்.


9. இரணியல்

தக்கலைக்கு தெற்கே 7 கி.மீ. சிவகிரிமார்த்தாண்டேஸ்வரர். குடவரைக் கோவிலாக இக்கோவில் 1-50 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் அருள்மிகு மார்த்தாண்டேஸ்வரர். மார்த்தாண்டவர்ம அரசனால் கட்டுவித்ததால் மூலவர் மார்த்தாண்டேஸ்வரர் என்று அழைக்கப்படு கிறார்.

திருச்சிற்றம்பலம்

தோவாளை வட்டம்

(கன்யாகுமரி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. பூதப்பாண்டி

நாகர்கோவிலிருந்து வடக்கே 10 கி.மீ. பழையாற்றின் மேற்குக் கரையில், தாடகைமலையின் அடிவாரத்தில் இக் கோவில் உள்ளது. மூலவர் அருள்மிகு பூதலிங்கசுவாமி கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். அம்மன் சிவகாமியம்மை. உள்பிராகாரத்தில் விநாயகர், முருகப் பெருமான், நடராஜர், நினைத்ததை முடிக்கும் விநாயகர், தட்சிணாமூர்த்தி, சண்டிகேசுவரர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

மூலஸ்தானம் அமைந்துள்ள இப்பாறை யைச் சுற்றிலும் எழுப்பப்பட்டிருக்கும் உயர்ந்த கற்சுவர் ஒரு சிறிய கோட்டையின் தோற்றத்தை கொண்டதாகும். கோவிலின் வடக்கே திருக்குளம் உள்ளது. இவ்வால யத்திற்கு விமானம் இல்லை. செட்டி மண்டபத்தில் உள்ள இரு துவாரகர்களின் தோற்றம் சிறப்பானதாகும். தைமாதத்தில் பிரமேற் சவமும், ஐப்பசியில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகின்றன. நாள்தோறும் 6 கால பூஜை நடைபெறுகிறது.

2. அழகிய பாண்டியபுரம்

பூதப்பாண்டியிலிருந்து வடக்கே 5 கி.மீ. பழையாற்றின் கரைப்பகுதியில் இக்கோவில் 57 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் ஜெயந்தீஸ்வரர். கல்வெட்டுக்களில் இவ்வூரை 'அதியனூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர்க்கு அருகில் உள்ள குறத்தியறை என்னும் சிற்றூரில் ஔவையாரம்மன் கோவில் உள்ளது.

3. அனந்தபுரம்

பூதப்பாண்டியிலிருந்து வடகிழக்கே 6 கி.மீ. இக்கோவில் 81 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் குந்தீஸ்வரர்.

4. தெரிசனங்கோப்பு

பூதப்பாண்டியிலிருந்து வடக்கே 2 கி.மீ. பழையாற்றின் கரையில் இக்கோவில் 1- 11 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் இராகவேசுரர் அம்மன் உலகநாயகி.

இராமபிரான் தாடகை வதம் செய்தபின் அப்பெண் பாவம் தீர இராமர் இத்தலத்தில் இலிங்க பிரதிஷ்டை செய்து வணங்கியதால் இராமபிரான் பெயரால் இராகவேசுரர் என்று பெயர் பெற்று விளங்குகிறார். இதற்குக் ஆதாரமாக இராமபிரானின் பாதச் சுவடுகளும், தாடகை மலையும் ஆதாரங்களாகக் காட்டப்படுகின்றன.

இக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்களில் இராஜராஜ சோழனின் எட்டாவது ஆண்டு ஆட்சிக்காலத்தில் இவ்வூரை திருச்சனம்கோப்பு என்பதை திருவரன்கோல்ப்பு என்றும் கோவிலை ஆழ்வார் கோவில் என்றும் குறிப்பிடப்படுகிறது.

சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. இவ்வூர்க்கு அருகில் மார்த்தாண்டேஸ்வரர் கோவில் உள்ளது.

5. தாழைக்குடி

பூதப்பாண்டியிலிருந்து தெற்கே 4 கி.மீ. இக்கோவில் 2-38 ஏக்கர் நிலப்பரப்பளவில் மூலவர் ஜயந்தீசுரர், அம்மன் அழகம்மை.

தாழைகள் நிறைந்த காட்டைச் சீராக்கி மக்கள் குடியேறியதால் தாழைக்குடி என்று பெயர் பெற்றது.


தேவேந்திரன் மகன் ஜயந்தன் இத்தலத்திற்கு வந்து தங்கிச் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டதால் மூலவர் ஜயந்தீசுவரமுடைய நாயனார் என்றும் அழைக்கப்படுகிறார். இக்கோவிலை வீரகேரளவர்மன் கட்டியதாக கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.

நாள்தோறும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

6. இறச்சகுளம்

பூதப்பாண்டியிலிருந்து தெற்கே 6 கி.மீ. பழையாற்றின் மேற்கு பகுதியில் இக்கோவில் 27 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர். அருகில் ஜடாயுபுரத்தில் ஜடாதேஸ்வரர் திருக்கோவில் உள்ளது.

நாகர்கோவில் வட்டம்
(கன்னியாகுமரி மாவட்டம்)



திருச்சிற்றம்பலம்

1. கன்னியாகுமரி



நாகர்கோவிலிருந்து தென்கிழக்கே 19 கி.மீ. பகவதியம்மன் கோவில், கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோவில். இந்தியாவின் தென்கோடி முனையில் கிழக்கே வங்கக் கடலும், தெற்கே இந்தியப் பெருங்கடலும், மேற்கே அரபிக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் இக்கோவில் கிழக்கு நோக்கிய மூன்று பிராகாரங்களுடன் அன்னை கன்னியாகுமரியம்மை கிழக்கு நோக்கித் தவக்கோலத்தில் காட்சியளிக்கிறாள். உள்பிராகாரத்தில் விநாயகர், சூரியன், தியாக சௌந்தரியம்மை, பால சௌந்தரியம்மை, முதலிய சன்னிதிகள் உள்ளன. கோவிலைச் சூழ்ந்த கடல் துறையில் 11 தீர்த்தங்கள் உள்ளன.

இத்தலத்தில் விளங்குகின்ற அன்னை குமரியாக கன்னியாக உள்ள காரணத்தினால் இத்தலத்திற்கு கன்னியாகுமரி என்று பெயர்.

பாணாசுரன் என்னும் அரக்கன் மூன்று உலகங்களையும் வென்று, தேவர்களைத் துன்புறுத்தினான். கொடுமைகளைத் தாங்கமுடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

தேவர்களிடம் சிவபெருமான் அன்னை பராசக்தியால் மட்டுமே அரக்கனை அழிக்க முடியும் என்று விளக்கவே தேவர்கள் பராசக்தியிடம் தொழுது நின்றனர். பராசக்தி தேவர்களுக்கு வாக்களித்து பின்பு கன்னியாய் உருமாறி குமரியில் வந்து கடுந்தவம் மேற்கொண்டாள். தவக் கோலத்தில் இருந்த கன்னியின் பேரழகைக் கண்ட பாணாசூரன் மதிமயங்கி தேவியை நெருங்கினான். அவனது காதல் வார்த்தைகள் பலனளிக்காமல் போகவே அவளை பயமுறுத்தும் வகையில் உடைவாளை உருவினான். தேவி கோபம் கொண்டு போர் செய்து பாணாசூரனைக் கொன்றாள் என்பது தலவரலாறு, இப்போழுது இங்கு ஆண்டுதோறும் புரட்டாசித் திங்களில் கொண்டாடப்படும் நவராத்திரி விழாவை பராசக்தி பாணாசூரனைக் கொன்றொழித்த விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அன்னையின் திருக்கோவில் திகழ்கின்ற இக்குமரி முனையில் நின்று கதிரவனின் உதயத்தையும், மறைவையும் கடலிடையே கண்டுகளிக்கலாம்.

தேவியின் மூக்கணியிலுள்ள வைரக் கல்லினின்று வீசும் பேரொளியைக் கடல் யாத்ரீகர்கள் கலங்கரை விளக்கென்று எண்ணிவிடுவார்களாம். நாள்தோறும் 11 கால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் விசாகநட்சத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

கன்னியாகுமரியிலிருந்து வடக்கே ஒருகல் தொலைவில் பெருவழியருகே காசி விசுவநாதர் கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு அருகில் குகநாதேஸ்வரர் திருக்கோவில் உள்ளது.


ஐங்கணை

மன்மதனுக்குரிய ஐந்து அம்புகள் :

தாமரை மலர், அசோக மலர், குவளை மலர், மாம் பூ, முல்லை மலர்.

2. சுசீந்திரம்

காணுமா லயஞ்சேர் வாசக் கமலமா கயிலை யென்னும்
பேணுமா லயங்க ளுள்ளார் பெருமைசேர் சுசீந்திரத்திற்
றாணுமா லயனென் றோர்பேர் தரித்தினி திருந்து கொன்றை
பூணுமா லயனா நாதன் பொன்னடி போற்றல் செய்வாம்
-- கன்னியாகுமரித் தலபுராணம்.



நாகர்கோவிலிருந்து தென்கிழக்கே 5 கி.மீ. ஞானவனம். பழையாற்றின் கரையில் இக்கோவில் உள்ளது. 134 அடி, 7 நிலை கொண்ட இராஜகோபுரம், மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புலிங்க மூர்த்தியாக அருள்மிகு தாணுமாலயன், அம்மன் அறம்வளர்த்தநாயகி. தலவிருட்சம் கொன்றைமரம். தீர்த்தம் தாணு. மரத்தடியில் தாணு, மால், அயன் மூவரையும் லிங்க வடிவில் காணலாம்.

உள்பிராகாரத்தில் பரசிராமவிநாயகர், முருகன், கைலாசநாதர், நடராஜர், கங்காளநாதர், பள்ளிக் கொண்ட பெருமாள், பஞ்சபாண்டவர்கள், நீலகண்ட விநாயகர், கால பைரவர், இந்திரகாந்த விநாயகர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

அனுசூயாவின் கற்பின் மகிமையைக் கேட்டறிந்த நாரதர், மும்மூர்த்திகளையும் ஒரே இடத்தில் தரிசிக்கவும், தேவியர்களின் கர்வத்தை அடக்க எண்ணம் கொண்டு நாரதர், சிவபெருமானின் ஆணைப்படி தேவருலகம் சென்று மூன்று தேவியர்களிடமும் அனுசூயாவின் கற்பைப் புகழ்ந்து கூறினார். அவள் கற்பைச் சோதித்தறிய எண்ணம் கொண்ட தேவியர்கள் அவர்கள் விருப்பப்படி மும்மூர்த்திகளும் அந்தனர் உருக்கொண்டு, ஆசிரமத்தை அடைந்து, உணவு அளிக்கும்படி கேட்டனர். அனுசூயா அவர்களுக்கு உபசரித்து அன்னமிடமுற்பட்டதும் அவர்கள் ''ஆடையணிந்தவரிடம் உணவை ஏற்பதில்லை'' என்றனர். இதைக்கேட்டு மனம் கலங்கிய அனுசூயா தன் கணவரது பாதத்தீர்த்தத்தை அவர்கள் மேல் தெளிக்க மூன்று கடவுளரும் பச்சிளம் குழந்தைகளாயினர். தேவியர் மூவரும் கணவரைக் காணாமல் நாரதர் அறிவுரைப்படி ஞானாரண்யம் அடைந்து தம் கணவரைத் தரும்படி வேண்டினர். அனுசூயா தேவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து மும்மூர்த்திகளும் சுய உருவடையச் செய்தாள். தேவியர் மூவரும் அனுசூயாவின் கற்பின் மகிமையைப் போற்றினர். நாரதரும், தேவர்களும், முனிவர்களும் தேவியருடன் கூடிய மும்மூர்த்திகளை ஒருங்கே தரிசித்து மகிழ்ந்தனர். இன்றும் கொன்றை மரத்தடியில் மூன்று லிங்கங்களையும் தரிசிக்கலாம்.

அசுரர்களின் அரசனான பாணாசுரன் மூவுலகும் நடுங்கும் வண்ணம் கொடுமை புரிந்தான். தேவர்கன் பராசக்தியைத் துதித்தனர். பாணாசுரன் ஒரு கன்னியாடுலேயே அழிவான் என்று பிரமன் வரம் விதித்திருந்தமையால், தேவியும் அவர்களைக் காத்தல் வேண்டி கன்னிவடிவில் குமரியில் வந்திருந்தாள். சுசீந்திரத்திரத்திலிருந்து தாணுமாலயன் தேவியை மணக்க விருப்பம் கொண்டு, திருமணநேரம் நிச்சயிக்கப்பட்டது. திருமணநாளில் இறைவன் குமரிக்கு புறப்பட்டார்.

திருமணம்நடைபெற்றால் பாணாசுரனை அழிப்பது இயலாதாகிவிடும் என உணர்ந்த நாரதர் திருமணத்தை நிறுத்த எண்ணி வழியில் ஒரு கோழி உருவெடுத்து கூவினார். இறைவனும் குறிப்பிட்ட வேளை தவறியது என நினத்து சுசீந்திரத்திற்கே திரும்பி விட்டார். தேவியும் அதன்பின் கன்னியாகவே இருந்து கடுந்தவம் புரிந்து, பாணாசுரனை வதம்செய்து, தேவர் களைக் காப்பாற்றினாள் என்பது இத்தல புராணவரலாறு.

இந்திரன் தன்மீது உள்ள பாவத்தைப் போக்க இத்தலத்தில் நெடுநாள் தவம் புரிந்து, தீவினை விலகியது. மகிழ்ச்சியுற்ற இந்திரன், ஞானாரண்யத்தில் மும்மூர்த்திகளுக்கும் கோவில் எழுப்பினான், இந்திரன் சுத்தி பெற்றமையால் சுசீந்திரம் என்னும் பெயர் பெற்றது. இன்றும் கோவிலில் தாணுமாலயனுக்கு அர்த்த ஜாமப் பூஜையை இந்திரனே வந்து நடத்துவதாக ஐதீகம்.

இக்கோவிலில் 12 அடி உயரமுள்ள நந்தியை மாக்காளை என அழைப்பர். 18 அடி உயர அனுமன் சிலை அழகிலும், கம்பீரத்திலும் ஒப்பற்றது. அலங்கார மண்டபத்தில் ஒரே கல்லில் வடித்தெடுத்த சங்கீதத் தூண்கள் உள்ளன. வசந்த மண்டபத்தின் கற்கூரையில் 12 ராசிகளும், நவக்கிரகங்களும் அமைந்திருப்பது இக்கோவிலின் தனிச் சிறப்பு.

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இக்கோவிலின் பெரும் பகுதியும் சேர, சோழ, பாண்டியர்களால் பல்வேறு காலங்களில் திருப்பணி செய்யப்பட்டது. மண்டபங்கள் பலவும் நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டவையாகும்.

மார்கழி, சித்திரை மாதங்களில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரைச் சுற்றியுள்ள நடராஜர் திருக்கோவில், கருப்புக் கோட்டையில் 36 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் கைலாசநாதர் திருக்கோவில் உள்ளன.

3. நாகர்கோவில்

திருநெல்வேலியிலிருந்து தெற்கே 77 கி.மீ. பழையாற்றின் கரையில் இக்கோவில் மூன்று பிராகாரங்களுடன் மூலவர் சுயம்புவாக நாகராஜர், அம்மன் நாகாம்பாள். தலவிருட்சம் நாகலிங்கமரம். உள்பிராகாரத்தில் அனந்தகிருஷ்ணர், கன்னி விநாயகர், நாகமணிசாஸ்தா, துர்க்கை, அரசடி விநாயகர், நடராஜர், பாலமுருகன் சன்னிதிகள் உள்ளன.

இணைபிரியா ஜோடியாக வாழ்ந்த இரு நாகங்களை மகிபாலன் என்ற கொடியவன் கொல்லும் போது இறக்கும் தருவாயில் பார்சுவநாதர் என்ற முனிவரின் வேதமந்திர ஒலி கேட்ட மகிமையால் மறுபிறவியில் அரசனாகவும், அரசியாகவும் தோன்றிய இடம்.

திருவிதாங்கூர் மன்னனுக்கு தொழுநோய் நீங்கியதால் பிரம்மாண்டமான ஆலயம் அமைந்தது.

மூலவர் 6 மாதம் கருமைநிறமாகவும், பின்பு 6 மாதம் வெள்ளை நிறமாகவும் மாறுகின்றன. இக்கோவிலையும், தோட்டத்தையும் நாகங்கள் காவல் புரிகின்றன. இக்கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் இதுவரை நாகம் தீண்டியாரும் இறந்ததில்லை. மூலவர் இடத்திலிருந்து எடுத்துக் கொடுக்கப்படும் மண் பிரசாதம் எடுக்க எடுக்க நிறைந்து கொண்டே இருக்கும். பக்தர்களுக்கு புற்றுமண் பிரசாத மாக வழங்கப்படுகிறது. இக்கோவிலை அடைந்து வணங்கியவர்கள் நாகதோஷங் கள் மற்றும் சரும வியாதிகளிலிருந்து குணம் பெருகிறார்கள்.

தை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. மேலும் இவ்வூரைச் சுற்றியுள்ள சோழபுரம் மகாதேவர் திருக்கோவிலும், ஒழுகினசேரியில் 39 செண்ட் நிலப்பரப்பளவில் மகாதேவர் கோவிலும், புறவாச்சேரியிலும், பெரு விலாவில் சொக்கநாதர் திருக்கோவிலும்,

வெம்பனூர்ரில் மகாதேவர் கோவிலும், கீழ் புத்தேரியில் கைலாசநாதர் திருக்கோவிலும், நாகர்கோவிலின் ஒரு பகுதியான வடசேரியில் மூலவர் தழுவிய மகாதேவர், அம்மன் ஆவுடைநாயகி. இரண்டு பிராகாரங்கள் கொண்டது. இக்கோவிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன.

4. வடிவீஸ்வரம்

நாகர்கோவிலிருந்து கிழக்கே ஒரு கி.மீ. அழகம்மைக்கோவில் பழையாற்றின் கரையில் கிழக்கு நோக்கிய இக்கோவில் உள்ள மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள்மிகு சுந்தரேஸ்வரர், அம்மன் அழகேஸ்வரி. கோவிலுக்கு முன்பு திருக்குளம் உள்ளது. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நால்வர், சேரமான் பெருமாள் நாயனார், மெய்கண்டார், சனீஸ்வரர், நாகராஜர், காசிவிஸ்வநாதர் முதலிய சன்னிதிகள் உள்ளன.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருஞானசம்பந்தர் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். கல்வெட்டுக்கள் மூன்று உள்ளன. கோவிலுக்கு மானியங்களை அளித்த விவரத்தைக் குறிக்கின்றன. ஆண்டுதோறும் மாசி மாதத்தில் மகம் நட்சத்திரத்தில் பிரமோற்சவம் நடைபெறுகின்றன.

5. இரவிபுதூர்

சுசீந்திரத்திலிருந்து வடகிழக்கே 5 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் நடராஜர்.

6. தெங்கம்புதூர்

நாகர்கோவிலிருந்து தெற்கே 7 கி.மீ. இக்கோவில் 35 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் தாணுலிங்கேசுவரர்.

7. பறக்கை

சுசீந்திரத்திலிருந்து தெற்கே 3 கி.மீ. இக்கோவில் 10 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் மகாதேவர். மேலும் இவ்வூரில் சொக்கநாதர் திருக்கோவிலும், காசிவிஸ்வநாதர் திருக்கோயில் அமைந்துள்ளன. இவ்வூர் பெருமாள் கோவிலில் சிறப்புற்று விளங்குகிறது. மதுசூதனப் பெருமாள் ஆலயம் மிகவும் பிரபலமானது. கருடனுக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்படும் தலமாகும். சித்திரை மாதம் 10ஆம் நாள் சூரிய ஒளி மூலவரின் பாதங்களில் படுகிறது. பங்குனி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

8. அகஸ்தீஸ்வரம்

கொட்டாரத்திலிருந்து தெற்கே 2 கி.மீ. இக்கோவில் 50 செண்ட் நிலப்பரப்பளவில் மூலவர் சுயம்புலிங்கமாக அருள்மிகு அகஸ்தீஸ்வரர், அம்மன் அறம்வளர்த்தநாயகி. தீர்த்தம் அகத்திய தீர்த்தம். தலவிருட்சம் ஆத்திமரம். உள்பிராகாரத்தில் விநாயகர், அழகிய மணவாளப்பெருமாள், பகவதியம்மன் முதலிய சன்னிதிகள் உள்ளன.

அகஸ்திய முனிவரால் பூசிக்கப்பட்ட இறைவரை அகஸ்தியலிங்கம் என்றும்,, கோவில் அமைந்துள்ள ஊரை அகஸ்தீஸ்வரம் என்றும் பெயர்.

பிராகாரத்தில் உள்ள தலவிருட்சம் ஆத்திமரத்தினடியில் அகஸ்திய முனிவர் இறைவனைத் திருமணக் கோலத்தில் கண்டு மகிழ்ந்தார்.

இத்தலம் தேவார வைப்புத்தலமாகப் போற்றப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அடைவு திருத்தாண்டகத்தில் இத்தலத்தைக் குறித்துப் போற்றியுள்ளார்.

இக்கோவில் சோழர்கள் காலத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தது என்பதை அர்த்தமண்டபத்தின் வடக்குச் சுவரில் குலோத்துங்கச் சோழன காலத்திய கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது.

நாள்தோறும் இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.